


# வானவல்லி

பாகம் 1


சி.வெற்றிவேல்

வானதி பதிப்பகம்

# வானவல்லி

## பாகம் – 1: வேளிர்களின் எழுச்சி

சி.வெற்றிவேல்
சாளையக்குறிச்சி



# வானவல்லி

## பாகம் – 1 : வேளிர்களின் எழுச்சி

சி.வெற்றிவேல்

சாளையக்குறிச்சி

# என்னுரை

தமிழக வரலாற்றில் பொற்காலம் என்றால் அது காதலையும், வீரத்தையும் போற்றி வாழ்ந்த சங்ககாலத்தின் ஆரம்ப காலம் தான். அச்சங்க கால மன்னர்களுள் தலைச் சிறந்தவன் கரிகாலன். சோழர்கள் தங்களது வல்லமையை இழந்து குறுநில மன்னர்களாகி புகழை இழந்து தஞ்சைக்கு அருகில் ஒடுங்கிய வேளையில் இக்கரிகாலனைத்தான் முன்னுதாரணமாகக் கொண்டு இழந்த புகழை மீட்டெடுத்து தெற்கே குமரி, வடக்கே கங்கை, கிழக்கே கடாரம் வரை வென்றனர். பிற்காலச் சோழர்கள் அன்றி முற்கால சேரர்களான இமயவரம்பன், நெடுஞ்சேரலாதன் மற்றும் செங்குட்டுவனுக்கும் முன்னுதாரணமாக விளங்கியவன் கரிகாற் பெருவளத்தான்.

தமிழக மன்னர்களுள் முதன்முதலில் இலங்கையை வெற்றி பெற்ற பிறகு இமயம் வரைப் படையெடுத்து வென்று தனது புலிச் சின்னத்தை இமயத்தில் பொறித்து போரில் தோற்ற பிற நாட்டு வீரர்களைக் கொண்டு காவிரிக்குக் குறுக்கே அணையைக் கட்டி, இரு புறங்களிலும் கரை எடுத்த மாபெரும் மன்னன் கரிகா ற் பெருவளத்தான் . தமிழக வரலாற்றில் யாராலும் நெருங்க இயலாத புகழின் உச்சியை அடைந்த கரிகா லன் அவனுக்குரிய அரியாசனத்தை அடைவதற்குள் அவன் அடைந்த இன்னல்களும், துயரங்களும் பல.

தாய் வயிற்றில் இருக்கும்போதே தந்தையை இழந்தவன் பிறகு வளர்ந்ததும் எதிரிகளால் கைது செய்யப்பட்டு மாளிகைக்குள் அடைத்துவைக்கப்பட்டு மாளிகையோடு எரிக்க முயன்ற கொடுமையும் அவனது வாழ்வில்தான் அரங்கேறியது . அதிலிருந்து அவன் எப்படித் தப்பி எங்கெங்கு ஓடியிருப்பான் என அறியும்பொருட்டு காவிரியில் மரக்கலம் சென்றதாய் கூறும் சங்கப் பாடல்களை முனகிக்கொண்டே துளி நீர் கூட இல்லாமல் வறண்ட காவிரிக் கரையோரமாகவே முக்கொம்பு முதல் கல்லணை வரை நடந்து சென்ற அனுபவங்களை எளிதில் மறக்க இயலாது!

கரிகா லன் அமர்ந்து ஆட்சி செலுத்திய புகார்ப் பட்டினம் நான்கு காத தூரம் பரந்து விரிந்திருந்தது என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. நான்கு காத தூரம் என்பது சோழர்களின் முற்காலத் தலைநகர் உறையூருக்கும் சேரர்களின் தலைநகர் கருவூர் வஞ்சிமா நகரத்திற்கும் இடைப்பட்ட தொலைவு என்பதை அறிந்த போது வியப்பின் உச்சிக்கே சென்றுவிட்டேன். தற்போதைய திருச்சிக்கும் கரூருக்கும் இடைப்பட்ட தொலைவு தான் நான்கு காத தூரம். அவ்வளவு தூரம் பரந்து விரிந்திருந்த பிரமாண்டப் பட்டினமான பூம்புகார் இன்று குணக்கடல் கொண்டது போக எஞ்சியிருக்கும் அதன் எச்சங்களைக் காணுகையில் பட்டினப்பாலையில் புகார்ப் பட்டினத்தின் சிறப்பினைக் கூறும் கடியலூர் உருத்திரங்கண்ணனாரின் பாடல் வரிகள் மனதிற்குள் தோன்ற கண்களின் கண்ணீர்ப் பெருக்கை என்னால் கட்டுப்படுத்த இயலவில்லை. வழிந்த இருதுளிக் கண்ணீர் புகாரைக் கொண்ட குணக்கடலின் இரக்கமற்ற அலைகளில் சிந்தி கலக்கத்தான் செய்தது.

வானவல்லி எனது முதல் புதினம். வானவல்லி எழுதத் தொடங்கிய பிறகுதான் சங்க இலக்கியங்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் வாசிக்க ஆரம்பித்தேன் என்ற உண்மையையும் இங்கு கூறிவிடுவது சரி என்றே நினைக்கிறேன். சங்க இலக்கியங்களை வாசிக்கும்போது நம் முன்னோர்கள் வாழ்ந்த சிறப்பையும், தற்போதைய நாம் வாழும் நிலையையும் எண்ணுகையில் மட்டும் ஏனோ மனம் வலிக்கத்தான் செய்கிறது. எனக்குக் கிடைத்த குறிப்புகள், நான் அறிந்துகொண்ட உண்மைகள் அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்கில் அனைத்து உசாத்துணை நூல்களையும் குறிப்பிட்டுள்ளேன். ஆதாரக் குறிப்புகள் அனைத்தையும் எங்கிருந்து எடுக்கப்பட்டவை, எந்தெந்த பக்கங்கள் என்பதனையும் ஆராய்ச்சியை விரும்புபவர்களுக்காக கொடுத்திருக்கிறேன்.

இக்கதையில் வரும் வளவன், இளந்திரையன் , இரும்பிடர்த்தலையர் , இருங்கோவேள் , சேரன் பெருஞ்சேரலாதன் , பாண்டியன் தென்னவன், ஹிப்பாலாஸ் ஆகியவர்களே வரலாற்று பாத்திரங்கள். மற்றவர்களான வானவல்லி, விறல்வேல் , வளவனார் , திவ்யன் , யவன வீரன் டாள்தொபியாஸ் , அடிமை வீரன் இம்ஹோடெப் ஆகியவர்கள் அனைவரும் என்னால் உருவாக்கப்பட்ட கற்பனைப் பாத்திரங்கள். யவன வீரன் எதற்கு

என்ற கேள்வியும் சிலருக்கு எழலாம்? பன்னெடுங்காலமாக சிறந்து விளங்கிய கிரேக்கம் சங்ககாலத்தின் தொடக்கத்தில் அதன் புகழினை இழந்து உரோமிற்கு அடிமைப்பட நேர்ந்தது. அப்போது உலகப் புகழ் பெற்றிருந்த பட்டினமான புகாருக்கு வாணிபம் செய்ய வந்த யவனர்கள் பலர் புகாரிலேயே தங்கிவிட்டனர் என்பதை பட்டினப்பாலை மூலம் அறியலாம். ஆதலால் யவனர்களை விடுத்தும் சங்ககால சோழர்களின் வரலாற்றை எழுத இயலாது.

**நான் எழுதத் துவங்கிய போது நான் என்ன எழுதுகிறேன் என்றே தெரியாமல் எனக்கு உற்சாகத்தையும், ஆதரவையும் அளித்த அம்மா, தம்பி வெற்றிச்செல்வம், மாமா ஆகியோருக்கும் எழுதுவதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் துணையிருந்த என் நண்பர்கள் அனைவருக்கும் இந்நூலைச் சமர்ப்பணம் செய்வதில் மகிழ்கிறேன்.**

நான் எழுதுவதற்குப் பலர் ஊக்கத்தை அளித்தாலும் வானவல்லி புத்தக வடிவம் பெறுகிறதென்றால் அதற்கு முழு முதற்காரணம் அண்ணன் திரு.சுந்தர் அவர்களே! வானவல்லியை எழுதிக்கொண்டிருந்த போதே என்னைத் தொடர்புகொண்டு தகுந்த ஆலோசனையை வழங்கி வழி நடத்தியவர் . அவரது பெயரை இங்கு நன்றியோடு கூறிக்கொள்கிறேன்.

சிறந்த பல சரித்திர நாவலாசிரியர்களின் படைப்புகளை வெளியிட்டு, படிப்பவர்களின் மனதினில் ‘இதய ராணி’யாகத் திகழும் வானதி பதிப்பகத்தில் இந்நாவலைப் பதிப்பித்து வெளியிட்ட திரு.ராமு அவர்களுக்கு எனது நன்றியையும் இங்கு கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். .

**கௌசல்யா சி .வெற்றிவேல்.**

**சாளையக்குறிச்சி ,**

tamilvetrivel@gmail.com

writervetrivel.com

# உசாத்துணை நூல்கள்


1.

பட்டினப் பாலை – கடியலூர் உருத்திரங் கண்ணனார்.

2.

கலிங்கத்துப் பரணி – கவிச் சக்கரவர்த்தி செயங்கொண்டார் (பதிப்பும் உரையும் முனைவர் ப.சரவணன்).

3.

அகநானூறு பாடல்கள்: 31, 125, 246, 376.

4.

புறநானூறு பாடல்கள்: 7, 46, 224, 367.

5.

தமிழக வரலாறு: கரிகாற் பெருவளத்தான் – புலவர் கா.கோவிந்தனார்.

6.

பொருநராற்றுப் படை – முடத்தாமக் கண்ணியார்.

7.

சிலப்பதிகாரம் (புகார்க் காண்டம்) – இளங்கோவடிகள்.

8.

கரிகால் சோழன் – முனைவர். ரா. நிரஞ்சனா தேவி

9.

சங்க காலத் தமிழக வரலாறு பகுதி 1 மற்றும் 2 – மயிலை சீனி. வேங்கடசாமி.

10.

தென்னாட்டுப் போர்க்களங்கள் —பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார்.

11.

சோழர்கள் – கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் (தமிழ் மொழிபெயர்ப்பு திரு.ராமன்).

12.

பட்டினப் பாலைத் தலைவன் கரிகாலனே – மா. இராச மாணிக்கனார்.

13.

சமணமும் தமிழும் – மயிலை சீனி. வேங்கடசாமி.

14.

பௌத்தமும் தமிழும் – மயிலை சீனி. வேங்கடசாமி.

15.

கிரீஸ் வாழ்ந்த வரலாறு – வெ. சாமிநாத சர்மா.

16.

**The Periplus of the Erithrean Sea:** Travel and Trade in the Indian Ocean by a Merchant of the First Century (London, Bombay & Calcutta 1912) – W.H Schoff (tr. & ed)

17.

The Hathigumpha Inscription Of Kharavela Of Kalinga. Lines: 4 & 11.

18.

முனைவர் இராம.கி'யின் வலைதள இடுகை:

வளவு: சிலம்பின் காலம்—6 http://valavu.blogspot.in/2010/05/6_14/.html

19.

**Slavery in Ancient Greece** by **Yvon Garlon (Revised 1988)**

20.

வஞ்சிமா நகரம் – இராகவையங்கார்

21.


Histry of India by ROMESH CHUNDAR DUTT, C.I.E Edited by A.V WILLIAMS JACKSON, Ph.D., LL.D. Professor of Indo–iranian language in columbia University.

22.

A Comprehensive Histry of Ancient India (3rd Volume) P.N Chopra, B.N Puri, M.N Das, A.C Pradhan.

23.

புராணக் கதைகள் – Harshacharita of Bana and Yugapurana of the Gargisamhita.




**சங்க காலத் தமிழகம்**

# பொருளடக்கம்


என்னுரை

உசாத்துணை நூல்கள்

பொருளடக்கம்

வேளிர்களின் எழுச்சி

1. கானகப் பயணம்

2. கள்வர்களின் தலைவன்

3. வனக் கள்வனும் வனத்தில் தேவதையும்

4. விலகியது திரை வெளிப்பட்டது மாயச்சிலை

5. செங்குவீரன்

6. யவன நண்பன் டாள்தொபியாஸ்

7. தனிமையில் வெளிப்பட்ட காதல்

8. யவனனும் வாள் போரும்

9. காதலும் கண்ணீரும்

10. விதி செய்த சதி

11. மன்னன் இளஞ்சேட்சென்னி

12. வனத்தில் புதிர்

13. பயங்கர வஞ்சகத் திட்டம்

14. சலசலப்பு

15. அவைக்களம் ரணகளம்

16. பிறப்பிக்கப்பட்ட கட்டளைகள்
17. எதிர்பாராத கலகம்
18. காதலும் ஓவியமும்
19. ஆத்திரத்தில் தவறான முடிவு
20. களவுத் தொழிலும் நாட்டுப்பற்றும்
21. அண்ணனின் ஆணை
22. அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி
23. கள்வனின் களவு
24. பூக்கடைக்காரனும் வம்பு ' ம்
25. ஓநாயின் குகைக்குள் வேங்கை
26. செம்பியன் கோட்ட மர்மமும் இரும்பிடர்த்தலையரின் கட்டளையும்
27. உறைந்தைப் பட்டினத்தில் கள்வர்கள்
28. மன்னரின் மகிழ்ச்சியும் திகிலும்
29. சூளுரை
30. கடமை தவறிய வீரன்
31. சோழ குல கதிரவன்
32. ஆசிவகரின் வாக்கும் மரகதவல்லியின் குழப்பமும்
33. மாடு மேய்த்தவன் செய்த வம்பு
34. நள்ளிரவு வேளையில்
35. மரகதவல்லியின் செயல்
36. தொடுக்கப்பட்ட கேள்விக் கணைகள்

37. சுயநலம்
38. சிரிப்பும் துயரமும்
39. திகைப்பு
40. உறைந்தைத் தூதுவன்
41. மன்னரின் மகிழ்ச்சி
42. பிடிவாதம்
43. புரவித்தேரில் யார் ?
44. வேளக்காரப் படைத்தலைவன்
45. டாள்தொபியாசின் உபசரிப்பு
46. இறந்தவன் வந்தான் ?
47. விழுந்தது புகார்
48. கரிகாலனின் காதலி
49. அவைக் காவலர்கள் இருவர்
50. எச்சரிக்கை
51. பிடர்த்தலையரின் திட்டம்

# வானவல்லி

## பாகம் – 1 : வேளிர்களின் எழுச்சி

# 1. கானகப் பயணம்

“இருள் சூழ்ந்துவிட்டது தாயே. இந்த வேளையில் சம்பாபதி வனத்தைக் கடந்து புகார்ப் பட்டினத்துக்குச் செல்ல நினைப்பது ஆபத்தானது. இன்றிரவு இந்தச் சாவடியிலேயே தங்கி ஓய்வெடுத்துவிட்டு விடிந்ததும் செல்லலாமே?” என்று பரிவுடன் வேண்டினார் சாவடித்தலைவர் ஈழவாவிரையன்.

அவர் கூறியதைப் பொருட்படுத்தாமல் நாவல் மரத்தடியில் வீற்றிருந்த சம்பாபதி அம்மனிடம், “தாயே… எங்கள் பயணத்துக்கு எந்தவித இடையூறும் ஏற்படக்கூடாது. தாங்கள் தான் துணையிருக்க வேண்டும்” என்று வேண்டிக்கொண்டனர் புகார்ப் பட்டினத்தின் பெருவணிகன் வேளாதனின் மகள் பத்திரைத் தேவியும் அவளது தோழி வானவல்லியும்.

ஈழவாவிரையன் ஒரு சமண அடிகள். ஒரு காலத்தில் வணிகரான ஈழவாவிரையன் தனது செல்வங்கள் அனைத்தையும் துறந்துவிட்டு வழிப் போக்கர்களும், பயணிகளும் ஓய்வெடுக்கும் சாவடியை நடத்திக்கொண்டிருந்தார். அந்த சாவடி புகார்ப் பட்டினத்தைச் சூழ்ந்திருந்த சம்பாபதி வனத்துக்கு மேற்கே, உறையூரிலிருந்து புகார் செல்லும் பெருவழியில் அமைந்திருந்தது. புகார்ப் பட்டினத்துக்கு யார் செல்ல வேண்டுமானாலும் அந்தச் சாவடியைக் கடந்தே செல்ல முடியும்.

சமண அடிகளார் ஈழவாவிரயரிடம் “அடிகளே, தங்கள் வேண்டுகோளை ஏற்க இயலாமைக்கு நாங்கள் இருவரும் வருந்துகிறோம். தங்கள் விருந்தோம்பல் அனைத்திற்கும் நன்றி. இருப்பினும் ஏற்கெனவே தந்தைக்கு நாங்கள் இருவரும் இன்றிரவே புகார் வந்துவிடுவதாகச் செய்தி அனுப்பி விட்டேன். அவர் எங்களுக்காகக் காத்திருப்பார். அதனால், இன்றிரவு

எங்களால் இங்கு தங்க இயலாது. கட்டாயம் நாங்கள் செல்ல வேண்டும்.'' எனப் பணிவுடன் தெரிவித்தாள் பத்திரைத் தேவி.

சற்று நேரம் நிதானமாக சிந்தித்தார் ஈழவாவிரையன். பிறகு பத்திரைத் தேவியிடம், ''இந்தப் பின்னிரவில் கள்வர்களால் தொல்லைகள் ஏற்பட்டாலும் ஏற்படும். சமீப காலத்தில் கள்வன் காளனின் தொல்லைகள் மிகுந்துவிட்டன. அவன் இழைக்கும் கொடுமைகள் அதிகமாகிக்கொண்டிருக்கிறது. சாவடிக் காவல் வீரர்களையாவது துணைக்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று கூறி மேலும் சில வீரர்களை அவர்களுக்குத் துணையாகச் செல்லும்படி கட்டளையிட்டார்.

இரண்டு பெண்களும் சமண அடிகளார் ஈழவாவிரையரிடம் விடைபெற்றுக்கொண்டு தங்களுக்குத் தயாராய் இருந்த வண்ணம் தீட்டிய அழகிய புரவித் தேரில் ஏறிக்கொண்டு அடர்ந்த வனப் பகுதியான சம்பாபதி வனத்தை நோக்கித் தங்கள் பயணத்தைத் தொடங்கினர். வீரர்கள் புரவித் தேருக்கு முன்பும் பின்பும் சென்றுகொண்டிருந்தனர்.

வானவல்லியின் மடியில் தலை வைத்துப் படுத்திருந்தாள் பத்திரை. வானவல்லியும் வண்டியில் சாய்ந்திருந்ததால் அவளது நீண்ட கருங்கூந்தலை முன்புறம் எடுத்து விட்டிருந்தாள். அவளது கூந்தலிலிருந்து வெளிவந்த வாசமும், மடியின் மெது மெதுப்பும் பத்திரைக்குத் தான் எங்கே தாழை மடலில் தலைவைத்து உறங்கிக் கொண்டிருக்கிறோமோ என மயங்கிக் கொண்டிருந்தாள். புரவித் தேர் விரைவாகச் செல்லும் போது ஏற்பட்ட குலுங்கல் பத்திரைக்கு இதமாக ஊஞ்சலாடுவது போல இருந்தது. புரவித் தேரில் விலக்கியிருந்த திரை வழியே வானத்தில் தோன்றிய அழகியக் காட்சிகளில் தன் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தாள்.

வானத்து மங்கை தன் தலைவன் திங்களைப் பார்த்த மகிழ்ச்சியில் ஆடைகள் அனைத்தையும் இழந்து பூத்துக் குலுங்குவது போல நட்சத்திரங்களைத் தன் நீல மேனியில் பிரகாசமாய்ப் பளபளக்கும் படி மின்னிக் கொண்டிருந்தாள். மேகக்கூட்டங்களில் பட்டு எதிரொளிக்கும் நிலவொளியானது நீலநிற வானுக்குப் புது அழகை வழங்கிக்கொண்டிருந்தது. இப்படி வானத்து மங்கை தன் தலைவன் நிலவுக்கு வாரி இறைத்திருந்த

பேரழகினைக் காண விரும்பாது, நிலவோ வண்டியினுள் அமர்ந்திருந்த வானவல்லியையும் பத்திரையையும் காண விரும்பி தன் வெண்கதிர்களைச் செலுத்தி வண்டியில் விலகியிருந்த திரைச் சீலை வழியே திருட்டுத்தனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். நிலவின் திருட்டுத்தனத்தைக் கவனித்துவிட்ட வானத்து மங்கை இதனை விரும்பாது நிலவுக்கும் இவர்களுக்கும் இடையில் தன் மேகச் சீலையைச் செலுத்தி நிலவை தனியாக மறைத்துக் கொண்டாள். வானமங்கை நிலவினை மறைத்துவிட்டதால் ஒளி மறைந்து பாதையெங்கும் இருள் கவ்வ ஆரம்பித்தது.

வண்டியினுள் படுத்திருந்த பத்திரை இந்த அற்புதமான காட்சிகளைத் தன்னை மறந்த நிலையில் ரசித்துக்கொண்டிருந்தாள்.

இத்தகைய ரம்யமான சூழ்நிலையில் புரவித் தேரில் காவல் வீரர்கள் சம்பாபதி வனத்தினுள் நுழைந்துகொண்டிருந்தனர்.

இதுவரை அவர்களுக்கு வெளிச்சத்தைத் தந்து அவர்களுடன் துணையாக வந்த பங்குனி பௌர்ணமி நிலவு, தான் மேகங்களுக்கிடையில் மறைந்து விளையாடியது போலவே இவர்களும் வனத்தினுள் மரங்களுக்கிடையே சென்று மறைந்துவிட்டார்களே? என வருந்துமளவிற்கு நிலவொளியும் புக இயலாத அடர்ந்த மரங்களை உடையது சம்பாபதி வனம்.

நிலவொளியும் அற்ற சம்பாபதி வனத்தில் இருள் சூழ்ந்தது, ஆங்காங்கே தோன்றிய சிறு சிறு மின்மினிப் பூச்சிகளின் வெளிச்சமும் அவர்களின் புரவித் தேருக்கு அடியில் தொங்கவிடப்பட்ட சிறு விளக்கு மட்டுமே அவர்களுக்கு வெளிச்சத்தை அளித்துக் கொண்டிருந்தது.

வானவல்லியும், அவளது மடியில் தலை சாய்த்திருந்த பத்திரையும் வனத்தின் இருள் சூழ்ந்த ரம்மியமான அழகியக் காட்சிகளையும், அவ்வப்போது தோன்றும் பறவைகளின் சத்தங்களையும் கேட்டும், ரசித்துக்கொண்டும் பயணித்துக் கொண்டிருந்தனர்.

இத்தகைய இன்பங்கள் அனைத்தையும் விலகச் செய்து பயத்தை ஏற்படுத்தும் படி தூரத்தில் திடீரென ஒரு ஓநாயின் ஊளைச்சத்தம் இவர்களின் காதுகளை அடைந்தது.

திடீரென ஏற்பட்ட ஊளைச்சத்தம் பத்திரைக்குப் பெரும் பயத்தை அளித்தது. முதலில் கேட்ட ஒரேயொரு ஓநாயின் ஊளைச் சத்தமானது இப்போது பன்மடங்கு பெருகி தொடர்ந்து இவர்களை நோக்கி வருவது போல ஊளைச் சத்தத்தின் சுருதியானது அதிகமாகிக் கொண்டிருந்தது.

இதுவரைக்கும் அமைதியாய் இருந்த வனம் சிறிது சிறிதாகத் தனது பயங்கரமான மற்றொரு முகத்தைக் காட்ட ஆரம்பித்தது.

இந்தப் பயங்கரமான நெருங்கி வரும் ஊளைச் சத்தத்தைக் கேட்ட பத்திரைக்குப் பயத்தில் சற்று வியர்க்கவே ஆரம்பித்துவிட்டது.

உடனே பத்திரை, "வானவல்லி உனக்கு இந்தச் சத்தங்களைக் கேட்கும் போது அச்சமாக இல்லையா?" எனக் கேட்டாள்.

அதற்கு வானவல்லி "இந்தச் சத்தங்கள் அனைத்தும் எனக்குப் பழகியது பத்திரை, எனக்கு அச்சம் எல்லாம் ஏற்படவில்லை" என்று பதிலளித்தாள். மேலும், "தாங்கள் தான் பட்டினப்பாக்கத்து மாபெரும் வணிகனின் மகள், தங்களுக்கு இக்காட்சிகள் அனைத்தும் புதிது, இரவு பயணமும் புதிது. ஆனால் எனக்கு அப்படியில்லை. இவையனைத்தும் பழகிய ஒன்று. இந்த இருள் எனக்கு மிகவும் பிடித்ததும் கூட!" என்றாள்.

இதைக் கேட்ட பத்திரை பதிலேதும் கூறாமல், எழுந்து வானவல்லியின் கொடி போன்ற விரல்களைப் பற்றிக்கொண்டு புரவித் தேரில் தோய்க்கப்பட்ட பட்டுத் துணியின் மேல் சாய்ந்து கொண்டாள்.

நெருங்கிக் கொண்டே வந்த ஊளைச் சத்தம் திடீரென நின்று போனதால் பத்திரை சற்று நிம்மதி அடைந்தாள், ஆனால் ஓநாய்களின் ஊளைச் சத்தம் அறவே நின்று போனதைக் கண்ட வானவல்லி பெரும் எச்சரிக்கையுடன் காணப்பட்டவளாய் பார்வையையும் காதுகளையும் தீட்டிக்கொண்டு பாதித் திறந்திருந்த திரைச் சீலையை முற்றிலும் விலக்கினாள். முன்னால் சென்ற வீரர்கள் அப்படியே நின்றனர். வண்டியின் அடியில் எரிந்து கொண்டிருந்த விளக்கிலிருந்து தங்களது பந்தத்தை அனைவரும் கொளுத்திக் கொண்டனர்.

நடக்கும் நிகழ்வுகள் யாவற்றையும் கண்ட பத்திரை ஏதும் புரியாதவளாய் வானவல்லியை நோக்கி பார்வையைச் செலுத்தினாள்.

‘‘ஓநாய்களும், நரிகளும் தூரத்தில் இருக்கும் வேளைகளில் மனித நடமாட்டங்களைக் கண்டால் மற்றவைகளுக்குத் தெரியப்படுத்த இப்படி ஊளையிட்டுத் தெரியப்படுத்திக் கொள்ளும், அப்படி நாம் பயணிப்பதை அறிந்து கொண்ட சில ஓநாய்கள் ஊளையிட்டு மற்றவைகளுக்குத் தெரியப்படுத்தின, மேலும் நம்மை நோக்கி வந்து கொண்டிருந்த ஊளைச்சத்தமானது ஓநாய்கள் நம்மை நோக்கி வந்ததைக் குறித்தது’’ என்றாள் வானவல்லி.

உடனே பத்திரை, ‘‘ஊளையிடுவன ஓநாய்களா? அல்லது நரிகளா?’’ என்று வினவினாள்.

‘‘இரண்டில் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்’’ என்றாள் வானவல்லி.

பிறகு பத்திரை ‘‘நம்மை எத்தனை ஓநாய்கள் சுற்றிக் கொண்டிருக்கலாம்?’’ என்று கேட்டாள்.

இதற்கு வானவல்லி, ‘‘நான் வேண்டுமானால் கீழே இறங்கி எண்ணிவிட்டு வரட்டுமா?’’ என்று சிரித்துக்கொண்டே பதிலளித்தாள்.

வானவல்லியின் நகைப்பைக் கேட்ட காவல் வீரர்களும் சேர்ந்து சிரித்தனர்.

இதைக் கேட்ட பத்திரை ‘‘எப்போதுமே உனக்கு என்னிடம் விளையாட்டு தான்’’ என்று சிணுங்கினாள். ‘‘கோபப்படாதே பத்திரை, விளையாட்டிற்குத் தானே’’ என்று அவளின் பூப்போன்று மெத்தென்றிருந்த தோள் மீது கைவைத்து வருடி ஆறுதல் படுத்தினாள் வானவல்லி.

உடனே பத்திரை ‘‘இதுவரை வண்டியின் விளக்கோடு மட்டுமே வந்த அனைவரும் இப்போது பந்தத்தை ஏற்றிக்கொண்டனரே? இது காட்டு விலங்குகளை விரட்டத்தானே!’’ என்றாள்.

‘‘ஆம், இதுவே காட்டு விலங்குகளை விரட்டப் பயன்படும் உபாயம். ஆனால்......‘‘ என்றபடியே வானவல்லி அமைதியடைந்து விட்டாள்.

“ஆனால்... என்று ஏதோ கூற வந்தாயே வானவல்லி, தொடர்ந்து கூறு!” என்று அவசரப்படுத்தினாள் பத்திரை.

“பந்தங்களைக் கொளுத்திக் கொண்டே சென்றால் ஓநாய், நரி போன்ற காட்டு விலங்குகளைச் சிறிது இடைவெளியில் நம்மிடமிருந்து பிரித்து வைக்கும். நாம் ஏற்றியுள்ள இந்தப் பந்தத்தால் இன்னும் ஒரு நன்மையும் உண்டு, ஆனால் இதில் நாம் எதிர்பாராத மாபெரும் மற்றொரு அபாயமும் உள்ளது“ என்று வானவல்லி கூறிக்கொண்டிருந்த போது பின்னால் வந்த புரவி வீரர்கள் அருகில் உள்ள புதரில் ஏற்பட்ட அசைவினைத் தொடர்ந்து பனை ஓலையிலும் மூங்கில் கட்டையாலும் செய்யப்பட்ட ஒருவித கருவியைத் தட்டி வினோதமான ஒலியை எழுப்பினர். வீரர்களில் சிலர் பந்தத்தை முன்னும் பின்னும் வலது இடமாக நாலா புறமும் ஆட்டினார்கள்.

புரவித் தேரைச் செலுத்தாமல் சிறிது நேரம் அங்கேயே நின்றுகொண்டிருந்தனர். பின்பு தூரத்தில் ஓநாயின் ஊளைச்சத்தம் கேட்டது. இதனைக் கேட்ட அனைவரும் வந்த அபாயம் அனைத்தும் விலகிவிட்டதை எண்ணி பெருமூச்சு விட்டனர்.

அச்சத்தோடு இருந்த பத்திரையைத் தழுவி, “இனி அச்சம் கொள்ள அவசியம் ஏதும் இல்லை!” என்று ஆறுதல் கூறினாள் வானவல்லி.

சிறிது நேரம் அவர்களது பயணம் அமைதியாய்ப் போய்கொண்டிருந்தது, பெரும் புயலுக்குப் பின் ஏற்படும் அமைதியைப் போல அங்கும் அமைதியே நிலவியது. திடீரென விழிப்புற்றவளாய் பத்திரை “ஏதோ ஒரு நன்மையும் பெரும் அபாயமும் உள்ளது என்று கூறினாயே, என்ன அது?” என்று வினவினாள்.

“நன்மை என்றால் நம் ஒளிப் பந்தத்தினைப் பார்த்து வனத்தின் பிற பகுதிகளில் உள்ள நம் சோழ வீரர்களின் உதவிகள் நமக்குக் கிடைக்கலாம்”

“இராக் காவல் காக்கும் வீரர்களா?”

“ஆமாம்”

“அவர்களின் படைத் தலைவரும் வருவாரா?” என்று தன் முல்லைப் பற்கள் அந்த இருளிலும் ஒளிரும் படி சிரித்துக் கொண்டே கேட்டாள் பத்திரை.

“வந்தாலும் வரலாம், யாம் அறியோம்” என்று மறுமொழி கூறினாள் வானவல்லி.

“புகார் நகரத்தைக் காவல் காக்கும் படை வீரர்களின் தலைவரான செங்குவீரரும் வருவாரா?” என்று மீண்டும் கேள்வியெழுப்பினாள் பத்திரை.

செங்குவீரன் என்ற பெயரைக் கேட்டதும் வானவல்லியின் மனதில் ஆயிரம் மின்னல் கீற்றுகள் தோன்றியது. அவளுக்கு அது வலியைக் கொடுத்ததா அல்லது மகிழ்ச்சியைக் கொடுத்ததா என்று அறிய அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் பத்திரை. இருப்பினும் அந்தப் பெயர் அவளது முக மலர்ச்சியை அதிகமாக்கியது. அனைத்தையும் நொடிப்பொழுதில் மறைத்துக் கொண்டு, “அதான், காவல் தலைவரும் வந்தாலும் வரலாம் என்றேனே, அதென்ன செங்குவீரன் வருவாரா என்று என்னை நகைக்கிறாயா? இனி அந்தப் பெயரை என் முன் ஒலிக்காதே பத்திரை” என்று எரிந்து விழுந்தாள் வானவல்லி.

வானவல்லியை தன்னால் புரிந்து கொள்ள இயலாததை எண்ணி “இனி அப்படிக் கூற மாட்டேன்” என்று கூறிவிட்டு, பின்பு பேச்சை மாற்ற விரும்பியவளாய் “இந்தப் பந்தத்தினால் மற்றுமொரு பெரும் தீங்கும் நேரலாம் என்றாயே அது என்ன?” என்றாள் பத்திரை.

“நாம் ஏற்றிய இந்தப் பந்தத்தின் ஒளியைக் கொண்டு வீரர்கள் அல்லாது இராக் கள்வர்கள், ஆறலைக் கள்வர்கள், எயினர் கள்வர்கள், உயிர் பலி வாங்கும் கபாளிகர்கள் என யாரும் எளிதில் நாம் வருவதை அடையாளம் கண்டு விட இயலும்.”

“அது என்ன கள்வர்கள் என்றால் பொதுமை தானே! ஏன் இப்படித் தனித் தனியாக இத்தனை பெயர்களில் கூறுகிறாய்?”

“பெயர்களுக்கு ஏற்பவே இவர்களின் குணங்களும் உண்டு. இராக் கள்வர்கள் என்பவர்கள் அவர்களின் தலைவர் காளனின் தலைமையில் செயல்படும் கூட்டத்தினர். இவர்கள் இரவு நேரங்களில் அதிகமாகச் செயல்படுவர். நகை, பொன், முதலான பொருள்களைப் பறித்துக் கொள்வது மட்டுமல்லாது கொலைப் பழிக்கும் அஞ்சாதவர்கள். நாம் சம்பாபதி

வனத்தினுள் நுழைவதற்கு முன் சாவடித் தலைவர் அடிகளார் ஈழவாவிரயர் எச்சரிக்கையுடன் இருக்கும்படி கூறினாரே, அந்தக் கள்வர் கூட்டத்தினர் இவர்கள் தான்!''

''செங்குவீரன் வந்த பிறகு இவர்கள் அதிகம் தலைக் காட்டுவதில்லை என்று கூறினார்களே! அவர்களா இவர்கள்?''

செங்குவீரனின் புகழைக் கேட்டதும் பெருமிதத்தோடு ''ஆமாம்'' என்று தலையாட்டினாள் வானவல்லி.

செங்குவீரனின் பெயரைக் கேட்டதும் வானவல்லியின் முகத்தில் முதலில் தோன்றிய மலர்ச்சியையும் பின்பு தோன்றிய கோபத்தையும் கவனிக்கத் தவறவில்லை பத்திரை.

தொடர்ந்த வானவல்லி, ''ஆறலைக் கள்வர்கள் என்பவர்கள் ஒருவகை நாக மரபினர். இவர்களின் குலத் தொழிலே களவு தான். இவர்கள் வழிப்பறி செய்தல், கொள்ளை, சூறையாடுதல் என அனைத்தும் செய்வர், ஆனால் இவர்கள் கொலை செய்யவோ மற்றவர்களைத் துன்புறுத்தவோத் துணிய மாட்டார்கள். எயினர் கள்வர்கள் என்பவர்கள் எயினர் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பொழுது போக்கிற்காகக் களவு செய்வர், இவர்களால் எந்தவொரு ஆபத்தும் ஏற்படாது. கபாலிகர்கள் என்பவர்கள் இருட்டு மதத்தைச் சார்ந்தவர்கள். இவர்களது உலகமே இருளில் தான் இயங்க ஆரம்பிக்கும். இவர்களைப் பற்றிதான் நீ அதிகம் தெரிந்திருப்பாயே!'' என்றாள்.

பட்டினப்பாக்கத்தின் இரத்தின மங்கையான பத்திரை கள்வர்களில் இத்தனை பிரிவினர் உள்ளனரா என்று வியந்து, ''இவை அனைத்தையும் உனக்குச் சொல்லிக் கொடுத்தது யார்'' என்று வினவினாள்.

வானவல்லியிடமிருந்து பதிலேதும் வராததைக் கண்டு, ''நான் யாரிடமிருந்து எனத் தெரிந்து கொண்டேன்!'' என்று நகைத்தாள் பத்திரை.

வானவல்லியின் கண்களிலிருந்து பெருகிய கோபத் தீ, அவளை எரித்துவிடுவது போல நோக்கிக் கொண்டிருந்தது.

இதனை உணர்ந்த பத்திரை நிலைமையைப் புரிந்து கொண்டு மேற்கொண்டு ஏதும் பேசாமல் இருப்பதே நல்லது என்றவளாய் அமைதியானாள். ஆபத்தேதும் இனி நேராது என்று நிம்மதியடைந்தாள்.

உண்மையான ஆபத்து இனிதான் தோன்றப் போகிறது என்பதை உணர்ந்த வானவல்லி மட்டும் எச்சரிக்கை உணர்வுடனே புரவி வண்டியில் அமர்ந்திருந்தாள். ஆனால் வானவல்லி எதிர்பார்ப்பதை விடப் பெரியதும், கொடிய ஆபத்தும் வரப்போவதை யாருமே அத்தருணத்தில் எதிர்பார்த்திருக்கவில்லை.

# 2. கள்வர் களின் தலைவன்

சம்பாபதி வனத்தின் மையப்பகுதி அது. நிலவொளியும் புக இயலாத அளவிற்கு நெருக்கமாய், வானுயர அடர்ந்து வளர்ந்திருந்தன வேங்கை மரங்கள். எந்தவொரு சத்தமும் இல்லாமல் நிசப்தமாய்க் காட்சியளித்துக் கொண்டிருந்தது. இரவில் எப்போதும் கேட்டுக் கொண்டிருக்கும் கோட்டானின் சத்தம் கூட எழாமல் பயங்கரப் பேரமைதியாகக் காட்சியளித்தது. மனதிற்கு நிம்மதியும் பேரானந்தத்தை அளிக்கும் அமைதி இல்லை அது. சுடுகாட்டில் காணப்படுமே பேயமைதி, சம்பாபதி வனம் அந்த நடு இரவில் அப்படித்தான் காட்சியளித்தது. இந்தப் பேயமைதியானது துணையில்லாது தனியாக வந்தவர்களைப் பயத்தில் நடுநடுங்கி பித்துப் பிடிக்க வைக்கும் அளவிற்குப் பயங்கரமாகத் தோன்றியது.

அவ்வப்போது எழும் மூங்கில் மரங்களின் உராயும் சத்தம் கூட மனதில் உள்ள கொஞ்சம் நஞ்ச தைரியத்தையும் விரட்டச் செய்யும் அளவிற்குக் கொடூரமாக இருந்தது.

இப்படியான வனத்தைத் தான் வானவல்லி, பத்திரை முதலானோர் கடந்து கொண்டிருந்தனர். வனத்தின் மிகவும் ஆபத்தான பகுதி இது. இதைக் கடந்துவிட்ட பிறகு, அதற்கப்பால் எந்தவித இடையூறும் ஏற்படாது. ஏதேனும் ஆபத்து ஏற்பட்டாலும் உதவி விரைவில் கிடைத்துவிடும். ஆனால் சம்பாபதி வனத்தில் இவ்விடத்தில் ஏதேனும் துயரம் ஏற்பட்டாலும் உதவி கிடைப்பதும் கடினம், ஆபத்தை எதிர்கொள்வது அதைவிடக் கடினம் என்பதை அறிந்திருந்தாள் வானவல்லி.

மேலும், கொடிய விலங்குகள் நிரம்பிய பகுதி இது. அவற்றினால் ஏற்படும் ஆபத்தும் அதிகம், ஆகவே இங்குக் காவல் வீரர்களின் வருகையும் குறைவு. இரவின் ஒரு சாமப் பொழுதிற்குப் பிறகு இங்கு யாரும் வருகைதர

அஞ்சுவர். ஆதலால் வனத்தின் காவலற்ற பகுதி இது. ஆகவே இங்குதான் கள்வர்களும், கபாலிகர்களும் தங்கள் கைவரிசையைக் காட்டத் துணிவர்!

புரவித் தேரின் மூடுதிரையை முற்றிலும் அகற்றிவிட்டு எச்சரிக்கையாக அமர்ந்து கொண்டாள் வானவல்லி. காவல் வீரர்களை எதற்கும் தயாராக இருக்கும்படி எச்சரிக்கை செய்தாள்.

வானவல்லி பத்திரையிடம் கவனமாக இருக்கும் படியும், எது நடந்தாலும் வெளியே வரக்கூடாதென்றும் கூறிவிட்டு, புரவித் தேரின் மூடுதிரையை முற்றிலும் மூடிவிட்டுப் பின்புறம் தன் கால்களைத் தொங்கவிட்டுக் கொண்டு கவனத்துடன் அமர்ந்திருந்தாள்.

காவலுக்கு வந்துகொண்டிருக்கும் வீரர்களின் வசமுள்ள நீண்ட வால்களின் கூர் முனையை விடத் தனது புத்தியைக் கூர்மையாக்கிக் கொண்டாள் வானவல்லி.

இத்தகைய நேரத்தில் தான் வானவல்லி எதிர்பார்த்தது போலவே காட்சிகள் வேகமாக மாறியது. வனத்தின் பாதையோர மரங்களின் பின்னால் மறைந்திருந்த சிலர் கூரிய நீண்ட ஈட்டி மற்றும் வாள்களைக் கொண்டு வீரர்களை அவர்கள் எதிர்பாராத நேரத்தில் தாக்க ஆரம்பித்தனர். காவலர்கள் “ஆபத்து!” “ஆபத்து!” என்று உரக்க ஒருவருக்கொருவர் கூக்குரலிட்டவாறே வாள்களைக் கள்வர்களை நோக்கிச் சுழற்ற ஆரம்பித்தனர். காவல் வீரர்களைவிடத் தாக்கும் கள்வர்களின் எண்ணிக்கை இரு மடங்கு அதிகம்.

கள்வர்கள் இவர்களைத் தாக்க ஆரம்பித்ததும் வானவல்லி மீண்டும் பத்திரையிடம், “எது நடந்தாலும் நான் அழைக்கும் வரை வண்டியிலிருந்து இறங்கவோ, எந்தவித சத்தமோ இடக்கூடாது!” என்று எச்சரிக்கை செய்து விட்டுக் கள்வர்கள் யாரும் கவனிக்குமுன் வண்டியின் திரைச் சீலையை முற்றிலும் மூடிவிட்டுக் கீழே இறங்கிவிட்டாள்.

கள்வர்கள் ஒவ்வொருவரும் தங்கள் முகங்களை நீண்ட கருந்துணியால் மறைத்து வெற்றுடம்புடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் வைத்திருந்த நீண்ட, வளைவில்லாத வாள்களின் மூலம் இவர்கள் நாகக் குலத்தைச் சேர்ந்த கள்வர்களாக இருக்க இயலாது என்பதை அறிந்து

கொண்டாள். இவர்களின் வெற்றுடம்பில் எந்தவொரு மண்டையோடோ அல்லது நீண்ட எலும்புகளால் ஆன மாலைகளோ இல்லாததைக் கண்டு இவர்கள் கபாலிகர்களாகவும் இருக்க இயலாது என்பதையும் யூகித்துக் கொண்டாள். இந்தக் கள்வர் கூட்டத்தினர் எயினர் பிரிவினரோ அல்லது ஆறலைக் கள்வர்களாக இருந்திருந்தால் இத்தனை வீரர்களை எதிர்க்க அவர்கள் துணிந்திருக்க மாட்டார்கள் என்பதை நொடிப்பொழுதில் அனுமானம் செய்த வானவல்லி இவர்கள் நிச்சயம் காளனின் குழுவைச் சேர்ந்த கள்வர்களாகத் தான் இருக்க இயலும் என்பதை யோசிக்காமலே அறிந்து கொண்டாள்.

வீரர்கள் வீரமாக, தைரியமாக அவர்களை எதிர்த்துச் சண்டையிட்டாலும் கள்வர்களின் எண்ணிக்கை அதிகமாயிருந்ததால் கள்வர்களின் கை நேரமாக நேரமாக ஓங்கிக் கொண்டிருந்தது. காவல் வீரர்களுக்கும், கள்வர்களுக்கும் நடந்த சண்டையில் பல வீரர்களும், சில கள்வர்களும் குத்துப்பட்டுச் சாய்ந்திருந்தனர். ஆனால் இழப்பு என்றால் வீரர்களின் பக்கம் அதிகமாகவே இருந்தது. வீரர்களும் பலமிழந்து ஓய்ந்து கொண்டிருந்தனர்.

இனி இவர்களுடன் சண்டையிட்டு வெற்றிபெற இயலாது என்பதையறிந்த வீரர்கள் எதிர்தாக்குதல் தொடுக்காமல் வண்டியிலிருந்து இறங்கியிருந்த வானவல்லியை சுற்றித் தடுப்புப் போரில் ஈடுபட்டுப் புரவி வண்டியில் யாரும் இல்லாதது போல, அதைத் தனியே தனித்திருக்கவிட்டு வானவல்லிக்கு காவல் புரிவது போலச் சுற்றி நின்றுகொண்டனர்.

இதுவரை நடந்த சண்டையை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த கள்வர்களில் ஒருவன் “சண்டையை நிறுத்துங்கள்!” என உரக்க கர்ஜித்தபடியே தீப்பந்தத்தை வாங்கிக் கொண்டு கூட்டத்தை நோக்கி முன்னேறி நடந்து வந்தான். அவனது அதிகாரம், அவனது உடை இவற்றிலிருந்து அவன்தான் கள்வர்களின் தலைவன் என்பதை உணர முடிந்தது.

அவன் தலையில் அணிந்திருந்த சிறு முண்டாசும், அவற்றில் தொங்கிய கள்வர்கள் அணியும் ஒருவித வண்ண மணியும் அவன் தான்

அந்தக் கூட்டத்திற்குத் தலைவன் என்பதை யாவர்க்கும் உணர்த்தும்படியாய் இருந்தது. மற்றவர்கள் அணிந்திருந்த கருப்பு முகமூடியிலிருந்து இவனது திறந்த முகம் அவனை முற்றிலும் மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டியது. அவனது முகத்திற்கும் அவனது கொடூர எண்ணத்திற்கும் துளியும் தொடர்பு இல்லாமல் அவனது முகம் அமைதியுடனும், கவர்ச்சிகரமாகவும் காணப்பட்டது. அவனது முகத்தில் வளர்ந்திருந்த உரோமங்களைப் பாங்குற அவன் சவரம் செய்திருந்த விதம், அவனது வலிய உதடுகளுக்கு மேலே வளர்ந்திருந்த மீசை அவனது முகத்திற்குப் பெரும் அழகை அளித்தது. திரண்டு, திண்மையாகியிருந்த வலிமையான அவனது தோள்களும், அவனது மார்பிலும், கைகளிலும் வளர்ந்திருந்த அடர்ந்த ரோமங்களும் அவனுக்குக் கம்பீரத்தை அளித்தது. மங்கைகளை மயக்கும் முக அழகையும், தேக அமைப்பையும் குறைவின்றி இயல்பாகவே பெற்றிருந்தான் அவன்.

அவன் வீசிய அதிகாரப் பார்வையில் கள்வர்களும் நடுங்கும் படியாய் நடந்து வந்தான். அவனது நடை, உடை, பார்வை என அனைத்திலும் கர்வம், அதிகாரம் நிரம்பியிருந்தது.

ரத்தினங்களும், பல நாட்டு முத்துக்களும் பொறிக்கப்பட்ட அவனது ஆடையானது அந்தத் தீப்பந்தத்தின் ஒளியில் பளபளவென ஒளிர்ந்து கொண்டிருந்தது. அவனது இடையில் தொங்கிய நீண்ட வாளும், சொருகியிருந்த கத்திகளும் பார்ப்பவர்களுக்கு மரணப் பயத்தை அளிக்கச் செய்வன. அவனது தோளின் திண்மையும், கைகளின் வலிமையும் அவன் யாரையும் தோற்கடிக்கும் ஆற்றல் கொண்டவன் என்பதை வெளிப்படுத்தியது. இவனது தோற்றமே எதிரில் நின்று கொண்டிருப்பவர்களுக்குப் பயத்தையும், நடுக்கத்தையும் அளிக்கும்படி இருந்தது.

அவனது குரலைக் கேட்ட கள்வர்கள் அனைவரும் சண்டையை நிறுத்தி, ஈட்டி மற்றும் வாள்களைக் காவல் வீரர்களின் மார்பிலும், கழுத்திலும் வைத்திருந்த விதம் ‘நீங்கள் ஏதேனும் தப்பிக்கவோ அல்லது மறுபடி தாக்கவோ முயற்சி செய்தால் உங்கள் உடலில் பாய இந்த ஆயுதங்கள் தயாராய் இருக்கிறது’ என்று சொல்லாமல் சொல்லிகொண்டிருந்தது.

வீரர்களும் தங்களது ஆயுதங்களை இழந்து நிராயுதபாணியாக நின்றனர். அந்த இடத்தில் கள்வர்களின் கை முற்றிலும் ஓங்கிவிட்டது.

பந்தத்தை வாங்கியபடி கள்வர்களின் தலைவன் ஒவ்வொருவரையும் தன் அதிகாரம் தொனித்த பார்வையால் சோதனை செய்தான். பிறகு புரவி வண்டிக்கு அருகில் நின்றுகொண்டிருந்த வானவல்லியை நோக்கி பந்தத்தை உயர்த்திப் பார்த்தவன் முகம் எதையோ காணாததைக் கண்டுவிட்டது போல ஆச்சர்யமடைந்தது. அவனது காலடிச் சத்தத்தைக் கேட்டபடியே வண்டியினுள் அமர்ந்திருந்த பத்திரை பயத்தில் உறைந்து வியர்க்க ஆரம்பித்தவளாய் காணப்பட்டாள்.

அந்த நடு இரவில் அதுவரை அமைதியாய் இருந்த கோட்டான் இனி என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ என அலறியது.

# 3. வனக் க ள்வனும் வனத்தில் தேவதையும்

தீ ப்பந்தத்தை எடுத்துக்கொண்டு வானவல்லியிடம் வந்த கள்வர்களின் தலைவன் அவளது அழகிய தோற்றத்தைக் கவனித்தபடியே "வண்டியினுள் என்னென்ன பொருள் இருக்கிறது? உனக்கிங்கு இந்தப் பின்னிரவில் என்ன வேலை, இந்தத் தகுதியில்லாத காவலர்களை எண்ணி, இவர்களின் துணையோடா இங்கு வரத் துணிந்தாய்!" என்று ஏளனத்தோடு மிரட்டும் தொனியில் அதிகாரத்துடன் கேட்டான்.

வானவல்லி அவனது கேள்வியைச் செவி மடுக்காமல் அவன் மீது ஒரு வெறுப்புக் கலந்த ஏளனப் பார்வையை உதிர்த்தாள். "வண்டியில் எந்தப் பொருளும் இல்லை. நான் மட்டும் தான் வந்தேன்" என்று பதிலளித்தாள். அவளின் பதிலைக் கேட்டுக்கொண்டே பந்தத்தைத் தூக்கிப் பிடித்து மீண்டுமொருமுறை வானவல்லியை நோட்டமிட்டான்.

பந்தத்தை அவன் மேலிருந்து கீழாகக் கொண்டு செல்வதிலிருந்து தன்னைத் தான் ஆராய்கிறான் என்ற நினைப்பு வானவல்லிக்கு எரிச்சலைக் ஏற்படுத்த, அவனை முறைத்தாள். அவளது விழிகளில் இருந்து வெளிப்படும் பார்வை, கோபம் கலந்து எதிரில் இருப்பவர்களை எரித்து விடுவது போல் வெளிப்படுவதை கள்வர் தலைவன் உணர்ந்தான்.

பந்தத்தைத் தூக்கி அவளது முகமருகே கொண்டு சென்ற போது அவளது கருமை நிற விழிகளில் பிரதிபலித்த பந்தத்தின் நெருப்புப் பிம்பம் கள்வனுக்குச் சற்றுப் பயத்தை அளிக்கவே செய்தது. அவளது முகத்தில் காணாத பயம், கண்களில் தெரிந்த கோபம் என இவையனைத்தும் இவள் முற்றிலும் ஆபத்தானவள் என்பதைக் கள்வனுக்கு உணர்த்தத் தவறவில்லை. இருப்பினும், 'இவளும் பெண் தானே! இவளாள் தன்னை என்ன செய்ய இயலும்' என நினைத்துக் கொண்டான்.

இவளது முகப் பொலிவையும், எழில் நிறைந்த வனப்பையும் கண்ட அவன், தான் இதுவரை கேட்டுள்ள கதைகளின் தேவலோக தேவதைகள் எனப்படும் எந்தவொரு பெண்ணுக்கும் இவள் அழகில் சளைத்தவளல்ல என நினைத்துக் கொண்டான். வானவல்லியின் முகத்தில் பட்டு எதிரொளித்த செந்நிற ஒளி அவளது மோகன அழகை இன்னும் பன்மடங்கு அதிமாக்கிக் கொண்டிருந்ததைக் கண்ட அவன், ‘இவளுக்கு அணிகலன் ஏதும் தேவையில்லை. அப்படி ஏதேனும் அணிந்திருந்தாள் இவள் தான் அதற்கு அழகு சேர்த்திருப்பாள், இவளுக்கு எந்தவிதத்திலும் அது அழகு சேர்த்திருக்காது’ என நினைத்துக் கொண்டான்.

அவளது அழகில் தான் வசப்பட்டுக் கொண்டிருந்ததைக் கவனித்தவன், கவனத்தைத் திசை திருப்பும் பொருட்டுப் பந்த ஒளியை புரவித் தேரின் மீது செலுத்தி பார்வையைத் திசை திருப்பினான்.

புரவித் தேரில் பூட்டப்பட்டிருந்த இரண்டு உயர் ரக அரேபியக் குதிரைகள், தேரில் தீட்டப் பட்டிருந்த முருகன், கொற்றவை, சிவன் மற்றும் சில யவன தேசத்துச் சித்திரங்கள், அவற்றின் மீது விரித்திருந்த கீதாம்பர பட்டு என யாவற்றையும் கவனித்தான்.

“வண்டியில் என்ன இருக்கிறது?” என்று மீண்டும் கேள்வி எழுப்பினான்.

“வண்டியில் பயணித்தவள் நான், நான் வெளியில் நிற்கையில் வண்டியில் என்ன இருக்கும்? வெறுமையாகத் தானே இருக்கும்!” என்று இகழ்ச்சியாய்ப் பதிலளித்தாள் வானவல்லி.

இவளுக்குத் துணைவந்த அனைத்து காவலர்களும் என் முன் மண்டியிட்டு நிராயுதபாணியாகி, இவளோ துணையின்றி நிற்கிறாள். இவளுக்குப் பாதுகாப்பிற்குக் கூட யாரும் இல்லை. யார் நினைத்தாலும் இவளைக் காப்பாற்ற இயலாது. நான் மனது வைத்தால் தான் இவள் இங்கிருந்து செல்ல இயலும். இருப்பினும் இவளது பதில் மட்டும் இப்படிச் செருக்குடன் உள்ளதே எனக் கோபமடைந்தான்.

அவளது பதில் அவனுக்குக் கடும் கோபத்தைக் கிளப்பியது. உடனே அவன் இரைந்து, ‘‘இந்தக் காவலர்களைக் கொன்று போட்டு, இவளை மட்டும் தூக்கி வாருங்கள்’’ என்று தன் ஏவலாளிகளிடம் கட்டளையிட்டான்.

தனியாக நின்று கொண்டிருந்த கள்வர்களில் ஒருவன் தன் கூரிய வாளை இடையுறையிலிருந்து உருவியபடியே வீரர்களை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

இதற்கு முன் தான் மிரட்டியே பணியவைத்த பல மங்கைகளைப் போன்றே இவளையும் பணியவைத்து விடலாம் என்று நினைத்து அவ்வாறு கூறிய அவன் அதற்கு ஏதேனும் மறுப்புக் கூறுவாள் என்று அவளையே நோக்கிக்கொண்டிருந்தான். ஆனால் அவளோ தன் முகத்தில் எந்தவொரு மாற்றத்தையும் காட்டிக்கொள்ளாமல் தன் கூர்மையான கோபம் நிறைந்த செருக்குப் பார்வையால் அனைவரையும் எரித்துவிடுவது போலவே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது முகத்தில் அதிர்ச்சியையும், பயத்தையும் எதிர்பார்த்து ஏமாந்தான் அவன்.

தனது எண்ணம் ஏதும் நிறைவேறவில்லையே என்று நினைத்த அவன் தன் பார்வையை மீண்டும் புரவித் தேரின் மீது செலுத்தினான். அதைப் பார்த்தவுடன், அவன் மனதில் ஆயிரம் கேள்விகள் தோன்றின.

வாளுடன் வீரர்களின் உயிரைக் கொய்யச் சென்ற கள்வனைக் குழப்பத்துடன் நிறுத்த செய்தான். இவளோ எந்தவித புற ஆபரணங்களும் அணியாமல் புகாரின் சாதாரண நடுத்தர வர்க்கத்துப் பெண் போல அழகை மட்டுமே ஆபரணங்களாகக் கொண்டு எளிமையாகக் காட்சித் தருகிறாள். ஆனால் இவள் வந்துள்ள புரவித் தேரோ, புகார் நகரப் பட்டினப் பாக்கத்து பெரும் செல்வந்தர்கள் உபயோகிக்கும் சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த வண்டியைப் போல இருக்கிறதே! எப்படி இது சாத்தியம்? எனக் குழம்பினான். இந்தப் புரவிகளோ கிடைத்தற்கரிய அரேபிய தேசத்து உயர் ரகப் புரவிகள். வேகத்தில் இவற்றை மிஞ்ச எதனாலும் இயலாது. இவளது தோற்றத்திற்கும் இந்தப் புரவித் தேருக்கும் வேறுபாடுகள் நிறைய உள்ளதே எனச் சிந்தித்தான்.

உடனே வாளுடன் சென்ற கள்வனை அழைத்து, ‘‘புரவித் தேரை சோதனை செய்’’ என்று கட்டளையிட்டான். நடப்பவை அனைத்தையும்

வண்டியில் இருந்த சிறு துவாரம் வழியே பார்த்துக் கொண்டிருந்த பத்திரை என்ன நடக்குமோ என்று அச்சப்பட்டுக் கொண்டிருந்தாள்.

# 4. விலகியது திரை வெளிப்பட்டது மாயச்சிலை

நள்ளிரவு வேளையில் சம்பாபதி வனத்தினுள் கொடிய கொலைப் பழிக்கும் அஞ்சாத கள்வர்களிடம் சிக்கிக்கொண்ட பத்திரை புரவித் தேரினுள் அமர்ந்தபடியே வெளியே வானவல்லிக்கும், கள்வர்களின் தலைவனுக்கும் நடந்த உரையாடலைக் கேட்டபடி பதற்றத்தோடு அமர்ந்திருந்தாள்.

இதுதான் அவளுக்கு இது போன்ற முதல் அனுபவம். இதற்கு முன் அவள் இப்படியொரு பயங்கரமான இரவை சந்தித்ததே இல்லை. கள்வர்களின் தலைவன் கூறிய ‘வண்டியைச் சோதனைச் செய்’ என்ற சொல்லானது பத்திரையின் காதில் புகாரின் ஆயுதக் கிடங்கில் காய்ச்சிய இரும்புக் குழம்பை ஊற்றுவது போல் இருந்தது.

ஏற்கெனவே அச்சத்தின் உச்சியில் இருந்தவளுக்கு அவளது மூச்சுக் காற்றின் சத்தம் பயங்கரத்தை விளைவித்தது மட்டுமல்லாது, இப்போது அவளது இதயமே பயத்தில் நின்றுவிடுவது போன்று வேகமாகத் துடித்துக் கொண்டிருந்தது. இதற்கு முன் அவளது இதயத் துடிப்பின் சத்தத்தை அவள் கேட்டதில்லை. இப்போதுதான் முதன் முதலாக அவள் தனது உயிரின் துடிப்புச் சத்தத்தைக் உணர்ந்தாள்.

வாளுடன் நின்றுகொண்டிருந்த கள்வன் ஒருவன் கள்வனின் தலைவனிடமிருந்து தீப்பந்தத்தைப் பெற்றுக் கொண்டு வண்டியை நோக்கி மூடியிருந்த திரைச் சீலையைத் திறந்து பார்க்க விரைந்து கொண்டிருந்தான். அவனது காலடிச் சத்தமானது மெல்ல வண்டியை நோக்கி வருவதை, மிதிபடும் சருகுகள் எழுப்பும் சத்தத்திலிருந்து பத்திரை உணர்ந்தாள்.

இந்த நிலையில் வண்டியினுள் அமர்ந்திருந்த பத்திரை இனியும் இங்கு வண்டியினுள் அமர்ந்திருப்பது நல்லதல்ல என்பதை உணர்ந்தவளாய், திரைச் சீலையை நீக்கி வெளியே வந்தாள். பந்தத்தோடு வந்த கள்வன் திரைச் சீலையை நீக்க கையை உயர்த்திய வேளையில் திரைச்சீலை தானாகவே, முத்து மோதிரம் அணிந்திருந்த அழகிய கரங்களால் விலக்கப்பெற்றதைக் கவனித்தவன் சற்று மிரட்சியடைந்தான்.

திரைச் சீலையைப் பத்திரை விலக்கிய வேளையில் அவளது கரங்களில் அணிந்திருந்த வளையல்கள் குலுங்கி எழுந்த இனிய ஓசை மெல்ல காற்றில் பரவி கள்வனையும் வானவல்லியையும் அடைந்தது. அவளது கைகளில் பவள முத்து பதித்த வளையளிலிருந்து எதிரொளித்த பந்தத்தின் ஒளியானது கண்களைக் கூசச் செய்யும் அளவற்கு ஒளிர்ந்தது.

இப்படிப் பத்திரை, முந்திக்கொண்டு வண்டியிலிருந்து வெளிவருவாள் என்று வானவல்லி எதிர்பார்த்திருக்கவில்லை. கள்வன் வண்டியினுள் அவள் இருப்பதைப் பார்த்த பின் மற்றவர்களிடம் அவன் கூறும் கால இடைவெளியில் புரவியை மட்டும் சாரதியில்லாமல் ஓடச் செய்து அவளை மட்டுமாவது தப்பிக்கச் செய்துவிடலாம் என எண்ணியிருந்தாள் வானவல்லி. அவளது ஏமாற்றத்தின் எண்ண ஓட்டம் அவளது முகத்தில் பிரதிபலிக்காமல் பார்த்துக் கொண்டாள்.

வண்டியிலிருந்த வெளிப்பட்ட அழகு சிற்பமான பத்திரையின் உடலை செதுக்கிய சிற்பி அவளது உடலை எந்தக் குறையுமின்றிச் செதுக்கியிருந்தான். எதையெதை எப்படிப் படைக்க வேண்டுமோ அதை அறிந்து அவ்வளவு நேர்த்தியாக அவளது உடலை வடித்திருந்தான்.

கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலை, மெல்லிய அவளது இடையில் துணி நழுவிடாதவாறு தாங்கிப் பிடித்திருந்த அவளது வைரம் பொதித்த மேகலை, அவளது காதில் அணிந்திருந்த யவன தேசத்து வைரம் பதித்த குண்டலம், சிவப்பு நிற ரத்தினமான நெற்றிச் சுட்டி இவை யாவும் அந்தச் செந்நிற ஒளியில் மின்னிக் கொண்டிருந்தன. இப்படி அவளது உடலில் கண்ட விலையுயர்ந்த பல தேசத்து ஆபரணங்களைக் கண்டதும் கள்வர்களின் முகத்தில் இதுவரை இல்லாத பெரும் மகிழ்ச்சியைக் காண முடிந்தது.

பயத்தில் அவளது கால்கள் சற்று ஆடிக் கொண்டிருந்தது. தொங்கிக் கொண்டிருந்த அவளது பட்டு உடையிலிருந்து வெளியே தெரிந்த அவளது கால் விரல்கள், பயத்தில் கோழியின் இறகுக்குள் ஒளிந்து கொண்ட கோழிக் குஞ்சுகளைப் போல பயத்தோடு எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன.

முகத்தின் பேரழகு, வியர்த்து நனைந்து, வீசிய தென்றலில் குளிர்ந்து சிலிர்த்த அவளது உடல் இவையனைத்தையும் கண்ட கள்வர்களின் தலைவன், ஆபரணங்களின் மதிப்பு, தெரிந்த அழகு, தெரியாதவை என மொத்தத்தையும் கற்பனை செய்து மதிப்பிட முயன்று முடியாதவனாய்த் தோற்றவனாய், “நீ யார்?” என்று வினவினான்.

அதற்கு அவள் அச்சத்துடன், “வேளாதன் மகள் பத்திரைத் தேவி” என்று பதிலளித்தாள்.

“ஓ... நீ, பெருவணிகன் வேளாதன் மகளா? உனது உடை, அணிந்துள்ள ஆபரணங்கள், உனது புரவி, புரவித் தேரில் தீட்டியுள்ள ஓவியங்கள் என அனைத்தையும் கண்டபோதே எதிர்பார்த்தேன். பட்டினப் பாக்கத்து ஏதாவதொரு பெரும் வணிகனின் மகளாகத் தான் நீ இருக்க வேண்டும் என்று. எங்கிருந்து வருகிறீர்கள்?” என்றான் சிரித்த படியே.

“நாங்கூரிலிருந்து......”

“நாங்கூருக்கா?”

“ஆம்!”

“இந்த நேரத்தில் உங்களுக்கு அங்கு என்ன வேலை?”

“எங்கள் தோழி மரகதவல்லியைக் காணச் சென்றோம். திரும்பி வருகையில் தாமதமாகிவிட்டது!”

“நீங்கள் மட்டும் தானா அல்லது உங்களுக்குத் துணையாக யாரேனும் பின்னால் வருகிறார்களா?”

“நாங்கள் மட்டும் தான், யாரும் எங்களுக்குத் துணையாய் வரவில்லை” என்று பயந்து நடுக்கத்துடனே பதிலளித்தாள் பத்திரை.

“இந்த இருளில் இப்படித் தனியாக வந்து இருவரும் என்னிடம் அகப்பட்டுக் கொண்டீர்களே? இந்த நடு இரவில் வர உங்களுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்க வேண்டும்? யார் இருக்கும் துணிவில் வந்தீர்கள்?” என்று கர்வத்தோடு மிரட்டும் தொனியில் கேள்வி எழுப்பினான் அவன்.

அதற்கு அவள் எந்தப் பதிலும் கூறாமல் வானவல்லியைப் பார்த்தாள். அவளது பார்வை வானவல்லியை நோக்கித் திரும்பியதைக் கண்டவன், ‘இவள் இருக்கும் துணிச்சலில் தான் அவள் வந்திருக்கிறாளா? இவளுக்கு இனி துணையாக யார் வரப் போகிறார்கள்?’ எனத் தனக்குள்ளே நகைத்துக் கொண்டான்.

பத்திரையை மேலிலிருந்து கீழே ஆராய்ந்தபடியே, வஞ்சகச் சிரிப்போடு, நீ அவளுடன் சேர்ந்து நில் என்பது போலக் கையை உயர்த்தினான். அவனது குறிப்பை உணர்ந்த பத்திரை அன்னப்பறவை மெல்ல அசைந்து செல்வது போல மண் மேல் மெல்ல நடந்து சென்று வானவல்லி அருகில் நின்றாள். பட்டுக் கம்பளம் விரித்த விரிப்பில் நடந்தே பழக்கப்பட்ட அவளது பூப்பாதம் முதல் முதலாகத் தரையில் நடந்தது. அவள் நடந்த வேளையில் அவளது கால் சிலம்பில் இருந்த மாணிக்கப் பரல்கள், அவளது நடைக்கேற்ப மெல்ல ஒலித்தது. அவள் சென்று நின்ற பின், இருவரையும் நோக்கலானான் கள்வர்களின் தலைவன்.

அழகை மட்டுமே அணிகலன்களாகக் கொண்ட ஒருத்தி. தைரியம், அழகு இவற்றைத் தன் ஆயுதங்களாகக் கொண்டு எதற்கும் அஞ்சாமல் நிற்கும் பேரழகி. மற்றவள் அணிகலன்கள் அனைத்தையும் கொண்ட பேரழகினைக் கொண்டு பயத்தில் உறைந்து போய் நிற்கிறாள். இருவருமே அழகில் சிறந்து விளங்குகின்றனர். ஆனால் இருவரின் அழகிற்கும் வேறுபாடுகள் மிகுதி. திறமை வாய்ந்த சிற்பி வடித்த அழகுச் சிற்பமாய் ஒருத்தி, அந்தச் சிற்பியே பார்த்தால் வியந்து போகும் படி மற்றொருத்தி என அவன் பலவாறு அவர்கள் அழகில் மயங்கினான்.

இப்படிப் பலவாறு எண்ணிக் கொண்டு, இருவரையும் மாறி மாறிப் பார்த்த அவன் வானவல்லியைப் பற்றி விசாரிக்கலானான்.

அதற்கு அவளோ, ‘‘அது உனக்குத் தேவையில்லாத ஒன்று!’’ என்று உடனே பட்டென்று பதிலளித்தாள்.

அவளது பதிலை எதிர்பார்க்காத அவன் சினம் தலைக்கேறி, அவமான உணர்வுடன் மற்றவர்களிடம் ‘‘காவலர்கள் அனைவரையும் கொன்று விடுக. பத்திரையை நோக்கி, இவளது ஆபரணங்கள் அனைத்தையும் பறித்து, அதோ அங்குக் குறையாத திமிருடன் நிற்கிறாளே, அவளை மட்டும் தூக்கிக் கொண்டு புறப்படுங்கள்’’ என்று கோபத்தோடு கட்டளையிட்டான். ‘‘இந்தக் காளனிடம் செருக்கோடு பேசியதன் பயனை அவள் விரைவில் உணர்வாள்’’ என்று அந்தச் சம்பாபதி வானமே பயந்து நடுங்கும் படி பேய் சிரிப்புச் சிரித்தான் கள்வர் தலைவன்.

இதைக் கேட்ட வானவல்லி எந்தவொரு அதிர்ச்சியும், பதற்றத்தையும் அவளது முகத்தில் காட்டிக் கொள்ளாமல், யாரும் எதிர்பார்க்காத கண நேரப் பொழுதில் தன் இடையில் பட்டுத் துணிகளுக்கிடையில் மறைத்து வைத்திருந்த குறுவாளை எடுத்து தூர நின்ற காளனை நோக்கி வேகமாக எறிந்தாள்.

சம்பாபதி வனத்தின் இருளையும், காற்றையும் கிழித்துக் கொண்டு பாய்ந்து சென்ற கத்தியானது குறி தவறாமல் காளனின் மார்பை நோக்கி பாய்ந்து வந்த சமயத்தில் அவன் திரும்பிவிடத் திரும்பிய காளனின் வலது தோளில் பாய்ந்தது.

எறியப்பட்ட கத்தி காளனை அடைவதற்குள் புரவி ரதத்தில் மறைத்து வைத்திருந்த மேலும் இரண்டு குறுவாட்களை அடுத்தடுத்து விரைவாகப் பந்தம் ஏந்திய கள்வனை நோக்கி வீசினாள் வானவல்லி.

வாள் வீசுவதிலும், கத்தி எறிதலிலும் ஏற்கெனவே நன்கு பயிற்சி பெற்றிருந்த வானவல்லியின் குறுவாள் குறி தவறாமல் பந்தம் வைத்திருந்தவனின் மார்பில் பாய்ந்தது. மார்பில் குறுவாள் பாய்ந்த கள்வன் வலியால் துடித்து அலறியபடியே கீழே சாய்ந்தான்.

எரிந்து கொண்டிருந்த ஒரே ஒரு பந்தமும் கீழே விழுந்ததால், அவ்விடத்தை இருள் மீண்டும் கவ்வத் தொடங்கியது.

# 5. செங்கு வீரன்

**புள் தேம்பப் புயல் மாறி**

**வான் பொய்ப்பினும் தான் பொய்யா**

**மலைத் தலைய கடல் காவிரி**

**புனல் பறந்து பொன் கொழிக்கும்.**

விளங்கிய கதிர்களையுடைய ஞாயிறு எத்திசை சென்றாலும், பெரும் புகழினையுடைய வெள்ளி மீனானது, தான் வசிக்கின்ற வட திசையிலிருந்து தென் திசைக்குப் போனாலும், தன்னைப் பாடி, மழைத்துளிகளை மட்டுமே உணவாக உண்டு வாழும் வானம்பாடிப் பறவை தனக்கு உணவான மழைத்துளிகளைப் பெற முடியாமல் வருந்துமாறு கார் மேகம் திசை மாறி மழை பெய்யாது பொய்த்தாலும், தான் பொய்க்காமல் இருப்பது காவிரியாறு. இக்காவிரியானது குடகு மலையில் தோன்றி கடல் போன்று எங்கும் பறந்து பொன்னாக விளை நிலங்களைச் செழிக்கச் செய்யும் எனக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பிற்காலத்தில் காவிரி பற்றிப் பாடப் போவதை மெய்ப்பிக்கப் பிரியப்பட்டதைப் போல அந்தப் பங்குனி இரவின் பௌர்ணமி நிலவில் காவிரியில் புனல் இரு கரைகளையும் தொட்டுக் கொண்டு கடலில் சங்கமித்துக் கொண்டிருந்தது. மழை பொய்த்தாலும் காவிரியில் நீர் செறிந்து ஓடிக்கொண்டிருப்பதைக் கண்ட பங்குனி முழு நிலவு நகைப்பது போல நட்சத்திரங்கள் அந்த மேகமற்ற பங்குனி இரவில் மின்னிக்கொண்டிருந்தன.

**‘ஒரு பிடிபடியும் சீறிடம், எழு களிறு புரக்கும் நாடு’** என்ற ஒரு பெண் யானைப் படுத்து உறங்கும் இடத்தில் பத்து ஆண் யானைகளுக்கு வேண்டிய உணவினை விளைவித்துக் கொடுக்கக் கூடிய நீர் வளம் பெற்ற சோழ நாட்டின் உட்புறங்களில் விளைந்த நெல், வாழை, பாக்கு, மணக்கும்

மஞ்சள், மா, இஞ்சி முதலியவற்றைக் குவித்துக் கொண்டு நாவாய்கள் சோழத் துறைமுகப் பட்டினமான புகாரை நோக்கி காவிரிப் புனல் வழியாக வந்து கொண்டிருந்தன. உள்நாட்டில் விளைந்த இந்தப் பொருள்களுக்குப் பதில் மாற்றிய தூர தேசங்களில் விளைந்த வெள்ளை உப்புக்களையும், மிளகு, கற்பூரம், சீனத்து வாசனைப் பொருள்கள் மற்றும் பல நாட்டு உணவுப் பொருள்களையும் ஏற்றி நாவாய்கள் காவிரிப் புனல் வழியாக நாட்டிற்குள் சென்று கொண்டிருந்தன. கட்டுத்தறியில் குதிரைகளை வரிசையாகக் கட்டி வைத்துள்ளதைப் போன்று படகுகளையும் காவிரிப் புனலின் கரையில் கட்டி வைத்திருந்ததனால் புனலின் வேகத்தில் ஒன்றோடொன்று மோதி ஏற்பட்ட சத்தம் கரையெங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

அருகில் பரந்து விரிந்திருந்த கரும்பு ஆலையில் கரும்பைக் காய்ச்சிப் பதப்படுத்தப்பட்ட வெல்லத்திலிருந்து வெளிவந்த வாசம் எங்கும் பரவிக்கொண்டிருந்தது.

கடலில் மீன் பிடித் தொழிலைக் கொண்ட பரதவர்கள் குணக்கடலின் கடற்கரையையொட்டி வாழ்ந்து கொண்டிருந்தனர். பரதவரும், பரத்தியரும் சேரியில் ஆட்டுக் கடா சண்டைகளும், கவுதாரிச் சண்டைகளும், சேவல் சண்டைகளும் நடத்தி வேடிக்கை பார்த்து மகிழ்ந்த ஆராவர இரைச்சலும், இளைஞர்கள் பாடும் பாட்டு ஒலியும், அவர்கள் தட்டி எழுப்பும் ஓசையும், அந்த இசை ஒலிக்கு ஏற்ப நடனமாடும் யவன மற்றும் பல தேசத்து மங்கைகளின் சிலம்பொலிகளும் சேர்ந்து புகார் நகரக் கடற்கரையான நெய்தலங்கானலை அமர்க்களப் படுத்திக்கொண்டிருந்தது. இந்த நெய்தலங்கானல் கடற்பரப்பில் சிறு சிறு குடிசைப் போட்டு வசித்துக் கொண்டிருந்த பரத்தையர்கள் பகலில் உடுத்தியிருந்த பட்டு உடைகளைத் துறந்து புளிப்புச் சுவை மிகுந்த பனங் கள்ளைப் பருகிய பின் ஆடிய மாலை நேர ஆட்டங்களும் கடந்து பிறகு இரவு அணிந்துகொண்ட பருத்தி ஆடைகளும் மாறி, பின் அவரவர் துணையுடன் சேர்ந்து ஆடிய காம விளையாட்டுகளில் பின் அணிந்துகொண்ட வெள்ளை உடையும் காணாமற் போய்ப் பரத்தியர் அணிந்திருந்த மலர் மாலைகள் பரதவர் கழுத்திலும், பரதவர் அணிந்திருந்த சுறா முள்ளினால் செய்யப்பட்ட மாலைகள் பரத்தியர் கழுத்துகளுக்கும் இடம் மாறியது கூடத் தெரியாமல் தன் நிலை மறந்து

களிப்புற்று களைப்புற்றிருந்தனர். பரத்தியர் மாலை நேரத்தில் சூடியிருந்த தாழை மலர்களின் அடிப்பகுதில் வளர்ந்திருந்த வெண்டாள் காம ஆட்டத்தில் திளைத்திருந்த இவர்களின் உடல்களுக்கிடையே அகப்பட்டு, நசுங்கி அவர்களின் இருப்பிடம் மட்டுமல்லாது, கடற்கரையெங்கும் வாசத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது. அவர்கள் விளையாடிய காம விளையாட்டின் வெறிக் கூச்சல் வேறு நெய்தலங்கானல் கடற்கரையெங்கும் பீடித்துக்கொண்டு அமைதியில்லாமையே நிலவிக்கொண்டிருந்தது.

இந்த வெறிக் கூச்சலின் நிலையும் அடங்கக் காலம் வந்துவிட்டதை அறிவிக்கப் பிரியப் பட்டதைப் போல நெய்தலங்கானல் கடற்கரையின் மறுபுறத்தில் அமைந்திருந்த ஆலமரத்து முற்றத்து இறைவன் கோயிலிலிருந்து வெளிப்பட்ட இரவு இரண்டாம் சாமத்து மணிச்சத்தம் எழுந்து கடற்கரையெங்கும் ஒலித்துக் கொண்டிருந்தது.

ஆலமரத்து முற்றத்து சிவன் கோயிலில் அமைந்திருந்த பெரும் ஆலமரமானது தனது விழுதுகளை நிலைநாட்டி சிவபெருமானுக்கு ஆதிசேசன் குடைபிடிப்பது போல அந்தப் பெரும் கோயிலுக்குத் தன் கிளைகளைப் பரப்பிக் குடைபிடிப்பது போல அகன்று விரிந்திருந்தது. இந்தச் சிவன் கோயிலில் எரிந்து கொண்டிருந்த நெய் விளக்கானது புகார் நகர மக்களுக்கு வெளிச்சத்தை மட்டுமல்லாது ஞானவொளியையும் வழங்கிக் கொண்டிருப்பது போலச் சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தது.

இப்படிப் பட்ட நெய்தலங்கானல் கடற்கரையில் இரவு சாமம் முதலைக் கடந்து இரண்டை நெருங்கிக் கொண்டிருந்ததால் எப்போதும் பரபரப்புடன் இருக்கும் கடற்கரை இப்போது எந்தவொரு சலனமும் இல்லாமல் அமைதியாகக் காணப்பட்டது. ஆனால் இவை எதனிலும் கவனம் செலுத்தாமல் சோழப் பேரரசின் இணையற்ற வீரனும், ஒற்றர் பிரிவின் தலைவனும், தற்போது புகார் நகரத்திற்கும், அரண்மனைக் காவலுக்கும் தலைமைப் பொறுப்பேற்றுள்ள சோழ உப தலைவனுமான செங்குவீரன் எனப்படும் விறல்வேலின் மனம் மட்டும் சலனத்தொடும், நிலையில்லாமலும் வேதனையில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது.

தன் காதலைப் புரிந்துகொள்ளாத வானவல்லி, சோழ தேசத்தின் மாறிக்கொண்டிருக்கும் அரசியல் நிலைமை, உற்றார் உறவினர்கள் என்று யாரும் இல்லாமல் தான் மட்டும் அநாதையாக வாழும் நிலை என்று பெரும் கலக்கத்தில் குணக்கடலில் நடந்துகொண்டிருந்தான்.

அவனது புரவி அவனைப் பின் தொடர்ந்தபடியே, எந்தவொரு இடையூறும் செய்யாமல், இரண்டு பாவம் தள்ளி நடந்து வந்துகொண்டிருந்தது. ஒரு வெள்ளை நிற பருத்த புறா ஒன்று எங்கிருந்தோ பறந்து வந்து காற்றில் தவழ்ந்து, அதன் நீண்ட இறக்கையைச் சுருட்டி உடலோடு ஒட்டிக் கொண்டு அவனது தோளின் மீது மெல்ல அமர்ந்தது. அவனது தோளின் மீது அமர்ந்த புறாவையும் அவன் கவனிக்காமல் நடந்துகொண்டிருந்தான். அவனது தோளில் அமர்ந்த புறாவானது, செய்திகளை அவசரமாகப் பரிமாறும் பொருட்டு நன்கு பழக்கட்டு வளர்க்கப்பட்டது. அதில் மறைத்து அனுப்பட்டிருக்கும் தூது சீட்டை சம்பந்தப்பட்டவர் எடுத்து வாசிக்கும் வரை அது அவ்விடத்தை விட்டு நகராது.

அவனது காதருகே “கூ…” “கூ…” வெனச் சத்தத்தை எழுப்பியும், இறக்கைகளை வேகமாக அடித்துக் கொண்டும் அவனது கவனத்தை ஈர்க்க புறா முயன்ற பின்னும், அவன் தன்னிலை மறந்தே நடந்து கொண்டிருந்தான். இதுவரை அவனை அமைதியாகப் பின்தொடர்ந்த அவனத் புரவி, நிலைமையைப் புரிந்தவாறு கால்களை உயர்த்தி வேகமாகக் கனைத்தது. கனைப்பின் சத்தத்தைக் கேட்டு உணர்வு பெற்றவனாய், புறாவைப் பிடித்து அதன் தலையைக் கோதியபடி சுற்றியுள்ள வானத்துப் பகுதிகளை ஆராய்ந்தான். புறாவைப் பிடித்து அதன் கழுத்தைத் தடவிக் கொடுத்துக் கொண்டே வெளிச்சம் உள்ள பகுதியை நோக்கி விரைவாக நடந்தான் விறல்வேல்.

பரத்தையர் தெருவில் எரிந்துகொண்டிருந்த விளக்கிற்கருகில் சென்ற செங்குவீரன், புறாவின் தலையை மெல்ல தடவியபடியே, அதன் உடலை மெல்லச் சோதனை செய்ய ஆரம்பித்தான். கால்களில் எதுவும் காணாததால் அதன் உடலை சோதிக்கத் தொடங்கினான். அவன் உடலைத் தொட்ட உடனேயே அது தன் இரண்டு இறக்கைகளையும் விரித்துக் காட்டியது. நன்கு, இறுகி காப்புக் காய்ந்திருந்த அவனது விரல்களால் பட்டு போன்ற

மென்மையான இறகுகளைக் கொண்ட அதன் இறக்கையை மெதுவாகத் தொட்டு அழுத்தியபடியே ஒவ்வொரு பகுதியாக ஆராய்ந்தான். அவனது விரல்கள் புறாவின் இடது பக்க இறக்கையின் மேற்புரத்தைத் தடவியவுடன் “கொர்..”. “கொர்..” என்று மெல்ல சத்தம் எழுப்பியது. அவ்விடத்தை நன்கு அழுத்தி பரிசோதனை செய்த போது புறாவின் இறக்கையில் எளிதில் கண்டறிந்து இயலாத படி, சுருட்டி மறைத்து வைத்திருந்த ஒரு பட்டுத் துணியைக் கண்டறிந்தான்.

பட்டுத் துணியைப் பிரித்து விளக்கு ஒளி மிகுந்த இடத்தில் விரித்துத் தூக்கிப் பிடித்து வாசிக்கலானான்.

விறல் வேலா,

**பத்திரையும், அவர்களைச் சார்ந்தவர்களும்** இந்த இரவில் முதல் சாமம் முடியும் தருவாயில் சம்பாபதி வனத்தைக் கடந்து புகார் வருகிறார்கள், நான் தடுத்தும் பயனில்லை. இதை நீ வாசிக்கும் தருவாயில் அவர்கள் வனத்தினுள் நுழைந்திருக்கலாம். செய்ய வேண்டியவற்றை உடனே செய்...

— ஈழவாவிரையர்

ஈழவாவிரையர் வழிப் போக்கர்களுக்கு உதவும் பொருட்டு, அன்ன சாவடி நடத்திக் கொண்டிருந்தாலும் செங்குவீரனுக்கு வேண்டிய ஒற்றுத் தகவல்களை அவர்தான் தொகுத்துக் கொண்டிருந்தார். பல தேசங்களில் வேளாதனின் பெயரில் ஈழவாவிரையரின் மேற்பார்வையில் நடைபெறும் அன்ன சத்திரங்களில் ஒற்றர்கள் பணிபுரிந்து கொண்டு வேண்டிய தகவல்களை ஈழவாவிரையர் வழியாகச் செங்குவீரனுக்கு அனுப்பிக் கொண்டிருந்தனர். பிறகு, அவை செங்குவீரனின் கட்டளைக்கேற்ப வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப் பயன்பட்டன. செங்குவீரனின் எண்ணத்திற்கேற்ப எங்கெங்கு யாரை அனுப்ப வேண்டும் என அவன் எண்ணத்திற்கு ஏற்ற கருவியாக ஈழவாவிரையர் செயல்பட்டுக் கொண்டிருந்தார். செங்குவீரனுக்கும் ஈழவாவிரையர் மேல் பெரும் மதிப்பும். மரியாதையும் உண்டு. இவனது உற்ற ஆலோசகரும் அவர்தான். இவனெடுக்கும் முடிவுகள் அனைத்திலும் அவரது ஆலோசனைகள் கலந்திருக்கும்.

பட்டுத் துணியில் அவர் வரைந்துள்ள எழுத்துகளை அவன் தொட்டுப் பார்த்தான். அதிலிருந்த கருஞ்சாந்தெழுத்தின் ஈரம் கூட இன்னும் காய்ந்திருக்கவில்லை. அவர் இந்தக் கடிதத்தை எழுதி ஒன்றிலிருந்து இரண்டு நாழிகைப் பொழுதுகள் தான் ஆகியிருக்கும் என்பதை அந்த எழுத்தின் ஈரத்திலிருந்து அவன் உணர்ந்துகொண்டான்.

வானத்தைப் பார்த்தான், அந்தப் பங்குனி இரவில் பௌர்ணமி நிலவு வானம் முழுக்க வெள்ளிக் கதிர்களை நிரப்பிக் கொண்டிருந்ததால் அவனால் நட்சத்திரங்களின் இருப்பிடத்தை அறிந்துகொள்வது மிகவும் கடினமாக இருந்தது. இருப்பினும் முழுநிலவின் இருப்பிடத்திலிருந்து பொழுது கடந்து இரண்டு சாமம் ஆகியிருக்கும் என்பதைச் சரியாகவே கணிக்கச் செய்தான்.

இந்தநேரம் சம்பாபதி வனத்தினுள் அவர்கள் நுழைவதாக வைத்துக் கொண்டாலும், இன்னும் ஒரு ஓரைப் பொழுதில் சம்பாபதி வனத்தின் மையப் பகுதியை அடைந்துவிடுவர். அங்குதான் அவர்கள் கள்வர்களால் தாக்கப்படும் வாய்ப்புகள் அதிகம், ஈழவாவிரையர் அவர்களைத் தனியாக அனுப்பியிருக்க மாட்டார். நிச்சயம், சில காவல் வீரர்களைத் துணைக்கு அனுப்பியிருப்பார். அவர்கள் கள்வர்களுடன் சண்டையிட்டாலும் ஒரு நாழிகைப் பொழுதுதான் தாக்குப் பிடிப்பர். பிறகு அவர்கள் எதிர்த்து நிற்கும் வலிமையிழந்து விடுவர். அவர்களுக்குக் கள்வர்களால் ஆபத்து ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் எப்படி விரைவாகச் சென்றாலும் இன்னும் ஒரு முகூர்த்தப் பொழுதிற்குள் அவர்களை அடைந்துவிட வேண்டும், அதன் பிறகு சென்றாலும் பயனில்லை என்பதைக் கண நேரப் பொழுதில் அவன் யோசனை செய்து கொண்டான்.

எவ்வளவு விரைவாகச் செல்ல முடியுமோ, அவ்வளவு விரைவாகச் செல்லத் தீர்மானித்துக் கொண்டு அவனது வெண்ணிறப் புரவியை நோக்கினான். அவனது எண்ணக் குறிப்பை உணர்ந்துகொண்ட அவனது புரவி அவனருகே வந்து நின்றது. அதன் மீது ஏறிக்கொண்ட செங்குவீரன், புரவியில் வேகமாகப் பறந்தான். அவனது மனதின் வேகத்தை அவனது கால்கள் புரவியின் வயிற்றில் அழுத்தியிருந்த அழுத்தத்தைக் கொண்டு உணர்ந்த புரவி வேகமாகச் சென்றது. கடற்கரையில் அவனது புரவியின் குளம்புகள் பதித்த

தடத்திலிருந்து எழுந்த புழுதி வெகுநேரம் கடற்கரையில் பறந்துகொண்டிருந்தது.

கடற்கரையில் புறப்பட்ட அவனது புரவியானது முதலில் மருவூர்ப்பாக்கத்தைச் சென்றடைந்தது. இரண்டாம் சாமமும் முடியும் தருவாயில் இருந்ததால் மருவூர்ப் பாக்க வீதிகள் அனைத்தும் ஆளரவம் எல்லாம் அடங்கி அமைதியாகக் காட்சியளித்தது. மருவூர்ப் பாக்க வீடுகளின் வாசல்களிலும், திண்ணைகளிலும் சாய்த்திருந்த போர் வால்களும், நீண்ட ஈட்டிகளும், அகன்ற வேல்களும் வீதிக்கு பெரும் கம்பீரத்தை அளித்தது. வீட்டு வாசல்களில் வைத்திருந்த இந்தப் பேராயுதங்கள் புகார் நகர மக்களின் வீரத்தை பறைசாற்றுவதாக அமைந்திருந்தது. இவை அனைத்தையும் கவனிக்காமல் சென்றவன் வானவல்லியின் வீட்டிற்கு முன் வந்ததும் அங்கு யாரையோ நீண்ட நேரமாக எதிர்பார்த்துக் காத்திருந்த வானவல்லியின் தாயார் அவனது கவனத்தை ஈர்த்தார்.

வானவல்லியின் தாயார் வாசலில் நின்றுகொண்டே வானவல்லிக்காகக் காத்திருந்தார். இன்று இரவு முதல் நாழிகைக்குள்ளாகவே வந்து விடுவதாகச் செய்தி அனுப்பிய அவர்கள் இரண்டாவது சாமம் முடிந்தும் வீடு வந்து சேராதது அவருக்குப் பெரும் பீதியை அளித்திருந்தது. பொழுது சாய்ந்து ஒரு ஓரைப் பொழுதிற்குப் பின், அவள் பத்திரையின் பட்டினப் பாக்கத்து வீட்டிற்கும் சென்று விசாரித்து வந்துவிட்டாள். இன்னும் திரும்பாததால் அவள் பெரும் கவலையுடன் வீட்டிலிருந்து வெளியே வந்து மீண்டும் மீண்டும் வீதியையே நோக்கிக் கொண்டிருந்தாள். இந்த நேரத்தில் தான் விறல்வேல் அந்த வீதியை வேகமாகக் கடந்துகொண்டிருந்தான். விரைவாகச் சென்றவன் வானவல்லியின் தாயாரின் நிலையைப் பார்த்ததும், குதிரையின் கடிவாளத்தைப் பற்றி அதன் வேகத்தைக் குறைத்து, மெல்ல வானவல்லியின் தாயாரை நோக்கி அருகில் சென்றான். அவன் பார்வையிலிருந்து, அவனது கேள்வியைப் புரிந்துகொண்ட வானவல்லியின் தாயார், ‘‘மரகதவல்லியைக் காண நாங்கூர் சென்ற பத்திரையும் வானவல்லியும் இன்றிரவு முதல் நாழிகைக்குள்ளாகவே வீடு திரும்புவதாகச் செய்தி அனுப்பினார்கள். கூறியபடி இன்னும் வீடு திரும்பவில்லை, அவளைத்

தான் எதிர்பார்த்துக் கொண்டு காத்திருக்கிறேன்!'' என்று கவலையுடன் கூறினாள்.

''தாங்கள் வானவல்லி பற்றி எந்தவொரு வருத்தமும் கொள்ளத் தேவையில்லை, நிம்மதியாக உறங்குங்கள். விரைவில் அவள் வீடு வந்து சேர்வாள்!'' என்று அவரை ஆறுதல் படுத்தினான்.

வானவல்லியின் தாயார், வானவல்லி பற்றிக் கூறக் கேட்டதும், ஈழவாவிரையர் பத்திரையும், பத்திரையைச் சார்ந்தவர்களும் என்று பட்டுத் துணியில் கருஞ்சாந்துக் குழம்பால் அழுத்தமாக எழுதியதன் காரணம் அவனுக்கு அப்போது தான் புரிந்தது.

உடனே செங்குவீரன், ''ஈழவாவிரையரிடமிருந்து தற்பொழுதுதான் அவர்களைப் பற்றிச் செய்தி வந்தது. அதன் காரியம் பொருட்டுத் தான் விரைவாகச் சென்றுகொண்டிருந்தேன், தாங்கள் கவலையுடன் நின்றதைக் கண்டு விசாரிக்கலாமென வந்தேன். நான், விரைந்து செல்ல வேண்டும், காலம் தாழ்த்த இயலாது!'' என்று கூறிய படியே வானவல்லியின் தாயாரிடம் விடைபெற்றுக் கொண்டு விரைந்தான்.

வானவல்லியின் தாயாரின் பேச்சைக் கேட்டதும், வானவல்லி உள்ளவரை பத்திரைக்கு ஏதும், எந்தத் துயரும் நேராது என நினைத்து அவனது மனம் சற்று நிம்மதி அடைந்தது. ஆனால், வானவல்லிக்கு ஏற்படப் போகும் துயரத்தை நினைத்ததும் மீண்டும் அவன் மனம் சொல்ல இயலாத துயரத்தை அடைந்தது.

அவர்களைக் காக்க சம்பாபதி வனத்தின் மையப் பகுதியை நோக்கி மின்னலென விரைவாகச் சென்றுகொண்டிருந்த அவனது புரவி, சில மணித்தியாலங்களில் மருவூர்ப் பாக்கத்தின் எல்லையை அடைந்துவிட்டிருந்தது. மருவூர்ப் பாக்கத்திற்கும் பட்டினப் பாக்கத்திற்கும் இடையில் இரண்டிற்கும் எல்லையாக அமைந்திருந்த பண்டக சாலைக்கு நாளங்காடி எனப்பெயர். இரவு நேரத்தில் நாளங்காடிக்கு அல்லங்காடி என்று பெயர். அந்த அல்லங்காடி இரண்டாவது சாமத்தைக் கடந்த வேளையிலும் பரபரப்புக் குறையாமல் இயங்கிக் கொண்டிருந்தது. அல்லங்காடியின் கூட்டம் அவனது புரவியின் வேகத்தைச் சற்று மட்டுப் படுத்தவே செய்தது. நாளங்காடித் தெருவைக்

கடந்து அவனது புரவி பல அடுக்கு மாட மாளிகைகளைக் கொண்ட பட்டினப் பாக்கத்தின் தெரு வழியே விரைந்துகொண்டிருந்தது. பட்டினப் பாக்கத்தைச் சுற்றாமல், குறுக்கு வழியாகப் பட்டினப் பக்கத்தின் எல்லையில் அமைந்திருந்த சம்பாபதி அம்மனின் கோட்டமான குச்சரக்குடிகை கடந்து சம்பாபதி வனத்தினுள் நுழைந்தான் செங்குவீரன்.

சம்பாபதி வனத்தினுள் கழுத்து நிறைய மண்டையோட்டுடனும், பருத்த தொந்தியுடன் இருட்டுச் சமயத்தைச் சார்ந்த கபாலிகர்கள் ஓதும் சுடுகாட்டு மந்திர ஒலி தூரத்திலிருந்து அவனது காதுகளை அடைந்துகொண்டிருந்தது. வழியின் இருபுறங்களிலும் விழுந்து கிடந்த மண்டையோடுகள் அவற்றில் பட்டு எதிரொளித்த பௌர்ணமி நிலவொளிக்குப் பயங்கரத்தை அளித்துக்கொண்டிருந்தது. இந்த மண்டையோடுகளும், தூரத்து மந்திர சத்தங்களும் அந்த வழியாக வருவோருக்குப் பயத்தை அளித்து நடுங்க வைக்கும்படியாக இருந்தது. இவை எவற்றிலும் தன் கவனத்தைச் செலுத்தாமல், வானவல்லி மற்றும் பத்திரைக்கு எந்தவித ஆபத்தும் நேரவிடக் கூடாது என்பதை நினைத்து ஒரே மூச்சாகச் சென்றுகொண்டிருந்தான்.

ஒரு ஓரைப் பொழுது பயணம் செய்திருப்பான். வனத்தில் விரைந்துகொண்டிருந்த வேளையில் தூரத்தில் ஒரு ஒளிக்கீற்று தோன்றி மறைவது போலத் தோன்றியது. அந்தச் சிறு ஒளிக்கீற்று அவனது மனதை இயல்பு நிலைக்குக் கொண்டுவந்தது.

அந்த ஒளிக்கீற்று தோன்றிய இடம் சம்பாபதி வனத்தின் மையப் பகுதிதான் என்பதை அறிந்திருந்த அவன் இன்னும் விரைவாக நானூறு புரவிகளின் வேகத்தில் தனது புரவியைச் செலுத்தினான்.

வானவல்லியின் கத்தியால் குத்துபட்ட கள்வர்கள் அந்த இடத்திலேயே கீழே விழுந்து துடித்துக்கொண்டிருந்தனர். எரிந்துகொண்டிருந்த ஒரேயொரு தீப்பந்தமும் கீழே விழுந்துவிட்டதால், அது அணைந்து அவ்விடத்தை இருள் கவ்வியிருந்தது. புரவித் தேரின் கீழே எரிந்துகொண்டிருந்த, சிறு விளக்கு மட்டுமே வெளிச்சத்தைக் கொடுத்தது. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, பத்திரையின் கரங்களைப் பற்றி இருளான இடத்திற்கு நகர்த்திச் சென்றுவிட்டாள் வானவல்லி.

வலது தோளில் குறு வாளால் தாக்கப்ப்பட்ட கள்வர்களின் தலைவன் காளனோ வலியால் துடித்துக் கொண்டிருந்தான். தனது வலது தோளில் பாய்ந்த கத்தியைப் பிடுங்கும் போது ஏற்பட்ட வலியால் அலறிய காளன், ‘‘அனைவரையும் கொன்று போடுங்கள்’’ என்று உரக்கக் கத்தினான். அவனது தோளில் கத்தி பாய்ந்த இடத்திலிருந்து குருதி குபுகுபுவென வெளியேறியது. தனது இடது கையால் காயத்தை அடைத்து குருதி வெளியேறா வண்ணம் அடைத்துக் கொண்டான் காளன்.

வானவல்லியின் தாக்குதலினால் கோபமடைந்திருந்த கள்வர்கள் காளனின் கட்டளையினால் அனைத்து வீரர்களின் தலையையும் கொய்ய வாளை உருவி அவர்களை நெருங்கிய சமயத்தில் கள்வன் ஒருவன் ‘‘அய்யோ’’ என்று அலறியபடியே கீழே சாய்ந்தான். அவனது மார்பில் குறுவாள் ஒன்று தைத்திருந்தது. அருகில் நின்ற கள்வர்கள் ஏன் அவன் இப்படிச் சாய்ந்தான் எனத் திகைத்து நின்றனர். அவர்களின் திகைப்பு அடங்குவதற்குள் தூரத்திலிருந்து புரவியின் குளம்புச் சத்தம் இவர்களை நோக்கி வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தது. புரவியில் அமர்ந்திருந்தபடியே செங்குவீரன் தனது நீண்ட வாளை கள்வர்களை நோக்கி வீசியபடி அவர்களை நெருங்கினான். சிறிது நேரத்திலேயே அந்த இடம் ஒரு சிறிய சண்டைக் களமாகியது.

இந்த இரவில் படைத்தலைவனும், காவல் தலைவனுமான செங்குவீரனை அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. கள்வர்கள் யாரும் எதிர்பாராத நேரத்தில் செங்குவீரனின் தாக்குதலால் அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். அவன் சுழற்றியதில் நின்றுகொண்டிருந்த கள்வர்களின் மார்பிலும், தலையிலும் பாய்ந்த அவனது வாளினால் கள்வர்களின் அலறல் சத்தம் சம்பாபதி வனமெங்கும் எதிரொலித்தது. தமது தலைவன் செங்குவீரனைக் கண்டதும், சோர்வுற்றிருந்த காவல் வீரர்களும் புத்துணர்வு பெற்று ஆயுதங்கள் இல்லாமலே, நின்று கொண்டிருந்த கள்வர்களைத் தாக்கினர். இனியும் இவர்களைச் சமாளிக்க இயலாது என்பதைப் புரிந்துகொண்டிருந்த கள்வர்களும், அவர்களின் தலைவன் காளனும் இருளைப் பயன்படுத்தித் தப்பித்தோடினர்.

மார்பிலும், தலையிலும் வாளினால் தாக்கப்பட்டு உயிர் பிரியாமல் துடித்துக் கொண்டிருந்த பிழைக்க வாய்ப்பில்லாத கள்வர்களின் மேல் வீரர்கள் கருணை கொண்டு போர் தர்மப் படி அவர்களுக்கு வலியில்லாமல் மோட்சமளித்தனர். அணைந்து போயிருந்த தீப்பந்தத்தை மீண்டும் புரவித் தேரின் அடியிலிருந்த விளக்கிலிருந்து ஏற்றி வானவல்லியையும், பத்திரையையும் தேடலானான் செங்குவீரன்.

செங்குவீரனால் வெட்டப்பட்டு அலறிய கள்வர்களின் அலறல் சத்தத்தைக் கேட்ட வானவல்லியும், பத்திரையும் அந்த அலறல் கள்வர்களால் வெட்டப்பட்ட காவல் வீரர்களின் குரல் தான் என நினைத்து பயந்து நடுங்கினர். அவர்களை நோக்கி நெருங்கி வந்த தீப்பந்த ஒளியைப் பார்த்து அவள் கள்வர்கள் தான் தம்மைத் தேடுகிறார்கள் என்று பயந்துகொண்டிருந்தாள்.

தீப்பந்தம் அருகில் நெருங்கி வந்துவிட்டதும், தீப்பந்தத்தை வைத்திருப்பது செங்குவீரன் தான் எனப் பார்த்ததும் அவள் ஓடிவந்து அவன் தோள் மீது சாய்ந்து கொண்டு மகிழ்ச்சியில் தேம்பித் தேம்பி அழுதாள்.

அவளை ஆறுதல் படுத்திய செங்குவீரன், அவள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் துளிகளைத் துடைத்துவிட்டு, “அதுதான் நான் வந்துவிட்டேனே! இனி என்ன அச்சம் உனக்கு? இனி கவலையில்லை:” என்று கூறியபடியே, அவளது முதுகைத் தழுவி அவளை அமைதிபெறச் செய்தான். ஆனால் அவனது கண்கள் மட்டும் வானவல்லியைத் தேடின.

பத்திரையிடம் “வானவல்லி எங்கே? தாங்கள் இருவரும் தானே, வந்துகொண்டிருப்பதாக வானவல்லியின் தாயார் கூறினார். நீ மட்டும் இங்குத் தனியாக நிற்கிறாய், அவள் எங்கே? அவளுக்கு என்ன ஆனது” என்று பதறிக்கொண்டே கேட்டான்.

அதற்குப் பத்திரை, புரவி ரதத்தை நோக்கி பார்வையைச் செலுத்தினாள். பந்தத்தைப் பத்திரையிடம் கொடுத்துவிட்டு வண்டியை நோக்கி வானவல்லியை சந்திக்கப் போகும் பேரார்வத்தில் அவளை நோக்கி முன்னேறினான். ஆனால் அவளோ, இவனைக் காண விருப்பப் படாதது போலப் புரவித் தேரின் நிழலில் மறைந்து நின்றாள். அவளைக் காண வேண்டுமென்ற

துடிப்பில் இவன், அவள் நின்றதைக் கண்டதும், ஒரு அடி முன்னால் வைத்தான். அவள் மீண்டும் தீப்பந்த ஒளி படராத இடத்தில் இரண்டு அடி பின்னால் சென்று மறைந்தாள்.

அவள் மறைந்து அலட்சியப்படுத்தி, நிராகரித்து இவனைச் சந்திக்கவே விருப்பமில்லாமல் விலகி நின்று கொண்டிருந்தது இவனுக்குப் பெரும் வேதனையை அளித்தது. யாரை சந்தித்தால் அவனது மனத்துயர் அனைத்தும் விலகிவிடும் என்று நினைத்தானோ? அவளைக் கண்டதும் அவளாலே அவனது துயர் அனைத்தும் பல மடங்கு பெருகிக்கொண்டிருந்ததை உணர்ந்தான்.

தன் மேல் அவளுக்குக் கோபம் உண்டென்பதை அவன் அறிவான். ஆனால் அருகில் இருந்தும், தன்னைக் காணக்கூட விருப்பமில்லாமல் அவள் விலகி நின்றது அவனுக்குப் பெரும் வலியை அளித்தது.

பெண்ணின் விருப்பமில்லாமல் அவள் பார்வையைத் தீண்டுவது கூடப் பாவம் என்பதை அறிந்த அவன், இனி அவள் முன் செல்வது சரியாக இருக்காது என்பதை உணர்ந்து, முன் செல்லத் துடித்த அவனது கால்களைக் கட்டுப்படுத்திப் பின்வந்து, அருகில் இருந்தவர்களைப் பார்த்து ‘‘நீங்கள் அனைவரும் பத்திரமாகச் செல்லுங்கள்’’ என்று வீரர்களுடன் பத்திரையையும், அவளைச் சார்ந்தவர்களையும் அனுப்பிவைத்தான்.

இரு வீரர்களை அழைத்து, ‘‘ஈழவாவிரையருக்கு நடந்த நிகழ்வுகளைத் தெரிவியுங்கள்’’ என்று கட்டளையிட்டான். இறந்தவர்களின் உடல்களைக் காலையில் பொழுது புலர்ந்ததும் பார்வையிட்டுக் கொள்ளலாம் என நினைத்துவிட்டுப் புரவி மீது தாவினான்.

கள்வர்களிடமிருந்து காப்பாற்றப்பட்ட அனைவரும் வந்த துயரம் அனைத்தும் விலகி புத்துயிர் பெற்று பெரும் மகிழ்ச்சியுடன் சென்றனர்.

ஆனால், விறல்வேல் மட்டும் அவனது உயிர், உணர்வுகள் என அனைத்தையும் அங்கேயே இழந்து புரவிப் பிணமாகவே தன் இருப்பிடம் நோக்கித் திரும்பினான்.

**அடிக்குறிப்பு :**

1. *கார்க் கரும்பின் கமழ் ஆலைத், தீத் தெருவின் கவின்* — என்ற பட்டினப் பாலை (9—10) பாடல் வரியின் மூலம் சங்ககாலத்திலே தமிழகத்தில் கரும்பைக் காய்ச்சும் ஆலைகள் இருந்திருப்பதை அறியலாம்.
2. சங்க காலத்தில் வங்கக் கடலுக்கு (வங்காள குடாக் கடல்) குணக் கடல் என்று பெயர். (குணக்கு—கிழக்கு) அதாவது கிழக்குக் கடல்.
3. புகாரில் ஆலமுற்றத்து இறைவன் கோயில் இருந்ததாக அகநானூறு பாடலில் பரணர் கூறுகிறார்.

*ஆலமுற்றம் கவின்பெறத் தைஇய* (17 வது வரி) பாலை —181

4. கந்திற்பாவை: எதிர்காலத்தில் நடைபெறுவதை முன்பே அறிந்திருக்கும் பௌத்த மதக் கடவுள்.

**பின் குறிப்பு:**

ஒரு நாழிகை = 24 நிமிடம்

2.5 நாழிகை = 1 ஓரை = 60 நிமிடங்கள் = 1 மணித்தியாலம்

3.75 நாழிகை = 1 முகூர்த்தம்

7.5 நாழிகை = 2 முகூர்த்தம் = 1 சாமம்

60 நாழிகை = 8 சாமம் = 2 பொழுதுகள் = 1 நாள்

7 நாள் = ஒரு கிழமை

15 நாள் = 1 பட்சம் = 0.5 மாதம் (திங்கள்)

2 பட்சம் = 1 மாதம் (திங்கள்)

5. ஒரு யோசனை உயரம் என்பது 30 மைல் தூரம்

6. குச்சரக் குடிகை என்பது சம்பாபதி அம்மனின் கோயிலுக்குப் பெயர். கோயில்— கோட்டம். இதனை மற்ற மதத்தோர் சுடுகாட்டுக் கோட்டம் எனவும் பவுத்தர்கள் இதனை சக்கரவாளக் கோட்டம் எனப் போற்றினார்கள். இதற்கு முதியாள் கோட்டம் என்ற வேறு பெயரும் இருந்தது.
7. புகாரின் இரு பிரிவுகள் மருவூர்பாக்கம், பட்டினப் பாக்கம். இவற்றின் மத்தியில் இருந்த பண்டக சாலைப்பகுதிக்கு நாளங்காடி என்று பெயர். இந்த நாளங்காடி அக்காலத்தில் பெரும் புகழ் பெற்றிருந்தது. இரவு முழுவதும் பரபரப்புடன் இயங்கும் பண்டகசாலை. (சிலப்பதிகாரம்.... புகார்க்காண்டம் இந்திரவிழவு எடுத்த காதை 69—75)
8. கல்பம் என்றால் 432 ◌ $10^7$ ஆண்டுகள்.

# 6. யவன நண ்பன் டாள்தொபியாஸ்

காவிரி ஆறு குணக் கடலோடு சங்கமித்த இடத்திற்குக் கிழக்கே கடற்கரையையொட்டி, காவிரியாற்றின் ஓரமாக அமைந்திருந்த சிறு குன்று குன்றுத்துறை என அழைக்கப்பட்டது. புகார் நகரான பட்டினப்பாக்கத்தையும் மருவூர் பாக்கத்தையும் சற்று தள்ளி ஒதுக்குப் புறமாகக் அமைந்திருந்தது. இரு பட்டினங்கள், துறைமுகம், குணக்கடலின் விரிந்த கடற்பரப்பு என யாவற்றையும் ஒரு சேர கவனிக்கும் வண்ணம் பாங்குற அமைந்திருந்தது அந்தக் குன்று. புகார் நகரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளம் அந்தக் குன்று. இந்தக் குன்றின் மீது அமர்ந்துகொண்டே புகார் நகரம், துறைமுகம், குணக்கடல் என மூன்றையும் கண்காணித்து விட இயலும். இந்த ஒற்றைக் குன்றில் இருந்துகொண்டு தான் செங்குவீரன் ஒட்டு மொத்த தமிழக அரசியல் நிலையையும் கண்காணித்துக் கொண்டிருந்தான். புகார் பட்டினத்தை யாராவது தாக்குவதாக இருந்தாலும் இந்தக் குன்றைக் கடந்த பிறகே நெருங்க இயலும். இப்படிப்பட்ட குன்றில் தான், செங்குவீரனும் அவனது வீரர்களும் தளம் அமைத்துத் தங்கியிருந்தனர்.

புகார் நகர மாட மாளிகைகள் இரவு நேர விளக்கொளிகளால் மின்னிக்கொண்டிருந்தன. குணக் கடலின் பரந்த நீர்பரப்பிலிருந்து படகுகள் மற்றும் பாய்மரக் கப்பல்களின் விளக்கொளிகள் மெல்ல புகார் நகரக் கலங்கரை விளக்கை நோக்கி விரைந்தன. கடலின் பௌர்ணமி ஓதத்திலும், அலையின் ஏற்றத்தாழ்வுகளுக்கு ஏற்ப அந்த விளக்கொளிகள் மேலும் கீழும் ஆடிக்கொண்டே வருவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியது. குன்றின் மீது கூடாரத்தில் உறக்கமின்றி அமர்ந்திருந்த செங்குவீரனின் மனத்திரையில் வானவல்லியைக் காண நேர்ந்ததையும், பின் அவன் முற்றிலும் எதிர்பாராத விரும்பத்தகாத நிகழ்சிகளும் ஒவ்வொன்றாகத் தோன்றி அவனை ரணப்படுத்திக் கொண்டிருந்தது.

உடலில் ஏற்படும் காயங்களை விட மனதில் ஏற்படும் காயங்களே ரணமாகி அதிக வலியைக் கொடுக்க வல்லது என்பதை அவன் உணர்ந்தான். மனம் இதனை உணரவே செய்தாலும் எதையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை இழந்திருந்தான் செங்குவீரன். அனைத்தையும் அவன் அனுபவிக்கவே செய்தான். இந்த அனுபவம் அவனது மனதை மெல்ல வலிமையடையவும் செய்துகொண்டிருந்தது.

ஒருவர் மீது நாம் கொண்டிருக்கும் அன்பும், காதலும் மிகையாகி அவர்களை ஏற்றுக்கொள்ளவும் இயலாத மறக்கவும் இயலாத சூழ்நிலையில் மனதில் ஒருவர் மீது ஏற்படும் தனிப்பட்ட விருப்பமின்றியும், விருப்பத்துடனுமான உளவியல் காரணமே வெறுப்பு என்று என்றோ படித்த மனோதத்துவக் கோட்பாடு மனத்திரையில் தோன்ற அவனது முகத்தில் ஒருவித நகைப்பு ஏற்படவே செய்தது.

செங்குவீரன் உறக்கமின்றி, வானவல்லியை எண்ணி கலங்கிக் கொண்டிருந்ததைக் கண்ட அவனது நண்பன் வருந்தினான். யவனத்திலிருந்து வாணிபம் மேற்கொள்ளப் புகார் வந்து, செங்குவீரனின் வீரத்திலும், அவனது திறமையாலும் கவரப்பட்ட யவன வீரன் டாள்தொபியாஸ், செங்குவீரனின் படைப்பிரிவில் சேர்ந்துகொண்டு அவனுக்கு உற்ற நண்பனாகவும் மாறியிருந்தான்.

யவன தேசத்தில் மாசிடோனிய மன்னன் பிலிப்பின் மகன் அலக்சாந்தரின் படையெடுப்பில் யவனம், ரோமாபுரி, பெருசியா மற்றும் பல தேசங்களை வென்றான். யவனத்தில் தோன்றிய மாபெரும் பேரரசு அதுதான். அவனது திடீர் உடல் நலக் குறைவால் அவன் கைப்பற்றிய தேசங்கள் அனைத்தையும் அவனது தளபதிகளிடம் ஒப்படைத்தான். அவன் இறந்த பிறகு அவனது தளபதிகள் அனைவரும் மாசிடோனிய புதிய மன்னனுக்குக் கட்டுப்பட மறுத்து, சுதந்திரமாகச் செயல்பட ஆரம்பித்தனர். அப்படி அவர்கள் சுதந்திர அரசாக அறிவித்த பின், அலெக்சாந்தரின் கீழ் ஒரே குடையாக ஆளப்பட்ட அந்த மாபெரும் தேசம் பல சிறு சிறு அரசுகளாகச் சிதறுண்டு வலிமையிழந்தது. பிறகு யவனத்தில் கிரேக்கர்களின் வலிமையும் பெருமையும் குன்றி ரோமின் ஆதிக்கத்திற்குப் பணிந்து அடிமைப்பட ஆரம்பமானது.

ரோமிற்கு பணிந்து கிரேக்கத்தில் தங்களைத் தனியரசாக அறிவித்துக்கொண்டவர்கள், தங்களுக்கு யார் யாரெல்லாம் கட்டுப்பட மறுக்கிறார்களோ அவர்களை உயிரோடு தொங்கவிட்டும், அந்தக் கிராமங்கள் அனைத்தையும் தீக்கிரையாக்கியும் அனைவரையும் அடக்கினர். இருப்பினும் சில பிரிவினர் புது அரசுக்கெதிராகத் தொடர்ந்து கிளர்ச்சிகளைச் செய்துகொண்டும், போராடிக்கொண்டும் இருந்தனர். யார் யார் மேலெல்லாம் சந்தேகங்கள் தோன்றுகிறதோ அவர்கள் தங்கள் குடும்பப் பெண்களை இழப்பதும், அவர்களின் உடமைகளை இழப்பதும் தான் யவன தேசங்களின் நிலைமையாக இருந்தது. அப்படிக் கொடூரமாகத் தாக்கப்பட்ட ஒரு கிராமத்தில் இருந்து தப்பி, வணிகன் என்ற போர்வையில் புகாரில் தஞ்சம் புகுந்தவன் தான் டாள்தொபியாஸ். வீரனான டாள்தொபியாஸ், செங்குவீரனின் தனிப்பட்ட திறமையின் மீது கொண்ட பற்றினாலும் அவனது நட்பினாலும் புகாரிலேயே, யவனர் படைப்பிரிவிற்குத் தலைமையேற்றுத் தங்கிவிட்டான். இவன் இங்குத் தங்கிவிட்டாலும், இவனது நினைப்பு அனைத்தும் தேச விடுதலையிலேயே இருந்தது.

தவித்துக் கொண்டிருந்த செங்குவீரனின் நிலையைக் கண்ட டாள்தொபியாஸ், ஒரு கிண்ணம் முழுக்க உரோமாபுரி தேச உயர்ரக மதுவைக் கொண்டுவந்து அவன் முன் நீட்டினான். செங்குவீரன் அந்த மதுவை ஏறெடுத்தும் பார்க்காமல் அமர்ந்திருந்ததைக் கண்ட டாள்தொபியாஸ், ‘‘இதனைப் பருகுங்கள் தலைவரே, நீங்கள் தேடிக்கொண்டிருக்கும் மருந்து இதுதான். உங்களின் அனைத்துவித வலிகளையும் மறக்கடிக்கச் செய்துவிடும். இதனை உடனே பருகிவிடுங்கள். எதனைப் பற்றியும் சிந்திக்காதீர்கள். இப்படியே தாங்கள் கவலையில் உய்த்திருப்பதைக் கண்டால் எனக்கு ஆச்சர்யமாகவும், வருத்தமாகவும் இருக்கிறது. நாங்கள் எங்களுக்கு முன்மாதிரியாகத் திகழும் எங்கள் தலைவரை இழந்துவிடுவோமோ? என்ற அச்சம் ஏற்படுகிறது. உங்கள் கவலைகள் அனைத்திற்கும் காரணமும், மருந்தும் வானவல்லி சகோதரியே என்பதை என்னால் யூகிக்க இயலுகிறது. அவர்களால் தான் உற்ற மருந்தாகவும் இருக்க முடியும் என்பதையும் அறிவோம். ஆனால் தங்களது நிலையையும், அவரது பிடிவாதத்தையும் பார்த்தால், எனக்குத் தங்களைப் பற்றிய

கவலைகள் அதிகரிக்கவே செய்கிறது. அவர்களது பிரிவு உங்களைப் பலவீனப்படுத்திக் கொண்டிருப்பதை நீங்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. நாங்கள் தான் அறிவோம். மதுவைப் பருகி உறங்கிவிடுங்கள் தலைவரே!'' என்று அவன் மீது அக்கறைப் பட்டு அவனுக்காக அவனிடம் கெஞ்சிக்கொண்டிருந்தான்.

அவனது ஆலோசனைகள் அனைத்தையும் கேட்டபடியே அமைதியாக அமர்ந்திருந்த செங்குவீரன், நீட்டிக்கொண்டிருந்த மதுக்கிண்ணத்தை வாங்கித் தூர வைத்துவிட்டு, ''டாள்தொபியாஸ், உனது அக்கறை எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. நீ என் மீது கொண்டிருக்கும் அன்பும் தனிப்பட்ட மரியாதையும் எனக்கு மிகுந்த உற்சாகத்தையும், மன நிறைவையும் அளிக்கிறது. உங்கள் தேசங்களைப் போலக் காதலையும், அதன் பிரிவையும் சிறு கோப்பை மதுவைக் கொண்டு மறக்கடிக்கவோ விலக்கவோ இயலாது என்பதை நீ புரிந்து கொள்ள வேண்டும் டாள்தொபியாஸ். காதலும் வீரமும் எங்கள் எண்ணத்தோடு மட்டுமல்லாமல் உயிரோடும், அறிவோடும், குருதியோடும் கலந்தது. காதலின் ஒவ்வொரு நிலைக்கும் ஒவ்வொரு நிலத்தைக் கொண்டு எங்கள் முன்னோர்கள், தனித்தனி இலக்கணங்களையும், இலக்கியங்களையும் படைத்துள்ளனர். காதலில் இருவரது அன்பும் ஒத்த நிலைகளான புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஒவ்வொன்றுக்கும் ஒரு திணையைப் பாடுபொருளாகக் கொண்டு அகத்திணை என்றும், மறஞ்செய்தலையும் அறஞ்செய்தலையும் புறத்திணை என்றும் இந்தக் காதலின் ஐந்து நிலைகளின் உருப் பொருள்களைக் களவு, கற்பு என்றும் நெறிப்படுத்தியுள்ளனர். இப்படிக் காதல், வீரம், அறம் முதலானவற்றை வெறும் அறிவு சம்பந்தப்பட்டது மட்டுமல்லாமல் அதனை எங்கள் வாழ்வோடும், வாழ்வியல் கலைகளாகவும், வாழ்வியல் இலக்கியங்களாகவும் நெறிப்படுத்தியுள்ளனர் எங்கள் முன்னோர்கள். உதாரணமாக.

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**

**அன்போடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**

**மறையோர் தேஎத்து மன்றல் எட்டினுள்**

**துறையமை நல்லியார்த் துணைமையோர் இயல்பே. (தொல்... களவி...1)**

என இலக்கணம் வழங்கியுள்ளனர் டாள்தொபியாஸ்.

காதல் என்பது உடல் சம்பந்தப்பட்ட கூறு மட்டும் அல்ல. அது எங்கள் அறிவோடும், உயிரோடும், உணர்வோடும் கலந்தது என்பதை நீ நிச்சயம் உணர்ந்து கொள்ள வேண்டும். நாங்கள் எப்படி அறத்தையும், வீரத்தையும் போற்றுகிறோமோ அப்படியே தான் காதலையும் போற்றுகிறோம்.

யார் கேட்டாவது, நான் எனது வீரத்தையும், அறத்தையும் விட்டுக்கொடுக்க இயலுமா? இயலாது டாள்தொபியாஸ். அப்படியேதான் காதலையும்.

அப்படி நான் எனது வீரத்தை விட்டுக் கொடுத்திருந்தால், என்றோ நான் எனது காதலியை அடைந்திருப்பேன். காதல் எனக்கு முக்கியம் தான். ஆனால் வீரத்தை இழந்து, வீரத்திற்குப் பதிலாகக் காதலை அடையும் மனப்பக்குவம் இன்னும் எனக்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

எப்படி வீரத்திற்குப் பதிலாகக் காதலை என்னால் ஏற்க இயலாதோ? அப்படியேதான், இந்த மதுவைப் பருகியும் என்னால் அதன் பிரிவின் வலியிலிருந்தும் தப்பிக்க இயலாது.

பெருங்கடலின் சீற்றத்தை கரையில் சிறு தடுப்புகளை ஏற்படுத்திக் கட்டுப்படுத்த இயலுமா?. இயலாது. அப்படியே தான் என் மனதில் தோன்றிக்கொண்டிருக்கும் உணர்ச்சிகளும். ஒரு சிறு கிண்ண மதுவைக் கொண்டு என் மனதில் எழும் உணர்ச்சி அலைகளைக் கட்டுப்படுத்த இயலாது என்பதை நீ புரிந்துகொள்ள வேண்டும்.

அவள் என்னைப் புரிந்துகொண்டு, ஒரு நாள் என் காதலுக்கு இசைவு தெரிவிப்பாள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. அவளது இசைவில் தான் என் எதிர்காலமும், மகிழ்ச்சியும் அடங்கியுள்ளது. ஒரு நாள் அவளது இசைவே அனைத்திற்கும் பெரும் அருமருந்தாக அமையப்போகிறது டாள்தொபியாஸ்.

அப்படி அவள், ஏற்கவில்லை எனில் அவளது பிரிவில் என் மனம் மரத்து, பக்குவப்பட்டுவிடும். இல்லையேல் அவளது பிரிவே, என்னைச் சிறிது சிறிதாகக் கொன்றுவிடட்டும். எது நடந்தாலும் அதனை மகிழ்ச்சியோடு ஏற்கும் மன நிலைக்கு வந்துவிட்டேன்'' என மறுமொழி கூறினான் செங்குவீரன்.

''தலைவரே, இப்படி நம்பிக்கையிழந்து ஏதும் கூறவேண்டாம். தாங்கள் தான் அனைவருக்கும் பெரும் நம்பிக்கையாக உள்ளீர்கள். நான் இங்கு வருவதற்கு முன் குடும்பம் அனைத்தையும் இழந்து, கண் முன் நடந்த பெரும் அக்கிரமங்களைத் துணிந்து பார்க்கக்கூடத் தகுதியற்றவனாய், தப்பித்துக் கடல் நாடோடியாக அலைந்து, பெரும் பயணத்திற்குப் பின் வாழ்வின் நம்பிக்கை அனைத்தையும் இழந்து ஏதுமற்றவனாய் புகார் வந்து தஞ்சமடைந்தேன். வந்த பிறகு, தாங்கள் தான் எனக்குப் பெரும் ஆதரவாகத் தோன்றினீர்கள். அன்று கடலில் திரிந்த வேளையில் துருவ நட்சத்திரம் எப்படி எனக்குப் பெரும் வழிகாட்டியாக இருந்ததோ, அப்படியே தான் இன்று நீங்களும் எனக்கு'' என டாள்தொபியாஸ் கூறிக்கொண்டிருந்த போது அவனது கடந்த கால நிகழ்வுகள் அனைத்தும் மனத்திரையில் தோன்றியதால் அவனது கண் கலங்கியது. அவனது கலங்கிய கண்ணைக் செங்குவீரன் அறியாத வண்ணம் துடைத்துக் கொண்டு மேலும் தொடர்ந்தான்.

''ஒரு நாள் தங்களால் தான், எனது அனைத்து துயரங்களுக்கும், துன்பங்களுக்கும் விடுதலை பிறக்கும் என்று நான் நம்பிக்கொண்டிருக்கிறேன். தாங்கள் இனியொரு முறை என்னிடம் விரக்தியாக ஏதும் கூற வேண்டாம் தலைவரே.

தாங்கள் கூறியதில் சிறு திருத்தம்! அனைத்திற்கும் வானவல்லி சகோதரிதான் அருமருந்து என்று கூறினீர், ஆனால் காலம் தான் உங்களுக்கு மிகச்சிறந்த மருந்தாக இருக்கப் போகிறது. இரவு நடுசாமத்தைக் கடந்துவிட்டது. மனதில் எந்தக் குழப்பமும் இல்லாமல் உறங்குங்கள். நான் விடைபெறுகிறேன் தலைவரே!'' என்று கூறியவாறே செங்குவீரனின் அறையைவிட்டு வெளியே புறப்பட்டான் டாள்தொபியாஸ்.

அவன் புறப்படும் தருவாயில், செங்குவீரன் அமர்ந்திருந்த இருக்கையின் அருகில் எரிந்துகொண்டிருந்த விளக்கிற்கருகில் இருந்த

எழுத்தாணியும், ஒரு ஓலையும் அவனது கவனத்தைக் கவர்ந்தது.

தனது கவனத்தைக் கவர்ந்த ஓலையினைப் பார்த்தவன், “தலைவரே தங்கள் அனுமதியுடன்...” எனக் கூறியவாறே சம்மதத்தை எதிர்பார்த்து, செங்குவீரனை நோக்கினான். செங்குவீரன் மறுப்பு ஏதும் தெரிவிக்காததையடுத்து, அந்த ஓலையை எடுத்து வாசிக்க ஆரம்பித்தான்.

செங்குவீரன் ஒற்றர் பிரிவிற்கும் தலைவனுமாகையால் அவனுக்கு அரசியல் சம்பந்தமான பெரும் ரகசிய ஓலைகளும் வருவதுண்டு, ஆகையால் தான் டாள்தொபியாஸ் செங்குவீரனின் சம்மதத்தை எதிர்பார்த்தான்.

முக்கியமான, ரகசியம் வாய்ந்த ஓலைகளைப் பிறர் கண் படும்படி வெளிப்படையாக வைத்திருக்க மாட்டான் செங்குவீரன். செங்குவீரன் வெளிப்படையாக வைத்ததிலிருந்தே அந்த ஓலையை வாசிக்க ஆர்வம் கொண்டான் டாள்தொபியாஸ். மேலும், அச்சாணியும் அருகில் இருந்ததனால் அந்த ஓலை அப்பொழுதுதான் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் அறிந்து கொண்டான்.

டாள்தொபியாஸ் பிறந்து வளர்ந்தது யவன தேசமாயிருந்தாலும், அவன் தற்பொழுது முழுவதும் புகார் நகரவாசியாகிருந்தான். அவனது தாய்மொழி கிரேக்கமாக இருந்தாலும், தமிழில் பிழையின்றிப் பேசவும் எழுதவும் கற்றுக்கொண்டு, தற்போது இலக்கணங்களையும், இலக்கியங்களையும் கற்கும் அளவிற்கு முன்னேறியிருந்தான் அந்த யவன வீரனான டாள்தொபியாஸ்.

“ஓலையைப் படித்துக்கொண்டே, தலைவரே பெரும் வீரர்களையும் கவிஞர்களாக மாற்றும் வல்லமையை இந்தப் புகார் நகரப் பெண்கள் மட்டும் எங்கிருந்து தான் கற்றார்களோ? தெரியவில்லை!” என்று வியந்தபடியே செங்குவீரன் எழுதியிருந்த ஓலையை உரக்க வாசிக்கத் தொடங்கினான் டாள்தொபியாஸ்.

**வில்லின் நாணோசை மங்கிப் போனதுவே**

**விளம்பியதோர் வாய்மொழியால்!**

**சொல்லால் நானும் சிதறுண்டு போனேனடி**

**செவ்வாய் இதழ்பிரித்த பொழுதினிலே!**

**கல்லுக்கும் ஈரம் உண்டென்றார்**

**கனிமொழியாள் உனக்கில்லையோ?**

**செல்லரித்துப் போனதடி என்நெஞ்சம்**

**செப்பியதோர் வார்த்தையிலே!**

**நில்லடி என்றிடத்தான் நாதுடிக்க**

**நிற்காது சென்றயிடம் ஏதடியோ?**

**நல்மொழி தேடிநின்ற எனக்குள்ளே**

**நஞ்சேற்றி சென்றதுவும் ஏனடியோ?**

ஓலையை வாசித்து முடித்த டாள்தொபியாஸ், "தலைவரே, தங்கள் முன் வாளேந்தி தான் யாரும் நிற்க இயலாது என நினைத்திருந்தேன். ஆனால் கவி எழுதுவதிலும் தங்களுக்கு நிகர் தாங்கள்தான் என்பதை இந்தப் பாடல் மூலம் அறிந்துகொண்டேன். தங்களது பிரிவின் ஏக்கம் இந்தப் பாடலில் நன்கு வெளிப்பட்டுள்ளது. நான் விடைபெறுகிறேன் தலைவரே, இனி இங்கிருத்தல் ஆகாது!" எனக் கூறியபடியே, செங்குவீரனின் மறுமொழியை எதிர்பாராது அங்கிருந்து கிளம்பினான்.

# 7. தனிமைய ில் வெளிப்பட்ட காதல்

விறல்வேல் சென்று, ஒரு முகூர்த்தப் பொழுதிற்கு மேலும் கடந்து கொண்டிருந்ததால், வானவல்லியின் நற்றாய், அவள் இன்னும் வீடு திரும்பாததை எண்ணி துயரப்பட்டுக் கொண்டிருந்தாள். விறல்வேல் அங்குச் சென்றுள்ளதால் அவர்களுக்கு எந்தவிதத் துயரமும் ஏற்படாது என்று அவள் திடமாக நம்பினாள். இருப்பினும் ஒவ்வொரு நாழிகையும் அவளுக்கு ஒரு பொழுதாகவே மெதுவாக நீண்டுகொண்டிருந்தது. வீட்டுத் திண்ணையில் சாய்ந்து வீதியையே நோக்கி மகள் வருவாள் என்று எதிர்பார்த்து அமர்ந்திருந்தவள், அப்படியே கண்ணயர்ந்து உறங்கிவிட்டாள்.

எவ்வளவு நேரம் அப்படி உறங்கியிருப்பார் என்று தெரியாது, திடீரென அவரை யாரோ உறக்கத்திலிருந்து எழுப்பியதை உணர்ந்தவர், தன் முன்னாள் வானவல்லி நின்று கொண்டு தன்னை எழுப்புவதைப் பார்த்தார்.

வானவல்லி தனது தாயாரிடம், “என்னம்மா, எனக்காகக் காத்திருந்து இப்படி வாசலிலேயே உறங்கிவிட்டீரா?” என்று வினவியபடியே பரிவோடு வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள்.

வானவல்லியின் தாயார், தன் மகளுக்குத் தயாராய் இருந்த இரவு உணவுகளைப் பரிமாறியபடியே அவளது பயணத்தைப் பற்றியும் அதன் அலுவல்களைப் பற்றியும் விசாரிக்களானாள். “வனத்தில் தங்களுக்கு எந்தவித துன்பமும் நேர்ந்துவிடவில்லையே! நான் உனது இரவு பயணத்தை எண்ணியே கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன் மகளே. இப்போதுதான் எனக்கு நிம்மதியாக உள்ளது. மாலை வேளையிலேயே வீட்டிற்கு வந்துவிடுவதாய்ச் செய்தி அனுப்பியும் நீங்கள் இருவரும் பரிதி மேற்குத் திசையில் மறைந்தும் வீடு திரும்பாமல் இருந்தது பெருங்கவலையை அளித்தது. உன்னைக் கண்ட பின் தான் எனக்குப் பெரும் நிம்மதி. மகளே, நீ பயணக் களைப்பில்

மிகுந்திருப்பாய், உணவுண்டபின் மாளிகையில் உள்ள உனது அறைக்குச் சென்று நிம்மதியாக உறங்கு. உனது படுக்கையையும் தயாராய் வைத்துள்ளேன். நீ சென்றதும் உறங்கலாம். அனைத்தும் தயாராய் உள்ளது'' என்றார்.

வானவல்லியின் தாயார் பேசியதனைத்தையும் ''ம்ம்ம்'' கொட்டிக்கொண்டும், தலையசைத்துக் கொண்டும் கேட்டுக்கொண்டிருந்தாள் வானவல்லி.

மகளின் மௌனத்தைக் கலைக்கும் விதமாக அவளின் தாயார், ''மகளே வானவல்லி, சம்பாபதி வனத்தினுள் தங்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படவில்லை தானே! பயணத்தில் எதிரில் விறல்வேல் தம்பியை சந்தித்தீர்களா?'' என்று கேள்வியெழுப்பினார்.

அதற்கு வானவல்லி, ''வனத்தில் பெரும் ஆபத்து நேர்ந்தது அம்மா, அவற்றைப் பற்றி விடிந்ததும் நாம் பேசிக்கொள்வோம். தாங்கள் இப்போது சென்று உறங்குங்கள்! ஏற்கெனவே தாங்கள் எனக்காகக் காத்திருந்த சோர்வு தங்கள் கண்களில் தெரிகிறது'' என்று கூறிவிட்டு அவளது தாயாரின் கேள்விகளுக்கு முறையாக எந்தப் பதிலும் அளிக்காமல் அவளது அறைக்குச் செல்லும் மாடிப் படிக்கட்டில் ஏறினாள்.

தான் கேட்ட எந்தக் கேள்விகளுக்கும் பதிலளிக்காமல் வானவல்லி நழுவிச் செல்வதை உணர்ந்த வானவல்லியின் தாயார், அவளின் கையைப் பற்றி நிறுத்தி, ''நான் கேட்டதற்கு நீ இன்னும் பதில் கூறவில்லையே வானவல்லி?'' என்று வார்த்தைகளில் சிறிது கடினத்தைக் கூட்டினார்.

''வனப் பயணத்தின் போது, காளனின் கள்வர் குழுவிடம் சிக்கிக் கொண்டோம். நமது சில வீரர்கள் அவர்களை எதிர்த்து மாய்ந்தும் போனார்கள். அங்கிருந்து எந்தவித துன்பமும் நேராமல் வந்து சேர்ந்தது குச்சரக்குடிகை சம்பாபதி அம்மனின் அருள் தானம்மா. இதைக் கேட்டால் தாங்கள் பதறிவிடுவீர்கள் என்றுதான் காலையில் பேசிக்கொள்ளலாம் என்றேன்'' என்று மறுமொழி அளித்தாள் வானவல்லி.

மகளுக்கு வந்த துயர் விலகியதை அறிந்த வானவல்லியின் தாயார் அகமகிழ்ந்து, ‘‘நீங்கள் இருவரும் தப்பித்து வந்ததே நாம் என்றோ செய்த புண்ணியம் தான்!’’ என்று வானவல்லியைத் தழுவி உச்சி முகர்ந்தாள்.

மேலும், ‘‘எதிரில் விறல்வேல் தம்பியை சந்தித்தாயா வானவல்லி?’’ என்று பெரும் எதிர்பார்ப்போடு கேள்வியெழுப்பினார் வானவல்லியின் தாயார்.

‘‘ஏன் அம்மா, இந்த ஒரு கேள்வியை மட்டும் நீங்கள் விடாப்பிடியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். என்னை விடுங்கள் அம்மா, நான் உறங்க வேண்டும்’’ என்று பொய்யாகக் கோபம் காட்டினாள் வானவல்லி.

‘‘நில் மகளே, பொழுது சாய்ந்து இரண்டு சாமம் கடந்த பின், இந்த வழியாகக் காவலுக்குச் சென்ற தம்பி விறல்வேல் நான் உனக்காகக் காத்துக் கொண்டிருந்ததைக் கண்டு என்னிடம் விசாரித்தார். நான் நீயும் பத்திரையும் வீடு திரும்பாதது பற்றிக் கூறினேன். விறல்வேல் உங்களை நோக்கி எதிரில் வந்திருப்பான், அவன் உங்களை எதிரில் சந்திக்கவில்லை எனில் உங்களைத் தேடி வனம் முழுக்கத் தம்பி அலைந்துகொண்டிருப்பான். ஆதலால் தான் விறல்வேலை சந்தித்தாயா? என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன்!" என்றார்.

காளனிடம் அகப்பட்ட முழு விபரங்களையும் கூறி கடைசியில் ‘‘விறல்வேல் தான் அவர்களிடம் இருந்து எங்களை மீட்டார். காவல் தலைவர் மட்டும் அங்குச் சரியான நேரத்திற்கு வந்திராவிட்டால், எங்களின் நிலை படுமோசமாகியிருக்கும் அம்மா‘‘ என்றாள் வானவல்லி.

‘‘அப்பொழுது நீங்கள் காளனிடமிருந்து தப்பி வந்தது குச்சரக் குடிகை சம்பாபதி அம்மனது அருள் இல்லை தம்பி விறல்வேல் வந்த புண்ணியம் தான் என்று கூற வேண்டியதுதானே மகளே!’’ என்று வானவல்லியை பரிகாசம் செய்தார் வானவல்லியின் தாயார்.

‘‘அவர் என்னைப் பார்த்தார். சந்திக்கவும் முற்பட்டார். நான் சந்திக்கவுமில்லை, பேசவில்லை!’’ என்றாள் வானவல்லி.

‘‘உங்கள் இருவரையும் இவ்வளவு பெரிய துயரத்திலிருந்து காப்பாற்றியதே அந்தத் தம்பிதான். ஒரு மரியாதை நிமித்தமாகக் கூடவா பேசி நன்றி சொல்லத் தோன்றவில்லை உனக்கு. எனக்குக் கேட்கவே வருத்தமாக

உள்ளது மகளே. அந்தத் தம்பியின் மனம் எப்படியெல்லாம் வருத்தப்பட்டிருக்கும்! உன் மனம் வர வர இந்தக் காரியத்தில் மிகவும் கல்லாக ஆகிக் கொண்டிருக்கிறது. எனக்கு இது சரியாகப் படவில்லை'' என்று கடுமை பாராட்டினார் வானவல்லியின் தாயார்.

''ஒவ்வொருமுறை அழைக்கும் போதும் தம்பி விறல்வேல் என்று உரிமையோடு அழைக்கிறீரே! உங்களோடு பிறந்திருந்தாலும் அவருக்கு இத்தனை மரியாதை கிடைத்திருக்காது போலிருக்கிறதே அம்மா!'' என்று தாயிடம் திருப்பிக் கேட்டாள் வானவல்லி.

மேற்கொண்டு ''அம்மா, தந்தைக்கு நான் கொடுத்துள்ள வாக்கை என்று நான் மீறியிருக்கிறேன். அவரது சொல்லே எனக்கு முதன்மையானது. அவரது சொல்லிலிருந்து சிறிது கூடப் பிறழ முயற்சிக்கமாட்டேன் என்பதைத் தாங்கள் புரிந்துகொள்ள வேண்டும்'' எனப் படபடவெனப் பதிலளித்துவிட்டு தனது அறையை நோக்கி விறுவிறுவென அவளது தாயாரின் மறுமொழியைக் கூட எதிர்பார்க்காமல் சென்றுவிட்டாள் வானவல்லி.

வானவல்லிக்கும் அவளது தாயாருக்கும் இடையில் நடந்த உரையாடல்கள் அனைத்தையும் கேட்டபடியே பக்கத்து அறையில் உறங்குவதாக நினைத்துக்கொண்டிருந்த வானவல்லியின் தந்தையார் உறங்குவதுபோல அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அக்கணம் அவர் வானவல்லியை எண்ணிப் பெருமைப்படாமல் இருக்க இயலவில்லை.

புகாரில் அக்காலத்தில் யாருக்கும் தெரியாமல் காதலர்கள் காந்தருவத் திருமணம் செய்துகொள்வதும், வீட்டில் காதலை ஏற்காத பட்சத்தில் உடன்போக்கு சென்றுவிடும் பெண்களுக்கிடையில் தந்தையின் சொல்லிற்குப் பெரிதும் மதிப்பளிக்கும் தன் மகளை எண்ணி அவர் பெருமையாகக் கர்வம் கொள்ளவே செய்தார்.

ஆனால், அவளது மனதில் உள்ள ஆசையினை அறிந்திருக்க வாய்ப்பில்லையாதலால் அவளது மனப் போராட்டத்தையும் அவர் அறிந்திருக்கவில்லை.

படிக்கட்டின் வழியாகத் தனது அறைக்குள் வந்த வானவல்லி, அறையின் மாடத்தில் அடுக்கி வைத்திருந்த அவளது ஆடைகளுக்கிடையில் யாவருக்கும் தெரியாமல் மறைத்து வைத்திருந்த தாழை மடலை, அந்தத் தாழை மடலினும் மென்மையான அவளது கைகளால் மெல்ல எடுத்து விளக்கிற்கருகில் வைத்தாள். அழுத்தினால் நொறுங்கிவிடும் அளவிற்குக் காய்ந்து போயிருந்தது அந்த ஒற்றைத் தாழை மடல். அந்தத் தாழை மடல் காய்ந்து போயிருந்தாலும், அதிலிருந்து வெளிப்பட்ட மணம் அந்த அறை முழுவதும் நறுமணத்தைப் பரப்பியது. அதில் எழுதியிருந்த எழுத்துகள் அந்த மங்கலான இரவு விளக்கு வெளிச்சத்திலும் பளிச்சென்று காட்சியளித்தது வானவல்லிக்கு. அதில் எழுதியிருந்த வார்த்தைகளை அவள் மெல்ல வாய்விட்டு வாசிக்கவே செய்தாள். அதனை அவள் வாசிக்கையில் அவளது உடலின் அனைத்துப் பாகங்களிலும் புது இரத்தம் வேகமாகப் பாய்வதை உணர்ந்தாள். வாசித்த அவளது குரல், அவளது காதுகளை அடைந்த வேளையில் அவளது உடலிலும், உயிரிலும் பெருமகிழ்ச்சி, பெரும் உணர்வு ஊற்றெடுப்பதை அவளால் கட்டுப்படுத்த இயலவில்லை.

மலர்களில் பல விதங்கள் உள்ளன. நிறம், அழகு, நறுமணம், வடிவம் என ஒவ்வொரு மலருக்கும் ஒவ்வொரு தனிச்சிறப்பு உண்டு. அவை ஒவ்வொரு மலருக்கும் வேறுபட்டுக்கொண்டே இருக்கும். சில மலர்கள் பார்க்கும் மாத்திரத்திலேயே அவற்றின் வண்ணத்தாலும் அழகாலும் பார்வையைக் கவர்ந்துவிடும், சில மலர்களின் மணம் தூர இருந்தாலும் மனத்தைக் கவர்ந்து இழுக்கும். இப்படி மணம், நிறம், என ஒவ்வொரு மலரும் ஒவ்வொரு விதத்தில் சிறப்புற்று மாறுபட்டுக் காணப்படுகிறது. சில மலர்கள் பூத்த அன்றே உதிர்ந்தும் விடுகிறது. சில மலர்கள் பூத்தும் பல நாட்கள் உதிராமல் அழகு சேர்த்துக் கொண்டிருக்கும். பூக்கும் விதத்தில் வாடாவள்ளி எனப்படும் குறிஞ்சி மலர் குறிஞ்சி நிலத்தில் மட்டுமே பூக்கும் தன்மை கொண்டது. அது பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மட்டுமே பூக்கும், அது மலர்ந்ததிலிருந்து ஆறு திங்களுக்கு வாடாது, பளிச்சென்று அழகினையும், மணத்தையும் பரப்பிக்கொண்டேயிருக்கும். இப்படிப்பட்ட விசித்திர மலர்களுக்கிடையில் காலை புலர்ந்ததும் பரிதியைக் கண்டு மலரும் செந்தாமரையும், பரிதி மறைந்து இரவில் தோன்றும் நிலவைக் கண்டதும்

மலரும் அல்லியும், மாலைப் பொழுதில் மேற்கு வானில் சிவந்து காணப்படும் செம்பரிதி, கீழை வானில் உதித்திருக்கும் பிறை நிலாவெனப் பரிதி, நிலவு என இரண்டையும் கண்டு மாலைப் பொழுதில் மலர்வது குமுதப் பூ.

இப்படி வாடாவள்ளி, செந்தாமரை, அல்லி, குமுதப் பூ என ஒவ்வொரு மலருக்கும் ஒவ்வொரு தனிச்சிறப்புக் காணப்பட்டாலும், இந்த மலர்கள் எதற்கும் இல்லாத அருபெரும் தனிச்சிறப்பு தாழம்பூவிற்கு உண்டு. செந்தாமரை, அல்லி, குமுதப் பூ என இவை இரு பொழுதுகளிலும் பரிதி, நிலவைக் கண்டு மட்டுமே மலர்வது. ஆனால் தாழம் பூ மட்டும் கார்காலத்தில் சூழும் கருமையான கார்மேகத்தில் தோன்றும் தூய்மையான மின்னலைக் கண்டு மலரும். வெண்டாள் எனப்படும் தாழையின் அடிப்பகுதி அதன் மடல் என அனைத்தும் தூய்மையான மின்னலைக் கண்டு மலர்வதாலோ என்னமோ தாழை மலர் காய்ந்து சருகாகியிருந்தாலும் அதிலிருந்து மணம் வெளிப்பட்டுக்கொண்டேயிருக்கும். தலை முழுக்கத் தொடுத்த மல்லிகை வைத்த போதும் வீசாத மணம் தாழை மலரின் ஒரேயொரு மடலை கிள்ளி வைத்தால் போதும், அது காய்ந்து சருகாகினாலும் அது தலையில் உள்ளவரை நறுமணத்தை வீசிக்கொண்டே இருக்கும். இப்படி எந்த மலருக்கும் இல்லாத தனிச்சிறப்பையும், தனித்தன்மையும் கொண்டது தாழை மலர்.

வல்லி என்றால் அழகுத் தமிழில் கொடி என்று பொருள். (வல்லி—கொடி) வானவல்லி என்றால் கரிய கார் மேகங்களுக்கிடையில் தோன்றும் பரிசுத்தமான அப்பழுக்கற்ற தூய்மையான கொடி மின்னல் என்று பொருள். வானவல்லி என்றால் சுருக்கமாக மின்னல் கொடி அல்லது மின்னல் என்று பொருள் கொள்ளலாம்.

வானில் தோன்றிய தூய மின்னலைக்கண்டு மலர்ந்த தாழையின் மடல், அறையில் வானவல்லியின் கையில் தவழ்ந்து கொண்டிருந்தது. கையில் வைத்திருந்த தாழை மடலில் எழுதியிருந்தவற்றை அறையில் அவளுக்கு மட்டுமே மெல்ல கேட்கும் படியாக வாய்விட்டுத் திரும்பத் திரும்ப வாசித்தாள் வானவல்லி.

விளம்பிடத்தான் எத்தனித்தேன்...

புலம்பல்களைச் சித்தரித்தேன்...

தாழையிது உன்கை தவழ்கையில்...

செழுமையாய் என்நெஞ்சில்

ஆணிவேர் விட்டாயடி...!

விறல்வேல், வானவல்லிக்கு எழுதிக் கொடுத்த பாடல் அது. புகாரில் சித்திரைப் பெருவிழாவான இந்திரத் திருவிழா முடிந்த அடுத்த நாளில் அவளது பிறந்த தினத்தின் போது, தன் மனதில் உள்ள காதலை வானவல்லிக்கும் அறியச் செய்யும்படி விறல்வேல் எழுதிக் கொடுத்த பாடல் தான் இது.

மின்னலைக் கண்டு மலர்ந்த தாழை மடலில் காதல் மடல் எழுதி கொடி மின்னலுக்கே கொடுத்த அவனது திறத்தை எண்ணி அவள் வியக்கவே செய்தாள். பாடலில் செறிந்துள்ள பொருள் வளமும் அவளை வியப்படையச் செய்தது. தமிழகத்தின் பெரும் வீரனுக்கு இவ்வளவு அழகாகக் கவி படைக்கவும் இயலுமா? என்று வியந்தாள் அவள். “ தாழையிது உன்கை தவழ்கையிலே, செழுமையாய் என்நெஞ்சில் ஆணிவேர் விட்டாயடி” என்ற கவிதை வரிகளை அவள் பெருமை பொங்க காதலுடன் திரும்பத் திரும்ப வாசித்தாள். இந்தத் தாழை மடல் அவளது கைகளில் தவழ்கையில், அவனது மனதில் மட்டுமல்லாமல், தன் நெஞ்சிலும் அவனது காதல் ஆணிவேர் விட்டு வளர்ந்துவிட்டதை அவள் உணரவே செய்தாள்.

தாழையிலிருந்து வெளிப்பட்ட மணம் அறை முழுவதும் பரவிக்கொண்டிருந்தது போல, தாழையின் கவிதையிலிருந்து வெளிப்பட்ட பொருள் அவள் மனம் முழுக்கக் காதலை பரப்பிக்கொண்டிருந்தது.

மடலை மார்பில் அணைத்தபடியே கண்களை மூடி, மனம் முழுக்க நிறைந்துள்ள விறல்வேலை நினைத்து, காதலில் மையலுறத் தொடங்கினாள் வானவல்லி.

இங்கு வானவல்லி விறல்வேலை எண்ணியே அமர்ந்திருந்தாள். அங்கு விறல்வேலும் மனம் முழுக்க நிறைந்துள்ள வானவல்லியை எண்ணியே

உறக்கமில்லாமல் வீற்றிருந்தான். இருவரது மனங்களும் ஒன்றிணைந்து மற்றவர் அறியாத வண்ணம் காதலில் திளைத்துக்கொண்டிருந்தது.

திடீரெனத் தந்தையின் நினைப்பும், அவரது பிடிவாதமும், தந்தைக்கு வீரர்கள் மேலுள்ள வெறுப்பும் அவளது நினைவிற்கு வர, அவள் அக்கணம் கலங்கவே செய்தாள்.

அவளது மனதில் யாரும் அறியாதபடி வளர்ந்துவிட்ட, அவள் மட்டுமே அறிந்த காதலா அல்லது இவளது குடும்பமா என இரண்டும் சேர்ந்து அவளுள் ஒரு மனப்போரை உருவாக்க அவள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.

ஒன்று காதலிக்காமல் இருந்திருக்க வேண்டும் அல்லது காதலித்தால் யாரையும் எதிர்க்கும் மன வலிமையாவது இருந்திருக்க வேண்டும். இப்படி ஏதும் இயலாத பேதைப் பெண்ணாக மட்டும் இருக்கவே கூடாது என அவள் மனம் கலங்கி அவள் கண்களில் இருந்து வெளிப்பட்ட கண்ணீர் துளிகள் கன்னம் கடந்து அவளது மார்பில் அணைத்திருந்த தாழை மடலின் மீது சொட்டு சொட்டாக விழுந்து நனைக்கத் தொடங்கியது.

# 8. யவனனும ் வாள் போரும்

உதிக்கலாமா? அல்லது வேண்டாமா? என யோசனை செய்வது போலக் குணக்கடலின் தொடு வானத்திலே வெகு நேரம் கட்டுண்டு கிடந்தது பரிதி. பரிதியின் செந்நிறக் கதிர்களைப் பிரதிபலித்த அலைகள் பொன்னிறமாக மின்னிக் கொண்டிருந்தது. குணக்கடலின் தொடுவானத்தில் மெல்ல எழுந்த பரிதி மேகங்களுக்கிடையில் தன் கதிர்களைச் செலுத்தியதால், செங்கதிர்கள் பல வண்ண நிறங்களில் பிரிகையடைந்து கிழக்கு வானத்திற்கே பெரும் அழகைச் சேர்ப்பித்திருந்தது. புகாரின் குணக் கடலில் நிகழும் இந்த மாயக் காட்சிகளில் தனது கவனத்தைச் செலுத்தாத மக்கள் கூட்டமும் அந்தக் கடற்கரையில் இருக்கத்தான் செய்தனர். கடற்கரையில் நிகழ்ந்த வாள் சமரையே அனைவரும் கண்ணிமைக்காமல் கண்டுகளித்துக் கொண்டிருந்தனர்.

கடற்கரையில் வாள்கள் ஒன்றோடொன்று மோதும் போதும், உராயும் போதும் எழுந்த சத்தம் சுற்றியிருந்த வீரர்களின் வெற்றிக் கூச்சலையும் கடந்து குணக்கடலின் அலைகளில் எதிரொலித்தது. வாற்சமர் அவ்வளவு உக்கிரமாக அரங்கேறிக் கொண்டிருந்தது. இந்த வாள்கள் உராயும் சத்தத்தையும், சுற்றியிருந்த வீரர்களின் வெற்றிக் கூச்சலையும் கண்ட குணக்கடலின் கடலலை கூட மேகத்தில் பரிதி நிகழ்த்தும் மாயக் கோலங்களைக் காண விருப்பப்படாமல், கடலிலிருந்து சிற்றலைகளாக எழுந்து பேரலைகளாக வலிமை பெற்று நுரையும், மணலுமாக மக்கள் கூட்டத்தின் கால்களை நனைத்த படியே வாள் சமரைக் காணத் தரையோடு தழுவி முன்னேறத்தான் பார்த்தது.

தான் மேகக் கூட்டங்களில் அவளுக்காக நிகழ்த்தும் மாய வித்தைக் காட்சிகளைக் காணாமல் குணக் கடலரசி, அப்படி எந்தச் சமரைக்

காண கரையையும் தாண்ட விழைகிறாள்? என்று வியந்த படியே நாமும் அதனைப் பார்ப்போமே என எண்ணிய பரிதி மேகத்திரையிலிருந்து விலகி மெல்ல மேலெழும்பினான்.

வாள் சமர் நடைபெறும் பகுதியைச் சுற்றி நின்ற கூட்டத்தில் பலரும் வீரர்களாகத் தான் இருந்தனர். மேலும் அங்குப் புகார் நகர மக்களும் இந்திரத் திருவிழாவிற்கு வருகை தந்த சேர, சோழ, பாண்டிய மற்றும் மேலை நாட்டு அழகிகளும் ஆவலோடு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆஜானுபாகுவான, தோள் தினவெடுத்த பல நாட்டு வீரர்களும் வாள் சமரில் தன்னைத் தோற்கடிக்க எவருமில்லை என்ற பெருங்கர்வத்தோடு வந்தவர்களில் பலரும் கூட்டத்தில் வாளேந்திச் சமர் புரிந்த இளைஞனிடம் தோற்றுத் திரும்பிக்கொண்டிருந்தனர்.

தோற்றுத் திரும்பிய பல வீரர்களும், ‘‘அந்த இளைஞன் பார்ப்பதற்கு எளிமையாகத்தான் தோன்றுகிறான். ஆனால் அவனது கைகள் அப்படியென்ன மாய வித்தையைப் பயின்றிருக்கிறதோ? தெரியவில்லையே!’’ எனப் புலம்பியபடியே தங்கள் தலையைத் தொங்கபோட்டுக் கொண்டு கர்வம் அடங்கித் திரும்பிக் கொண்டிருந்தனர்.

சமரில் நின்று பலரின் வாள்களையும் பறக்கவிட்டுக் கொண்டிருப்பவனின் பெயர் கூட்டத்தினர் எழுப்பும் வெற்றிக் கூச்சலிலிருந்து ‘‘விறல்வேல்’’ என்று புதிதாக வந்தவர்கள் அறிந்துகொண்டார்கள்.

விறல்வேல் அப்பொழுது புகார்ப்படையின் உப தலைவனாக இருக்கவில்லை. அவனது நண்பனும், சேனாதிபதி பெருமறவர் மகேந்திர வளவனாரின் மகனுமான திவ்யன் தான் அந்தப் பொறுப்பில் படைகளைச் சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருந்தான். வானவல்லியின் அண்ணன்.

சித்திரைத் திங்கள் முடிந்து வைகாசித் திங்களின் முதல் நாள் அது. புகாரில் ஒரு மாதம் கோலாகலமாக நடைபெற்ற சித்திரைப் பெருவிழாவான இந்திரத் திருவிழா முடிந்துவிட்டது. ஆனால் வீரர்களுக்கான இந்த வாற்சமர் திருவிழா இன்னும் முடிந்தபாடில்லை என்பதற்கு அடையாளமாகத்தான் இரவு கடந்து பொழுது விடிய விடிய அந்தக் கடற்கரை மணற்பரப்பில் வாள் சமர் நடந்துகொண்டிருந்தது.

திவ்யனின் உபதளபதி தான் விறல்வேல். திவ்யனும் விறல்வேலும் இணையற்ற நண்பர்கள். இருவருள் யாருக்கேனும் ஒருவருக்கு ஆபத்தென்றால் உயிரை விடக்கூடத் தயங்கமாட்டார்கள். தனது உபதளபதியும், நண்பனுமான விறல்வேலின் வாள்வீச்சில் பல வீரர்கள் தோற்று அவர்களின் வாள்கள் அந்தரத்தில் காற்றில் பறப்பதைக் கண்டு இரசித்துக் கைதட்டி உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தான் உபதலைவன் திவ்யன்.

பாண்டிய நாட்டிலிருந்து வந்திருந்த வீரனொருவன் தனது வாள் திறனைச் சோதனைச் செய்ய இவன் தான் தகுதியானவன் என எண்ணியபடியே தனது நீண்ட மெல்லிய கணம் மிகுந்த வாளை உருவிய படியே “வீரனே, திறமையிருந்தால் எனது வாளைத் தடுத்துப் பார்” என்று கர்ஜித்துக் கொண்டு விறல்வேலுக்கு எந்தவொரு கால அவகாசத்தையும் வழங்காமல் அவனது கழுத்தை நோக்கி கண நேரப் பொழுதில் சூறாவளியாய் வீசினான்.

“சுதாரிக்க எந்தச் சந்தர்பத்தையும் வழங்காமல் இப்படி அதிரடியாகத் தாக்குகிறானே! இவனது உடலோ பருத்து, வைரமேறி கெட்டிப்பட்டு ராட்சதனாகக் காணப்படுகிறான். இந்த இளவயது பயிரான விறல்வேல் இவனது தாக்குதலை எப்படிச் சமாளிக்கப்போகிறான்?” என்று கூட்டத்திலிருந்த பலரது மனங்களிலும் பலவாறு ஓடியது.

ஆனால் பாண்டிய தேசத்து வீரனும் எதிர்பாராதபடி கண நேரப் பொழுதை விடக் குறைவான நேரத்தில் அவனது வாளை அந்தரத்திலேயே தடுத்து நிறுத்தினான் விறல்வேல். தனது பலம் முழுவதையும் கொண்டு விறல்வேலின் வாளை அழுத்தித் தட்டிவிட முயன்றான். ஆனால், அவன் அந்த முயற்சியில் தோற்றுவிடவே, விறல்வேலின் பிடியிலிருந்த தனது வாளை தனது பலம் முழுவதும் பிரயோகித்து விடுவித்தான். விறல்வேலை அவனது கருத்த கருவிழிகளால் அளந்த படியே மீண்டும் தனது வாளை பின்னோக்கி செலுத்தி இந்த முறை வாளை வெட்டுவது போன்று வீசாமல் குத்துவது போன்று விறல்வேலின் வலது விலாப்புறத்தை நோக்கி “ஊ” என்று கத்தியபடியே வாளைச் செலுத்தினான்.

விறல்வேலின் வலது கையில் போர் வாள் இருந்ததனால், அவனைச் சுற்றி அவனது வலது விலாப் புறத்தில் தாக்கினால் நிலைகுலையச் செய்து அவனை வீழ்த்திவிடலாம். தனது வாளையும் தடுப்பது சிரமம் என்று திட்டமிட்டுத் தாக்கினான் பாண்டிய நாட்டு வீரன்.

“ஹா” என்ற சத்தத்தை மட்டுமே கூட்டத்தினர் அப்போது கேட்டனர். பாண்டிய நாட்டு வீரனின் வாள் அந்தரத்தில் காற்றில் பறந்து பத்தடி தாண்டி மணலில் குத்திட்டு விழுந்து கிடந்தது. அப்போது விறல்வேலின் வலது கையிலிருந்த போர்வாள் எப்படி அவனது இடது கைக்கு வந்தது. அவன் எப்போது வாளைச் சுழற்றினான் என யாருக்கும் தெரியவில்லை. “ஹா” சத்தம் மட்டுமே அனைவருக்கும் கேட்டது. அந்த ‘ஹா’வில் அப்படியென்ன மாய வித்தை இருக்கிறது? என அனைவரும் வியந்துதான் போனார்கள்.

தன் வாழ்நாளில் இப்படியொரு தாக்குதலை பாண்டிய நாட்டு வீரன் சந்தித்திருக்க மாட்டான் என மாறிய அவனது முகபாவனைகளிலிருந்தே அனைவரும் அறிந்துகொண்டார்கள்.

பத்தடி கடந்து மண்ணைக் குத்திக்கொண்டு நின்ற தனது வாளை எடுத்த படியே பேசிய பாண்டிய நாட்டு வீரன் ”வீரனே, எனது வாழ்நாளில் நான் இப்படியொரு வாள் வித்தையை யாரிடமும் சந்தித்தது இல்லை. நான் உன்னைத் தாக்கினேனே அது எனது குருநாதர் எனக்கு ‘தந்திர வாள் வீச்சு’ என எனக்கு மட்டும் கற்றுத்தந்த வித்தை. சோழப் பேரரசர் இளஞ்சேட்சென்னி மற்றும் சேனாதிபதி வளவனாரின் முயற்சியால் தற்போது தென்னகத்தில் பெரும் போர்கள் நடைபெறுவதே இல்லை. ஆதலால் தினவெடுத்த எனது தோளையும், வாளையும் கட்டுப்படுத்த பல தேசங்களுக்குச் சென்று பல வீரர்களை வம்புக்கு இழுத்து வாள் சமர் புரிவேன். ஆனால் இன்று தான் நான் தோற்று எனது தினவெடுத்த தோள்களின் கர்வம் அடங்கியுள்ளது. ஆனால், எனது வாள் பத்தடி தாண்டி விழும் என்று நான் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை. வீரனே, உமது திறமைக்கும், வீரத்திற்கும் நான் தலை வணங்குகிறேன்!” என்று கூறியபடி தனது கர்வம், மனதில் இருந்த கணம் என அனைத்தும் அடங்கி மகிழ்ச்சியோடு அங்கிருந்து புறப்பட்டான்.

சுற்றி நின்ற வீரர்கள் மற்றும் கூட்டத்தினர் அனைவரும் "மீண்டும் விறல்வேல்! வெற்றிவேல்!" என்று வெற்றி முழக்கமிடத் தொடங்கினர்.

அந்த வெற்றி முழக்கத்தினூடே கூட்டத்தைக் களைத்தபடியே தனது நீண்ட வாளை உருவிய படி சமர் களத்தினுள் நுழைந்தான் யவன வீரன் ஒருவன். அவனைக் கண்ட கூட்டத்தினர் சற்று மிரட்சியடைந்து விட்டனர். ஏனெனில் அவனது இரண்டு கைகளிலும் இரு வாள்களைத் தாங்கியிருந்தான்.

யவனர்களின் போர்த்திறம், வலிமை பற்றி விறல்வேல் கேள்விப் பட்டிருந்தாலும் அவர்களின் வாள்வீச்சு முறை முற்றிலும் புதிது. ஏனெனில் யவன வாள்களின் கைப்பிடி சிறியதாகவும் ஒரு கையால் மட்டுமே தூக்கி போர் புரியும்படி மெல்லியதாகவும், அதே சமயம் உறுதியுடன் நீண்டு காணப்படும். அவர்களின் வாள் வீச்சு கைகளின் பலத்தைப் பொறுத்தே அமையும் மாறாக வாள்களைப் பொறுத்து அமையாது. வந்திருக்கும் யவன வீரனின் கைகளின் உறுதியைப் கண்ட விறல்வேல், "இவனைத் தோற்கடிப்பது நிச்சயம் சவால் நிறைந்தது தான். யவனனிடம் எச்சரிக்கையுடன் சமர் புரிதலே சாலச்சிறந்தது!" என ஊகித்துக் கொண்டான்.

களத்தில் நுழைந்த யவன வீரன், முகத்துக்கு முன்னே இரண்டு வாளையும் குறுக்கு நெடுக்குமாக வைத்துக் கொண்டு, இரண்டு வாள்களின் சந்திப்புனூடே விறல்வேலின் கண்களை நோக்கியவன், இடது கையின் வாளை தற்காப்புக்கு வைத்துக்கொண்டு வலது கையிலிருந்த வாளை வட்ட வடிவத்தில் கைகளை அசைக்காமல், மணிக்கட்டை மட்டும் அசைத்துச் சுழற்றியபடி அவனை நோக்கி முன்னேறினான்.

முற்றிலும் புதிய யுக்தியில் தாக்க வரும் யவன வீரனைக் கண்ட விறல்வேல், வலது காலை முன்வைத்து, வலது கையிலிருக்கும் நீண்ட வாளை பட்டையாகத் தொங்க விட்டபடியே யவன வீரனின் தாக்குதலை எதிர்கொண்டான்.

விறல்வேல் எண்ணியது போலவே, அவனது தாக்குதல் முறையும், யுக்தியும் புதிதாய் இருந்தது. யவன வீரனின் தாக்குதலை எதிர்கொண்ட விறல்வேல் அவன் தனது முழுப் பலத்தையும் பிரயோகித்துத் தாக்குகிறான் என்பதைப் புரிந்துகொண்டவன், அவனது பலவீனத்தைக் கண்டறியும் வரையில்

தடுப்புப் போரில் ஈடுபடுதலே சிறந்தது என்றவனாய், சூறாவளியாய் தாக்கும் அவனது இரு வாள்களையும் மின்னலெனத் தனது ஒரு வாளால் தடுத்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் தடுப்புச் சமரில் ஈடுபட்ட விறல்வேல், யவன வீரனின் வேகம் சற்று மட்டுப்படுவது போலத் தெரியவே தனது அதிரடித் தாக்குதலை தொடங்கினான். முதலில் விறல்வேலின் தாக்குதலை திறம்படச் சமாளித்த யவன வீரன் பின்னர்த் திணறவே செய்தான்.

விறல்வேலின் தாக்குதலை யவன வீரன் தனது இடது வாளால் தடுத்தபடியே வலது கை வாளால் அவனை எதிர்த்துத் தாக்கத் தொடங்கினான். அந்தச் சூழ்நிலையில் யவன வீரனுக்குச் சில சந்தர்ப்பங்கள் கிடைக்கவே, அவனது வாளை விறல்வேல் சுழற்றிய சக்கர வட்ட பாதுகாப்பு வலையத்திற்குள் உட்புக முயற்சித்தான். வாய்ப்பும் இருந்தது. ஆனால் அப்படி அவன் வாளைப் புக முயற்சித்த போதெல்லாம் விறல்வேல் தடுத்துவிட, "இவனிடம், ஏதோ அமானுஷ்ய மந்திர சக்தி நிச்சயம் இருக்கத்தான் வேண்டும்!" என வியந்த படியே யவனன் தாக்குதல் முறையை மாற்றி வேறு முறையில் துரிதமாகத் தாக்கினான்.

திடீரென்று விறல்வேலின் கை சோர்ந்து காணப்படுவது போன்று உணர்ந்த யவன வீரன், இந்த முறை நிச்சயம் அவனது வாளைத் தட்டிவிடலாம் என்ற படியே வலது கை வாளால் தாக்கி, இடது கை வாளை பின்னே இழுத்து நோங்கினான். அவன் இடது கை வாளை பின்னே இழுத்து நோங்கும் அந்தக் கண நேரப் பொழுதைப் பயன்படுத்திக் கொண்ட விறல்வேல், அவனது வலது கை வாளைத் தடுத்தி நிறுத்தி, மடக்கிய தனது இடது கையால் அவனது வலது கையின் மணிக்கட்டிற்குக் கீழே ஒரு குத்து விட்டு, அவனது வாளைப் பற்றி இழுத்தான். விறல்வேலின் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டது போன்று யவனனின் வலது கை வாள் விறல்வேலின் கைகளுக்கு மாறியது. தனது வாளைக் கைப்பற்றி, எட்ட எறிந்த விறல்வேலைக் கண்ட யவன வீரன், தனது ஒரு வாள் பறிபோய் விட்டதை உணர்ந்து, ஆவேசத்தோடு விறல்வேலைத் தாக்கினான். விறல்வேல் தனது வழக்கமான யுக்தியைப் பயன்படுத்திக் கத்தியைச் சுழற்றி சற்று அதிர்வுடன் அவனது வாளைத்

தட்டிவிட, யவனனின் கைகளிலிருந்து விடுபட்ட வாள் விர்ரென்று காற்றில் பறந்தது.

தனது இரண்டு வாள்களையும் இழந்துவிட்ட யவன வீரன், திகைத்தான். அந்தத் திகைப்பினாலும், தோல்வியினால் ஏற்பட்ட அவமானத்தினாலும் மனம் குழற, சொல் தடுமாறிக்கொண்டே கூறினான் ‘‘எனது கதையை இத்தோடு முடித்துவிடுங்கள்!’’ என்று.

ஆனால், அந்த யவன வீரனின் சொற்களைத் தனது காதுகளில் வாங்கிக்கொள்ளாமல் அருகில் கிடந்த அவனது வாள்களைக் கொண்டு வந்த விறல்வேல் மரியாதையுடன் ‘‘வீரரே, உங்கள் வாள் இதோ! பெற்றுக்கொள்ளுங்கள்’’ என்றான்.

‘‘இனி அந்த வாள் எனக்குத் தேவையில்லை’’

‘‘வேறு என்ன வேண்டும்?’’

‘‘மரணம்’’

‘‘அனைத்து வீரர்களுக்கும் உரியது, மரணம். வீரனாக இருந்தால் ஒரு நாள் மரணத்தைத் தழுவியே ஆக வேண்டும். இப்போது அதற்கான அவசியம் இன்னும் வரவில்லை என்று நினைக்கிறேன்!’’

‘‘தோல்வியடைந்து விட்டேனே!’’

‘‘ஆதலால்’’

‘‘மரணம் தேவை’’

தோல்வியடைந்து மரணத்தைக் கேட்டு மண்டியிட்டு அமர்ந்திருக்கும் யவன வீரனின் தோள்களைப் பற்றி எழுப்பிய விறல்வேல் ‘‘வீரனே, தோல்வி அடைந்தவர்களுக்கு மரணம் தான் பரிசு என்றால் கடைசியில் ஒரே ஒரு வீரன் மட்டுமே எஞ்சி உயிர் வாழ இயலும்’’ என்றான்.

எழுந்த யவன வீரன், ‘‘தோற்றவர்களை இவ்வளவு மரியாதையுடன் அழைக்கும் விந்தையையும் இங்குதான் காண்கிறேன் வீரரே! ஆனால், எங்கள் ஊரில் தோற்றால் மரணமே பரிசு’’ என்றான்.

“ஆனால், எங்கள் ஊர் பண்பு அது அல்ல, யவன வீரனே”

“ஆனால் எங்கள் ஊர் நியதி அதுதான், ஆதலால் எனக்கு மரணத்தையே பரிசாக அளித்துவிடுங்கள்”

“வீரனே, நீ இப்போது சண்டையிட்டது யவனமும் அல்ல உன் தோல்விக்குப் மரணத்தை வழங்க நாங்கள் நெஞ்சில் ஈரமற்றவர்களும் கிடையாது”

“தோல்விக்குப் பரிசு மரணமா? விந்தையாக உள்ளதே!” என்று கூறியபடி குறுக்கிட்டான் உப படைத்தலைவன் திவ்யன்.

“ஆமாம் தலைவரே, எங்கள் ஊரில் தோல்விக்கு மரணமே பரிசாக வழங்கப்படும். உங்கள் ஊரில் ஒருவன் ஆயுதத்தை இழந்து விட்டால் பண்போடு அவரது தோல்வியை ஒப்புக்கொள்கிறீர்கள். ஆனால் எங்கள் ஊரில் ஒருவரது வெற்றியைத் தீர்மானிப்பது எதிர்த்துப் போரிடுபவனின் மரணமே!”

மேலும் தொடர்ந்தவன், “உங்களைப் போன்று வெட்ட வெளியில் போட்டி நடைபெறாது. நீள்வட்ட அரங்கத்தில் நடைபெறும். ஒரு முறை அதனுள் சென்றுவிட்டால், ஒன்று வெற்றி வீரனாக வெளிவர முடியும், இல்லையேல் பிணமாகத்தான் வெளியேற இயலும். அந்த நீள்வட்ட அரங்கிற்கு ‘கொலோசியம்’ என்று பெயர். இது சிறு கிராமங்கள் முதல் பெரும் நகரங்கள் வரை அதன் தகுதிகேற்றது போல வடிவமைப்பில், அதன் பிரமாண்ட தோற்றத்தில் மாறுபடும். அதில் போரிடும் வீரர்களுக்கு ‘கிளாடியேட்டர்ஸ்’ என்று பெயர்” என்றான்.

விறல்வேல், “கிளாடியேட்டர்ஸ்?” ஆச்சர்யத்தோடு வினவினான்.

அதற்கு யவன வீரன் “எங்கள் மொழியில் கிளாடி என்றால் கத்தி அல்லது போர்வாள் என்று பெயர். கொலோசியத்தில் முதலில் போரிட்டவர்கள் வாள்களைக் கொண்டே சண்டையிட்டார்கள். ஆதலால் அப்பெயர் அவர்களுக்கு வழங்கப்பெற்றது. ஆனால், இப்போதெல்லாம் பெரும் கோடாரி, பயங்கரமான கொலைக் கருவிகளைக் கொண்டு போரிட ஆரம்பித்து விட்டார்கள்” என்றான்.

யவன வீரன் கூறுவதில் ஆர்வமடைந்த திவ்யன் "மேலும் அதுபற்றிக் கூறு வீரனே" என்றான்.

"கொலோசியத்தில் மனித அடிமைகள், வீரர்கள், கைதிகளைப் போரிடச் செய்வார்கள். கடைசியில் யார் உயிரோடு இருக்கிறார்களோ அவர்களுக்கு விடுதலை. சில நேரங்களில் அவர்களையும் பசியோடு இருக்கும் சிங்கம், புலி, ஓநாயுடன் போர் புரியச் செய்வார்கள்" என்று அவன் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த விறல்வேல் "உமது பேச்சை நிறுத்து வீரனே! மனித அடிமைகள்!, மனிதர்களை விலங்குகளோடு போரிடச் செய்தல்! பண்பாடே இல்லாத கொடூர மனம் கொண்டவர்களின் செயல்தான் அப்படியிருக்கும்!" என்று கூறிக்கொண்டிருந்த போது அவனது தோள்களைப் பற்றி "வீரனே, உமது பெயர் என்ன?" என்று வினவினான்.

அதற்கு அவன், "டாள்தொபியாஸ்" என்றான்.

அவனது இரண்டு வாள்களையும் அவனிடம் கொடுத்தபடியே, "வீரனே, இது யவனமோ அல்லது ரோமாபுரியோ கிடையாது. இது தமிழகம். இங்கு அனைத்து மக்களும் சரிநிகரே! உயர்ந்தவன், தாழ்ந்தவன், அடிமையென்ற எந்தவித பாகுபாடும் கிடையாது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதே எங்கள் பண்பாடு" என்றவன் தொடர்ந்து, "வீரனே, நான் கண்ட சிறந்த வீரர்களும் நீயும் ஒருவன்" என்றான்.

தனது வாள்களைப் பெற்றுக்கொண்ட யவன வீரனான டாள்தொபியாஸ் "எரித்திரியக் கடல் பகுதி முழுமைக்கும் நான் கண்ட வீரர்களில் தாங்கள் தான் தலைச்சிறந்தவர்" என்று கூறிக்கொண்டு "எரித்திரிய பொலிமிஸ்திஸ்" என்றான்.

குழப்பத்தினூடே விறல்வேல் "எரித்திரிய பொலிமிஸ்திஸ் அப்படியென்றால் என்ன?" என்றான்.

"எங்களது எரித்திரியன் கடல் , உங்களது குண, குட, குமரிக்கடல் முழுமைக்கும் தாங்கள் தான் நான் கண்ட வீரர்களில் தலைச்சிறந்தவர். ஆதலால் தாங்கள், எரித்திரிய பொலிமிஸ்திஸ்" என்றவன் "உங்களது தமிழ்

மொழியில் எவராலும் தோற்கடிக்க இயலாத சிவப்பு வீரன் அல்லது செங்குவீரன் என்றும் பொருள் கொள்ளலாம்'' என்றான்.

''இவ்வளவு நன்றாகத் தமிழ் பேசுகிறாய், எங்குக் கற்றுக்கொண்டாய்?'' என்று விறல்வேல் கேட்க அதற்கு யவன வீரனான டாள்தொபியாஸ் ''கடற்பயணத்தின் போது மாலுமிகளிடம் கற்றுக்கொண்டேன்'' என்றான்.

டாள்தொபியாஸ் செங்குவீரன் எனக் கூறியதும் சுற்றி நின்ற வீரர்கள் ''செங்குவீரன்'' ''செங்குவீரன்'' என முழக்கமிட அன்றிலிருந்து விறல்வேலுக்குச் செங்குவீரன் என்றே பெயர் ஆனது.

சுற்றி நின்ற வீரர்கள் வெற்றி முழக்கமிட்டுக் கொண்டிருந்த போது அங்குப் புரவியில் வந்த சோழ வீரன் ஒருவன் உபதலைவன் திவ்யனிடம் ''உங்களை இன்று மதியம் நாகத்தீவுக்கு வைதீகர் பாகவதரைப் பாதுகாப்பாகக் கொண்டு சென்று விட்டு வரும்படி முதன்மை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்'' என்றபடியே ஒரு ஓலையைக் கொடுத்துவிட்டுச் சென்றான்.

ஓலையை உபதலைவன் திவ்யனிடமிருந்து வாங்கிப் படித்த விறல்வேல், ''திவ்யா, வைதீகர் பாகவதரைக் கொண்டு செல்ல வீரர்கள் பலர் இருக்கிறார்களே? உன்னை எதற்கு அவர் தனியாக நியமிக்க வேண்டும்? அதுவும் கடல் கடந்து நாகத்தீவுக்கு? சித்திரை மாதம், இனி தென்மேற்குப் பருவக் காற்று வேறு வீசத் தொடங்கிவிடும். கடலில் மழையும், கொந்தளிப்பும் அதிகமாக இருக்கும் இச்சூழ்நிலையில் நீ செல்வது சரியில்லை!'' என்றான்.

பதிலுக்கு உபதலைவன் திவ்யன் ''இது முதன்மை அமைச்சரின் கட்டளையாயிற்றே, விறல்வேல். மீற இயலுமா? நான் சென்றுவிட்டு விரைவில் வந்துவிடுகிறேன். நீ அச்சம் கொள்ளாதே''

''இனி முதன்மை அமைச்சருக்கு வேண்டப்பட்டவர்கள் அந்தப்புரம் சென்றாலும், நம்மைப் பாதுகாப்புக்கு அழைத்தாலும் ஆச்சர்யம் கொள்ளத்தேவையில்லை. சோழ தேசத்தில் நமது நிலை அப்படி உள்ளது'' என்றவன் ''எனக்கு அச்சமெல்லாம் ஏதுமில்லை. உனது பயணத்தை

நினைத்தால் தான் எனக்குக் கவலையாக உள்ளது. சரி, நானும் உன்னோடு புறப்படுகிறேன்!'' என்றான் விறல்வேல்.

``நீயுமா?''

``ஆமாம், நானும் தான்.''

``எதற்காக?''

``உனக்குத் துணையாக வருகிறேன். எனக்கும் நாகத்தீவையும், அதன் அருகில் இருக்கும் மணி பல்லவத்தையும் காண வேண்டுமென்ற ஆவல். பலரும் அதன் அழகை வர்ணிக்கும் போது ஆச்சர்யம் உண்டாகும். உன்னோடு வந்தால், அந்தக் குறையும் நீங்கிவிடுமே!''

``முதன்மை அமைச்சரின் ஆணை...'' என்று உபதலைவன் திவ்யன் ஏதோ கூற வர, அதனை இடைமறித்த விறல்வேல் ``முதன்மை அமைச்சரின் ஓலையில் நீ மட்டும் செல்! என்று எந்த நிபந்தனையும் இல்லை. ஆகவே உன்னோடு நானும் வருகிறேன்!'' என்றான்.

``வருவதாய், நீ முடிவெடுத்து விட்டாய். இனி உன் முடிவை என்னால் மாற்ற இயலாது. நான் பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன். நீ சென்று வீட்டில் தந்தையாரிடம் தகவல் தெரிவித்துவிட்டு விரைவில் துறைமுகத்திற்கு வந்து சேர்!'' என்றபடியே கிளம்பினான். எதிரில் டாள்தொபியாஸ் நிற்பதைக் கண்டவன் ``வீரனே, புகாரிலேயே தங்கியிரு. பயணம் முடிந்த பின் உன்னை நான் மீண்டும் சந்திக்கிறேன்!'' என்று கட்டளையிட்டபடியே கிளம்பினான்.

**அடிக் குறிப்பு**

1. தமிழகத்திற்கு வாணிபம் செய்ய வந்த யவனர்களான கிரேக்கரும், உரோமரும் அரபு நாட்டிற்கு மேற்கிலுள்ள செங்கடல், அதற்கு அப்பால் உள்ள பாரசீகக் கடல், அதற்கு இப்பால் உள்ள குடக் கடல் (அரபிக் கடல்), குமரிக் கடல் என அனைத்தையும் செங்கடல் (எரித்திரியக் கடல்) என்றே அழைத்தனர்.

2. கொலோசியம்— டாள்தொபியாஸ் இங்குக் குறிப்பிடப்படுவது தற்போது இத்தாலியில் ரோமில் உலகப் பண்பாட்டுச் சின்னமாக அறிவிக்கப்பட்ட கட்டிடம் கிடையாது. அதற்கு முன்பே கொலோசியம் ரோமர்களின் ஆதிக்கம் நிறைந்த அனைத்து நகரங்களிலும் காணப்பட்டது. ஆனால் கி.பி. 71ல் தான் தற்போது ரோமில் உள்ள பிரமாண்ட கொலோசியத்தின் கட்டுமானப் பணி ஆரம்பமானது. நமது கதை கி.மு முதலாம் நூற்றாண்டு காலத்தில் நடக்கிறது என்பதையும் நினைவில் கொள்க.

ஆதாரம்: வேங்கடம் எழுதிய அடேங்கப்பா ஐரோப்பா நூல். விகடன் பிரசுரம் . பக்கம்—34

# 9. காதலும ் கண்ணீரும்

நண்பன் திவ்யனின் உத்தரவுப் படி, வளவனாரிடம் தகவலைத் தெரிவிக்க மாளிகைக் கதவைத் தட்டினான் விறல்வேல்.

கதவு திறக்கப்பட்டவுடன் விறல்வேலுக்கு அவன் எதிர்பாராத பெரும் இன்ப அதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது. காரணம், கதவைத் திறந்தது வானவல்லி.

பாதிக் கதவினை மட்டும் திறந்து நின்ற அந்தப் பைங்கிளியைக் கண்ட விறல்வேலின் நா பேச எழாமல் பிரமை பிடித்தே நின்றுவிட்டான். திறக்கப்பட்ட கதவிற்குப் பின்புறம் நின்ற பைங்கிளி மரகதப் பட்டுடுத்தி, தலை குளித்ததன் விளைவாக அவளது நீண்ட, அடர்ந்த கூந்தலை உலர்த்துவதற்காகப் பின்னாமல் முன்னும் பின்னும் அப்படியே நீளமாகத் தொங்க போட்டுக்கொண்டு, காது மடல்களின் இருபுறத்திலிருந்தும் எடுத்த சில கற்றைக் கேசரங்களால் இரண்டையும் பின்னி, அவற்றிற்கு இடையில் தொடுத்த மல்லிகையையும், தாழை மலரின் மடலையும் வைத்து அவளது பிறை நுதலில் குங்குமப் பொட்டு வைத்து இடுப்பில் ஒரு கையை மடக்கி, வலது காலை பின்புறமாகச் சற்றே மடக்கி ஒய்யாரமாகக் கதவில் சாய்ந்தபடியே ஓர விழியால் பார்த்த படி விறல்வேலின் பிரமை நீங்கும் படி ‘‘ஏது காலையிலேயே தலைவர் இன்று இந்தப்பக்கம் வருகைத் தந்துள்ளார்? ஆச்சர்யமாக உள்ளதே!’’ என வரவேற்றாள்.

பதிலுக்கு விறல்வேல், ‘‘அவசரப் பணியாக நாகத்தீவுக்குச் செல்கிறோம். ஆதலால் தகவல் சொல்லிவிட்டுச் செல்லலாம் என்று வந்தேன்’’ என்றான்.

‘‘செல்கிறோம் என்றால்...?’’

“நானும், உப தலைவன் திவ்யனும் என்று அர்த்தம்.”

“நாகத்தீவுக்கா? கடல் கடந்த பயணம் ஆயிற்றே!” எனப் பதறினாள்.

“ஆமாம் வானவல்லி. முதன்மை அமைச்சரின் உத்தரவு. மீற இயலுமா?” என்று பதிலளித்தவன் மீண்டும் தொடர்ந்து “வளவனார் மற்றும் அம்மா எங்கே? அவர்களிடம் கூறிவிட்டு விரைவில் கிளம்ப வேண்டும்!” என்றான்.

“அவர்கள் இருவரும் உறைந்தையில் அல்லவா இருக்கிறார்கள்” என்றாள். ஆனால் இந்த வாக்கியத்தில் அவளது கம்பீரமான குரல் காணாமல் போய்ச் சற்று குழைந்து வந்ததைக் கவனிக்கவே செய்தான் விறல்வேல்.

“உறைந்தையிலா?”

“ஆமாம்”

“அப்புறம் ஏன் உமது தமையன் வீட்டிற்குச் சென்று, தந்தையாரிடம் தகவல் தெரிவித்துவிட்டு, உடனே வா? எனக் கட்டளையிட்டான்”

“தந்தையார் மற்றும் தாயார் இருவரும் உறைந்தையில் இருப்பதும், அவர்கள் நாளை தான் புகாருக்குத் திரும்புவார்கள் என்பதையும் அண்ணன்தான் ஏற்கெனவே அறிவாரே!”

விறல்வேல் குழப்பத்துடன், “அப்புறம் ஏன், எதற்கென்னை அனுப்பி வைத்தான்?”

“உங்களுக்குத் தெரியாதா?”

“தெரியவில்லையே!”

குரலை மேலும் தாழ்த்தி கொஞ்சலுடன் “ஆமாம்! ஆமாம்! உங்களுக்குக் காரணம் தெரியாது தான்! விறலியர் மகன் விறல்வேலுக்குப் புதிதாக நடிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டுமா என்ன?”

“அப்படியானால் வீட்டில் யாரும் இல்லையா?” இவனது குரலும் தாழ்ந்து கொஞ்ச ஆரம்பித்தது.

‘‘யாரும் இல்லை.’’

‘‘உமது பணிப்பெண்கள்?’’

‘‘அவர்கள் காலையிலேயே சென்றுவிட்டார்கள்.’’

‘‘சென்றுவிட்டார்களா அல்லது அனுப்பிவிட்டாயா?’’

‘‘அனுப்பிவிட்டேன் எனத்தான் வைத்துக் கொள்ளுங்களேன்!’’

‘‘உறக்கத்திலும் உனைப் பிரியாத உமது தோழிகளான பத்திரைத் தேவி மற்றும் மரகதவல்லி.’’

‘‘சற்று முன்தான் கிளம்பினார்கள்.’’

‘‘சற்று முன்பா? அவர்கள் இங்கேயே இருக்க வேண்டியது தானே! உன்னைத் தனியே விட்டுவிட்டு அவர்கள் ஏன் சென்றார்கள்?’’ என அவர்களைக் கடிந்துகொண்டு வினவினான்.

‘‘மேல் மாட உப்பரிகைச் சாரத்திலிருந்து நீங்கள் வருவதை இருவரும் கண்டார்கள்.’’

‘‘கண்ட பின்பு.’’

‘‘நீ தனிமையில் இருப்பதே நல்லதென்று, சென்றுவிட்டார்கள்’’

முன்பு அவர்களைக் கடிந்தவன் ‘‘புத்திசாலித் தோழிகள் தான்’’ என்று பாராட்டிக்கொண்டே வானவல்லியின் அருகில் வந்தவன் ‘‘வீட்டில் நீ மட்டும் தான் இருக்கிறாய்? அப்படித்தானே!’’ என்றான்.

பதிலுக்கு வானவல்லி பேச முற்பட்டாலும் விறல்வேலின் அருகாமை அவளது பேச்சுகளை முடக்கிவிடவே அவள் ‘‘உம்’’ என்று மட்டும் பதிலளித்தாள்.

‘‘என் நண்பனுக்குத்தான் நான் நன்றி சொல்ல வேண்டும்’’

‘‘அண்ணாவுக்கா’’

‘‘ம்ம்ம்’’

பொய்க் கோபத்தோடு "உங்கள் நண்பரை நீங்கள் நிச்சயம் மெச்சிக் கொண்டுதான் ஆகவேண்டும்" என்றாள், முகத்தைத் திருப்பிக்கொண்டே.

அருகில் சென்ற விறல்வேல், அவளை இழுத்து மெல்ல அணைத்தான். இருவரது உடலும் ஒன்றோடொன்று உரசின. இருவரது மூச்சுக்காற்றுகளும் சூடாகச் சந்தித்துக்கொள்ள அவளது காதில் மெல்ல கொஞ்சினான் "வானவல்லி, நீ இன்று இந்த மரகதப் பட்டில் அற்புதமாய் மின்னுகிறாய்" என்றவன் அவளது காது மடலோரமும் பிறை நுதலிலும் பிரிந்திருந்த அவளது ஈரக் கேசரங்களை மெல்ல வருடிக்கொண்டே இருக்கும் போது வானவல்லி அவனிடம் "நான் கதவைத் திறந்த போது, நீங்கள் பார்த்த பார்வையிலிருந்தே அதனை நான் தெரிந்துகொண்டேன்" என்றாள்.

"நான், காலையிலேயே இங்கு வருவேனென்று உனக்கெப்படித் தெரியும்?"

அதற்கு வானவல்லி அவளது சிவந்த இதழ்களினிடையில் தோன்றிய சிரிப்பினை அடக்கிக்கொண்டு, புன்னகையுடன் "நேற்றே சுவற்றில் இருக்கும் பல்லி கூறியது!" என்றாள்.

அவள் காலையிலிருந்தே தன் வருகைக்காகத்தான் காத்திருக்கிறாள் என்பதையும் அவள் அதற்கொரு பொய்யான காரணத்தையும் சொல்வதைக் கண்ட விறல்வேல், அவள் சொன்னதை அப்படியே நம்பியது போன்றே "நிச்சயம் சொல்லியிருக்கும்!" என்ற படியே அவளை இன்னும் சற்று இறுக அணைத்தான். அவனது அணைப்பை முதலில் பலமாக எதிர்த்தவள், பின் எதிர்த்தாலும் அவன் விடுவிக்கப் போவதில்லை என்பதை உணர்ந்தவளாய் எதிர்ப்பதைக் கைவிட்டு அவனை அணைத்தபடியே தனக்குள் கூறிக்கொண்டாள் "இந்தப் பேதை மனதைப் புரிந்துகொள்ளவே இயலவில்லையே! தலைவன் அருகில் இல்லாதபோது அவனது அருகாமையையும், அணைப்பையும் எதிர்பார்த்தே ஏங்குகிறது. ஆனால், அவரோ அருகில் இருக்கும்போது அவரைத் தவிக்கவிட்டு தூர நின்று வேடிக்கை பார்ப்பதையே விரும்புகிறதே!!" என மனதில் எண்ணியவள் வாய்விட்டு "இதற்குத் தான் இங்குக் காலையிலேயே வந்தீர்களா?" என்றாள்.

அவளது வதனத்தைத் தூக்கிக் கொஞ்சியபடியே விறல்வேல், ‘‘உமது தந்தையார் இருப்பார். அவரிடம் காரியத்தைத் தெரிவித்துவிட்டுச் செல்லலாம் என்றே வந்தேன். ஆனால், நீ மட்டும் தனியாக இருப்பாயென்று எதிர்பார்த்திருக்கவில்லை!’’ என்றான்.

திடீரெனக் கோபப்பட்ட வானவல்லி, அவனது அணைப்பிலிருந்து தன்னை வலிய விடுவித்துக்கொண்டு கோபத்தோடு ‘‘அதான் நீங்கள் வந்த காரியம் முடிந்துவிட்டதே! நாளை தந்தையார் வந்தவுடன் முதல் வேலையாக நானே தாங்கள் தெரிவித்த தகவலைத் தெரிவித்துவிடுகிறேன். நீங்கள் கிளம்பலாம் வீரரே! என்று விடுவிடுவெனத் திரும்பிச் சென்றாள்.

அவள் வேகமாகக் கோபத்தோடு திரும்பிச் செல்வதைக் கண்ட விறல்வேல் ‘‘நீ சென்றாலும் நான் உன்னை விட்டுவிடுவேனா!’’ எனக் கூறியபடியே வேகமாகச் சென்று அவளைப் பின் புறமாகக் கட்டி அணைத்துக் கொண்டான்.

அவனது இந்த அதிரடியான அணைப்பை அவள் எதிர்பார்த்திருக்கவில்லை. அவனது இந்த அணைப்பு உள்ளூர அவளுக்குப் பிடித்திருந்தாலும், உடன்படாதது போலவே அவள் திமிரவே, அவளை அவன் விடாமல் அணைத்தபடியே அவளது காதுகளில் இரகசியங்களைக் கூறுவது போல ஏதோ குசுகுசுவெனக் கூறினான். அவ்வளவுதான்! அவளது கோபம் அனைத்தும் விலகி மகுடிக்குக் கட்டுப்படும் சர்ப்பமாய் அவளும் அந்த மந்திரச் சொற்களுக்குக் கட்டுண்டு போனாள்.

அவளைப் பின்னாலிலிருந்து அணைத்த விறல்வேல் அவளது உடலின் மென்மையையும், கூந்தலில் சூடியிருந்த தாழை மற்றும் தொடுத்த மல்லிகை மலர்களின் மணங்களோடு சேர்ந்து கொண்ட வானவல்லியின் ஈரக் கூந்தலின் வாசம் அவனைக் கிறங்கடிக்கச் செய்தது. செறிஎயிற்று அரிவை கூந்தலின் நறியவும் உளவோ நீ அறியவும் பூ எனக் குறுந்தொகையில் சங்கப்புலவன் இறையனார் பல பிறவிகளாகத் தொடர்ந்து என்னோடு அன்பினை உடைய என் காதலியின் தலை முடியைப் போல நறுமணமுள்ள மலரை நீ எங்காவது நுகர்ந்ததுண்டா? என தும்பியிடம் வம்புக்குச் சென்றது நியாயம் தான் என மனதினுள்ளே எண்ணியபடி அவன் கண்களை மூடி நுகர்ந்து

அவற்றை அனுபவித்தபடியே அவனது வெதுவெதுப்பான மூச்சுக்காற்றை அவளது காது மடலோரம் விட்டுக்கொண்டு ''வருடம் முழுவதும் தவமிருந்து இந்த நாளில் உன்னைக் காண ஓடோடி வந்துள்ளேன். ஆனால், நீயோ கோபம் கொண்டு செல்கிறாய்!'' என்றபடியே அவன் தனது இதழ்களால் அவளது காது மடல்களை வருடிக்கொண்டே கூறினான்.

இப்போது அவள் ஒன்றும் தெரியாதது போல, ‘‘எந்த நாளுக்காகத் தலைவர் காத்திருந்தாராம்?'' என வினவினாள்,

‘‘சித்திரைத் திங்கள் இந்திரத் திருவிழாக் கடந்து வைகாசித் திங்கள் முதல் நாளுக்காகத் தான்!''

அனைத்தையும் அவள் அவனிடமிருந்தே கேட்டு மகிழ்ச்சியுற வேண்டும் என முடிவு செய்துகொண்டு ‘‘இன்று வைகாசித் திங்கள் முதல் நாளில் தலைவருக்கு அப்படியென்ன சிறப்பாம்?'' எனக் கிளிக் குரலில் கொஞ்சினாள்.

அதற்கு அவன் அவளுக்கு எந்தப் பதிலையும் கூறாமல, ‘‘என்ன காரணம் என உனக்குத் தெரியாதா!'' என்ற படியே காது மடலோரம் தனது உதட்டு இதழ்களால் வருடிக்கொண்டிருந்தவன், அவளது கன்னங்களின் ஸ்பரிசத்தை வேண்டி மெல்லத் தனது முகத்தை அவளது கன்னங்களோடு ஒற்றிக்கொண்டான். பின்னாலிருந்து அணைத்துக் கொண்ட படியே அவளது மென்மையான பஞ்சுபோன்ற கன்னங்களில் முத்தமிடத் தொடங்கினான்.

அவனது இதழ்கள் அவளது முகத்தின் ஸ்பரிசத்தையும், அவனது கைகள் அவளின் உடலின் ஸ்பரிசத்தையும் நாடி அவளது உடலை மெல்ல வருடத் தொடங்கின. இதுவரை அவனது பிடியில் கட்டுப்பட்டிருந்தவள், மீண்டும் தன்னை விடுவித்துக்கொண்டு இந்த முறை எந்தக் கோபமும் இல்லாமல் மனம் நிறையக் காதலோடு கொஞ்சிக் குழைந்து பேசினாள் ‘‘இந்த ஆண்மக்களே இப்படித்தான்?'' என்று.

பதிலுக்கு விறல்வேல், ‘‘ஆண்மகன்களுக்கு இப்போது என்ன வந்ததாம்?'' என்றான் சற்று கோபத்தோடு.

“சிறு தனிமை கிடைத்துவிட்டாலே போதுமே! பெண்டிரை கள்ளத்தனமாகக் களவாடுவதில் உங்களுக்கு அப்படியென்ன அலாதி பிரியமோ! புரியவில்லையே!” என்று ஊடலாடினாள்.

பதிலுக்கு விறல்வேல், “திருட்டு மாங்காயைப் போன்று திருட்டு முத்தத்திற்கும் அலாதி சுவையுண்டு என்பதை நீ அறிய மாட்டாயா வானவல்லி?” என்றான்.

“தலைவர் இன்னும் எத்தனைக் காலம் தான் இப்படியே திருட்டுத் தனமாகவே இருக்கப் போகிறீர். இவளை உங்கள் உரிமையுடையவளாக்க வேண்டும் என்ற எண்ணம் தலைவருக்கு உதிக்கவில்லையா?”

அதற்கு அவன் மேல் மூச்சு வாங்கியபடியே “தலைவனின் நாடி, நரம்புகள் அனைத்தும் தலைவியை எண்ணியே துடித்துக் கொண்டிருக்கும் சங்கதி அவளும் அறிந்தது தானே” என்றான்.

“தலைவரின் காதலையும், ஆசையையும் தான் சற்று முன் கூடக் கண்டேனே” என அவனைப் பரிகாசம் செய்தவள் அவனது அருகில் வந்து அவனைத் தீண்டுவது போலவும் அதே சமயம் உடல்களுக்கிடையில் சற்று இடைவெளி விட்டும் நின்ற படியே அவனது தலைமுடியைக் கோதியபடி, அவனது கன்னங்களைத் தீண்டிய படியே “தலைவரே, திருமணத்தை விரைந்து செய்து இவளை முழுவதும் சொந்தமாக்கிக் கொள்ளும் நினைப்பு இன்னும் வரவில்லையா?” என்றாள்.

அதற்கு அவனோ “இளவரசர் விரைவில் முடிசூட்டிக் கொள்ளப் போகிறார். அதற்குப் பின் நமது திருமணம் தான். இது சம்பந்தமாகத் திவ்யனிடமும் பேசி விட்டேன். அவனும் முடிசூட்டு விழா முடியட்டும் நானே தந்தையிடம் இது பற்றிப் பேசுகிறேன் என்று வாக்களித்துள்ளான்” எனத் தெரிவித்தவன் “நமது பழக்கம் தான் குடும்பம் முழுவதும் தெரிந்தது தானே! பின்பு நீ ஏன் வானவல்லி கவலைப் படுகிறாய்?” என்று அவளைத் தேற்றினான்.

தான் பேசியதைக் கேட்ட வானவல்லியின் முகம் மலருவதைக் கண்ட விறல்வேல் அவளை இன்னும் மகிழ்ச்சியின் உச்சிக்குக் கொண்டு

செல்ல விரும்பி இடுப்பில் மறைத்து வைத்திருந்த ஓலையை எடுத்து அவளிடம் நீட்டினான்.

அந்த ஓலையைப் படித்து அதன் பொருளை உணர்ந்த வானவல்லிக்கு அவளது கால்கள் இரண்டும் தரையில் நிற்பதாகவே தெரியவில்லை. ஆமாம்! அவள் வானத்தில் பறந்துகொண்டிருந்தாள். மீண்டும் விறல்வேலுக்கும் கேட்கட்டும் என்று தனது கொஞ்சும் பைங்கிளிக் குரலில் சத்தமிட்டு வாசித்தாள் வானவல்லி.

**மாந்தளிர் பண்பிதுவோ என – ஆங்கே**

**மாசின்றித் தண்மையாய் உட்புகுந்தாள்!**

**காந்தள் மலர்க் கண்கொண்டு – என்னில்**

**காமன் கணைபாய்ச்சி உள்ளமர்ந்தாள்!**

**வேந்தரின் முடிவென்று களைத்த – என்னுள்**

**வேனிற்கால மழையாய் குளிர்வித்தாள்!**

**பூந்தளிர் விரல் கொண்டு – நெஞ்சில்**

**பூக்கோலம் செய்வித்து நடைபயின்றாள்!**

**சிந்திய பொன்மணிகள் போல் – நன்றாய்**

**சிரித்து எனை சிறைபிடித்தாள்!**

**மந்திரம் உரைத்தனளோ மாதவள் – மனம்**

**மந்தியாய் போனதே பேரழகில்!!!**

இதற்கு முன் விறல்வேல் வலிய அவளை அணைத்த நேரங்களிலெல்லாம் விலகிச் சென்று அவனோடு ஊடலாடியவள், ஏட்டினுள் விறல்வேல் எழுதிய கவிதை வரிகளைப் படித்தபின்னர் அவளே அவனை இறுகக் கட்டியணைத்து அவனது முகங்களில் மாறி மாறி முத்த மாரி பொழிய, அவளது எதிர்பாராத இந்த முத்தங்களைப் பெற்ற விறல்வேல் சித்தம் குளிர்ந்து அவளை இறுக அணைத்துக் கொண்டான். அவளும் அவளது பூமுகத்தை விறல்வேலின் கழுத்தினுள் புதைத்துக் கொண்டாள்.

திடீரென, விறல்வேல் தனது கழுத்தினுள் சுடு நீரின் உணர்வைப் பெற, அவளை அணைப்பிலிருந்து விடுவித்து அவளது முகத்தை நோக்க அவள் கண்களில் நீர்ப்பெருக்கு ஏற்பட்டிருந்தது.

வானவல்லியின் திடீர் கண்ணீருக்கான காரணத்தை அறியாத விறல்வேல், அவளது அழகிய வதனத்தை உயர்த்தி, அவளது கண்களில் வழிந்த கண்ணீர்த் துளிகளைத் துடைத்த படியே "ஏன் வானவல்லி, என்னாயிற்று?" என அவன் கேட்கும்போது அவனது கண்களும் கலங்கத் தான் செய்தன.

அவளது கண்ணீருக்கான காரணம் வேறு இருந்தாலும், அதனை மறைத்துக்கொண்டு சிரித்தபடியே, "வீரரே, உங்களது காதல் கவிதையைப் படித்தேன். காதல் பெருக்கு இன்பப் பெருக்காகி, இன்பப் பெருக்குக் கண்ணீர்ப் பெருக்காகி விட்டது!" என்றவள் கொஞ்சியபடி "தலைவரே, என்றிலிருந்து கவிஞராகிக் கவியெழுதத் தொடங்கினீர்கள்?" என வினவினாள்.

விறல்வேலுக்கும், வானவல்லிக்கும் இடையில் சற்று இடைவெளி மிகுந்திருந்தது. அந்த இடைவெளியை விரும்பாதவனாய் அவளை மீண்டும் அருகில் இழுத்து அணைத்து வானவல்லியின் கண்களைச் சுட்டிக் காட்டியபடி "இந்தக் காந்தள் விழியாளின் காதலில் எப்போது அகப்பட்டேனோ, அப்போதிலிருந்து இந்த வீரன் கவிஞனாகவும் பரிணமித்து விட்டான்!" என்றபடி அவளது கண்களில் முத்தமிட்டான்.

பதிலுக்கு அவள் ஏதும் கூறாமல், "அத்தான்" என்றாள்.

"இன்னொருமுறை"

இந்த முறை அவள் "கருத்தான்" எனக் குழைந்தாள்.

விறல்வேலுக்குத் தெரியும், வானவல்லியின் மனதில் எப்போதெல்லாம் காதல் பெருகி அவள் தன்னிலை மறக்கிறாளோ! அப்போதெல்லாம் அவள் அவனை "கருத்தான்" என்றே அழைப்பாள் என்று. அவள் தன்னைக் கருத்தான் என்று அழைப்பதையே விறல்வேல் விரும்பினாலும், அவன் கெஞ்சினாலும் அவள் எளிதில் அப்படி அழைக்க மாட்டாள். அவளுக்காக எப்போது தோன்றுகிறதோ! அப்போதுதான் அவள்

அவனை உரிமையோடு கருத்தான் என அழைப்பாள். அப்படி அவள் கருத்தான் என்று அழைக்கும் போது விறல்வேல் அடையும் மகிழ்ச்சிக்கும், பரவசத்திற்கும், இன்பத்திற்கும் அளவேதும் இருக்காது. அவள் அழைக்கும் அந்த ஒற்றை வார்த்தைக்கு உலகத்தையே கேட்டாலும் எழுதி வைத்துவிடுவான்.

விறல்வேலும் சற்று கருத்தே காணப்படுவான். ஆதலால் அவள் காதல் பெருகி தன்னிலை மறக்கும் சூழலில் அவனை ‘கருத்தான்’ என்றே காதலோடு அழைப்பாள்.

காதலில் தன்னை மறந்த நிலையில் இருக்கும் வானவல்லியை தன் தோளில் சாய்த்துக்கொண்டே “வானவல்லி” என அழைத்தான்.

“சொல்லுங்கள் அத்தான்”

“இன்னொருமுறை அப்படி அழையேன்”

“எப்படி”

“சற்று முன் அழைத்தாயே? அப்படித்தான்”

“முடியாது”

“இன்னும் ஒரே ஒருமுறை மட்டும்” அவன் கெஞ்சவே செய்தான்.

அவன் காதோரம் அவனுக்கு மட்டுமே கேட்கும்படியாய் “கருத்தான்” என்றவள் வெட்கப்பட்டு அவனை இன்னும் இறுக கட்டிக்கொண்டு “இப்போது மகிழ்ச்சி தானே?” என்றாள்.

“காலம் முழுக்க நாம் இருவரும் இதே இன்பத்தோடு, இப்படியே இருந்துவிட்டால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்?”

அதற்கு அவள் “இப்படியேவா…!”

“ஆமாம், இப்படியேதான். என் தோளில் நீ சாய்ந்திருந்தபடி உன் அரவணைப்பிலேயே!”

“பார்ப்பவர்கள் சிரிப்பார்கள்”

“சிரித்துவிட்டுப் போகட்டும்”

“நீங்கள் ஆண் மகன்”

“ஆதலால்”

“எதற்கும் அஞ்சமாட்டீர்கள். யாரைப் பற்றியும் கவலை கொள்ள மாட்டீர்கள். ஆனால் நான் பெண் ஆயிற்றே! எனக்கு நிறையக் கட்டுப்பாடுகள் உள்ளதே!”

“கட்டுப்பாடுகள் என்றால் இந்த அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு பற்றிப் பேசுகிறாயா?”

“உம்ம்ம்...”

“நாம் இருவர் மட்டும் இருக்கும் போது அவற்றையெல்லாம் அடப்பில் போட்டுவிட்டு வந்துவிடு வானவல்லி. அப்பொழுதான் நாம் மகிழ்ச்சியுடன் எதைப் பற்றியும் கவலை கொள்ளாமல் வாழலாம்”

அவன் கூறிய பதிலைக் கேட்ட வானவல்லி அவனது தோளிலிருந்து விலகி அவனை முறைத்த படியே “நினைப்புதான்” என்றவள் “வாருங்கள் அமுதுண்ணலாம்” என்றபடியே அழைத்துச் சென்றாள்.

வாடிப்போய், கலையிழந்திருந்த வானவல்லியின் முகத்தைக் கண்ட விறல்வேல், “வானவல்லி, முகவாட்டத்திற்கான காரணத்தை இப்போது கூறப்போகிறாயா? இல்லையா?” என்றான்.

அதற்கு அவள் முகத்தில் சிரிப்பை வலுக்கட்டாயமாக வரவழைத்துக்கொண்டு “முகவாட்டமா? அப்படியெல்லாம் ஏதும் இல்லையே! நான் மகிழ்ச்சியுடன் தானே இருக்கிறேன்!” என்று தரையைப் பார்த்துக்கொண்டே பதிலளித்தாள்.

“தரையைப் பார்த்தது போதும் வானவல்லி, என்னைப் பார்த்துப் பேசு!” என்றான் சற்றுக் குரலில் கடுமையை வரவழைத்துக் கொண்டு.

விறல்வேலின் கண்களைப் பார்த்த வானவல்லி பொய் சொல்ல வராமல் அழுதபடியே “அத்தான், சில நாட்களாக மனதில் ஏதோ ஒரு எச்சரிக்கை உணர்வு ஏற்பட்டு காரணமறியாத அச்சமும் தோன்றிக்

கொண்டிருக்கிறது. அதற்குத் தகுந்தாற்போன்று பொல்லாத கனவுகளும் வந்து உறக்கத்தைக் கெடுத்துவிடுகிறது!'' என்றாள் தேம்பியபடியே.

அவள் தேம்பி அழுததைக் கண்ட விறல்வேலின் மனமும் உடைந்து போயிருந்தாலும், அதை அவன் வெளிக்காட்டிக் கொள்ளாமல் ‘‘இதனை ஏன் நீ என்னிடம் முன்பே கூறவில்லை?'' என வினவினான்.

‘‘தங்களையும் எதற்குக் குழப்பத்தில் ஆழ்த்த வேண்டும்? என எண்ணித்தான்''

கண்களில் வழிந்த அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டு, அவளது நெற்றியில் முத்தமிட்டுக் கூறினான் ‘‘எதைப் பற்றியும் கவலை கொள்ளாதே வானவல்லி. நம் மனம் போல் அனைத்தும் அமையும். நம்மை மீறி எதுவும் நடந்துவிடாது!'' என்று ஆறுதல் படுத்தியவன் அவளை அந்தக் கவலையிலிருந்து மாற்ற வேண்டி ‘‘பசிக்கிறது. சீக்கிரம் உணவை எடுத்து வை'' என்று கூற அவளும் கவலைகளை மறந்து விறல்வேலுக்குத் தயாராகச் சமைத்து வைத்திருந்த உணவு மற்றும் பலகாரங்களைப் பரிமாரியதொடு, அவற்றோடு அன்பையும், காதலையும் சேர்த்துக் கொடுத்ததால் விறல்வேல் வானவல்லியின் கைப்பக்குவத்தில் தயாரான உணவினை ஒரு பிடி பிடிக்கவே செய்தான்.

காலை உணவை மனமும், வயிறும் நிறைய முடித்துவிட்டு அவளிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பத் தயாரானான் விறல்வேல்.

வானவல்லிக்கு திவ்யனும், விறல்வேலும் கடல் பயணம் மேற்கொள்வதில் எந்த வித உடன்பாடும் இல்லை. ஆனால் ஆண் மக்கள் காரியத்தின் கண் வெளியூர் புறப்படும் போது அவர்களைத் தடுப்பது கற்புடைய தமிழ் மகளிரின் பண்பில்லாததால, அவள் முடிந்த வரை முகத்தில் போலியாகச் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு அவனை அனுப்பி வைக்கவே முயன்றாள்.

விறல்வேல் கிளம்பிய போது, அவனை நிற்கச் சொன்ன வானவல்லி, தன் கழுத்திலிருந்த முத்து மாலையைக் கழட்டி விறல்வேலிற்கு அணிவித்து, ஒரு முத்தத்தையும் வழங்கினாள்.

வானவல்லியின் மனதில் ஏற்பட்டிருக்கும் சஞ்சலங்களை விறல்வேல் உணர்ந்தாலும், அதனைத் தெரிந்தது போலக் காட்டிக் கொண்டால் அவளது மனம் துயர்படும் என்பதை உணர்ந்தவன் கடும் சிரமத்தோடு முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு முத்து மாலையோடு முத்தத்தையும் பெற்ற விறல்வேல் அங்கிருந்து பிரிய மனமில்லாமால் அவளைப் பார்த்தபடியே, அவளது குளிர்ந்த பார்வையிலிருந்து விலக விருப்பமில்லாமல் மீண்டும் அவளது கண்களில் தனது பார்வையை நிலை நாட்டினான்.

அவளது தயக்கத்தைப் புரிந்து கொண்ட விறல்வேலின் இருவிழிகளும் “எங்களுக்கு ஏதும் நேராது. நீ மகிழ்ச்சியாக இரு” என்று வானவல்லிக்கு கூறின.

வானவல்லியின் பார்வையிலிருந்தே “பத்திரம்” என்று அவள் கூற நினைப்பதை உணர்ந்தான் விறல்வேல்.

காதல் சிந்தனைகளில் பிரிய மனமில்லாமல் இருவரும் பார்வையால் கட்டுண்டு கிடந்தபோது அங்கே உள்நுழைந்தனர் மரகதவல்லியும், பத்திரைத் தேவியும்.

உள்நுழைந்த மரகதவல்லி விறல்வேலைக் கண்டவுடன் விஷமச் சிரிப்புடன் “தலைவரே, நீங்கள் தேடி வந்தது, நீங்கள் எதிர்பார்த்ததை விட எங்கள் தலைவியிடமிருந்து, அதிகமாகக் கிடைத்திருக்கிறது போலிருக்கிறதே!” என்று அவனருகில் வந்தாள்.

மரகதவல்லியின் இந்தப் பரிகாசச் சொற்களுக்கான காரணத்தை அறியாத விறல்வேல் திகைக்கவே, மரகதவல்லி தனது பட்டுச் சீலையின் முந்தானையை எடுத்து, “அண்ணா, இப்படியே வெளியே சென்றால் எங்கள் தலைவி வானவல்லியைப் பற்றித்தான் அனைவரும் தவறாகப் பேசுவார்கள்!” என்றபடியே அவனது முகம், கழுத்து மற்றும் தோள்களில் இருந்த குங்குமத்தைத் துடைத்துவிட்டாள்.

துடைத்ததோடு மட்டுமல்லாமல் அவனது கழுத்திலிருந்த முத்து மாலையில் சிக்கியிருந்த சில மல்லிகை இதழ்களையும் எடுத்துவிட்டு, எழுந்த

சிரிப்பை அடக்கிக்கொண்டு “அண்ணா, இனி நீங்கள் தாராளமாகக் கிளம்பலாம்” என்றாள்.

தான் வானவல்லியை அணைத்த போதும், முத்தமிட்டபோதும் அவளது நுதலில் வைத்திருந்த குங்குமம் தன், முகம், கழுத்து, மற்றும் தோள்களில் பட்டுவிட்டதைக் கவனிக்காமல் இருந்ததன் விளைவை மரகதவல்லியிடம் அனுபவிக்கிறோம் என்பதை நினைத்த விறல்வேல் சிரித்துக்கொண்டே, மரகதவல்லியை காண இயலாமல் தரையைப் பார்த்துக்கொண்டே கிளம்பியவனை நிற்கச் சொன்ன வானவல்லி “விரைவில் பத்திரமாகத் திரும்பி விடுங்கள்” எனத் திலகமிட்டு வழியனுப்பி வைத்தாள்.

விறல்வேல் அங்கிருந்து சென்ற பிறகு வானவல்லியும் மரகத வல்லிக்கு என்ன கூறுவது என்று தெரியாமல் “இப்படித் தனது தோழிகளிடம் கையும் களவுமாக மாட்டிக்கொண்டோமே?” என எண்ணியவாறு நாணத்தில் முகம் சிவந்து தனது அறைக்குள் செல்ல அவளை விரட்டியபடியே பின்னால் ஓடி வந்தனர் மரகதவல்லியும், பத்திரைத் தேவியும்.

ஆனால், வானவல்லி தனது தோழிகளிடம் சிரித்து விளையாடினாலும், அவளது மனதில் தோன்றிய அச்சத்தால் அவள் அவ்வபோது நிலைகுலையவே செய்தாள். ‘என் மனதில் தோன்றும் படி எந்தவொரு அபாயமும் நேரக்கூடாது’ என அவள் மனதிற்குள்ளே கடற் தெய்வமான மணிமேகலை’யிடம் மனமுருகி வேண்டவே செய்தாள்.

ஆனால், அவள் அச்சத்தையும் கடந்த பயங்கரமான நிகழ்வுகள் இனி அரங்கேறப்போவதை அவளது பேதை மனம் அறிந்திருக்க வாய்ப்பில்லை தான்.

# 10. வி தி செய்த சதி

வைதீகர் பாகவதன், உபதலைவன் திவ்யன் மற்றும் அவனது நண்பன் விறல்வேல் புறப்பட்ட பாய்மரக்கலம் மாலை நேரம் ஒரு சாமத்திற்கு முன்பே நாகத்தீவை அடைந்திருந்தது. மரக்கலத்திலிருந்து இறங்கிய வைதீகர் பௌத்தர்களை அழைத்து மத வாதம் புரிய அனுராதபுரம் கிளம்பினார். அதுவரை பாதுகாப்பாக அழைத்து வந்த உப தலைவனுக்கும், உப தளபதிக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு புறப்பட்டுவிட ஆர்வமடைந்த திவ்யன் தனது நண்பனிடம் ‘‘வா விறல்வேல், நீ ஆசைப்பட்டது போன்று இன்றும் நாளையும் இந்த அழகுத் தீவுகளைச் சுற்றிப்பார்த்து விட்டு பிறகே கிளம்பலாம்’’ என்று கூறிக்கொண்டே அவனை அழைத்துப் பயணிகள் தங்குமிடத்திற்கு மரக்கலத் தலைவனிடம் வழி கேட்டான்.

திவ்யன் ஏதேதோ கூற அவை எவற்றிலும் ஆர்வமின்மையையும், விறல்வேலின் முகத்தில் காணப்பட்ட கவலை சாயலையும் கண்டவன், ‘‘விறல்வேல், நாகத்தீவுகளைக் காண என்னைவிட நீதான் பெரும் ஆர்வத்தில் கிளம்பினாய். ஆனால் இப்போது உனது முகத்தில் மகிழ்ச்சியின் சாயல் சிறிது கூடக் காணவில்லையே?’’ என வினவினான்.

தனது கேள்விகளுக்கு எந்தவொரு மறுமொழியையும் கூறாமல் அவனது மனம் எங்கோ சஞ்சரித்துக் கொண்டிருப்பதைக் கண்ட திவ்யன், ‘‘விறல்வேல், கவனத்தை எங்கே செலுத்திக் கொண்டிருக்கிறாய். நான் மட்டுமே பேசிக்கொண்டு வருகிறேன். நீ எதுவும் பேசாமல் மௌனமாகவே வருகிறாய், உனக்கு என்ன ஆயிற்று நண்பா? உடல்நிலையில் ஏதேனும் கோளாறா?’’ என வினவினான்.

‘‘உடலுக்கெல்லாம் எந்தப் பிரச்சனையும் இல்லை’’ என்றான் விறல்வேல்.

‘‘அப்போது மனதிற்கு என்ன பிரச்சனை என்று கூறு?’’ இந்த முறை அதிகாரத்துடன் திவ்யனின் சொற்கள் வெளிப்பட்டன.

“அங்கொருத்தி நம்மை எண்ணியே கவலைப்பட்டுக் கொண்டிருப்பாள். பிறகெப்படி என்னால் இங்கு மகிழ்ச்சியாய் இருக்க இயலும்!” என்றான் வருத்தத்தோடு.

“சகோதரி வானவல்லியைப் பற்றியா குறிப்பிடுகிறாய்?”

“ஆமாம் திவ்யா. வானவல்லியே தான்! நாம் கடற்பயணம் மேற்கொள்வதில் அவளுக்கு எந்த உடன்பாடும் இல்லை”

“அதை அவள் கூறினாளா?”

“இல்லை. அவள் எந்த மறுப்பும் கூறாமல் திலகமிட்டு புன்சிரிப்போடு தான் அனுப்பிவைத்தாள். ஆனால் அவளது கவலையை நான் அறிந்துகொண்டேன்”

“பெண்கள் என்றாலே பிரிவைப் பற்றிய கவலை அவர்களுக்கு மிகுந்தே காணப்படும். இது இயற்கை. நீ இது பற்றி அதிகம் கவலை கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை!”

“ஆனால், மற்றப் பெண்களைப் போன்று பிரிவைப் பற்றி வானவல்லி பெரிதும் கவலை கொண்டதில்லை. தெளிவான அறிவுடன், தீர்க்கமான முடிவெடுக்கும் திறன் உள்ளவள் தான் வானவல்லி. அவள் எதைப்பற்றியாவது கவலை கொள்கிறாள் எனில் அதில் நிச்சயம் அர்த்தமிருக்கும்” எனக் கூறிக்கொண்டே வந்த விறல்வேல் மரக்கலத் தலைவனை அழைத்து விரைவில் மரக்கலம் புகாரை நோக்கிச் செல்ல ஆயத்தமாகட்டும். அதற்கான ஏற்பாடுகளை விரைந்து செய்” எனக் கட்டளையிட்டான்.

விறல்வேலின் திடீர் உத்தரவைக் கேட்டுத் திகைத்த திவ்யனிடம் “நாம் இருவரும் உடனே புகாரை நோக்கிக் கிளம்புகிறோம்!” என்றான்.

அதைக்கேட்ட திவ்யன், “நாம் ஏன் உடனே புறப்பட வேண்டும்? அதற்கான அவசியம் இப்போது என்ன நேர்ந்துவிட்டது?” என வினவினான்.

பதிலுக்கு விறல்வேல், “வானவல்லி நம் இருவரின் வருகையை எதிர்பார்த்தே அங்குத் தவித்துக்கொண்டிருப்பாள். அவளைத் தவிக்க வைத்துவிட்டு நாம் இருவரும் மகிழ்ச்சியுடன் இங்கே ஊர் சுற்றுவது எனக்குச்

சரியென்றுப் படவில்லை. ஆகவே நாம் விரைவில் புறப்படுகிறோம்'' என்று மௌனமானவன் சிறுது நேரம் கழித்து ‘‘திவ்யா, வானவல்லிக்கு ஏற்பட்டிருக்கும் கவலை என்னைப் பற்றியது இல்லை. உன்னைப்பற்றியது தான்!'' என்றான்.

திவ்யனின் பார்வையிலிருந்தே அவனது கேள்வியைப் புரிந்து கொண்ட விறல்வேல், ‘‘நான் செல்வதில் அவளுக்கு உடன்பாடு இல்லாதிருந்தால் என்னைப் பயணிக்கவே அனுமதித்திருக்க மாட்டாள். தடுத்திருப்பாள்! அண்ணனுடன் சென்று அவரைப் பத்திரமாக அழைத்து வா என்ற பொருளில் தான் அவள் எனக்குத் திலகமிட்டு அனுப்பிவைத்தாள்'' என்றான்.

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு பேசிய திவ்யன், ‘‘விறல்வேல், நீ கூறுவதை நான் ஒப்புக்கொள்கிறேன். உடனே நாம் கிளம்புவோமாக!'' என்று புறப்பட ஆயத்தமானான்.

உடனே நாகத் தீவிலிருந்து புகாரை நோக்கி புறப்பட்டுவிட்ட திவ்யன் மற்றும் விறல்வேலுக்கு வரும்போது அமைதியாக இருந்த குணக்கடல் இப்போது சீறிக்கொண்டு, கொந்தளிப்புடன் நிலையில்லாமல் ‘ஊ’ என்ற பேய்க்காற்றுடன் இருந்தது ஆச்சர்யத்தை அளிக்கவே இது பற்றிக் கப்பல் தலைவனிடம் விசாரிக்கலாம் என்று மரக்கலத்தின் உள் தளத்திலிருந்து மேல் தளத்திற்கு வந்த இருவருக்கும் பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. மேல் தளத்தின் ஒருபுறம் நிரப்பட்டிருந்த வாசனைப் பொருளான கற்பூரத்தைக் கண்டவன் மரக்கலத்தலைவனிடம் விசாரிக்க ‘‘முதன்மை அமைச்சர் கொண்டு வரச்சொல்லி உத்தரவிட்டிருந்தார்!'' எனக் கூற திவ்யன் ஏதும் கேட்காமல் மாறிவிட்ட குணக்கடலின் சூழ்நிலை பற்றி விசாரிக்க ஆரம்பித்தான்.

அதற்கு அவன் ‘‘தென் மேற்குப் பருவக்காற்று வீசத்தொடங்கி விட்டது தலைவரே. ஆதலால் தான் கப்பலும் துடுப்புப் போடாமலே காற்றின் விசையில் புகாரை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது. இந்த வேகத்திலே காற்று வீசினால் நாம் இன்னும் ஒரு சாமப் பொழுதிற்குள் புகாரை அடைந்து விடுவோம்'' என்றான் மகிழ்ச்சியோடு.

குணக்கடலின் கீழ்த்திசையில் தொடுவானத்தில் மேகம் இருட்டிக் கொண்டு வந்ததைக் கவனித்த விறல்வேலிடம், “புயல் ஒன்று உருவாகிக் கொண்டு இருக்கிறது. இன்னும் ஓரிரு நாளில் வலு பெற்றுக் கரையை நோக்கி நகரத் தொடங்கிவிடும். அதன் வெளிப்பாடு தான் கடலில் கொந்தளிப்பு அதிகமாக உள்ளது” என்றான். மூவரும் தொடுவான கீழ்த்திசையில் புயல் உருவாகிக்கொண்டிருந்ததைக் கவனித்துக் கொண்டிருந்த போது மரக்கலத்தில் இடி விழுவது போன்று தொப்பென்ற சத்தம் கேட்டது. கப்பலில் திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியால் மூவரும் கீழே விழுந்துவிட்டனர்.

“உச்சி வானில் சாரல் வீசும் அளவிற்குக் கூட மேகம் திரளாத போது கப்பலில் எப்படி இடி விழுந்திருக்கும்?” எனத் திவ்யன் சிந்தித்துக்கொண்டிருக்கும் போதே “ஆபத்து! ஆபத்து! நம் மரக்கலத்தின் மீது வேறொரு மரக்கலம் மோதிவிட்டது. சேதமடைந்த நம் மரக்கலத்தினுள் தண்ணீர் புகுந்து கொண்டிருக்கிறது” எனக் கப்பல் மாலுமிகள் எழுப்பும் அபயக்குரல் இருவருக்கும் கேட்டது. அனைவரும் அங்கும் இங்கும் அபயக்குரலோடு ஓடிக்கொண்டிருந்தனர்.

உப தலைவன் திவ்யன், அவனது தளபதி விறல்வேல், கப்பல் தலைவன் மூவருக்கும் மேற்கொண்டு சிந்தித்திருக்கக் கூட வாய்ப்பு வழங்கப்படவில்லை. இவர்களின் மரக்கலத்தின் மீது மோதிய பெரிய மரக்கலத்திலிருந்து ஒரு தீப்பந்தம் ஒன்று பறந்து இவர்களை நோக்கி வந்தது.

பறந்து வந்த தீப்பந்தத்தைக் கண்ட மரக்கலத் தலைவன் திவ்யன் மற்றும் விறல்வேலின் கைகளைப் பற்றி இழுத்துக்கொண்டு மரக்கலத்தின் மற்றொரு கோடிக்கு ஓடினான்.

தீப்பந்தம் பறந்து வந்ததை மட்டுமே மூவரும் கவனித்தனர். அது விழுந்தது, அவ்வளவுதான். மரக்கலத்தில் ஒருபுறம் நிரப்பட்டிருந்த கற்பூரம் குபீரென்று தீப்பற்றிக் கொண்டது. மூவரும் தப்பிக்க வழி எங்கேனும் உள்ளதா என எண்ணிக்கொண்டிருந்த போதே மூவரையும் நெருப்பு சூழ்ந்து மரக்கலம் வெந்து கொண்டிருந்தது. எரியும் நெருப்புச் சுவாலைகளைத் தாண்டினால் தான் கடலில் குதித்தாவது மூவரும் தப்பிக்க முயற்சிக்கலாம் என்ற நிலையில் முன் அனுபவங்களால் சுதாரித்த மரக்கலத் தலைவன் அருகிலிருந்த குடிநீர்க்

கலத்தைச் சுட்டிக்காட்டி ‘‘நான் இதனைச் சாய்க்கிறேன். நெருப்பு அணைந்து உருவாகும் பாதையைப் பயன்படுத்திக் கடலில் குதித்துவிடுவோம். நான் எப்படித் தாவுகிறேனோ அப்படியே என்னைப் பின்தொடர்ந்து குதியுங்கள்’’ என்று கட்டளையிட்டபடியே நீர்க் கலத்தை உருட்டினான். நீர்க்கலத்திலிருந்து வெளியேறிய நீர் பாய்ந்தோடி தற்காலிகமாக நெருப்பை அனைத்து சிறு பாதையை உருவாக்க மரக்கலத் தலைவன் ‘‘இது ஒன்றே தப்பிக்க வழி. என்னைப் பின்பற்றியே குதியுங்கள்’’ என்றபடியே நெருப்பு அணைந்திருந்த இடங்களில் கால் வைத்துக் கடலில் குதித்தான்.

விறல்வேல் திவ்யனிடம் ‘‘நீ முதலில் குதி’’ என்றான்.

தீ சுவாலைகள் மீண்டும் பரவுவ ஆரம்பித்ததைக் கண்ட திவ்யன், ‘‘விறல்வேல், நீ முதலில் செல்.’’ என்றான்.

‘‘உன்னை விட்டு நான் எங்கும் தனியாகச் செல்லமாட்டேன். வா இருவரும் சேர்ந்தே குதிக்கலாம்’’ என விறல்வேல் கூற, இருவரும் ஒரே நேரத்தில் இந்தக் குறுகிய பாதை வழியாகத் தப்பிக்க இயலாது. ஒருவர் பின் ஒருவராகத் தான் செல்ல இயலும். ஆகவே நீ முதலில் இங்கிருந்து தாவு’’ என்றான்.

விறல்வேல் அவனைக் கோபத்தோடு பார்க்க, ‘‘இது உனது படைத்தலைவனின் கட்டளை, ஆகவே விரைந்து நிறைவேற்று’’ என்றான் திவ்யன்.

திவ்யனிடம் விறல்வேல், நீ வந்தால் மட்டுமே நான் இங்கிருந்து செல்வேன். அதுவரை உனக்காக நான் காத்திருப்பேன்’’ எனச் சொல்ல, பதிலுக்குத் திவ்யன் ‘‘நான் நிச்சயம் திரும்புவேன்’’ எனக்கூற திவ்யனைப் பிரிய மனமின்றி அவனது கட்டளைக்குப் பணிந்து மரக்கலத்திலிருந்து தாவிக் குதித்தான்.

விறல்வேல் மரக்கலத்திலிருந்து தாவி எழும்பி விட்டான். அவன் முன்பு கேட்டது போன்றே அதே இடி விழும் படியான பெரும் சத்தம் எழுந்தது. ‘‘திவ்யா’’ என்று கதறியபடியே மரக்கலத்தை நோக்கி திரும்பிப் பார்த்தான்.

மரக்கலம் நொறுங்கி தண்ணீருக்குள் அமுங்க, விறல்வேலும் குணக்கடலில் தொப்பென்று விழ நேரம் சரியாக இருந்தது.

தண்ணீருக்குள் விழுந்தவன் நீந்தி மேற்புறம் வந்தான். சற்று தொலைவில் சற்று முன் குதித்த மரக்கலத் தலைவனின் தலைத் துண்டிக்கப்பட்டு மரக்கலத்திலிருந்து கீழே தள்ளிவிடப் படுவதைப் பார்த்த விறல்வேல் மிரண்டு விட்டான்.

தான் சத்தமெழுப்பித் தன்னைக் காட்டிக் கொண்டாலும் தனக்கும் அதே கதிதான் என்பதை உணர்ந்தவன், அமைதியாக உடைந்த மரக்கலத் துண்டுகளில் தன்னை மறைத்தபடியே தனது ஆருயிர் நண்பன் திவ்யனைத் தேட ஆரம்பித்தான்.

உடைந்த மரக்கலத் துண்டுகளுக்கிடையில் திவ்யனைத் தேடிய விறல்வேலுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அவனது வீரவாள் மட்டுமே நொறுங்கிக் கிடந்த மரக்கலத் துண்டுகளுக்கிடையில் அகப்பட்டது. அவனைக் காணவில்லை. வாளை எடுத்துக்கொண்ட விறல்வேல் அழுதபடியே அங்கும் இங்கும் தேட மீண்டும் அந்த மோதிய பெரிய மரக்கலம் இவனை நோக்கி வர ஒரு உடைந்த மரக்கலப் பாகத்தைப் பற்றியபடியே தண்ணீருக்குள் மூழ்கி மறைந்து கொண்டான்.

அப்போது எழுந்த ஒரு பெரும் அலை அவன் பற்றியிருந்த மரக்கலத் துண்டோடு அவனைத் தூர அடித்துச் சென்றது. தனது நண்பன் திவ்யனுக்கு என்ன கதி ஏற்பட்டதென்பதை அறியாமல், நொந்த மனதோடு எங்கு எதனை நோக்கி நீந்துவது என அறியாதவனாய் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தவனுக்கு மாலையில் மறையப்போகும் பரிதி வழிகாட்டியது.

பரிதி மறைவதைக் கண்டவன் இப்படித்தானே தனது வாழ்வும் இந்தக் குணக் கடலிலே அஸ்தமனமாகப் போகிறது என எண்ணினான். அஸ்தமனமாகப் போகும் பரிதி திடீரென ஞானோதயத்தை வழங்கியது. குணக்கடல் தமிழகத்தின் கிழக்குத் திசையில் உள்ளது. குணக்கடலின் மேற்குத் திசையில் சோழ தேசம் இருக்கிறது என்ற சிந்தனையில் மேற்கில் மறையப் போகும் பரிதியை நோக்கி நீந்தத் தொடங்கினான். பரிதி மறைந்த சில நேரங்களிலெல்லாம் தூரத்தில் கலங்கரை விளக்கு பளிச்சிடத் தொடங்க,

சிறிது நம்பிக்கை பெற்றவனாய் அதனை நோக்கி உடைந்த மரக்கலத்தின் பாகத்தின் உதவியால் மனம் தளராமல் நீந்திய விறல்வேலுக்குத் தென் மேற்கு கடற்காற்றினால் உருவான கடலலைகளும் உதவித் தான் இருக்க வேண்டும். அப்படி உதவவில்லை என்றால் அவனால் அவ்வளவு தொலைவை எப்படி நீந்தியே கடந்திருக்க இயலும்?

விறல்வேலும் அப்போது முழுதாக நம்பினான். தன்னைப் போலவே தன் நண்பனுமான திவ்யனும் எங்காவது கரையை நோக்கி, கடலில் நீந்திக் கொண்டிருப்பான் என. அவனைச் சந்திக்கப் போகும் பேரார்வத்தில் கிடைத்த வலிமையில் மனம் தளராமல் விரைவாக நீந்திக் கொண்டிருந்தான்.

விறல்வேல் எண்ணியது போன்றே வானவல்லியும் இவர்களது கடற்பயணத்தை எண்ணியே கவலைப் பட்டுக் கொண்டிருந்ததனால், உணவேதும் உட்கொள்ளாமல் இவர்களின் வரவையே எண்ணி வழிமேல் விழி வைத்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். வானவல்லியின் செயலைக் கண்ட சோழப் படையின் தலைவரான, சேனாதிபதி பெருமறவர் மகேந்திர வளவனார் அவளிடம் உனது கவலை அர்த்தமற்றது, அவர்களுக்கு ஏதும் நேராது என ஆறுதல் கூறியும் எந்தப் பயனும் இல்லை.

பொழுது புலர்ந்து இரு நாழிகைப் பொழுது கடந்திருக்கும். வானவல்லி வசிக்கும் மாளிகையின் உப்பரிகைச் சாரத்திலிருந்து விறல்வேல் தூரத்தில் வந்ததைக் கண்ட மரகதவல்லி, ‘‘அக்கா, தலைவர் வந்துவிட்டார்!’’ என்றாள் மகிழ்ச்சியுடன்.

தலைவர் வந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டதுதான் தாமதம், ‘‘அவள் முகத்தில் இவ்வளவு நேரம் காணப்பட்ட துயரச் சாயல்கள் எல்லாம் விலகி உற்சாகமடைந்து முகம் பொலிவு பெற்றுவிட்டது. அவளது முகப் பொலிவைக் கண்ட பின்னே வளவனாரும், வானவல்லியின் தாயாரும் பெரும் நிம்மதி அடைந்தனர்.

விறல்வேலைக் கண்ட பின்னர் அதிர்ச்சியடைந்த வானவல்லி கேட்ட முதல் கேள்வி, ‘‘அண்ணா எங்கே? தாங்கள் மட்டும் தான் வருகிறீர்கள்?’’ என்பதுதான்.

அவள் திவ்யனைப் பற்றிக் கேட்டவுடனே விறல்வேலுக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. ஏனெனில், அவனும் நிச்சயம் தன்னைப்போலவே நீந்தி கரை சேர்ந்திருப்பான் என்றே எண்ணிக்கொண்டிருந்தான். அதிர்ச்சியுடன் வினவினான் “திவ்யன் இன்னும் வீடு வந்து சேரவில்லையா?” என்று.

விறல்வேலும், வானவல்லியும் பேசிக்கொண்டிருந்த போது அங்கு வந்த வானவல்லியின் தந்தை வளவனார் மற்றும் தாயார் இருவரும் விறல்வேல் இருந்த கோலத்தைக் கண்டு அதிர்ச்சியுடன் அவனது கருகிய தலைமுடிகள், கைகளில் ஏற்பட்டிருந்த நெருப்புக் காயம், அவனது சோர்ந்த நிலை பற்றிக் கேள்வியெழுப்பினர்.

முதலில் நடந்ததைக் கூறத் தயங்கிய விறல்வேல், பின்னர் வேறு மார்க்கமின்றி நடந்த நிகழ்வுகளைக் கண்ணீருடன் கூறி முடித்தான். திவ்யன் மரக்கல தாக்குதலில் சிக்கிக்கொண்டு விவரம் தெரியாமல் ஆனது பற்றிக் கேட்ட வானவல்லி மூர்ச்சையுற்றாள்.

மரக்கல விபத்தில் அகப்பட்டுக் காணாமல் போன திவ்யன் இன்று வருவான், நாளை வருவான் என எதிர்பார்த்தபடியே சில திங்கள் கடந்துவிட்டது. ஆனால், அவன் திரும்பியபாடில்லை.

தனது மகனை இழந்து விட்ட சோழ சேனாதிபதியான வளவனாரும், பதவியைத் துறந்துவிட்டு எதிலும் நாட்டம் கொள்ளாமல் துறவி போலவே ஆகிவிட்டார். பதினான்கு வருடம் மட்டுமே மகனைப் பிரிந்த ஜனக மகாராஜனே புத்திர பாசத்தில் உயிரை விட்டுவிட, அந்தப் புத்திரப் பாசம் வளவனாரையும் கவலையில் உலுக்க அவர் என்ன செய்வார் பாவம்! சோழ தேசம் முழுவதும் கம்பீரமாக வளம் வந்த மனிதர், மனம் ஒடிந்து போய்ப் புகாரிலேயே தங்கிவிட்டார்.

திவ்யன் மரக்கல நெருப்போடு வெந்துவிட்டானா? அல்லது குணக்கடலோடு மூழ்கி விட்டானா? என அறியாமலே அனைவரும் தவித்துக்கொண்டே அவனுக்காகக் காத்திருந்தனர். ஆனால் மாதங்கள் கழிய கழிய அவர்கள் அனைவருக்கும் ஏமாற்றமே எஞ்சியது.

விறல்வேல் பலவாறு முயன்றும் அவனது பாய் மரக்கலத்தைத் தாக்கியவர்கள் யார்? அவனது மரக்கலத்திற்குத் தீ வைத்தவர்கள் யார்? என எதையுமே கண்டறிய இயலவில்லை.

திவ்யனின் குடும்பத்திற்கு விறல்வேலால் எத்தகைய ஆறுதலையும் அளிக்க இயலவில்லை. ஏனெனில், திவ்யனின் இழப்பு அவனையும் வருத்திக் கொண்டிருந்தது. இந்தச் சூழலில் திவ்யன் வசித்த உபதலைவன் பொறுப்பு விறல்வேலைத் தேடி வந்தது. அவனும் ஏற்றுக் கொண்டான். ஆனால், விறல்வேலுக்கு உண்மையான சோதனை அதன் பிறகே வானவல்லி உருவத்தில் தோன்றியது.

விறல்வேல் திவ்யனின் பதவியைப் பெற்றுக்கொண்டதில் தனது அதிருப்தியை முழுவதுமாக வெளிப்படுத்தினாள், வானவல்லி. உங்களோடு பயணம் செய்த நேரத்தில் தான் அண்ணனுக்கு ஆபத்து நேர்ந்திருக்கிறது. அதிலும், அப்போது அவருடன் நீங்கள் மட்டும் தான் இருந்திருக்கிறீர்கள். தாங்கள் இப்போது அவரது பதவியை ஏற்றுக்கொண்டால், ஒவ்வொருவரும் அவர்களது மனதில் தோன்றும் ஊகத்தை நஞ்சாக்கிக் கொட்டுவர். உங்கள் மீதே அண்ணனின் கொலைப் பழி திரும்பினாலும் திரும்பும். தந்தைக்கும் நீங்கள் அப்பொறுப்பை ஏற்றுக்கொள்வதில் உடன்பாடில்லை'' என்றாள்.

அவளுக்கு விறல்வேல் அளித்த ஒரே பதில், ‘‘யார் எதை நினைத்தாலும் அது பற்றி எனக்குக் கவலையில்லை. எனது உடலில் மூச்சு இருக்கும் வரை எனது பணியை நான் நிறுத்த மாட்டேன். எனது பணி சோழ தேசத்திற்கு விசுவாசமாக இருத்தலே! எனது நண்பன் தொடர்ந்த பணியை நான் நிச்சயம் தொடர்வேன்'' என்றபடியே அவளருகில் சென்றான்.

அவன் அருகில் வருவதைக் கண்ட வானவல்லி, ‘‘அப்போது உங்களுக்கு நான் தேவையில்லை. அந்த உபதலைவன் பதவிதான் முக்கியம். அப்படித்தானே?'' என வினவினாள்.

‘‘அப்படியில்லை வானவல்லி. எனக்கு நீயும் முக்கியம், சோழ தேசத்தின் நலனும் முக்கியம். இரண்டும் எனது இரு கண்கள்'' என்றான்.

“அப்படித்தான் உபதலைவரே! உங்களுக்கு நான் இனி தேவையில்லை. உயிரினும் மேல் என்னிடம் அன்பு செலுத்திக்கொண்டிருந்த என் தமையனை நான் இழந்தது தான் மிச்சம்” என்றபடியே அழுதுகொண்டு கிளம்பினாள் வானவல்லி.

அவள் அழுதபடியே செல்வதைப் பார்த்த விறல்வேல், மனம் தாங்காமல் அவளது கையைபிடித்து நிறுத்தி, அவளருகில் சென்று அவளது கண்ணீரைத் துடைக்கக் கையை உயர்த்தினான்.

அவன் கைகளைத் தடுத்தபடி, “இனி என்னைத் தொடாதீர்கள்” என்றபடியே அவன் பிடித்திருந்த தனதுகையை உதறினாள்.

அவள் கையை உதறியபோது, அன்று அவள் விறல்வேலுக்கு அணிந்த முத்து மாலை அறுந்து கீழே விழுந்து சிதறிய முத்துக்கள் அவனது நிலையைக் கண்டு ஏளனமாகச் சிரித்தன.

அவள் சென்றுவிட்டாள். ஆனால் அவளால் ஏற்பட்ட சோகத்தை மட்டும் விறல்வேலால் வெல்ல இயலவில்லை. அறுந்து சிதறிய முத்துகளை மட்டுமே பொறுக்கி மீண்டும் கோர்த்துவிட முடிந்தது. ஆனால் அறுந்துபோன அவளுடனான காதலை மட்டும் மீண்டும் அவனால் கோர்க்கவே இயலவில்லை.

# 11. மன ்னன் இளஞ்சேட் சென்னி

ஒளி பொருந்திய அழகிய முகத்தையும், கூர்மையான பார்வையும் நேர்த்தியாகச் செய்யப்பட்ட அணிகலன்களையும் அணிந்த புகார் நகரப் பெண்கள், அகன்ற வீட்டின் பரந்த முற்றத்தில் உலர்த்தியிருக்கும் தானியங்களையும், உணவுப் பொருள்களையும் உண்ண வரும் கோழிகளை விரட்ட தன் காதுகளில் அணிந்துள்ள முத்துகள் பொறிக்கப்பட்ட கனத்த அடிப்பாகத்தை உடைய தங்கக் குழையினை (காதணி) எறிவர். இக்குழையானது, பொன்னாலான அணிகலன்களை அணிந்திருக்கும் குழந்தைகள் நடை பயில்வதற்காகப் புரவியின்றிக் கையால் உருட்டும் மூன்று கால்களை உடைய சிறு தேரின் சக்கரத்தில் அகப்பட்டு, அச்சிறு தேர் முன்னே செல்ல அனுமதிக்காமல் தடுத்துக்கொண்டிருக்கும். இப்படித் தடைகளாக வரும் பகையே அன்றி வேறு கலக்கமுறுவதற்குக் காரணமான எதிரிகளால் வரும் பகையை அறியாத பட்டினம் தான், பூம்புகார்.

இப்படி, **விலங்கு பகை அல்லது கலங்கு பகை அறியா** பொன்னையும் பொருளையும், மண்ணையும் பெருமையாகக் கொள்ளாத சோழ தேச மக்களுக்குச் சமீப காலமாகவே பெரும் இடையூறு அவர்கள் அறியாத வண்ணம் சூழ்ந்துகொள்ள ஆரம்பித்திருந்தது.

உறைந்தையில் வாழ்ந்து வந்த சோழ மன்னன் இளஞ்சேட்சென்னி இறந்து பல காலம் ஆகியிருந்த நிலையில் முடிசூடாத அவரது புதல்வன் இளவரசன் வளவன் காணாமல் போயிருந்தான். இளவரசனின் மெய்க்காப்பாளரும், மாமனுமாகிய இரும்பிடர்த்தலையரும், உப தலைவன் செங்குவீரனும் சேர்ந்து இந்த மாபெரும் அதிர்ச்சிகரமான செய்தி குடிமக்களுக்குத் தெரிய விடாமல் தடுத்துக்கொண்டிருந்தனர்.

இளஞ்சேட்சென்னி காலத்தில் வடக்கே தேவனாம்பியாச அசோகப் பியதசி எனும் அசோகனது மௌரியப் பேரரசும், கலிங்கப் பேரரசும் சம வலிமை பெற்று விளங்கியது. கலிங்கம் வளர்ந்து கொண்டிருந்ததைக் கண்ட அசோகன் முதலில் கலிங்கத்தின் மீது கலிங்க மன்னன் எதிர்பார்க்காத நேரத்தில் போர் தொடுத்தான். இரு படைகளுக்கும் கடுமையான உயிர் சேதமும், பொருள் சேதமும் ஏற்பட்டது. ஆனால் அசோகனது படை பலம் அதிகம் என்பதால் கலிங்கப் படை முடிவில் தோற்கடிக்கப் பட்டு அசோகன் பெரும் வெற்றிப் பெற்றான். அசோகப் பியதசி முதலில் முந்திக்கொண்டு கலிங்க பேரரசனை அழிக்காமல் விட்டிருந்தால், கலிங்க மன்னனே முதலில் போர்தொடுத்து மௌரியப் பேரரசை நிர்மூலமாக்கியிருப்பான், அந்த அளவிற்கு வலிமையுடன் திகழ்ந்தனர் கலிங்கர்கள். கலிங்கத்தில் அசோகன் பெற்ற வெற்றியும், அவன் சூறையாடிய தங்கம் மற்றும் பொன் முதலிய பொருள்களும் அவனது பார்வையைத் தென்னகத்தின் மீது திரும்ப வைத்தது. முத்து பாண்டிய நாட்டிலும், பவளம் சோழ நாட்டிலும், முத்து, மணி, மிளகு போன்றவை சேர நாட்டிலும் மிகுதியாய்க் கிடைத்தன. அக்காலத்தில் பொன், முத்து, பவளம் முதலிய விலை மதிக்க இயலாத செல்வங்கள் தென்னகத்திலிருந்தே வட நாட்டிற்குத் தக்காணத்தின் வழியாகச் சென்றதனால், தென்னகத்தின் இயற்கை வளமும், பொருள் வளமும் அசோகனது பார்வையைத் தென்னகத்தின் மீது கவர்ந்து இழுக்கச் செய்தது. மேலும் வட பாரதம், ஆப்கானிஸ்தானம் முழுவதும் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்தியிருந்த அசோகன் தென்னகத்தின் மீதும் விரிவுபடுத்தி நாவலந்தீவு முழுமைக்கும் மாபெரும் சக்ரவர்த்தியாகத் திட்டமிட்டுத் தமிழகத்தின் மீதும் போர் தொடுத்தான்.

தென்னகச் சோழப் பேரரசின் வலிமையைக் குறைவாக மதிப்பிட்ட அசோகப் பியதசி சொன்ன சொல் தவறாதவர்கள் என்றும் வாய்மொழிக் கோசர்கள் எனவும் அக்காலங்களில் பெரிதும் புகழப்பட்ட வீரர்களான கோசர்களின் துணைக்கொண்டு தமிழகத்தையும் வென்று விடலாம் என்று மௌரிய எல்லைப்புற மற்றும் கோசர் படைகளை அனுப்பினான். அசோகன் நினைத்தது போலவே தனித்தனி அரசுகளாகச் சிதறியிருந்த சிறு நாடுகளை

வெற்றிகொண்டபடியே மௌரிய மற்றும் கோசர் படையினர் தமிழகத்தின் எல்லைக்குள் முன்னேறிக் கொண்டிருந்தனர்.

முதலில் துளுவ நாட்டை ஆண்டு கொண்டிருந்த நன்னன் என்பவனோடு போரிட்டு துளுவ தேசத்தை வென்றதோடு மட்டுமல்லாமல் அவனை நாட்டை விட்டு காட்டுக்குள் விரட்டி, அவனது முக்கிய நகரான பாழிக் கோட்டையை வலிமை படுத்திக்கொண்டு தென்னகத்தில் மௌரியர்கள் தங்களுக்குத் திடமானத் தளம் அமைத்துக் கொண்டனர்.

அப்போது, இளஞ்சேட் சென்னி தனது முழுப் படைப் பலத்தையும் திரட்டிக் கொண்டு மௌரியப் பேரரசின் படைகளைச் செருப்பாழி என்னும் இடத்தில் எதிர்த்துத் தாக்கினான். சோழப் பேரரசின் பெரும் படைக்குத் தலைமையேற்றிருந்த இளஞ்சேட்சென்னியின் போர் முறைக்கு ஈடு கொடுக்க முடியாமல் செருப்பாழியில் திணறியது மௌரியப் படை. மௌரியப்படையை அழித்து அவர்கள் தலம் அமைத்திருந்த பாழிக்கோட்டையையே தகர்த்து எறிந்தான் சென்னி.

மௌரியர்களை எதிர்த்த வேளையில் ஏற்பட்ட நட்பின் அடிப்படையில் அழுந்தூர் வேள் திதியனின் மகளை மணந்துகொண்டான் இளஞ்சேட்சென்னி.

குறுகிய கால இடைவெளியில் மௌரியர்களுக்கு எதிராகப் பெரும் படையைத் திரட்டியது மட்டுமல்லாது அவர்களின் எல்லைக்கே விரட்டியடித்த சென்னியின் படை பலத்தையும், தீரத்தையும் நினைத்த தென்னக குறுநில மன்னர்கள் பீதியடையத் தொடங்கினர்.

உறைந்தை அரண்மனையில் தங்கியிருந்த சோழ அரசன் இளஞ்சேட்சென்னி மீது, மலை நாட்டை ஆட்சி செய்த இருங்கோவேளுக்கும் பெரும்பகை இருந்து வந்தது. முன்பு, மலை நாட்டு சிற்றரசனான இருங்கோவேள் தனது கோட்டையில் பெரும் பொருள்களைச் சேர்த்துக்கொண்டு பதுங்கி, குடிமக்களுக்குப் பெரும் துயரத்தை விளைவித்து சேரப் பேரரசின் கீழ் இருந்துகொண்டு இளஞ்சேட்சென்னியை சீண்டிக்கொண்டிருந்தான்.

சோழ மன்னனான இளஞ்சேட்சென்னி தனது படைத்தலைவரான பெருமறவர் மகேந்திர வளவனாரை அனுப்பி இருங்கோவேளை போரில் அடக்கி அவனது கோட்டையையும் மொத்தமாக அழித்துவிடச் செய்து விட்டான். அங்கு அவன் பதுக்கி வைத்திருந்த பெரும் பொருள்களைக் கைப்பற்றி எடுத்துக்கொண்டு, மலை நாட்டு மக்கள் கட்டாயமாகச் செலுத்திக் கொண்டிருந்த வரிகளை ரத்து செய்துவிட்டான் இளஞ்சேட்சென்னி.

போரில் தோற்ற இருங்கோவேள் வேளிர் எனும் தொன்மையான குடியின் வழியில் வந்தவனாகையால், அவனை மன்னித்து மீண்டும் மலை நாட்டிற்கே சிற்றரசனாக்கி விட்டான் இளஞ்சேட்சென்னி. இளஞ்சேட்சென்னியிடம் தோல்வியடைந்த இருங்கோவேள் அவமானத்தால் தலை குனிந்து சோழ மன்னன் இளஞ்சேட்சென்னியை பழி வாங்கச் சரியான தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அக்காலத்தில் பெரும் அரசர்களாகச் சோழர், பாண்டியர், சேரர் விளங்கினாலும் தமிழகம் பொங்கர் நாடு, ஒளி நாடு, தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குட நாடு, பன்றி நாடு, கற்கா நாடு, சீத நாடு, பூழி நாடு, மலை நாடு, அருவா நாடு, அருவா வடதலை நாடு எனப் பல சிறு நாடுகளாகவே பிரிந்து காணப்பட்டது. இவற்றை வேளிர்கள், எயினர்கள், நாகர்கள், ஒளியர்கள் ஏதேனும் ஒரு பேரரசுக்குக் கட்டுப்பட்டுத் திரை செலுத்திக் கொண்டு குறுநில மன்னர்களாக ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தனர். இவர்கள் அனைவரையும் இளஞ்சேட்சென்னிக்கு எதிராகத் திரட்ட முயற்சித்துக் கொண்டிருந்தான் இருங்கோவேள். இப்படிப் பல வேளிர்கள், சேர மன்னன் பெருஞ்சேரலாதன், பாண்டியன் தென்னவன் என அனைவரும் இருங்கோவேளுக்கு ஆதரவு அளித்துக் கொண்டிருந்ததனால் அவன் இளஞ்சேட்சென்னியை எதிர்க்கத் துணிந்து, நேரடியாகப் போர்க்களத்தில் இளஞ்சேட்சென்னியை போரிட்டு வெல்ல இயலாது என்பதையறிந்து அவனை வஞ்சகமாக வீழ்த்த முயற்சித்துக் கொண்டிருந்தான் இருங்கோவேள்.

இந்த நிலையில் இளஞ்சேட் சென்னியின் மனைவி கருவுற்ற வேளையில் நோய் கொண்டு இறந்து போனார். மன்னர் இறந்தபிறகுதான் இளவரசன் வளவன் பிறந்ததால் இரும்பிடர்த்தலையர் ஆட்சிப் பொறுப்பைக்

கவனித்துக் கொண்டிருந்தார். இரும்பிடர்த்தலையர் அழுந்தூர் வேள் திதியனின் மகன். இளஞ்சேட்சென்னியின் மைத்துனன். தகுந்த பருவம் வந்ததும் தனது மருமகன் வளவனிடம் ஆட்சிப்பொறுப்பை வழங்கிவிடலாம் என எண்ணி வளவனுக்கு அனைத்து பயிற்சிகளையும் அளிக்கச் செய்து வளர்த்துக்கொண்டிருந்தார். தகுந்த பருவமும், தகுதியும் வந்தச் சூழ்நிலையில் தான் அரியணை ஏறத் தயாராக இருந்த இளஞ்சேட்சென்னியின் மகன் வளவன் இருப்பிடம் தெரியாமல் காணாமற்போயிருந்தான்.

அரியணை ஏறப்போகும் சமயத்தில் இளவரசன் காணாமற் போயிருக்கும் நிலை சோழ குடிகளுக்குத் தெரிந்தால் அவர்கள் நிச்சயம், வேளிர்கள் மேல் சந்தேகங்கொண்டு அவர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவர். அப்படி அவர்கள் கிளர்ந்தெழும் பட்சத்தில் சேர மற்றும் பாண்டியனின் படைகள் வேளிர்களுக்கு ஆதரவாகக் களம் இறங்கும். அவர்களால் சோழ குடிகளின் கிளர்ச்சி விரைவில் அடக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் மாற்றரசனுக்கும் சோழ நாடு அடிமைப்பட நேரிடும். பிற தேசங்களுக்கு அடிமைப்பட்டுவிட்டால், மீண்டும் மீண்டு எழுவதும் கடினம் என்பதை நன்கு உணர்ந்திருந்தார் இரும்பிடர்த்தலையர். இதை அனைத்தையும் கருத்தில் கொண்டே சோழ அரசைக் கவனித்துக்கொண்டிருந்த இரும்பிடர்த்தலையரும், அவருக்கு உதவிக் கொண்டிருந்த செங்குவீரனும் இச்செய்தி சோழ தேசத்தில் பரவ விடாமல் தடுத்துக்கொண்டும், இரகசியமாகச் சோழ இளவரசனை அதிவேகமாகத் தேடும் முயற்சியிலும் இறங்கியிருந்தார்கள்.

குழப்பம் ஏற்படுத்தும் பொருட்டுப் புகாருக்குள்ளும், மற்ற ஊர்களுக்குள்ளும் மாறுவேடத்தில் புக முயன்ற இருங்கோவேளின் ஒற்றர்களைக் கண்டறிந்து இரகசியமாகச் சிறைப்படுத்திக் கொண்டிருந்தான் செங்குவீரன்.

பெருமறவர் மகேந்திர வளவனார், இளஞ்சேட்சென்னியின் படைத்தலைவரும், ஆலோசகரும் இவர்தான். போர்க்களத்தில் இளஞ்சேட்சென்னியின் படையை எதிர்த்து எவர் ஊடுருவ முயன்றாலும் இவரது வேலுக்கும், வாளுக்கும் மறுமொழி கூறிய பின்பே கடக்க இயலும். பெரும் படையின் முன் வரிசையில் நிற்கும் அனைவரது கைகளிலும் ஒன்றில்

கேடயமும் மற்றொன்றில் நீண்ட வாளுடனும் தான் போரிடுவர். ஆனால் மகேந்திர வளவனார் மட்டும் ஒரு கையில் நீண்ட வேலையும், மற்றொரு கையில் நீண்ட வாளையும் கொண்டு போரிட்டு எதிரிகளுக்குப் பெரும் சிம்ம சொப்பனமாகத் திகழ்பவர்.

பெரும்படைக்குத் தலைமைத் தாங்கி வரும் இளஞ்சேட்சென்னி எனும் புலி புலிக்கொடி பறக்க புரவித் தேரில் அமர்ந்துகொண்டு எதிரிப்படையைச் சின்னாபின்னப் படுத்தினால், அதற்கு முன் எதிரிகளுக்குத் தனது கூர்மையான பார்வையாலே பெரும் பீதியை ஏற்படுத்தி நடுங்க வைக்கும் சிம்மமாகத் திகழ்ந்து படையை முன் வரிசையில் நின்று வழி நடத்திச் செல்பவர் பெருமறவர் மகேந்திர வளவனார். அவரது எதிரிகள் கூட மறந்தும் மகேந்திர வளவன் என்று ஒருமையில் அழைக்கத் துணியார். கனவிலும் பெருமறவர் மகேந்திர வளவனார் என்றே பெரும் மரியாதையுடன் நினைப்பர்.

அகன்ற முகத்தில் வீற்றிருக்கும் பெரிய தடித்த மீசையும், மார்பு முழுக்கத் தாங்கியிருக்கும் விழுப்புண்களின் தழும்புகளும் வளவனாரைக் கண்ட மாத்திரத்திலேயே அவர் மீது பெரும் மரியாதை கலந்த பயத்தை ஏற்படுத்திவிடும் தன்மையுடையது. எது நடந்தாலும் கலங்காமல் போரிட்டு, போரின் முடிவையே தனது தீரத்தினால் மாற்றிவிடும் தன்மையுடையவர் தான் வளவனார்.

பண்டைய சங்கத் தமிழகத்தில் ஒரு வழக்கம் நடைமுறையில் இருந்தது. சோழ, சேர, பாண்டியர் இவர்களில் யார் பெரும் பலத்துடன் உள்ளனரோ அவர்களை மற்ற இருவரும் சேர்ந்து தாக்கி பலவீனப்படுத்தி விடுவர். அப்படியே இவர்கள் மூவரும் அமைதியாக ஒற்றுமையாக வாழத் துணிந்தாலும் இவர்களுக்குத் திரை செலுத்திக் கொண்டிருக்கும் குறுநில மன்னர்களான வேளிர்கள் போரைத் தூண்டிவிட்டு, அதில் அவர்கள் பயன் பெற்று குளிர் காய்வர். அப்படியே மூவேந்தர் தவிர்த்து வேறு யாரேனும் தலையெடுக்க முயற்சி செய்தாலும் மூவேந்தர்களும் சேர்ந்து போர் தொடுத்து அழித்துவிடுவர். இப்படித் தான் தமிழகம் பலவாறு பிரிவுபட்டு தமக்குள் ஓயாது மாறி மாறி போரிட்டுக் கொண்டு தமிழகத்தின் வளத்தை அழித்துக்

கொண்டிருந்தனர். இந்த ஒற்றுமையின்மையைக் கண்ட பின்பே அசோகன் தமிழகத்தின் மீது போர்தொடுத்திருந்தான்.

இந்த நிலையை மாற்ற விரும்பியே இளஞ்சேட்சென்னி அனைத்து நாடுகளையும் ஒன்றினைக்க முயற்சி செய்தார். அந்த சூழலில் தான் நோய்வாய்ப்பட்ட இளஞ்சேட்சென்னி மரணித்தான்.

அதன்பிறகு இரும்பிடர்த்தலையர் சென்னியின் மகனைப் பாதுகாப்பாக வளர்த்தார். ஆனால், அந்தப் பாதுகாப்பையும் மீறி இளவரசன் மறைந்து போயிருந்தது அனைவருக்கும் அரசியல் சிக்கலை ஏற்படுத்தியிருந்த்து.

சோழ இளவலை விரைவில் கண்டறிய வேண்டிய நெருக்கடி, நண்பன் திவ்யனைக் கொன்றவர்களைக் கண்டறிந்து அழித்து, பெருமறவர் மகேந்திர வளவனாரை சமாதானம் செய்து வானவல்லியைக் கரம்பிடிக்க வேண்டிய நிலை என அவன் பல முடிச்சுகளை ஒரே நேரத்தில் அவிழ்க்க வேண்டிய நெருக்கடியில் சிக்கிக்கொண்டிருக்கும் போது, புதிதாகப் புகார் நகரத்திற்கு ஏற்பட்டிருக்கும் காளனின் தொந்தரவைப் பெரும் இடைஞ்சலாகவே உணர்ந்தான் செங்குவீரன். பல குழப்பங்களுக்கிடையில் அந்தப் பௌர்ணமி வைகறைப் பொழுதில் சம்பாபதி வனத்தில் புரவியில் அதிவேகமாகச் சென்றுகொண்டிருந்தான் விறல்வேல்.

திடீரென்று சம்பாபதி வனவோரமாக இருந்த மாளிகையின் சாளரத்தில் விளக்கு ஒன்று சஞ்சரிப்பதைக் கண்டவன் ஒதுங்கிக் கவனிக்கலானான்.

**அடிக்குறிப்பு**

1. உறைந்தை– உறையூர் (சங்க காலத்தில் உறையூருக்கு உறைந்தை என்று தான் பெயர்.
2. கோசர்கள் எனப்படுபவர்கள் கோவா அருகிலுள்ள கோலாப்பூரைச் சேர்ந்தவர்கள். சௌராஷ்டிர தேசத்தில் கிர்னார் நகரத்திற்கு அருகில் பாறையொன்றில் அசோகன் எழுதிய பிராமி கல்வெட்டில் இவர்களை சத்திய புத்திரர் எனக் குறிப்பிட்டுள்ளான்.

அசோகர் சாசனம் (Edict 2)

3. சங்க இலக்கியங்களில் குறிக்கப்படும் வட்டாற்றுப் போர் மெளரிய கோசர் படைக்கும் மோகூர்த் தலைவனுக்கும் நடைபெற்ற போர் என்றும் செல்லூர்ப் போர் அழுந்தூர் வேள் திதியனுக்கும் மெளரிய கோசர் படைக்கும் நடைபெற்ற போர் என்று தனது தென்னாட்டுப் போர்க்களங்கள் எனும் நூலில் குறிப்பிடுகிறார் பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார்.
4. செருப்பாழிப் போர் என்பது இளஞ்சேட்சென்னிக்கும் சில சிற்றரசர்களுக்கும் இடையில் நடைபெற்ற போர் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கூறினாலும், அப்போர் இளஞ்சேட்சென்னிக்கும் மெளரியப் பேரரசுக்கும் ஏற்பட்டது என்று தகுந்த ஆதாரங்களால் தனது தென்னாட்டுப் போர்க்களங்கள் எனும் நூலில் குறிப்பிடுகிறார் பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார்.
5. அசோகப் பியதசி என்பது தான் மெளரியப் பேரரசன் அசோகனின் இயற்பெயர். இந்தப் பெயரை தேவனாம்பியாச பிரியதர்ஷன் அசோகன் எனவும் கூறுபவர் உண்டு.

# 12. வன த்தில் புதிர்

இழக்கில் பரிதி உதிப்பதற்கு ஒரு முகூர்த்தப் பொழுதிற்கு மேல் இருந்த சமயம், செங்குவீரன் தன் இருப்பிடமான படகுத்துறைக் குன்றிலிருந்து கிளம்பி சம்பாபதி வனத்தினுள், நேற்றிரவு கள்வர்களுடன் நடைபெற்ற சண்டைக்களத்தைப் பார்வையிட சென்று கொண்டிருந்த போது திடீரென்று, வனத்தையொட்டிய மாளிகையின் சாளரத்தில் விளக்கு மெல்ல அசைந்து சஞ்சரிப்பதைக் கண்டான். மேலும் இப்புறமும் அப்புறமுமாக இருமுறை ஆரத்தி எடுப்பது போல அவ்விளக்கு அசைந்தது. முதலில் விளக்கொளி எதேச்சையாக நகர்வதாக நினைத்த செங்குவீரன் விளக்கொளி மூன்று முறை அப்படியும் இப்படியுமாக ஆரத்தி எடுப்பது போல நகர்வதில் எச்சரிக்கையடைந்தான்.

பொழுது புலர இன்னும் ஒரு சாமப் பொழுதிற்கு மேல் மிச்சமிருக்கும் நிலையில், மாளிகையில் யாருக்கு ஆரத்தி எடுக்கிறார்கள்? அந்தத் தனி மாளிகை வைதீகர்களுக்கு உரியதாக இருந்தாலும், இந்த அதிகாலைப் பொழுதில் ஆரத்தி எடுப்பார்களா? என்றும் அவனது மனதில் ஓடியது. அருகிலிருந்த பெரிய அரச மரத்தின் உச்சி மீது ஏறி அமர்ந்து மாளிகையின் எதிர்திசையைக் கவனமாகப் பார்வையால் ஆராய்ந்தான்.

திடீரென, மாளிகையின் விளக்கொளி மறைந்து சிறிது நேரம் கழித்து மீண்டும் சில முறை அப்புறமும் இப்புறமும் ஆடியது. எதிர்த்திசையில் தூரத்தில் புதருக்கடியில் ஒரு தீப்பந்த ஒளியும் மறைந்து மறைந்து முன்னும் பின்னும் ஆடுவதைக் கவனித்து விட்டான்.

திடீரென்று புதரிலிருந்து இரண்டு பருத்த உருவங்கள் வெளிப்பட்டன. விளக்கு அசைந்த மாளிகையை நோக்கி தீப்பந்த ஒளியின் உதவியுடன் விரைவாக நடந்து வந்த அவர்கள், செங்குவீரன் அமர்ந்திருந்த மரத்திற்கடியில் சற்று இளைப்பாற அமர்ந்தனர்.

அந்த அதிகாலை இரவில் பௌர்ணமி நிலவும் மேற்கில் மரங்களுக்கிடையில் சாய்ந்து விட்டதால் அவர்கள் அசைத்த சிறு பந்தத்தில்

இருந்து வெளிப்பட்ட வெளிச்சம் மட்டுமே செங்குவீரனுக்கு அவர்களைப் பார்க்க உதவியது. அந்தச் சிறு வெளிச்சமும் பிரகாசமாக இல்லாமல் வீசும் கீழைக் காற்றில் எப்போது வேண்டுமானாலும் அணைந்து விடுவேன் என்பதுபோலச் சிணுங்கி கொண்டிருந்தது.

சிணுங்கிய பந்தத்திலிருந்து வெளிப்பட்ட சிறு வெளிச்சத்திலிருந்து அவர்கள் இருவரும் வைதீக முனிவர்கள் போன்று இருப்பதைக் கண்டான். அந்த இருளின் சிறு வெளிச்சத்தில் அவர்களின் நீண்ட தாடி மற்றும் தொந்தி விழுந்த வயிற்றை மட்டுமே அவனால் காண முடிந்தது.

வந்தவர்களில் ஒருவன் “யாரேனும் விளக்கு வெளிச்சத்தைப் பார்த்துவிடப் போகிறார்கள் உடனே அணைத்துவிடு!” என்று கூற, மற்றவனும் சிணுங்கிக் கொண்டிருந்த தீப் பந்தத்தை மண்ணில் போட்டு காலால் மிதித்து அணைத்தான்.

‘அக்னிமீளே புரோஹிதம் யக்ஞஸ்ய தேவமிருத்விஜம் ஹோதரம் சதன தாதமம்’ என அக்னியை வணங்கும் வைதீக முனிவர்களுக்கு நெருப்பு கடவுள் போன்றது. அவர்களின் அனைத்து யாகங்களுக்கும் தீயே முதல் வழிபடு பொருள். அவர்களின் முதல் கடவுளே அக்னிதான். அந்த அக்னிதான் யாகத்தில் சேர்க்கும் அனைத்து பொருள்களையும் தேவலோகத்தில் இருக்கும் கடவுள்களுக்குக் கொண்டு சென்று சேர்ப்பதாக எண்ணி வணங்குகிறார்கள். யாகத்தின் தேவனே அக்னிதான் என்பது அவர்களின் நம்பிக்கை. ஆனால் இவர்கள் நெருப்பைக் காலில் போட்டல்லவா மண்ணில் அணைக்கிறார்கள். வைதீகர்கள் நெருப்பை ஏற்றிய பின் பல வேத மந்திரங்களை ஓதிய பிறகல்லவா அணைக்கத் துணிவார்கள். இவர்கள் உண்மையான முனிவர்கள் தானா என்று குழப்பத்துடனே, அவர்களது உரையாடல்களைக் கேட்க அரச மரத்தின் உச்சியில் இருந்து, அதிகாலை இருளைப் பயன்படுத்தி எந்தவொரு சத்தமும் ஏற்படுத்தாமல் மெல்ல இறங்கி அடிக்கட்டையில் அமர்ந்தான் செங்குவீரன்.

பெரும் அரச மரத்தின் அடியில் அமர்ந்திருந்த முனிகளுள் ஒருவன் “மலை நாட்டிலிருந்து புகாருக்கு ஒரே இரவில் பயணப்பட்டு வருவது

எளிதென்று தான் நினைத்தேன். ஆனால் இந்தப் பயணம் இவ்வளவு கடினமாக அமையுமென்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை சேந்தா'' என்றான்.

அதை ஆமோதிக்கும் வகையில் இளைப்பாறிக் கொண்டிருந்த மற்றவனும் தலையாட்டிக்கொண்டே ''ஆமாம், ஆமாம் நீ கூறுவது முற்றிலும் உண்மைதான் வேந்தா'' என்றான்.

வேந்தன், சேந்தனிடம் ''ஒவ்வொரு பகுதியிலும் உள்ள சோழ ஒற்றர்களைக் கடந்து புகார் நகருக்குள் ஊடுருவது என்பது எவ்வளவு கடினம் என்பதை இன்று தான் கண்டுகொண்டேன். யார் குடிமக்கள், யார் வியாபாரிகள், யார் ஒற்றர்கள் என்ற வேறுபாடே காண இயலவில்லை. யாரைக் கண்டாலும் ஒற்றர்கள் மாதிரியே எனக்குத் தோன்றியது'' என்றான்.

சேந்தன் உடனே வேந்தனிடம், ''பயந்தவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பார்களே, அப்படித்தான். நமக்கும் ஒவ்வொரு மனிதரும், புதரும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. நாம் இங்குச் சோழத் தேசத்திற்கு எதிராக ஒற்றர்களாக வந்துள்ளமையால் நாம் கண்ட அனைவரும் நமக்குப் பகைவர்களாகவே காட்சியளிக்கிறார்கள். நான் இதற்கு முன் பலமுறை இங்கு வந்திருக்கிறேன் வேந்தா. அப்பொழுதெல்லாம் எனக்கு இந்தச் சம்பாபதி வனக் கடவுளான சம்பாபதி தெய்வமே என்னுடன் துணைக்கு வருவதாக உணர்வேன். ஆனால் இந்த முறைதான் பயணத்தில் நான் கடும் சிரமத்தை உணர்ந்திருக்கிறேன்!'' என்று மறுமொழி கூறினான்.

பதிலுக்கு வேந்தன், ''சோழ தேசத்தின் மீது பற்று திடீரென உமக்குள் கிளர்ந்தெழுகிறது, இது மிகவும் ஆபத்தாயிற்றே சேந்தா'' என்றான்.

சேந்தன், ''அப்படியெல்லாம் எனக்கு எந்தப் பற்றும் தோன்றவில்லை வேந்தா. நான் உள்ளதைத்தான் சொன்னேன். உமக்கு மட்டும் தான் நமது மலை நாட்டுக் கோட்டையைத் தகர்த்து, நமது அரசர் இருங்கோவேளை கைது செய்தவர்கள் மீது கோபம் இருக்குமா? வேந்தா, எனக்குள்ளும் அப்படியே தான் அந்தப் பழி உணர்வு இருக்கிறது. இந்தத் தருணம் தான் அவர்களைப் பழி வாங்க ஏற்ற சமயம். இனி சோழ அரச வம்சமே தலையெடுக்க இயலாமல் அழியப் போகிறது. நமது தலைவர் அதற்கான பணிகள் அனைத்தையும் திறம்படச் செய்துவிட்டார்!'' என்று கூறியபடியே

பலமாகச் சிரித்தான் சேந்தன். அப்போது மட்டும் வெளிச்சம் இருந்திருந்தால் அவனது அந்தப் பேய் சிரிப்பில் வெளிப்பட்ட அவனது கறை படிந்த பெரிய பற்கள் வேந்தனுக்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கும். இருளில் அமர்ந்திருந்த வேந்தனுக்கு அவனது அந்தப் பெரும் சிரிப்பே சற்று அச்சத்தை உருவாக்கியது.

மரத்தின் மீதிருந்த செங்குவீரன் அந்தச் சிரிப்பில் பெரும் ஆணவமும், மகிழ்ச்சியும், நம்பிக்கையும் கலந்து வருவதை உணரவே செய்தான்.

வேந்தன், சேந்தனிடம் ‘‘உறைந்தை’’ எனக் கூற ஆரம்பித்து எதையோ சொல்ல வாயெடுத்தான்.

உறைந்தை என்ற சொல்லை வேந்தன் சொல்லக் கேட்டதும் சேந்தன், வேந்தனின் வாயைப் பொத்தினான். ‘‘சோழ தேசம் முழுவதும் செங்குவீரனின் ஒற்றர்கள் நிரம்பியிருக்கிறார்கள். ஏன், இந்த அரச மரமே கூட நாம் பேசுவதை ஒட்டுக் கேட்டு செங்குவீரனுக்கு ஒற்று சொன்னாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. ஆகவே, எங்கு நமது வாயை திறக்க வேண்டுமோ, அங்கு மட்டும் தான் நாம் வாய் திறக்க வேண்டும். கட்டுப்பாடில்லாமல் இப்படிக் கண்ட இடங்களில் உளறினால் அனைத்து திட்டமும் பாழாகிவிடும்!’’ என்று வேந்தனை கடுமையாக எச்சரிக்கை செய்தான் சேந்தன்.

சேந்தனின் பேச்சைக் கேட்டதும் வேந்தன், ‘‘இப்போது மட்டும் அந்தச் செங்குவீரன் என் முன் தோன்றினால் அவனை இந்தக் குறுவாளாலே வெட்டி சாய்த்து விடுவேன்’’ என்று சத்தமாக உணர்ச்சி வசப்பட்டு, அவனது இடையில் மறைத்து வைத்திருந்த குறுவாளை எடுத்து அதன் கூர்மையான முனையைத் தடவியபடியே கத்தினான்.

இதுவரை அவர்கள் பேசிக்கொண்டது மரத்தின் மீதிருந்த செங்குவீரனுக்குச் சற்று அரைகுறையாகவே கேட்டது. ‘இப்போது மட்டும் செங்குவீரன் என் முன் தோன்றினால் அவனை இந்தக் குறுவாளாலே வெட்டி வீழ்த்திவிடுவேன்’ என்று கத்தியது மட்டும் தெளிவாகக் கேட்டது. இந்தப் பேச்சைக் கேட்டதும் மரத்திலிருந்து இறங்கி அவர்கள் இருவரையும் வெட்டி வீழ்த்தி விடலாம் என்று சத்தமின்றி வாளை உருவினான். அவர்கள்

‘உறைந்தை’ என்று ஏதோ சொல்ல வந்தது நினைவுக்கு வந்ததும் அதில் ஏதோ மர்மம் நிறைந்திருக்கிறது. இவர்களிடமிருந்து இன்னும் அறிய வேண்டிய தகவல்கள் நிரம்பயிருக்கிறது என்று கருதியவன் மீண்டும் சத்தமில்லாமல் வாளை உறையில் வைத்துவிட்டு, அமைதியானான்.

“நமது தலைவர் நமக்கிட்டது எந்தப் பணியோ, அதை மட்டுமே நாம் பிழையின்றிச் செய்யத்துணிய வேண்டும். அவர் என்ன சொல்லச் சொல்லி நமக்குச் சொன்னாரோ அந்த வார்த்தைகளை மட்டும் நாம் சேர்க்க வேண்டிய இடத்தில் கூறிவிட்டு பின்னர் மறந்துவிட வேண்டும் என்பதை நினைவில் வைத்துக்கொள்” என்று கூறிய சேந்தன் வேந்தனை மாளிகை நோக்கி அழைத்துச் சென்றான்.

அரச மரத்தின் அடிக்கட்டை சற்று உயர வளர்ந்து பின்னே அது கிளைத்திருந்ததால், உயரத்தில் அமர்ந்திருந்த செங்குவீரனால், அவர்கள் பேசிக்கொண்டது அனைத்தையும் தெளிவாக, முழுவதுமாகக் கேட்க இயலவில்லை, வேந்தன் செங்குவீரனை வெட்டி வீழ்த்திவிடுவேன் என்று ஆவேசமாகக் கத்தியது மட்டும் அவனுக்கு நன்கு கேட்டது. எனினும் அவர்களது உரையாடல்களில் கூறிய மலைநாடு, உறைந்தை என்ற சொற்களில் இருந்து அவர்கள் மலை நாடு அல்லது உறைந்தையிலிருந்து தான் வந்திருக்க வேண்டும் என்பதை அவன் ஊகித்துக்கொண்டான். மலை நாட்டிலிருந்து வந்திருந்தால் நிச்சயம் இருங்கோவேள் தான் இவர்களை அனுப்பியிருப்பான். அப்படி அவர்கள் இருங்கோவேளிடமிருந்து கொண்டு வந்த செய்தி எதுவாக இருக்கும் என்று பலவாறு சிந்தித்த செங்குவீரன், எதையும் யூகிக்க இயலாததால் அவர்கள் எங்குச் செல்கிறார்கள் என்று தெரிந்தால் மட்டுமே அவர்கள் எங்கிருந்து வந்திருக்க இயலும் என்பதையும் அறிய முடியும் என்பதைப் புரிந்து கொண்டான்.

அவர்கள் இருங்கோவேளின் ஒற்றர்கள் தான் என்பதை உறுதி செய்து கொண்ட பின்பு அவர்களை வெட்டி வீழ்த்திவிடலாம் என்று தீர்மானித்த செங்குவீரன், இவர்களிடமிருந்து சோழ இளவரசனைப் பற்றி ஏதேனும் தகவல்கள் கிடைக்கும் என்றே பெரிதும் எதிர்பார்த்தான்.

ஆனால் அவனுள் ஒருவன் உறைந்தை என்று கூறியவுடன் மற்றவன் வாயைப்பொத்தி அடக்கியதையும் அவன் கவனிக்கத் தவறவில்லை. இவர்கள் இருவரையும் வீழ்த்திவிட்டால் இவர்கள் புகாரில் சந்திக்க வந்தவர்கள் மேலும் எச்சரிக்கை அடைந்துவிடுவார்கள் என்பதை உணர்ந்த செங்குவீரன் உறைந்தை ரகசியத்தைக் கண்டறிய வேண்டுமெனில் இவர்கள் இருவரையும் சிறிது விட்டுப் பிடித்தலே சரி என்று தீர்மானித்துக்கொண்டு முனிவர்கள் வேடம் தரித்த இருங்கோவேளின் ஒற்றர்களான சேந்தனும் வேந்தனும் அங்கிருந்து அகன்ற பின் மரத்திலிருந்து குதித்து அவர்களைப் பின்தொடராமல் வனத்தை நோக்கிச் சென்றான்.

ஆனால் உறைந்தை இரகசியத்தை மட்டும் உடனடியாக அறியாவிட்டால் பெரும் ஆபத்து நிகழப்போகிறது என்பதை அவனது உள்ளுணர்வு அவனுக்கு எச்சரிக்கை செய்து கொண்டிருந்தது.

காளனது குழுவினருக்கும், செங்குவீரனுக்கும் நடைபெற்ற சண்டைக்களத்தைப் பார்வையிடச் சென்ற செங்குவீரனுக்கு அங்கு மற்றுமொரு மாபெரும் அதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது.

அவன் பார்வையிடச் சென்ற சண்டைக் களத்தை ஏற்கெனவே பாதி விடிந்திருந்த வெளிச்சத்தையும் தனது பந்த ஒளியையும் பயன்படுத்தி வீழ்ந்து கிடந்த கள்வர்களையும், வீரர்களையும் சோதனை செய்துகொண்டிருந்தார் ஒரு வயதான சமண முனிவர்.

இறந்த கள்வர்களையும், வீரர்களையும் சுய கவனத்தை மறந்து ஒவ்வொருவராகச் சோதித்துக்கொண்டிருந்த சமண முனிவரிடம், "தற்பொழுதெல்லாம் அனைத்தையும் துறந்து சமண முனியாவது புகாரில் எளிதான காரியமாகிவிட்டதல்லவா திகம்பரரே?" என்று எதிரில் சென்றான் செங்குவீரன்.

சமண முனிவர்கள் கடுமையான ஒழுக்க நெறியைக் கடைப்பிடிப்பவர்கள். தினமும் நீராடினால் உடலிலும், நீரிலும் உள்ள கண்களுக்குத் தெரியாத உயிர்களுக்குத் தீங்கு நேரும் என்பதற்காக நீராடலையே துறக்கும் மாமனிதர்கள் அவர்கள். பல் துலக்கினால் வாயிலும் பற்களிலும் உள்ள நுண்ணுயிரிகளுக்குத் தீங்கு நிகழும் என்பதனால்

அவர்கள் பல்லையும் துலக்கமாட்டார்கள். மனதாலும், உடலாலும் எந்த உயிருக்கும் தீங்கு இழைக்கத் துணியாதவர்கள் தான் இந்தத் திகம்பரர்கள் எனப்படும் சமண முனிகள்.

மக்கள் பலர் சமண சமயத்தைத் தழுவியிருந்தாலும் அருக தேவனை வணங்கிக்கொண்டு இல்லற வாழ்வையே வாழ்வர். சமண முனி எனப்படும் திகம்பரர்கள் இருக்கும் இப்படிப்பட்ட கடுமையான விரதங்களையும் நோன்பினையும் கடைபிடிக்கும் துறவரத் திகம்பரர்களாக மாற யாரும் எளிதாகத் துணிய மாட்டார்கள். இல்லற வாழ்வில் வாழும் சமணர்கள் துறவறத்தில் உள்ள திகம்பரர்களுக்குப் பொருள் உதவிகளை வழங்கிக்கொண்டு வாழ்வர். சற்று வசதி படைத்த சமணர்கள் பெரும் பொருள் செலவில் அனைத்து ஓலைச் சுவடிகளையும் ஆள் வைத்துப் பல பிரதிகளை எழுதச் செய்து சேவை செய்வார்கள்.

ஆருகத மதம் அல்லது ஜைன மதம் எனப்படும் சமண மதக் கருத்துப்படி யார் இல்லற வாழ்வைத் துறந்து துறவறத்தை மேற்கொண்டு திகம்பரர்களாக வாழ்கிறார்களோ அவர்களே அருகதேவனின் பாதங்களைச் சரணாகதி அடைய இயலும். அதாவது துறவறத் திகம்பரர்கள் மட்டுமே வீடுபேறு அடைய இயலும். கடுமையான கட்டுப்பாடுகளை உடைய மதம் அது.

ஆதலால் இல்லறத்தை ஒழுகும் எந்தவொரு சமண மக்களும் முடிவில் துறவறத்தையே கடைபிடிப்பர்.

கடுமையான தவமிருக்கும் இப்படிப்பட்ட சமண முனிவர்கள், இறந்த உடல்களைத் தீண்ட மாட்டார்கள். ஆனால், இறந்த உடல்களைப் பரிசோதித்துக் கொண்டிருந்த சமணத் துறவியிடம் ‘‘இப்போதெல்லாம் சமணத் திகம்பரராக மாறுவது அனைவருக்கும் எளிதான காரியமாகிவிட்டது. இறந்தவர்களின் உடல்களைத் தீண்டும் அளவிற்கு அவர்களின் சகிப்புத்தன்மை அதிகமாகி விட்டது!’’ என்று கூறினான் செங்குவீரன்.

செங்குவீரனைக் கண்ட சமண அடிகளான ஈழவாவிரையர் ‘‘அருகர் தாள் போற்றி’’ என்று தனது வணக்கத்தைத் தெரிவித்து வரவேற்றார்.

செங்குவீரனும் தலையைத் தாழ்த்தி அவனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டான்.

செங்குவீரன் வந்ததைக் கண்ட சமண முனிவரான ஈழவாவிரையர் சிரித்துக்கொண்டே "வா விறல்வேலா, எனக்கு முன்பே இங்கு நீ வந்திருப்பாய் என்று எதிர்பார்த்தேன், நீ இவ்வளவு தாமதமாக வந்திருக்கிறாய்" என்று செங்குவீரனிடம் விளித்தவர், "நித்திரையில் ஆழ்ந்துவிட்டாயா?" என்றும் கேள்வி எழுப்பினார்.

"எனது நித்திரை எப்படிப்பட்டது என்று உங்களுக்குத் தெரியாதா என்ன?" என்று பதில் கூறிவிட்டு, "வரும் வழியில் மலை நாட்டிலிருந்து வந்த இரு வைதீக முனிவர்களைச் சந்தித்தேன். ஆதலால்தான் தாமதம் அடிகளே!" என்று பதிலளித்தான் செங்குவீரன்.

செங்குவீரன் வாக்கியத்தில் அவன் வைதீக முனிவர்கள் பற்றி மறைத்துக் கூறும் பொருளை அறிந்துகொண்ட ஈழவாவிரையர், "அவர்களுக்கு மோட்சமளித்து விட்டுத் தானே வந்தாய்! அருகதத் தேவனிடமா? அல்லது அவர்களின் கடவுள் விஷ்ணுவிடமா விறல்வேல்?" என வினவினார்.

"அவர்களால் எனக்கு இன்னும் அறிய வேண்டிய தகவல்கள் சில இருக்கிறது. எனவே அந்த மலை நாட்டு வைதீக முனிவர்களைச் சிறிது காலம் விட்டுப் பிடிக்கலாம் என்றே தோன்றியது. ஆதலால் தான் அவர்களை ஏதும் செய்யாமல் அப்படியே செல்லட்டும் என்று விட்டுவிட்டேன்!" என்றவன் பிறகு "விடியுமுன்னே, இங்கு வந்துவிட்டீர்களே! ஏதேனும் முக்கிய வேலையா அடிகளே!" என்றான் செங்குவீரன்.

"பொழுது புலர்ந்தபின் ஒரு சாமம் கழித்துத் தன்னை வந்து சந்திக்கும்படி இரும்பிடர்த் தலையரிடமிருந்து அதிகாலையிலேயே செய்தி வந்தது. ஆதலால் தான் அவரது கட்டளைப் படி அவரை விரைவில் சென்று சந்தித்து விடலாம் என்று காலையிலேயே கிளம்பிவிட்டேன் விறல்வேல்."

"இரும்பிடர்த்தலையர் உறைந்தையில் அல்லவா இருந்தார். அடிகளே, அவர் எப்போது புகார் வந்தார்?"

"நேற்றிரவு தான் இரகசியமாக வந்திருக்கிறார்."

“அவர் இப்போது இங்கு எதற்காக வந்திருக்கிறார் அடிகளே. அவர் உறைந்தையில் இருப்பது தானே நல்லது.”

“நானும், அப்படித்தான் நினைத்தேன். ஆனால் அவரது வருகையில் நிச்சயம் ஏதேனும் முக்கியக் காரியம் அமைந்திருக்கும். நேற்றிரவு நீ அனுப்பிய வீரர்கள் என்னிடம் நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் கூறினார்கள். ஆதலால் தான் உனது வாள்வீச்சு நேற்றிரவு எப்படி இருந்திருக்கும் என்பதைப் பார்க்கவே இங்கு வந்தேன் விறல்வேல். நல்ல வேலை, சரியான நேரத்திற்கு நேற்று நீ வந்து சேர்ந்தாய், இல்லையெனில் யாரும் எதிர்பாராத பெரும் விபரீதம் நடந்திருக்கும்.

விறல்வேலா, காளன் பின்பு இருந்துகொண்டு, யாரோ அவனை இயக்குவது போன்று தான் எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில், கடந்த சில திங்கள்களாக அமைதியாக இருந்தவன், இப்படித் திடீரென வளவனார் மகள் வானவல்லியும், வேளாதன் மகள் பத்திரையும் இரவு வனத்தைக் கடக்கும் வேளையில் அவர்களுடன் அத்தனை காவல் வீரர்கள் துணைக்கு வந்தும் அவர்களைத் தாக்கிக் கவர துணிந்திருக்கிறான். அதுவும் அவர்கள் பயணம் செய்த சரியான நேரத்தைத் தெரிந்து வைத்துத் தாக்கியிருக்கிறான். அதனால் தான் எனக்குப் பெரிதும் ஐயம் உண்டாகிறது. வேளாதன் மகள் பத்திரையைக் காட்டிலும் வானவல்லி மீதே பெரிதும் கவனம் செலுத்தியிருக்கிறான். எனவே எனது ஐயம் இரட்டிப்படைந்துள்ளது. அவர்களது வருகையைத் தெரிந்த யாரோ ஒருவர் சொல்லித் தாக்கியது போன்றே உணர்கிறேன் நான்.”

அவர் கூறுவது அனைத்தையும் ஆமோதிக்கும் வகையில் அமைதியாகக் கேட்டுக்கொண்டே இறந்த கள்வர்களை மெல்ல ஆராய்ந்தான் செங்குவீரன்.

ஈழவாவிரையர், “நான் அனைவரையும் ஏற்கெனவே சோதித்து விட்டேன்” என்றார்.

ஆராய்ந்து கொண்டிருந்த விறல்வேல், ஒரு கள்வனின் கழுத்தில் அணிந்திருந்த விறலியர் அணியும் மாலை ஒன்றினைக் கழற்றினான். மேலும் அவனை ஆராய்கையில் அவனது உடல் வாகு, பூசியிருந்த சந்தனம் மற்றும் திருநீறு இவற்றிலிருந்து அவன் வைதீக இனத்தைச் சேர்ந்தவன் தான்

என்பதையும் கவனிக்கத் தவறவில்லை. வைதீகர்கள் புகாரில் களவு செய்து பிழைக்க வேண்டிய அளவிற்கு அவர்களது நிலை தாழ்ந்து விட்டதா என்ன? என்ற கேள்வி அவனுள்ளே எழுந்தது. இவனது கழுத்திற்கு விறலியரின் மாலை எப்படி வந்திருக்கும் என்று யோசித்துக்கொண்டே அந்த மாலையை அவனது இடுப்பில் சொருகிக்கொண்டான்.

மேலும் அவன் சிந்திக்கையில் இவர்களது நோக்கம் களவு செய்வது அன்று வேறு நோக்கம் ஏதோ இவற்றில் புதைந்திருக்கிறது. ஆதலால் தான் இவர்கள் பத்திரையை விடுத்து வானவல்லியைக் கவரவே அதிகம் முயற்சித்திருக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்.

வீரர்கள் மற்றும் கள்வர்களின் உடல்கள் சிதறிக்கிடக்கும் இடத்திலிருந்து சற்றுத் தொலைவில் இரத்தம் அதிகமாகச் சிந்திக் கிடந்ததைப் பார்த்த ஈழவாவிரையர், விறல்வேலிடம் ‘‘உனது வாளால் தாக்கப்பட்டும் யாரோ ஒருவன் பிழைத்திருக்கிறான் போலிருக்கிறதே! அவன் மிகவும் புண்ணியம் செய்தவனாகத்தான் இருக்க வேண்டும்’’ என்று கூறிக்கொண்டு குருதிக்கறை படிந்த பூமியையும், அதைச் சுற்றி மொய்த்திருந்த பூச்சிகளையும் சுட்டிக்காட்டிய படியே அருகில் சென்றார்.

தூர இருந்தே பார்த்துவிட்டு, ‘‘அது நான் தாக்கித் தப்பியவனின் குருதி அல்ல அடிகளே. வளவனாரின் மகள் வீசிய குறுவாளால் தாக்கப்பட்டு உயிர் பிழைத்தவனின் குருதி அது’’ என்று பதிலளித்த படியே வானவல்லியின் மற்றொரு குறுவாளால் குத்துப்பட்டு இறந்தவனின் உடலைச் சுட்டிக்காட்டினான் செங்குவீரன்.

செங்குவீரன், வைதீகன் அணிந்திருந்த விறலியின் மாலையை எடுத்து வைத்தது போலவே, அங்குச் சென்று கள்வனின் உடலில் பாய்ந்திருந்த வானவல்லியின் குறுவாளையும் எடுத்து பத்திரப்படுத்தியதையும் ஈழவாவிரையர் கவனிக்கவே செய்தார்.

ஈழவாவிரையர், செங்குவீரனிடம், ‘‘விறல்வேலா உனக்கும் இரும்பிடர்த் தலையரிடமிருந்து அழைப்பு வந்திருக்கிறதா? எப்போது வருவாய்?’’ என்று வினவினார்.

“இதுவரை எனக்கு அப்படிப்பட்ட அழைப்பு ஏதும் வரவில்லை அய்யா!” என்று பதிலளித்தான் செங்குவீரன்.

“மாறிக்கொண்டிருக்கும் அரசியல் சூழ்நிலைப் பற்றி விவாதிப்பதற்காகத் தான் அவர் என்னை அழைத்திருப்பார் என்று கருதுகிறேன். நீயும் விரைவில் வந்து சேர்” என்று கட்டளையிட்டபடியே கிளம்பினார் ஈழவாவிரையர்.

ஈழவாவிரையரும் சமண சமயத்தைத் தழுவியவர் தான். ஆனால் அனைத்தையும் துறந்து திகம்பரராக மாறி தன்னை முழுவதும் அருகதேவனிடம் ஒப்படைத்துவிட்டு தன்னையே வருத்தும் அளவிற்கு அவர் மாறிவிடவில்லை. சமணத்தைத் தழுவிக்கொண்டே, அவர் அதில் கூறப்பட்டுள்ள பிற உயிர்களுக்குத் தீங்கிழைக்காமை, கொல்லாமை, பல உணவுச் சாவடிகளை நிறுவி வழிப்போக்கர்களுக்கு உணவளித்துக் கொண்டும், கல்வி கற்பித்துக் கொண்டும், அனைவருக்கும் மருத்துவ உதவிகளைச் செய்துகொண்டும் அதன் நல்லொழுக்கங்களைக் கடைபிடித்துக் கொண்டே அரசியல் நிகழ்வுகளில் இரும்பிடர்த் தலையருக்கும், செங்குவீரனுக்கும் வேண்டிய ஆலோசனைகளை வழங்கிக்கொண்டு இல்லறத்தையும் பேணாமல் முழுத் துறவறத்தையும் கடைபிடிக்காமல் இடைப்பட்ட நிலைமையிலே அவர் வாழ்ந்துகொண்டிருந்தார்.

கொல்லாமை என்னும் எந்த உயிருக்கும் தீங்கிழைக்காத உயர்ந்த எண்ணத்தை உடைய ஈழவாவிரையர், விறல்வேல் மட்டும் யாரையேனும் வாளால் கொன்று, மோட்சமளித்திருந்தால் பாராட்டும் மனிதராய் இருந்தார்.

வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அவரது இந்த இரட்டை நிலையை நகைக்கவே செய்தான் செங்குவீரன்.

அதற்கு அவரும் சிரித்துக்கொண்டே, “என்ன செய்வது விறல்வேலா! கண்களுக்குத் தெரியாத எதிரிகள் நமது அரசை சூழ்ந்து கொண்டிருக்கிறார்களே! சோழ அரசிற்கு என்னால் இயன்ற உதவியைச் செய்து கொண்டிருக்கிறேன். அறஞ்செய்தலும், மறஞ்செய்தலும் (போர்) போற்றுபவர்கள் நாம். இவற்றோடு புதிதாகத் தமிழகம் வந்து சேர்ந்த இந்த ஆருகத மதக்கருத்தும் என்னைக் கவர்ந்துவிட்டது. ஆதலால் தான் போர்

செய்யும் உன்னைப் பாராட்டிக்கொண்டு ஆருகதம் கூறும் கொல்லாமையையும் கடைபிடித்துக்கொண்டிருக்கிறேன். அனைத்தையும் துறந்து, துறவியாகி, நாடோடியாகப் பயணம் செய்து வடக்கிருந்து அருகதேவனின் பாதங்களைச் சரணடையவே எனது மனம் துடிக்கிறது. ஆனால் எனது ஊழ்வினை என்னை அனுமதிக்க மறுக்கிறதே. நான் என்ன செய்யட்டும்'' என்று கூறி அருகதேவனின் மேலும் அவரது ஊழ்வினையின் மேலும் பழியைப் போட்டுவிட்டு சிரித்துக்கொண்டே அப்பொழுதும் சென்றுவிட்டார் ஈழவாவிரையர்.

புகாரில் வனத்தையொட்டியிருந்த மாளிகைக்குள் அதிகாலை நேரத்தில் சென்ற இரு போலி வைதீக முனிவர்களும் சிறிது நேரத்தில் வந்த வேலையை முடித்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பினார்கள்.

இருவரும் சம்பாபதி வனத்தினுள் சென்றுகொண்டிருந்த போது திடீரென்று ''நில்லுங்கள், நில்லுங்கள்'' என்று நா தழுதழுத்த ஒரு முதியவரின் குரல் இவர்களது காதுகளை எட்டியதனால் இருவரும் திரும்பினர்.

குரல் வந்த திசையில் இருவரும் பார்த்தபோது, அங்கு ஒரு முதியவர் நின்றுகொண்டிருந்தார். வயோதிகத்தினால் அவரது உடல் தளர்ந்து, முதுகும் சற்று கூன் விழுந்து, முகத்தில் வளர்ந்திருந்த உரோமங்கள் அவரது முகம் முழுவதையும் மறைத்திருந்தது. முதுகு மட்டும் சற்று கூன் விழுந்து காணப்பட்டதே தவிர, அவரது உடலும் உள்ளமும் கடும் வலிமையாகவே காட்சியளித்தது அவர்களுக்கு. ஆதலால் அந்த முதியவர் நடப்பதற்கு யாருடைய தயவும் தேவையில்லை என்பதை இருவரும் உணர்ந்திருந்தனர்.

அருகில் வந்த வேந்தன் மற்றும் சேந்தனிடம் முதியவர் ''நாராயணா நமோ'' என்று வைதீகக் கடவுளை வணங்கி தனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டே, ''அய்யா தாங்கள் ஆவூருக்கா செல்கிறீர்கள்? நானும் ஆவூர் நோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறேன். வயதாகிவிட்டதனால் எனது முதுமையும், தனிமையும் என்னை வருத்துகிறது. நானும் தங்களுடன் பொடி நடையாக, கூடவே வருகிறேனே! அய்யா. உங்களோடு வந்தால் எனக்குப் பேச்சுக்கும், பாதுகாப்புக்கும் துணை கிடைத்தது போன்று ஆகிவிடும்'' என்று நா தழுதழுத்த படியே முழுவதும் பேச இயலாமல் தடுமாறிக்கொண்டே பேசினார்.

அதற்கு வேந்தன் பணிவுடன், ‘‘எங்களை மன்னிக்க வேண்டும் அய்யா. உங்களோடு பயணம் செய்யவே எங்களுக்கும் விருப்பம். ஆனால் நாங்கள் இருவரும் உறைந்தை அல்லவா செல்கிறோம். ஆவூருக்கு நாங்கள் செல்லவில்லை அய்யா. வேண்டுமானால் தாங்கள் ஆவூர் சாலையும் உறைந்தை சாலையும் பிரியும் வரை எங்களோடு வாருங்கள்’’ என்று கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்தான் சேந்தன்.

‘‘முதியவரே, தங்களது உடல் தளர்ந்துவிட்டது. நாங்கள் விரைவாக நடக்கும் அளவிற்குத் தாங்களால் நடக்க இயலுமா? தாங்கள் மெதுவாக நடப்பீர், தங்கள் அளவிற்கு எங்களால் அவ்வளவு மெதுவாக நடக்க இயலாது. நாங்கள் விரைவாக உறைந்தை செல்ல வேண்டும், எங்கள் பணி அவசரம் நிறைந்தது அய்யா’’ என்றான் சேந்தன்.

சேந்தன் கூறியதைப் புரிந்து கொண்ட முதியவர், பதிலுக்கு ‘‘பல சுவடிகளையும், வேதம் கூறும் பல வித கருத்துகளையும் பின்பற்றும் உயர்ந்த மனிதர்களாகிய வைதீக முனிவர்களான நீங்கள் இருவரும் அவசரப் பணி உள்ளது என்று கூறி ஒரு உடல் தளர்ந்த முதியவனுக்கு உதவாமல் செல்வது எனக்கு வியப்பாகவும், ஆச்சர்யமாகவும் உள்ளது அய்யனே’’ என்றார்.

‘‘இந்தக் கிழவனுக்குப் பெரும்பண்பு நிறைந்த வைதீக முனிவர்களான நீங்களே உதவ முன்வரவில்லை என்றால் யாரிடம் தான் நான் உதவி கேட்பேன்’’ என்று வருந்தினார்.

இவரது இந்தச் சொல்லைக் கேட்ட வேந்தனும், சேந்தனும் முழிப்பதைக் கவனிக்கவே செய்த முதியவர், ‘‘சரி அய்யா நான் மெதுவாக, பொடிநடையாக, தனியாகவே செல்கிறேன். உங்களுக்கு அவசரப் பணி அங்கே இருக்கிறது. உங்களை வழி மறித்து நான் காலம் தாழ்த்தச் செய்திருந்தால் இந்தக் கிழவனை மன்னித்து விடுங்கள். நீங்களும் விரைவாகப் புறப்படுங்கள். நாராயணன் போற்றி, நாராயணன் போற்றி’’ என்று இருமுறை வைதீகக் கடவுளான விஷ்ணு பகவானை போற்றிக்கொண்டே மெல்ல நடக்க ஆரம்பித்தார்.

அந்த முதியவர் கூறிய சொற்களைக் கேட்டு அவருக்கு உதவ முடியாததைக் கண்டு வருந்திய வேந்தன், "அய்யா இன்னும் சற்று நேரம் தாங்கள் காத்திருந்தால் சோழ தேசத்தின் பயணிகளை அழைத்துச் செல்லும் புரவித்தேர் வரும். அவற்றில் தாங்கள் எந்தத் துன்பமும் இல்லாமல் பயணம் செய்யலாம். நாங்கள் புறப்படுகிறோம்" என்று கிளம்பினான்.

அந்த இரண்டு முனிவர்களும் நடந்து சென்ற பின்பு அவர்களிடமிருந்து விலகி தூர வந்த முதியவர் தனது இரண்டு கைகளையும் தட்டினார். அருகில் புதரில் மேய்ந்து கொண்டிருந்த வெண்ணிறப் புரவியொன்று கைதட்டும் சத்தத்தைக் கேட்டு வேகமாக ஓடிவந்தது முதியவரிடம்.

ஓடி வந்த புரவியின் மீது ஒரே தாவலாகத் தாவி அதன் மீதமர்ந்தார் அந்த முதியவர். அவரது கூன் விழுந்து வளைந்திருந்த முதுகு நேராக நிமிர்ந்திருந்தது. முகத்தில் ஒட்டியிருந்த ஒட்டுத் தாடியை நீக்கி கம்பீரமாக அந்தப் புரவியின் மீது அமர்ந்து காட்சியளித்தான் செங்குவீரன்.

பந்த ஒளியில் காணப்பட்ட இருவரது முகத்தாடி இப்போது இவர்களுக்கிடையே இடம் பெயர்ந்திருந்ததை அவன் கவனிக்கவே செய்திருந்தான். இவர்களது நடவடிக்கைகளைப் பார்த்தால் இவர்கள் முனிவர் வேடமணிந்த கபடதாரிகள் தான் என்பதை உணர்ந்து கொண்டான். கபட வைதீக முனிகள் இருவரும் உறைந்தைக்குத் தான் செல்கிறார்கள் என்பதையும் அறிந்து கொண்டான்.

வைதீகரது வீட்டிற்கு இரண்டு வைதீக முனி வேடமணிந்த கயவர்கள் இரகசியமாக வந்து செல்வது ஏன்? ஈழவாவிரையர் நேற்று நடந்த தாக்குதல் பலமான திட்டமும், வேறு நோக்கமும் அடங்கியிருக்க வேண்டும் என்று ஐயம் கொண்டாரே! இறந்து கிடந்த கள்வர்களில் ஒருவன் வைதீகன். இந்த இரண்டு கபட வைதீக முனிகளும் தற்பொழுது வைதீகரது வீட்டிலிருந்து செல்கிறார்கள்.

அதிகாலை இருளில் இவர்கள் பேசிக்கொண்ட போது காதில் விழுந்த மலைநாடு மற்றும் உறைந்தை என்ற சொற்களில் இருந்தும் இவர்கள் தற்போது உறைந்தைக்கு அவசரப் பணியாகச் செல்கின்ற படியால் இவர்கள் நிச்சயம் மலைநாட்டு இருங்கோ வேளிடமிருந்து ஏதோ முக்கியச் செய்தியை

கொண்டுவந்து இங்கே புகாரில் சேர்ப்பித்துவிட்டு மீண்டும் இங்கிருந்து ஏதோ இரகசிய செய்தியைப் பெற்றுக்கொண்டு உறைந்தை நோக்கிச் செல்கிறார்கள் என்பதையும் அவன் சிந்தித்துக் கொண்டான்.

புகாரில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசியல் குழப்பங்கள், காளனின் நேற்றைய தாக்குதல்கள் என அனைத்திற்கும் இந்த வைதீக மாளிகைக்கும் நெருங்கிய தொடர்பு ஏதேனும் இருக்குமோ? என்ற கோணத்தில் யோசிக்கத் தொடங்கினான்.

உறைந்தையில் ஏதோ முக்கியமான நிகழ்வு நடக்கப்போவது மட்டும் உறுதி என்று சிந்தித்த படியே புரவியில் முதியவர் வேடத்தை முழுவதும் நீக்கி விட்டு அரண்மனை நோக்கிச் சென்ற செங்குவீரனுக்கு மின்னல் கீற்றாய், ‘உறைந்தைக் கோட்டைத் தலைவனாக இருந்த போதுதான் புகாரில் காளனது இடையூறும், வழிப்பறியும் அதிகமானது. காளனைப் பிடிக்கக் காவல் பிரிவிற்குத் தலைமையேற்று புகார் வந்துவிட்ட பிறகே உறைந்தையில் இருங்கோவேளின் ஆதிக்கம் அதிகமாகி இளவல் காணாமற் போய்விட்டார்’ என்ற உண்மை அவனது நினைவிற்கு வந்து சென்றது. ஆகத் தன்னைத் திசை திருப்பவே காளன் தனது செயல்களைப் புகாரில் அதிகப்படுத்தியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.

காளனை எவ்வளவு விரைவில் கைது செய்ய இயலுமோ அவ்வளவு விரைவில் கைது செய்து விசாரித்தல் நல்லது. ஒவ்வொரு செயலும் திட்டமிட்டே நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. வைதீகர்களுக்கும், காளனுக்கும், மாறிவிட்ட அரசியல் நிகழ்வுகளுக்கும் ஏதோ ஒரு மர்ம தொடர்பு இருக்கிறது. அதனை விரைவில் கண்டறிந்து அவிழ்க்க வேண்டும் என்று சிந்தித்த படியே ஈழவாவிரையரின் கட்டளைப்படி அரண்மனையை நோக்கி விரைந்து கொண்டிருந்தான் செங்குவீரன்.

**அடிக்குறிப்பு**

1. ‘அக்னிமீளே புரோஹிதம் யக்ஞஸ்ய தேவமிருத்விஜம் ஹோதரம் சதன தாதமம்’ என்பது ரிக் வேதத்தின் முதல் ஸ்லோகம். சுந்தரப் பொருள்களை அளிப்பவன், ஐஸ்வர்யங்களை அளிப்பவன்,

யாகங்களுக்கு உதவி செய்பவன், புரோகிதமான, யாகத் தேவனான அக்னியை நான் வணங்குகிறேன் என்பது இதன் பொருள். ரிக் வேதத்தில் அக்னியும், இந்திரனும் மட்டுமே கடவுள்களாகச் சொல்லப்படுகின்றன என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

2. தமிழகத்தில் சமண சமயப் பெரியோரை திகம்பரர் என அழைப்பர். திகம்பரம் என்றால் உடையின்றி இருப்பவர் எனப் பொருள், அதாவது அம்மணம். திசைகளையே ஆடையாக உடுத்துபவர். திகம்பரம் என்பது சமண மதத்தின் ஒரு பிரிவு. மற்ற பிரிவுகள் சுவேதாம்பர சமணம், திகம்பர சமணம், ஸ்தானசுவாசி சமணம் என்பன. சுவேதாம்பரம் என்றால் வெண்ணிற ஆடை எனப் பொருள். சுவேதாம்பர சமணத் துறவிகள் வெண்ணிற ஆடை உடுத்துவார்கள், அவர்களின் கோயில்களிலும் தீர்த்தங்கரர் சிலைகளுக்கும் வெண்ணிற ஆடை உடுத்துவர். திகம்பரர்கள் ஆடை உடுத்த மாட்டார்கள், ஸ்தானசுவாசி உருவ வழிபாடு அற்றவர்கள். தமிழக சமணர்கள் பெரும்பாலும் திகம்பரர்கள். ஆனால், அனைவரும் ஆடை உடுத்துபவர்கள். அவர்களின் தலைவர் மட்டுமே ஆடை உடுத்தாமல் அம்மணமாகவே இருப்பார். இவர்களின் கோயில்களின் திருவுருவங்களும் அம்மணமாகவே இருக்கும்.

# 13. பய ங்கர வஞ்சகத் திட்டம்

விடியற்காலையில் சம்பாபதி வனம் வழியாக வைதீக முனிவர்கள் போன்று வேடம் தரித்த சேந்தனும், வேந்தனும் மாளிகைக்குள் முன் வாசல் வழியே செல்லாமல் தோட்டப் புறத்தில் காணப்பட்ட குட்டிச்சுவரைத் தாண்டி குதித்தனர். அவர்கள் இருவரும் ஒரே நேரத்தில் குட்டிச் சுவற்றைத் தாண்டிக் குதித்ததனால் எழுந்த தொப்'பென்ற சத்தத்தைக் கேட்டு "வீரர்களே மெதுவாகக் குதியுங்கள், தங்களது சத்தத்தைக் கேட்டு மாளிகையில் உறங்குபவர்கள் எழுந்துகொள்ளப் போகிறார்கள்" என்று எச்சரித்த படியே அவர்களை வரவேற்றுச் சத்தமில்லாமல் மாளிகையின் நிலவறைக்கு இருவரையும் அழைத்துச் சென்றார் மாளிகையின் தலைவர்.

மூவரும் இரகசிய நிலவறைக்குச் சென்ற பின்பு நிலவறைக்குக் காவலிருந்த ஒரேயொரு காவலாளியும் வெளியேறிவிட அவர்களின் உரையாடல்கள் தொடர்ந்தது.

சிறிது நேரம் இளைப்பாறிய வேந்தனும் சேந்தனும் மாளிகைத் தலைவரிடம் எதையோ எதிர்பார்த்து அவரின் முகத்தைப் பார்த்தபடியே அமர்ந்திருந்தனர். மாளிகைத் தலைவர் அவர்களது எதிர்பார்ப்பை புரிந்துகொண்டு எழுந்து நின்று தலையை மட்டும் தாழ்த்திப் "புஷ்யமித்திரன்" என்ற சங்கேத சொல்லைச் சொல்ல, இதுவரை அமைதியாய் அமர்ந்திருந்த சேந்தனும், வேந்தனும் மகிழ்ந்த படியே எழுந்து மார்புக்கருகில் வலது கையை மடக்கி இடது கையின் உள்ளங்கையில் வைத்து தலையைச் சாய்த்து "புஷ்யமித்திரன்" எனும் இரகிசிய சங்கேத சொல்லைச் சொல்ல மூவர்களுக்கிடையில் அதுவரை நிலைத்திருந்த ஐயம், தயக்கம் எல்லாம் விலகின.

வந்திருக்கும் இருவரும் மலை நாட்டு மன்னனான இருங்கோவேள் அனுப்பிய ஒற்றர்கள் தான் என்பதை அவர்களின் சங்கேத செய்கையிலும், அவர்கள் உச்சரித்த வார்த்தையிலிருந்தும் உறுதி செய்துகொண்டார் மாளிகைத் தலைவர்.

அந்த மாளிகையின் தலைவர் வைதீக பாகவதன் நடந்த படியே அவர்களிடம் தனது வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு உரையாடத் தொடங்கினார். அவரது தலையில் முன்புறம் இருந்த முடிகள் அனைத்தும் மழிக்கப்பட்டு, அவரது நெற்றியிலிருந்து தொடங்கித் தலைமுடி மழிக்கப்பட்ட உச்சிவரை நீண்டு அகன்றிருந்த அவரது நாமமும், அவற்றிற்கிடையில் சிவந்து நீண்டிருந்த சிவப்பு மையிலான கோடும் நாமத்திற்கு மத்தியில் காணப்பட்டது. தலையின் பின்புறம் மட்டும் நீண்டு தொங்கிக் கொண்டிருந்த குடுமியானது அவர் நடக்கும் போது நரியின் வால் ஆடுவதைப் போன்று சேந்தனுக்குத் தோன்றவே அவனுக்குச் சிரிப்பு வந்தது. அவரது வெண்மையான உடல், அகன்று உறுதியாயிருந்த தோள், மேலங்கி அணியாத அவரது உடலில் இடுப்பில் அணிந்திருந்த காவி வஸ்திரத்திலிருந்து வலது இடமாக அணியப்பட்டிருந்த பூணூல், அவரது மிடுக்கான நடை, கூர்மையான பார்வை என அனைத்தும் ஆரிய வைதீகர்களின் தோற்றத்தைப் பிரதிபலித்தது. மார்பு மற்றும் வயிற்றுப் பகுதிகளில் வரிசையாகத் தீட்டியிருந்த நாமம் அவர் நிச்சயம் நான்கு வேதங்கள் மற்றும் பல நூல்களைப் பிழையின்றி கற்ற ஆரிய வைதீக ஆச்சார்யங்களைக் கடைபிடிக்கும் பண்டிதராகத் தான் இருப்பார் என்று தோன்றவே, வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு சேந்தன் அவர் கூறுவதைக் கவனிக்க ஆரம்பித்தான்.

மாளிகைத் தலைவர் பாகவதன், “உறைந்தையிலிருந்து என்ன செய்தி கொண்டு வந்திருக்கிறீர்கள்? புகாரில் ஏதேனும் முக்கியப் பணி உள்ளதா?” என்று கேட்டார்.

அவருக்குப் பதிலளித்த சேந்தன் “முக்கியமான செய்தியைத் தான் கொண்டு வந்துள்ளோம்” என்றான்.

பாகவதன் “விரைந்து கூறுங்கள்” எனக் கட்டளையிட்டார்.

“பொழுது விடிந்ததும், நமது தலைவரான இருங்கோவேள் சோழ தேச சக்கரவர்த்தியாக முடி சூட்டிக் கொள்ளப் போகிறார். தங்களிடம் தெரிவிக்கச் சொன்னார். மேலும் உறைந்தை அரண்மனையிலிருந்த இரும்பிடர்த்தலையன் நேற்றிரவு தப்பிவிட்டார்” என்றான் வேந்தன்.

“என்னே, இரும்பிடர்த்தலையன் அரண்மனையில் நமது காவலிலிருந்து தப்பி விட்டானா? அது நமக்குப் பெரும் ஆபத்து ஆயிற்றே!” என அதிர்ச்சியுடனே வினவினார் மாளிகைத் தலைவர் பாகவதன்.

தொடர்ந்த வேந்தன், இரும்பிடர்த்தலையர் உறைந்தையிலிருந்து இரகசியமாக வெளியேறியதை மன்னர் நல்லது என்றே கருதுகிறார்.” என்றான்.

“இரும்பிடர்த்தலையன் எவ்வளவு ஆபத்தானவர் என்பதை அறிந்துமா, மன்னர் அவன் வெளியேறியதை நன்மை என்று கருதுகிறார்?” எனக் கேள்வி எழுப்பினார் மாளிகைத் தலைவர்.

“அவர் உறைந்தை அரண்மனையில் இருந்தால் மன்னர் முடி சூடும் போது இரும்பிடர்த்தலையரால் ஏதேனும் இடையூறு ஏற்படும் என்று நமது மன்னர் கருதினார். மேலும் அவர் வெளியேறிவிட்டதால் இன்று மன்னர் உறைந்தையில் எவ்வித இடையூறும் இல்லாமல் சோழ சக்ரவர்த்தியாக முடி சூட்டிக்கொள்ளப் போகிறார்” என்றான் வேந்தன்.

“மலை நாட்டு மன்னர் சோழ சக்கரவர்த்தியாக முடி சூட்டிக் கொள்வதில் மகிழ்ச்சியே, ஆனால் இரும்பிடர்த்தலையன் உறைந்தையில் இருந்தால் நமது கண்காணிப்பில் இருப்பான். அவனால் எந்தச் செயல்களையும் துணிந்து சுதந்திரமாகச் செய்ய இயலாது. ஆனால், இப்போது அவன் வெளியேறிவிட்டதால் நமது மன்னருக்கு எதிராகச் சுதந்திரமாகச் செயல்பட ஆரம்பித்து விடுவானல்லவா? இரும்பிடர்த்தலையனைப் போன்ற புத்திக் கூர்மையுள்ளவர்களை அருகில் நமது கண்காணிப்பில் வைத்திருத்தலே நல்லது! தப்பவிட்டபின், இனி அவனைத் தேடி எப்படிக் கைது செய்ய இயலும்?” எனச் சினம் கொண்டார். சிறிது நேர மௌனத்திற்குப் பின்னர் “கடும் கண்காணிப்பிற்கு மத்தியில் சிறைவைக்கப் பட்டிருந்த இரும்பிடர்த்தலையன் எப்படி அத்தனை கடுங்காவல்களை மீறி தப்பினான்?” என்று கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்த வேந்தன், “அவர் எப்படி உறைந்தை அரண்மனையிலிருந்து தப்பினார் என்பது பெரும் மர்மமாகவே உள்ளது, நேற்று முன் இரவில் அரண்மனையில் காவலாளிகளுக்கு மத்தியில் உலாவியவர் மாயமாக மறைந்து விட்டார். மன்னர், இரும்பிடர்த்தலையர் இரகசிய சுரங்கப் பாதைகளைப் பயன்படுத்தியே தப்பித்திருக்க வேண்டும் என்று கருதுகிறார். நாங்கள் எவ்வளவோ முயன்றும், எங்களால் உறைந்தை அரண்மனையில் உள்ள ஒரு சுரங்கத்தைக் கூடக் கண்டறிய இயலவில்லை!” என்று வருத்தமாகக் கூறினான்.

“இரும்பிடர்த்தலையன் தப்பியது இருக்கட்டும், தில்லைவாழ் அந்தணர்கள் எப்படிச் சோழ குடியில் பிறக்காத இருங்கோ வேளுக்கு முடி சூட்டி இளஞ்சேட்சென்னியின் செங்கோலை வழங்குவார்கள்? அவர்கள் சோழ குடி அல்லாதவனுக்கு முடி சூட்டுவது இல்லையே?” என வினவினார் பாகவதன்.

“தாங்கள் கூறுவது உண்மை தான் வைதீகரே. அவர்கள் சோழனது மணி முடியை இருங்கோ வேளுக்குச் சூட்ட மறுத்துவிட்டார்கள். இளஞ்சேட்சென்னியின் மணி முடியை தேடும் பணியில் அனைவரும் ஈடுபட்டுள்ளனர். சோழ தேசமே நமது கைகளுக்கு வந்துவிட்டது வைதீகரே. உறைந்தையில் வசிக்கும் வைதீகர்களைத் தனக்கு முடி சூட்ட வேண்டுமென்று நமது தலைவர் இருங்கோவேள் கேட்டுக்கொண்டார். வேதம் கற்ற, வடமொழி பண்டிதர்களான உறைந்தை வைதீகர்களும் அதற்கு உடன்பட்டு விட்டனர். ஆக, முடி சூட்டும் நிகழ்வைப் பற்றி ஏதொரு கவலையும் இப்போது இல்லை. அந்தணர்கள் முடிசூட்டாவிட்டால் என்ன? வைதீகர்கள் இருக்கிறார்களே! சோழ முடி இல்லாவிட்டால் என்ன, சோழ அரசே கிடைத்து விட்டதே!” என்றான்.

அவர்களின் உரையாடலை இடைமறித்துத் தொடர்ந்த சேந்தன், “வைதீகரே, இரும்பிடர்த்தலையன் உறைந்தையிலிருந்து தப்பித்தால் என்ன! அவனது கடிவாளம் இன்னும் நமது மன்னரது கைகளில் அல்லவா இருக்கிறது? ஆதலால் இரும்பிடர்த்தலையன் எவ்வளவு முயன்றாலும் நமது மன்னருக்கு அடங்கயே செய்வான்” என்றான்.

அவன் இரும்பிடர்த்தலையரின் கடிவாளம் என்று எதைப் பற்றிக் குறிப்பிடுகிறான் என்பதன் காரணத்தை அறியாமல் சேந்தனின் முகத்தை நோக்கினார் மாளிகைத் தலைவரான வைதீக பாகவதன்.

வேந்தன், “சோழ இளவரசன் வளவன் நமது தலைவரின் கடும் பாதுகாப்பில் சிறைப்பட்டிருப்பதைத் தான் சேந்தன் இரும்பிடர்த்தலையரின் கடிவாளம் நமது மன்னரின் கைகளில் உள்ளதென்று குறிப்பிடுகிறான்!” என்று விளக்கம் அளித்தான்.

அதுவரை அமைதியாக இருந்த வைதீக பாகவதன், இளஞ்சேட்சென்னியின் மகனான வளவன் மன்னர் இருங்கோ வேளின் கடும் பாதுகாப்பில் சிறைவைக்கப் பட்டுள்ளதை அறிந்த பின்னர், “எதிரிகளின் கடிவாளம் அனைத்தும் நமது மன்னரின் கைகளில் உள்ள போது, கடிவாளத்தை அறுத்தால் அனைவரும் தானாக அடங்கிவிடுவர். எதற்காகக் கடிவாளத்தைக் கொண்டு நமது மன்னர் அனைவரையும் கட்டுப்படுத்த முயல்கிறார்?” என்றார்.

சோழ இளவலைக் கொன்றால் சோழ மன்னர்களின் கடைக் குடியும் அழிந்து சோழப் பரம்பரையின் சுவடே அழிந்துவிடும். பின்னர் எதிரிகள் தானாகவே அடங்கிவிடுவர் என்பதைக் கடிவாளத்தை அறுத்தெறிய வேண்டியது தானே என்று வைதீகர் குறிப்பிடுவதை உணர்ந்த வேந்தன், ”வைதீகரே, நமது மன்னரும் அதற்கான சரியான தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். சமயம் வாய்க்கையில் சோழ இளவலின் சாம்பலை காவிரியில் கரைத்துவிடுவார். அதற்கு நிச்சயம் தாங்கள் தான் மந்திரம் ஓத வரவேண்டும்” என்றான்.

ஆர்வமிகுதியில் வைதீகர், “சோழ இளவலை இருங்கோவேள் எங்குச் சிறை வைத்திருக்கிறார்? என வினவலானார்

வேந்தனும், சேந்தனும் ஒருவரது முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்ட பின், “அது பரம இரகசியம். எங்களுக்கே தெரியப்படுத்தாமல் மன்னர் இரகசியமாகப் பாதுகாக்கிறார்” என்று இருவரும் முன்பே பேசிக்கொண்டதைப் போன்று ஒரே நேரத்தில் பதில் அளித்தனர்.

இருவரது பதில்களும் ஒரே நேரத்தில் வெளிவந்ததைக் கண்டு காரியத்தின் அதி தீவிரத்தைப் புரிந்து கொண்ட பின்னர் "மன்னரது நிலைப்பாடு மிகவும் சரியானதே! இது போன்ற முக்கியமான காரியங்களை எல்லாம் படு இரகசியமாக வைத்திருத்தலே காரியத்தை வெற்றியடையச் செய்யும்" என்றார்.

தொடர்ந்த சேந்தன், "நமது தலைவர் சோழச் சக்கரவர்த்தியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் அவரது முதல் கட்டளை புகாரைத் தமது நேரடி ஆளுமையின் கீழ் கொண்டு வருவது தான். ஆதலால், இன்று காலையிலேயே புகார்த் தலைவராக உறைந்தையிலிருந்து நமது தலைவரின் விசுவாசிகளில் ஒருவன் பதவியேற்று விடுவான். அவன் பதவியேற்ற பின் புகாரில் தஞ்சம் அடைந்திருக்கும் இரும்பிடர்த்தலையன் முதலில் கைது செய்யப்படுவான். பின்னர், நமது ஒற்றர்களைக் கைது செய்திருக்கும் செங்குவீரன் மற்றும் அவனது உபதளபதிகள் என அனைவரும் சிறையில் தள்ளப்பட்டு நமது ஒற்றர்கள் விடுவிக்கப்படுவார்கள்" என்றான்.

மாளிகைத் தலைவர், "சேந்தா, உறைந்தையிலிருந்து தப்பித்து வந்த இரும்பிடர்த்தலையன் புகாரில் தான் மறைந்திருப்பான் என்பதை எப்படி அறுதியிட்டு அவ்வளவு நிச்சயமாகக் குறிப்பிடுகிறாய்?" என்று வினவினார்.

இப்போது இடை மறித்த வேந்தன், "சோழ தேசத்திற்கு உட்பட்ட வேளிர்கள், சேரன் செங்குட்டுவன் மற்றும் பாண்டியன் தென்னவன் என அனைவரும் இப்போது மலை நாட்டு மன்னர் இருங்கோவேள் சோழ சக்கரவர்த்தியாக முடிசூட்டுவதை ஆதரிக்கிறார்கள். இளஞ்சேட்சென்னிக்குப் பின்னர்ச் சோழ வம்சம் மீண்டும் தளிர் விடுவதை அவர்கள் யாரும் விரும்பவில்லை. பன்னெடுங்காலமாகப் பாண்டிய சேரர்களால் முழுவதும் வெற்றி கொள்ள இயலாத மற்றும் வேளிர்களை முழுவதும் அடக்கி ஆண்டுகொண்டிருக்கும் சோழ வம்சத்தைப் பூண்டோடு அழிக்க இதுதான் ஏற்ற சமயம் என அனைவரும் கருதுகின்றனர். எஞ்சியிருக்கும் இளஞ்சேட்சென்னி மகனும் இப்போதுதான் வாலிப வயதில் நுழைகிறான். மீசை கூட முழுவதும் வளராமல், அரும்பு மீசையோடு குழந்தைத் தனம் மாறாத இளைஞன் அவன். ஆதலால் அவனை அழிப்பது மிகவும் எளிதான காரியம் என்று வேளிர்கள், சேரர்கள், பாண்டியர்கள் என அனைவரும் கருதுகிறார்கள். ஆதலால்

இரும்பிடர்த்தலையன் யாரிடம் அடைக்கலம் கேட்டுச் சென்றாலும் அவர்களால் கைது செய்யப்பட்டு நமது மன்னர் இருங்கோவேளிடம் ஒப்படைக்கப்படுவான். ஆதலால் அவனுக்கு ஏற்ற நம்பிக்கையானவர்கள் இருப்பது புகார் மட்டுமே'' என்றான்.

தொடர்ந்த சேந்தன், ''புதுத் தலைவரை நியமித்துப் புகாரையும் நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டால் சுற்றியுள்ள அனைத்து தேசங்களும் நமது தலைவரின் ஆளுமைக்குள் முழுமையாக வந்துவிடும். மேலும் புகார் துறைமுகம், செல்வச் செழிப்பால் சிறந்தது. எதிர்காலத்தில் போர் ஏதேனும் நிகழ்ந்தால் நாட்டு நிதி நிலைமையைச் சமாளிக்கப் புகார் நகரம் நிச்சயம் நமது கட்டுப் பாட்டின் கீழ்தான் இருக்க வேண்டும் என்று நமது தலைவர் இருங்கோவேள் கருதுகிறார்'' என்றான்.

''புகார் போன்ற செல்வ செழிப்புள்ள மக்களையும், நகரத்தையும் நமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருத்தலே நமது தலைவர் இருங்கோவேளுக்கு அனுகூலமானது. ஆனால் புதிதாக நியமிக்கும் புகார்த் தலைவனைச் செங்குவீரன் மற்றும் அவனது உப தளபதிகள் அனைவரும் ஏற்றுக்கொள்வார்களா?'' என்று வினவினார் வைதீக பிராமணர்.

''சோழ சக்கரவர்த்தி நியமிக்கும் கோட்டை மற்றும் புகார்த் தலைவரின் கட்டளைக்கு நிச்சயம் செங்குவீரன் அடிபணிந்து தான் ஆகவேண்டும். அப்படி அவன் அடிபணிய மறுத்தால் அரச கட்டளையை ஏற்க மறுத்த ராஜ துரோகி என்று குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்படுவான். புதிதாக நியமிக்கப்படும் கோட்டைத் தலைவனுக்கு கட்டுப்பட்டுவிட்டால் நமது தலைவருக்கும் கட்டுப்பட்டவனாகி விடுவான். இரண்டில் எது நடந்தாலும் மன்னருக்கு அனுகூலமானதே! இதுதான் எங்கள் திட்டம்'' என்றவன் தொடர்ந்து ''நமது மன்னர் இருங்கோவேள் தங்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தப் படி செங்குவீரன் வகித்துக் கொண்டிருக்கும் புகாரின் உப தலைவன் பதவி முதலில் தங்களது புதல்வனுக்கு வழங்கப்படும். பின்னர், புகார்த் தலைவனாக நியமிக்கப் படுவான்'' எனத் தெரிவித்தான் வேந்தன்.

ஏதோ, மகிழ்ச்சியில் பேச வந்த வைதீகரைப் பேச விடாமல் தொடர்ந்த சேந்தன், ''இன்று எப்படியும் செங்குவீரனைக் கைது செய்து விட

வேண்டும் அல்லது அவனைக் கொன்று விட வேண்டும் என்பது நமது தலைவரின் ஆணை. அவன் உயிரோடு உள்ளவரை ஆபத்துதான். தங்களது நீண்ட காலத் திட்டம் மற்றும் ஆலோசனைகளின் படி இரும்பிடர்த்தலையனின் பலத்தைச் சரியவைத்துக் கொண்டிருக்கிறோம். இளஞ்சேட்சென்னியை நோய்வாய்ப் படுத்திப் பல காலங்கள் அவனைப் படுத்த படுக்கையாக்கினோம். பின்னர் அவனைக் கொன்றோம். இரும்பிடர்த்தலையனிடமிருந்து அவனது சகோதரனை முதலில் பிரித்தோம். பின்னர் இளஞ்சேட்சென்னிக்கும் இரும்பிடர்த்தலையனுக்கும் பெரும் பக்க பலமாகவும், ஆதரவாகவும் இருந்த மகேந்திர வளவனாரின் மகனைக் கொன்று அவரை ஓய்ந்துபோகச் செய்துவிட்டோம். இப்போது அந்த வகையில் செங்குவீரன் மட்டுமே எஞ்சியிருக்கிறான். குணக்கடலில் அகப்பட்டிருந்தால் அன்றே அவனது கதையையும் முடித்திருக்கலாம், தப்பிவிட்டான். அவனையும் அழித்துவிட்டால் இரும்பிடர்த்தலையன் மட்டும் தனிமைப்படுத்த பட்டு விடுவான். பிறகு அவனை வெற்றிக் கொள்வது எளிது. நமது பல வருடத் திட்டங்கள் இப்போதுதான் ஒவ்வொன்றாகக் கைகூடி வருகிறது. நமது திட்டங்களுக்கும், உழைப்பிற்கும் ஏற்ற பலன் விரைவில் நமது கைமேல் கிட்டப் போகிறது!" என்று மகிழ்ச்சியோடு கூறினான்.

வைதீகர் பாகவதன், "உண்மைதான் சேந்தா. நமது பல வருட உழைப்பிற்குப் பலன் இனிதான் கிடைக்கப்போகிறது. எனது நீண்ட நாள் கனவும் இனிதான் நிறைவேறப் போகிறது" என்று அவர் கூறிய போதே அவரது கண்களில் அவருடைய கனவுகள் அனைத்தும் உயிர்பெறத் தொடங்கின. அவரது ஞானத் திருஷ்டியில் தென்னக அரச பீடத்தில் ஒரு வைதீக மன்னன் அமர்ந்து ஆட்சி செலுத்திக்கொண்டும், தற்பொழுது அவர்களையும், அவர்களது சமயத்தையும் ஓரங்கட்டிக் கொண்டிருக்கும் சமணர்களையும், பவுத்தர்களையும் தென்னகத்தை விட்டு ஓட ஓட விரட்டப் படுவதையும் கண்ட அவரது முகத்தில் மகிழ்ச்சி ஆனந்த தாண்டவமாடியது.

மாளிகைத் தலைவரான பாகவதன் ஆரிய பிராமணர்கள் எனப்படும் வைதீகர். அவர் தென்னகத்தில் தமது வைதீக ஆரிய ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று அதற்காக அல்லும் பகலும் உழைப்பவர். என்ன தான் அவர் அதற்காகக் கடுமையாக உழைத்து, சதித் திட்டங்களைத் தீட்டி அதற்காக

முயன்றாலும் அவரால் செல்வந்தர்கள் மற்றும் அரசர்களிடமிருந்து சில கிராமங்களைத் தானங்களாக மட்டுமே பெற முடிந்ததே தவிர அவர்களால் அதற்குக் குறுநில மன்னனாகக் கூட ஆக இயலவில்லை. ஆரிய பிராமணர்கள் தென்னகம் வந்து சில நூற்றாண்டுகள் ஆகிவிட்டிருந்தாலும் அவர்களால் ஆட்சியில் அதிகாரம் செலுத்தும் அளவிற்கு வளர முடியவில்லை. மேலும் அக்காலத்தில் தமிழர்களின் மதம், சமண, பௌத்த மற்றும் ஆசீவக மதங்களின் கொள்கையான கொல்லாமை, புலால் உண்ணாமை, அருள் உடைமை, பிறப்பால் அனைவரும் சமம் என்று வாழ இந்தப் ஆரிய பிராமணர்கள் மட்டும் யாகம் வளர்த்தல், புரவி, பசு முதலியவற்றைப் பலியிடுதல், புலால் உண்ணுதல் என முரண்பாடாக வாழ்ந்ததோடு மட்டுமல்லாது வேதங்களைப் படிப்பவர்கள் மட்டுமே உயர்ந்தவர்கள் மற்றவர்கள் அனைவரும் பிறப்பால் தாழ்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டிருந்தனர்..

ஆனால், வைதீக பிராமணர்கள் மட்டும் அந்தந்த தேச மன்னர்களிடம் யாகம், பலி, சுவர்க்கம், நரகம் என்று பலவிதமான கதைகளைக் கூறி சற்று செல்வாக்காகப் பொன், பெண், கிராமங்கள் என்று தானமாகப் பெற்றுப் பயிர்த்தொழில் செய்யும் விவசாயத் தொழிலை தவறாகக் கூறிக்கொண்டே அவர்களின் உழைப்பில் சுகபோக வாழ்வு வாழ்ந்துகொண்டிருந்தனர். ஆனால், அவர்களில் எவராலும் சிறு குறுநிலத்திற்குக் கூட மன்னனாக இயலவில்லை.

இந்த நிலையில் தான் பாகவதன், இருங்கோ வேளின் முயற்சிக்குக் கைகொடுத்து, அவன் சோழ தேசத்தின் அரசனாக முடிசூட்டுவதன் மூலம் தனது மகனை புகாருக்குத் தலைவனாக நியமனம் செய்துவிட்டால் பின்னர் படிப்படியாக வைதீக ஆரிய பிராமணர்களின் செல்வாக்கு மற்றும் ஆட்சியைத் தென்னகம் முழுவதும் பரப்பிவிடலாம் எனத் திட்டம் தீட்டி முயற்சித்துக் கொண்டிருந்தார்.

இப்படி அவர் பெரிதும் முயற்சிக்கக் காரணம் வட தேசத்தில் பெரும் வலிமையுடன் திகழ்ந்த மௌரியப் பேரரசின் சக்கரவர்த்தியான பிருகத்ரதன் என்பவன் பலவீனமாக இருந்த வேளையில் அவனை வஞ்சகமாகக்

கொன்றுவிட்டு அவனது படைத் தளபதியான புஷ்யமித்ர சுங்கன் என்ற ஆரிய பிராமணன் சுங்க வம்சம் என்ற பிராமண அரச மரபைத் தோற்றுவித்தான். வடபுல சுங்கர்களைப் போலவே தானும் முயன்று அப்படியொரு வைதீககர்களின் ஆரிய பிராமண ஆட்சியை ஏற்படுத்திவிட வேண்டும் என முயன்றுகொண்டிருந்தார்.

வடக்கு போன்று தென்னகத்திலும் வைதீக பிராமணர்களின் ஆட்சி மலர வெகு காலம் ஆகப்போவதில்லை என்று எண்ணி அந்தத் திட்டத்திற்கும் இரகசிய சங்கேத சொல்லாகச் சுங்க வம்சத்தைத் தோற்றுவித்த படைத் தளபதியான 'புஷ்யமித்திரன்' என்பவனின் பெயரையே வைத்திருந்தார்.

ஆதலால் தான் முதல் கட்டமாகப் புகார்ப் படைப்பிரிவிற்குத் தன் மகன் அக்னிபுத்திரனை உப தலைவனாக நியமித்துவிட்டுப் பின்னர்ப் புகார்த் தலைவனாக நியமித்துவிட்டால் பின் படிப்படியாக ஆரிய பிராமணர்களின் ஆட்சியை நீட்டித்துவிடலாம் என்று அவர் பெரிதும் மகிழ்ந்தபடியே "தென்னகத்தில் வைதீகர்களாகிய நாங்கள் முதன் முதலில் ஆட்சிப் பீடத்தை அடையப் போகிறோம்" என்று தனக்குள் கூறிக்கொண்டார். "நமது தலைவர் இருங்கோ வேளிடம் எமது நன்றியை மறுக்காமல் தெரிவித்துவிடுங்கள்" என்று கண்களில் வழிந்த ஆனந்தக் கண்ணீரைச் சேந்தனும், வேந்தனும் அறியாத வண்ணம் துடைத்த படியே அவரது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

மேலும் தொடர்ந்த மாளிகைத் தலைவர், "செங்குவீரனை அவ்வளவு எளிதில் கைது செய்துவிட இயலும் என்று நான் நம்பவில்லை. அவனைக் கைது செய்யவோ அல்லது அவனைக் கொல்வதற்கோ அவனை எதிர்த்து யார் சென்றாலும் அவனது நீண்ட வாளுக்கு இறையாகிவிடுவர். அவனை மிஞ்சி வாள் வீசும் வீரர்களை நான் இந்தத் தேசத்தில் இதுவரை கண்டதில்லை" என்று அவர் விறல்வேலின் திறமையைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த வேந்தன், "அவனை எதிர்த்து வீழ்த்துவது இயலாது என்பதை அறிந்தே நாங்கள் இருவரும் அவனை வீழ்த்த வேறொரு உபாயத்தை நாடியுள்ளோம்!" என்று கூறிக்கொண்டே அவனது இடையில் பாதுகாப்பாக மறைத்து வைத்திருந்த மூங்கில் கழியில் செய்யப்பட்டிருந்த குப்பியை எடுத்தான்.

வேந்தனை ஆச்சர்யமாகப் பார்த்த வைதீகரிடம், ‘‘இந்தக் குப்பியில் கடும் நஞ்சு வைக்கப்பட்டுள்ளது வைதீகரே. கொடிய சர்ப்பத்தின் நஞ்சை விட அபாயகரமானது. வடக்கிலிருந்து வந்த கபாளிகர்களிடமிருந்து பெறப்பட்டது. இதற்கு மாற்று மருந்து கிடையாது. நக இடுக்கில் மறைத்து வைத்துக் கீறினால் போதும், கீறப்பட்டவன் மாய்ந்து போவான். இதில் உள்ள ஒருதுளி நஞ்சு பெரும் யானையை மாய்க்கப் போதுமானது’’ என்றபடியே மூங்கில் மரத்தினால் செய்யப்பட மூடியைத் திறந்தான். அதிலிருந்து நீலமும், பச்சையும் கலந்த நிறத்தில் ஆவி வெளியேறியது. உடனே மூடியை அடைத்த வேந்தன், ‘‘காற்றோட்டம் குறைவாக உள்ள இந்த நிலவறையில் இதிலிருந்து இன்னும் சில கணிக நேரம் வெளிப்பட்டால் இந்த நஞ்சு ஆவியே நம் அனைவரின் ஆவியையும் எடுத்துவிடும்.’’ என்றான்.

‘‘இன்று மாலைக்குள் எப்படியும் செங்குவீரன் கணிகையர் மாளிகைக்குள் வருகை தருவான்’’ என்று சேந்தன் கூறிக்கொண்டிருந்த போதே மாளிகைத் தலைவரான வைதீகர் பாகவதன் குறிக்கிட்டு ‘‘செங்குவீரனாவது கணிகையர் மாளிகைக்கு வருகைத் தருவதாவது? நடப்பதைக் கூறுங்கள் வீரர்களே’’ என்றார்.

வேந்தன், ‘‘செங்குவீரன் ஒழுக்கம் உடையவன் தான். அவன் நல் ஒழுக்கத்திலிருந்தும். நேர்மையிலிருந்தும் தவறாதவன் என்பது ஊர் அறிந்ததே! ஆனால், நிச்சயம் அவன் இன்று கணிகையர்களைத் தேடி வருவான் வைதீகரே. வில் வித்தையில் சிறந்த நமது வீரர்களை வைத்து நஞ்சு தடவிய அம்பினை அவன் மீது எய்துவிடச் செய்யுங்கள். அவனது உடலைத் தீண்டிய இந்த அம்பு அவனைக் கொல்ல வேண்டியது இல்லை. அவனைக் கொல்ல அதில் தடவப்படும் சில துளிகள் நஞ்சே போதுமானது!’’ என்றான்.

அந்த நஞ்சுக் குப்பியை வாங்கிக் கொண்ட வைதீகரான மாளிகைத் தலைவர், ‘‘தொலைந்தான் செங்குவீரன்! இன்றோடு இரும்பிடர்த்தலையனின் அனைத்து நம்பிக்கைகளும் நொறுங்கப் போகிறது என்று முன்புறம் மட்டும் வழித்திருந்த அவரது தலையைத் தடவியபடியே பேய்ச் சிரிப்பு சிரித்தார். அந்தச் சிரிப்பில் அவரது கனவுகள், நம்பிக்கைகள் என அனைத்தும் வந்து போயின.

சேந்தன், மாளிகைத் தலைவரிடம் ‘‘நேற்றிரவு சம்பாபதி வனத்தில் சில கள்வர்களுக்கும், காவலர்களுக்கும் பெரும் யுத்தம் நடந்திருக்கிறது. அந்தச் சண்டைக் களத்தைப் பார்த்தபோது எனது உயிரே ஒரு கணம் நடுங்கிவிட்டது. கள்வர்கள் பலர் தங்களது உயிரை விட்டிருந்தனர். அவர்கள் கொல்லப்பட்டிருந்ததைப் பார்த்தாலே, அது செங்குவீரனின் நேர்த்தியான தாக்குதல்தான் என்பதைப் புரிந்துகொள்ளலாம். வலி இல்லாமல் அனைவரையும், எந்த வித சிரமமும் படாமல் ஒரே வீச்சில் ஒவ்வொருவருடைய உயிரையும் வாங்கியுள்ளான். அங்கு வீழ்ந்து கிடந்த அந்தக் காட்சியை இப்போது நினைத்தாலும் மனம் பதை பதைக்கிறது!’’ என்று கூறி அமைதியானவன் பின்னர்ச் சில கண நேர மௌனத்திற்குப் பின்னர் ‘‘நஞ்சுக் குப்பியோடு வந்த எனக்கு அந்த யுத்த களத்தைப் பார்த்தபின் ஒரு யோசனை தோன்றவே அதனை வேந்தனிடம் தெரிவித்தேன். உடனே வேந்தனும் அவனது கழுத்தில் அணிந்திருந்த கணிகையர் அணியும் விறலி மாலையை அங்கு மாய்ந்து கிடந்த கள்வன் ஒருவனை அடையாளம் கண்டு, அந்த மாலையை அவனுக்கு அணிவித்து விட்டான்’’ என்றான்.

தொடர்ந்த வேந்தன், ‘‘நிச்சயம் செங்குவீரன் தப்பிய கள்வர்களைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளக் கணிகையர் விடுதிக்கு வருவான். அப்படிக் கணிகையர் மாளிகைக்குள் நுழைந்தவன்’’ என்று கூறிக்கொண்டிருந்த போதே ‘‘மீண்டும் அவன் அங்கிருந்து உயிரோடு திரும்ப மாட்டான்’’ என்று கூறியபடியே பலமாகச் சிரித்தார் பாகவதன்.

மாளிகைத் தலைவரிடமிருந்த வேந்தனும், சேந்தனும் சேர்ந்துகொண்டு செங்குவீரனை வீழ்த்திவிட்டது போன்றே எண்ணி மூவரும் கூட்டாக நீண்ட நேரம் சிரித்துக் கொண்டிருந்தனர்.

சிரிப்பிற்கிடையில் பாகவதன், ‘‘உமக்கு எப்படி இந்த விறலி மாலை கிடைத்தது? என்று வேந்தனைப் பார்த்து கேட்டார். அதற்கு அவன் வெட்கப்பட்டுச் சிரித்துக் கொண்டே, ‘‘நேற்று என் காதலி பிரியும் போது என் கழுத்தில் அணிவித்தாள்’’ என்றான்.

வெற்றிக் களிப்பை அடைந்துவிட்டது போன்றே உணர்ந்த மாளிகைத் தலைவர், வளவனார் மகள் வானவல்லியும், வேளாதன் மகள்

பத்திரையும் இரவில் திரும்புகிறார்கள் என்பதை அறிந்த நான் தான் எனது மகன் அக்னிபுத்திரனிடம் கூறி காளனை வைத்துத் தாக்கச் சொன்னேன். செங்குவீரன் நிச்சயம் அவர்களைக் காக்க வருவான். செங்குவீரன் மற்றும் காளன் என இருவரில் யார் சண்டையில் மாய்ந்தாலும் இரும்பிடர்த்தலையனுக்குத் தான் இழப்பு. நமக்கு இலாபம் அதிகம். நேற்றைய சண்டையில் காளனுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி ஏதும் தெரியாது. ஆனால் நேற்றைய யுத்தத்தின் விளைவு மற்றும் உங்களின் சாமர்த்திய செயல்களால் செங்குவீரனுக்கு இன்று நிச்சயம் முடிவு ஏற்படப் போகிறது என்பது மட்டும் உறுதி.

நான், வளவனாரின் மகளைக் கவர்ந்தால், நண்பன் திவ்யனை இழந்து வாடும் செங்குவீரனின் சொச்ச உயிர் நாடியையும் காதலியைப் பிரித்து அடக்கிவிடலாம் என்று திட்டம் போட்டேன். ஆனால் அவனது மொத்த உயிரையும் இன்று இந்த மரக் குப்பியில் அடைத்துவைத்துள்ள நஞ்சு குடிக்கப் போகிறது'' என்று கூறியபடி சிரித்தார்..

அப்போது இடைமறித்த சேந்தன், ''வேதங்களையும், மனு சாஸ்திரப் புத்தகங்களையும் கற்ற பெரும் பண்டிதரான தங்களிடம் நான் ஒன்று கேட்கிறேன் வைதீகரே, செங்குவீரனைப் போன்ற பெரும் வீரனை இப்படி வஞ்சகமாக நஞ்சினால் கொல்வது முறைதானா? தர்மம் தானா? என்று கூறுங்களேன்'' என்றான்.

அவனுக்குப் பதிலளித்த வைதீகர் ''வீரனே, உமது கேள்வியும் அதில் உள்ள நியாயமும் எனக்குப் புரிகிறது. வீழ்த்த முடியாத எதிரிகளை இப்படி அழிப்பது ஒன்றும் அதர்மமாகாது. குருச்சேத்திரப் போரில் கூடப் பாண்டுவின் புதல்வர்கள் போர் தர்மத்தைக் கடைபிடித்தா கௌரவர்களை வீழ்த்தினார்கள்? கண்ணனின் ஆலோசனைப் படி சேற்றில் சிக்கிய தேரை கர்ணன் தூக்கிக்கொண்டிருக்கும் போது தர்மத்தைக் கடைபிடித்தா அருச்சுனன் கர்ணனை கணையினால் சாய்த்தான். கதைப் போரில் இடுப்பிற்குக் கீழே தாக்கக் கூடாது என்பது விதி, அந்த விதியைக் கடைபிடித்தா பீமன் துரியோதனை இடுப்பில் அடித்துத் தொடையைப் பிளந்து கொன்றான். இராமர்

கூட அழிக்க முடியாத வீரனான வாலியை மரத்திற்குப் பிறகு மறைந்திருந்தே கணையைத் தொடுத்து வீழ்த்துவார்.

வீரர்களே, நமது இலக்கு வெற்றி மட்டுமே! நமது நோக்கமும் உயர்ந்தது. நாம் வெற்றி பெற்ற பின்னர் நாம் செய்த அனைத்து செயல்களும் போர்த்தந்திரமாகப் பாடம் படிக்கத் தொடங்கிவிடுவார்கள். நாம் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டுமெனில் வெற்றி மட்டுமே நமது இலக்காக அமைய வேண்டும். நமது உயர்ந்த இலக்கான அந்த வெற்றியை நாம் எந்த வகையில் அடைந்தாலும் அது அதர்மமாகாது. ஆக, எது செய்தாலும் துணிந்து செய்யுங்கள். பாவம், அதர்மம் என்று சோர்வடைய வேண்டாம். மனு சாஸ்திரமும் உயர்ந்த வெற்றிக்காக யாரையும் களப்பலி கொடுக்கலாம் என்கிறது. குருச்சேத்திரப் போரில், சாமுத்திரிகா இலட்சணத்தில் பிறந்த அருச்சுனனின் மகனான அரவானைப் பலியிட்டே போரைத் தொடங்கிப் பாண்டவர்கள் வெற்றி பெற்றார்கள். ஆகப் போர் தர்மத்தில் இது சரி, இது தவறு என்று எதுவுமே கிடையாது வீரர்களே. போரின் முடிவு மட்டுமே பேசப்படும். குருச்சேத்திரப் போரில் ஒருவேளை கௌரவர்கள் வெற்றிப் பெற்றிருந்தால் அவர்களது செயல்கள் அனைத்தும் சரியானதென்றும், தர்மமானதென்றும் கூறியிருப்பார்கள். போருக்கு முன்னர்ச் செய்யும் செயல்களைப் பற்றிக் கவலை வேண்டாம். அவை அனைத்தும் வெற்றியின் புகழில் மறைந்துவிடும். நமது கொலைகள் அனைத்தும் போருக்கு முன்னதாகக் கொடுக்கப்படும் களப்பலி என்றே எண்ணிக்கொள்ளுங்கள்.

வீரனே, நீ செய்யும் எந்தச் செயலைப் பற்றியும் இப்போது கவலை கொள்ளாதே. உமது சிந்தனை, செயல் என அனைத்தும் இப்போது போர் வெற்றியைப் பற்றியதாகவே இருக்க வேண்டும் என்பதில் மட்டும் குழப்பமில்லாமல் தெளிவாக இரு!" என்று உபதேசித்தார்.

மேலும் சிறிது மௌனத்திற்குப் பின், "இருவரும் எனக்கு இன்று பெரும் மகிழ்ச்சிகரமான செய்திகளைக் கூறியுள்ளீர்கள். ஆதலால் நீங்கள் இருவரும் விருந்துண்ட பின்பே இங்கிருந்து கிளம்ப வேண்டும். இது எனது கட்டளை!" என்றார்.

“இன்னொருநாள் தங்களது உபசரிப்பை ஏற்றுக் கொள்கிறோம். இன்று நடைபெறப்போகும் நமது தலைவரின் முடி சூட்டும் நிகழ்வைக் காண எங்களது கண்கள் துடித்துக் கொண்டிருக்கிறது, இன்னும் பொழுது புலரவில்லை. இப்போது கிளம்பினால் தான் சம்பாபதி வனத்தைக் கடந்து இரு புரவிகளைச் சம்பாதித்துக் கொண்டு நேரத்திற்கு உறைந்தையை அடைய இயலும்” என்றான் வேந்தன்.

குறுக்கிட்ட மாளிகைத் தலைவர், “அப்படியெல்லாம் நீங்கள் மறுத்துச் செல்லக் கூடாது வீரர்களே, வீட்டிற்கு வந்தவர்களைப் பசி மற்றும் களைப்போடு அனுப்பினால், அது எமக்குப் பாவத்தைச் சேர்ப்பித்துவிடும். நீங்கள் உண்பதற்குப் பல காலம் ஆகிவிடாது. மகிழ்ச்சியான செய்தியைக் கூறிய பின்னர்த் தாங்கள் இருவரும் களைப்போடும், பசியோடும் செல்வதை என்னால் அனுமதிக்க இயலாது. உங்களுக்கு நீராட வெந்நீர், உணவு மற்றும் சமைத்த மாமிசம் [3] என அனைத்தும் தயாராகவே உள்ளது. உண்ட பின்னர்க் கிளம்புங்கள்” என்று கட்டளையிட்டுவிட்டு “சத்தமிட்டோ அல்லது வெளியிலோ நீங்கள் இருவரும் நடமாட வேண்டாம். இங்கேயே அனைத்தும் வரும். நான் வெளியே சென்று மாளிகையில் அனைவரும் துயில் களைந்து எழுந்து விட்டனரா என்று பார்த்துவிட்டு உங்களுக்கு வேண்டியது அனைத்தையும் ஏற்பாடு செய்கிறேன்” என்று கூறிவிட்டு அந்த இரகசிய நிலவறையிலிருந்து வெளியே கிளம்பினார்.

வெளியே சென்ற மாளிகைத் தலைவரான பாகவதன் திரும்பி இரகசிய நிலவறைக்கு வருகையில் வேந்தனும், சேந்தனும் நீராடலை முடித்துவிட்டு அரிசி உணவுடன் பல வித கவிச்சை உணவுகளான புரவி, பசு, ஆட்டு இறைச்சிகள் அடங்கிய உணவினை ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்ததைக் கண்டார்.

மாளிகைத் தலைவர் சிரித்துக் கொண்டே, “என்ன வீரர்களே! உணவே வேண்டாம் என்று கூறினீர்கள். இப்போது என்னவென்றால் கொண்டு வந்த உணவு காணாது போலிருக்கிறதே?” என்று அவர்களைப் பரிகாசம் செய்து சிரிக்க ஆரம்பித்தார்.

உண்டுகொண்டிருந்த வேந்தன், ‘‘வைதீகரே, உண்ணும்போது கண் வைக்காதீர்கள். பிறகு பயணத்தில் ஏதேனும் வயிறு பிரச்சனை ஏற்பட்டால் பயணம் மிகவும் இடையூறாகிவிடும். சற்று நேரம் அப்படித் திரும்பிக் கொண்டிருங்கள். நாங்கள் சிற்றுண்டியை முடித்துவிட்டு வந்துவிடுகிறோம்’’ என்று கூறிய படியே மேலும் சில இறைச்சித் துண்டுகளைக் கொள்ளாத வாயில் திணித்தான்.

வேந்தனும், சேந்தனும் காலை உணவைப் பரிதி உதிப்பதற்கு முன்பே முடித்துவிட்டு கிளம்பினர். சேந்தன் ‘‘நாங்கள் விடைபெறுகிறோம் வைதீகரே! இரும்பிடர்த்தலையனின் இரு பெரும் நம்பிக்கைகளான இளவரசன் வளவன் உறைந்தையிலும் செங்குவீரன் புகாரிலும் மடியப்போகிறார்கள். நமது திட்டங்கள் சரியாகச் செயல்படட்டும். செங்குவீரன், புதிதாக நியமிக்கப்படும் கோட்டைத் தலைவனிடம் சரணடைந்து விட்டால் கைது செய்து சிறைக் கோட்டத்திலேயே அவனது கதையை முடித்துவிடுங்கள். இல்லையேல் கணிகையர் விடுதிக்கு விறலியின் மாலையோடு வரும் அவனை நஞ்சு தடவிய அம்பினால் அவனது கதையை முடித்துவிடுங்கள். எப்படி நடந்தாலும் இன்று பரிதி மறைவதற்குள் அவனது உயிர் உடலிலிருந்து பிரிக்கப்பட வேண்டும். மிகவும் எச்சரிக்கையாக நஞ்சினை கையாளச் சொல்லுங்கள்!’’ என்று கூறிவிட்டுக் கிளம்பினர்.

அவர்கள் கிளம்புவதைப் பார்த்த மாளிகைத் தலைவர் இருவரிடமும் ‘‘பொழுது புலரப் போகிறது. அனைவரும் துயில் களைந்துவிட்டார்கள். ஆதலால் தாங்கள் தோட்டத்திற்குச் செல்லாமல் வலது புறமாகச் சென்று குட்டிச் சுவரைத் தாண்டினால் சம்பாபதி வனத்தை அடைந்துவிடலாம். எச்சரிக்கையுடன் செல்லுங்கள்!’’ என்று கூறிக்கொண்டே பார்வையை அவர்கள் உணவுண்ட இடத்தைப் பார்த்தவுடன் ‘‘நில்லுங்கள் வீரர்களே. எதையோ மறந்துவிட்டுச் செல்கிறீர்கள்’’ என்று அழைத்தார்.

துணியில் மறைத்துச் சுற்றப்பட்டிருந்த ஒரு முத்துமாலையையும், ஓலையையும் சுட்டிக்காட்டினார். அவர் வைதீக ஆச்சார்யங்களை முழுமையாகக் கடைபிடிப்பவர். ஆதலால் அவர்களைத் தனது மாளிகைக்கு அழைத்து உணவிட்டாலும் அவர்கள் வைத்திருக்கும் பொருள்கள் மற்றும்

உடமைகளைத் தொடாமலே அவர் சுட்டிக் காட்டியதை உணர்ந்த வேந்தன், “வைதீகரே, மன்னித்துக் கொள்ளுங்கள். நமது மன்னர் இருங்கோவேள் தங்களுக்கு வாக்களித்தது போல், தங்களது மகனைப் படைத் தலைவராக நியமித்துப் பிரமாண ஓலையை வழங்கியுள்ளார். செய்தியைக் கூறிய நாங்கள் ஓலையை வழங்க மறந்துவிட்டோம். மேலும் இன்றே இந்த ஓலையை எடுத்துக்கொண்டு புகார் கோட்டைக்குச் செல்ல வேண்டாம். புகார் நிலைமையைக் கண்ட பின்னர், ஒரு கிழமை கழித்துப் பதவி ஏற்றுக்கொள்ளச் சொல்லுங்கள் என்பது மன்னரின் ஆணை” என்றபடியே ஓலையை நீட்டினான்.

வைதீகரான பாகவதன் அந்த ஓலையைத் தனது கைகளால் வாங்காமல் அருகில் இருந்த மரப் பலகையின் மீது ஓலையை வைக்கச் சொல்லி அருகில் சொம்பில் இருந்த ஜலத்தை எடுத்து மந்திரங்களை ஓதிய படியே அதன் மீது தெளித்துப் பின் அந்த ஓலையை எடுத்து வாசிக்கத் தொடங்கினார். வாசித்துவிட்டு, மகிழ்ச்சியுடன் ஓலையைக் கண்களில் ஒத்திக்கொண்ட படியே வேந்தனின் கைகளில் துணியோடு தொங்கிய முத்துமாலையைக் கவனித்தார்.

அவனது கைகளில் தொங்கிய முத்து மாலையைப் பார்த்த அவருக்குத் தனது இதயத் துடிப்பே ஒருகணம் அடங்கிவிட்டதைப் போன்று உணர்ந்தார். தனது பிராமண ஆச்சார்யங்கள், மந்திரங்கள் என அனைத்தையும் அந்தக் கணத்தில் மறந்து வேந்தனின் கைகளில் துணியோடு தொங்கிய சிவப்பு நிறக் கல் பதித்த முத்துமாலையைக் கையில் வாங்கி, “இந்த முத்து மாலை தங்களுக்கு எங்கிருந்து கிடைத்தது?” என வினவினார்.

அவருக்குப் பதிலளித்த வேந்தன், “இறந்து கிடந்த கள்வனின் கழுத்தில் விறலி மாலையை அணிவிப்பதற்கு முன்னர் அவனது கழுத்திலிருந்து இந்த முத்து மாலையைக் கழட்டினேன்” என்றான்.

அதனைக் கேட்ட மாளிகைத் தலைவர் வைதீகர் அந்தப் பெரும் மாளிகையே இடிந்து அவரது தலையில் விழுவது போல உணர்ந்து, “மகனே அக்னிபுத்திரா!” என்று நிலைகுலைந்து சரிந்து, மகனே உனக்கா இந்த நிலை வர வேண்டும்?” என்று கதறினார்.

நிலைகுலைந்து கீழே விழுந்த பிராமணரை சேந்தனும், வேந்தனும் தூக்கி, அவருக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் முழி பிதுங்கி ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு விழித்தனர்.

வைதீகர், “இப்பொழுதுதான், எமது நீண்ட நாள் கனவு நிறைவேறியது என்று பெரும் மகிழ்ச்சி கொண்டேன். அனால் அந்த மகிழ்ச்சியினால் ஏற்பட்ட ஆனந்தக் கண்ணீரின் தடம் அழிவதற்குள் எனது மகனின் மரணச் செய்தியை அறிய வேண்டியதாகி விட்டதே! விஷ்ணுவே, உருத்திரா, உங்களுக்கு நான் இதற்குத்தான் வேள்விகள் செய்தும் பலி கொடுத்தும் வழிபடுகிறேனா?” என்று கலங்கினார்.

“நேற்று நான் எனது மகனிடம் வானவல்லியையும், பத்திரையையும் காளனிடம் கூறித் தாக்கச் சொல். ஆனால், நீ அங்கு எந்தச் சூழ்நிலையிலும் செல்ல வேண்டாம் என்று ஆணையிட்டிருந்தேன். எனது சொல் கேட்காமல் அவன் சென்று இப்படி அகால மரணத்தை அடைந்துவிட்டானே! பாவி!!!” என்று அழுது புலம்பினார்.

திடீரென்று, அவர் தனது கண்களைத் துடைத்துக் கொண்டு “வேந்தா நமது மன்னர் இருங்கோவேளிடம் கூறிவிடு இன்று பரிதி அஸ்தமனம் ஆகுவதற்கு முன் செங்குவீரனும் அஸ்தமனமாகிவிடுவான். நான் இப்போது மகனை இழந்து எப்படித் தவிக்கிறேனோ அப்படி இரும்பிடர்த்தலையன் சோழ இளவரசனை இழந்து அவனும் தவிக்க வேண்டும். நாளை பரிதி உதயத்தைக் காண செங்குவீரனும், சோழ இளவரசனும் உயிரோடு இருக்கக் கூடாது” என்று கோபத்தோடு கூறிய படியே அவரது இடுப்பில் இருந்த குறுவாளை எடுத்து “மகனே உன்னை அழித்த அந்தச் செங்குவீரனை நான் உயிரோடு விடமாட்டேன், இது உன் ஆன்மா மீது ஆணை” என்றபடியே குறு வாளை தூர வீசினார். அது நேரே இருந்த தூணில் ஆழப் பதிந்து அதிர்ந்து கொண்டிருந்தது.

**அடிக்குறிப்பு**

1. சோழற்கு மணிமுடியை சூட்டுவது அந்தணர்கள் தான் என்பதைக் கூற்றுவ நாயனார் புராணம் (4,5) மூலம் அறிந்து கொள்ளலாம்.

தொல்லை நீடுங்குல முதலோர்க் கன்றிக் கட்டோம் முடி — கூற்றுவ நாயனார் புராணம்.

சமண சமயத்தைச் சார்ந்த களப்பிரர்கள் தமிழத்தை கி.பி 3 ம் நூற்றாண்டில் கைப்பற்றி ஆளத் தொடங்கிய போது அவர்களின் குலத்தைச் சார்ந்த சைவர்களான கூற்றுவர்கள் சோழ தேசத்தைச் சோழ மணி முடி தரித்து ஆள விரும்பியபோது, சோழ குலத்தில் பிறக்காத ஒருவனுக்கு நாங்கள் சோழ மணிமுடியை சூட்ட மாட்டோம் என்று மணி முடியை பாதுகாப்பாக மறைத்துவைத்து விட்டு சேர தேசம் சென்று விட்டனர் அந்தணர்கள். இந்த அந்தணர்கள் எனப்பட்டவர்கள் அரசற்கு ஆலோசனை வழங்கும் அமைச்சர்கள் என்றே நாம் பொருள் கொள்வோம். **ஆதாரம்:** களப்பிரர் ஆட்சியில் தமிழகம்— ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கட சாமி. பக்கம் —26.

2. தொல்காப்பியம் மற்றும் திருக்குறளில் கூறப்பட்டுள்ள அந்தணர்கள் என்பவர்கள் ஆரிய வைதீகர்கள் கிடையாது. ஆரிய பிராமணர்களுக்கு அக்காலத்தில் வைதீகர்கள் என்று பெயர் அதாவது அவர்களது மதம் வைதீகம். ஆனால் அந்தணர் என்பவர்கள் பிராமணர்கள் அல்லர். அந்தணன் என்றால் அம்+தண்+அன் என்றால் அழகிய குளிர்ந்த அருளுடைய முனிவர் என்று பொருள். அருள் குணம் என்பது அருளுடைமை, கொல்லாமை, புலான் மறுத்தல் என்று வள்ளுவம் கூறுகிறது. அவர்களையே வள்ளுவர் பெரியோரை துணைக்கோடல், பெரியோரை பிழையாமை என்று மதித்துப் போற்றுகிறார். இவர்களே அரசனுக்கு உதவியாக, அமைச்சராக, ஆலோசகராக இருந்துள்ளனர்.

ஆரியர்களின் மனுதர்ம நீதிப்படி வைதீகர்களுக்கு அருள் கிடையாது. ஒழுக்கம் அற்றவர்களைக் கூட முனிவர் என்று கூறுவது ஆரியர்களின் மரபு. அஜீகர்ததரென்னும் முனிவர் பசியால் வாடியபோது அவர் தன் மகனையே வேள்வியில் பலியிடும் படி நூறு பசுவிற்கு விற்றார். பசிக்கு மாற்றம் செய்தபடியால் அவருக்குப் பாவம் நேராது என்று மனு நூல் விளக்குகிறது.

வைதீகர்களுக்குத் திருமணத்திற்கு முன் பிரமச்சர்யம், துறவறத்தின் முற்பகுதி வானகத்தில் குடும்ப வாழ்க்கை என்று கூறப்படுவதால் அவர்கள் எந்த நிலையில் ஒழுக்கம், நெறி இல்லாமல் எப்படி வாழ்ந்தாலும் அவர்கள் தங்களை முனிவர்கள் என்றே அழைத்துக்கொள்வார்கள். ஆகவே அந்தணன் என்று கூறும் ஒழுக்கம், பண்பு, அருள் நிறைந்த முனிவர்கள் எனப்படுபவர்கள் வேறு. வைதீகர்கள் எனப்படுபவர்கள் வேறு.

இந்த ஒழுக்கம் மற்றும் நெறித் தவறாத அந்தணர்கள் தான் அரசன் இல்லாத காலத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தினர். ‘அந்தணாளர்க் கரசுவரை வின்றே’ என்று குறிப்பிடப்படுகின்றனர். இளஞ்சேட்சென்னி இறந்த பின் இரும்பிடர்த்தலையர் மற்றும் இரண்டாம் குலோத்துங்கன் மணமானபின் சில மாதங்கள் ஒட்டக்கூத்தர் ஆட்சிப் பொறுப்பினை ஏற்று நடத்தினர் என்றும் இந்த வகையில் தான் கூறுவார்கள். நமது கதை கி.மு இரண்டாம் நூற்றாண்டில் (தோராயமாக கி.மு 175ம் ஆண்டு) நடைபெறுவதால் அந்தணர்கள் என்பவர்கள் அருள் நிறைந்த தமிழகப் பெரியோர்கள் என்றே ஆரியர் அல்லாமல் பொருள் கொள்ள வேண்டும்.

பிற்காலத்தில் ஆரியருள் முனிவர் போன்று நெறி தவறாமல் வாழ்ந்தவர் அந்தணர் என்றும் பிறர் எல்லாம் பார்ப்பனர் என்றும் அழைக்கப்பட்டனர்.

3. வைதீகர்கள் எனப்படும் பிராமணர்கள் அசைவப் பிரியர்கள். கி.பி. எட்டாம் அல்லது கி.பி ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பிறகு தான் சமண மற்றும் பௌத்த மதங்களின் கடும் தாக்கங்களினால் அது தனது அடிப்படைக் கொள்கையான அசைவத்தை விட்டுக்கொடுத்து சைவமாக மாறியது.

# 14. சலசலப்பு

சோழ தேசமே அரசியல் சிக்கலில் அகப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் புகார் கோட்டைக்கு வந்திருந்த இரும்பிடர்த்தலையர் அதைப் பற்றிக் கவலைப்படாமல் விறலிக் கூத்தைக் கண்டுகளித்துக்கொண்டிருந்தார். அவர் அரச தோரணை ஏதுமின்றி சாதாரணமாக அங்கே அமர்ந்திருந்தார். அப்போது அங்கு வந்த மகேந்திர வளவனார், “இரும்பிடர்த்தலையரே... சோழ நாடே அரசியல் சிக்கலில் பீடித்திருக்கிறது. இளவல் காணாமல் போய்விட்டார். இப்போது விறலிக் கூத்து அவசியம் தானா?” என வினவினார் மகேந்திர வளவர்.

சபையில் அமர்ந்திருந்த முக்கியமானவர்களைத் தவிர மற்றவர்கள் மகேந்திர வளவனார் கூறிய பிறகே அவர்தஅன் இரும்பிடர்த்தலையர் என்று அறிந்துகொண்டார்கள். அவரது திடகார்த்தமான, இராட்சச உடலும், அதற்கேற்ற அவரின் உயரமும், அவரின் உடலின் தசைகளும் நன்றாகக் கெட்டிப்பட்டு இறுகி உறுதியோடு கம்பீரமாகக் காட்சியளித்தார் அவர். அவர் அணிந்திருந்த மேலங்கியும், அவரது இடுப்பில் கட்டியிருந்த சில முழ துணியும் பூ மற்றும் சரிகை வேலைப்பாடுகள் ஏதும் இன்றி, வெறுமையான கழுத்தோடு எந்தவித படாடோபமும் இன்றி எளிமையான மனிதராகத் தோன்றினார். அவரது முகத்தில் அகன்றும், கூர்மையாகவும் இருந்த கண்களின் கம்பீரத்தையும், அவரது கருத்த தடித்த உதடுகளில் இருந்த புன்னகையையும், பெருத்துக் கன்னம் வரை நீண்டு முறுக்கேறியிருந்த மீசையும், அவரது இரும்பு போன்ற தலையிலிருந்து நீண்டும், சுருண்டும் சுருள் சுருளாக இரும்புக் கம்பிகளைப் போன்று தடிமனாகத் தொங்கிய அவரது கேசரங்களையும் கண்டவர்கள் அவர்தான் அரசன் இறந்தபிறகு சோழ தேசத்தையும், சோழ இளவலையும் எதிரிகளிடமிருந்து பல வருடங்களாகக் காப்பாற்றி வரும் பெரும் புலவர் இரும்பிடர்த்தலையராக இருப்பார் என்று கனவிலும் கூட எண்ணிப் பார்த்திருக்கமாட்டார்கள். அவ்வளவு எளிமையாகத் துறவியைப் போன்றே காட்சியளித்தார்.

இத்தகைய எளிமையான மனிதர் தான் சோழ தேசத்தின் பெரும் செல்வாக்கு மிகுந்த பெரும் புலவரான இரும்பிடர்த்தலையர் என்ற உண்மை சபையில் இருந்தவர்களுக்குத் தெரியாது. சோழ தேசத்தில் வசித்த பல வீரர்களும், புலவர்களும் இத்தகைய பெரும் மனிதரை காண்பதே பெரும் பாக்கியம் என்று நினைத்தனர். வளவனார் பிடர்த்தலையரே என்று அழைத்ததிலிருந்து அவர்தான் இரும்பிடர்த்தலையர் எனச் சபையில் வீற்றிருந்த வீரர்களும், புலவர்களும் சான்றோர்களும் அறிந்து பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். சபையில் கூத்து கட்டிய விறலியும், வேலனும் தாம் சோழ தேசத்தின் மாபெரும் அறிஞரும், வீரருமான இரும்பிடர்த்தலையரிடமிருந்து தான் பாராட்டையும் பரிசையும் பெற்றோம் என அறிந்ததும் பெரும் மகிழ்ச்சியடைந்தனர்.

சபைத் தலைவராக வீற்றிருந்தவர் இரும்பிடர்த்தலையர் என்று மகேந்திர வளவனாரின் மூலம் அறிந்ததன் மூலம் இருக்கையிலிருந்து அனைவரும் எழுந்துவிட்டனர்.

ஆனால், வளவனார் அவரைப் பிடர்த்தலையரே என்று ஒருமையில் அழைத்தது அனைவருக்கும் ஆச்சர்யமாக அமைந்தது. அவர்கள் அதிர்ச்சியில் இருந்து மீளுவதற்குள் வளவனார், இரும்பிடர்த்தலையரை நோக்கி அடுத்தடுத்து வீசிய கேள்விகளும் அவர்களை அதிர்ச்சியில் உறைய வைத்தது.

பத்திரை மற்றும் வானவல்லி காளனால் தாக்கப்பட்டதைப் பற்றிப் புகார் நகரத் தலைவரிடம் முறையிடவே மகேந்திர வளவனார் கோட்டைக்கு வந்தார். அவர் யாருடையை அனுமதியையும் எதிர்பார்க்காமல் கோட்டைக்குள் நேராகப் பிரவேசித்தமையால், ஏற்கெனவே காவல் வீரர்களுக்குக் கோட்டைக்குள் அனுமதியின்றி யாரையும் பிரவேசிக்க அனுமதிக்கக் கூடாது என்று பிரத்யேகமான கட்டளை இடப்பட்டிருந்ததனால் வளவனாரை அனுமதிக்கவும் இயலாமல் அவரைத் தடுக்கவும் துணிவில்லாமல் அவரைப் பின் தொடர்ந்த படியே யவன மற்றும் புகார் நகரக் காவல் வீரர்கள் காவல் தலைவரின் கட்டளையை எதிர்பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தனர்.

கோட்டைக்குள் இரும்பிடர்த்தலையரின் வரவேற்பை ஏற்காமல் மகேந்திர வளவனார் கொண்ட கோபம் இரும்பிடர்த்தலையருக்கு எந்தவொரு ஆச்சர்யத்தையும் அளிக்கவில்லை.

சோழ தேச நிலையைப் பற்றியோ, காளனைப் பற்றியோ எழுப்பிய கேள்விகளை விடச் சோழ இளவல் காணாமல் போனது பற்றி வளவனார் எழுப்பிய கேள்வி அவருக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்தது.

இதுவரை யாருக்கும் தெரியாத பெரும் இரகசியம் என்று எதனைக் கருதிக்கொண்டிருந்தாரோ, அதுபற்றி வளவனார் இரும்பிடர்த்தலையரிடம் எழுப்பிய கேள்வி அவருக்குப் பேரதிர்ச்சியாக அமைந்தது. வளவனாரின் கோபத்தைக் கண்ட இரும்பிடர்த்தலையர் தனது முகத்தில் எந்தவித மாற்றத்தையும் காட்டிக் கொள்ளாமல் சிரித்தபடியே ‘‘சபை கலையட்டும்!‘‘ என்று உத்தரவிட்டார்.

சபையில் அமர்ந்திருந்த புகார் நகரத் தலைவர், கோட்டைத் தலைவர், சான்றோர்கள், பெரியோர்கள் அவர்களுடன் பரிசு பெற்ற விறலி, அவளது கணவன் வேலன் என அனைவரும் சபையை விட்டுக் களைந்தனர். ஈழவாவிரையரும் எழுந்து நடக்கவே இரும்பிடர்த்தலையர் அதிகாரத்துடன் ‘‘அடிகளே தாங்கள் செல்ல வேண்டிய அவசியமில்லை!‘‘ என்று கட்டளையிட்டார்.

சபையிலிருந்து இருவரையும் கோட்டையின் மேல் தளத்திலிருந்த இரகசிய அறைக்கு அழைத்துச் சென்றார் இரும்பிடர்த்தலையர். மூவரும் அமர்ந்த பிறகு காலியாக இருந்த மற்றொரு இருக்கையைப் பார்த்து வளவனார் மற்றும் ஈழவாவிரையர் என இருவரும் ‘இந்த இருக்கை யாருக்காக வெறுமையுடன் இருக்கிறது?’ என்பதைக் கேட்பது போல இரும்பிடர்த்தலையரின் முகத்தை நோக்கினார்கள்.

இருவரது பார்வையில் உள்ள கேள்வியைப் புரிந்து கொண்ட இரும்பிடர்த்தலையர் ‘உங்கள் கேள்விகளுக்குச் சரியான பதில் வாயிலைப் பாருங்கள் தெரியவரும்’ என்பது போல வாசலை நோக்கினார்.

இதுவரை விறலியின் நடனம், வளவனாரின் வருகை, அதன் பின் நடந்த நிகழ்வுகள் என அனைத்தையும் யாரும் கவனிக்காத வண்ணம் கோட்டையின் மேல் தளத்திலிருந்த உப்பரிகையிலிருந்து கவனித்துக்கொண்டிருந்த செங்குவீரன் மூவரும் இரகசிய அறைக்குச் செல்வதைப் பார்த்தபின் அவர்களைப் பின் தொடர்ந்து அவனும் அந்த இரகசிய அறைக்குள் பிரவேசித்தான்.

இரும்பிடர்த்தலையர் வாசலை நோக்கவும், செங்குவீரன் இரகசிய அறைக்குள் நுழையவும் நேரம் கச்சிதமாகப் பொருந்தியது.

அறைக்குள் நுழைந்த செங்குவீரனை இரும்பிடர்த்தலையர் காலியாக இருந்த இருக்கையில் அமரச் சொன்னார்.

மூன்று சான்றோர்களுக்கு முன் அமர முதலில் தயங்கிய செங்குவீரன் இரும்பிடர்த்தலையர் வற்புறுத்தவே மறுப்புக் கூறாமல் அமர்ந்துவிட்டான்.

சிறிது நேரம் நீடித்த மௌனத்தைத் தகர்த்து இரும்பிடர்த்தலையரே முறுக்கேறியிருந்த அவரது பருத்த மீசையைத் தடவிக்கொண்டே பேச ஆரம்பித்தார். “வளவனாரே, தாங்கள் எழுப்பிய கேள்விகள் அனைத்தும் மிகவும் சரியானதுதான். ஆனால் நீங்கள் இளவல் பற்றிச் சபையில் அனைவரின் முன்பும் கேள்வி கேட்பீர்கள் என்று நான் எதிபார்த்திருக்கவில்லை.

சில வருடங்களுக்குப் பிறகு தாங்கள் கோட்டைக்கு வந்துள்ளது எனக்குப் பெரும் மகிழ்ச்சியளிக்கிறது. நாட்டில் சோழர்களுக்கு எதிராகப் பல சூழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கும் போது விறலியின் ஆடலிலும், புலவர்களின் கவித்திறனிலும் நான் திளைத்திருப்பதாகத் தாங்கள் எண்ணுவது மிகவும் தவறு வளவனாரே.

நாட்டில் போர், சூழ்ச்சி, கலகம் என அனைத்தும் எப்போதும் மலிந்தே காணப்படும். அதற்காக விறலிகளையும், பாணர்களையும், கூத்தர்களையும், புலவர்களையும் ஆதரித்துப் பாராட்டவில்லை எனில் கலைகளும், இலக்கியமும் அழிந்து போகும். நான் ஒரு புலவனாக இருந்து

கொண்டு அவர்களை ஆதரிக்கவில்லை எனில் யார் தான் அவர்களை ஆதரிப்பார்கள் மகேந்திர வளவனாரே?

அரசியல், போர்களில் இருந்து தாங்கள் முழுவதும் விலகியிருப்பதாகத் தான் நான் இதுவரை நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் சற்று முன்பு நீங்கள் என்னிடம் ஒரு கேள்வி கேட்டீர்கள் அல்லவா, அதிலிருந்து எனது எண்ணம் முழுவதும் தவறு என்பதைப் புரிந்துகொண்டேன் நான். தாங்கள் முற்றிலும் விலகி இருந்தாலும் தங்களது சிந்தனை அனைத்தும் சோழ அரசின் நலனிலேதான் உய்த்திருக்கிறது. இளவரசன் காணாமற் போய்விட்டான் என்றும் தாங்கள் கூறியதிலிருந்தே தாங்கள் சோழ அரசின் நிலையைச் சரியாகப் புரிந்து வைத்துள்ளீரகள் என்பதை நான் புரிந்துகொண்டேன்!" என்றார் இரும்பிடர்த்தலையர்.

"மன்னன் இல்லாத சோழ நாட்டில் தகுந்த அகவை வந்தும் இளவரசன் வளவம் அரசனாகப் பட்டம் சூடாமல் காலம் தாழ்த்தியதில் இருந்து நடக்கும் நிகழ்வுகளை என்னால் யூகிக்க முடிந்தது இரும்பிடர்த்தலையரே!" என்று பதில் அளித்தார் வளவனார்.

"ஆனால், இளவரசனைத் தாங்கள் தான் பாதுகாப்பாக மறைத்து வைத்துள்ளீர்கள் என்று நான் எண்ணிக் கொண்டிருந்தேன் இரும்பிடர்த்தலையரே, இளவலுக்கு என்ன ஆனது?" என்று பதறிக்கொண்டே இடைமறித்தார் அடிகளார்.

"உண்மைதான் அடிகளே! இளவலை நான் தான் எனது மெய்க்காப்பாளர்கள் பாதுகாப்பில் தங்க வைத்திருந்தேன். ஆனால், திடீரென ஒரு நாள் இளவல் எனது மெய்க்காப்பாளர்கள் மற்றும் ஒற்றர்களை ஏமாற்றி அவர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு மறைந்துவிட்டான். அவன் எங்கோ பாதுகாப்பாகத் தான் இருக்கிறான் என்று எண்ணிக் கொண்டிருந்தேன், ஆனால் அவன் தற்பொழுது இருங்கோவேளிடம் அகப்பட்டிருப்பானோ என ஐயம் கொள்கிறேன் அடிகளே!" எனக் கவலை கொண்டார் இரும்பிடர்த்தலையர்.

"தங்களது பாதுகாப்பில் இருந்த இளவல் மறைந்துவிட்டாரா? கேட்பதற்கு ஆச்சர்யமாகவும் அதே சமயம் அதிர்ச்சியாகவும் இருக்கிறது

இரும்பிடர்த்தலையரே! தங்களது பாதுகாப்பிலிருந்து மறையும் அளவிற்கு வல்லமையுடையவரா இளவல்“ என்றார் அடிகளார்.

“இளவல் எனது பாதுகாப்பில் இருந்தபோது அவனைச் சிறைப்படுத்தியது போலத் தான் அவன் உணர்ந்தான். எப்போதும் ஒற்றர்களின் கண்காணிப்பு, மெய்க்காப்பாளர்களின் காவல் என எதையும் அவன் விரும்பவில்லை. மேலும் அவன் நமது காவல் பிரிவில் எதிரிகளின் ஒற்றர்களும் ஊடுருவியிருப்பார்கள் என்று சந்தேகம் கொண்டான். அனைத்தையும் அவன் பல முறை என்னிடம் முறையிட்டிருக்கிறான். நான் எந்தக் காலத்திலும் ஒரு தாய்மாமன் போல அன்பாகவும், அரவணைப்பாகவும் அவனிடம் நடந்து கொண்டதில்லை. அவனிடம் ஒரு ஆசானாகவும், பாதுகாவலனாகவும் தான் நடந்திருக்கிறேன், அவன் அருகில் இல்லாத போது அதனை எண்ணி இப்போது வருந்துகிறேன்! ஒரு வேலை நான் அவனிடம் கண்டிப்பாக இல்லாமல் அன்புடன் நடந்திருந்தால் அவன் என்னை விட்டு மறைந்து இப்படி ஆபத்தில் சிக்கியிருக்க மாட்டான்” என்று வருத்தப்பட்டவர் பிறகு “ஆதலால் அவனே இந்தச் சிறைச்சாலைப் போன்று கடுங்காவல் கொண்ட இருப்பிடம் தேவையில்லை என்று அனைவரையும் ஏமாற்றி மாறுவேடமிட்டு தப்பிவிட்டான்!” என்றார்.

“இளவலுக்கு மாறுவேடம் கொள்ளும் வழக்கம் உள்ளதா?” என்று அதிசயப்பட்டுக் கேள்வி எழுப்பினார் வளவனார்.

“இளவலுக்கு உருவத்தை மாற்றிக்கொள்ளும் வழக்கம் கைவந்த கலை வளவனாரே. நானே ஒரு முறை அவனிடம் ஏமாற்றம் அடைந்திருக்கிறேன். இளவல் அரண்மனையில் பாதுகாப்பிற்கிடையில் வசித்ததை விட மாறுவேடம் பூண்டு சோழ தேசத்தில் சுற்றிய பொழுதுகளே அதிகம். இப்படிப் பல முறை அரண்மனையை விட்டு ஓடியிருக்கிறார். ஓடியவர் தானாக அரண்மனை வந்து சேர்ந்தால் தான் உண்டு, இதுவரை யாராலும் அவரைக் கண்டறிய இயலவில்லை. அவனுக்கு அரண்மனை, காவல் என்றாலே ஒவ்வாமை வளவனாரே, அவன் எப்போதும் சுதந்திரமாக மக்களோடு மக்களாக வாழ்வதையே விரும்புவான். சோழ தேசத்தில் இருக்கும் கிராமங்கள், அங்கு வசிக்கும் மக்களின் நிலை, வீரர்கள், புலவர்கள் என

ஒவ்வொன்றும் அவனுக்கு அத்துப்படி!'' என்று இளவலைப் பற்றி இரும்பிடர்த்தலையர் குறிப்பிட்ட ஒவ்வொன்றையும் அடிகளும், வளவனாரும் தெய்வக்குறி கேட்பது போன்று மெய் மறந்து மெய் சிலிர்க்க அதிசயமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

''தங்களது ஒற்றர்களாலே அறிய இயலாத வளவனை இருங்கோவேள் எப்படிச் சிறைப்படுத்தியிருப்பான் என்று கருதுகிறீர்கள் பிடர்த்தலையரே, இளவல் அவர்களையும் ஏமாற்றி எங்காவது பாதுகாப்பாகத் தான் இருப்பார்'' என்று இடைமறித்தான் விறல்வேல்.

''நாம் கணிப்பதை விட இருங்கோவேளின் செயல்பாடுகள் அதிவேகமாகவும், புத்திசாலித் தனமாகவும் உள்ளது செங்குவீரா. அவனது பலமும், தன்னம்பிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. உறைந்தை முழுவதும் அவனது கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டது. உறைந்தை நகரிலும் பலவித மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. அங்கு இனியும் வசித்தால் ஆபத்து என்பதை உணர்ந்து அங்கிருந்து இரகசியமாக வெளியேறி விட்டேன். இளவல் பாதுகாப்பாக இருந்திருந்தால் நிச்சயம் எனக்கு அவனிடமிருந்து தகவல் வந்திருக்கும். ஆனால் அவன் எப்போது எனது காவலிலிருந்து தப்பிச் சென்றானோ, அதன் பிறகு எனக்கு எந்தத் தகவலும் அவனைப் பற்றிக் கிடைக்கப்பெறவில்லை. ஆதலால் தான் நான் ஐயம் கொள்கிறேன் விறல்வேலா'' என்றார் இரும்பிடர்த்தலையர்.

தொடர்ந்து பேசிய இரும்பிடர்த்தலையர், ''வளவனாரே, நிலைமை எனது கையை மீறிச் சென்றுகொண்டிருப்பதைப் போன்று உணர்கிறேன். இருங்கோவேள் இப்போதே சோழ தேசத்தில் இருக்கும் பல வேளிர்களையும், அமைச்சர்களையும், தளபதிகளையும் அவனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட்டான். உறைந்தையும் முழுவதும் அவன் வசமாகிவிட்டது. இனி இருப்பது ஒரே தளம் அது புகார் தான். ஆதலால் தான் நான் தங்களைச் சந்திக்க வந்தேன். தாங்கள் உடனடியாகப் புகார் நகருக்குத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும், இனி நீங்கள் தான் புகாருக்குத் தலைவர்'' என்றார் இரும்பிடர்த்தலையர்.

புகாருக்குத் தன்னைத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொள்ளக் கட்டாயப்படுத்துவதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த வளவனாரின் முக மாற்றத்தைக் கண்ட இரும்பிடர்த்தலையர் ‘‘வளவனாரே தாங்கள் இதனை நிச்சயம் ஏற்றுக்கொள்ள மறுப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். சோழ தேசத்தின் நலன் கருதி தாங்கள் நிச்சயம் இதனை ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும். உறைந்தையும் இருங்கோவேளின் கைக்குச் சென்றுவிட்டதால் நமக்கென்று ஒரு நம்பகமான தளம் வேண்டும். அது புகாராக இருந்தால் அனைத்திற்கும் சௌகரியமாக இருக்கும் வளவனாரே. ஆதலால் புகாரில் நம்பகமான, திறமையான, அனுபவம் வாய்ந்த தலைமை வேண்டும். அதற்கு ஏற்ற மனிதர் தாங்கள் தான். காலம் தாழ்த்தாமல் தாங்கள் உடனடியாகப் புகார் நகரத் தலைவராகப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்’’ எனக் கட்டளையிட்டார் இரும்பிடர்த்தலையர்.

பின்பு, வளவனாரின் பதிலை எதிர்பாராமல் இரும்பிடர்த்தலையர் செங்குவீரனை நோக்கி, ‘‘விறல்வேல் உனக்கு இரண்டு பணிகளை விதிக்கிறேன். ஒன்று இளவரசனை விரைவாகக் கண்டறிய வேண்டும். கண்டறிவதோடு மட்டுமல்லாமல் அவனைப் பாதுகாக்க வேண்டியதும் உனது கடமை!‘‘ என்று கூறி சற்று அமைதியானார் இரும்பிடர்த்தலையர்.

அமைதியடைந்த இரும்பிடர்த்தலையரை நோக்கிய செங்குவீரன், ‘‘பிடர்த்தலையரே சோழ தேசத்தின் நன்மைக்காகத் தாங்கள் இடும் எந்தப் பணியையும் நிறைவேற்ற சித்தமாக உள்ளேன். தயங்காமல் கட்டளையிடுங்கள்!‘‘ என்றான்.

தொடர்ந்த இரும்பிடர்த்தலையர் ‘‘காளனின் செயல்களுக்கு நீ முடிவுகட்ட வேண்டும்‘‘ என்றார்.

அவர் முடிவு கட்ட வேண்டும் என்று எதனைக் குறிப்பிடுகிறார் என்பதை உணர்ந்த வளவனாரும், அடிகளும் பதறினர்.

பதறியபடியே ஏதோ கூற வந்த அடிகளாரை தனது பார்வையாலே கட்டுப்படுத்திய இரும்பிடர்த்தலையர் செங்குவீரனிடம் ‘‘உறுதியாக இவை இரண்டையும் நீ புகாரில் சித்திரைத் திருவிழா தொடங்குமுன் நிறைவேற்றியிருக்க வேண்டும்!‘‘ என்றும் கட்டளையிட்டார்.

“இளவலைக் கண்டறிந்து உடனடியாகக் காக்க வேண்டியது எவ்வளவு முக்கியம் என்று நீ அறிந்திருப்பாய் என்பதை நான் நம்புகிறேன் செங்குவீரா. சோழ தேசத்தின் கடைசி வாரிசு அவன் தான். இளஞ்சேட்சென்னி வீழ்த்தப்பட்டுவிட்டான். இளவரசன் மட்டும் எதிரிகளின் கையில் அகப்பட்டு அவனுக்கு ஏதேனும் நேர்ந்திருந்தால் சோழக் குடியே மறைந்து விடும். இளவலுக்கு ஏற்படும் ஆபத்து சோழ வம்சத்துக்கே ஏற்படும் பேராபத்து என்பதை நினைவில் கொள். நமது முயற்சிகளும் பலன் இல்லாமல் ஆகிவிடும். செய்ய வேண்டியவற்றைக் காலம் தாழ்த்தாமல் உடனே செய்!“ என்றார் இரும்பிடர்த்தலையர்.

அந்தரங்க ஆலோசனை நடந்துகொண்டிருக்கும் போதே, செங்குவீரனின் உப தளபதிகளில் ஒருவனான திருக்கண்ணன் ஆலோசனை அறையை நோக்கி அவசர அவசரமாக ஓடிவந்தவன் “ஆபத்து!” “ஆபத்து!” என்றவாறே அறையின் கதவுகளைப் பதற்றத்தோடு திறந்துகொண்டு யாருடைய அனுமதியையும் எதிர்பார்க்காமல் உள்நுழைந்தான்.

அவனது அவசரத்தையும், பதற்றத்தையும் கண்ட செங்குவீரன், அவனது இருக்கையிலிருந்து எழுந்து “ஆபத்தா? புகார் கோட்டையில் நாம் இருக்க யாருக்கு ஆபத்து நேரப்போகிறது திருக்கண்ணா?“ என்று அமைதியாகக் கேள்வி எழுப்பினான்.

தனது தளபதியான செங்குவீரன் நிகழ்ந்திருக்கும் ஆபத்தை அறியாமல் இப்படி அமைதியாகக் கேள்வி கேட்பதைக் கண்ட திருக்கண்ணன், “தலைவரே ஆபத்து என்று நான் குறிப்பிடுவது அனைவருக்கும் தான்!“ என்றான்.

செங்குவீரன், “அனைவருக்கும் ஆபத்தா? யாரால், யாருக்கு ஆபத்து நேரப்போகிறது?“ என்றான்.

“ஆமாம் தலைவரே அனைவருக்கும் தான். ஆபத்து நம்மை மட்டும் அல்லாமல் மொத்த சோழ தேசத்தையும் தான் சூழ்ந்து விட்டது. “

மேலும் தொடர்ந்த திருக்கண்ணன், “தலைவரே உறைந்தையில் மலை நாட்டு மன்னனான இருங்கோவேள் சோழ வேந்தனாக முடிசூட்டிக்

கொண்டுவிட்டான், இப்போது தான் நமது ஒற்றர்கள் தகவலைக் கூறினார்கள்.’’

செங்குவீரன், ‘‘இது எதிர்பார்க்கப்பட்ட காரியம் தானே திருக்கண்ணா, இதில் பதற்றமடையும் அளவிற்கு என்ன இருக்கிறது. நீ ஓடி வந்ததைக் கண்டு நான் வேறு ஏதேனும் விபரீதம் நிகழ்ந்திருக்குமோ என்று அச்சப்பட்டேன்‘‘ என்றான்.

‘‘சோழ மன்னர்களான சிபிச் சக்கரவர்த்தி, முசுகுந்தன், மனுநீதிச் சோழன், தொடித்தோட் செம்பியன், இளஞ்சேட்சென்னி அமர்ந்திருந்த வீர, நீதி தவறாத சோழ சிம்மாசனத்தில் ஒரு கயவன் அமர்ந்துவிட்டான் என்கிறேன், இது தங்களுக்கு விபரீதமாகத் தெரியவில்லையா!’’ என்றான் திருக்கண்ணன்.

‘‘சோழ சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் கயவன் விரைவில் விரட்டப்பட்டு விடுவான் திருக்கண்ணா. நீ கொண்டு வந்த செய்தி இது மட்டும் தானா அல்லது இன்னும் ஏதேனும் மீதமிருக்கிறதா?‘‘

‘‘இன்னும் இருக்கிறது தலைவரே‘‘

‘‘அப்படியென்றால் விரைவாகக் கூறு!‘‘

‘‘செய்தியைக் கொண்டுவந்தவன் நமது ஒற்றன் என்றுதான் நான் எண்ணினேன், ஆனால் வந்தவன் இருங்கோவேளின் ஒற்றன்.’’

‘‘இருங்கோவேளின் ஒற்றர்களுக்கு அவ்வளவு துணிச்சல் வந்துவிட்டதா? பாராட்டப்பட வேண்டியது தான்!‘‘

‘‘என்ன தலைவரே, எதிரிகளின் ஒற்றன் ஒருவன் நம் படைக்குள் ஊடுருவ முயற்சித்திருக்கிறான் என்கிறேன், நீங்கள் பாராட்டுகிறீர்கள்!‘‘ என்று கோபம் கொண்டான் திருக்கண்ணன்.

திருக்கண்ணனின் கோபத்தைக்கண்ட பின் அவனது தோள்களைத் தட்டிய படியே ‘‘வீரமான செயல்களை யார் செய்யத் துணிந்தாலும் அவர்களின் வீரத்தினையும், துணிச்சலையும் பாராட்டுவது தானே ஒரு தலைவனின் கடமை!‘‘ என்ற செங்குவீரன் ‘‘வந்தவன் இருங்கோவேளின் ஒற்றன் தானென்று தாங்கள் எப்படிக் கண்டுபிடித்தீர்கள் திருக்கண்ணா?‘‘ என்றான்.

“அவன் கொண்டு வந்த ஓலையில் புலிச் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது தலைவரே!” என்று பதிலளித்தான் திருக்கண்ணன்.

“சோழர்களின் இலச்சினை புலிச்சின்னம் தானே, அதில் என்ன தவறு இருக்கிறது திருக்கண்ணா?“ என வினவினான் செங்குவீரன்.

பதிலுக்குத் திருக்கண்ணன், “புலிச்சின்னத்தை அனைவரும் பயன்படுத்துகிறார்கள் என்று தாங்கள் தானே நமது தமிழ் கடவுளான முருகனின் வெற்றி வேலைப் பொறிக்கச் சொல்லி கட்டளையிட்டீர்கள். மறந்துவிட்டீர்களா?“ என வினவினான்.

அவன் கூறுவதைக் கேட்ட செங்குவீரன், “ஆமாம். நான் தான் கட்டளையிட்டிருந்தேன்!“ என்றான்.

“வந்தவன் எதிரிகளின் ஒற்றன் என்பதைக் கண்டறிந்த டாள்தொபியாஸ் தனது வாளால் ஒரே வீச்சில் அவனது தலையைக் கொய்துவிட்டான்.“

அவன் கூறுவதைக் கேட்டு சிரித்த செங்குவீரன், “டாள்தொபியாஸ் எனது தளபதிகளுள் ஒருவனாயிற்றே திருக்கண்ணா. அவன் செய்துள்ளதும் பாராட்டப்பட வேண்டியது தானே. நீ ஏன் பதறுகிறாய். உனது உடையில் படிந்திருக்கும் குருதித் துளிகள் டாள்தொபியாஸ் வாளிலிருந்து தெரித்தது தானா?“ என வினவினான்.

“எது நடந்தாலும் திடமாகத் தைரியத்துடன் எதிர்கொள்ளும் எனது தளபதியான திருக்கண்ணன் பதறிக்கொண்டு ஓடி வந்ததைக் கண்டு நான் ஏதோ பெரும் ஆபத்து நேர்ந்துவிட்டதோ என்று எதிர்பார்த்தேன் திருக்கண்ணா!“

“இரும்பிடர்த்தலையரைக் கண்டவுடன் கைது செய்யவும் ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்ளதாம்!“

“இரும்பிடர்த்தலையரையா?“

“ஆமாம் தலைவரே“ என்று தலையைத் தொங்கபோட்டுக் கொண்டே பதிலளித்தான் திருக்கண்ணன்.

‘‘இரும்பிடர்த்தலையரை புகாரில் வைத்து கைது செய்யும் அளவிற்கு இருங்கோவேளுக்குத் துணிவு வந்துவிட்டதா? நிச்சயம் பாராட்டப்பட வேண்டிய துணிவு தான்!‘‘

‘‘சோழ தேசத்தில் இரும்பிடர்த்தலையரைக் கைது செய்யும் துணிவு ஒருவருக்கு மட்டுமே உள்ளது என்பதையும் இருங்கோவேள் அறிந்துகொண்டான் தலைவரே!‘‘

‘‘யார் அந்த ஒருவர்?‘‘

‘‘பெருமறவர் மகேந்திர வளவனார் தான் அந்த ஒருவர்’’

இதுவரை அமைதியாக நடந்த உரையாடல்கள் அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த இரும்பிடர்த்தலையர், ‘‘பிடர்த்தலையனைக் கைது செய்யும் இருங்கோவேளின் உத்தரவிற்கு வளவனார் கட்டுப்படுவார் என்று அவன் எப்படிக் கருதியிருப்பான்‘‘ என்றார்.

‘‘புகார் நகரத் தலைவராகவும், இருங்கோவேளின் படைகளுக்குச் சேனாதிபதியாக வளவனார் பொறுபேற்றுக் கொண்டால், புகார் நகரத் தலைவர் உறைந்தை சோழ அரசனுக்குக் கட்டுப்பட்டுத் தானே ஆக வேண்டும்!‘‘ என்று அனைவரும் அதிரும்படியான செய்தியைக் கூறினான் திருக்கண்ணன்.

இடைமறித்த வளவனார், ‘‘இரும்பிடர்த்தலையரே தாங்கள் கூறியது முற்றிலும் உண்மைதான். எதிரிகள் நம்மை விட வேகமாகவும், விவேகமாகவும் தான் சிந்திக்கிறார்கள். அவர்களின் நடவடிக்கைகளும் மிகவும் தந்திரமாகத்தான் உள்ளது!‘‘ என்றார்.

தனது ஆசனத்திலிருந்து எழுந்து செங்குவீரனிடம் வந்த இரும்பிடர்த்தலையர், ‘‘விறல்வேலா, குறிப்பிட்ட கட்டளைகள் இரண்டையும் நினைவில் வைத்துக்கொள். சித்திரைத் திருவிழா தொடங்குவதற்குள் இரண்டு காரியங்களும் நிகழ்ந்திருக்க வேண்டும். அடிகளே, தாங்கள் என்னோடு விரைந்து வாருங்கள். உங்களுக்கு ஒரு முக்கியமான பணி உள்ளது!‘‘ என்று அவரைத் தனியாக அழைத்துப் புறப்பட்டார்.

திடீரென, கீழே அவையிலிருந்து பெரும் சலசலப்பு எழவே என்னவென்று கவனிக்கச் செங்குவீரன், திருக்கண்ணனோடு கீழே விரைந்தான்.

இரும்பிடர்த்தலையரும் அவனுடன் கீழே விரையவே, அவரைத் தடுத்த செங்குவீரன் “இரும்பிடர்த்தலையரே தாங்கள் இப்போது கீழே வர வேண்டாம். கீழே எழும் சலசலப்பின் காரணம் யாதென்று நிச்சயமாக அறியாதவரை தாங்கள் கீழே தலைகாட்டுவது நல்லதல்ல. அது எதிரியின் வாளுக்குத் தலையைக் கொண்டு போய் அகப்படுவது போலவும் நேர்ந்துவிடலாம். நான் அழைத்தால் மட்டும் கீழே வாருங்கள், அழைக்காத வரை தாங்கள் கீழே வரவேண்டாம்!“ என்று கட்டளையிட்டுவிட்டுக் கீழே விரைந்தான்.

நான் அழைத்தால் மட்டும் கீழே வாருங்கள், இல்லையேல் வரவேண்டாம் என இரும்பிடர்த்தலையருக்கே கட்டளையிட்ட செங்குவீரனின் செயலினால் அடிகளாரும், வளவனாரும் கோபம் கொண்டு அவனை எரித்துவிடுவது போல நோக்கினர்.

ஆனால், இரும்பிடர்த்தலையர் மட்டும் அவன் கூறுவதில் இருந்த நன்மையையும், எச்சரிக்கையையும் உணர்ந்து இருவரிடமும், “நம்மை விடவும் விறல்வேல் தான் விழிப்புடன் இருக்கிறான். பிடர்த்தலையனுக்கே கட்டளையிடும் இவன் மீது கோபம் கொள்ளாதீர்கள் வளவனாரே. அவன், திருக்கண்ணனிடம் நிகழ்த்திய உரையாடலைக் கூர்ந்து கவனித்தீர்களா? அவனது கூர்மையான அறிவையும், உறுதியையும் கண்டு நானே வியந்துவிட்டேன். சோழ தேசத்தின் நன்மைக்காக நம்மையே கூட எதிர்க்கத் தயங்க மாட்டான் அவன். ஆனால் தமிழகத்திற்கு இப்படிப்பட்ட ஒரு பேராண்மைமிக்க வீரன் தான் தற்பொழுது தேவை வளவனாரே. நீங்கள் கீழே சென்று என்ன என்று கவனியுங்கள். நான் அடிகளாரை முக்கியமான ஒரு பணிக்கு உறைந்தைக்கு அனுப்ப வேண்டும். அடுத்து சந்திக்கும் இடத்தையும், செயல் திட்டத்தையும் பிறகு சொல்லியனுப்புகிறேன்!“ என்றார் இரும்பிடர்த்தலையர்.

**அடிக்குறிப்பு**

1. வாழ இயலாத கடினமான காலத்தில் உயிரை மட்டுமாவது இழக்காமல் பிடித்து வைத்திருத்தலைத் தவிர வேறு நற்பயன் இல்லை. பின்பு தகுந்த காலம் வரும்போது கரிகாலனைப் போல

இழந்ததைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது இந்தப் பழமொழியின் பொருள்.

இந்தப் பாடலுக்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் எனும் உரையாசிரியர் பிடர்த்தலையரை கரிகாலச் சோழனின் தாய் மாமன் என்று பழமொழியின் மூல உரையில் சுட்டுகிறார்.

**சுடப்பட் டுயியர்ந்த சோழன் மகனும்**

**பிடர்த்தலைப் பேராணைப் பெற்று – கடைக்கால்**

**செயிரறு செங்கோல் செவிஇயினா ளில்லை**

**யுயிருடையா ரெய்தா வினை –** பழமொழி நானூறு 239

பெருமாளிகையில் கட்டப்பட்டு எரிக்கப்பட்ட சோழன் மகன், உயிர் தப்பிக் கால் கருகி, இரும்பிடர்த்தலைப் பேராண் உதவியுடன் தனக்குரிய அரச முடியையும், செங்கோலையும் பெற்றான் என்று சங்க இலக்கியங்கள் மட்டுமின்றிச் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பழமொழியும் பிடர்த்தலையரின் புகழ் பாடுகின்றது.

# 15. அவ ைக்களம் ரணகளம்

திடீரெனக் கீழே அவையினில் ஏற்பட்ட சலசப்பைக் கவனிக்க வந்த வளவனார் மற்றும் விறல்வேலுக்கு அவர்கள் எதிர்பாராத அதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது.

அதிகாரத் தொனியோடு ஒருவன் அனைவரிடமும் பேசிக்கொண்டிருந்தான். அவனையும், அவனது உடையையும் கண்ட செங்குவீரன், இவன் நிச்சயம் உறைந்தையிலிருந்து தான் வந்திருக்க வேண்டும் என்றும் அவனது கையில் வைத்திருந்த அரச முத்திரையையும், அதில் பொறிக்கப்பட்டிருந்த புலிச் சின்னத்தையும் கண்டவன் அவன் பெரும் அதிகாரமிக்கக் கோட்டைத் தலைவனாகவோ அல்லது ஏதேனும் பெரும் படைப் பிரிவின் தளபதியாகவோ புதிதாகப் பதவி ஏற்றவனாகத்தான் இருப்பான் என்பதையும் ஊகித்துக் கொண்டே ஒவ்வொரு படியாக மெல்ல அடியெடுத்து வைத்து பெரும் கம்பீரத்துடன் கீழே இறங்கினான் செங்குவீரன் எனும் விறல்வேல்.

வந்திருந்த புதியவனைச் சுற்றிலும் பத்துக்கும் மேற்பட்ட வீரர்களைப் பாதுகாப்பிற்கு அழைத்து வந்திருப்பதையும் அவன் கவனிக்கத் தவறவில்லை.

புதியவன் இடையில் சொருகியிருந்த பத்திரச் சீலையை வெளியே எடுத்து உரக்க வாசிக்க ஆரம்பித்தான். பத்திரச் சீலையை அவன் பிரித்த வேளையில் அதன் இரு புறங்களிலும் இருந்த தங்கக் கைப்பிடி சீலையில் ஓரங்களில் தங்கம் மற்றும் வெள்ளிக் குழம்புகளால் பூசப்பட்டு அழகுபடித்தி கம்பீரத்தோடு இருந்ததிலிருந்து அது நிச்சயம் சோழ மன்னன் வழங்கிய பிரமாணப் பத்திரச் சீலையாகத்தான் இருக்கும் என அனைவரும் ஊகித்துக் கொண்டனர். அந்தப் பிரமாணப் பத்திரத்தை அவன் உரக்க வாசிக்க ஆரம்பித்தான்.

‘‘இந்தப் பிரமாணப் பத்திரத்திலிருந்து அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால் மலை நாட்டு மன்னனான இருங்கோவேள் சோழ நாட்டின் நலன் கருதி அமைச்சர்களின் ஆலோசனையின் படி சோழ வேந்தனாக முடிசூட்டிக் கொண்டார் என்பதை அனைவருக்கும் முறைப்படி அறிவிக்கப்படுகிறது. மேலும் இந்தப் பிரமாணப் பத்திரத்தையும் சோழ அரச முத்திரையையும் எவர் கொண்டுவருகிறாரோ அவர் தான் இனி புகார் நகருக்கும் கோட்டைக்கும் தலைவராகச் செயல்படுவார். அவரது கட்டளைக்கு யார் யாரெல்லாம் கீழ்படிய மறுக்கிறார்களோ அவர்களெல்லாம் ராஜதுரோகம் இழைத்ததாகக் கருதப்பட்டுக் கைது செய்யப்படுவார்கள்!‘‘ என்று உரக்க வாசித்து முடித்தான்.

மேலும், ‘‘இன்றிலிருந்து இப்போதிலிருந்து இந்தக் கோட்டைக்கும், நகருக்கும் நான் தான் தலைவன். ஆக இங்கிருக்கும் அனைவரும் இனி என் சொல்லிற்கே கட்டுப்பட்டவர்கள் ஆவீர்கள்!‘‘ என்று கூறிக்கொண்ட புலிச் சின்னம் பொறிக்கப்பட்டிருந்த பிரமாணப் பத்திரச் சீலையை எதிரே வந்த செங்குவீரனிடம் நீட்டினான்.

அதை வாங்கிப் படித்ததிலிருந்து சோழ மன்னனாக முடிசூட்டிக் கொண்ட இருங்கோவேளின் உத்தரவுப் படி சோழ தேச முதன்மை அமைச்சர் தான் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார் என்றும், புதியவனைப் புகார் நகரத் தலைவராகவும் நியமித்துள்ளவர் அவர் தான் என்றும் அறிந்து கொண்ட செங்குவீரனுக்கு முதன்மை அமைச்சர் மீது பெரும் வெறுப்பு தோன்றியது அவனது மாறிய முகபாவத்திலிருந்தே அறிந்துகொள்ள முடிந்தது. சோழ வேந்தனான இளஞ்சேட்சென்னிக்கு அவையில் முக்கிய ஆலோசகராகவும், அந்தரங்க உதவியாளராகவும் இருந்த முதன்மை அமைச்சர் வெளியிட்டுள்ள அறிவிப்பு என்பதனை அவனால் ஏற்றுக்கொள்ளவே இயலவில்லை! அவரும் இப்படி இருங்கோவேளின் கைப்பாவையாக மாறிவிட்டாரே என்று அதிர்ச்சியடைந்தான். முதன்மை அமைச்சர் வெளியிட்டுள்ள இந்தப் பிரமாணப் பத்திரத்திலிருந்தே உறைந்தை முழுவதும் இருங்கோவேளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதையும், அவனை அங்கு எதிர்க்கும் துணிவுள்ளவர்கள் எவரும் இல்லை என்பதையும் உணர்ந்துகொள்ள அவனுக்குக் கூடுதல் நேரம் தேவைப்படவில்லை.

புகார்த் தலைவராக நியமிக்கப்பட்டவன் அதிகாரத்தோடு அங்கிருந்த அனைவரிடமும் “இதற்கு முன் அரச அதிகாரிகள் எந்தப் பணியைச் சோழ அரசருக்கு விசுவாசமாகச் செய்துகொண்டு இருந்தீர்களோ அந்தப் பணியிலேயே தொடரலாம். ஆனால் சோழ தேச மன்னரின் கட்டளைப் படி புகாரின் காவல் தலைவர், புகார் படைப் பிரிவுகளின் தளபதிகள், உப தலைவர்கள் என அனைவரும் இந்தக் கணத்திலிருந்து அவர்கள் வகித்துக்கொண்டிருக்கும் பொறுப்புகளிலிருந்தும் கடமைகளிலிருந்தும் கட்டாயமாக விடுவிக்கப் படுகிறார்கள். இனி அனைத்துப் பிரிவுகளுக்கும் நான் ஒருவனே தலைவன். எனது கட்டளையின் படியே இனி அனைத்தும் புகாரில் நடைபெற வேண்டும்!“ என்று அதிகாரத்தோடு ஆணையிட்டான்.

எதிரில் நின்ற செங்குவீரனிடம், “நீயும் மாண்புமிக்கச் சோழச் சக்கரவர்த்தி இருங்கோவேளின் உத்தரவுப் படி உனது பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்படுகிறாய். உனது கட்டுப்பாட்டின் கீழிருக்கும் சோழப் படை அனைத்திற்கும் இனி நான் தலைவன். ஆக, பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்பட்ட நீ, உப தலைவனுக்குரிய மார்பில் அணிந்துள்ள பதக்கங்களையும், புலி இலச்சினையையும் இப்போதே ஒப்படைத்துவிட்டு உடனடியாகப் புகார்க் கோட்டையை விட்டு வெளியேறி விடு!“ என்று கட்டளையிட்டான் கோட்டைத் தலைவன்.

“புலி இலச்சினையை ஒப்படைக்க மறுத்து கோட்டையை விட்டு வெளியேற மறுத்தால் என்ன செய்வதாய் உத்தேசம் கோட்டைத் தலைவர் அவர்களே?” என வினவினான் செங்குவீரன்.

“மாண்பு மிக்கச் சோழச் சக்கரவர்த்தியால் கோட்டைத் தளபதியாக நியமிக்கப்பட்ட எனது உத்தரவுக்குக் கட்டுப்பட மறுத்தால் உன்னைச் சோழ மன்னன் உத்தரவுக்கு அடிபணிய மறுக்கும் ராஜ துரோகியாக அறிவிக்க நேரிடும் செங்குவீரா. பிறகு நடைபெறும் விசாரணையில் நீ குற்றமற்றவன் என்று நிரூபிக்கப்பட்டால் நீ விடுதலை செய்யப்படலாம். இல்லையேல் உமக்குச் சிரச்சேதம் தான்!“ என்று கூறியதோடு மட்டுமல்லாமல் சுற்றி நின்ற புகார் நகரக் காவல் வீரர்களிடம், “அரச உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுக்கும் இவனை அரச துரோகம் இழைத்தவனாக அறிவிக்கிறேன். இவனையும்,

அரசருக்கு எதிராகச் சதிகளையும், சூழ்ச்சிகளையும் செய்துகொண்டிருக்கும் ராஜ துரோகி இரும்பிடர்த்தலையனையும் உடனே கைது செய்யுங்கள்!“ என்று கட்டளையிட்டான்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கோட்டைத் தலைவனின் உத்தரவுக்குப் புகார் வீரர்கள் யாரும் செவிசாய்க்காமல் அப்படியே நின்று கொண்டிருந்தனர். தனது உத்தரவுக்கு யாரும் கட்டுப்படாததால் ஆத்திரமடைந்த கோட்டைத் தலைவன் புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட அரச முத்திரையான இலச்சினையை எடுத்து அனைவரின் முன்பும் உயர்த்திக் காட்டி ‘‘தாங்கள் யாவரும் எனக்குக் கட்டுப்பட மறுத்தாலும் இந்த அரச முத்திரையான புலிச்சின்ன இலச்சினைக்குக் கட்டுப்பட்டவர்கள் தான் என்பதை யாரும் மறந்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். ஒவ்வொருவரும் காவல் வீரர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்டபோது சோழ தேசத்திற்கும், சோழ மன்னனுக்கும் கட்டுப்பட்டவர்கள் என்றும் அவருடைய உத்தரவை மீற மாட்டோம் என்று சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டதையும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்‘‘ என்று கத்தினான்.

அவன் புலி இலச்சினையை உயர்த்திக் காட்டிய வேளையில் அரச முத்திரைக்குக் கட்டுப்பட்ட சில புகார் நகர வீரர்களும் உறைந்தை இருங்கோவேள் வீரர்களுடன் சேரவே செய்ததனால் சொற்ப எண்ணிக்கையுள்ள வீரர்களுடன் வந்த கோட்டைத் தலைவனின் பலம் கண நேரத்தில் உயர்ந்துவிட்டது.

புதிய தலைவனின் சொல்கேட்டு வீரர்கள் இருவர் செங்குவீரனைக் கைது செய்ய இரண்டு அடி முன்வைத்தார்கள். ஆனால் புகார் தலைவனாக நியமிக்கப்பட்டவன் உட்பட யாரும் அந்தச் சூழ்நிலையில் அப்படியொரு காரியம் அங்கு அரங்கேறும் என்று கற்பனை செய்து கூடப் பார்த்திருக்கமாட்டார்கள்.

ஏன் உறைந்தையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் எளிதாகக் கொண்டு வந்து சோழ அரசனாகத் தன்னை அறிவித்துக் கொண்ட இருங்கோவேள் கூட அப்படியொரு காரியம் அங்கு அரங்கேறப் போகிறது என்று கனவிலும் எண்ணியிருக்கமாட்டான்.

சோழ தேசம் முழுவதுமுள்ள நகரங்கள், கோட்டைகள், அமைச்சர்கள், அதிகாரிகள், சோழ வீரர்கள் என அனைவரையும் தனது ஆளுமையின் கீழும், முழுக் கட்டுப்பாட்டின் கீழும் கொண்டு வந்துவிட்டாலும் புகார் நகரை அவ்வளவு எளிதில் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர இயலாது என்று இங்கு நடக்கப் போகும் காரியம் இருங்கோவேளுக்கு உணர்த்த வைக்கும் என்று யாவரும் அக்கணத்தில் எண்ணியிருக்க மாட்டார்கள்.

இதுவரை சோழ தேசத்தில் இரும்பிடர்த்தலையன் மட்டுமே தனக்குக் கட்டுப்பட மறுக்கும் வீழ்த்த முடியாத எதிரி என்று எண்ணிய இருங்கோவேள் சாதாரணச் சொற்ப எண்ணிக்கையுள்ள வீரர்களின் படைப்பிரிவின் உப தலைவன் பெரும் இடையூறாக அமைவான் என்று கனவிலும் சிந்தித்திருக்க மாட்டான்.

எஞ்சியிருக்கும் இரும்பிடர்த்தலையனை மட்டும் வீழ்த்திவிட்டால் வீழ்ந்துபோன சோழ வம்சம் மீண்டும் எழ வைக்க, தன்னை எதிர்க்கும் துணிவு சோழ தேசத்தில் வேறு எவனுக்கும் தோன்றாது, இரும்பிடர்த்தலையனை அழித்துவிட்ட பின் தனக்கு எதிரிகள் என்று எவனும் இருக்க மாட்டார்கள் என நினைத்துக்கொண்டிருந்த இருங்கோவேள் தனது முயற்சிகள் அனைத்தும் புகார் நகர உப தலைவனால் தவிடுபொடியாக நொறுங்கப் போகிறது என்று அந்தக் கணம் வரை எண்ணிப் பார்த்திருக்கமாட்டான்.

அவையில் திடீரெனச் சலசலப்புத் தோன்றுவதால் இரும்பிடர்த்தலையரை நான் அழைக்கும் வரை தாங்கள் கீழே வரவேண்டாம் என்று கட்டளையிட்டுவிட்டுத் தனது உப தளபதிகளுள் ஒருவனான திருக்கண்ணனிடம் “திருக்கண்ணா நான் மட்டும் கீழே செல்கிறேன். நீ இப்போது வரவேண்டாம். மேலே உப்பரிகையிலிருந்து அவையில் என்ன நடைபெறுகிறது என்பதைக் கவனமாகக் கண்காணித்துக் கொண்டிரு. எதற்கும் உனது வாளும், வேலும் தயாராகவே இருக்கட்டும்!“ என்று கூறிவிட்டு அவன் மட்டும் தனியே கீழே விரைந்தான்.

படிக்கட்டில் மெல்ல நடந்து வந்தபோதே சபையில் யார் யாரெல்லாம் இருக்கிறார்கள். வந்திருப்பவன் எத்தனை வீரர்களைத் துணைக்கு

அழைத்து வந்துள்ளான். அவர்களின் பலம் எவ்வளவு, அவர்கள் எங்கெல்லாம் நிலை கொண்டிருக்கிறார்கள், அவனது சுபாவம் எப்படிப்பட்டது என எதுவும் அவனது கழுகுப் பார்வையிலிருந்து தப்பவில்லை.

மேலும் வந்திருக்கும் கோட்டைத் தலைவனின் எதிரில் இருபுறங்களிலும் தனது உப தளபதிகளான டாள்தொபியாசும், பரதவன் குமரனும் எதற்கும் தயாராக இருப்பதையும் கண்டுகொண்டான்.

ராஜ துரோகம் செய்வதாகக் கூறி கைது செய்யுங்கள் என்று கூறிய கோட்டைத் தலைவனிடம் செங்குவீரன், "கோட்டைத் தலைவரே, நீண்ட நாட்களாகச் சோழப் படையில் பணியாற்றி வரும் எம்போன்ற தலைவர்களையும், எமது தளபதிகளையும் பதவியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் உமக்குக் கிடையாது. எமது எச்சரிக்கையையும் மீறி தாங்கள் ஏதேனும் முயற்சி செய்தால் அதற்குரிய பலனைத் தாங்கள் நிச்சயம் அடைய வேண்டிவரும் என்பதையும் நான் தங்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்" என்று எச்சரித்தான்.

அவனது எச்சரிக்கையை அலட்சியம் செய்த கோட்டைத் தலைவன், மீண்டும் ஒருமுறை "இவனை உடனே கைது செய்து சிறையில் அடையுங்கள் என்று கூறியதோடு மட்டும் அல்லாமல் கடந்த சில திங்களாக இவன் ஒற்றர்கள் என்று கைது செய்து சிறையில் அடைத்திருக்கும் அனைவரையும் விடுதலை செய்து, அதே சிறையிலேயே இவனை அடைத்து வையுங்கள்!" என்று கட்டளையிட்டான்.

கோட்டைத் தலைவனின் கட்டளையை யாரும் ஏற்காததால் அரச முத்திரையை உயர்த்திக் காட்டிய பின் இருங்கோவேளின் வீரர்களுடன் புகார் நகர வீரர்களும் சேர்ந்திருந்ததால் இருங்கோவேளின் வீரர்கள் இருவர் துணிந்து அவனைக் கைது செய்யச் சில அடி முன்னால் வந்தவர்கள் அலறியபடியே கீழே சாய்ந்தனர்.

இரண்டு இருங்கோவேளின் வீரர்கள் மீதும் மேல் மாடத்தில் நின்றுகொண்டிருந்த திருக்கண்ணன் எறிந்த இரண்டு வேல்களும் அவர்களின் மார்பில் பாய்ந்து குருதியோடு அவர்களின் உயிரையும் சேர்த்துக் குடித்துக் கொண்டிருந்தது.

அந்தக் கணத்தில் கோட்டைத்தலைவன், இருங்கோவேளின் வீரர்கள் உட்பட எவரும் இந்த அசாதாரணக் காரியத்தை எதிர்பார்த்திருக்கவில்லை. கைது செய்ய முனைந்தால் அரச கட்டளைக்கு முற்பட்டு செங்குவீரன் சரணடைவான் அல்லது தப்பி விடுவான் என்றுதான் அனைவரும் நினைத்தனர். அவன் உறைந்தை அரசை நேரடியாக எதிர்க்கத் துணிவான் என்று யாரும் கனவிலும் நினைத்துப் பார்த்திருக்கவில்லை

தங்களுடைய இரு வீரர்களும் உயிரை விடக் காரணமான செங்குவீரனைக் கண்டு அனைத்து உறைந்தை வீரர்களும் அவர்களின் நீண்ட குத்தீட்டி மற்றும் வாள்களைத் தூக்கிக்கொண்டு அவனை நோக்கி ஆவேசமாகக் கத்தியபடியே தாக்க ஓடி வந்தனர். இதுவரை நடந்ததைச் செவ்வனே வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற செங்குவீரனின் உபதளபதிகளான டாள்தொபியாசும், பரதவன் குமரனும் கோட்டைத் தலைவனின் இருபுறத்திலும் ஓடி வந்த இருங்கோவேளின் வீரர்களை தங்களது வாட்களால் எதிர்கொண்டனர்.

இருவரின் வேகத்திற்கும் ஈடுகொடுக்க இயலாமல் இருங்கோவேளின் வீரர்கள் ஒவ்வொருவராகச் சாய ஆரம்பித்தனர். அமைதியாக இருந்த புகார்க் கோட்டை அவையானது கண நேரப்பொழுதில் போர்க் களமாக மாறியதைக் கண்ட கோட்டைத் தலைவன், இருங்கோவேளின் வீரர்களைச் செங்குவீரனின் தளபதிகள் எதிர்த்துத் தாக்குவார்கள் என்று எதிர்பார்த்திருக்கவில்லையாதலால் அதிர்ச்சியடைந்தான்.

சில கண நேரங்கள் தான் நீடித்தது அந்தச் சண்டை. கோட்டைத்தலைவனைச் சுற்றிலும் இருங்கோவேளின் வீரர்கள் அலறிய படியே சாய்ந்துகொண்டிருந்தனர். செங்குவீரனின் உப தளபதிகளின் வாள்களை எதிர்த்து நிற்கக்கூடப் போதிய திராணியற்ற வீரர்கள் அனைவரும் அவர்களின் தாக்குதலைச் சமாளிக்க இயலாமல் வீழ்ந்தனர்.

கண நேரப் பொழுதுகளில் இரண்டு உபதளபதிகள் மட்டும் தனது அத்தனை வீரர்களையும் சாய்த்து விட்டதைக் கண்ட கோட்டைத் தலைவனின் மனதில் இவர்கள் மனிதர்களா அல்லது தோற்கடிக்கவே இயலாத அரக்கர்களா? என்ற ஐயம் எழவே செய்தது. கண நேரப் பொழுதிற்கு முன்பு

பெரும் சலசலப்புடன் காணப்பட்ட அவையானது இப்போது பேயமைதியாகக் காட்சியளிப்பதைக் கண்ட கோட்டைத் தலைவன், டாள்தொபியாஸ் மற்றும் பரதவன் குமாரனால் வீழ்த்தப்பட்ட அனைவரும் இறந்துவிட்டதால் உயிருக்குப் போராடும் வீரர்களின் முனகல் சத்தம் கூட அந்த இடத்தில் எழாததால், சுடுகாட்டில் இறந்து கிடத்தப்பட்டுள்ளவர்களுக்கு மத்தியில் தாம் நிற்கிறோமோ என்று அவன் எண்ணும்படியாகப் புகார் கோட்டையின் அவை மாறியிருந்தது. டாள்தொபியாசும், குமரன் பரதவனும் தங்களது வாள்களில் சிவந்த குருதி சொட்டிக்கொண்டே தன்னை நோக்கி வருவதைக் கண்ட கோட்டைத் தலைவனது மனம் பயத்தில் உறைய ஆரம்பித்து அவனது கால்களும் நடுங்க ஆரம்பித்திருந்தது. ஆனால் எதிரில் செங்குவீரன் மட்டும் சற்று முன்பு நடந்த களேபரத்திற்கும் தனக்கும் சம்பந்தமே இல்லை என்பது போல முகத்தில் புன்சிரிப்பைத் தவழவிட்டுக்கொண்டே நின்றுகொண்டிருந்தான்.

சுற்றியிருந்த புகார் நகர வீரர்கள் தமது வீரர்களுக்கு ஆதரவாகக் களம் இறங்குவார்கள் என்று எதிர்பார்த்த கோட்டைத் தலைவன் ஏமாந்தே போனான். மாறாக அவர்கள் அனைவரும் கையைக் கட்டிக்கொண்டு நடக்கும் வாள் போரை வேடிக்கை பார்த்துக்கொண்டும் செங்குவீரனின் கட்டளையை எதிர்பார்த்துக் கொண்டும் இருந்ததிலிருந்து செங்குவீரனின் கட்டளையில்லாமல் அவர்களை வைத்து துரும்பையும் அசைக்க இயலாது என்பதைப் புரிந்து கொண்டான் கோட்டைத் தலைவன்.

கண நேரத்தில் தனது வீரர்கள் அனைவரையும் இழந்துவிட்ட கோட்டைத் தலைவன் திருக்கண்ணன் வேலைப் பாய்ச்சிய முறை, டாள்தொபியாஸ் மற்றும் குமரன் பரதவனின் சண்டையிடும் முறை, அவர்களின் வேகம், விவேகம் ஆகியவற்றிலிருந்து சோழ தேசத்தில் காணப்படும் சிறந்த மூன்று வீரர்களைத் தான் செங்குவீரன் தனது உபதளபதிகளாகக் கொண்டிருக்கிறான் என்றும் அதிலும் செங்குவீரன் தன் மனதில் என்ன நினைக்கிறானோ, அவனது கட்டளையில்லாமலே குறிப்பால் உணர்ந்து நிறைவேற்றவல்ல சிறந்த வீரர்களைத் தான் அவன் பொறுக்கி எடுத்து தக்க பயிற்சிகளை அளித்துத் தனது உபதளபதிகளாகக் கொண்டுள்ளான், அவனை வீழ்த்துவது அவ்வளவு எளிதான காரியமாக இருக்கப்போவதில்லை என்பதையும் உணர்ந்து கொண்டான்.

தமது அரசன் இருங்கோவேள், தமது ஆட்சியை எதிர்க்கும் ஒரே எதிரி இரும்பிடர்த்தலையன் மட்டுமே என்று எண்ணிக்கொண்டிருக்கிறாரே, இந்த ஒரு உப தலைவனை அவர் எப்படி எதிர்கொள்ளப் போகிறாரோ என்று கலங்கினான்.

டாள்தொபியாஸ் மற்றும் பரதவன் குமரனின் வீரவாள் பாய்ந்து இறந்த உறைந்தை வீரர்களின் உடல்களிலிருந்து வெளிப்பட்ட குருதி அவனது கால்களை நனைத்துக் கொண்டிருப்பதையும் இருவரது வாள்களைச் சுழற்றி வீசும் போது தெறித்த குருதி தனது உடைகள் மற்றும் முகம் முழுவதும் ஆங்காங்கே திட்டுத்திட்டாகப் படிந்துள்ளதையும், பார்த்த கோட்டைத் தலைவனது முகத்தில் பெரும் அருவருப்பு சூழ ஆரம்பித்தது.

இருக்கும் சூழ்நிலையைச் சுற்றிப்பார்த்த செங்குவீரன் தனது உபதளபதிகளின் தைரியத்தையும் வீரத்தையும் பாராட்டியபடியே, கோட்டைத் தலைவரின் முன் வந்த செங்குவீரன் ‘‘கோட்டைத் தலைவர் அவர்களே, தாங்கள் கூற வேண்டிய அனைத்தையும் கூறி முடித்துவிட்டீர்களா? அல்லது இன்னும் கூறாமல் ஏதேனும் மிச்சம் வைத்திருக்கிறீர்களா?‘‘ என்று வினவினான்.

சற்று முன்பு நடந்த சண்டைகளைப் பார்த்து நடுங்கிப்போயிருந்த கோட்டைத் தலைவன், பயத்துடனே ‘‘தாங்கள் அனைவரும் பெரும் பிழை செய்துவிட்டீர்கள். இதற்கான பலனைத் தாங்கள் விரைவில் அடைவீர்கள். இப்போது திமிருடன் இருக்கும் நீ விரைவில் உனது கர்வம் மற்றும் ஆணவம் என அனைத்தையும் இழந்து சோழ மன்னன் இருங்கோவேளின் முன்பு அடிபணிவாய் செங்குவீரா. இன்று நீ செய்திருக்கும் இந்தப் பெரும் பிழைக்குப் பிற்காலத்தில் பெரிதும் வருந்துவாய்‘‘ என்று அந்தச் சூழ்நிலையிலும் பயத்தில் நடுங்கிக்கொண்டே எகத்தாளத்தோடு பேசினான் கோட்டைத் தலைவன்.

மேலும் தொடர்ந்த அவன் ‘‘கோட்டைத் தலைவனாக நியமிக்கப்பட்ட எனது கட்டளைக்கு நீ முதலில் பணிந்திருக்க வேண்டும். அதையும் செய்யவில்லை. சோழ மன்னன் இருங்கோவேளின் கட்டளைக்காவது அடிபணிந்திருக்க வேண்டும் நீ, அதற்கும் மறுத்துவிட்டாய்! சோழ அரச முத்திரையான புலி இலச்சினைக்கும் நீ அடிபணியவில்லை.

இதுவரை சோழ தேசத்தில் யாரும் செய்யக் கூடாததை நீ செய்துவிட்டாய் செங்குவீரா. நீ இங்கு எதிர்த்தது என்னை மட்டும் அல்ல சோழ மன்னனான இருங்கோவேளை. சோழ மன்னனான இருங்கோவேளை எதிர்த்து விட்டதற்கான பலனை நீயும் உனது உபதளபதிகளும், உமது படைவீரர்களும் நிச்சயம் அடைவீர்கள். உனது உயிர் உடலிலிருந்து நீக்கப்பட்டு உனது உடல் விரைவில் புகார்க் கோட்டைச் சுவரில் தொங்கவிடப்படும் என்பதைப் புரிந்துகொள் செங்குவீரா!" என்றான்.

இதுவரை கோட்டைத் தலைவனுக்கும் செங்குவீரனுக்கும் நடந்த உரையாடல்களை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த பரதவன் குமரன் கோட்டைத் தலைவன் செங்குவீரனை நோக்கி உனது உடல் விரைவில் புகார் சுவரில் தொங்கவிடப்படும் என்று கூறியதைக் கேட்டவுடன், தனது வாளை உருவி கோட்டைத் தலைவனின் சிரசை நோக்கி வேகமாகச் சுழற்றினான். பரதவன் குமரன் கோட்டைத் தலைவனான தன்னை நோக்கி வாளைச் சுழற்றுவான் என்று அவன் கனவிலும் எதிர்பார்த்திருக்க வில்லை. ஏனெனில் அரச முத்திரை தன்னிடம் உள்ளபோது தனது கட்டுப்பாட்டுக்கு அவர்கள் கட்டுப்பட மறுத்தாலும் தன்னை எதுவும் செய்ய மாட்டார்கள் என்று அவன் எண்ணியிருந்தான். பரதவன் குமரன் தனது வாளை உருவியபோது எழுந்த சத்தம் வேகமாக வந்ததா அல்லது அவன் சுழற்றிய வாள் விரைவாக அவனை நோக்கி வந்ததா என்று அறிவதற்குக் கூட அவனுக்கு நேரம் கொடுக்கவில்லை பரதவன். அவனது வாளுறையிருந்து வாளை உருவியபோது எழுந்த சத்தம் அவனது காதுகளை அடையுமுன் அவனது நீண்ட வாள் அவனது கழுத்தினை அடைந்திருந்தது. கோட்டைத் தலைவன் எதிர்பாராத நேரத்தில் அவனது கழுத்தை நோக்கி வந்த வாள் தனது தலையை உடலிலிருந்து நீக்காமல் நிச்சயம் திரும்பாது என்பதை உணர்ந்தவன் கண்களை இறுக மூடிக்கொண்டான். பரதவன் குமரனின் போர்வாளை தனது கழுத்தின் முன் தோலில் உணர்ந்தவன் இனி தனது உயிர் தப்ப வழியில்லை என்று நினைத்தவன் அவனது குலதெய்வத்தையும் வேண்ட ஆரம்பித்துவிட்டான். ஆனால், அந்தக் கணத்தில் கோட்டைத் தலைவனின் தலையைப் பரதவன் குமரனின் வாள் கொய்யும் முன் கோட்டைத் தலைவனே எதிர்பாராத மற்றொரு வாள் குமரனின் வாளைத் தடுத்திருந்தது. தனது

வாளைத் தடுத்துக் கோட்டைத் தலைவனின் உயிரைக் காப்பாற்றும் வல்லமையும் துணிவும் கொண்ட அந்த வீரன் யார் என்று திரும்பிப் பார்த்தான் பரதவன் குமரன்.

தனது தலை உடலிலிருந்து துண்டாகக் கொய்யப்பட்டு விட்டதைப் போலவே உணர்ந்த கோட்டைத்தலைவன் இன்னும் தான் உயிரோடு இருக்கிறோமா தனது தலை இன்னும் பரதவன் குமரனின் வாளிற்கு இரையாகாமல் இன்னும் இருக்கிறதா என்று தனது உணர்வுகளை நம்ப இயலாமல் கண்களை மெல்ல அச்சத்துடனே திறந்தான்.

கண்களைத் திறந்து பார்த்தபோது பரதவன் குமரன் சுழற்றிய வாள் தனது கழுத்தின் முன் தோலைச் சீவி அதிலிருந்து குருதி வெளிப்பட்டுக் கசிந்து கொண்டிருப்பதையும், குமரனின் வாளை செங்குவீரனின் நீண்ட வாள் தடுத்துக் கொண்டிருப்பதையும் கண்டு உயிர் பிழைத்த கோட்டைத் தலைவன் பிழைத்ததே பெரும் பாக்கியம் என்று பெருமூச்சு விட்டான்.

காற்றை விட வேகமாக வாளைச் சுழற்றிய பரதவன் குமரனின் வாளைக் கண்ட பின் செங்குவீரன் தனது வாளை உருவி அவனது வாளைத் தடுத்திருக்கிறானே! அப்படியென்றால் அவனது வலிமையும், வாள் வீச்சு வேகமும் எப்படிப்பட்டதாக இருக்கும் என்று கற்பனை செய்ய முயன்று தோற்ற கோட்டைத் தலைவன் அப்படியென்றால் இவர்களைத் தோற்கடிக்கத் தென்னகத்தில் யார் இருக்கிறார்கள்? என்று தனக்குள்ளே பலவாறு கேள்விகேட்டுக் கொண்டான்.

‘முதலில் மேல்மாட உப்பரிகையிருந்து குறி தவறாமல் தனது இரு வேல்களையும் ஒரே நேரத்தில் வீசியவனைக் கண்டு இவனை யார் மிஞ்சுவார்கள் என்று எண்ணினேன். பிறகு அவனது வேலின் வேகத்தினையும் மிஞ்சும் அளவிற்கு இருவர் தங்களது வாள்களைச் சுழற்றி உறைந்தையிலிருந்து வந்த அனைத்து வீரர்களையும் கண நேரப் பொழுதில் மண்ணோடு மண்ணாக்கினார்கள். இவர்கள் வீசும் வாளின் வேகத்தை எவராலும் மிஞ்ச இயலாது என்று நினைத்த வேளையில் இவர்கள் சுழற்றிய வாளையும் கண்ணிமைக்கும் நேரத்தை விடக் குறைவான பொழுதில் ஒருவன் தடுத்திருக்கிறான் என்றால் அவனது வாள்வீச்சின் வேகம் எப்படிப்பட்டதாக

இருக்கும்? கற்பனைக்கும் அப்பாற்பட்ட வேகத்தில் அல்லவா தனது வாளை செங்குவீரன் இயக்கியிருக்கிறான்' என்று கோட்டைத் தலைவன் செங்குவீரனின் வாள் வீச்சின் வேகத்தைக் கண்டு ஆச்சர்யப்பட்டுக் கொண்டிருந்தான்.

செங்குவீரன் குமரனிடம், "சற்றுப் பொறுமையாக இரு குமரா! கோட்டைத் தலைவரது உயிரையும் உமது வாள் பறித்துவிட்டதென்றால் இங்கு நடந்த நிகழ்வுகளைச் சோழ மன்னனாக முடிசூட்டியிருக்கும் இருங்கோவேளிடம் யார் சேர்ப்பிப்பார்கள்?" என்று கூறிய படியே கோட்டைத் தலைவனின் கழுத்தைத் தொட்டுக்கொண்டிருந்த பரதவன் குமரனின் வாளை தனது வாளால் விலக்கினான் செங்குவீரன்.

பரதவன் குமரன், "தலைவரே! எங்கள் முன்னே இவன் தங்களது உயிரைப் பறித்துப் புகார் சுவரிலே தொங்கவிடுவேன் என்கிறான். இவனை உயிரோடு விடுவதா? இவனைப் புகாரை விட்டு உயிரோடு வெளியேற அனுமதித்தால் அது எங்களுக்குப் பெருத்த அவமானம்!" என்று வெகுண்டெழுந்தான்.

பரதவன் குமரனின் சொற்களை ஆமோதிப்பது போலவே அவையில் சுற்றி நின்ற வீரார்கள் அனைவரும் "உயிரோடு வெளியேற அனுமதிக்கக் கூடாது!" என்று ஒருசேரக் குரல் எழுப்பினார்கள்.

சுற்றி நின்ற புகார் வீரர்களின் கூக்குரலைக் கேட்ட செங்குவீரன் தனது கையிலிருந்த வாளை மேலே உயர்த்தினான், அதுவரை ஆரவாரமிட்டுக் கொண்டிருந்த வீரர்களின் குரல்கள் அனைத்தும் உடனே அடங்கியது. மீண்டும் மயான அமைதி அவ்விடத்தில் சூழத்தொடங்கியது.

ஆரவாரமிட்ட வீரர்களை அடக்கிய செங்குவீரன், வெகுண்டெழுந்த பரதவன் குமரனின் கண்களில் தனது பார்வையைச் சிறிது நேரம் செலுத்தி நிலைநாட்டி அவனது கோபத்தையும் கட்டுப்படுத்தினான்.

பிறகு கோட்டைத் தலைவரிடம், "கோட்டைத் தலைவரே! சோழ மன்னனாக இருங்கோவேள் முடிசூட்டிக் கொண்டதிலும், தாங்கள் புகார்க் கோட்டைத் தலைவராக நியமிக்கப்பட்டதிலும் யாம் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். இருவருக்கும் புகார் நகரத்தின் சார்பாக எமது வாழ்த்துகள்.

கோட்டைத்தலைவர் என்கிற முறையில் தங்களுக்கும், சோழ மன்னன் என்கிற முறையில் இருங்கோவேளுக்கும் புகார் வாசல் எப்போதும் திறந்தே இருக்கும். எப்போது வேண்டுமானாலும் தாங்கள் வருகைத் தரலாம். உரிய மரியாதையும், பாதுகாப்பும் நிச்சயம் வழங்கப்படும். ஆனால் ஒரு செய்தியை மட்டும் உறைந்தை மன்னனான இருங்கோவேளிடம் நினைவில் வைத்துக்கொள்ளச் சொல்லுங்கள். உறைந்தை போன்று புகாரையும், இங்குள்ள மக்களையும் அடிமைப் படுத்த முயற்சி செய்து எமது உபதளபதிகளையும் வீரர்களையும் மறுபடியும் அலட்சியம் செய்ய முயற்சிக்க வேண்டாம். சோழப் பெருவேந்தனான இளஞ்சேட்சென்னியைக் கொன்றது போன்று சோழ இளவலுக்கு எந்தவொரு ஆபத்தையும் விளைவிக்கக் கனவிலும் சிந்திக்க வேண்டாம் என்பதை இந்தக் குருதிப் படிந்த உடையோடும், முன் தோல் வெட்டப்பட்டுக் குருதி வழிந்துகொண்டிருக்கும் கழுத்தோடும் மலை நாட்டு மன்னனிடம் எமது எச்சரிக்கையை அழுத்தமாகத் தெரிவித்துவிடுங்கள்!" எனக் கட்டளையிட்டுவிட்டுத் தனது உப தளபதிகளை அழைத்துக்கொண்டு புறப்பட்டான் செங்குவீரன்.

இரும்பிடர்த்தலையர், வளவனாரிடம் இப்படிப்பட்ட பேராண்மை மிக்கத் தலைவன் தான் தற்போதைய சூழ்நிலையில் சோழ தேசத்திற்குத் தேவை என்று செங்குவீரனைப் பற்றிக் குறிப்பிட்டதை நினைத்தபடியே கீழே அவையில் நடந்த களேபரத்தை முதல் மாடத்தின் உப்பரிகையிலிருந்து கண்டு கொண்டிருந்தார் வளவனார். இரும்பிடர்த்தலையர் கூறியது அனைத்தும் உண்மைதான். அவர் கணித்ததை விடச் செங்குவீரன் வேகமாகவும், தைரியமாகவும் தான் இருக்கிறான் என்று அக்கணம் செங்குவீரனை எண்ணி அவர் மகிழ்ச்சி கொள்ளவே செய்தார்.

வீழ்ந்து கிடந்த இருங்கோவேளின் வீரர்களைக் கண்டபடி கீழிறங்கி வந்த மகேந்திர வளவனாரிடம், தங்களிடம் சேர்ப்பிக்கச் சொல்லி சோழ மன்னர் தந்தனுப்பிய ஓலை இது என்று இடையில் வைத்திருந்த மற்றொரு ஓலையைச் சேர்ப்பித்துவிட்டு, வந்தபோது பெரும் ஆரவாரத்தோடும், மகிழ்ச்சியோடும் வந்த கோட்டைத் தலைவன் செல்லும் போது தலையைத் தொங்கபோட்டுக்கொண்டே புகார் கோட்டையை விட்டு உறைந்தைக்குக் கிளம்பினான்.

ஓலையில் கட்டியிருந்த நூல் கயிற்றோடு சேர்த்து செங்கருஞ்சாந்துக் குழம்பினால் பதித்திருந்த புலிச்சின்னம் கலையாததிலிருந்து இந்த ஓலை இன்னும் பிரிக்கப்பட்டிருக்கவில்லை. இது தனக்கு மட்டுமே அனுப்பியிருக்கும் இரகசிய ஓலை தான் என்று நினைத்தவாறே கட்டியிருந்த நூல் கயிற்றை அவிழ்த்து ஓலையை வாசிக்க ஆரம்பித்தார்.

ஓலையை வாசிக்க ஆரம்பித்த பின்னர் வளவனாரின் முகத்தில் பெரும் குழப்பம் குடிவந்துவிட்டதை மாறிய அவரது முகபாவனைகள் வெளிப்படுத்தியது.

ஓலையைப் பற்றி விவாதிக்க வளவனார், இரும்பிடர்த்தலையரை நோக்கி மேல் மாடத்திற்கு விரைவாகச் சென்றார். ஆனால் அவர் அடிகளாருடன் ஏற்கெனவே அங்கிருந்து கிளம்பிவிட்டதனால் யாருமற்ற வெறுமையான அறை மட்டுமே அவரை வரவேற்றது. பெரும் குழப்பத்துடன் யாரும் அறியாத வண்ணம் அந்த ஓலையை இடுப்பில் சொருகியபடியே தனது இல்லத்தை நோக்கி விரைந்தார்.

# 16. பி றப்பிக்கப்பட்ட கட்டளைகள்

புகார் கோட்டையிலிருந்து தனது உறைவிடமான குன்றுத் துறைக்கு வந்த உபதலைவன் செங்குவீரன், தனது உபதளபதிகளான திருக்கண்ணன், பரதவன் குமரன் மற்றும் டாள்தொபியாஸ் இவர்களுடன் தீவிரமாகச் சோழ தேசத்தின் மாறிவிட்ட அரசியல் நிலை பற்றி விவாதிக்கத் தொடங்கினான்.

ஆலோசனையைத் தொடங்குமுன், புகார் கோட்டையில் புதிதாக நியமிக்கப்பட்ட கோட்டைத் தலைவன் நடுங்கும்படி வீரமாகச் சண்டையிட்ட தனது உபதளபதிகளை அவன் வெகுவாக ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் அவர்களின் வீரச் செயல்களைக் குறிப்பிட்டுப் புகழ்ந்து பாராட்டினான்.

“இன்று ஆரவாரத்தோடு வந்த புகாரின் கோட்டைத் தலைவன் புகாரில் நடந்த நிகழ்வுகளுக்குப் பின் திரும்பி செல்கையில் தனது தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு உறைந்தைக்குத் திரும்பியதிலிருந்து புகாருக்கு ஆபத்து எந்த வழியில் வேண்டுமானாலும் ஏற்படலாம் என்பதை உணர்ந்துகொள்ளலாம். உறைந்தையிலிருந்து இருங்கோவேள் புகாரில் இருக்கும் நம் மீது முறைப்படி போர் தொடுத்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. எதிர்காலத்தில் எது நடந்தாலும் நீங்கள் அனைவரும் எனக்கும், இரும்பிடர்த்தலையருக்கும் பக்கபலமாக துணை இருப்பீர்கள் என்று நம்புகிறேன்” என்று கூறி அமைதியானான்.

இருக்கையிலிருந்த எழுந்த உபதளபதி திருக்கண்ணன், “உறைந்தையிலிருந்து இருங்கோவேளின் சோழப் பெரும்படையே நம்மைத் தாக்க வந்தாலும், வீரத்தோடு எதிர்த்து நின்று உங்களுக்கு இறுதி மூச்சு உள்ளவரை துணையிருப்போம் தலைவரே!” என்றான்.

உபதளபதி திருக்கண்ணனின் கூற்றை ஆதரிப்பது போல உடனே எழுந்த உபதளபதிகள் பரதவன் மற்றும் டாள்தொபியாஸ் ‘‘எங்கள் இறுதி மூச்சு உள்ளவரை சோழ இளவலை அரியாசனத்தில் அமர்த்தும் தங்களது மற்றும் இரும்பிடர்த்தலைவரின் முயற்சிக்குத் துணை நிற்போம் தலைவரே. இந்த முயற்சியில் காலையில் வந்த உறைந்தை வீரர்களைப் போன்று எத்தனை மடங்கு பெரும்படை வந்தாலும், அவற்றை எதிர்த்து முறியடிப்போம்!’’ என்று முழங்கினர்.

தனது உபதளபதிகளின் பேச்சிலும், அவர்களின் வலிமையிலும் பெரும் நம்பிக்கை கொண்ட செங்குவீரன் ’’உங்களது பேச்சும், துணையும் எனக்கு முழு மகிழ்ச்சியளிக்கிறது நண்பர்களே. நாம் நினைப்பது போன்று இருங்கோவேள் புகார் மீது அவ்வளவு எளிதில் போர் தொடுக்கத் துணியமாட்டான். ஏனெனில் சோழ மன்னனாக முடி சூடியிருக்கும் இருங்கோவேள் முதலில் அவனது அரியாசனத்தைத் தக்கவைத்து நிலைப்படுத்திக் கொள்ளவே முயற்சிப்பான். உடனே அவனை எதிர்ப்பவர்கள் மீது அவன் போர்தொடுக்கத் துணிய மாட்டான். ஆனால் அவர்களை ஆதாரமில்லாமல், சத்தமில்லாமல் தீர்த்துக் கட்ட அனைத்து முயற்சிகளையும் செய்வான். காலையில் புகார் கோட்டையில் நடந்த சண்டையில் உங்களை அவர்கள் நேருக்கு நேர் எதிர்கொண்டார்கள். ஆதலால் உங்களது வெற்றி எளிதாகிவிட்டது. உங்களது வாள்வீச்சின் வேகம், விவேகம், பலம் இவற்றினால் நீங்கள் மூவரும் வந்திருந்த அனைவரையும் எளிதில் எந்தவித கடினமும் இன்றி வீழ்த்திவிட்டீர்கள்’’ என்று செங்குவீரன் கூறிக்கொண்டிருந்த போதே, இடைமறித்த உபதளபதியும், நண்பனுமான டாள்தொபியாஸ் ‘‘தலைவரே இடைமறிப்பதற்கு மன்னிக்கவும். புகார் கோட்டையில் அடைந்த வெற்றி உங்களுக்குரியது. தாங்கள் மனதில் என்ன நினைத்தீர்களோ அதனை நாங்கள் மூவரும் செயல்படுத்தினோம். வாள்வீச்சு முறை, போர்க் கலைகள் என அனைத்தும் தாங்கள் கற்றுக் கொடுத்ததே! ஆதலால் வெற்றி அனைத்தும் உங்களுக்கே உரிமை. எங்களிடம் தாங்கள் ‘உங்களது வெற்றி எளிதாகிவிட்டது’ என்று பிரித்துப் பேசுவது எனக்கு மிகவும் வருத்தமளிக்கிறது’’ என்றான்.

தனது உபதளபதி டாள்தொபியாஸ் கூறுவதைக் கேட்டு மகிழ்ந்தபடியே தொடர்ந்த செங்குவீரன், “நேருக்கு நேர் எதிர்க்கும் வீரம் வாய்ந்த பகைவர்களை நாம் எளிதில் வீழ்த்திவிடலாம் நண்பர்களே. ஆனால் நாம் எதிர்பாராத நேரத்தில் வஞ்சகத்தால் முதுகில் தாக்கி நம்மை வீழ்த்த நினைக்கும் கயவர்களை எதிர்த்தல் அவ்வளவு எளிதான காரியமாக இருக்காது. ஆதலால் இனி அப்படிப்பட்ட தாக்குதலின் மூலமே நம்மை வீழ்த்த நிச்சயம் இருங்கோவேள் திட்டமிடுவான். ஏனெனில் சோழ மாமன்னன் இளஞ்சேட்சென்னியை அவன் அப்படித்தான் வஞ்சகத்தால் கொன்றுள்ளான். மேலும் அவனை எதிர்க்கத் துணியும் அனைவரையும் அவன் அந்த உபாயத்திலே தீர்த்துக்கட்ட முயலுவான். ஆதலால் இனி உறங்கும் போதும் ஒருகண்ணைத் திறந்து வைத்துக்கொண்டே எச்சரிக்கையாக உறங்குவது நல்லது நண்பர்களே!” என்று எச்சரித்தான்.

அமைதியடைந்த செங்குவீரனிடம் திருக்கண்ணன், “தலைவரே அடுத்து என்ன செய்ய வேண்டும்? கட்டளையிடுங்கள்!” என்றான்.

கூறுகிறேன் திருக்கண்ணா, “சோழ மன்னனாக முடி சூட்டிக் கொண்ட இருங்கோவேள் அனைத்தையும் திட்டமிட்டே, தெளிவாய்க் காய் நகர்த்திக் கொண்டிருக்கிறான். தான் சோழ மன்னனாக முடிசூட்டிக் கொண்டது தவிர்க்க இயலாதது என்றும், சோழ தேசத்தின் நன்மைக்காகத்தான் என்றும், இளவலுக்குப் போதிய வயதில்லாத காரணத்தினால் சோழ அரசின் நிலைத்தன்மையைக் கருத்தில் கொண்டு உறைந்தை அமைச்சர்கள் மற்றும் வேளிர்களின் ஆலோசனையின் படிதான் சோழ சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொண்டுள்ளதாக அறிவிப்பான்.

சோழ மன்னன் இளஞ்சேட்சென்னிக்குப் படைகளில் உறுதியாக இருந்த பெருமறவர் மகேந்திர வளவனாரை தளபதி பொறுப்பில் இருந்து விலக வைத்தான். இரும்பிடர்த்தலையருக்குப் பாதுகாப்பாக உறைந்தையிலிருந்த என்னையும் புகாரில் காளனின் இடையூறு அதிகமாகிவிட்டது என்று உறைந்தை அமைச்சர்கள் அனுப்பினார்கள். நான் புகாருக்கு வந்த பிறகே உறைந்தையில் இருங்கோவேளின் செல்வாக்கு அதிகமாகி அவர்களிடம் வீழ்ந்தது. ஆதலால் இருபிடர்த்தலையர் மற்றும் நம்மைப் போன்ற சோழ தேச

உண்மை விசுவாசிகளுக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை இளவரசன் வளவன் மட்டுமே. ஆனால் துரதிஷ்டவசமாக இளவலின் இருப்பிடத்தையும் கண்டறிய இயலவில்லை. ஆனால் இளவல் இருங்கோவேளின் கடும் காவல்களுக்கிடையில் தான் சிறை வைக்கப்பட்டு இருக்கவேண்டும். அதுவும் உறைந்தையில் தான் எங்கோ யாவரும் அறியாத வண்ணம் சிறை வைத்திருக்கிறான் என எண்ணுகிறேன்!'' என்றான்.

இடைமறித்த பரதவன் குமரன், ''அப்படி அவன் சோழ தேச நன்மைக்குத் தான் அரசனாக அறிவித்துக் கொண்டேன் என்று அறிவித்தால் மக்கள் எப்படி நம்புவார்கள் தலைவரே?'' என வினவினான்.

''அரசின் உயர் பொறுப்புகளில் உள்ளதால் இருங்கோவேள் பற்றி நமக்குத் தெளிவாகப் புரிகிறது. ஆனால் மக்களுக்கு அரசின் உள் விவகாரங்கள் எப்படித் தெரியும் குமரா? நாம் இளவலைக் கண்டறிந்தால் மட்டுமே, நம்மால் மேற்கொண்டு எந்த முயற்சியையும் முன்னெடுக்க இயலும்! இளவலுக்கு ஏதேனும் நேர்ந்துவிட்டால், நமது முயற்சிகள் அனைத்தும் வீணாகிவிடும். சோழ குடி மக்களின் முன் இளவல் தோன்றினால் தான் உண்மை நிலையை அறிவார்கள். நமக்கிருக்கும் ஒரே நம்பிக்கையும் இளவல் மட்டுமே!''

மேலும் தொடர்ந்த செங்குவீரன், ''கோட்டைத் தலைவனாக நியமிக்கப்பட்டவன் கொண்டுவந்த பிரமாணப் பத்திர ஓலையை யாராவது கவனித்தீர்களா?'' என்றான். மூவரும் ''இல்லை தலைவரே'' என்று மறுமொழி அளிக்கவே டாள்தொபியாஸ் மட்டும் ''தலைவரே, தாங்கள் தானே அவன் கொண்டுவந்த பிரமாணப் பத்திர ஓலையை வாசித்தீர்கள்'' என்றான்.

''ஆமாம் டாள்தொபியாஸ் நான் தான் வாசித்தேன்''

''பிரமாணப் பத்திரத்தில் அப்படி என்ன விசித்திரமாக இருந்தது தலைவரே?'' என வினவினான் திருக்கண்ணன்.

''பிரமாணப் பத்திரத்தில் முதன் மந்திரி கையொப்பமிட்டு, அவரது முத்திரை பொறிக்கப்பட்டு இருந்தது.''

“தலைவரே, முக்கியப் பொறுப்புக்காணவர்களை முதன்மை அமைச்சர் நியமிப்பது தானே நமது நாட்டின் முறை. இதில் ஆச்சர்யப்படும்படி என்ன இருக்கிறது?” என்றான் திருக்கண்ணன்.

“உறைந்தைக் கோட்டைத் தலைவராக இருந்த என்னையும் உப்புக்கும் பயனில்லாத காரணத்தைக் கூறிக் கட்டாயமாகப் புகாருக்கு அனுப்பியவரும் அவர்தான், எனது நண்பன் திவ்யனை நாகத்தீவுக்கு வைதீக முனிவரோடு செல்ல உத்தரவிட்டவரும் அவர் தான்.”

நண்பன் திவ்யனை எண்ணிய போது அவனது மனம் கலங்கியது. ஆனால் அவன் அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மறைக்க முயற்சித்தும் தோற்று, “அன்று அவனோடு நான் சென்றும் அவனைப் பறிகொடுத்து விட்டேனே!” எனக் கலங்கினான்.

“அப்படியானால்........” என்று வியந்தான் பரதவன் குமரன்.

“சோழ மன்னன் இளஞ்சேட்சென்னி கொல்லப்பட்டது, இருங்கோவேள் மன்னனாக முடிசூட்டிக் கொண்டது என அனைத்திலும் முதன்மை அமைச்சருக்கும் பெரும் பங்கு உள்ளது, அனைத்தும் திட்டமிடப்பட்டே செயல் படுத்தப்படுகிறது!” என்று செங்குவீரன் கூற மற்ற மூன்று உபதளபதிகளும் பெரும் அதிர்ச்சியில் உறைந்து விட்டனர்.

தொடர்ந்த டாள்தொபியாஸ், “தங்களது கவலை புரிகிறது தலைவரே. பன்னெடுங்காலமாகப் புகழ்பெற்று விளங்கிய சோழப் பரம்பரை இன்று பெரும் ஆபத்தில் சிக்கியுள்ளது. நாம் இப்போது இளவலை உடனடியாகக் கண்டறிய வேண்டிய நெருக்கடியில் இருக்கிறோம். அவருக்கு மட்டும் ஏதேனும் நிகழ்ந்துவிட்டால், சோழ வம்சமே நிர்மூலமாகிவிடும். அதற்கு நாம் இம்மியளவும் இடமளித்து விடக்கூடாது. இளவலைக் கண்டறியும் முயற்சியில், இனி எந்தவிதத்திலும் நாம் தாமதிக்கக் கூடாது. இருங்கோவேளும் சோழ சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொண்டான். ஆதலால் இளவல் இருங்கோவேளின் காவலில் இருந்தால் அவருக்கு நிச்சயம் எந்த நேரத்திலும் ஆபத்து சூழும் வாய்ப்புகள் அதிகம். இருங்கோவேள் இளவலை வஞ்சகமாக, அதே நேரத்தில் அவரது இறப்பில் யாருக்கும் எந்தவித ஐயமும் தோன்றாத விதம் கொன்றாலும் கொன்றுவிடுவான். அவன் தனது பதவியைத்

தக்கவைத்துக் கொள்ள எதை வேண்டுமானாலும் இனி செய்வான்! நாங்கள் இனி என்ன செய்ய வேண்டும் தலைவரே? கட்டளையிடுங்கள்! நிறைவேற்ற சித்தமாக உள்ளோம். எங்கள் உயிரைக் கொடுத்தேனும் இளவலின் உயிரை மீட்போம், இது எங்களது போர்வாளின் மீது ஆணை!'' என்று அவனது இடையுறையிளிருந்து வாளை உருவி உயர்த்தியபடியே ஆவேசமாகப் பேசினான்.

எங்கோ தூர தேசத்திலிருந்து வந்த யவன வீரனுக்குச் சோழ தேசத்தின் மீதிருக்கும் பற்றையும், நம்பிக்கையையும் கண்டு உபதலைவன் செங்குவீரன் பெரிதும் மகிழ்ந்தான். இதனைக் காண இரும்பிடர்த்தலையரும் வளவனாரும் இங்கு இல்லையே! என்றும் வருந்தினான். இருக்கையிலிருந்து எழுந்த செங்குவீரன் வாளை உயர்த்திய டாள்தொபியாசை மார்போடு தழுவி அணைத்துக் கொண்டான்.

தொடர்ந்த செங்குவீரன், ''உண்மைதான் டாள்தொபியாஸ். இளவலுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்து அபாயகரமானது. அதைப்பற்றித் தான் நானும் சிந்தித்துக் கொண்டிருந்தேன்'' என்று பேசிக்கொண்டிருந்தவன் குறுக்கும் நெடுக்குமாக இருமுறை நடந்தபடியே மௌனமானான்.

செங்குவீரன் இருக்கையிலிருந்து எழுந்ததும் அவனது மூன்று உபதளபதிகளும் இருக்கையிலிருந்து எழுந்து அவனது மௌனத்தைக் கலைக்க விரும்பாமல் அவனது கட்டளையை எதிர்பார்த்து நின்றனர்.

''டாள்தொபியாஸ் இன்றிலிருந்து புகார் நகரத்தின் கோட்டை, துறைமுகம், சிறைக்கோட்டம் என அனைத்து பாதுகாப்புகளுக்கும் நீயே பொறுப்பு. நமது படை வீரர்கள் எந்த நேரத்திலும், எதற்காகவும் தயாராகவே இருக்கட்டும்'' என்றவன் தொடர்ந்து ''டாள்தொபியாஸ் உமக்கு மற்றுமொரு பணியையும் வழங்குகிறேன். இந்திரத் திருவிழா தொடங்குவதற்குள் புகாரின் சிறைக்கோட்டத்தில் காளன் அடைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவனது உயிருக்கும், உடலுக்கும் எந்தவொரு ஆபத்தும் ஏற்படுத்தாமல் கைது மட்டும் செய்! பங்குனிப் பௌர்ணமியும் கடந்து விட்டது. இந்திரத் திருவிழா தொடங்க இன்னும் ஒரு கிழமை மட்டுமே உள்ளது என்பதையும் நினைவில் கொள்.

மேலும் இன்றிலிருந்து புகாரின் துறைமுகம், கோட்டை, சம்பாபதி வனம், காவிரி ஆறு என எதன் வழியாகவும் உனக்குத் தெரியாமல் யாரும் உள்நுழையவும் கூடாது, வெளியேறவும் கூடாது. நமது பாசறைகளில் ஓய்வெடுக்கும் பாதி வீரர்களை மாற்று உடைகளில் இன்றிலிருந்து அனைத்து இடங்களுக்கும் காவலுக்கு நியமித்துவிடு. மீதி இருக்கும் வீரர்கள் குன்றுத் துறையிலேயே பயிற்சி மற்றும் போர் ஒத்திகைகளில் கவனம் செலுத்தட்டும். சுழற்சி முறைகளில் அனைவரும் அனைத்து வேலைகளையும் செய்ய உத்தரவிடு. புகாரைக் கைப்பற்ற வேண்டுமெனில் குணக்கடல், காவிரி நதி, குன்றுத் துறை இவற்றைக் கடந்த பின்னரே புகாருக்குள் நுழைய இயலும். இந்திரத் திருவிழாவைக் காண மக்கள் போர்வையில் புகாருக்குள் ஊடுருவும் இருங்கோவேள் வீரர்களையும் அடையாளம் காண மறந்துவிட வேண்டாம்! காவல் அதிகப்படுத்தப் பட்டிருப்பது பற்றி யாராவது கேள்வி எழுப்பினால், இந்திரத் திருவிழாவிற்கான முன் ஏற்பாடு என்று கூறிவிடு டாள்தொபியாஸ்'' எனக் கட்டளையிட்டான்.

''டாள்தொபியாஸ், நேற்றிரவு வளவனார் மகள் எறிந்த குறுவாளால் காளன் தாக்கப்பட்டிருப்பான் என்றே நினைக்கிறேன். ஆதலால் நீ இப்போதே பெருவணிகர் வேளாதனின் வீட்டிற்குச் சென்று பத்திரைத் தேவியிடம் விசாரித்துவிட்டுப் பின்னர் உனது தேடலைத் தொடங்கு. காளன் புகாரை விட்டு எந்தச் சூழ்நிலையிலும் தப்பி விட்டான் என்ற செய்தி எனக்கு எட்டக் கூடாது என்பதையும் நினைவில் வைத்துக்கொள்!'' என்றான்.

மேலும் டாள்தொபியாசிடம் சம்பாபதி வனத்திற்கு அருகிலுள்ள வைதீகப் பிராமணரின் மாளிகையில் அதிகாலையில் நடந்த நிகழ்வுகளைக் குறிப்பிட்டு, ''அங்கு நமது வீரர்கள் சிலரை பணியாட்களாக அனுப்பித் தீவிரமாகக் கண்காணிக்கச் சொல். ஏதேனும் முக்கியத் தகவல் கிடைத்தால் உடனே தெரியப்படுத்து'' என்றும் கட்டளையிட்டான்.

''டாள்தொபியாஸ், நீ இளவலைப் பற்றிய கவலையை விடு. நான் இன்றே உறைந்தைக்குப் புறப்படுகிறேன். என்னோடு திருக்கண்ணனும் வருவான்'' என்றவன் திருக்கண்ணனிடம் ''நீ டாள்தொபியாசுடன் பத்திரைத் தேவியின் வீட்டிற்குச் சென்று காளனைப் பற்றி விசாரித்த பின்னர்

உறைந்தைக்குச் செல்ல வேண்டிய ஏற்பாடுகளைக் கவனி. இன்று மாலையில் பரிதி மறையும்முன் நாம் இருவரும் உறைந்தையில் இருக்க வேண்டும். அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்'' எனக் கட்டளையிட்டான்.

அவனது உரையாடலைக் குறுக்கிட்ட டாள்தொபியாஸ் ''தலைவரே, புகாரின் அனைத்துப் பகுதிகளிலும் காவலை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் என்ன? நாம் காவலை அதிகப்படுத்தினால் திருவிழாவிற்கு வரும் மக்கள் தானே பாதிக்கப்படுவார்கள். இப்போது இளவலைக் கண்டறிய வேண்டியது தானே பிரதான பணி. புகாரில் ஏற்கெனவே நமது வீரர்கள் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் திறம்படவே செய்துகொண்டிருக்கிறார்கள். வீரர்கள் மிகுந்த புகாரை பொது மக்கள் பார்க்கையில், அவர்களுக்குத் தேவையற்ற பீதியும் அச்சமும் ஏற்பட்டுவிடும்'' என்றான்.

''உண்மைதான் டாள்தொபியாஸ், காவல் மிகுந்துவிட்டால் மக்கள் அப்படித்தான் எண்ணுவார்கள். ஆதலால் தான் வீரர்களை மாற்றுடையில் கண்காணிக்கச் சொன்னேன். டாள்தொபியாஸ், நீ இளவலைக் கண்டறிவது தான் பிரதானப் முக்கியப் பணி என்கிறாய். நிச்சயமாக நமது தலையாயப் பணியும் அவரைக் கண்டறிதலே. ஆனால் நான் இப்போது யோசித்துக் கொண்டிருப்பது, சோழ இளவலைக் கண்டறிந்த பின்னர் அடுத்து நடக்கப் போவதைப் பற்றித்தான். உறைந்தையும் வீழ்ந்துவிட்டதனால் நமக்கிருக்கும் ஒரே தளம் புகார் மட்டுமே. எந்தச் சூழ்நிலையிலும் புகாரில் இருங்கோவேளின் ஆதிக்கம் செல்லுபடியாகக் கூடாது. ஆதலால் தான் அவனைக் கடுமையாக எச்சரிக்கவே காலையில் புகார்த் தலைவனை உயிரோடு அனுப்பி வைத்தேன்!'' என்றான் செங்குவீரன்.

பரதவன் குமரனிடம், ''குமரா நம் வசம் இருக்கும் பாய்மரக் கப்பல்களும், படகுகளும் வீரர்களுடன் எப்போதும் தயாராகவே இருக்கட்டும். காவிரி நதியின் போக்குவரத்துடன் துறைமுகக் கப்பல்களின் போக்குவரத்தும் உனது கண்காணிப்பிலே இருக்கட்டும். பழுதடைந்துள்ள பாய்மரக் கப்பல்களை விரைந்து செப்பனிடச் சொல்'' எனக் கட்டளையிட்டவன் பின் ''நாம் இருவரும் கணிகையர் வசிக்கும் விறலியர் மாளிகைக்குச் செல்ல வேண்டியுள்ளது. காலம் தாழ்த்தாமல் உடனே கிளம்பு. எதற்கும் சில

குறுவாள்களை மறைத்து எடுத்து வா” எனக் கட்டளையிட்டபடியே தனது அறைக்குள் நுழைந்தான் செங்குவீரன்.

# 17. எத ிர்பாராத கலகம்

புகாரின் இரு பிரிவுகள் மருவூர்ப்பாக்கமும் பட்டினப்பாக்கமும் ஆகும். இவற்றின் மத்தியில் இரண்டையும் பிரிப்பது போன்று அமைந்த பண்டகசாலைப் பகுதிக்கு நாளங்காடி என்று பெயர். இந்த நாளங்காடியில் பல நாட்டு உணவுப் பொருள்களும், பெண்கள் அணியும் அனைத்து விதமான ஆபரணங்களும் இவற்றோடு ஆபரணங்கள் செய்யும் மரகதக் கற்கள், பவளம், முத்து, வைரம், வைடூரியம் போன்ற மதிப்புமிக்கக் கற்களும் இவற்றை மிஞ்சும் வகையில் பல வண்ணங்களில் வாசனைகள் நிரம்பிய மலர் மாலைகள் விற்கும் கடைகளும் நிரம்பியிருந்தது. இத்தகைய நாளங்காடிக்கு அருகில் தான் புகாருக்குப் புதிதாக வருகை தரும் விறலியர்களும், காலம் காலமாகப் புகாரையே உறைவிடமாகக் கொண்டு கோட்டையிலும், கோயில்களிலும் பொது நிகழ்ச்சிகளிலும் நடனத்தை அரங்கேற்றி வரும் புகார் நகரப் பூர்வீக விறலியர்களும், பாணர்களும், கூத்தர்களும் வசிக்கும் பெரும் மாளிகை காணப்பட்டது.

‘வினையே ஆடவர்க்கு உயிரே’ என்ற குறுந்தொகை ப் பாடல் மூலம் மூதாதையர் தேடி வைத்த செல்வங்களில் வாழ்தலை அக்காலத் தமிழ் மக்கள் விரும்பவில்லை என்றே தெரிகிறது. சொந்த முயற்சியில் பொருள் தேட வேண்டும். அவ்வாறு தேடிய பொருளில்தான் தானும் வாழ வேண்டும், பிறரையும் வாழ வைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தைக் கொண்டிருந்தனர். ஆடவர்கள் எப்போதும் போர்களுக்கும், கல்வி கற்கவும், பொருளீட்ட வாணிபத்திற்கும் தூர தேசங்களுக்குச் செல்வதுண்டு. தலைவனில்லாமல் தனியாக வீடுகளில் வசிக்கும் தலைவிதான் இல்லறத்தின் கண். குழந்தைகளுக்குக் கல்வி, நல்லொழுக்கங்களைக் கற்பித்தல் எனக் கற்பு நெறித் தவறாமல் இல்லறப் பண்பாட்டினை வளர்த்து கண்ணும் கருத்துமாயிருந்தனர் குலப் பெண்கள்.

பொருளீட்ட தூர தேசம் செல்லும் ஆடவர்கள் காமம் காரணமாக நாடிச் செல்லும் பொது மகளிருக்குக் கணிகையர் என்று பெயர். குலப் பெண்களுக்கு இல்லறப் பண்பாட்டைக் பேணிக்காத்தலில் பெரும் பங்கு இருந்தால், கணிகையர்களுக்குச் சமுதாயப் பண்பாட்டினையும், சமுதாயக் கட்டமைப்பையும் பேணிக்காத்தலில் பெரும் பங்கு இருந்தது. இப்படிப் பொது மகளிர் கணிகையராக வாழ்ந்த காலத்திலும் ஆடவர்கள் காமம் மற்றும் காதல் காரணமாக இரண்டாம் முறையாக மணந்து கொண்ட முறையும் உண்டு. அவர்களுக்குக் காமக் கிழத்தியர் என்று பெயர். தன் குலத்தைச் சார்ந்து மணந்த மற்றொரு பெண்ணிற்கு ஒத்தகிழத்தி என்றும், அரசர்களால் முனிவர்களுக்குப் பணிவிடை செய்யக் கொடுக்கப்பட்ட அரச, வணிக, வேளாண் குலப் பெண்களுக்கு இழிந்த கிழத்தி என்றும் ஆடல் பாடல்களில் வள்ளவராகத் திகழும் கணிகையர் மற்றும் விறலிகளைத் தலைவன் தனக்கென வரைந்து கொள்ளும் பெண்ணிற்கு வரையப்பட்டோர் என்றும் பெயர். இந்த வரையப்போட்டோர் கன்னிகளாகவும், அதன் பிறகும் வரையப்படும் பழக்கமிருந்தது. இவர்களுக்குப் பொதுப்பெயர் காமக்கிழத்திகள்.

இந்த வகையில் கண்ணகி பரம்பரையான குல மகளிர். கணிகையர் பரம்பரையான பொது மகளிர். மாதவி கணிகையர் குலத்தில் பிறந்திருந்தாலும் அவளது அழகு, ஆடல் திறமை ஆகியவற்றைக் கொண்டு கோவலனால் வரையப்பட்டுக் கொண்ட கணிகையர் குலத்தில் பிறந்த கற்புக்கரசி. கண்ணகி குலமகளிரான கற்புக்கரசி. மாதவி பொது மகளிருள் கற்புக்கரசி. ஆகப் பொருளீட்ட தூர தேசங்களில் இருந்து வரும் தலைவர்களை ஆதரித்து அவர்கள் மற்ற இல்லறத் தலைவிகளை நாடாமல் பண்பாட்டினைக் கட்டிக் காக்கும் வல்லமை பொது மகளிரான கணிகையர்களுக்கே உண்டு. நமது கதைக்களம் கோவலன், கண்ணகி, மாதவி, இவர்களின் காலத்திற்கு முற்பட்டது என்றாலும் குலமகளிர், பொதுமகளிர் இவற்றின் வேறுபாடுகளை இவர்களை வைத்தே அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

இப்படி இல்லறப் பண்பாட்டினை பேணுதலில் குலமகளிரின் பங்கு முக்கியமானது என்றாலும் சமுதாயப் பண்பாடு மற்றும் ஆடல், பாடல் போன்ற கலைகளைப் பேணி வளர்த்தலில் விறலியர் மற்றும் கணிகையரின் பங்கு முக்கியமானது. சங்க காலங்களில் எழுதப் படிக்கத் தெரிந்த மகளிர் என்றால்

பெரும்பாலும் அவர்கள் கணிகையராக அல்லது விறலியாகவே இருப்பர். கணிகையர் என்றால் பொது மகளிர். விறலியர் என்றால் ஆடல் பாடல் போன்ற கலைகளுக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்.

விறலியர்களுள் சிலர் பொருள், ஆடம்பரம், சுகபோக வாழ்க்கை இவற்றிற்கு ஆசைப்பட்டுக் கணிகையராகவும், சில விறலியர்கள் கற்பு நெறி தவறாத இல்லத்தரசிகளாகவும், சிலர் காலம் முழுக்கத் தன்னைக் கலைக்கே அர்பணித்துக்கொண்டு கன்னிகளாகவே வாழ்பவர்களும் உண்டு.

இப்படிப்பட்ட கணிகையர் குலத்தில் பிறந்து கலைக்கு மட்டுமே தன்னை அர்ப்பணித்த விறலிதான் பூங்கோதை. அவளது அழகும், நடையும், ஆடல் திறனும் யாவரும் வியக்கும்படியாய் வனப்பு மிகுந்தது. பல சிற்றரசர்களும், செல்வந்தர்களும், வைதீகர்களும் அவளைக் காமக்கிழத்தியாக வரைந்துகொள்ள முயன்றாலும் அவள் எந்தவொரு ஆடம்பரத்திற்கும் ஆசைப்படாமல் கன்னியாகவே நாட்டியக் கலையை நேசித்துத் திறம்படச் செய்து வந்தாள். ஆனால் அவளது மனமும் யாவரும் அறியாத வண்ணம் ஒரு வீரன் மீது மையல் கொண்டிருந்தது.

விறல்வேலும், பரதவன் குமரனும் விறலியர் மாளிகைக்குள் நுழைந்த போது அங்கே காலையில் புகார்க் கோட்டையில் தெய்வீக நடனமாடிய இல்லத்தரசியான கற்பு நெறி தவறாத விறலியும் அவளது கணவன் வேலனும் எதிர்ப்பட்டனர்.

எதிர்பட்ட வேலன் மற்றும் விறலியிடம் செங்குவீரன் தனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு அவர்களிடம் காலையில் புகார்க் கோட்டையில் அரங்கேறிய அவர்களின் நடனம் பற்றிப் பெரிதும் புகழ்ந்து பேசினான். எதிர்ப்பட்டுப் பாராட்டுபவன் யார் என்று அறியாததால் பதிலுக்கு வேலனும் தனது வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு தொடர்ந்தவன் “தம்பி, தங்களை இன்று புகார்க் கோட்டையில் கண்டதாக எனக்கு ஞாபகம் இல்லையே! தாங்கள் காலையில் புகார்க் கோட்டைக்கு வருகை புரிந்தீர்களா?” என்றார்.

அவருக்குப் பதிலளித்த செங்குவீரன், “ஆமாம் அய்யா. நான் காலை தங்களது விறலிக் கூத்து அரங்கேறிய போது புகார்க் கோட்டையில்

தான் இருந்தேன்'' என்றான்.

''ஆச்சர்யமாக உள்ளது வீரரே!'' தனது மனைவி விறலியிடம் ''நீ இவரைக் காலையில் கண்டாயா?'' என்று வினவினான். அதற்கு விறலியும், ''இல்லை அத்தான். எனக்கும் இவரைக் கண்டதாக நினைவேதும் இல்லையே'' என்று மந்த மாருதத்தில் மிதந்து வரும் குயிலின் இசையாய் பேசினாள்.

குறுக்கிட்ட செங்குவீரன் விறலியிடம், ''தாங்கள் பாடினால் தான் தமிழ் மதுரத் தேனாக இனிக்கும் என்று காலையில் எண்ணினேன் சகோதரி. ஆனால் தாங்கள் பேசினாலும் மந்த மாருத வண்டின் ரீங்காரம் போன்றே இனிக்கச் செய்கிறது'' என்றான்.

சிறிது மௌனத்திற்குப் பிறகு தொடர்ந்த செங்குவீரன் ''காலையில் உங்கள் நடனத்தைக் கண்டபோது வள்ளி முருகனையே நேரில் கண்டது போன்ற உணர்வைத் தோற்றுவித்துவிட்டீர்கள். நடனத்தின் முடிவில் தாங்கள் மயங்கிவிட்ட போது நானும் பதறிவிட்டேன். பின்னர்த் தங்கள் தலைவர் முருகன் வேடமிட்டு உங்களை எழுப்பிய போது, வள்ளியை ஆட்கொண்டவர் தமிழ் கடவுளான முருகன் தான் என அறிந்ததும் உங்கள் முகத்தில் தோன்றிய பரவசம் மற்றும் உணர்ச்சிகளின் பாவங்களை வர்ணிக்க வார்த்தையில்லை. பின்னால் இசையமைத்துக் கொண்டிருந்த தங்கள் தலைவர் முருகனாக அனைவர் முன் தோன்றுவார் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. மொத்தத்தில் தங்களது நடனம் பிரமிக்கச் செய்தது!'' என்றான்.

செங்குவீரன் அவர்களின் திறமையைச் சரியானபடி அறிந்து பாராட்டவே பொறுமையிழந்த வேலன், ''அய்யனே, தங்களது பாராட்டு எங்களுக்குப் பெரும் மகிழ்ச்சியளித்து மெய் சிலிர்க்க வைக்கிறது. எம்மைப் போன்ற நடனமாடும் கூத்தர்களுக்குப் பிறர் வழங்கும் பொன்னையும் பொருளையும் விட இப்படிப்பட்ட பாராட்டுகளே ஆன்ம திருப்தியை அளிக்க வல்லது. ஒரு கலையைச் சரியான படி பாராட்ட வேண்டுமெனில் அந்தக் கலையைப் பற்றிய அறிவு ஓரளவிற்கேனும் நிச்சயம் பரீட்சயம் இருக்க

வேண்டும். தாங்கள் யார் என்று முதலில் கூறுங்கள் அய்யனே? எங்கிருந்து எங்களது விறலிக் கூத்தைக் கண்டுகளித்தீர்கள்?'' என்றான்.

''அவசரப்படாதீர்கள் அய்யா. கூறுகிறேன். எனது பெயர் விறல்வேல். புகார்ப் படைகளின் உப தலைவன். நான் புகார் கோட்டையின் மேல் மாட உப்பரிகையிலிருந்து தங்களது நடனத்தைக் கண்டுகளித்தேன்'' என்றான்.

''ஏது, விறலியர் குடும்பத்தில் பிறந்து வாள் வீச்சிலும், வில் வித்தையிலும் யாராலும் தோற்கடிக்க முடியாத தென்னகத்தின் மாபெரும் வீரரான செங்குவீரன் தாங்கள் தானா?'' என்று மகிழ்ந்து அவனைக் தழுவி அவரது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்.

தொடர்ந்த விறலி, ''செங்குவீரரே, தங்களது புகழ் சோழ தேசம் மட்டுமல்ல பாண்டிய நாடு, சேர நாடுகளைக் கடந்து தூர தேசங்களுக்கும் பரவிக் கிடக்கிறது, நாங்கள் பல நாடுகளுக்கு நடனத்தை அரங்கேற்றச் சென்றிருக்கிறோம். அங்குப் பல வீரர்கள், தங்களைக் காணாதவர்கள் கூடத் தங்களது வீரத்தையும், வாள் வீச்சின் வேகத்தையும் வியந்து பேசி பெருமைப்பட்டுக் கொள்வர். உங்களின் முன் ஒருமுறையாவது வாள் சமர் புரிந்து தங்களின் திறமையினைப் பரிசோதித்து விட வேண்டும் என்று எண்ணுவர். நாங்களும் சில முறை எண்ணியிருக்கிறோம். இப்படிப்பட்ட வீரரை வாழ்வில் ஒருமுறையாவது சந்தித்திவிட வேண்டும் என்று. ஆனால் தாங்களே எங்களிடம் வந்து அறிமுகமாகி உரையாடுவீர் என்று கனவிலும் நாங்கள் சிந்தித்திருக்கவில்லை'' என்றாள்.

சற்றுப் பொறுங்கள் வீரரே என்று மாடுகள் பூட்டப்படாத மூடு வண்டிக்குள் சென்றவள் ஒரு கிண்ணம் முழுக்கத் திணை மாவையும், மற்றொரு கிண்ணம் முழுக்கத் தேனையும் கொண்டு வந்து ''வீரரே, முதல் முறையாக எங்கள் இருப்பிடம் வந்துள்ளீர்கள். ஆதலால் தங்களை வரவேற்று உபசரித்து விருந்தோம்பல் செய்யவேண்டியது எமது கடமை. ஆதலால் மறுக்காமல் தாங்கள் இருவரும் எனது உபசரிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்று அருகில் இருந்த மரத்தின் நிழலில் துணியை விரித்து அருகில் செங்குவீரனுக்கும் தனக்கும் எந்த உறவும் கிடையாது என்பது போல

அவர்களின் உரையாடலில் பங்குகொள்ளாமல் நின்று கொண்டிருந்த பரதவன் குமரனை, ''வீரரே தாங்களும் வந்து அமுதுண்ணுங்கள்'' என்று அழைத்தாள்.

முதலில் மறுத்த பரதவன் குமரன் செங்குவீரனும் ''மலைத் தேனும், திணையும் கிடைத்தற்கரியது. இப்போது வேண்டாம் என்று மறுத்துவிட்டால் பின்னர் ஆசைப்பட்டாலும் கிடைக்காது'' என்று கூறி அழைக்கவே மறுக்க இயலாமல் அவனும் செங்குவீரனோடு உண்ண ஆரம்பித்தான்.

திணை மாவையும் தேனையும் உண்டுகொண்டிருந்த பரதவனிடம் ''வீரரே தங்களது பெயர் என்ன என்று அறிந்துகொள்ளலாமா?'' என்று வினவினான் வேலன்.

பதிலுக்கு வாய் நிறையத் திணை மாவுடன் பரதவன் பேச முயற்சிக்கவே புரையேற செங்குவீரன் அவனது தலையைத் தட்டி நீர் கொடுத்துவிட்டு ''இவன் எனது நண்பன். பெயர் பரதவன் குமரன். கடல் அலைகளின் போக்கினை அறிந்து கப்பல் செலுத்துவதில் வல்லவன், நிகரற்றவன்'' என்றான்.

''தளபதியாரே உங்களைப் பற்றியும் கேள்விப்பட்டுள்ளோம், செங்குவீரனின் மூன்று தளபதிகளுள் ஒருவர் தானே நீங்கள். தாங்கள் இருவரையும் ஒருசேர கண்டது எங்கள் பாக்கியமே!'' என்றாள் விறலி.

விறல்வேல் மற்றும் பரதவன் குமரன் இருவரும் விறலியின் வேண்டுகோளை ஏற்று அமுதுண்டு கொண்டிருந்த போது விறலியர் மாளிகையில் வசித்துக் கொண்டிருந்த விறலியர் மற்றும் பாணர்கள், கூத்தர்கள் என அனைவரும் செங்குவீரன் மாளிகைக்கு வந்துள்ளார் என்று பிரமிப்பு கலந்த ஆச்சர்யத்தோடு ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டிருந்தனர். மாளிகையில் காட்டுத் தீ போன்று பரவிய செங்குவீரனின் வருகைச் செய்தியானது விறலி பூங்கோதைக்கும் எட்டியது.

செங்குவீரன் மாளிகைக்குள் வந்துள்ளதைக் கேட்டதும், பூங்கோதை உற்சாகத்தில் துள்ளிக் குதித்து அவனைக் காண விரைந்தாள். பூங்கோதையின் திடீர் மகிழ்ச்சி மற்றும் உற்சாகத்தின் காரணத்தைப்

புரிந்துகொண்ட அவளது தோழிகள் அவளைப் பரிகாசம் செய்ய அவளோ நாணத்தில் வெட்கி முகம் சிவந்து தரையை நோக்கினாள்.

பூங்கோதையின் தோழிகளில் ஒருத்தி, “செங்குவீரன் வந்துள்ள செய்தியைக் கேட்டதற்கே புதிதாகச் சமைந்த பெண்ணாக இவள் இப்படி நாணுகிறாளே!” என்றாள்.

மற்றொருத்தி, “செங்குவீரனைக் கண்டு பேசிவிட்டால் இவள் அவ்வளவுதான். இவளது துடிக்கும் இதயம் கூட நின்றாலும் நின்றுவிடும்” என்றாள்.

இன்னொருத்தி, “அவளது இதயத்தை அவள் தான் ஏற்கெனவே அவள் அறியாத வண்ணம் அவரிடம் கொடுத்துவிட்டாளே, அது எப்படியடி அது துடிப்பதை நிறுத்தும். அது துடித்துக் கொண்டிருப்பதே அவரது பெயரைத்தானே” என்றாள்.

பூங்கோதை செங்குவீரனோடு தன்னை இணைத்துத் தோழிகள் பரிகாசம் செய்வதை விரும்பினாலும், அவள் அதனை எதிர்ப்பது போல “உங்களது பரிகாசச் சொற்களைப் பிறகு வைத்துக்கொள்ளுங்கள். நான் அவரைக் கண்டு அவர் இங்கு எந்தக் காரியத்திற்காக வருகை புரிந்திருக்கிறார் என அறிந்து அவருக்கு உதவிவிட்டு வருகிறேன்!” என்று கூறிவிட்டு தோழிகளின் மறுமொழியை எதிர்பார்க்காமல் விடுவிடுவெனச் செங்குவீரனை நோக்கிக் கிளம்பினாள்.

திணை மாவு பக்குவமாக அம்மியில் அரைக்கப்பட்டு அவற்றோடு வெல்லத்தையும் சேர்த்து தேனுடன் கலந்து விறலி பரிமாற முதலில் தயங்கிய பரதவன் குமரன் பிறகு அதன் சுவையைக் கண்டபின் ஒரு பிடி பிடிக்கவே செய்தான். அவன் வேகமாக உண்டதைக் கண்ட செங்குவீரன், “குமரா, அவசரம் இல்லை. பொறுமையாகவே நீ உண்ணலாம். நீ உண்டு முடிக்கும் வரை நான் உன்னை விட்டு எங்கும் சென்றுவிட மாட்டேன். முதலில் வேண்டவே வேண்டாம் என்று அடம்பிடித்தாய். நீ உண்ணும் வேகத்தைப் பார்த்தால், இருக்கும் திணை மாவு மற்றும் தேன் அனைத்தும் உனக்கே போதாது போலிருக்கிறதே!” என்று அவனைப் பார்த்து நகைத்தான். பரதவன்

குமரன் ‘‘தலைவரே, உண்ணும் போது பேசக்கூடாது என்பது தாயின் அறிவுரை’’ என்ற படியே அவனது வேலையில் மும்முரமானான்.

பரதவன் குமரனுக்கு வேண்டிய மட்டும் விறலி பரிமாறப் பிறகு இருவரும் அமுதிற்கு நன்றி தெரிவித்துவிட்டு விறலியிடமும் வேலனிடம் பிரியா விடைபெற்றுக் கொண்டு மாளிகைக்குள் நுழைய அவர்களை எதிரில் வந்த பூங்கோதை வரவேற்றாள்.

உப தலைவனை வரவேற்ற விறலி ’’தலைவரே, என்ன இன்று உங்கள் காற்று இந்த மாளிகை பக்கம் வீசியிருக்கிறது? மழைக்குக் கூட நீங்கள் விறலியர் மாளிகைக்கும் கணிகையர் மாளிகைக்கும் ஒதுங்க மாட்டீர்களே! யவனப் பெண்களும், உரோமப் பெண்களும் தானே உங்களை எப்போதும் மொய்த்துக்கொண்டு இருப்பார்கள். ஏது, இந்தப்பக்கம்! அதுவும் உங்களது உபதளபதியும் கூட வந்திருக்கிறார். காரணம் யாதோ?’’ என வினவினாள்.

ஒவ்வொரு வருடமும் புகார் இந்திரத் திருவிழாவில் நடைபெறும் வாள்வீச்சு, வில் வித்தை, புரவித் தேர் போட்டி எனப் பலவித போட்டிகளில் அவன் வெற்றி பெற்றதும், அவனுக்கு வெற்றி மாலை சூட அனைத்து அயல் தேச பெண்களும் முயலுவர். அதைத்தான் விறலி பரிகாசம் செய்கிறாள் என்பதைப் புரிந்துகொண்ட விறல்வேல் அவளோடு எந்தவித உரையாடலையும் தொடராமல் அவனது இடுப்பில் வைத்திருந்த இறந்த கள்வன் அணிந்திருந்த விறலி மாலையை எடுத்து ‘‘இந்த விறலி மாலை யாருக்கு உரியது பெண்ணே. இந்த மாலைக்குரிய பெண்ணின் தலைவனைப் பற்றி அறிந்து கொள்ளவே இவ்வளவு தூரம் வந்தேன்!’’ என்றான்.

அந்த விறலி மாலையை வாங்கிப் பார்த்த பூங்கோதை, ‘‘தலைவரே சற்றுப் பொறுங்கள். சிறிது நேரத்தில் உண்மையை அறிந்துவிட்டு வருகிறேன் என்று மாளிகைக்குள் சென்ற விறலி சிறிது நேரம் கழித்துத் திரும்பினாள். வந்தவள், ‘‘தலைவரே இந்த மாலை இங்கு உள்ள யாருக்கும் சொந்தமானது கிடையாது. யாரும் இதனை இதற்கு முன் கண்டது கூட இல்லை என்கின்றனர். இந்த மாலையே சற்று வித்தியாசமாக உள்ளது. தங்க இழையில் முத்துக்களையும், பவளங்களையும் மரகதக் கற்களையும்

கொண்டு செய்திருக்கிறார்கள். இது சற்று விலை உயர்ந்தது. மேலும் இத்தகைய மதிப்பு வாய்ந்த கற்களோடு ஏன் அடியில் ஒரு மரத்தினாலான குண்டினை இணைத்துள்ளார்கள் என்பது பெரும் விசித்திரமாகவே உள்ளது'' என்றாள்.

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு தொடர்ந்தவள் ''சற்று என்னோடு வாருங்கள் தலைவரே. ஒருவேளை அருகில் இருக்கும் கணிகையர் மாளிகையில் வசிக்கும் யாருக்கேனும் உரியதாக இருக்கலாம். புறப்படுங்கள்'' என்று அழைத்துச் சென்றாள்.

செங்குவீரன் இன்று மாலை உறைந்தைக்குக் கிளம்புவதால் அவனது புரவி ஓய்வெடுக்கட்டும் என்று அவன் பரதவனோடு நடந்தே வந்திருந்தான். ஆதலால் இருவரும் பூங்கோதையோடு அருகிலிருக்கும் கணிகையர் விடுதிக்கு நடந்தே சென்றனர். அமைதியாக வந்த செங்குவீரனிடம் பூங்கோதை, ''தலைவரே எதுவரை நீங்கள் அமைதியாய் வருவதாய் உத்தேசித்துள்ளீர்கள்?'' என வினவினாள்.

''தலைவர் எதுவரை அமைதியாக வருவது என்பது பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறார் போலும்!'' என்றான் பரதவன் குமரன்.

சிரித்துக்கொண்டே பூங்கோதை, ''கணிகையர் மாளிகை வரை தலைவர் இப்படியே தான் வருவார். நான் பேசிக்கொண்டே வருகிறேன்'' என்றவள் ''தலைவரே உங்களது சித்திரைத் திருவிழா சாகசங்கள் அனைத்தையும் வருடம் தவறாமல் கண்டு வருகிறேன். அதிலும் தாங்கள் புரவி ரதப் போட்டியில் வெற்றிக் கூச்சல்களுக்கிடையில் புழுதி பறக்க எவ்வளவு கம்பீரமாக வருவீர்கள் தெரியுமா? உங்களது அழகையும், ஆண்மையையும் கண்டு பொறாமைப் படாத அழகிகளே இவ்வூரில் கிடையாது எனலாம். அவர்கள் உங்களைப் பற்றிப் பெருமையோடு இப்படிப்பட்ட ஆண்மகனைக் கொள்ளைகொள்ளப் போகும் அந்தப் பெண் யார்தானோ? என்று பொறாமையோடு பேசுவதைக் கேட்கவே அவ்வளவு ஆனந்தமாக இருக்கும் தலைவரே. இதோ, அடுத்த இந்திரத் திருவிழாவும் வரப் போகிறது. மீண்டும் அந்தக் கண்கொள்ளாக் காட்சிகளைப் பார்க்கும் ஆனந்தமும் பல தேச

அழகிகளின் புலம்பல்களையும் கேட்கும் பேறும் எனக்கு மீண்டும் கிடைக்கப் போகிறது'' என்று துருதுருவெனப் பேசிக்கொண்டே வந்தாள்.

அமைதியாக வந்த செங்குவீரனிடம், ''தலைவரே, இந்த விறலி மாலையை எண்ணியா இப்படிக் கலையிழந்து பேசாமல் வருகிறீர்கள். இந்த மாலைக்குரிய விறலியின் தலைவனைக் கண்ட பிறகாவது நன்றாகப் பேசுங்கள்'' என்று கூறிக்கொண்டிருக்கும் போதே, கணிகையர் மாளிகை வந்துவிட மூவரும் உள்ளே நுழைந்தனர்.

கணிகையர் மாளிகைக்குள் நுழைந்த மூவரும் எதிர்பாராதபடி பெரும் ஆச்சர்யங்களும், அதிர்ச்சிகளும் காத்திருந்தன அங்கு. எப்பொழுதும் கலகலப்புடன் இருக்கும் மாளிகை அன்று ஆடல் பாடல் ஒத்திகைச் சத்தங்கள் என ஏதுமில்லாமல் நிசப்தத்துடன் விளங்கியது. மாளிகையின் முன்புறத்தில் அவர்களை வரவேற்க யாருமில்லை. எப்பொழுதும் காணப்படும் சலசலப்பு, சுறுசுறுப்பு என ஏதுமில்லாமல் அமைதியாகக் காட்சியளித்தது. அமைதியாகக் காணப்பட்ட மாளிகையைப் பார்த்துச் செங்குவீரனிடம் விறலி, ''தலைவரே, நாம் கணிகையர் மாளிகைக்குள் தான் வந்திருக்கிறோமா? அல்லது வேறு எங்கேனும் நுழைந்து விட்டோமா?'' எனக் கேள்வியெழுப்பினாள்.

பதிலுக்குச் செங்குவீரன், ''எனக்கு இவ்விடத்தின் இயல்பு பற்றி ஏதும் தெரியாது பெண்ணே. இப்பொழுதுதான் முதல் முறையாக இங்கு வருகை தருகிறேன். இதன் காரணம் பற்றி உமக்குத்தான் தெரிந்திருக்கக்கூடும்? என்றான்.

''நான் மாளிகைக்குள் சென்று நிசப்தத்திற்கான காரணத்தையும் அப்படியே விறலிமாலைக்கு உரியவளைப் பற்றியும் அறிந்துவருகிறேன்'' என்றவளாய் மாளிகைக்குள் செல்லப் படியேறியவள் திடீரென்று இந்த மாலை எங்கிருந்து கைப்பற்றப் பட்டது என்பதை அறிந்தால் மாலைக்குரியவளையும் அவளது தலைவனையும் அறிதல் எளிதாயிற்றே! என்று செங்குவீரனை நோக்கி வந்தாள்.

திரும்பி செங்குவீரன் மற்றும் பரதவனை நோக்கி வந்தவள் செங்குவீரனுக்குப் பின்னால் மேலே உப்பரிகையில் திரைச் சீலையின் பின்புறம்

ஒரு உருவம் மறைந்து நிற்பது மதிய வெயிலின் ஊடுருவலில் தெளிவாகத் தெரிவதைக் கவனித்தாள். முதலில் அந்தத் திரைச்சீலைப் பிம்பத்தை எண்ணி கவலைப் படாத பூங்கோதை திடீரெனச் செங்குவீரனை நோக்கி காணக்கூடாததைக் கண்டுவிட்டதைப் போன்று பதறியடித்து ஓடி வந்தாள்.

மேலே உப்பரிகைத் திரைச் சீலைக்குப் பின் தெரிந்த மனிதர்கள் செங்குவீரன் மற்றும் நம்மை மறைந்திருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள் என்று முதலில் எண்ணிய விறலி அந்த உருவம் வில்லில் பூட்டிய நாணில் அம்பு தொடுத்ததையும் பின்னர் அது செங்குவீரனை நோக்கி குறி வைப்பதையும் கண்டவள் பதறி நா பேச எழாமல் செங்குவீரனை நோக்கி ஓடி வந்தாள்.

மாளிகைக்குள் சென்ற விறலி ஏன் தன்னை நோக்கி திரும்பி வருகிறாள் என்பதன் காரணத்தையும் பின் காணக்கூடாததைக் கண்டுவிட்டதைப் போன்று ஏன் இப்படி பதறி ஓடி வருகிறாள் என்று எந்தக் காரணத்தையும் அறியாத செங்குவீரன் திகைத்துக்கொண்டிருந்த போதே ஓடி வந்த பூங்கோதை இவனது தோள்களைத் தழுவி கீழே சாய்க்க முயலவும் விறலியின் திடீரென இந்தக் காரியத்தின் காரணமறியாத செங்குவீரன் அவளைத் தடுக்க முயலவும் சிறு கணிக நேரக் களேபரத்தில் “தலைவரே ,ஆபத்து! ஆபத்து!” என்றவளாய் பூங்கோதை விடாப்பிடியாய் செங்குவீரனைக் கீழே சாய்த்துவிட்டாள்.

உப்பரிகையிலிருந்து எய்யப்பட்ட அம்பு குறிவைக்கப்பட்ட இலக்கினை நோக்கி பாய்ந்து வரவும், பூங்கோதை செங்குவீரனை கீழே தள்ளவும் நேரம் சரியாக இருந்தது. காற்றைக் கிழித்து வந்த நஞ்சு தடவப்பட்ட அம்பு விறலியைத் தாக்கியது.

அம்பினால் தாக்கப்பட்ட விறலி அலறிய படியே செங்குவீரன் மீது சாய்ந்தாள். விறலியின் அலறலின் காரணத்தை அறியாத செங்குவீரன் அவள் கீழே விழாமல் தனது கைகளில் தாங்கிக்கொண்டு மடியினில் கிடத்தினான்.

பூங்கோதையை அம்பு தாக்கியதையும், மேலே உப்பரிகையில் இரு உருவங்கள் மறைந்திருப்பதையையும் கண்ட பரதவன் குமரன் தனது இடையில் மறைத்து வைத்திருந்த இரண்டு குறுவாட்களையும் அடுத்தடுத்து

அவர்களை நோக்கி எறிந்தான். அடுத்த அம்பினை எய்வதற்குத் தயாராய் இருந்தவர்களின் மார்பினைத் திரைச்சீலையைக் கிழித்துக்கொண்டு குறுவாள் தாக்கவும் அலறியபடியே கீழே விழுந்தனர்.

விழுந்த இருவரை நோக்கி தனது வாளை உருவிய படியே ஓடிய பரதவன் குமரன் குறுவாள் மார்பினில் தாக்கி மூர்ச்சையடைந்து போன இருவரையும் பார்த்தான். அவர்களிள் ஒருவனின் கைகளில் வைத்திருந்த நஞ்சுக் குப்பியைக் கண்டவன் ஒரு கணம் அதிர்ந்துபோய் விட்டான்.

வலது பக்க விலாவில் தாக்கிய அம்பினைப் பார்த்த செங்குவீரன், “பெண்ணே, இப்படியொரு காரியத்தை எப்படிச் செய்யத் துணிந்தாய்” என்று கூறியபடியே அம்பினைப் பிடுங்கி தூர எறிந்தவன் தனது இடையில் கட்டியிருந்த துணியைக் கிழித்து அவளது உடலிலிருந்து மேலும் குருதி வெளியேறா வண்ணம் இறுகக் கட்டினான்.

அம்பு அருகிலிருந்து எய்யப்பட்டிருந்தாலும் அது உடலில் ஆழமாகத் தைக்கவில்லை என்பதைப் பார்த்தவன் “விரைவில் அருகிலுள்ள புத்த விகாரத்திலுள்ள பௌத்த தேரர்களிடம் கூட்டிச் சென்றால் நிச்சயம் காப்பாற்றிவிடுவார்கள்!” என்று கூறிக்கொண்டே அவளைத் தூக்கினான். அவனிடம் வந்த பரதவன் குமரன், தலைவரே “புத்த விகாரத்திற்குச் சென்றாலும் பயன் இருப்பது ஐயமே!” என்றவனாய் நஞ்சுக் குப்பியையும், நஞ்சு தோய்க்கப்பட்ட மேலும் இரண்டு அம்புகளையும் காட்டினான்.

அந்த நஞ்சுக் குப்பியையும், நஞ்சு தோய்க்கப்பட்ட அம்புகளையும் கண்ட போது எதற்கும் கலங்காத செங்குவீரனின் சப்த நாடிகளெல்லாம் அடங்கிப் போய் விட்டது. எனக்காகத் தனது உயிரையே தியாகம் செய்யத் துணிந்த விறலியின் அன்பினை எண்ணிப் பார்த்தபோது அவனை அறியாமலே அவனது கண்களில் நீர்ப் பெருக்கு ஏற்பட்டது. கண்களிலிருந்து வழிந்தோடிய கண்ணீர்த் துளிகள் அவனது கன்னங்களைத் தாண்டி வழிந்து தூக்கிய படியே செங்குவீரனின் மார்பின் மீது சாய்ந்திருந்த விறலியின் முகத்திலும், மார்பிலும் விழுந்து தெரித்தன.

விறலியைக் கண்டு கண்ணீர் சொரிந்த செங்குவீரனைக் கண்ட பரதவன் குமரன், “தலைவருக்கு அழக்கூடத் தெரியுமா?” என்று வியந்தான்.

செங்குவீரன் பரதவன் குமரனிடம், “புரவிகளை விரைவில் கொண்டு வா குமரா” என்று கட்டளையிட்டான்.

பரதவன் குமரன், “தலைவரே, புரவியில் கொண்டுசென்றால் இவளது உடல் குலுங்கி இன்னும் குருதிப் பெருக்கு ஏற்படும். ஆதலால் இவளைத் தூக்கிக் கொண்டு செல்வதே சிறந்தது!” என்றான்.

அவனது கைகளில் தவழ்ந்த பூங்கோதை, “தலைவரே. என்னை இப்படியே கொண்டு செல்லுங்கள். புரவியெல்லாம் ஏதும் வேண்டாம்” என்றாள்.

அவளைத் தூக்கிய படியே அருகில் இருந்த புத்த விகாரை நோக்கி வேகமாக நடந்த செங்குவீரன் “பெண்ணே” என்றான்

“தலைவரே, பூங்கோதை என்று அழையுங்கள். எனது பெயரும் அதுதான்” என்றாள்.

“பூங்கோதை” என்று நா தழுதழுத்தபடியே அழைத்தான்.

“தலைவரே இன்னொருமுறை அழையுங்களேன்” என்றாள்.

“பூங்கோதை.”

“இதற்குத் தான் தலைவரே இத்தனை காலமாகத் தவமிருந்தேன். புகாரில் யாருக்கும் எந்தப் பெண்ணிற்கும் கிடைக்காத பெரும் பாக்கியம் எனக்குக் கிடைத்துவிட்டது. எனது வாழ்நாளில் பெரும் மகிழ்ச்சியான தருணம் எது என்று கேட்டால் இதைத் தான் தலைவரே நான் குறிப்பிடுவேன்” என்றவளாய்த் திணறினாள்.

அவளுக்கு என்ன மறுமொழி அளிப்பது என்று அறியாதவனாய் அமைதியாக மௌனமாகவே தூக்கிக் கொண்டு வேகமாக நடந்தான் செங்குவீரன்.

அவள் மயக்கமுறுவதைக் கண்ட பரதவன் குமரன், “நாம் புத்த விகாரை அடையும் வரை அவள் மூர்ச்சையடைந்து விடக் கூடாது. பேசிக்கொண்டே வாருங்கள் தலைவரே!” என்றான்.

“பூங்கோதை, நமது முதல் சந்திப்பே இன்று தான் நிகழ்ந்தது. எப்படி என் உயிரைக் காக்க உனது உயிரை இழக்கத் துணிந்தாய்?”

“தலைவரே, தாங்கள் இன்றுதான் முதல் முறையாக என்னைச் சந்திக்கிறீர்கள். ஆனால் நான் பல வருடங்களாக உங்களையே எண்ணிக் கொண்டிருக்கிறேன். இந்திரத் திருவிழா வெற்றிகளுக்குப் பின் யவனப் பெண்களும் பாண்டிய, சேர மற்றும் தூர தேசத்துப் பெண்களும் வெற்றி மாலையை உங்களுக்குச் சூட்ட முயலும் போதெல்லாம் அவர்களை நீங்கள் ஏறெடுத்தும் பார்க்காமல் உங்களது கண் உங்களது மனதைத் திருடிக் கொண்ட மருவூர்ப் பாக்க மறவர் குலப் பேழகியான வானவல்லியையே தேடிக்கொண்டிருக்கும்” என அவள் பேசிக்கொண்டிருக்கும் போதே அவளது நாக்கு குழறி, மயக்கமடையத் தொடங்கினாள்.

அவளை மார்போடு அனைத்து உயர்த்தித் தூக்கிய செங்குவீரன், “பூங்கோதை, இதோ, புத்த விகாரத்திற்குக் கிட்டத்தட்ட அருகில் வந்துவிட்டோம். இன்னும் சற்றுத் தொலைவு தான் உள்ளது. பொறுத்துக்கொள்!” என்றவன் பரதவன் குமரனிடம் “குமரா, நீ விரைந்து புத்த விகாரத்திற்குச் சென்று நஞ்சுக் குப்பியைக் காட்டி மருத்துவத்திற்குக் தகுந்த ஏற்பாடுகளைச் செய்” என்று கட்டளையிட்டான்.

தொடர்ந்த பூங்கோதை “நானும் உங்களை நோக்கி மாலையோடு வருவேன்! உங்களால் நிராகரிக்கப்பட்ட பல பெண்களோடு நானும் ஒருத்தியாக இருக்க மனமில்லாமல் எனது ‘பெருந்திணை’ காதலை வெளிப்படுத்தாமல் மாலையோடு திரும்பி விடுவேன். எனது காதல் நிராகரிக்கப் படுவதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது தலைவரே. எனது காதலை நான் உங்களிடம் வெளிப்படுத்தி அதனை நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் சுமையாவதை விட, சொல்லாதக் காதலே சுகமானது என்று நான் இத்தனை காலமாக மகிழ்ச்சியாக இருந்து விட்டேன். நல்ல வேலை, இன்று அந்தக் காதலை வெளிப்படுத்தும் பாக்கியம் எனக்குக் கிடைத்து விட்டது. அம்பெய்தியவர்களுக்குத் தான் நான் நன்றி சொல்ல பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்!” என்றாள் சிரித்தபடியே!

“பெருந்திணைக் காதலா!’ அதற்கு நான் தகுதியானவனா பூங்கோதை?”

“தாங்கள் அதற்கு முற்றிலும் பொருத்தமானவர் தான். எமது தலைவர் எனக்குக் கடவுள் போன்றவர்.”

அவளது உயர்ந்த, ஈடு இணையற்ற காதலுக்குப் பதில் கூற முடியாமல் திணறிய செங்குவீரன் அவளுக்கு மௌனத்தையே பதிலாக அளித்தான். அவளும் அந்த மௌனத்திலிருந்து அவளுக்கு வேண்டிய காதல் மொழிகளைப் பெற்று மகிழ்ச்சியடைந்து கொண்டாள்.

“தலைவரே”

“சொல் பூங்கோதை”

“வரும் இந்திரத் திருவிழாவிற்குத் தங்களது கம்பீரமான புரவித் தேர் ஓட்டத்தை நான் காண்பேனா? அதை எண்ணினால் தான் சற்று வருத்தமாக உள்ளது.”

“நிச்சயமாகக் காண்பாய் பூங்கோதை. பௌத்த தேரர்களின் மருத்துவத்திற்குப் பிழைக்காதவர்கள் என யாரும் இல்லை. கவலையை விடு. நிச்சயம் இந்த வருட திருவிழாவில் எனது கழுத்தில் விழும் வெற்றி மாலை உனதாகத் தான் இருக்கும். கவலையை மறந்து புன்னகை செய் பூங்கோதை” என்று அவளை உற்சாகமூட்டிய படியே மேலும் அவளை உயரத் தூக்கி இறுக அணைத்துக் கொண்டான்.

அவளும் மகிழ்ச்சியில் சிரித்த படியே அவளது இடது கையை அவனது கழுத்தின் பின்புறத்திலும் வலது கையை அவனது முதுகோடும் தழுவி அவளது முகத்தைச் செங்குவீரனின் தோளோடு கழுத்தில் புதைத்துக் கொண்டாள்.

“தலைவரே, இந்த ஒரு வார்த்தையும் இந்த ஒரு அணைப்பும் போதும் எனக்கு. இதனைக் கொண்டே என் மனம் இன்னும் பல நூறு ஜென்மங்களுக்கு நிறைவடைந்து கொள்ளும். இக்கணமே என் உயிர் நீங்கினாலும் எனக்கு எந்தக் கவலையும் இல்லை. மகிழ்ச்சியே. எமது தலைவரை அணைத்த படியே, அவரது தோளில் சாய்ந்து கொண்டே எமது உயிர் பிரிந்தால் என்னை விடப் பாக்கியசாலி, பேறு பெற்றவள் எவளும் கிடையாது!” என்றபடியே அவள் அவனது கண்களை நோக்கினாள்.

இவனும் அவனது பார்வையை அவளது கண்களில் நிலைக்கவிட்ட படியே “அப்படியெல்லாம், நீ கூறுவது போன்று ஏதும் உனக்கு நேராது!” என்றபடியே மீண்டும் சிரித்தபடி அவளை அணைத்து சாலை எதிரில் பார்வையைச் செலுத்தினான்.

அங்கே எதிரில் பத்திரைத் தேவியோடு வந்த வானவல்லி, செங்குவீரன் நடு முச்சந்தி சாலையில் எப்போதும் பரபரப்போடு இயங்கும் பௌத்தவிகாருக்கு அருகில் ஒரு விறலியை தூக்கிக்கொண்டு சிரித்த படியே கொஞ்சிக்கொண்டு வந்ததைப் பார்த்தாள். அது அவளது மனதில் பெரும் புயலைக் கிளப்பியது. அவளது பார்வை தன்னை எரித்துவிடுவது போன்று இருப்பதை உணர்ந்த செங்குவீரன் அவளைப் பற்றிக் கவலைப் படாமல் பார்வையை அவளிடமிருந்து விளக்கிக் கொண்டு பௌத்த விகாருக்குள் பூங்கோதையைத் தூக்கிக் கொண்டு நுழைந்தான்.

பூங்கோதையைத் தூக்கிவந்த செங்குவீரன் பௌத்த விகாரை அடையும் போதெல்லாம் அவள் மூர்சையடைந்திருந்தாள். ஆனால் அவளது நீல வண்ணமேறி பாதித் திறந்திருந்த கண்கள் மட்டும் விறல்வேலையே காதலோடு நோக்கிக் கொண்டிருந்த படியே பௌத்த தேரர்களிடம் அவளைச் சேர்த்தான்.

அவளைப் பௌத்த தேரர்களிடம் சேர்ப்பித்த பின், அவளது உடலிலிருந்து வெளியேறியக் குருதி செங்குவீரனின் உடல் மற்றும் வானவல்லி அவனுக்கு அணிவித்திருந்த முத்து மாலையையும் நனைத்திருந்தது. அவளது பேரன்பு அவனது உள்ளத்தையும் முழுதாக நனைத்திருந்தது.

**அடிக் குறிப்புகள்:**

1. குறுந்தொகைப் பாடல் —135
2. பெருந்திணை, அகத்திணையில் ஒரு பிரிவு. பெருந்திணை என்பது பொருந்தாக் காதலைக் குறிக்கும் அதாவது பெருங்காதல் . அதாவது தலைவி அரசனை அல்லது கடவுளை காதலிப்பது போன்று இயற்றப்படுவது. பின்னால் தோன்றிய இறையனார்

களவியல் எனப்படும் இறைவனைத் தலைவனாகக் கொண்டு இயற்றும் பாடல் முறைக்குப் பெருந்திணை தான் அடிப்படை.

3. சமணர்களை திகம்பரர் என அழைப்பது போன்று பௌத்தர்களை தேரர் என அழைப்பது வழக்கம். தேரர் என்பதை பிக்ஷூ என்று பாலி மொழியிலும் அதனை பிக்கு எனத் தமிழிலும் மொழியாக்கம் செய்வர்.

# 18. கா தலும் ஓவியமும்

புகாரின் ஏழடுக்கு உயர்ந்த பெரும் மாளிகை அது. பெருவணிகன் வேளாதனுக்கு உரியது. மாளிகை முழுதும் யவன விளக்குகளாலும், சிற்பங்களாலும், ஓவியங்களாலும் அலங்கரிக்கப்பட்டது. மாளிகைத் தரை முழுதும் சீன தேசத்து கீதாம்பரப் பட்டுக் கம்பளம் விரிக்கப்பட்டு வாசல் வரை எப்போதும் நீண்டிருக்கும். மாளிகையின் வெளிப்புறம் பல வண்ண மலர்கள் பூக்கும் அழகிய நந்த வனமும், அதன் மத்தியில் இருந்த தடாகத்தில் தாமரை மலர்களும், அல்லியும் பூத்துக் குலுங்கிக்கொண்டிருந்தது.

அந்தக் தடாகத்திற்கு அருகில் கரையோரம் பத்திரைத் தேவி தன்னை மறந்த நிலையில் திரைச் சீலையில் ஒரு ஓவியத்தை வரைந்துகொண்டிருந்தாள். பத்திரைத் தேவி அந்த ஓவியத்தை வரையும் போது அவளது முகத்தில் பல வித குதூகலமும் அச்சமும் தோன்றி மறைந்து கொண்டிருந்தது. அவளது மாறிக்கொண்டிருக்கும் முக பாவனைகளிலிருந்து அவளது ஈடுபாட்டைத் தடாகத்தின் அழகை ரசித்துக் கொண்டிருந்த வானவல்லி கவனிக்கவே செய்தாள்.

மாளிகையில் பல வீரர்களும், பணியாட்களும் பணிபுரிந்து கொண்டிருந்தாலும், நந்த வனத்திற்குச் செல்ல யாருக்கும் அனுமதி கிடையாது. பணிப் பெண்களுக்கு மட்டுமே அதனுள் செல்ல அனுமதி. இந்த நிலையில் தன்னை மறந்த நிலையில், முழு ஈடுபாட்டுடன் ஓவியம் தீட்டிக் கொண்டிருந்த பத்திரைத் தேவியை நோக்கி விரைந்து வந்தாள் பணிப் பெண்ணொருத்தி.

பணிப் பெண் வந்த வேகத்தைக் கண்டே அவளது அவசரத்தை உணர்ந்த வானவல்லி, எங்கே அவள் சத்தமாகப் பேசி ஓவியம் தீட்டிக் கொண்டிருக்கும் பத்திரையை இடையூறு செய்து விடுவாளோ? என எண்ணி

அவள் தூரத்தில் வந்துகொண்டிருந்த போதே ‘சத்தமெழுப்பாமல் வா’ எனச் சைகையின் மூலம் கட்டளையிட்டாள்.

அவளது சைகையின் கட்டளையை உணர்ந்த பணிப் பெண், எந்தவொரு சத்தமும் எழுப்பாமல் வானவல்லியின் காதுகளில் குசுகுசுவென ஏதோ ஓதினாள். அவள் கூறியதைக் கேட்ட வானவல்லி, “அவர்கள் இருவரையும் இங்கு அழைத்து வா!” எனக் கட்டளையிட்டாள்.

அதற்குப் பணிப்பெண் “அம்மா, இங்கே ஆடவர்கள் வருவதற்கு மாளிகைத் தலைவர் வேளாதன் அவர்கள் தடை செய்துள்ளாரே!” என்றாள் அடக்கமாக.

பதிலுக்கு வானவல்லி, “அதனை நான் பார்த்துக் கொள்கிறேன். இருவரையும் இங்கே உடனே அழைத்து வா. மேலும் அவர்கள் உண்பதற்குப் பால் மற்றும் பழங்களையும் கொண்டு வா” என மெல்ல கட்டளையிட்டாள்.

டாள்தொபியாசிற்கும், திருக்கண்ணனுக்கும் எத்தனை முறை பெரு வணிகன் வேளாதனின் மாளிகைக்கு வந்தாலும், ஒவ்வொரு முறையும் ஆச்சர்யமே ஏற்படும். ஏனெனில், அது புகாரின் ஆடம்பர மாளிகையாக இருந்தாலும் அதே சமயம் அடக்கமான, அமைதியான மாளிகையும் கூட!

இருவரும் மாளிகையின் முன் தங்களது புரவியில் இருந்து இறங்குமுன்னே அவர்களை வரவேற்ற யவன காவல் வீரன் ஒருவன் அவர்களின் புரவிகளைப் பெற்று காவல் வீரர்களிடம் கொடுத்து புரவிக் கொட்டகைக்கு அனுப்பிவிட்டு இருவரையும் மாளிகைக்குள் அழைத்துச் சென்றான்.

மாளிகையில் அவர்களை வரவேற்று உபசரித்தாள் பத்திரைத் தேவியின் பணிப் பெண்ணொருத்தி. அவர்களிடம் பேசியதிலிருந்து அவர்கள் பத்திரைத் தேவியைக் காணத்தான் வந்துள்ளனர் என்பதை அறிந்த பின்னரே அவள் அவர்களைக் காத்திருக்கச் சொல்லிவிட்டு நந்தவனம் நோக்கி தகவலைத் தெரிவிக்கச் சென்றாள். வானவல்லியிடமிருந்து கட்டளையைப் பெற்றுக் கொண்டவள். மற்றொரு பணிப்பெண்ணிடம் “நான் இவர்களை நந்த வனத்திற்கு அழைத்துச் செல்கிறேன். நீ இவர்களுக்கு உண்ண பால் மற்றும்

பழங்களை விரைவில் கொண்டு வா!'' எனத் தெரிவித்துவிட்டு இருவரையும் நந்தவனத்திற்கு அழைத்துச் சென்றாள்.

உப தளபதிகள் இருவரும் தாமரைத் தடாகத்திற்குச் செல்லுமுன்பே பத்திரைத் தேவி ஓவியத்தை வரைந்து முடித்திருந்தாள். உபதளபதிகள் இருவரும் வந்ததைக் கண்ட பத்திரைத் தேவி பெரு மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்று தடாகக் கரையில் இருந்த ஆசனத்தில் அமரவைத்துவிட்டு பணிப் பெண்ணைத் திரும்பிச் செல்ல உத்தரவிடப் பணிப் பெண் அங்கிருந்து கிளம்பினாள்.

உபதளபதிகள் அமர்ந்ததும் அவள் கேட்ட முதல் கேள்வி ''தலைவர் எங்கே? அவர் வரவில்லையா!'' என்பதுதான்.

பதிலுக்குத் திருக்கண்ணன் ''இல்லை தேவி. தலைவர் ஒரு முக்கியமான பணியை முன்னிட்டுச் சென்றுள்ளார். ஆதலால் அவரது கட்டளையை ஏற்று நாங்கள் உங்களைக் காண வந்துள்ளோம்!'' என்றான்.

பத்திரைத் தேவி ஏதோ கூற வாயெடுத்தாள் ஆனால் அதற்குள் முந்திக்கொண்ட வானவல்லி, ''தளபதிகளே, இன்று புகார் முழுக்க உங்களைப் பற்றிய பேச்சுகளாகத் தான் உள்ளது. சோழ மன்னனாக உறைந்தையில் தன்னை அறிவித்துக்கொண்ட இருங்கோவேளால் நியமிக்கப்பட்ட புதிய தலைவன் புகார்க் கோட்டைக்கு வந்து அதிகாரமிட்டு பின்னர் உங்களால் நையப் புடைத்து அனுப்பப்பட்டதே ஊர் முழுக்கப் பேச்சாக இருக்கிறது. உங்கள் மூவரது வீரத்திற்கும் சோழ தேசமே தலை வணங்குகிறது. யாரும் செய்யத் துணியாத காரியம் இது. ஆனால் நீங்கள் சோழ இளவலுக்காகச் செய்துள்ளீர்கள். உங்களைப் புகாரின் உப தளபதிகளாகப் பெற்றது இரும்பிடர்த்தலையர் என்றோ செய்த புண்ணியம்'' என்றாள்.

''சகோதரி, இன்று எங்களது வாள் வீச்சு மற்றும் வீரத்தைப் பற்றி அனைவரும் பேசுகிறார்கள் என்றால் அதற்கு முழுக் காரணம் எங்கள் தலைவர் தான். அவரை எங்களது தலைவராகப் பெற்றது நாங்கள் செய்த புண்ணியம். அந்தப் புண்ணியத்தின் பயன் தான் இந்தப் பாராட்டுக்கள்'' என அடக்கத்தோடு பதிலளித்தான் டாள்தொபியாஸ்.

திடீரென்று டாள்தொபியாஸ், செங்குவீரன் பற்றித் தன்னிடம் பேசுவான் என்று அவள் எதிர்பார்த்திருக்கவில்லை. டாள்தொபியாசிற்கு மறுமொழி ஏதும் கூறாமல் அமைதியான நிலையைக் கண்ட பத்திரை அவர்களிடம் பேசத் தொடங்கினாள்.

''நேற்று அவரைக் கண்ட பின் தான் எங்களுக்கு நிம்மதியே ஏற்பட்டது. நான் இருந்த பதற்றத்தில் அவருக்கு நன்றி கூற கூட மறந்துவிட்டேன். அண்ணா, நலமுடன் தானே உள்ளார்?'' எனச் செங்குவீரனின் நலனைப் பற்றி விசாரித்தாள் பத்திரை.

பதிலுக்குத் திருக்கண்ணன், ''அவர் நலமாகத் தான் உள்ளார், தேவி. ஆனால், அவரது மனச் சுமை தான் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. அனைத்திற்கும் தீர்வு எப்போதுதான் ஏற்படுமோ தெரியவில்லை! நேற்றிரவு சம்பாபதி வனத்தில் காளனிடமிருந்து உங்களைக் காப்பாற்றி விட்டு வந்த பின்னர் அவர் இரவு முழுக்க நடந்து கொண்டே தான் இருந்தார். உறங்கவே இல்லை. ஏதோ, அவரால் இறக்கி வைக்க இயலாத சுமையால் தவித்துக் கொண்டிருக்கிறார்'' என்றான்.

''அனைத்திற்கும் தீர்வு விரைவில் ஏற்படும். நானும், அப்படித்தான் நம்புகிறேன்!'' எனப் பத்திரை கூறிக்கொண்டிருந்த போதே பணிப்பெண் அவர்களுக்குப் பால் மற்றும் பழங்களைக் கொண்டு வர சற்று அமைதியானார்கள். அவள் உடனே அங்கிருந்து செல்ல மீண்டும் அவர்களது உரையாடல்கள் தொடங்கின.

டாள்தொபியாஸ் வானவல்லியிடம் ''சகோதரி, ஆனால் தலைவர்....'' என்று ஏதோ கூற வாயெடுத்தான். உடனே வானவல்லி, டாள்தொபியாசிடம் ''தளபதியாரே, இங்கு நான் உங்களை வரவேற்றது உங்கள் அறிவுரையைக் கேட்பதற்காக அல்ல. நீங்கள் இருவரும் எந்தக் காரியத்திற்காக வந்தீர்களோ!, அதற்கான பதில் அதோ அந்த ஓவியச் சீலையில் உள்ளது'' என்றவள் எழுந்து சென்று பத்திரை வரைந்த ஓவியத்தைக் கொண்டுவந்து டாள்தொபியாஸ் முன் நீட்டினாள்.

சுருட்டியபடி இருந்த ஓவியச் சீலையை வாங்கிய டாள்தொபியாஸ் அந்தக் கண நேரம் திகைக்கவே செய்தான்.

டாள்தொபியாஸ் வானவல்லியிடம், “சகோதரி, நாங்கள் இருவரும் வந்த காரியம் பற்றி எதுவுமே இன்னும் கூறவில்லை. ஆனால் தாங்கள் வந்த காரியத்திற்கான பதில் இந்த ஓவியத்தில் உள்ளது என்கிறீர்களே!” என ஆச்சர்யத்தோடு வினவினான்.

வானவல்லி அவனிடம், “ஓவியச் சீலையைப் பிரித்துப் பாருங்கள். நீங்கள் தேடி வந்தது அதில் தான் உள்ளது” என்றாள்.

உபதளபதிகள் இருவரும் ஓவியத்தை அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட வானவல்லி அவர்களிடம் “வீரர்களே, நேற்று தாக்குதல் நடத்திய காளனைப் பற்றி அறிந்துகொள்ளத் தானே நீங்கள் இருவரும் இங்கு வந்தீர்கள். வலது பக்கத் தோளில் கத்தி பாய்ந்து வலியால் துடிதுடித்தபடி நிற்கிறானே! அவன் தான் காளன். நேற்றைய உங்கள் தலைவரின் தாக்குதலில் மயிரிழையில் இருளைப் பயன்படுத்தித் தப்பி விட்டான். அவனுக்குத் தோளில் பெருங்காயம் ஏற்பட்டுள்ளமையால் இன்னும் சில தினங்களுக்கு அவனால் நடமாடவே இயலாது. அதற்குள் தேடிக் கைது செய்து விடுங்கள். இல்லையேல்! அவன் இங்கிருந்து தப்பினாலும் தப்பி விடுவான்” என்றாள்.

அவள் கூறியதை மிரட்சியோடுக் கேட்டுக்கொண்டிருந்த திருக்கண்ணன் வானவல்லியிடம், “நாங்கள் கள்வர்களின் தலைவன் காளனைப் பற்றித்தான் விசாரிக்க வந்தோம் என உங்களுக்கு எப்படித் தெரியும்?” என வினவினான்.

பதிலுக்கு வானவல்லி சிரித்துக்கொண்டே, “தளபதியாரே, எனக்கு உங்களது தலைவரைப் பற்றியும், அவரது கட்டளைகள் பற்றியும் நன்கு தெரியும்! அவர் ஏன் காளனைப் பற்றி விசாரிக்க என்னிடம் உங்களை அனுப்பாமல் பத்திரைத் தேவியிடம் அனுப்பினார் தெரியுமா? அனுப்பியதன் காரணம் உங்கள் கையில் இருக்கும் ஓவியம் தான். பத்திரைத் தேவி காணும் காட்சிகளை அப்படியே ஓவியமாகத் தீட்டிவிடுவாள் என்பதை அவர் அறிந்ததே. ஆதலால் தான் உங்களை இங்கு அனுப்பி வைத்துள்ளார். உங்களை எதிர்பார்த்தே நான் காலையிலேயே இங்கு வந்து பத்திரைத் தேவியை ஓவியம் தீட்டச் சொன்னேன். உங்கள் கையில் உள்ள ஓவியச் சீலையில் உள்ளவன்

தான் காளன். உங்களது தலைவரின் கட்டளையை இந்திரத் திருவிழா தொடங்குவதற்கு முன்னரே நிறைவேற்ற முயலுங்கள்!'' என்றாள்.

வானவல்லி செங்குவீரனின் ஒவ்வொரு நடவடிக்கையையும் தனது கூர்மையான அறிவால் தெரிந்து வைத்துள்ளதை எண்ணிய டாள்தொபியாஸ் தலைவருக்கு ஏற்றத் துணை வானவல்லிதான் என்பதில் எந்த ஐயமும் கொள்ளத் தேவையில்லை என எண்ணி மகிழ்ந்தான்.

வானவல்லி இருவரிடமும், ''நீங்கள் இருவரும் ஓவியச் சீலையை எடுத்துக்கொண்டு இங்கிருந்து கிளம்பலாம்'' என்றாள்.

உடனே பதறிய பத்திரை வானவல்லியிடம், ''நான் இந்த ஓவியத்தை அவர்களுக்கு வழங்க வரையவில்லையே!'' என்றாள்.

''வேறு எதற்காக அந்த ஓவியத்தைத் தீட்டினாய்? உமது அறையில் வைத்து அழகு பார்ப்பதற்காகவா?'' எனக் கோபமாகக் கேட்டாள் வானவல்லி.

வானவல்லியின் கோபத்தினைக் கண்ட பத்திரை, ''இல்லை, இல்லை. அதற்காக இல்லை'' என்றாள் சற்று அச்சத்துடனே.

''நீ அந்த ஓவியத்தைத் தீட்டும் போது உமது முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களைக் கவனித்தேன் பத்திரை. அகத்தின் ஆசையை முகம் காட்டிக் கொடுத்துவிடும். உமது எண்ணம் பைத்தியக்காரத் தனமானது. ஆரம்ப நிலையிலேயே அழித்துவிடு. இல்லையேல் என்னைப் போன்று.....'' என ஏதோ கூற வந்தவள் பேசுவதை நிறுத்திவிட்டு இரண்டு உபதளபதிகளிடமும் ''நீங்கள் இருவரும் செல்லலாம் வீரர்களே! உங்களைக் கண்டதில் பெருமகிழ்ச்சி'' என்றபடியே அவர்களை அங்கிருந்து அனுப்பி வைத்தாள்.

ஓவியச் சீலையோடு அங்கிருந்து கிளம்புமுன் டாள்தொபியாஸ், ''சகோதரி நான் ஏதேனும் தவறாகப் பேசியிருந்தால் தயைகூர்ந்து மன்னித்து விடுங்கள்'' என்றபடியே அவனது இடையில் மறைத்து வைத்திருந்த ஒரு ஓலையை எடுத்து வானவல்லியிடம் கொடுத்துவிட்டு ''நான் இதனைக் கொண்டு வந்தது தலைவருக்குத் தெரியாது. என்னைக் காட்டிக் கொடுத்து விடாதீர்கள்'' எனப் பணிவோடு கூறியபடியே அங்கிருந்து சென்றான்.

அவர்கள் இருவரும் அங்கிருந்து சென்ற பின்னர், தரையைப் பார்த்துக் கொண்டிருந்த பத்திரையின் வதனத்தை உயர்த்திக் கலங்கியிருந்த அவளது கண்களைத் துடைத்தபடியே, “பத்திரை. இல்லையேல் நீயும் என்னைப் போன்று காதலை ஏற்கவும் துணியாமல், மறுக்கவும் துணியாமல் துடிதுடிக்க வேண்டியதிருக்கும். நமக்கெல்லாம் இந்தக் காதலே வேண்டாமடி! நீ என் உயிர்த்தோழி. உனது ஒவ்வொரு உடல் அசைவும், அதற்குண்டான பொருளும் எனக்கு அத்துப்படி. ஆதலால் தான் கூறுகிறேன், அவன் கள்வன். அவனைப் பற்றிய ஆசைகளை உனது மனதிலிருந்து தூர எறிந்துவிடு. அதுதான் நமக்கும் நல்லது. இந்தக் காதல் இருக்கிறதே. அது பொல்லாதது! தொடக்கத்தில் போதும் போதும் என நாம் மயங்கும் அளவிற்கு இன்பத்தை வழங்கும். ஆனால், அதுவே பின் நாம் நமது உயிரை விட்டுவிடலாமா! எனச் சிந்திக்கவைக்கும் அளவிற்குத் தாங்க இயலாத வலியை அளித்துவிடும். அது ஒரு நோய். தொடக்கத்தில் மகிழ்ச்சியை மட்டுமே அளிக்கும். பின்னர் அனைத்தையும் மனதிற்கு நஞ்சாக்கி விடும்.

அவர்கள் தலைவரைப் பற்றிக் கூறினார்களே கேட்டாயா! தலைவருக்கு இப்போது நான் மட்டுமே பெரும் சுமை. அவரது துயர்களுக்கெல்லாம் நான் தான் காரணம். அவரைப் பிடித்துள்ள பெரும் வியாதியும் நான் தான். அவர் படும் துயரங்களை என்னால் கேட்க இயலாமல் தான் அவர்களை நான் ஏதும் கூற வேண்டாம், வந்த வேலையைப் பற்றி மட்டுமே பேசுங்கள் என்று கோபம் கொண்டது போன்று நடிக்க வேண்டியதாகிவிட்டது. இந்த அவஸ்தை உனக்கும் வேண்டாமடி!” என்ற வானவல்லியின் கண்களில் இருந்து கண்ணீர் பெருக அவளை அணைத்துக்கொண்டாள் பத்திரை.

வானவல்லியின் கண்ணீரைத் துடைத்த பத்திரை அவளது எண்ணத்தைத் திசை திருப்பும் பொருட்டு, “உபதளபதி ஏதோ ஓலையைக் கொடுத்தாரே! என்ன ஓலை அது. வா வாசிக்கலாம்” என்றபடியே அவளது கையிலிருந்த ஓலையை வாங்கி வாசிக்கத் தொடங்கினாள்.

நேற்றிரவு, சம்பாபதி வனத்தினுள் வானவல்லி மற்றும் பத்திரையைக் காளனிடமிருந்து காப்பாற்றிய பின் பேரார்வத்தோடு வானவல்லியைக் காண

செங்குவீரன் சென்றபோது அவள் அவனைக் காணாமல் பாராமுகமாய் மறைந்தாளே! அவன் திரும்பி தனது அறையில் மன வேதனையோடு எழுதிய கவி தான் அது. டாள்தொபியாஸ் கூடப் பெரும் வீரர்களைக் கூடக் கவிஞர்களாக மாற்றும் வல்லமை புகார் நகரப் பெண்களுக்கே உரியது என்றானே! அதே கவிதை தான்.

பத்திரை அதனை வாசித்தபின், வானவல்லியிடம் நீட்டினாள். அதை வாங்கிப் படித்த அவளது கண்களில் மீண்டும் கண்ணீர் பெருகவே செய்தது. கண்ணீரோடு பத்திரையிடம் தேம்பியபடியே கூறினாள். ‘‘இந்த வலி உனக்கு வேண்டாம் என்றே உன்னிடம் மனதில் எந்த ஆசைகளையும் வளர்த்துக்கொள்ளாதே என்றேன்’’ என்றாள் வானவல்லி.

அவளது கண்களில் ஆறாய் பெருகிய கண்ணீரைத் துடைத்த பத்திரை, ‘‘அம்மா என்னை வீட்டிற்கு அழைத்ததாகக் கூறினாயே! வா கிளம்பலாம். அம்மா நமக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள்’’ என நந்த வனத்திலிருந்து வானவல்லியை அழைத்து மாளிகைக்கு வந்தவள் தனது பணியாட்களிடம், ‘‘நாங்கள் இருவரும் மருவூர்ப் பாக்கம் கிளம்புகிறோம். முத்துச் சிவிகை தயாராய் இருக்கட்டும்!’’ எனக் கட்டளையிட்டபடியே வானவல்லியோடு மாளிகைக்குள் சென்றாள்.

சிறிது நேரத்தில் திரும்பிய வானவல்லி மற்றும் பத்திரைத் தேவி புறப்பட முத்துச் சிவிகையும் அதைத் தூக்க யவன பணியாளர்களும் தயாராய் இருந்தனர். பத்திரைத் தேவியிடம் வானவல்லி, ‘‘பத்திரை, முத்துச் சிவிகை ஏதும் தேவையில்லை. நாம் புரவி ரதத்திலேயே புறப்பட்டு வழியில் பௌத்த விகாருக்குச் சென்று புத்த தேவரையும் தரிசித்துவிட்டுச் செல்வோம்’’ எனக் கூற அதை ஆமோதிக்கும் வகையில் பத்திரைத் தேவியும் ‘‘அப்படியே ஆகட்டும் வானவல்லி’’ என்று கூற, சிவிகையைத் திருப்பி அனுப்பிவிட்டு இருவரும் புரவித்தேரில் பௌத்தவிகாரை நோக்கிக் கிளம்பினர்.

அவர்கள் இருவரும் வேளாதனின் பெருமாளிகையிலிருந்து கிளம்பியதைக் கண்ட சில வீரர்களும் அவர்களைப் பின்தொடர பத்திரைத்தேவி தனது காவல் வீரர்களின் என்றுமல்லாத விசித்திர செயலைக்

கண்டு ஆச்சர்யமடைந்து வீரர்களிடம், ‘‘நான் உங்களைப் பின் தொடரக் கூறவே இல்லையே!’’ என வினவினாள்.

‘‘பெரு வணிகர் உத்தரவிட்டுள்ளார், அம்மா!’’ என்றான் வீரனொருவன்.

‘‘என்ன உத்தரவு?’’

‘‘தாங்கள் எங்கு சென்றாலும், தங்களது பாதுகாப்பினை உறுதி செய்யச் சில வீரர்கள் எப்போதும் உங்களுடன் செல்ல உத்தரவிட்டுள்ளார்!’’

அவனது மறுமொழியைக் கேட்ட பத்திரை, ‘‘வீரர்களே உங்களது செயல் எள்ளி நகையாடும் வகையில் உள்ளது. புகார் நகரத்தில் எங்களது பாதுகாப்பிற்கு வீரர்களா? நேற்று இரவு பயணம் என்பதனால் கள்வர்களால் தாக்கப்பட்டோம். அதற்காகப் பகல் பொழுதுகளிலும் எனது பாதுகாப்பிற்கு வருவேன் என அடம்பிடிப்பது சரியல்ல. திரும்பிச் செல்லுங்கள்!’’ எனக் கட்டளையிட அவர்கள் பத்திரைத் தேவியின் கட்டளையை மறுக்க இயலாமல் மாளிகைக்குத் திரும்பினர்.

மீண்டும் தனிமைப்படுத்தப்பட்ட தோழிகள் இருவரும் அவர்களது மனதில் உள்ள அந்தரங்க செய்திகளை மனம் விட்டுப் பரிமாறியபடி மகிழ்வுடன் பௌத்த விகாரை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

பௌத்த விகார் அமைந்திருந்த தெருவினை அடைந்த போது அந்தக் காட்சியைப் பத்திரைத் தேவிதான் முதன் முதலில் கண்டாள். அந்தக் காட்சியைக் கண்ட தன் கண்களை நம்பலாமா? அல்லது வேண்டாமா? எனப் பெரும் குழப்பத்துடன் தான் காண்பது மெய் தானா? என உறுதிசெய்து கொள்ள வானவல்லியிடம் சுட்டிக் காட்டினாள்.

பத்திரைக் காட்டிய திசையைக் கண்ட வானவல்லியின் கண்களில் ஆத்திரம் பெருகுவதை அவளால் கட்டுப்படுத்த இயலவில்லை.

தூரத்தில் விறல்வேல் விறலி பூங்கோதையை மார்போடு அனைத்துத் தூக்கி வந்தது தான் வானவல்லிக்கு பெரும் கோபத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. சற்று முன்னர் விறல்வேல் மீது அவள் கொண்ட அன்பு,

அவனுக்காக அவள் வடித்த கண்ணீர் என அனைத்தும் விறலியை சுமந்து வரும் விறல்வேலைக் கண்ட கணப் பொழுதில் மறைந்துவிட்டது.

ஊரிலே பெரும் பரபரப்புடன் காணப்படும் பௌத்த விகார முச்சந்தியில் விறலி ஒருத்தியை தூக்கியபடி சிரித்து, கொஞ்சி, குலாவிக்கொண்டு வரும் இந்த வெட்கங்கெட்ட மனிதர் மேலா சற்று முன் பாவம் எனப் பரிதாபப்பட்டோம். ஆண் மனம் குரங்கைப் போன்றது தானே! குரங்கு கிளைக்குக் கிளை தாவிக்கொண்டிருப்பதைப் போல அவர்களது மனமும் அப்படித்தானே பெண்களிடம் தாவிக்கொண்டிருக்கும். அதை அறிந்திராத பேதையாக இருந்துவிட்டேனே! எனப் பலவாறு அவள் தனக்குள் நினைத்தாலும் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் "ச்சீ, ச்சீ... பௌத்த விகாருக்கு முன் இப்படியா?" எனச் சத்தமிட்டுக் கூறியது பத்திரையின் செவிகளிலும் விழத்தான் செய்தது.

நஞ்சு தோய்க்கப்பட்ட அம்பினால் தாக்கப்பட்ட விறலியை விறல்வேல் தூக்கிக்கொண்டு வந்ததை எதிரில் வந்தவர்கள் அறிய வாய்ப்பில்லைதான். அம்பினால் தாக்கப்பட்ட விறலியின் விலாப்பக்கம் விறல்வேலின் மார்போடு அழுந்தியிருந்ததாலும், குருதி வெளியேறாவண்ணம் விறலியின் காயத்தை இறுகக் கட்டியிருந்ததாலும், கசிந்த குருதி அவளது உடலுக்கும், விறல்வேலின் மார்புக்கும் இடையில் இருந்ததனால் அவள் அம்பினால் தாக்கப்பட்டதை எதிரில் வந்தவர்கள் யாரும் அவ்வளவு எளிதில் அறிந்துகொள்ள இயலாது. மேலும் பூங்கோதை மூர்ச்சையாகிவிடக் கூடாது என விறல்வேல் சிரித்துக்கொண்டு அவளுடன் பேசிக்கொண்டே வந்ததும் அவள் தாக்கப்பட்டாளெனச் சிறிதும் சந்தேகத்தை எதிரில் வந்தவர்களுக்கு ஏற்படுத்தாது.

விறலியுடன் விறல்வேலைக் கண்ட மாத்திரத்திலேயே தனது நிதானத்தையும், பொறுமையினையும் இழந்து விட்ட வானவல்லிக்கு அவ்விடத்தில் சென்று விறல்வேலை விசாரிக்க இயலவில்லை. ஏனெனில் அவளது காதல் அப்படிப்பட்டது. விறல்வேல் தனக்கு மட்டுமே உரியவன் என எண்ணிக் கொண்டிருந்தவள், விறலியை சுமந்து வரும், அதுவும் சிரித்த படியே தூக்கி வரும் விறல்வேலைக் கண்ட போது அவளது மனதில் தேக்கி

வைத்திருந்த காதல், அன்பு, நேசம் அனைத்தும் ஆத்திரமாய் வெளிப்படத் தொடங்கியிருந்தது.

அந்த ஆத்திரத்தின் வெளிப்பாடுதான் "ச்சீ... ச்சீ..." என்ற வார்த்தைகள்.

வானவல்லியின் முக மாற்றத்தையும், அவளது கோபப் பார்வையையும் கண்ட பத்திரைத் தேவி, "வானவல்லி, அவசரப்பட்டு நீயாக எந்த முடிவிற்கும் வந்துவிடாதே! தலைவரது ஒவ்வொரு செயலுக்கும் ஏதேனும் காரணம் நிச்சயம் பொதிந்திருக்கும். நான் சென்று விசாரித்துவிட்டு வருகிறேன். கண்ட காட்சிகளை மட்டும் கண்டு நீ எந்தவொரு துயர சிந்தனைகளுக்கும் இடமளித்து விடாதே! கண்ணால் காணும் காட்சிகள் கூடச் சில நேரங்களில் பொய்யாகி விடும்." என எச்சரித்தபடியே பௌத்தவிகாரை நோக்கி நடக்கச் சித்தமானாள்.

பதிலுக்கு வானவல்லி, "நீ வேண்டுமானால் இந்த மானங்கெட்ட செயலுக்கான காரணத்தை அறிந்து வா, நான் புறப்படுகிறேன். விரைவில் வந்து சேர்!" எனக் கூறியபடியே தன் மனதில் விறல்வேல் மீதுள்ள கோபத்தையெல்லாம் புரவி மீது காட்ட நான்கு புரவிகளும் நாற்பது கால் பாய்ச்சலில் மருவூர்ப்பாக்கத்தை நோக்கிப் பாய்ந்தன.

உடலெங்கும் குருதியில் நனைந்திருந்த விறல்வேலைக் கண்ட பத்திரை பெரிதும் அதிர்ச்சியடைந்துவிட்டாள். அவனது உடலில் படிந்திருந்த குருதி விறலியின் உடலிலிருந்து வெளிப்பட்டதாகத் தான் இருக்க வேண்டும் என ஊகித்துக் கொண்டவள் வாடிய முகத்துடன் நின்றிருந்த விறல்வேலிடம் பேசக்கூடத் துணியவிவில்லை. அவனது அருகில் நின்ற பரதவன் குமரனிடம் தலைவரின் இந்த நிலைக்குக் காரணம் யாதென வினவினாள்.

அதற்கு அவன் நேற்று வனத்தில் கிடைத்த விறலி மாலையிலிருந்து கணிகையர் விடுதி வரை நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் அவளிடம் ஒப்புவித்தான்.

அனைத்தையும் கேட்ட பத்திரைத் தேவி செயலற்று நின்ற விறல்வேலிடம் ஏதொ பேச வாயெடுத்தாள். அதற்குள் முந்திக்கொண்ட

விறல்வேல், “அவள் எங்கே? சென்றுவிட்டாளா?” என அவனே கேள்வியையும் கேட்டு பதிலையும் கூறிக்கொண்டான்.

பதிலுக்குப் பத்திரை, “யார் வானவல்லியா?” என்றாள்.

“ஆமாம். அவளே தான்!”

தலையைத் தொங்க போட்டுக்கொண்டே பத்திரை “ஆமாம் அண்ணா. சென்று விட்டாள்.” என்றாள்.

சிரித்துக்கொண்டே “நல்லது தான்” எனப் பதிலளித்தான் விறல்வேல். அந்தச் சிரிப்பில் அவனது மனதில் இருக்கும் கவலைகள், போராட்டங்கள் என அனைத்தும் வெளிப்பட்டதைப் பத்திரையும் பரதவன் குமரனும் கவனிக்கத் தான் செய்தனர்.

“இப்போது விறலியின் நிலை எப்படியுள்ளது?” எனப் பரதவன் குமரனிடம் வினவினாள் பத்திரைத் தேவி.

“அவள் இருக்கும் அந்த நிலையைக் காண இயலாமல் தான் நாங்கள் இருவரும் அங்கிருந்து வெளியேறிவிட்டோம் தேவி” என்றான்.

“நான் சென்று பார்க்கலாமா?” எனப் பத்திரை கேட்க “தாராளமாகச் சென்று பாருங்கள்” எனப் பதிலளித்தான் பரதவன் குமரன்.

பௌத்த விகாருக்குள் சென்று பூங்கோதையைக் கண்ட பத்திரைத் தேவி விறலியின் தியாகத்தை எண்ணி ஆச்சர்யப் படவே செய்தாள். அந்த நஞ்சு தோய்க்கப்பட்ட அம்பு மட்டும் தலைவரைத் தாக்கியிருந்தால் அவரது நிலையையும், வானவல்லியின் நிலையையும் எண்ணிப் பார்த்தவளுக்கு விறலியின் தியாகத்திற்கு ஈடாக அவளது கண்களில் கண்ணீர்த் துளிகளை மட்டுமே உதிர்க்க முடிந்தது.

விறலியின் கண்கள் பாதி மட்டுமே திறந்திருந்தது. அவளது உடலெங்கும் நஞ்சின் தாக்கம் அதிகமாகி நீல நிறம் ஏறி முற்றிலும் மூர்ச்சையடைந்து நினைவிழுந்து படுத்த படுக்கையாகக் கிடந்தாள்.

அவளைச்சுற்றி சில பவுத்த மருத்துவர்கள் நின்று மருத்துவம் பார்த்துக்கொண்டிருந்தனர். மருத்துவர்களுள் ஒருத்தி அவளது கண்களில்

மருந்தை துளித்துளியாய் செலுத்திக்கொண்டும், காயம்பட்ட இடத்தில் பச்சிலையைக் கட்டிக் கொண்டும் இருந்தாள். அங்கு இருந்தவர்களுக்குக் கட்டளையிட்டுக் கொண்டிருந்த ஒரு முதிர்ந்த பௌத்த தேரரிடம் சென்ற பத்திரைத் தேவி விறலி பூங்கோதையின் உடல் நிலையைப் பற்றிப் பணிவுடன் விசாரித்தாள்.

‘‘குழந்தாய், உமது கவலை எங்களுக்குப் புரிகிறது. இந்த நஞ்சு மிக மிகக் கொடியது. கடந்த கிழமைதான் எங்களது மருத்துவர்கள் இந்த நஞ்சை முறிக்கும் மூலிகைச் செடியைக் கண்டறிந்தார்கள். ஆதலால் இந்த நஞ்சோடு எங்களால் போராட இயலுகிறது. இல்லையேல் இந்நேரம் இவளது உயிர் இவளது உடலிலிருந்து பிரிந்திருக்கும். மூலிகையின் வீரியத்தை விட நஞ்சின் வீரியம் அதிகமாக உள்ளது. ஆதலால் எங்களால் இப்போது போராடவே இயலும். இன்னும் சில பௌர்ணமி காலம் கழிந்தால் மட்டுமே இவளது நிலையை உறுதியுடன் கூறலாம். அதற்குள் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். அனைத்தும் புத்த பகவானின் அருளில் தான் உள்ளது. புத்தரது அருளே இப்போது இக்குழந்தைக்குத் தேவை’’ எனக் கூறியபடியே அங்கிருந்துக் கிளம்பினார் அந்தப் பவுத்த தேரர்.

படுக்கையில் கிடந்த பூங்கோதையின் கைகளைப் பிடித்துப் புத்த பகவானின் அருள் கிடைக்கும்படி வேண்டினாள். விறலியின் நிலையைக் கண்ட பத்திரைத் தேவியாலும் அங்கு இருக்க இயலாமல் வெளியே நின்ற விறல்வேல் மற்றும் பரதவன் குமரனிடம் வந்தாள்.

வெளியே வந்தவள், இருவரிடமும் ‘‘நான் நடந்த நிகழ்வுகள் மற்றும் விறலியைப் பற்றி வானவல்லியிடம் தெரிவிக்கிறேன்’’ என்றபடியே தனது புரவி ரதத்தை நோக்கினாள். வானவல்லி ஆத்திரத்தில், அவசரமாகத் தனது ரதத்தில் சென்றுவிட்டது, அப்போது தான் அவளது நினைவிற்கு வந்தது.

அந்தப் பங்குனி வெயிலையும் பொருட்படுத்தாமல் வானவல்லியின் வீடு நோக்கி நடக்கத் தொடங்கினாள் பத்திரைத் தேவி.

# 19. ஆத்திரத்தில் தவறான முடிவு

‘விதி’ என்பதில் பெருமறவர் மகேந்திர வளவனாருக்கு எப்போதுமே நம்பிக்கை இருந்ததில்லை. ‘விதி’ என்பதை முயற்சியாலும், மதியாலும் வென்றுவிடலாம் என நினைப்பவர். ஆனால், அவர் வாழ்வில் சமீப காலமாக நடக்கும் நிகழ்வுகளைக் காண்கையில் ‘விதி’ என்ற ஒன்றினால் தான் வாழ்வின் அனைத்து நிகழ்வுகளும் ஒருங்கிணைக்கப்படுகிறது என நம்பத் தொடங்கியிருந்தார். அவர் சோழப் படையின் சேனாதிபதியாக இருந்தவரை அவரது வாழ்வின் நிகழ்வுகள் அனைத்தையும் அவர்தான் தீர்மானித்துக் கொண்டிருந்தார். ‘விதி’ என்ற ஒன்று இருப்பதையே அவர் நம்பியதில்லை. ஆனால் அவர் எப்பொழுது மகனை இழந்து அனைத்து பொறுப்புகளிலிருந்தும் விலகி சாதாரண மனிதராக வலம் வரத் தொடங்கினாரோ? அப்போதிலிருந்து ‘விதி’ என்ற ஒற்றைச் சொல்லை அவர் நம்பத் தொடங்கியிருந்தார். வாழ்வின் நிகழ்வுகள் அனைத்தும் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டது, அதன் படிதான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மனித முயற்சியால் விதியை மதியால் வென்றுவிட இயலாது என எண்ணிக்கொண்டு விதியின் வழியில் நடப்பது நடக்கட்டும் என வாழ்வின் போக்கில் உழன்று கொண்டிருந்தவர்க்குப் புகார் நகரத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள் என இரும்பிடர்த்தலையார் அறிவுறுத்தியதை எண்ணி இது விதியா அல்லது மனிதச் செயல்பாடா? எனக் குழப்பத்தில் இருந்தார். அச்சூழ்நிலையில் தான் புகார் நகரத் தலைவனாகத் தன்னை அறிவித்துக்கொண்டு வந்தவன் மாமன்னர் இருங்கோவேள் தங்களிடம் சேர்ப்பிக்கச் சொல்லி தந்தனுப்பிய ஓலையை அவர் வாசித்ததும் ‘விதி’ என்ற ஒற்றை வார்த்தையினால் தான் இப்படி நடைபெறுகிறது என முழுவதும் நம்பிவிட்டார். அவரது மனக் குழப்பமும் அதிகமாகிவிட்டது.

பெருமறவர் மகேந்திர வளவனாருக்கு,

சோழ மன்னர் இளஞ்சேட்சென்னி மறைந்துவிட்டதனாலும், சோழ இளவல் அரசை சுமக்க இயலாது அடையாளம் தெரியாதபடி ஓடி மறைந்துவிட்டதனாலும் சோழப் பேரரசின் நிலைத்தன்மை மற்றும் குடிகளின் பாதுக்காப்பினைக் கருதி அமைச்சர்கள் மற்றும் மக்கள் மன்றத்தின் ஆலோசனைப்படி நான் சோழ மன்னனாக முடிசூட்டிக் கொண்டேன் என்பதைச் சோழப் படையின் சேனாதிபதியாகப் பதவி வகித்த தங்களிடம் முறைப்படி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தாங்கள் மீண்டும் சோழப் படையின் தளபதியாகப் பதவியேற்றுக் கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன். தங்களுக்கு ஒரு மகள் இருப்பதாகவும் கேள்விப்பட்டேன். தாங்கள் விரும்பினால் தங்களது மகளுக்கும் எனது மகனுக்கும் மணமுடித்து நமது உறவை நாம் வலுப்படுத்திக் கொள்வோம். துவண்டு போயிருக்கும் சோழப் படைக்கு மீண்டும் தங்களைப் போன்ற துடிப்பு மிக்கச் சேனாதிபதியே தற்போதைய தேவையாக உள்ளது. ஆகவே விரைந்து தாங்கள் ஒரு முடிவெடுத்துவிட்டு சித்திரைப் பெருவிழாத் தொடங்குமுன் சேனாதிபதி பொறுப்பை ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறேன்.

இருங்கோ வேள். சோழப் பேரரசன்.

ஓலையின் கடைசியில் சோழப் பேரரசின் இராஜ முத்திரை பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்ட வளவனாருக்குக் குழப்பம் தலைக்கு ஏறிவிட்டது என்று தான் கூற வேண்டும்.

இருங்கோ வேளின் பார்வை தனது மகள் வானவல்லியின் மீது விழுந்த காரணம் என்னவாக இருக்கும்? ஒரு வேளை விறல்வேலின் உப தளபதியான திருக்கண்ணன் கூறியது போல இரும்பிடர்த்தலையரைக் கைது செய்ய வைக்கும் சூழ்ச்சியாக இருக்குமோ? இளவரசன் வளவனின் கதி என்னவென்று அறியாதவரை இருங்கோவேளின் மகன் தான் சோழ இளவரசன். சோழ மன்னன் இளவரசனுக்குப் பெண் கேட்கும்போது அதனை எப்படி மறுக்க இயலும்? இந்த ஓலையை மட்டும் விறல்வேல் பார்த்துவிட்டால் இருங்கோ வேளின் கதி என்னவாகும்? எனப் பல கேள்விகளைத் தனக்குத்தானே கேட்டுக் கொண்டவர் கடைசியில் விதி காட்டும் வழி எதுவானாலும் அதன்படியே எல்லாம் நடக்கட்டும். என்ன நடந்தாலும் ஏற்றுக்கொண்டு

வாழ்வினைக் கடப்பதைத் தவிர வேறு வழியில்லை என எண்ணியவர் மன பாரம் நீங்க ஆலமரத்து முற்றத்து கோயிலுக்குச் சென்று சிவ லிங்கத்தை வழிபட்டுவிட்டுத் தனது வீட்டிற்குள் நுழைந்தவரை அங்கே உணவருந்திய படியே இரும்பிடர்த்தலையர் வரவேற்றார்.

வீட்டிற்குள் நுழைந்த வளவனார் இரும்பிடர்த்தலையரிடம் “தாங்கள் எப்போது வந்தீர்கள்? உங்களை நான் இங்கு எதிர்பார்த்திருக்கவில்லை. அடிகளார் எங்கே?” என வினவினார்.

அதற்குப் பதிலளித்த இரும்பிடர்த்தலையர், “அடிகளாரை உறைந்தை வரை ஓர் முக்கியப் பணிக்காக அனுப்பி வைத்துள்ளேன் வளவனாரே.” எனக் கூறி சிறிது மௌனத்திற்குப் பின் “புகார்க் கோட்டையில் செங்குவீரனின் உப தளபதிகளால் கோட்டைத் தலைவனாகப் பொறுப்பேற்று வந்தவன் நையப் புடைக்கப்பெற்று அனுப்பப்பட்டதைக் கண்டேன். பிறகு கோட்டை மற்றும் வேறு இடங்களில் இருப்பது ஆபத்து எனத் தோன்றவே நேராக இங்கு வந்துவிட்டேன்.” என்றார்.

“அவையில் நடந்த நிகழ்வுகளைக் கண்டீர்களா, இரும்பிடர்த்தலையரே?”

“கண்டேன் வளவனாரே! விறல்வேல் தனது கண்களை மட்டும் தான் உயர்த்தினான். அவ்வளவுதான். எதிரிகள் அனைவரும் நொடிப் பொழுதில் சாய்ந்துவிட்டார்கள். நீண்ட காலத்திற்குப் பின் ஒரு துடிப்பு மிக்க வீரனை சோழ தேசத்தில் கண்டிருக்கிறேன். இளஞ்சேட்சென்னியின் கட்டளைப் படி நீங்கள் உங்களது இளம் பருவத்தில் மலை நாட்டில் இருங்கோவின் படைகளைச் சின்னாபின்னப் படுத்தினீர்களே! அதை விட வீரமும், விவேகமும், துடிப்பும் மிக்க இளைஞனை இன்று நான் கண்டுவிட்டேன். இனி சோழ தேசத்திற்கு உரிமையானவனான இளவரசன் வளவனுக்கு எதிராக இருங்கோவேள் மட்டுமல்ல சேரன், பாண்டியன் மற்ற வேளிர்கள் என அனைவரும் ஓரணியில் சோழ தேசத்திற்கு எதிராக வந்தாலும் அவர்களை எதிர்த்து முறியடித்துவிடும் வல்லமையுடைய தலைவன் ஒருவன் கிடைத்துவிட்டான் வளவனாரே. இனி காணாமல் போன இளவலைப் பற்றி நான் கவலை கொள்ளப் போவதில்லை. விரைவில் விறல்வேலால்

கண்டுபிடிக்கப்பட்டுக் காப்பாற்றப் படுவான்'' என இரும்பிடர்த்தலையர் கூறிக்கொண்டு வந்த போது வளவனாரின் முகத்தில் பெருங்குழப்பத்தைக் கண்டவர் ''வளவனாரே, முகத்தில் ஏன் கவலையின் சாயல் படர்ந்திருக்கிறது?'' காரணம் யாதென வினவினார்.

அவருக்கு எந்தப் பதிலையும் அளிக்காமல் இடுப்பில் வைத்திருந்த ஓலையை எடுத்து நீட்டினார்.

ஓலையைப் படித்த இரும்பிடர்த்தலையரின் முகத்தில் கோபமும், வருத்தமும் மாறி மாறித் தோன்றியது.

''எவ்வளவு துணிச்சல் இருந்தால் இளவல் பயந்து ஓடிப்போய் விட்டதாகக் குறிப்பிட்டிருப்பான் அந்தக் கயவன்'' என வெகுண்டெழுந்தார் இரும்பிடர்த்தலையர்.

''சிறை வைக்கப்பட்டிருக்கும் இளவலைக் கண்டறிந்து மீட்கும் வரை அவர் பயந்து ஒளிந்துகொண்டதாகவே இருங்கோவேள் பறை சாற்றுவான்'' என்றார் வளவனார்.

''இளவல் உயிருக்குப் பெரும் ஆபத்து சூழ்ந்திருக்கிறது. பயந்து ஓடிப்போய் விட்டதாக இளவலைக் குறிப்பிட்டுள்ளவன் அவரைக் கொல்லவும் தயங்கமாட்டான். இளவலைக் கொன்றுவிட்டு அவர் திரும்பியதும் ஒப்படைக்கிறேன் என்று அனைவரையும் நம்பவைத்து ஆட்சியை முழுவதும் அபகரித்துவிடுவான். அனைத்தையும் அவன் திட்டமிட்டே செய்துகொண்டிருக்கிறான்'' என்றார் இரும்பிடர்த்தலையர்.

சிறிது நேரம் ஏதும் பேச இயலாமல் அமைதியாய் இருந்த இரும்பிடர்த்தலையர் மீண்டும் தொடர்ந்து ''சோழ இளவலுக்கும் சோழ தேசத்திற்கும் நேர்ந்துள்ள ஆபத்தினை எண்ணும் போது எனது நெஞ்சமே வெடித்துவிடும் போலிருக்கிறது வளவனாரே'' எனக் கண் கலங்கினார்.

அவருக்கு எப்படி ஆறுதல் கூறி அவரை அமைதிப் படுத்துவதெனத் தெரியாமல் வளவனார் தவித்துக்கொண்டிருந்த போது இதுவரை இருவரும் பேசிக்கொண்டிருந்ததை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த வானவல்லியின் தாயார் குறுக்கிட்டார்.

“தேவலோகம் சென்றுவிட்ட மாமன்னன் இளஞ்சேட்சென்னிக்குத் தாங்கள் கொடுத்த வாக்கின்படி நிச்சயம் இளவல் சோழப் பேரரசனாக முடிசூடுவான். இளவலின் உயிருக்கு எந்தத் தீங்கும் நேராது. விறல்வேல் தம்பியைப் பற்றி எனக்குச் சிறு வயதிலிருந்தே தெரியும். ஒரு காரியத்தில் இறங்கிவிட்டால் அதில் வெற்றியை மட்டுமே ருசித்துப் பழகியவன். சோழ தேசத்திற்காகத் தனது காதலியையே துச்சமென எண்ணி விலகிவிட்டவன் அவன். உயிருக்குயிராக நேசித்த காதலியையும், காதலையும் சோழ தேசத்திற்காகப் பிரிந்தவன் அவ்வளவு எளிதில் சோழ இளவல் ஆபத்தில் இருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டான் இருமபிடர்த்தலையரே! விறல்வேல் உள்ளவரை சோழ இளவல் மற்றும் சோழ தேசத்தைப் பற்றிய கவலையை விட்டுவிடுங்கள்” என நம்பிக்கையுடன் கூறினாள்.

இரும்பிடர்த்தலையர், “சோழ தேசத்திற்காகக் காதலியைப் பிரிந்தவன் அதே தேசத்திற்காகத் தனது காதலியை விட்டுக் கொடுப்பானா?” எனப் புதிர் போட்டார்.

கோபமடைந்த வானவல்லியின் தாயார், “என்ன புதிர் போடுகிறீர்கள் இரும்பிடர்த்தலையரே! என் மகள் வானவல்லியை சோழ தேசத்திற்காகப் பிரிந்தான் எனத்தான் கூறினேனே தவிர விட்டுக்கொடுப்பான் என நான் குறிப்பிடவில்லை!” என்றார்.

“அப்படி யாரேனும் விட்டுக்கொடுக்கச் செய்யும்படி நிர்பந்தித்தாலோ அல்லது அபகரிக்க எண்ணினாலோ என்ன செய்வான்?”

“காலையில் புகார்க் கோட்டைக்குச் சொந்தம் கொண்டாடி வந்தவனின் நிலையைத் தான் சற்று முன் என்னிடம் கூறினீர்களே! அப்படியிருக்க இந்தக் கேள்வியைத் தாங்கள் கேட்டுத்தான் ஆக வேண்டுமா?”

“அவசியம் இல்லாமல் நான் வார்த்தைகளை உதிர்ப்பதில்லை என்பதைத் தாங்கள் நிச்சயம் அறிந்திருப்பீர்கள் தாயே!” என்றபடியே ஓலையை எடுத்து வானவல்லியின் தாயாரிடம் கொடுத்தார்.

ஓலையைப் படித்த வானவல்லியின் தாயார் மற்றவர்களைப் போன்று கவலை கொள்ளவில்லை. மாறாகச் சிரிக்கவே செய்தார்.

சிரிப்பதற்கான காரணத்தை அறியாத வளவனார் தனது மனைவியிடம், “இதில் சிரிப்பதற்கு என்ன கண்டுவிட்டாய்?” என்றார் சற்றுக் கோபத்துடன்.

பதிலுக்கு வானவல்லியின் தாயார் “இந்த யோசனையை ராஜதந்திரமாக எண்ணி இருங்கோவேளுக்கு யார் அறிவுரை கூறினார்கள் எனத் தெரியவில்லை. வானவல்லியை தனது மகனுக்கு மணமுடிப்பதன் மூலம் உங்களது ஆதரவையும் பெற்று அதே சமயம் விறல்வேல் தம்பியையும் தனிமைப்படுத்தி விடலாம் எனச் சிறப்பாகத் திட்டம் தீட்டியுள்ளனர். ஆனால் இருங்கோவேள் தனது மகனுக்குத் தானே செய்வினை வைத்திருப்பதைப் போலவே எண்ணுகிறேன் நான். இந்தச் செய்தி மட்டும் உபதலைவன் விறல்வேலின் காதுகளுக்கு எட்டாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அவன் அறிந்துகொண்டால் இருங்கோ வேளை மட்டுமல்ல உறைந்தையையேக் கொளுத்தினாலும் கொளுத்திவிடுவான்” எனச் சாதாரணமாகக் கூறினார்.

குறுக்கிட்ட இரும்பிடர்த்தலையர், “செங்குவீரன் அவ்வளவு வலிமையுடையவனா?” எனக் கேட்டு வானவல்லியின் தாயாரின் எண்ண வலிமையை ஆழம் பார்க்க முயற்சித்தார்.

பதிலுக்கு வானவல்லியின் தாயார் “ஆமாம் இரும்பிடர்த்தலையரே அவனது வலிமையும், வேகமும், விவேகமும் நமது மதிப்பீட்டிற்கும் அப்பாற்பட்டது. அவனது காதலும் அப்படித்தான். அதற்கு ஏதேனும் ஆபத்தென்றால் அவன் யாரை வேண்டுமானாலும் எதிர்க்கத் துணிந்து விடுவான்” என்றார்.

ஓலையை வாங்கிய இரும்பிடர்த்தலையர் வளவனாரை நோக்கி “வளவனாரே, தங்கள் முடிவு என்ன? என்றார்.

“எதைப்பற்றி?”

“இருங்கோ வேள் எழுதியுள்ள ஓலையைப்பற்றித் தான்!”

“ஓலையைப் பற்றிக் கேட்கிறீர்களா? அல்லது அதில் உள்ள செய்தியைப் பற்றியா?”

“ஓலையில் உள்ள வானவல்லி சம்பந்தப்பட்ட செய்தியைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்!”

“அதைப்பற்றி எந்த முடிவையும் எடுக்க இயலவில்லை இரும்பிடர்த்தலையரே! இதில் சோழ தேசத்தின் நன்மையும் அடங்கியிருப்பதால் நிறையச் சிந்திக்க வேண்டியுள்ளது. காலத்தின் கைகளில் அனைத்து முடிவுகளையும் விட்டுவிடுவோம். நடக்கிறபடி நடக்கட்டும். இப்போது இது பற்றி எந்தச் செய்தியையும் இருங்கோவேளுக்கு அனுப்பாமல் அமைதியாக இருப்பதே சாலச் சிறந்தது என எண்ணுகிறேன். சூழ்நிலைக்குத் தகுந்தவாறு முடிவெடுத்துக் கொள்வோம்.” என வளவனார் பேசிக்கொண்டிருந்த போதே குறுக்கிட்ட வானவல்லியின் தாயார் கடும் கோபத்துடன் “உங்களது அரசியல் பிரச்சனைகளுக்குள் எனது மகள் வானவல்லியை சிக்கவைத்து அவளது வாழ்க்கையைப் பாழாக்கி விடாதீர்கள். இருங்கோவேள் ஓலையைப்பற்றி யோசிக்கும் பேச்சிற்கே இடமில்லை. அவளது எதிர்காலம், அவள் யாருடன் வாழ வேண்டும் என்பது பற்றி முடிவெடுக்கும் முழு உரிமை அவளுக்குத்தான் உள்ளது. மாறாக உங்களுக்கோ அல்லது எனக்கோ இல்லை. ஆலோசனை வழங்க மட்டுமே உரிமை உள்ளது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்” என்றார் சற்றுக் கடுமையான குரலில்.

வானவல்லியின் பொருட்டு வளவனாருக்கும் அவரது மனைவிக்கும் கருத்து வேறுபாடு அதிகரிப்பதைக் கண்ட இரும்பிடர்த்தலையர் குறுக்கிட்டு இருவரையும் சமரசம் செய்யும் நோக்குடன் “இருங்கோவேள் எழுதியுள்ள ஓலைக்காக நமக்குள் நாம் சண்டையிடத் தேவையில்லை தாயே! அதைப் பற்றி முடிவெடுக்க வேண்டிய எந்தவொரு அவசியமும் இப்போது ஏற்படவில்லை. காலம் வரும்போது அதைப்பற்றி நாம் சிந்தித்து முடிவெடுத்துக் கொள்வோம்” என அமைதியானார்.

“எதிர் காலத்திலும் இந்த ஓலையைப் பற்றிச் சிந்திக்க ஏதுமில்லை இரும்பிடர்த்தலையரே! வானவல்லி விறல்வேல் தம்பிக்குத்தான் என்பது முடிவு செய்யப்பட்ட ஒன்று என்பதை இருவரும் நினைவில் கொள்ளுங்கள்”

குறுக்கிட்ட வளவனார், “அன்று வானவல்லிக்குப் பிடித்திருந்தது. நமது மகன் திவ்யனால் பேசி முடிக்கப்பட்டது. இன்று திவ்யனையும்

இழந்துவிட்டோம். வானவல்லி பேசுவதைக் கூட நிறுத்திக் கொண்டாள். இனியும் அதைப் பற்றிப் பேசுவதில் என்ன பயன்?'' என வினவினார் தன் மனைவியிடம்.

பதிலுக்கு வானவல்லியின் தாயார், ''உங்களது மகள் உங்களுக்குக் கொடுத்த வாக்கினைக் காப்பதற்கே விறல்வேலுடன் பேசாமல் விலகியிருக்கிறாள். மாறாக வானவல்லி முற்றிலும் மறந்துவிட்டாள் என எண்ண வேண்டாம். மகளைப் பற்றித் தாயைவிட யாரும் அதிகம் அறிந்திருக்கமாட்டார்கள். அந்த வகையில் கூறுகிறேன், அவள் முற்றிலும் விறல்வேல் தம்பியை மறந்துவிட்டாள் என எந்தவொரு கணத்திலும் தவறாக எண்ணிவிடாதீர்கள். அவள் மனதில் நடக்கும் போராட்டங்களை நான் மட்டுமே அறிவேன்'' என க் கூறியபடியே அங்கிருந்து புறப்பட்டாள்.

புறப்பட்ட வானவல்லியின் தாயாரிடம் ''தாயே! வானவல்லி எங்கே? நான் வந்ததிலிருந்தே வானவல்லியைக் காணவில்லையே!'' என இரும்பிடர்த்தலையர் வினவ பதிலுக்கு வானவல்லியின் தாயார் ''அவளது தோழி பத்திரையின் வீட்டிற்குக் காலையிலேயே சென்றுவிட்டாள். மதிய உணவிற்குப் பத்திரைத் தேவியையும் அழைத்து வரச் சொல்லியுள்ளேன். அவர்களைத் தான் நானும் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறேன். அவர்கள் வரும் நேரம் தான்'' என இரும்பிடர்த்தலையரிடம் கூறிக்கொண்டிருந்த போதே புழுதி பறக்கப் புரவித் தேரிலிருந்து இறங்கி வேகமாக வந்த வானவல்லி ஆத்திரம், கோபம் எனப் பெரும் துயரத்தோடு வீட்டினுள் நுழைந்தாள்.

இரும்பிடர்த்தலையரைக் கண்டவுடன் அவளது கோபம் மற்றும் ஆத்திரங்கள் அனைத்தையும் மறந்து மலர்ந்த முகத்துடன் அவரது பாதங்களில் விழுந்து வணங்கினாள்.

வானவல்லியின் நலனை விசாரித்து அறிந்துகொண்ட இரும்பிடர்த்தலையர் ''அம்மா, வானவல்லி எங்கே உனது தோழி பத்திரைத் தேவி வரவில்லையா? நீங்கள் இருவரும் வருவதாக அல்லவா உமது தாயார் கூறினார்'' என்றார்.

''அவள் பின்னால் வந்துகொண்டிருக்கிறாள் அய்யா!''

‘‘அப்படியா! வரட்டும். வரட்டும். மகிழ்ச்சி. நீ, பத்திரை, மரகதவல்லி என மூவரும் புகாரில் மகிழ்ச்சியுடன் சுற்றித் திரிந்தீர்கள். இப்போது மரகதவல்லி மட்டும் தனியாக நாங்கூரிலும் உறைந்தையிலும் தனிமைப்பட்டுக் கிடக்கிறாள். மரகதவல்லி உங்கள் இருவரையும் நலம் விசாரித்ததாகக் கூறச் சொன்னாள். உங்களைச் சந்திக்கவும் பெரும் ஆவலுடன் இருக்கிறாள்.’’

தனது தோழி மரகதவல்லி பற்றி இரும்பிடர்த்தலையர் கூறியதும் மகிழ்ச்சியுடன் ‘‘தாங்கள் மரகதவல்லியை சந்தித்தீர்களா?’’ அவள் இப்போது எங்கே இருக்கிறாள்?’’ என ஆவலுடன் வினவினாள்.

‘‘நேற்று தான் உறைந்தையில் சந்தித்தேன். மரகதவல்லியின் தந்தை செங்கோடனைச் சந்திக்கையில் மரகதவல்லியையும் சந்திக்க நேர்ந்தது’’

‘‘நேற்று அவளை நாங்கூரில் அல்லவா சந்தித்துவிட்டு வந்தோம். உறைந்தைக்கு வந்துவிட்டாளா?. உறைந்தையில் சந்தித்தபோது புகாருக்குத் தாங்கள் அழைத்து வந்திருக்கவேண்டியது தானே!’’

‘‘இல்லை அம்மா. செங்கோடனுக்குச் சில முக்கியப் பணிகளை வழங்கியுள்ளேன். அவன் நிச்சயம் உறைந்தையில் தான் இருக்க வேண்டும். ஆதலால் செங்கோடனுக்குத் துணையாக மரகதவல்லியும் அங்கேயே இருப்பதாகக் கூறிவிட்டாள். ஆனால் நான் வழங்கிய பணியின் காரணமாகச் செங்கோடன் வீட்டில் தங்குவதே இல்லை. மரகதவல்லி தனியாகத் தான் இருக்கிறாள்’’

திடீரென வானவல்லி, ‘‘நான் வேண்டுமானால் மரகதவல்லிக்குத் துணையாக உறைந்தை செல்லட்டுமா?!’’ என்றாள்.

இரும்பிடர்த்தலையர், ‘‘சோழ தேச சேனாதிபதியும் படைத் தளபதியுமான வளவனாரிடம் அனுமதி பெற்று நீ தாராளமாகப் புறப்படலாம் அம்மா’’ என்றார்.

இரும்பிடர்த்தலையர் வானவல்லியிடம் சோழ படைத் தளபதி எனத் தந்தையை அழைத்ததிலிருந்து தந்தை மீண்டும் அரசப் பொறுப்பில் இணையப் போகிறார் என்று இரும்பிடர்த்தலையரின் குறிப்பினால் உணர்ந்த வானவல்லி

தந்தை படையின் சேனாதிபதியானால் விறல்வேலையும் நிச்சயம் ஏற்றுக்கொள்வார். தனது மனப் போராட்டமும் விரைவில் நீங்கப்போகிறது என மகிழ்ந்து குதூகலமடைந்தாள். ஆனால் சற்று முன் விறலியைத் தூக்கிக்கொண்டு வந்த விறல்வேலைக் கண்ட நிகழ்வுகள் மனதில் நிழலாடி அவளின் மனதில் எழுந்த மகிழ்ச்சிகளைக் குலைத்துவிடவே அவளது முகம் மீண்டும் வாடிப்போனது.

வாடிய முகத்துடன் தந்தையை நோக்கிய போது அவள் அனுமதி பெறவே தனது முகத்தை அப்படி வைத்துள்ளாள் என எண்ணிய வளவனார் சிரித்தபடியே அவளது கோரிக்கைக்கு அனுமதி வழங்கினார்.

மன நிம்மதியைத் தேடி புத்த விகாருக்குச் சென்று தீராத மன வலியுடன் வீடு திரும்பியவளுக்குத் தனது தோழி மரகதவல்லியைச் சந்திக்கப் போகிறோம் என்ற எண்ணம் சற்று ஆறுதல் அளித்தது.

கிளம்பிய வானவல்லியிடம் "மகளே, வானவல்லி" என அழைத்தார் வளவனார்.

"கூறுங்கள் தந்தையே!"

உனது திருமணம் பற்றி உன்னிடம் பேசவேண்டும் அம்மா."

"அதற்கென்ன அவசரம் இப்போது வந்துவிட்டது, அப்பா!"

"உன் மனதில் யார் மீதேனும் விருப்பம் உள்ளதா?"

மகேந்திர வளவனார் காலையில் இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தால் "விறல்வேல்" என்று கண்களை மூடிக்கொண்டு பதிலளித்திருப்பாள் வானவல்லி.

ஆனால் விறலியைச் சுமந்து கொண்டு வந்த விறல்வேலைக் கண்ட பின்னர் அவளது மனம் முற்றிலும் மாறிவிட்டது. விறல்வேல் மீது அவளுக்குக் கோபமும் ஆத்திரமும் தான் கணத்திற்குக் கணம் பெருகிக்கொண்டே இருந்தது. அந்த ஆத்திரத்தின் விளைவினால் தன் வாழ்வில் மாபெரும் பிழையைச் செய்யப் போகிறோம் என்பதை அவள் அறியாமல் "என் மனதில் யார் மீதும் எந்த வித தனிப்பட்ட விருப்பமும் இல்லை. தாங்கள் எனது

எதிர்காலம், நான் யாருடன் வாழ வேண்டும் என நீங்கள் எடுக்கும் எந்த முடிவிற்கும் நான் கட்டுப்பட்டவள் அப்பா'' எனப் பதிலளித்தாள்.

வானவல்லியின் இந்தப் பதிலைக் கேட்டு அதிர்ச்சியடைந்த வானவல்லியின் தாயார், வானவல்லியிடம் ''மகளே! நீ என்ன கூறுகிறாய்? அதன் விளைவை அறிந்துதான் இப்படிப் பேசுகிறாயா? உன் மனதில் உள்ள ஆசையை இப்போது கூறிவிடடி. இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காமல் கூடப் போகலாம்!'' என மன்றாடினார்.

ஆனால் அவள் எதைபற்றியும் சிந்திக்காமல் ''அம்மா, நான் என்ன பேசுகிறேன். எதைப்பற்றிப் பேசுகிறேன் என்பதில் தெளிவுடன் தான் இருக்கிறேன். தந்தை எடுக்கும் எந்த முடிவிற்கும் எனக்கு உடன்பாடுதான். தாங்கள் எண்ணுவது போல என் மனதில் யார் மீதும் எந்த ஆசையும் இல்லை. நான் இப்போதே உறைந்தை கிளம்புகிறேன்!'' என வானவல்லி கூறிவிட்டுப் புறப்பட ஆயத்தமாக, வானவல்லியின் தாயார் ''மதிய உணவை உண்ட பிறகாவது புறப்படு மகளே'' எனக் கூற பதிலுக்கு வானவல்லி ''எனக்குப் பசிக்கவில்லை அம்மா! நான் உறைந்தை சென்ற பின் மரகதவல்லியோடு சாப்பிட்டுக் கொள்கிறேன்'' என்றபடியே பத்திரைத் தேவியின் புரவியில் உறைந்தை நோக்கிப் பயணத்தைக் தொடங்கினாள்.

தோழியைச் சந்திக்கப் போகும் மகிழ்ச்சியில் தான் பசியில்லை எனக் கூறிவிட்டுச் செல்கிறாள் என்றே அனைவரும் எண்ணிக்கொண்டனர். அவளது மனத் துயரை யாரும் அறிந்திருக்கவில்லை.

வானவல்லி புறப்பட்ட சிறிது நேரத்தில் இரும்பிடர்த்தலையர் மற்றும் வளவனார் இருவரும் அங்கிருந்து புறப்பட்டுவிட்டனர். தனிமையில் இருந்த வானவல்லியின் தாயார் வானவல்லியின் வாழ்வில் அரங்கேறிக் கொண்டிருக்கும் சிக்கல்களை எண்ணி துயரப்பட்டுக் கொண்டிருந்தார்.

திடீரென வீட்டு வாசலிலிருந்து ''வானவல்லி! வானவல்லி!'' என்று யாரோ வானவல்லியை அழைக்கும் குரலைக் கேட்டு வானவல்லியின் தாயார் வெளியே வந்து பார்க்க பத்திரை மூச்சு வாங்கிக்கொண்டு வியர்க்க நின்று கொண்டிருந்தாள்.

வானவல்லியை அழைத்த பத்திரைத் தேவியின் குரலைக் கேட்டு வந்த வானவல்லியின் தாயார் அவள் இப்படி வியர்க்க விறுவிறுத்து வந்திருப்பதைக் கண்டு பதறவே செய்தார்.

“நீ குரல் கொடுத்தால் முத்துச் சிவிகையில் உன்னைச் சுமக்க பலர் தயாராய் இருக்க நீ வியர்த்து, மூச்சு வாங்கி ஓடி வரும் அளவிற்கு என்ன நேர்ந்தது பத்திரை?”

வானவல்லியின் தாயார் கேட்டதற்கு எந்தப் பதிலையும் கூறாமல் மூச்சு வாங்கிய படியே பத்திரை, “வானவல்லி எங்கே அம்மா?” என வினவினாள்.

“அவள் உறைந்தை சென்றுவிட்டாளே!”

“ உறைந்தைக்கா?”

“ஆமாம் பத்திரை. சற்று முன் தான் இங்கிருந்து கிளம்பினாள். நாங்கூரிலிருந்து மரகதவல்லி உறைந்தை வந்திருப்பதாக இரும்பிடர்த்தலையர் கூறினார். அவள் அங்குத் தனியாக இருக்கிறாள், நான் துணைக்குச் செல்கிறேன் எனக் கூறி இங்கிருந்து கிளம்பிவிட்டாள்”

வானவல்லியின் தாயார் கூறியதைக் கேட்ட பத்திரை, “அவசரப்பட்டு விட்டாயே வானவல்லி. அறிய வேண்டிய உண்மையை அறிந்துகொள்ளாமல் மன வருத்தத்துடனே சென்றுவிட்டாயே!” என வருந்தினாள்.

பத்திரை தனக்குத் தானே பேசிக்கொண்டதைக் கேட்ட வானவல்லியின் தாயார் “என்னாயிற்று பத்திரை. எந்த உண்மையை அறியாமல் சென்றுவிட்டாள்?”

கணிகையர் மாளிகையில் நடந்த நிகழ்வுகளையும், விறலியோடு விறல்வேலைக் கண்டதினால் ஏற்பட்ட ஆத்திரத்தோடு வானவல்லி வந்துவிட்டதையும் பத்திரை வருத்தத்தோடு கூறினாள்.

பத்திரை கூறியதைக் கேட்ட வானவல்லியின் தாயார், ”ஆமாம் பத்திரை, அவள் அவசரம் தான் பட்டுவிட்டாள். விறல்வேல் தம்பிக்கு ஏதும், எந்த ஆபத்தும் நேர்ந்துவிடவில்லை தானே!” எனப் பதறினார். பிறகு

“விறல்வேலைக் காப்பாற்றிய அந்த விறலியின் நிலை இப்போது எப்படி உள்ளது?” என வினவினாள்.

“விறலி தனது உயிரைக் கொடுத்து தலைவரின் உயிரைக் காப்பாற்றியுள்ளாள். அவள் பிழைப்பது சந்தேகமே! பவுத்த தேரரான தலைமை மருத்துவர் எனது ஆறுதலுக்காகச் சில திங்கள் காலம் கழித்தே அவளது நிலையைக் கூற இயலும் என்றார். ஆனால் நானும் மருத்துவம் பயின்றவள் தான் என்பதை அவர் அறிந்திருக்க மாட்டார் என்றே நினைக்கிறேன் அம்மா. அவளது கையைப் பிடித்துப் பிரார்த்தனை செய்வது போல அவளது நாடியையும் பார்த்துவிட்டேன். அவளது நாடி பலவீனமாக இருக்கிறது. அவள் பிழைக்க மாட்டாள். அதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு.” என வருந்தியபடியே கூறினாள்.

பத்திரைத் தேவி கூறியதைக் கேட்ட வானவல்லியின் தாயார் இருக்க மாட்டாமல் “பத்திரை, அந்த விறலியை நேரில் கண்டு வந்தால் தான் எனக்கு நிம்மதியாக இருக்கும். வா சென்று வரலாம்!” எனப் பத்திரையை அழைத்துக் கொண்டு புத்த விகாரை நோக்கிப் புறப்பட்டனர் இருவரும்.

# 20. கள வுத் தொழிலும் நாட்டுப்பற்றும்

புத்த விகாரில் பரதவன் குமரன் சம்பாபதி வனத்திலிருந்து கணிகையர் மாளிகை வரை நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் பத்திரைத் தேவியிடம் கூறிக்கொண்டிருந்த போது அவர்கள் மட்டுமல்லாது அருகில் இருந்த புத்தர் சிலைக்குப் பின்னால் மறைந்திருந்தபடி மற்றொரு உருவமும் இவர்களின் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தது.

பரதவன் குமரன் நடந்த நிகழ்வுகளைக் கூறக் கூற மறைந்து கேட்டுக் கொண்டிருந்தவனுக்கு ஆத்திரமும், கோபமும் தலைக்கேறிக் கொண்டிருந்தது. செங்குவீரனும், அவனது உப தளபதி பரதவன் குமரனும் அவ்விடத்திலிருந்து கிளம்பும் வரை அவனது கோபத்தினை அடக்க இயலாதவனாய் தவித்தவன் அவர்கள் கிளம்பிய பின் புத்தர் சிலையிலிருந்து வெளிப்பட்டுப் புத்த விகாருக்குள் கோபத்தோடு நுழைந்தான்.

புத்த விகாருக்குள் யாரும் எளிதில் நுழையாத படி சற்றுப் பாதுகாப்பு நிறைந்த அறையின் கட்டிலில் வானவல்லியின் குறுவாளால் ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவம் பெற்றுக்கொண்டிருந்தான் காளன்.

பெருங்கோபத்தொடு உள் நுழைந்தவன் காளனின் காயத்திற்கு மருந்து போட்டுக்கொண்டிருந்த காளனது நண்பனைப் பிடித்துத் தூரத் தள்ளி ‘‘இவன் செய்த காரியத்திற்கு மருந்தும் மருத்துவமும் தான் கேடு. இதோடு மருந்து போடுவதை நிறுத்திக் கொள்ளுங்கள். இவனது காயம் புரையோடியே இவன் மடியட்டும். அப்படி மடிந்தால் கூட இவன் மீதிருக்கும் கோபம் எனக்குத் தணியாது’’ என்றான்.

தன் மீது பெரும் பற்றும், பாசமும் நிறைந்த தனது நண்பனின் வினோத செயலின் காரணத்தை அறியாத காளன் தலையைக் கூடத் தூக்க

இயலாமல் ‘‘நண்பா, நான் என்ன பிழை செய்து விட்டேனென்று என் மீது கோபம் கொள்கிறாய்?’’ என வினவினான்.

‘‘என்ன பிழை செய்தேன் என்று கேள்வியா கேட்கிறாய்! நீ செய்த குற்றத்திற்கு உன்னை வெட்டாமல் நின்று பேசிக்கொண்டிருக்கிறேனே!’’ எனக் கூறியபடி தனது வாளை உருவினான்.

வாளை உருவிய தனது நண்பனின் செயலைக் கண்ட காளன் காயம்பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடந்ததால் ஏதும் செய்ய இயலாமல் திகைத்தபடி ‘‘நண்பா வில்லவா?’’ என அழைத்தான்.

உருவிய வாளை நோங்கியபடியே ‘‘எனது பெயரை இனியொரு முறை உரைக்காதே! காயம்பட்டுப் பிணமாகக் கிடக்கும் நீ செத்த பாம்பிற்கு ஒத்தவன். உன்னைத் தீண்டினால் எனது வாளிற்கும், வீரத்திற்கும் தான் இழுக்கு’’ என்றவன் சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு ‘‘உனது இரத்தக் கரையைப் புத்த விகாரில் படிய வைத்து அதன் புனிதத்தைக் கெடுக்க விரும்பவில்லை’’ எனக் கூறியபடியே தனது வாளினை வாளுறையில் நுழைத்தான் வில்லவன்.

வில்லவன் கோபம் கொண்டாலும் தனது நிதானத்தை இழக்காத காளன் அவனது கண்களில் தனது பார்வையை நிலைநாட்டியபடியே ,’’வில்லவா, நான் என்ன குற்றம் செய்துவிட்டேன்! எதற்காக என் மீது நீ இவ்வளவு கோபம் கொள்கிறாய்?’’ என மீண்டும் வினவினான்.

‘‘இருங்கோவேளிடம் எப்போது விலை போனாய்?’’ என அந்த அறையே அதிரும்படி பேரிடியாய் முழங்கினான் வில்லவன்.

‘‘வில்லவா நண்பன் என்பதற்காக எதை வேண்டுமானாலும் கூறாதே! இருங்கோவேள் எனது குல எதிரி. அவனிடம் நான் விலைபோனேன் என்று இனியொரு முறை கூறாதே!’’ எனக் கோபத்தோடு எச்சரித்தான் காளன்.

நேற்று சம்பாபதி வனத்திற்குக் களவு செய்ய நானும் உன்னோடு வந்திருந்தேன். நமது நோக்கம் களவு செய்வது மட்டுமே. ஆனால் உமது நோக்கம் செங்குவீரன் அங்கு வருவான் என முன்பே தெரிந்திருந்து அவனைக் கொல்வதில் இருந்திருக்கிறது’’

“நேற்று நாம் செங்குவீரனை எதிர்பார்த்திருக்கவே இல்லை. அப்படியிருக்க உப தலைவனைக் கொல்ல நான் திட்டம் தீட்டியிருந்தேன் எனக் கூறுவது அபாண்டமான குற்றச்சாட்டு நண்பனே!” எனக் கோபத்தோடு பதிலளித்தான் காளன்.

“சரி, நீ எந்தத் திட்டமும் தீட்டவில்லை என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் நேற்று இறந்துவிட்ட நமது நண்பர்களில் ஒருவன் அணிந்திருந்த முத்து மாலையைக் கொண்டு அடையாளம் காண வந்த செங்குவீரன் கணிகையர் மாளிகையில் நஞ்சு தடவப்பட்ட அம்பினால் தாக்கப்பட்டிருக்கிறான்” எனக் கூறிக்கொண்டிருந்த போதே குறுக்கிட்ட காளன், “செங்குவீரனைத் தாக்கினார்களா? அவனுக்கு என்ன நேர்ந்தது?” என அக்கறையோடு வினவினான்.

“அக்கறையோடு விசாரிப்பதெல்லாம் இருக்கட்டும்! விறலி மாலையை வைத்து கணிகையர் விடுதியில் செங்குவீரனை நஞ்சினால் கொல்ல ஏற்பாடு செய்தது யார்? பதில் கூறு!” என வினவினான் வில்லவன்.

“நீ கூறுவது அனைத்தும் பெரும் புதிராக அல்லவா இருக்கிறது. எனக்கும் இந்த நிகழ்வுகளுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது” என்றான் காளன்.

“சம்பாபதி வனத்தினுள் நாம் களவு செய்யப் போகிறோம் என்பது நேற்று மாலைக்குப் பிறகு தான் நாம் இருவரும் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தினோம். அப்படியிருக்கத் திட்டமிட்டுச் செங்குவீரனைக் கொல்ல முயற்சி நடந்திருக்கிறது. உனக்கும் அதற்கும் தொடர்பில்லை என நீ மறுப்பதை எப்படி நான் நம்புவேன் நண்பா?” என வினவினான் வில்லவன்.

“அதைப்பற்றித் தான் நானும் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் வில்லவா!” என அமைதியுடன் பதிலளித்தான் காளன்.

“எனக்கு உன் மீதுதான் பெரும் சந்தேகம் நிலவுகிறது நண்பா. ஒன்றை மட்டும் நினைவில் கொள். ஒருவன் நண்பனுக்காக எதை வேண்டுமானாலும் செய்வான். ஏன்! நண்பனோடு சேர்ந்து தன் குலப் பெருமை அனைத்தும் கெடும்படி களவுத் தொழிலைக் கூடச் செய்வான். ஆனால்

அவனது சொந்த நாட்டிற்கு எதிராக எதையும் செய்யத் துணிய மாட்டான் என்பதைப் புரிந்து கொள். உயிருக்கு உயிராகப் பழகியவன் விலை போய் நாட்டிற்கு எதிரான துரோகச் செயல்களைச் செய்தால் அவனது உயிரையும் கொய்யத் தயங்கமாட்டேன். எனக்கு நட்பு முக்கியம் தான். ஆனால் அதைவிடச் சோழ தேசத்தின் நலன் முக்கியம். சோழ தேசம் எனது தாய் நாடு. அதற்கு ஆபத்தை விளைவிக்கும் கயவர்களோடு சேர்ந்து கொண்டால் உயிர்த்தோழனான எனது கைகளால் தான் உனது உயிர் போகும் என்பதை மட்டும் உறக்கத்திலும் மறந்துவிடாதே'' என ஆவேசமாகக் கூறிவிட்டு தனது நண்பனான காளனின் முகத்தைப் பார்க்கவே அவமானமாக எண்ணி சற்றுத் தள்ளி இருந்த மரப் பலகையில் அமர்ந்துவிட்டான் வில்லவன்.

நேற்றிரவு சம்பாபதி வனத்தினுள் செங்குவீரனிடமிருந்து தப்பிய சில கள்வர்களுள் வில்லவனும் ஒருவன். வாள் வீசுவதில் வல்லவன். தனது நண்பனான காளனுடன் சேர்ந்து பொழுது போக்கிற்காகக் களவாடிக்கொண்டிருப்பவன். ஆனால், சோழ தேசத்தின் மீது பெரும் பற்றுக் கொண்டவன். தனது நண்பன் சோழ தேசத்திற்கு எதிரான செயலைச் செய்துள்ளான் எனப் பத்திரைத் தேவி மற்றும் பரதவன் குமரனின் உரையாடல்களிலிருந்து அறிந்து கொண்டவன் பெரும் கோபத்தோடு காளனின் செயலுக்கு அவனை வெட்டி வீழ்த்திவிட வேண்டும் என்றே புத்த விகாருக்குள் விரைவாக நுழைந்தான். ஆனால், தனது நண்பன் காளனைக் கண்டவுடன் நட்பு மிகுதியால் அவனது ஆத்திரம் சற்றுக் குறைந்து உருவிய வாளை நோங்கியவனை நட்பு தடுத்துவிடவே வாளை இறக்கி உறையில் போட்டுக்கொண்டான்.

மார்போடு தோள் பகுதியிலும் ஏற்பட்ட ஆழமான காயத்தினால் பெருங்கட்டுப் போடப்பட்டு வலி மிகுதியால் தலையைக் கூட அசைக்க இயலாமல் காளனின் கழுத்துப் பகுதியில் நெறி ஏற்பட்டிருந்தது. கழுத்தை அசைக்க இயலாமல் கண்களைச் சுழற்றித் தேடியவனின் பார்வையில் வில்லவன் அகப்படாததால் ''வில்லவா, எனது முன்னால் வா!'' என ஆணையிட்டான் காளன்.

முதலில் காளனின் ஆணையைச் செவி சாய்க்க மறுத்தவன் அவன் மீண்டும் அழைக்கவே அவன் முன் சென்று நின்றான் வில்லவன்.

காளன் வில்லவனிடம், “வில்லவா! செங்குவீரன் நஞ்சு தடவப்பட்ட அம்பினால் தாக்கப்பட்டதாகக் கூறினாயே! அவனது நிலை இப்போது எப்படியுள்ளது?” என வினவினான்.

காளன் கேட்டதைக் கேட்டு சிரித்த வில்லவன், “கானகத்தில் இறக்கும் தருவாயில் விழுந்து கிடக்கும் பெரும் பலம் கொண்ட யானையைப் பார்த்து நரி பரிதாபப்பட்டதாம். அப்படித்தான் உள்ளது உனது பரிதாபமும். யானை இறந்த பின் அதனை முதலில் உண்ணப் போவது நரி தான். அதே போலச் செங்குவீரன் இறந்துவிட்டால் முதலில் மகிழப் போகிறவன் நீயாகத் தான் இருப்பாய். அப்படியிருக்கச் செங்குவீரன் மீது நீ கொண்டுள்ள அக்கறை என்னை வியப்படையச் செய்கிறது நண்பனே!” என ஏளனத்துடன் பதிலளித்தான் வில்லவன்.

“ஏளனப் பேச்சு இருக்கட்டும் வில்லவா! முதலில் கேட்ட கேள்விக்குப் பதில் கூறு” என ஆணையிட்டான் காளன்.

“யாருக்கும் தெரியாமல் நீ தீட்டிய சதித்திட்டம் வெற்றியடைந்து விட்டதா இல்லை தோல்வியைத் தழுவியதா என அறிந்துகொள்வதில் அவ்வளவு ஆவலா?” எனத் திருப்பிக் கேட்டான் வில்லவன்.

“வில்லவா, உனது நண்பனை நீ புரிந்துகொண்டது அவ்வளவு தானா? ஏற்கெனவே வலியால் துடித்துக்கொண்டிருக்கும் என்னை வார்த்தைகளால் கொல்லாதே!”

“நம்பிக்கையெல்லாம் இருக்கட்டும். அதைப்பற்றி நாம் பிறகு பேசிக்கொள்வோம். கணிகையர் விடுதியில் மறைந்திருந்தபடி எய்யப்பட்ட அம்பு செங்குவீரனைத் தாக்கி அவன் இந்நேரம் மடிந்திருக்க வேண்டியவன். ஆனால் எய்யப்பட்டதைக் கண்ட விறலியொருத்தி அம்பு செங்குவீரனைத் தாக்குமுன் தனது உடலில் வாங்கிக் கொண்டாள். அவளது நிலைதான் கவலைக்கிடமாக உள்ளது.”

வில்லவன் கூறியதைக்கேட்ட காளன், ‘‘செங்குவீரன் மாபெரும் வீரன். அப்படிப்பட்ட ஒருவனை மறைந்திருந்து அதுவும் நஞ்சு தடவி அம்பினை எய்யும் இழிந்த செயலைச் செய்தவனைக் கண்டால் நானே எனது வாளால் வெட்டி வீழ்த்திவிடுவேன்’’ எனக் கோபம் கொண்டான் காளன்.

காளன் கூறியதைக் கேட்ட வில்லவன் அவனை நம்பலாமா? அல்லது வேண்டாமா? எனச் சிந்தித்துக் கொண்டிருந்த சமயத்தில் அவர்களது அறைக்கு அவர்களின் குழுவைச் சேர்ந்த மற்றொரு கள்வன் உள்ளே நுழைந்தான். உள் நுழைந்தவன் காளனிடம் ‘‘தலைவரே, தங்களிடம் இரகசியமாக ஒரு முக்கியப் பணி குறித்துப் பேச வேண்டியுள்ளது. அனுமதி கிடைக்குமா?’’ எனப் பணிந்தான்.

‘‘என்ன இரகசியம்?’’ என வினவினான் காளன்.

‘‘அது மிகவும் இரகசியமானது. அதைத் தங்களிடம் மட்டும் தான் கூற இயலும்.’’

‘‘அவ்வளவு இரகசியமா?’’

‘‘ஆமாம் தலைவரே!’’

‘‘யாரிடமிருந்து?’’

‘‘வைதீகர் பாகவதரிடமிருந்து.’’

‘‘எனது அன்பு நண்பன் அக்னிபுத்திரனின் தந்தையிடமிருந்தா?’’

‘‘ஆமாம் தலைவரே!’’

‘‘அனைவரும் சற்றுநேரம் வெளியேறுங்கள். நான் அழைக்காமல் யாரும் உள் நுழையவும் வேண்டாம். உள்ளே யாரையும் அனுமதிக்கவும் வேண்டாம்’’ எனக் கட்டளையிட மருத்துவ அறையிலிருந்து வில்லவன் உட்பட அனைவரும் வெளியேறினர்.

வில்லவன் வெளியே செல்வதைக் கண்ட காளன், ‘‘வில்லவா நீ இங்கேயே இரு. நீ செல்லத் தேவையில்லை!’’ என வில்லவனுக்குக் கட்டளையிட அவன் அறையிலேயே நின்றுவிட்டான்.

“ஏதோ இரகசியமாகக் கூற வேண்டும் என்றாயே! விரைந்து கூறு!” எனக் காளன் புதியவனிடம் கட்டளையிட அவன் அறையில் இருந்த வில்லவனை ஏற இறங்கப் பார்த்தபடியே ஏதும் பேசாமல் இருந்ததைக் கண்ட காளன் “அவன் நம்மவன் தான். அவன் இருப்பதைப் பற்றி நீ ஏதும் கவலை கொள்ள வேண்டாம்” என்றான்.

புதியவன் சிறிது நேர யோசனைக்குப் பிறகு காளனிடம், “தங்களது காயம் குணமடைந்த பின் தாங்கள் விரைந்து சோழச் சக்கரவர்த்தியைச் சந்திக்கச் சொல்லி வைதீகர் கூறினார்” என்றான்.

“சோழச் சக்கரவர்த்தி இளஞ்சேட்சென்னி தான் மறைந்துவிட்டாரே! அவரை எப்படிச் சந்திக்க இயலும்?”

“இப்போது தேசத்திற்குச் சக்கரவர்த்தி இளஞ்சேட்சென்னி இல்லை”

“இளவரசன் வளவன் எப்போது மாமன்னனாக முடிசூடிக்கொண்டான்?”

“வைதீகர் பாகவதர் சோழச் சக்கரவர்த்தி எனக் குறிப்பிட்டது இளஞ்சேட்சென்னியையோ அல்லது இளவலையோ அல்ல”

“அப்புறம் யாரை?”

“மலை நாட்டு மன்னரை!”

“மலை நாட்டு மன்னரா?” அதிர்ச்சியுடன் கேட்டான் காளன்.

“ஆமாம் தலைவரே! மலை நாட்டு மன்னர் இருங்கோவேள் தான் தற்பொழுது சோழ தேசத்தின் சக்கரவர்த்தி”

வந்திருப்பவன் இருங்கோவேளின் கைப்பாவை தான் என்பதைப் புரிந்துகொண்ட வில்லவன் தான் புனிதமான புத்த விகாரில் நிற்கிறோம் என்பதையும் மறந்து தனது கையை வாளருகே கொண்டு சென்றான்.

வில்லவனின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட காளன் வந்திருப்பவனிடமிருந்து முழுமையான தகவலைப் பெற்றுக்கொள்ள விரும்பி பார்வையாலே வில்லவனது செயலைத் தடுத்துவிட்டான்.

புதியவன் காளனிடம், "மலை நாட்டு மன்னர் இருங்கோவேள் இன்று காலை தான் சோழச் சக்கரவர்த்தியாக முடி சூட்டிக் கொண்டார்" என்றான்.

தனது குல எதிரி இருங்கோவேள் சோழச் சக்கரவர்த்தியாக முடி சூட்டிக் கொண்டான் என்பதையறிந்து வந்த கோபம் அனைத்தையும் அடக்கிக்கொண்டு "சரி இருக்கட்டும். அவரை ஏன் நான் சந்திக்க வேண்டுமாம்?" என வினவினான்.

"அது பற்றி எனக்குத் தெரியாது தலைவரே. வைதீகர் உங்களைச் சோழச் சக்கரவர்த்தியைச் சந்திக்கச் சொல்லச் சொல்லி என்னை உங்களிடம் அனுப்பி வைத்தார்"

"சரி. உடல் குணமடைந்ததும் உறைந்தை சென்று சந்திக்கிறேன் என வைதீகரிடம் கூறு!"

"உறைந்தையில் தாங்கள் எங்குத் தடுக்கப்பட்டாலும் இந்தக் முத்திரை மோதிரத்தைக் காட்டுங்கள். பிறகு உங்களுக்குத் தடை இருக்காது" எனக் கூறியபடியே இடுப்பில் மறைத்து பாதுகாப்பாக வைத்திருந்த முத்திரை மோதிரத்தை எடுத்துக் காளனிடம் வழங்கினான்.

முத்திரை மோதிரத்தை வாங்கி ஆச்சர்யத்தோடு பார்த்துக்கொண்டிருந்த காளனிடம் "மேலும் தாங்கள் சக்கரவர்த்தியை சந்திக்கும் போது உங்களது வலது கையை மடக்கி மார்பில் வைத்து தலையை முன்புறமாகப் பணிந்து 'புஷ்யமுத்திரன்' எனக் கூறுங்கள். சோழச் சக்கரவர்த்தித் தங்களை அடையாளம் கண்டு கொள்வார். பிறகு வேண்டிய கட்டளைகளை அவர் உங்களுக்குப் பிறப்பிப்பார்" எனக் கூறிவிட்டு விடைபெற்றுக் கிளம்பினான் வந்திருந்த புதியவன்.

"சோழ உப படைத்தலைவர் செங்குவீரன் கணிகையர் விடுதியில் நஞ்சு தடவப்பட்ட அம்பினால் தாக்கப்பட்டு இறந்துவிட்டதாகக் கூறுகிறார்களே! உண்மைதானா?" எனச் சென்றவனை நிறுத்தி மகிழ்வது போலச் சிரிப்பை முகத்தில் வரவழைத்துக் கொண்டு கேட்டான் வில்லவன்.

வில்லவன் கூறியதைக் கேட்டவன், "என்னே! செங்குவீரன் மடிந்துவிட்டானா? இதைக்கேட்டால் வைதீகர் பெருமகிழ்ச்சி அடைவார். நான்

விரைந்து சென்று இந்நற்செய்தியை அவரிடம் தெரிவிக்க வேண்டும்.''

குழப்பத்துடன் காளன் ''அப்படியானால்.....'' என இழுத்தான்.

''ஆமாம் தலைவரே. தங்களது அனுமானம் சரியானது தான். வைதீகர் பாகவதர் தான் செங்குவீரனைக் கொல்ல ஏற்பாடு செய்திருந்தார்'' என மகிழ்ச்சியுடன் தெரிவித்துவிட்டு அங்கிருந்து கிளம்பினான்.

அவன் வெளியேறியபின் வெளியே நின்ற தனது நண்பர்களை அழைத்த வில்லவன் ''வந்துவிட்டுச் செல்லும் துரோகியை பௌத்த விகார் தாண்டியதும் தீர்த்துக்கட்டி விடுங்கள்'' என ஆணையிட்டான்.

''ஆனால் நமது கள்வர் குழுவினுள் அவனும் ஒருவனாயிற்றே!'' என்றான் ஒருவன்.

''ஆனால் அவன் நம்பிக்கைத் துரோகி அவனை உயிரோடு இனியும் விட்டுவைக்கக் கூடாது. விட்டு வைத்தால் ஆபத்துதான். அவனது கதையை முடித்துவிடுங்கள்'' எனக் கட்டளையிட அவர்கள் விரைந்து சென்றனர்.

படுக்கையிலிருந்தபடியே காளன், ''நண்பா வீணாக என் மீது சந்தேகம் கொண்டாயே! இப்போது சதி செய்தவர்கள் யார் என்று அறிந்துகொண்டாயா?'' எனக் கேட்டான்.

''எங்களுக்குத் தெரியாமல் சதி செய்தவர் வைதீகர் என்று அறிந்துகொண்டோம். ஆனால் உமக்கும் வைதீகருக்கும் இரகசிய உடன்பாடு இருக்காது என்பதற்கு என்ன நிச்சயம் இருக்கிறது?'' எனப் பதிலுக்குக் கேட்டான் வில்லவன்.

''நண்பா வில்லவா! என்னை நம்பு. நானும் உன்னைப் போலத் தான் ஏமாற்றப் பட்டுள்ளேன் என்பதைப் புரிந்து கொள்.''

''என்னைப் போல ஏமாற்றப் பட்டுள்ளாயா?''

''ஆமா ம்''

''அப்படியானால் இதற்கெல்லாம் யார் காரணமெனச் சிந்தித்தாயா?''

“அக்னிபுத்திரன்” என அருவருப்போடும் கோபத்தோடும் அந்தப் பெயரையே உச்சரிக்க விருப்பமில்லாதவனாய்க் கூறினான் காளன்.

“இப்பொழுதாவது உண்மையைப் புரிந்துகொண்டாயே நண்பா. மகிழ்ச்சி! கூடா நட்பு கேடாய் முடியும் என்று எத்தனை முறை நான் சொல்லியிருப்பேன். ஒருமுறையேனும் நீ செவி மடுத்துக் கேட்டதுண்டா? அதன் விளைவை இனி நாம் அனுபவிக்கப் போகிறோம்!”

“வில்லவா, உன்னைப் போலத்தான் அக்னிபுத்திரனையும் உயிருக்கு உயிரான நண்பனாகப் பழகினேன். அவன் இப்படி முதுகில் குத்துவான் என்று கனவிலும் நினைத்துப் பார்த்திருக்கவில்லை!” எனக் கலங்கினான் காளன்.

“இப்பொழுது, மனம் வருந்தி எந்தப் பயனும் ஏற்படுவதற்கில்லை.”

“நமக்குத் தெரியாமல் அவர்கள் செய்தது இது மட்டும் தானா அல்லது இன்னும் என்னவெல்லாம் செய்திருப்பார்கள் வில்லவா?”

“எதிர்காலத்தில் நிச்சயம் அனைத்தையும் அறிந்துவிடுவோம்” என்றான் வில்லவன்.

தனது நண்பன் அக்னிபுத்திரனால் ஏமாற்றப்பட்டு வசமாகச் சிக்கிக்கொண்டதை எண்ணிய காளன் பெரும் ஆத்திரத்தோடு பற்களைக் கடித்தபடி, “அவன் மட்டும் எனது கண்களில் தற்போது அகப்பட்டால், அவனை.....!”

“கைகளில் கிடைத்தால் என்ன செய்வதாய் உத்தேசம்!”

“எனது வாளாலேயே அவனை வெட்டி வீழ்த்திவிடுவேன்.”

“அதற்கு அவசியமில்லை”

“அவசியமில்லையா!”

“ஆம்!”

“ஏன்?”

“நேற்றே செங்குவீரன் அந்தச் செயலை செய்துவிட்டான். அக்னிபுத்திரன் நேற்றே சம்பாபதி வனத்தினுள் மடிந்துவிட்டான்”

“நீ யாரிடமிருந்து அறிந்துகொண்டாய் வில்லவா? இதுவும் பொய்யாகப் பரப்பப்பட்டதாக இருக்கப்போகிறது.”

“நேற்று சண்டை நடந்த இடத்தைக் காலையில் காவல் வீரர்கள் செல்லுமுன் நான் சென்று பார்த்து விட்டேன், அங்கே அக்னிபுத்திரனின் உடலை நான் எனது கண்களால் கண்டேன்.”

“நல்ல செய்தியைக் கூறியுள்ளாய் வில்லவா! நம்மை வஞ்சித்து ஏமாற்றியதற்கான தண்டனையைச் செங்குவீரனே அளித்துவிட்டான்” எனச் சற்று நிம்மதியடைந்தவன் மீண்டும் ஆத்திரத்துடன் “அக்னிபுத்திரனுடன் சேர்ந்து நம்மை ஏமாற்றிய வைதீகருக்கும் தகுந்த தண்டனையை நாம் நிச்சயம் அளிக்க வேண்டும்” எனக் கூற வில்லவனும் அதை ஆமோதிக்கும் வகையில் “நிச்சயமாக நண்பா. நீ விரைந்து குணமடை. மற்றதை நேரம் கிடைக்கும் போது பார்த்துக்கொள்வோம்.” என அவனது தலையைக் கோதி ஆறுதல் கூறினான்.

கோபம் மறந்து இருவரும் நட்புடன் பேசிக்கொண்டிருந்த போது வில்லவனின் நண்பன் ஒருவன், “ஆபத்து! ஆபத்து!” என்ற படியே அவர்களின் அறையினுள் நுழைந்தான்.

# 21. அண ்ணனின் ஆணை

ஆபத்து! ஆபத்து! என்றபடியே அறையினுள் வேகமாக நுழைந்த தன் நண்பனைக் கண்ட வில்லவன், “என்ன ஆபத்து? ஏன் இப்படி அரண்டவன் போல ஓடி வருகிறாய்?” என வினவினான்.

அவனது வியர்த்த பதற்றமடைந்த முகத்தினைக் கண்ட காளன், “இவனது முகத்தைக் கண்டால் அப்படித்தான் இருக்கிறது வில்லவா!” என்றான்.

வந்தவன் மூச்சு வாங்கியபடியே, “தலைவரே! யவன உப தளபதியான டாள்தொபியாஸ் தங்களது உருவப் படத்தைத் திரைச்சீலையில் ஓவியமாகத் தீட்டி புகார் முழுக்கச் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருக்கிறான். தாங்கள் இனியும் புகாரில் இருப்பது பெரும் ஆபத்து. விரைவில் தலைமறைவு ஆகிவிடுங்கள்!” என எச்சரித்தான்.

ஆச்சர்யமடைந்த காளன், “யவனத் தளபதியின் கைகளில் எனது உருவப்படம் எப்படிக் கிடைத்திருக்கும்! யார் வரைந்திருப்பார்கள்?” என வினவினான்.

“யார் வரைந்தார்கள்! எப்படிக் கிடைத்தது என எந்தத் தகவலும் கிடைக்கவில்லை தலைவரே. வில்லவனின் கட்டளைப்படி தங்களுக்கு மருந்து, உணவுப் பொருள்கள் மற்றும் யவன மது வாங்க நாளங்காடியில் உள்ள பண்டக சாலைக்குச் சென்று வேண்டியவற்றை வாங்கிக்கொண்டு திரும்பிய சமயத்தில் பூத சதுக்கத்தில் யவனத் தளபதியைச் சுற்றி சிலர் கூட்டமாக நிற்கவே நானும் அங்குச் சென்று பார்த்தேன். அப்போது யவனத் தளபதி தங்களது ஓவியம் தீட்டப்பட்ட திரைச்சீலையை மற்றவர்களிடம் காண்பித்து உங்களை யாரேனும் எங்காவது கண்டதுண்டா? என உங்களைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தான். அந்த ஓவியத்தைக் கண்ட போது நானே

அதிர்ந்துவிட்டேன். உங்களது தோள் பகுதியில் குறுவாள் தைக்கப்பட்டதைப் போன்று தத்ரூபமாக உங்களைத் திரைச்சீலையில் ஓவியமாகத் தீட்டியுள்ளனர். ஆதலால் இங்கிருந்து எவ்வளவு விரைவாகத் தப்பிக்கிறீர்களோ அவ்வளவு விரைவில் உங்களுக்குப் பாதுகாப்பு!'' எனப் பதறினான்.

வில்லவன், ''நேற்றிரவு நாம் எதிர்கொண்ட பெண்மணிகளுள் யாரோ ஒருவர் தான் அதனை வரைந்திருப்பார்கள் என எண்ணுகிறேன் நண்பா'' என்றான்.

வில்லவனிடம் காளன், ''வில்லவா! நேற்று நாம் தாக்கிய இருவருள் ஒருத்தி பெருவணிகன் வேளாதனின் மகள். மற்றொருத்தி யார் என விசாரித்தீர்களா? அவளைப் போன்ற வீரமும், திமிரும் கொண்ட பெண்ணை நான் இதுவரை கண்டதே இல்லை!'' எனத் தனது காயத்தைத் தடவி பார்த்துக்கொண்டே வினவினான்.

''இல்லை நண்பா. அந்தப் பெண் யாரென்று என்னால் கண்டறிய இயலவில்லை'' என்றான் வில்லவன்.

குறுக்கிட்ட வில்லவனின் நண்பன், ''தலைவரே அவளது பெயர் வானவல்லி'' என்றான்.

''நேற்றிரவு நான் கேட்ட போதே திமிருடன் 'வானவல்லி' என்று பதிலளித்தாள்! பெயரைத் தவிர வேறு தகவல் ஏதேனும் தெரிந்தால் கூறு!'' எனக் கட்டளையிட்டான் காளன்.

''தலைவரே! அவளது தந்தை........'' என்றவாறு தயங்கினான்.

அவனது தயக்கத்தைக் கண்ட வில்லவன், ''தயங்காமல் கூறு!'' எனக் கட்டளையிட அவன் ''முன்னாள் சோழச் சேனாதிபதி வளவனாரின் மகள்!'' என்றான்.

பெரும் அதிர்ச்சியுடன் படுக்கையிலிருந்து எழுந்துவிட்ட காளன், ''பெருமறவர் மகேந்திர வளவனாரின் மகளா!'' என்றான்.

''ஆமாம் தலைவரே! மறைந்துபோன உப தலைவர் திவ்யனின் சகோதரியும், வளவனாரின் மகளும் தான் வானவல்லி'' எனப் பதிலளித்தான்.

அதிர்ச்சியடைந்த வில்லவன் தனது நண்பன் காளனிடன், ‘‘நண்பா, பெரும் பிழை செய்துவிட்டோம். நேற்றைய தாக்குதலுக்குத் திட்டம் தீட்டியது நீதானே?’’ என வினவ காளன், ‘‘நானில்லை வில்லவா. நேற்று களவு செல்ல எனக்கு விருப்பமே இல்லை. நமது முயற்சி இந்திரத் திருவிழாவை பாழாக்கும் என்பதால் கடைசி வரை நான் ஒப்புக் கொள்ளவே இல்லை’’ என்றான்.

‘‘நீயில்லை என்றால் பின் வேறு யார் திட்டம் தீட்டியது?’’

‘‘நேற்றைய தாக்குதலுக்குத் திட்டம் தீட்டியது அக்னிபுத்திரன். அவன் தான் என்னை இந்திரத் திருவிழாவிற்கு முன் கடைசிக் களவாக இருக்கட்டும் எனக் கூறி வற்புறுத்த நான் தொடர்ந்து மறுத்து வந்தேன். பின்னர் அவனது தந்தையும் வற்புறுத்த வேறு வழியின்றி ஒப்புக்கொண்டேன் வில்லவா. பின் நேற்று காலையில் உன்னிடம் கூற நீயும் ஒப்புக்கொண்டாய். பின்னர் தான் மாலையில் அனைவருக்கும் தெரிவித்துப் புறப்பட்டோம்!’’

‘‘நண்பா, வளவனாரின் மகள் நேற்று வரும் நேரத்தை எப்படியோ அறிந்துகொண்ட அக்னிபுத்திரன் தான் நம்மை வைத்து அவர்களைத் தாக்க வைத்துள்ளான். நேற்றிரவு முதல் சாமத்தில் கடந்த பல புரவித் தேர்களையும் வழிப்போக்கர்களையும் மறிக்க வேண்டாம். இவர்களை விட்டுவிடுவோம். நமது இலக்கு இதுவல்ல என்று கூறி கடும் பாதுகாப்புடன் வந்த புரவித்தேரை அவன் தாக்கலாம் எனக் கூறியபோதே நாம் சிந்தித்திருக்க வேண்டும் நண்பனே’’

‘‘ஆமாம் வில்லவா. அவர்கள் தீட்டிய திட்டத்தில் நாம் வசமாகச் சிக்கிக் கொண்டோம். வைதீகர் பாகவதன் இருங்கோவேளை சந்திக்கச் சொல்வதிலிருந்து இருங்கோவேளுக்கும் அவருக்கும் நிச்சயம் அந்தரங்கத் தொடர்பும், இரகசியக் கூட்டும் இருக்க வேண்டும். பெரும் பிழை செய்துவிட்டோம். அவர்களது சதிக்கு ஆதரவாக நம்மை நன்கு பயன்படுத்திக் கொண்டனர் வில்லவா!’’

தனது நண்பர்களுள் ஒருவனான அக்னிபுத்திரனால் இருவரும் வசமாக வஞ்சிக்கப்பட்டு ஏமாற்றப்பட்டதை ஏற்றுக்கொள்ள இயலாததால் இருவருக்கும் ஆத்திரமும், கோபமும் பெருகிக் கொண்டிருந்தது. மாறிவிட்ட அவர்களது முகப் பாவனைகளால் புதிதாக வந்தவன் அறிந்துகொண்டதால் சிறிது நேரம் ஏதும் பேசாமல் அமைதியாகவே நின்றான். பின் கோபத்தில்

உள்ள காளன் முன் பேச தைரியத்தை வரவழைத்துக்கொண்டு ‘‘தலைவரே!’’ எனப் பணிய ‘‘என்ன?’’ என வினவினான் காளன்.

‘‘தலைவரே சம்பாபதி வனம், பொன்னி நதி, துறைமுகம் என எந்தவழிகளிலும் நீங்கள் தப்பிக்காமல் இருக்கப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. எப்படியாவது தப்பிவிடுங்கள்!’’

காளனும், வில்லவனும் அமைதியாக ஏதும் பேசாமல் இருந்ததைக் கண்டவன், ‘‘தலைவரே! மற்றொரு செய்தி’’ என ஏதோ கூற அடிபோட்டான்.

‘‘கூறு!’’

‘‘கேட்டால் பெரிதும் கோபப்படுவீர்கள். ஆதலால் தான் அச்சப்படுகிறேன்!’’

‘‘உன் மீது கோபப்பட்டு என்ன செய்யப் போகிறேன். சொல்ல வந்ததைத் தயங்காமல் கூறு’’ எனக் கட்டளையிட்டான்.

‘‘செங்குவீரனைக் கணிகையர் மாளிகையில் கொல்ல முயன்று இறந்தவர்கள் இருவரும் நமது குழுவைச் சேர்ந்தவர்கள். அக்னிபுத்திரனின் தந்தையின் உத்தரவின்பேரில் தான் அவர்கள் செங்குவீரனைக் கொலை செய்ய முயன்று மாண்டுவிட்டார்கள். தங்களது நலனில் அக்கறை கொண்டதனால் கூறுகிறேன் தலைவரே. விரைந்து தப்பித்துவிடுங்கள். உங்களை ஆபத்து சூழ்ந்துவிட்டது. உங்களது உடல் ஆரோக்கியமாக இருந்திருந்தால் உங்களைப் பற்றிய கவலை இருக்காது. ஆனால் தற்போதைய சூழலில் தாங்கள் பெரும் கவனமாக இருக்க வேண்டும்! யாரையும் நம்பாதீர்கள்’’ என அடக்கமாகக் கூறிவிட்டு அங்கிருந்து விடைபெற்றுக் கிளம்பினான்.

அவன் செல்லும் வரை அமைதியாக இருந்த வில்லவன், பிறகு பெரும் கோபத்துடன் ‘‘நம்பிக்கைத் துரோகம்! ஏமாற்றம்! வஞ்சகம்!’’ என்றான்.

‘‘ஆமாம் வில்லவா. நம்பிக்கைத் துரோகம் தான். மன்னிக்க முடியாதது. நினைத்தாலே என் உடலெல்லாம் துடிக்கிறது’’ என இருவரும் பேசிக்கொண்டிருந்த போது வெளியே சென்றவன் மீண்டும் ‘‘ஆபத்து நெருங்கிவிட்டது தலைவரே! வெளியே பல வீரர்கள் சூழ்ந்துவிட்டார்கள்.

அவர்கள் உங்களைக் கண்டறிந்துவிட்டார்கள் போலிருக்கிறது. விரைந்து வெளியேறிவிடுங்கள்'' என அவசரமாகக் கூறினான்.

பொறுமையுடன் ''நீ ஓடி வந்ததை யாராவது கவனித்தார்களா!'' எனக் கேட்டான் வில்லவன்.

சிறிது யோசித்தவன் ''நான் வெளியே சென்றதை ஒரு வீரன் கவனித்துவிட்டான். அதன் பிறகே நான் உங்களை எச்சரிக்க ஓடிவந்தேன்'' எனப் புத்திசாலித்தனமாகப் பேசினான்.

அவன் பேசியதைக்கேட்ட வில்லவன், ''அடே முட்டாள்! நீயே அனைத்தையும் காட்டிக்கொடுத்து விட்டாயே! இங்கே நாங்களிருப்பது யாருக்கும் தெரியாது. வெளியே வீரர்கள் குழுமியிருப்பது அவர்களது தலைவர் செங்குவீரனைக் காண வந்தவர்கள். நன்மை புரிவதாய் எண்ணி நீயே காட்டிக்கொடுத்து விட்டாயே! முட்டாள்'' என ஏகமாகத் திட்டினான்.

வில்லவன் தன்னை ஏன் இப்படிப் பேசுகிறான் என்பதன் காரணத்தை அறியாமல் குழம்பியவனுக்குப் பின்னரே காரணம் தெரிந்தது.

திடீரென்று புகார் காவல் வீரர்கள் சிலர் அறையினுள் நுழைந்த பின்னரே தனது முட்டாள் தனமான காரியத்தின் விளைவை உணர்ந்தான். வீரர்களைக் கண்ட பின் அவசரப்பட்டு ஓடி வந்தது எவ்வளவு பெரும் பிழை என்பதை அப்போது தான் அறிந்தான். அச்சத்தில் ஓடி வந்ததைக் கண்டவர்கள் தன்னைப் பின் தொடர்ந்து தலைவர் இருப்பிடத்தைக் கண்டறிந்துவிட்டார்கள் என்பதையும் வில்லவன் தன்னைத் திட்டியதன் காரணத்தையும் வீரர்கள் உள்ளே நுழைந்த பிறகே உணர்ந்தான் அவன்.

அறையின் வெளியே நின்றிருந்த கள்வர்கள் வீரர்கள் வந்ததைக் கண்டவுடன் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிவிட்டனர்.

உள்ளே நுழைந்த காவல் வீரர்கள் வாள்களை உருவியபடியே ''யாரும் தப்பிக்க முயலாதீர்கள்!'' என்றபடியே அறையிலிருந்த மூவரையும் சூழ்ந்துவிட்டனர்.

வில்லவன் தப்பிக்க ஏதேனும் உபாயம் கிடைக்குமா எனச் சிந்தித்தபடி அவர்களை எதிர்த்து நின்றான். காவல் வீரர்களின் எண்ணிக்கை

அதிகமாயிருப்பதால் எதிர்த்துத் தாக்குவதில் எந்தப் பயனும் இல்லை. காலம் கடந்துவிட்டதை உணர்ந்தவன் எதிர்த்துச் சண்டையிடாமல் வாளை உருவியபடி முன் எச்சரிக்கையுடன் நின்றுகொண்டிருந்தான்.

வலியின் தாக்கம் அதிகமாக இருந்ததனால் எதுவும் செய்ய இயலாமல் படுக்கையில் படுத்திருந்தபடியே காளனால் வேடிக்கை மட்டுமே பார்க்க முடிந்தது. காளன் மட்டும் ஆரோக்கியமாக இருந்திருந்தால் வந்திருந்தவர்களின் வாள்கள் இந்நேரம் காற்றில் பறந்திருக்கும்.

திடமான சரீரத்தைக் கொண்ட டாள்தொபியாஸ் கம்பீரமான நடையுடன் அறையினுள் நுழைந்தான். டாள்தொபியாஸ் வில்லவனிடம், “உங்களது வாள்களை உறையினுள் போடுங்கள். இல்லையேல் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடுவீர்கள்” என வாளுடன் நின்ற வில்லவனை அதிகாரத்துடன் எச்சரித்தான்.

தான் எச்சரித்தும் வாளை உறையில் போடாமல் கையிலேயே வைத்திருந்த வில்லவனிடம் டாள்தொபியாஸ், “எமது தலைவர் காளனை கைது மட்டுமே செய்யச் சொல்லி கட்டளையிட்டிருக்கிறார். காளனது உயிருக்கு எந்த ஆபத்தும் நேரக்கூடாதெனவும் ஆணையிட்டுள்ளார். அவருக்கு நானும் காளனது உயிருக்கோ அல்லது உடலுக்கோ எந்தப் பாதிப்பும் நேராமல் கைது செய்கிறேன் என வாக்களித்துள்ளேன். ஆதலால் தலைவருக்கு நான் கொடுத்துள்ள வாக்கினைக் காப்பாற்ற எமக்கு ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என நம்புகிறேன்!” என்றபடியே வில்லவனது கண்களைத் தனது கண்களால் அதிகாரத்துடன் ஊடுருவி நோக்கினான்.

டாள்தொபியாஸ் கூறியதைக் கேட்டபின் தனது வாளை கீழிறக்கிய வில்லவன், “எங்களைத் தாங்கள் கைது செய்ய வந்துள்ளமைக்கான காரணத்தை நான் அறிந்துகொள்ளலாமா?” என வினவினான்.

“அதற்கான காரணத்தை நீங்கள் இருவரும் நான் கூறித்தான் அறிய வேண்டுமா? நீங்கள் அறிந்தது தானே!”

“கைது செய்வதற்கு முன் அதற்கான காரணத்தைத் தெரிவிக்க வேண்டியது உமது கடமை தளபதியாரே!”

“ஆமாம். ஆமாம். நிச்சயமாகத் தெரிவிக்கிறேன்”

“கூறுங்கள்”

“முக்கியக் குற்றம் வழிப்பறி!”

“வழிப்பறியா?”

“ஆமாம். வழிப்பறி மட்டுமல்ல. நேற்று சில வீரர்களைக் கொன்றுள்ள கொலைக் குற்றம்.”

“தளபதியாரே! வழிப்பறி எனக் கூறாதீர்கள்!”

“வேறு எப்படிக் குறிப்பிடுவதாம்?” இகழ்ச்சியுடன் கேட்டான் டாள்தொபியாஸ்.

“களவு எனக் குறிப்பிடுங்கள்!”

“களவா?”

“ஆமாம் தளபதியாரே!”

“களவு, வழிப்பறி இரண்டிற்கும் இடையில் பெரிய வேற்றுமை இருப்பதாக எனக்குத் தெரியவில்லையே!”

“இரண்டு சொற்களுக்கும் வேறுபாடு குறைவு தான். ஆனால் இரண்டிற்குமான பொருள் வேறு”

“அப்படியா?”

“ஆமாம். வழிப்பறி என்பது பெரும் குற்றம். ஆனால் களவு செய்வது தமிழத்தில் குற்றம் கிடையாது. களவும், காத்தலும் இங்கு முக்கியத் தொழில். ஆறலை மற்றும் எயினர் பிரிவு மக்களின் குலத் தொழிலே களவு தான் என்பதைத் தாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். களவு செய்பவர்களுக்கெனத் தனிச் சட்டமே உள்ளது. அதனைப் பேரரசும் ஏற்றுக்கொண்டது. அதன்படி களவு மேற்கொள்ளும்போது கையும் களவுமாகப் பிடித்தால் மட்டுமே எங்களைத் தண்டிக்க இயலும். இப்போது கைது செய்ய உங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை” எனச் சாதுர்யத்துடனும் புத்திசாலித்தனத்துடனும் பேசினான் வில்லவன்.

பெரும் அறிவுக் கூர்மையுடனும், அதே சமயம் சாதுர்யத்துடன் பேசும் வில்லவனைக் கண்ட டாள்தொபியாஸ், இந்தமுறை இவர்களைத் தப்பிக்க விட்டால் இனி கைது செய்யவே இயலாது என்பதைப் புரிந்துகொண்டவன் "உங்களது வாதத்தையும் நியாயத்தையும் கூறும் இடம் இதுவல்ல. அதற்கென்று வாய்ப்பு நிச்சயம் உங்களுக்கு வழங்கப்படும். அப்போது நீங்கள் கூறலாம்!" என்றவன் தனது வீரர்களை நோக்கி "இவர்கள் மூவரையும் கைது செய்து சிறையில் அடையுங்கள்!" என உத்தரவிட்டான்.

டாள்தொபியாசின் இந்த உத்தரவினைக் கேட்ட வில்லவன் தனது வாளினை உருவி மீண்டும் உயர்த்த இதுவரை பொறுமைகாத்த டாள்தொபியாசும் தனது வாளினை உருவ அவ்விடத்தில் பெரும் பிரளயமே ஏற்படும் நிலையில் ஒரு முதிர்ந்த பவுத்த தேரர் குறுக்கிட்டு இருவரையும் அமைதிபெறச் செய்தார்.

பவுத்த தேரரைக் கண்டவுடன் அவரைப் பணிவுடன் வழங்கிய டாள்தொபியாஸ், "தேரரே! இங்குச் சண்டையிடுவது எமது நோக்கம் அல்ல. இவர்களைக் கைது செய்யச் சொல்லி எமது தலைவர் கட்டளையிட்டுள்ளார். அவரது கட்டளையை நிறைவேற்றவே இங்கு வந்திருக்கிறேன். ஒத்துழைக்க மறுக்கிறார்கள். இவர்களுக்குத் தகுந்த அறிவுரையைத் தாங்கள் தான் வழங்க வேண்டும். நான் ஏதேனும் தவறு இழைத்திருந்தால் தயைகூர்ந்து என்னை மன்னித்து விடுங்கள்" என்றான்.

பணிந்த டாள்தொபியாசிடம் பவுத்த தேரர், "உபதளபதியாரே! எம்மிடம் மருத்துவ உதவி பெறுபவரை நாங்கள் குணமடையுமுன் இடையில் அனுப்புவதில்லை. மேலும் எங்கள் விகாருக்கு இவர்கள் பல உதவிகளைச் செய்பவர்கள். இப்படிப்பட்டவர்களை மருத்துவம் பார்க்காமல் உங்களோடு அனுப்பினால் எங்களை நாடி வந்தவர்களுக்கு மருத்துவ உதவி செய்யாத பெரும் பழி எங்களைச் சேரும்!" என அவர் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த டாள்தொபியாஸ் "தேரரே! தாங்கள் கூறுவதை நான் முழுமையாக ஒப்புக்கொள்கிறேன். மருத்துவ உதவி தேவைப்படும் காளன் மட்டுமே இங்கேயே எமது வீரர்களின் காவலில் தொடர்ந்து மருத்துவம் பெறட்டும். பிறகு இவனைச் சிறையில் அடைத்துக்கொள்ளலாம். மற்ற

இருவரையும் கைது செய்து சிறைக்குக் கொண்டு செல்லுங்கள்'' என வில்லவனை நோக்கி கைகாட்டி தனது வீரர்களுக்கு ஆணையிட்டான்.

டாள்தொபியாசின் சாதுர்யமான கட்டளையைக் கேட்ட பவுத்த தேரரும் ''அப்படியே ஆகட்டும் தளபதியாரே!'' எனக் கூற வீரர்கள் வில்லவன் மற்றும் இன்னொருவனையும் கைது செய்து சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

வீரர்கள் அறைக்கு வெளியே காவலில் நிற்க அறையில் காளனும் டாள்தொபியாசும் தனித்துவிடப்பட்டனர்.

டாள்தொபியாஸ் காளனிடம், ''நீ செய்த அனைத்து குற்றங்களையும் நான் மன்னித்துவிடுவேன் கள்வனே. ஆனால் நேற்று எமது தலைவியைத் தாக்கிக் கவர முற்பட்டாயே அதனை மட்டும் மன்னிக்க இயலாது!'' என்றான்.

''உங்கள் தலைவியா?''

''ஆமாம்''

''அப்படியானால் தலைவிக்கு உரிய தலைவர் யாரென்று அறிந்துகொள்ளலாமா?''

''நிச்சயமாக! உபதலைவர் விறல்வேல்.''

''ஆதலால் தான் உமது தலைவர் என்னைக் கைது செய்ய ஆணையிட்டுள்ளாரா?''

''இல்லை''

''அப்புறம்?''

''நீ பெருங்குற்றம் புரிந்திருந்தாலும் தலைவருக்கு உன் மேல் கருணை நிறைந்திருக்கிறது. அதற்கான காரணம் தான் எனக்குப் புரியவில்லை.''

''வைதீகர் இருங்கோவேளை சந்திக்கச் சொன்னதிலிருந்து உறைந்தையிலிருந்து கைது ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்காது என்பதை

உணர்ந்த காளன் “அப்புறம் யார் என்னைக் கைது செய்யச் சொல்லி ஆணையிட்டதாம்?” என வினவினான்.

“இரும்பிடர்த்தலையர்!”

இரும்பிடர்த்தலையர் என்ற சொல்லைக்கேட்டதும் பெரும் அதிர்ச்சியடைந்த காளன் “இரும்பிடர்த்தலையரா?” என ஆச்சர்யத்துடன் வினவினான்.

“ஆமாம் அவரே தான். உன்னைக் கைது செய்வது மட்டும் அவரது நோக்கம் அல்ல. உமது இறுதி நாளும் அவரால் தீர்மானிக்கப்பட்டு விட்டது.”

“என்ன உளறுகிறீர் உப தளபதியாரே!”

“உளறவில்லை கள்வனே! சித்திரைத் திங்கள் இந்திரத் திருவிழா முடிந்த அடுத்த நாளில் உமது குற்றத்திற்கு மரணத் தண்டனையை நிறைவேற்ற ஆணை பிறப்பித்துள்ளார்” என டாள்தொபியாஸ் கூற இந்தச் செய்தியைக் கேட்டதும் திடமான கருணையே இல்லாத காளனது கண்களில் கண்ணீர் சிந்தியது.

இவனது கண்ணீருக்கான காரணத்தை அறியாது டாள்தொபியாஸ் திகைக்கையில் அவன் மேலும் அதிர்ச்சியடையுமளவிற்குக் காளன் அவனையறியாமல் சில வார்த்தைகளை உதிர்த்தான்.

காளன் கண்ணீர் விட்டபடியே “அண்ணா! இந்தக் கட்டளையை எப்படி உங்களால் கூற முடிந்தது. உங்கள் மனதை அந்த அளவிற்கா நான் நோகடித்துவிட்டேன்” எனப் புலம்பினான்.

டாள்தொபியாஸ் திகைத்தபடி, “என்ன! இரும்பிடர்த்தலையரின் தம்பியா நீ?” என வினவ காளன் துக்கத்தில் பேச இயலாமல் தலையை மட்டும் ஆட்டினான்.

“அப்படியானால் உமது பெயர்?”

“இளந்திரையன்.“

இந்தப் பெயரைக் கேட்டதும் எந்தச் சூழ்நிலையிலும் கலங்காத டாள்தொபியாஸ் கூட அந்நேரம் அதிர்ச்சியடைந்தான். “அப்பேற்பட்ட பெரும்

பண்பு நிறைந்த தமிழகத்தின் பெரும் புலவரும், சான்றோருமான இரும்பிடர்த்தலையருக்கு இப்படிப்பட்ட தம்பியா?” எனத் தனக்குள் எண்ணிக்கொண்டான்.

ஏற்கெனவே தனது உயிருக்கு உற்ற நண்பன் அக்னிபுத்திரனது துரோகம் மற்றும் வஞ்சகத்தினால் மனம் பாதிக்கப்பட்டவன் தன்னை அன்போடு வளர்த்த தமது தமையனே தனக்கு மரண தண்டனை விதிக்கச் செய்து ஆணையிட்டிருப்பது பெரும் ரணத்தை அளிக்கவே “அண்ணா!” எனக் கதறினான் காளன்.

# 22. அத ிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி

கள்வனான காளன் தனது பெயர் ‘இளந்திரையன்’ என்றும் தான்தான் இரும்பிடர்த்தலையரின் தம்பி எனக் கூறியதும் காளனிடம், “இளந்திரையனா?” என ஆச்சர்யத்தோடு வினவினான் டாள்தொபியாஸ்.

“ஆமாம். எமது தமையன் எனக்கு சூட்டிய பெயர் அதுதான்!”

“அப்படியெனில் காளன் என்பது?”

“எனது செயல் மற்றும் தொழில்களினால் ஏற்பட்ட காரணப்பெயர். களவுத் தொழில் புரியும்போது என்னை யார் எதிர்த்து நின்றாலும் அவர்களுக்குக் காலன் நான்தான். ஆதலினால் ‘இளந்திரையன்’ என்ற இயற்பெயர் மறைந்து காளன் என்ற காரணப் பெயரே நிலைத்துவிட்டது.”

“ஓ! உன்னை எதிர்ப்பவர்களுக்கு நீ எமனாகிவிடுவாயா?”

“ஆமாம்”

“சரி! ஆனால் நேற்றிரவு எமது தலைவர் செங்குவீரன் உங்களை விரட்டி இன்று கைதியாகவும் அடைத்துவிட்டாரே! உங்கள் புராணங்களில் கூறும் மார்க்கண்டேயனைக் காக்க எமதர்மனை பாதாள உலகத்தில் தள்ளி சிறைவைத்த சிவபெருமானைப் போன்று எமது தலைவரையும் நான் கருதலாம் அல்லவா!” எனப் பெருமையுடன் கேட்டான் டாள்தொபியாஸ்.

டாள்தொபியாஸ் தன்னை எமனுடன் ஒப்பிட்டுச் சிவபெருமானால் அடைக்கப்பட்ட எமனைப் போன்று தான் கைதியாக்கப்பட்டதைத் தான் அவன் இகழ்ந்து பேசுகிறான் என்பதைப் புரிந்துகொண்ட காளன் கடுங்கோபத்துடன், “உப தளபதியாரே! உமது தலைவனை எண்ணி நீ கர்வம் கொள்ளத்தேவையில்லை. ஒரு நாள் நிச்சயம் நான் செங்குவீரனைத் தோற்கடிப்பேன். அப்போது உனது கர்வம் எங்கே போகிறதென்று பார்க்கலாம்”

எனச் சூளுரைத்த படியே தனது வலது கையை உயர்த்தினான் காளன். அவனது வலது தோள் பட்டையின் காயம் சுரீரென்று வலிக்கவே வலியைத் தாங்கியபடி “நேற்றிரவே உனது தலைவனின் கதை சம்பாபதி வனத்திலேயே முடிந்திருக்க வேண்டியது. அந்தப் பெண் எறிந்த குறுவாளினால் செங்குவீரன் பிழைத்துவிட்டான்!” எனக் கூறியபடியே அமைதியானான்.

செங்குவீரனை நேற்றே கொன்றிருப்பேன் எனக் காளன் கூறியதைக் கேட்ட டாள்தொபியாசிற்கு கோபம் தலைக்கேறினாலும் செங்குவீரன் வானவல்லியால் காப்பாற்றப்பட்டதை எண்ணியவன் ஏதும் பேசாமல், அமைதியாய் இருந்தக் காளனை “இளந்திரையா!” என அழைத்தான்.

இளந்திரையா என டாள்தொபியாஸ் அழைத்ததும் மகிழ்ச்சியடைந்த காளன், “இன்னொருமுறை அழைக்க முடியுமா!” என வினவினான்.

மீண்டும் டாள்தொபியாஸ் “இளந்திரையா!” என அழைத்தான்.

கொற்றவை கோயிலில் பூசாரி போர்க் குறி சொல்லும்போது பயபக்தியுடனும் மகிழ்ச்சியுடனும் கேட்கும் அரசனைப் போல ‘இளந்திரையன்’ என்ற சொல்லைக் கேட்டான் காளன்.

இளந்திரையன் என்ற சொல்லைக் கேட்டதும் காளனின் முகத்தில் தோன்றிய பரவசத்தைக் கண்ட டாள்தொபியாஸ் “இளந்திரையா! உன் பெயரை நான் அழைத்ததும் உன் முகத்தில் பெரும் மகிழ்ச்சி தோன்றுகிறதே!” என வியந்தான்.

“பத்து வருடங்களுக்கு முன் எனது தமையன் தான் என்னைக் கடைசியாக ‘இளந்திரையா’ எனப் பாசமுடன் அழைத்திருந்தார். அதன் பிறகு தாங்கள் தான் என்னை இளந்திரையன் என்று அழைத்திருக்கிறீர்கள்” என்றான் மகிழ்ச்சியுடன்.

“பத்து வருடங்களா? அப்படியானால்.....”

குறுக்கிட்ட காளன், “ஆமாம் உபதளபதியாரே! உமது கணிப்புச் சரிதான். சரியாக எனது பதினான்காவது வயதில் பெரும் கருத்து வேறுபாடு காரணமாக என் தமையனைவிட்டுப் பிரிந்துவிட்டேன். பத்து வருடங்களைக் கடந்த பின்னரும் தம்பி மீது அவருக்கு எந்தவிதப் பாசமும் பரிவும் ஏற்படாத

மனிதருக்கு இப்போது தான் என் நினைவு தோன்றி மரணத் தண்டனைப் பரிசோடு உன்னை அனுப்பியுள்ளார்'' என விரக்தி கலந்த சிரிப்போடு வார்த்தைகள் ஒவ்வொன்றாக உதிர்த்தான்.

மௌனமாகச் சிந்தித்த டாள்தொபியாஸ், ''இரும்பிடர்த்தலையருக்கு ஒரே ஒரு சகோதரி மட்டும் என்றுதானே நான் கேள்விப்பட்டுள்ளேன். சோழப் பேரரசர் இளஞ்சேட்சென்னியின் பட்டத்தரசிதான் அவரது சகோதரி என அறிவேன். ஆனால், அவருக்குத் தம்பி இருந்ததாக நான் இதுவரை கேள்விப்பட்டதே இல்லையே! அதிலும் உங்கள் சகோதரருக்கும் உங்களுக்கும் உள்ள வயது வித்தியாசம் அதிகமாக அல்லவா உள்ளது!''

ஏமாற்றத்துடன் காளன், ''இப்படியொரு கள்வனை யார்தான் உடன் பிறந்தவர் என சொல்லிக்கொள்வார்கள். இரும்பிடர்த்தலையரின் மாற்றாந்தாயின் மகன் நான்.''

''அப்படியானால்....!''

''இருவருக்கும் தகப்பன் ஒருவர். ஆனால் தாய் வேறு!''

''உங்கள் இருவருக்கும் பிரச்சனையின் மூலகாரணம் இதுதானா?''

''இதுதான் பிரச்சனை எனக் கூற இயலாது உபதளபதியாரே! அண்ணன் என் மீது எந்த வித பாகுபாடும் இதுவரை காட்டியதில்லை. அவரது அதீத பாசம் என்னை எப்போதும் கட்டிப் போட்டுவிடும். எப்போது இளஞ்சேட்சென்னியின் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு அண்ணன் உறைந்தை வந்தாரோ அப்போது எங்களுக்குள் இடைவெளி விழ ஆரம்பித்தது. அப்போது அங்கிருந்து வெளியேறிய சில தீய மக்களின் நட்பினால் எனது பாதை மாறிவிட்டது'' என வருத்தத்துடன் கூறினான் காளன்.

''இனி வருந்தி என்ன பயன் ஆகப்போகிறது இளந்திரையா! காலம் கடந்துவிட்டது. உனது முடிவும் நெருங்கிவிட்டது'' எனக் கூறியபடியே அந்த அறையை விட்டு வெளியேறினான் டாள்தொபியாஸ்.

டாள்தொபியாஸ் செல்வதைக் கண்ட காளன், ''உபதளபதியாரே! சற்றுப் பொறுங்கள்'' என அழைத்தான்.

காளன் அழைப்பதைக் கேட்டுத் திரும்பிய டாள்தொபியாசிடம், “எனக்கு நீங்கள் ஒரு வாக்குக் கொடுக்க வேண்டும்” என்றான்.

“என்ன வாக்கு!” எனச் சாதாரணமாகக் கேட்டான் டாள்தொபியாஸ்.

“நான் இரும்பிடர்த்தலையரின் தமையன் எனத் தாங்கள் யாருக்கும் கூறக் கூடாது. நான் கள்வர்களின் தலைவன் காளனாகவே மடிந்து போகிறேன். ஏதோ உணர்ச்சி வேகத்தில் மனதில் அடைத்து வைத்திருந்த ரணங்களை உங்களிடம் என்னையறியாமல் உளறிவிட்டேன்.”

“சரி, உனது கோரிக்கையை நான் ஏற்றுக்கொள்கிறேன். நீதான் இரும்பிடர்த்தலையரின் தம்பி இளந்திரையன் என்று யாரிடமும் நான் கூற மாட்டேன். அதைப்பற்றி நீ கவலை கொள்ளத்தேவையில்லை. வேறு ஏதேனும்...?”

“மற்றொரு உதவி தேவை!”

“உதவியா?”

“ஆமாம் உபதளபதியாரே! எனக்கு மது வேண்டும்.”

“மதுவா!”

“ஆமாம். வலியின் ரணம் என்னைப் பாடாய் படுத்துகிறது. உடற்காயத்தின் வலியோடு என் மனக் காய வலியும் சேர்ந்து ரணமாகிக்கொண்டிருக்கிறது என் மனம். அனைத்தையும் மறக்க எனக்கு மது வேண்டும். தங்களால் மட்டுமே இதனைச் செய்ய இயலும். இயலுமா?”

“சரி இளந்திரையா! நிச்சயம் உனக்கு இந்த உதவியைச் செய்கிறேன்” எனக் கூறிவிட்டு வெளியே வந்தவன் தனது வீரர்களிடம் “காளன் தப்பிக்க இயலாவண்ணம் பாதுகாப்பு பலமாக இருக்கட்டும். அதற்காக அறையினுள் சென்று யாரும் அவனுக்கு இடையூறு அளிக்க வேண்டாம்!” எனக் கட்டளையிட்டுவிட்டு தனது இருப்பிடமான குன்றுத் துறையை நோக்கிப் புரவியில் விரைந்தான் டாள்தொபியாஸ்.

அன்று தனது தலைவர் செங்குவீரன் ‘காளனைக் கைது மட்டும் செய்’ எனக் கூறினாரே அதன் பொருள் இதுதானா! யாருக்கும் தெரியாத

இரகசியத்தையும் தலைவர் தெரிந்து வைத்துள்ளாரே! செங்குவீரனின் ஒற்றுத் திறமையை எண்ணி அவன் வியந்ததோடு மட்டுமல்லாமல் தனது தலைவனின் மீதிருந்த மரியாதையும் மதிப்பும் பல மடங்கு உயர்ந்துகொண்டிருந்தது அவனிடம்.

சங்க காலத் தமிழகத்தில் மது அருந்தும் பழக்கம் தவறாகக் கொள்ளப்படவில்லை. வயிறு நிறையக் கள் பருகி பின் காதல் விளையாட்டு விளையாடுவதையே ஆடவர்கள் விரும்பினார்கள். கள் என்பது உணவு வகைகளுள் ஒன்றாக கருதப்பட்டது. புலவர்கள், பாணர்கள், இரவலர்கள் கூட வயிறு நிறைய உணவையும், மதுவையும் அளிக்கும் அரசனையே வள்ளல் எனப் பெரிதும் புகழ்ந்துள்ளனர். ஆக காளன் தன்னிடம் மது கேட்டதைப் பற்றிப் பெரிதும் அலட்டிக்கொள்ளாத டாள்தொபியாஸ் உணவு போன்றே உயர் ரக யவன தேச மது ரகங்களைத் தனது வீரர்களிடம் காளனிடம் கொடுக்கச் சொல்லி ஆணையிட்டான்.

தனது தலைவர் தனக்களித்த கட்டளையை வெற்றிகரமாக நிறைவேற்றி விட்ட மகிழ்ச்சியில் மாலைப் பொழுதில் அவனும் தமிழகக் கள் மற்றும் யவன தேச மதுவையும் பருகி மகிழ்ச்சிக் களிப்பில் மயங்கிக்கொண்டிருந்தான். அந்த வேளையில் அவனது படையைச் சேர்ந்த வீரனொருவன் ஓடி வந்து, "உபதளபதி! காளன் தப்பிவிட்டான்" எனப் பதற்றத்தோடு கூறினான். அவன் கூறியதை நம்ப மறுத்த டாள்தொபியாஸ் அவனது புரவியில் அதிவேகமாகச் சென்று புத்த விகாரில் காளன் சிகிச்சைப் பெற்றுக்கொண்டிருந்த அறையைப் பார்த்தவனுக்கு பெரும் அதிர்ச்சியே மிஞ்சியது. காரணம் வெளியே ஆயுதங்களுடன் வீரர்கள் காவல் நிற்க அறையிலிருந்த இளந்திரையன் மாயமாக மறைந்திருந்தான். அறையை நன்கு ஆராய்ந்த டாள்தொபியாசினால் அந்த அறையில் எந்த மாற்றத்தையும் காண இயலாதது அவனுக்குப் பெருத்த கோபத்தை அளித்துக்கொண்டிருந்தது. ஏற்கனவே மதுவினால் சிவக்க ஆரம்பித்திருந்த அவனது கண்கள் இப்போது கோபத்தில் முற்றிலும் சிவந்துவிட்டது.

"பௌத்த தேரரை உடனே இங்கு அழைத்து வாருங்கள்!" எனத் தனது வீரர்களுக்குக் கட்டளையிட்டான் டாள்தொபியாஸ்.

அவனது கட்டளையை ஏற்று ஓடிய சில வீரர்கள் சிறிது நேரத்திற்கெல்லாம் பௌத்த தேரரை அழைத்து வந்து அவன் முன் நிறுத்தினார்கள்.

தேரரை கோபத்துடன் நோக்கிய டாள்தொபியாஸ், "தேரரே! தாங்கள் செய்தது நியாயம் தானா? இப்படி நம்ப வைத்து ஏமாற்றி விட்டீர்களே!" எனக் கோபத்தோடு வினவினான்.

டாள்தொபியாஸ் சொல்வதைக் கேட்ட பௌத்த தேரர் எதையும் புரிந்துகொள்ள இயலாமல், "தளபதியாரே! தாங்கள் எதைப்பற்றி வினவுகிறீர்கள் என எதுவும் என்னால் விளங்கிக்கொள்ள இயலவில்லையே!" என்றார்.

"தேரரே! பௌத்தர்கள் 'வாய்மை' எனும் பெரும் ஒழுக்கத்தை எந்த நிலையிலும் தவறாமல் கடைபிடிப்பீர்கள் என கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் தாங்கள் என்னை ஏமாற்றிவிட்டீர்களே!"

"அய்யனே! வாய்மை எனில் உண்மை பேசுதல், சொன்ன சொல் காத்தல் எனப் பொருள். நான் இந்த இரண்டில் எதனைக் காப்பாற்றத் தவறிவிட்டேன்" எனக் கேட்டார் நிதானத்துடன்.

"காளனைக் கைது செய்து சிறையில் அடைக்கச் சென்ற என்னைத் தாங்கள் தான் தடுத்து அவன் குணமாகும் வரை அவனை அனுப்ப இயலாது என மறுத்தீர்கள். நானும் உங்களது பேச்சுக்குக் கட்டுப்பட்டு அவனை இங்கேயே விட்டுச் சென்றேன். அறையில் அவன் இல்லை. தப்பிவிட்டான்!"

"தளபதியாரே! அவனுக்கு மருத்துவம் பார்த்தபின் கூட்டிச் செல்லலாம் எனக் கூறினேனே தவிர அவனது காவலுக்கு நான் பொறுப்பேற்றிருக்கவில்லை. தங்களது வீரர்களின் கடும் பாதுகாப்பில் தானே அவன் இருந்தான். பிறகு, நான் எப்படி அவன் தப்பியதற்குப் பொறுப்பேற்க இயலும்" எனப் பதிலளித்தார் சாதுர்யத்துடன்.

இளந்திரையனாலும், பௌத்தத் தேரராலும் தான் தந்திரமாக ஏமாற்றப் பட்டுள்ளதை டாள்தொபியாசினால் அவ்வளவு எளிதில் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. காளன் தப்பிய முறையையும் கண்டறிய

முடியாத ஏமாற்றத்தில் டாள்தொபியாஸ் கோபத்துடன், “தேரரே! புத்திசாலித்தனமாகப் பேசுகிறோம் என எண்ண வேண்டாம். இதற்கான விளைவைத் தாங்கள் நிச்சயம் ஒரு நாள் எதிர்கொள்வீர்கள்” எனக் கூறி பௌத்த விகாரைவிட்டு வெளியேறியவன் தனது வீரர்களிடம், “பெருங்காயத்துடன் காளனால் அவ்வளவு எளிதில் புகாரைவிட்டுத் தப்பிக்க இயலாது. பொழுது விடிவதற்குள் அவன் நிச்சயம் மீண்டும் கைது செய்யப்பட்டிருக்கவேண்டும்!” எனக் கட்டளையிட்டவன் இளந்திரையன் எப்படித் தப்பித்திருப்பான் என எண்ணிக் குழப்பத்துடனே சென்றான்.

அடிக்குறிப்பு

1. வண்டு மூசு தேறல் மாந்தி மகிழ் சிறந்து – குறுந்தொகை 258, வரி 33. பரணர்
2. பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கி

காளரி யூட்டிய கவர் கணைத் தூணிப் – சிறுபாணாற்றுப்படை வரி 237 – 238, நத்தத்தனார்.

# 23. கள ்வனின் களவு

பகற்பொழுதில் புகார் பட்டினத்தின் அரசியல் நிலை பரபரப்பாக இருந்தாலும் இரவு பொழுது நெருங்க நெருங்க மக்களின் நிலை தலைகீழாக மாறிக்கொண்டிருந்தது. பகற்பொழுதில் கேட்ட வாட்கள் உராயும் சத்தங்களும், அலறல்களும் கடந்து பட்டினத்தில் நிலவின் குளிர்ந்த ஒளி பெருக பெருக மக்களின் மனதிலும் காதல் பெருகி காதலர்களின் முத்தச்சத்தங்களும், தமிழ் மொழியில் பொருள் விளங்க இயலாதபடி அதே சமயம் தலைவன் மட்டுமே அர்த்தம் புரியும்படியான முனகல் சத்தமும் குணக்கடலின் புகார்க் கடற்கரையை நிரப்பிக்கொண்டிருந்தது. தலைவனும் தலைவியும் கூடும் நேரத்தில் கெண்டை மீன்கள் பயந்து தோற்று ஓடுவதைப் போலத் தலைவியின் கடைக்கண்கள் ஒன்றோடொன்று பிறழ்ந்து போரிட்டு வெல்ல முயலும். யார் வெல்வோம் என நடந்த இன்பச் சமரில் இருவருமே தோற்று உடல் தளர்ந்து பரவசம் எய்தும் ரீதியில் மனம் நெகிழும். பவளம் போன்ற அதரங்களில் காணப்பட்ட அழகிய சிவப்பு நிறம் வெளுத்து வெண்ணிறக் கடைக்கண்கள் இரண்டும் சிவந்து போகும் அளவிற்கு அன்பையும், முத்தங்களையும் பகிர்ந்து இருவரும் மகிழ்ந்த பின் சோர்வோடு அணைத்தபடியே படுத்திருக்கும் வேளையில் மெல்ல வீசி வரும் தென்றல் அவர்களின் உடல்களைத் தீண்டிக்கொண்டிருக்கும். கலவி முடிந்து சுய நினைவை அடைந்த போது காதல் மயக்கத்தில் துகில் அனைத்தும் களைந்து எறிந்த பின் நிலவொளியையே துகிலாக உடுத்தி அணைத்துக் கொண்டிருப்பதை இருவரும் எண்ணி நாணுகையில் நாணம் விலக அணைப்பின் இறுக்கமும் அதிகமாகும். அச்சூழ்நிலையில் வீசும் குளிர்ந்த தென்றலில் வியர்த்த இருவரது உடல் குளிர்ந்து சிலிர்த்து அவர்களின் மோகமும் அதிகமாகும் போது அங்கோர் இன்பச் சமர் மீண்டும் தொடங்கி இருவரும் வெல்ல ஆயத்தமாகப் போராடினாலும் கடைசியில் இருவரும் ஒருவர் மற்றவரிடம் தோற்று ஓய்ந்துவிடுவார்கள்.

இத்தகைய ரம்யமான காதல் காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்த வான் நிலவு, தான் மட்டும் இரவில் தனிமையில் காய்ந்து கொண்டிருக்கிறோம் என எண்ணி வருந்தியதால் நேற்று முழு நிலவாய் வலம் வந்தது இன்று ஒரு சுற்று தேய்ந்தே இளைத்துக் காணப்பட்டது.

ஆனால், இந்த முதல் சாம இரவு சூழ்நிலையில் பத்திரைத் தேவி மட்டும் அவளது நந்த வனக் குளக்கரையில் மனம் முழுக்கக் துயரத்தோடும், குழப்பத்தோடும் அமர்ந்திருந்தாள். காலையில் வானவல்லி அவசரப்பட்டுக் கவலையோடு சென்றுவிட்டதே அவளது மனத்துயருக்குக் காரணமாயிருந்தது. ஆனால் அவளது மனக் குழப்பத்திற்குக் காரணம் நேற்றிரவு சம்பாபதி வனத்தில் கண்ட கள்வர்களின் தலைவன் காளனாக இருந்தான்.

அவளது மனதில் இருவேறு மாறுபட்ட சிந்தனைகள் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தது. முதல் பார்வையிலேயே மனதைப் பறிகொடுத்த கள்வர் தலைவனை எண்ணிஎண்ணி ஏங்குகிறது ஒரு மனம். கள்வர் குடியில் இருப்பவனை எண்ணி உன் வாழ்வை நீயே சீரழித்துக்கொள்ளாதே எனப் பலமாக எச்சரிக்கை செய்கிறது மற்றொரு மனம்.

‘கள்வனாக இருந்தாலும் ஆண்மை மிக்கவனாக இருக்கிறான்’ என்கிறது ஒரு மனம்.

‘கள்வனைக் காதலிக்கிறேன் எனக் கூறினால் தந்தை ஏற்றுக்கொள்வாரா?’ எனத் தவிக்கிறது மற்றொரு மனம்.

‘உனது எண்ணத்தை மாற்றிக்கொள் என கடுமையாக வானவல்லி எச்சரித்தாளே!’ என்பதை எண்ணித் துயரமடைந்தது இன்னொரு மனம்.

‘அவன் தன் அன்பைப் புரிந்துகொள்வானா?’ ‘அப்படியே அவன் ஏற்றுக்கொண்டாலும் பின் தன்னைக் கைவிட்டுவிட்டால்...?’ ‘கள்வனை நம்பலாமா?’ எனப் பலவாறு குழம்பியது மற்றொரு மனம்.

‘அவன் கள்வனாக வாழ்ந்தாலும், தனது அன்பினால் அவனை எப்படியும் நல்வழிப் படுத்திவிடலாம்!’ என நம்பிக்கை கொண்டது மற்றொரு மனம்.

‘வானவல்லி கூறியதைப் போன்று காதல் என்பது வலி நிறைந்தது தானா? ஆனால் மனத்தைக் கவர்ந்தவனை எண்ணும் போதே மனதினில் இன்னதென்று அறிய இயலாத பெரும் இன்பப் பெருக்கு தோன்றுகிறதே! அது எப்படி மனதிற்கு வேதனையைக் கொடுக்கும். காதல் என்பது சிலர் பேரின்பம் என்கின்றனர்; சிலர் வேதனை என்கின்றனர். அப்படிக் காதலில் என்னதான் இருக்கிறது? அதனை அனுபவித்துப் பார்த்துவிட்டால் என்ன!’ எனப் பலவாறு சிந்தித்த அவளது மனம் இறுதியில் காதலித்துப் பார்த்துவிட வேண்டியதுதான் எனத் துணிந்து விட்டது!

‘அவனை மீண்டும் எப்படி என்னால் சந்திக்க இயலும்! இரவு பயணம் மேற்கொண்டால் தானே அவனைக் காண இயலும். அவனை நினைத்தாலே மனதில் இனம்புரியாத இன்ப வேதனை தோன்றிவிடுகிறதே! இதுதான் காதலா! அவனை எண்ணினாலே படபடவென துடிக்கிறது என் இதயம், மனதில் உள்ள அன்பை அவனிடம் எப்படி வெளிப்படுத்துவேன்!’ என எண்ணியவள் ‘அந்தக் கள்வனைக் காணும் பொறுப்பை மனதில் உள்ள காதலிடமே விட்டுவிடுவோம். அது அவனை மீண்டும் சந்திக்க வைத்தால் காதலை வளர்த்துக்கொள்வோம். அவனை எண்ணி இப்போது ஆசையை வளர்த்துக்கொள்ள வேண்டாம்’ எனக் கடைசியாக ஒரு முடிவிற்கு வந்து சமாதானமடைந்து அமைதியடைந்தாள்.

இனம் புரியாத இன்ப எண்ண ஓட்டத்தில் சிக்கியிருந்த பத்திரை தான் கள்வனை சந்திப்போமா அல்லது மாட்டோமோ என எண்ணி ’கூடலிழைத்து’ ப் பார்த்துவிடுவது என மணலில் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டு கோடு இழுக்கத் தொடங்கினாள். கண்களை மூடிக்கொண்டு கைகளால் தரையில் வரைந்த கோடு வட்டமாக சேர்ந்துள்ளதா எனப் பார்க்க கண்களைத் திறந்த வேளையில் பின்புறமாக உள்ள கொல்லைப்புறத்தில் எழுந்த ‘தொப்’ என்று விழும் சத்தம் அவளைக் கனவுலகிலிருந்து நனவுலகிற்குக் கொண்டு வரவே, சத்தம் எழுந்த திசையை நோக்கி மெல்ல நடந்து சென்றாள் பத்திரைத் தேவி.

கொல்லைப் புறத்தில் உள்ள உயர்ந்த மதிற் சுவரிலிருந்து விழுந்து கிடந்தான் ஒருவன். அவன் அருகில் செல்லவே அச்சப்பட்ட பத்திரைத் தேவி

மனதில் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அவன் அருகில் சென்று பார்த்தாள். நிலவொளி பரிபூரணமாக நிறைந்திருந்தாலும் அடர்ந்த மரங்களைத் தாண்டி ஊடுருவ இயலாததால் மர நிழலில் கருப்பாகத் தெரிந்த அவன் முகம் இருளில் புலப்படவில்லை. கீழே கிடந்தவன் மயங்கிக் கிடந்தான். அவனை எழுப்ப முயன்று தோற்ற பத்திரை உதவிக்கு யாரையாவது அழைக்கலாமா என சிந்தித்தவள் பின் இரவில் உறங்குபவர்களைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என எண்ணி அவளே அவனைக் கைத்தாங்களாகத் தூக்கிக் கொண்டு சென்றாள்.

விழுந்து கிடந்தவன் பாதி மயக்கத்திலும், சிறிது சோர்விலும், சிறிது விழிப்பிலும் இருந்ததனால் அவள் அவனைத் தூக்கும் போது அவன் முழு ஒத்துழைப்போடு அவளுக்குச் சிரமம் ஏதும் அளிக்காமல் அவளுடனே நடக்கலானான். அவனைத் தோளோடு சாய்த்து கைத்தாங்கலாக அருகிலுள்ள அறைக்குச் சென்று படுக்கையில் கிடத்தியவள், நெய் விளக்கைத் தூண்டவே வெளிச்சம் அறை முழுவதும் நிரம்பியது.

வெளிச்சத்தில் அவனது முகத்தைக் கண்டாள் பத்திரை. ஆச்சரியமும், ஆனந்தமும் தாங்கவில்லை அவளுக்கு. ‘அவனை மீண்டும் காண நேரிட்டால் காதலை வளர்ப்போம்’ என அவனைக் காணும் பொறுப்பைக் காதலிடம் விட்டோமே! அது அவனை என்னிடம் சேர்ப்பித்து விட்டதே!’ என எண்ணி மகிழ்ச்சியடைந்தாள்.

அவன் விழுந்த சத்தத்தைக் கேட்டு அங்கு வந்த மற்றொரு இரு கண்களும் பத்திரை சுமந்து வந்ததைக் கண்டுவிட்டது. மகிழ்ச்சியும், காதலும் அவளது சிந்தையை அபகரித்துவிடத் தன்னை மறைவாகக் கண்காணித்துக் கொண்டிருந்தவனை அவள் கவனிக்கவில்லை.

ஏதோ சிந்தித்தவள், அவசரமாகத் தோட்டத்திற்குச் சென்று வேலியில் படர்ந்திருந்த ஊமத்தைச் செடியின் காய்களை செடிக்கு நோகாமல் கிள்ளி எடுத்துவந்து விளக்கில் காட்டி சூடுபடுத்தினாள். காயிலிருந்து பச்சையும் கருமையும் கலந்த நிறத்தில் அடர்ந்த புகை எழுந்தது. தனது மூக்கினை சேலை முந்தானைத் துணியால் இறுக மூடிக்கொண்டவள், கரும்புகையைப் பாதி மயக்கத்தில் கிடந்த கள்வர்களின்

தலைவன் காளனின் மூக்கினுள் செலுத்த அவன் முழுவதுமாக மயங்கி சுய நினைவினை இழந்துவிட்டான்.

யாரிடமிருந்து தப்பித்துக்கொள்ள இவன் மதிலைத் தாண்டி குதித்திருப்பான் எனச் சிந்தித்த பத்திரைத் தேவி விளக்கினை அருகில் எடுத்து அவனைப் பரிசோதித்தாள். வலது தோள் பகுதியிலிருந்த பெரும் கட்டினைப் பார்த்தவள், வானவல்லியினால் ஏற்பட்ட காயம் தானே இது! என எண்ணி குருதி கசிந்து கொண்டிருந்த கட்டினை அவிழ்த்து தூர எறிந்தாள். காயம் ஆழமாகக் காணப்பட்டது. வானவல்லியின் கைகளின் மென்மையை அறிந்த பத்திரை, "அவ்வளவு மென்மையான கைகளை உடையவள், இப்படி ஆழமான காயங்களை உண்டாக்கும் அளவிற்குக் குறுவாள் எறிய யாரிடமிருந்து கற்றாளோ!" எனத் தனக்குத்தானே கூறிக்கொண்டவாறே காயத்திலிருந்து வெளியேறிய குருதியினைத் துடைத்தவள், மேற்கொண்டு குருதி வெளியேறா வண்ணம் துணியினால் நன்கு மூடினாள்.

அவனது மேலங்கியைப் பார்வையிட மேலங்கியில் குருதி திட்டுத்திட்டாகப் படிந்து உறைந்து போயிருந்தது. மேலங்கியை நீக்கினாள். அவனது மார்பினில் வாள்களினால் வெட்டப்பட்ட காயங்களைக் கண்ட பத்திரை இவனைச் சில பேர் தாக்கியிருக்கிறார்கள்! எதிர்த்துச் சண்டையிட்டு அவர்களிடமிருந்து தப்பிக்கவே தனது வீட்டு உயர்ந்த மதிலைப் பயன்படுத்தியிருக்கிறான் எனப் புரிந்துகொண்டாள். அவனது மார்பில் இருந்த விழுப்புண்களின் தழும்பும், காயங்களும் அவனுக்குப் பெரும் கம்பீரத்தையும் ஆண்மையையும் அளிப்பதை அவள் கண்டு களிக்கவே செய்தாள்.

அவனது முதுகில் ஏதாவது காயம் இருக்கிறதா எனப் பார்க்க அவனைப் புரட்டிப் போட்டவள், அங்குச் சிறு தழும்புக் கூடக் காணப்படாமல் தேக்கு போன்ற திண்மையான தேகம் பளிங்கு போலப் பளிச்சிடுவதைக் கண்டவள், "இவன் கள்வனாக இருந்தாலும் இதுவரை யாரிடமும் புறமுதுகு காட்டாதவன்!" என அவனது வீரத்தை எண்ணிப் பெருமையும் பட்டுக் கொண்டாள்.

பின்னர் ஈரத் துணியினால் அவனது உடலிலிருந்த குருதிக் கரைகள் முழுவதையும் துடைத்து எழுந்தவள் வெளியே சென்று சில மூலிகைச்

செடிகளைத் தேடலானாள்.

மஞ்சள் வண்ணத்தில் கொத்தாகப் பூந்தாதுக்களையும் அதனைச் சுற்றி மும்மூன்று இதழ்கள் இணைந்து ஐந்து தொகுதிகளாகச் சுற்றியிருந்த சிறிய பூவை அந்த நிலவொளியிலும் கண்டுபிடித்துவிட்டாள் பத்திரை. மேலும் மலரை உறுதி செய்துகொள்ள மலரின் மலர்க்காம்பின் நீளத்தைப் பார்த்தாள். அது இலையிலிருந்து பலமடங்கு நீண்டு பூத்திருந்தது. செடியின் தண்டு, இலை, காம்பு என மலரைத் தவிர்த்த அனைத்து பகுதிகளிலும் சிறு சிறு முட்கள் போன்ற பகுதிகளைக் கையின் பின்புறத்தை வைத்து மெல்ல தேய்க்க அந்தச் சிறு சிறு முட்கள் அவளை வலிக்காமல் குத்தியது. ஒவ்வொரு இலைக் காம்பிலும் பல கொடிகள் படர்ந்ததிலிருந்து இதுதான் வெட்டுக் காயங்களுக்குப் போடும் வெட்டுவாப் பச்சிலை என அந்த நிலவொளியிலும் கண்டு பிடித்தவள் செடியோடு பிடுங்கிக் கொண்டாள்.

காய்ந்த குச்சியாய் சிவந்து நீண்ட தண்டினையும், அதன் பசுமையான கிளைகளில் நான்கு நான்கு இலைகளைக் கொண்ட செடியான நாயுருவியையும் அடையாளம் கண்டு செடியோடு பிடுங்கிக் கொண்டாள். மேலும் அதனோடு அரிவாள்மனைப் பூண்டு, மஞ்சள், மற்றும் சில மூலிகைச் செடிகளைப் பறித்தவள் தன்னை யாரோ பார்ப்பது போல உணர்ந்தவள் சட்டெனத் திரும்பி பின்னால் பார்த்தாள். ஆனால், அவள் கண்களுக்கு யாரும் தெரியாததனால் காளனிடம் திரும்பினாள்.

மருத்துவத்தில் பல முறைகள் உள்ளன. சில மருத்துவ முறைகள் மிகவும் கடினமானவை, வலி மிகுந்தவை. ஆனால் நோயும், வலியும் விரைவில் குணமாகிவிடும். சில மருத்துவ முறைகள் கடைபிடிப்பதற்கு எளிதானவை. நோய் குணமடைய நீண்ட காலம் ஆகும்

அப்படித்தான் பௌத்த மருத்துவ முறைக்கும், சமணர்களின் மருத்துவ முறைக்கும் வேறுபாடுகள் பல. பௌத்தர்கள் எந்த உயிர்களுக்கும் எந்தவித தீங்கும், வலியும் ஏற்படுத்த கூடாதென நினைப்பவர்கள். மனித உயிர்கள் உட்பட. அதைப்போலவே அவர்களின் மருத்துவ முறைகளும் வலி இல்லாமல் இருக்கும். நீண்ட காலம் நோய் குணமாகப் பிடிக்கும். ஆனால் சமணர்கள் அனைத்தையும் துறந்தவர்கள். வலி மற்றும் சுய உணர்வுகள்

உட்பட! எந்த உயிர்க்கும் அறியாமல் கூட தீங்கிழைக்கக் கூடாதென எண்ணுபவர்கள். நடக்கும் போது கூட மயிலிறகால் தரையை விசிறிக்கொண்டே நடப்பவர்கள். ஆனால் அவர்கள் தங்களைத் தாங்கள் முழுவதுமாக வருத்திக் கொள்பவர்கள். அதன்படி அவர்களின் மருத்துவ முறையும் கடினமாகவும், வலி நிறைந்ததகாவும் இருக்கும். ஆனால் விரைவில் குணமடையச் செய்யும் தன்மையுடையது. உடல் வலி மற்றும் நோய் ஒரே நாளில் போகிறேன் என்று சொல்லிக்கொள்ளாமல் ஓடிவிடும். அவ்வளவு வீரியமான மருத்துவ முறை. பத்திரைத் தேவி சமண முனிவர்களிடம் கல்வியையும், மருத்துவத்தையும் பயின்றவள். அவள் செய்யும் மருத்துவம் வலி நிறைந்ததாக இருக்கும். ஆதலால் தான் கடும் வெட்டுக் காயங்களுடன் கண்ட காளனை ஊமத்தைப் புகை மூலம் மயக்கமடையச் செய்துவிட்டாள். அவள் அளிக்கும் மருத்துவத்தின் போது அவள் விழித்துக் கொண்டிருந்தால் அந்த வலியில் கத்தியே ஊரைக் கூட்டிவிடுவான் என்பதை அவள் ஏற்கெனவே அறிந்திருந்தாள்.

முதலில் நாயுருவிச் செடிகளை விளக்கினில் காட்டி மெல்ல சூடு செய்து கொண்டாள். பின்னர் எள்ளினைக் காயவைத்து ஆட்டியெடுத்த தூய நல்லெண்ணெய்யை கொதிக்கவைத்து அதில் முதலில் அரிவாள் மனைப் பூண்டையும் பின் அதில் நாயுருவி இலைகளைப் போட்டு நன்கு வதக்கினாள். பின் வதங்கிய நாயுருவி இலைகளைக் கசக்கி சூடான நாயுருவிச் சாரினையும் சேர்த்து மிதமான சூட்டுடன் குறுவாள் காயத்தில் விட்டாள். காயத்தின் ஆழத்தில் இறங்கிய மிதஞ்சூடான எண்ணெய் மற்றும் பூண்டு ஆகியவை கடும் எரிச்சலையும் வலியையும் கொடுக்க மயங்கிய நிலையிலும் காளன் வலியால் துடிக்கவே செய்தான். காயத்தின் அடி ஆழம் வரை பச்சிலைச் சாறு இறங்கி உடலில் ஊடுருவும் வகையில் காயத்தை இலக்கி பச்சிலைச் சாற்றினைப் பிழிந்து விட்டுக் கொண்டே இருந்தாள்.

பின்னர் வெட்டுவாய் பச்சிலையை உள்ளங்கையில் வைத்து கசக்கி அதன் சாறினை தோள் காயத்தில் விட அது குளிர்ச்சியுடன் ஊடுருவிய போது ஏற்பட்ட எரிச்சலிலும் அவன் துடிதுடித்துப் போனான்.

பின்னர் உடலில் உள்ள மற்ற வெட்டுக் காயங்களில் வெட்டுவாய் பச்சிலைச் சாற்றினை விட்டுப் பின் நுண் கிருமிகள் மற்றும் பூச்சிகள் அண்டாத வண்ணம் ஒவ்வொரு காயத்தின் மீதும் கல்லின் மீது தேய்த்த மஞ்சள் தூளைப் பூசி விட்டாள்.

அவனது உடலின் காயங்களைச் சுற்றி வீக்கங்களைக் கண்டவள் அவனுக்கு ஒத்தடம் கொடுக்கத் துணியைத் தேடியவள் கிடைக்காமல் அவளது முந்தானைத் துணியைக் கிழித்து அதில் வதக்கிய நாயுருவி இலைகளைப் உருண்டையாகச் சுருட்டி மிதமான சூட்டுடன் அவனது உடல் முழுவதும் ஒத்தடம் கொடுத்தாள். அவள் ஒத்தடம் கொடுக்கக் கொடுக்க வீக்கம் காணாமற் போய்க்கொண்டிருப்பதைக் கண்டவள் தனது மருத்துவத் திறமையை எண்ணி கர்வம் கொள்ளவே செய்தாள்.

கை, கால், உடலில் ஏற்பட்ட பெருங்காயங்களில் தனது முந்தானைத் துணியினால் வதங்கிய நாயுருவி இலைகளை வைத்து கட்டு கட்டவும் செய்தாள்.

பின் அவனுக்குக் காயத்தினால் காய்ச்சல் வராமல் தடுக்கக் கொண்டு வந்த பச்சிலைகளை அரைத்து அவனது நெற்றி மற்றும் மார்புப் பகுதிகளில் பூசி பத்துபோட்டு விட்டாள்.

மயக்க மருந்திற்கு மாற்று மருந்து கொடுத்து அவனை எழுப்பி விடலாமா எனச் சிந்தித்தவள் பின் அவன் இந்தக் காயங்களுடன் வலியுடன் விழித்திருப்பதை விட மயக்கத்தில் உறங்குவதே சிறந்தது என எண்ணி அவனது விழிகளையும் நாடியையும் பார்த்தவள் அவன் எப்படியும் நாளை மதியத்திற்குப் பிறகு தான் கண் விழிப்பான் என்பதை உணர்ந்து அந்த அறையிலேயே விட்டுவிட்டுச் சென்று விட்டாள்.

பத்திரைத் தேவி மாளிகையில் யாரும் பார்க்காத வண்ணம் தனது அறைக்கு வந்தபின் நெடுநேரம் உறங்கவே இல்லை. தான் செய்திருப்பது சரிதானா? எனப் பலவாறு சிந்தித்தாள். டாள்தொபியாஸ் இவனைச் சல்லடை போட்டுத் தேடும் போது இவனை இங்கு மறைத்து வைத்திருப்பது முறையில்லை என்பதை அவள் உணரவே செய்தாள். சோழ வீரர்களுக்குத் தகவல் கொடுத்துக் காளனைக் காட்டிக்கொடுத்து விடலாமா? என

எண்ணினாள். இறுதியில் விடிந்ததும் அதைப் பற்றிச் சிந்தித்துக் கொள்வோம் என உறங்கிவிட்டாள்.

கண் விழித்துப் பார்த்தான் காளன். வெளியிலிருந்த பிரகாசமான வெளிச்சம் அவனது கண்களைக் கூச இறுக்கமாகக் கண்களை மூடிக்கொண்டு தான் எங்கிருக்கிறோம், நேற்றிரவு என்ன நேர்ந்தது? எனச் சிந்தித்து நடந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றாக மனத்திரையில் கொண்டு வந்தான்.

டாள்தொபியாஸ் அறையை விட்டுச் சென்ற பிறகு நிதானமாகச் சிந்தித்தான் காளன். மரணத்தின் நாள் அறிந்து கொண்டால் உடல் உணர்ச்சிகளும், வலிகளும் மனதினை விட்டு நீங்கிவிடும் அல்லவா! அப்படித்தான் மரணத் தண்டனை நிறைவேற்றப்படுவது உறுதி என அறிந்த பின் அதிலிருந்து எப்படித் தப்பிப்பது என்ற சிந்தனையில் அவனது உடல் ரணத்தின் வலி மறைந்தே போய் விட்டது அவனுக்கு. மெல்ல கட்டிலிலிருந்து எழுந்து இத்தனை காவல் வீரர்கள் சூழ்ந்த பாதுகாப்பான அறையைவிட்டு எப்படித் தப்பிப்பது எனத் தீவிரமாகச் சிந்திக்கலானான்.

அந்த வேளையில் தான் அவனுக்கு அவனது நண்பன் வில்லவனின் நினைவு வந்தது. வில்லவன் எந்தச் செயலைச் செய்தாலும் அதில் ஒரு காரணம் நிச்சயம் இருக்கும். வெளியே அத்தனை அறைகள் வெற்றிடமாக இருக்க உட்புறமாக இந்த அறையில் தன்னைத் தங்க வைத்ததிற்கும் நிச்சயம் காரணம் இருக்கும் என நம்பியவன், அறையின் ஒவ்வொரு பகுதியையும் துருவித் துருவி ஆராயலானான். அவன் படுத்திருந்த கட்டில், அறையின் சுவர் என ஒவ்வொன்றாக ஆராய்ந்து எதையும் கண்டறிய இயலாமல் சோர்ந்தவன் கடைசியில் அவனது பார்வை அந்த அறையிலிருந்த புத்தரது உருவச் சிலையின் மீது நிலைகொண்டது.

புத்தர் சிலையின் அருகில் சென்று மண்டியிட்டு அமர்ந்தான் காளன்.

**நன்மை நீஇ! தின்மை நீஇ!**

**நனவும் நீஇ! கனவும் நீஇ!**

**வன்மை நீஇ! மேன்மை நீஇ!**

**மதியும் நீஇ! விதியும் நீஇ!**

**இம்மை நீஇ! மறுமை நீஇ!**

**இரவும் நீஇ! பகலும் நீஇ!**

**செம்மை நீஇ! கருமை நீஇ!**

**சேர்வும் நீஇ! சாரவும் நீஇ!**

என்ற புத்தரைப் புகழும் ஒத்தாழிசைக் கலிப்பாவை மனமுருகிப் பாடி வணங்கிவிட்டு, தான் தப்பிக்க உதவுமாறு புத்தரது பாதங்களைச் சரணடைந்தான்.

புத்தர் சிலைக்குப் படைக்கப்பட்ட உணவுப் பொருள்களைச் சாரை சாரையாகச் சிற்றெறும்புகள் புத்தர் சிலைக்குக் கீழே கொண்டு சென்றுகொண்டிருந்தன. சிற்றெறும்புகளைக் கண்டவனது முகத்தில் இதுவரை இல்லாத உற்சாகம் தோன்ற ஆரம்பித்தது. உணவுத் துகள்களை எறும்புகள் புத்தர் சிலைக்குக் கீழே கொண்டு செல்கிறதென்றால் அங்குப் பெரும் இடமோ அல்லது சுரங்க வழிகளோ நிச்சயம் இருக்க வேண்டும் என யூகித்தவன் அதனைக் காணும் வழியைத் தேடலானான். சுரங்க வழியைத் திறக்க வேண்டுமெனில் இரகசியப் பொறியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று எண்ணி அந்த முயற்சியில் இறங்கினான். வெளியே இருக்கும் காவலர்கள் உள்ளே வந்துவிட்டால் என்ன செய்வது எனச் சிந்தித்தவன் அமைதியாக அவர்கள் என்ன செய்கிறார்கள் எனச் சென்று பார்த்தான். அவர்கள் கடமையே கர்மமாக அறைக்கு வெளியே காவலுக்கு நின்று கொண்டிருந்தார்கள். உள்ளே சென்று தொந்தரவு கொடுக்க வேண்டாம் என டாள்தொபியாஸ் கட்டளையிட்டது அவனது நினைவிற்கு வர, அவனது கட்டளையை மீறி யாரும் உள்ளே வரமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் புத்தர் சிலை மர்மத்தைத் தேடலானான்.

மனதில் இருந்த அச்சத்தை விலக்கி வைத்துவிட்டு, புத்தர் சிலையை அப்புறமாகவும், இப்புறமாகவும் இழுத்தும், தள்ளியும் நகர்த்த முயற்சித்தான். அவன் தான் நகர்கிறானே தவிரப் புத்தர் சிலை அசைந்தபாடில்லை. உலகையே ரட்சிக்கும் கடவுள் அல்லவா? எப்படி அசைவார். புத்தர் சிலைக்கு முன் இருந்த படையல்கள் படைக்கும் பலி பீடக்

கல்லையும் அசைத்துப் பார்த்தான். அதிலும் தோல்வியே ஏற்படத் தனது விதியை நொந்தவன் ஏதேனும் வேறு மார்க்கம் இருக்குமா எனப் புத்தர் சிலையையே சுற்றி சுற்றி வந்தான்.

புத்தரது வலது கையின் விரல்களைக் கண்டவனது முகம் தப்பிக்கும் மார்க்கம் கிடைத்துவிட்டது போலப் பரவசமடைந்தது. புத்தர் சிலையின் நான்கு விரல்களும் மடங்கியிருக்க ஆட்காட்டி விரல் மட்டும் நீட்டிக்கொண்டிருந்தது. விரல் நீட்டிக்கொண்டிருந்த திசையில் ஏதேனும் வழி இருக்குமா என ஆராய்ந்தவன் அங்கும் ஏதும் தப்பிக்கும் மார்க்கம் தென்படாததால் அவனது முகத்தில் ஏமாற்றத்தின் சாயல் தென்படத் தொடங்கியது.

ஏமாற்றத்துடன், புத்தரை வணங்கி தப்பிக்கும் மார்க்கத்தைக் காட்டுங்கள் என நீண்டுகொண்டிருந்த புத்தரின் ஆட்காட்டி விரலைப் பற்றி இழுத்தான். அவ்வளவு தான் விரலைப் பிடித்து நகரும் குழந்தை போல மந்திரத்திற்குக் கட்டுப்பட்டது போல அவனது கையோடு புத்தர் சிலை அவ்விடத்தைவிட்டுப் பெயர்ந்தது.

புத்தர் சிலைக்குக் கீழே இருந்த இரகசிய வழி காளனுக்குத் தென்பட்டது. இரகசியப் பாதையைக் கண்ட பிறகு தான் அவனது முகத்தில் மகிழ்ச்சியின் சாயலே தோன்றியது. வீரர்கள் யாரேனும் காணுமுன் இவ்விடத்தை விட்டு உடனடியாகத் தப்பித்துவிட வேண்டும் என்ற நோக்கில் விரைவாகச் செயல்படத் தொடங்கினான். அந்த நேரத்தில் அவனது நண்பன் வில்லவனையும் எண்ணி மகிழ்ச்சியடைந்து கொண்டான்.

இரகசிய சுரங்கப்பாதை முழுவதும் துளி வெளிச்சம் கூட இல்லாமல் இருளில் மண்டிக்கிடப்பதைக் கண்டவன் புத்தர் சிலைக்கு முன் எரிந்துகொண்டிருந்த விளக்கினை எடுத்துக் கீழே இறங்கி சுரங்கத்தில் இருந்த பந்தத்தைக் கொளுத்திக்கொண்டான். பின்னர் அங்கிருந்த மற்றொரு பொறியை நகர்த்த புத்தர் சிலை மீண்டும் நகர்ந்து பழைய இடத்தை அடைந்துவிட்டது. சுரங்கப் பாதை செல்லும் வழியில் பந்த வெளிச்சத்தைக் கொண்டு நடக்கலானான். சுரங்கப் பாதை கடைசியாகப் பட்டினப்பாக்கத்தின் புத்த

விகாரில் கொண்டு போய்க் காளனைச் சேர்த்தது. பொழுது சாயும் வரை சுரங்கப் பாதையிலேயே பொறுத்திருந்தவன் பின் அங்கிருந்து வெளியேறினான்.

அறையிலிருந்து காளன் எப்படி மாயமாக மறைந்தான் என்பதை அறியாத டாள்தொபியாஸ், அவன் நிச்சயம் ஏதேனும் சுரங்கப்பாதை வழியாகத்தான் தப்பித்திருப்பான் என ஊகித்தான். தமிழகத்தில் அடிக்கடி போர் ஏற்பட்டுக்கொண்டிருந்தமையால் அரண்மனை மற்றும் முக்கியக் கோட்டைகளில் சுரங்கப் பாதை அமைக்கப்பட்டிருப்பதை டாள்தொபியாசும் நன்கு அறிவான். ஆனால் அவன் பௌத்த விகாரில் சுரங்கப் பாதை இருக்கும் என எதிர்பார்த்திருக்கவில்லை. பௌத்த விகாரில் தொடங்கிய சுரங்கப்பாதை நிச்சயம் மற்றொரு பௌத்த விகாரில் தான் முடிவடையும் என ஊகித்தவன் ஒவ்வொரு பௌத்த விகாரிலும் காவல் வீரர்களை நிற்கச் செய்திருந்தான்.

பொழுது மேற்கில் சாய்ந்த பின் இரவு முதல் சாமத்தில் சுரங்கப் பாதையிலிருந்து வெளியேறினான், காளன். பௌத்த விகாரிலிருந்து காளன் வெளிப்படுவதைக் கண்ட மறைந்திருந்த வீரர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டனர். வீரர்கள் தன்னைச் சூழ்ந்துகொள்வார்கள் என்பதை எதிர்பார்த்திராத காளன் அவர்களை எதிர்க்க தனது வாளை உருவினான். இவர்களிடமிருந்து தப்பித்தால் தான் தனது உயிரை காப்பாற்றிக்கொள்ள இயலும் என்பதைப் புரிந்துகொண்ட காளனுக்கு அப்போது அவ்வளவு பலம் எங்கிருந்து தான் வந்ததோ? அவனது வலிகள் அனைத்தும் மறைந்து இரண்டு கைகளினாலும் மாறி மாறி வாளைச் சுழற்ற அவனைச் சூழ்ந்த வீரர்கள் அவனிடம் தாக்குப்பிடிக்க இயலாமல் கீழே விழுந்தனர். காளன் போர்க் கலைகளை நன்கு பயின்றவன். வாள் வீசுவதிலும் வல்லவன். இரும்பிடர்த்தலையரின் தம்பியாகையால் அவனும் அனைத்து வித வித்தைகளையும் நன்கு கற்றிருந்தான். வாள் வீசுவதில் அவன் வல்லவனாக இருந்தாலும் அவனது உடல் சோர்வு மற்றும் காயத்தின் வலி என அவன் சற்றுத் தடுமாறவே செய்தான். அந்த இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்ட வீரர்கள் அவனைத் தாக்க காளனின் மார்பு, வயிறு, கை, கால் என ஆங்காங்கே வீரர்களின் வாள் அவனது குருதியைச் சுவைக்கவே செய்தன. வாள்கள் உராயும் சத்தத்தைக் கேட்டு மேலும் சில வீரர்கள் தூரத்திலிருந்து ஓடி வருவதைக் கண்டவன் இனியும் இங்கிருந்தால் ஆபத்து என எண்ணி

தடுத்துக்கொண்டிருந்த வீரர்களைத் தள்ளிவிட்டுப் பின் அங்கிருந்து வேகமாக இருளை நோக்கி ஓடினான். வீரர்கள் யாரும் கவனிக்காத நேரத்தில் அங்கிருந்த பெரும் மதில் சுவரை அருகில் வளர்ந்திருந்த மரத்தைப் பயன்படுத்தி ஏறித் தாண்டிக் குதித்துவிட்டான். அவனைத் துரத்திக்கொண்டு வந்த வீரர்கள் இவ்வளவு உயர்ந்த, பெரிய மதிலை அவன் தாவி குதித்திருக்க மாட்டான் என எண்ணி அங்கிருந்து சென்று வேறு பகுதிகளில் அவனைத் தேடலாயினர்.

உயரமான மதிலிலிருந்து குதித்தவன் அதிர்ச்சியினால் மயங்கி விட்டான். அப்போது மயங்கியவன் கண் விழித்துப் பார்க்கும் போது தான் எங்கிருக்கிறோம் என அடையாளம் தெரியாத முன்பின் அறியாத இடத்தில் இருப்பது வரை நடந்தது ஒவ்வொன்றாக அவன் தனது மனத்திரையில் கொண்டு வந்தான். கண்களைக் கசக்கிக்கொண்டு வெளியிலிருக்கும் பிரகாசமான வெளிச்சத்திற்குக் கண்களைப் பழக்கிக்கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தவனால் ஏதும் அறிந்துகொள்ள இயலாமல் அறையிலிருந்து வெளியேறி நந்த வனத்தில் உள்ள குளக்கரையை யாரும் அறியாத வண்ணம் அடைந்தான்.

தனது உடலில் போடப்பட்டிருந்த மூலிகைப் பத்துகளையும், மருந்துகளையும் கண்டவன் பின் தனது உடலில் வலி காணாமல் போயுள்ளதை உணர்ந்து ஆச்சர்யப்பட்டுப் போனான். ஒரே நாளில் இப்படி மாயம் செய்து உடலைக் குணப்படுத்த இயலுமா எனச் சிந்தித்தவன் காயத்தில் இருந்த சீலைத் துணிக் கட்டைக் கண்டான். கட்டுப் போட்டிருந்த துணியை அவிழ்த்து பார்த்தவன், அது கட்டியிருந்த துணியிலிருந்து தான் கிழுத்துக் கட்டப்பட்டது என்பதை அறிந்த பிறகு அந்தப் பெண் மருத்தவரைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் அவனுக்குள் பெருகியது.

அங்கிருந்து தப்பித்துச் சென்று விடலாமா என ஒரு கணம் எண்ணியவன் வீரர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றித் தனக்கு மருத்துவம் பார்த்தவரை சந்தித்து நன்றி கூறாமல் செல்வது தவறு என எண்ணி அவரைச் சந்தித்த பின்தான் செல்லவேண்டும் எனத் தீர்மானித்துக்கொண்டு நாயுருவி

செடியினால் பல் துலக்கி, குளத்து நீரில் தன்னையும் கழுவி சுத்தப்படுத்திக் கொண்டு அறைக்குச் சென்றான்.

அறைக்குச் சென்றவனுக்குப் பேரதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது. அங்குப் பத்திரைத் தேவி ஒரு கையில் பழத்தட்டையும் மற்றொரு கையில் குறுவாளையும் வைத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தாள்.

பத்திரைத் தேவியைக் கண்டவன் சம்பாபதி வனத்தில் கண்ட பெண் இவள் தான் என உடனே அடையாளம் கண்டுகொண்டான். தான் கட்டியிருந்த துணியைக் கிழித்துத் தனக்கு வைத்தியம் பார்த்தவள் இவளாகத்தான் இருக்க வேண்டும் எனக் கணப் பொழுதில் தீர்மானித்துக்கொண்டவன் நன்றி கலந்த பார்வையை அவளது கண்களின் மீது நிலைநாட்டினான்.

“என்னை வீரர்களிடம் காட்டிக்கொடுக்காமல் மருத்துவம் பார்த்தது நீங்கள் தானா?” என வினவினான்.

அவள் கண்கள் நிறைய அன்போடு அவனைப் பார்த்து “ஆமாம்” எனத் தலையாட்டினாள்.

அவள் கையிலிருந்த குறுவாளைப் பார்த்தபடியே, “பெண்ணே! உனது இரு விழிகளும் தான் கொலை வேல் போல இருக்கிறதே! கையில் மற்றொரு குறுவாள் எதற்கு?” என வினவினான்.

அதற்குப் பத்திரை, “கள்வர்களின் தலைவர் வேல் விழிகளை விடக் குறுவாளுக்குத் தானே அச்சப்படுகிறார்!” என்றாள்.

சம்பாபதி வனத்தில் அச்சத்தில் வியர்த்து, மூச்சு வாங்கியபடி நடுங்கிக் கொண்டு நின்றவள் இப்போது தைரியத்துடன் பேசுகிறாளே! என ஆச்சர்யமடைந்தவன் “கள்வன் கட்டுப்படாமல் ஏதேனும் செய்தால் என்ன செய்வதாய் உத்தேசம்” எனக் கட்டிலில் அமர்ந்தபடியே கேட்டான்.

பழத்தட்டை கீழே வைத்தவள், அவனருகில் சென்று குறுவாளை அவனது கழுத்தில் வைத்து “மேற்கொண்டு இப்போது பேசுங்கள் பார்ப்போம்!” என மிரட்டிய படி கூறினாள்.

தனது கழுத்தில் குறுவாளை வைப்பாள் என எதிர்பார்க்காத காளன் கண நேரத்தில் மிரண்டு விட்டான். மிரட்சியுடன் அவளை நோக்கினான். அவளது கைகள் தான் கொலை வாளைத் தாங்கியுள்ளதே தவிர அவளது கண்கள் எந்த வித கோபத்தையும் காட்டாமல் அன்பு பெருகி வழிவதையும் கண்டான்.

பத்திரைத் தேவி அவளது அன்பை காளனிடம் தெரிவிக்காமல் இருந்தாலும் வீரர்களிடம் தன்னைக் காட்டிக்கொடுக்காமல் அணிந்திருந்த உடையைக் கிழித்தே தனக்குக் கட்டுபோட்டு மருத்துவம் பார்த்ததிலிருந்தும், அவளது பார்வையிலிருந்தும் அவளது உள்ளத்தில் உள்ள பேரன்பை அவன் புரிந்துகொண்டான்.

அவள் கையிலிருந்த குறுவாளையும், அவளது முகத்தையும் மாறி மாறி நோக்கியவன் அவளே எதிர்பாராத விதமாக அவனது வலது கையால் பத்திரையின் தலையை அழுத்தி முன்னால் இழுத்தவன் அவளது அதரத்தில் தன் அதரத்தால் முத்தம் ஒன்றைப் பதித்தான்.

காளனின் இந்த எதிர்பாராத முத்தத்தால் அதிர்ச்சியினால் உடல் நடுங்கியவள் தன்னை விடுவித்துக்கொள்ள முயன்றாலும் பின் அவனுக்கு ஒத்துழைப்பையே நல்கினாள்.

அவளது குறுவாள் இவனது கழுத்தில்; ஆனால் அவளோ இதழ்களோ இவனிடம்!

அவனது எதிர்பாராத முத்தத்தில் தன்னிலையிழந்தவள் குறுவாளை பிடிக்க இயலாமல் நழுவவிட, நழுவிய குறுவாளோடு அவளது முந்தானைத் துணியும் உடலிலிருந்து நழுவ, அவள் உடலில் அவன் தன் கைகளால் எதையோ தேடலானான்.

அவனது கை விரல்கள் தன் உடலில் தீண்டுவதிலிருந்து சுய நினைவடைந்தவள், அவனைத் தள்ளிவிட்டு அவனது தழுவலிலிருந்து வலுக்கட்டாயமாகத் தன்னை விடுவித்துக்கொண்டாள்.

அதுவரை எந்த ஆண் மகனின் தீண்டல்களையும் உணராதவள், முதன் முதலில் ஒருத்தனின் முரட்டு முத்தத்தினால் உடல் குலுங்க, அவளது

அன்பும், உணர்ச்சிகளும், கவலைகளும் கண்ணீராய் அவளது கண்களில் பெருகியது.

தவறிழைத்தது அவன் தான். ஆனால், முன் பின் அறியாத ஒரு ஆடவனிடம் தான் தன்னிலை இழந்து தன்னையே இழக்கத் துணிந்த தனது அவல நிலையை எண்ணிய அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. இத்தனை நாட்களாகக் கடைபிடித்த அறிவு, சுய ஒழுக்கம், தன்னடக்கம், கற்பு என அனைத்தையும் கண நேரத்தில் மறந்து விட்டதை எண்ணி அவள் அவமான உணர்வுடன் தரையையே பார்த்துக்கொண்டு தேம்பிக்கொண்டிருந்தாள்.

அவளது நிலையை உணர்ந்த காளன், அவளது அருகில் சென்று அவளது நாணத்திலும், கோபத்திலும் சிவந்திருந்த அழகிய வதனத்தை மேலே உயர்த்தி அவளது கண்களை நோக்கினான்.

அவளது கண்களில் தனது பார்வையை நிலைநாட்டியபடியே, "பத்திரை! மனதில் வருத்தமோ, குழப்பமோ வேண்டாம்; கள்வனிடம் மனதைப் பறிகொடுத்துவிட்டேன் என எண்ணியும் துயரப்பட வேண்டிய அவசியமில்லை. நேற்று மயங்கிய நிலையிலிருந்த என்னைக் காப்பாற்றி, யாரிடமும் காட்டிக்கொடுக்காமல் இருந்ததிலிருந்தே உனது அன்பையும், மனதிலிருக்கும் ஆசையையும் புரிந்து கொண்டேன். உனது காதலை நான் அறிந்துகொண்டேன் என உனக்குக் கூறி, எனது அன்பையும் தெரிவிப்பதற்காகவே இந்த முத்தம். இது நமது அன்பினை உறுதி செய்துகொள்வதற்காகத் தான். உன்னை எந்தச் சூழ்நிலையிலும் பிரிந்து விட மாட்டேன். இது சத்தியம்!" என்றான்.

அதற்கு அவள், "அன்பை இப்படித்தான் முரட்டுத் தனமாக வெளிப்படுத்துவீர்களா?" எனப் பொய்யாகக் கோபம் கொண்டு ஊடலாடியவள், காதல் பார்வை கொண்டு அவனையே பார்த்தாள்.

அவளது அந்தக் காதல் பார்வையில் அவன் கட்டுண்டு, அவனது சப்த நாடிகளெல்லாம் அவளிடம் சரணடையச் செய்துவிட்டது. அப்படிப்பட்ட பார்வை அது.

அவளது கண்களில் கசிந்த கண்ணீர்த் துளிகளைத் துடைத்த படியே காளன், ‘‘நான் கள்வனாக மரணத்தை எந்நேரமும் எதிர்பார்த்து தலைமறைவாக வாழும் நிலை இன்று இருக்கலாம் பத்திரை. ஆனால், ஒருநாள் நீ இந்தக் கள்வனை எண்ணி நிச்சயம் பெருமை கொள்ளப் போகிறாய். அந்தக் காலம் விரைவில் ஏற்பட எல்லாம் வல்ல இறைவனை வணங்குவோம்’’ என்றவன் பின் எதையோ யோசித்துவிட்டு ‘‘மரணத்தை எதிர் நோக்கியுள்ளவனின் மீது நீ கொண்டுள்ள காதலை நான் எனது வாழ்வின் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன் பத்திரை’’ என அவளை அணைத்துக் கூறிவிட்டுக் கட்டிலில் அமர்ந்தான்.

அமர்ந்தவன் தனது கண்களில் பெருகும் கண்ணீர்த் துளிகளைக் கட்டுப்படுத்த எவ்வளவோ முயன்றான். ஆனால் இயலவில்லை! அவனது முயற்சிகளையும் தாண்டி வெளியேறிய கண்ணீர்த் துளிகளைக் கண்ட பத்திரை, ‘‘தாங்கள் ஏன் கண் கலங்குகிறீர்கள்?’’ என வினவினாள்.

‘‘உனது அன்பைப் பார்க்கும் போது எனது தாயின் நினைவு வந்துவிட்டது. ஒருவேளை எனது தாய் என்னுடன் இருந்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது பத்திரை. தாயில்லாமல் வளர்ந்தவன் முரடனாகி, கள்வனாகி விட்டேன். உனது இந்தத் திடீர் அன்பு என்னைத் திக்குமுக்காடச் செய்து கண்ணீர் சிந்த வைத்துவிட்டது’’ என்றவன் கண்களைத் துடைத்தபடி ‘‘நான் கள்வனாக இருந்து கவர்ந்தவற்றில் ஈடு இணையில்லாதது உனது அன்பு ஒன்று தான் பத்திரை!’’ எனக் கண்களில் கண்ணீரோடு முகத்தில் சிரிப்போடும் மகிழ்ச்சியோடும் கூற, பத்திரை வழிந்த அவனது கண்ணீர்த் துளிகளைத் துடைத்து அவனது முகத்தை அவளது மார்போடு அணைத்துக்கொண்டாள்.

அன்பு மிகுதி இருவருக்குமே கண்ணீர்த் துளிகளாக வெளிப்பட, அவளது கண்ணீர் அவனது தலையிலும் அவனது கண்ணீர் அவளது மார்பிலும் விழுந்து நனைத்துக் கொண்டிருந்தது. அவளது அணைப்பினில் காளனது கோபம், கர்வம், முரட்டுத்தனம், என அனைத்தும் கண்ணீராக வெளிப்பட்டுக் கொண்டிருப்பதை அவன் உணரவே செய்தான்.

திடீரென்று அவளது அணைப்பிலிருந்து விடுபட்ட காளன், ‘‘நான் புறப்படுகிறேன் பத்திரை!’’ எனக் கூறியபடித் தனது வாளுறையை இடுப்பில்

கட்டிக்கொண்டு கிளம்பத் தயாரானான்.

புறப்பட்டக் காளனைப் பத்திரைத் தேவி ''கள்வரே நில்லுங்கள்!'' என நிறுத்தி "உணவருந்திவிட்டுச் செல்லுங்கள்" என அவனிடம் பால் மற்றும் பழத்தட்டை நீட்டினாள்.

"அதான் பசி மறக்கும் அளவிற்கு அமுதினை உண்டுவிட்டேனே!" எனத் தனது அதர இதழ்களைத் தடவியபடியே கூறினான்.

அவன் தன்னை முத்தமிட்டதைப் பற்றிக் கூறியதைக் கேட்டவள் நாணம் கொண்டாலும் அதனை மறைத்துக் கோபப்பட்டது போல காட்டிக்கொண்ட பத்திரை, "கள்வர் தலைவர் பேச்சிலும் வல்லவர் என்பதைத் திரும்பத் திரும்ப நிரூபிக்க வேண்டியதில்லை" எனக் கூறிக்கொண்டு பழங்களை எடுத்துக்கொடுத்தாள்.

பழங்களை உண்டு கொண்டிருந்தவனிடம் பத்திரை, கேட்கலாமா அல்லது வேண்டாமா எனச் சிந்தித்தவள் இறுதியில் "கள்வரே! உங்களது பெயர்?" என அச்சத்துடனே கேட்டு விட்டாள்.

"நீ கள்வன் என அழைப்பதே அழகாகத் தானே உள்ளது. அப்புறம் எதற்குப் பெயர்?" எனக் கூறியபடியே காய்ச்சிய பாலைப் பருகுவதில் கவனம் செலுத்த பத்திரை, "உங்களது பெயரை இன்னும் கூறவில்லையே!" என விடாப்பிடியாகக் கேட்டாள்.

"எனது பெயரா? காளன்!"

"அந்தப் பெயர் அல்ல!"

"அப்புறம் எந்தப் பெயர்!"

"உங்கள் தந்தை வைத்த பெயரும் காளன் தானா? உங்களது இயற்பெயர்!"

"நிச்சயம் தெரிந்துதான் ஆக வேண்டுமா?"

"ஆமாம்"

தனது பெயரைக் கூற வேண்டாம் என எண்ணியவன் பின் அவள் கட்டாயத்துடன் கேட்க தான் இரும்பிடர்த்தலையரின் தம்பி என்பதை அவளிடம் மறைத்து “இளந்திரையன்” எனப் பெயரை மட்டும் கூறலானான்.

“இளந்திரையன்” எனப் பலமுறை தனக்குள் கூறி அழகு பார்த்துக்கொண்டாள் பத்திரை.

இரண்டு நாள் பசியை உண்டு அடக்கியவன், “கிளம்புகிறேன்!” எனக் கூறிவிட்டு அவளது பிறை நுதலில் அழுத்தமான முத்தத்தைப் பதித்துவிட்டு அங்கிருந்து கிளம்பினான்.

பத்திரைத் தேவியும் “உங்களுக்காகக் காத்திருப்பேன்!” எனக் கூறியபடியே அவனுக்கு மகிழ்ச்சியுடன் விடை கொடுத்து அனுப்பினாள்.

அவன் அங்கிருந்துச் சென்றபின் அவன் தீண்டிய தனது உடல் பாகங்களைத் தொட்டுப் பார்த்தே பேரின்பம் கண்டாள் பத்திரைத் தேவி. ஒரே நாளில் தன் வாழ்வில் நிகழ்ந்த அசாதாரணமான நிகழ்வுகளை எண்ணி ஆச்சர்யப்பட்டுப் போனாள். ஆனால் அவளுக்குத் தெரியாமலே அவளது செயல்களை ஒருவன் கண்காணித்துக் கொண்டிருந்ததை அவள் கவனிக்கவில்லை. அதனால் அவள் வாழ்வில் ஏற்படப் போகும் பிரளயங்களை அவள் எப்படி அறிவாள்?

அடிக் குறிப்பு:

1. பூந்தாது – மகரந்தத் தாள் மற்றும் சூலகம்.
2. பெண்கள் தங்களது கண்களை மூடிக்கொண்டு மணலில் வட்டமாக ஒரு கோட்டை வரைவர். அதன் முதலும், முடிவும் ஒன்று கூடினால் நினைத்த காரியம் நடைபெறும் என்பது அவர்களின் நம்பிக்கை. இதற்கு கூடலிசைத்தல் என்று பெயர். இதனை செயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியில் ‘’மீள்வர் எனக்கருதிக் கூடல் விளைத்து அறவே கையில் அணைத்த மணல்’ (கடை திறப்பு தாழிசை 31) எனக் கூறுகிறார்.

# 24. பூ க்கடைக்காரனும் வம்பு’ம்

இருங்கோ வேள் உறைந்தையைக் கைப்பற்றிச் சோழ மன்னனாக முடி சூட்டிக் கொண்டதை சோழ தேச மக்கள் துயரம் மிகுந்த இருண்ட காலமாகவே எண்ணினர். பரிதி மேற்கில் சாய்ந்ததனால் ஏற்பட்ட முதல் சாம இருளைப் போக்க யவன தேச விளக்குகளும், நெய் விளக்குகளும் முயன்று வெளிச்சத்தை வழங்கிக்கொண்டிருந்தது. மக்கள் மனதில் இருளும் அவ நம்பிக்கையும் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வந்தது. ஆதிகாலத்திலிருந்து கோலோச்சி வந்த சோழர் குடி இளஞ்சேட்சென்னியோடு மறைந்து விடுமோ எனவும் சோழர்களின் வலிமையான பட்டினமாகவும், அரண்மனையோடமைந்த பெரும் கோட்டையான சோழர்களின் தலைநகரம் முதன் முதலாகச் சோழனல்லாத மாற்றரசன் கையில் சிக்கிவிட்டதை எண்ணியும் பெரும் கவலையோடிருந்தனர். சில தினங்களுக்கு முன் மன்னனாகப் பொறுப்பேற்றுக்கொண்ட இருங்கோவேள் உறைந்தை முழுவதும் தனது வீரர்களையும், ஒற்றர்களையும் ஏவிவிட்டிருந்தான். யார் மேலெல்லாம் ஐயம் தோன்றுகிறதோ அவர்களெல்லாம் கைது செய்யப் பட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஆனால் சோழ மக்களின் பெரும் நம்பிக்கையாக இருந்த சோழ இளவல் காணாமல் ஓடிப்போய் விட்டானென இருங்கோவேள் பறையறிவித்துக் கூறிக் கொண்டிருந்தாலும், சோழ இளவல் நிச்சயம் பாண்டியன் தென்னவன் அல்லது சேரன் பெருஞ்சேரலாதனின் உதவி பெற்று பெரும் படையுடன் திரும்பி வந்து இருங்கோவேளைத் தோற்கடித்து அவனுக்குரிய முடியையும், உறைந்தையையும் மீட்பான் எனப் பெரிதும் நம்பிக்கொண்டிருந்தார்கள். ஆனால் சேரன் பெருஞ்சேரலாதனும், பாண்டியன் தென்னவனும் காலையில்

இருங்கோ வேளை சந்தித்து அவனை உறைந்தை மன்னனாக ஏற்று, அவனுக்கு உதவி தேவையெனில் தங்களது பெரும் படையை அனுப்பி உதவுவதாக வாக்குறுதி அளித்துச் சென்றதை அறிந்த மக்களின் நம்பிக்கை அனைத்தும் மொத்தமாகத் தகர்ந்துபோய்விட்டது. இளவல் பற்றி வந்த வதந்திகள் வேறு மக்களைத் தொடர்ந்து குழப்பமடையச் செய்ததே தவிர நம்பகமான செய்தி அவர்களுக்கு ஏதும் கிடைத்தபாடில்லை. இருங்கோ வேளை எதிர்த்து யார் குரல் கொடுத்தாலும் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுக் கொண்டிருந்தனர்.

உறைந்தையின் இந்த மாறுபட்ட நிலை சோழ மக்களை மட்டுமல்லாது எங்கிருந்தோ வந்த இரண்டு நாடோடி வணிகர்களையும் துயரமடையச் செய்திருந்தது. இருவரில் ஒருவன் சுமைகளைச் சுமந்து பின்னால் அடக்கமாகச் வந்ததிலிருந்து அவன் முன்னால் செல்பவனின் பணியாள் என அறியலாம்.

வணிகனின் காதில் அவனது உதவியாளன் ஏதோ பணிவுடன் கூறியதைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் அருகிலிருந்த பூக்கடைக்குச் சென்றனர்.

இரவு முதல் சாமம் கடந்து கொண்டிருந்தபடியால் பூக்கடைக்காரர் அனைத்தையும் எடுத்து வைத்துக்கொண்டிருந்தார். பூக்கடைக் காரரிடம் சென்ற இருவரும், “ஐயா! மலர்கள் வேண்டும். விலையைக் கூறுங்கள்” என்றனர்.

கடை அடைக்கும் நேரத்தில் இருவரும் வந்திருக்கிறார்களே என தனக்குள் சலித்துக்கொன்டு, “ஏனய்யா! மலர் வாங்க இப்போது தான் தங்களுக்கு நேரம் ஓய்ந்ததா?” எனக் கேட்டபடி மலர் மற்றும் மலர்ச் சரத்தின் விலையைக் கூறலானார்.

வணிகர்கள் இருவரும் பூக்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது, கடைக்காரர் “வணிகரே! பொழுது சாய்ந்து பூக்களை வாங்குகிறீர்களே! என்ன சமாச்சாரம்?” என இரட்டை அர்த்தத்தில் நையாண்டி பேசலானார்.

“உறைந்தை வரும்போதெல்லாம் கொற்றவை கோயிலுக்கும், தொடித்தோட் செம்பியன் கோட்டத்திலும் விளக்கேற்றி மலர் சாற்றுவது எனது வழக்கம். பல ஆண்டுகளுக்குப் பின் உறைந்தை வந்துள்ளேன். ஆதலால் எனைக் காத்து அருளும் தெய்வங்களைத் தரிசித்துவிட்டுச் செல்வோம் என இங்கு வந்தேன் அய்யா!” எனப் பக்தியுடன் கூறினார் வணிகர்.

“ஓ... அப்படியா சமாச்சாரம். பொழுது சாய்ந்து நீங்கள் இருவரும் பூ வாங்குவதைக் கண்டதும் பூ வாங்கிச் சென்று மலரைக் கொய்யப்போகிறீர்கள் என எண்ணிவிட்டேன். மன்னித்துவிடுங்கள் வணிகரே!” எனக் கூறிவிட்டு சிரிக்கலானார் பூக்கடைக்காரர்.

அவர் மலரைக் கொய்ய என எதனைக் குறிப்பிடுகிறார் என்பதை உணர்ந்த வணிகர், “ பூக் கடைக்காரரே நான் ஏக பத்தினி விரதன்! எனை அப்படி எண்ணவேண்டாம். ஆனால், எமது உதவியாளன் தான் தாங்கள் குறிப்பிடுவது போல மலர்களைக் கொய்வதில் வல்லவன். எனக்குத் துணையாக வாணிபத்திற்கு வரும் ஒவ்வொரு தேசத்திலும் இவனுக்குக் காதலிகள் உண்டு” எனத் தனது உதவியாளனை பெருமைபடப் பேசினார்.

இவர்கள் இருவரும் பேசுவதற்கும், தனக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லாதது போன்று பூக்களையும் பூச்சரங்களையும் கூடையில் அடுக்கிக்கொண்டிருந்தவனிடம் பூக்கடைக்காரர், “உமது தலைவர் கூறுவது மெய் தானா?” என வினவ அதற்கு அவன் எந்தவொரு மறுமொழியையும் வழங்காமல் தனது பணியையே செய்துகொண்டிருந்தான். அதைக் கண்ட வணிகர், “அவன் அதிகமாகப் பேசி வார்த்தைகளை வீணாக்க மாட்டான் பூக் கடைக்காரரே! எங்குப் பேச வேண்டுமோ அங்கு மட்டும் தான் பேசுவான்” எனக் கூற அங்கு மீண்டும் சிரிப்புச் சத்தம் திடீரென எழும்பியது.

இருவரும் கூடிப்பேசி சிரித்துக் கொண்டிருந்தபோது தூரத்தில் கொற்றவை கோயிலிலிருந்து எழுந்த மணிச்சத்தம் அவர்களை எட்ட, பூக்களை மெதுவாக எடுத்து வைத்துக் கொண்டிருந்தவனிடம், “விரைவாகப் பூக்களை நிரப்பு! கடை அடைக்கும் நேரம் வந்துவிட்டது” என்றார் பூக்கடைக்காரர். அதன்பின்பும் அவன் வேகத்தைக் கூட்டாததைக் கண்டவர் சினம் கொண்டு, “அய்யனே! அவை பூக்கள் தான். அழுத்தி, வேகமாகக்

கூடையில் நிரப்பினாலும் அவை நிரம்பும். சிணுங்காது. ஆதலால் விரைந்து வேலையை முடி!'' என மீண்டும் சிலேடையுடன் கூறலானார்.

கடைக்காரரின் திடீர் அவசரத்தைக் கண்ட வணிகர், ''ஏனய்யா! திடீரென அவசரப்படுத்துகிறீர்கள்?'' என வினவ அதற்கு அவர் ''அய்யா இப்போது எழுந்த மணிச்சத்தம் முதல் சாமம் கடந்து இரண்டாம் சாமம் வந்துவிட்டதை அறிவிப்பது. முதல் சாமம் கடந்து உறைந்தை தெருக்களில் யாரும் நடமாடக் கூடாது என்பது அரசர் கட்டளை. ஆதலால் விரைந்து நான் கடை அடைத்துவிட்டுக் கிளம்ப வேண்டும்'' என்றார்.

அரசர் உத்தரவு எனக் கேட்டதும் ஆர்வமடைந்த வணிகர், ''மன்னர் இளஞ்சேட்சென்னியின் உடல் நிலை எப்போது குணமானது! கேட்கவே மகிழ்ச்சியாக உள்ளது!'' என ஆர்வமுடன் பேசினார்.

பூக்கடைக்காரர் குரலைத் தாழ்த்தியபடி, ''வணிகரே! உமக்கு நாட்டு நிலை தெரியாது போலிருக்கிறதே! சென்னி இறந்து பலகாலமாகிவிட்டது. இப்போது சோழ அரசராக இருப்பவர் மலை நாட்டு வேளிரான இருங்கோ. சேரர், பாண்டியர் மற்றும் பல வேளிர்களின் ஆதரவுடன் இருங்கோ வேள் உறைந்தையில் முடிசூட்டிக் கொண்டார்'' எனக் கூற வணிகர் ''அப்படியெனில் சென்னியின் மகன் இளவல்.......?'' எனக் கேள்வியை முடிக்காமல் இழுத்தபடியே வினவினார்.

''அவரைக் காணவில்லை வணிகரே! அரசை சுமக்க பயந்து அவர் ஓடிவிட்டதாகச் சிலர் கூறுகின்றனர்.''

''உறைந்தையின் நெருக்கடி நிலைக்கு இதுதான் காரணமா? சோழ வம்சத்தின் நிலை மிகவும் பரிதாபமாகத் தான் உள்ளது பூக்கடைக்காரரே!''

''வணிகரே! சோழர்களுக்கு ஆதரவாகக் குரலை உயர்த்திப் பேசாதீர்கள். நாம் அரசியல் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதை யாரேனும் கேட்டால் நம்மையும் செங்குவீரனின் ஒற்றர்கள் எனக் கூறி கைது செய்து சிறையிலடைத்து விடுவார்கள். நமக்கெதற்குப் பொல்லாத வம்பு!''

''பூக்கடைக்காரரே, செங்குவீரன் என்பது யார்? பெயரே புதிதாக உள்ளதே!'' என ஏதோ அறியாததை அறிந்துகொள்ளும் பேரார்வத்தில்

கேட்டார் வணிகர்.

“வணிகரே! செங்குவீரன் என்பவன் புகாரில் உப தலைவனாக நியமிக்கப்பட்டவன். ஆனால், அவன் இன்று உறைந்தை அரசருக்கு கட்டுப்பட மறுத்து இளவரசனைக் கண்டறியும் முயற்சியில் இருக்கிறானாம். அவனைக் கைது செய்யச் சென்ற உறைந்தை வீரர்களையும் கொன்றுவிட்டானாம்! இருங்கோவேளுக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்பவன்!”

“என்ன பூக்கடைக்காரரே! சோழச் சக்கரவர்த்தி நினைத்தால் எதிரி நாட்டு மன்னனையே சிறைபடுத்தி விடலாம்! போயும் போயும் ஒரு உப தலைவனையா இன்னும் விட்டுவைத்துள்ளார்! ஆச்சர்யமாக உள்ளதே!”

“அவன் உறைந்தைத் தலைமைக்கு அடங்காதவனாக இருக்கிறானாம். புகார் சென்றும் அவனையும் அவன் பாதுகாப்பில் இருக்கும் இன்னும் சிலரையும் உறைந்தை வீரர்களால் நெருங்கக்கூட இயலவில்லை என மக்கள் பேசிக்கொள்கிறார்கள்! அவன் புகாரிலிருந்து உறைந்தைக்கு வந்துவிட்டானாம்! உறைந்தை முழுவதும் அவனைத் தான் தேடிக்கொண்டிருக்கிறார்கள். வணிகர்களே! தாங்கள் புகார் உபதலைவன் பற்றி ஏதாவது கேள்விப்பட்டதுண்டா?”

“‘உப தலைவன் செங்குவீரன்!’ இல்லை பூக் கடைக்காரரே! இந்தப் பெயரையே நீங்கள் கூறித் தான் கேட்கிறேன். நமக்கு எதற்கு அரசியல் வம்பு! நாங்கள் எதற்கு அதனை வீண் விலைக்கு வாங்க வேண்டும்” என வணிகர் கூறவும் அதற்கு “வம்பை எப்படி விலைக்கு வாங்க இயலும் வணிகரே! அதனைப் பறித்தால் தான் உண்டு!” எனக் கூறி மீண்டும் பற்கள் அனைத்தும் கீழே விழும்படி பலமாக உடலை குலுக்கி குலுக்கிச் சிரித்தார் பூக் கடைக்காரர். பெண்கள் அணியும் மேல் கச்சைக்கு ‘வம்பு’ என்ற மற்றொரு பெயரும் இருப்பதை அறிந்த வணிகர் அவன் கூறும் சிலேடைப் பொருளின் அர்த்தத்தை உணர்ந்து “வம்புகளைப் பறிப்பவன் பூக்களை அல்லவா அடுக்கிக் கொண்டிருக்கிறான். நமக்கு எதற்குப் பொல்லாத வம்பு!” என அவரும் வயிறு குலுங்கி சிரிக்கவும் வணிகரின் உதவியாளன் மலர்களைக் கூடையில் நிரப்பவும் நேரம் சரியாக இருந்தது. பூக்களுக்கு விலையாகச் சில பொன் வராகன்களை வாங்கிய பூக்கடைக்காரர் அந்த

நேரத்தில் சாலையில் சென்றுகொண்டிருந்தவனைச் சுட்டிக் காட்டி, ‘‘அதோ செல்கிறானே அவன் பெயர் சேந்தன். அவன் இருங்கோவேளின் பெரும் ஒற்றன். அவனிடம் சிக்கினால் மீளவே இயலாது. அவன் உங்களிடம் பேச்சுக் கொடுத்தால் என்னிடம் பேசியதைப் போன்று அரசியல் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள்’’ என எச்சரித்து நாடோடி வணிகர்கள் இருவரையும் அனுப்பிவைத்தார்.

வணிகர்கள் இருவரும் பார்வையிலிருந்து மறையும் வரை அவர்களையே பார்த்துக்கொண்டிருந்த பூக்கடைக்காரர், பின் பூக்களுக்குள் மறைத்து வைத்திருந்த பெரும் வாள் மற்றும் சில குறுவாள்களை எடுத்தவர் அவரது கடைக்குப் பின்னால் மறைந்து நின்றுகொண்டிருந்த இருவரை அழைத்தார்.

‘‘என்னிடம் இருவர் பேசிக்கொண்டிருந்தார்களே, அவர்கள் மீது எனக்கு ஐயப்பாடு தோன்றுகிறது. சற்று முன் சென்ற சேந்தனை ஒற்றன் எனச் சுட்டிக் காட்டியுள்ளேன்!’’ எனக் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த ஒருவன், ‘‘நமது ஒற்றர்களை நீங்களே அனைவருக்கும் காட்டிக்கொடுத்து விடுவீர்கள் போலிருக்கிறதே!’’ என்றான்.

அவனை முறைத்த பூக்கடைக்காரர், ‘‘அடே முட்டாள்! கூற வந்ததை முழுவதும் கேள்! பின் உனது கருத்தைக் கூறு!’’ எனக் கூறி, ‘‘அயல் தேச வணிகர்களின் வருகைதான் நாட்டை வளப்படுத்தும். செல்வத்தைப் பெருக்கும். அவர்களை ஒற்றர்கள் எனப் பின் தொடர்ந்தாலோ அல்லது கைது செய்தாலோ நமக்குத் தான் இழப்பு. வந்தவர்கள் உள்ளூர் ஆட்கள் என்றால் இப்படி ஒளிவுமறைவின்றி அரசியல் பற்றிப் பேசியிருக்கமாட்டார்கள். நாட்டு நிலைமையை நன்கு அறிந்தவர்கள் சென்னி என்ற வார்த்தையைக்கூடச் சொல்ல அச்சப்படுவர். வந்தவர்கள் அயல் நாட்டுக்காரர்கள் தான். வந்த இருவரும் அயல் நாட்டு வணிகர் என்றால் அவர்கள் சேந்தனைப் பற்றி கவலை கொள்ள மாட்டார்கள், அவர்களின் அலுவல்களைக் கவனிப்பார்கள். செங்குவீரனின் ஒற்றர்கள் என்றால் அவர்கள் சேந்தனை நிச்சயம் பின்தொடர்வார்கள். நீங்கள் இருவரும் அவர்களைப் பின் தொடர வேண்டிய அவசியமில்லை. நேரே காவிரிக் கரையோரமிருக்கும்

மேற்குப் புற சென்னி எழுப்பிய வசந்த மாளிகைக்குச் செல்லுங்கள். அங்குச் சேந்தன் வருவான். அவனை யாரேனும் பின் தொடர்ந்தால் அவர்களைக் கொன்றுவிடுங்கள்.''

''கொன்று விட்டால் அவர்களிடமிருந்து எதையும் அறிந்துகொள்ள இயலாதே !''

''அவர்களிடமிருந்து எதையும் அறிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆகவேண்டிய அனைத்து காரியங்களும் நன்றாக நடந்துவிட்டன. இனி எதிரிகளை ஒழிப்பது மட்டும் தான் மீதமிருக்கும் பணி. கூறிய பணியை மட்டும் செய்யுங்கள். இது தலைமை ஒற்றன் வேந்தனின் ஆணை !''

''அப்படியே ஆகட்டும் தலைவரே'' எனக் கூறியபடியே இருவரும் அங்கிருந்த சில குறுவாள்களை இடுப்பில் மறைத்துப் புறப்பட்டனர்.

# 25. ஓநாயின் குகைக்குள் வேங்கை

பூக்கடையிலிருந்து புறப்பட்டு வந்தபின் வணிகனிடம் அவனது உதவியாளன் பூக்கடைக்காரன் சுட்டிக்காட்டிய ஒற்றன் சேந்தனைக் காட்டி "அவனை நான் பின்தொடரவா தலைவரே?" எனக் கேட்டான்.

"வேண்டாம் திருக்கண்ணா. செங்கோடன் எங்கே?"

"தலைமை ஒற்றரா!"

"ஆம்! அவரே தான்."

"நம்மைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்."

நாடோடி வணிகர்கள் போன்று மாறுவேடமணிந்து பூக்கடைக்காரனிடம் பேசிய இருவரும் செங்குவீரனும் திருக்கண்ணனும் தான்.

செங்குவீரனும், உபதளபதி திருக்கண்ணனும் ஓரிடத்தில் நின்றுவிட்டதைக் கண்ட தலைமை ஒற்றர் செங்கோடன், அவர்கள் தன்னை எதிர்பார்த்துத் தமக்காகத் தான் காத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டு அவர்களிடம் வந்தார். அவரும் தலையில் பெரும் முண்டாசைக் கட்டிக்கொண்டு தனது ஒற்றர்களினாலே அடையாளம் காண இயலாதபடி மாறு வேடத்தில் இருந்தார்.

செங்குவீரன் முன்னால் சென்றவனைச் சுட்டிக்காட்டி, "அவனைப் பின் தொடருங்கள்! ஆனால் அவன் அருகிலோ அல்லது அவன் நுழையும் மாளிகைக்குள்ளோ எந்தச் சூழ்நிலையிலும் சென்றுவிட வேண்டாம். மறைந்திருந்தே கண்காணியுங்கள். எதற்கும் முதுகில் ஒரு கண் இருக்கட்டும்!" எனக் கட்டளையிட "தங்கள் கட்டளைப்படியே ஆகட்டும்!" என்றபடியே சேந்தனைப் பின்தொடரலானார் செங்கோடன்.

தலைமை ஒற்றன் அங்கிருந்து புறப்பட்ட பின் செங்குவீரன் திருக்கண்ணனிடம் “தொடித்தோட் செம்பியன் கோட்டத்திற்குச் செல்வோம்!” எனக்கூற இருவரும் காவிரியாற்றின் கரையோரமாக இருந்த செம்பியன் கோட்டத்திற்கு மலர்க் கூடையோடு நடந்தனர்.

“தலைவரே! எனக்குப் பதில் ஏன் தலைமை ஒற்றரை அனுப்பினீர்கள்? நான் அவனைப் பின் தொடர்வதில் தங்களுக்கு என்ன ஆட்சேபம்?” என வருத்தத்துடன் வினவினான் திருக்கண்ணன்.

“உன் திறமை மீது எனக்குத் துளியளவும் ஐயப்பாடு இல்லை திருக்கண்ணா. இவனை நீ பின் தொடர்ந்தால் உமக்குப் பெரும் ஆபத்தாகிவிடும். ஆதலால்தான்......” எனச் செங்குவீரன் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த திருக்கண்ணன் “எனக்கு மட்டும் தான் ஆபத்து நேருமா தலைவரே! செங்கோடனின் உயிருக்கு?” எனக் கேள்வியெழுப்பினான்.

“அவர் எச்சரிக்கையுடன் இருப்பார். அவருக்கு ஏதும் ஆகாது. நிச்சயம் பூக்கடைக்காரன் சுட்டிக் காட்டியவனைப் பின் தொடர்பவர்களின் தலையைக் கொய்ய இந்நேரம் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கும்!”

“அப்படியானால் பூக்கடைக்காரன்....?”

“ஆமாம் திருக்கண்ணா! அவன் இருங்கோவேளின் ஒற்றன்!”

“எப்படித் தலைவரே இவ்வளவு திடமாகக் கூறுகிறீர்கள்! அவன் சோழ தேச விசுவாசி போலத் தானே இருந்தான். இரண்டு தினங்களாக நாம் மாறு வேடத்தில் உறைந்தை முழுவதும் தேடியும் இளவல் பற்றியும், உறைந்தை அரண்மனை பற்றியும் எதுவும் நம்மால் அறிய இயலவில்லை. ஆனால் முதன் முதலில் அவன் தான் பேசி ஒரு ஒற்றனையும் நமக்கு அடையாளம் காட்டினான். அவன் மீதா தாங்கள் ஐயம் கொள்கிறீர்கள்!”

“ஆமாம் திருக்கண்ணா. எதனால் உமக்கு அவனிடம் நம்பிக்கை பிறந்ததோ! அதனால் தான் அவநம்பிக்கையும், ஐயமும் அவன் மேல் எனக்கு உண்டாயிற்று!

“புரியவில்லை தலைவரே!”

“சென்னி குடும்பம் பற்றியும் இளவல் பற்றியும் ஊரில் அனைவரும் பேச அச்சப்படும் சூழலில் எங்கிருந்தோ நாடோடியாக வந்த நம்மிடம் அவன் ஏன் அரசியல் பற்றிப் பேச வேண்டும்? அதற்கான அவசியமும் என்ன? நம்மிடம் பலரும் பேசவே அச்சப்படும் அரசியல் பற்றி அவன் பேசியதால் தானே அவன் மீது உனக்கு நம்பிக்கை பிறந்தது!”

“ஆமாம் தலைவரே!”

“அவன் மீது எதனால் எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை என்பதைக் கூறுகிறேன். கேள்!”

எதுவும் கூறாமல் அமைதியாக நடந்தான் திருக்கண்ணன்.

“முதல் சாமம் முடியும் முன்னரே உறைந்தை தெருக்களில் இருந்த அனைத்து கடைகளும் அடைக்கப்பட்ட பின் பூக்கடை மட்டும் ஏன் திறந்திருக்க வேண்டும்? பூக்கடையில் பெரும் வாளிற்கு என்ன வேலை?”

அரச உத்தரவிற்குக் கட்டுப்பட்டு முதல் சாமத்திலே தெருக்களில் இருந்த மற்ற விற்பனைக் கடைகள் அனைத்தும் மூடப்பட்டு இருக்கப் பூக்கடை மட்டும் திறந்திருந்ததும், பூக்கடைக்காரனின் வலது புறத்தில் துணியால் மறைத்து வைக்கப்படிருந்த பெரும் வாளின் கைப்பிடியும் திருக்கண்ணனின் நினைவிற்கு வந்து சென்றது.

“பூக் கடைக்காரனின் கைகள் மென்மையாகத் தான் இருக்கும். ஆனால் அவனது கைகளின் உறுதிக்கும், திண்மைக்கும் அவனது தொழிலுக்கும் பெரும் வேறுபாடு இருந்தது. மேலும் அவன் பேசிய விதமும், பூச்சரங்களைக் கையாண்ட விதமும், என்னைப் பற்றி என்னிடமே கேள்வி எழுப்பியதும் அவன் நம்மை ஆழம் பார்க்கிறான் எனப் புரிந்துகொண்டேன்.”

மலர்களையும், மலர்ச் சரங்களையும் எடுத்துக் காட்டி விலை கூறிய போது அவன் கைகளினால் மலர்ச்சரம் நசுங்கியதை நினைத்துப் பார்த்தான் திருக்கண்ணன்.

“மேலும் அவன் பேசியபோது பேச்சு மொழி, அவனது பார்வை, உடல் செய்கைகள் என ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருந்தது. அவனது வாய் மொழி அனைத்தும் வாய்மை இல்லை, கபடமும்

சூழ்ச்சியும் நிறைந்தவை என்பதை அவனது கண்களும், உடல்களும் காட்டிக்கொடுத்து விட்டன திருக்கண்ணா!”

பூக்கடைக்காரன் முகத்தை அங்குமிங்கும் ஆட்டிக்கொண்டு, அவன் பேசிய போது செங்குவீரன் முகத்தைப் பார்த்துப் பேசாமல் கண்களை மேலும் கீழும் உருட்டிக்கொண்டும், சேந்தன் என்று சுட்டிக் காட்டும் போது அவனது கை இயல்பாக இல்லாமல் முறுக்கிக்கொண்டு இருந்ததையும், கைகளில் பட்டு நசுங்கிய மலர்களையும் எண்ணிய திருக்கண்ணன் உப தலைவன் விறல்வேல் கூறுவது அனைத்தும் மெய் தான் என உறுதிபடுத்திக் கொண்டான்.

“ஆதலால் தான் கூறினேன் திருக்கண்ணா! பூக்கடைக்காரன் சுட்டிக்காட்டிய சேந்தன் மிகவும் ஆபத்தானவன். எனது அனுமானம் மட்டும் சரியாக இருந்தால் பூக் கடைக்காரனது பெயர் வேந்தனாகத்தான் இருக்க வேண்டும்.”

“வேந்தன் என அவ்வளவு அறுதியிட்டு எப்படித் தலைவரே கூறுகிறீர்கள்?”

“இவர்கள் இருவரையும் நான் சில தினங்களுக்கு முன் சம்பாபதி வனத்தில் கண்டேன் திருக்கண்ணா! அவர்களுக்கு என்னைத் தெரியாது! மிகவும் ஆபத்தானவர்கள். ஆனால் திறமை மிக்கவர்கள். அவர்களது திறமையையும் நாம் சாதாரணமாகக் கருதிவிடக் கூடாது. இல்லையெனில் எதிரிகள் என ஐயம் கொள்பவர்களிடம் அவர்களின் தேர்ந்த ஒற்றனைக்காட்டி தீர்த்துக்கட்ட முயல்வார்களா?”

தான் போர் பயிற்சியோடு கல்வியும் கற்ற வேளையில் எதிரில் இருப்பவர்களின் மன ஓட்டம், ஆற்றல், உடல் திறன், பலவீனம், அவன் பேசுவது மெய்யா? அல்லது பொய்யா? என ஒரே பார்வையிலேயே அறியும்படியான கண்களைப் பெற்றிருக்க வேண்டும் எனக் கற்றதை நினைவு கூர்ந்தவன் அத்தகைய திறமையில்லாவிடில் பார்ப்பதற்கு மட்டும் கண்கள் எதற்கு? எனத் தன் கண்களையே கடிந்துகொண்டான் திருக்கண்ணன். பின் சிந்தித்தவன், “தலைவரே தாங்கள் கூறுவது அனைத்தும் மெய் தான். ஆபத்து எனத் தெரிந்தும் செங்கோடனை அனுப்பி வைத்துள்ளீர்களே?” என வருத்தத்துடன் வினவினான்.

“திருக்கண்ணா, செங்கோடன் பின்தொடர்வதிலும், ஒற்றறிதலிலும் மிகவும் வல்லவர். நீ காவிரி நதியின் அக்கரையில் இருந்தாலும், இக்கரையிலிருந்து வேள் வீசி சாய்ப்பதில் வல்லவன். ஆனால் செங்கோடனைப் போன்று பதுங்கி ஒற்றாடலில் உமக்குப் போதிய பட்டறிவு கிடையாது. ஆதலால் தான் இப்பணிக்கு ஏற்ற அவரை அனுப்பினேன். உமக்கு ஏற்ற பணி உள்ளது திருக்கண்ணா! அப்போது உமது திறமையை நீ காட்டலாம். உமது வேல் வீசும் திறத்தைத் தான் நான் புகார் அவைக்களத்திலேயே கண்டேனே!” எனக் கூறிவிட்டு அமைதியாக நடந்தான்.

யார் எந்தப் பணியைச் சிறப்பாகச் செய்வர் என அறிந்து அவரை அந்தப் பணிக்கு சரியான தருணத்தில் பயன்படுத்திக் கொள்வதே தலைமைத் திறன் என அவன் கற்ற கல்வி தனது தலைவருக்கு முற்றிலும் பொருந்தி அதற்கேற்றது போல அவர் செயல்படுவதை எண்ணிய திருக்கண்ணன் அக்கணம் விறல்வேலிடம் தான் தளபதியாக இருப்பதை எண்ணி மிகவும் பெருமைபட்டுக் கொண்டான்.

“இன்னும் ஒரு ஐயம்! கேட்கலாமா?”

“தாராளமாகத் திருக்கண்ணா?”

“தலைவரே! அவன் இரட்டை அர்த்தங்களில் தங்களிடம் பேசும்போது நான் மலர்களைக் கொய்வதில் வல்லவன் என்றும், மலர்களோடு வம்பி’னையும் பறிப்பதில் வல்லவன் என என்னைப்பற்றி ஏன் அப்படிக் கூறினீர்கள்? தாங்கள் அப்படிக் கூறியபோது எனக்கு மிகுந்த அவமானமாகப் போய்விட்டது.”

“நான் என்னுடைய வணிக உதவியாளனைத் தானே மலர்களோடு வம்பினைப் பறிப்பதில் வல்லவன் என்றேன். உபதளபதி திருக்கண்ணனைக் குறிப்பிடவில்லையே! நான் சொன்னதில் உமக்கு வருத்தமிருந்தால் எனது மன்னிப்பைக் கோருகிறேன் திருக்கண்ணா!”

திடீரென உணர்ச்சி வசப்பட்ட திருக்கண்ணன் “தலைவரே! என்ன வார்த்தை கூறிவிட்டீர்கள். ‘மன்னிப்பு’ என்பதெல்லாம் பெரும் வார்த்தை. இன்னொரு முறை என்னிடம் அப்படிக் கூறாதீர்கள்!” என நாத்தழுதழுத்தான்.

“திருக்கண்ணா! நீ எமது ஆருயிர் நண்பன். அந்த உரிமையில் தான் அப்படிப் பேசலானேன். உளவியலில் இது ஒரு யுக்தி. அதாவது பெரும் மீன்களைப் பிடிக்க முதலில் புழுவினைப் போடுவதும் பின் வரும் சிறு மீன்களையும் பிடிக்காமல் கடைசியில் வரும் பெரிய மீன்களைப் பிடிப்பது போன்றது. நாம் ரகசியமாகப் பாதுகாக்கும் ஒரு செய்தியை மற்றவர்களிடம் கூறினால் அவர்கள் நம் மீது பெரும் நம்பிக்கை பெற்று அவர்கள் மனதில் உள்ள முழு இரகசியங்களையும் கூறிவிடுவார்கள். பூக்கடைக்காரன் ஒற்றன் சேந்தனைச் சுட்டிக்காட்டி நம்மிடமிருந்து ஏதாவது அறிந்துகொள்ள இயலுமா என முயன்றான். ஆனால், உனக்குக் காதலிகள் பலர் உள்ளனர் எனக் கூறி அவர்களது ஒற்றன் ஒருவனை நாம் அடையாளம் கண்டுகொண்டோம். இரண்டும் ஒரே யுக்திதான். ஆனால் அவன் ஏமாந்துபோனான்.” என்றபடியே மரத்து நிழலில் மறைந்து தம்மை யாரும் பின்தொடரவில்லை என்பதை உறுதிசெய்து கொண்டான் உப தலைவன் விறல்வேல்.

இருவரும் பேசியபடியே காவிரி ஆற்றங்கரையின் கரையோரமிருந்த தொடித்தோட் செம்பியன் கோட்டத்திற்கு வந்து சேர்ந்தனர். காவிரி ஆற்றின் இரு கரையிலும் புனல் செறிந்து ஆரவாரத்துடன் ஓடிக்கொண்டிருந்தது. சோழ இளவலின் நிலை அதற்கெப்படித் தெரியும். அப்படித் தெரிந்திருந்தால் அதுவும் ஓடாமல் உறைந்து போயிருக்கும்!

கோட்டத்திற்குள் சென்ற விறல்வேல் தனது வணிகர் வேடத்தைக் களைத்துவிட்டு அங்கு மறைத்துவைத்திருந்த தனது உடை மற்றும் போர் வாளை அணிந்துகொண்டு உபதலைவனாக வெளியே வந்தான். அவன் வந்ததைக் கண்ட திருக்கண்ணன் மிரண்டுவிட்டான். ஏனெனில் அவனது பார்வையும், நடையும் முற்றிலும் மாறியிருந்தது. அவனது பார்வையில் ஏதோ அறியாத இரகசியத்தைக் கண்டுகொண்டது போன்ற பிரகாசமும் நடையில் பெரும் கம்பீரமும், துணிவும் அதிகமாகியிருந்ததே திருக்கண்ணனின் மிரட்சிக்குக் காரணம் ஆகும். நாம் இருப்பது உறைந்தையில். இது எதிரிகளின் கோட்டையாகிவிட்டது. மாறுவேடத்தில் உள்ளபோதே நம் உயிருக்கு பெரும் அச்சுறுத்தல் உள்ளபோது இந்த உடையில் தலைவர் இருப்பதைக் கண்டால் இவரது நிலை என்னாவது? என எண்ணி அஞ்சினான் திருக்கண்ணன். ஒற்றர்களும், வீரர்களும் தேடிக்கொண்டு இருக்க உபதலைவனாக வெளியே

வந்ததைக் கண்ட திருக்கண்ணன் ‘‘இவர் ஏதோ தீர்க்கமான முடிவுடன் தான் வருகிறார்’’ என எண்ணியவனின் முகத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியைக் கவனித்தபடியே செங்குவீரன் தொடித்தோட் செம்பியன் கோட்டத்திற்கு அருகிலிருந்த சுமை தாங்கிக் கல் மீது அமர்ந்தான்.

செங்குவீரனின் முன் அமைதியாக நின்ற திருக்கண்ணனை அமரச் சொல்ல அவனும் அருகில் அமர்ந்துகொண்டான்.

இருவருக்குமிடையில் நிலவிக்கொண்டிருந்த அமைதியை முதலில் திருக்கண்ணன் தான் களைத்தான்.

‘‘தலைவரே!’’

‘‘கூறு திருக்கண்ணா!’’

‘‘நாமும் இரண்டு தினங்களுக்கு மேலாக இளவலைப் பற்றி ஏதேனும் தகவல் கிடைக்குமா? என உறைந்தை முழுவதும் தேடிக்கொண்டிருக்கிறோம். நம் ஒற்றர்கள் அரண்மனை, கோட்டை என எங்குத் தேடியும் எந்தவித செய்தியும் இதுவரை கிடைக்கவில்லை. போகிற போக்கைப் பார்த்தால் இருங்கோவேளிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது தான் வழி போலும்!’’

‘‘பொறு திருக்கண்ணா! நானும் இளவலைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்’’ என்றபடியே தனது பார்வையைத் திருக்கண்ணனின் விழிகளில் நிலைநிறுத்தினான் செங்குவீரன்.

‘‘தலைவரே, தங்களைக் கண்டால் என்ன செய்ய வேண்டும் என ஏற்கெனவே முடிவெடுத்துவிட்டு அமர்ந்திருக்கிறீர் என எனக்குத் தோன்றுகிறது!’’

‘‘ஆமாம் திருக்கண்ணா!’’

‘‘என்ன தலைவரே?’’

‘‘சற்று முன் நீ கூறியது தான்!’’

‘‘நான் கூறியதா.....!’’ எனச் சிந்தித்தவன் பின் ‘‘இருங்கோவேளிடம் தான் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் எனக் கூறினேன்’’ என்றான்.

“அதேதான் திருக்கண்ணா! அதைத்தான் செய்யப் போகிறேன். நான் அரண்மனைக்குள் நுழையப் போகிறேன். அங்கு இருங்கோவேளை சந்திக்கப் போகிறேன்.”

செங்குவீரன் பேசியதைக் கேட்டு பெரும் அதிர்ச்சியடைந்து எழுந்துவிட்டான் திருக்கண்ணன். ‘தமது தலைவரின் புத்தி ஏதேனும் பேதலித்து விட்டதா! எதிரிகளின் வாளுக்குத் தனது தலையைத் தானே நீட்டப் பார்க்கிறாரே!’ என எண்ணியவன் பின்னர்த் தன் தலைவர் எந்தச் செயலைச் செய்தாலும் அதில் முன் எச்சரிக்கையுடனும், தகுந்த பாதுகாப்பையும் செய்த பின், அதிலுள்ள ஆபத்துகளை அறிந்து தான் இப்படிப்பட்ட ஆபத்தான செயல்களைச் செய்யத் துணிவார் என நம்பிக்கை கொண்டவன், “தலைவரே இதிலுள்ள ஆபத்துகளையும், இந்தச் செயலின் விளைவையும் அறிந்த பிறகும் தாங்கள் ஓநாயின் கூடாரத்திற்குள் செல்ல முயல்வது அறிவுடைமை தானா?” எனக் கேட்டு அதிர்ச்சியிலிருந்து மீளாதவனாய் செங்குவீரனின் முகத்தைப் பார்த்தான் திருக்கண்ணன். நிலவொளியும் அவனது முகத்தில் பட்டு எதிரொளிக்க அமைதியுடன் அமர்ந்திருந்த செங்குவீரனிடம், “கட்டளையிடுங்கள் தலைவரே! தங்கள் பணியை நிறைவேற்ற சித்தமாக உள்ளேன்!” என்றான்!

“திருக்கண்ணா! நீ உடனே சோழ அரண்மனையின் கிழக்கு வாசலுக்குச் செல். அங்கு தான் அரண்மனையிலிருந்து அவசரமாக வெளியேறும் வழி உள்ளது. நெருக்கடி காலத்தில் அரண்மனையை மூடியபின் அவசரப் பணிக்கு அதனைத் தான் பயன்படுத்துவர். இப்போதிலிருந்து அடுத்த ஒரு நாழிகைக்குப் பின் யார் வெளியே சென்றாலும் அவர்களைப் பின் தொடர்!”

“நான் அவர்களைப் பின் தொடர்வதினால் இளவலை எப்படித் தலைவரே கண்டறிய இயலும். இது எப்படிச் சாத்தியம்!”

“உறைந்தை அரண்மனையிலிருந்து அவசரக் கட்டளையாக வெளியேறுகிறார்கள் எனில் அரண்மனைக்குள் அதற்குத் தகுந்த சூழலை நாம் தான் உருவாக்க வேண்டும். வெறுமனே இளவல் இருக்கும் இடத்தை விடுத்து மற்ற இடங்களில் தேடுவதில் எந்தப் பயனும் இல்லை திருக்கண்ணா. அது

மடத்தனம். இளவலை மறைத்து வைத்துள்ள இருங்கோவேள் அனைத்து இரகசியங்களையும் அவனே என்னால் விடுவிக்கப் போகிறான்!''

''அப்படியானால்....! தாங்கள் மட்டும் தான் அரண்மனைக்குள்......'' எனக் கேட்டபடியே மீதி வாக்கியத்தை விழுங்கினான் திருக்கண்ணன்.

''நான் மட்டும் தான் அரண்மனைக்குள் சென்று இருங்கோவேளை சந்திக்கப் போகிறேன்! நீ அரண்மனை வாசலுக்குச் சென்று அவனைப் பின் தொடர்ந்து செல்''

''தலைவரே, நானும் தங்களுக்குத் துணையாக உங்களுடன் வருகிறேன்!''

''வேண்டாம் திருக்கண்ணா. நான் மட்டும் உள்ளே என்றால் சூழும் ஆபத்துகளிலிருந்து என்னைக் காப்பாற்றிக்கொள்ள இயலும். நீயும் என்னோடு வந்துவிட்டால் தப்பிப்பது சிரமமாகிவிடும். ஆபத்தும் இரட்டிப்பாகிவிடும். உள்ளே சென்று நான் செய்யப் போகும் செயலில் இளவலை இருங்கோவேள் இன்றே கொல்லச் சொல்லி கட்டளையிடுவான். அந்தக் கட்டளையை நிறைவேற்ற எப்படியும் சிலர் அரண்மனையை விட்டு வெளியேறுவார்கள். அவர்களைப் பின்தொடர்ந்து இளவல் இருக்கும் இடத்தைக் கண்டறிந்து அவரைக் காப்பாற்றி இரும்பிடர்த்தலையரிடம் ஒப்படைத்து விடு. மற்றதை அவரும், மகேந்திர வளவனாரும் பார்த்துக்கொள்வார்கள்! இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள். தவறவிட்டால் சோழ குடியே மாய்ந்துவிடும்! எச்சரிக்கை!''

''தங்கள் கட்டளைப் படியே அனைத்தும் நடக்கட்டும்! தங்களை நான் மீண்டும் எங்குச் சந்திக்க?''

''இறைவன் அருள் இருந்தால் இளவலை அடைத்து வைத்திருக்கும் இரகசிய இடத்தில் நாம் இருவரும் சிந்திப்போம். நான் வரவில்லையெனில் இளவலை நீ காப்பாற்றியபின், இருவரும் தப்பிவிடுங்கள். நாளை பரிதி உதயமாவதற்குள் நான் உங்களைச் சந்திக்காவிடில் நான் அரண்மனையிலேயே அஸ்தமனமாகிவிட்டேன் என முடிவு செய்து கொள்!''

உபதலைவன் விறல்வேல் தனது உயிரையே பணயமாக வைத்துச் செய்யத் துணியும் காரியத்தை எண்ணித் திகைத்த திருக்கண்ணன்,

“தலைவரே, இளவலை மீட்க வேறு மார்க்கமே இல்லையா?” என வருத்தத்துடன் வினவினான்.

“இதனைவிட்டால் வேறு மார்க்கம் இல்லை திருக்கண்ணா! மற்ற அனைத்து மார்க்கங்களிலும் முயன்று தோல்வியைத் தழுவிவிட்டோம். இளவலைக் கண்டறிந்தால் தான் சோழ தேசத்திற்கே எதிர்காலம்! இல்லையேல் அடிமை வாழ்வுதான். அடிமை வாழ்வைக் களைய எனது ஒருவனின் உயிரைப் பணயம் வைப்பதும், இழப்பதும் இழப்பாகாது. இல்லையேல், சேரனுக்கும் பாண்டியனுக்கும் காலம் காலத்திற்கும் நாம் கப்பம் செலுத்த நேரிடும்!”

“தலைவரே, அதற்காகத் தாங்கள் உயிரைப் பணயமாக வைத்து மரணத்தின் வாசலுக்குச் செல்ல வேண்டுமா?”

“வாழ்வு என்பது மரணத்தை விட மேன்மையானது என்பதை அரும்பாடு பட்டாவது அறிந்துகொள்ள வேண்டும் திருக்கண்ணா! அந்த உயர்ந்த வாழ்வினை அடைய மரணத்தை அடைய நேர்ந்தாலும் கவலை கொள்ளக் கூடாது! இந்தக் கடைசி மார்க்கம் நிச்சயம் நமக்கு வெற்றியைத் தரும். இல்லையேல்....”

“இல்லை என்ற மாற்றுக்கருத்தே வேண்டாம் தலைவரே! இளவலோடு நாம் நிச்சயம் மீண்டும் சந்திப்போம்!” எனக் கூறியவன் பின் சோழ ராக்காவல் வீரன் போன்று மாறு வேடமணிந்து சோழ அரண்மனையை நோக்கி அவனது புரவியில் விரைந்தான்.

இடையுறையிலிருந்த வாளை உருவியபடியே தொடித்தோட் செம்பியன் கோட்டத்திற்க்குள் நுழைந்த செங்குவீரன் இருளில் மறைந்தான்.

# 26. செ ம்பியன் கோட்ட மர்மம்

தொ டித்தோட் செம்பியன் எனும் சோழ மன்னன் தான் புகார்ப் பட்டினத்தில் முதன் முதலில் இந்திரத் திருவிழாவைத் தொடங்கி வைத்தவன். இவரது வேண்டுகோளின் படி விண்ணவர் தலைவனான இந்திரன் சித்திரைத் திங்கள் முழுவதும் புகார் வந்திருந்து பூசனையை ஏற்றுக்கொண்டதாக மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது. ‘தொடித்தோட் செம்பியன்’ என்றும் ‘நற்றேர்ச் செம்பியன்’ எனவும் புகழப்பட்ட சோழன் செம்பியன் கோப்பெருஞ்சோழன், பெருநற்கிள்ளி, இளஞ்சேட்சென்னி முதலானவர்களுக்கு முற்பட்டவன்.

சங்க காலத் தொடக்கத்தில் அல்லது அதற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்து பெரும்புகழுடன் ஆட்சி செலுத்திய தொடித்தோட் செம்பியன் வானம் எனும் ஊரில் கடவுள் அஞ்சி என்பவனின் கோட்டையைத் தாக்கி அழித்தான். இக்கோட்டையில் சுருள் போன்ற கதவானது உயர்ந்த வானத்திலிருந்து தொங்கிக்கொண்டு பெரும் வலிமையுடன் காணப்பட்டது. யாரேனும் அருகில் நெருங்கினாலும் அதிலிருந்து அம்புகளும், வேல்களும் வெளிப்பட்டுத் தாக்க முனைபவர்களை அழித்துவிடும் வல்லமையுடையது. அமைதியாக இருந்து தாக்கி எதிரிகளை அழித்துவிடுவதனால் இக்கோட்டைக் கதவு ‘தூங்கும் எயிற்கதவம்’ எனப்பட்டது. யாராலும் நெருங்கக்கூட இயலாமல் இருந்த கோட்டையை அழித்து இவனது பேராற்றலை வெளிப்படுத்தி ‘தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்’ எனப் புகழப்பட்டான்.

இவ்வளவு பேராற்றலை உடைய மன்னனான இவனுக்கு மற்றொரு குணமும் உண்டு. அதுதான் கருணை. கருணையே வடிவான செம்பியன் நந்தவனத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போது வேடனால் தாக்கப்பட்ட புறா ஒன்று தனது மடியினில் விழ, அதனைக் காக்க தனது தொடைத்

தசையையே அறுத்துக் கொடுத்த பெரும் கொடைத் தன்மை உடையவன். தன்னை நாடி வந்தவர்களுக்குக் கருணையே வடிவாய் உதவுபவன். ஆனால் எதிர்க்கத் துணிந்துவிட்டால் அவர்களை அழித்து விடுவதில் வல்லவன். அதாவது இவன் ஒருவனே மக்களுக்கு நிலவு போலவும், பரிதி போலவும் காட்சியளிக்கும் தன்மையுடையவன்.

இப்படிப் பெரும் வீரமும், கருணை உள்ளமும் கொண்ட செம்பியன் தன்னை நாடி அடைக்கலம் தேடி வந்தால் உயிரையே தந்து காக்க வேண்டும் என்ற அற நெறியையும், எதிர்த்தால் அவர்களை அழித்துவிட வேண்டும் என்ற போர் நெறியையும் உடைய மாமன்னனுக்குக் காவிரிக் கரையோரம் மண்டபம் எழுப்பிக் கோயில் எடுத்திருந்தார்கள் இளஞ்சேட்சென்னியின் முன்னோர்கள்.

இந்தச் செம்பியன் கோட்டத்தில்தான் பெரும் இரகசிய சுரங்கப் பாதையை அமைத்திருந்தார் இரும்பிடர்த்தலையர். உறைந்தை அரண்மனையின் முதன்மையான அமைச்சர்கள் பயன்படுத்தும் சுரங்கப்பாதை, அரண்மனையின் மந்திராலோசனை மண்டபம், அரசன் மனைவியுடன் வசிக்கும் அந்தப்புர மாளிகை என எங்கும் இதன் வழியாகச் சென்றுவிட இயலும். இந்த இரகசியப் பாதை வளவனாருக்குக் கூடத் தெரியாது. மகேந்திர வளவனாரின் மகன் திவ்யன் கொல்லப்பட்ட பின் அவர் தலைமைத் தளபதி பொறுப்பிலிருந்து விலகியபின் சோழ அரசுக்கு ஏற்பட்ட பெரும் அச்சுறுத்தலையும், இளவயதான இளவலைக் காக்க வேண்டிய நிர்பந்தத்தையும் கண்ட இரும்பிடர்த்தலையர் பெரும் இரகசியத்துடன் இச்சுரங்கப் பாதையை அமைத்திருந்தார். அவர் செம்பியன் கோட்டத்தை தேர்ந்தெடுத்ததற்கான முக்கியக் காரணம் அதன் அமைவிடமே ஆகும்! அவசர காலத்தில் உறைந்தை அரண்மனையிலிருந்து தப்பி வந்தால் காவிரி நதியின் வழியாக எளிதில் புகார் சென்றடைந்து விடலாம். மேலும் சுரங்கம் அமைக்கையில் தோண்டப்படும் மண்ணைக் காவிரி நதியில் கொட்டினால் அது புனல் பிரவாகத்தில் வண்டல் போன்று கரையில் சேர்த்துவிடும். சுரங்கம் தோண்டுகிறார்கள் என்ற ஐயம் யாருக்குமே தோன்றாது. மேலும் தலைக்காவிரி அக்காலத்தில் கொள்ளிடம், காவிரி எனக் கிளை நதிகளாய்ப் பிரிந்திருக்காமல் ஒரே நதியாகவே புகாரில்

சங்கமித்துக்கொண்டிருந்தது. ஆதலால் காவிரியில் எப்போதும் புனல் இரு கரைகளையும் தொட்டு ஓடிக்கொண்டே இருக்கும்.

உறைந்தை முழுவதும் இருங்கோவேளின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின் இச்சுரங்கம் வழியாகத் தான் இரும்பிடர்த்தலையர் மீன் பிடிக்கும் பரதவன் போன்று மாறுவேடம் புனைந்து புகாரை அடைந்திருந்தார். அதற்கு முன் இளவலும் இதன் வழியாகவே இரும்பிடர்த் தலையரின் ஒற்றர்களிடமிருந்து தப்பினார்.

எதிரிகள் யாரேனும் இங்குச் சுரங்கம் உள்ளதா என ஐயம் கொண்டாலும் சுரங்க வாயிலை அவ்வளவு எளிதில் கண்டுபிடித்துவிட இயலாது. ஏனெனில் சுரங்க வாயிலைத் திறக்கும் திறவுகோல் பல சிக்கல்களை உடையது! புத்தரது கையைப் பிடித்து இழுத்ததும் திறந்த சுரங்கம் போன்றதல்ல இது. இப்படிப்பட்ட சுரங்கம் உள்ளதும், அதனைத் திறக்கும் வழிமுறையும் இரும்பிடர்த்தலையர், சோழ இளவல் மற்றும் உப தலைவன் விறல்வேல் என மூவருக்கு மட்டுமே தெரியும்.

செம்பியன் கோட்டத்திற்குள் சென்ற விறல்வேல் எரிந்துகொண்டிருந்த விளக்கிலிருந்து தீப்பந்தத்தை ஏற்றினான். கோயிலுக்கு உள்ளே தீப்பந்தம் எரிந்தாலும், அதன் வெளிச்சம் வெளியே இருப்பவர்களுக்குத் தெரியாத வண்ணம் சிறப்பான கட்டமைப்பு வசதியுடன் மண்டபம் வடிவமைக்கப்பட்டிருந்ததனால் எதைப்பற்றியும் கவலை கொள்ளாத விறல்வேல் செம்பியன் சிலைக்கு முன் விழுந்து வணங்கி தான் மேற்கொள்ளப் போகும் சவால் மிகுந்த செயலுக்குத் துணை நிற்க வேண்டும் என வேண்டிக்கொண்டான். பின் எழுந்தவன் செம்பியன் சிலையின் இருபுறங்களிலும் இருந்த ஒற்றைப்படைக் கற்களை மட்டும் ஒவ்வொன்றாக உள்ளே அழுத்தினான். பின்னர்ச் சுவரின் பெரும் பாறையோடு இருந்த செம்பியன் சிலையின் இடது கை வீர வேலைத் தாங்கியும் வலது கை வாளைப் பிடித்திருப்பது போன்று வெறுங்கையுடன் மூடியிருந்தது! அதன் அடியில் நீண்டிருந்த சுவர் பாறையின் நீட்சியிலும் பெரும் துளை காணப்பட்டது. விறல்வேல் தனது வாளை எடுத்து செம்பியனின் வெறுங்கையில் திணித்தான்,

அது செம்பியனின் கையிலும், கீழே இருந்த பாறையின் துளையிலும் கச்சிதமாகப் பொருந்தியது.

இளவரசன் வளவனின் வாளும், உபதலைவனின் வாளும் ஒரே மாதிரி இருப்பதற்குப் பல படைத் தலைவர்களும், அமைச்சர்களும் ஆட்சேபணையைத் தெரிவித்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு இரும்பிடர்த்தலையர் பல காரணங்களைத் தெரிவித்துக் கொண்டிருந்தாலும் வாளின் இரகசியம் இந்தச் சுரங்க வாயில் தான்!

பொருந்தியிருந்த தனது வாளின் நுனியைப் பிடித்து முன்னாள் இழுத்தபடியே கீழே அழுத்தினான் உப தலைவன். பெரும் அதிசயம் நடந்தது அப்போது. செம்பியன் சிலை வடபுறமும், கீழே இருந்த பாறை அப்படியே உயர அங்குச் சுவரில் பெரும் துளை ஏற்பட்டு சுரங்க வாயில் தோன்றியது. வாள் செம்பியன் கையில் உள்ளவரை மட்டுமே வாயிற் கதவு திறந்திருக்கும். வாளை அங்கிருந்து எடுத்தவுடன் சுரங்க வாயிற்கதவு சிறிது சிறிதாக மூட ஆரம்பித்துவிடும். அந்தச் சிறிது கால இடைவெளியில் உள்ளே நுழைந்துவிட வேண்டும் என்பதை அறிந்த விறல்வேல் தனது வாளை எடுத்துக்கொண்டு தீப் பந்தத்துடன் சுரங்கத்திற்குள் நுழைந்தான். விறல்வேல் உள்ளே நுழைந்துவிட மீண்டும் சுரங்கப் பாதை மூடி செம்பியன் சிலையும் சுவர் பாறையும் தனது பழைய இடத்தில் நிலை நின்றன.

உபதலைவன் விறல்வேல் செம்பியன் சுரங்கத்திற்குள் சென்றுவிட நதியின் அக்கரையில் காளனும் அவனது நண்பன் வில்லவனும் எதிர்பாராத விதமாக சந்தித்துக்கொண்டார்கள். தனது நண்பன் வில்லவனைக் கண்ட காளனுக்குப் பெருத்த ஆச்சர்யம்! அதே சமயம் பெரும் இன்பமும் ஏற்பட மகிழ்ச்சியில் அவனைத் தழுவிக்கொண்டான். காளன் டாள்தொபியாசிடமிருந்து தப்பி விட்டது ஏற்கெனவே தெரிந்திருந்ததனால் வில்லவனுக்கு எந்த ஆச்சர்யமும் ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் அவனுக்கும் தனது நண்பனைக் கண்டதில் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டதை அவனது அணைப்பிலிருந்தே காளன் அறிந்துகொண்டான்.

காளனைத் தழுவியபடியே வில்லவன், ‘‘நண்பா! புத்தர் சிலை மர்மத்தை நீ நிச்சயம் தெரிந்துகொள்வாய் என எண்ணியிருந்தேன் நான். உன்

அறிவையும் திறமையையும் நீ மற்றொரு முறை நிரூபித்துவிட்டாய்! உன்னைக் கண்டதில் மகிழ்ச்சி நண்பா! புத்தர் சிலை மர்மத்தை உன்னிடம் கூறக்கூட அவகாசம் கிடைக்கவில்லை! அதற்குள் யவனத் தளபதி குறுக்கிட்டு சூழ்ந்துகொண்டார்!'' என வில்லவன் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த காளன், ''ஆமாம் நண்பா! முதலில் நான் தப்பிக்க இயலாதோ எனத் தடுமாறி விட்டேன். அக்னிபுத்திரனின் துரோகம், தோளில் ஏற்பட்ட காயம் என வாடிய நிலையில் சிறை வாசமும் தேவைதானா? எனக் கலங்கிக் கொண்டிருந்தேன். பின் தான் உன் நினைப்பு வர நீ எது செய்தாலும் அதில் ஓர் உட்காரணம் இருக்கும் என நம்பி அறை முழுவதும் தேடிய பின் புத்தர் சிலை மர்மத்தைக் கண்டறிந்து தப்பிவிட்டேன்!'' என நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் கூறினான். ஆனால், பத்திரையைச் சந்தித்தது பற்றியோ அவளிடம் மனதைப் பறிகொடுத்தது பற்றியோ அவள்தான் தனக்கு மருத்துவம் பார்த்தவள் என்பதைப் பற்றியோ மூச்சு கூட விடவில்லை காளன்!

திடீரெனக் காளனது மௌனத்தையும், அவன் தோளில் ஏற்பட்டிருந்த காயம் குணமடைந்து அவன் ஆரோக்யமாக நிற்பதைக் கண்ட வில்லவன், ''நண்பா! உனது காயத்தைக் கண்டபோது ஒரு கிழமைக்கு மேல் உன்னால் நடமாட இயலாது என எண்ணியிருந்தேன். ஆனால் உன்னைப் பார்த்தால் இப்போது முற்றிலும் குணமடைந்தவன் போலத் தோன்றுகிறாயே! பௌத்தர்களின் வைத்தியம் இவ்வளவு விரைவாகக் காயத்தைக் குணமாக்கும் அளவிற்கு முன்னேற்றம் அடைந்துவிட்டதா?'' என வினவ அதற்குக் காளன், ''எனக்கு மருத்துவம் பார்த்தவரை ஒரு நாள் நீ நிச்சயம் சந்திப்பாய் வில்லவா!'' எனக் கூறியவன் பின் ''நீ எப்படி வில்லவா டாள்தொபியாசின் காவலிலிருந்து தப்பித்தாய்?'' என வினவவும் அங்குத் தோணிக்காரன் தோணியோடு வரவும் நேரம் பொருத்தமாக இருக்க இருவருக்குமிடையில் அமைதி ஏற்பட்டது.

தோணியையும், துடுப்பையும் வாங்கிக்கொண்டு தோணிக்காரனை அனுப்பிவிட்டு வில்லவன் காவிரி நதியில் துடுப்புப் போட இருவரும் அக்கரையை நோக்கிப் பயணித்தனர்!

“உன்னுடன் பௌத்த விகாரில் இருந்த ஒரே காரணத்திற்காக என்னைச் சிறையில் அடைத்திருப்பது நீதி இல்லை எனக்கூறி பெரும் சான்றோரான இரும்பிடர்த்தலையர் விடுவித்துவிட்டார்” எனச் சாதாரணமாகக் கூறினான் வில்லவன்.

புகாரிலும், சோழ தேசத்திலும் தனது தமையனுக்கு உள்ள அதிகாரத்தையும், செல்வாக்கையும் கேட்ட இளந்திரையன் பெரிதும் மகிழ்ந்தான். ஆனால் அவனது மகிழ்ச்சி முகத்தில் தோன்றா வண்ணம் பார்த்துக்கொண்டான். காரணம் இளந்திரையன் இரும்பிடர்த்தலையரின் தம்பி எனத் தனது ஆருயிர் நண்பனான வில்லவனுக்கே கூறாமல் இருந்தான்.

பொன்னி நதியில் எதிரொலித்த நிலவின் குளிர் கரங்களை அனுபவித்தபடியே தான் விடுவிக்கப்பட்டதற்கான காரணத்தை உள்ளூர எண்ணிப்பார்த்தான் வில்லவன்! அவன் எண்ணிய போது அவனது முகம் பலவிதமாக மாறிக்கொண்டிருந்ததை நதியின் இருளில் காளன் கவனித்திருக்கவில்லை. அப்படி அவன் கவனித்திருந்தால் நடக்கப்போகும் நிகழ்வுகளும் மாறியிருக்கும்!

புகார்ப் பட்டினத்தின் சிறைச்சாலை மிகவும் பாதுகாப்பானது! யாரும் சிறைச்சாலையிலிருந்து தப்பிவிடக் கூடாது என்பதற்காகக் காவிரி நதியின் ஓரத்தில் தரைக்குக் கீழே பாதாளத்தில் அமைக்கப்பட்டிருந்தது. சிறைச்சாலை அறைக்குள் எப்போதும் குளிர்ந்த சூழலே நிலவிக்கொண்டிருக்கும், அந்தக் குளிரே கைதிகளுக்கு வேண்டிய தண்டனைகளை அளித்துக்கொண்டிருந்தது. இருள் மட்டுமே நிறைந்த அறைகள். யாராவது தப்பிக்க எண்ணி சுவரை சேதப்படுத்தினாலோ அல்லது கற்களைப் பெயர்த்தெடுக்க முயன்றாலோ நதியின் நீர் சிறைச் சாலைக்குள் ஊற்றெடுத்து அதுவே அவர்களுக்கு தண்டனையாகிவிடும். தப்பிக்க எத்தனித்தவர்கள் சிறைக் காவலர்களிடம் சிக்கி கடுமையான தண்டனைக்கு உள்ளாவார்கள்! அதற்குப் பயந்தே யாரும் தப்பிக்க முயலமாட்டார்கள். அப்படிப்பட்ட கடுமையான ஓர் அறையில் வில்லவனை அடைத்து வைத்திருந்தான் யவனத் தளபதி டாள்தொபியாஸ்.

காளன் பௌத்த விகாரிலிருந்து மாயமாக மறைந்தபின் டாள்தொபியாஸ் நேரே வில்லவனிடம் தான் சென்றான். காளன் எப்படித்

தப்பியிருப்பான் எனக்கேட்டு அதற்கு வில்லவன் டாள்தொபியாஸ் எதிர்பார்த்த பதிலைக் கூறாததால் “அவனைச் சங்கிலியால் பிணையுங்கள்!” எனக் கட்டளையிட வீரர்கள் அவனைச் சங்கிலியால் இறுகப் பிணைத்தனர்!

தனது வாளை வில்லவனின் கழுத்தில் வைத்த டாள்தொபியாஸ், “வில்லவா உனது நண்பனைக் காக்க உனது உயிரை இங்கேயே விட்டுவிடாதே! அவன் எப்படிப் பௌத்த விகாரிலிருந்து தப்பித்தான் எனக் கூறப் போகிறாயா இல்லையா?” என மிரட்டினான்.

தனது நண்பனும், தானும் இப்படி ஆபத்தில் சிக்கிக் கொண்டோமே என மன உளைச்சலில் இருந்த வில்லவனுக்குக் காளன் தப்பிவிட்டான் எனக் கேட்டபோது பெரிதும் மகிழ்ச்சி அடைந்தான். மகிழ்ச்சியில் தனது நிதானத்தையும், அறிவையும் இழக்காத வில்லவன் “தளபதியாரே! எனது நண்பன் எப்படித் தப்பித்தான் எனத் தாங்கள் தான் எனக்குக் கூறவேண்டும். ஏனெனில் அவன் தங்களது பாதுகாப்பிலிருந்து தப்பியிருக்க என்னிடம் கேட்பது அறிவுடைமை தானா?” எனத் திருப்பிக்கேட்டான்.

வில்லவனின் பதிலைக் கேட்ட டாள்தொபியாஸ் மிகவும் எரிச்சலைடைந்து சிவந்து கோபமடைந்திருந்த தனது முகத்தை வில்லவனின் முகத்திற்கு நேருக்கு நேர் இருந்தபடியே “மூடனே! புத்திசாலி போன்று திருப்பிக் கேள்வி கேட்காதே! கேட்ட கேள்விக்குப் பதில் கூறப் போகிறாயா இல்லையா?” என்றான்.

யவனத் தளபதி போன்று கோபம் கொள்ளாமல் பொறுமையுடன் பதிலளித்த வில்லவன், “காளன் எப்படித் தப்பினான் எனக் கூற இயலாது! ஆனால் அவன் எங்கே சென்றிருப்பான் என மட்டும் எனக்குத் தெரியும்!” என்றான்.

அதிகாரத்துடன் டாள்தொபியாசிடமிருந்து சொற்கள் வெளிப்பட்டன “அவன் எங்கே சென்றுள்ளான்?” என்று.

“அவன் சென்ற இடத்தை நான் உங்களுக்குத் தெரிவித்தாலும் அதனால் உங்களுக்கு எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை!”

“ஏன்?”

“உங்களது அதிகாரம் செல்லுபடியாகாத இடத்திற்குச் சென்றுவிட்டான்!”

“அவன் சென்றுள்ளது சோழ தேசத்திற்குட்பட்ட இடம் தானே?”

“ஆமாம்!”

“சோழ தேசத்தில் எனது அதிகாரம் செல்லுபடியாகாத இடம் என ஏதேனும் இருக்கிறதா?”

“இருக்கிறது தளபதியாரே!”

“அப்படிப்பட்ட இடம் எதுவென நான் தெரிந்துகொள்ளலாமா?”

“உறைந்தை!”

“உறைந்தைக்கா?” ஆச்சரியமும், வினாவும் கலந்த ஒரு சொல்லை வெளிப்படுத்தினான் டாள்தொபியாஸ்!

“தளபதியாரே நான் கூறியது உண்மைதானே! அங்கு உமது அதிகாரம் செல்லுபடியாகாது தானே!” ஏளனத்துடன் கேட்டான் வில்லவன்.

காளன் உறைந்தைக்குச் சென்றுவிட்டான் எனக் கேட்டதுமே டாள்தொபியாசிற்குத் தனது தலைவர் செங்குவீரன் கூறியவை நினைவிற்கு வந்தன. காளனைக் கைது செய்யத் தான் புகார் வந்தபின்னரே உறைந்தையில் மன்னர் கொல்லப்பட்டது, இளவல் மறைந்தது, சம்பாபதி வனத்தில் வானவல்லியைக் கவர முற்பட்டது! என ஒவ்வொன்றாகக் காளனைப் பற்றி நினைவிற்கு வர எப்போதும் பெரும் எச்சரிக்கையுடன் இருப்பவன் காளனிடத்தில் இப்படி எச்சரிக்கையின்றி இருந்துவிட்டோமே! என வருந்தினான். ஆனால் தான் வருந்துவதை வில்லவனிடம் காட்டிக்கொள்ளாமல், “வில்லவா! அவன் உறைந்தைக்கு எதற்காகச் சென்றுள்ளான் எனக் கூறு!” என மேலும் கடுமையாக விசாரித்தான் டாள்தொபியாஸ்.

“தளபதியாரே! எனக்குத் தெரிந்தவற்றை நான் உங்களுக்குத் தெரிவித்துவிட்டேன். எனக்குத் தெரியாததைப் பற்றித் தாங்கள் வினவினால் எப்படி என்னால் பதிலளிக்க இயலும். சில செய்திகள் தங்களிடம் கூறுவதற்கில்லை” எனப் பதிலளித்தான் வில்லவன்.

“என்னிடமே கூறுவதற்கில்லை எனத் திமிருடன் பேசுகிறாயா? இப்போது கூறப் போகிறாயா? இல்லையா?” எனக் கோபப்பட்ட டாள்தொபியாஸ் “உமது தலையை இப்போதே கொய்யப் போகிறேன்” எனக் கூறியபடியே வாளை உருவினான். அதன் பின்னும் எதையும் கூறாமல் வில்லவன் நிற்பதைக் கண்டவன் வாளை நோங்கி வில்லவனின் கழுத்தை நோக்கி வீசினான். பெரும் வீரனான வில்லவன் தனது கண்களைக் கூட அச்சத்தில் மூடாமல் டாள்தொபியாசின் வாளினைத் தனது கழுத்தில் வாங்கக் காத்திருந்தான். டாள்தொபியாசின் வாள் அவனது கழுத்தை நோக்கி வர திடீரென, “நில் டாள்தொபியாஸ்!” என்ற அதிகாரக் குரல் அவனை அடைய கழுத்தை நோக்கிச் சென்ற வாளினை நிறுத்தினான்.

குரல் வந்த திசையை இருவரும் நோக்கினர்.

இதுவரை இருவருக்குமிடையில் நடந்த உரையாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்த இரும்பிடர்த்தலையர் அவர்களை நோக்கி வந்தார். இரும்பிடர்த்தலையரைக் கண்டதும் டாள்தொபியாஸ் பணிந்து வணங்கினான். வில்லவனின் கைகள் கட்டப்பட்டிருந்ததனால் தலையை மட்டும் தாழ்த்தி அவருக்குத் தனது வணக்கத்தைத் தெரிவித்தான்.

இருவரது பணிவையும் ஏற்றுக்கொண்ட இரும்பிடர்த்தலையர் “வில்லவா டாள்தொபியாசிடம் கூற இயலாது என்றதை என்னிடம் கூற இயலுமா?” என அவனது விழிகளில் தனது விழிகளை நிலைக்க விட்டபடி அமைதியாகக் கேட்டார்.

வில்லவன் சுற்றி நின்ற வீரர்களைப் பார்க்க, அவன் தனிமையை எதிர்பார்க்கிறான் என்பதைப் புரிந்துகொண்ட டாள்தொபியாஸ் “சங்கிலிகளை அவிழ்த்து அனைவரும் வெளியேறுங்கள்!” எனத் தனது வீரர்களுக்குக் கட்டளையிட வீரர்களும் அவனது கட்டளையை நிறைவேற்றிவிட்டு அங்கிருந்து வெளியேறினர்.

“மேலே கூறு வில்லவா!” எனக் கட்டளையிட்டார் இரும்பிடர்த்தலையர்.

இதுவரை டாள்தொபியாசிடம் சரிக்குச் சரியாக அவனது முகத்தைப் பார்த்துப் பேசிக்கொண்டிருந்த வில்லவன் இரும்பிடர்த்தலையரிடம் பணிவுடன் குரலைத் தாழ்த்தி அடக்கத்துடன் பேசலானான்.

“பெருந்தகையே! காளன் உறைந்தைக்குச் சென்றுள்ளான் எனத்தான் எனக்குத் தெரியும். ஆனால் அவன் எதற்காக அங்கு அனுப்பப்பட்டுள்ளான் என எனக்குத் தெரியாது புலவரே!”

“அனுப்பப்பட்டுள்ளானா?”

“ஆமாம்!”

“யாரால்?”

இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கத் தயங்கியவன் பின், “பாகவதரால்....” என இழுத்துக் கூறினான்.

“அவர் எதற்குக் காளனை உறைந்தை அனுப்ப வேண்டும்?”

“அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது புலவரே!”

“காளனுக்கு முன்பே நீ கைது செய்யப்பட்டுவிட்டாய் அப்படியிருக்க நீ கூறுவதை நாங்கள் எப்படி நம்புவது!” எனக் குறுக்கிட்டான் டாள்தொபியாஸ்.

சம்பாபதி வனத்தில் பாகவதர் மகன் கொல்லப்பட்டது முதல் பௌத்த விகாரில் பாகவதரின் தூதுவன் சந்தித்து இருங்கோ வேளின் முத்திரை மோதிரத்தை அளித்தது வரை அனைத்தையும் கூறினான் வில்லவன்.

மீண்டும் குறுக்கிட்ட டாள்தொபியாஸ், “உயிருக்கு அஞ்சி உயிருக்கு உற்ற நண்பனுக்கே துரோகம் செய்யும் உனது சொற்களை நாங்கள் எப்படி நம்புவது வில்லவா?” எனக் குரலை உயர்த்தினான்.

“தளபதியாரே, உயிருக்கு அஞ்சி நான் இதனைக் கூறுகிறேன் என எண்ண வேண்டாம்!”

“வேறு எப்படி எண்ணுவதாம்?” என ஏளனத்துடனும், இகழ்ச்சியுடனும் கேட்டான் டாள்தொபியாஸ்.

“உமது வாளையும் எனது கழுத்தில் வாங்கத் துணிந்தவன் நான் தளபதியாரே! புலவரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டுத் தான் எனக்குத் தெரிந்ததைக் கூறினேன். நண்பனா? அல்லது தேசமா? என்ற நிலையில் என் தேசமே எனக்கு உயர்ந்தது!”

“நாட்டின் மீது அவ்வளவு பற்றா?” அமைதியாகக் கேட்டார் இரும்பிடர்த்தலையர்.

“கள்வனாக இருந்தால் நாட்டின் மீது பற்றுடையவனாக இருக்கக்கூடாதா? புலவரே!” எனக் கேள்வியெழுப்பினான் வில்லவன்.

யோசனையுடன் சிறை அறையிலேயே அப்படியும் இப்படியுமாக நடந்த இரும்பிடர்த்தலையர் வில்லவனிடம், “வில்லவா உன்னை முன்பே எனக்குத் தெரியும்! வாள் வீசுவதிலும் அம்பு தொடுப்பதிலும் நீ சிறந்தவன் என நான் அறிவேன். உண்மைதானா?” எனக் கூறிவிட்டு அமைதியுடன் வில்லவனின் கண்களை நோக்கினார் இரும்பிடர்த்தலையர்.

“அய்யா, தாங்கள் சான்றோர். தாங்கள் கூறுவதை மறுக்கவும் இயலாமல் ஏற்றுக்கொள்ளவும் இயலாத நிலையில் இருக்கின்றேன். என்னைப் பற்றி நானே பெருமை படப் பேசினால் அதைவிட மடைமை வேறொன்றும் இருக்காது” எனப் பணிவுடன் கூறிவிட்டு அவனும் இரும்பிடர்த்தலையரின் முகத்தை நோக்கியவன் மீண்டும் தொடர்ந்து “அய்யனே! தாங்கள் சோழ தேசத்தின் உயர்ந்த நிலையில் இருப்பவர். அடியேனைத் தாங்கள் அறிந்து வைத்துள்ளது நான் செய்த பூர்வ பிறவிப் புண்ணியம்!” என்றான் வில்லவன்.

“சோழ தேசத்தில் உள்ள சிறந்த வீரர்களையும், போர்த் திறமுள்ளவர்களையும் எமது ஒற்றர்கள் எனக்குத் தெரியப்படுத்திக்கொண்டே இருப்பார்கள். பொன்பற்றி யில் நீ களவு மேற்கொண்டபோது பல வீரர்களை எதிர்கொண்டு, அதே நேரம் யாரையும் கொல்லாமல் நீ தப்பித்துச் சென்றாயே அப்போதே உனது வாள் திறத்தையும், உறுதியையும் நான் அறிந்துகொண்டேன். உனது நண்பன் காளனையும் நீ பல முறை ஆபத்தில்

இருந்து காப்பாற்றியுள்ளதையும் நான் அறிவேன்'' என இரும்பிடர்த்தலையர் கூறியதும் 'இரும்பிடர்த்தலையரின் ஒற்றர்கள் ஊடுருவாத இடமே இல்லை' என வில்லவன் நினைத்துக்கொண்டு அமைதியுடனே நின்றுகொண்டிருந்தான்.

''உன் மீதுள்ள குற்றத்திற்கு ஆதாரம் ஏதும் இல்லை எப்படியும் நீ விடுவிக்கப்பட்டு விடுவாய் வில்லவா! இப்படியே கள்வனாக வாழ்ந்து காலத்தைக் கழித்துவிடலாம் என நினைக்கிறாயா? நாட்டிற்கு உனது திறத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றவில்லையா?'' எனக் கணையை வில்லவன் மீது எறிந்தார் இரும்பிடர்த்தலையர்.

இரும்பிடர்த்தலையரின் இந்தக் கேள்வியைக் கேட்டவுடன் வில்லவன் மட்டுமல்லாது டாள்தொபியாசும் அதிர்ந்துவிட்டான்.

அதிர்ச்சியிலிருந்து மீள சற்று நேரத்தை எடுத்துக்கொண்ட வில்லவன், ''அய்யனே! அப்படியொரு பயன் கிடைக்கப்பெற்றால் அது எனது பிறவிப் பலன்'' என அடக்கத்துடன் கூறினான்.

''உமது நண்பன் காளன் உறைந்தை சென்றுள்ளதாகக் கூறினாயே! அங்கு நீயும் செல். அவன் எது செய்தாலும் அவனைத் தடுக்காதே. அவனுக்கு உதவி செய்தபடி அவனைக் காத்து அவனது நடவடிக்கைகளை உடனுக்குடன் எனக்குத் தெரியப்படுத்து!'' எனக் கட்டளையிட்டார் இரும்பிடர்த்தலையர்.

இரும்பிடர்த்தலையரின் கட்டளையை ஏற்றுக்கொண்ட வில்லவன், ''அப்படியே ஆகட்டும்!'' எனக் கூற டாள்தொபியாசிடம் ''வில்லவனை விடுவித்துவிடு!'' என இரும்பிடர்த்தலையர் கட்டளையிட அவனும் அதனை ஏற்றுக்கொண்டு வில்லவனை விடுவித்தான்.

இரும்பிடர்த்தலையரின் இந்த நடவடிக்கையை எண்ணி திகைத்த டாள்தொபியாஸ் 'இவரது தம்பிதான் காளன் எனும் இளந்திரையன். இளந்திரையனின் நடவடிக்கைகளைப் பார்த்தால் அவன் சோழர் குல எதிரிகளுடன் சேர்ந்துவிட்டதை உறுதிப்படுத்துகிறது. அன்று இவர்தான் காளனைக் கைது செய்து மரணத் தண்டனையை நிறைவேற்று எனக் கட்டளையிட்டார். ஆனால், இன்று இவரே காளனைக் காத்து அவனுக்கு

உதவி செய் எனக் கட்டளையிடுகிறார்! ஏன்?' என எண்ணி பலவாறு குழம்பினான்.

டாள்தொபியாசின் முகத்தில் தோன்றிய திகைப்பையும், குழப்பத்தையும் கண்ட இரும்பிடர்த்தலையர் அவனது மனத்தின் எண்ண ஓட்டங்களைப் புரிந்துகொண்டவராக "குழப்பமடையாதே டாள்தொபியாஸ். அனைத்திற்குமான காரணத்தை நீ விரைவில் அறிந்துகொள்வாய்!" எனக் கூறியபடி அவனை அழைத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்.

இவ்வாறு பல நிகழ்வுகள் நடந்திருக்க அது எதனையும் தனது நண்பனிடம் தெரிவிக்காமல் இருப்பதை எண்ணி வருந்திய வில்லவன் "இரும்பிடர்த்தலையருக்குக் கொடுத்த வாக்கினை நிச்சயம் காக்க வேண்டும்" என தனக்குள் உறுதிசெய்துகொண்டு துடுப்பினை வேகமாகப் போட்டான்.

அவனது மன உறுதி துடுப்பு வழியே வெளிப்படப் பொன்னி நதியின் புனல் பிரவாகத்திலும் அவர்களது தோணி விரைவாக அக்கரையை அடைந்திருந்தது. ஆனால், அவர்கள் எதிர்பார்த்தபடி அக்கரையின் நிலை இல்லை. இவர்கள் தோணியிலிருந்து இறங்கி கரையை அடைந்ததுமே பல வீரர்கள் இருவரையும் சூழ்ந்துகொண்டனர்.

அடிக் குறிப்புகள்:

1. புறோக்கத்து நப்பலாசையார் புறநானூற்றில் பாடுகையில் புறாவின் துன்பத்தைப் போக்கிய சினங்கொண்ட வேல் படையை உடைய செம்பியன் என 'புள்ளுறு புன்கண் தீர்த்த வெள்வேல், சினங்கெழு தானைச் செம்பியன் எனப் பாடியுள்ளார். மேலும் சிலப்பதிகாரத்தில் பாண்டியனிடம் கண்ணகி வாதிடுகையில் தனது குலப் பெருமை பற்றிக் குறிப்பிடுகையில் எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப், புள்ளுறு புன்கண் தீர்த்தோன் எனச் செம்பியன் பற்றி கூறுகிறாள், மேலும் புகார்க் காண்டத்தில் குறுநடைப் புறவின் நெடுந்துயர்தீர, எறிதரு பருந்தி னிடும்பை நீங்க, அறிந்துடம் பிட்டோன் எனவும், கலிங்கத்துப்பரணி சோழர்களின் வரலாற்றைக் கூறும் ராச பாரம்பரியத்தில் உடல் கலக்கு அற அரிந்து தசை இட்டும் ஒருவன்

, வீரசோழியத்தில் சேர்ந்த புறவி னிறைதன் – திருமேனி, ஈர்ந்திட் டுயர்துலைதா னேறினான் முதலிய அனைத்திலும் புள்ளுறு புன்கண் தீர்த்தவன் பற்றிக் கூறினாலும் புறோக்கத்து நப்பலாசையார் மட்டும் புறாவிற்குத் தசையை அறுத்துக்கொடுத்தவன் சோழன் செம்பியன் எனக் கூறுகிறார்.

2. பொன்பற்றி என்பது தற்போது பொன்பேத்தி என மருவி தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ளது. சோழர்களின் வரலாற்றைக் கூறும் வீரசோழியம் எனும் இலக்கண நூலை எழுதிய புத்தமித்திரர் வாழ்ந்த ஊர்.

# 27. உற ைந்தைப் பட்டினத்தில் கள்வர்கள்

பொன்னி நதியின் புனல் பிரவாகத்தில் தோணியின் உதவியுடன் உறைந்தைக் கரையை அடைந்த காளன் மற்றும் வில்லவன் எதிர்பார்த்தபடி நிலை இல்லை. செம்பியன் கோட்டத்திற்கு அருகினில் கரையேறிய இருவரும் சில அடி தூரம் தான் நடந்திருப்பர். இருவரும் எதிர்பாராத நேரத்தில் பத்து பதினைந்து காவல் வீரர்கள் கண நேரப் பொழுதில் எங்கிருந்து தான் வந்தார்களோ? வாள் மற்றும் வேல்களைத் தாங்கியபடி திமுதிமுவெனச் சூழ்ந்த வீரர்கள் இருவரையும் கைது செய்ய ஆயத்தமானார்கள்.

திடீரென வீரர்களால் சூழப்பட்டதனால் செய்வதறியாது திகைக்கையில் காவலர்களுள் ஒருவன், ‘‘இந்த ஒற்றர்கள் இருவரையும் கைது செய்யுங்கள்!’’ எனக் கட்டளையிட்டான்.

கட்டளை எழுந்த பின் வீரனொருவன் இருவரின் கைகளையும் கட்டுவதற்கு இரும்புத் தளைகளைக் கொண்டு வருவதைக் கண்ட வில்லவன், ‘இவர்களை ஒரு கை பார்த்துவிடுவோம்’ என எண்ணியவாறு தனது இடையில் தொங்கிய வாளருகே தனது வலது கையைக் கொண்டு சென்றான். அவனருகில் நின்ற காளன் அவனது இடது கையினால் அவனது வலது கையைப் பற்றி, ‘‘வில்லவா! நமது வாள் திறமையைக் காட்டும் தருணம் இதுவல்ல’’ என அவன் மட்டும் கேட்கும்படி கூற வில்லவன் அமைதியானான்.

இருவரின் ஆயுதங்களையும் வீரர்கள் பறித்து அவர்களின் கைகளையும் பின்னால் கட்டி கைது செய்து அழைத்துச் சென்றார்கள்.

காளனும் வில்லவனும் முன்னால் செல்ல வீரர்கள் அவர்களைச் சூழ்ந்தபடி பின் தொடர்ந்தார்கள்.

கைது செய்யப்பட வில்லவன், ‘சில சாமப் பொழுதுகளுக்கு முன்னர்தான் புகார் சிறையிலிருந்து விடுவித்தார்கள். இப்போது உறைந்தை சிறையில் அடைபடப்போகிறோமே! கள்வனாகச் சுற்றிய நேரங்களிலெல்லாம் சுதந்திரமாகச் சுற்றினோம். ஆனால் இப்போது திருந்தி அரசப் பற்றுடன் வாழலாம் என முடிவெடுத்த பின் இத்தனை சோதனைகளா? இரண்டு நாள் புகார் சிறையை அனுபவித்தது போல உறைந்தை சிறையையும் அனுபவிக்க வேண்டும் எனத் தனது தலையில் எழுதப்பட்டிருந்தால் அதனை யாரால் மாற்ற இயலும்!’ எனத் தனக்குத்தானே நொந்து கொண்டவனாய் நடந்தவனின் காதுகளில் “வில்லவா! கை, கால்களில் கட்டப்பட்டிருக்கும் சங்கிலித் தளைகளை வேகமாக ஆட்டியபடியே நட!” என உத்தரவிட்ட காளனின் கட்டளைகள் மெதுவாகக் கேட்டன.

அதன்படியே தனது கால்களில் கட்டப்பட்டிருக்கும் இரும்புத் தளைகளை ஆட்டியபடி “ஏன்?” என வினவினான்.

“அப்போது தானே நாம் பேசுவதைப் பின்னால் வரும் வீரர்களால் கேட்க இயலாது!”

இந்தச் சூழ்நிலையில் பேசி என்ன ஆகப் போகிறது என எண்ணியவன் ஏதோ பேச வாயெடுக்க “வில்லவா! நான் சொல்வதை மட்டும் கேள்! நீ எதிர்பேச்சு ஏதும் பேசத் தேவையில்லை” எனக் கட்டளையிட வில்லவன் வாயை மூடிக் கொண்டான்.

“வில்லவா! இன்று என்ன நடந்தாலும், யாரைச் சந்தித்தாலும் அவசரப்பட்டு விடாதே! உனது வீரத்தையும், சோழ தேசப் பற்றையும் வெளிக்காட்ட சரியான தருணம் இன்று அல்ல என்பதையும் நினைவில் கொள். முடிந்த வரை இன்று பொய் கூறவும் ஆயத்தமாக இரு. மீண்டும் கூறுகிறேன். நிதானத்தையும், பொறுமையையும் எச்சூழ்நிலையிலும் இழந்து விடாதே!” எனக் கட்டளையிட்டான் காளன்.

காளன் எதைப் பற்றிக் கூறுகிறான் எனத் தலையும் புரியாமல் வாலும் புரியாமல் அவன் கூறுவதை ஏற்றுக்கொண்ட வில்லவன், ‘‘அப்படியே ஆகட்டும்’’ எனக் கூற வீரனொருவன் அவர்கள் அருகில் வந்துவிட்டதைக் கண்ட காளன் எதுவும் கூறாமல் முகத்தில் சிரிப்பை மட்டும் வில்லவனுக்குப் பதிலாய் உதிர்த்தான்.

காளனின் சிரிப்பின் அர்த்தத்தை உணர்ந்த வில்லவன் அருகில் வந்த காவல் வீரனைக் கவனித்தான். வந்தவன், ‘‘இருவரும் ஏதும் பேசாமல் வாருங்கள். இல்லையேல் உங்கள் நாக்குத் துண்டிக்கப்படும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்’’ எனக் கடுமையாக எச்சரித்தபடியே இருவரும் பேசிக்கொள்ள இயலாதபடி தனித் தனியாகப் பிரித்துவிட்டுச் சென்றான்.

இருவரையும் உறைந்தை அரண்மனைக்கு அருகில் அழைத்து வந்த பின் வீரனொருவன், ‘‘இவர்களைச் சிறையினில் அடைத்து விடலாமா? அல்லது தலைவரிடம் அழைத்துச் செல்லலாமா?’’ என யோசனை கேட்டான். பின்னால் வந்த அவர்களின் தலைவன், ‘‘நமது தலைவரிடம் அழைத்துச் செல்வோம். அவர் கட்டளையிட்டால் இவர்களைச் சிறையில் அடைப்போம். இல்லையேல் இவர்களைக் கழுவில் ஏற்றிக் கொல்வோம்’’ என்றான்.

இரவு இரண்டாம் சாமத்தைக் கடக்கும் தருவாயில் இருந்ததனாலும் மேலும் முதல் சாமத்திற்குப் பின் யாரும் தெருவில் நடமாடக்கூடாது என்ற கட்டளையும் நடைமுறையில் இருந்ததனாலும் தென்னகத்தின் பிரசித்தி பெற்ற உறைந்தைப் பட்டினத்தின் ஆளரவம் இன்றி வெறிச்சோடிய சில வீதிகளைத் தாண்டி இருந்த பெரும் மாளிகையை நோக்கி இருவரையும் நகர்த்திச் சென்றனர்.

மாளிகையிலிருந்து வெளிவந்த இருங்கோ வேளின் ஒற்றர் படைத் தலைவனான வேந்தன் கைது செய்யப்பட்டு அழைத்துவரப்படும் இருவரையும் கண்டு தனது வீரர்களிடம், ‘‘இவர்கள் யார்? எங்கு, எதற்காகக் கைது செய்தீர்கள்?’’ என வினவினான்.

காவலர்களின் தலைவன், ‘‘தலைவரே, இவர்கள் இருவரும் சந்தேகப் படும்படி செம்பியன் கோட்டத்திற்கு அருகினில் உலாவிக்கொண்டிருந்தார்கள். ஆதலால்.....’’ எனக் கூறிக்கொண்டிருந்த போதே

காவல் வீரனொருவன், ‘‘இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டவை!’’ என இருவரின் ஆயுதங்களையும் காட்டினான்.

ஆயுதங்களைப் பார்த்தான் வேந்தன், அவனது கழுகுப் பார்வையிலிருந்து ஆயுதங்கள் மட்டுமல்ல, அந்த ஆயுதங்களின் கூர்மை, அதை எறிபவனின் வலிமை என எதுவுமே தப்பவில்லை. இரண்டு நீண்ட போர் வாள் மற்றும் நான்கைந்து குறுவாள்களைக் கண்டவன் இவர்கள் நிச்சயம் பெரும் பலமும், திறமையும் வாய்ந்த வீரர்களாகத் தான் இருப்பார்கள் என்பதையும் அனுமானம் செய்துகொண்டான்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் மற்றும் அவர்களின் ஆயுதங்களையும் மாறி மாறி பார்த்தவன் இருவரும் இணைந்து போரிட்டிருந்தால் நிச்சயம் இந்தக் காவல் வீரர்களிடமிருந்து தப்பித்திருக்கலாம். இவர்கள் எந்த எதிர்ப்பையும் காட்டாமல் அகப்பட்டிருப்பது நிச்சயம் சந்தேகத்திற்கு உரியது என எண்ணியபடியே, ‘‘வீரர்களே நீங்கள் யார்? இந்த இரவில் உங்களுக்கு அங்கு என்ன வேலை?’’ என வினவினான் வேந்தன்.

ஆனால் அவன் கேட்டக் கேள்விக்குரிய பதிலை அளிக்காமல் காளன், ‘‘நன்றி தலைவரே!’’ என மட்டும் கூறினான்.

‘‘நன்றியா?’’ குழப்பத்துடன் சொற்கள் வேந்தனிடமிருந்து வெளிப்பட்டது.

‘‘ஆமாம்!’’

‘‘யாருக்கு?’’

‘‘தங்களுக்குத்தான்!’’

‘‘நீ நன்றி கூறும்படி நான் எதையுமே செய்யவில்லையே!’’

‘‘எந்த நிகழ்வும் இதுவரை நடக்கவில்லை தலைவரே! நான் நன்றி கூறியது தங்களது வார்த்தைக்கு.’’

‘‘வார்த்தைக்கா?’’

‘‘ஆமாம். சற்று முன் எங்கள் இருவரையும் ‘வீரர்கள்’ என அழைத்தீர்களே. அதற்குத்தான் இருவரின் சார்பாக நான் நன்றி தெரிவித்தேன்’’

“வீரர்களை வீரர்கள் என அழைக்காமல் வேறு எப்படி அழைப்பது?”

காளன் முகத்தில் புன்னகையை வரவழைத்துக்கொண்டு வேந்தனின் கண்களில் தனது பார்வையை நிலைக்கவைத்தபடி, “வீரர்களை எப்படி அழைக்க வேண்டும் எனவாவது உங்களுக்குத் தெரிகிறது. ஆனால் உங்களது காவலர்களுக்கு அதுகூடத் தெரியவில்லையே!” எனச் சற்று இகழ்ச்சியுடன் வார்த்தையை வெளிப்படுத்தினான் காளன்.

காளன் கூறியதைக் கேட்டபின் தனது வீரர்களை முறைத்தபடியே, “அவர்கள் உங்களை எப்படி அழைத்தார்களாம்?” என வினவினான்.

“ஒற்றர்கள் என்றார்கள்!” எனப் பதிலளித்தான் காளன்.

காளன் வேண்டுமென்றே உரையாடலை வளர்த்துக் கொண்டிருந்ததைக் கண்ட வில்லவன் குறுக்கிட்டு, “மரியாதை என்றால் என்னவென்றே அறியாத உறைந்தை வீரர்களுக்குத் தலைமைத் தாங்கும் தலைவருக்கு வீரர்கள் என அழைக்க மட்டுமாவது தெரிகிறதே!” என ஏளனத்துடன் பேசினான்.

வில்லவன் கூறியதைக் கேட்டு கடும் சினங்கொண்ட வேந்தன் தனது வாளினை உருவியபடி, “நீ என் விசாரணைக் கைதி என்பதை மறந்துவிட்டுப் பேசவேண்டாம்” எனக் கடுமையாக எச்சரித்தவன் மீண்டும் தொடர்ந்து, “நீங்கள் இருவரும் யார் எனக் கூறப் போகிறீர்களா? அல்லது....” எனக் கூறியபடியே இருவரின் முகத்தையும் மாறி மாறி ஆத்திரத்துடன் நோக்கினான்.

தான் கைதியாக இருக்கிறோம் என்பதைப் பற்றித் துளியும் கவலை கொள்ளாத காளன், “வீரர்கள் என அழைத்தாயே, அவர்களை இப்படித்தான் உங்கள் நாட்டில் நடத்துவீர்களா?” எனக் கேட்டான்.

வேந்தன் “எப்படி நடத்துகிறோம்?” எனத் திருப்பிக் கேட்டான்.

காளனும் விடாமல், “வீரர்களின் கைகளைப் பிணைத்து நடத்துவது தான் உங்கள் வழக்கமா?” என்றான்.

இவர்களை வீரர் என ஏன் தான் அழைத்தோமோ என எண்ணி வருந்தியவன் “உங்கள் கைக் கட்டுகளை அவிழ்ப்பது என்பது இயலாத

காரியம். கைதிகளை இப்படித்தான் நடத்த வேண்டும் என்ற முறை உள்ளது. நீங்கள் யார் என்று கூறும் வரை தங்களை அவிழ்த்து விடுவதற்கில்லை'' எனத் தீர்க்க முடிவுடன் கூறினான் வேந்தன்.

''கைகளைக் கட்டியபடி எங்களாலும் ஏதும் கூற இயலாது?'' என வேந்தனிடம் கூறிய காளன், ''சிறைச்சாலை இந்தப் பக்கம் தானே உள்ளது'' என்றபடியே தன்னிச்சையாக வில்லவனுடன் நடக்கலானான்.

காளன் செய்வதைக் கண்டு திகைத்த வேந்தன், 'நாம் தானே வழக்கமாகச் சிறைச்சாலைக்கு இழுத்துச் செல்லுங்கள் எனக் கட்டளையிடுவோம். ஆனால் இன்று வழக்கத்திற்கு மாறாக இவர்களே சிறைச்சாலையை நோக்கிச் செல்கிறார்களே!' என எண்ணியவன் 'இவர்களை இப்படியே விசாரித்தால் எதையும் அறிந்துகொள்ள இயலாது என்பதை உணர்ந்து அவர்கள் போக்கிலேயே விட்டு அவர்களைப் பற்றி அறிவது தான் சாலச் சிறந்தது' எனத் தீர்மானித்து ''நில்லுங்கள்'' எனப் பொதுவாக அனைவருக்கும் கட்டளையிட்டான்.

அவனது கட்டளையை ஏற்காமல் இருவரும் செல்ல காவலர்கள் அவர்களைப் பிடித்து நிறுத்தினார்கள்.

அவர்களின் அருகில் சென்ற வேந்தன், ''உங்களது செயல்பாடுகள் எனக்குத் திருப்திகரமாக இல்லை. சங்கிலித் தளைகளை விடுவித்தால் நீங்கள் தப்பிக்க முயல மாட்டீர்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?'' எனக் காளனிடம் கேட்டான்.

அதற்குச் சிரித்தபடியே பதிலளித்த காளன், ''நாங்கள் இருப்பது உங்கள் காவலில். எங்களது இருவரின் ஆயுதங்களும் பறிக்கப்பட்டு விட்டது. அப்படியிருக்க நாங்கள் தப்பிக்க முயலுவோம் என எண்ணுவது உங்கள் மீதும், உங்கள் வீரர்கள் மீதும் தாங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையின்மையையே காட்டுகிறது'' எனக்கூற இவனிடம் எச்சரிக்கையுடன் தான் பேச வேண்டும் என வேந்தன் எண்ணிக்கொண்டிருந்த போதே மீண்டும் தொடர்ந்த காளன், ''எங்களைச் சிறையில் அடையுங்கள், ஆனால் அதற்குரிய தண்டனையை நீங்கள் நிச்சயம் அடைவீர்கள்!'' என்றான்.

“தண்டனையா?” ஏளனமாக வேந்தனிடமிருந்து வார்த்தைகள் உதிர்த்தன.

“ஆமாம்!”

“யாருக்கு?”

“உங்களுக்குத்தான்!”

“யாரிடமிருந்து?”

“மன்னரிடமிருந்தும், வைதீகரிடமிருந்தும்!”

“அவர்கள் என்னை ஏன் தண்டிக்க வேண்டும்?”

“மன்னரைச் சந்திக்கச் சொல்லி வைதீகர் அனுப்பியவர்களை ஒற்றர்கள் எனக் கூறி கைது செய்து சிறையில் அடைத்தால் உங்களை இருவரும் பாராட்டவா செய்வார்கள்.” இந்த முறை காளனிடமிருந்து சொற்கள் ஏளனத்துடனும் கடுமையுடனும் வெளிப்பட்டது.

வந்திருப்பவர்கள் இருவரும் தமது ஆள்தான் என எண்ணியவன் தனது வீரர்களிடம், “இவர்களது தளைகளை அவிழ்த்துவிடுங்கள்!” எனக் கட்டளையிட்டான் வேந்தன்.

இருவரது தளைகளும் அவிழ்க்கப்பட்ட பின், “வைதீகர் அனுப்பினாரா?” எனக் கேட்டான்.

“ஆமாம்”

“எங்கிருந்து?”

“புகாரிலிருந்து!”

புகாரிலிருந்து எனக் காளன் கூறியதைக் கேட்டவுடன் வேந்தன் இருவரிடமும் மீண்டும் பெரும் எச்சரிக்கையும், சந்தேகமும் கொண்டான். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஏனெனில் காலையிலேயே வைதீகர் பாகவதர் உறைந்தை வந்துவிட்டார்.

“இப்போது வைதீகர் எங்கே இருக்கிறார்?” சந்தேகத்துடன் கேட்டான் வேந்தன்.

“அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இரண்டு நாள்களுக்கு முன்பே அவர் எனக்குக் கட்டளை பிறப்பித்திருந்தார். ஆனால், இப்போது தான் உறைந்தை வர முடிந்தது” எனக் காளன் கூறியபடியே தனது இடைச் சுருளில் பாதுகாப்பாக வைத்திருந்த முத்திரை மோதிரத்தை எடுத்து வேந்தனிடம் காட்டினான்.

முத்திரை மோதிரத்தை வாங்கிப் பார்த்து பரிசோதித்த வேந்தன், “இதனை வந்தவுடன் காட்டியிருந்தால் இவ்வளவு வீண் உரையாடல்களையும், நேர விரயத்தையும் தவிர்த்திருக்கலாமே!” எனக் கூறியபடியே முத்திரை மோதிரத்தை பணிவுடன் திரும்ப அளித்தான்.

“கைகள் பின்னால் கட்டப்பட்டிருக்கும் போது முத்திரை மோதிரத்தை எப்படித் தங்களுக்குக் காட்ட இயலும்?” எனக் காளன் திருப்பிக் கேட்க அமைதியானான் வேந்தன்.

பின்னர் வேந்தன், காளனிடம் “ஏன் இரண்டு நாள் தாமதம்?” எனக் கேட்க அதற்குக் காளன், “அது பற்றி உங்களிடம் ஏதும் கூறுவதற்கில்லை. மன்னரைச் சந்திக்க வேண்டும். ஏற்பாடு செய்யுங்கள்!” எனக் கட்டளையிடும் தொனியில் பேசினான்.

அவனுக்குப் பணிந்த வேந்தன், “அப்படியே செய்கிறேன். அதுவரை ஓய்வெடுங்கள்!” என ஒரு மாளிகையைக் காட்டிவிட்டு வீரர்கள் சிலரை மட்டும் காவலுக்கு விட்டுவிட்டு மற்றவர்களைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

வேந்தன் தனது வீரர்களுடன் அருகில் இருக்கும் மாளிகைக்குச் சென்றுகொண்டிருந்த போது அவனது ஒற்றனொருவன் அவனை எதிர்கொண்டான்.

ஒற்றன், வேந்தனிடம் “தலைவரே! செம்பியன் கோட்டத்திற்கு அருகில் இருவர் கைது செய்யப்பட்டதாகக் கேள்வியுற்றேன். அவர்கள் உங்களைச் சந்தித்த நாடோடி வணிகர்கள் தானே!” என வினவினான்.

“இல்லை. அவர்கள் இருவரும் வைதீகரால் புகாரிலிருந்து அனுப்பட்டவர்கள்!”

‘‘அப்படியெனில் அந்த வணிகர்கள் இருவரும் எங்கே சென்றிருப்பார்கள். உங்களிடம் கொற்றவை கோயிலுக்கும், செம்பியன் கோட்டத்திற்கும் செல்வதாகத் தானே கூறினார்கள். இரு இடங்களையும் பரிசோதித்து விட்டேன். அங்கு எந்த விளக்கும் புதிதாக ஏற்றப்படவில்லை. தங்களிடம் வாங்கிய மலர்ச்சரங்களையும் அவர்கள் தெய்வத்திற்குச் சூட்டவில்லை. அவர்களும் கண்களில் அகப்படவில்லை. மாயமாக மறைந்துவிட்டார்கள்!’’

அவன் கூறியதைக் கேட்டு சினமடைந்த வேந்தன், ‘‘நான் தான் அவர்களைப் பின் தொடர்வதில் எந்தப் பயனும் இல்லை எனக் கூறினேனே! பின்னரும் நீ என் பேச்சை மீறிச் சென்றிருக்கிறாய்’’ என அவனைக் கடிந்து கொண்டான்.

‘‘தலைவரே, உங்கள் கட்டளையை மீறும்படி ஆனதற்கு நான் வருந்துகிறேன். எனக்கு அவர்கள் மீது பெரும் ஐயம் இருந்தது. இன்று வணிகர்களாகக் கண்டவர்களை நேற்றே நான் பாகன் உருவில் கண்டது போன்று தோன்றியது. ஆதலால் தான் அவர்கள் செல்வதாகக் கூறிய இரு இடங்களுக்கும் சென்றேன். ஆனால், அவர்களைக் காண இயலவில்லை.’’

‘‘அங்கு அவர்கள் செல்லவில்லை எனில் வேறு எங்குச் சென்றிருப்பார்கள்?’’

‘‘தெரியவில்லை தலைவரே!’’

‘‘சேந்தனிடமிருந்து தகவல் ஏதேனும் வந்ததா?’’

‘‘இல்லை’’

‘‘நல்லது. அங்கு யாரேனும் அவனைப் பின் தொடர்ந்து சென்றிருந்தால் நிச்சயம் அவர்கள் இந்நேரம் கொல்லப்பட்டிருப்பார்கள். தகவல் வந்திருக்கும். சேந்தனைப் பின்தொடராதவர்களை நீ எப்படி ஒற்றர்கள் என ஐயப்படுவாய்?’’ எனக் கேள்வி எழுப்பினான் வேந்தன்.

‘‘தலைவரே, அவர்கள் சேந்தனையும் பின் தொடரவில்லை. அவர்கள் செல்வதாகக் கூறிய இடங்களுக்கும் செல்லவில்லை. அப்படியெனில் அவர்கள் எங்கேதான் சென்றிருப்பார்கள்?’’

“நன்றாகத் தேடித் பார்த்தாயா?

“பார்த்துவிட்டேன் தலைவரே! அவர்கள் எங்கே மறைந்தார்கள் என்றே என் அறிவிற்குப் புலப்படவில்லை. ஆதலால் தான் அவர்கள் புகாரிலிருந்து வந்த ஒற்றர்களாக இருப்பார்களோ என ஐயம் கொள்கிறேன்.”

சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்த வேந்தன் அருகில் நின்ற தனது வீரர்களை அழைத்து “அந்த இரண்டு நாடோடி வணிகர்களும் உறைந்தையில் எங்கு மறைந்திருந்தாலும் அவர்களைக் கண்டறிந்து என் முன் இழுத்து வாருங்கள்” எனக் கட்டளையிட காவலர்கள் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

காளனும், வில்லவனும் வேந்தன் சுட்டிக்காட்டிய மாளிகையிலிருந்த அறையில் இரவு ஆகாரங்களை உண்டு பின் ஓய்வேடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த வேளையில் அவர்கள் தங்கியிருக்கும் அறையை நோக்கி யாரோ சிலர் வருவது போலத் தோன்ற வில்லவன் வெளியே எட்டிப் பார்த்தான். வைதீகர் பாகவதரும் மற்றும் சில காவலர்களும் அவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள்.

வைதீகரைக் கண்ட வில்லவனுக்குக் கோபமும், ஆத்திரமும் பொங்கியது. வைதீகரின் மகன் அக்னிபுத்திரன் இத்தனை நாட்களாகத் தங்களை வஞ்சித்து ஏமாற்றிப் பல காரியங்களைச் சாதித்துக்கொண்டது, தங்களைக் கொண்டே இரவில் வளவனாரின் மகளைத் தாக்க முயற்சித்தது, கணிகையர் மாளிகையில் செங்குவீரனைக் கொல்ல முயன்றது என அனைத்து செயல்களும் அவன் மனத்திரையில் தோன்ற அவனது முகம் கோபத்தில் சிவந்து விகாரமாகிக்கொண்டிருந்தது.

வில்லவன் இவ்வாறு எண்ணிக்கொண்டிருந்த போதே வைதீகர் அவர்களுடைய அறைக்குள் பிரவேசித்தார். வில்லவனின் மாறியிருந்த முக பாவனைகளைக் காளன் முன்பே கவனித்து விட்டான். மேலும் அவன் அறை தீவர்த்தியிலிருந்து சற்றுத் தள்ளி நின்றதனால் அவனது முகப் பாவனையை வைதீகரால் காண இயலாது என்றே காளன் எண்ணிக்கொண்டிருந்தான்.

ஆனால் அவன் எண்ணியபடி அப்போது எதுவும் நடைபெறவில்லை. வைதீகர் உள்ளே நுழைந்ததும் வில்லவனைத் தான் கவனித்தார்.

பார்த்தவுடனே அவனது முகமாற்றத்தைக் கண்டவர் திகைத்து நின்றார். பின்னர்க் காளனை நோக்கினார்.

வைதீகர் வில்லவனைக் கண்டபின் தன்னை வியப்புடன் நோக்குவதைப் பார்த்த காளன், "ஐயா! சில தினங்களுக்கு முன் தங்களது அருமைப் புதல்வனும், எங்கள் உற்ற நண்பனுமான அக்னிபுத்திரனை செங்குவீரன் கொன்று விட்டானல்லவா! அதனை எண்ணியே வில்லவன் துயரில் இருக்கிறான். ஆதலினால் தான் அவனது முகம் களையிழந்து பொலிவின்றிக் காணப்படுகிறது. நண்பனை இழந்த துயரிலிருந்து அவன் இன்னும் மீளவில்லை" எனச் சமாளித்தான்.

காளன் கூறியதை ஆமோதிக்கும் வகையில் வில்லவனும் தலையாட்டினான்.

இருவரது விளக்கங்களையும் ஏற்ற வைதீகர் பாகவதர், "செல்வங்களே! எனக்கு அக்னிபுத்திரன் மட்டும் புதல்வன் அல்ல. நீங்களும் தான். மறைந்தவனை எண்ணி வருத்தமடைய இது சரியான தருணம் அல்ல. அவனது இழப்பிற்கு நாம் அந்த உப தலைவனைப் பழி வாங்கியே ஆக வேண்டும். நன்றி செலுத்துவதும், பழி வாங்குவதும் மனித குலத்திற்கே உரிய சீரிய உயர்ந்த பண்புகள். தங்கள் இருவரையும் நான் தடுக்கப்போவதில்லை. நேரம் வரும்போது உங்கள் பழியைத் தீர்த்துக்கொள்ளுங்கள். அதற்கு முன் நாம் சாணக்யத் தனத்துடன் சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்பதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்" என ஆவேசத்துடன் கூறியவர் பின்னர்க் காளனிடம், "உங்கள் இருவரையும் யவனத் தளபதி டாள்தொபியாஸ் கைது செய்து சிறையில் அடைத்துவிட்டான் என்றல்லவா கேள்விப்பட்டேன். அதனை எண்ணி பெரும் துயரடைந்திருந்தேன். தங்களைக் கண்டதில் மகிழ்ச்சி" என முகத்தில் புன்னகையை வரவழைத்துக்கொண்டு "அவனிடமிருந்து எப்படித் தப்பினீர்கள்?" என வினவினார்.

வைதீகரின் முகத்தை நோக்கிய காளன், அவரது முகத்தில் எப்படித் தப்பினோம் என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வம் மட்டுமே காணப்படுகிறதே தவிர மற்றபடி இருவரைப் பற்றிய எந்தவித கவலையும், துயரச் சாயலும் தோன்றவில்லை என்பதை அறிந்துகொண்டவன், "ஐயா! அது

பெரும் கதை. பௌத்த விகாரில் மருத்துவம் பெற்றுக்கொண்டிருந்த போது யவனத் தளபதி என்னை அங்கேயே காவலில் வைத்துப் பின் சற்று கவனமின்றி இருந்தான். அந்த நேரத்தைப் பயன்படுத்திப் பௌத்தத் தேரரின் உதவியுடன் தப்பிவிட்டேன். வில்லவன் எப்படித் தப்பினான் என்பதை அவனிடமே கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்'' எனப் பாதி உண்மையையும், பாதிப் பொய்யையும் கலந்து தெரிவித்தான்.

உறைந்தை வீரர்கள் சூழ்ந்து கைது செய்த போது காளன் தன்னிடம் முடிந்த வரை இன்று சமயம் நேரும்போது பொய் சொல்ல உன்னைத் தயார்படுத்திக் கொள் என்று கூறியதை மனதினில் அப்போது நினைத்துக்கொண்டான். பின்னர் வைதீகர் தன்னை நோக்குவதிலிருந்து அவர் தனது பதிலுக்காகத் தான் காத்திருக்கிறார் என உணர்ந்தவன், ``ஐயா! எனது ஆருயிர் நண்பன் மாண்டுவிட்டான் எனக் கேள்வியுற்றுக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த போது எதிரிகள் என்னைச் சூழ்ந்து விட்டார்கள். பின்னர் அவர்கள் என்னைச் சிறைச்சாலைக்குக் கொண்டு சென்ற போது பொழுதும் இருட்டிவிட்டது. தேய்பிறை நிலவு உதிக்காத முன்னிரவைப் பயன்படுத்திப் புகார் காவல் வீரர்களைக் கொன்று தப்பிவிட்டேன். புகாரைச் சுற்றி அரண் போல அமைந்திருக்கும் செங்குவீரனின் வீரர்கள் மற்றும் ஒற்றர்களிடமிருந்து தப்பித்து உறைந்தையை அடைய இத்தனைக்காலம் ஆகிவிட்டது'' என முழுப் பொய்யை கட்டவிழ்த்துவிட்டான்.

இருவரது பதிலையும் கேட்ட வைதீகர், ``யவனத் தளபதியிடமிருந்து தப்பிய உங்கள் இருவரின் திறத்தினையும், வலிமையினையும் எண்ணும்போது எனக்குப் பெரும் வியப்பும், நம்பிக்கையும் ஏற்படுகிறது என் செல்வங்களே!'' என்றார்.

அவர் அப்படிக் கூறியதற்கு எந்தவொரு பதிலையும் கூறாமல் முகத்தில் புன்னகையை மட்டும் வரவழைத்துக்கொண்டு நின்றான் காளன். பின் வைதீகர் ஏதேனும் கேட்பார் என்று எதிர்பார்த்து நின்றவன் அவர் தொடர்ந்து அமைதியாய் நின்றதைக் கண்டு, ``ஐயா, நான் புகாரில் இருக்கும்போது தங்கள் ஊழியன் ஒருவன் தாங்கள் என்னை உறைந்தை சென்று சக்கரவர்த்தியைச் சந்திக்கச்சொல்லி கட்டளையிட்டதாகக் கூறினான்.

தங்களை இங்கு நான் சந்திப்பேன் என எதிர்பார்க்கவில்லை. தாங்கள் என்னை எந்தப் பணிக்காகப் பணித்தீர்கள் என அறிந்துகொள்ளலாமா?'' என வினவினான்.

''இருவரும் மன்னரைச் சந்தித்திருப்பீர்கள் என எண்ணிக்கொண்டுதான் உறைந்தைக்கே வந்தேன். எனக்கும் மகனது ஈமக்கிரியைக் காரியங்களை முடித்துவிட்டு வர இத்தனை நாள் ஆகிவிட்டது. அப்போது வேறு ஒரு பணிக்காக உங்களை அனுப்பத் திட்டமிட்டிருந்தேன். இப்போது காலம் கடந்து விட்டது. இனி நான் கூறுவதை விட அவர் கூறினால் தான் இன்னும் பொருத்தமாக இருக்கும். இருவரும் என்னுடன் வாருங்கள்'' என அழைத்தபடி இருவரது பதிலையும் எதிர்பாராமல் கிளம்பினார் வைதீகர். காளனும், வில்லவனும் அவரைப் பின்தொடர்ந்து சென்றனர்.

மாளிகையிலிருந்து வெளிப்பட்ட அவர்கள் ஆளரவமற்ற பிரதான ஏணிச்சேரி வீதியின் வழியாக அரண்மனையை நோக்கிச் சென்றனர்.

வைதீகர் இந்தப் பதிலைத் தான் தெரிவிப்பார் என அறிந்தும் காளன் தான் ஆர்வமுடன் இருப்பதாய்க் காட்டிக்கொள்ள, ''நாம் இப்போது யாரைச் சந்திக்கச் சென்றுகொண்டிருக்கிறோம், ஐயா?'' என வினவினான்.

''மாமன்னர் பெரும சக்கரவர்த்தியைத்தான் காணச் சென்றுகொண்டிருக்கிறோம்'' என்றார் வைதீகர்.

காளன் தனது முகத்தில் புன்னகையை வரவழைத்துக்கொண்டு உற்சாகத்துடன், ''அவரைக் காண்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியை அடைகிறேன்'' எனக் கூறியபடியே அருகில் தன்னுடன் நடந்துவந்த வில்லவனின் தோள்கள் மீது தனது கையைப் போட்டபடியே நடக்கலானான்.

அந்த நேரம் காளனின் முகத்தைப் பார்த்த வில்லவனது முகத்தில் ஆயிரம் சந்தேகங்கள் உதிர்த்தன. 'இவன் யாரிடம் நடிக்கிறான். நம்மிடமா அல்லது வைதீகரிடமா? இவனது எந்தவொரு செயலையும் புரிந்துகொள்ளவே இயலவில்லையே! புகார் பௌத்த விகாரில் இருங்கோவேளை தனது குடும்ப எதிரி என்றான். ஆனால் இங்கே அவரைக் காணப் போவதில் வைதீகரை விட இவனே அதிக உற்சாகத்துடன் காணப்படுகிறான். வைதீகர், காளன்

இவர்களில் யார் உண்மையானவர்கள்? ஒவ்வொருவரும் மற்றவரை மிஞ்சும்படி பொய் கூறுகிறார்களே! யார் எப்படி நடந்தால் என்ன! இவர்களுக்கிடையில் தாம் எந்த அபாயச்சூழ்நிலையிலும் அகப்பட்டுவிடக் கூடாது. எந்தச் சூழ்நிலையிலும் எதற்கும் கவனமாகவும், தயாராகவும் இருக்கவேண்டும்’ என எண்ணியபடி தனது போர் வாளை நம்பிக்கையுடன் தடவிக்கொடுத்தபடியே அவர்களுடன் உறைந்தை அரண்மனைக்குள் பிரவேசிக்கலானான்.

# 28. மன ்னரின் மகிழ்ச்சியும் திகிலும்

‘உரகபுரம்’ என வட இந்தியப் புராணங்களில் குறிப்பிடப்படும் சிறப்பு பெற்ற பட்டினம் உறைந்தை எனப்படும் உறையூர் தான். ‘ஓர்தொவுர சோர் நகரின்’ எனத் தாலமி என்னும் யவனர் ஓர்தொவுர எனச் சிறப்புடன் குறிப்பிடும் பட்டினம் உறைந்தை; சோர் நகர் என்பது சோழ தேசம். யவனக் கடலோடிகளால் ஆர்கரு (Argaru) அல்லது அருகா என The Periplus of the Erithrean Sea எனும் நூலில் புகழுடன் சிறப்பிக்கப்பட்டிருப்பதும் இந்த உறைந்தைப் பட்டினமே! துறைமுகப் பட்டினங்களையும், அவற்றிற்கிடைப்பட்ட தொலைவு, ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள் பற்றி விரிவாகக் குறிப்பிடப்படும் இந்த நூலில் விவரிக்கப்பட்டிருக்கும் கடற்கரை அல்லாத பட்டினம் என்றால் அது ஆர்கரு எனப்படும் உறைந்தைப் பட்டினம் தான்.

அக்காலத்தில் உலகப் புகழ் பெற்றிருந்த புகார்ப் பட்டினத்திற்கு அடுத்தபடியாகத் தென்னகத்தில் புகழ் பெற்றிருந்த பட்டினம் எதுவென்றால் அது உறைந்தை தான். சோழர்களின் வர்த்தகத் தலைநகரம் புகார். நிர்வாகத் தலைநகரம் உறைந்தை. உறைந்தைப் பட்டினம் முழுவதும் வலிமையான உயர்ந்த மதில்களால் சூழப்பெற்றது. உயர்ந்திருந்த மதில்களில் ஆங்காங்கே நின்றபடியும், அம்பாரி அமைத்துக்கொண்டு அமர்ந்தபடியும் வீரர்கள் முப்பொழுதும் கண்காணித்துக்கொண்டே இருப்பார்கள். இம்மதிலைச் சூழ்ந்த ஆழமான அகழி முதலைகளாலும், உயிரைப் பறிக்கும் பொறிகளாலும் நிறைந்தது. கோட்டையையும், வெளிப்புறப் பட்டினத்தையும் இணைத்திருக்கும் மரப் பாலத்தை உயர்த்தி ஆபத்துக் காலங்களில் பட்டினத்தை வெளியுலகத் தொடர்பிலிருந்து துண்டித்துக்கொள்ளலாம். இவ்வகழியில் நீலப் பூக்களும், அல்லியும், தாமரையும் மலர்ந்து அகழியின் ஆபத்தை மறைத்து அதனை அழகுபடுத்திக்கொண்டிருந்தது. மலர்களின் அழகில் மதி மயங்கி அகழியில்

இறங்கினால் அடுத்தக் கணம் உயிரிலிருந்து உடல் மட்டும் முதலைகளால் பறிக்கப்பட்டு அவைகளுக்கு உணவாகிவிடும். இவ்வகழிகளைச் சுற்றி மிளைக் காடுகள் அடர்த்தியாகச் சூழ்ந்து காணப்பட்டது. இப்படிப்பெரும் பாதுகாப்புடன் இருந்த உறைந்தைப் பட்டினத்திற்கு இயற்கைக் காவலனாகப் பட்டினத்தின் வட திசையில் புனல் செறிந்து ஓடும் காவிரியும் கிழக்கில் உயர்ந்த மலையும் (இப்போது மலைக்கோட்டை) அமைந்திருந்தது. இவை மட்டுமல்லாமல் உறைந்தைப் பட்டினக் காவிரியின் வட கரையின் திருவரங்கத்தில் வீற்றிருந்த திருவரங்க நாதரும் நகரைக் காத்து அருள் புரிந்து கொண்டிருந்தார்.

இப்படிப் பெரும் சிறப்பும், பெரும் பாதுகாப்பும் நிறைந்த தென்னகத்தின் பிரசித்திப்பெற்ற உறைந்தைப் பட்டினத்தைப் பெரும் படை கொண்டு முற்றுகையிட்டாலும் கைப்பற்ற இயலாமல் எதிரிப்படையினர் தோல்வியுறுவர். இப்படிப்பட்ட பட்டினத்தைப் போர் வீரர்கள் இல்லாமல், குருதி சிந்தாமல் தனது மதியூகத்தினால் கைப்பற்றிக்கொண்ட இருங்கோ வேளை எண்ணி வில்லவன் வியக்கவே செய்தான். உறைந்தையைக் கைப்பற்றியது மட்டுமல்லாமல் சோழ தேசத்திற்கும் தன்னைச் சக்கரவர்த்தியாக அறிவித்துக்கொண்டு, மற்ற இரு வேந்தர்களான பாண்டியன் மற்றும் சேரனின் ஆதரவினையும் சோழர்களுக்கு எதிராகப் பெற்றுக்கொண்ட மலைநாட்டு வேந்தனான இருங்கோ வேளை சந்திக்கப் போகிறோம் எனும் எண்ணமே அவனுக்குப் பேரார்வத்தை அளித்தது.

தேய்பிறை நிலவு தயங்கி தயங்கி இரண்டாம் சாம முடிவில் கிழக்கில் உதிக்க முயற்சித்துக் கொண்டிருந்ததனால் நிலவு வெளிச்சமும் போதுமானதாக இல்லாதிருந்ததனால் வீரர்கள் சிலர் தீப்பந்தங்களையும், தீவர்த்திகளையும் பிடித்துக்கொண்டு ஆளரவம் இன்றி வெறிச்சோடிய ஏணிச்சேரி தெரு வழியாக அரண்மனையை நோக்கி வைதீகர், காளன், வில்லவன் மற்றும் அவர்களுடன் வந்த வீரர்கள் என அனைவரும் சென்றுகொண்டிருந்தார்கள்.

வில்லவன் தற்பொழுது தான் முதன் முறையாக அரண்மனைக்குள் செல்வதால் இருளிலும் விளக்கொளிகளால் மின்னும் பிரமாண்டமான

அரண்மனையின் பல்வேறு கூடங்களைப் பார்த்து வியந்துகொண்டே வைதீகரைப் பின்தொடர்ந்து சென்றுகொண்டிருந்தான்.

அரண்மனையினுள் சில மாளிகைக் கூடங்களைக் கடந்த பிறகு ஒரு மைய மண்டபத்திற்கு அருகினில் வந்தவுடன் வில்லவன் மற்றும் காளனிடம் வைதீகர், ‘‘சில நாட்களுக்குப் பிறகு மன்னரைச் சந்திக்கப் போகிறேன். அவரிடம் பேசி அனுமதி பெற்றபின் உங்கள் இருவரையும் அழைத்துச் செல்கிறேன். அதுவரை இங்கேயே காத்திருங்கள்’’ எனக் கூறிவிட்டு அவர்களின் மறுமொழியை எதிர்பாராமல் மாளிகைக்குள்ளே சென்றார்.

அரண்மனையின் மைய மாளிகை அரசன் வசிக்கும் மாளிகையாதலால் மாளிகைச் சுவர்களில் பல வித சித்திரங்கள் அழகுடன் வரையப்பட்டிருந்தன. அவை அனைத்தும் சோழ மன்னர்களின் பராக்கிரமச் செயல்களைக் கண் முன்னே கொண்டுவருபவை. சித்திரங்களைக் கண்ட வில்லவன் ஆர்வமிகுதியில் காளனை அழைத்தான். ஆனால் காளன் சித்திரங்களைப் பார்க்க ஆர்வமில்லாமல் இருந்ததனால் வில்லவன் மட்டும் சுவர் சித்திரங்களைத் தீவர்த்தி வெளிச்சத்தின் உதவியுடன் கண்டு களிக்க ஆரம்பித்தான்.

பிறப்பிலேயே நாட்டுப் பற்று மிக்கவனான வில்லவன் அந்தச் சித்திரங்களைக் கண்ட போதெல்லாம் அவனது உடலில் சொல்ல இயலாத புத்துணர்ச்சியும் வேகமும் பெருகியது. விவரம் தெரிந்ததிலிருந்தே பார்க்க எண்ணி ஆசைப்பட்ட சித்திரங்கள் அனைத்தும் தற்பொழுது தன் கண்முன்னே இருப்பதைக் கண்டு நம்ப இயலாதவனாய் போர் முடிந்து வெற்றியுடன் வீடு திரும்பி களிப்புடன் தன் மனைவியை அணைக்கும் போர் வீரனாய் அச்சித்திரங்களைப் பார்த்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தான்.

சித்திரங்களைப் பார்த்தபடி வியந்து போயிருந்த வில்லவன் இருளின் தீவர்த்தி வெளிச்சத்தில் தான் வந்த வழி என நினைத்துத் தவறுதலாக வேறொரு பாதையில் செல்லலானான். இந்தச் சிறு தவறு அவன் வாழ்வில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறது என அப்போது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

சித்திரங்களைப் பார்க்க வில்லவன் காளனைத் தனியாக விட்டுவிட்டு சென்றுவிட்ட பிறகு தனியாக நின்ற காளன் அறையினுள் என்ன நடக்கிறது என அறிந்துகொள்ளும் ஆர்வத்தில் வாசல் வழியே உள்ளே எட்டிப் பார்த்தான். சற்றுத் தொலைவில் இருவரும் அமர்ந்து ஏதோ பெரும் இரகசியமாகக் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்க வேண்டுமானால் இடையில் சற்று இருள் அடர்ந்த சாளரத்திற்குச் சென்றால் தான் தெளிவாகக் கேட்க இயலும் என்பதை உணர்ந்தவன் நடையில் கம்பீரத்தை வரவழைத்துக்கொண்டு உள்ளே பிரவேசிக்கலானான்.

ஆனால், அவன் எதிர்பார்த்தபடியே மன்னரின் அந்தரங்க ஆலோசனைக் கூடத்தில் காவல் காத்துக்கொண்டிருந்த காவலர்கள் இருவர் அவனை மறித்தார்கள்.

“மன்னரின் அந்தரங்க ஆலோசனைக் கூடத்திற்குள் அவரது உத்தரவின்றி யாருக்கும் பிரவேசிக்க அனுமதி இல்லை” என்றான் ஒரு காவல் வீரன்.

சிறிது சிந்தித்த காளன், “அவர் அழைத்துத் தான் அரண்மனைக்குள் வந்திருக்கிறேன்” என்றான்.

“அவர் அழைக்கும் வரை தாங்கள் காத்திருந்து தான் ஆகவேண்டும். மன்னர் யாருக்காகவோ காத்துக் கொண்டிருக்கிறார். இப்போது அவரைத் தொந்தரவு செய்யக் கூடாது என்பது அவரது கண்டிப்பான உத்தரவு.”

“உங்களுடன் பேசிக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. உள்ளே வழிவிட இயலுமா? அல்லது இயலாதா?” என மிரட்டிய படி அதிகாரத் தொணியில் கேட்டான் காளன்.

“மன்னிக்க வேண்டும். மன்னரின் உத்தரவு அல்லது உரிய அத்தாட்சி இல்லாமல் உள்ளே அனுமதிக்க இயலாது” எனக் கண்டிப்புடன் கூறிவிட்டான் காவலாளி.

அத்தாட்சி என்ற சொல்லைக் கேட்டவுடன் காளனின் மூளை துரிதமாகச் செயல்பட்டது. உடனே இடையின் அரைச் சுருளில் மறைத்து வைத்திருந்த முத்திரை மோதிரத்தை எடுத்துக்காட்டி “இது மன்னருடைய முத்திரை மோதிரம் தானே! இது போதுமா?” எனச் சிரித்தபடியே ஏளனத்துடன் கேட்டான்.

“இதனை முன்னமே காட்டியிருக்கக் கூடாதா? மன்னர் உங்களுக்காகத் தான் காத்திருக்கிறார். உள்ளே செல்லுங்கள்!” என வழியை மறித்திருந்த வேலை நீக்கி உள்ளே விட்டனர்.

அந்தரங்க ஆலோசனைக் கூடத்திற்கு வெளிப்புறமாக வெளிச்சம் குறைந்த சாளரப் பகுதிக்கு வந்தவன் எரிந்துகொண்டிருந்த விளக்கின் திரியை இழுத்தான், வெளிச்சம் சற்றுக் குறைந்தது. கூடத்தின் சுவரின் அருகினில் நின்றுகொண்டான். இப்போது உள்ளே என்ன பேசிக் கொள்கிறார்கள் என அவனால் தெளிவாகக் கேட்க முடிந்தது. வெளியே வாசலைப் பார்த்தான். வீரர்கள் சுவரோடு சுவராகச் சாய்ந்து காவல் காத்தபடி கடமையே கர்மம் என நின்றுகொண்டிருந்தனர். இனி அவர்களால் தன்னைக் கவனிக்க இயலாது என உறுதி செய்துகொண்டு இருவரது உரையாடல்களையும் ஒட்டுக் கேட்கலானான்.

இருங்கோ வேள் வைதீகரிடம், “ஐயா! சமீபத்தில் தங்கள் மகன் இறந்துவிட்டான் எனக் கேள்வியுற்றேன். பெரும் துயரமாகிவிட்டது” எனத் தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

வைதீகர், “இப்போது வருத்தப்படுவதற்கு நேரமில்லை அரசே! எதிரிகளை வளரவிடக் கூடாது. என் கவனம் முழுவதும் அதில் தான் இருக்கிறது!” என்றார்.

“இந்தத் துயரச் சூழ்நிலையிலும் தாங்கள் விழிப்புடன், எனக்கு உறுதுணையாக இருப்பது மிகுந்த உத்வேகத்தை எனக்கு அளிக்கிறது.”

“அரசே, குருசேத்திரப் போரில் அருச்சுனன் மகனான அரவானைப் பலி கொடுத்தே பாண்டவர்கள் போரைத் தொடங்கினர். பாண்டவர்களின் மகன்கள் இறந்த பிறகே போரின் உக்கிரம் அதிகமானது. தங்களின்

புதல்வர்கள் அனைவரும் போரில் மாண்டதை எண்ணி பாண்டவர்கள் வருத்தப்பட்டிருந்தால் அப்போரில் வெற்றிப் பெற்றிருக்க இயலாது. நமது போருக்கு என் மகனைப் பலி கொடுத்ததாகவே நான் கருதிக் கொள்கிறேன். அவனது நட்சத்திரமும், இறந்த நேரமும் நமக்கு வெற்றியைத் தரும் என நான் எனது நிமித்திகம் மூலம் அறிந்துகொண்டேன். நமது இலக்கு வெற்றி மட்டுமே என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.''

``அய்யா, தாங்கள் எனக்கு ஆலோசகராகக் கிடைத்தது எனது பூர்வ ஜென்மத்துப் புண்ணியம்'' என்ற மன்னர் இருங்கோவேள் அமைதியானார். பின் பேச்சை மாற்ற விரும்பி ``பிரம்மாயரே! புகாரைக் கைக்கொள்ளப் போவது அவ்வளவு எளிதான காரியமாக இருக்கப்போவதில்லை. வீரர்களுடன் சென்ற எனது மகன் மட்டுமே திரும்பி வந்தான். மற்ற வீரர்கள் அனைவரையும் செங்குவீரனும், அவனது உபதளபதிகளும் கொன்று விட்டார்கள். உயிரோடு திரும்பி வந்த என் மகனை எண்ணினாலே பெருத்த அவமானமாக உள்ளது. சோழர்களையே வென்று சோழ வம்சத்தையே வேரறுக்கப் போகும் நாம் ஒரு உபதலைவனிடம் திணறிக்கொண்டிருப்பது எரிச்சலாக உள்ளது'' எனத் தன் கவலையைத் தெரிவித்தார்.

சில தினங்களுக்கு முன் புகார் அவைக்களம் ரணகளமாக மாறியபோது வீரர்களுடன் புகார்த் தலைவனாக அறிவித்துக்கொண்டு ஒருவன் வந்து பெருமறவர் மகேந்திர வளவனாரிடம் ஓலையைக் கொடுத்துவிட்டு முன் கழுத்தில் பரதவன் குமாரனால் தாக்கப்பட்டுச் சிறு காயத்துடன் தப்பி உறைந்தை திரும்பினானே! அவன் தான் இருங்கோ வேளின் புதல்வன். தன் மகனை செல்வம் செழிக்கும் புகார் தலைவனாக அறிவித்துவிட்டால் பின் நாட்டில் எந்தக் குழப்பம் ஏற்பட்டாலும் சமாளித்துவிடலாம் என முடிவு செய்திருந்தார் உறைந்தைச் சக்கரவர்த்தி.

செங்குவீரன் என்ற பெயரைக் கேட்டதும் ஆவேசமும் கோபமும் அடைந்த வைதீகர், ``என் மகனைக் கொன்று என் கனவுகளுக்கு முடிவு கட்டியவன் அந்த விருஷலன் தான். அவனைக் கொல்ல முயன்ற அனைத்து வழிகளிலும் தோல்வியே மிஞ்சியது எனக்கு. அவனது உப தளபதிகள் அவனைக் கவசம் போலக் காத்து நிற்கின்றனர்'' எனக் கூறி ஏதோ

யோசித்தவர் பின்னர், “அவனை நேரடியாக வீழ்த்த இயலவில்லை என்றான பின்னர்த் தான் வளவனாரின் மகளை உங்கள் மகனுக்குத் திருமணம் செய்ய ஓலை அனுப்பச் செய்தேன்” என்றார்.

“பிரம்மாயரே! எனக்குப் புரியவில்லை. வளவனாரின் மகளை நான் மருமகளாகப் பெற்றால் வளவனாரின் ஆதரவு நமக்குத் துணை செய்யும் என்பது தானே நமது திட்டம். இதில் செங்குவீரனை எப்படி வீழ்த்த இயலும்?”

“அரசே! உபதலைவன் வளவனாரின் மகளை உயிருக்கு உயிராகக் காதலிக்கிறான். ஆனால் அவள் இவனை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. ஏன் கால் தூசிக்குச் சமானமாகக் கூட அவள் மதிப்பதில்லை. உளவியல் ரீதியில் செங்குவீரன் பாதிக்கப்பட்டால் அவனை வீழ்த்துவது எளிது!”

“பிரம்மாயரே! அருமையான திட்டம். ஆனால் எனக்கொரு ஐயம். ஏன் செங்குவீரன் மீது வளவனாரின் மகளுக்கு அப்படியொரு வெறுப்பு!”

“தனது தமையன் திவ்யன் கொல்லப்பட்டதற்கு இவன் தான் முழுக்காரணம் என அவள் கருதுகிறாள். ஆதலால் தான் அவனிடம் அவள் கொண்ட அன்பு அனைத்தும் இப்போது துவேஷமாக மாறிவிட்டது” எனக் கூறியபடியே பலமாகச் சிரித்தார்.

ஏதொ சிந்தித்த மன்னர் இருங்கோ வேள் பின்னர், “பிரம்மாயரே! அவனது திறமையை நானும் பலவாறு நம் ஒற்றர்களால் கேள்விப்பட்டுள்ளேன். இப்பேற்பட்ட வீரனை வீழ்த்துவதற்குப் பதில் அவனை நம் பக்கம் சேர்த்துக்கொண்டால் என்ன?”

“அது இயலாத காரியம் அரசே!”

“இயலாத காரியமா? நம்மால் இயலாதது என ஏதேனும் இருக்கிறதா அய்யா?”

“அவன் சோழ தேசம் மீதும் இளவரசன் மீதும் பெரும் பற்றுக்கொண்டவனாக இருக்கிறான். அவனை விலை பேசுவது இயலாத காரியம் என அறிந்தும் முயன்றேன். இயலவில்லை. ஆதலால் தான் அவனையும், அவனது தலைவனான திவ்யனையும் சேர்த்து இருவரையும் குணக் கடலில் தீர்த்துக்கட்டி ஜல சமாதி செய்துவிடலாம் என எண்ணினேன்.

வளவனாரின் மகனை வீழ்த்திவிட்டோம். ஆனால் இவன் எப்படியோ தப்பிவிட்டான். அப்போது தப்பியவன் இன்று நமக்குப் பெரும் தலைவலியாக இருக்கிறான்'' என வைதீகர் பேசிக்கொண்டிருந்த போதே குறிக்கிட்ட மன்னர் இருங்கோ வேள், ''பிரம்மாயரே! துயரச் செய்தியை விட்டு மகிழ்ச்சிகரமான செய்தியைப் பற்றிப் பேசுவோமே!'' என்றார்.

''ஏதேனும் புதுக் காரியங்கள் நமக்கு ஆதரவாக நடைபெற்றுள்ளதா?''

''ஆம் வைதீகரே! சோழர்களின் வம்சம் இனி தலையெடுக்காமல் இருக்கப் பாண்டியர்களும், சேரர்களும் துணையாய் இருக்கச் சம்மதித்துள்ளனர். இரகசியமாய் வந்த இரு வேந்தர்களும் சேனை உதவியையும் நமக்குப் புரிவதாகக் கூறியுள்ளனர். தேவை ஏற்பட்டால் புகாரை மீட்க தங்கள் கடற்படையையும் அனுப்ப சித்தமாக இருப்பதாகக் கூறியுள்ளனர். எந்த நேரத்திலும் உறைந்தையைக் காக்க இருவரது படையும் தயாராக இருப்பதாகக் கூறிச் சென்றனர்'' என மகிழ்ச்சியுடன் கூறினார் இருங்கோவேள்.

''அரசே! கேட்டு களிப்படைய வேண்டிய செய்திதான். நம் முதன்மை மந்திரி எங்கே?'' என வினவினார்.

''அவர் மற்ற குறுநில மன்னர்களையும், வேளிர்களையும் சந்தித்து ஆதரவு திரட்ட சென்றிருக்கிறார்.''

''அரசே! நல்ல பணி! அவரிடமிருந்து செய்தி ஏதேனும் நமக்கு வந்ததா?''

''சென்ற பணி எதிர்பார்த்தது போலவே சிறப்பாக நடைபெறுவதாகத் தூதுவன் மூலம் சொல்லி அனுப்பியுள்ளார்.''

''ம்ம்ம்''

''பிரம்மாயரே! சென்னியின் மகன் நம் வசம் உள்ள வரை அவரைப் பற்றிய கவலை தேவையில்லை. இப்போது நமக்கு ஒரே தலைவலி அந்த உபதலைவன் மட்டுமே! அவனை என்ன செய்வது?'' என வருத்தத்துடன் கேட்கலானார் மன்னர் இருங்கோ வேள்.

“அரசே! அவனை எதிர்கொள்ள அவனையொத்த வீரனொருவனைக் கண்டுவிட்டேன். அவனை இனி நம் காரியத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.”

“யார் அவன்?”

“கேட்டால் ஆச்சர்யப்படுவீர்கள். அவனால் நமக்குக் கிடைக்கப் போவது அதிகம். ஆனால் அவன் இறந்தாலும் வீழ்ச்சி அவர்களுக்கே!”

“அப்படியா? அப்படிப்பட்டவன் யார்?” என ஆச்சர்யத்துடன் கேட்டார் மன்னர் இருங்கோவேள்.

“இரும்பிடர்த்தலையனின் தம்பி! அழுந்தூர் வேள் திதியனின் மகன்!!”

ஆச்சரியமும் வியப்பும் அடைந்த இருங்கோவேள், “அவனை எப்படி நம் வலையில் விழ வைத்தீர்கள்! அவனை நம்பலாமா? பிரம்மாயரே!” எனக் கேட்கலானார்.

“அவனுக்கும், அவனது தமையனுக்கும் சிறிது பிரச்சனை. அழுந்தூர் அரண்மனையிலிருந்து வெளியேறிவிட்டான். அவன் மனதில் நஞ்சைத் தூவி அவனை நமது ஆதரவாளனாக ஆக்கிவிட்டேன். புகாரின் யவனத் தளபதியின் கடுங்காவலில் இருந்து தப்பியுள்ளான் என்றால் அவனது திறமை எப்படிப்பட்டது என நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்”

அவர் கூறியதைக் கேட்டு மகிழ்ந்த இருங்கோ வேள், “செங்குவீரனின் உப தளபதியின் கடுங்காவலில் இருந்தே தப்பியுள்ளானா? அப்படியெனில் அவன் திறமைசாலியாகத்தான் இருப்பான். செங்குவீரனை எதிர் கொள்ளச் சரியான வீரன் அவன் தான்!” என்றார்.

“அரசே! அந்த வீரனையும் தாங்கள் சந்திக்க இங்கு நான் அழைத்துவந்துள்ளேன்”

“அப்படியா! எங்கே?”

“இம்மாளிகையின் வெளிப்புறத்தில் காத்திருக்கிறான்.”

“உடனே அழைத்துவாருங்கள். அவனை நான் சந்திக்க ஆவலோடு இருக்கிறேன்!”

“அவசரமில்லை மன்னரே! அவனைச் சந்திக்குமுன் உங்களிடம் சில முக்கியமான காரியங்கள் பற்றி ஆலோசிக்க வேண்டியுள்ளது!”

“எதைப்பற்றிப் பிரம்மாயரே!”

“சேரன் மற்றும் பாண்டியனின் ஆதரவு கிடைத்துவிட்டது. மற்ற வேளிர்களின் நிலை என்ன? யார் யார் தங்களை மன்னராக ஏற்றுக்கொண்டுள்ளனர்?”

“ஐயா! யார் யார் நம்மை ஆதரிக்கிறார்கள் எனக் கேட்பதை விட யார் யார் நம்மை எதிர்த்து ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் எனக் கேளுங்கள்?”

“யார் யார் அரசே? ஏன் இப்படி வினவச் சொல்கிறீர்கள்?”

“பிரம்மாயரே! புகாரும் அழுந்தூரும் தான் நமக்குப் பணிய மறுக்கிறது! மற்ற அனைவரும் பணிந்துவிட்டார்கள்! போர் மேகம் சூழ்ந்தாலும் அவரவர் தம் படைகளுடன் நமக்கு ஆதரவளிப்பதாக உறுதி கூறியுள்ளனர். ஆனால் அவர்கள் விதிக்கும் நிபந்தனை தான் என்னைச் சிந்திக்க வைக்கிறது!”

“நிபந்தனையா?”

“ஆம் பிரம்மாயரே!”

“என்ன நிபந்தனை?”

“அனைவரும் ஒரு தலைமுறைக்குக் கப்பம் செலுத்துவதிலிருந்து விலக்கு கேட்கிறார்கள். கப்பம் செலுத்தாவிட்டாலும் நமது அதிகாரத்திற்குட்பட்ட சிற்றரசாக இருக்கவும் பணிந்துள்ளனர்.”

“அரசே! அழுந்தூர் பணியாததை எண்ணி எனக்கு எந்த வியப்பும் இல்லை. அது எதிர்பார்த்தது தான். ஏனெனில் இளஞ்சேட்சென்னிக்குப் பெண் கொடுத்த ஊர் அது. அழுந்தூர் மன்னர் திதியன் தன் மகள் வயிற்றுப் பையன் அதாவது அவனது பேரன் அடுத்து முடிசூட்டுவதையே எதிர்பார்ப்பான். தாங்கள்

முடிசூட்டியதை அவன் எதிர்பார்த்திருக்க மாட்டான். இந்நேரம் அழுந்தூர் படைகள் உறைந்தைக் கோட்டையை முற்றுகையிட்டிருக்க வேண்டும். அப்படி முற்றுகையிடாமலிருக்கக் காரணம் இளவரசன் தான். அவனை மட்டும் நாம் தப்பவிட்டிருந்தால் இந்நேரம் அவன் தலைமையில் படைகள் புறப்பட்டிருக்கும். அன்று இந்தப் பொடிப்பையனால் நம்மை என்ன செய்ய இயலும்? என ஏளனமாகக் கேட்டீர்களே! அதற்குக் காரணம் இதுதான். புலி குட்டியாக இருந்தாலும் கிழடாக இருந்தாலும் ஆபத்து தான்!'' எனக் கூறியவர் பின்னர்த் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு ''அரசே! மற்ற வேளிர்களும், குறுநில மன்னர்களும் கேட்கும் ஒரு தலைமுறை வரி விலக்கை கொடுத்துவிடுங்கள். இப்போது நமக்குத் தேவை படை பலம் தான். நம்மை எதிர்த்து யார் கிளம்பினாலும் அவர்களைச் சுவடும், தடமும் தெரியாமல் அழித்துவிட வேண்டும். குறுநில மன்னர்கள் ஒரு தலைமுறை கொடுக்கும் பொன்னையும், பொருளையும் நாம் புகாரிலிருந்து சில வருடங்களில் வருவாயாக ஈட்டி விடலாம். புகார் செல்வம் செழிக்கும் மாபெரும் ஏற்றுமதித் தளம். அதனை எக்காலத்திலும் விட்டுக்கொடுக்க இயலாது. போர் புரிந்தாவது நாம் புகாரைக் கைப்பற்றியே தீர வேண்டும்!''

''ஆமாம் பிரம்மாயரே! நானும் அந்த யோசனையில் தான் இருக்கிறேன். நமது கடற்படை, நாட்டின் பெரும் வருமானம் என அனைத்தும் செங்குவீரனின் கைகளில் சிக்கி விட்டது. இதுசம்பந்தமாகப் புகார் வந்த மற்ற இரு பெருவேந்தர்களான சேரன் பெருஞ்சேரலாதன் மற்றும் பாண்டியன் தென்னவனிடம் பேசினேன்'' எனக் கூறிக்கொண்டிருந்த போதே குறுக்கிட்ட வைதீகர், ''அரசே! அவர்கள் என்ன கூறினார்கள்?'' என அடங்கா ஆவலுடன் கேட்டார்.

''சேரனும், பாண்டியனும் தனது கடற்படையைக் கொண்டு புகாரைத் தாக்கவும் தயாராக இருப்பதாகக் கூறினார்கள்! சிங்கள அரசனும் அவனது கடற்படையை நமக்கு உதவியாக அனுப்ப சம்மதித்துள்ளாராம்! அவர்களின் படையைப் பயன்படுத்திப் புகாரைக் கைப்பற்ற வேண்டியது தான்! இளஞ்சேட்சென்னியின் அரசில் இருந்த அனைத்து சேனாதிபதிகளையும் நாம் பணியச் செய்து விட்டோம். எதிர்த்தவர்களை வீழ்த்தி விட்டோம். இனி நமது ஆளுமைதான். தங்கள் யோசனை என்ன?''

“அரசே! அவர்களின் உதவியை நாடுவதில் பெரும் சிக்கல் உள்ளது!”

“சிக்கலா?”

“ஆம் அரசே”

“என்ன பிரம்மாயரே!”

“அரசே! அவர்களின் உதவியுடன் நாம் புகார் பட்டினத்தைக் கைப்பற்றினால் தென்னகத்தின் பெரும் கேந்திரத் தளமான புகாரையும், அதன் செல்வங்களையும் நாம் அவர்களுடன் பகிர்ந்துகொள்ள நேரிடும்! புகாரை யாரிடமும் பகிர்ந்துகொள்ள இயலாது!”

“தாங்கள் கூறுவது உண்மைதான். இதனை விட்டால் புகாரைக் கைப்பற்ற வேறு மார்க்கம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லையே! தங்களிடம் வேறு திட்டம் ஏதேனும் இருக்கிறதா பிரம்மாயரே?”

“என்னிடம் வேறு ஒரு திட்டம் உள்ளது அரசே!”

“அப்படியா? விரைவாகக் கூறுங்கள்!”

“அதுதான் புகாரின் இந்திரத் திருவிழா! இந்திரத் திருவிழாவைக் காண வரும் மக்கள் கூட்டத்தினரோடு நம் படை வீரர்களையும் மாறுவேடத்தில் ஊடுருவச் செய்வோம். புகாரில் இருக்கும் எனது மாளிகையில் வேண்டிய ஆயுதங்களைப் பதுக்கி வைத்துள்ளேன். தாங்களும் சோழப் பேரரசர் என்ற முறையில் புகாருக்கு வருகைத் தாருங்கள். உங்கள் இருப்பு, நம் வீரர்கள், மக்கள் கூட்டம் என இவற்றை மீறிச் செங்குவீரனால் ஏதும் செய்ய இயலாது. புகார் வீழ்ந்துவிடும். இந்த வாய்ப்பைத் தவற விட்டால் இன்னும் ஒரு வருடம் நாம் காத்திருக்க நேரிடும். இதுபற்றித் தங்கள் கருத்து என்ன?”

சிறிது நேரம் சிந்தித்த மன்னர் இருங்கோவேள், “பிரம்மாயரே! சிறப்பான யோசனை. இன்றிரவே என் சேனாதிபதிக்கு இது பற்றிக் கட்டளையிடுகிறேன். முற்றுகையிடுதலும் எளிது! பொருள் இழப்பும் குறைவு! புகார் விழப்போவது நிச்சயம்” எனக் குதூகலித்தார்.

“அரசே! இளவரசனை என்ன செய்துள்ளீர்கள்? இன்னும் உயிரோடு தான் வைத்திருக்கிறீர்களா?” என அடக்கத்துடனும் அடங்கா ஆர்வத்துடனும் கேட்டார் வைதீகர் பிராமணர்.

“என் மகனை வீரர்களின் பாசறையிலே தங்கியிருக்கக் கட்டளையிட்டுள்ளேன்!”

“அரசே, நான் இளவரசன் எனக் கேட்டது தங்கள் புதல்வனை அல்ல.”

“அப்புறம், யாரை?”

“இளஞ்சேட்சென்னியின் மகனை!”

“ஓ! அந்த இளம்புலியைப் பற்றிக் கேட்கிறீர்களா?”

“ஆம், ஆம்”

“அவனை ஒரு இரகசிய மாளிகையில் அடைத்து வைத்துள்ளேன். சமயத்தில் தேவைப்பட்டால் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று!”

“அவனால் இனி ஆகவேண்டியது என எதுவும் கிடையாது. ஓடிப்போனவன் ஓடிப்போனவனாகவே இருக்கட்டும்! அவன் காரியத்தை முடித்து விடுங்கள்! மீண்டும் நினைவுபடுத்துகிறேன். புலி சிறியதாக இருந்தாலும், கிழடாக இருந்தாலும் அதனால் நமக்கு ஆபத்து மட்டுமே நேரும்! கிழப் புலியை படுக்கையிலேயே தீர்த்துக்கட்டி விட்டோம். அவனோடு சோழ வம்சமே தீர்ந்தது என எண்ணிக்கொண்டிருந்தோம். அவன் இறக்குமுன் இவன் கருவாகிவிட்டான்!”

:உண்மைதான் பிரம்மாயரே! அவனால் ஆபத்துதான். விரைவில் அவனது சாம்பலை காவிரியில் கரைத்து விடுவோம்!”

“அப்படியே ஆகட்டும்! ஆனால் அவனைப் பற்றிய செய்திகள் அனைத்தும் இரகசியமாகவே இருக்கட்டும்” என வைதீகர் பாகவதரும் மன்னர் இருங்கோவேளும் பலவாறு பேசிக்கொண்டிருந்ததை இரகசியமாக யாரும் காணாத வண்ணம் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த காளனின் இதயம் தன்னைப் பற்றியும் இளவல் பற்றியும் அவர்கள் பேசிக்கொண்டதைக் கேட்க

கேட்க வேகமாகத் துடித்து உடல் நடுங்கி வியர்க்க ஆரம்பித்தது. தலை சுழன்றது. காளன் பெரும் வீரன் தான், எதற்கும் அஞ்சாதவன் தான். இருந்தும் இள வயதான இளவலைப் பற்றி அவர்கள் அப்படிப் பேசியது அவனுக்குப் பெருத்த அதிர்ச்சியைக் கொடுத்தது. தற்போது காளனுக்கும் இரும்பிடர்த்தலையருக்கும் பிரச்சனை ஏற்பட்டாலும் இளவல் இவன் தூக்கி வளர்த்த பிள்ளை. அவனுக்கு ஏற்படப் போகும் துயரையும், முடிவையும் நினைக்க நினைக்க உடல் நடுங்க ஆரம்பித்தது. இனியும் அங்கு இருப்பது ஆபத்து, வைதீகர் எப்போது வேண்டுமானாலும் தன்னை அழைக்க வந்துவிடுவார் என எதிர்பார்த்த காளன் அங்கிருந்து வெளியேறி அவர் விட்டுச் சென்ற கூடத்திற்கு வந்து சித்திரங்களைப் பார்வையிடுவதைப் போல நின்றுவிட்டான்.

அவர்கள் பேசியதை எண்ணியபடியே அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தான். சிறிது நேரம் கழித்து வெளியே வந்த வைதீகர் காளனிடம், “உன்னைச் சந்திக்க மன்னர் இசைந்துவிட்டார். உள்ளே வா!” எனக் கட்டளையிட்டுக் காளனை அழைத்துச் சென்றார்.

வைதீகரிடம் அடக்கத்துடனும், பணிவுடனும் நடந்துகொண்ட இருங்கோ வேள், காளனிடம் தன் அதிகாரத்தையும் உயர்வையும் காட்டும்படி கம்பீரத்துடனே நடந்து கொண்டார்.

காளன் உள்ளே வந்த பிறகு அவனைக் கவனிக்காதது போலவே கூடத்தில் அப்படியும் இப்படியுமாகக் கம்பீரத்துடன் நடக்கலானார்.

காளனின் மனதினுள் கோபமும், ஆத்திரமும் தோன்றினாலும் அதனை வெளிப்படுத்த இது சரியான தருணம் அல்ல என்பதை உணர்ந்து இருங்கோவேள் பேசும் வரை அமைதியைக் கடைபிடிப்பதே சிறந்தது என நின்றுகொண்டிருந்தான்.

கம்பீரமாகத் தொண்டையைக் கனைத்த இருங்கோவேளை வைதீகரும் காளனும் ஒரே நேரத்தில் பார்த்தனர். காளன் அவரிடம் தனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டான்.

காளனிடம், இருங்கோவேள் “உமது பெயர் என்ன?” என வினவினார்.

இளந்திரையன் என்ற பெயரை மறைத்து “காளன்” என மட்டும் கூறினான்.

“காளனா?” வியப்புடன் கேட்டார் இருங்கோவேள்.

குறுக்கிட்ட வைதீகர் பாகவதர், “அரசே இவனை எதிர்ப்பவர்களை இவன் காலனிடம் அனுப்பிவிடுவதே இவன் வழக்கம். ஆதலால் தான் இவனை ‘காளன்’ என அனைவரும் அழைப்பர். இவனது இயற்பெயரை தயைகூர்ந்து கேட்க வேண்டாம். அதை இவன் இதுவரை யாரிடமும் தெரிவித்தது இல்லை” என்றார்.

வைதீகர் கூறியதைக் கேட்ட மன்னர், நமக்கு ஆக வேண்டிய காரியம்தான் முக்கியம் என மனதினுள் எண்ணி “வைதீகர் உன்னைப்பற்றிக் கூறியது அனைத்தும் உண்மைதானா?” என வினவினார்.

தான் மறைந்திருந்து இவர்களின் பேச்சை ஒட்டுக்கேட்டதை இவர் கண்டறிந்து விட்டாரோ? எனத் திடுக்கிட்ட காளன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு, “அரசே! பிரம்மாயர் உள்ளே வந்தபோது என்னை வாசலிலே காக்க வைத்துவிட்டு வந்தார். அவர் தங்களிடம் என்னைப்பற்றி என்ன கூறினார் என எதுவும் எனக்குத் தெரியாது. அவர் என்னைப் பற்றி என்ன தெரிவித்தார் என நான் அறிந்தால் அவரது கூற்று மெய்யா? அல்லது மிகைப்படுத்தப்பட்ட மெய்யா? எனக் கூற இயலும்!” எனக் கூறியவன் பின்னர், “அரசே! பிரம்மாயர் மிகச்சிறந்த கல்விமான். அவர் கற்காத நூல்கள் என்பதே கிடையாது. அறிவிலும், மதிப்பிடுதலில் வல்லவர். மகத மன்னனான தன நந்தர்களைப் பாடலிபுத்திரத்தில் வென்று சந்திர குப்தன் எப்படி மௌரியப் பேரரசைத் தோற்றுவிக்கச் சாணக்யர் உதவினாரோ அப்படியே பிரம்மாயரும் தங்களுக்கு உதவிக்கொண்டிருக்கிறார். மௌரியனுக்கு உதவிய சாணக்யருக்கு சரி நிகரான பிரம்மாயர் என்ன கூறியிருந்தாலும் அது நிச்சயம் சரியாகத் தான் இருக்கும் என நான் திடமாக நம்புகிறேன்” எனச் சாதுர்யத்துடனும், இருவரும் தன்னை முழுவதும் நம்ப வேண்டும் எனவும் புத்திசாலித்தனத்துடனும் பதிலளித்தான் காளன்.

தனது பதில் இருவரையுமே மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது என மலர்ச்சியடைந்த அவர்களின் முகப் பாவனைகளிலிருந்து காளன் அறிந்துகொண்டான்.

மகிழ்ச்சியுடன் அரசர் இருங்கோவேள் சிறிது சந்தேகத்துடன், “உமக்கும் உமது தமையனுக்கும் என்ன பிரச்சனை?” என வினவினார்.

“அரசே! எனக்கும் என் தமையன் இரும்பிடர்த்தலையருக்கும் உருவாகியிருப்பது சாதாரணப் பகை அல்ல. ஜென்மப் பகை. இரும்பிடர்த்தலையனை என் அண்ணன் எனக்கூறவே என் மனம் ஒப்பவில்லை. மாற்றாந்தாய் மகனாக இருந்தாலும் அவரை நான் என் உடன் பிறந்த தமையனாகவே எண்ணினேன். ஆனால் அவர் என்னை இழிவுடனே கருதலானார்! ஆதலால் அங்கிருந்து வெளியேறிவிட்டேன்.”

“உங்களுக்குள் இருக்கும் பிரச்சனை இவ்வளவு தானா?” இன்னும் தெரிந்துகொள்ளும் ஆர்வத்தில் அவர் கேட்டார்.

“அரச பெரும! முதல் பிரச்சனை நான் அவரது உடன் பிறந்த சகோதரன் என்பதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. என் தந்தை அழுந்தூர் திதியனுக்குப் பிறகு தாங்கள் அரச, அரண்மனைச் சுக போகங்களிலிருந்து விலகி துறவியாக ஆகிவிட்டமையால் நான் தான் அடுத்த அழுந்தூர் வேள் என்பதைக் குறிக்கும் வகையில் எனக்கு இளவரசுப் பட்டம் சூட்ட வேண்டும் எனத் தெரிவித்தேன்.”

“பிறகு?”

“விவரம் அறிந்த காலத்திலிருந்து என்னை நான் ஒரு போர் வீரனாகவே தயார் .செய்து கொண்டிருக்கிறேன். ஆனால் அவர் எனது காதலை எதிர்த்து நான் கூறும் பெண்ணை மணந்தால் தான் உனக்கு ராஜ்ஜியம் எனக் கூறிவிட்டார். காரணம் கேட்டேன்! அதற்கு அவர் நான் கூறும் பெண்ணை நீ மணந்தால் தான் நமது ராஜ்ஜியத்திற்கும் பலம் என்றார். அதனை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை!”

“அவர் கூறியதை நீ ஏற்றுக்கொள்ள இயலவில்லையா?”

“ஆம் அரசே!”

“ஏன்? எதற்கு?”

“அரசே! சோழ மன்னர் இளஞ்சேட்சென்னி சரி சமமான அரச குலம் என நினைத்திருந்தால் பாண்டியனிடமோ அல்லது சேரனிடமோ தான் பெண் எடுத்திருக்க வேண்டும்! அவர் அவரது காதலுக்காக இறங்கி நம் வேளிர் குளத்தில் பெண் எடுக்கவில்லையா? அவரைப் போலவே என் காதலுக்காக நாமும் நம் குலத்திலிருந்து இறங்கி பெண் எடுக்கலாம் எனத் தெரிவித்தேன்! ஆனால் எனது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. எனது காதலியை எந்தச் சூழ்நிலையிலும் பட்டத்து இளவரசியாக ஏற்றுக்கொள்ள மாட்டோம் எனத் தெரிவித்துவிட்டனர். எனக்கும் என் காதலுக்கும் மதிப்பில்லாத இடத்தில் ஒட்டுமொத்த தென்னகத்திற்கும் என்னைச் சக்கரவர்த்தியாக அறிவித்தாலும் அது எனக்குத் தேவையில்லை எனக் கூறி அங்கிருந்து வெளியேறிவிட்டேன்” எனக் கூறியபடியே கண்ணைக் கசக்கினான் காளன்.

காதலுக்காக வலிமை வாய்ந்த ராஜ்ஜியத்தையே உதறிவிட்டு வந்துவிட்ட காளனை எண்ணி வியப்படைந்த மன்னர், “ராஜ்ஜியத்தையே உதறவைத்துவிட்டப் பேரழகு வாய்ந்த உன் காதலி யார் என நாங்கள் அறிந்துகொள்ளலாமா?” என ஆர்வத்துடன் கேட்டார்.

சிரித்துக்கொண்டே, “அரசே! அதற்கு அவசியமில்லை. என் காதலியின் அழகிற்கு ஈடான மகிழ்ச்சி உலகில் வேறு எதுவும் கிடையாது என எண்ணி என் அரண்மனை வாழ்வைத் துறந்தேன். ஆனால் என் காதலியோ ஏதுமில்லாத பரதேசியாக இருக்கும் உன்னை நான் எப்படி மணந்து கொள்வேன் எனக் கூறி என்னை விட்டு பிரிந்து சென்றுவிட்டாள். அவளது பிரிவை ஏற்றுக்கொள்ள இயலாமல் மது அருந்திக்கொண்டு பெரும் குடிகாரனாகி, கள்வனாகத் திரிந்தேன். பின்னர் வைதீகரைக் கண்ட பின் தான் என் வாழ்வின் பாதை பிரகாசமாக மாறியது. அரசே தாங்கள் எந்தக் கட்டளையை அளித்தாலும் அதனை நிறைவேற்ற நான் தயார்! ஆனால் ஒரு நிபந்தனை!” என முடித்தான் காளன்.

“நிபந்தனையா?”

“ஆம் அரசே!”

“அது என்ன?”

“நான் எந்த அரண்மனையிலிருந்து வெளியேறினேனோ, அந்த அழுந்தூருக்கு நான் மன்னனாக வேண்டும்! அப்படி நான் உறைந்தைக்குக் கட்டுப்பட்டு அழுந்தூருக்கு குறுநில மன்னனாக ஆகும் பட்சத்தில் காலம் முழுக்க உங்களுக்குப் பற்றுடன் இருப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்!”

காளன் கூறியதைக் கேட்ட உறைந்தை மன்னர் இருங்கோவேள் சிறிது நேரம் யோசித்துவிட்டுக் காளனிடம், “உன்னிடமுள்ள முத்திரை மோதிரத்தைக் கொடு!” எனக் கட்டளையிட்டார்.

காளனும் இடையின் அரைச் சுருளில் பத்திரமாக வைத்திருந்த முத்திரை மோதிரத்தை எடுத்து மன்னரிடம் கொடுத்தான். மன்னரும் அதனை வாங்கிக்கொண்டு வேறொரு முத்திரை மோதிரத்தையும் அரச முத்திரை பொறித்த இலைச்சினையையும் கொடுத்து “இன்று முதல் என் படைகளின் உப தலைவர்களும் நீயும் ஒருவன். நேரம் வரும்போது உனது நிபந்தனை நிறைவேற்றப்படும். அதுவரை நீ உறைந்தைக் கோட்டைத் தலைவனாக இருந்து இரகசிய வழிகளையும், எதிரிகளின் திட்டங்களையும் அறிந்து தெரியப்படுத்திக் கொண்டிரு!” எனக் கட்டளையிட்டார்.

அரச இலைச்சினைப் பதக்கத்தையும், முத்திரை மோதிரத்தையும் வாங்கி மகிழ்ச்சியுடன் தனது கண்களில் ஒற்றிக்கொண்டான்.

“அரண்மனையில் யாராலும் கண்டறிய இயலாத சில இரகசிய வழிகள் உள்ளது என நான் சந்தேகிக்கிறேன். அதன் வழியே தான் இரும்பிடர்த்தலையனும் இங்கிருந்து தப்பித்தான். அதனைக் கண்டறிந்து கோட்டையை மேலும் பலப்படுத்திக்கொண்டிரு! சமயம் வரும்போது உனக்குப் பணிகளை வழங்குகிறேன்!” எனக் கூறியவர் பின் வைதீகரைப் பார்த்து, “பிரம்மாயரே! தங்களுக்கு இதில் உடன்பாடு தானே!” என அவரது அபிமானத்தையும் கேட்டார்.

“அரசே தாங்கள் எடுக்கும் எந்தவொரு முடிவும் சிந்தித்து எடுக்கப்பட்டதாகவே இருக்கும்!” எனக் கூறி அவரது மகிழ்ச்சியையும்

வெளிப்படுத்திக்கொண்டார் வைதீகர்.

பின்னர் ஏதோ சிந்தித்த அரசர் காளனிடம், “நீ புகார் உப தலைவன் செங்குவீரனைச் சந்தித்ததுண்டா?” என ஆவலுடன் கேட்டார்.

“ஆம் அரசே! சில தினங்களுக்கு முன் சம்பாபதி வனத்தில் சந்தித்தேன். அன்றே என் கையால் அவன் மடிந்திருக்க வேண்டியவன், ஆனால் விதி வசத்தால் தப்பிவிட்டான்” எனத் தெரிவித்தான் காளன்.

“பிரம்மாயரே! சமீப காலங்களில் நம் ஒற்றர்கள் மூலம் என் காதில் விழும் அனைத்து செய்திகளும் அந்த உப தலைவனைப் பற்றியதாகவே இருக்கிறது. நான் அந்த உப தலைவனைச் சந்திக்க வேண்டும். முடிந்தால் அவனை நம்முடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆவலும் இருக்கிறது! அவனை எப்போது சந்திக்க நேரிடும்?” என வினவினார்.

பதிலுக்கு வைதீகர், “அரசே! யார் யாரை எப்போது சந்திக்க வேண்டும் என்பதை பார்க்கடலில் பள்ளிகொண்டிருக்கும் அந்தப் பரந்தாமன் அல்லவா தீர்மானிக்கிறான். அவன் தீர்மானித்தால் தாங்கள் நிச்சயம் சந்திப்பீர்கள்!” எனக் கூறியபடியே மன்னரிடம் விடைபெற்றுக் காளனை அழைத்துக்கொண்டு அங்கிருந்து வெளியேறினார்.

வெளியே வந்த காளன் தனது நண்பன் வில்லவனை அங்குக் காணாததைக் கண்டு வைதீகரிடம் கூறினான். அதற்கு வைதீகர் “காவல் வீரர்களிடம் கூறி தேடச் சொல்கிறேன்” எனத் தெரிவித்து வீரர்களை அழைத்தார். அவரைத் தடுத்த காளன், “ஐயா! எனக்கு இந்த அரண்மனையின் அனைத்துப்பகுதிகளும் அத்துப்படி. என் தமக்கையின் செல்லத்தில் என் சிறு வயதை இங்குதான் நான் கழித்தேன். நானே தேடிக்கொள்கிறேன்” எனக் கூறியபடி வில்லவனைத் தேடிச் சென்றான்.

வைதீகரும், காளனும் சென்ற பிறகு தனது திட்டங்கள் அனைத்தும் கச்சிதமாக நிறைவேறிக் கொண்டிருப்பதை எண்ணி பெரிதும் மகிழ்ந்தார் இருங்கோவேள். ‘சோழ அரியாசனத்திற்கு உரியவனான இளஞ்சேட்சென்னியின் மகன் தனது சிறைச் சாலையில்; அவன் சிறை வைக்கப்பட்டிருப்பதை யாராலும் கண்டறிந்து அவனைத் தப்புவிக்க இயலாது. அவனை மட்டும்

தீர்த்துக்கட்டி விட்டால் இனி நம்மை எதிர்ப்பவர்கள் என யாரும் சோழ நாட்டில் இல்லை. இளவரசனைத் தீர்த்துக்கட்ட வேண்டிய சரியான தருணம் இதுதான். அதை உடனே செய்யவேண்டும். தனது கைக்கு வந்துவிட்ட இந்தச் சோழ சிம்மாசனம் இனி மற்றவர்கள் கைக்கு எக்காலத்திலும் செல்லக் கூடாது!' என எண்ணி அந்தக் கூடமே அதிரும்படி "ஹாஹ ஹாஹாஆஆ" என மகிழ்ச்சியில் சிரிக்கலானார்.

திடீரெனத் தனது பின்னால் யாரோ தூணுக்கருகில் நிற்பது போல உணர்ந்த இருங்கோவேள் சிரிப்பதை நிறுத்திவிட்டுச் சட்டெனத் திரும்பிப் பார்த்தார். ஆனால், அங்கே தூண் மட்டுமே வெறுமனே நின்றது.

மன பிரமை அல்லது மாலைப் பொழுதில் தான் பருகிய மதுவினால் ஏற்பட்ட மாயத் தோற்றமாகக் கூட இருக்கலாம் என எண்ணி அவர் மீண்டும் அந்த அரங்கமே அதிரும்படி பேய் சிரிப்பு சிரிக்க அவருக்குப் பின்னால் ஒரு உருவம் மீண்டும் தோன்றி நடந்து வந்து அவருக்கு மிக அருகில் நின்றது. அவரது மகிழ்ச்சி அனைத்தும் மறைந்து நெஞ்சின் அடி ஆழத்தில் அதுவரை அவர் உணர்ந்திராத பயம் ஒன்று அவரைக் கண நேரத்தில் கவ்வியது. அவரது உடலும், உயிரும் அக்கணம் நடுங்கியது. அவரது தலை சுழன்றது!

**அடிக்குறிப்பு :**

1. உறைந்தைக் குணாது நெடும்பெருங்குன்றம் (அகம் 4: 14—15)
2. ஏணிச்சேரி என்பது உறைந்தைப் பட்டினத்தின் புகழ் பெற்ற வீதி. இத்தெருவில் வாழ்ந்த உறைந்தை ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவரின் பாடல்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.
3. விருஷலன் என்றால் மிகவும் இழிந்த கீழ் சாதிப் பையன் எனப் பொருள்.
4. மிளைக் காடுகள்: கோட்டை மதிலைச் சூழ்ந்து அமைக்கப்பட்டிருக்கும் அடர்ந்த காடுகளுக்கு மிளைக் காடு எனப் பெயர்.

# 29. சூ ளுரை

உறைந்தைப் பட்டினமும், அரண்மனையும் பெரும் பாதுகாப்பு நிறைந்தது. அதிலும் மன்னர் வசிக்கும் மாளிகையும் அவரது அந்தரங்க ஆலோசனைக் கூடமும் காவல் வீரர்களால் கடும் பாதுகாப்புக்கு உட்படுத்தப்படும். அவர்களது அனுமதியின்றி யாரும் உள்ளே பிரவேசிக்க இயலாது. அப்படிப்பட்ட தனது மாளிகையில் தனக்குப்பின் யாரோ நிற்பது போன்று தோன்ற திரும்பிப் பார்த்த மன்னர் இருங்கோ வேள் யாரும் இல்லாததைக் கண்டு சில தினங்களாகத் தூக்கமில்லாமல் இருப்பதனால் ஏற்பட்ட மனப்பிரமை எனத் தனக்குதானே சமாதானம் செய்து கொண்டார். ஆனால், மீண்டும் தனக்குப் பின்புறத்திலிருந்து தன்னை நோக்கி யாரோ வருவது போலத் தோன்ற 'எங்கே இறந்த இளஞ்சேட் சென்னியின் ஆவிதான் அவரது மகனது அரியாசனத்தைப் பறித்துக்கொண்டதற்குப் பழி வாங்க வந்துவிட்டதோ!' என எண்ணி வெடவெடத்துப் போய்விட்டார். அவரது உடலும், உள்ளமும் பயத்தில் உறைந்து, அச்சத்துடன் எச்சரிக்கையாகத் திரும்பிப் பார்த்தார்.

அங்கே புன்னகையுடன் உப தலைவன் விறல்வேல் நின்றுகொண்டிருந்தான். இதற்கு முன் தான் காணாத ஒருத்தன் தனது கூடத்தில் நிற்பதைக் கண்டு தனது இடையில் வைத்திருக்கும் குறுவாளை நோக்கி தனது கையைக் கொண்டு சென்றவர் திடுக்கிட்டார். அங்கே அவரது குறுவாள் காணப்படவில்லை. அணிந்திருந்த நகைகள், மற்றும் மகுடத்தை இரவில் கழட்டி வைக்கும்போது தனது அரண்மனைதானே என எண்ணி எப்போதும் இடையில் வைத்திருக்கும் தனது குறுவாளையும் அதனோடு வைத்துவிட்டதை எண்ணித் தனது நிலையை நொந்துகொண்டு, "யார் நீ?" என அதிகாரத்துடன் கேட்கலானார்.

விறல்வேல் அமைதியுடன், "சற்று முன் தாங்கள் வைதீகரிடம் என்னைச் சந்திக்க வேண்டும் என வேண்டினீர்களே! ஆதலால் தான்

பரந்தாமனின் உத்தரவுப்படி உம்மைக் காண வந்தேன் அரசே!'' என்றான்.

''என்னைக் காண வந்தாயா? அப்படியெனில் முத்திரை மோதிரம் அல்லது இலச்சினையைக் காட்டு!'' என்றார்.

''அப்படி ஏதும் என்னிடம் இல்லை'' என அடக்கத்துடன் விறல்வேலிடமிருந்து பதில் வந்தது.

''அப்படியெனில் எனது அரண்மனைக்குள் உன்னால் எப்படி வர முடிந்தது. யாருடைய உதவியுடன் உள்ளே நுழைந்தாய்!''

''வைதீகர் தங்களிடம் பார்க்கடலில் பள்ளிக்கொண்டிருக்கும் பரந்தாமன் எண்ணினால் அனைத்தும் நடக்கும் எனக்கூறினார் அல்லவா! பரந்தாமனின் மாய சக்தியினால் யார் கண்ணிலும் அகப்படாமல் இவ்வரண்மனைக்குள் பிரவேசித்துத் தங்கள் அந்தரங்க அறைக்குள்ளும் நுழைந்தேன்!''

''என்னிடமே பொய் பேசுகிறாயா?''

''நான் பொய் கூற வேண்டிய அவசியம் ஏதுமில்லை!''

''அப்படியெனில் இங்கு எப்படி எதற்கு வந்தாய் எனக் கூறப்போகிறாயா? இல்லையா? இப்போதே பார் உன்னைப் பாதாளச் சிறையில் அடைக்க உததரவிடுகிறேன்!'' எனக் கர்ஜித்தபடியே கையைத் தட்டி, ''யார் அங்கே! உடனே உள்ளே வாருங்கள்!'' எனச் சத்தம் போட்டுக் கட்டளையிட்டார்.

மன்னரின் கட்டளையைக் கேட்டவுடன் வெளியே காவல் இருந்த வீரர்கள் இருவர் அறைக்குள்ளே ஓடோடி வந்தனர். அவர்களது பொல்லாத நேரம், வீரர்கள் இருவர் உள்ளே ஓடி வந்ததைக் கண்ட விறல்வேல் அவர்கள் தன்னைக் கண்டு மற்ற வீரர்களை அழைக்குமுன் தன் இடையில் வைத்திருந்த இரண்டு குறுவாள்களை எடுத்து அவர்களை நோக்கி அடுத்தடுத்து வேகமாக எறிந்தான்.

ஓடிவந்த காவலர்களின் கழுத்தில் அவர்கள் எதிர்பாராத நேரத்தில் இரண்டு குறுவாள்களும் பாய்ந்தன.

விறல்வேல் குறுவாளை எறிந்த அடுத்தக் கணத்தில் இரு காவலர்களும் கீழே சாய்ந்தனர். கழுத்தில் குறுவாள் பாய்ந்ததனால் அவர்களால் சத்தம் கூட எழுப்ப இயலாமல் இருங்கோ வேளின் கண் முன்னே குருதி சொட்டியபடி மடிந்தனர். தன் கண் முன்னே தன் இருவீரர்களைக் கொன்றவனைக் கண்ட இருங்கோவேள் ஏதோ பேச வாயெடுத்தான். அதற்குள் தன் இடையிலிருந்த மற்றொரு குறுவாளை எடுத்து இருங்கோவேளை நோக்கி எறிந்தான். இதனை எதிர்பாராத இருங்கோவேள் தன்னை நோக்கித் தாக்கவரும் குறுவாளைக் கண்டு திகைத்தபடி கண்களை இறுக மூடிக்கொண்டார். ஆனால், அவர் எண்ணியபடி அக்குறுவாள் அவரைத் தாக்கவில்லை. அருகிலிருந்த மரத்தூணில் குறுவாள் குத்திட்டு நின்றது.

இவனது குறிதான் ஒருவேளை தவறிவிட்டதோ என எண்ணியவர் இல்லை, இல்லை அப்படியிருக்க வாய்ப்பே இல்லை. ஓடிவந்த இரு வீரர்களைக் கண்ணிமைக்கும் நேரத்தில் யமலோகத்திற்கு அனுப்பியவனால் நின்றிருக்கும் தன்னைத் தாக்க நினைத்திருந்தால் அவனது குறி நிச்சயம் தப்பியிருக்காது என நினைத்து குறுவாள் குத்திட்டு நின்ற தூணைக் கவனிக்கலானார்.

விளக்கொளியில் உருவான தனது நிழலின் கழுத்துப்பகுதி அத்தூணில் படிந்திருப்பதைக் கண்டவர் அதைத்தான் அவன் குறிபார்த்து எறிந்துள்ளான் என அறிந்துகொண்டவர் பின் அவன் பேசும்வரை தாம் ஏதும் பேசாமல் நிற்பதே சாலச்சிறந்தது என எண்ணி அமைதியைக் கடைபிடிக்கலானார்.

விறல்வேல் அவரை ஊடுருவி பார்ப்பது போலத் தனது பார்வையை அவரது கண்களில் நிலைக்கவிட்டபடியே அவரை ஆராய்ந்தான். இரவு நேரமென்பதால் அவர் வழக்கமாக அணியும் கவசம் தரித்த அரச உடை, அணிகலன்கள், கையில் வைத்திருக்கும் செங்கோல், அரச மகுடம் என அனைத்தையும் களைந்துவிட்டு இடுப்பில் மட்டும் உடையை அணிந்துகொண்டு மன்னர் என்பதற்கு எந்தவொரு அடையாளமும் இன்றி நின்றுகொண்டிருந்தார். இடுப்பில் வஸ்திரம் மட்டுமே அவர் சுற்றியிருந்ததால் அவரது அகன்ற, உறுதியான மார்பில் தாங்கியிருந்த விழுப்புண்கள் அவரது வீரத்தையும், அவர்

பல போர்க்களங்களைக் கண்ட வீரர் என்பதையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. கழுத்து வரை நீண்டிருந்த சுருள் சுருளான முடி, அகண்ட நெற்றியில் இடப்பட்டிருந்த திருநீறு அவர் தீவிர சிவ பக்தர் என்பதையும், வளைந்த புருவம் அதற்குக் கீழே வீற்றிருந்த கம்பீரமான தோற்றத்தைத் தரும் கண்கள், பெரிய மூக்கு, அதன் கீழ் கன்னம் வரை நீண்டிருக்கும் கம்பீரமான பெரிய முறுக்கிய மீசை, கீழே தடித்த உதடுகள் என அவரது தோற்றம் அமைந்திருந்தது. அச்சூழ்நிலையில் அவரால் பேச இயலாமல் அவரது மீசையும், உதடுகளும் கோபத்தில் துடித்துக்கொண்டிருப்பதையும் விறல்வேல் கவனிக்கவே செய்தான். அவரது முகத்தில் கன்னம், தாழ்வாய் பகுதிகளில் வளர்ந்திருந்த முடிகளில் சில நரைத்தும், முகத்தில் தோல் சுருங்கியும் அவரது வயதினை பகிரங்கப்படுத்தியும், புதுக் கம்பீரத்தையும் வழங்கிக்கொண்டிருந்தது. மன்னர் என்பதற்குரிய அனைத்து அங்க லட்சணங்களையும் கச்சிதமாகப் பெற்றிருந்தார் மன்னர் இருங்கோவேள்!

அவரது உருவத்தையும், அவரைச் சுற்றியிருக்கும் சூழ்நிலையையும் கவனமாக ஆராய்ந்துகொண்டு விறல்வேல் அமைதியாக ஏதும் பேசாமல் நிற்பதைக் கண்ட உறைந்தை மன்னர் இருங்கோவேள் தைரியத்தை உருவாக்கிக்கொண்டு “நீ யார்? உனக்கு இங்கு என்ன வேலை?” என அதிர்ச்சியுடன் வினவினார்.

பதிலுக்கு விறல்வேல், “தாங்கள் சந்திக்க வேண்டும் என விரும்பிய புகார் நகர உபதலைவன் நான் தான்!” எனப் புன்னகையுடன் தனது பார்வையை இருங்கோ வேளின் கண்களில் நிலைநாட்டினான்.

“ஓ! நீதான் அந்த உபதலைவனா?”

“ஆம் அரசே! நானேதான்.”

“நீ பெரிய வீரனென்றும், நேர்மை தவறாதவன் எனவும் எனது ஒற்றர்களால் அறியப்பெற்றேன். பெரிய வீரனான நீ இப்படி அரண்மனைக்குள் இரகசியமாக வந்திருக்கிறாயே! இது தான் உனது நேர்மையா? முறைப்படி முன் வாசல் வழி நீ வந்திருந்தாலும் உன்னை நான் வரவேற்றிருப்பேன்!”

“அரசே! உங்களுக்கு நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். மற்றவர்களின் வீரத்தைப் பற்றியும், நேர்மையைப் பற்றியும் ஏளனம் செய்யுமுன், தம்மைப் பற்றியும் சுய மதிப்பீடு செய்து கொள்வது மிகவும் அவசியம்! தாங்கள் இந்த உறைந்தைப் பட்டினத்தையும், சோழ அரியாசனத்தையும் முறைப்படி இளஞ்சேட்சென்னியைப் போரில் வென்று கைப்பற்றியிருந்தால் நானும் நிச்சயம் முன் வாசல் வழி வந்து தங்களை வாழ்த்தியிருப்பேன். ஆனால், அதற்குத் தாங்கள் தகுதியானவர் அல்ல. ஆதலால் தான் இரகசியமாகத் தங்களைக் கடைசியாகச் சந்தித்து எச்சரிக்கை செய்ய வேண்டி நானே வந்துவிட்டேன்!”

யாரேனும் இப்படி இருங்கோவேளை மற்ற நேரத்தில் பேசியிருந்தால் அவர்களின் தலை துண்டு துண்டாகப் போயிருக்கும். கையறு நிலையில் இருக்கும் தன்னிடம் அவன் இப்படிப் பேசுவதை எண்ணி அவரால் பொறுத்துக் கொள்ளவே முடிந்தது. கடைசியாக அவன் எச்சரிக்கை செய்ததை நினைத்தவர், “எச்சரிக்கையா?” என வினவினார்.

“ஆமாம்!”

“யாரை? எதற்காக?”

“பிறருக்கு உரிமையான அரியாசனத்தை வஞ்சகமாகக் குறுக்கு வழியில் கைப்பற்றி அமர்ந்திருக்கும் தங்களைத் தான்!”

பெரும் கோபம் கொண்ட இருங்கோவேள், “என் இடத்திற்கே வந்து என்னையே எச்சரிக்கை செய்யும் நீ, இனி நான் மனம் வைத்து என் தயவுடன் தான் நீ உயிருடன் வெளியேற இயலும் என்பதை நினைவில் கொள்.”

இருங்கோவேளின் இந்த எச்சரிக்கையைக் கேட்ட உபதலைவன் அந்த அரங்கமே அதிரும்படி கலகலவெனச் சிரித்தான். பின், “அரசே! இரகசியமாக எப்படி உள்ளே வந்தேனோ அப்படியே பாதுகாப்பாக என்னால் வெளியேறிட இயலும். உயிரைப் பற்றிய கவலையைத் துறந்த பிறகே நான் உள்ளே வர முடிவு செய்தேன். தங்கள் தயவு எனக்கு எந்தச் சூழ்நிலையிலும் தேவையிருக்காது!” என்றான்.

கடைசியாகத் தனது எதிரிகளிடம் வழக்கமாகத் தொடுக்கும் அஸ்திரத்தை தொடுத்துவிட வேண்டியது தான் என எண்ணியவர் தனது முகப் பாவனையை மாற்றிக்கொண்டு யோசித்தபடியே அறையில் நடந்த இருங்கோவேள் முகத்தில் புன்னகையுடன், ‘‘செங்குவீரா! உம்மைப் போன்ற வீரனை நான் என் வாழ்நாளில் இதுவரை கண்டதில்லை. கடும் பாதுகாப்பு நிறைந்த இவ்வரண்மனையில் இவ்வளவு சிரமத்துடன் முக்கியக் காரியத்தின் பொருட்டே என்னைச் சந்திக்க வந்திருப்பாய் என எண்ணுகிறேன். உனக்கு என்ன வேண்டும் கேள்! நீ என்னுடன் என் படையில் சேர்ந்துவிடு. உம்மைப்போன்று உயிரைத் துச்சமென நினைக்கும் படைகளின் தலைவன் என்னுடன் இருந்தால் சோழ தேசம் என்ன, இமயம் வரைக்கும் என்னால் வெற்றிக் கொடியை நாட்ட இயலும். இதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்!’’ என அவனது கருத்தையும் கேட்டார்.

இருங்கோவேள் கூறியதைக் கேட்ட விறல்வேல் சிந்தித்தபடியே நின்றான். அவனது அமைதியைக் கண்டு உற்சாகமடைந்தவர் ‘‘தயங்காமல் என்ன வேண்டும் என கேள் வீரனே!’’ என மேலும் தூண்டினார்.

‘‘தங்கள் படையில் சேர்ந்துவிடுவதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. ஆனால் அதற்குப் பிரதிபலனாக நான் எதிர்பார்ப்பதை தங்களால் அளிக்க இயலுமா? எனத் தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்!’’

விறல்வேலின் இந்தப் பதிலைக் கேட்ட இருங்கோவேள் சிரிக்கலானார்.

‘‘சோழ அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் என்னால் கொடுக்க இயலாதது என ஏதேனும் இருக்கிறதா! பொன் வேண்டுமா? பொருள் வேண்டுமா? மாளிகை வேண்டுமா? அல்லது ஏதேனும் தேசத்திற்குச் சுதந்திரமான குறுநில மன்னனாக வேண்டுமா? ஏன், நீ உபதலைவனாக இருக்கும் புகாரிலேயே உனக்கும் சுதந்திர மன்னனாக முடிசூட்டி வைக்கிறேன். கேள் வீரனே! நீ கேட்கும் எதையும் செய்ய நான் சித்தமாக உள்ளேன்!’’

“தாங்கள் கொடுக்க விரும்பும் எத்தகையதும் எனக்குத் தேவையில்லை. புகாரின் தலைவராக நியமிக்கிறேன் என்றீர்களே! அதற்கும் எத்தகைய அவசியமும் இல்லை. ஏனெனில் புகார் முழுவதும் இப்போது எனது கட்டுப்பாட்டில் தான் உள்ளது. புகாருக்கு நான் சுதந்திரமான மன்னனாக முடிசூடிக்கொள்ளத் தங்களது இசைவு என்பது அவசியமில்லை எனக் கருதுகிறேன். நான் புகாரை விடப் பெரிய வெகுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். நான் எதிர்பார்ப்பதை தங்களால் அளிக்க இயலும் பட்சத்தில் தங்களுடன் சேர்ந்து கொள்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

புகாரின் சுதந்திர மன்னனாக நான் முடிசூடிக்கொள்ளத் தங்களது இசைவு தேவையில்லை என விறல்வேல் கூறியது மன்னர் இருங்கோவேளுக்குக் கடும் கோபத்தை வரவழைத்தது. இருந்தாலும் சற்று முன் வைதீகர் இரும்பிடர்த்தலையரின் தம்பியை அழைத்து வந்து தம்முடன் சேர்ப்பித்து விட்டார். இளவரசனும் தம் காவலில் தான் சிறைவைக்கப்பட்டுள்ளான். நம்மை எதிர்க்கும் வல்லமையுடையவனான எதிரிகளிடம் இருந்த உபதலைவனான செங்குவீரனும் இப்போது தன்னுடன் இணையப்போகிறான் என்ற நினைப்பில் மகிழ்ச்சியுடன், “உனக்கு வேண்டியதைக் கேள்!” எனப் பெரும் உற்சாகத்துடன் ஆணையிட்டார்.

“எனக்கு வேண்டியது சோழ இளவல் வளவன்! இயலுமா?” எனக் கேட்டபடியே வளவன் என்ற பெயரைக் கேட்டவுடன் இருங்கோவேளின் முகத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்படுகிறதா எனக் கூர்ந்து கவனிக்கலானான்.

இளவரசனின் பெயரைக் கேட்டதும் இருங்கோ வேளின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்து முகம் கடுகடுத்து விட்டது. மாறிய முகத்துடன், “இளவரசனை விடுவிக்க இயலாது என்றால்......!” என்றபடியே நிறுத்தினார்.

செங்குவீரன், அரண்மனைக்குள் நுழையும் போது இளவல் இருங்கோவேளின் காவலில் வைக்கப்பட்டிருக்கலாம் என்ற ஐயத்துடனேயே நுழைந்தான். இருங்கோவேள் வைதீகர் மற்றும் காளனிடம் பேசியதை அரைகுறையாகக் கேட்டதிலிருந்தும் இப்போது அவர் பேசியதிலிருந்தும் இருங்கோவேள் தான் இளவரசனை சிறைப்படுத்தியுள்ளான் என்பதை

உறுதிப்படுத்திக் கொண்டான். வந்த வேலையில் பாதி முடிந்துவிட்டது. இனி இளவல் இருக்கும் இடத்தை அறிந்துகொண்டால் மிச்ச வேலையும் முடிந்துவிடும் என உள்ளுக்குள் மகிழ்ந்தவன், தனது அக மலர்ச்சி புறத்தில் தோன்றா வண்ணம் பார்த்துக்கொண்டான்.

“அரசே! நான் அப்பொழுதே கூறினேனே! நான் வேண்டும் வெகுமதியை தங்களால் அளிக்க இயலாது என்று!”

”இந்த மன்னனால் கொடுக்க இயலாத வெகுமதி என எதுவுமே இல்லை. ஆனால், நீ கேட்டவுடன் அவனை உன்னுடன் அனுப்பிவிடுவேன் என மனப்பால் குடிக்காதே! நீ கூறியது போல இளவரசனை நான் விடுவித்தால், அதற்குப் பின் நீ அவனுடன் சேர்ந்து எனக்கு எதிராகக் கலகம் புரிய மாட்டாயென என்ன நிச்சயம்!”

“அரசே! கொடுத்த வாக்கினைக் காப்பதற்கும், எடுத்த காரியத்தை வெற்றியுடன் முடிப்பதற்கும் உயிரையே கூட இழக்கும் வீரத் தமிழ் மரபில் பிறந்தவன் நான் என்பதைத் தங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்!”

இவன் கூறுவதைப் போல இளவலைத் தப்பவைத்துவிட்டால் தன்னைப் போல முட்டாள் ஒருவனும் இருக்கமாட்டான் என நினைத்தவர் இதுவரை பேசியது போல அல்லாமல் குரலைச் சற்று உயர்த்தி “இளவலை விடுவிப்பது என்பது இயலாத காரியம். ஆனால் உன் உயிரை நீ காப்பாற்றிக்கொள்ள உனக்கு ஒரு வாய்ப்புத் தருகிறேன். சமயோசிதமாகப் புத்திசாலித்தனத்துடன் முடிவெடுத்துக் கொள். என் படையில் நீ சேர்ந்து உனது உயிரையும் காப்பாற்றிக் கொண்டு உன்னால் கனவிலும் நினைத்துப் பார்க்க இயலாத பல உன்னதமான பதவிகளை அனுபவி. இல்லையேல் நீ உன் வாக்கினை நிறைவேற்றுகிறாயோ இல்லையோ நீ உன் உயிரை உறைந்தைப் பாதாளச் சிறையில் இழக்கப் போவது என்னமோ நிச்சயம்” என எச்சரித்தார்.

அவர் இப்படிக் கடுமையாகக் கூறியதைக் கேட்டு முகத்தில் எதையும் வெளிப்படுத்தாமல் இருங்கோவேளின் கண்களைப் பார்த்தபடியே, “அரசே! ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். உங்களை நான் அரசே என அழைப்பது தாங்கள் சூடிய சோழ மகுடத்திற்கும், தாங்கள் பிடித்த

செங்கோலுக்கும் தான். தாங்கள் இளவலை விடுவித்தாலும், விடுவிக்காவிட்டாலும் இன்றிரவே உங்கள் காவலில் இருந்து இளவலை நான் மீட்கப்போவது உறுதி. இளவலை விடுவித்து, புகாரில் அவருக்கு முடிசூட்டுவேன். பின்னர் முறைப்படி உங்கள் மீது போர் தொடுத்து, வீழ்த்தி அவருக்கு உரிய உறைந்தை அரண்மனையையும் சோழ சிம்மாசனத்தையும் அவர் நிச்சயம் மீட்பார்'' என விறல்வேல் கூறிக்கொண்டிருந்த போதே அவனது பேச்சை கேட்க சகிக்காத உறைந்தை மன்னர் இருங்கோ வேள் பெரும் கோபமடைந்து ஆத்திரத்துடன், ''நிறுத்து உன் பேச்சை! நீ இங்கிருந்து வெளியேறினால் தானே நீ கூறியதனைத்தும் நடக்கும். இன்றிரவே நீ தேடி வந்தவனைக் கொன்று அவனது சாம்பலை பொன்னி நதியில் கரைக்கப்போகிறேன். அதற்கு முன் நீயும் பாதாள சிறையில் அடைபட்டபடியே அவனுக்கு அஞ்சலி செலுத்து!'' எனக் கூறியபடியே நகர்ந்து அருகில் இருக்கும் அபாய எச்சரிக்கை மணியை அடிக்க ஒரு அடி நகர்ந்தார்.

ஆனால் அதற்குள் செங்குவீரனின் நீண்ட போர் வாள் இருங்கோ வேளின் கழுத்தின் மீது வைக்கப்பட்டிருந்தது.

செங்குவீரனின் வாள் திறமை பற்றியும், வாள் வீச்சின் வேகம் பற்றியும் பல முறை கேள்விப்பட்டிருந்தார். புகார் கோட்டையிலிருந்து திரும்பிய தன் மகனும் அவனைப் பற்றியும், அவனது உபதளபதிகள் பற்றியும் நிறையக் கூறியிருந்தான். ஆனால் தற்பொழுது தான் இருங்கோவேளுக்கு அத்தகைய பெரும்பாக்கியம் கிடைத்தது. செங்குவீரன் தனது வாளுறைக்குத் தனது கையை எப்போது கொண்டு சென்றான் என அவர் பார்க்கவில்லை. வாளினை எடுத்து தனது கழுத்தில் வைத்ததையும் அவர் பார்க்கவில்லை. ஆனால் இறுதியில் அவனது வாள் தனது கழுத்தின் மீது வைக்கப்பட்டிருந்ததையே அவரால் பார்க்க முடிந்தது.

தனது கழுத்தின் மீது வாள் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு பொறுக்க இயலாதவர் ஏதோ பேச வாயெடுத்தார். அந்நேரத்தில் வாள் தனது தோளோடு கழுத்தில் மேலும் அழுத்தப்படுவதை உணர்ந்தவர் வாயை மூடிக்கொண்டார். வாளோடு செங்குவீரன் அவரைத் தள்ள அவர் இரண்டடி தள்ளியிருந்த அவரது அரியாசனத்தில் விழுந்து அமர்ந்தார்.

அவரது கழுத்திலிருந்து தனது வாளினை எடுத்தவன் இடையுறையில் போட்டுக்கொண்டு பேச ஆரம்பித்தான்.

“அரசே! இங்குத் தங்களைக் கொல்வதற்கோ அல்லது அவமானப்படுத்துவதற்கோ நான் வரவில்லை. நான் நினைத்தால் உங்களை இப்போதே கொன்றுவிட இயலும். அது எனது நோக்கம் அல்ல. தாங்கள் புறவாசல் வழி வந்து உறைந்தையைக் கைப்பற்றியது போல இரகசியமாக வந்து தங்களைக் கொல்ல என் மனம் என்றுமே ஒப்பாது! போர்க்களத்தில் இளவரசனின் கொடிய வேலினால் தான் நீங்கள் மடிவீர்கள். நீங்கள் என நான் குறிப்பிடுவது உங்களை மட்டும் அல்ல. தாங்கள், தங்களை வழி நடத்துபவர்கள், தங்களை ஆதரித்துப் போர்க்களம் வர விரும்பும் சேரன் பெருஞ்சேரலாதன் மற்றும் தென்னவன் என அனைவருக்கும் அதே நிலை தான். அதுவரை உங்களது உயிரைக் காத்துக்கொள்ளுங்கள். ஆயுதமின்றி நிராயுதபாணியாக இருக்கும் தங்களிடம் எனது வீரத்தைக் காட்ட எனக்கு விருப்பமில்லை. நான் உங்களை எதுவும் செய்ய மாட்டேன் என நினைத்து கூச்சல் போட்டு உங்கள் வீரர்களை அழைத்து விடவும் துணிய வேண்டாம். இந்த அறைக்கு வெளியே காவலுக்கு நின்ற இருவருமே மாய்ந்து விட்டார்கள். உங்கள் சத்தம் கேட்டு மற்றவர்கள் வருமுன் நான் தப்பி விடுவேன். நான் இங்கிருந்து செல்வதற்கு முன் நான் கூறுவதை முழுவதும் கேட்டுவிடுவீர்கள் என நம்புகிறேன்” என அடக்கத்துடன் கூறலானான்.

தனது அந்தரங்க அறைக்குள்ளே வெளியிலிருந்து வந்த ஒருவன் தனது காவல் வீரர்களைக் கொன்று தனது கழுத்திலேயே வாளை வைத்து மிரட்டுவதைப் பொறுக்க இயலாதவராய் ஆத்திரமும், கோபமும் பெருகி கண்கள் வழியே வெளிப்பட்டது. கண்கள் சிவந்தது! தன் அறையின் அமைப்பு காவல் முறை அனைத்தும் இவனுக்கு எப்படித் தெரிந்திருக்கிறது என்ற வியப்புடன், “இவையனைத்தும்....” என ஏதோ கேட்க வந்தார். அதற்குள் அவரை இடைமறித்தவன், “புகார் செல்லுமுன் சில வருடங்களுக்கு இந்தக் கோட்டையின் தலைவனாக நான் தான் பணியாற்றினேன்! இந்த அரண்மனையில் எனக்குத் தெரியாதது என எதுவுமே இல்லை!” என அவர் கேட்குமுன் அவரது கேள்விக்குப் பதிலளித்தான்.

இதற்கு முன் எந்தச் சூழ்நிலையிலும் யாரிடமும் இப்படிப் பணிந்திராத இருங்கோவேள், அவமானத்தில் நா குழறியபடி, ‘‘வீரனே! உன் வாழ்வில் நீ பெரும் தவறினை செய்து கொண்டிருக்கிறாய். இதற்காக நீ நிச்சயம் வருந்தப்போகிறாய்!’’ நீ இப்போது பேசிக்கொண்டிருப்பது இருங்கோவேள் என்பதை மனதில் நிறுத்திப் பேசு!’’ என அந்தச் சூழ்நிலையிலும் வெகுண்டெழுந்தார்.

அவர் கூறியதைக் கேட்டு நகைத்த விறல்வேல், ‘‘அரசே! மன்னர் என்பவர் நீதி தவறாமல் நேர்மையுடனும், பற்றற்றும் இருக்க வேண்டும். சூரியன் எப்படி உப்புக் கடலிலிருந்து நன்னீரை மட்டும் உறிஞ்சி ஆவியாக்கி மேகமாக நிலங்களின் மீது மழையாகப் பொழியச்செய்து மக்களைக் காக்கிறதோ அப்படியே மன்னன் என்பவனும் மக்களிடம் அபரிதமாகச் சேரும் பொன்னையும், பொருளையும், தானியங்களையும் அவர்கள் நலிவடையாத வண்ணம் வசூலித்து அதனை மக்களுக்கே நல்ல திட்டங்களுக்கும், பாதுகாப்புக்கும் வழங்கச் செய்பவனாக இருக்க வேண்டும். அதுதான் மன்னரின் கடமை! மரக் கிளையில் அமர்ந்துகொண்டு அக்கிளையை வெட்டினால் எப்படி வெட்டுபவன் விழுவது நிச்சயமோ அப்படியே ஆட்சி, அதிகாரம் இருக்கிறது என்பதற்காக மன்னரையும், அரசையும் காக்கும் மக்களுக்குத் துன்பத்தை இழைக்கும் மன்னனும் நிச்சயம் அழிவது திண்ணம்.

மௌரியர்களுக்குப் பாதையமைத்துக் கொடுத்த வடுகர்களை அழித்து, தென்னகத்திற்குள் ஊடுருவ முயன்ற மௌரியரின் படைகளையும் முறியடித்துப் பாழியில் அவர்கள் அமைத்திருந்த வலிமையான கோட்டையையும் தனது யானைப்படையினால் தகர்த்து மௌரியர்களின் எல்லைக்கே அவர்களை விரட்டிச் சென்று திரும்பினாரே அவர்தான் வீரம் செறிந்த மன்னர். மௌரியர்களின் எல்லைக்கு அவர்களை விரட்டியபின் மௌரியர்களின் தேசத்தைக் கைப்பற்றுவது நமது நோக்கம் அல்ல. மௌரியர்களின் படை சின்னாபின்னப் படுத்தப்பட்டுள்ளது. இனியும் அவர்கள் இங்கே படையெடுக்கத் துணியமாட்டார்கள். மௌரியரின் வருகைக்கு முன் யார் யார் மன்னராக இருந்தார்களோ அவர்களுக்கே அவர்களுக்குரிய நாட்டைக் கொடுத்துவிடுவோம். அதுதான் அமைதிக்கு வழி எனக்கூறி பெருந்தன்மையுடன் நடந்து கொண்டாரல்லவா! அது தான் மன்னருக்குள்ள

பெருந்தன்மை. ஏன் அவர்களின் நாட்டைத் திருப்பியளித்தார்? மலை நாட்டில் பெரும்பொருள் சேர்த்து சோழ தேசத்திற்கு அடங்காமல் மக்களைத் துன்புறுத்திய உமது படைகளை அழித்து உனது நாட்டினையும் கைப்பற்றிய பின்னும் உமது நாட்டினை உனக்கே அளித்தாரே! அது ஏன் என உமக்குத் தெரியும் தானே?"

எதையும் கூறாமல் அமைதியுடனே மன்னர் அமர்ந்திருந்தார்.

"அது அவருடைய மாண்பு. ஆனால், அவருக்குரிய நாட்டைத் தாங்கள் நெறி தவறி கைப்பற்றப்பார்க்கிறீர்கள். இது தவறு. சோழ அரியணையைக் கைப்பற்றினால் மூவேந்தர் படைக்கும் தலைவராகி ஒட்டுமொத்த தென்னகத்தையும் கைப்பற்றலாம் என்பதுதானே தங்களது திட்டம். தங்களால் ஒரு நாளும் மூவேந்தர் படைக்கும் தலைவராக முடியாது" என்றான்.

விறல்வேல் 'திராமிர சங்காத்தம்' என்று பிராமிச் சொல்லால் அழைக்கப்பட்ட மூவேந்தர் கூட்டணிப் படையைப் பற்றிக் கேட்டவுடன் இருங்கோவேள் அதிர்ச்சியடைந்துவிட்டார். அவரது அதிர்ச்சி அவரது கண்களிலும், முகத்திலும் வெளிப்பட்டது.

"இளஞ்சேட்சென்னிக்குப் பின் அவரது மகன் இளவல் தான் ஆட்சி பொறுப்பேற்றிருக்க வேண்டும். நாட்டின் குழப்பமான நிலையைப் பயன்படுத்தியும், அரசவை அமைச்சர்கள், படைத்தலைவர்கள் மற்றும் குறுநில மன்னர்களிடத்தில் உமக்கிருந்த செல்வாக்கினைப் பயன்படுத்தியும் சோழ அரியாசனத்தைக் கைப்பற்றிக்கொண்டீர்கள். அது உங்களது சாமர்த்தியம். அதுவரை உங்களை நான் பாராட்டுகிறேன். ஆனால், அதற்குப் பிறகு இளவல் உயிரோடு இருந்தால் ஆபத்து எனக்கருதி இளவலைச் சிறைப்படுத்தி வைத்துள்ளீர்களே அதுதான் பெரும்பிழை.

நீங்கள் உறைந்தைக்குள் நுழைந்து சோழ அரியாசனத்தைக் கைப்பற்றியது போல இளவல் ஒருநாளும் அப்படிச் செய்யமாட்டார். போர்க்களத்தில் உன்னை வென்ற பிறகே இளவல் முடிசூடுவார். இளவல் உன்னோடு போர் புரிவதற்கு வசதியாக உமது படைப் பலத்தைப் பெருக்கிக்கொள்." எனக் கடுமையாக இருங்கோவேளை எச்சரித்தவன்

“உன்னை வென்று இளவல் நிச்சயம் தன் அரச உரிமையை நிலைநாட்டுவார்” எனக் கூறியபடியே இருங்கோவேளை விட்டு நகர்ந்தவன் அவர் எதிர்பாராதபடி அருகில் எரிந்துகொண்டிருந்த இரண்டு விளக்குகளையும் தனது வாளினால் ஓங்கி அடித்தான். விளக்கு தூள் தூளாக உடைந்து அந்த அறையை இருள் கவ்வியது!

இருளைக் கண்ட மன்னர் ஆசனத்திலிருந்து விரைந்து எழுந்து “யார் அங்கே! ஆபத்து! ஆபத்து!” எனப் பலவாறு கத்தியபடியே அவரது இருக்கையின் வலப்புறத்திலிருந்த அபாய மணியை அடிக்கலானார்.

அபாய மணிச்சத்தத்தைக் கேட்ட அரண்மனைக் காவலர்கள் எங்கெங்கு நிலை பெற்றிருந்தார்களோ அங்கங்கு இருந்தபடியே பரபரப்பானார்கள். பரபரப்பானவர்கள் ஆபத்து என்பதை உணர்ந்து அங்குமிங்கும் சோதனையிட ஆரம்பித்தனர். மன்னரின் ஆலோசனைக் கூடத்திற்கு அருகில் இருந்தவர்கள் சிலர் தீவர்த்தி மற்றும் தீப்பந்தத்துடன் மன்னரின் அறைக்குள் ஓடி வந்தார்கள். மன்னரது அறையில் இருவர் குறுவாளால் தாக்கப்பட்டு இறந்து கிடப்பதைக் கண்டு பரபரப்பானவர்கள் மன்னருக்கு எந்தவித தீங்கும் நேராதவண்ணம் அவரைக் கவசம் போலச் சூழ்ந்து கொண்டு அவருக்குப் பாதுகாப்பளித்தனர். தனது வீரர்களிடம் செங்குவீரன் அரண்மனைக்குள் நுழைந்தது பற்றியும், இரு காவலர்களின் இறப்பிற்கு அவன் தான் காரணம் என்பதையும் தெரிவித்து அரண்மனை முழுக்க அவனைத் தேடிக் கைது செய்யச்சொல்லி கட்டளையிட்டார் மன்னர் இருங்கோவேள்.

விளக்கு உடைந்து இருளானதும், இருளைப் பயன்படுத்தி இருங்கோ வேள் அறியாத வண்ணம் அங்கிருந்து மறைந்த விறல்வேல் தான் வந்த இரகசிய பாதையை நோக்கிச் சென்றான். விறல்வேல் இரகசியப் பாதையை அடையுமுன் அபாய மணியைக் கேட்டு விழிப்படைந்த உறைந்தைக் காவல் வீரர்கள் அங்குமிங்கும் தேடுகையில் அந்நியனான விறல்வேலைச் சிலர் கண்டுவிட்டனர். அவனது புகார் உப தலைவன் உடை அவனைக் காட்டிக்கொடுத்து விட்டது.

விறல்வேலைக் கண்ட சில வீரர்கள் குரலெழுப்ப மேலும் சிலர் அங்கு வந்து அவனைச் சூழ்ந்து கொள்ள அவனை நோக்கி ஓடிவந்தனர்.

அரண்மனைக் காவலர்கள் தன்னைப் பின் தொடர்கையில் தான் இரகசியப் பாதையை நோக்கிச் செல்வது நன்றாக இருக்காது. இரகசிய சுரங்கத்தைத் தானே காட்டிக்கொடுத்தது போல ஆகிவிடும் என நினைத்தவன் அவர்களை எதிர்த்துத் தாக்கலானான்.

வாள் வீச்சில் வல்லவனான செங்குவீரனை நோக்கி ஆவேசத்துடன் ஓடி வந்த காவலர்கள் அனைவரும் அவனது வாள் வீச்சை சாமாளிக்க இயலாமல் விளக்கினைத் தேடி வந்து மடியும் விட்டில் பூச்சி போன்று அனைவரும் மடிந்தனர்.

செங்குவீரனால் தாக்கப்பட்ட காவலர்கள் மடிய மடிய புற்றீசல் போன்று அலறல் சத்தத்தைக் கேட்டு மேலும் மேலும் காவல் வீரர்கள் அவனைச் சூழ்ந்துகொள்ள ஆரம்பித்தார்கள். தனது வாளினை நாலாபுறமும் சுழற்றி எதிரிகளை அருகில் நெருங்கவிடாமல் செய்து கொண்டிருந்த செங்குவீரனின் உடலில் கீறி எதிரிகளின் வாள்கள் இரத்தம் பார்த்தன. நீண்ட நேரமாகத் தனியே போரிட்டுக் கொண்டிருந்த செங்குவீரனின் கைகள் சோர்வுற ஆரம்பித்த போதிலும் காவலர்களைத் தனது அருகில் நெருங்க இயலாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

சித்திர மண்டபத்திலிருத்து பாதை மாறி வந்த வில்லவன் எங்கோ அருகில் வாள்கள் உராயும் சத்தத்தையும், வீரர்கள் அலறும் சத்தத்தையும் கேட்டவன் அதனை நோக்கிச் சென்றவன் ஒரு கணம் திடுக்கிட்டு நின்றான். தன்னைச் சூழ்ந்த வீரர்கள் பலரையும் ஒரே வாளினால் சமாளித்து வென்று கொண்டிருக்கும் வீரனை யார் என்று உற்றுப் பார்த்தான். சண்டை நடந்த இடத்தில் எரிந்துகொண்டிருக்கும் தீவர்த்தியின் வெளிச்சத்திலிருந்து செங்குவீரனின் முகம் ஓரளவு தெரிந்தது. அவனைக் கண்டவுடன் சம்பாபதி வனத்தில் சண்டையிட்டு தனது குழுவின் கள்வர்களைக் கொன்ற உப தலைவன் செங்குவீரன் தான் எனக் கணிக நேரப் பொழுதில் அடையாளம் கண்டு கொண்டான்.

தான் செய்ய வேண்டியது இன்னது தான் என உடனே முடிவெடுத்துக் கொண்டவன் தன் இடையுறையில் வைத்திருந்த குறுவாள்களை எடுத்துச் செங்குவீரனை நோக்கி வந்த காவலர்களை நோக்கி வேகமாக எறிந்தான். குறுவாள்களால் தாக்கப்பட்ட காவலர்கள் கீழே விழுந்து அலறினர்.

உறைந்தை வந்த போது தன்னைக் கைது செய்த காவலர்களை அங்கேயே ஒரு கை பார்த்து விடலாம் என எண்ணி வாளினை எடுக்க முயன்ற போது காளனால் தடுக்கப்பட்டபோது வருந்தியவன், தனது வாளினை உருவி செங்குவீரனுக்கு ஆதரவாக அரண்மனைக் காவலர்களைத் தாக்கியபடியே செங்குவீரனிடம் சென்றான்.

தனக்கு ஆதரவாக யாரோ ஒருவன் வாள் வீசுவதைக் கண்டு ஆச்சரியமும், வியப்பும் அடைந்திருந்த விறல்வேலிடம் வில்லவன் காவலர்களைத் தாக்கியபடி, ‘‘செங்குவீரா! உன்னை நான் அறிவேன். என்னை நீ அறிந்திருக்க வாய்ப்பில்லை. இரும்பிடர்த்தலையரிடம் கேள். அவர் என்னைப் பற்றிக் கூறுவார். நீ தப்பித்துவிடு! இவர்களை நான் ஒரு கை பார்த்துவிடுகிறேன்!’’ என்றான்.

‘‘தங்கள் உதவிக்கு நன்றி! ஆனால் இவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக அல்லவா இருக்கிறார்கள்!’’

‘‘எத்தனை பேர் வந்தாலும் அதை நான் பார்த்துக்கொள்கிறேன். வீரர்கள் அதிகம் சூழ்ந்துவிட்டால் நீ தப்பிப்பது சிரமம். உடனே கிளம்பு’’ எனக் கூறிய வில்லவன் செங்குவீரனின் மறுமொழியை எதிர்பாராமல் அவனுக்கு முன் சென்று காவலர்களை எதிர்கொண்டான்.

‘‘வீரரே! உனது உதவியை நான் எச்சூழலிலும் மறக்கமாட்டேன்’’ எனக் கூறிக்கொண்டே தனது வாளினால் மேலும் சிலரைச் சாய்த்துவிட்டு அவனுக்கு நன்றி கூறி செங்குவீரன் இருளில் ஓடி மறைந்தான்.

பெரும் உற்சாகத்துடன் போரிட்ட வில்லவனுக்கு எதிராகக் காவலாளிகள் ஈடுகொடுக்க இயலாமல் திணறிக்கொண்டு புறமுதுகிடத்

தயாராகிக் கொண்டிருக்கும் வேளையில் வில்லவனைத் தேடி வந்த காளனும் அவ்விடத்திற்கு வந்து சேர காவலர்களின் பாடு பெரும்பாடாகிவிட்டது.

சண்டையிட்டுக் கொண்டிருக்கும் வில்லவனைக் கண்ட காளன் எதைப்பற்றியும் சிந்திக்கவில்லை. ஆபத்தில் சிக்கியிருக்கும் தனது நண்பனை உடனே காப்பாற்ற வேண்டும் என நினைத்துக்கொண்டு இவனும் உறைந்தைக் காவலர்களைப் பின்னாலிருந்து தாக்கலானான். வில்லவனுக்கும் காளனுக்கும் இடையில் அகப்பட்ட காவலர்கள் அனைவரும் தப்பிக்க இயலாமல் இருவரது வாளுக்கும் இரையாகி மடிந்தனர். அனைத்து காவலர்களும் சாய்ந்த பின், "வில்லவா! யாருக்கும் சந்தேகம் எழாதபடி உனது வாளில் உள்ள குருதிக் கறையைத் இவர்களின் உடைகளில் துடைத்துவிடு!" எனக் கட்டளையிட்டபடி தனது வாளினையும் சுத்தம் செய்துகொண்டான். "பின்னால் வா!" எனக் கூறியபடியே அந்த மண்டபத்தை விட்டு காளன் வில்லவனை அழைத்துச் சென்றான்.

காவலர்களைத் தாக்கிய தனது இரண்டு குறுவாள்களையும் அவர்களின் இறந்த உடலிலிருந்து பிடுங்கி எடுத்துக்கொண்ட வில்லவன், "எங்கே செல்கிறோம்?" என வினவினான்.

"மற்ற காவலர்கள் நம்மைப் பார்க்குமுன் இங்கிருந்து மறைவோம்! பின்னர் மன்னரின் உத்தரவுப்படி இந்தக் கோட்டையின் காவலை மேம்படுத்துவோம்!" என்றபடியே இருங்கோவேள் தனக்கு அளித்த இலச்சினைப் பதக்கத்தைக் காட்டியபடியே தனது புதுப் பதவியையும் கூறிப் பலமாகச் சிரித்தான். காளன் சிரிப்பதைக் கண்டு வில்லவனும் சிரித்தான். இருவரது சிரிப்புக்கும் பல அர்த்தங்கள் உள்ளூர இருந்தாலும் இருவரும் வேறு வேறு அர்த்தங்களைப் புரிந்துகொண்டு அங்கிருந்து யாரும் பார்க்காத வண்ணம் வெளியேறினர்.

வில்லவன் மற்றும் காளன் அவ்விடத்தை விட்டுச் சென்ற பிறகு மன்னர் இருங்கோவேள் அவ்விடத்திற்கு வருகை தந்தார். சண்டையிட்டு இறந்து கிடந்த வீரர்களைக் கண்டபோது விறல்வேல் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவரது மனக்கண் முன் வந்து சென்றது. இறந்து கிடந்தவர்களையும், அவன் கூறியவற்றையும் எண்ணிப் பார்க்கும் போது

அவரது மனதில் திகிலடிக்க ஆரம்பித்தது! மன்னர் இருங்கோவேள் எத்தனையோ போர்க்களங்களைக் கண்டவர். முன்னின்று நடத்தியவர். இருப்பினும் தன் அரண்மனைக்குள்ளே புகுந்து ஒருவன் தப்பித்துச் சென்றது அவருக்கு மனக்கலக்கத்தை அளித்திருந்தது. அதிலும் விறல்வேல் கூறிய ‘திராமிர சங்காத்தம்’ எனும் சொல் அவரைக் குலை நடுங்கச் செய்திருந்தது. ‘அரண்மனைக்குள் ஒருவன் புகுந்து இத்தனை பேரைக் கொன்று உயிருடன் தப்பித்திருக்கிறான் எனில் கூறியதைப் போல இளவலையும் இன்றே காப்பாற்றி விடுவானா? அவனால் இயலுமா? இளவல் மட்டும் தப்பித்துவிட்டால் நமது திட்டங்கள் அனைத்தும் தவிடுபொடியாகிவிடுமே! இது எந்தச் சூழ்நிலையிலும் நடைபெறக் கூடாத ஒன்று!’ எனப் திகிலுடன் சிந்தித்த இருங்கோவேள் கடைசியாக ஒரு முடிவிற்கு வந்து தனது அந்தரங்க உதவியாளர்கள் சிலரை அழைத்து அவர்களிடம் ஏதோ இரகசியக் கட்டளை ஒன்றைப் பிறப்பித்தார்!

இருங்கோவேளின் கட்டளையை வீரர்கள் கேட்க கேட்க அவர்களின் முகங்கள் அதிர்ச்சியில் விகாரமாக மாறின!

## அடிக்குறிப்பு :

1. அகநானூற்றில் மாமூலனார் எனும் சங்கப் புலவர் அகநானூறு 31 – ல் எழுதியுள்ள பாடலில் ‘தமிழ்கெழுமூவர் காக்கும் மொழிபெயர்த் தேஎத்த பல்மலை’ எனக் குறிப்பிட்டுள்ளார். அதாவது தலைவியை ஏன் தங்களுடன் அழைத்துச் செல்லவில்லை எனத் தோழி தலைவனிடம் கேட்கையில் அதற்குத் தலைவன் பாலையின் கொடுமையைப் பற்றிக் குறிப்பிடும்போது அவ்வழியாக வருவோர் போவோரை அம்பு எய்து கொன்று அவர்களின் உடைமையைப் பறிக்கும் தொழிலாகச் சிலர் கொண்டுள்ளனர் என்றும் அங்கு வசிப்பவர்கள் எல்லாம் தமிழர் அல்லர். ஆனால் அவர்களின் நாட்டை நம் தமிழ் மூவேந்தர்கள் இப்பொழுதுதான் தம் ஆணைக்குக் கீழே கொண்டு வந்துள்ளனர். அங்குத் தமிழர்களின் கூட்டுப் படைகள் நிலைகொண்டு தமிழகத்தைக் காக்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார். அதற்கு உரை எழுதியுள்ளவர்கள் ‘வடபுலத்து மன்னர்களின் படைகள்

தென்புலத்தினுள் நுழையா வண்ணம் தென்புலத்துப் படைகள் தயக்கமின்றித் தக்காணப் பாதையின் வழியாக மகதம் வரை போய்த் திரும்பும்படி ஓர் ஒன்றிணைந்த காவலை தமிழகத்தின் வடக்கேயிருக்கும் நிலப்பகுதிகளைக் கைப்பற்றி நிலைப்படை ஒன்றை ஏற்படுத்தியிருந்தனர்' எனக் குறிப்பிடுகின்றனர். அதாவது தமிழ் மூவேந்தரின் கூட்டுப் படைகள் தக்காணப் பீடபூமியின் வழியாக மகதம் வரை கைப்பற்றிச் சென்று வந்துள்ளதையே குறிப்பிடுகிறது. மேலும் வட இந்திய மூர்க்கர்களின் படைகள் தென்னகத்தினுள் நுழையா வண்ணம் தடுக்கத் தக்காணப் பீடபூமிப் பகுதியில் எப்போதும் தமிழ் படைகள் நிலை கொண்டிருக்க வேண்டும்.

இந்த மூவேந்தர் கூட்டணிப் படைகளைத் தக்காணத்தில் எதிர்க்க இயலாத மௌரியர்கள் வடுகர்களைப் பயன்படுத்திக் கிழக்குக் கடற்கரைக் காட்டை அழித்துப் பாதையமைத்துக் கோசர்களுடன் தென்னகத்தினுள் நுழைந்தனர் என்பதையும், அந்த வடுகர்களையும் மௌரியர்களையும் இளஞ்சேட்சென்னி எதிர்கொண்டு முறியடித்தான் என்பதையும் முன்னரே கண்டோம்.

மேலும் பொருநராற்றுப்படை பாடிய முடத்தாமக் கண்ணியார் 'முரசுமுழங்கு தாண மூவரும் கூடி' , புறநானூறு 367 — ல் ஔவையாரும் முத்தீப் புரையக் காண்தக இருந்த கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர் என மூவேந்தர்கள் ஒன்று பட்டு வாழ்ந்ததைச் சங்கப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். இதிலிருந்தே நாம் ஒரு உண்மையை உணரலாம். அதாவது, தமிழ் மூவேந்தர்கள் மற்றும் குறுநில மன்னர்களுக்கிடையில் ஓர் உடன்பாடு இருந்தது என்று. தமிழர்களுக்கிடையில் அதாவது தமிழ் மூவேந்தர்களுக்கிடையில் ஒற்றுமையா? என்ற கேள்வி இங்கு நிச்சயம் எழும்! ஆனால் அதுதான் உண்மை. ஏனெனில் அசோகனது மௌரியப் பேரரசு வட இந்தியா, ஆப்கானிஸ்தானம் வரை விரிந்திருந்த போதும் தமிழகம் மட்டும்

அவனது கட்டுப்பாட்டின் கீழ் இல்லாமல் சுதந்திரமாகவே இருந்ததை ஆராய்ந்தால் தமிழ் மூவேந்தர் கூட்டணி நம் அறிவிற்கு நன்கு புலப்படும்.

தமிழர் வரலாற்றையும், சங்ககாலப் போர்களையும் அதன் முடிவுகளையும் ஆராய்ந்தால் தமிழ் மூவேந்தர்களுக்குள் இடைப்பட்ட உடன்பாட்டில் சில முக்கிய அம்சங்கள் நிச்சயம் வெளிப்படும். அதாவது மூவேந்தரும் தம்முள் எவ்வேளிரையும், எக்குறுநில மன்னர்களையும் அடக்கலாம். அவர்களிடமிருந்து இறை பெற்ற பிறகு பின் அவர்களைத் தனியாட்சிக்கு விட்டுவிட வேண்டும். அவர்களின் கொடிவழியை அழிக்க முயலக் கூடாது. மேலும் தமிழகத்திற்கு வெளியிலிருந்து மூவேந்தர் அல்லது வேளிரை யாராவது தாக்க முற்பட்டால் தமிழகம் காக்க மூவேந்தரும் தங்களுக்குள் என்ன மாறுபட்டிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாது அனைவரும் ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும். மேலும் தமிழகத்தில் இருந்து தக்காணப் பாதைவழி வடக்கே போய் வருபவர்களைக் காக்கும் வகையிலும், வடபுலப் படையெடுப்பையும் தடுக்கும் வகையிலும் எப்போதும் ஒரு படையைத் தக்காணத்தில் நிலைநிறுத்தியிருக்க வேண்டும் என்பனவற்றை மாமூலனார் பாடலின் குறிப்பிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம்.

மூவேந்தர்கள் கூட்டணி பற்றி தமிழகம் அல்லாது கலிங்க மன்னன் காரவேலன் என்பவனது அத்திகும்பா (யானைக் குகை) கல்வெட்டில் ‘திராமிர சங்காத்தம்’ எனும் சங்கேதச் சொல்லால் மூவேந்தர் கூட்டணி பற்றிக் குறிப்பிட்டுள்ளான். காரவேலன் கி.மு 172 ல் கலிங்கத்தை ஆண்ட ஜைன மன்னன். இவனது அத்திகும்பா கல்வெட்டில் **‘1300 ஆண்டுகள் நிலைபெற்றிருந்த தமிழர் கூட்டணிப் படைகளை முறியடித்தேன்’** எனக் குறிப்பிட்டுள்ளான். இவன் கூறியுள்ளது போல 1300 ஆண்டுகள் எனக்கொண்டால் தமிழர் கூட்டுப் படைகள் நிறுவப்பட்டது கி.மு 1490 ம் ஆண்டு. இக்கல்வெட்டில் கூறியுள்ளபடி 1300 ஆண்டுகள் என்பது தான் உண்மை எனத் தொல்காப்பியம் மற்றும் பரணர் பாடிய பாடல்களைக் கொண்டு சிலர் நிறுவுவர்.

இவனது அத்திகும்பா கல்வெட்டு தான் தமிழக மூவேந்தர் கூட்டணியைத் திராமிர சங்காத்தம் என்ற பிராமி சங்கேதச் சொல் மூலம் வெளிப்படுத்துகிறது. 'திராமிர' என்ற அடையாளம் முதன் முதலில் புழங்கியதும் இங்குதான். 'திராமிர சங்காத்தம்' எனும் தமிழர் கூட்டணி இக்கல்வெட்டில் கூறியுள்ளபடி 1300 ஆண்டுகள் இக்கூட்டணி நீடித்திருக்க வாய்ப்பில்லை எனத் தமக்குள் வியப்புக் கொண்டு அதை வெறும் 113 ஆண்டுகள் என்ற சொந்தக் கருதுகோளை முன்வைத்துத் தாம் வாசித்ததாகக் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்கள் K.P.Jaiswal மற்றும் R.D.Bannerji குறிப்பிட்டுள்ளார்கள். பின்னர் வந்த ஆராய்ச்சியாளர்களும் 113 ஆண்டுகள் என்ற சொந்தக் கருதுகோளை அப்படியே உண்மை என்று ஏற்றுத் தமிழர் வரலாற்றைப் பின்னுக்குத் தள்ளுவர். அடிகோள் மறந்து கருதுகோள் உண்மையாகிப் போன சோகம் இங்கு மட்டுமே நிலவுவது வேதனையிலும் வேதனை.

ஆய்வாளர்கள் Shashi khant என்பவர் மேற்குறிப்பிட்ட இருவரில் இருந்து முற்றிலும் மாறுபட்டு இக்கல்வெட்டில் உள்வரும் காலக் குறிப்புகள் அனைத்தும் மகாவீரரின் இறப்பிற்குப்பின் வந்த ஆண்டுகளையே குறிக்கும் என நிறுவி திராமிர சங்காத்தம் என்பது மகா வீரருக்குப் பின் 113ம் ஆண்டில் ஏற்பட்டது எனக் கூறி திராமிர சங்காத்தம் எனும் தமிழர் கூட்டணி (கி.மு 527 – 113) கி.மு 414 என்பார். கல்வெட்டில் கூறப்பட்ட 1300 ஆண்டுகள் நீடித்த அடிகொளை மறுத்து வெறும் 113 ஆண்டுகள் மட்டுமே நீடித்தது என மேற்குறிப்பிட்ட இருவரும் கூறி, பின்னர் அது மகாவீரருக்குப் பின் 113 ஆண்டுகள் என மற்றொருவரும் தமது சொந்தக் கருதுகோளையே முன்வைக்கின்றனர். தமிழ் அண்மை ஆய்வாளர்கள் சிலரும் Shashi Khantன் அடிகோளை ஏற்றுக்கொண்டுள்ளதாகக் குறிப்பிடுவதுதான் சோகத்திலும் சோகம்.

கி.மு 172 ம் ஆண்டுக் சமண (ஜைன அல்லது ஆருகத) மன்னனான காரவேலனின் கல்வெட்டு தமிழர் மூவேந்தர் உடன்படிக்கையைப் பற்றிப் பேசுவதை ஒவ்வொருவரும் ஒவ்வொரு காலத்தைக் குறிப்பிட்டு தமிழர் வரலாற்றைப் பின்தள்ளுகின்றனர். தமிழர் வரலாறு, பாகதமொழி, இலக்கணம் நன்கு தெரிந்த தமிழ் கல்வெட்டு

ஆராய்ச்சியாளர்கள் இதை மீளாய்ந்தால் மட்டுமே தமிழர் வரலாறு இன்னும் தெளிவு பெறும்.

# 30. கட மை தவறிய வீரன்

ம லை நாட்டிற்கு மட்டும் வேளிராய் இருந்த இருங்கோவேள் சோழ தேசத்திற்கு ஆசைப்பட்டுச் சோழ அரியாசனத்தைக் கைப்பற்றியதும் இந்த மூவேந்தர் கூட்டணியின் பொருட்டே. சோழ அரியாசனத்தில் அமர்ந்தால் எவ்வேளிரையும் அடக்கலாம். சமயம் வாய்த்தால் மற்ற இரு வேந்தர்களைக் கூடப் போரில் வென்றுவிடலாம். தக்காணத்தில் நிலைநிறுத்தியிருக்கும் படையைக் கொண்டு வடக்கே கூடப் படையெடுக்க இயலும். இவர் சோழ ஆசனத்தில் அமர்ந்து விட்டதால் இவரது வழிவரும் அனைவரும் சோழ அரியாசனத்திற்கு உரிமையாகிவிடுவர்.

இப்போது இதற்குப் பெரும் இடையூறாக இருப்பது சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் இளவலும், உப தலைவன் விறல்வேலும் தான்! அதிலும் விறல்வேல் ‘திராமிர சங்காத்தம்’ பற்றிப் பேசிவிட்டுச் சென்றது அவருக்குப் பெருத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது! ஏனெனில் அவன் கூறியதைப் போன்று இளவலை அவன் மீட்டுவிட்டால் தனது திட்டங்கள் அனைத்தும் தவிடுபொடியாகும் அல்லவா! விறல்வேல் கூறிவிட்டுச் சென்றதையும், தனது அரண்மனையில் அவனால் கொல்லப்பட்டுக் கிடக்கும் வீரர்களைக் கண்டபோது அவரது குருதி கொதித்தது! ஆத்திரம் பெருகியது. இனி பொறுத்திருக்க எதற்கும் காலம் இல்லை. அனைத்தும் கையை விட்டுச் செல்லுமுன் நாம் எண்ணியதை நிறைவேற்றிவிட வேண்டும் என எண்ணியவர் தனது அந்தரங்க ஊழியர்களை அழைத்து “மாளிகையில் அடைத்திருக்கும் இளவரசனைக் கொன்றுவிடுங்கள்! கொன்றபின் மாளிகைக்குத் தீவைத்து விடுங்கள்! அப்போது தான் யாருக்கும் எந்த ஐயமும் எழாது!” எனக் கட்டளையிட்டார். அவர் கூறிய பயங்கரமான கட்டளையைக் கேட்ட வீரர்களுக்குக் கூட அச்சத்தில் உடல் வியர்த்து முகம் விகாரமாகியது.

அரசரின் கட்டளையை ஏற்ற இருவீரர்கள் மேலும் ஒரு காவலாளியை அழைத்துக்கொண்டு அரண்மனையின் அவசரக் கால வாயிலின் வழியாக மூவரும் வெளிப்பட்டனர்.

அரண்மனைச் சுவருக்கு வெளிப்புறத்தில் சுவரோடு சுவராக யாரோ ஒருவர் இருளைப் பயன்படுத்திப் பதுங்கியிருந்ததைப் புரவியில் கடைசியாக வந்த காவலன் கவனித்துவிட்டான். முன்னால் சென்ற இருவரிடமும் “நீங்கள் இருவரும் முன்னே செல்லுங்கள்! நான் பின்னால் வருகிறேன்!” எனக் கூறியபடி சுவருக்கு அருகில் சென்று பார்த்தான். அவன் எதிர்பார்த்ததைப் போல அங்கு யாரும் இல்லை! ஒரு மரக் கட்டைதான் சுவரில் சாய்ந்து கிடந்தது. தூரத்தில் இருந்து பார்த்ததனால் இந்த மரக்கட்டைத் தான் மனிதன் போலத் தனக்குத் தோன்றியிருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டு புரவியை நகர்த்தினான். அந்நேரத்தில் எதிர்பாராதபடி அருகில் இருந்த மரக்கிளையிலிருந்து ஒருவன் அவன் மீது தாவினான். தாவியவன் புரவியிலிருந்து அவனைக் கீழே தள்ளி அவன் அதிர்ச்சியிலிருந்து விடுபட்டுச் சத்தம் போடும்முன் அவனை அருகிலிருந்த மதிலின் மீது தள்ளினான். மீண்டும் தலைமுடியைப் பிடித்து அவனது தலையை மதிற்கல்லில் மோத அவன் மூர்சையடைந்துவிட்டான். தலையிலிருந்து குருதி வழிந்தோடியது! மூர்ச்சையடைந்தவனை அருகில் மண்டிக்கிடந்த புதரில் போட்டுவிட்டு அவனது இடையிலிருந்த இலைச்சினையை எடுத்துக்கொண்டு அவனது புரவியிலேறி முன்னால் வீரர் சென்ற திசையை நோக்கி பயணித்தான். இவையனைத்தும் சில கண நேரப் பொழுதுகளில் நிகழ்ந்துவிட்டது! நடந்தது அனைத்தும் இருள் சூழ்ந்த ஆளரவம் அற்ற பகுதியானதால் யாரும் அவர்களைக் கவனிக்கவில்லை.

இருங்கோவேளின் அந்தரங்க ஊழியர்களிடமிருந்து சீரான இடைவெளி தூரத்திலே செல்லலானான். செங்குவீரன் திருக்கண்ணனிடம் என்ன கூறினானோ அப்படியே அனைத்தும் நடந்தன! ஆனால், திருக்கண்ணனின் மனதில் மட்டும் பெரும் கவலை சூழ்ந்திருந்தது! அரண்மனைக்குள் சென்ற செங்குவீரனைப் பற்றி எந்தவொரு தகவலும் கிடைக்காததால் அவன் தவித்துக்கொண்டிருந்தான்! அரண்மனைக்குள் எழுந்த அபாய மணிச் சத்தமும், கூச்சல்களும் வெளியே நின்ற திருக்கண்ணனுக்குக்

கேட்டது. செங்குவீரனுக்கு என்ன நேர்ந்தது என்று அறியாததால் அவனது மனம் திகிலில் உறைந்திருந்தது.

முன்னால் புரவியில் சென்ற இருவரும் உறைந்தைக்கு வட மேற்கே காவிரிக் கரையோரமாக அமைக்கப்பட்டிருந்த மாளிகைக்கு வந்து சேர்ந்தனர். எங்கே அவர்கள் தன்னைக் கண்டறிந்து விடுவார்களோ என்று பின்னால் வந்த திருக்கண்ணனுக்கு மனதில் அச்சமும், திகிலும் சூழ்ந்திருந்தாலும் எது நடந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம் என்ற உத்வேகத்துடன் சற்றுத் தயக்கத்துடன் அவர்களிடம் சென்று அவர்களின் கட்டளையை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டு நின்றான்!

தீவர்த்தி வெளிச்சத்தைக் கொண்டு திருக்கண்ணனின் முகத்தைப் பார்த்தான் ஒருவன். திருக்கண்ணனின் முகத்தைப் பார்த்ததும் அவனது முகத்தில் சந்தேகச் சாயல் படர்வதைத் திருக்கண்ணனும் கவனித்தான். பொறுமையுடன் இருப்பதே சிறந்தது என முடிவு செய்து அமைதி காத்தான்!

அருகில் வந்து இவனது முகத்தைப் பார்த்தவன் மற்றவனிடம், "உறைந்தைக் கோட்டையில் சற்றுக் கருப்பாக இருந்தவன் இப்போது சற்று நிறத்துடன் காணப்படுகிறானே? நாம் அழைத்துவந்தவன் இவன் தானா?" எனத் திருக்கண்ணனும் கேட்கும்படி வினவினான். அவன் இப்படிக் கூறியதும் திருக்கண்ணனது மனம் பகீர் என ஆனது. மாட்டிக்கொண்டால் அனைத்தும் பாழாகிவிடுமே என்ற கவலையும் அவனைக் கவ்வியது. சற்று யோசித்த திருக்கண்ணன் சமயோசிதமாக, "அய்யனே! தீவர்த்தியை சற்றுத் தள்ளிவைத்துவிட்டு என்னைப் பாருங்கள்! எனது உண்மையான நிறம் எதுவெனத் தங்களுக்குத் தெரியும்!" என்றான்.

தீவர்த்தியை நகர்த்திவிட்டு இவனைப் பார்த்தான். வெளிச்சமில்லாததால் கருத்த உருவம் நிற்பது போல இவனுக்குத் தோன்றியது. "ஆமாம்! ஆமாம்! நீ கூறுவதும் உண்மை தான். நான் உன்னை அழைத்த இடத்தில் வெளிச்சம் மிகவும் குறைவாகவே இருந்தது! ஆதலால் அப்போது நீயும் கருப்பாகத் தெரிந்தாய்! உனது முகத்தையும் அவசரத்தில் கவனிக்கவில்லை! இப்போது தீவர்த்தி வெளிச்சத்தில் நீ நிறமாறித்தான்

தோன்றுகிறாய்!" எனக் கூறியபடி அனைத்து பற்களும் விழுந்து விடுவது போலச் சிரித்தான்!

திருக்கண்ணனும், "நான் மட்டுமல்ல. இந்த முட்டிருட்டு தீவர்த்தி வெளிச்சத்தில் கண்டால் யானை கூட மாநிறமாகத் தான் காட்சியளிக்கும். என் வீட்டுக்காரி என்னைத் தினமும் கருத்த மச்சான் என்றே ஏளனம் செய்து கொஞ்சுகிறாள்! அவள் மாநிறம். ஆதலால் அவள் என்னைத் தினமும் பரிகாசம் செய்கிறாள். இனி இந்தத் தீவர்த்தியை ஏற்றித்தான் அவளைச் செவத்த மச்சான் என அழைக்கச் செய்ய வேண்டும்" எனக் கூறியபடியே இவனும் பலமாகச் சிரித்தான்.

இருவரது சிரிப்புச் சத்தத்தையும் கேட்ட மூன்றாமவன், "இந்த நேரத்தில் என்ன சிரிப்பு வேண்டி உள்ளது! வந்த பணியைக் கவனிப்போம்." எனக் கத்தியவன் "உனக்கு இதே வேலையாகிவிட்டது. எப்போது மலை நாட்டிலிருந்து உறைந்தை வந்தாயோ அப்போதிலிருந்து யாரைக் கண்டாலும் புதிதாகக் கேள்வி கேட்டுச் சந்தேகப்பட்டுக்கொண்டே இருக்கிறாய்!" என அவனை நொந்துகொண்டவன் "உனக்கு இனி தினமும் பச்சை வெல்லாரைக் கீரையைத் தான் உண்ணக் கொடுக்க வேண்டும். அப்போதாவது உனது ஞாபக மறதி நீங்குமா என்றால் நீங்காது!" எனக் கூறிவிட்டுத் திருக்கண்ணனிடம் "நீ காவிரியில் தீவர்த்தியைக் கொண்டு இரவினில் மீன் பிடிக்கும் பரதவர்கள் பனை ஓலைக் குடில் அமைத்துத் தங்கியிருப்பர். அவர்களை உடனே இங்கிருந்துக் கிளம்பச் சொல்! எதிர்த்தால் மன்னரின் உத்தரவு எனக் கூறு! பின்னர் மாளிகையைச் சுற்றி சந்தேகப் படும்படி ஏதேனும் இருக்கிறதா எனக் கண்காணித்துக் கொண்டிரு!" எனக் கட்டளையிட திருக்கண்ணனும் அவனது உத்தரவினை ஏற்றுக் கிளம்பினான்.

மாளிகையை ஒரு முறை கூர்ந்து நோக்கினான் திருக்கண்ணன். ஆடம்பரமான மாளிகை அது. சந்தேகம் கொள்வதற்கு எந்தவொரு முகாந்திரமும் அவனது கண்களுக்கு அகப்படவில்லை. அதிக எண்ணிக்கையில் காவல் வீரர்கள் இல்லை. கூட்டினால் பத்து பதினைந்து பேர் தான் வருவர். ஆனால் அனைவரும் பொறுக்கியெடுத்த முரட்டு ஆசாமிகளாக இருந்தனர். அவர்களில் பலர் மதுவருந்தி போதையில் வெறியுடன்

காணப்பட்டனர். ‘இந்த மாளிகையில் இவர்களைக் காவலுக்குக் கொண்டா இளவலைச் சிறை வைத்திருப்பார்கள்’ எனத் தனக்குத்தானே முணுமுணுத்து ஐயம் கொண்டான். பின் சற்றுத் தள்ளி கூடாரமைத்துத் தற்காலிகமாகத் தங்கியிருந்த மக்களை அழைத்து “இங்கிருந்தால் உங்களுக்கு ஆபத்து! இங்கிருந்து உடனே கிளம்புங்கள். இது மன்னரின் கண்டிப்பான ஆணை” எனத் தெரிவித்துவிட்டு அங்கிருந்து அவர்களை விரட்டினான்.

பனை ஓலைக் கூடாரத்தில் தங்கியிருந்தவர்கள் பிறை நிலவு உச்சிக்கு வந்த பின் காவிரியில் ஆழமில்லாத இடத்தில் தீவர்த்தி வெளிச்சத்தைக் கொண்டு மீன் பிடிக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். அவ்வேளையில் அவர்களைக் கிளம்பச் சொன்னதனால் காரணமறியாது புலம்பியபடி சிலர் இருங்கோ வேளை திட்டிக்கொண்டு அங்கிருந்து வருத்தத்துடன் உறைந்தைக்குக் கிழக்கில் ஓடும் காவிரியை நோக்கி அவசரமாகப் புறப்பட்டுச் சென்றனர்.

சுற்றிமுற்றிலும் பார்த்தபடியே மாளிகையை நோக்கித் திரும்பி புதர்கள் அடர்ந்த பாதை வழியே அவசரமாக நடந்துகொண்டிருந்தவனின் கால்களில் ஏதோ தடுத்தது. கீழே குனிந்து என்னவென்று பார்த்தான். இருளில் நீண்ட கட்டையைப் போலக் காட்சியளித்தது! இப்படியே போட்டுவிட்டுச் சென்றால் இது மற்றவர்களின் கால்களையும் இடரும் என எண்ணியவன் அதனைப் புதரில் எரியத் தூக்கினான். நீண்டிருந்த கட்டையைத் தூக்கியவன் பயத்தில் கை நடுநடுங்கிக் கீழே போட்டான். கட்டை என நினைத்துத் தான் தூக்கினான், தூக்கிய பிறகு தான் கண்டான், தூக்கியது கட்டை அல்ல இறந்து கிடந்தவனின் கால்கள் என்று! முழு உடலும் புதரில் மறைந்து கால்கள் மட்டும் வெளியே நீட்டிக்கொண்டு இவனது கால்களை இடரியிருந்தது!

இறந்த பிணத்தைப் பார்த்து அதிர்ச்சியிலிருந்து திருக்கண்ணன் மீள்வதற்குள் திடீரெனப் புதரிலிருந்து வெளிப்பட்ட கருத்த பருத்த உருவம் இவனை இழுத்து இவன் தன் வாளினை எடுக்க இயலாதபடி மேலே அமர்ந்து கைகளைப் பிடித்து அழுத்தியது. திருக்கண்ணனும் முயன்ற வரை திமிறிப் பார்த்தான். அவனது வலிய பிடியிலிருந்து இவனால் விடுபடவே இயலவில்லை.

ஏதோ சத்தம் போட வாயெடுத்தான். இவனது வாயைப் பொத்திய அவ்வுருவம் திருக்கண்ணன் மேலும் பேச இயலாத படி அவனது கழுத்தினைப் பிடித்தது. அந்த வைரம் பாய்ந்து காப்பு காய்ந்திருந்த கைகளில் அகப்பட்ட திருக்கண்ணன் சத்தம் எழுப்ப இயலாதபடி அவனது கழுத்து நொறுங்க ஆரம்பித்தது! கண்களில் கண்ணீர் வெளிப்பட்டது! அத்தருணத்தில் இன்றோடு தீர்ந்தோம் என எண்ணிக்கொண்டான் திருக்கண்ணன். கடைசியாக அவனது மனதில் செங்குவீரன் தனக்கிட்ட கட்டளையை நிறைவேற்றாமலேயே கடமைத் தவறிய வீரனாகத் தனது உயிரை இழக்கப் போகிறோமே! இளவலையும் தன்னால் காக்க இயலவில்லையே! அவரைக் காத்தபின் தனது உயிர் பிரியக்கூடாதா! என அவன் வருந்த அவன் கண்களிலிருந்து சில துளி கண்ணீர் வழிந்து கன்னத்தைத் தொட்டிருந்தது.

# 31. சோ ழ குல கதிரவன்

அரண்மனைக் காவலர்களைக் கொன்றுவிட்டு யாராலும் கண்டறிய இயலாதபடி தப்பித்துவிட்ட விறல்வேல் செம்பியன் கோட்டத்தின் உச்சி விமானத்தின் மீது அமர்ந்துகொண்டு அரண்மனையில் நடந்த சம்பவங்களைச் சிந்தித்துப் பார்த்து அடுத்து என்ன செய்வது என யோசித்துக்கொண்டிருந்தான். அரண்மனைக்குள் சென்றதில் இளவல் இருங்கோவேளின் காவலில் தான் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறான் என்பதை அறிந்ததில் மட்டும் அவனது மனம் திருப்தியடைந்திருக்கவில்லை. எவ்வளவோ முயற்சி செய்தும் இருங்கோவேளின் வாயிலிருந்து இளவல் இருக்குமிடத்தை அறிந்துகொள்ள இயலவில்லையே எனவும் வருந்தினான். தனது திட்டப்படி திருக்கண்ணன் இந்நேரம் இளவல் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து அவரைக் காப்பாற்றி விடுவான் என அவன் திட்டமாக நம்பினான். இருப்பினும் அவன் காப்பாற்றியிருப்பானா? அல்லது அவன் காவல் வீரர்களிடம் அகப்பட்டிருப்பானா? என்ற எண்ணமும் மேலோங்கி அவனை வாட்டமுறச் செய்தன. அரண்மனைச் சமரில் அவனது உடலில் ஏற்பட்டிருந்த வாள் காயங்களிலிருந்து குருதியும் கசிந்துகொண்டிருந்தது. சரி! முதலில் காயங்களுக்குக் கட்டுபோடுவோம் என எண்ணியவன் தனது துணியைக் கிழித்தான். அந்நேரத்தில் செம்பியன் கோட்டத்திற்கு அருகிலிருந்த பாதை வழியாகப் பத்து பதினைந்து மனிதர்கள் கடந்து சென்றபோது அவர்கள் பேசிய பேச்சுகள் இவனுக்கு அரைகுறையாகக் கேட்டன. அவர்கள் பேசியதைக் கேட்ட விறல்வேல் திடீரென உற்சாகங்கொண்டு செம்பியன் கோட்ட விமானத்திலிருந்து கீழே குதித்து அவர்களிடம் சென்றவன், “அய்யா! பட்டினத்தில் முதல் சாமம் கழித்து யாரும் நடமாடக்கூடாது என்ற கட்டளை நடைமுறையில் இருக்கும்போது, தாங்கள் அனைவரும் இந்நேரத்தில் எங்கே அய்யா சென்றுகொண்டிருக்கிறீர்கள்?” என வினவினான்.

அக்கூட்டத்தின் தலைவர் வருந்தியபடி, “இவ்வுலகில் எங்களைப்பற்றிக் கவலைப்பட யார் தம்பி இருக்கிறார்கள்? பட்டினத்தின் வடமேற்கில் காவிரிக் கரையோரமாகப் பனை ஓலைக்குடில் அமைத்து தங்கி இரவில் மீன்பிடித்துப் பிழைப்பதே எங்கள் தொழில்! ஆனால் இன்று எங்கள் பிழைப்பிலும் மண்ணை வாரிப் போட்டுவிட்டார்கள்!” என்றார் ஒரு முதியவர். “காவிரியில் மீன் பிடிக்க உங்களைத் தடை செய்ய யாருக்கு அய்யா உரிமை உண்டு? அந்த உரிமை மன்னருக்குக் கூடக் கிடையாதே!” எனக் கோபத்துடன் வினவினான் விறல்வேல்.

“தம்பி! குடியின் உரிமை, பாதுகாப்பு எல்லாம் சென்னியோடு மறைந்துவிட்டது! எங்கள் குடிலுக்கு வந்த உறைந்தை வீரனொருவன் உடனே இங்கிருந்து கிளம்புங்கள்! இது மன்னரின் உத்தரவு என ஆணையிட்டு எங்களை விரட்டிவிட்டான்” எனக் கூறினார் வருத்தத்துடன்.

“மன்னர் உத்தரவு எனக் கூறினால், நீங்கள் அங்கிருந்து வந்துவிடுவதா?” ஆத்திரத்துடன் கேட்டான் விறல்வேல்.

“மன்னர் உத்தரவு எனக் கூறிக் கட்டளையிடும் போது எங்களால் என்ன தம்பி செய்ய இயலும்!” எனப் புலம்பியபடியே விறல்வேலின் மறுமொழியைக் கூடக் கேளாமல் அனைவரும் அங்கிருந்துச் சென்றனர்!

அவர்கள் இப்படிக் கூறிச் சென்றது விறல்வேலிற்குப் பெருத்த வியப்பாக இருந்தது. வீரர்கள் எதற்கு இவர்களை அங்கிருந்து வெளியேற்றினார்கள். இவர்களால் அவர்களுக்கு எந்த இடையூறும் நேராதே! தான் உண்டு. தன் குடும்பம் உண்டு எனக் காலம் கழிப்பவர்கள் இவர்கள். இவர்களை ஏன் அவர்கள் விரட்டியடிக்க வேண்டும்? எனப் பலவாறு சிந்தித்துப் பார்த்தான். சிந்தித்த அவனுக்கு எதுவுமே தோன்றவில்லை. தனது நேரத்தை நொந்துகொண்டான்.

பரதவர்களைப் பற்றிக் கவலைப் பட்டுக்கொண்டிருந்த போது அவனுக்குத் திடீரெனக் காவிரியாற்றின் கரையோரமிருந்த வேனிற்கால மாளிகையின் நினைவு வந்தது! இளஞ்சேட்சென்னி அழுந்தூர் வேள் திதியனின் மகளை மணமுடித்தபின் அவர்கள் இருவரும் வேனிற்காலத்தைக் இன்பமுடன் கழிக்கக் காவிரி ஆற்றங்கரையின் ஓரமாகப் பட்டினத்தின் வடமேற்கில்

அனைத்து வசதியுடனும் கட்டப்பட்ட மாளிகை அது! பல வருடங்களாகப் பயன்படுத்தப்படாமல் சிறிது சேதமடைந்திருந்த மாளிகை என்ற தகவல்களும் அவனது மனதில் கண நேரத்தில் தோன்றி மறைந்தது! இதே நேரத்தில் இளவலைப் பற்றி இருங்கோவெளிடம் பேசியபோது "இன்றிரவே இளவரசனைக் கொன்று அவனது சாம்பலைப் பொன்னி நதியில் கரைக்கப் போகிறேன்" என அவர் ஆவேசத்துடன் கூறிய வார்த்தைகள் விறல்வேலின் காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலித்தன.

"அப்படியானால்..........!"

விறல்வேலிற்கு இப்போது அனைத்து காரணங்களும் புரிந்துவிட்டது. சிதிலமடைந்த வேனிற்கால மாளிகைக்குத் தீ வைத்தால் உடனே மளமளவென்று தீப்பற்றிக்கொள்ளும். மாளிகை எரிவதைப் பார்த்து அங்கிருக்கும் பரதவர்கள் கூச்சலிடக் கூடாது என்பதற்காகவே முன்கூட்டியே திட்டமிட்டு அவர்களை அங்கிருந்து விரட்டிவிட்டனர் என அனைத்தையும் உணர்ந்தவனுக்குத் தலை சுழன்றது. மனம் பதறியது! இனி தாமதிக்கும் ஒவ்வொரு கண நேரமும் இளவலின் உயிருக்கு ஆபத்தென்பதை புரிந்து கொண்டவன் அருகில் புதரில் மறைந்து மேய்ந்துகொண்டிருந்த தனது புரவியைக் கைதட்டி அழைத்தவன் அதன் மீதேறி அமர்ந்து ஆயிரம் புரவி வேகத்தில் அம்மாளிகையை நோக்கிப் பாயலானான்!

இளவலுக்கு மட்டும் ஏதேனும் நேர்ந்துவிட்டால் தனது முயற்சி, மக்களின் நம்பிக்கை, சோழ தேசத்தின் எதிர்காலம் என அனைத்தும் அந்தத் தீக்கு இரையாகிவிடுமே! திருக்கண்ணன் இந்நேரம் அங்குச் சென்று சேர்ந்திருப்பானா? அவன் இளவலைக் காப்பாற்றியிருப்பானா? இள வயதான இளவல் நெருப்பினைத் தாங்குவாரா? எனப் பலப்பல நினைப்புகளுடன் புரவியில் சென்றவன் மாளிகைக்கு அருகினில் சென்றுவிட்டான்!

அவன் எண்ணியது அனைத்தும் சரியாகவே இருந்தது. அவன் சற்றுத் தொலைவில் பார்த்தபோதெல்லாம் மாளிகையில் தீ பரவிக்கொண்டிருந்தது. வேகமாக வந்தவன், வெளியே நின்ற இரு காவலர்களை அவர்கள் எதிர்பாராதபடி புரவியின் முன்கால்களால் உதைக்க வைத்தான். புரவியினால் உதைபட்டவர்கள் மார்பெலும்பு உடைந்து கதறியபடி

மல்லாக்க விழுந்தனர். தீ விழுங்கிக் கொண்டிருக்கும் மாளிகைக்குள் புரவியிலேயே செல்ல முயன்றான். ஆனால் எரிந்துகொண்டிருக்கும் மாளிகையைப் பார்த்துப் புரவி மிரண்டது! விறல்வேலின் மன வலிமை அந்நேரத்தில் அவனது புரவிக்கு இல்லாமல் போயிற்று! புரவிக்குத் தீக் காயம் பட்டால் தப்பிக்கும் போது புரவி உதவாதுப் போய்விடும் என்ற முன் எச்செரிக்கைச் சிந்தனையினால் புரவியிலிருந்து இறங்கி வாளினை உருவிக்கொண்டு எரியும் மாளிகைக்குள் ஓடினான்.

எரிந்து விழும் மரத்துண்டுகளையும், பரவி கொண்டிருக்கும் தீச் சுவாலைகளையும் கண்டு பின்வாங்காத விறல்வேல் தொடர்ந்து முன்னேறி சத்தமெழுப்பியபடியே ஒவ்வொரு அறையாக இளவல் எங்காவது இருக்கிறாரா? எனத் தேடிக்கொண்டிருந்த சமயத்தில் மாளிகையினுள் சிலர் வெறிபிடித்தபடி கத்திக்கொண்டு வாளை உருவியபடி அவனை நோக்கி ஓடி வந்தார்கள். ஓடி வந்தவர்களைக் கண்டவன் அவர்களின் வாளைத் தனது வாளினால் தலைக்கு மேலேயே தடுத்து வேகமாகப் பின்னால் அவர்களைத் தள்ளினான். வாளினால் ஒருவனது வயிற்றில் குத்தியும், மற்றொருவனது மார்பினில் எட்டி உதைத்தும் தீயினுள் தள்ளினான். தீயினுள் விழுந்தவர்களின் அலறல் சத்தம் தான் அவனுக்குக் கேட்டது.

மடமடவென எரியும் தீச்சுவாலைகளுக்கு மத்தியில் வாள்கள் உராயும் சத்தத்தைக் கேட்ட விறல்வேல் மேலும் பரபரப்படைந்து சத்தம் வந்த அறையினுள் நுழைந்தான். அங்கு அவன் தன் வாழ்நாளில் இதுவரை காணாத அதிசயம் ஒன்றைக் கண்டபடியே பிரமித்து நின்றுவிட்டான். விறல்வேலும் வீரன் தான். பல வீர சாகசச் செயல்களையும், கதைகளையும் கேட்டே வளர்ந்தவன். அத்தகைய கதைகளிலும், புராணங்களிலும் கூறப்படும் வீரன் ஒருவனைத்தான் தற்பொழுது பார்த்துக் கொண்டிருக்கிறேனா? எனத் திகைத்து வியப்பின் உச்சத்தை எட்டினான்!

அறையில் அடைத்திருக்கும் இளவலைக் கொல்லாமல் தீ மட்டும் மாளிகைக்குள் வைத்தால் அவன் எப்படியும் தப்பித்தாலும் தப்பிவிடுவான் என எண்ணியவர்கள், வீரர்கள் சிலரை அனுப்பி அவனை வெட்டிக் கொன்றுவிடுங்கள் எனக் கட்டளையிட்டு மாளிகைக்குத் தீயையும்

வைத்துவிட்டனர். இருங்கோவேளின் அந்தரங்க ஊழியர்கள் மாளிகைத் தீப்பற்றத் தொடங்கியதையும் பொருட்படுத்தாமல் மன்னரின் கட்டளையை நிறைவேற்றிய பின்னரே வெளியேற வேண்டுமெனத் தீவிரமாகச் செயல்பட்டு அவனுடன் போரிட்டுக் கொண்டிருந்தனர்.

விறல்வேல் கண்ட காட்சி இதுதான். அந்தப் பெரிய அறையினில் இருந்த பொருள்கள் முழுவதுமே தீச்சுவாலைகளுக்கு இரையாகிக் கொண்டிருக்கப் பெரும் சங்கிலித் தளைகளால் கால்கள் தூணோடு பிணைக்கப்பட்டிருக்கும் ஒருவனை ஐந்தாறு முரட்டு வீரர்கள் வாள் மற்றும் வேல்களால் தாக்கிக்கொண்டிருந்தார்கள். தாக்கிக் கொண்டிருந்தார்கள் எனக் கூறுவதை விடத் தாக்க முயற்சித்துக் கொண்டிருந்தார்கள் எனக் கூறுவதே பொருந்தும்! ஏனெனில் அவர்களின் வாள் மற்றும் வேல்களைத் தடுத்து அவர்களைத் தாக்கிக்கொண்டு அசகாயச் சூரனை விட வேகமாகத் தனது வாளினைச் சுழற்றிக்கொண்டிருந்தான் ஒரு இளைஞன். கால்கள் பிணைக்கப்பட்ட மரத்தூணும் தீயில் எரிந்துகொண்டிருந்தது. தூணில் இன்னொரு சங்கிலி பிய்ந்து தொங்குவதிலிருந்து ஒரு கால் சங்கிலியை அவன் அகற்றி மறுகால் சங்கிலித் தளையை அவன் பிய்த்துக் கொண்டிருந்த நேரத்தில் வீரர்கள் உள்ளே நுழைந்திருக்கலாம் என்பதை ஊகித்துக் கொண்டான். வலது கால் மட்டும் சங்கிலியில் பிணைத்திருக்க இடது காலை மட்டும் மாறி மாறி பெயர்த்து வைத்து அவன் தன்னைக் காத்துக்கொண்டும் அதே நேரத்தில் எதிரிகளைத் தாக்கிக் கொண்டும் இருந்தான். அவனது வாள் வீச்சின் வேகத்தைச் சமாளிக்க இயலாமல் அவர்கள் அனைவரும் தடுமாறினார்கள்.

எதிரிகள் கூட்டாகத் தாக்கியபோதும் சமாளித்திருந்தவன் அவர்களில் சிலரையும் வெட்டி வீழ்த்தியிருந்தான். நாம் பலர் சேர்ந்து தாக்கியும் ஒரு பொடிப் பையனை வீழ்த்த இயலாததை எண்ணி கோபம் கொண்ட மூர்க்கர்கள் தூணிற்குப் பக்கமாக வந்து இருபுறத்திலிருந்தும் வேல்களை அவன் மீது செலுத்தினர். தனது இடது புறத்தில் பாய்ந்த வேலைத் தடுத்து, அவனது மார்பினில் தனது வாளைப் பாய்ச்சி அவனைச் சாய்த்த அந்தப் பசுந்தளிரால் வலது புறம் தாக்கிய வேலைத் தடுக்க இயலவில்லை. அவனுக்கும் கைகள் இரண்டு தானே! அவ்வேல் அவனது

மார்பில் பாய்ந்தது! மார்பில் வாளைத் தாங்கிக்கொண்டு வாளினால் அவனது கழுத்தை வெட்டினான். அவனது தலை துண்டாகக் கீழே விழுந்தது. குருதி குபுகுபுவென அவனது முண்டத்திலிருந்து வெளியேறியது. கண நேரத்தில் தனது வீரர்களில் இருவர் கொல்லப்பட்டதைக் கண்ட மற்ற வீரர்கள் மிரண்டுபோய்விட்டனர்.

ஒரே வீச்சில் ஒருவனது தலையைக் கொய்த அந்த இளம் வீரனின் அகவை எப்படியும் பதினெட்டு அல்லது பத்தொன்பதைத் தாண்டாது. அவனது வாளையும், கையையும் கண்டால் இரண்டும் பொருந்தவே பொருந்தாது! ஏனெனில் அவனது கையோ மெலிந்து போய் இருந்தது. ஆனால் அவனது வாளானது நீண்டு, தடித்துக் கணமுடையதாக இருந்தது! அவ்வளவு கணமுடைய வாளினைத் தூக்கி வேகமாக அவன் எப்படித்தான் சுழற்றினானோ? பல நாள் மாளிகையில் உணவின்றி வாடியதால் அவனது வயிறு சுருங்கி உடலும் இளைத்துப் போய்க் காணப்பட்டது. அவனது முகமோ முழு நிலவைப் போன்று அழகான, எழில் கொஞ்சும் முகம். இன்னும் மீசை கூட முழுவதும் முளைத்திருக்காமல் அரும்பு மீசையே முளைத்திருந்தது. அகன்ற நெற்றி, ஒளி வாய்ந்த கண்கள், கூரிய மூக்கு என அவனது முகத்தில் அனைத்துக் களைகளும் சிறப்புற வீற்றிருந்தது! நீண்டு வளர்ந்திருந்த தலைமுடிகள் கழுத்து வரை நீண்டு அவன் அப்படியும் இப்படியும் குனிந்தும் நிமிர்ந்தும் உடலை வளைத்துச் சண்டையிட்ட போது அவனது நீண்ட குழல்களும் ஆடி அவனுக்குப் பெரும் கம்பீரத்தை அளித்திருந்தது! சுற்றிலும் எரிந்து கொண்டிருந்த நெருப்புச் சுவாலைகளுக்கு மத்தியில் அவன் வாளினைக் கொண்டு ஆடிய வீர ருத்ர தாண்டவத்தில் அவனைத் தாக்க வந்த வீரர்கள் அனைவரும் மடிந்து விழுந்தனர். அந்தக் காட்சிகளை மட்டும் தமிழ்ப் புலவர்கள் யாரேனும் கண்டிருந்தால் காலத்திற்கும் அழியாத வீரப் பாடல்களை எழுதிவைத்துவிட்டுச் சென்றிருப்பார்கள். ஆனால் விறல்வேலிற்குத் தான் அக்காட்சியைக் காண நேரிட்டது! கண்டவன் பிரமித்துப் போய் நின்றுகொண்டான். விறல்வேலுக்கும் கவி படைக்கத் தெரியும்! ஆனால் அவனது கவித்திறன், கற்பனைகளெல்லாம் காதலோடு நின்றுவிட்டது. தனது காதலி வானவல்லியைப் பற்றியும், அவனது காதலை மட்டும் எழுதும் அளவிற்குத்தான் அவனது கவித்திறன் வளர்ந்திருந்ததே தவிரப் போர்க்

காட்சியையோ, வீரத்தைப் பற்றியோ எழுதும் திறமையை அவன் வளர்த்திருக்கவில்லை. தனது காதலைத் தவிரக் கவித்திறனை நீட்டும் முயற்சியையும் அவன் எடுத்திருக்கவில்லை. மேலே கண்ட காட்சிகள் அனைத்தும் விறல்வேல் கண நேரத்தில் கண்டது!

தனது மார்பில் தாங்கிய வேலினைப் பிடுங்கிய இளைஞன் நின்றுகொண்டிருந்த விறல்வேலை நோக்கி வேகமாக எறிந்தான்! இளைஞனின் வீரத்தைப் பார்த்துப் பிரமித்துப் போய் நின்றுவிட்ட விறல்வேல், திடீரெனத் தன்னை நோக்கி அவன் வேலை எறிந்ததைக் கண்டு திடுக்கிட்டு அதிர்சியடைந்துவிட்டான். ஒருவேளை அவன் தன்னையும் அவனைத் தாக்க வந்த எதிரிகளுள் ஒருவன் என நினைத்துவிட்டானோ என விறல்வேல் திடுக்கிட்டான். சுதாரிப்பதற்குள் அவ்வேல் அவனது தலையை உரசியது போலப் பாய்ந்து விறல்வேலுக்குப் பின்னால் அவனைக் குத்துவதற்கு வேலை நோங்கியபடி வந்த உறைந்தை வீரனின் மார்பில் பாய அவன் அலறியபடியே விழுந்தான்!

பலர் தன்னைத் தாக்கிக் கொலை செய்ய முயன்று கொண்டிருக்கும் வேளையில் தன்னைக் காக்க வந்தவனை அடையாளம் கண்டு காத்த பண்பும், வீரமும் நிறைந்த அந்த இளைஞனை எண்ணி பெருமைப்பட்டுக் கொண்டான் விறல்வேல்! வீரத்தையும், பண்பையும் எண்ணிப் பெருமைப்பட்டுக்கொண்டு நிற்கும் நேரம் இதுவல்ல என்பதை உணர்ந்த விறல்வேல், இதற்கு மேல் பொறுமை காத்தால் இத்தனை காலமாக யாரைக் காணத் தேடிக்கொண்டிருந்தோமோ அவரை இழந்து விடுவோம் என எண்ணி இளைஞனுக்கு ஆதரவாக இவனும் உறைந்தை வீரர்களைத் தாக்கலானான்.

விறல்வேலின் வாள் வேகத்திற்குத் தாக்குபிடிக்க இயலாத உறைந்தை வீரர்கள் கை, கால், தலையை இழந்து குருதி வடிய சரிந்தனர். காவலர்களை வீழ்த்தியவன் இளவலிடம் சென்று சங்கிலியால் கட்டப்பட்ட அவரது காலைக் கண்டான். தூணோடு இளவலின் வலது காலும் வெந்துபோயிருந்தது. இளவலின் காலைக் கட்டியிருந்த சங்கிலித் தளையைத் தனது வாளினால் ஓங்கி அடித்தான். ஏற்கெனவே நெருப்பினால் சூடாகிப்போயிருந்ததால் தூள் தூளாக உடைந்து விழுந்தது சங்கிலித் துண்டு!

விறல்வேல் உள்ளே சென்று இளவலைக் காப்பாற்ற எடுத்துக்கொண்ட பொழுது சில கண நேர மணித்துளிகள் தான்! ஆனால் அதற்குள் மாளிகை எரிந்து தீக்கிரையாகி உதிர்ந்து கீழே விழ ஆரம்பித்திருந்தது. விறல்வேலின் கால்களும் நெருப்பினால் சுடப்பட்டிருந்தது. தனது மேலங்கியைக் கழட்டி இளவலின் கால்களில் சுற்றிய விறல்வேல் அவரைத் தூக்கி தோளில் போட்டுக்கொண்டு நடந்தான். சில நெருப்புத்துண்டுகள் மேலே விழுந்தாலும் இளவலுக்கு எந்தக் காயமும் மேற்கொண்டு ஏற்படாமல் அவரைத் தூக்கிக் கொண்டு பாதுகாப்பாக மாளிகையிலிருந்து வெளிவந்தான்.

விறல்வேல் எதிர்பார்த்தது போலவே வெளியே காத்திருந்த சில உறைந்தை வீரர்கள் அவனைத் தாக்கினார்கள். இளவலைத் தோளில் போட்டுக்கொண்டே அவர்கள் இருவரின் வாள்களையும் ஒரே நேரத்தில் சமாளித்துத் தட்டிவிட்டு இளவலுக்கு எந்தப் பாதிப்பும் நேராமல் அவர்களைக் கொன்று முன்னேறினான். அந்த நேரத்தில் விறல்வேல் அவனது உயிரைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளவில்லை. ஆனாலும் இளவலைப் பாதுகாப்பான இடத்தில் சேர்க்கும் வரை தனது உயிரின் முக்கியத்துவத்தை உணர்ந்தவன் லாவகமாகச் சண்டையிட்டு இளவலைத் தூக்கியபடியே தனது புரவியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். மாளிகை சுடர்விட்டு எரிந்தபடியால் அதிலிருந்து வெளிப்பட்ட வெளிச்சம் விறல்வேலைக் காட்டிக்கொடுத்தபடியால் மிச்சமிருந்த சில வீரர்கள் அவனைத் தொடர்ந்து தாக்கிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், அந்நேரத்தில் விறல்வேல் எதிர்பாராதபடி ஓர் உதவி அவனுக்குக் கிடைத்தது. உபதளபதி திருக்கண்ணன் மற்றும் செங்கோடன் இருவரும் அங்குவந்து அவனுக்கு உதவியாகப் போர் புரியத் தொடங்கினார்கள்!

உறைந்தைப் புரவி வீரனைத் தாக்கி வசந்த மாளிகைக்கு வந்தபின் தனது காலில் அகப்பட்ட பிணத்தைக் கண்டு அதிர்சியடைந்தவனை மறைந்திருந்த ஒருவன் இழுத்துப் புதரில் போட்டு சத்தமெழுப்ப இயலாதபடி அவன் மீது அமர்ந்துகொண்டு அவனது கழுத்தையும், கையையும் இறுகப்

பற்றியவன், ‘‘சத்தம் போடாதே! நான் தான் செங்கோடன்!’’ எனக் கூற திருக்கண்ணனும் எதிர்ப்பைக் கைவிட்டு அமைதியானான்.

செங்கோடனால் பிடிக்கப்பட்ட தனது கையும், கழுத்தும் நொறுங்கி விட்டதைப் போல உணர்ந்த திருக்கண்ணன் அவரது உடலின் வலிமையையும், திறத்தையும் கண்டு வியக்கவே செய்தவன், ‘‘அய்யா, தாங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்?’’ என ஆச்சர்யத்தோடு வினவினான்.

‘‘நம் உப தலைவர் சுட்டிக்காட்டியவனைப் பின்தொடர்ந்து வந்தேன்! அவன் இந்த மாளிகைக்கு வந்து சேர்ந்தான். இரு வீரர்கள் என்னை எதிர்பார்த்து எனக்காகக் காத்திருந்தது போல நின்று என்னைத் தாக்கினார்கள். அவர்களில் ஒருவன் உன்னுடன் வந்த மற்றொருவன் எங்கே எனக் கேட்டபடியே வாளினை ஓங்கிக்கொண்டு வந்தான். வந்த இருவரையும் எனது குறுவாளால் அவர்கள் சத்தமெழுப்புமுன் கொன்று விட்டேன். அவன் மற்றொருவன் எனக் கூறியதிலிருந்து அவன் உன்னையும், தலைவரையும் தான் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள் எனப் புரிந்துகொண்டேன்’’ என்றவர் மீண்டும் தொடர்ந்து, ‘‘அவர்களின் பிணங்களைத் தூக்கி புதரில் போடும்போது அந்த ஒற்றனும் என்னைத் தாக்க வந்தான். அவன் அவர்களைப் போலல்லாது சற்றுத் திறமை வாய்ந்தவனாகக் காணப்பட்டான். ஆனால் அவனது நேரமும் முடிந்து அவனது உயிரும் என்னால் பறிபோய்விட்டது. அவனது காலில் தடுக்கித் தான் நீ விழப்பார்த்தாய்!’’ எனக் கூறியபடியே சிரிக்கலானார்!

மன்னர் இருங்கோவேளின் அந்தரங்க ஒற்றனும், பெரும் திறமை வாய்ந்தவனான சேந்தன் செங்கோடனால் அந்நேரத்தில் கொல்லப்பட்டுவிட்டான்.

‘‘என்னை எப்படி அடையாளம் கண்டீர்கள்?’’ எனத் திருக்கண்ணன் கேட்க அதற்குச் செங்கோடன், ‘‘தம்பி! உன்னை அல்லது நம் தலைவரை எதிர்பார்த்தே அமைதியுடன் மாளிகையைச் சுற்றி காவல் காத்த வீரர்கள் ஒவ்வொருவராகத் தாக்கி அவர்களைக் கொன்று புதரில் மறைத்துக் கொண்டிருந்தேன்! முன்னால் இரு புரவிகள் வர பின்னால் ஒரு புரவி மட்டும் தனியாக வந்ததைக் கவனித்தேன். உற்றுப் பார்த்தேன். நீ வந்தாய்! இங்கு மலைநாட்டு மற்றும் உறைந்தை வீரர்கள் என இரு குழுக்கள்

கலந்துள்ளதால் நானே இலைச்சினையோடு சென்றிருந்தாலும் அவ்வளவு எளிதில் அவர்களால் என்னைக் கண்டறிய இயலாது! அதனை நீயும் பயன்படுத்திக் கொண்டாய்! சாமர்த்தியசாலியப்பா நீ!” எனத் திருக்கண்ணனை அந்நேரத்தில் பாராட்டவும் செய்தார் செங்கோடன்.

பின்னர் இருவரும் சேர்ந்து மாளிகையைச் சுற்றி காவல் இருந்த வீரர்கள் ஒவ்வொருவராகக் கொன்று மறைத்து மாளிகைக்குள் இளவல் சிறை வைக்கப்பட்டிருக்கிறாரா என உள்ளே சென்று பார்க்க சரியான சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில் மாளிகையில் தீப்பற்றிப் பரவத்தொடங்கியது. காற்றும் அந்நேரத்தில் சுழன்று சுழன்று அடித்ததால் தீயும் சிறிது நேரத்திற்கெல்லாம் மளமளவெனப் பரவிவிட்டது. இந்நேரத்தில் தான் எதைப்பற்றியும் கவலை கொள்ளாத உபதலைவன் விறல்வேல் உள்ளே நுழைந்து இளவலைக் காப்பாற்றிக்கொண்டு வந்தான்!

விறல்வேலைச் சூழ்ந்து தாக்கிய வீரர்களைத் திருக்கண்ணன் மற்றும் செங்கோடன் என இருவரும் தாக்கி அவன் தப்பிக்க வழி ஏற்படுத்திக் கொடுத்தனர். புரவியிலேறி இளவலோடு தப்பித்துவிடலாம் என எண்ணி அதனருகில் சென்றபோது மேலும் சில வீரர்கள் அவனை நோக்கி ஓடி வந்ததைக் கவனித்தவன் என்ன நினைத்தானோ? இளவலோடு புரவியில் பயணிப்பது ஆபத்து என நினைத்து, இருகரையும் செறிந்து ஓடிய காவிரிப் புனல் பிரவாகத்தில் குதித்து விட்டான். புனல் அவர்கள் இருவரையும் அடித்துச் சென்றது!

திருக்கண்ணன் புரவியிலேறி வசந்த மாளிகைக்கு வந்து செங்கோடனோடு பேசிக்கொண்டிருந்த அதே நேரத்தில் அவன் அடித்துப் போட்டுவந்த காவலன் மூர்ச்சை தெளிந்து அறை மயக்கத்தில் பிதற்ற அவனை மற்ற வீரர்கள் கவனித்துவிட்டார்கள். தன்னைத் தாக்கி இன்னொருவன் தனது புரவியில் சென்றுவிட்டதை அவர்களிடம் தெரிவித்தான். உடனே செய்தி மன்னரது காதுகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டது! நடந்ததை விசாரித்தவர் இனியும் காரியங்களை மற்றவர்களிடம் ஒப்படைத்துவிட்டுத் தான் அரண்மனைக்குள் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பது பெரும் பிசகு என நினைத்து

சில அந்தரங்கக் காவலர்களை மட்டும் அழைத்துக்கொண்டு மாளிகையை நோக்கிப் புரவியில் விரைந்தார். அவருடன் வைதீகரும் புறப்பட்டார்.

இருவரும் சுடர்விட்டு எரிந்துகொண்டிருந்த மாளிகையைக் கண்டபோது அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. சுற்றிலும் தனது வீரர்களைப் பார்த்தார். அவரது கண்களுக்கு யாருமே அகப்படவில்லை! காரணம்! விறல்வேல் இளவலுடன் பொன்னி நதியில் குதித்துவிட்ட பின்னர் அங்கிருந்த சொற்ப வீரர்கள் இளவல் தப்பிவிட்டார் என்ற தகவலை அரசருக்குத் தெரிவிக்கா வண்ணம் அவர்களைக் கொன்று அனைவரின் உடல்களையும் நெருப்பில் போட்டுத் தடயமே இல்லாமல் செய்துவிட்டிருந்தனர் திருக்கண்ணனும் செங்கோடனும்!

மன்னர் இருங்கோவேள், ‘‘யார் அங்கே! யாராவது இருக்கிறீர்களா?’’ எனச் அதிகாரத்துடன் சத்தமிட்டார்! உடனே தூரத்தில் நின்றுகொண்டிருந்த திருக்கண்ணன் மன்னர் முன் வந்து ‘‘கூறுங்கள் அரசே!’’ எனப் பணிந்து நின்றான்.

‘‘நீ மட்டும் வருகிறாய்! மற்றவர்கள் அனைவரும் எங்கே?’’ என வினவினார்.

‘‘அரசே என்னுடன் மேலும் சிலரை வெளியே காவலுக்கு நிறுத்தி வைத்துவிட்டு உங்கள் அந்தரங்கக் காவலர்கள் சில வீரர்களுடன் உள்ளே சென்றார்கள்! ஆனால் யாரும் திரும்பவில்லை. ஆதலால் மீதமிருந்த அனைத்து வீரர்களும் உள்ளே என்ன நடந்தது என அறியும் ஆவலில் உள்ளே சென்றார்கள். அவர்களும் திரும்பவில்லை. சிறிது நேரத்திற்கெல்லாம் மாளிகைத் தீப்பிடித்து நெருப்புப் பரவிவிட்டது. நம் வீரர்கள் யாராவது வெளியேறுவார்களா எனப் பார்த்தேன். யாரும் திரும்பவில்லை’’ என்றான் வருத்தத்துடன்.

திருக்கண்ணன் கூறியதை உறுதி செய்வது போலவே வைதீகரும், ‘‘அரசே! நமது வீரர்களின் கடுங்காவலை மீறி சென்னியின் மகனை யாராலும் தப்பவைத்திருக்க இயலாது! நம் வீரர்கள் திட்டமிட்டே மாளிகைக்குத் தீ வைத்துள்ளனர். திட்டமிட்டே பனை ஓலைக் குடிலில் தங்கியிருந்த பரதவர்களையும் விரட்டியுள்ளனர். அவர்கள் இந்நேரம் இங்கிருந்திருந்தால்

சத்தம் எழுப்பியிருப்பர். நமது காரியமும் கெட்டுப் போயிருக்கும்! நம் வீரர்கள் சிலரைத் தான் நாம் இழந்துவிட்டோம்! ஆனால், நமது திட்டம் வெற்றியடைந்துவிட்டது. உங்களை எதிர்க்க இனி யாருமே கிடையாது. ஒழிந்தது சோழர் குடி!'' எனக் குதூகலித்தார்.

வைதீகரது குதூகலத்தில் ஆர்வங்காட்டாத மன்னர், ‘‘பிரம்மாயரே! அந்த உபதலைவன் உரைத்த சூளுரையை நீங்கள் கேட்கவில்லை. அவனது நீண்ட வாளினை எனது கழுத்தில் வைத்துக்கொண்டே அவன் உரைத்த வஞ்சினம் இன்னும் எனது காதுகளில் விழுந்துகொண்டே இருக்கிறது. சென்னி மகன் தப்பியிருப்பானோ? என்ற அச்சம் எனக்கு இன்னும் ஏற்படுகிறது!'' என்றார் வருத்தத்துடன்.

உறைந்தை வீரனைப்போல அங்கு நின்றுகொண்டிருந்த திருக்கண்ணன் அந்நேரம் குறுக்கிட்டு, ‘‘அரசே! உங்களிடம் ஒரு காட்சியைக் கூற மறந்துவிட்டேன். மன்னியுங்கள்!'' என்றான்.

‘‘மறந்துவிட்டாயா?''

‘‘ஆமாம் அரசே!''

‘‘விரைந்து கூறு!'' கண்டிப்புடன் ஆணையிட்டார் மன்னர்.

‘‘அரசே! மாளிகை எரிந்துகொண்டிருந்த நேரத்தில் வெளியிலிருந்து ஒரு வீரன் உள்ளே நுழைந்தான். அவனைப் பார்த்தபோது அவன் உறைந்தையைச் சேர்ந்தவன் இல்லை எனப் புரிந்துகொண்டேன். அவன் உள்ளே சென்றபின் வாள்கள் உராயும் சத்தம் கேட்டது! ஆனால், அவனும் திரும்பவில்லை. நம் வீரர்களும் யாரும் திரும்பவில்லை. ஒருவருக்கொருவர் சமர் செய்து மடிந்துவிட்டார்கள் என எண்ணுகிறேன்!'' என்றவன் தூரத்தில் நின்றுகொண்டிருந்த உபதலைவன் விறல்வேலின் புரவியைக் காட்டி ‘‘அதோ பாருங்கள் அரசே! புரவி மட்டும் தனியாக நின்றுகொண்டிருப்பதை!'' எனச் சுட்டிக் காட்டினான்.

மன்னரும் அதனையே நோக்கிக்கொண்டிருந்தார். பின்னர்த் தன்னை அமைதிபடுத்திக்கொண்டு பணிவுடன், ‘‘அரசே! மதங்கொண்ட யானையைக் கூடச் சிறு வேலினைக் கொண்டு எதிர்க்கத் துணிவேன். ஆனால் நெருப்பு

என்றால் எனக்கு மரணப் பயம்! ஆதலால் வெளியே நின்றுகொண்டு யாரேனும் தப்பிக்கிறார்களா எனக் கண்காணித்துக் கொண்டிருந்தேன்!'' என்றான்.

அரசர் அவனைக் கோபமுடன் பார்த்தார். மீண்டும் திருக்கண்ணன், ''அரசே! நான் வெளியே நின்றுகொண்டிருந்ததனால் இரு நன்மை ஏற்பட்டிருக்கிறது!''

''நன்மையா? என்னென்ன?''

''நான் உள்ளே சென்றிருந்தால் நானும் நமது வீரர்களைப் போலத் தீக்கு இரையாகியிருப்பேன். ஒன்று நான் உயிருடன் இருப்பது! மற்றொன்று நான் பிழைத்திருப்பதனால் தான் உங்களுக்கு என்னால் தகவல் கூறவும் முடிந்துள்ளது''

''உன்னை நம்பலாம் தானே!''

''அரசே! நான் முதன்மை மந்திரியின் தீவிர விசுவாசி! என் குடும்பமே அவரது உதவியின் பேரில் தான் பிழைத்துக்கொண்டிருக்கிறது! உங்களுக்கு நான் துரோகம் செய்வேனா?'' என்றான் திருக்கண்ணன். அந்நேரத்தில் முதன்மை மந்திரியை இழுத்தால் தான் தன்மீது அவருக்கு எந்தவித சந்தேகமும் நேராது என்பதைத் தெரிந்தே திருக்கண்ணன் அவரது பெயரைப் பயன்படுத்தினான். அதற்கு இன்னொரு காரணம். அங்கு அவர் இல்லாதது தான்!

அந்த இடமே அதிரும்படி சிரித்த மன்னர், ''ஒழிந்தார்கள் நம் எதிரிகள்! இளவரசனும் எரிந்தான். அவனைக் காக்க முயன்ற உப தலைவனும் ஒழிந்தான்!'' எனக் குதூகலித்தார்.

''உள்ளே நுழைந்தவன் செங்குவீரனாகத்தான் இருப்பான் என எப்படி அரசே எண்ணுகிறீர்கள்!? என வைதீகர் கேட்கலானார்.

''நிச்சயமாகப் பிரம்மாயரே! அவனாகத் தான் இருப்பான். அவன் மடிந்ததற்கு அவனது புரவியே சாட்சி! ஆனால் எனக்கு ஒரு வருத்தம். இப்படிப்பட்ட இராஜ விசுவாசமுள்ள வீரனை நாம் இழந்துவிட்டோமே!'' எனச் செங்குவீரனை எண்ணி வருந்தவும் செய்தார்.

பின்னர், ‘‘இந்த நாள் வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய பொன்னாள்! நம்மை எதிர்த்த இருவரையும் பூண்டோடு நெருப்புக்கு இரையாக்கிவிட்டோம்’’ என அவர் கூறிக்கொண்டிருந்த போதே அவ்விடத்திற்கு வேந்தனும் வந்து சேர்ந்தான்.

தனது மகிழ்ச்சியை வேந்தனிடமும் கூறிப் பகிர்ந்துகொண்ட மன்னர், ‘‘எதற்கும் நீ காவிரிக் கரையோரமாக இருபுறத்திலும் விடியும் வரை நம் வீரர்களைத் தேடச் சொல்!’’ எனக் கட்டளையிட்டுவிட்டு மீண்டும் மகிழ்ச்சியில் சிரிக்கலானார். அந்தச் சிரிப்பில் பொதிந்துகிடந்த அவரது கனவுகள் அனைத்தும் அவரது கண்களில் வெளிப்பட அதைக்கண்ட பட்சிகள் அனைத்தும் பதறி மரக்கிளையிலிருந்து தாவிப் பறந்தோடின!

# 32. மரகதவல்லியின் குழப்பம்

பௌத்த விகாருக்கு முன் விறலியுடன் விறல்வேலைக் கண்ட வானவல்லி ஆத்திரத்தில் உண்மை நிலையை அறிந்துகொள்ளாமல் அவசரப்பட்டுப் புகாரிலிருந்து உறைந்தைக்கு வந்துவிட்டாள். அன்றே விறல்வேலும் உறைந்தைக்கு வந்துவிட்டான். ஆனால் இருவருக்கும் மற்றவரைப் பற்றித் தெரியாது. ஆனால் இருவரும் எப்போதும் தத்தம் மற்றவரைப் பற்றியே எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர்.

உறைந்தை வந்து தனது தோழி மரகதவல்லியைச் சந்தித்து அவளுடனே அவளது வீட்டில் தங்கிவிட்டாள் வானவல்லி. எங்கும் வெளியே செல்வது கிடையாது. சோகத்தில் எதையோ பறிகொடுத்ததைப் போலவே விறல்வேலை எண்ணியே கவலைப் பட்டுக்கொண்டிருந்தாள். ஆண் சமூகத்தையே வெறுக்கும் நிலைக்குத் தன்னைத் தள்ளிக்கொண்டாள். காரணமின்றித் திடீர், திடீரென விம்முவாள். மரகதவல்லியின் மடியில் படுத்து அழுவாள். மரகதவல்லியும் "ஏனக்கா இப்படி வந்ததிலிருந்து துயரத்துடன் இருக்கிறீர்கள்? உங்கள் துயர் என்னையும் வாட்டுகிறது! காரணம் கூறுங்கள் அக்கா!" எனக் கேட்பாள். வானவல்லி ஏதும் கூறாமல் மௌனத்துடன் இருந்துவிடுவாள். இரண்டு நாளும் அப்படித்தான் இருந்தாள். அதன் பிறகு தான் அவளது போக்கில் சிறு சிறு மாற்றங்களை மரகதவல்லி கண்டாள்.

வானவல்லியின் மனமாற்றத்தைக் கண்டு உற்சாகமடைந்த மரகதவல்லி, "அக்கா! வந்ததிலிருந்து தாங்கள் இப்படித்தான் வருத்தத்துடன் இருக்கிறீர்கள். வாருங்கள் காவிரிக் கரையோரம் நடந்து பேசிக் களிப்போம். நாம் இருவரும் சேர்ந்து கதை பேசி எத்தனை நாள் ஆகிறது!" என அழைக்கலானாள்.

இக்காலத்தில் உறைந்தைக்கு அருகில் காவிரியானது காவிரி கொள்ளிடம் எனப் பிரிந்து நாட்டினை வளப்படுத்துகிறது. ஆனால், அக்காலத்தில் காவிரியானது கொள்ளிடமாகப் பிரியாமல் ஒரே நதியாகவே புகாரில் சென்று குணக்கடலில் கலந்தது. மாதம் மும்மாரிப் பெய்த காலமாதலால் காவிரியில் எப்போதும் புனல் இரு கரையைத் தொட்டுக்கொண்டே ஓடிக்கொண்டு இருக்கும். காவிரியை எல்லா இடங்களிலும் புரவியால் கடக்க இயலாது. காவிரி அகல விரிந்து புனல் சமதளமாக அமைதியுடன் பாயும் சில இடங்களில் மட்டுமே புரவியினால் கடக்க இயலும்! மற்ற இடங்களில் எல்லாம் தோணி மற்றும் சிறு படகைத் தான் கரையைக் கடக்கப் பயன்படுத்துவர். உறைந்தையிலிருந்து புகாருக்கு காவிரி நதியின் வழியாகப் படகுப் போக்குவரத்து நடைபெற்றது. சோழ நாட்டில் விளைந்த நெல், இஞ்சி போன்ற விளைப் பொருள்கள் மரக்கலங்கள் மூலமே புகாருக்குக் கொண்டு செல்லப்பட்டு அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். படகினால் பயணம் செய்யும் அளவிற்குக் காவிரி ஆழமாகவும், புனல் செறிந்ததாகவும் காணப்பட்ட காலம் அது.

காவிரியின் கரைகளில் வளர்ந்திருந்த பல விதமான மரங்களான புங்கை, கடம்பம், வேம்பு, இலுப்பை போன்ற மரங்களும் மேலும் பலவித செடிகளும், கொடிகளும் பூத்துக் குலுங்கி கரையையும் கரைக்கு அப்பால் சோழ வள நாட்டையும் சொர்க்க புரியாகச் செழிக்க வைத்துக் கொண்டிருந்தது நதி. காவிரியானது சோழ வள நாட்டில் நெல்லினை விளைவித்துச் சோறுடைய நாடாக்கி பொன்னி நதி எனவும் பெயர் பெற்றது. பொன்னி நதியினால் பூத்துக் குலுங்கும் சோழ நாட்டின் கரையைக் கண்டு மகிழ்ந்து பெரும் உற்சாகத்துடன் வானவல்லியும் மரகதவல்லியும் பேசிக்கொண்டே நடக்கலானார்கள்.

அந்நேரத்தில் இருவரும் எதிர்பாராதபடி காவிரிக் கரையினில் சற்றுத் தொலைவிலிருந்து பலத்துறவிகள் எதிர்புறத்திலிருந்து இவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்ட இருவரும் அவர்களுக்குப் பாதையை விட்டு ஒதுங்கி நின்றனர்.

**உரையா னிறைவ னுணலு மிலனாய்த்**

**திரையா னரையான் ரெரிவில் லுருவம்**

**வரையா வகையா னிடுவில்  லனையன்**

**புரையா வரிகிற் புகழ்பூ ரணனே.**

எனும் பாடலை அவர்கள் பாடிக்கொண்டு வந்ததிலிருந்து அவர்கள் ஆசிவகத் துறவிகள் என்பதை வானவல்லி அறிந்துகொண்டாள். ஆசிவகத் துறவிகள் எனப்படுபவர்கள் பெரும் ஞானிகள், அறிவு மேதைகள், அவர்கள் வாதம் செய்ய ஆரம்பித்தால் ஒரு கிழமை கூட முடிவடையாமல் தொடர்ந்து நீளும்! எதையும் அவ்வளவு எளிதில்  ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அடுத்தக் கிழமை புகாரில் இந்திரத் திருவிழா தொடங்குவதால் அங்குப் பலவித அறிஞர்களும் குழுமி வாதம் செய்வர். அதற்குத்தான் அவர்கள் புகார் செல்ல உறைந்தைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் எனவும் ஊகித்துக்கொண்டாள்.

பாதையை விட்டு விலகி நின்ற இருவரையும் ஏறெடுத்தும் பார்க்காமல் துறவிகள் அனைவரும் பூரணனின் புகழ் பாடிய படியே சென்றுகொண்டிருந்தார்கள். ஆனால் ஒரு ஆசிவகத் துறவி மட்டும் அவர்களைப் பார்த்தவுடன் அப்படியே நின்றுவிட்டார். அவர்தான் அங்கு இருந்த துறவிகளுக்கெல்லாம் தலைவர். ‘வழியில் பெண்களைக் கண்டாலே ஒதுங்கிச் செல்லும் நம் தலைவர் இன்று ஒதுங்கி நிற்கும் இரு பெண்களைக் கண்டு சிலையாக நிற்கிறாரே! காரணம் யாதோ!’ என மற்ற அனைத்து துறவிகளும் அங்கேயே நின்றுவிட்டனர்.

மரகதவல்லி மற்றும் வானவல்லியைக் கண்ட ஆசிவகத் தலைவரின் கண்களில் பிரமிப்பு தழும்பிற்று. ஆச்சர்யத்தோடு பார்த்தபடியே இருவரையும் அருகில் அழைத்தார். இரு பெண்களும் அவரைக் கண்டு தயங்கினாலும் அவர் முன் சென்று இருவரும் பணிந்து வணங்கினார்கள். “பூரணன் அருளுடன் என்றும் மகிழ்ச்சியாக வாழ்வீர்களாக!” என இருவரையும் வாழ்த்தியபடி மரகதவல்லியை நோக்கினார்.

“தாயே! உனது பெயர் என்ன?” என மரகதவல்லியிடம் வினவினார்.

தயக்கத்துடன் அவள், “மரகதவல்லி” என்றாள்.

“பொருத்தமான பெயர்” எனக் கூறிவிட்டு அவளது முகத்தையே பரிவுடன் பார்த்தார்.

மரகதவல்லி ஏதும் கூறாமல் பணிவுடன் நின்றுகொண்டிருந்தாள்.

“குழந்தாய்! உன்னைப் பார்ப்பதற்கு நான் எப்பிறப்பில் எந்தப் புண்ணியம் செய்தேனோ! உன்னிடம் பூரணனின் அருளும், ஆசியும் நிரம்பியிருப்பதை என் கண்களால் காண இயலுகிறது. பிறப்பிலே மிகவும் உயர்ந்ததான தூய வெண்மைப் பிறப்பைச் சேர்ந்தவள் நீ. உன்னை மணப்பவன் இமயம் வரை வெற்றிக்கொடி நாட்டுவான்” என மரகதவல்லியிடம் கூறியபடியே அங்கிருந்து கிளம்பத் தயாரானார். ஆனால் ஏதோ நினைத்தவர் மீண்டும் வானவல்லியை நோக்கி “தாயே! உனது முகத்தைப் பார்க்கையில் அடுத்து வரும் காலங்கள் உனக்கு மிகவும் கடினமானது எனத் தோன்றுகிறது. எச்சரிக்கையுடன் இரு! ஆனால் உனது நம்பிக்கையையும் பிரார்த்தனையையும் கைவிட்டு விடாதே! நீ வணங்கும் கடவுள் தான் உன்னைச் சேர்ந்தவனைக் காக்க வேண்டும்” எனக் கூறியபடியே இருவரது மறுமொழியைக் கூட எதிர்பாராமல் அங்கிருந்து கிளம்பிச் சென்றார்!

ஆசிவகர் கூறிச் சென்றபின் சிறிது நேரம் என்ன பேசுவதென்று தெரியாமல் இருவரும் அங்கேயே நின்றுகொண்டிருந்தார்கள். வானவல்லிக்கு பெரும் அதிர்ச்சியும் மரகதவல்லிக்கு திகைப்பும் ஏற்பட்டிருந்தது. ‘அவர் உன்னைச் சேர்ந்தவர் என யாரைக் குறிப்பிட்டார்? ஏற்கெனவே தமையனை இழந்தவள் நான். இன்னும் யாரை இழக்கப் போகிறேனோ?’ என எண்ணும்போதே அவளது மனதில் திகில் குடிகொண்டது. ‘உபதலைவனைத் தான் அப்படிக் குறிப்பிட்டிருப்பாரோ?’ என அவள் எண்ணியபோதே கண்களில் கண்ணீர் பெருக்கெடுப்பது போல இருக்க மரகதவல்லி முன் தான் எந்தக் கவலையையும் வெளிப்படுத்த கூடாதென எண்ணியவள் மனக்குமுறல்களை அடக்கிக்கொண்டு அமைதியுடன் நடந்தாள்.

ஆனால், மரகதவல்லியின் நினைப்பு வேறு மாதிரியாக இருந்தது. இவள் திகைத்துப் போயிருந்தாள். அவரது கூற்றையும் இவளால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இமயம் வரை வெற்றிக்கொடி நாட்டுவான் என்பதை எந்த அர்த்தத்தில் அவர் தெரிவித்திருப்பார்?’ என அறிந்துகொள்ள

இயலாமல் முதலில் திகைத்தாள். ஆனால் பிறகு அவர் வானவல்லியைப் பற்றிக் குறிப்பிட்டவை நினைவிற்கு வந்ததும் இவளும் கலங்கவே செய்தாள்.

மரகதவல்லி வானவல்லியைப் பார்த்தாள். அவள் அமைதியாக நடந்துகொண்டிருந்தாள்.

“அக்கா!” என அழைத்தாள் மரகதவல்லி.

“சொல் மரகதவல்லி!”

“அவர் கூறுவதைத் தாங்கள் நம்புகிறீர்களா?”

“அதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?”

“எனக்குத் துளியளவும் அதில் நம்பிக்கை எழவில்லை அக்கா!”

“ஏன் மரகதவல்லி? அவர் என்னைப் பற்றிக் கூறியதை எண்ணி நீ கவலை கொள்கிறாயா?”

மரகதவல்லி பதில் கூறாமல் அமைதியுடன் நடந்தாள்!

“அவர் பெரும் மகான். பல நூல்களைக் கற்றவர். கடுமையாகத் தவம் இருப்பவர். அவர் கூறுவதை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். நான் துயரப்பட வேண்டும் என்பது என் தலை விதியானால் அதை யாரால்தான் மாற்ற இயலும்!” என்றாள் வானவல்லி.

“அந்த ஆருகதத் துறவி ஏனக்கா அப்படிக் கூறிச் சென்றார். தாங்கள் சில தினங்களாகவே என்னிடம் கூடத் தெரிவிக்காமல் துயரில் வாடுகிறீர்கள். இப்படிப்பட்ட சூழலில் அவர் தங்களைப் பற்றிக் கூறிச்சென்றது எனக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கிறது அக்கா” என வருந்தினாள் மரகதவல்லி.

அவள் கூறியதைக் கேட்டு ஆச்சர்யமடைந்த வானவல்லி, “ஆருகதத் துறவியா? யாரை ஆருகதத் துறவி என்கிறாய்!” எனச் சிரித்தபடியே வினவினாள்.

“ஆம் அக்கா. அத்துறவிகள் பார்ப்பதற்குச் சமணர்கள் போலத் தானே காட்சியளித்தார்கள்!”

“அவர்கள் சமணர்கள் போலத் தான் தோற்றத்தில் ஒத்திருப்பார்கள். ஆனால் அவர்கள் சமணர் அதாவது ஆருகதர் அல்ல.”

“அப்படியானால் அவர்கள் யார் அக்கா?”

“அவர்கள் ஆசிவகத் துறவிகள். ஆருகதம், பௌத்தம் போன்றே வட நாட்டிலிருந்து தமிழகம் வந்த மதம். அவர்களின் கடவுள் மற்கலி. அவரை நம்மவர்கள் பூரணர் எனவும் அழைப்பர்” என்றாள் வானவல்லி.

ஆசிவகம் பற்றி மரகதவல்லி ஏற்கெனவே ஓரளவு அறிந்திருந்தாலும் வானவல்லியின் மனதைத் திசைமாற்றும் பொருட்டு, “அக்கா! ஆருகதம் தானே கேள்விப்பட்டுள்ளேன். அது என்ன அக்கா ஆசிவகம்?” என ஆச்சாரத்தோடு கேட்கலானாள்.

வானவல்லி எப்போதும் கதை கேட்பதிலும், கதை கூறுவதிலும் பெரும் ஆர்வமுடையவள். ஆதலால் மரகதவல்லி ஆசிவகம் பற்றிக் கேட்கத் தொடங்கியதும் அவளும் ஆர்வமுடன் கூறத் தொடங்கினாள்.

“மரகதவல்லி ஆசிவகம் என்பது வடநாட்டில் மஸ்கரி புத்திரர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட மதம். அவரைப் பாலியில் மக்கலி புத்த எனவும், நம் மொழியில் மற்கலி, பூரணர் எனவும் அழைப்பர். மேலும் இவர் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தவர் என நம்புவதால் அவரை ‘கோசல மக்கலி புத்த’ எனவும் அழைப்பார்கள்”

“மற்கலி’ பெயரே வித்தியாசமாக இருக்கிறதே! மற்கலி என்றால் என்ன அர்த்தம் அக்கா?”

“வட நாட்டில் இரந்துண்டு வாழும் மக்கள் கூட்டத்திற்கு மக்கலி எனப் பெயர். அக்கூட்டத்தைச் சேர்ந்தவர் எனக் கருதுவதால் இவரை மக்கலி புத்த என அழைப்பர். சிலர் மக்கலி என்பது அவரது தந்தையின் பெயர் எனவும் கருதுவர்”

“பெயர் இருக்கட்டும் அக்கா. இவர்கள் பார்ப்பதற்கு ஆருகத மதத்தாரின் திகம்பரர்கள் போன்று காணப்படுகிறார்களே! ஏன் அக்கா?”

“இந்த மற்கலியும் ஆருகத மதத்தை உண்டாக்கிய மகாவீரரும் ஒரே காலத்தவர். மகாவீரர் சமண அதாவது ஆருகதக் கொள்கையை உலகத்தார்க்குப் போதித்த காலத்தில் மற்கலியும் சில காலம் அவரது சீடராக இருந்தார். பிறகு மற்கலி மகாவீரரின் கருத்துகளிலிருந்து மாறுபட்டுத் தாம் உணர்ந்தவற்றிலிருந்து புது மதத்தை உருவாக்கிப் போதித்தார். அது ஆசிவகம் எனப்பட்டது. வடக்கில் அதன் செல்வாக்கு அதிகம். ஆனால் இங்கு அதன் செல்வாக்கு குறிப்பிடும்படி இல்லை” என்றாள் வானவல்லி.

“மகாவீரரின் சீடராகச் சில காலம் மற்கலி தங்கியிருந்ததால் சில கொள்கைகளில் ஒற்றுமை கொண்டு இருவரும் ஒரே மாதிரி தோற்றமளிக்கின்றனர். அப்படித்தானே?”

“அப்படித்தான் மரகதவல்லி.”

“அவர் என்னைப் பார்த்து தூய வெண்மைப் பிறப்பு என்றாரே அது ஏன் அக்கா?”

“அதுவா! அவர்களின் கருத்துப்படி எண்பத்து நான்கு மகா இலட்ச கல்ப காலம் வரையில் உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறந்திறந்து உழலும். அந்தக் காலம் முடிந்த பிறகுதான் அவர்களால் வீடுபேறடைய முடியும் என நம்புவர். அக்கொள்கையின்படி உயிர்கள் கருமை, நீலம், செம்மை, பொன்மை, வெண்மை, தூய வெண்மை என்னும் ஆறுவகைப் பிறப்பு உண்டென்பதும் அதில் தூய வெண்மைப் பிறப்புதான் மிக மிக உயர்ந்த பிறப்பு என்பர். இந்தத் தூய வெண்மைப் பிறப்பினை அடைந்தவர் தான் வீடுபேறடைய இயலும். நீ தூய வெண்மைப் பிறப்பு என அவர் நம்புவதனால் தான் உன்னை மணப்பவன் இமயம் வரை வெற்றிக் கொடியை நாட்டுவான் எனவும் கூறினார். அவர் பெரும் மகான். அவர் எப்படியோ உன்னை அடையாளம் கண்டுவிட்டார்” என மகிழ்ச்சியுடன் கூறி மௌனமானாள் வானவல்லி.

“அக்கா! இதில் எனக்கு நம்பிக்கையில்லை.”

“எதில்?”

“ஆசிவக மதக் கொள்கையில் தான்!”

“ஏன்?”

“எண்பத்து நான்கு இலட்ச மகா கல்ப ஆண்டுகள் வரை உயிர்கள் மோட்சமடையாமல் பிறந்து இறந்து உழன்றே ஆக வேண்டும் என்பதில் தான்! நாம் செய்யும் நன்மை, தீமை, பாவம், புண்ணியம் இவைகளைக் கொண்டுதானே நாம் வீடுபேறடைய இயலும்?”

“ஆதலால் தான் அவர்களின் மதம் செல்வாக்குப் பெறாமல் தாழ்ந்து இருக்கிறது. இருந்தாலும், நீ கூறும் மறுப்பிற்கு அவர்கள் தகுந்த விளக்கம் வைத்துள்ளனர் மரகதவல்லி. அதாவது ஒரு நூலுருண்டையைப் பிரித்தால், நூல் எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவு தான் அது நீளும். அதற்கு அதிகமாகவோ குறைவாகவோ நீளாது! அதைப்போலவே உயிர்களும் மேற்சொன்ன நியதிக்குக் கட்டுப்பட்டே நடக்கும். நல்லறிவு பெற்று நற்செயல்களைச் செய்பவன் விரைவில் வீடு பெறான். அவனுக்கு நியமிக்கப்பட்ட காலம் வரை அவன் பிறந்து, இறந்து மீண்டும் மீண்டும் பிறந்து இறந்து உழன்றே ஆக வேண்டும். இது அவர்களின் கொள்கை. நம்பிக்கை”

“இதைத் தாங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?”

“நான் ஏற்றுக்கொண்டால் என்ன ஏற்காவிட்டால் என்ன! அனைத்து மதக் கொள்கைகளையும் நான் மதிப்பவள். அதைப்போலவே இந்த மதத்தையும் மதித்து அறிந்துகொண்டேன்.”

“அக்கா, இதனை எங்குக் கற்றீர்கள்!”

“அவர்களின் மதக் கொள்கைகளை விளக்கும் நூலிற்கு ‘நவகதிர்’ [4] எனப்பெயர். அதைப்படித்துத் தான் தெரிந்துகொண்டேன்.”

“அக்கா! இன்னொரு கேள்வி?”

“உன்னைக் கதையும் கேள்வியையும் கேட்க விட்டால் பொழுது போவது கூடத் தெரியாமல் கேட்டுக்கொண்டு இருப்பாய்! பேசியபடியே நீண்ட தூரம் வந்துவிட்டோம். வா, திரும்பிச் செல்வோம்” எனக் கூறி வானவல்லி மரகதவல்லியை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டாள்.

வீடு வந்ததும் இருவரும் காவிரிப் புனலில் நீராடிவிட்டு, பட்டினத்தின் மையத்தில் இருந்த முருகன் கோயிலுக்குச் சென்று விளக்கேற்றி வழிபட்டனர். இரவில் அங்குக் கூத்துக் கட்டவும் ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள்.

அதைக்கண்ட வானவல்லிக்குக் கூத்தினைக் காண ஆர்வம் தலைதூக்கியது. தன் விருப்பத்தை மரகதவல்லியிடம் கூற அதற்கு அவள், ‘‘அக்கா! ஆசிவகத் துறவியைச் சந்தித்ததிலிருந்து மனம் சங்கடத்தில் தவிக்கிறது. தாங்கள் வேண்டுமானால் பார்த்துவிட்டு வாருங்கள். நான் வீட்டில் தங்களுக்குக் காத்திருக்கிறேன்’’ என்றாள். வானவல்லியின் மனமும் சங்கடத்தில் இருந்ததால் அவளுக்குத் தனிமை தேவையாகயிருந்தது. ஆதலால் மரகதவல்லியை மட்டும் அனுப்பிவைத்துவிட்டு அவள் கோயிலிலேயே தங்கிவிட்டாள். சற்று நேரத்திற்கெல்லாம் பொழுது சாய்ந்தது. கூத்தும் ஆரம்பமானது. வானவல்லி தன் மனத் துயரை மறந்துவிட்டு கூத்தினைக்கண்டு களிக்கத் தொடங்கினாள்.

வீடு வந்து சேர்ந்த பிறகு தனிமையில் இருந்த மரகதவல்லியின் மனதில் இருந்த மனக் குழப்பங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக வெளிப்படத் தொடங்கின. அவளுக்குப் பொழுதே நகரவில்லை. அக்காவோடு அங்கேயே இருந்திருக்கலாமோ? எனக் கூட எண்ணினாள். வானவல்லியும் மரகதவல்லியும் இணை பிரியா தோழிகள். மரகதவல்லி இளையவள். இருந்தும் தனது மனதில் உள்ள அனைத்து அந்தரங்க செய்திகளையும் முதலில் அவள் பகிர்ந்துகொள்வது இவளிடமாகத்தான் இருக்கும். அப்படியிருக்கக் கடந்த சில தினங்களாகத் தனது தோழி வானவல்லி தன்னிடம் எதையும் வெளிப்படுத்தாமல் மனவருத்தத்தில் தவித்துக்கொண்டிருந்தது இவளுக்கும் கவலையை அளித்தது. ஆனால், அவளது மனக் கவலை இன்னதாகத்தான் இருக்கும் என ஊகித்திருந்தாள்.

அக்கால மக்களின் வாழ்வியல் ஒழுக்கம் ஒருவிதமாகவும் அரசர்களின் ஒழுக்கம் மற்றொருவிதமாகவும் இருந்தது. மக்கள் ஒருவனுக்கு ஒருத்தி என வாழ்வார்கள். ஆனால் அரசர்கள் மட்டும் அரசினை பலப்படுத்திக்கொள்ளப் பல சிற்றரசர்களின் மகள்களை மணந்து கொள்வார்கள். இவளால் தனது ஆடவனை அப்படி நினைத்துக் கூடப் பார்க்க இயலவில்லை. தனது கணவன் தனக்கு மட்டுமே உடையவன் என எண்ணுபவள். ஆதலால் ஆசிவகத் துறவி கூறியதைக் கேட்டு மனங்கலங்கியிருந்தாள்.

அவர், ‘இமயம் வரை வெற்றிக்கொடி நாட்டுவான்’ என ஏன் கூறியிருப்பார். மறைமுகமாக வேறு பொருள் ஏதேனும் இருக்குமா? எனவும் ஆராயத்தொடங்கினாள். எதுவுமே அவளுக்குத் தோன்றவில்லை. ஆசிவகர் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றாக மறைந்து அவள் தனது எதிர்காலக் கணவனை எண்ணி விழித்துக்கொண்டே கனவு காணத் தொடங்கினாள்.

கண்ணில் காட்சிகள் படர்ந்தன. மனதில் இருந்த கவலைகள் அனைத்தும் மறைந்து இனம்புரியாத மகிழ்ச்சி கரைபுரளத் தொடங்கியது. உடலில் ஆங்காங்கே பரவசம் கிளர்ந்தெழத் தொடங்கியது. அவளது மனதில் தோன்றிய மகிழ்ச்சியும், உடலில் தோன்றிய பரவசமும் இணைந்து அவளது முகத்தில் பலவித பாவனைகளாக வெளிப்பட்டுக்கொண்டிருந்தன. அவளது இல்லத்தில் அவள் மட்டும் தனிமையில் இருந்ததனால் விலகியிருந்த அவளது ஆடையைப் பற்றிக் கூடப் பொருட்படுத்தாமல் மெத்தையில் தலையணையில் படுத்துக்கொண்டு ஒரு கால் மேல் மற்றொரு காலினைப் போட்டுப் பிண்ணியபடி படுத்திருந்தாள். அவள் படுத்திருந்த விதமானது வளைந்த, நெளிந்த அவளது உடற்பரிமாணத்தைச் சிறப்பாக எடுத்துக்காட்டியது. பேரழகியாகக் காட்சியளித்தாள். அந்த அறையில் ஒரு சிறு விளக்கு மட்டுமே எரிந்து கொஞ்சம் கொஞ்சமாக வெளிச்சத்தை உமிழ்ந்துகொண்டிருந்தது. அந்தச் சிறு வெளிச்சம் அவளது அழகினைத் தீண்ட முயற்சித்துக்கொண்டிருந்த இருளை விரட்ட கடும் சிரமப்பட்டது.

பேரழகியான மரகதவல்லி அக்கா விரைவினில் வந்துவிடுவாள் என எண்ணி கதவினைக் கூடத் தாழிடாமல் உறங்காமல் படுத்துக்கிடந்தாள். இரவு சாமம் இரண்டினைக் கடந்துகொண்டிருந்தாலும் அவளுக்கு உறக்கம் இன்னும் வந்தபாடில்லை. ‘தன்னை மணந்து ஆளப்போகிறவனை என்றுதான் நான் சந்திக்கப் போகிறேனோ?’ என எண்ணி அந்த இரவினில் தவித்துக்கொண்டிருந்தாள். என்னை இங்குத் தனிமையில் தவிக்கவைத்துவிட்டு அவன் மட்டும் அங்கு மகிழ்ச்சியாக எப்படித்தான் இருக்கிறானோ? என எண்ணிக்கொண்டிருந்த வேளையில் கதவு தட்டும் சத்தம் கேட்டு அவளது கனவிலிருந்து விடுபட்டாள்.. பஞ்சு மெத்தையிலிருந்து எழுந்தவள் விலகியிருந்த தனது துணியைச் சரிசெய்து கொண்டு அக்காதான் வந்துவிட்டார் என எண்ணிக்கொண்டு முன் கதவை நோக்கிச் சென்றாள்.

முன் கதவு தாழிடாமலே இருக்கச் சத்தம் தாழிட்ட பின் கதவிலிருந்து வந்தது. ‘அக்கா வந்திருந்தால் முன் கதவு வழியாகத்தானே வருவார். இந்த நள்ளிரவில் கதவைத் தட்டுவது யாராக இருப்பார்கள்?’ என எண்ணிக்கொண்டு கதவைத் திறக்கச் சென்றாள். மீண்டும் கதவு படபடவென தட்டப்பட்டது! அச்சத்தத்தைக் கேட்டு திடுக்கிட்டவள் ஒரு கணம் அச்சத்துடனே சிந்திக்கலானாள்.

காலையில் தான் உறைந்தை வீரர்கள் மரகதவல்லியின் தந்தையைத் தேடிவிட்டுச் சென்றிருந்தனர். அவர்கள் தான் ஒருவேளை மீண்டும் வந்திருக்கிறார்களா? இந்த நேரத்தில் அவர்கள் ஏன் வரப்போகிறார்கள்? என எண்ணியவள் சுவற்றில் வைத்திருந்த குறுவாளை எடுத்து மடியில் மறைத்துக்கொண்டு பதற்றத்துடனே தாழினை நீக்கிக் கதவினைத் திறந்தவள் அக்கணம் அதிர்ச்சியடைந்து சிலையானாள்.

**அடிக்குறிப்பு**

1. நெல்லொடு வந்த வல் வாய்ப் பஃறி. பட்டினப்பாலை வரி : 30. (பஃறி —படகு)
2. புரையா வரிகிற் புகழ்பூ ரணனே. நீலகேசி: ஆசிவக வாத சுருக்கம். செய்யுள் 15. வரி: 4.
3. நவகதிர் என்பது ஆசிவக மதத்தாரின் கொள்கையை விளக்கிக் கூறும் மறை நூல். ஆதித்தியம் என்ற நூலும் இவர்களின் மத நூலே! ஆசிவகம் என்ற மதத்தின் சுவடே இப்போது தமிழகத்தில் கிடையாது. பௌத்தம் போன்றே தமிழகத்தில் ஆசிவகமும் இறந்துவிட்ட மதம். ஆருகதராவது (சமணர்) தமிழகத்தில் எஞ்சி வாழ்கின்றனர். ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற கணியன் பூங்குன்றனாரின் புகழ் பெற்ற பாடலும் ஆசிவகக் கொள்கைப் பாடல் தான். இப்பாடலிலிருந்து நாம் ஆசிவகத்தின் மதக் கொள்கையை அறியலாம்!

# 33. மா டு மேய்த்தவன் செய்த வம்பு

கொங்கு நாட்டிற்கு அப்பால் பெய்த கோடை பெரு மழையினால் சோழ நாட்டில் பாய்ந்த காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்து கரைபுரண்டு ஓடியது. புனல் பிரவாகத்தில் இளவலுடன் குதித்துவிட்ட விறல்வேல் கடுமையாகப் போராடினான். அவன் எண்ணியதைவிடப் புனலின் வேகம் அதிகமாக இருந்து அவனையும் இளவலோடு சேர்த்து அடித்துக்கொண்டு சென்றது. காவிரி வெள்ளத்திலேயே சிறிது தூரம் சென்றபிறகு நீரோட்டத்தின் போக்கினைக் கவனித்து இளவலுடன் கரையை நோக்கி நீந்தலானான். கரையில் வளர்ந்திருந்த நாணல் புல்லைப் பிடித்துக் கரையேறி இளவலைக் கல்லின் மீது படுக்க வைத்துவிட்டு அவனும் அருகில் அமர்ந்தான்.

இளவலின் தலையைத் துவட்டிய விறல்வேல் “இளவரசே! இன்னும் சற்றுத் தொலைவு காவிரிக் கரையோரமாகச் சென்றால் நமக்கு வேண்டிய உதவி கிடைத்துவிடும். வாருங்கள் புறப்படுவோம்!” என அழைத்தான்.

“தலைவரே சற்று ஓய்வேடுத்துவிட்டுக் கிளம்புவோமே!” எனக் கூறி இளவல் எழுந்து அமர்ந்தார். இளவலின் அடுத்தக் கட்டளையை எதிர்பார்த்தபடியே பணிவுடன் அமர்ந்திருந்தான் உபதலைவன்.

இருவருக்குமிடையில் அங்குச் சிறிது நேரம் அமைதி நிலவியது. இளவல் தான் அதனை உடைத்து முதலில் பேசலானார். “தலைவரே! நான் அந்த வசந்த மாளிகையில் தான் சிறைவைக்கப்பட்டிருக்கிறேன் என்பதை எப்படி கண்டறிந்தீர்கள்?” என ஆச்சர்யத்தோடு வினவினார்.

“செம்பியன் கோட்ட சுரங்கப் பாதை வழியாக அரண்மனைக்குள் புகுந்து இருங்கோவைச் சந்தித்து எச்சரித்தேன். எனது மிரட்டலுக்குப் பயந்தே அவர் உங்களைக் கொல்லக் கட்டளையிட்டார். அவர்களைப் பின்தொடர்ந்தேன் அதன் பிறகே உங்களைச் சந்திக்க முடிந்தது” என்றான்.

பின்னர் ‘‘அத்தனை பேர் உங்களைத் தாக்கிக்கொண்டிருக்க எப்படி இளவரசே என்னை மட்டும் தனியாக அடையாளம் கண்டுகொண்டீர்கள்?’’ எனப் பெரும் திகைப்போடு கேட்டான்.

அதற்கு இளவல், ‘‘உப தலைவரே! சோழ நாட்டின் மிகச் சிறந்த திறமையும், பெரும் வீரமும் கொண்டவரை நான் அறிந்திராவிட்டால் இளவரசன் என நான் எதற்கு?’’ எனப் பதில் கேள்வி எழுப்பினார்.

அவர் கூறியதைக் கேட்டு திகைப்பையும், பெருமையையும் அதே நேரம் பெரும் மகிழ்ச்சியையும் அடைந்தான் விறல்வேல். பதிலுக்கு என்ன பேசுவது எனத் தெரியாமல் அமைதியையே கடைபிடித்தான்.

‘‘உப தலைவரே! கடந்த சில நாட்களாகவே மாளிகையைக் காவல் காத்தவர்கள் தினமும் உங்களைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு நாளும் புதுப்புது செய்திகள் எனது காதுகளுக்கு விழுந்துகொண்டே இருக்கும். புகார் வந்த உறைந்தைப் படைத் தலைவனை நையப் புடைத்து அனுப்பிவிட்டீர்களாமே? மதுவைப் பருகிக் கொண்டு சத்தமிட்டுப் பேசுவர். அறையினுள் சிறைபட்டபடியே அனைத்தையும் கேட்பேன். தப்பிக்கத் தகுந்த சமயம் பார்த்துக்கொண்டிருந்தேன். ஆனால் கிடைக்கவில்லை. நிச்சயம் தாங்கள் என்னைக் காக்க வருவீர்கள் என நம்பிக்கொண்டிருந்தேன். என் நம்பிக்கை வீண்போகவில்லை’’ எனக் கூறி விறல்வேலைப் புகழ்ந்து பாராட்டினார்.

இளவரசன் கூறியதைக் கேட்டுத் திக்பிரமை பிடித்தது போலவே காணப்பட்டான் விறல்வேல். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஏனெனில் பல ஆண்டுகளாக விறல்வேல் கோட்டைத் தலைவனாக இருந்த போது ஒரே ஒரு முறைதான் இளவலைச் சந்தித்திருக்கிறான். அதுவும் இரவு நேரச் சந்திப்பு. புகார் சென்ற பிறகு இளவலின் முகத் தோற்றத்தையே இவன் மறந்துவிட்டான். ஆனால் இளவரசன் இவனையும் இவனது திறமையையும் அறிந்து பாராட்டியதால் இவனது மனதில் மகிழ்ச்சியும், ஆனந்தமும் பெருகியது. இந்த முறையும் இவனது அமைதியைக் குலைத்த இளவல் ‘‘தலைவரே, நான் கூறியதைக் கேட்டதற்கே அதிர்ச்சியடைந்து விட்டீர்கள்

போலிருக்கிறது? இன்னும் கேளுங்கள்!" எனக் கூறி விறல்வேலின் ஆவலையும் தூண்டினார்.

"இதற்கு மேல் ஆச்சர்யப்பட என்ன இளவரசே இருக்கிறது?"

"நான் உங்களை கடைசியாக எப்போது எங்கு சந்தித்தேன் எனத் தெரியுமா?"

"பல வருடங்களுக்கு முன் உறைந்தைக் கோட்டைத் தலைவனாக இரவு பணியில் இருக்கும்போது மதிலுக்கு அருகில் என்னைச் சந்தித்தீர்கள்" எனக்கூறி அனைத்தையும் நினைவுகூர்ந்து கொண்டான்.

"இல்லை தலைவரே! நான் உங்களை சில வருடங்களுக்கு முன் புகாரின் சம்பாபதி வனத்தில் காவிரிக் கரையோரமாக சந்தித்தேன். சந்தித்ததோடு மட்டுமல்லாமல் வாற்சமரும் புரிந்திருக்கிறேன்" என இளவல் கூறிக்கொண்டிருந்த போதே குறுக்கிட்ட விறல்வேல், "அதற்கு வாய்ப்பே இல்லை இளவரசே!" என்றான்.

"எதற்கு?"

"தாங்கள் என்னுடன் வாற்சமர் புரிந்ததாகக் கூறுவதற்குத் தான்!" எனத் திடமாகப் பதில் வந்தது விறல்வேலிடமிருந்து.

"அப்படியானால் நான் சில நிகழ்வுகளைக் கூறுகிறேன். அது உண்மையில் நடந்ததா அல்லது வெறும் கற்பனை தானா?" எனத் தாங்களே கூறுங்கள்.

"கூறுங்கள் இளவரசே!"

"கிட்டத்தட்ட இரு வருடத்திற்கு முன் சரியாக இந்திரத் திருவிழா ஆரம்பிக்க இரண்டு திங்களுக்கு முன் தாங்களும் தங்களது உப தளபதி யவனரான டாள்தொபியாசும் சம்பாபதி வனப்பகுதியில் நடந்து கொண்டிருக்கும்போது வழிவிடாமல் வம்பு செய்த மாடு மேய்த்த இளைஞனைத் தங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?" என வினவினார்.

"ஆமாம் இளவரசே! நன்றாக நினைவில் உள்ளது!" எனக் கூறியபடியே அவனது நினைவினை இரண்டு வருடம் பின்னோக்கி

நகர்த்தினான்.

புகாரில் சம்பாபதி வனத்தில் காவிரி ஆற்றின் பக்கமாகப் புதர்கள் மண்டிக்கிடக்கும். அவ்விடத்தில் பாதை மிகவும் குறுகலாகக் காணப்படும். அப்பாதை வழியாக யாராவது ஒருவர் தான் பயணிக்க இயலும். உப தலைவனும், டாள்தொபியாசும் பேசிக்கொண்டே புரவியில் வந்தபோது நான்கைந்து மாடுகள் அவ்விடத்தில் புதரை மேய்ந்துகொண்டிருப்பதைப் பார்த்து இருவரும் மாடு நகர்ந்தபின் அவ்வழியாகச் செல்லலாம் எனக் காத்து நின்றனர். மாடுகள் நகர்வதாகத் தெரியவில்லை. அப்புறம் தான் உற்றுப் பார்த்தால் மாடுகள் அனைத்தும் கொடிகளால் புதரில் கட்டப்பட்டிருந்தன.

மாடு கட்டப்பட்டிருப்பதால் அவை சிக்கிக் கொள்கின்றனவா எனப் பார்த்துக்கொண்டு மேய்ப்பவனும் அங்குதான் நிச்சயம் இருப்பான் எனத் தெரிந்து இருவரும் சுற்றும் முற்றும் தேடினர். அங்கு யாரையுமே காணவில்லை.

‘‘நான் சென்று மாட்டை அவிழ்க்கிறேன். பிறகு இருவரும் செல்லலாம்!’’ என்றபடியே கீழே இறங்கினான் டாள்தொபியாஸ். அவன் மாடுகளின் அருகில் சென்றபோது கைதட்டும் குரல் கேட்க இருவரும் மேலே பார்த்தனர். மரத்தில் ஒருவன் புதரில் காய்த்திருந்த விலாங்காயை உப்பில் தொட்டு தின்றபடியே அமர்ந்திருந்தான்.

அவனைக் கண்ட டாள்தொபியாஸ் அவன் தான் மாடுகளுக்கு உரியவனாக இருப்பான் என எண்ணி, ‘‘மாட்டை அவிழ்க்கிறாயா? நாங்கள் செல்ல வேண்டும்’’ என்றான்.

‘‘மாட்டை அவிழ்க்காவிட்டால் என்ன செய்வதாய் உத்தேசம்?’’ என ஒருமையில் அவனிடமிருந்து பதில் வந்தது.

‘‘நீ அவிழ்க்காவிட்டால் நான் அவிழ்த்துவிடுகிறேன!’’ என்றான் டாள்தொபியாஸ்.

‘‘முடிந்தால் மாட்டின் அருகில் சென்று பாருங்கள்!’’ என மீண்டும் அவனிடமிருந்து எகத்தாளத்துடனும், திமிருடனும் பதில் வந்தது.

இவனிடம் எதற்கு வீண் பேச்சு என நினைத்தபடியே மாட்டினை நோக்கி நடந்தான் டாள்தொபியாஸ். அவனுக்கு முன்னால் ஒரு நீண்ட விறகு வெட்டும் அரிவாள் ஒன்று விழுந்து மண்ணில் குத்திட்டு நின்றது.

‘‘யவனரே! எனது மாட்டை நோக்கி தாங்கள் இன்னும் ஒரு அடி முன்வைத்தால் இதோ இந்தப் புள் அறுக்கும் அரிவாள் உங்கள் மார்பினில் பாய்ச்சப்படும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்’’ எனக் கூறியபடியே மரத்திலிருந்து அவன் கீழே குதித்தான்.

அவனது செய்கைகளைக் கண்டு கடும் சினம் கொண்ட டாள்தொபியாஸ், ‘‘தம்பி வழி விடு. இல்லையேல்...!’’ என்றபடியே வாக்கியத்தை முடித்தான்.

‘‘இந்தப் பாதை உங்களுக்கு மட்டும் உரியது அல்ல. எனக்கும் உரியதுதான்! வழி விட இயலாது யவனரே! உங்களால் முடிந்ததைப் பார்த்துக் கொள்ளுங்கள்!’’ என டாள்தொபியாசை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் கூறினான்.

அவன் கூறியதைக் கேட்டு தனது வாளினை நோக்கி தனது கைகளைக் கொண்டு சென்றான் டாள்தொபியாஸ். இதுவரை நடந்ததை அமைதியுடன் பார்த்துக்கொண்டிருந்த விறல்வேல் நடக்கப்போகும் விபரீதத்தை உணர்ந்து, ‘‘நில் டாள்தொபியாஸ்!’’ என்றபடியே புரவியிலிருந்து கீழே குதித்து அவர்களிடம் வந்தான்.

வந்தவன் மாடு மேய்ப்பவனைப் பார்த்து, ‘‘தம்பி! நாங்கள் உம்மோடு இங்கு மல்லுக்கு வரவில்லை. சுற்றிச் சென்றால் நாழி ஆகும். வழிவிட்டால் எங்கள் பாட்டிற்கு நாங்கள் செல்வோம்!’’ எனப் பணிவுடன் கூறலானான்.

விறல்வேலை ஏற்கெனவே அறிந்து வைத்திருந்த அவன், ‘‘ஆனால், எனக்கு உங்களோடு மல்லுக் கட்டவேண்டும் என்ற எண்ணம் உள்ளது உப தலைவரே!. யவனத் தளபதிக்கு மாடு மேய்ப்பவன் என்றால் இளக்காரம் போல! நம் நாட்டு மாடு மேய்ப்பவனின் வீரத்தையும் இவர் பார்க்கட்டுமே!’’ என மீண்டும் அவமதித்து வீண் வம்பிற்கு அவர்களை இழுத்தான்.

இவனை மிரட்டி இவனுக்குப் புத்தி கற்பித்தே ஆகவேண்டும் என எண்ணிய டாள்தொபியாஸ் அவனை நோக்கித் தனது வாளை உருவி ஓங்கினான். மாடு மேய்ப்பவனைத் தாக்க வேண்டும் அல்லது அவனுக்குச் சரி நிகராகப் போர் புரிய வேண்டும் என அவன் நினைத்திருக்கவில்லை. ஆனால் மாடு மேய்ப்பவன் இவனைக் கோபப்படுத்தவே ஆத்திரத்தில் வாளை ஓங்கிவிட்டான் டாள்தொபியாஸ்.

டாள்தொபியாசைக் கண்டு எந்த அச்சமும் கொள்ளாத அந்த மாடு மேய்த்த இளைஞன் தனது சாட்டைக் கயிறை வீசினான். அது டாள்தொபியாசின் கைகளை நன்கு சுற்றிக்கொண்டது. சாட்டையை இழுத்தான். சாட்டைக் கயிறு இறுகியது. சாட்டைக் கயிற்றின் நுனியில் சிக்கியிருந்த முள் டாள்தொபியாசின் கையைப் பதம் பார்த்தது. மேலும் சாட்டையை இழுத்தான். முள் கை நரம்பில் குத்த, வலி பொறுக்கமாட்டாமல் துடித்தான். தனது புள் அறுக்கும் கருக்கு அரிவாளை எடுத்து இடது கையால் வாளினைத் தடுத்து வலது கையால் சாட்டையை இறுக்கினான். கருக்கரிவாள் பின்னேயும், சாட்டை முன்னேயும் இழுக்க வாளின் பிடியை இழந்தான் டாள்தொபியாஸ். அவனது கைகளிலிருந்து வாள் நழுவி கீழே விழ, அதனை அவன் காலால் எத்த வாள் மேலே வந்தது. உடனே அவன் தன் சாட்டைக் கயிறை டாள்தொபியாசின் கைகளிலிருந்து விடுவித்து வாளினை நோக்கி எறிந்து இழுத்தான். அவ்வளவுதான். கரகரவென்று சாட்டையினால் சுழன்ற வாள் அடுத்த கணம் மாடு மேய்த்தவனின் கைகளில் தஞ்சமடைந்திருந்தது.

டாள்தொபியாஸ் கண நேரத்தில் மிரண்டுவிட்டான். மாடு மேய்ப்பவனிடம் அவன் இவ்வளவு திறமையை எதிர்பார்த்திருக்கவில்லை. வெறும் சாட்டையைக் கொண்டு தன்னைத் தோற்கடித்தவனைக் கண்டு அவன் பிரமிப்பில் ஆழ்ந்திருந்தான். மேலும் அவன் கீழே விழுந்த வாளைத் தனது கால்களால் உதைத்தபோது அவனது கால்விரல்கள் நிச்சயம் துண்டாகிவிடும் என்றே டாள்தொபியாஸ் பயந்தான். ஏனெனில் டாள்தொபியாசின் வாள் இருபுறமும் கூர்மையானவை. உதைத்தபோது வாளின் எந்தப்புறத்தில் அவன் கால் பட்டிருந்தாலும் விரல்கள் துண்டாகியிருக்கும். வாளின் கூர்மையில்லாத சமதளத்தில் காலால் உதைத்து எத்தியிருந்தான் அந்த மாடு மேய்க்கும் இளைஞன். இது சாதாரணக் காரியம் அல்ல.

பல வருட பயிற்சியும், மனக் கூர்மையும், உடல் வலிமையும் ஒருங்கே பெற்றிருந்தால் மட்டுமே இச்செயல் சாத்தியமாகும். மாடு மேய்ப்பவனின் இச்செயலைக் கண்டு இருவருமே திகைத்து நின்றனர்.

கண நேரத்தில் டாள்தொபியாசின் வாளினைக் கைப்பற்றிக்கொண்ட அந்த மாடு மேய்க்கும் இளைஞன், வாளினைத் தனது கைகளில் ஏந்தி வீசிப்பார்த்து, ‘‘யவனத் தளபதியாரே! உங்கள் வாளில் இருக்கும் உறுதி தங்களது கைகளில் இல்லையே!’’ எனக் கூறி அவனைப் பரிகாசமும் செய்யலானான்.

அவன் அத்தோடு நில்லாமல் விறல்வேலிடம் சென்று, ‘‘யாராலும் வீழ்த்த இயலாத மாபெரும் வீரர், செங்குவீரர் எனத் உங்களைத் தானே புகழ்கின்றனர். உங்களுடன் சமர் செய்து எனது வாள் வீசும் திறமையைச் சோதனை செய்ய வேண்டும். வாருங்கள் போர் புரிவோம்’’ என அவனைப் போருக்கு அழைத்து அறைகூவல் விடுத்தான்.

வீரமுள்ள யாரிடமும் சமர் செய்வதைப் பெருமையாகவே கொள்ளும் விறல்வேல் அவனுடன் திறந்த வெளியில் வாற்சமர் புரிய ஒப்புக்கொண்டான்.

திறந்த வெளியில் துவந்த யுத்தம் இருவருக்குமிடையில் தொடங்கியது. விறல்வேல் வீசிய அனைத்து வாள் வீச்சுகளையும் அவன் திறம்படவே சமாளித்தான். சமாளித்ததோடு மட்டுமல்லாமல் வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் விறல்வேலின் வாளையும் தட்டிவிட முயன்றான். அவனது வாள் வீச்சுகளை எதிர்கொண்ட போதெல்லாம் விறல்வேலுக்குத் தனது நண்பன் திவ்யனின் நினைவு தான் வந்து சென்றது. ஏனெனில் திவ்யன் வாள் வீசும் முறையும், இவன் வாள் வீசும் முறையும் ஒத்திருந்தது. திவ்யனின் ஆசிரியரும், இவனது ஆசிரியரும் நிச்சயம் ஒருவராகத்தான் இருப்பார்கள் எனத் தீர்மானித்தான். அல்லது திவ்யன் தான் இவனுக்கு வாள் வீசும் பயிற்சியை அளித்திருக்க வேண்டும் எனவும் முடிவு செய்தான். விறல்வேல் மட்டுமே அறிந்த சில இரகசிய வாள் வீச்சையும் அவனிடம் பிரயோகித்துப் பார்த்தான். அதையும் அவன் திடமாக எதிர்கொண்டான். அவனிடம் எடுபடவில்லை. திவ்யனின் நினைப்பு மனதில் மேலோங்க உடனே சமர் செய்வதை நிறுத்திய

விறல்வேல் வாளினைத் தனது உறையில் போட்டபடி, “நீ யார்? உனக்கும் எனது நண்பன் திவ்யனுக்கும் என்ன தொடர்பு?” என வினவினான்.

திவ்யனது நினைவு வந்ததும், துயரம் இவனைச் சூழ்ந்துகொண்டது. ஆதலால் தான் விறல்வேல் சமர் செய்ததை நிறுத்திவிட்டான். திவ்யன் தான் இவனுக்கு வாள் வித்தையைக் கற்றுக்கொடுத்தவனாக இருக்கவேண்டும் எனவும் உறுதியாகத் தீர்மானித்துக்கொண்டான்.

“உப தலைவரே! உங்களிடம் எனது வாள் திறமையைச் சோதிக்க வேண்டும் என்பது எனது பல நாள் ஆசை. இன்று நிறைவேறிவிட்டது!” எனக் கூறியபடியே மாடுகளை அவிழ்த்துவிட்டவன் டாள்தொபியாசிடம் அவனது வாளினைக் கொடுத்துவிட்டு மன்னிப்பையும் கேட்டுவிட்டுப் புறப்பட்டான்.

“தம்பி! நான் கேட்ட கேள்விக்கு நீ இன்னும் பதில் கூற வில்லையே!” எனக் கேட்டான்.

“அதற்கு இப்போது எந்த அவசியமும் நேரவில்லை தலைவரே!” எனக் கூறிக்கொண்டு அவன் முன்னே செல்ல மாடுகள் அவனைப் பின் தொடர்ந்து சென்றன. புதரில் மறைந்துவிட்டான்.

அன்று முதல் வீழ்த்த இயலாத அந்த மாடு மேய்த்தவனைப் பல நாள் தேடிப்பார்த்தான் விறல்வேல். அந்தச் சமருக்குப் பின் அவனை இவனால் காணவே இயலவில்லை, தனது நண்பனது நினைவு விறல்வேலிற்கு எப்போது வருகிறதோ அப்போதெல்லாம் இந்த மாடு மேய்த்தவனைப் பற்றிய மர்மமும் மனதில் தலைதூக்கிவிடும்.

நடந்த நிகழ்வுகள் அனைத்தும் உப தலைவனின் மனக் கண்ணில் காட்சிகளாய் விரிய, “அப்படியானால் அந்த மாடு மேய்த்த இளைஞன்..........” என ஆச்சர்யத்தோடு வாக்கியத்தை முடிக்காமல் இழுத்தான்.

“ஆமாம், தலைவரே! அன்று தங்களை வீண் வம்புக்கு இழுத்தவன் அடியேன் தான்” என முகத்தில் புன்னகையுடன் கூறினார் இளவல்.

அவர் கூறியதைக் கேட்ட விறல்வேல் மகிழ்ச்சியையும், வருத்தத்தையும் ஒரே சேர அடைந்தான். வாள் சமரில் வீழ்த்த இயலாத வீரன்

தான்தான் என்ற பெரும் இறுமாப்புடன் இருந்தவன் விறல்வேல். மேலும் அவன் தான் ஒற்றர் பிரிவிரின் தலைவரும் ஆதலால் மாறு வேடம் பூணுவதிலும், மற்றவர்களை ஏமாற்றுவதிலும் தான்தான் வல்லவன் என எண்ணிக்கொண்டிருந்தான். தனக்கு அறியாமல் சுற்றி எந்த நாட்டிலும் எந்த நிகழ்வுகளும் நடக்காது என்ற பெரும் கர்வமும் அவனுக்கு இருந்தது. மாடு மேய்ப்பவன் போல வந்து தன்னை ஏமாற்றியது இளவல் தான் என எண்ணுகையில் அவன் பெரிதும் மகிழ்ச்சியடைந்தான்.

இரும்பிடர்த்தலையர் இளவலது மாறுவேடம் பூணும் திறமையைப் பற்றிக் கூறும்போதெல்லாம் அவன் ஆச்சர்யமடைவான். ஆனால் தானும் அவரால் ஏமாற்றப்பட்டிருப்போம் என அவன் கனவிலும் எண்ணிப் பார்த்திருக்கவில்லை. இளவல் வல்லவனுக்கெல்லாம் வல்லவர், வீரர்களுக்கெல்லாம் வீரர் என உணர்ந்துகொண்டான். இருப்பினும் இளவலது நேர்மை எந்த அளவிற்கு உள்ளது என அறிந்துகொண்டு விடவேண்டும் என எண்ணிய விறல்வேல், ‘‘இளவரசே! எனக்கு ஒரு திட்டம் உள்ளது. தாங்கள் அனுமதித்தால்.........’’ எனப் பாதியோடு நிறுத்தினான்.

‘‘கூறுங்கள் தலைவரே!’’

‘‘நான் இருங்கோ வேளை சந்தித்த இரகசியப் பாதை வழியே நம் சில தேர்ந்தெடுத்த வீரர்களுடன் இரவினில் அரண்மனைக்குள் பிரவேசித்தால் நாளை காலையே அரண்மனை நம் கைக்குள் வீழ்ந்துவிடும். இதைப் பற்றித் தங்கள் கருத்து என்ன? உத்தரவிடுங்கள்! மற்றதை நான் பார்த்துக்கொள்கிறேன்!’’ என வினவி தனது இடையுறையிலிருந்து வாளினையும் உருவி கைகளில் வைத்துக்கொண்டு இளவல் என்ன பதிலைக் கூறப்போகிறார் என அவரையே பார்த்துக்கொண்டிருந்தான்.

உப தலைவன் கூறியதைக் கேட்டு கடும் சினம் கொண்ட இளவல், ‘‘தலைவரே! எனக்குச் சரி நிகராக இருங்கோவேளை எப்போதும் ஒப்பிடத் துணியாதீர்கள். நான் சென்னியின் மைந்தன் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். எனது ஆசனத்தைக் கைப்பற்ற நான் நேருக்கு நேர் போர் புரிந்து உயிரை விட்டாலும் விடுவேனே தவிரக் குறுக்கு வழியில் கைக்கொள்ள ஒருநாளும் சம்மதியேன்! என்னிடம் தாங்கள் இக்கேள்வியைக்

கேட்டிருக்க வேண்டிய அவசியமில்லை உபதலைவரே!'' என வெகுண்டெழுந்தார் இளவல்.

அவர் கூறிய பதிலைக் கேட்டு பெரும் மகிழ்ச்சியும், திருப்தியும் கொண்ட விறல்வேல் வாளினை மீண்டும் உறைக்குள் போட்டுக்கொண்டான்.

விறல்வேல் வாளினை உருவியதையும், பின்னர்த் தனது உறைக்குள் போட்டுக் கொண்டதையும் கவனித்துவிட்ட இளவல், ''தலைவரே! தாங்கள் கூறிய திட்டத்தை நான் ஏற்றுக்கொண்டிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?'' என வினவினார்,

''சென்னிக்கு மகனும் பிறக்கவில்லை. சோழ நாட்டிற்கு இப்படியொரு நேர்மையற்ற இளவரசனும் தேவையில்லை என எண்ணி உருவிய வாளால் உங்கள் தலையைக் கொய்திருப்பேன்'' என இளவலின் விழிகளில் தனது பார்வையை நிலைக்கவிட்ட படியே கூறினான் உபதலைவன் விறல்வேல்.

அவன் கூறியதைக் கேட்டு எந்தவொரு கோபமும், வருத்தமும் கொள்ளாத இளவல் எழுந்து விறல்வேலின் தோள்களைப் பற்றியபடியே ஆவேசத்துடன், ''இப்படி நேர்மையும், துணிவும் கொண்ட வீரர்கள் தான் எனக்கு இப்போது துணையிருக்க வேண்டும் தலைவரே!'' என அவன் கூறிக் கொண்டிருந்தபோதே ''ஆ...'' என அலறித் துடித்துக் கீழே விழுந்தார்.

இளவல் அலறியதைக் கேட்டு பதறிய விறல்வேல் இளவலைத் தூக்கினான். ''தலைவரே! காயங்கள் ஈரமாக இருந்ததனால் இவ்வளவு நேரம் வலிக்கவில்லை. காற்றில் இப்போது உலர்ந்துவிட்டதனால் கால் எரிந்து, மார்பு குடைகிறது'' எனத் தடுமாறியபடியே கூறினார்.

இனியும் இங்கு இருப்பது இளவலுக்குப் பெரும் ஆபத்து என்பதை உணர்ந்த விறல்வேல் அவரைத் தாங்கி அழைத்துக்கொண்டு நடந்தான். சிறிது தூரம் நடந்தவுடன் இளவல் மயக்கமானார். உடனே அவரைத் தாங்கி அமர்த்திய விறல்வேல், மீண்டும் துணியைப் பொன்னி நதியில் நனைத்துத் தீப்புண்ணில் சுற்றிக்கொண்டு அவரைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு காவிரிக் கரையோரமிருந்த ஒற்றையடிப் பாதையில் நடக்கலானான். பின்னர் உள்புறம் தாழிடப்பட்டிருந்த கதவைத் தட்டினான்.

கதவு திறக்க தாமதமானதால் இளவலைத் தோளில் சுமந்தபடியே மீண்டும் கதவை வேகமாகத் தட்டினான். கதவினைத் திறந்த மரகதவல்லி அச்சப்பட்டு, பதற்றத்துடன் நிற்பதைக் கண்ட விறல்வேல், "மரகதவல்லி, நான் தான்!" எனக் கூறிக்கொண்டே வீட்டினுள் சென்றான்.

அடிபட்ட வீரன் ஒருவனைத் தோளில் சுமந்து வந்திருக்கும் உப தலைவனைக் கண்ட மரகதவல்லி உடனே வீட்டுக் கதவினைத் தாழிட்டாள்.

உள்ளே சென்ற விறல்வேல் வரகு வைக்கோலால் செய்யப்பட மெத்தையில் இளவலைக் கிடத்தி மரகதவல்லியிடம், "நம்பிக்கையான மருத்துவரை உடனே அழைத்து வா!" எனக் கட்டளையிட்டான்.

நிலைமையைப் புரிந்துகொண்ட மரகதவல்லி பக்கத்துத் தெருவில் வசிக்கும் மருத்துவரை அழைக்க வாசல் கதவைத் திறந்து வெளியே சென்றவள் வீதியில் சில உறைந்தை வீரர்கள் நடமாடிக்கொண்டிருப்பதைக் கவனித்துவிட்டாள். உடனே அவர்கள் பார்க்குமுன் வீட்டிற்குள் நுழைந்து கதவினைத் தாழிட்டவள், "அண்ணா, வெளியே காவலர்கள் பலர் நடமாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரம் வெளியே சென்றால் அவர்கள் என்னைக் கவனித்துவிடுவார்கள்" எனப் பதறினாள்.

அந்த நிலையில் இருவருமே செய்வதறியாது திகைத்தனர். இளவல் மயங்கிவிட்டார். அவருக்கு உடனே தகுந்த மருத்துவம் பார்த்தேயாக வேண்டும். இல்லையேல், தீயிலிருந்து தப்பித்தவர் அதன் காயத்தினாலேயே இறந்துவிடுவார். வெளியே சென்றால் வீரர்களால் ஆபத்து, உள்ளே இருந்தாலும் ஆபத்து. செய்வதறியாது இரு தலைக் கொல்லி எறும்பைப் போலத் துடித்தான் விறல்வேல்.

அந்த இக்கட்டான நேரத்திலும் அவனை அவனது துரதிஷ்டம் துரத்திக்கொண்டிருப்பதை அவன் அறிந்திருக்க வாய்ப்பில்லை. வைத்தியரை அழைத்துவரலாம் என வெளியே வந்த மரகதவல்லியை உறைந்தை வீரன் ஒருவன் கவனித்துவிட்டான். வேந்தன் தனது வீரர்களிடம் "காவிரிக் கரையோரம் உடனே தேடி யாராவது மறைந்திருந்தால் கைது செய்து இழுத்து வாருங்கள்" எனக் கட்டளையிட்டிருந்ததனால் வீரர்கள் காவிரிக் கரையோரம் தேடிக்கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவன் தான்

மரகதவல்லியைக் கவனித்துவிட்டான். தங்களைக் கண்டபின் அவள் உள்ளே சென்று தாழிட்டுக் கொண்டது அவர்களுக்குப் பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தியது. அவளை விசாரித்து, அவளது வீட்டைச் சோதனையிட வேண்டும் என எண்ணி மரகதவல்லியின் வீட்டுக் கதவைத் தட்டினார்கள்.

கதவு தட்டப்படுவதைக் கேட்ட மரகதவல்லியும், விறல்வேலும் அக்கணத்தில் என்ன செய்வதென்று அறியாமல் திகைக்கலானார்கள். என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும் என எண்ணிய விறல்வேல் தனது வாளினை உருவிக்கொண்டு வாசலை நோக்கி நடக்கலானான்.

# 34. நள ்ளிரவு வேளையில்

உறைந்தை வீரர்கள் வாயிற்கதவைத் தட்டும் சத்தத்தைக் கேட்ட உபதலைவன் விறல்வேல் ‘இனி இளவலுடன் தப்பிக்க முயன்றால் அது அவரது உயிர்க்கே ஆபத்தாகிவிடும். ஆக எதிர்த்து சண்டையிட்டுச் சத்தமில்லாமல் அவர்களைக் கொன்று மறைத்துவிடுவதே சாலச் சிறந்தது’ என எண்ணி வாளோடு அவர்களை நோக்கிச் சென்றான்.

அப்படிச் செல்வதன் விபரீத விளைவை உணர்ந்த மரகதவல்லி, ‘‘அண்ணா நில்லுங்கள்! அவர்களை நான் சமாளித்துக் கொள்கிறேன். நீங்கள் மறைந்திருங்கள்’’ எனக் கூறியவள் ஒரு துணியை எடுத்து மெத்தையில் படுக்கப் போட்டிருந்த இளவலின் மீது போர்த்துவிட்டுச் சென்று கதவினைத் திறந்தாள்.

வெளியே இரு காவலர்கள் நின்றுகொண்டிருந்தனர். அவர்களை நோக்கிய மரகதவல்லி ‘‘வீரர்களே! நள்ளிரவு முதல் சாமத்தில் கதவினைத் தட்டி இடையூறு செய்கிறீர்களே! தங்களுக்கு என்ன வேண்டும்?’’ எனக் கோபத்துடன் வினவினாள்.

‘‘எங்களைப் பார்த்ததும் ஏன் பெண்ணே ஓடி ஒளிந்து தாழிட்டாய்?’’ என்றான் ஒரு வீரன்.

‘‘உங்களைப் பார்த்தா தாழிட்டேன்?’’ சிரித்துக்கொண்டே கேட்டாள்.

‘‘ஆமாம்!’’

‘‘உங்களைப் பார்த்து நான் ஓடவில்லையே!’’

‘‘நீ கூறுவதை எங்களை நம்பச் சொல்கிறாயா?’’

‘‘உண்மையை யார் கூறினாலும் நம்பித்தானே ஆக வேண்டும்!’’

“அப்படியெனில் நாங்கள் கண்டது பொய்யா?”

“தாங்கள் என்ன கண்டீர்கள்?”

“சற்று முன் ஒரு பெண் அவசரமாக வெளியே வந்தது உண்மைதானே?”

“ஆமாம். உண்மை தான்!”

“எங்களைக் கண்டபின் அவள் உள்ளே சென்று தாழிட்டுக் கொண்டாள். இதுவும் உண்மைதானே?”

“ஆமாம் வீரரே! இதுவும் உண்மை தான்!”

“அப்பெண் யார்?”

“நான் தான்!”

“எங்கள் காவலிலிருந்து ஒரு கைதி தப்பிவிட்டான். அவனை நீ தானே மறைத்து அடைக்கலம் கொடுத்திருக்கிறாய்?”

“உறைந்தைக் காவலிலிருந்து ஒருவன் தப்பிவிட்டானா?” ஆச்சர்யப்படுபவளைப் போலக் கேட்டாள் மரகதவல்லி.

“பெண்ணே கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் கூறினால் போதும்?”

“என்ன கேட்டீர்கள்? மறந்துவிட்டேன்!”

அவள் இப்படிக் கூறியதும் அவர்கள் கடும் கோபம் கொண்டார்கள். “உள்ளே யாரை மறைத்து வைத்திருக்கிறாய்?”

“நானா?”

“ஆமாம் பெண்ணே!”

“இது அபாண்டமான குற்றச்சாட்டு!”

“நீ குற்றம் புரியாதவளாய் இருந்தால் ஏன் பெண்ணே எங்களைக் கண்டு ஒளிய வேண்டும்?” இரைந்து கத்தினான் ஒருவன்.

“வீரரே! இரைந்து பேச வேண்டாம். என் கணவர் நாளெல்லாம் உழைத்துக் களைத்து உறங்கிக்கொண்டிருக்கிறார். சத்தம் போட்டு அவரை

எழுப்பி விட வேண்டாம்!'' எனக் கூறி கதவைத் திறந்து வீட்டினுள் இளவல் மயங்கிக் கிடந்த கட்டிலைச் சுட்டிக் காட்டினாள். விளக்கு ஒளியில் ஒருவன் அயர்ந்து உறங்குவதைப் போலவே அவர்களுக்குத் தோன்றியது. மீண்டும் மெல்ல கதவைச் சாத்தினாள்.

பின்னர், ''அய்யா! வெளியே யாரோ சிலர் நடமாடும் குரல் கேட்டது. புரவிகள் செல்லும் குளம்படி சத்தமும் கேட்டது. ஆதலால் கள்வர்களோ என எண்ணி உறக்கத்திலிருந்து விடுபட்டு வெளியே வந்து பார்த்தேன். தூரத்தில் இருவரும் வந்துகொண்டிருந்தீர்கள். இராக்காவல் காப்பவர்கள் தான் வருகிறார்கள் என அச்சம் தவிர்த்து உள்ளே சென்று என் தலைவரோடு படுத்துக்கொண்டேன்'' என முடித்தாள் மரகதவல்லி.

அவள் பேசும்போது அவர்களுள் ஒருவன் அவள் பேச்சை விட அவள் தலையை ஆட்டி, கண்களை உருட்டிப் பேசும் அழகையே பார்த்துக்கொண்டிருந்தான். அதையும் மரகதவல்லி கவனிக்கத் தவறவில்லை.

மரகதவல்லியின் அழகினைக் கண்டு வியந்தவன் அவள் கூறுவதை ஏற்று மற்றவனிடம், ''நாம் தான் இவளைத் தவறாகப் புரிந்துகொண்டு விட்டோம். இவளது முகத்தைப் பார்த்தால் குற்றம் செய்பவள் போன்றா இருக்கிறது?. வானில் தோன்றியிருக்கும் பிறை நிலவிலாவது சிறு களங்கம் காணப்படுகிறது. ஆனால், இவளது முகத்தில் அப்படி ஏதும் இல்லை'' என ஏதேதோ பிதற்றி ''வா புறப்படலாம்!'' என மற்றவனையும் அழைத்தான்.

அவனைக் கடிந்துகொண்ட மற்றொருவன், ''அடேய்! பெண்களைக் கண்டாலே நீ உனது புத்தியை இழந்து விடுவாய். அதிலும் அழகான பெண்களைக் கண்டுவிட்டால் நீ உன் பணி, கடமை என அனைத்தையும் மறந்துவிடுவாயே! நான் பேசிக்கொள்கிறேன். அதுவரை நீ உன் வாயை மூடிக்கொண்டிரு!'' எனக் கூற அவன் அமைதியானான்.

''நீ கூறுவதை என்னால் நம்ப முடியாது. உன் வீட்டை நான் சோதனையிட்டே ஆகவேண்டும். வழியை விடு!'' என அதிகாரத்துடன் பேசினான்.

அவன் அப்படிக் கூறியதைக் கேட்ட விறல்வேல் பெரிதும் அதிர்ச்சியடைந்தான். சோதனையிட அவர்கள் உள்ளே வந்தால் அவர்களை ஒரு கை பார்த்துவிட வேண்டியது தான் என முடிவு செய்து நின்றுகொண்டிருந்தான். அவனது உடலில் பட்டிருந்த தீப்புண்களும், விழுப் புண்களும் வலியெடுக்க ஆரம்பித்திருந்தன. அவன் அதைப் பொருட்படுத்தாமல் கதவிற்குப் பின்புறம் அனைத்திற்கும் தயாராக நின்றுகொண்டிருந்தான்.

“அது இயலாத காரியம்!” எனப் பதிலளித்தாள் மரகதவல்லி.

“எது பெண்ணே!”

“நீ என் வீட்டை சோதனையிட வேண்டும் எனக் கூறுவதுதான்!” இந்தமுறை மரியாதையின்றியே பதிலளித்தாள்.

“நீ குற்றமற்றவள் என்றால் எங்களை அனுமதிக்க ஏன் தயங்குகிறாய்!” இந்தமுறை புத்திசாலித் தனத்துடன் பேசினான் காவல் வீரன்.

“நான் குற்றமற்றவள் தான். உறக்கத்தையும் குடும்பத்தையும் விட்டு இரவில் எங்கள் பாதுகாப்புக்காகவே கண் விழித்துக் காவல் காக்கும் உங்களை நான் மதித்தே சற்று முன் கதவையும் திறந்து உள்ளே காட்டினேன். அதன் பின்னும் உள்ளே சோதனையிட வேண்டும் எனத் தாங்கள் கூறுவது என் பேச்சின் மீது தாங்கள் கொண்டிருக்கும் அவநம்பிக்கையையே காட்டுகிறது. என்னையும் என் பேச்சையும் மதிக்காத தங்களை என் வீட்டினுள் அனுமதிக்க இயலாது! தாங்கள் வந்த வழியே செல்லலாம்!” எனத் தீர்க்கமுடன் கூறினான் மரகதவல்லி.

மரகதவல்லி கூறியதைக் கேட்டு பெரும் திகைப்படைந்த வீரர்கள் இருவரும் என்ன பேசுவதென்று தெரியாமல் குழம்பி நின்றனர்.

“வீரர்களே! உங்களைக் கண்டு நான் உள்ளே சென்றேன் என்ற ஒரே காரணத்திற்காக என்னைச் சந்தேகப்படுவது முறையல்ல. மன்னரிடம் முறையீடு செய்தால் குடிமக்களை நள்ளிரவில் தொந்தரவு செய்த காரணத்திற்காகக் கடும் தண்டனை உங்களுக்கு விதிக்கப்படும் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்!” என மிரட்டவும் செய்தாள்.

“பெண்ணே, நாங்கள் தேடிக்கொண்டு வந்திருப்பவர்கள் கடும் குற்றவாளிகள். இராஜ துரோகிகள். ஆதலால் தான் தேடுகிறோம்” என அவர்கள் பேசிக்கொண்டிருந்த போதே குறிக்கிட்ட மரகதவல்லி, “வீரர்களே! அரசுக்குத் துரோகம் இழைப்பவர்கள் எங்களுக்கும் துரோகம் இழைத்தவர்களைப் போலத்தான். என் வீட்டில் பின்புற வாசலும் உள்ளது. குற்றவாளிகளுக்கு நான் அடைக்கலம் கொடுத்திருந்தால் இந்நேரம் அவர்கள் அவ்வழியாகத் தப்பித்துச் சென்றிருப்பார்கள். வீணாக என்னைச் சந்தேகப்பட்டு உங்கள் நேரத்தையும் வீணாக்கி குற்றவாளிகளுக்கு மறைமுகமாக உதவாதீர்கள். நான் தான் அவர்களை மறைத்து வைத்திருக்கிறேன் என நீங்கள் இருவரும் உறுதியாக நம்பினால் இன்னும் வீரர்களை அழைத்து வந்து என் வீட்டைச் சுற்றி காவல் இருங்கள். காலையில் உள்ளே வந்து சோதனை செய்துகொள்ளுங்கள். ஆனால், இப்போது உங்களை அனுமதிக்க இயலாது. பொழுது சாய்ந்து வேற்றாள்களை வாசலுக்கு உள்ளே அனுமதிக்கக் கூடாது என்பது எனது தலைவரின் கண்டிப்பான கட்டளை! அவரது கட்டளை எனக்கு வேத வாக்கு! நீங்கள் இருவரும் இப்போது செல்லலாம்!” எனக் கூறி அவர்களை அவமதிப்பது போலவே கதவை படார் எனச் சாத்தி அவர்களின் மறுமொழியை எதிர்பாராமல் தாழிட்டு உள்ளே சென்றுவிட்டாள்.

மரகதவல்லி பேசிய விதத்தையும், அவளது துணிச்சலையும் கண்டு வியக்கவே செய்தான் விறல்வேல். அவள் கூறியதைக் கேட்டு அவர்கள் மேலும் வீரர்களை அழைத்து வந்துவிட்டால் என்ன செய்வது? எனவும் அச்சப்பட்டான். ஆனால் அவன் எண்ணியதைப் போல நடக்கவில்லை.

“நண்பா எங்கள் ஊர் உறைந்தைப் பெண்களின் அழகைப் போலவே சற்றுத் திமிரும் அதிகம். நீ உன் குடும்பத்தை மலை நாட்டிலேயே விட்டு வந்திருக்கிறாய் என்பதற்காக எங்கள் ஊர் பெண்களிடம் உன் ஆற்றாமையைக் காட்டாதே!” எனக் கோபமுடன் கூறி அவனது கையைப் பிடித்து அழைத்துச் சென்றான் மற்றொரு வீரன். குற்றவாளிகளை இருவரும் காவிரியின் கரையோரமாகத் தேடிச் சென்றார்கள்.

இருவரும் திரும்பிச் சென்றதைக் கண்ட விறல்வேல் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

உள்ளே வந்த மரகதவல்லி விளக்கின் தூண்டிலை உயர்த்தினாள். வெளிச்சம் அதிகமானது. கட்டிலில் மயங்கிக் கிடந்தவனின் முகத்தை நோக்கினாள். அவனது முகத்தில் பெரும் எழிலும், அமைதியும் தாண்டவமாடியது. இப்போதுதான் மரகதவல்லி அவனைக் காண்கிறாள். கண்டவுடன் அவளுக்கு அவன் மீது ஒரு வித பரிவும், அன்பும் தோன்றிவிட்டது. அதனைக் காதல் எனக் கூறலாகாது. ஆனால் பிரதிபலன் எதிர்பாராத அன்பு.

அவள் அவனது முகத்தையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கும்போது, ‘‘மரகதவல்லி....’’ என்ற குரலைக் கேட்டு சுய நினைவினை அடைந்து உப தலைவனை நோக்கி, ‘‘யார் அண்ணா இவர்?’’ என வினவினாள்.

உடனே சுதாரித்தவன் அவன் இளவரசன் என்பதை மறைத்து, ‘‘எனது படைவீரர்களுள் ஒருவன். ஒற்றன் என எண்ணி உறைந்தை வீரர்கள் கைது செய்து விட்டார்கள். காப்பாற்றி அழைத்து வந்துள்ளேன்’’ என முழுப் பொய்யை உதிர்த்தான்.

‘‘இராக் காவலர்கள் தேடி வந்தது உங்களைத்தானா?’’

‘‘ஆமாம்!’’

‘‘இவர் மிகவும் இளையவராக இருக்கிறாரே?’’ என அவள் கேட்க அதற்குள் விறல்வேல், ‘‘மரகதவல்லி, உடனே மருத்துவச் சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும். இல்லையேல் பெரும் ஆபத்து. ஏதாவது செய்!’’ எனப் பதறினான்.

‘‘அண்ணா, காவலர்கள் செல்லும்வரை நாம் பொறுத்திருந்து தான் ஆகவேண்டும்! வேறு வழியில்லை. வேண்டுமானால் நாம் அவரது காயத்திலிருந்து குருதி வெளியேறா வண்ணம் ஆரம்பச் சிகிச்சைகளை மட்டுமாவது செய்யலாம். அவ்வளவுதான் அண்ணா எனக்குத் தெரிந்தவை!’’ எனக் கூறி கண் கலங்கினாள்.

இளவலைப் போர்த்தியிருந்த துணியை மெல்ல விலக்கினாள். அவனது உடலைக் கவனித்தாள். ஆங்காங்கே சில நெருப்புக் காயங்கள், சில விழுப்புண்கள் மற்றும் மார்பின் வலது புறத்தில் மேலே பெரும் காயத்தில்

ஆழம் அதிகமாயிருந்தது. அந்தப் பெருங்காயத்திற்கு மட்டும் சிகிச்சை அளித்தால் போதும் என நினைத்து துணியைக் கிழித்துக் கட்டினாள். அவள் கட்டியபோது மயக்கத்திலும் இளவல், ‘‘ஆ... அம்மா...!’’ என வலியால் துடித்தார்.

இந்தக் காயத்திற்கே இவர் இப்படிக் கத்துகிறாரே என மனதிற்குள் அவரை நகைக்கவும் செய்தாள். பின்னர்தான் அவரது கால்களைக் கவனித்தாள். காலில் ஈரத்துணி சுற்றியிருந்தது. ஈரத்துணியை மெல்ல நீக்கினாள். முழங்காலிற்குக் கீழே கால் வெந்து நிணநீர் வடிந்துகொண்டிருந்தது. அதனைக் கண்ட மரகதவல்லியின் கண்களில் இருந்து நீர் பொலபொலவென்று உதிர்ந்தது.

‘‘பாவிகள் இப்படியுமா ஒருவரைத் துன்புறுத்துவார்கள்’’ என வாய்விட்டே கூறியவள் பின்னர் விறல்வேலிடம், ’’அண்ணா! இவரது கால்களில் நிணநீர் வடியத் தொடங்கிவிட்டது. மார்புக் காயத்திலும் ஆழம் அதிகம். உடனே சிகிச்சையைத் தொடங்க வேண்டும். இல்லையேல் இவர் பிழைப்பதே பெரும்பாடு!’’ எனக் கவலையுடன் பதறினாள்.

அவள் சொல்வதைக் கேட்ட விறல்வேல் ஏதும் செய்வதறியாது திகைத்து செயலற்று நின்றான். இளவலைப் பற்றிய கவலை அவனைச் சூழ்ந்துகொண்டது.

காவிரியில் விழுந்து, கரையேறி வந்திருந்ததனால் இளவலின் கால்களில் தூசிகளும், மர இலைகளும் படிந்திருந்தது. அவற்றை மயிலிறகால் மெல்ல ஒவ்வொன்றாக நீக்கினாள். அவள் அவனது காலைத் தொட்டபோதெல்லாம் அவன் வலியால் துடிக்கவே செய்தான். பிதற்றினான்.

இளவல் மரகதவல்லியின் வீட்டினுள் வலியினில் பிதற்றும்போது அவ்வழியாக அதே நேரத்தில் திரும்பி வந்த இராக் காவல் வீரர்கள் இருவரும் அச்சத்தத்தைக் கேட்டுவிட்டனர்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். ஒருவன், ‘‘உள்ளிருந்து தான் சத்தம் வருகிறது. வா கதவினை உடைத்துக்கொண்டு உள்ளே செல்வோம். உள்ளே சென்றால் கையும் களவுமாகப்

பிடித்துவிடலாம். பிறகு அவள் என்ன கூறுகிறாள் எனப் பார்ப்போம்!'' என்றபடியே வீட்டின் வாசலை நோக்கி இரு அடி எடுத்துவைத்தான்.

''அடேய்! முட்டாள்! நில்.'' எனக்கூறி அவனது கையைப் பிடித்து இழுத்துச் சென்றான் இன்னொருவன்.

''ஏன் என்னைத் திட்டுகிறாய்!'' கோபத்தோடு கேட்டான் மற்றொருவன்.

''உன்னுடன் வந்ததே பெரும் பிசகு. தேவையில்லாத காரியங்களில் நீ தலையிட்டுக் கொண்டிருக்கிறாய். முன்பே நான் சொல்ல சொல்ல அப்பெண்ணின் மீது நீ சந்தேகம் கொண்டாய்! இது நல்லதற்கு அல்ல!''

''எது?''

''எதுவா! அப்பெண் வெளியே வந்தபோது அவளது கோலத்தை நீ கவனித்தாய் தானே?''

''ஆமாம் கவனித்தேன்! அதில் என்ன?''

''அதில் என்னவா? மணமாகியிருந்தால் உனக்கு அந்த அவசரம் புரிந்திருக்கும்! அவள் கோபத்திற்குக் காரணமே அவர்கள் இருவரையும் நாம் இடையூறு செய்துவிட்டோம் என்பதுதான். நீ இப்போது உள்ளே சென்றால் உன்னை அவள் அரிவாள் மனையாள் வெட்டி கொன்றாலும் கொன்றுவிடுவாள்! எச்சரிக்கை!!'' எனக் கூறியபடியே அவனது கையைப் பிடித்து இழுத்துச் சென்றான்.

''அவளது இடையில் மறைத்து வைத்திருந்த குறுவாளை நீ கவனிக்கவில்லையா?''

''கவனித்தேனடா! அதனால் அவள் கள்வர்கள் என நினைத்து வெளியே வந்தேன் எனக் கூறியதை நம்பினேன்! நமக்கு எதற்குத் தேவையில்லாத வம்பு! காவிரிக் கரையோரம் தேடச் சொன்னார்கள். நாமும் தேடிவிட்டோம். யாரும் அகப்படவில்லை. அதனைச் சென்று நம் தலைவரிடம் தெரிவிப்போம். மணமாகியும் நாம் தான் இந்த இரவினில் தனிமையில்

தவிக்கிறோம் என்றால் அவர்களாவது மகிழ்ச்சியாக இருக்கட்டுமே! வாடா போகலாம்!''

அப்போது அமைதியாக அவர்களைக் கடந்த பெண்ணைக் கண்டவர்கள், ''யாரம்மா நீ? இந்த நள்ளிரவில் எங்குச் சென்று திரும்புகிறாய்?'' என வினவினார்கள்.

அதற்கவள், ''அண்ணா, கூத்துப் பார்க்கப் போயிருந்தேன். இப்போதுதான் முடிந்தது'' என்றாள்.

''உமது பெயர் என்ன?'' என வினவினான் அவர்களுள் ஒருவன்.

அவள் ''வானவல்லி'' என்றாள்.

''சரி அம்மா. வீடு எங்கே. நாங்கள் துணைக்கு வரவேண்டுமா?'' என அக்கறையோடு கேட்டனர்.

''வேண்டாம். இரண்டு வீடு தள்ளிச் சென்றாலே எனது வீடு வந்துவிடும். உங்களுக்கு வீண் சிரமம் வேண்டாம். விரைவில் வீடு சென்று ஓய்வெடுங்கள்'' எனக் கூறினாள் வானவல்லி.

''நல்லது. பார்த்துப் போ!'' என்றவாறே அவர்கள் சென்றனர்.

அவர்கள் பேசியதைக் கேட்டுக் கொண்டுதான் வானவல்லி அவர்களைக் கடந்தாள். அவர்கள் பேசியதைக் கேட்கும் போது அவளுக்குச் சிரிப்பும், நாணமும் ஒருசேர வந்தது. அதனை அவர்கள் கவனிக்கவில்லை.

அவர்கள் கூறியதை நினைத்து நினைத்துச் சிரித்துக்கொண்டே வந்தவளுக்கு மரகதவல்லியின் வீட்டு வாசல் முன் வந்ததும் அவளது மனம் 'பகீர்' என்றானது. மரகதவல்லியின் வீட்டிலிருந்து வந்த அந்தச் சத்தம் அவளைத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது. அந்த இரு வீரர்களும் இவ்வளவு நேரம் பேசியது தன் தங்கை மரகதவல்லியைப் பற்றித்தானா என நினைக்கையில் அவளுக்குக் கோபமும், ஆத்திரமும் பெருகியது. மனம் பதறியது. தலை சுழன்றது.

என்ன செய்யலாம் என எண்ணியவாறே தயக்கத்துடன் அங்கேயே சிறிது நேரம் நின்றாள். அதே நேரம் மரகதவல்லியின் தந்தை செங்கோடனின்

நினைப்பும் அவளுக்கு வந்து சேர்ந்தது. ஒரு வேளை அவர்தான் அடிபட்டு உள்ளே கிடக்கிறாரா? அவர் வலியில் முனகுவதைத்தான் அவ்வீரர்கள் தவறாகப் புரிந்துகொண்டு பேசிச் செல்கிறார்களோ! எனக் கூட சிந்தித்தாள்.

பின்னர்த் தயக்கத்துடன் கதவைத் தட்டினாள். கதவு திறக்க நேரமானது. தன் பேரில் தான் பிழையோ என எண்ணியபடியே வந்த வழியே சென்றுவிடலாமா எனக் கூட எண்ணிவிட்டாள்.

இளவலின் காயத்தினை மரகதவல்லி சுத்தப்படுத்திக் கொண்டிருந்தபோது திடீரெனக் கதவு மீண்டும் தட்டப்படுவதைக் கேட்ட இருவரும் திடுக்கிட்டு செய்வதறியாது கண நேரம் திகைத்தனர். மரகதவல்லி கூறியதைப் போன்றே அவர்கள் இருவரும் காவலர்களை அழைத்து வந்துவிட்டார்களா? என எண்ணியபடியே இருவரும் பதறினர். ஆதலால் தான் மரகதவல்லி கதவினைத் திறக்கத் தயங்கினாள்.

மீண்டும் கதவு தட்டப்பட்டது. பதற்றத்தில் அவளது வெண் முகத்தில் வியர்வைத் துளிகள் படிந்து வெண் முத்துகளாய் விளக்கொளியில் மின்ன ஆரம்பித்தன. உபதலைவனையும் இளவலையும் கண்ட பிறகு அவள் வானவல்லியை மறந்தே போயிருந்தாள்.

தயக்கத்துடன் கதவினைத் திறந்தாள்.

வெளியே வானவல்லி நின்றுகொண்டிருந்தாள். வானவல்லியைக் கண்ட மரகதவல்லி பெரும் மகிழ்ச்சி கொண்டு "அக்கா, விரைந்து உள்ளே வாருங்கள்!" என அழைத்தாள்.

ஆனால் வானவல்லி உள்ளே செல்லாமல் வெளியே நின்றபடியே, "உள்ளே இருப்பது யாரடி?" எனக் கோபத்தோடு வினவினாள்.

"அக்கா, தங்கள் தலைவர்...." எனத் தயக்கத்துடன் எதையோ சொல்ல வந்தாள். அதற்குள் வானவல்லி, "யார் அத்தானா?" என ஆச்சர்யத்தோடு கேட்டாள்.

"ஆம் அக்கா!" என்றாள். அதே நேரம் கதவு நிழலில் மறைந்திருந்த விறல்வேலும் வெளியே வந்தான்.

இராக் காவலர்கள் கூறிச் சென்றது. மரகதவல்லியின் தயக்கம், பௌத்த விகாருக்கு முன் கணிகையைத் தூக்கிக் கொண்டு சென்றவன் இன்று தன் தங்கையைப் போன்றவளோடு தனித்திருக்கிறாரே! அனைத்து நிகழ்வுகளையும் ஒன்றிணைத்துப் பார்த்த வானவல்லிக்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது. வெளிப்படுத்த முடியாத கோபம், விரக்தி, ஏமாற்றம் என அனைத்தும் தோன்றி அவள் நொறுங்கிப் போனாள்.

விறல்வேலை நோக்கினாள். அவனும் தயக்கத்துடனும் கவலையோடும் மேலங்கியின்றி நின்றுகொண்டிருந்தான். அவள் ஏதும் பேசாமல் திரும்பிச் சென்றாள். அவள் திரும்பிச் செல்வதைக் கண்ட மரகதவல்லி, “அக்கா... அக்கா... நில்லுங்கள்!” என அழைத்தபடியே ஓடினாள்.

# 35. மர கதவல்லியின் செயல்

சங்க காலத் தமிழகத்தில் திருமணம் என்பது பெரும்பாலும் காந்தர்வத் திருமணம் தான். அதாவது சம்பந்தப்பட்ட தலைவன் மற்றும் தலைவி என இருவரும் தத்தம் ஒப்புக்கொண்டு இணைந்துவிடுவார்கள். அப்படி இணைந்து தலைவி தலைவனோடு சென்றுவிட்டால் அதனை உடன்போக்கு என்றே கௌரவமாக அழைப்பார்கள். இவ்விவகாரத்தில் பெற்றோர்கள் பெரும்பாலும் தலையிடுவதில்லை. திருமணத்திற்கு முன்னர்க் காதலர்கள் இருவரும் இணைந்து வாழும் வாழ்க்கை முறைக்குக் களவி என்றும் ஊரறியத் திருமணம் செய்த பிறகு காதலர்கள் வாழும் வாழ்க்கை முறைக்குக் கற்பு என்றும் நெறிப்படுத்தி வாழ்ந்திருந்தனர்.

மரகதவல்லியின் தந்தையைத் தான் இராக்காவலர்கள் தவறுதலாகப் புரிந்துகொண்டு செல்கிறார்கள் என நினைத்தே வானவல்லி கதவைத் தட்டினாள். மேலும் தனது தோழியைப் பற்றியும் அவள் நன்கு புரிந்துகொண்டு பெரும் நம்பிக்கை கொண்டிருந்தாள். இருப்பினும் எங்கே தன் தோழியும் காந்தர்வத் திருமணம் செய்திருப்பாளோ? என்ற சந்தேகம் கூட மனதின் ஓரமாகத் தோன்றியது. ‘‘ச்சீ... ச்சீ...’’ இது என்ன விபரீத நினைப்பு. அவள் அப்படியெல்லாம் செய்பவள் அல்ல என்ற பெரும் நம்பிக்கையோடுதான் கதவைத் தட்டிவிட்டு வெளியே நின்றாள்! ஆனால், நின்றுகொண்டிருந்த விறல்வேலைக் கண்டதும் மரகதவல்லியின் மீது வைத்திருந்த நம்பிக்கை அனைத்தும் கணப் பொழுதில் மறைந்து விட்டது! ஆதலால் தான் இருவரையும் பார்த்தபிறகு ஏதும் சொல்ல இயலாமல் துக்கத்தில், அதிர்ச்சியுடன் திரும்பிச் சென்றாள்.

மரகதவல்லி, ‘‘அக்கா, உபதலைவர் அடிபட்ட ஒருவரைத் தூக்கி வந்துள்ளார்!’’ எனக் கூற வந்தவளை நிறுத்திய வானவல்லி ‘உப தலைவர்’

என்ற பெயரைக் கேட்டதுமே திரும்பிச் செல்லலானாள்.

அவள் பின்னாலேயே ஓடிவந்த மரகதவல்லி அவளது கையைப்பற்றி உள்ளே அழைத்து வந்து, “அக்கா, வைக்கோல் மெத்தையைப் பாருங்கள்!” என்றவாறே கதவைத் தாழிட்டாள்.

அதற்கு வானவல்லி, “கெட்ட கேட்டிற்கு நான் வேறு அதனைப் பார்க்க வேண்டுமா?” என எரிச்சலுடன் கேட்டாள்.

“அக்கா, ஏனக்கா உங்கள் மனம் இப்படியெல்லாம் போகிறது! உயிருக்கு ஆபத்தான நிலையில் ஒருவரை நம் தலைவர் தூக்கிவந்துள்ளார்! நன்றாகப் பாருங்கள்” என்றாள் மரகதவல்லி.

மரகதவல்லி கூறியதைக் கேட்டபின் வைக்கோல் மெத்தையை நோக்கினாள் வானவல்லி. அங்கு இளவல் மயங்கிக் கிடந்தார். அதனைக் கண்ட பின்னர்த் தான் வானவல்லிக்கு உண்மை நிலைமை புரிந்தது. அவர்கள் இருவரையும் தலை நிமிர்ந்து பார்க்கவே வெட்கப்பட்டாள். தனது தவறினை உணர்ந்தவள் வருந்தவும் செய்தாள். அங்கு நின்று கொண்டிருந்த விறல்வேல்தான் துடிதுடித்துப் போனான்.

ஆனால் மரகதவல்லி எதையும் மனதினில் வைத்துக்கொள்ளாமல் வானவல்லியின் அருகினில் வந்து அவளது கையைப் பற்றியபடி, “அக்கா, மார்பில் வேல் பாய்ந்துள்ளது. காலும் தீயில் வெந்துபோயுள்ளது. மருத்துவரை உடனே அழைத்து வந்து இவருக்குத் தகுந்த சிகிச்சை அளிக்கவேண்டும். இல்லையேல் இவரைக் காப்பது கடினம்” எனப் பதறினாள்.

இளவலின் அருகினில் சென்ற வானவல்லி தீவர்த்தியை ஏற்றி அவரது முகத்தினைப் பார்த்தாள். அவளுக்கு இளவலை அடையாளம் காண இயலவில்லை. ஆனாலும் அம்முகத்தை எங்கோ கண்டிருக்கிறோமே? என்ற நினைவு தோன்றியது. ஞாபகப் படுத்திப் பார்த்தாள். இயலவில்லை. பின்னர் இளவலின் கழுத்து மற்றும் நெற்றியின் மீது கைவைத்துப் பார்த்தாள். பிறகு நாடியைப் பிடித்துப் பார்த்தாள்! எதையோ அறிந்துகொண்டவளைப் போல இளவலின் வயிற்றினை அழுத்தித் தடவிப் பார்த்தாள். “மரகதவல்லி, வீட்டில்

உண்பதற்கு என்ன வைத்திருக்கிறாய்! உடனே கொண்டு வா!'' என உத்தரவிட்டாள்.

''வடித்த நெல் சோறுதான் இருக்கிறது அக்கா! இதோ!'' எனக் கூறியபடியே அவசரமாக ஓடியவளை நிறுத்திய வானவல்லி, ''இவருக்குப் பசி மயக்கம் தான் மரகதவல்லி! அச்சப்படத் தேவையில்லை. கண் விழித்த பிறகே சிகிச்சையைத் தொடங்கினால் போதும்! மயக்கத்தில் இருப்பதனால் சோறு இவருக்குப் பயன்படாது. திரவ உணவு ஏதேனும் இருக்கிறதா?'' என வினவினாள் வானவல்லி.

''திரவ உணவா?'' ஆச்சர்யத்தோடு கேட்டாள் மரகதவல்லி.

''ஆமாம்! வெதுவெதுப்பான சூட்டில் சோற்றுக் கஞ்சி இருந்தால் கொண்டு வா?'' எனக் கட்டளையிட்டாள்.

''மாலை வடித்தது அக்கா. ஆறிப்போய்விட்டது! வருத்தத்துடன் கூறினாள் மரகதவல்லி .

''தேன், சுட வைத்த பால் என ஏதேனும் இருந்தால் உடனே கொண்டு வா'' என்றாள்.

''பால் இல்லை அக்கா. ஆனால், தேன் இருக்கிறது!''

''விரைந்து கொண்டு வா!''

ஓடிச் சென்று உரியில் தொங்கப்போட்டிருந்த தேன் குடுவையைக் கொண்டு வந்தவள் நேராக மயங்கிக் கிடந்த இளவலுக்கு ஊட்டச் சென்றாள்.

அவளது செய்கையைப் பார்த்த வானவல்லி, ''அடியே! தேனைக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்!'' என்றாள்.

''இவருக்கு ஊட்டப்போகிறேன்!''

''நீயே அவரைக் கொன்றுவிடுவாய் போலிருக்கிறது!'' சிரித்தபடியே கேட்டாள் வானவல்லி.

''அக்கா........!'' துடிதுடித்துப் போனாள் மரகதவல்லி.

“அப்புறம் என்னடி! தேனை அப்படியே ஊட்டினால் அவர் திகட்டி புரையேறியே மடிந்துவிடுவார். தேனை எதிலாவது கலந்துதான் கொடுக்க வேண்டும்!” என்றாள் வானவல்லி. பிறகு மரகதவல்லி பதற்றத்தோடு இருப்பதைக் கண்ட வானவல்லி, “நீ பதறும் அளவிற்கு அவருக்கு எந்த ஆபத்தும் இல்லை. அவசரம் வேண்டாம். அவரது உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை” எனவும் மரகதவல்லிக்கு ஆறுதல் கூறுபவளைப் போன்று துயரத்தோடு நின்றுகொண்டிருந்த விறல்வேலிடம் தெரிவித்தாள்.

தேனைப் பார்த்தபடியே சிந்தித்தவள் பின் ஒரு வெற்றுப் பானையை எடுத்துக் கொண்டு வீட்டின் பின்புறக் கதவைத் திறந்து வெளியே சென்றாள்.

அவளது பேச்சும், செயலும் இருவருக்குமே திகைப்பளித்தன. ஏனெனில், வானவல்லிக்கு மருத்துவம் பார்க்கத் தெரியும் என இருவருக்குமே தெரியாது! மார்பில் விழுப் புண்களோடு வரும் திவ்யனுக்கும், விறல்வேலிற்கும் வானவல்லிதான் பச்சிலை வைத்து மருந்து போடுவாள். அவையெல்லாம் சிறுசிறு காயங்கள். அவற்றை வானவல்லி தன் தாயிடமிருந்துதான் கற்றிருப்பாள் என விறல்வேல் எண்ணிக்கொள்வான்.

வானவல்லி வெளியே சென்ற கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அருகிலிருந்த பட்டியிலிருந்து ஆடுகள் கத்தும் சத்தம் கேட்டது. இருவரும் புரிந்துகொண்டார்கள். வானவல்லி ஆட்டிலிருந்து பால் கறந்துகொண்டிருக்கிறாள் என்று.

சுட வைக்காமல் மாட்டுப் பாலைக் குடித்தால் வயிற்றுப் போக்கு ஏற்படும். ஆனால், ஆட்டுப் பாலைக் குடித்தால் அந்தப் பிரச்சனை இருக்காது! அவளது சமயோசித புத்தியை இருவரும் தங்களுக்குள் வியந்து பாராட்டிக்கொண்டனர். வெளியே சென்ற வானவல்லி திரும்பி வரும்போது ஒரு கையில் ஆட்டுப்பால் பானையையும் இன்னொரு கையில் சில மூலிகைச் செடி மற்றும் வேர்களையும் பறித்துக் கொண்டு வந்தாள்.

மூலிகைகளை மரகதவல்லியிடம் “மண் இல்லாமல் அலசிக் கொண்டு வா!” எனக் கொடுத்துவிட்டுத் தேனை எடுத்து பாலுடன் கலந்து நன்கு கலக்கினாள். பிறகு படுத்திருந்த இளவலைத் தூக்கி சுவற்றில் சாய்ந்தபடி அமரவைத்தவள், தேன் கலந்த பாலினை அவருக்குச் சிறிது

சிறிதாக உதட்டுப் பிளவின் வழியே ஊட்டினாள். பால் அவரது வயிற்றினுள் சென்று இறங்க இறங்க அவரது பசி மயக்கமும் சிறிது சிறிதாகக் கலைந்தது. அவரது அரைவயிறு நிரம்பியதுமே இளவல் தெளிவு பெற்று மீதி இருக்கும் பாலை வாங்கி அவரே பருகினார்.

மரகதவல்லியும் அந்த நேரம் மூலிகைகளுடன் வந்துவிட அவள் அலசி வந்த வெற்றிலையை அவளிடம் கொடுத்து “நீர் சேர்க்காமல் நன்கு அரைத்துப் பானையில் போட்டுக் கொண்டு வா!” எனக் கொடுத்து அனுப்பியவள், காளனுக்குப் பத்திரை மருந்திட்டுக் கட்டியதைப் போலவே வானவல்லியும் தான் கொண்டு வந்த நாயுருவிப் பச்சிலையை எண்ணையில் போட்டு விளக்கில் காட்டி வதக்கி இளவரசனுக்குச் சுடச்சுட கட்டினாள்.

அதே நேரம் மரகதவல்லியும் வெற்றிலையை நன்கு அரைத்து அதனுடன் சில கற்றாழைச் செடிகளையும் பிடுங்கிக்கொண்டு வந்திருந்தாள்.

அதைக்கண்ட வானவல்லி, “கற்றாழை எதற்கு?” என வினவினாள்.

“இவரது தீப்புண்ணிற்குத் தடவத்தான்” எனப் பதிலளித்தாள்.

“அடியே! கற்றாழை, தேன் தடவுவதெல்லாம் சிறு சிறு புண்ணிற்குத் தான் சரிவரும். அதெல்லாம் அரைகுறை மருத்துவர்கள் செய்யும் வேலை! இவரது காலில் தோலே இல்லை. சற்று நேரம் அமைதியாக இரு!” எனக் கூறிவிட்டு அரைத்த வெற்றிலையைக் கையால் பிடித்துப் பதம் பார்த்தாள். திருப்தி கொண்டவள், தான் கொண்டுவந்த குங்கிலியம், மரவல்லை இரண்டையும் கல்லில் பட்டு மாவாக நசுக்கி, இடித்தாள். நல்லெண்ணெயையும் கொண்டு வந்து வைத்துக்கொண்டாள்.

சுத்தமான மண் பானையை எடுத்துக்கொண்ட வானவல்லி முதலில் அரைத்த வெற்றிலையை அதில் போட்டாள். பின்னர் நல்லெண்ணையை ஊற்றி நன்கு கலக்கினாள். பானையில் பாதியளவு நீர் ஊற்றிப் பிறகு அதில் நசுக்கிய குங்கிலியம் மற்றும் மரவல்லையைப் போட்டு நன்கு கலக்கினாள். சிறிது நேரம் அவள் கலக்க, சோர்வடைந்தாள். அதனைக் கண்ட விறல்வேல் அவளருகில் வந்தான். அவன் அருகில் வந்ததும் வானவல்லி எழுந்து சென்று மரகதவல்லியோடு நின்றுகொண்டாள்.

அரை நாழிகைப் பொழுதிற்கு மேல் தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பதைப் போலவே விறல்வேல் நன்கு கலக்கிக்கொண்டிருந்தான்! அப்போது தயிரிலிருந்து வெண்ணெய் பிரிந்து மிதப்பதைப் போலவே அந்த மூலிகைகளையும் கலக்கும்போது அதில் மருந்து உருவாகி மிதக்கத் தொடங்கியது. விறல்வேல் கலக்கும்போது பானையிலிருந்து உருவான சத்தத்தைக் கொண்டே வானவல்லி, ‘‘கலக்கியது போதும் மரகதவல்லி!’’ என்றாள்.

வானவல்லி மரகதவல்லியிடம் கூறியதைக் கேட்ட விறல்வேல் எழுந்துவிட்டான். பானைக்கருகில் சென்ற வானவல்லி பானையில் வெண்ணெய்யைப் போலவே மிதந்த மருந்தினை மட்டும் கையால் பிரித்து எடுத்துத் தனிப் பாத்திரத்தில் வைத்துக்கொண்டிருந்த போது திடீரென மரகதவல்லி, ‘‘அண்ணா! குருதி!’’ என்றவாறே அலறினாள்.

மரகதவல்லி கத்தியதைக் கேட்ட இளவலும், வானவல்லியும் அதிர்ச்சியடைந்தார்கள். விறல்வேலிடம் ஓடிவந்த மரகதவல்லி ‘‘அண்ணா! உங்கள் மார்புக் காயத்திலிருந்து குருதி வழிகிறது பாருங்கள்’’ எனக் கலங்கியவள் தனது முந்தானைத் துணியை எடுத்து அக்குருதியை துடைக்கவும் செய்தாள்!

‘‘மரகதவல்லி, அச்சப்படத் தேவையில்லை. இது சாதாரணக் காயம் தான். வலி இல்லை’’ என அவன் கூறியதையும் கேட்காமல் துணியைக் கிழித்து அவனது காயத்திற்குக் கட்டு போடவும் செய்தாள்.

மனமே ரணமாக உயிரை வாங்கிக் கொண்டிருக்கும்போது உடலில் ஏற்பட்டிருக்கும் காயங்களால் வலி எப்படி ஏற்படும்! அதே நிலை தான் உபதலைவன் விறல்வேலிற்கும் ஏற்பட்டிருந்தது. யாரைக் கண்டால் தன் மனக்குறை விலகும், யாருடைய அருகாமைத் தனது மனக்காயங்களுக்கு அருமருந்தாக அமையும் என எண்ணினானோ? அவளுடைய அருகாமையே அவனை அப்போது வதைத்துக் கொண்டிருந்தது. அவ்வதையானது உடலில் உருவான காயங்களை விட வலியைக் கொடுத்து அவனை நிர்மூலமாக்கிக் கொண்டிருந்தது.

காதல் என்பது மனதில் பூவாகப் பூத்து பிறகு முள்ளாய் வளரும் செடி என்பதை அப்போது உணர்ந்தான் விறல்வேல். உயிரோடு உடலில் வளர்ந்திருக்கும் அந்த செடியைப் பிடுங்க முயன்று முள்ளில் சிக்கிக்கொண்ட மனம் ரணமாகத் தொடங்கியது. தன் காதலி அருகில் இல்லாதபோது எப்படியெல்லாம் வருந்தித் துடித்தானோ? அவள் தனக்கு வெகு அருகில் இருக்கும்போதும் மனம் அதனை விடப் பலமடங்கு துடிப்பதை உணர்ந்தான்.

வேறொரு தருணமாக இருந்திருந்தால் அங்குச் சிறிது நேரம் கூட விறல்வேல் நின்றிருக்கமாட்டான். அவனாலும் நின்றிருக்க இயலாது. இளவரசரை அந்த நிலையில் ஆபத்தாக விட்டுவிட்டு அங்கிருந்துச் செல்லல் அறிவுடைமை ஆகாது என நினைத்து அங்கேயே நின்றுகொண்டிருந்தான்.

பானையில் தயாரித்த மருந்தை எடுத்துக்கொண்டு இளவலின் கால் அருகே சென்று அமர்ந்தாள். மரகதவல்லியும் விளக்கினை எடுத்துகொண்டு அவளருகில் அமர்ந்தாள்.

அப்போது இளவல், ‘‘சோழ நாட்டின் அழகிய இரு பெண்கள் எனக்கு மருந்திடுவீர்கள் எனத் தெரிந்திருந்தால் எதிரிகளிடம் இன்னும் காயம்பெற்று வந்திருப்பேன்’’ எனச் சிரித்துக்கொண்டே கூறினார். அவர் கூறியதை இருவரும் பொருட்படுத்தவில்லை.

வானவல்லி இளவலின் காலில் ஏற்பட்டிருக்கும் தீக்காயத்தை அப்போது தான் அருகினில் பார்த்தாள். முழங்காலிற்குக் கீழே தோல் முழுவதும் வெந்து வெண்தசைகள் வெளிப்பட்டு நிணநீர் வடிந்துகொண்டிருந்ததைக் கண்ட வானவல்லியின் கண்களில் இருந்து சில துளி கண்ணீர் வெளிப்பட்டு அவரது காலில் சிந்தியது!

திடீரெனத் தனது காலில் சுடுநீர் விழுவதை உணர்ந்த இளவல் வானவல்லியிடம், ‘‘அக்கா! ஏன் கண்ணீர் சிந்துகிறீர்கள்?’’ என வினவினார்.

‘‘உனது சுடப்பட்ட காலைக் கண்டதும், மரக்கலத்தோடு எரிந்து மாய்ந்த எனது தமையனின் நினைவு வந்துவிட்டது. அவர் நெருப்பில் எப்படியெல்லாம் துடித்திருப்பார்! அதனை எண்ணினேன். எனது கண்களில் நீர் பெருகிவிட்டது!’’ என வருந்தினாள் வானவல்லி.

“அவருக்கு என்ன அக்கா நேர்ந்தது?”

வானவல்லி உபதலைவனைப் பார்த்தபடியே “கொன்றுவிட்டார்கள்” எனப் பதிலளித்தாள். அவளது பார்வையும், அந்தச் சொல்லும் தனது மார்பில் வேலைக் கொண்டு பாய்ச்சியதைப் போல உணர்ந்தான் விறல்வேல். அவள் விறல்வேலைப் பார்த்தபடியே கூறியதை இளவலும் கவனிக்கத் தான் செய்தார்!

“அக்கா! மறைந்தவர்களை எண்ணி வருத்தப்படுவதால் அவர்கள் மீண்டும் வந்துவிடவா போகிறார்கள். ஆதலால் கடந்த காலத்தை எண்ணி கலங்க வேண்டாம்” எனக் கூறி அமைதியானவர் பிறகு “நீங்கள் உணவூட்டும் போது எனக்கும் எனது தாயின் நினைவு வந்து விட்டது அக்கா. எனக்குச் சகோதரியோ அல்லது என் தாயோ இருந்திருந்தால் தங்களைப் போலத் தானே அவர்களும் என் மீது பாசமுடன் இருந்திருப்பார்கள்!”

“அவர்கள் இப்போது எங்கிருக்கிறார்கள்?”

“எனக்கு அப்படி யாரும் இல்லை அக்கா!”

“அவர்களுக்கு என்ன ஆனது?” வருத்தத்துடன் கேட்டாள் வானவல்லி!

“ தாய் வயிற்றில் கருவாக உதித்த பிறகு தந்தையை இழந்துவிட்டேன். மண்ணில் பிறந்த பிறகு தாயையும் இழந்துவிட்டேன்!” என்றார்.

அவர் கூறியதைக் கேட்டுக் கலங்கிய வானவல்லி, “இனி அப்படி வருந்தாதே! உனக்கு நான் ஒரு சகோதரி இருக்கிறேன் எனக்கொள்!” என ஆறுதல் கூறினாள்.

“நல்லது அக்கா!”

“உன் பெயர் என்ன தம்பி?”

சிறிது யோசித்த இளவல், “கரிகாலன்” என்றார்.

“கரிகாலனா?”

“ஆம் அக்கா. என் கால் குணமடைந்தபின் அது கருப்பாகத் தானே இருக்கும். தாங்கள் எனக்காகச் சிந்திய கண்ணீருக்கு நன்றி கடனாக இந்தப் பெயரையே நான் வைத்துக்கொள்கிறேன்!” என உணர்ச்சி வசப்பட்டுக் கூறலானார்.

இருவரும் உரையாடிக்கொண்டிருந்த போதே மரகதவல்லி இளவலின் காலிற்கு மருந்து பூசிக்கொண்டிருப்பதைக் கண்ட வானவல்லி பெரிதும் அதிர்ச்சியடைந்தாள். ஏனெனில் மரகதவல்லி தனது நீண்ட கருங்குழலின் நுனியைக் கொண்டு கரிகாலனது காலில் மருந்து பூசிக் கொண்டிருந்தாள்! அதுவரை அவளை யாருமே கவனிக்கவில்லை.

அதிர்ச்சியிலிருந்து மீளாதவளாய், “மரகதவல்லி, என்ன செய்துகொண்டிருக்கிறாய்?” என வானவல்லி வினவினாள்.

“இவருக்கு மருந்திட்டுக் கொண்டிருக்கிறேன் அக்கா!”

“அதற்குத்தான் மயிலிறகு இருக்கிறதே?”

“அதனால் எந்தப் பயனும் இல்லை அக்கா. இவரது காலிலிருந்த தூசிகளை எடுக்க மயிலிறகைத் தான் பயன்படுத்தினேன். மயக்கத்திலிருக்கும் போதே வலியால் துடித்தார். ஆதலால் தான் எனது குழலைப் பயன்படுத்துகிறேன்” எனப் பதிலளித்தாள் மரகதவல்லி. மரகதவல்லியின் செயலைக் கொண்டு கரிகாலனும் திகைக்கவே செய்தார்!

“மரகதவல்லி, எந்தப் பெண்ணும் செய்யத் துணியாத காரியம் இது! இவரை உனக்கு முன்பே தெரியுமா?” எனச் சற்று சந்தேகத்துடன் வினவினாள்.

மருந்திட்டுக் கொண்டே “தெரியாது அக்கா!” என்றாள்

“அப்புறம் எப்படி, எந்த நம்பிக்கையில் இவருக்குப் பணிவிடை செய்கிறாய்?”

“நம் உபதலைவர் மீதிருக்கும் நம்பிக்கையில் தான்!”

“உப தலைவர் மீதா!”

“ஆம் அக்கா!” திடமாகப் பதில் வந்தது மரகதவல்லியிடமிருந்து!

“இருவருக்கும் என்ன தொடர்பு?”

“அக்கா, இவர் யார் என்றே எனக்குத் தெரியாது! இவரைக் கொண்டு வந்தவர் நம் உபதலைவர் தான்! இவர் பயங்கரமான ஆபத்தில் இருக்கிறார். வெளியே வீரர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள். மயிலிறகால் மருந்திட்டால் இவர் வலியால் துடிப்பது நிச்சயம். இந்த நள்ளிரவு அமைதியில் இவர் வலியால் பிதற்றினால் அது நிச்சயம் எதிரிகளுக்குக் கேட்டு இவரைச் சூழ்ந்துவிடுவார்கள். என் வீட்டிற்கு நம் உபதலைவர் அழைத்து வந்துள்ள விருந்தினர் இவர். இவருக்குப் பணிவிடை செய்வது என் கடமை. இவர் குணமடையும் வரை இவருக்குப் பணிவிடை செய்வது நம் உப தலைவருக்குச் செய்வதைப் போலப் பாக்கியமாகக் கருதுகிறேன் அக்கா! என் தந்தையைப் போலவே நம் தலைவரும் எனது நம்பிக்கைக்கும், மரியாதைக்கும் உரியவர்! தயவுசெய்து இதில் தாங்கள் தலையிட வேண்டாம் அக்கா!”

அவள் அப்படிப் பெரும் நம்பிக்கையுடன் கூறியதைக் கேட்ட விறல்வேலிற்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. எந்தச் சூழ்நிலையிலும் தன் மீது ஒரே மாதிரி அன்பு செலுத்தும் மரகதவல்லியைத் தன் உடன் பிறக்காத தங்கையாகப் பெற்றது தன் பாக்கியம் என்றே கருதினான். ஆனால் வானவல்லிக்கு அவள் கூறியது சுர்ரெனச் சுட்டது. ஒருகணம் அவர் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை நான்தான் இழந்துவிட்டேனோ? எனக் கூட எண்ணினாள்!

மரகதவல்லி பேசியதைக் கேட்ட கரிகாலன், “யாருடைய மகள் தாங்கள்?” என அவளிடம் வினவினார்.

அதற்கவள் “செங்கோடன்” என்றாள்.

“சோழரின் தலைமை ஒற்றர் செங்கோடன் மகளா தாங்கள்?” என வினவினார் கரிகாலன்.

“ஒற்றரா? இல்லையே! எம் தந்தை படைத்தலைவர்களுள் ஒருவர்” எனப் பதிலளித்தாள் மரகதவல்லி.

அவள் கூறியதைக் கேட்டதும் தவறு செய்தவரைப் போல உணர்ந்தவர், வருந்தவும் செய்தார். ஏனெனில் ஒற்றறிபவர்கள் பெரும்பாலும்

தங்களை வெளிக்காட்டிக்கொள்ள மாட்டார்கள். அப்படியே செங்கோடனும் படைத் தலைவர் பொறுப்பில் இருந்துகொண்டு சோழ ஒற்றர்களைக் கண்காணித்து ஒருங்கிணைத்துக் கொண்டிருந்தார். அதனை வெளிப்படையாகக் கூறிவிட்டமைக்கே பெரிதும் வருந்தினார்.

சுதாரித்துக்கொண்ட கரிகாலன், "ஆமாம். ஆமாம். படைத்தலைவர் தான்!" எனக் கூறியபடியே விறல்வேலை நோக்கினார். அவனும் ஆமாம் என்பதைப் போன்று தலையாட்டினான்.

"அக்கா, தங்களது பெயர் என்ன அக்கா?" என வானவல்லியிடம் வினவினார் கரிகாலன்.

குறிக்கிட்ட மரகதவல்லி, "இப்பெயரை நம் தலைவரிடம் கேளுங்கள்!" என்றாள்.

"அவரிடம் ஏன் கேட்கவேண்டும்?"

"அப்பெயரைக் கூறுவதில் அவர் தான் பெரும் மகிழ்ச்சியடைவார்" என மரகதவல்லி கூறிக்கொண்டிருந்த போதே குறுக்கிட்ட வானவல்லி, "வானவல்லி எனும் என் பெயரை யாரிடமும் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை தம்பி." எனக் கூறினாள்.

"எங்கோ கேள்விப்பட்ட பெயராக இருக்கிறதே?" என வினவினார் கரிகாலன்.

"வளவனாரின் மகள் நான்! எங்காவது கேள்விப்பட்டிருப்பாய்!"

படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்த கரிகாலன் பெரும் மரியாதையுடன், "முன்னாள் சோழ சேனாதிபதி பெருமறவர் மகேந்திர வளவனாரின் மகளா தாங்கள்?" என ஆச்சர்யத்துடன் வினவினார்.

"ஆமாம் தம்பி!"

"தங்களை என் சகோதரியாகப் பெற்றிருப்பது என் பாக்கியம்!" எனக் கூறி மகிழ்ந்தார் கரிகாலன்.

இருவரும் பேசிக்கொண்டிருந்த போதே கரிகாலன் காலிற்கு மருந்தினைப் பூசி முடித்திருந்தாள் மரகதவல்லி. தனது கூந்தலைச் சுத்தம்

செய்ய வெளியே சென்றுவிட்டாள்.

உள்ளே சென்ற வானவல்லி இன்னும் சில மூலிகைகளை அரைத்து எண்ணெயில் காட்டிக் கொண்டு வந்தாள். அதைக் கண்ட இளவல், “அக்கா! எனக்குப் பிறகு ஒத்தடம் கொடுத்துப் பத்துப் போடலாம்! நம் தலைவருக்கும் காயம் ஏற்பட்டிருக்கிறது. அவருக்கு முதலில் மருந்திடுங்கள். அவரது காயங்களுக்கும் தங்களால் தான் தகுந்த மருந்திட இயலும் என எண்ணுகிறேன்!” என இரட்டை அர்த்தத்தில் கூறலானார்.

அதைக்கேட்ட விறல்வேல், “எனது உடலில் ஏற்பட்டிருப்பது சாதாரணக் காயம் தான். மருந்திட வேண்டிய அவசியமில்லை. நீங்கள் முதலில் பத்துபோட்டுக் கொள்ளுங்கள். பிறகு காய்ச்சல் வந்துவிடப் போகிறது!” எனக் கூறிக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தான்.

உப தலைவன் கரிகாலனை ‘நீங்கள், கொள்ளுங்கள்’ எனப் பன்மையில் பெரும் மரியாதையுடன் அழைத்தது அவளுக்குப் பெருத்த ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது. ஏனெனில் கரிகாலன் விறல்வேலை விடப் பல வயது இளையவன். விறல்வேல் வந்ததிலிருந்து பணிவுடனும், பதற்றத்துடனும் நின்றது அவளுக்குப் பலத்த சந்தேகத்தை உருவாக்கியது. கரிகாலன் யாராக இருப்பார்? எனச் சிந்தித்தவள் இதற்கு முன் இவரது முகத்தை எங்கோ பார்த்திருக்கிறோமே எனவும் சிந்தித்தாள். ஒன்றும் நினைவிற்கு வரவில்லை!

இளவலது கழுத்து, மார்பு என ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருக்கும் போது தன்னை ஒரு புலியின் இரு சிவந்த கண்கள் நோக்கிக் கொண்டிருப்பதைப் போல உணர்ந்தவள் திடுக்கிட்டாள். உற்றுப் பார்த்தாள். கரிகாலனின் இடது பக்க மார்பில் பச்சைக் குத்தப்பட்டிருந்த பாயும் புலியின் இரு சிவந்த கண்களைக் கண்டவளின் கைகள் நடுங்க ஆரம்பித்தது. பதற்றமடைந்தாள்.

மரியாதையுடன் எழுந்து நின்றவள், “இளவரசே!” எனப் பணிந்தாள்.

வானவல்லி தன்னை அடையாளம் கண்டுகொண்டதை எண்ணிய இளவரசர் வாயில் கையை வைத்து “உஷ்ஷ்…” எனச் சத்தமிட்டவர் பிறகு, “நான் தான் இளவரசன் என்பதைக் காட்டிக்கொடுத்து விடாதீர்கள் சகோதரி!”

எனக் கூறினார். இதுவரை அன்பாகப் பேசி வந்தவரின் கண்களில் முதன் முறையாக அதிகாரத்தைக் கவனித்தாள் வானவல்லி. அவர் தான்தான் 'இளவரசர் திருமாவளவன்' என்பதைக் காட்டிக்கொள்ள விரும்பவில்லை என்பதை உணர்ந்த வானவல்லி அமைதியானாள்.

பிறகு அவரது காயம்பட்ட இடங்களைச் சுற்றி சுடச்சுட ஒத்தடம் கொடுத்தவள், பிறகு மார்பு, கழுத்து, நெற்றி என அனைத்து இடங்களிலும் மூலிகைப் பத்துப்போட்டாள். அந்த நேரம் மரகதவல்லியும் உள்ளே வந்து சேர்ந்தாள்.

"சீமை பட்டினால் செய்யப்பட்ட பஞ்சு மெத்தையில் படுத்து சிற்றரசுகளின் இளவரசிகள் அனைவரும் சாமரம் வீச, பலர் பணிவிடை செய்தபடி சிம்மாசனத்தில் அமர்ந்திருக்க வேண்டிய உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியின் மகன் திருமாவளவன் இன்று வரகு வைக்கோல் படுக்கையில் ஆதரவின்றி படுத்திருக்கிறாரே!" என எண்ணிய வானவல்லியின் கண்களில் இருந்து நீர் பெருக்கு ஏற்பட்டு கரிகாலனின் படுக்கையின் மீது விழுந்துகொண்டிருந்தது. அதே நேரம் வெளியே சென்ற விறல்வேலும் தன்னைச் சுத்தப்படுத்திக்கொண்டு உறங்குவதற்குத் தயாராக வந்தான்.

வானவல்லி கலங்குவதைக் கண்ட கரிகாலன், "சகோதரி! தாங்கள் என்னைப் பார்த்து வருத்தப்பட்டுக் கலங்க வேண்டாம். உப தலைவர் என் அருகில் இருக்கும்போது இருங்கோவேளின் வீரர்களால் என்னை என்ன செய்துவிட முடியும்! உறைந்தை வீரர்கள் என்ன, எமனும் அவர் என்னருகில் இருக்கும் போது வரத் துணிய மாட்டான். உப தலைவர் மட்டும் சரியான நேரத்திற்கு வராமல் இருந்திருந்தால் இந்நேரம் இவ்வுடல் தீக்கிரையாகியிருக்கும். அவரது துணையிருக்கும் வரை எனக்கு எந்தத் தீங்கும் நேராது! தாங்கள் வருந்த வேண்டாம்" என ஆறுதல் கூறினார்.

அதற்கு வானவல்லி, "இதே உபதலைவரை எண்ணித்தான் அன்று என் தமையனை அனுப்பி வைத்தேன். இன்று அவரை இழந்து நான் மட்டும் வாடுகிறேன்!" எனக் கூறினாள். அதைக்கேட்ட விறல்வேல் மற்றும் கரிகாலன் என இருவரும் அதிர்ச்சியானார்கள். ஆனால் விறல்வேலின் நிலை தான் பரிதாபமாகப் போய்விட்டது.

கரிகாலன் தான் சோழ இளவரசன் திருமாவளவன் என்பதை அறியாத மரகதவல்லி வானவல்லியை கரிகாலன் அக்கா என அழைத்ததால் தான் அவள் துயரத்துடன் பேசுகிறாள் என எண்ணிக் கொண்டாள். அந்நேரம் மரகதவல்லி மருந்தினை எடுத்துக்கொண்டு விறல்வேலிடம் வந்தவள் ‘‘அண்ணா, விளக்கருகில் வந்து அமருங்கள்!’’ என்றாள்.

‘‘எனக்கு மருந்து தேவையில்லை மரகதவல்லி! பூசினாலும் பயன் இருப்பது ஐயமே!’’ என்றான் உபதலைவன்.

‘‘இப்போது அமரப் போகிறீர்களா? இல்லையா?’’ எனக் கோபத்துடன் கேட்டாள் மரகதவல்லி.

மரகதவல்லியின் பிடிவாதத்தை அறிந்த விறல்வேல் அவளது பேச்சைத் தட்ட இயலாமல் விளக்கிற்கு அருகில் வந்து அமர அவனது காயங்கள் அனைத்திற்கும் மருந்து பூசி ஒத்தடம் கொடுத்தாள். அவளது அன்பிலும், நம்பிக்கையிலும் விறல்வேல் நெகிழ்ந்து போனான். ஆனாலும் அவனது புறக் காயங்களுக்கு மட்டுமே அவளால் மருந்து பூச முடிந்தது! அவனது அகக்காயங்களுக்கு மருந்திட வேண்டியவள் தரையைப் பார்த்தே நின்றுகொண்டிருந்தாள்.

வானவல்லியின் முன் இருக்க இயலாத விறல்வேல் எழுந்து ‘‘நான் புறப்படுகிறேன். இனி இவருக்கு எந்த ஆபத்தும் வராது! பார்த்துக்கொள்ளுங்கள்’’ என்றபடியே நடையைக் கட்டினான்.

அதைக்கண்ட கரிகாலன், ‘‘உப தலைவரே இப்போது தான் நீங்கள் இருக்கும் வரை என் அருகில் எமன் கூட வருவதற்கு அஞ்சுவான் எனக் கூறினேன். அதற்குள் புறப்படுகிறீர்களே! இங்கேயே இருங்கள்!’’ எனக் கட்டளையிட்டார். சிறிது நேரம் கழித்துக் கரிகாலன், ‘‘பிரதிபலன் பாராது அன்பு செலுத்தும் இந்த இரு பெண்களிடம் என்னை மட்டும் தனியாக விட்டுவிட்டுத் தாங்கள் மட்டும் செல்கிறேன் என்கிறீர்களே? இது சரியா?’’ எனவும் வினவினார்.

கரிகாலனுக்குப் பதில் சொல்ல இயலாத விறல்வேல் அங்கேயே அமர்ந்தான்! உள்ளே சென்ற மரகதவல்லி அனைவருக்கும் உணவினை

எடுத்துக்கொண்டு வந்து உப தலைவனுக்குப் பரிமாறினாள். பிறகு மரகதவல்லி மற்றும் வானவல்லியும் நள்ளிரவு கடந்த முதல் சாமத்தில் இரவு உணவினை உண்டு முடித்தனர்.

அனைவரும் உண்டபிறகு அடுத்து என்ன ஆபத்து எங்கிருந்து வரப்போகிறதோ? என்ற கவலையில் உறங்காமல் அமர்ந்திருக்கக் கரிகாலன் மட்டும், ‘‘உறக்கம் வருகிறது உறங்க வேண்டும்?’’ என்றார்.

‘‘உறக்கம் வந்தால் உறங்க வேண்டியது தானே! வீரருக்குச் சாமரம் வீசினால் தான் உறக்கம் வருமோ?’’ எனக் கேட்டாள் மரகதவல்லி.

‘‘சாமரம் வீச வேண்டும் என்பதில்லை. கதை கூறினால் போதும். எனக்கு உறக்கம் வந்துவிடும்!’’ என்றார் கரிகாலன்.

அவர் கூறியதைக் கேட்ட மரகதவல்லி, விறல்வேல் என இருவரும் சொல்லி வைத்தாற்போலவே வானவல்லியை நோக்கினார்கள்.

‘‘அக்கா, மூவரில் தாங்கள் தான் கதை கூறுவதில் வல்லவர் போல! நீங்களே எனக்கு ஒரு கதையைக் கூறுங்கள்!’’

இளவரசன் கதை கூறு எனக் கேட்டபின் மறுக்க முடியாத வானவல்லி எந்தக் கதையைக் கூறலாம் எனச் சிந்தித்த படியே அவரை நோக்கினாள்.

அவளது மனக் குழப்பத்தை உணர்ந்த கரிகாலன், ‘‘அக்கா! கோப்பெருஞ்சோழன், புலவர் பிசிராந்தையார், அமைச்சர் பொத்தியார் பற்றிய கதையைக் கூறுங்கள்’’ எனக் கட்டளையிட்டார்.

‘‘அவர் கதை இப்போது எதற்குத் தம்பி? உனக்கு நான் வீரம் செறியும் கதைகளைக் கூறலாம் என்றிருந்தேன்’’ என்றாள்.

‘‘அக்கா, எப்படியும் இன்னும் சில தினங்கள் இங்குதான் இருக்கப்போகிறேன். அப்போது அந்தக் கதைகளைக் கேட்டுத் தெரிந்துகொள்கிறேன். இப்போது பிரதிபலன் பாராத அந்த மூன்று நண்பர்களின் கதையை எனக்குக் கூறுங்கள்!’’ என்றார்.

எந்த உள்நோக்கத்தைக் கொண்டு கரிகாலன் அந்தக் குறிப்பிட்டக் கதையைக் கூறச் சொல்கிறார் என அறியாத வானவல்லி, இளவரசன் கரிகாற் திருமாவளவனுக்குத் தான் கதை கூறும் பேறு பெற்ற தனது பாக்கியத்தை எண்ணிப் பெருமை கொண்டு கதையைக் கூறத் தொடங்கினாள்.

**அடிக்குறிப்பு :**

வென்வேல்,
உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்,
முருகன் சீற்றத்து உருகெழு குருசில்,
தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி. – பொருநராற்றுப்படை வரி: 129 – 132.

வெற்றிவேல், உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னியின் மகன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே தனக்கு வேண்டிய அரசுரிமையைப் பெற்றான் என முடத்தாமக் கண்ணியார் கூறுகிறார். ஆதலால் இளவல் தாயின் வயிற்றில் இருந்தபோதே தந்தை இளஞ்சேட்சென்னியை இழந்தவர் என்பதை அறிந்துகொள்ளலாம்!

# 36. தொ டுக்கப்பட்ட கேள்விக் கணைகள்

நட்பின் இலக்கணமாக விளங்கிய பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழன், பொத்தியார் ஆகியோரின் மனதை உருக்கச் செய்யும் கதையைக் கரிகாலன் கூறச் சொன்னதும் வானவல்லி உற்சாகத்துடன் கூறத் தொடங்கினாள். கதையைக் கூறுபவர்க்குச் சலிப்பு தோன்றா வண்ணம் ‘‘ம்ம்ம்’’ கொட்டிக்கொண்டும், இடையிடையே சில கேள்விகளையும் எழுப்பிக் கரிகாலனும் உற்சாகத்துடன் கேட்கலானார்.

‘‘தம்பி! முன்னொரு காலத்தில் பாண்டிய நாட்டில் அறிவுடை நம்பி எனும் பாண்டிய அரசர் ஆண்டு வந்தார். அவர் ஒரு முறை குடிமக்களுக்கு அதிகமான வரி விதித்தார். அதைக்கண்ட பெரும் புலவரான பிசிராந்தையார் அரசரிடத்தில் தயங்காமல் சென்று அவரது பிழையைச் சுட்டிக்காட்டி திருத்தச் செய்தார். அழகுத் தமிழில் பாடல் இயற்றுவதில் வல்லவர். புகழ் வாய்ந்த புலவர்!’’ என வானவல்லி கூறிக்கொண்டிருந்த போதே குறுக்கிட்ட இளவல், ‘‘பிசிராந்தையார் எனும் பெயரே வித்தியாசமாக இருக்கிறதே? ஏன் அக்கா?’’ என வினவினார்!

அதற்கு அவள், ‘‘பிசிர் என்பது அவர் வாழ்ந்த கிராமத்தின் பெயர். புலவரது கண்கள் ஆந்தையைப் போலப் பெரியதாக இருந்ததன் காரணமாக அவரை அனைவரும் பிசிராந்தையார் என்றே அழைத்தார்கள். காலப்போக்கில் அவரது புகழ் பெருகி அவரது இயற்பெயர் மறைந்து பிசிராந்தையார் எனும் பெயரே சரித்திரத்தில் நிலைத்துவிட்டது!’’ என்றாள்.

‘‘அவர் ஏன் தனது உடற்குறையை அல்லது தனது விகாரத் தோற்றத்தை பெயருடன் இணைத்துக்கொண்டார்?’’

இளவலுக்கு அனைத்துக் காரணங்களும் தெரிந்திருந்தாலும் வானவல்லியின் கேள்வி ஞானம் எப்படிப்பட்டது என்பதை அறிந்துகொள்ளும்

பொருட்டே மேற்கூறிய கேள்வியை எழுப்பினார்! “உடல் என்பது இறைவன் கொடுத்தது. அதனைக் கொண்டு வேற்றுமை பாராட்டுவது என்பது மடமைத் தனம். ஒருவர் பெற்றுள்ள கல்வியறிவு, திறமையைக் கொண்டு தான் நாம் ஒருவரை மதிப்பிட வேண்டுமே தவிர ஒருவரின் தோற்றத்தைப் பொறுத்து அல்ல! அது நம் தமிழர்களின் பண்பாடும் அல்ல. பெரும்பாலான சான்றோர்கள் நமது உடல் ஊனத்தைப் பற்றிக் கவலை கொள்ளாமல், அதனையே தமது பெயராகக் கொண்டு பெருமை கொண்டார்கள்! அதனை அவர்கள் பெரும் பேறாகவே கருதலானார்கள்! சோழ மாமன்னர் இளஞ்சேட்சென்னியின் மைத்துனரான இரும்பிடர்த்தலையர், பெரும் புலவர்களான நரிவெரூஉத் தலையார், முடவனார், இக்காலப் புலவரான கண்ணியார் கூட முடம் தான். ஆனால் தன் பெயருடன் சேர்த்து முடத்தாமக் கண்ணியார் என அவர் தன்னை அழைத்துக் கொள்ளவில்லையா? அதில் அவர் பெருமையும் கொள்ளவில்லையா? அப்படி அழைத்ததால் அவர்கள் சிறுமை கொள்ளாமல் பெருமையே கொண்டிருந்தனர். கரிகாலா, ஏன் நீ கூட ‘ வளவன் ’ எனும் உனது இயற்பெயரை விடுத்து சற்று முன்பு கரிகாலன் எனும் காரணப் பெயரை சூட்டிக்கொள்ளவில்லையா? அப்படித்தான் பிசிராந்தையாரும் அப்பெயரைச் சூட்டிக்கொண்டார்!” என விளக்கமளித்தாள் வானவல்லி.

அவள் கூறியதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டே இளவல், “மேலே கூறுங்கள்!” என்றார்.

“பிசிராந்தையாரைச் சந்தித்த மற்ற புலவர்கள் அனைவரும் தாங்கள் சோழ நாட்டை அரசாளும் கோப்பெருஞ்சோழனை சென்று சந்தியுங்கள். தமிழ் புலவர்களை வரவேற்று உபசரிப்பதில் அவனை மிஞ்ச யாராலும் இயலாது எனக் கூற அவரும் மன்னரைச் சந்திக்கப் பேராவலில் இருந்தார். பாண்டிய நாட்டின் தென் கோடியில் இருக்கும் பிசிரி’லிருந்து சோழ நாடு வெகு தொலைவில் இருந்ததனால் அவரால் பயணம் மேற்கொள்ள இயலவில்லை. ஆனாலும் ஒவ்வொருமுறையும் மற்ற புலவர்களைச் சந்திக்கும் போதெல்லாம் கோப்பெருஞ்சோழனின் நலனை அக்கறையோடு கேட்டுத் தெரிந்துகொள்வார்” எனக் கூறியபடியே மூச்சுவாங்க அமைதியானாள். அதைக் கண்டும் இளவல், “மேலே தொடருங்கள் அக்கா!” என அவசரப்படுத்தினார்.

மேலே தொடர்ந்தவள், "புலவர்கள் சோழ மன்னரைச் சந்திக்கும் போதெல்லாம் புலவர் பிசிராந்தையார் தங்களது நலனைக் கேட்டறிந்து கொண்டார் என்றும் அவர் கொடுத்தனுப்பிய சுவடிகளையும் சோழனிடம் கொடுப்பார்கள். அன்று முதல் சோழ மன்னரும் புலவர் மீது பெரும் அன்பு கொண்டு பாண்டிய நாட்டிலிருந்து தன்னைச் சந்திக்க வரும் புலவர்களிடம் பிசிராந்தையாரின் பெருமையைச் சொல்லி அவருக்குப் பரிசுகளையும் மடலையும் கொடுத்து அனுப்புவார். இவர்களின் நட்பு மடலின் மூலமாகவும், புலவர்களின் மூலமாகவும் வளர்ந்து வந்தது. இந்தச் சூழ்நிலையில் கோப்பெருஞ்சோழன் நாட்டில் சிறு கலகம் மூண்டது. அவருக்கு இரு ஆண்மக்கள் இருந்தனர். இவர் உறையூரில் இருந்தபடியே மற்ற இருவரையும் இருவேறு இடங்களில் ஆட்சியில் அமர்த்தியிருந்தார். அவர்கள் இருவரும் தந்தையின் மீது கசப்புணர்வு கொண்டு போருக்கு எழுந்தனர். தந்தைக்கும் மகன்களுக்கும் இடையே போர் நடப்பதை நாட்டில் நல்லாட்சியை விரும்பும் சான்றோர்கள் விரும்பவில்லை. அதில் ஒருவர் தான் புல்லாற்றூர் எயிற்றியனார். அவர் மன்னரிடம் சென்று அறிவுரை கூறினார். "போரில் தாங்கள் வென்றுவிட்டால் உங்களுக்குப் பின் உங்கள் அரசாட்சியை யாருக்கு வழங்குவீர்கள்? தோற்ற உமது புதல்வர்களுக்குத் தானே? அதைக்கண்டு மற்றவர்கள் நகைக்க மாட்டார்களா? ஒருவேளை தாங்கள் தோற்றுவிட்டால் உங்கள் எண்ணம் நிறைவேறுமா? இப்போரில் தாங்கள் தோற்றாலும், வென்றாலும் தோல்வியும் பழியும் உங்களையே சேரும்" எனவும் அறிவுரை வழங்கினார். மன்னரும் தனது போரைக் கைவிட்டார். அதற்குப் பிறகு தனது மகன்களுக்கு எதிராகத் தான் ஆட்சிபுரிவதை விரும்பாத மன்னர் அரசினைத் துறந்து வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தார்.

மன்னரை எப்போதும் புலவர்களும், சான்றோர்களும் சூழ்ந்தே இருப்பார்கள். நீதி தவறாத மன்னர் வடக்கிருந்து உயிர் விடத் துணிந்தார் என்ற செய்தியைக் கேட்டதும் நாட்டில் வாழ்ந்த பல சான்றோர்களும் அவருடன் வடக்கிருந்து உயிர் விட அவருடனே சென்றார்கள். அவர்களுள் ஒருவர் தான் அவரது நண்பர் அமைச்சர் பொத்தியார். அவரைக் கண்ட மன்னர் திகைத்தார். உடனே அவர் தாங்கள் என்னோடு வடக்கிருக்க வேண்டாம் எனக் கட்டளையிட்டார். அதைக்கேட்டு வருந்தினார் பொத்தியார். அவர்

வருந்தியதைக் கண்ட மன்னர், ‘‘நண்பா! உன் மனைவி இப்போது தான் முதன் முறையாக நிறைமாதமாக இருக்கிறாள். உனக்குக் குழந்தைப் பிறந்ததும் நீ விரும்பினால் திரும்பி வா!’’ என அனுப்பி வைத்தார்.

இன்று காவிரியாறும் உய்யக்கொண்டான் ஆறும் உறையூர் அருகில் இணையும் இடத்தில் இருந்த மணல் திட்டுகளில் அமர்ந்து மன்னர் வடக்கிருக்க ஆரம்பித்தார். அவர் ‘‘தனக்கு வலது புறத்தில் தனது நண்பன் பிசிராந்தையாருக்கு இடம் ஒதுக்குங்கள். அவர் நிச்சயம் வருவார். அவர் வரும்போது அவருக்கு இடம் இல்லையென்றால் அவர் வருந்துவார்‘‘ என்றார். மன்னர் கூறியதைக்கேட்டுத் திகைத்த சான்றோர்கள்? இதுவரை அவர் தங்களைச் சந்திக்க வந்ததே இல்லையே! அவர் எப்படிப் பாண்டிய நாட்டின் தென் கோடியிலிருந்து வருகைத் தருவார்?’’ எனக் கேள்வி எழுப்பினார்கள்.

அதற்கு மன்னர், ‘‘நான் இன்பம் பெற்றுச் செல்வத்தில் திளைக்கும் போது என்னைக் காண எனது நண்பன் வரவில்லை. ஆனால் நான் அல்லல் பட்டுத் துயரத்தில் வாடும்போது அவர் நிச்சயம் என்னைக் காண ஓடோடி வருவார்!’’ என நம்பிக்கையுடன் பதிலளித்தார்.

கோப்பெருஞ்சோழனின் நம்பிக்கை பொய்க்கவில்லை. மன்னரது நிலையைக் கேட்டு ஓடோடி வந்தார். அவரைக் கண்ட சான்றோர்கள் பெரும் அதிர்ச்சியடைந்தனர். நெடுங்காலமாகப் பிசிராந்தையாரைப் பற்றி மன்னர் கூறியதைக் கேட்டு அவர் நிச்சயம் முதிர்ந்து தளர்ந்து போய்த் தான் இருப்பார் என அவர்கள் கற்பனை செய்து வைத்திருந்தார்கள்! ஆனால் அவர்களின் கற்பனைப் படி பிசிராந்தையார் நரைதிரை உடையவராகத் தோன்றவில்லை. மாறாகக் கருத்த முடியுடன் இளமையாகவே காட்சியளித்தார். அதனைச் சுட்டிக்காட்டி அதற்குரிய காரணத்தைக் கேட்டார்கள். அதற்கு அவர் ‘அமைதி நிறைந்த என் இனிய வாழ்க்கையில் எனக்குக் கவலை என்பதே இல்லை. ஆதலால் தான் நான் வயோதிகமாக இல்லாமல் இளமையுடனே காட்சியளிக்கிறேன்’ என்றார். அந்த நேரத்தில் குறுக்கிட்ட இளவல், ‘‘ஒரே வரியில் இனிய வாழ்க்கை எனக் கூறினால் எப்படி அக்கா? விரிவாகக் கூறுங்கள்!’’ எனப் பணித்தார் கரிகாலன்.

“அதற்கவர், வயோதிகமானாலும் இளமையோடிருக்கும் காரணத்தைக் கேட்பீரானால் சிறந்த பண்பும் ஒழுக்கமும் நிறைந்த என் மனைவி, கல்வியில் சிறந்து விளங்கும் எனது புதல்வர்கள், குறிப்பறிந்து பணி செய்யும் என் பணியாளர்கள், அறத்தையே நாடிச் செய்யும் மன்னர் என இத்தனை பேருடன் நன்கு கற்ற சான்றோர்கள் என் அருகில் எப்போதுமே இருப்பதனால் எனக்குக் கவலை என்பதே தோன்றியதில்லை. ஆதலால் மூப்பும் அணுகியதில்லை எனக் கூறிவிட்டு கோப்பெருஞ்சோழனின் அருகில் அமர்ந்து அவரும் வடக்கிருந்தார்.

சில நாட்களில் வடக்கிருந்த அனைவரும் இறந்தார்கள். அவர்களின் உடல்கள் புதைத்த இடத்தில் நடுகல் நடப்பட்டது. பொத்தியாரும் தனக்கு மகன் பிறந்ததும் அவனைக் கண்டு மகிழ்ந்து, மன்னரைக் காண ஓடோடி வந்தார். அவர் அமர்ந்திருந்த இடத்தில் நடுகல் மட்டுமே இருந்ததைக் கண்டு வருந்தினார். கல்லாகி நின்ற சோழனின் நற்குணங்கள், அவர் செய்த அறச் செயல்கள் அனைத்தும் அவர் மனதில் தோன்ற கண்ணீர் பெருகி அவரும் அக்கல் முன்பு அமர்ந்து வடக்கிருந்து உயிர்விட்டார். கோப்பெருஞ்சோழன் செல்வத்தில் திளைக்கும் போது வராமல் அவர் துயரத்தில் பங்கெடுக்க ஓடோடி வந்த பிசிராந்தையார், மகன் பிறந்ததும் வா என்ற மன்னரின் கட்டளையை அவர் இறந்த பின்னரும் மதித்து உயிரை விட்ட பொத்தியார் இவர்களின் அன்பு காலத்தால் கடந்தது. நட்பிற்கு இலக்கணமாக மூவரும் வாழ்ந்தார்கள். எப்பேர்பட்ட அன்பு இது!” என ஆச்சர்யத்துடன் கூறி முடித்தாள் வானவல்லி.

அவள் கதையைக் கூறி முடித்ததும் பெரும் நிசப்தம் அவ்விடத்தில் சூழ்ந்திருந்தது.

வானவல்லி கதையைக் கூறி முடித்ததும் கரிகாலன் விறல்வேலை நோக்கி, “தலைவரே! இவர்களைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?” என வினவினார்.

சிறிது யோசித்தவன், “அப்பேற்பட்ட நண்பர்கள் இருவரைப் பெற்ற சோழ மாமன்னர்தான் பாக்கியசாலி. மரணத்திலும் அவரது நண்பர்கள் அவருக்குத் துணை வந்ததனால் அவர் அதிபாக்கியசாலி ஆகிவிட்டார். நானும்

என் நண்பனோடு அன்று சேர்ந்திருந்தால் எனக்கும் அந்தப் பேறு கிடைத்திருக்கும். மரக்கலத் தீயில் மாளாமல் திரும்பி வந்ததினால் நான் பாவி ஆகிவிட்டேன்!'' என்றபடியே அமைதியானான்.

''இவர்களைப் போலவே அன்பு செலுத்தும் ஓர் பெண் நம் நாட்டில் வசிக்கிறாள். தாங்கள் அறிவீர்களா?'' எனக் கேட்டு மூவரின் முகத்தையும் பார்த்தார் கரிகாலன்.

''இந்தக் கலிகாலத்திலா?'' ஆச்சர்யத்தோடு வினவினாள் வானவல்லி.

''ஆமாம் அக்கா! என்னைக் கேட்டால் பிசிராந்தையாரை விட அப்பெண்ணே சிறந்தவள் என்பேன். நானே அவளைச் சந்தித்துத் தெரிந்துகொண்டேன்!''

''அப்படியா? எங்கே?''

''புகாரில் தான்!''

''புகாரிலா?'' ஆச்சர்யத்தோடு ஒருசேர வினவினார்கள் வானவல்லியும், மரகதவல்லியும்.

''ஆம்! புகாரில் தான் அப்பெண் வசிக்கிறாள். ஒருவிதத்தில் அப்பெண் எனக்குத் தங்களைப் போலவே மற்றொரு சகோதரி தான்!'' என்றான்.

''என்னைப் போலவே மற்றொரு சகோதரியா? புரியவில்லையே!'' இது வானவல்லியின் குரல்.

''அக்கா, புகாரில் எனக்கொரு உழவுத் தொழில் செய்யும் என் வயதை ஒத்த நண்பன் இருக்கிறான். அவனுக்குச் சில மாடுகளும் உண்டு. அங்குச் சென்றால் அவனது மாடுகளை நான்தான் மேய்ப்பேன். அவனுடன் பழகிய பின் தான் உழவுத் தொழில் எவ்வளவு முக்கியம் என்பதை அறிந்தேன். இந்திரத் திருவிழாவின் போது நானும் அவனும் தான் முப்பது நாளும் ஊர் சுற்றுவோம். அப்போது தான் முதன் முதலில் அப்பெண்ணைச் சந்தித்தேன். வாற்போர் நடந்த இடத்தில் கையில் மாலையுடன் நிற்பாள். அதே

பெண் வேறொரு மாலையோடு புரவித்தேர் போட்டி நடக்கும் இடங்களிலும் நிற்பாள். பல இடங்களில் ஒற்றை மாலையோடு தனியாக நிற்பாள். அவளது செயல் எனக்குப் பெருத்த ஆச்சர்யத்தை வழங்க அவளிடமே சென்று கேட்டேன். ‘‘நான் பார்க்கும் போதெல்லாம் கையில் மாலையுடனே தனியாக நிற்கிறீர்? செல்லும் போது கையோடு கொண்டுசென்று விடுகிறீர்களே? ஏன் அக்கா?’’ என வினவினேன்.

அதற்கு அவள் தூரத்தில் வாற்சமர் புரிந்துகொண்டிருந்த வீரனைச் சுட்டிக் காட்டி, ‘‘அனைத்து போட்டிகளிலும் வெற்றிவாகை சூடும் அந்த வெற்றி வீரனுக்கு இந்த வெற்றி மாலையைச் சூடலாம் எனத் தான் ஒவ்வொரு முறையும் கொண்டு வருகிறேன்! ஆனால், அவர் அருகில் செல்ல என்னால் இயலாததால் திரும்பச் சென்றுவிடுவேன்!’’ என்றாள்.

‘‘மாலையுடன் தாங்கள் இங்குத் தனியாகவே நின்றால் அவர் கழுத்துக்கு மாலை எப்படிச் சென்று சேரும்! அவர் முன் சென்று மாலையிட்டு விட வேண்டியது தானே! வெற்றி பெரும் வீரர்களுக்குப் பெண்கள் வெற்றி மாலையைச் சூட்டும் பழக்கம் நம்மூரில் இருப்பது தானே?’’ என நான் வினவினேன்.

அதற்கு அப்பெண், ‘‘அதோ பாருங்கள்!’’ எனக் கைகாட்டினாள். அங்கு வெற்றி பெற்ற அந்த வீரனுக்குப் பல பெண்கள் மாலையிட முயன்றாலும் யாரையும் ஏறெடுத்துப் பார்க்காமல் அவ்வீரன் சென்றுகொண்டிருந்தான். ‘‘அவருக்கு மாலையிட பல பெண்கள் காத்திருக்கிறார்கள். ஆனால் அவ்வீரரனின் மனதை மருவூர்ப் பாக்கத்துப் பெண் ஒருத்தி எப்போதே கொள்ளை கொண்டு விட்டாள். நானும் அவருக்கு முன் சென்று நின்றால் அவர்களுள் நானும் ஒருத்தியாகிவிடுவேன். என்னால் தோல்வியை ஏற்றுக்கொள்ள இயலாது தம்பி!’’ என்றாள்

அவள் கூறியதைக் கேட்டு பெரும் வியப்பும், ஆச்சரியமும் தான் எனக்கு ஏற்பட்டது. பரிதாபத்துடன் நான், ‘‘எத்தனை காலம் தான் இப்படியே நிற்கப் போகிறீர்கள்?’’ என நான் வினவினேன். அதற்கு அவள் ‘‘பல வருடங்களாக இப்படியே தான் கழித்துக்கொண்டு இருக்கிறேன்! இன்னும் எத்தனை காலமோ?’’ எனச் சிரித்தபடியே பதிலளித்தாள். அப்பெண்ணின்

சிரிப்பில் இருந்த அன்பையும், நம்பிக்கையையும் கண்ட நான் அப்போது திகைத்துத்தான் போனேன். மீரா எப்படிக் கண்ணனைக் காணாமலே அன்பு கொண்டு காலத்தைக் கழித்தாலோ அப்படியே தான் அப்பெண்ணும். மீராவும் ஒருவேளை இப்பெண்ணைப் போலவேதான் காத்திருந்திருப்பாளோ என எண்ணிக்கொண்டேன் நான்!'' என்றார் கரிகாலன்.

ஆர்வத்தோடு இருந்த வானவல்லி, ''யார் அப்பெண்?'' என வினவினாள்.

''அந்தப் பெண் யார் என்று நாம் அறிவதற்கு முன் அந்த வீரன் யார் என்று நாம் முதலில் அறிந்துகொள்வோமே!'' எனக் கூறி அமைதியானார்.

இரு பெண்களும் அவரது முகத்தையே பார்த்தார்கள். ''அந்தப் பெண் சுட்டிக் காட்டினாளே, அங்கு நம் உப தலைவர் தான் வாற்சமரிட்டுக் கொண்டிருந்தார்! அவள் கூறிய அந்த வெற்றி வீரர் நம் உப தலைவர் விறல்வேல் தான்! அவள் கூறிய அந்த மருவூர்ப்பாக்கத்துப் பெண் தாங்கள் தான் அக்கா!'' எனக் கூறி முடித்தார் இளவல். அதைக்கேட்ட இருவரும் அதிர்ச்சியாகி ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். பெரும் நிசப்தம் அங்கு மீண்டும் நிலவியது.

அடுத்த கணையை உபதலைவன் மீது கரிகாலன் வீசினார். ''தலைவரே! தங்களுக்குப் புகாரில் வசிக்கும் விறலி பூங்கோதையைத் தெரியுமா?''

ஏதும் கூற இயலாமல் விறல்வேல் அமைதியுடன் இருக்க வானவல்லி, ''விறலி எனக் கூற வேண்டாம்! கணிகை எனக் கூறு! அவளை நம் உபதலைவர் நன்கு அறிவார்!'' எனக் கடும் கோபத்துடன் தெரிவித்தாள்.

அவள் பூங்கோதையைக் கணிகை எனக் கூறியதைக் கேட்டுக் கோபம் கொண்ட இளவல், ''அக்கா! அப்பெண்ணைப் பற்றி இனியொருமுறை அப்படிக் கூறாதீர்கள்? நம் தலைவர் மீது அவள் கொண்டுள்ள அன்பு தெய்வீகமானது! அதனைத் தவறாகச் சித்தரித்தால் என்னால் பொறுக்க இயலாது!'' எனக் கடும்கோபம் கொண்டார்.

கரிகாலன் கூறியதைக் கேட்டு ஆத்திரமடைந்த வானவல்லி, “பகற்பொழுதில் பௌத்த விகாருக்கு முன் அப்பெண்ணை இவர் தூக்கிக்கொண்டு வந்ததையும், தூக்கியது மட்டுமல்லாமல் அவளுடன் இவர் கொஞ்சிக் குலாவி மகிழ்ந்து வந்ததையும் நானே எனது கண்களால் கண்டேனே! பிறகு அவளைக் கணிகை எனக் கூறாமல் வேறு எப்படிக் கூறுவது!” எனவும் கொதித்தாள்.

வானவல்லி கூறியதைக் கேட்ட இளவல் விறல்வேலிடம், “தலைவரே! அக்கா கூறுவது உண்மைதானா?” என வினவ அதற்கவன் தலையை மட்டும் ஆட்டி “ஆமாம்” எனத் தெரிவித்தான்.

அதைக்கேட்ட பின் கரிகாலனை விட மரகதவல்லி பெரும் துயரடைந்தாள். ஏனெனில் மரகதவல்லி விறல்வேல் மீது வைத்திருக்கும் நம்பிக்கை அபரிதமானது. பௌத்த விகாருக்கு முன் அவர் விறலியை சுமந்து சென்றதாக வானவல்லி கூறியதை அவளால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. பிறகு உப தலைவனும் ஒத்துக்கொண்டது அவளுக்குக் கடும் அதிர்ச்சி அளித்தது. “கடந்த சில தினங்களாக அக்கா விரக்தியுடனும், அழுகையுடனும் இருந்ததற்குக் காரணம் இதுதானா?” என எண்ணியவளுக்கு மனம் பதறியது.

“தலைவரே! விறலியைத் தாங்கள் சந்தித்திருந்தால் அவரது அன்பும் தங்களுக்கு நிச்சயம் புரிந்திருக்கும் தானா?”

“ம்ம்ம்” என மட்டும் பதிலளித்தான்.

“அப்படியெனில் இந்த வருட இந்திரத் திருவிழாவின் போது தங்கள் கழுத்தில் விழும் வெற்றி மாலை பூங்கோதையுடையது தான் எனக் கூறுங்கள்!” கரிகாலனின் உற்சாகம் அங்கிருந்த வானவல்லி, மரகதவல்லி இருவருக்கும் எரிச்சலை அளித்தது.

“அதற்கு எந்தவொரு அவசியமும் ஏற்படாது!” அவனது வார்த்தைகள் உயிர் இன்றி வெளிவரத் தொடங்கின.

“அவசியமில்லையா?”

“ஆம்!”

“ஏன் தலைவரே அப்படிக் குறிப்பிடுகிறீர்கள்?”

“அப்பெண் நேற்றே இறந்துவிட்டாள்!” எனத் தெரிவித்த உபதலைவனின் கண்களில் இருந்து துளிக் கண்ணீரும் கசிந்திருந்ததை விளக்கு வெளிச்சத்தில் யாராலும் கவனிக்க இயலவில்லை.

ஆனால் அதைக்கேட்ட கரிகாலன் மட்டும் துடிதுடித்து எழுந்து விறல்வேல் அருகில் சென்று, “என்ன கூறுகிறீர் உப தலைவரே? பூங்கோதை இறந்துவிட்டாளா? உங்களுக்கு எப்படித் தெரியும்?” எனக் கடும் அதிர்ச்சியுடன் வினவினார்.

“ஆம்! அவள் இறந்துவிட்டாள். நேற்று காலைதான் என் தளபதி பரதவன் குமரனிடமிருந்து செய்தி வந்தது!”

“அவள் இறப்பிற்கு யார் காரணம் தலைவரே? குமரனிடமிருந்து இந்தச் செய்தி மட்டும் தான் வந்ததா? அல்லது அவள் எப்படி இறந்தாள் என்பதையும் கூறினாரா? யார் காரணம் எனக் கூறுங்கள் அவனைக் கொன்றுவிட்டுத்தான் மறு வேலை!” கடுமையாக ஆவேசத்துடன் உரக்கப் பேசி தனது வாளையும் உருவினார் கரிகாலன்.

“அவள் இறப்பிற்கு நான் தான் காரணம். என்னால் தான் அவள் இறந்தாள்!” இதைக்கேட்ட மற்ற மூவரும் அதிர்ச்சியில் கல்லெனச் சிலையானார்கள்.

உருவிய தனது வாளை கீழே போட்டுவிட்டு “தலைவரே!” என நம்ப இயலாமல் கேட்டார்.

“ஆமாம். அவளது இறப்பிற்கு நான் தான் காரணம். இந்தப் பாவிக்காகத்தான் அவள் தனது உயிரைத் துறந்தாள்!”

“தங்களுக்காக உயிரைத் துறந்தாளா? எனக்குப் புரியவில்லை தலைவரே! தெளிவாகக் கூறுங்கள்?”

விறல்வேல் வருத்தத்துடன் கூறத் தொடங்கினான். “சம்பாபதி வனத்தில் வளவனார் மகளைச் சில கள்வர்கள் தாக்கினார்கள். அவர்களைத் தேடி விறலியர் மற்றும் கணிகையர் விடுதிக்குச் சென்றேன். அங்கு என்னைச்

சிலர் மறைந்திருந்து நஞ்சு தோய்க்கப்பட்ட அம்பினால் தாக்கினார்கள்'' என்றபடியே நா தழுதழுக்க அமைதியானான்.

''மேற்கொண்டு கூறுங்கள் தலைவரே, குறி தவறி அவள் மீது பாய்ந்துவிட்டதா?''

''இல்லை. குறித் தவறாமல் அந்த அம்பு என்னை நோக்கித்தான் வந்தது.''

''பிறகு?''

என்னைக் காப்பாற்றுவதற்கு அந்த அம்பினை அவள் தாங்கிக்கொண்டாள்! அவளைத் தூக்கி வந்து பௌத்த விகாரில் சேர்ப்பித்து விட்டுத் தான் உறைந்தைக்கு வந்தேன்!''

அவன் கூறியதைக் கேட்ட வானவல்லி அப்போதுதான் பௌத்த விகாரில் அவசரத்தில் தான் செய்த பிழையை உணர்ந்தாள். அதிலிருந்து மீள்வதற்குள் கரிகாலன் அவளை நோக்கி, ''அக்கா! அப்பெண்ணைக் கணிகை என அழைத்தீர்களே! அவளா கணிகை?'' எனக் கேட்க வானவல்லி பதில் ஏதும் கூற இயலாமல் தடுமாறினாள்.

''அக்கா! நான் கூறுவதைக் கோபம் கொள்ளாமல் சிந்தித்துப் பாருங்கள்! தங்கள் தமையனுக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத் தான் இலங்கைத் தீவைச் சுற்றிப் பார்க்காமல் கூட உடனே நம் உப தலைவர் அவரை அழைத்துவந்தார். ஒருவேளை அவர்கள் இலங்கைத் தீவிலேயே தங்கியிருந்தால் அவர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாமல் இருந்திருக்கலாம். யார் கண்டது! அது விதி அக்கா! யாரால் என்ன செய்ய இயலும்! உங்கள் தமையன் திவ்யனது மரணத்திற்குத் தாங்கள் உப தலைவர் தான் காரணம் என எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். அது பெரும் பிழை அக்கா. விறல்வேல் மற்றும் திவ்யன் இருவருக்குமுள்ள நட்பினை நான் அறிவேன். உப தலைவர் திவ்யன்தான் எனக்குப் போர்ப் பயிற்சிகளைக் கற்றுக் கொடுத்தார். அப்போதெல்லாம் அவர் என்னிடம் போர்ப் பற்றிப் பேசியதை விட உப தலைவரைப் பற்றிப் பேசியது தான் அதிகம். வாற்சமரில் நீ எப்போது விறல்வேலின் தாக்குதலைத் தாக்குப்பிடித்து

நிற்கிறாயோ? அப்போதுதான் உனது பயிற்சி முழுமையடையும் நீ முழு வீரனாவாய் எனப் பலமுறை என்னிடம் கூறியிருக்கிறார். பலமுறை அவர் தன்னைவிட உப தலைவரையே முன்னிலைப் படுத்தியிருக்கிறார். அவர்களது நட்பு இணையில்லாதது! மரக்கல விபத்தன்று என்ன நேர்ந்திருக்கும் என நான் உங்களுக்குக் கூறுகிறேன். மரக்கலம் விபத்தாகி எரிந்துகொண்டிருக்கும் போது தங்கள் தமையன் தான் விறல்வேலை காப்பாற்றி அனுப்பியிருப்பார். அவர் தப்பிக்குமுன் மரக்கலம் முற்றிலும் சேதமாகி அதில் சிக்கியிருப்பார். இதுதான் நடந்திருக்கும். விபத்து நேர்ந்த காலத்தில் திவ்யன் தான் உப தலைவர், விறல்வேல் அவரது தளபதிகளுள் ஒருவர். அப்போது திவ்யனின் கட்டளைக்கு இவர் பணிந்தே தீர வேண்டும். தனது தளபதியை ஆபத்தில் சிக்கவைத்துவிட்டு அவர் அங்கிருந்து தப்பித்து வந்திருந்தால் அதைவிடப் பெருத்த அவமானம் அவருக்கு வேறு எதுவும் ஏற்பட்டிருக்காது. அவர் செய்தது தான் சரி! நாளை நம் தலைவரோடு நான் செல்லும்போது ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் என்னைத் தான் முதலில் காப்பாற்றி அனுப்புவார். அதன் பிறகு தான் அவர் தன்னைப் பற்றியே சிந்திக்க ஆரம்பித்திருப்பார். இதுதான் தலைவரின் கடமை! தாங்கள் எப்படி உங்கள் தமையனை எண்ணிப் பலவாறு வாடுகிறீர்களோ அப்படியே நம் உபதலைவரும் அவரது நண்பனை இழந்த துயரில் வாடுகிறார். துயரம் தங்கள் இருவருக்குமே பொதுவானதாக இருக்கும்போது அவர்தான் அதற்குக் காரணம் என அவர் மேல் பழியைப் போட்டு அவரை மேலும் துன்புறுத்துவது சரிதானா? தாங்கள் துயரமாக இருந்தால் உங்களுக்கு ஆறுதல் சொல்ல உங்கள் அன்னை, தந்தை எனப் பலர் இருக்கிறார்கள். ஆனால் அவருக்கு யார் இருக்கிறார்கள்? தாங்கள் தானே அவருக்குத் துணையாகப் பக்க பலமாக இருக்கவேண்டும். இதனை எப்படித் தங்களுக்குக் கூறுவதென்று தெரியாமல் தான் உங்களைக் கதைகூறச் சொல்ல சொல்லி பிறகு தொடங்கினேன். ஆனால், விறலி இறந்துவிட்டாள் என்ற செய்தி எனக்கும் பேரதிர்ச்சி தான் அக்கா!”

வானவல்லி முதன்முறையாகத் தான் இத்தனை நாட்களாகச் செய்த பிழைகளை எண்ணிப் பார்த்தாள். இதற்கு முன் பலர் விறல்வேலிற்கு ஆதரவாக வானவல்லியிடம் பேசியுள்ளனர். அப்போதெல்லாம் அவர்களின் பேச்சுகளைக் காதில் மட்டுமே வாங்கிக் கொள்வாள். ஆனால், சிந்தித்தது

கிடையாது. வானவல்லியின் தாயார், அவளது தோழிகளான பத்திரை மற்றும் மரகதவல்லி பலமுறை அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அப்போதெல்லாம் இவளுக்குக் கோபமும் ஆத்திரமும் தான் பெருகும். ஆனால் முதன் முறையாக வருந்தத் தொடங்கினாள் வானவல்லி! ஏனெனில் இந்தமுறை அறிவுரை கூறியவர் சோழ இளவலான கரிகாற் பெருவளத்தான். தன் பிழையை அவள் நினைக்க நினைக்க அவளுக்குக் கண்ணீர் பெருக்கெடுத்தது. அவளது மனதில் இருந்த தயக்கம் அனைத்தும் கண்ணீராய் வெளிப்பட அவளது கண்கள் விறல்வேலைத் தேடியது. மீண்டும் அவள் “அத்தான்” என அழைத்தபடியே அவன் அமர்ந்திருந்த இடத்தை நோக்கினாள்! அங்கு அவன் காணவில்லை. அவன் அங்குக் காணாததைக் கண்டு திகைத்ததைப் பார்த்த கரிகாலன், “அக்கா, அவர் அப்போதே துக்கம் தாங்காமல் சென்றுவிட்டார்?” என்றான்.

கண்ணீரைத் துடைத்தபடியே வானவல்லி வெளியே வந்து தேடினாள். ஆனால், அதற்குள் விறல்வேல் அங்கிருந்து மறைந்துபோயிருந்தான். விறல்வேலைக் காண இயலாத வானவல்லி காவிரிக் கரையோரம் இருளில் கிடந்த பாறை ஒன்றின் மீது அமர்ந்தபடியே அழுதுகொண்டிருந்தாள். அவளது கண்ணீர்த் துளிகள் ஒவ்வொன்றாகப் பொன்னி நதியில் முத்து முத்தாகச் சிந்திக் கொண்டிருந்தது!

அவ்வேளையில் அவளது தோள்களை ஆதரவாக ஒரு கை பற்றியது. எங்கே தன் தலைவர் தான் வந்துவிட்டாரோ என ஆர்வத்துடன் பின்னால் பார்த்தாள். அங்கே நின்றுகொண்டிருந்தது மரகதவல்லி. விறல்வேல் சென்றுவிட்டதை எண்ணிய வானவல்லிக்குத் துக்கம் தொண்டையை அடைக்க மரகதவல்லியின் மீது சாய்ந்துகொண்டு அழத்தொடங்கினாள்! அழுவதைத் தவிர அவளால் வேறெதையும் அப்போது செய்ய இயலவில்லை!

**அடிக்குறிப்பு :**

1. கரிகாலனின் இயற்பெயர் வளவன் என்பதுதான். அவர் காவிரியின் இருபுறத்திலும் கரையை எழுப்பி, உறையூர் அருகே அணையைக் கட்டி காடுகளை அழித்து வயல்வெளிகளாக்கிச் சோழ நாட்டை வளமுடைய நாடாக்கியவன். ஆதலால் தான் கரிகாலனை கரிகாற்

பெருவளத்தான் என சிறப்புடன் அழைப்பர். திருமாவளவன், பெருவளத்தான், மாவளத்தான் என்பன போன்ற பெயர்கள் இவரது செல்வ வளத்தைக் காட்டுவன. இயல்தேர் வளவன் எனவும் புறநானூற்றில் குறிப்பிடப்படுகிறார்.

2. வடக்கிருத்தல்: தருப்பைப் புல்லின் மீது வடக்குத் திசையை நோக்கி அமர்ந்து உண்ணா நோன்பிருந்து உயிர் துறப்பது ஆகும். வடக்கிருத்தலை சல்லேகனை எனவும் கூறுவர். பொறுக்க முடியாத மனவேதனையைத் தருகிற இடையூறு, தீராத நோய், மிகுந்த மூப்பு இவை உண்டான காலத்தில் சல்லேகனை செய்து உயிர் விடலாம் என்பது சமண மதக் கொள்கை.

இடையூறு ஒழிவில்நோய் மூப்புஇவை வந்தால்
கடைதுறத்தல் சல்லே கனை. (பழம் பாடல்)

# 37. சு யநலம்

பொன்னி நதி சோழ வள நாட்டில் முப்போகமும் நெல் விளைவித்த காலம் அது! கண்ணுக்கு எட்டிய தூரமெங்கும் நிலத்தின் மீது மரகதப் பட்டை போர்த்தியபடி பசுமையாய்க் காட்சியளித்தன விளை நிலங்கள். தை மாதத்தில் நவுரை போகத்தில் பயிரிடப்பட்ட நெல் பயிர்கள் அனைத்தும் பங்குனியின் இறுதியில் கதிர்களை விட்டு பசுமையாய் வளர்ந்து வீசும் காற்றில் மெல்ல தலையாட்டி ரம்யமாய் ஆடிக்கொண்டிருந்தன. காற்றில் தலையாட்டியபடி அழைக்கும் நெற்பயிர்களைக் கண்டும் காணாமலும் யாரால் தான் செல்ல இயலும். அதிலும் நெற்பயிர்கள் அனைத்தும் பூ வைத்து கதிர்விட்டுக் காற்றினில் அசைகையில் தோன்றும் வனப்பு இருக்கிறதே! அதற்கு இணைதான் உலகினில் உண்டா? பருவம் வந்து செழித்த வனப்புடைய கன்னிகள் எதிரில் வந்தால் கூடத் தலையைக் குனிந்தபடியே செல்லும் உடல் உணர்வு, ஆசை, விருப்பம் என அனைத்தையும் துறந்த திகம்பர சமண முனிவர்கள் கூட வனப்போடு அசைந்தாடும் நெற்கதிர்களைக் கண்டால் நின்று களித்துவிட்டுத்தான் செல்வார்கள்! உலர்ந்த காற்று ஈரக் கூந்தலைத் தழுவி வாசனையோடு வருவதைப் போன்று வயல்களிலிருந்து வெளிப்பட்ட மண் வாசனை இன்னும் சற்று நேரம் அங்கு நின்றுச் செல்லச் சொல்லும்!

மண் வாசனையுடன் அசைந்தாடும் நெற்பயிர்கள் மங்கையின் கருங்குழல்களைப் போன்று காற்றில் அலையலையாய் வீசி காண்பவர்களின் மனதினைக் கொள்ளை கொள்பவை. விளைந்து அசைந்தாடும் நெற்பயிர்களும் பருவம் வந்த கன்னிகளும் ஒன்றுதான்! இரண்டுமே அழகிலும் வனப்பிலும் ஈடு இணையில்லாமல் மனத்தைக் கொள்ளைகொள்ளச் செய்பவை. முன்னதைக் கண்டால் மனம் அமைதி பெறும், பின்னதைக் கண்டால் அமைதியான மனதும் ஆடத்தொடங்கும்.

அந்த வயல் வரப்புகளின் வழியாகச் சென்ற திகம்பர அடிகளார் ஈழவாவிரையர் தன் கவனத்தை எதிலும் செலுத்தாமல் விறுவிறுவென்று கவலையுடன் நடந்துகொண்டிருந்தார். வயல்களிலிருந்து சேற்றினில் தன் இரையைத் தேடிக்கொண்டிருந்த கொக்குகளும் நாரைகளும் 'இவ்வனப்பு மிகுந்த காட்சிகளை இரசிக்கும் அளவிற்குக் கூட இரசனை இல்லாத இவர் வாழ்ந்துதான் என்ன பயன்!' என அவரைக் கேலி செய்து பரிகசித்துக் கத்திக்கொண்டிருந்தன.

ஈழவாவிரையர் கண்களுக்கு விருந்தளிக்கும் பசுமை, மயக்கும் மண் வாசனை, காதுகளுக்கு இனிய பறவையின் ஒலிகள் என எதிலும் தன் கவனத்தைச் செலுத்தாமல் ஏதேதோ பலவித சிந்தனைகளுடன் புகாரை நோக்கி நடந்துகொண்டிருந்தார். அவரது முகத்தில் கவலைக் குறிப் படர்ந்திருந்தது.

ஒரு நாழிகை நேரத்திற்கு மேலே புகாரை நோக்கி வேகமாக நடந்து வந்தவர் புகாரின் ஓரமாகக் காவிரிக் கரையோரம் இருந்த மாளிகையை வந்துசேர்ந்தார். அங்கு யாரும் இல்லாததைக் கண்ட அடிகளார் அந்நேரத்தில் சற்று எரிச்சல் படவே செய்தார். கோபமும், கவலையும் ஒருசேர அவரை வறுத்த காவிரியில் மூழ்கி எழுந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.

பின்னும் ஒரு சாமப் பொழுதிற்குப் பின் அங்கு இரும்பிடர்த்தலையரும், மகேந்திர வளவனாரும் வந்து சேர்ந்தார்கள். அடிகளார் அவர்களை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்.

இரும்பிடர்த்தலையர், "அடிகளாரே! சென்ற காரியம் பழம் தானே?" என வினவினார்.

பதிலுக்கு அடிகளார், "உப தலைவன் விறல்வேல் எங்கே? உங்களுடன் அவனையும் தானே அழைத்துவரச் சொல்லியிருந்தேன்!" என வினவினார்.

"அவன் புகாரில் இல்லை! இளவலைத் தேடிச் சென்றுள்ளான். எங்குச் சென்றிருக்கிறான் என்ற எந்த விவரமும் தெரியவில்லை!" என வளவனார் பதிலளித்தார்.

மீண்டும் இரும்பிடர்த்தலையர், "அடிகளாரே, இளவல் பற்றிய தகவல் அறிய சென்றீர்களே? அவசரமாக ஏன் இங்கு வரச் சொன்னீர்கள்!" என மீண்டும் அவசரத்துடன் வினவினார்.

"எவ்வளவோ முயன்றும் இளவலைப் பற்றி எந்தவித தகவலையும் அறிந்துகொள்ள இயலவில்லை. அதற்குள் செங்குவீரனை சிலர் நஞ்சு தோய்த்த அம்பினால் தாக்கினார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆதலால் தான் பதற்றத்துடன் ஓடி வந்தேன்!" என்றார்.

"அவனுக்கு எந்த ஆபத்தும் நேரவில்லை. அந்த விறலிப் பெண் அவனைக் காப்பாற்றி விட்டாளே!" எனத் தெரிவித்தார் வளவனார்.

"அந்த விறலியின் பெயர் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?"

"அவள் பெயர் பூங்கோதை!"

பூங்கோதை என்ற பெயரைக்கேட்டு அதிர்ச்சியடைந்த ஈழவாவிரையர். கண்களில் நீர் பெருகியபடி, "விறல்வேலிற்கு இருந்த கடைசி இரத்த சொந்தத்தையும் அவன் இழந்துவிட்டானே!" எனத் துடித்தார்.

அவர் கூறியதைக் கேட்ட மற்ற இருவருமே செயலற்று நின்றார்கள். இருவரைப் பொறுத்தவரை விறல்வேல் என்பவன் உறவுகள் அற்றவன். அவனது தாய் விறலியும் அவனை ஈன்ற போதே மரணித்துவிட்டவள். அவன் விறலியின் மகன் என்பதற்காகத் தான் அவனுக்கு விறல்வேல் என்ற பெயரையே சூட்டினார்கள். அடுத்து அவர் விறல்வேலைப் பற்றி என்ன கூறப்போகிறார் என அறிய இருவரும் அடிகளாரின் வாயையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரம் ஏதும் பேச இயலாமல் நின்றுகொண்டிருந்த திகம்பர அடிகளார் சம்பந்தம் இல்லாமல், "தான் ஆடாவிட்டாலும் தன் தசையாடும் எனக் கூறுவார்களே! அந்த உண்மையை நான் நேரிலே கண்டுவிட்டேன்!" என்றார்.

"அடிகளாரே, புதிர் போடாதீர்கள்! தெளிவாகக் கூறுங்கள்" எனப் பணித்தார் இரும்பிடர்த்தலையர்.

“விறல்வேலைக் காக்க தனது உயிரைக் கொடுத்து இறந்து விட்டாளே விறலி பூங்கோதை! அவள் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?”

“யார் அடிகளாரே!” இருவரும் ஒரு சேர ஆர்வத்துடன் கேட்டார்கள்!

“விறல்வேலின் அத்தை மகள்!”

“அத்தை மகளா?” “இது உண்மை தானா!” “அவனுக்குத்தான் உறவினர்கள் யாரும் கிடையாதே!” “விறல்வேலைக் கொண்டு வந்து சிறு வயதில் என் பயிற்சிப் பாசறையில் சேர்த்தவரும் தாங்கள் தானே!” “இன்று இப்படிக் கூறுகிறீர்களே!” என இரும்பிடர்த்தலையரும் வளவனாரும் ஒருவருக்கொருவர் மாறி மாறி அடிகளாரிடம் கேள்வி எழுப்பினார்கள்.

இருவரும் பலவாறு அதிர்ச்சியில் கேள்வி எழுப்பியதைக் கேட்டு பொறுமையுடன் கூறலானார். “ஆமாம்! விறலி பூங்கோதை என்பவள் செங்குவீரனின் அத்தை மகள் தான். அவனுக்கிருந்த கடைசிக் குருதிச் சொந்தமும் அவள்தான். இருவருக்குமிடைப்பட்ட அந்தக் குருதி உறவை இருவரும் அறிந்திருக்கவில்லை. அதுவும் அற்றுப்போய் விட்டது. இந்தப் பேருண்மையை அவன் அறிந்தால் அவன் என் மீது வைத்திருக்கும் அன்பும், மரியாதையும் என்ன ஆகும்?” எனக் கலங்கினார்.

ஈழவாவிரையரும் கண் கலங்குவதைக் கண்ட இருவரும் வியந்து திகைப்புடன் அவரையே பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

தன் மனதில் யாரும் அறியாதவண்ணம் பாதுகாத்து வைத்திருந்த பெரும் இரகசியம் ஒன்றைக் கூறத்தொடங்கினார். “கிட்டத்தட்ட இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நானும் என் நண்பன் வேளாதனும் கலிங்கம் வரை வாணிபத்திற்குச் சென்று திரும்பியிருந்த சமயம். அவரது வீட்டிற்கு அவர் சென்றுவிட்ட பின் நான் எனது வீட்டிற்குச் செல்லுமுன் நோய்வாய்ப் பட்டிருந்த எனது நண்பனைக் காண அவனது இல்லத்திற்குச் சென்றேன். அங்கு எனக்குப் பெருத்த அதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது. அங்கு எனது நண்பனைக் காணவில்லை. மாறாக அங்கு ஒரு பெண் வலியால் துடிக்கும் சத்தம் கேட்க நான் உள்ளே சென்றேன். அங்கு என் நண்பனின் தங்கை நோய்ப்பட்டு வேதனையில் துடித்துக் கொண்டிருந்தாள். எனது நண்பனின் குடும்பம் கூத்துக்

குடும்பம். கூத்துக்கட்டிப் பிழைப்பதே அவர்களின் தொழில். அவள் அருகில் சென்ற நான் அவளை அடையாளம் கண்டு என் வீட்டிற்கு அழைத்தேன். அவள் மறுத்துவிட்டாள். அவளது சுர நோய் மற்றவர்களுக்குப் பரவிவிடும் என அவள் அஞ்சினாள். அவளுக்கு உதவி வேண்டுமா? எனக் கேட்டேன். பதிலுக்கு அவள் எதையுமே கூறாமல் அவன் அருகில் கடும் சுரத்துடன் கிடந்த ஒரு பையனைத் தூக்கி என்னிடம் நீட்டினாள்.

எனக்கு எதுவுமே புரியாமல் அக்குழந்தையை வாங்கி, "ஏன் அம்மா தங்கள் குழந்தையை என்னிடம் கொடுக்கிறீர்கள்? குழந்தைக்கு வைத்தியம் பார்க்க வேண்டுமா?" எனக் கேட்டேன்.

"ஆமாம் அண்ணா! என்னுடன் இருந்தால் இவனும் நோய்வாய்ப்பட்டு மடிந்துவிடுவான்! என் அண்ணனின் குடும்பம் இவனால் தான் செழிக்க வேண்டியிருக்கிறது. கடவுள் தான் தங்களைத் தகுந்த நேரத்தில் அனுப்பி வைத்திருக்கிறார்.இவனது உயிரைக் காப்பாற்றி விடுங்கள்!" எனக் கெஞ்சினாள்.

உயிர் பிரியப்போகும் நேரத்தில் அவளது வேண்டுகோளை நிராகரிக்க இயலாத நான் அவள் கூறியதை ஏற்றேன். உடனே அவள், "அண்ணா, இன்னொரு வாக்கு வேண்டும்!" என்றாள்.

நான் "என்ன?" என வினவினேன்.

அதற்கு அவள், "என் அண்ணனுக்கு நான் இவனைப் பண்பும், அறிவும் மிகுந்த ஒரு வீரனாக வளர்ப்பேன் என வாக்களித்தேன். ஆனால், அதற்குள் கடவுள் என்னை அழைக்கச் சித்தம் செய்துவிட்டார். அதைத் தாங்கள் தான் நிறைவேற்றிவைக்க வேண்டும்!" என்றாள்.

"நீ கூறியதைப் போன்று தங்கள் மருமகனை நான் மிகச் சிறந்த போர் வீரனாக வளர்க்கிறேன்" எனக் கூறிவிட்டு "குழந்தையின் பெயர் என்ன?" எனக் கேட்டேன். அதற்கு அவள் சிரித்துக்கொண்டே "நீங்களே ஒரு நல்ல பெயரை சூட்டுங்கள் அண்ணா!" என்றாள். அந்தப் பெண்ணின் முகத்தில் தோன்றிய சிரிப்பில் அவள் என் மீது கொண்ட நம்பிக்கையைக் கண்டேன். அப்போது அக்குழந்தைக்குத் திருமுருகன் பெயரான வெற்றிவேல் எனப்

பொருள்படும் ‘‘விறல்வேல்’’ எனப் பெயரிட்டேன். இவன் எப்போதும் தான் ஒரு விறலியின் மகன் என்பதை மறக்கக் கூடாது என்பதற்காகவும் அப்பெயரைச் சூட்டினேன். விறல்வேலை வீரனாக வளர்ப்பேன் என நான் ஏற்றுக்கொண்ட காரியம் சோதனை மிகுந்தது தான். அந்நேரத்தில் எந்தக் கவலையும் கொள்ளாமல் அப்பெண்ணிற்கு நான் வாக்களித்தேன். அதே நேரம் அவளுக்கு அருகில் கிடந்த மற்றொரு கைக்குழந்தை வீரிட்டு அழத்தொடங்கியது.

‘‘அம்மா, குழந்தை அழுகிறதே! அக்குழந்தை யார்? என வினவினேன்.

அப்பெண் ‘‘அண்ணா, இவள் எனது மகள்! இவள் பெயர் பூங்கோதை.’’ என்றாள்.

‘‘விறல்வேலைப் போலவே பூங்கோதையையும் என்னுடன் அனுப்பி விடு. அக்குழந்தையையும் நான் காப்பாற்றி விடுகிறேன்!’’ என்றேன்.

‘‘அய்யா இவனைத் தாங்கள் ஏற்றுக்கொண்டதே எனது பாக்கியம். எங்கே என் அண்ணனுக்குக் கொடுத்த வாக்கினைக் காக்க இயலாமலே நான் இறந்து விடுவேனோ என அஞ்சினேன். இப்போது அந்தக் கவலை இல்லை. இவளையும் கொடுத்துத் தங்கள் சுமையை நான் அதிகரிக்க விரும்பவில்லை. இவள் என் மகள் என்னுடன் தான் இவள் இருக்க வேண்டும். இவள் வசிக்க வேண்டிய இடம் தங்கள் வீடு இல்லை அய்யா. நான் இறந்தாலும் இவள் என்னைப் போலவே கலைகளை வளர்க்கும் விறலியாகவே இருக்க வேண்டும்’’ எனக் கூறியவள் எழுந்து என்னிடம் இருந்த விறல்வேலை வாங்கி ஆசை தீர முத்தம் கொடுத்துக் கொஞ்சி மீண்டும் என்னிடம் கொடுத்துவிட்டு அவளது மகளைத் தூக்கிக்கொண்டு இருளில் சென்று மறைந்துவிட்டாள். கண நேரத்தில் நான் ஏற்றுக்கொண்ட பொறுப்பினை நினைத்துக் கலங்கிவிட்டேன். எல்லாம் வல்ல இறைவனது காலில் அக்குழந்தையைப் போட்டு வணங்கிவிட்டு நானும் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டேன். அதன் பிறகு தான் அவனை நான் வளவனாரின் போர்ப் பயிற்சிப் பாசறையில் என் நண்பன் வேளாதனின் உதவியினால் சேர்ப்பித்து விட்டேன்.

பிறகு வெகு நாள் அவளை நான் காணவே இல்லை. தேடியும் பார்த்தேன். முடிவில் நோயினால் அவள் இறந்துவிட்டாள் எனக்

கேள்விப்பட்டேன். அவளது குழந்தையைப் பற்றி விசாரித்ததில் அவள் விறலியர் மாளிகையில் மற்ற விறலிப் பெண்களின் அரவணைப்பில் வாழ்ந்தது தெரியவந்தது. அவளது தாயின் விருப்பப் படி அவள் அங்கு வாழ்வதுதான் சரி என எனக்குத் தோன்றியது. நேரம் கிடைக்கும் போது அக்குழந்தையைச் சென்று சந்தித்து வருவேன். கடந்த மாதம் கூட அவளைச் சென்று பார்த்துவிட்டு வந்தேன். பல முறை இந்த உண்மையை இருவரிடமும் கூறலாம் என எண்ணுவேன். ஆனால் விறல்வேலின் வாழ்வில் குருதிச் சொந்தம் என வந்தால் அது அவனது எதிர்காலத்தைப் பாதிக்குமோ என ஐயம் கொண்டேன்? ஆதலால் இன்று வரை மறைத்து வைத்திருந்தேன்! பூங்கோதை அறிந்துகொள்ளாமல் அனாதையாகவே இறந்துவிட்டாள்! நான் செய்த பிழையை எண்ணி இப்போது வருந்துகிறேன்'' எனக் கண்களில் கண்ணீர் பெருக கூறி முடித்தார்.

அவர் கூறியதைக் கேட்ட வளவனார், ''அடிகளே! பூங்கோதையைப் பற்றித் தாங்கள் செங்குவீரனிடம் கூறுவது எப்படி அவனது எதிர்காலத்தைப் பாதிக்கும். பல நாள் யாரும் இல்லாமல் தவித்த அவனுக்கு ஆறுதலாகப் பூங்கோதை இருந்திருந்தால் அவன் மகிழ்ந்தே இருப்பான்!'' என்றார்.

''வளவனாரே! சிறு குழந்தையாக இருந்த விறல்வேலைத் தங்கள் பயிற்சிப் பாசறையில் சேர்த்த பிறகு தங்கள் மகன் திவ்யன் அவன் மீது பேரன்பு கொள்ள இருவரும் நண்பனார்கள். விறல்வேல் வளர வளர அவர்களின் நட்பும் வளர்ந்தது. விறல்வேல் உப தளபதியாக வளர்ந்தான். அவன் தனக்கு யாருமில்லை, தனது இறப்பு யாருக்கும் எந்தத் துயரையும் அளிக்காது என்றே எதைப் பற்றியும் கவலை கொள்ளாமல் துணிச்சலுடன் காரியத்தில் இறங்குவான். அப்படிப்பட்டவனிடம் உனக்கு ஒரு அத்தை மகள் இருக்கிறாள் எனக் கூறினால் அவனது மனம் எப்படி அய்யா முன்பு போன்று துணிச்சலுடன் இருக்கும். இளவல் பிறந்ததிலிருந்தே இருக்கும் சோழ தேசத்தின் நிலையில் அவனைப் போன்று எதைப்பற்றியும் கவலை கொள்ளாத ஒரு தலைவனே நமக்குத் தேவை என எண்ணினேன். அவன் தன்னை அனாதையாகக் கருதுவதால் தான் தன் படையில் இருக்கும் ஒவ்வொரு வீரனையும் தனது குடும்பத்தில் ஒருவனாகவே பார்க்கிறான். அதே நேரம் பூங்கோதையும் ஆடல் தலைவனை மட்டுமே நினைத்துக்கொண்டு வாழ்ந்தாள்.

பலர் அவளை மணமுடிக்கவும், காமக் கிழத்திகளாக வரையப்பட முயன்றும் அவள் எதற்கும் ஒப்புக்கொள்ளவில்லை. இருவரது மனமும் இருவேறு துருவங்களில் இருக்க என்னால் கூற இயலவில்லை''

"அடிகளே! இது சுயநலம்! தாங்கள் மறைத்தது பெரும் குற்றம்!" என்றார் இரும்பிடர்த்தலையர்.

"ஆமாம்! இரும்பிடர்த்தலையரே. சோழ தேசம், அரச விசுவாசம் என்ற சுயநலத்தில் சிக்குண்ட நான் விறல்வேலின் வாழ்வை அதற்காக நாசம் செய்துவிட்டேன். என்னை அவன் மன்னிப்பானா?"

"இதை அறிந்தால் அவன் எப்படி வருந்துவான்!" என்றார் வளவனார்.

"இதை உப தலைவன் எப்படி எடுத்துக்கொள்ளப் போகிறான்? அதை எண்ணினால் எனக்குச் சற்று அச்சம் ஏற்படுகிறது. தங்கள் மகன் திவ்யன் உயிரோடு இருந்தவரை அவனுக்குப் பெரும் துணையாக இருந்தான். இருவரது நட்பிற்கு உறுதியாக வானவல்லியும் அவன் மீது பேரன்பு கொண்டிருந்தாள். தங்கள் மனைவியும் விறல்வேலை தனது தம்பியாகவே நினைத்து சீராட்டினாள்! ஆனால் மரக்கல விபத்தில் திவ்யன் எப்போது மறைந்தானோ அப்போதே விறல்வேல் தனித்துவிடப் பட்டான். வானவல்லியும் ஒரேடியாக அவனை வெறுத்துவிட்டாள். இப்படித் துணையிருந்த உறவுகளும் மறைந்து, தனக்கு உரிமையான ஒரு பெண்ணும் மடிந்துவிட்டாள் என்பதை அவனால் தாங்கிக்கொள்ள இயலுமா? அதை எண்ணித்தான் என் மனம் கலக்கம் அடைகிறது!"

வளவனாருக்குத் தன் மகன் திவ்யனின் நினைவு வந்ததும் மனம் கலங்கி அமைதியானார். இரும்பிடர்த்தலையர், "அடிகளே! தனது மாமன் எனத் தெரியாமலே அவள் விறல்வேல் மீது அன்பு கொண்டு தனது உயிரையே இழந்துவிட்டாளே அவளது அன்பை எண்ணி வியக்காமல் இருக்க இயலவில்லை!" என்றார்.

அந்நேரத்தில் அந்த அறைக்குள் அவசர அவசரமாக உப தளபதி பரதவன் குமரன் மற்றும் டாள்தொபியாஸ் என இருவரும் ஒரு பணியாளை

அழைத்துக்கொண்டு அனுமதியின்றி அவர்கள் பேசிக்கொண்டிருந்த அறையினுள் பிரவேசித்தார்கள்.

உள்ளே வந்தவர்கள் மூவரிடமும் பணிந்து தங்கள் வணக்கத்தைத் தெரிவித்துப் பணிவுடன் நின்றனர். அவர்களைக் கண்ட இரும்பிடர்த்தலையர், ‘‘என்னாயிற்று? ஏன் இவ்வளவு அவசரம்?’’ என வினவியவர் அவர்கள் அழைத்துவந்த பணியாளை நோக்கி, ‘‘யார் இவன்?’’ எனவும் கேட்டார்.

இரும்பிடர்த்தலையரிடம், ‘‘அய்யா! நம் உபதலைவரின் கட்டளைப்படி சம்பாபதி வனத்தின் ஓரமாக இருக்கும் வைதீகரின் மாளிகையில் இவனைப் பணியாளாக இருக்கச் செய்திருந்தேன். இவன் ஒரு அபாயகரமான செய்தியைக் கொண்டுவந்துள்ளான். ஆதலால் தான் அடுத்து என்ன செய்யலாம் என ஆலோசனை கேட்கத் தங்களிடம் அழைத்துவந்தேன்’’ என்றான் டாள்தொபியாஸ்.

‘‘என்ன அபாயகரமான செய்தி டாள்தொபியாஸ்?’’

அந்தப் பணியாளை நோக்கிய டாள்தொபியாஸ், ‘‘எங்களிடம் கூறியதை அவர்களிடமும் கூறு?’’ எனக் கட்டளையிட்டான்.

‘‘இன்று வைகறைப் பொழுதிற்கு ஒரு சாமம் முன்பு வைதீகர் எங்கிருந்தோ மாளிகைக்குத் திரும்பி வந்தார். அவர்களிடம் சில வீரர்களும் வந்தார்கள். உறைந்தை வீரர்களைப் போன்று காட்சியளித்தார்கள்! வந்தவர் நேரே அவரது மாளிகையின் பாதாள அறைப் பகுதிக்கு அவர்களை அழைத்துச் சென்றார். நானும் அவர்களைப் பின்தொடர்ந்து இரகசியமாக அவ்வறையைக் கண்காணித்தேன். அவ்வறையில் ஒரு பகுதி முழுவதும் வாள்களும், வேல்களும் நிரம்ப இருந்தன. தூரத்தில் இருந்தே பார்க்க முடிந்ததால் அவர்கள் பேசியதை என்னால் கேட்க இயலவில்லை. ஆனால், பெரும் திட்டத்துடன் தான் அந்த ஆயுதங்களை அவர் சேகரித்து வைத்துள்ளார் என்பது மட்டும் திண்ணம். உடனே தகவலை தெரிவித்துவிடலாம் என அங்கிருந்து வந்துவிட்டேன்!’’ எனக் கூறிவிட்டு அமைதியாக நின்றான் அந்தப் பணியாள்.

“இனி அங்கு நீ பணிக்குச் செல்ல வேண்டாம். சரி நீ கிளம்பலாம்!” என இரும்பிடர்த்தலையர் கூற அங்கிருந்து அவன் விடைபெற்றுக் கிளம்பினான்.

அவன் கூறியதைக் கேட்ட இரும்பிடர்த்தலையர் சற்று அதிர்ச்சியுடன் வளவனாரை நோக்கினார்.

உடனே வளவனார் இரு உப தளபதிகளையும் நோக்கி, “எதிரிகளுக்குத் துணை போகிறார்கள் எனத் தெரிந்தும் இன்னும் ஏன் அம்மாளிகையைக் கைப்பற்றவில்லை? அந்த வைதீகரை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டியது தானே!” என்றார்.

அவர் கூறியதைக் கேட்ட டாள்தொபியாஸ், “அதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை அய்யா!” என்றான்.

“ஏன்?”

“மாளிகையைக் கைப்பற்றும் எண்ணம் இருந்திருந்தால் உப தலைவர் இளவலைத் தேடிக் கிளம்புமுன்னே கட்டளையிட்டுச் சென்றிருப்பார். ஆனால் அவர் அப்படிக் கட்டளையிடாமல் கண்காணிக்க மட்டுமே உத்தரவிட்டுள்ளார். அதற்கு நிச்சயம் தகுந்த காரணமிருக்கும்!” எனக் கூறிவிட்டு அமைதியானான் டாள்தொபியாஸ்!

அவன் கூறியதைக் கேட்ட வளவனார், “இந்திரத் திருவிழா தொடங்கும் முன் மாளிகையில் பாதாளம் முழுக்கப் பதுக்கி வைத்திருக்கும் ஆயுதங்களை உறைந்தை வீரனுக்குக் காட்டுகிறார் என்றால் அவை எதற்காக எனப் புரியவில்லையா!”

“நன்கு தெரியும் வளவனார் அய்யா!”

“தெரியுமா?”

“ஆம்!”

“என்ன?”

“அந்த ஆயுதங்களைக் கொண்டும் இந்திரத் திருவிழாக் கூட்டத்தைப் பயன்படுத்தியும் புகாரைக் கைப்பற்றத் திட்டமிடுகிறார்கள். இதனை எதிர்பார்த்தது தான்!

“எதிர்பார்த்ததா?”

“ஆம் வளவனாரே!”

“அப்புறம் ஏன் எதிரிகளை முளையிலேயே கிள்ளாமல் வளரவிடுகிறீர்கள்!”

அதுவரை அமைதியாக நின்ற உபதளபதி பரதவன் குமரன் குறுக்கிட்டு, “அய்யா, உறைந்தைக்குப் பணியாததால் இந்திரத் திருவிழாவைப் பயன்படுத்தி இருங்கோவேள் நிச்சயம் புகாரைக் கைப்பற்றத் திட்டமிடுவார் எனச் செங்குவீரன் ஏற்கெனவே எதிர்பார்த்திருந்தார். அதற்குத் தகுந்த கட்டளைகளையும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பிறப்பித்துவிட்டே இளவலைத் தேடி திருக்கண்ணனை உதவிக்கு அழைத்துக்கொண்டு புறப்பட்டார்.” எனக் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த வளவனார், “என்னென்ன கட்டளைகளை விட்டுச் சென்றான்?” என வினவினார்.

“உறைந்தை வீரர்கள் புகார் மீது போர் தொடுக்கத் திட்டமிட்டால் அது இரு வழிகளிலே நடைபெறும். ஒன்று காவிரி வழி. இரண்டாவது கடல் வழி. தரை வழியாக அவர்கள் புகாரைக் கைப்பற்ற நினைத்தாலும் காவிரியாற்றைத் தாண்டியே அவர்கள் புகாரில் நுழைய வேண்டும். மேலும் சம்பாபதி வனத்தைத் தாண்டி புகாரில் நுழைவது என்பது இயலாத காரியம்! ஆதலால் காவிரி, குணக்கடல் பகுதிகளில் நமது மரக்கலங்கள் பெரும் அரணாக நிற்க வைத்துள்ளோம். மேலும் பழுதான மரக்கலங்கள் அனைத்தும் அசுர வேகத்தில் செப்பனிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. புது மரக்கலங்களைக் கட்டும் வேலைகளையும் முடுக்கி விட்டுள்ளோம். நமது வீரர்களுக்குத் தகுந்த பயிற்சியும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும் அவர்கள் புகாரின் மீது நேரடியாகப் போர்தொடுக்காவிட்டால் மறைமுகத்தில் கைப்பற்ற முயல்வார்கள். அதன் ஒரு முயற்சிதான் புகாருக்குப் புதுத் தலைவரை இருங்கோவேள் நியமித்து அனுப்பியது. அந்த முயற்சியை நம் தலைவரே முறியடித்துவிட்டார். இரண்டாவதாக அவர்கள் இந்திரத் திருவிழாவைப் பயன்படுத்தி மக்கள் கூட்டத்திற்குள் உறைந்தை வீரர்களை ஊடுருவச் செய்து கைப்பற்ற முயல்வார்கள். அந்த வீரர்களுக்குரிய ஆயுதங்கள் தான் வைதீகரின் மாளிகையில் உள்ளவை. இன்னும்

ஆயுதங்களை வேறு எங்கெங்கு மறைத்து வைத்துள்ளார்களோ? ஒரு வேளை நாம் வைதீகரின் மாளிகையைக் கைப்பற்றினால் எதிரிகளின் திட்டம் நமக்குப் புரிந்துவிட்டது என எண்ணி மாற்று வழியில் புகாரைக் கைப்பற்ற முயல்வார்கள். ஆதலால் அவர்களின் முயற்சியைக் கடைசியில் முறியடித்து இனி புகாரைக் கனவில் கூட கைப்பற்றத் துணியக் கூடாது என்பதே நம் தலைவரின் நோக்கம். புகாரில் உள்ள வீரர்கள் அனைவரும் இரு குழுக்களாகப் பிரிந்து போர் ஒத்திகையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நமது வீரர்களும் மாற்றுடையில் மக்களோடு மக்களாகக் கலந்திருக்கிறார்கள். யாராவது கலக்கம் செய்ய முயன்றால் அடுத்தக் கணம் அவர்கள் கைதுசெய்யப் படுவார்கள்!''

அவன் கூறியதைக் கேட்ட வளவனார் பிரமித்து நின்றுவிட்டார். ஏனெனில் உப தலைவனின் கட்டளை ஒரு சர்வாதிகார சேனாதிபதியைப் போன்று தீர்க்கமாகவும் தெளிவாகவும் இருந்தது. அவர் இருந்திருந்தால் என்ன கட்டளைகளைப் பிறப்பித்திருப்பாரோ அதே மாதிரியான கட்டளைகளை அவன் விடுத்துச் சென்றுள்ளது அவருக்குப் பெருத்த ஆச்சர்யத்தை வழங்கியிருந்தது.

``இப்போது உப தலைவன் எங்கே? அவனிடமிருந்து செய்தி ஏதேனும் வந்ததா?'' என வினவினார்.

``இதுவரை தலைவரிடமிருந்து எந்தச் செய்தியும் எங்களுக்கு வரவில்லை. அவரைத் தான் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டு இருக்கிறோம்!''

அந்த நேரத்தில் அங்கு சற்றுச் நேரம் அமைதி நிலவியது! அப்போது இரும்பிடர்த்தலையர், ``இளவல் காப்பாற்றப் பட்டிருந்தால் இந்நேரம் தகவல் வந்திருக்கும்! அவர்களுக்கு என்ன ஆனதோ?'' எனக் கவலை கொண்டார்.

அவருக்கு என்ன ஆறுதல் கூறுவது எனத் தெரியாமல் அங்கிருந்த அனைவரும் தடுமாறினார். அந்நேரத்தில் வெளியே புரவிச் சத்தம் கேட்க டாள்தொபியாஸ் வெளியே வந்து பார்த்தான். தூரத்தில் திருக்கண்ணனும், செங்கோடனும் புரவியில் வேகமாக வந்துகொண்டிருந்தார்கள்.

அவர்களின் வருகையை இரும்பிடர்த்தலையருக்குத் தெரியப்படுத்தினான் டாள்தொபியாஸ். பெரும் ஆர்வமும், மகிழ்ச்சியும் கொண்ட இரும்பிடர்த்தலையர் வெளியே ஓடிச் சென்று அவர்களை எதிர்கொண்டு இளவலைப் பற்றியும் செங்குவீரனைப் பற்றியும் கேட்கலானார்.

அவரிடம் என்ன கூறுவதென்று தெரியாமல் செங்கோடனும் திருக்கண்ணனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

தன் நண்பன் செங்கோடனிடம், "செங்கோடா! உறைந்தையிலிருந்து தானே வருகிறாய்! இளவலை எங்கே விட்டு வந்திருக்கிறாய்! அவன் பாதுகாப்புடனும், நலமாகவும்தானே இருக்கிறான்? உப தலைவன் எங்கே?" என வினவினார்.

அதற்கு அவர் தடுமாறிக்கொண்டே "நெருப்பிலிருந்து இளவலைக் காப்பாற்றிய விறல்வேல் அவருடன் பொன்னி நதியில் குதித்துவிட்டான்! பொன்னி நதி அவர்கள் இருவரையும் கொண்டுபோய் விட்டது!" என்றபடியே கண்ணீர் வடித்தார்.

அவர் கூறியதைக் கேட்டவுடன் இரும்பிடர்த்தலையர் மட்டுமல்ல அங்கிருந்த அனைவருமே அக்கணம் அதிர்ச்சியில் உறைந்துவிட்டார்கள்!

**அடிக்குறிப்பு :**

1. நவரை என்பது குருவை, சம்பா, தாளடி போன்று நெல் பயிரிடும் ஒரு போகம். தை மாத இறுதியில் பயிரிடப்பட்டு வைகாசி இறுதியில் கதிர் அறுத்து சாகுபடி செய்யப்படும்.

# 38. சி ரிப்பும் துயரமும்

இளவரசனோடு விறல்வேல் பொன்னி நதியில் குதித்துப் பின் நீந்தி செங்கோடனின் இல்லத்திற்குச் சென்றுவிட்டது செங்கோடன் மற்றும் உப தளபதி திருக்கண்ணனுக்குத் தெரியாது! உறைந்தை வீரனைப் போன்று இருங்கோ வேளை ஏமாற்றிய திருக்கண்ணன் அங்கு வேந்தன் வந்ததும் அக்கணம் அதிர்ந்துவிட்டான். பூக்கடையில் வேந்தனைச் சந்தித்த போது திருக்கண்ணன் மாறுவேடத்தில் இருந்ததனால் இப்போது உறைந்தை வீரனைப் போன்று இருக்கும் திருக்கண்ணனை வேந்தனால் அடையாளம் கண்டுகொள்ள இயலவில்லை. எதற்கும் எச்சரிக்கையுடனே இருப்பது நல்லது என எண்ணிய திருக்கண்ணன் வேந்தன் வந்ததைக் கண்ட போதே இருளில் நின்றுவிட்டான். எரியும் மாளிகையின் வெளிச்சம் படாத இடத்தில் அவன் நின்றதால் அவனது அருகில் வேந்தன் வந்தும் அமைதியாக இருந்த திருக்கண்ணனை அவனால் அடையாளம் காண இயலவில்லை. இளவலும் செங்குவீரனும் எரியும் மாளிகைக்கு இரையாகிவிட்டனர் என்ற மகிழ்ச்சி போதை இருங்கோவேள் மற்றும் வேந்தனை யோசிக்கவிடாமல் செய்திருந்தது.

உறைந்தை மன்னர் இருங்கோவேள் தன் வீரர்களுடன் அங்கிருந்துச் சென்றபிறகு அங்கு நின்ற செங்குவீரனின் புரவியை அழைத்துக்கொண்டு புறப்பட்ட திருக்கண்ணன் தன் தலைவர் வாக்களித்ததைப் போல வழக்கமாகச் சந்திக்கும் இடமான உறைந்தையைத் தாண்டி பொன்னி நதியின் வடகரையில் காத்திருந்தான். அங்குச் செங்கோடனும் வந்துவிட்டார். ஆனால் இளவலுடன் வருவதாகக் கூறிய உப தலைவன் மட்டும் அங்கு வந்தபாடில்லை. நாழிகை செல்ல செல்ல இருவரின் கவலையும், துக்கமும் அதிகமாகிக்கொண்டிருந்தது! பொழுது விடிந்தபின் இனி வருவதற்கான வாய்ப்பு மிக மிகக் குறைவு என்பதை உணர்ந்து ஒருவேளை இளவலை அழைத்துக்கொண்டு செங்குவீரன் புகாருக்குச் சென்றிருக்கலாம் என எண்ணி இருவரும் புகாரை நோக்கிக் கிளம்பினார்கள்.

புகாரை நெருங்க நெருங்க அவர்களின் எதிர்பார்ப்பும் கவலையும் அதிகமாகிக் கொண்டிருந்த சமயத்தில் தான் எதிர்பாராமல் இரும்பிடர்த்தலையர், வளவனார் மற்றும் மற்ற உப தளபதிகளைச் சந்தித்தார்கள். புரவியில் இருந்து இறங்கும் போதே இரும்பிடர்த்தலையர் செங்கோடனிடம், “நண்பா, இளவல் மற்றும் உப தலைவன் எங்கே?” எனக் கேட்ட கேள்வி அவரை மட்டுமல்லாது அவருடன் வந்த திருக்கண்ணனையும் கடும் அதிர்ச்சியடைய வைத்தது.

அவரது கேள்வியிலிருந்தே உப தலைவன் இளவலோடு இன்னும் புகார் வந்து சேரவில்லை என்பதை உணர்ந்த செங்கோடன், தடுமாறியபடியே இளவலை உறைந்தை வசந்த மாளிகையில் கண்டறிந்த கதையையும் பிறகு மாளிகைக்கு இருங்கோ வேள் தீ வைத்ததையும் அதிலிருந்து உப தலைவன் அவரைக் காப்பாற்றிப் பொன்னி நதியில் குதித்துவிட்டதையும் சுருக்கமாகக் கூறிமுடித்தார்.

இளவலோடு விறல்வேலையும் பொன்னி நதி நீரில் கொண்டுபோய் விட்டது என்பதைக் கேட்டு பெரும் அதிர்ச்சியடைந்த இரும்பிடர்த்தலையர் பிறகு முழுக் கதையையும் கேட்டவர் நம்பிக்கையுடன் சிரித்துக்கொண்டே “விறல்வேல் வளவனுடன் இருக்கும் வரையில் அவனுக்கு எந்தத் தீங்கும் நேராது! யாரும் எதை நினைத்தும் கவலை கொள்ள வேண்டாம்! நெருப்பிலிருந்து காப்பாற்றி இளவலை பொன்னி நதியோடு ஒரு போதும் விட்டுவிட மாட்டான். இப்போது நமது நோக்கம் அனைத்தும் புகாரைப் பற்றியதே!” எனக் கூறி அனைவருக்கும் நம்பிக்கையூட்டினார். அங்கிருந்த அனைவரும் கவலையை மறந்து அடுத்துச் செய்யப் போவதைப் பற்றி விவாதிக்கத் தொடங்கினார்கள்.

இரும்பிடர்த்தலையர் அனைவருக்கும் நம்பிக்கையூட்டிப் பேசிக்கொண்டு வந்தாலும் அவரது மனதின் உள்ளூற இளவல் மற்றும் விறல்வேலைப் பற்றிய கவலை மிகுந்திருந்தது. பொன்னி நதியின் நீர்ப் பெருக்கு நேரத்திற்கு நேரம் அதிகமாகிக் கொண்டு இருந்ததே அவரது கவலைக்கு முதல் காரணம். அவர் இளவலை எண்ணி கவலை கொண்டிருந்த

அதே நேரத்தில் உறைந்தை வீரர்கள் சூழ மரகதவல்லியின் வீட்டினுள் மறைந்திருந்த இளவலுக்குப் பெரும் ஆபத்து நெருங்கிக் கொண்டிருந்தது.

பல நாட்கள் மாளிகையில் பட்டினிக் கிடந்ததால் தான் அவர் வலிமையின்றி இருக்கிறார் என்பதை உணர்ந்தவள் பலவித மூலிகைச் சாறு மற்றும் பழச் சாறுகளைக் கொடுத்தாள். வானவல்லியின் வைத்தியம் மற்றும் அவள் அளித்த உணவு பொருள்களினால் இளவல் ஒரே நாளில் தனது உடலில் இழந்த பலத்தை மீண்டும் பெறத் தொடங்கினார். அவரது காலில் ஈரம் குறையாமல் மருந்தினை வானவல்லியும் மரகதவல்லியும் பூசிக்கொண்டே இருந்தார்கள். வானவல்லி விறல்வேலின் வருகையைப் பெரிதும் எதிர்பார்த்தாள். நேற்றிரவு உபதலைவன் அங்கிருந்துச் சென்றுவிட்ட பிறகு அவன் மீண்டும் திரும்பி வரவே இல்லை. அவனைப் பற்றிய கவலை மிகுந்திருந்தாலும் தான் இங்கு இருப்பதனால்தான் இளவலைப் பற்றிக் கவலை கொள்ளாமல் இங்கேயே விட்டுச் சென்றுள்ளார் என்பதை உணர்ந்த வானவல்லி இளவலை கண்ணும் கருத்துமாகப் கவனித்தாள். ஒரே நாளில் இளவல் எழுந்து நடக்கும் அளவிற்கு முன்னேற்றமடைந்திருந்தார்..

பரிதி உச்சிக்கு வருவதற்கு இன்னும் ஒரு முகூர்த்தப் பொழுது இருக்கும். அந்த நேரத்தில் மரகதவல்லி வீட்டிற்குப் பின்னால் தோட்ட வேலை செய்துகொண்டிருந்தாள். வானவல்லியும் இளவலின் கால்களுக்கு மருந்துபூசி வாழை இலையைச் சுற்றி இதமாகச் சூடுகொடுத்துக் கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் வாசல் கதவு படபடவெனத் தட்டப்பட்டது. கதவின் சத்தத்தைக் கேட்ட மரகதவல்லியும் வீட்டினுள் ஓடி வந்து கதவைத் திறந்தாள்.

நேற்றிரவு மரகதவல்லி அனுப்பி வைத்த இராக்காவலர்கள் இருவரும் தான் கதவைத் தட்டியிருந்தார்கள். அவர்களைக் கண்ட மரகதவல்லி பெரும் அதிர்ச்சியடைந்தாள். ‘நேற்றிரவு தான் கூறியதைப் போன்றே வீரர்களுடன் சோதனையிட வந்துவிட்டானே!’ எனக் கலங்கினாள். இருவரும் மேலும் சில காவலர்களை அழைத்து வந்திருந்தார்கள்!

அவர்களைக் கண்ட மரகதவல்லி மனதில் இருக்கும் அதிர்ச்சியை முகத்தில் காட்டிக்கொள்ளாமல் புன்னகையுடன் வீட்டிற்கு வெளியே வந்து கதவினைப் படார் எனச் சாத்தினாள். கதவு வேகமாகச் சாத்தப்பட்டதைக்

கேட்ட வானவல்லியும், கரிகாலனும் ஏதோ ஆபத்து என்பதை உணர்ந்துகொண்டார்கள். படுக்கையிலிருந்து எழுந்த கரிகாலன் தனது வாளினை உருவி எதற்கும் தயாராக நிற்க அதே வேளையில் வானவல்லியும் அங்கிருந்த சில குறுவாள்களை எடுத்துத் தயாராக வைத்துக் கொண்டாள்.

வீட்டிற்கு வெளியே நின்ற காவலர்களைக் கண்ட மரகதவல்லி முகத்தில் புன்னகையை வரவழைத்துக்கொண்டு, ‘‘நேற்று நான் கூறியதில் நம்பிக்கை கொள்ளாமல் இன்று வீரர்களை அழைத்து வந்துவிட்டீர்களா?’’ என உறைந்தை வீரனின் கண்களில் தனது பார்வையை நிலைக்கவிட்டபடியே கேட்டாள்.

அவள் கூறியதைக் கேட்ட உறைந்தை வீரன், ‘‘பெண்ணே உன் மீது எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. இந்த மலை நாட்டு வீரனுக்குத் தான் நம்பிக்கையில்லாமல் இரவு முழுக்கப் புலம்பிக்கொண்டே இருந்தான். ஆதலால் தான் நம் சோழ நாட்டு உறைந்தைப் பெண்கள் எப்போதும் பொய் கூற மாட்டார்கள். மலை நாட்டுப் பெண்களை விட உயர்ந்தவர்கள்! எனக் காட்ட இவனையும் இவனது விருப்பப்படி சில வீரர்களையும் அழைத்து வந்துள்ளேன்’’ என்றான்.

மரகதவல்லி சிரித்துக்கொண்டே, ‘‘ஓ! அப்படியா சங்கதி! சோழ நாட்டுப் பெண்கள் எப்போதுமே பண்பிலும், வீரத்திலும் உயர்ந்தவர்கள் என்பதை அறிய வேண்டுமானால் உள்ளே வாருங்கள்!’’ என உள்ளே அழைத்தபடியே கதவினைத் திறந்தாள்.

அந்நேரத்தில் மலை நாட்டு வீரன், ‘‘உனது கணவர் பிற ஆடவர்களை உள்ளே விட்டால் கோபித்துக் கொள்வார் என்றாயே! இன்று நாங்கள் உள்ளே வந்தால் அவர் கோபம் கொள்ள மாட்டாரா?’’ எனக் கேட்டான் சிரித்தபடியே!

‘‘நிச்சயமாக மாட்டார். எனது கணவரும் உள்ளே தான் இருக்கிறார். நீங்களே வந்து பாருங்களேன்! அவர் உங்களைக் கண்டால் நிச்சயம் மகிழ்வார்!’’ என்ற படியே அவனை உள்ளே அழைத்தாள்.

மற்ற காவலர்கள் அனைவரும் வீட்டிற்கு வெளியேவே நின்றுகொள்ள மலை நாட்டு வீரன் மட்டும் வீட்டிற்குள் செல்லலானான். வெளியே நடந்த உரையாடல்களைக் கேட்டபடியே உள்ளே கரிகாலனும் வானவல்லியும் நின்றுகொண்டிருந்தார்கள். கரிகாலன் தனது உருவிய வாளை மறைத்தபடியே நிற்க, உள்ளே வந்த வீரன் வானவல்லியைக் கண்டதும் “நேற்று நள்ளிரவில் கூத்து பார்த்து வந்த பெண் தானே நீ?” எனச் சரியாக அடையாளம் கண்டு கேட்கலானான்.

அதற்கு மரகதவல்லி “ஆமாம்!” என மட்டும் சிரித்துக்கொண்டே பதிலளித்தாள்.

அவளது அருகில் நின்ற இளவலைக் கண்டவன், “நீ யார்? நீ தான் அவளது தலைவனா?” என வினவினான்.

மரகதவல்லியின் தலைவனா? என அவன் கேட்டவுடன் சற்றுத் தடுமாறிய இளவல் இந்நேரத்தில் பொய் கூறுவதே சாலச் சிறந்தது என எண்ணிக்கொண்டு, “ஆமாம்! நான் தான் அப்பெண்ணின் தலைவன்!” என்றார். இளவல் அப்படிக் கூறியதைக் கேட்ட வானவல்லி அவரை ஆபத்து சூழ்ந்திருப்பதானாலே அப்படிக் கூறுகிறார் என எண்ணினாள். ஆனால், இளவல் மனமுவந்து தான் அப்படிச் சொன்னார் என்பதை அவள் அறிந்திருக்கவில்லை.

கரிகாலன் கூறியதில் அவன் நம்பிக்கை கொண்டிருந்தாலும் சற்றுச் சந்தேகத்துடனே அந்த வீட்டை பார்வையால் ஆராய்ந்தான். அப்படியே திரும்பியிருந்தால் அவனது உயிர் உடலிலே தங்கியிருக்கும். அவனது கெட்ட நேரம் இளவலுக்கு வானவல்லி தயார் செய்து வைத்திருந்த மருந்தினை அவன் பார்த்துவிட்டான். பதற்றத்தில் வானவல்லி அந்த மருந்தினை மறைக்க மறந்துவிட்டாள்.

மருந்தினைப் பார்த்துவிட்டு இளவலின் உடலை ஆராய்ந்தவன் அவரது காலில் ஏற்பட்டிருந்த நெருப்புக் காயத்தைக் கண்டுவிட்டான். சந்தேகத்துடன், “இந்த நெருப்புக் காயம் உனக்கு எப்போது ஏற்பட்டது?” என வினவினான்.

அதற்குக் கரிகாலன், “நேற்றிரவு!” என்றார்.

“நேற்றிரவா?”

“ஆமாம்!”

அதிர்சியுடனே அவ்வீரன், “இந்த நெருப்புக் காயம் உனக்கு எங்கே எப்படி ஏற்பட்டது எனக் கூறுகிறாயா?”

“நிச்சயமாகத் தாங்கள் தெரிந்துதான் ஆக வேண்டுமா?”

“ஆம்! உடனே கூறப் போகிறாயா? இல்லையா?” என அதட்டினான்.

“நேற்றிரவு என்னை மாளிகையில் அடைத்து தீ மூட்டிவிட்டார்கள். அப்போது அங்கிருந்து தப்பிக்குமுன் எனது கால் வெந்துவிட்டது!”

வீரன் பெரும் திகைப்புடன், “எந்த மாளிகையில்!” எனக் கேட்டான்.

“காவிரிக் கரையோரம் இருக்கும் வசந்த மண்டபத்தில் தான்!” எனக் கூறிவிட்டு அவனது கண்களில் தனது பார்வையை நிலைநாட்டி அவனது முகத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கவனித்தார்.

இளவல் கூறியதைக் கேட்ட வீரன் யாராலும் கண்டறிய இயலாததைத் தான் கண்டறிந்து விட்டதாக எண்ணி மகிழ்ந்தவன், “உனது பெயர்?” என வினவினான்.

அதற்கு இளவல், “கரிகாலன்” என்றார்.

கரிகாலன் என்ற பெயரைக் கேட்டு அதிர்ச்சியடைந்த வீரன் இவன் தான் இளவரசன் திருமாவளவன் எனப் புரிந்துகொண்டு திடீரென வாளை உருவி கரிகாலனைத் தாக்கினான். அவ்வீரன் எதிர்பாராதபடி அவனது வாளினைத் தனது வாளினால் தாங்கிய கரிகாலன், “உன்னைப் போன்ற கயவர்களுக்கு நான் தான் காலன்!” எனக் கூறியபடியே அவனது வாளைத் தட்டிவிட்டு அவனது மார்பில் தனது வாளைப் பாய்ச்சினார். அந்த மலை நாட்டு வீரன் அலறியபடியே கீழே விழுந்தான்.

வெளியே நின்ற வீரர்கள் வீட்டினுள் இருந்து அலறல் சத்தம் வந்ததைக் கேட்டு உள்ளே ஓடி வந்தார்கள். அதுவரை இளவலது உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த வானவல்லி எடுத்து வைத்திருந்த குறுவாள்களை உள்ளே ஓடி வந்தவர்களை நோக்கி எறிந்தாள். அடுத்தடுத்து

அவள் எறிந்த அந்த இரு குறுவாள்களும் இருவரைத் தாக்கி அவர்களின் உயிரைக் குடித்தது. வெளியே நின்ற வீரர்கள் பரபரப்படைந்து வீட்டைச் சுற்றி வலைத்தார்கள். வீட்டின் பின் வாசலைத் திறக்க ஓடிய மரகதவல்லியை நிறுத்திய கரிகாலன் அவ்விரு பெண்களையும் தனக்குப் பின்னால் வரக் கட்டளையிட்டுவிட்டு அவரே கதவைத் திறந்து வெளியே வந்தார். அவர் எதிர்பார்த்ததைப் போலவே வீட்டின் பின்புறம் நின்றக் காவல் வீரர்கள் வெளியே வந்தவரைத் தாக்கினார்கள். அவர்களைப் பற்றி அலட்டிக்கொள்ளாத கரிகாலன் இரு பெண்களிடம், “நீங்கள் தோணியைத் தயாராக வைத்திருங்கள்! நான் வந்துவிடுகிறேன்” எனக் கூறிவிட்டு அவ்விரு வீரர்களின் வாள்களைத் தாக்கித் தட்டிவிட்டு அவர்களின் வயிற்றில் தனது வாளை அடுத்தடுத்துப் பாய்ச்சினார். இருவரும் அலறியபடியே மண்ணில் விழுந்தார்கள்!

கரிகாலனைத் தாக்க வந்த மற்றொரு வீரன் அடுத்தடுத்து தனது வீரர்களில் ஐவர் மடிந்துவிட்டதைக் கண்டவன் தனது வேலை அவ்விடத்திலேயேப் போட்டுவிட்டு புறமுதுகிட்டு ஓடத் தொடங்கினான். அதைக் கண்ட கரிகாலன் அவன் போட்டுவிட்டு ஓடும் வேலை எடுத்து எறிந்தார். அது குறி தவறாமல் அவனது முதுகில் தாக்கி மார்பு வழியாக வெளிப்பட்டுத் தலை குப்புற கீழே விழுந்தான். அவனது மார்பினைத் துளைத்த வேல் வழியாகக் குருதி வழிந்து அவ்விடத்தை நனைக்கத்தொடங்கியது!

வீரர்களுடன் சண்டையிட்ட போது தனது கால்களை வேகமாக மண்ணில் வைத்ததனால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் கரிகாலனின் கால்களில் இருந்து செங்குருதி கசிந்து வழியத்தொடங்கியது. மற்ற வீரர்கள் அங்கு வருவதற்குள் அங்கிருந்து தப்பிப்பதே சாலச் சிறந்தது என உணர்ந்த கரிகாலன் தயாராய் இருந்த தோணியில் ஏற, அது காவிரி நதியின் சுழல் நிறைந்த பிரவாகத்தில் பயணிக்கத்தொடங்கியது.

திடீரென்று எழுந்த வீரர்களின் அலறல் சத்தம் அந்த இடத்தையே கதிகலக்க மற்ற காவல் வீரர்கள் அங்கு ஓடி வந்தார்கள். இறந்து கிடந்த தங்கள் வீரர்களைக் கண்டு பெரும் அதிர்ச்சி அடைந்தவர்கள் சுற்றும் முற்றும் பார்த்தார்கள். தூரத்தில் போய்க்கொண்டிருந்த தோணியைக் கண்ட ஒருவன், “அதோ பாருங்கள்! நம் வீரர்களைக் கொன்றவர்கள் தோணியில் தப்பித்துச்

செல்கிறார்கள்! அவர்களை விரட்டிப் பிடியுங்கள்!'' எனக் குரல் கொடுக்க மற்றவர்களும் குரல் கொடுத்து மரக்கலத்தை வரவழைத்து கரிகாலன் சென்ற தோணியை நோக்கிப் பயணித்தார்கள். அதற்குள் தோணி பார்வையிலிருந்து மறையத் தொடங்கியது!

தோணியில் ஏறிய கரிகாலனின் காலிலிருந்து குருதி வழிந்ததைக் கண்ட வானவல்லி பதறி அவரது காலில் துணியைக் கிழித்துக் கட்டுப்போட்டதைப் பார்த்த மரகதவல்லி, ''அக்கா! இவர் பெரும் வீரர் என்றே இவருக்கு நான் பணிவிடை செய்தேன். ஆனால் இவரது செயல் என்னை இவருக்கு ஏன் பணிவிடை செய்தேன் என எண்ணி அவமானத்தில் வெட்கப்பட வைக்கிறது! அக்கரைக்குச் சென்ற பிறகு இவருக்கு மருந்திட்ட எனது கூந்தலை அறுத்து எறிந்தாலும் என் கோபம் தீராது அக்கா!'' என்றாள் கடும் ஆத்திரத்துடன்.

மரகதவல்லியின் திடீர் மனமாற்றத்தைக் கண்ட இளவலும், வானவல்லியும் அக்கணம் திகைக்கவே செய்தனர். முன்பின் அறியாத தன் மீது நேற்றிலிருந்து அளவற்ற அன்பைப் பொழிந்தவள் இப்போது வெறுத்துப் பேசுகிறாளே என எண்ணி கரிகாலன் கலங்கிக்கொண்டிருந்த போதே, வானவல்லி, ''ஏனடி இப்படிப் பேசுகிறாய்! இவர் மீது நீ என்ன குறையைக் கண்டுவிட்டாய்?'' எனக் கோபத்தில் வினவினாள்!

''என்ன பிழையா என்று கேட்கிறீர்கள்?''

''ஆமாம்! கூறினால் தானே தெரியவரும்!''

''சற்று முன் நீங்கள் பார்க்கவில்லையா?''

''உறைந்தை வீரர்களைக் கொன்றதைப் பற்றிக் குறிப்பிடுகிறாயா?''

''ஆமாம் அக்கா!''

''வீரர் என்றால் இதெல்லாம் இயல்பான காரியம்தான் மரகதவல்லி. உப தலைவர் இதைப்போன்று எத்தனை பேரைக் கொன்றிருக்கிறார் தெரியுமா?''

அப்போது குறுக்கிட்ட மரகதவல்லி, “அக்கா, இவரை நம் உபதலைவரோடு ஒப்பிட்டு அவரை அவமானப்படுத்தாதீர்கள்! அவர் சுத்த வீரர்!”

இப்போது குறுக்கிட்ட கரிகாலன், “உபதலைவர் சுத்த வீரர் என்றால் அப்போது நான்?” எனக் கேட்டார்.

“பெரும் வீரரான உபதலைவரின் நட்பைத் தாங்கள் எப்படிப் பெற்றீர்கள்? என்ற சந்தேகம் எனக்கு இப்போது ஏற்படுகிறது!” எனத் துடுக்குத்தனத்துடன் பதிலளித்தாள் மரகதவல்லி.

மாறிவிட்ட மரகதவல்லியின் மனோபாவம் இருவருக்குமே ஆச்சர்யத்தை அளிக்கக் கரிகாலர், “நான் என்ன தவறு செய்தேன் எனத்தான் கூறுங்களேன்! என்னைத் தாக்க வந்த அவர்களைத் தாக்கியதைக் குற்றம் என்கிறாயா மரகதவல்லி? அங்கு உபதலைவர் இருந்திருந்தாலும் இதைத்தான் செய்திருப்பார்” என்றார்.

“தயவு செய்து தங்களை என் அண்ணனுடன் இனியொருமுறை ஒப்பிடாதீர்கள்! எத்தனை எதிரிகள் தாக்க வந்தாலும் நேருக்கு நேர் நின்று வெல்லும் வீரர் அவர்! தங்களைப்போன்று....” “ச்சே... கூறவே எனக்குச் சகிக்கவில்லை. அருவருப்பாக இருக்கிறது!”

அதுவரை அமைதியாய் இருந்த வானவல்லி “நீ வெறுக்கும் அளவிற்கு இவர் அப்படி என்னத்தானடி குற்றம் செய்தார். அதைக் கூறப்போகிறாயா? இல்லையா?” கடுமையாகப் பேசினாள்.

“உயிருக்கு அஞ்சி பயந்து ஓடியவன் மீது வேல் எரிந்து கொன்றாரே, பயந்து ஓடிய கோழையிடம் தனது வீரத்தைக் காட்டிய இவரிடம் தாங்கள் பரிவு கொள்வது எனக்குப் பெரும் ஆச்சர்யத்தை அளிக்கிறது அக்கா!”

மரகதவல்லி கூறியதைக் கேட்டு சிரித்தார் கரிகாலன்.

“அக்கா! இனியொருமுறை இவரைச் சிரிக்க வேண்டாம் எனக் கூறுங்கள்! எனக்கு எரிச்சல் எரிச்சலாக வருகிறது!”

“அப்படிச் சிரித்தால் என்ன செய்துவிடுவீர்கள்!” எனக் கேட்டார் கரிகாலன்.

“சீறிக் கொண்டு பாயும் இந்தப் பொன்னி நதிப் பிரவாகத்தில் தள்ளிவிட்டு விடுவேன் எனக் கூறுங்கள் அக்கா!” எனச் சாடையாகப் பேசினாள் மரகதவல்லி.

மரகதவல்லிதான் தோணிக்குத் துடுப்பு வழித்துக்கொண்டு வந்ததால் இனியும் பேசி அவளைக் கோபப்பட வைக்க வேண்டாம். அப்படி அவள் கோபம் கொண்டால் தோணியில் பயணிக்கும் மூவருக்குமே ஆபத்து என எண்ணிய கரிகாலன் அமைதியானார். அவள் கூறியதைக்கேட்ட வானவல்லி, “மரகதவல்லி நமக்குப் பின்னால் சற்றுத் தூரக் கவனி!” எனக் கட்டளையிட்டாள்.

“ஆபத்து அக்கா! பொன்னி நதியின் இந்தச் சுழல்கள் போதாது என்று நம்மை உறைந்தை வீரர்களும் விரட்டிக்கொண்டு வருகிறார்கள்! அனைத்தும் இவரால் வந்தது!”

“ஆபத்துத் தூரத்தில் தானே வருகிறது! அதை எண்ணி மகிழ்ந்து கொள்!”

“ஆபத்துத் தூரத்தில் வந்தால் என்ன? அருகில் வந்தால் என்ன? அவர்களிடம் சிக்கினால் இறுதி விளைவு ஒன்றுதானே அக்கா! தப்பிக்கும் மார்க்கம் இருந்தால் குறிப்பிடுங்கள்” எனப் பதற்றமடைந்தாள் மரகதவல்லி.

“ஓடியவனை வேலை எறிந்துக் கொன்றதனால்தான் தகவல் கிடைக்கத் தாமதமாகி சற்றுத் தொலைவில் நம்மைப் பின்தொடர்ந்து வருகிறார்கள். அவனை உயிரோடு விட்டிருந்தால் இந்நேரம் அவர்கள் நம்மைப் பிடித்திருப்பார்கள். நம் உப தலைவர் அங்கு இருந்திருந்தாலும் இதையே தான் செய்திருப்பார்” எனக் கூறி அமைதியானாள் வானவல்லி.

“அக்கா, ஒருவனது பின்னால் தாக்குவது குற்றம் இல்லையா? அதைத் தாங்கள் நியாயப்படுத்த முயல வேண்டாம்!”

“அது அந்தச் சூழ்நிலையைப் பொறுத்தது மரகதவல்லி. பொய் கூட நன்மை செய்யும் பட்சத்தில் உண்மை ஆகிவிடும் என்பார்களே!

அதைப்போலத்தான் வீரமும்!"

வானவல்லி கூறியதை முதலில் ஏற்றுக்கொள்ளத் தயங்கினாலும் பிறகு தன் தவற்றை உணர்ந்த மரகதவல்லி உடனே கரிகாலனிடம் தனது மன்னிப்பையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டாள். நிலையில்லாமல் மாறிவிடும் பெண்களின் மன நிலையைக் கண்ட கரிகாலன் அக்கணத்தில் திகைக்கவே செய்தார்.

மரகதவல்லி எழுப்பிய பிரச்சனைகளால் அந்நேரம் அவர்களை விரட்டி வந்த மரக்கலத்தை யாரும் கவனிக்கவில்லை. நதியின் புனல் பிரவாகத்தில் தோணி வேகமாகச் சென்றதனால் அவர்களைத் துரத்திப் பிடிக்க மரக்கலத்தில் பாயை விரித்திருந்தார்கள். பாயை விரித்த பிறகே மரகதவல்லி அதனைக் கவனித்து வேக வேகமாகத் துடுப்பினைத் துழாவினாள்!

பாயை விரித்துவிட்டதனால் மரக்கலம் வேகமாக வந்துகொண்டிருந்தது. மரக்கலத்தில் வந்தவர்கள் வில்லிலிருந்து அம்பினை தொடுக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். அதைக் கவனித்த இளவல், ஆபத்து வெகு அருகில் வந்துவிட்டதை உணர்ந்து, "அவர்கள் வேகமாகத் துரத்துகிறார்கள்! இன்னொரு துடுப்பு இருக்கிறதா? நானும் உதவுகிறேன்?" என்றார்.

அதற்கு மரகதவல்லி, "தோணி நதியின் பிரவாகத்திலே வேகமாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது! சுழலில் அகப்படாமல் சென்றாலே நாம் தப்பித்துவிடலாம்!" எனக் கூறிக்கொண்டே வேகமாகக் கரையை நோக்கித் துழாவினாள்.

தோணி கரையை நோக்கி ஒதுங்குவதைக் கண்ட இளவல், "கரைக்குச் செல்ல வேண்டாம். கரையேறிய பிறகு அவர்கள் புரவியில் வந்து நம்மைப் பிடித்துவிடுவார்கள். நதியிலே விடு. அதுதான் விரைவான மற்றும் பாதுகாப்பான வழி!" என்றார்.

"நதியின் சீற்றமும், நீர்ச் சுழியும் அதிகமாக இருக்கிறது வீரரே. இன்னும் சற்றுத் தொலைவு கடந்தால் காவிரி குறுகி ஓடும்! அங்குத் தோணியில் சென்றால் பெரும் ஆபத்தாகிவிடும்! தோணியில் மூவர்

அமர்ந்திருப்பதால் அங்கு நிச்சயம் நாம் நீர்ச்சுழலில் அகப்பட்டுக்கொள்வோம். காவிரியின் நீர்ச்சுழலில் அகப்பட்டால் நம்மைக் கொல்ல எதிரிகள் வேண்டாம், பொன்னி நதியே போதும்!'' எனக் கடுமையுடன் எச்சரித்தாள்.

அவள் கூறியதைக் கேட்ட கரிகாலன், ''மரகதவல்லி, நீ என்னை வீரன் என ஒப்புக்கொண்டு பேசினாயே! அதுவே போதும் எனக்குப் பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது! பொன்னி நதிக்கு நம் மேல் கருணை கூட ஒருவேளை இருக்கலாம்! நம்மைக் காப்பாற்றிவிடும். ஆனால், நம்மை விரட்டுபவர்களுக்கு அது நிச்சயம் இருக்காது! இப்போது நதியில் பயணிப்பதே சிறந்தது, எளிதில் புகார் சென்றடைந்து விடலாம்! அங்குச் சென்றால் நம்மை யாராலும் எதுவும் செய்ய இயலாது!'' எனப் பணித்தார்.

தோணியானது நதியில் வேகமாகச் சென்றபோது ஆபத்து நேராவண்ணம் நேர்த்தியாக செலுத்திக் கொண்டிருந்தாள் மரகதவல்லி. நீர்ச் சுழல்கள் எங்கெங்கு உள்ளது எனப் பார்த்து, நீரோட்டத்தில் தோணி கவிழ்ந்துவிடாமலும் நாணல் புல் புதர்களில் சிக்கிக்கொள்ளாமலும் கவனமாகவே செலுத்தினாள். மரகதவல்லி தோணி செலுத்தியதைக் கண்ட கரிகாலனும் அவள் செலுத்தும் அழகையும், நேர்த்தியைப் பார்த்து பிரமித்து மலைக்கவே செய்தார். கவனமாகச் செலுத்தியும் மரகதவல்லி எச்சரித்ததைப் போன்றே ஒரு அபாயகரமான நீர்ச் சுழலில் தோணி சிக்கியது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் தோணி மட்டும் கரகரவென்று சுழன்றுகொண்டே இருந்தது. மரகதவல்லியும் எவ்வளவோ முயன்று பார்த்தாள். அவளால் அதிலிருந்து தோணியை மீட்கவே இயலவில்லை. தோணி சுழலும் வேகம் தான் அதிகமானதே தவிர, தோணி மட்டும் ஒரு அடி கூட முன் நகரவில்லை. சுழன்ற தோணியின் மையம் வர வர நடுவிலிருந்து ஓரத்திற்கு நகர்ந்தது. அதனால் தோணி சுழலும் போது ஒருபுறம் உயர்ந்தும், எதிர்புறம் தாழ்ந்தும் மூவரும் மேலே கீழே என மாறி மாறி சுழன்று நீரில் தூக்கி எறியப்படப்பார்த்தார்கள். இதே நிலை நீடித்தால் இன்னும் சிறிது நேரத்தில் மூவரும் கீழே விழுந்துவிடுவார்கள்! தோணி சாய்ந்தபடியே சுழன்றதால் நீரும் தோணிக்குள் புகத் தொடங்கியது. அதே நேரம் துரத்தி வந்த மரக்கலமும் அவர்களை நெருங்கிக்கொண்டிருந்தது! மூவரது மனத்திலும் திகில் பிடிக்க ஆரம்பித்தது.

தோணியும் வேகமாகச் சுழன்றதால் தலை சுற்றி மயக்கமும் ஏற்படத் தொடங்கியது! இதே நிலை நீடித்தால் மூவருக்கும் நீர்ச்சமாதி நிச்சயம் என்பதைத் தெரிந்துகொண்ட கரிகாலன், ‘‘மரகதவல்லி இதிலிருந்து விடுபட வேறு மார்க்கமே இல்லையா?’’ எனப் பதறினார்.

‘‘எவ்வளவோ முயன்று விட்டேன். என்னால் இயலவில்லை. என் வாழ்நாளிலே இப்படிப்பட்ட அபாயகரமான நீர்ச் சுழலை நான் கண்டதில்லை! அப்போதே கூறினேன், தாங்கள் தான் செவி கொடுத்துக் கேட்கவில்லை. இப்போது மூவரும் ஆபத்தில் சிக்கிக்கொண்டோம்!’’ எனக் கூறியபடியே தனியாகப் போராடிக்கொண்டிருந்தாள். அவர்களுக்கு உதவ இயலாத நிலையில் இருந்த வானவல்லி தன்னால் எந்த இடையூறும் நேர வேண்டாம் என நினைத்துக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அமர்ந்திருந்தாள்.

இந்த நிலையில் சற்று நெருங்கி வந்துவிட்டது மரக்கலம். அதிலிருந்தவர்கள் இவர்களை நோக்கி அம்பினையும் செலுத்தத் தொடங்கினார்கள். குறி தவறிய அம்புகள் அவர்களுக்குச் சமீபத்தில் நீரில் விழத் தொடங்கின.

நேரம் கடந்துகொண்டிருப்பதை உணர்ந்த கரிகாலன், ‘‘தப்பிக்க வேறு மார்க்கமே இல்லையா?’’ என வினவினார்.

‘‘ஒரே ஒரு மார்க்கம் இருக்கிறது வீரரே! ஆனால் அது இப்போது பயனளிக்காது!’’

‘‘பயனளிக்காதா?’’

‘‘ஆம்!’’

‘‘ஏன்? விரைந்து கூறு!’’ எனக் கட்டளையிட்டார்.

‘‘தோணியின் பாரம் அதிகமாக இருப்பதால் தான் நாம் மூவரும் இங்கேயே சுழல்கிறோம்! இருவர் என்றால் இந்தச் சூழலே நம்மைத் தூரத் தூக்கிப்போட்டு தப்பிக்கவைத்துவிடும்! நம்மில் ஒருவர் குதித்தும் தப்ப இயலாது! கீழே வலிமையான பாறைகள் நிறைந்துள்ளன. ஆதலால் தான் இங்கு இப்படிப்பட்ட நீர்ச்சுழலே ஏற்படுகிறது. நமது நிலை இப்போது திரிசங்கு உலகத்தைப் போன்றதுதான்!’’

கரிகாலன் சுற்றும் முற்றும் நன்கு பார்த்தார். அவர் பார்ப்பதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட வானவல்லியும், மரகதவல்லியும் பதறினார்கள்! வானவல்லி மீண்டும், ‘‘வேண்டாம் தம்பி! குதித்தால் மரணம் நிச்சயம்! அந்தத் தவறைச் செய்துவிடாதே!’’ எனக் கெஞ்சினாள்!

‘‘அக்கா, நான் குதிக்காவிட்டாலும் அந்த மரக்கலம் நம்மீது மோதி நாம் கொல்லப்படுவோம்! இதுதான் கடைசி வாய்ப்பு!’’ எனச் சொல்லிக்கொண்டே சிரிக்கலானார்.

அவரது சிரிப்பைக்கண்ட மரகதவல்லி, ‘‘வீரரே! வேண்டாம்!’’ எனக் கூறியபடியே கரிகாலனின் கைகளைப் பிடித்துக்கொண்டாள். அவளது இந்தச் செயலை எதிர்பாராத கரிகாலன், ‘‘எனக்கு எந்தத் துயரும் நேராது! எனக்கு மரணம் ஏற்படுவதாக இருந்தால் நேற்றிரவு மாளிகையிலேயே உயிரோடு நான் எரிந்திருப்பேன். நீ பதறாதே! நீங்கள் இருவரும் காவிரியின் வழியே புகார் சென்றுவிடுங்கள்!’’ எனக் கூறியவர் கடைசியாக, ‘‘மரகதவல்லி நீ என்னை மீண்டும் வீரன் என ஒப்புக்கொண்டாயே இந்த மகிழ்ச்சியே எனக்குப் போதும்! மன நிறைவுடனும், நம்பிக்கையுடனும் செல்கிறேன்’’ எனக் கூறிக்கொண்டிருந்த போதே மரக்கலத்திலிருந்து எய்யப்பட்ட ஒரு அம்பு அவர்களின் தோணியில் விழுந்து குத்திட்டு நின்றது.

வானவல்லியைப் பார்த்த கரிகாலன், ‘‘அக்கா, சம்பந்தப்பட்டவர்களிடம் உரிய நேரத்திற்கு வந்து சேர்வேன் எனக் கூறிவிடுங்கள்!’’ என்றபடியே மரகதவல்லியின் கையிலிருந்து தனது கைகளை விடுவிக்க முயன்றார். இருவரும், ’’வேண்டாம்! வேண்டாம்!’’ எனக் கூக்குரலிட்டனர். வலுக்கட்டாயமாக மரகதவல்லியின் கைகளிலிருந்து தனது கையை விடுவித்துக்கொண்ட கரிகாலன் நீர்ச் சுழல் நிறைந்த பொன்னி நதியில் குதிக்கலானார்.

கரிகாலன் கீழே குதித்ததும் தோணியின் பாரம் குறைந்து நீர்ச்சுழலில் இருந்து தானாகவே விடுபட்டு தூக்கி எறியப்பட்டது. நீர்ச் சுழலில் விடுபட்ட தோணி வேகமாக அடித்துச் செல்லப்பட்டது, இருவரும் வெறிக்க வெறிக்கப் பொன்னி நதியின் நீர்ப் பரப்பையே பார்த்தார்கள், எங்காவது கரிகாலன் நதியின் மேலே தென்படுவாரா என்று. நீருக்குள் மூழ்கிய கரிகாலன்

அவர்களின் கண்களுக்குத் தென்படவே இல்லை! இருவரும் அத்தருணத்தில் கரிகாலன் செய்த செயலை எண்ணி வருந்தவே செய்தார்கள்! மரகதவல்லி துடித்தாள்! துடுப்பு போடுவதை மறந்தாள். தோணி மட்டும் அதன்பாட்டிற்கு நீரில் வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. ஆனால் இருவரது மனங்கள் மட்டும் கரிகாலர் குதித்த இடத்திலேயே தோணிக்குப் பதில் சுழன்றது. நதியின் போக்கிலேயே தோணி புகாரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

# 39. தி கைப்பு

இளவல் கரிகாற் திருமாவளவன் அரண்மனைக்குள் அந்தப்புர மகளிரின் பாச அரவணைப்பில் வளர்ந்திருந்தால் நிச்சயம் பொன்னி நதியின் புனல் பிரவாகத்தில் உயிரிழந்திருப்பார். ஆனால் அவரைச் சிறு வயது முதலே தக்கப் பயிற்சியளித்து வளர்த்தது சேனாதிபதி பெருமறவர் மகேந்திர வளவனார் மற்றும் உப தலைவன் திவ்யன் ஆகியோர். கரிகாலன் தாயின் வயிற்றில் கருவான போதே நோய்வாய்ப்பட்ட உருவப்ப∴றேர் இளஞ்சேட்சென்னி இறந்துவிட்டதனால் இளவலுக்கு வரப்போகும் ஆபத்தை உணர்ந்த இருவரும் அவருக்குக் கடுமையான பயிற்சிகளைப் பிறந்தது முதலே வழங்கினார்கள். வரப்போகும் அனைத்து ஆபத்துகளிலிருந்தும் அவருக்குத் துணையாக இருந்து காக்க இயலாது என்பதனால் அனைத்து பிரச்சனைகளையும் அவரே எதிர்கொள்ளும் விதமாக அனைத்து பயிற்சிகளையும் கொடுத்து இளவலை மாபெரும் வீரனாக, திறமைசாலியாகப் பழக்கியிருந்தான் திவ்யன். ஆதலால்தான் கரை திரண்டு ஓடும் பொன்னி நதியின் புனல் பிரவாகத்தில் சாமர்த்தியமாக நீந்தி அவரால் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடிந்தது. இல்லையேல் நதியோடு சென்று குணக்கடலில் மூழ்கியிருப்பார்.

தோணியிலிருந்து கரிகாலன் குதித்தபோதே நாணல் புல் படர்ந்த இடத்தை நோக்கித்தான் குதித்தார். குதித்தவுடன் புனலில் அடித்துச் செல்லப்பட்ட கரிகாலன் கையில் அகப்பட்ட நாணல் புற்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். கண நேரத்தில் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவர், கைகளை மடக்கித் தலைக்குப் பாதுகாப்பாக வைத்து புனலிலேயே உருளத் தொடங்கினார். மூச்சு முட்டிய நேரத்தில் நீரையும் பருகச் செய்தார். புனலோடு சென்றபடியே கரைப்புறமாக ஒதுங்கியவர் அங்குப் படர்ந்திருந்த புதரில் சிறிது நேரம் ஒளிந்துகொண்டு பிறகு எந்த ஆபத்தும் இனி நேராது என உணர்ந்து பின் சோர்ந்தபடியே கரையை நோக்கி நடக்கலானார்..

உடலில் வழிந்த நீரோடு கலந்து புனலில் உருண்ட போது பாறைகளில் மோதி கை கால்களில் ஏற்பட்ட சிராய்ப்புகள் மற்றும் காலில் ஏற்பட்டிருந்த தீப்புண்ணிலிருந்து வெளியேறிய குருதி எனச் செந்நிறமாகக் கசிந்து கொண்டிருக்க மெல்ல தடுமாறி வலியால் துடிதுடித்தபடியே கரை ஏறலானார். கரையேறியவர் அடுத்து என்ன செய்வது எனத் தெரியாமல் தவித்துக்கொண்டிருந்த போது அவரது காதுகளில் மாட்டு வண்டிகள் செல்லும் சலங்கைச் சத்தம் கேட்க அருகில் இருந்த வண்டிப் பாதையை நோக்கி ஓடினார். தூரத்தில் அவரை நோக்கி ஒரு மாட்டு வண்டி விரைந்து வந்துகொண்டிருந்தது. மாட்டு வண்டி நெருங்க நெருங்க கரிகாலனது பார்வை மங்கி மயக்கமடையத் தொடங்கினார். புனல் பிரவாகத்தில் நீண்ட நேரம் நீந்தி அவரது உடலும் சோர்ந்து குருதி வெளியேறி உடலும் ரணமாகி நீர் பருகியிருந்ததால் அவர் மயக்கமடையத் தொடங்கினார். வண்டியில் வந்தவர்கள் அபாயத்துடன் நிற்கும் கரிகாலனைத் தூக்கித் தங்களது மாட்டு வண்டியில் போட்டுக்கொண்டு உறைந்தைக்கு நேர் மேற்கே செல்லலானார்கள்.

ஒரு நாழிகைப் பொழுதிற்கு மேலே காவிரிக் கரையோரமாக அந்த ஒற்றை மாட்டு வண்டி பயணித்தது. நீண்ட உறக்கத்திற்குப் பிறகு கரிகாலன் கண்களைத் திறந்துப் பார்த்தார். அவரது காயங்கள் அனைத்திற்கும் மருந்திடப்பட்டுக் கட்டுக் கட்டப்பட்டிருந்தது. தனக்கு யாரோ விசிறி வீசுவதை உணர்ந்த கரிகாலன் திரும்பிப் பார்த்தார். அங்கே கூத்தாடும் பாணர் ஒருவர் அவருக்கு அருகில் அமர்ந்து மயிலிறகால் விசிறியபடியே அவரது தலையைக் கோதிக்கொண்டிருந்தார்.

அவரது அன்பினைக் கண்ட கரிகாலன் திகைத்தபடியே, ‘‘என்னைக் காப்பாற்றி எனது காயங்களுக்கும் மருந்திட்டு கட்டுகட்டியவர் தாங்கள் தானா?’’ என வினவினார்.

‘‘இல்லை! தங்களுக்கு மருத்துவம் பார்த்தது என் மனைவி தான். அதோ!’’ எனச் சற்றுத் தொலைவில் சமைத்துக்கொண்டிருந்த விறலியைச் சுட்டிக் காட்டினார் வேலன்.

‘‘இருவரது உதவிக்கும் எனது மனம் நிறைந்த நன்றி அய்யா! எனது உடலில் உயிர் இருக்கின்ற வரை தங்களது உதவியை நான் மறக்க

மாட்டேன்!''

''இளவரசே, நன்றி என்று பெரிய வார்த்தைகளைக் கூற வேண்டாம். தங்களைக் காப்பாற்றியது நாங்கள் செய்த பூர்வ ஜென்மத்துப் புண்ணியம்''

வேலன் கூறியதைக் கேட்டு திகைத்த கரிகாலன், இவர் எப்படித் தன்னை அடையாளம் கண்டுகொண்டார்? என எண்ணியபடி ''இளவரசரா? யாரைக் குறிப்பிடுகிறீர்கள் அய்யா?'' எனச் சற்று சத்தத்துடன் கேட்டார்.

''இளவரசே தாங்கள் தான் இளவல் திருமாவளவன் என்பது என் மனைவிக்குத் தெரியாது! தாங்களாகவே தெரிவித்துவிடாதீர்கள்!'' என அடக்கத்துடன் கூறினார்.

''அய்யா! தாங்கள் என்னைத் தவறாக அடையாளம் கண்டுள்ளீர்கள் என நினைக்கிறேன். எனது பெயர் கரிகாலன்! இளவரசன் நானாக இருந்தால் இப்படி யாரும் உதவிக்கு இல்லாத உயிரைக் காக்க பொன்னி நதியில் குதித்துத் தப்பித்து ஓடி வரும் பரதேசியைப் போல ஆதரவற்று இருப்பேனா! மீண்டும் என்னை அப்படி அழைக்காதீர்கள்!'' எனச் சற்றுக் கோபத்துடனும் அதே சமயம் சத்தமின்றியும் கூறினார்.

''அரசே! தங்களைப் பரதேசி எனத் தங்கள் திருவாயாலே இனியொரு முறை கூற வேண்டாம். அது எனக்குப் பெருத்த வேதனையைத் தருகிறது! செருப்பாழியில் அசோகனை வென்ற இளஞ்சேட்சென்னியின் மைந்தன் இப்படி ஆதரவில்லை என வருந்திக் கூறுவது என் மனதில் கடப்பாறையைச் சொருகுவதைப் போல இருக்கிறது!'' என வருந்தினார்.

இதற்கு மேல் தான் இளவரசன் இல்லை என இவரிடம் கூறி சாதிக்க இயலாது என்பதை உணர்ந்த கரிகாலன், ''அய்யா, வளவனாரின் மகளால் கூடக் கண்டறிய இயலாத என்னைத் தாங்கள் எப்படி அடையாளம் கண்டீர்கள்?'' எனப் பெரும் ஆச்சர்யத்துடன் வினவினார் கரிகாலன்!

சிறிது யோசித்த வேலன், ''இளவரசே!....'' என்றபடியே ஏதோ கூறத் தொடங்கினார். அதை இடைமறித்த இளவல், ''இனி என்னைக் கரிகாலன் என்றே அழையுங்கள்! எனது பெயர் இனி இதுதான்!'' எனக் கட்டளையிட்டார்.

''சரி கரிகாலரே!!''

“அய்யா, முதலில் என்னை எப்படி அடையாளம் கண்டு கொண்டீர்கள் எனக் கூறுங்கள்?”

குரலை மேலும் தாழ்த்திய வேலன், “கரிகாலரே! உப தலைவர் தான் தங்களுக்கு உதவும்படி எங்களைப் பணித்தார். அவர் கூறித்தான் நாங்கள் தங்களைத் தேடி உறைந்தைக்கே வந்தோம்!” என்றார் பணிவுடன்.

அவர் கூறியதில் நம்பிக்கை கொள்ளாத கரிகாலன், “உப தலைவரா எந்த உப தலைவரைச் சுட்டுகிறீர்கள்?” எனச் சந்தேகத்துடன் வினவினார்.

இளவரசர் பெரும் சந்தேகத்துடன் வினவுவதைக் கண்ட வேலன், “நம் உப தலைவர் செங்குவீரன் தான்!” எனக் கூறி இடையில் பெரும் இரகசியமாக மறைத்து வைத்திருந்த முத்திரை மோதிரத்தை எடுத்து இளவலிடம் காட்டினார். அதனை வாங்கிப் பரிசோதித்த இளவல் அது உபதலைவனது தான் என்பதை அடையாளம் கண்டுகொண்ட பிறகு நம்பிக்கையுடன் வேலனிடம் கொடுத்தார். முத்திரை மோதிரத்தை வாங்கிய வேலன் எழுந்து நடந்து அருகில் பாய்ந்துகொண்டிருந்த பொன்னி நதியில் அந்த முத்திரை மோதிரத்தை எறிந்தார்.

அவரது செயலை எதிர்பாராத கரிகாலன் திகைத்து, “ஏன் அய்யா முத்திரை மோதிரத்தை நதியில் வீசி எறிந்தீர்கள்? எனக் கேட்டார்.

“உப தலைவரின் உத்தரவு!” என்றார்.

“உப தலைவரின் உத்தரவா?”

“ஆம் கரிகாலரே! அவர் தான் அந்த முத்திரை மோதிரத்தைக் கொடுத்து தங்களைச் சந்தித்துத் தங்களது நம்பிக்கையைப் பெற்றபிறகு நதியில் எறிந்துவிடச் சொல்லி கட்டளையிட்டிருந்தார்”

“அவரைத் தாங்கள் எப்போது, எப்படிச் சந்தித்தீர்கள்? விவரமாகக் கூறுங்கள்!” எனக் கரிகாலன் கேட்க வேலன் கூறத் தொடங்கினான்.

ஒவ்வொரு ஊரிலும் நடனம் மற்றும் கூத்தினை அரங்கேற்றம் செய்த பிறகு அவர்களின் தேவைகளுக்கு அதிகமாக இருக்கும் செல்வத்தை அந்தந்த

ஊரில் இருக்கும் எளியவர்களுக்குத் தானம் செய்துவிடுவது அவர்களின் நடைமுறை பழக்கம். ஒவ்வொரு ஊருக்கும் சென்று தங்கள் திறமையின் மூலம் கிடைக்கும் வெகுமதியைப் பயன்படுத்தியே அவர்கள் எளிமையுடன் வாழ்ந்திருந்தனர். அப்படி வாழ்ந்தால் தான் கலையில் நன்கு கவனம் செலுத்த முடியும் என கலைக்குத் தங்களை அர்ப்பணம் செய்து வாழ்ந்துகொண்டிருந்தனர். அப்படியே, புகார் கோட்டையில் விறலிக் கூத்தை அரங்கேற்றம் செய்த பிறகு இரும்பிடர்த்தலையர் அவர்களுக்கு அளித்த அனைத்து பரிசுகளையும் மற்றவர்களுக்கு இருவரும் தானம் செய்துவிட்டார்கள்.

பிறகு அடுத்த அரங்கேற்றத்தை எங்கு நடத்துவது என நாட்டு நிலைமையைப் பொறுத்து முடிவு செய்துகொள்ளலாம் என வெண்ணியில் வழிப்போக்கர் மாளிகையில் தங்கியிருந்தார்கள் இருவரும். அதே இரவு மரகதவல்லியின் வீட்டிலிருந்து புறப்பட்டுவிட்ட விறல்வேல் வைகறைப் பொழுதில் வேலன் மற்றும் விறலி தங்கியிருப்பதைக் கவனித்தான்.

எதிர்பாராத நேரத்தில் செங்குவீரனைக் கவனித்த இருவரும் அதிர்ச்சியும், பெரும் மகிழ்ச்சியும் அடைந்தார்கள். அந்த நேரத்தில் அவர்களின் அருகில் சென்றவன் "நீங்கள் இருவரும் எனக்கொரு உதவி செய்ய வேண்டும்!" எனக் கேட்டான்.

ஏற்கெனவே உப தலைவர் மீது பெரும் பற்றும் நம்பிக்கையும் கொண்டிருந்த விறலி, "செங்குவீரரே உதவி எனக் கூறாதீர்கள். இந்தப் பணியைச் செய்யுங்கள் எனக் கட்டளையிடுங்கள். நாங்கள் இருவரும் அதற்குச் சித்தமாக இருக்கிறோம்!" என்றாள்

"உறைந்தையில் என் நண்பர் ஒருவர் தீயில் அகப்பட்டுத் தீப்புண்களுடன் ஆபத்தில் இருக்கிறார். அங்கிருந்தால் உறைந்தை வீரர்களால் அவரது உயிருக்கு மேலும் ஆபத்து. அவரைத் தங்களுடன் அழைத்துக்கொண்டு உறைந்தையிலிருந்து சென்றுவிடுங்கள்!"

வேலன் மற்றும் விறலி அமைதியாக ஒருவரது முகத்தை மற்றவர் பார்த்துக்கொண்டு நிற்பதைக் கண்ட செங்குவீரன் "ஒருவேளை அந்த வீரன் தங்களிடம் நம்பிக்கை கொள்ளவில்லை என்றால் இந்த மோதிரத்தைக்

காட்டுங்கள் அவர் புரிந்துகொள்வார்!" எனக் கூறி ஒரு முத்திரை மோதிரத்தையும் கொடுத்தான்.

முத்திரை மோதிரத்தை வாங்கிய விறலி அதனைத் தனது அத்தானிடம் கொடுத்துவிட்டு, "வீரரே, உறைந்தைக்கும் புகாருக்கும் இருக்கும் சச்சரவை நாங்கள் அறிவோம். அங்கே இந்த முத்திரை மோதிரத்தை பயன்படுத்தினால் எங்களையும் அல்லவா கைது செய்து விடுவார்கள்! உங்களுக்கு அவர் நண்பர் என்றால் உறைந்தைக்கு அவர் நிச்சயம் எதிரியாகத்தான் இருப்பார். கலையை மட்டுமே நம்பி வாழ்பவர்கள் நாங்கள். அவரைக் காவல் நிரம்பிய உறைந்தைப் பட்டினத்திலிருந்து எங்களால் தப்புவிக்க வைத்து அழைத்துச் செல்ல இயலுமா?" என்றாள்.

"சகோதரி, உறைந்தைக் கோட்டைக்குள் அவர் இருக்கவில்லை. உறைந்தைப் பட்டினத்தின் கிழக்குக் கோடியில் இருக்கிறார். ஆதலால் தங்களுக்குப் பெரும் சிரமம் ஏற்படாது! மேலும் அவரைத் தங்களுக்கு தம்பி எனக் கூறினால் யாரும் அச்சப்பட மாட்டார்கள். அவரை அங்கிருக்கும் அனைத்து வீரர்களுக்கும் அடையாளம் தெரியாது! முயன்றால் காரியம் எளிது!"

"சரி செங்குவீரரே! உங்களுக்கு உதவுவதால் அவர்கள் கைது செய்து சிறையில் அடைத்தாலும் பரவாயில்லை. உறைந்தையில் தங்கள் நண்பரை நான் எங்கே, எப்படி சந்திப்பது? அவர் எப்படியிருப்பார்? அடையாளம் கூறுங்கள்!" என்றாள்.

"வலது காலில் தீப்புண் ஏற்பட்டிருக்கும். பதினெட்டு வயது இளைஞன். உறைந்தைப் பட்டினத்தில் கிழக்கே கடைசித் தெருவில் அரசமரம் மற்றும் வேம்பு இரண்டும் காவிரிக் கரையோரமாக ஒரே இடத்தில் வளர்ந்திருக்கும். அதற்கு அடுத்த வீடு தான் செங்கோடனது வீடு. அங்கு அவரது மகள் மற்றும் வளவனாரின் மகளது பொறுப்பில் விட்டு வந்திருக்கிறேன். அங்குச் சென்று உறைந்தை வீரர்களுக்கு எந்தவித சந்தேகமும் நேராத வண்ணம் பட்டினத்திலிருந்து அழைத்துச் சென்றுவிடுங்கள்!" என்றான் செங்குவீரன்.

“அப்படியே ஆகட்டும்! அவரை நாங்கள் அழைத்துச் சென்று பத்திரமாகப் பார்த்துக்கொள்கிறோம்” என விறலி கூற செங்குவீரர் அங்கிருந்து சென்றுவிட்டார் எனக் கூறி முடித்தார் வேலன்.

“அய்யா, எனக்கு ஒன்றும் புரியவில்லை!”

“என்ன புரியவில்லை”

“உப தலைவர் என்னை அவரது நண்பர் எனத் தானே தங்களிடம் கூறினார்?”

“ஆமாம் கரிகாலரே!”

“பிறகெப்படி நான் தான் இளவல் என்பதைக் கண்டறிந்தீர்கள்!”

“வெண்ணியிலிருந்து தங்களை நோக்கித் தான் வந்துகொண்டிருந்தோம். பலவித குழப்பங்களுடன் காவல் வீரர்களை ஏமாற்றி எப்படித் தங்களை உறைந்தைக்கு வெளியே அழைத்துவருவது என்று. அந்த வேளையில் தான் உறைந்தைக்குக் கிழக்கே நதியிலிருந்து எழுந்து வந்த தங்களைச் சந்தித்தோம். மயங்கிக் கொண்டிருந்த உங்களை ஓடி வந்து தாங்கி தூக்கியபோது உங்கள் காலைக் கவனித்தேன். உங்கள் வலது கால் வெந்துபோயிருந்தது. உபதலைவர் கூறிய வீரர் தாங்களாகத் தான் இருப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு எனது மாட்டுவண்டியில் போட்டு உறைந்தைக்குச் செல்லாமல் காவிரிக் கரையோரமாகவே மேற்கே வந்துவிட்டோம். தங்களுக்குச் சிகிச்சை செய்த போது தான் தாங்கள் செங்குவீரரின் நண்பர் இல்லை இளவல் என்பதைத் தங்களது மார்பில் பச்சை குத்தப்பட்டிருந்த புலியிலிருந்து அறிந்துகொண்டேன். பழம் நழுவிப் பாலில் விழுவதைப் போல உங்களைத் தேடி வந்த எங்களிடமே தாங்கள் சேர்ந்துவிட்டீர்கள்” எனப் பணிவுடனும், மகிழ்ச்சியுடனும் கூறினார் வேலன்.

“உப தலைவர் வேறு ஏதாவது தங்களிடம் தெரிவித்தாரா?”

“எதைப் பற்றிக் கேட்கிறீர்கள்?”

“அவர் மீண்டும் எப்போது, எங்கே என்னைச் சந்திப்பார் என ஏதாவது கூறினாரா?”

‘‘இல்லை’’ என வேலன் கூறிக்கொண்டிருந்த போதே அங்கு வந்த விறலி. ‘‘தம்பி! செங்குவீரர் மீண்டும் அவரே வந்து தங்களை அழைத்துச் செல்லும் வரை உங்களைக் கவனமுடன் உபசரித்து வேண்டியதைச் செய்யச் சொல்லி கட்டளையிட்டுள்ளார். சமைத்துவிட்டேன். வாருங்கள் அரசமர நிழலில் அமர்ந்து உணவுண்ணலாம்’’ எனக் கூறியவள் வேலனைப் பார்த்து, ‘‘அத்தான், உண்பதற்கு வாழை இலையையும், பானையில் நீரையும் கொண்டு வாருங்கள்’’ எனக் கூற வேலன் பானையை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

கரிகாலனை அழைத்து வந்து மரத்தடியில் அமரவைத்த விறலி, ‘‘தம்பி நீங்கள் மிகவும் பாக்கியசாலி?’’ என்றாள்.

கரிகாலன் சற்று வருத்தத்துடன், ‘‘நானா பாக்கியசாலி?’’ எனக் கேட்டார்.

‘‘ஆமாம். தாங்கள் தான்!’’

‘‘அப்படிக் கூறாதீர்கள் தாயே! நான் மிகவும் துர்பாக்கியசாலி!’’

‘‘வீரரே அப்படிக் கூறாதீர்கள்! இதுவரை தங்களது வாழ்வில் துர்பாக்கியம் நிறைந்திருக்கலாம். ஆனால் செங்குவீரனின் நட்பு உங்களுக்கு எப்போது கிடைத்ததோ, அப்போதே நீங்கள் பெரும் பாக்கியசாலி ஆகிவிட்டீர்கள்! நீங்கள் இழந்தவை அனைத்தையும் விரைவில் பெற்றுவிடுவீர்கள்!’’ என்றாள் விறலி.

அவள் கூறியதைக் கேட்ட கரிகாலன் திகைத்து, ‘நேற்று மரகதவல்லி உபதலைவர் மீது பெரும் நம்பிக்கை கொண்டிருந்தாள். இன்று இந்த விறலி. நம் உப தலைவரிடம் அப்படி என்ன தான் வசீகரம் இருக்கிறதோ?’ என வியந்தபடி விறலியையே நோக்கிக்கொண்டிருந்தார். அதே நேரம் அங்குத் தண்ணீர் மற்றும் வாழை இலைகளுடன் வந்தார் வேலன்.

வேலன் மற்றும் கரிகாலனை அமரவைத்த விறலி இருவருக்கும் இலையைப் போட்டு போதும் போதும் எனக் கூறுமளவிற்குச் சமைத்த உணவினைப் பரிமாறி உண்ணச் செய்த பிறகே இருவரையும் எழ விட்டாள்.

உணவுண்ட பிறகு எழுந்த இளவல் பொன்னி நதியில் கால் நனைத்தபடியே பாதி மூழ்கியிருந்த கல்லின் மீது அமர்ந்தார். சற்று நேரம்

கழித்து வேலனும் அவரது அருகில் வந்து அமர்ந்தார். கரிகாலன் பொன்னி நதியையே வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்ட வேலன் ஆச்சர்யத்துடன் காரணத்தை வினவினார்.

அதற்குக் கரிகாலன், “அய்யா, இந்தப் பொன்னி நதிக்குத்தான் என் மேல் எவ்வளவு அன்பு!” என ஆச்சர்யத்துடன் கூறினார்.

“பொன்னி நதிக்கு சோழ தேசம் என்றாலே பெரும் பாசம் தானே இளவரசே! அதனால் தானே சோழ தேசத்தைப் பொன் விளையும் பூமியாக்குகிறாள்!”

“இல்லை அய்யா. பொன்னி நதிக்கு சோழ தேசம் மீது இருக்கும் அன்பை விட என் மீது அவள் அதிக அன்பை வைத்துள்ளாள். இல்லையெனில் இருமுறை எனது உயிரைக் காப்பாற்றியிருப்பாளா!”

“இருமுறையா?”

“ஆம். இருங்கோ வேளினால் தீ வைக்கப்பட்ட மாளிகையிலிருந்து உப தலைவருடன் தப்பிக்கும்போது நேற்று இவள் தான் எங்களைக் காப்பாற்றினாள். இன்று உறைந்தை வீரர்களிடமிருந்து நான் தப்பிக்கவும் இவளே உதவியிருக்கிறாள். ஆதலால் தான் கூறுகிறேன். பொன்னி நதிக்கு என் மீது அளவற்ற அன்பு என்று! பதிலுக்கு நான் இவளுக்கு என்ன செய்யப்போகிறேனோ?” என அவர் கூறிக்கொண்டே அருகில் கிடந்த சிறு சிறு கூழாங்கற்களை எடுத்து பொன்னி நதிக்குள் எறிந்து கொண்டிருந்தார்.

அந்நேரம் அங்கு வந்த விறலி அதனைக் கவனித்துவிட்டாள். “என்ன தம்பி நீயே பொன்னி நதியை தூற்றுவிடுவாய் போலிருக்கிறதே?” எனக் கூறிக்கொண்டே கரிகாலனின் அருகில் அமர்ந்தவள் கரிகாலனது வலது காலைத் தூக்கி தன் மடியில் வைத்துக்கொண்டு தீப் புண்ணிற்கு மருந்துபூசத் தொடங்கினாள். அவளது அன்பினைப் பார்த்த கரிகாலனின் கண்கள் கலங்கத்தான் செய்தது. அதே நேரம் நேற்று தனது கூந்தலைக் கொண்டு மருந்திட்ட மரகதவல்லியின் நினைவும் அவருக்கு வந்து சேர விறல்வேல் மீதிருந்த மதிப்பும் உயரத்தொடங்கியது. இரு பெண்களுக்கும் நான் யார் என்றே தெரியாது! அப்படியிருக்க உபதலைவர் கூறினார் என்ற ஒரே

காரணத்திற்காக இவர்கள் என் மீது இப்படிப் பேரன்பை பொழிகிறார்களே! எனப் பெரிதும் வியந்தார். தனது வியப்பைக் காட்டிக்கொள்ளாத கரிகாலன், “தாயே! கூழாங்கற்களைக் கொண்டு காவிரி நதியை தூர்க்க இயலுமா?” என பதிலுக்கு வினவினார்.

“ஏன் தம்பி இயலாது, எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்பார்களே! அப்படித்தான். சிறு சிறு கற்களை வீசிக் கொண்டே இருந்தால் ஒரு நாள் பொன்னி நதியும் குறுகி ஓடையாகி பிறகு அதுவும் காணாமல் போய் விடும்!” என்றாள்.

தன் தவற்றை உணர்ந்த கரிகாலன் அமைதியாகவே இருந்தார். அவரது மௌனத்தைக் கண்ட விறலி, “தம்பி, பொன்னி நதியின் மேல் உனக்கு உண்மையாகவே அன்பிருந்தால் ஒவ்வொரு முறை நீ நதிக்குள் சென்று திரும்பும்போதெல்லாம் ஒரு பிடி மண்ணை அள்ளிக்கொண்டு வந்து கரையில் போடு! அதுவே அவளுக்குச் செய்யும் பெரும் உதவி!”

அதைக்கேட்ட கரிகாலனுக்கு மனம் சுர்ரென்று சுட்டது. தனது பிழையை உணர்ந்தார். விறலி மருந்திட்டதும் அங்கிருந்து எழுந்துச் சென்றாள்.

“கரிகாலரே, என் மனைவி கூறியதைக் கேட்டுத் தாங்கள் வருந்த வேண்டாம். அவள் ஏதேனும் பிழை செய்திருந்தால் பொறுத்தருளுங்கள்!” எனப் பணிந்தார் வேலன்.

“அய்யா, தாங்கள் எதற்கு வருத்தம் தெரிவிக்கிறீர்கள். உண்மையில் வருந்த வேண்டியவன் நான் தான். இத்தனை நாள்களாக மூடிக் கிடந்த எனது அகக் கண்களைத் தங்கள் மனைவி திறந்துவிட்டார். சற்று முன் தங்களிடம் இந்தப் பொன்னி நதிக்கு நான் என்ன செய்யப் போகிறேனோ? என வருந்தினேன் அல்லவா! தங்கள் மனைவியே அதற்கான தீர்வையும் கூறிவிட்டுச் சென்றுள்ளார்கள். சோழ அரியாசனத்தில் நான் அமர்ந்ததும், பொன்னி நதியின் இரு கரைகளுக்கும் மண் எடுக்கப் போகிறேன். நதியை ஆழப்படுத்தி நதிக் கரையை உயர்த்தப் போகிறேன். பொன்னி நதி சோழ தேசம் மீது கொண்டிருக்கும் காதலால் அவ்வபோது அத்துமீறி கரைகளை உடைத்து விடுகிறாள் அல்லவா, அதற்கு முடிவு கட்டப் போகிறேன். கரைகளை உயர்த்திக் காவிரிக்கு குறுக்கே அணை கட்டப் போகிறேன்!” என

நதியைப் பார்த்து கரிகாலன் ஆவேசத்துடன் கூறிக்கொண்டிருந்த போதே இடை மறித்த வேலன், ‘‘கரிகாலரே, காவிரிக்கு அணை எடுப்பது சாத்தியம். ஆனால் அணை கட்டுவது சாத்தியமா?’’ என வினவினார்.

‘‘நிச்சயம் இயலும் அய்யா. உலகில் இயலாது என எதுவுமே கிடையாது. சரியான காலத்தில் முயன்றால் எதுவும் சாத்தியம்!’’ என்றவர் சற்றுத் தொலைவில் வேலை செய்துகொண்டிருந்த விறலியை அழைத்தவர் அவர் ஆச்சர்யப்படும்படி, ‘‘தாயே தங்களைக் காவிரிக்கு குறுக்கே அணை கட்டச் சொன்னால் தாங்கள் எப்படிச் செய்வீர்கள்?’’ என வினவினார்.

அவரது கேள்விக்கு விறலி நேரடியாகக் கூறாமல் கரிகாலனை வலது காலில் ஈரம் படாமல் இன்னொரு பாறை மீது வைத்து நிற்கச் சொல்லி இடது காலினை பொன்னி நதியில் வைத்து நிற்கச் சொன்னாள். கரிகாலனும் விறலியின் தோளைப் பிடித்துக்கொண்ட படியே இடது காலை பொன்னி நதியில் ஊன்றி நின்றார். அவர் அப்போது ஒரு பெரும் ஆச்சர்யத்தை உணர்ந்தார். வேகமாகச் சென்ற பொன்னி நதியின் புனல் அவரது காலிற்குக் கீழே இருந்த மணலை அடித்துச் செல்ல அவரது கால் சிறிது சிறிதாக மண்ணில் புதைய ஆரம்பித்தது. கரிகாலனின் கால் புதைய புதைய அவரது முகத்தில் ஒளி வீசத் தொடங்கியது. அவரது கண்களில் பெரும் கனவுகள் பிறந்தன. அருகில் நின்ற விறலியைப் பார்த்தார் கரிகாலன். அவருக்கு அப்பெண் பொன்னித் தாயைப் போலவே காட்சியளித்தாள். உடனே அவரது காலில் விழுந்து வணங்கிய கரிகாலன், ‘‘தாயே எனது கண்களைத் திறந்துவிட்டீர்கள்’’ எனக் கூறியபடியே பணிந்தார். அவரது செயல்கள் எதுவும் புரியாத விறலி அவரைத் தடுத்துவிட்டு குழப்பத்துடனே அங்கிருந்துச் சென்றாள். அனைவரும் ஓய்வெடுத்துக் கொண்ட பிறகு ஒரு முகூர்த்தப் பொழுதுகளுக்குப் பிறகு மூவரும் கிளம்பி காவிரிக் கரையோரமாகவே நீர் பாய்ந்த எதிர் திசையை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார்கள்.

ஆனால் கரிகாலனது மனம் மட்டும் மரக்கலத்தில் உறைந்தை வீரர்கள் துரத்திச் சென்ற வானவல்லி மற்றும் மரகதவல்லியின் நிலை என்ன ஆனதெனத் தெரியாமல் வருத்தமடையத் தொடங்கியது. அதிலும் மரகதவல்லி செய்த பணிவிடைகள் அவரது நினைவிற்கு வர வர அவரது மனதில் இனம்

புரியாத உணர்வும் முகத்தில் வெற்றுப் புன்னகையும் தோன்றுவதை அவரால் தடுக்க இயலவில்லை. இதுவரை எந்தப் பெண்களையும் கண்ட போது தோன்றாத பரவச உணர்வு அப்பெண்ணை நினைக்கும் போதே தனது மனதில் தோன்றிவிட்டதன் காரணத்தை அறியாத இளவல் குழம்பினார். அருகில் அமர்ந்திருந்த விறலி அவரது முகத்தில் ஏற்படும் மாற்றங்களை ஆச்சர்யத்துடன் கவனித்துக்கொண்டே பயணித்தாள்.

# 40. உற ைந்தைத் தூதுவன்

தோணியிலிருந்து குதித்துவிட்ட கரிகாலனை மீண்டும் நீர் மேற்பரப்பில் காண இயலாததால் பாறைகளில் அடிபட்டு நீரோடு அடித்துச் செல்லப்பட்டிருப்பாரோ என எண்ணி வானவல்லி மற்றும் மரகதவல்லி அச்சப்பட்டார்கள். நீரில் குதித்துவிட்ட கரிகாலனுக்கு மட்டும் ஏதாவது நேர்ந்தால் சோழ தேசத்தின் எதிர்காலம், விறல்வேல், இரும்பிடர்த்தலையர் மற்றும் பல வீரர்களின் நம்பிக்கை, எதிர்பார்ப்பு, போராட்டம் என அனைத்தும் பாழாகிவிடும் என அறிந்த வானவல்லி செய்வதறியாது திகைத்து கலங்கி நின்றாள். ‘தன்னிடம் விட்டுச் சென்ற அத்தான் மீண்டும் அவர் எங்கே என வினவினால் அவருக்கு நான் என்ன பதில் கூறப் போகிறேன்’ என எண்ணிய போதே அவளது உடலெல்லாம் நடுங்கத் தொடங்கியது. கரிகாலனின் இந்தச் செயலை யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. இரு பெண்களையுமே நிலைகுலையச் செய்திருந்தது! இருவருமே அதிர்ச்சியில் இருந்ததனால் தோணியைப் பற்றியும், பின்னால் விரட்டி வந்த மரக்கலத்தைப் பற்றியும் யாரும் சிந்திக்கவில்லை. தோணி தன் பாட்டிற்கு நீரில் அடித்துப் போய்க் கொண்டிருந்தது! மரகதவல்லி கண்ணீர் சிந்திக்கொண்டே அமர்ந்திருந்தாள். வேகமாக அடித்துச் செல்லப்பட்ட தோணி நாணல் புல் படர்ந்த புதரில் மோதி அவர்களின் மேல் சில துளி நீர்த்துளிகளை வாரி இறைத்தது.

குளிர்ந்த நதியின் நீர் தன் உடலில் வாரி அடித்தபோதுதான் வானவல்லி சுய நினைவை அடைந்து ஆபத்தை உணர்ந்தாள். நாணல் புதரின் மையத்தில் தோணி சிக்கியிருந்தது. விரட்டி வந்த மரக்கலமும் வேகமாக இவர்களை நெருங்கிக் கொண்டிருந்தது.

நிலைமையை உணர்ந்த வானவல்லி மரகதவல்லியிடம் “மரகதவல்லி ஆபத்து! ஆபத்து!” எனக் குரல் கொடுத்தாள். வானவல்லியின்

கூக்குரலைக் கேட்டு சுய நினைவை அடைந்த மரகதவல்லி நிலைமையைப் புரிந்துகொண்டாள். “அக்கா! கவலை வேண்டாம்!” எனக் கூறிச் சாதுர்யமாகப் புதரில் சிக்கியிருந்த தோணியை விடுவித்தாள். புதரிலிருந்து விடுபட்ட தோணி மீண்டும் புனல் பிரவாகத்தில் வேகமாகச் செல்ல ஆரம்பித்தது. மரகதவல்லியும் எந்த ஆபத்தும் நேராமல் பின்னால் வரும் மரக்கலத்தை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என எண்ணியபடியே தோணியைச் செலுத்திக்கொண்டிருந்தாள்.

இவர்களை விரட்டி வந்த கலாபதி யும் சாதுர்யத்துடன் மரக்கலத்தைச் செலுத்திக்கொண்டிருந்தான். தோணி சற்றுத் தொலைவில் செல்லும் போதே அவர்களைத் தாக்க அவன்தான் வில் வீரர்களைத் தயாராய் இருக்கக் கட்டளை பிறப்பித்துத் தாக்கவும் சொல்லியிருந்தான். தோணி புதரில் சிக்கிக் கொண்டதைப் பார்த்துவிட்டவன் அவர்களால் அந்தப் புதரிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள இயலாது என எண்ணி வேகமாகச் சென்று அத்தோணியின் மீது மரக்கலத்தை மோதி அவர்களை நீரிலேயே கொன்றுவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் விரைவாகச் சென்றுகொண்டிருந்த போது தோணி புதரிலிருந்து விடுபட்டுச் சென்றது அவனுக்குப் பெருத்த ஆச்சர்யத்தை அளித்தது. இந்தப் பிரவாகத்தில் தனது மரக்கலமே படாத பாடு பட்டுக்கொண்டிருக்கும் போது பொன்னி நதியின் வேகம், நீர்ச் சுழல், புதர் ஆகியவற்றிலிருந்து சாதுர்யமாகத் தோணியைச் செலுத்தும் அப்பெண்ணை எண்ணி அவன் பெரிதும் ஆச்சர்யமடைந்தான். தோணியைத் திறம்படச் செலுத்தும் அந்தப் பெண்ணின் முகத்தை ஒரு முறையாவது பார்த்துவிட வேண்டும் என அவன் எண்ணிக்கொண்டிருந்த போதே மரக்கலத்தில் “படார்!” என்ற சத்தம் எழுந்து மரக்கலத்தில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டு அங்கிருந்த அனைவரும் நிலை தடுமாறி கீழே விழுந்தார்கள். உடனே சுதாரித்துக்கொண்ட கலாபதி மரக்கலத்தைக் கரையை நோக்கி ஒதுக்கினான்.

தோணியைச் செலுத்தும் பெண்ணை நினைத்து தனது மரக்கலத்தைப் பாறையில் மோதவிட்டுவிட்டதை எண்ணிய கலாபதி தன்னை நொந்து கொண்டான். உறைந்தை வீரர்களிடம், “இனி மரக்கலம் பொன்னி நதியின் குறுகிய பாதையில் பயணிப்பது பெரும் ஆபத்து. நதியின் கொந்தளிப்பு அதிகமாக உள்ளது! நீர்ச் சுழல் மற்றும் பாறைகளை ஒதுக்கி மரக்கலத்தைச்

செலுத்த முயன்றால் மரக்கலம் உடைந்து சுக்கு நூறாகிவிடும். நாம் கரை ஒதுங்குவதைத் தவிர வேறு வழியில்லை!'' எனக் கூறி தனது பிழையை மறைத்து விட்டான். உறைந்தை வீரர்களும் சற்று ஏமாற்றத்துடன் ''இவ்வளவு தூரம் விரட்டி வந்தும் அந்தத் துரோகிகளைப் பிடிக்க இயலவில்லையே! அரசருக்கு என்ன பதில் கூறப்போகிறோம்?'' என அனைவரும் முணுமுணுத்துக்கொண்டு அதிருப்தியுடன் திரும்பினார்கள்.

தூரத்தில் மரக்கலம் ஒதுங்கிவிட்டதைக் கண்ட மரகதவல்லி ஒரு ஆபத்து விலகிவிட்டதை எண்ணிப் பெரும் நிம்மதியுடன், ''அக்கா! அந்த வீரர் பிழைத்திருப்பாரா?'' என உயிரற்ற சொற்களால் வானவல்லியிடம் வினவினாள்.

அவளுக்கு என்ன மறுமொழி கூறுவதெனத் தெரியாமல் திகைத்த வானவல்லி அமைதியுடனே அமர்ந்திருந்தாள். ''அக்கா! பதில் கூறுங்கள்!'' என மீண்டும் கேட்டாள் மரகதவல்லி.

''நாம் கவலைப்படுவதைப் போல அவருக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டிருக்காது மரகதவல்லி! நீ அதை நினைத்துக் கவலையுற வேண்டாம்!''

''அவர் செய்ததை எண்ணி எனது உடலெல்லாம் நடுங்குகிறது அக்கா. நம்மைக் காக்க தனது உயிரைப் பற்றி மதிக்காத அவரது பெரும் பண்பைப் பற்றி வியப்பதா அல்லது பொன்னி நதியில் குதித்துவிட்ட அவரது முட்டாள் தனத்தை எண்ணி வருத்தப்படுவதா என எனக்குத் தெரியவில்லை!''

''அவருக்கு எந்த ஆபத்தும் நேர்ந்திருக்காது. நீ அச்சப்பட வேண்டாம். விரைவில் அவரை நாம் சந்திப்போம்'' என நம்பிக்கையூட்டினாள் வானவல்லி.

''அது எப்படி அக்கா, அவ்வளவு நம்பிக்கையுடன் கூறுகிறீர்கள். எனக்கு நம்பிக்கையில்லை!'' எனக் கண்ணீர் சிந்தியவள் ஓடும் பொன்னி நதியைக் காட்டி ''அக்கா, இந்தப் புனலைப் பார்த்தீர்களா? காட்டாற்றைப் போன்று ஆவேசத்துடன் சென்றுகொண்டிருக்கிறது! இதிலிருந்து அவர் தப்பியிருக்க இயலுமா?'' என மீண்டும் வினவினாள்.

மரகதவல்லியின் மனநிலை முற்றிலும் மாறியிருந்தது. கரிகாலன் தப்பியிருப்பான் என மீண்டும் மீண்டும் கேட்பதையே அவள் விரும்பவதை

அறிந்த வானவல்லி அவளுக்கு நன்வார்த்தைகளையே சொல்லிக்கொண்டிருந்தாள். கரிகாலன் தான் இளவரசன் திருமாவளவன் என மறைத்த உண்மையைக் கூறிவிடலாமா? எனக் கூடச் சிந்தித்தாள். முன் பின் தெரியாத கரிகாலன் மீதே இவள் இவ்வளவு அக்கறையுடன் இருக்கும்போது குதித்தது இளவல் எனத் தெரிந்தால் இவளும் நதியில் குதித்து உயிரை விட்டாலும் விட்டுவிடுவாள் என நினைத்தவள் அந்த யோசனையைக் கைவிட்டாள். பிறகு "மரகதவல்லி கரிகாலனுக்கு நீச்சல் நன்கு தெரியும்! நிச்சயம் இந்தப் பிரவாகத்தில் இருந்து தப்பியிருப்பார்! அவர் குதித்ததே நாணல் புதர் மண்டிய இடம் தான் என்பதை நீயும் கவனித்திருப்பாய். அவர் திறமை சாலி. மரணம் எனக்கு நேருவதாய் இருந்தால் நேற்றே மாளிகையில் நெருப்போடு வெந்திருப்பேன். இந்தப் புனல் என்னை ஒன்றும் செய்துவிடாது எனக் கூறிவிட்டுத் தானே சென்றார். அவருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது!" என வானவல்லி ஆறுதல் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த மரகதவல்லி, "அக்கா, நேற்று நெருப்பிலிருந்து கரிகாலனைக் காக்க உபதலைவர் அங்கு இருந்தார். ஆனால் புனலிலிருந்து கரிகாலனைக் காக்க அவர் இங்கு இல்லையே அக்கா!" எனக் கூறி குலுங்கி குலுங்கி அழுதாள். அவளுக்கு என்ன மறுமொழி கூறுவதெனத் தெரியாத வானவல்லி அருகில் அமர்ந்திருந்த மரகதவல்லியை அணைத்துக் கொண்டாள். அவளது கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகி படகில் வழிந்துகொண்டிருந்தது. இருவருக்குமிடையில் பெருத்த அமைதி நிலவியது! தோணி மட்டும் புகாரை நோக்கி விரைந்துகொண்டிருந்தது!

மேலும் ஒரு சாமப் பொழுது தோணி நதியிலேயே பயணித்துக் கொண்டிருந்த வேளையில் தான் மரகதவல்லி மாளிகைக்கு முன் சிலர் நிற்பதைக் கவனித்தாள். உடனே மரகதவல்லி தோணியைக் கரைப் பக்கம் ஒதுக்கினாள். தோணி கரைப்பக்கம் ஒதுங்குவதைக் கண்ட வானவல்லி, "புகாருக்கு இன்னும் பயணிக்க வேண்டியிருக்கிறதே மரகதவல்லி. அதற்குள் நாம் எதற்குக் கரைப்பக்கம் ஒதுங்குகிறோம்?" என வினவினாள்.

"அதோ பாருங்கள் அக்கா! மாளிகைக்கு முன் புகாரின் உப தளபதிகள் நிற்கிறார்கள். அங்கு நிச்சயம் நமது உப தலைவரும் இருப்பார். நாம் கரிகாலன் நீரோடு சென்றுவிட்டதைத் தெரிவிப்போம்!" எனக் கூறினாள்.

உப தலைவர் அங்கு இருப்பார் என மரகதவல்லி கூறியதைக் கேட்டதும் வானவல்லி பெரும் நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும் சென்றாள்.

பொன்னி நதியில் தோணி ஒதுங்குவதையும், அதிலிருந்து இரு பெண்கள் இறங்கி மாளிகையை நோக்கி நடந்து வருவதையும் முதன் முதலில் வளவனார் தான் பார்த்தார். அவர்கள் சற்று நெருங்கி வந்ததும் வருபவர்கள் தனது மகள் வானவல்லியும், செங்கோடனின் மகள் மரகதவல்லியும் தான் என்பதையும் அறிந்தார். பத்திரையின் புரவித் தேரை எடுத்துக்கொண்டு அவசரமாக உறைந்தையை நோக்கிச் சென்றவள் பொன்னி நதியில் புனல் இரு கரைகளையும் தொட்டுக்கொண்டு காட்டாற்றைப் போல ஓடி வரும் சூழலில் இருவரும் தோணியில் பயணம் செய்து வந்திருக்கிறார்கள் என்றால் இவர்களுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்க வேண்டும்? இவர்களுக்கு ஆபத்து ஏதாவது நேர்ந்திருந்தால் என நினைத்த போதே அவருக்குக் கடும் கோபம் வந்துகொண்டிருந்தது.

அங்கு நடந்த கலந்துரையாடலில் வளவனார் கவனம் செலுத்தாமல் இருப்பதையும், மாறி வரும் அவரது முகப் பாவனையை அங்கிருந்த அனைவரும் கவனித்துவிட்டார்கள். வானவல்லியும், மரகதவல்லியும் பெரும் கவலையுடன் வந்துகொண்டிருந்தார்கள். இரு பெண்களின் முகத்தில் சூழ்ந்திருந்த பெரும் கவலையும், அவர்களின் கண்களில் கசிந்திருந்த கண்ணீர்த் துளிகளையும் கவனித்தவர்கள் ஏதோ துயரம் நிகழ்ந்திருக்கிறது என்பதை ஓரளவு யூகித்து இன்னதெனத் தெரியாமல் தயங்கி நின்றுகொண்டிருந்தனர்.

தனது தந்தையைப் பார்த்த மரகதவல்லி, ‘‘அப்பா! கரிகாலன் நீரில் மூழ்கிவிட்டார்...!’’ எனக் கலங்கியபடியே அவரது தோளில் சாய்ந்து விம்மி விம்மி அழுதாள்.

அங்கிருந்த வளவனார், செங்கோடன், இரும்பிடர்த் தலையர், திகம்பர அடிகளார் மற்றும் உபதளபதிகள் அனைவரும் ஒரே நேரத்தில், ‘‘கரிகாலனா?’’ யார் அவன்?’’ என ஆச்சர்யத்தோடும் கவலையோடும் வினவினார்கள்.

கரிகாலன் என்பவர்தான் இளவல் என்பதை மரகதவல்லி அறிந்தால் அவளது கவலை மேலும் அதிகரித்து உடல் நிலை பாதிக்கப்படலாம் என நினைத்த வானவல்லி, “மரகதவல்லி... நான் அவர்களிடம் விவரமாகப் பிறகு கூறுகிறேன். நீ என்னுடன் வா!” என அவளைத் தோளில் தாங்கியபடியே மாளிகைக்குள் அழைத்துச் சென்று பஞ்சணையில் படுக்கவைத்துவிட்டு வெளியே வந்தாள்.

வானவல்லி வெளியே வந்ததும் இரும்பிடர்த்தலையர், “கரிகாலன் என்பவன் யாரம்மா! மரகதவல்லி ஏன் இப்படித் துயரத்தோடு செல்கிறாள்?” என வினவினார்.

“அய்யா! கரிகாலன் என்பவர்....” எனக் கூறியபடியே தயங்கினாள்.

அவளது தயக்கத்தைக் கண்ட வளவனார், “ஏனம்மா தயங்குகிறாய். கரிகாலன் என்பவன் யாரென்று கூறு...” எனத் தூண்டினார்.

“இளவரசன் திருமாவளவன் தான் கரிகாலன். அவர் தான் பொன்னி நதியில் குதித்துவிட்டார். அவருக்கு என்ன நேர்ந்தது எனத் தெரியவில்லை” எனக் கண்களில் வழிந்த கண்ணீர்த் துளிகளைத் துடைத்த படியே கூறினாள்.

அவள் கூறியதைக் கேட்ட அனைவரும் தலையில் பெரும் இடி விழுந்ததைப் போல உணர்ந்தார்கள். இரும்பிடர்த்தலையர், “ஏனம்மா, என் தலையில் பெரும் இடியைக் கொண்டு வந்து போடுகிறாய்! உப தலைவன் எங்கே? அவன் தானே இளவலைக் காப்பாற்றி அழைத்துச் சென்றதாய் செங்கோடன் தெரிவித்தார்!” என்றார் கலங்கியபடியே!

“இளவலை என்னிடம் சேர்ப்பித்துவிட்டு அவர் நேற்றிரவே சென்றுவிட்டார்”

“அம்மா, நடந்த நிகழ்வுகளைத் தெளிவாகக்கூறு” எனக் கட்டளையிட்டார் வளவனார்.

இருங்கோவேள் மாளிகைக்குத் தீ வைத்த கதையையும், அதிலிலிருந்து உபதலைவர் இளவலைக் காப்பாற்றி மரகதவல்லியின் இல்லத்திற்குத் தூக்கி வந்ததையும், பிறகு வானவல்லி அவருக்கு மருத்துவம் செய்ததையும், இளவரசன் திருமாவளவனின் பெயர் கரிகாலன் ஆனதையும்,

உபதலைவன் அங்கிருந்துச் சென்றுவிட்ட பிறகு பகல் பொழுதில் இளவலுக்கு நேர்ந்த ஆபத்தையும், தோணியில் தப்பி வந்த போது கரிகாலன் மற்ற இருவரையும் காக்க பொன்னி நதியில் குதித்துவிட்டதையும் வானவல்லி கூறிக்கொண்டிருந்த போதே கதறும் தொனியில் இரும்பிடர்த்தலையர், "ஐயோ... உப தலைவன் இளவலுடன் இருக்கிறான் எனத் தானே பொன்னி நதியில் குதித்தபின்பும் கவலைப் படாமல் இருந்தேன். இப்போது இளவல் மட்டும் குதித்து விட்டானே! அவனுக்கு ஏதாவது நேர்ந்திருந்தால்..." எனக் கதறியபடியே நிலைகுலைந்தார். அவர் நிலைகுலைந்து விழுவதைக் கண்ட உப தளபதிகள் திருக்கண்ணன் மற்றும் பரதவன் குமரன் இருவரும் ஓடி வந்து அவரைத் தாங்கி அருகிலிருந்த ஆசனத்தில் அமர்த்தி நீர் பருகக் கொடுத்தார்கள்.

பெரும் நிசப்தம் அங்கு நிலவிக்கொண்டிருந்தது. அனைவருமே பேசும் சக்தியை இழந்திருந்தார்கள். அனைவரையுமே பெரும் திகிலும், கவலையும் பீடித்திருந்தது. அப்போது வானவல்லி மட்டும், "கரிகாலனுக்கு எந்த ஆபத்தும் நேர்ந்திருக்காது. நீங்கள் கவலையுற வேண்டாம். உரிய நேரத்திற்குத் தான் நிச்சயம் வந்துவிடுவதாக அவர் எனக்கு வாக்களித்துள்ளார். சோழ வம்சம் கொடுத்த வாக்கினைக் காக்க உயிரையும் கொடுப்பவர்கள். அதன் படி அவர் நிச்சயம் வந்துவிடுவார்" எனப் பொதுவாகக் கூறியவள் பிறகு அங்கிருந்த மூன்று உப தளபதிகளை நோக்கி, "உப தலைவர் தங்களுக்கிட்ட பணிகளைச் தொய்வில்லாமல் நிறைவேற்றிக் கொண்டிருங்கள். இருவரும் நிச்சயம் வந்துவிடுவார்கள்!" எனக் கூறிவிட்டு அமைதியாகவே நின்றாள். வானவல்லியின் பேச்சு அவர்களுக்கு ஓரளவு ஆறுதலையும், நம்பிக்கையையும் அளித்திருந்தது.

அந்த நேரத்தில் அங்குப் புரவியில் வந்த யவன வீரனொருவன் டாள்தொபியாசிடம் சென்று வணங்கிவிட்டு பணிவுடன், "உறைந்தையிலிருந்து தூது செய்தி வந்திருக்கிறது!" எனத் தகவல் கூறினான்.

அருகில் நின்ற பரதவன் குமரன், "யாரிடமிருந்து வந்திருக்கிறது?" என வினவினான்.

"இருங்கோவேளிடமிருந்து..."

“என்ன செய்தி?”

“கேட்டதற்குக் கூற மறுத்துவிட்டான். புகார் தலைவரிடம் தான் தெரிவிப்பானாம்!

“எத்தனை பேர் வந்திருக்கிறார்கள்?”

“ஒருத்தன் மட்டும் தான் தளபதியாரே!”

“ஒருவனா?” இந்த முறை திருக்கண்ணனிடம் இருந்து வார்த்தைகள் ஆச்சர்யத்துடன் வெளிப்பட்டன.

“ஆமாம்!”

“உறைந்தையிலிருந்து யாரேனும் வந்தால் துணைக்கு வீரர்களை அழைத்துக்கொண்டு தானே வருவார்கள்! கடந்தமுறை உறைந்தையிலிருந்து வந்தானே, அவனா வந்திருக்கிறான்?”

“அவன் இல்லை. ஆனால் இவன் பெரும் வீரனைப் போன்று காட்சியளிக்கிறான்” எனக் கூறியவன் டாள்தொபியாசிடம், “தளபதி, அத்தூதுவனை இங்கு அழைத்து வரவா! கட்டளையிடுங்கள்!” என்றான்.

சிறிது சிந்தித்த பிறகு, “அவனை இங்கு அழைத்து வா!” எனக் கட்டளையிட யவன வீரன் புரவியில் கோட்டையை நோக்கி விரைந்தான்.

உறைந்தையிலிருந்து தூது செய்தி வந்திருக்கிறது எனக் கேட்டதும் போர்ச் செய்தியாகத் தான் இருக்கும் என அனைவரும் நினைத்தனர். “கரிகாலன் இல்லாமல் எப்படிப் போரை எதிர்கொள்ளப் போகிறோம்?” “உப தலைவன் வேறு இல்லை! என்ன செய்வது?” என ஒவ்வொருவரது மனதிலும் மாறுபட்ட சிந்தனைகள் ஓடிக்கொண்டிருந்தன.

சிறிது நேரம் கழித்து யவன வீரனும், உறைந்தைத் தூதுவனும் அவர்களை நோக்கிப் புரவியில் வந்துகொண்டிருந்தார்கள்.

புரவியில் இருந்து இறங்கி கம்பீரமாக நடந்து வந்த உறைந்தைத் தூதுவனைக் கண்ட இரும்பிடர்த்தலையர், வளவனார், திகம்பர அடிகளார் ஆகியோர் ஒருகணம் திகைத்து நின்றார்கள். ஏனெனில் உறைந்தைத் தூதுவனாக வந்தவன் காளன். வளவனார் மற்றும் அடிகளாருக்குக் காளன்

இரும்பிடர்த்தலையரின் தம்பி என முன்பே தெரியும். கள்வனாகச் சுற்றியவன் அவ்வளவு எளிதில் எதிரிகளிடம் சேர்ந்திருப்பான் என அங்கிருந்த யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. இரும்பிடர்த்தலையரின் முகத்தில் தோன்றிய திகைப்பு டாள்தொபியாசிற்குக் கூட ஆச்சர்யத்தை அளித்தது. இருப்பினும் பௌத்த விகாரில் அவன் தன்னை ஏமாற்றிவிட்டுத் தப்பிவிட்டதை நினைத்த டாள்தொபியாசிற்குக் கோபமும் ஆத்திரமும் அவனை மீறி வெளிப்படத் தொடங்கின.

உடனே வாளை உருவிய டாள்தொபியாஸ் காளன் மீது பாய்ந்தான். அவனது வாளைத் தடுத்து நிறுத்திய காளன், ‘‘உப தளபதியாரே, நான் உங்களுடன் யுத்தம் புரிய வந்திருக்கவில்லை. அதற்கு வேறொரு நல்ல சந்தர்ப்பம் நிச்சயம் வாய்க்கும் என நம்புகிறேன்’’ எனக் கூறியபடியே அவனது வாளினை விலக்கித் தனது வாளினை உறைக்குள் போட்டுக்கொண்டான். அவன் கூறியதை ஏற்க மறுத்த டாள்தொபியாஸ், ‘‘நீ கயவன். கள்வன். பௌத்த விகாரிலிருந்து வஞ்சகமாகத் தப்பித்துவிட்டாய்! உன்னை உயிரோடு விட்டால் அது பெரும் பிசகு!’’ எனக் கூறியபடியே மீண்டும் வாளினை ஓங்க அவனைத் தடுத்து நிறுத்திய வளவனார், ‘‘டாள்தொபியாஸ் வந்திருப்பவன் தூதுவனாக வந்திருக்கிறான். அவனுக்கு உரிய பாதுகாப்பு அளித்து வரவேற்பது நமது கடமை’’ எனக் கூற அமைதியானான் டாள்தொபியாஸ்.

டாள்தொபியாஸ் வாளினை உருவியதைக் கண்ட காளன் கோபம் கொள்ளாமல் சிரித்தபடியே, ‘‘உறைந்தையிலிருந்து யார் வந்தாலும் அவர்களை வாளினைக் கொண்டு வரவேற்பதே நம் யவனத் தளபதிக்கு வழக்கம் போலிருக்கிறது!’’ என நகைத்தான்.

அவனது நகைப்பில் கவனம் செலுத்த விரும்பாத வளவனார், ‘‘உறைந்தையிலிருந்து என்ன செய்தி கொண்டு வந்துள்ளாய்! ஓலை எங்கே?’’ என வினவினார்.

‘‘ஓலை ஏதும் கொண்டுவரவில்லை. மாமன்னரிடமிருந்து தூது செய்தியைத் தான் கொண்டுவந்துள்ளேன். வாய் வழி தெரிவிக்கவே அவர் கட்டளையிட்டுள்ளார்.’’ எனக் கூறிக்கொண்டே இலைச்சினை முத்திரையை

அவர்களிடம் காட்டினான். அவனது முத்திரையைக் கண்டவர்கள் அவன் உறைந்தைப் படைத் தலைவனாகிவிட்டதையும் கவனித்தார்கள்.

“மாமன்னரிடமிருந்தா?”

“ஆம்!”

“யாரைக் குறிப்பிடுகிறாய்!”

“சக்கரவர்த்தி இருங்கோ வேளை தான்!

காளன் இருங்கோ வேளை மாமன்னர், சக்கரவர்த்தி எனக் கூறியது அங்கிருந்த அனைவருக்குமே ஆத்திரத்தை வரவழைக்க அடிகளார் மட்டும் அவனிடம், “மாமன்னர் என்கிறாயே அதற்குரிய தகுதி இருங்கோ வேளுக்கு உண்டா?” எனச் சாந்தத்துடன் வினவினார்.

“அடிகளாரே! அதைப்பற்றி விவாதிக்கும் இடம் இதுவல்ல. அவர் எப்படிப்பட்டவர் என்ற கவலையும் எனக்கில்லை. புகாரின் தலைவராக இப்போது இருப்பவர் யார்? அவரிடம் கொண்டு வந்த தகவலைத் தெரிவித்துவிட்டு நான் உடனடியாகக் கிளம்ப வேண்டும்!” என்றான்.

அவன் கூறியதைக் கேட்ட டாள்தொபியாஸ், “உப தலைவர் செங்குவீரர் இங்கு இல்லை. ஆதலால் நீ கொண்டு வந்த செய்தியை இங்கேயே தெரிவித்துவிட்டுக் கிளம்பலாம்!” என ஆணையிட்டான்.

கம்பீரமாக அக்கூட்டத்தில் நடந்த காளன், “புகாரின் இந்திரத் திருவிழாவிற்கு மன்னர் இருங்கோவேள் வருகைத் தருகிறார். அவரை வரவேற்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்யச் சொல்லி முதன்மை அமைச்சர் கட்டளையிட்டுள்ளார்!” எனக் கூறிய காளன் அவர்களின் மறுமொழியை எதிர்பாராமல் திரும்பினான். அதைக்கண்ட அடிகளார், “தம்பி! நீ தவறான வழியில் சென்றுகொண்டிருக்கிறாய்!” என எச்சரித்தார்.

“அடிகளாரே, நான் இப்போதுதான் சரியான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறேன்.” எனக் கூறிக்கொண்டிருந்த போதே அங்கு நடந்த கூச்சல்களைக் கேட்டு வானவல்லி மாளிகை அறையிலிருந்து வெளியே வந்தாள். காளனைக் கண்ட வானவல்லிக்கும் அவன் இங்கே எதற்கு

வந்திருக்கிறான். அவனைக் கண்ட பிறகும் அனைவரும் அமைதியாக நிற்பதன் காரணத்தை அறியாமல் குழம்பியபடியே ஆத்திரத்துடன் அவனைப் பார்த்தாள்.

வானவல்லியைப் பார்த்த உடனே அவள் எறிந்த குறுவாள் அவனது நினைவிற்கு வர தனது தோளில் ஏற்பட்டிருந்த காயத்தைத் தடவிப்பார்த்துக்கொண்டே ஒரு வெற்றுப் புன்னகையை அவளிடம் உதிர்த்துவிட்டு புரவியிலேறி படு வேகமாகப் புழுதி கிளம்ப அங்கிருந்து மறைந்தான் காளன்.

காளன் அங்கிருந்துச் சென்ற பிறகு சிந்தித்த வளவனார் அங்கிருந்த தளபதிகளிடம், “புகாரின் கோட்டைக் கதவுகளை உடனே அடையுங்கள்!” எனக் கட்டளையிட்டார்.

அதைக்கேட்ட டாள்தொபியாஸ், “கோட்டைக் கதவுகளை அடைத்து இருங்கோ வேளை புகாருக்குள் அனுமதிக்காவிட்டால் நிச்சயம் போர் மூளும்! அதைத்தான் தாங்கள் எதிர்பார்க்கிறீர்களா?” என வினவினான்.

“இருங்கோ வேளை அனுமதித்தால் புகார் நிச்சயம் எதிரிகள் கையில் விழுந்துவிடும்!”

“போர் மூண்டாலும் பரவாயில்லை. புகார் நிச்சயம் விழக்கூடாது என்கிறீர்கள்! அப்படித்தானே?”

“ஆமாம் டாள்தொபியாஸ்!”

“இச் சூழ்நிலையில் போர் மூண்டால் அவர்களின் பெரும் படையை நம்மால் எதிர்கொள்ள இயலுமா?”

“அதைப்பற்றிப் பிறகு ஆராயந்துகொள்வோம்! இப்போது புகார் நமக்கு முக்கியம்”

“இந்தச் சூழலில் போர் தொடங்குவதை நமது உப தலைவர் விரும்பவில்லை. நமது படை பலப்படுத்தப்பட வேண்டும் என்பது அவரது விருப்பம்”

“டாள்தொபியாஸ் இருங்கோவேளை புகாருக்குள் நுழைய விட்டால் நாம் புகாரை இழப்பது நிச்சயம். புகாரையும் இழந்த பிறகு படையைப்

பெருக்கினாலும் என்ன பயன்?"

"புகாரை இழந்துவிடுவோம் என எப்படி அய்யா அறுதியிட்டுக் கூறுகிறீர்கள்?"

"வைதீகரின் வீட்டில் ஆயுதங்கள் பதுக்கியிருக்கும் செய்தி சற்று முன் தான் ஒற்றர்கள் மூலம் எட்டியது. இந்த நிலையில் இருங்கோ வேள் இந்திரத் திருவிழாவைக் காண வருவது புகாரைக் கைப்பற்றத் தான். ஆதலால் அவனைத் தடுத்து திருப்பியனுப்ப வேண்டும்."

"அய்யா, எனக்கு இதில் உடன்பாடு இல்லை!"

"உடன்பாடு இல்லையா?"

"ஆம்!"

"எதில்?"

"இருங்கோவேளை புகாருக்குள் நுழைய விடக்கூடாது எனக் கூறுவதில் தான்!"

"எனது கட்டளையை நீ நிறைவேற்ற இயலுமா? இயலாதா?"

"இயலாது அய்யா!"

"இதுதான் உனது முடிவா?"

"ஆம்!"

வளவனாரை எதிர்த்துப் பேசும் டாள்தொபியாசைக் கண்ட வானவல்லி, "டாள்தொபியாஸ், நீ யாரை எதிர்த்துப் பேசுகிறாய் எனத் தெரியுமா?" எனக் கடும் கோபத்துடன் வினவினாள்.

"தெரியும் சகோதரி! சோழ தேசத்தின் முன்னாள் சேனாதிபதியிடம் தான்!"

"தெரிந்துமா எதிர்த்துப் பேசுகிறாய்?"

"கடந்த சில தினங்களாகத் தான் தங்கள் தந்தையார் இரும்பிடர்த் தலையருடன் அரசியல் நிலையைக் கவனிக்கிறார். ஆனால் உப தலைவர் பல

வருடங்களாக நிலையை ஆராய்ந்து இது நடந்தால் இதனைச் செய் எனக் கட்டளையிட்டுச் சென்றிருக்கிறார். அவரது ஆணையை என்னால் எப்படிச் சகோதரி மீற இயலும்?'' எனக் கேள்வியெழுப்ப வானவல்லியும் அமைதியானாள்.

டாள்தொபியாஸ் கூறியதைக் கேட்ட வளவனார், ''உப தலைவன் என்ன கூறினான்? இருங்கோ வேள் புகார் வந்தால் ரத்தினப் பட்டுக் கம்பளம் விரித்து வரவேற்பு செய்! எனக் கட்டளையிட்டானா?'' என ஆத்திரத்துடன் கேட்டார்.

''ஆமாம் அய்யா! உப தலைவர் அப்படித்தான் கட்டளையிட்டுச் சென்றுள்ளார்.''

தனது கட்டளையை மதிக்காத உப தளபதி டாள்தொபியாசின் மீது கடும் சினம் கொண்ட வளவனார் மற்ற இரு உப தளபதிகளை நோக்கி, ''கட்டளையை நிறைவேற்றாத இவனைக் கைது செய்து சிறையில் அடையுங்கள். உப தலைவன் வந்து இவனை விடுவித்துக் கொள்ளட்டும்!'' எனக் கட்டளையிட்டார்.

வளவனார் எதிர்பார்த்ததற்கு மாறாக உப தளபதிகள் திருக்கண்ணன் மற்றும் பரதவன் குமரன் இருவரும் டாள்தொபியாசைக் கைது செய்யாமல் அமைதியாகவே நின்றார்கள். பிறகு இருவரும் டாள்தொபியாசின் இருபுறத்திலும் சென்று நின்று, ''அய்யா! எங்கள் தலைவரின் கட்டளையை எப்போதும் நிறைவேற்றுவதாக நாங்கள் சபதம் மேற்கொண்டுள்ளோம். அவரது கட்டளையை நிறைவேற்றுவதே எங்களுக்கு முக்கிய நோக்கம். கடமை தவறிய தளபதியாக நாங்கள் ஒருபோதும் இருக்க மாட்டோம். இருங்கோ வேளை வரவேற்க சொன்ன உப தலைவர் நிச்சயம் மாற்றுத் திட்டத்தைக் கைவசம் வைத்திருப்பார்.'' என்றார்கள். பிறகு திருக்கண்ணன், ''டாள்தொபியாஸ்! அடுத்து என்ன செய்ய வேண்டும் ஆணையிடு!'' எனக் கேட்டான்.

உப தளபதிகளின் திடீர் மாறுபட்ட செயல் அங்கிருந்த பெரியவர்கள் மூவருக்கும் பெருத்த ஆச்சர்யத்தையும், அதிர்ச்சியையும் அளித்திருந்தது. அந்த அதிர்ச்சியிலிருந்து அவர்கள் மீள்வதற்குள் டாள்தொபியாஸ்

இரும்பிடர்த்தலையரிடம், “அய்யா! நாங்கள் ஏதேனும் பிழையாகப் பேசியிருந்தால் எங்களைப் பொறுத்தருளுங்கள்! நிச்சயம் இளவலோடு உப தலைவர் சரியான நேரத்திற்கு வந்து சேர்வார் என நாங்கள் நம்புகிறோம். இருங்கோவேள் புகாரில் இருக்கும் போது நீங்களும் இங்கு இருப்பது பெரும் ஆபத்து. எங்காவது சென்று மறைந்திருங்கள்! மற்றதை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்!” எனக் கூறிய பின் உப தளபதிகள் மூவரும் அவர்களின் மறுமொழியைக் கூட எதிர்பாராமல் அங்கிருந்து கிளம்பினார்கள். பெரியவர்கள் மூவரும் உப தளபதிகள் செல்லும் திசையையே பார்த்துக்கொண்டிருக்க வானவல்லி மரகதவல்லியிடம் சென்றாள்.

“இளவரசன் கரிகாலனது நிலை என்ன ஆனதென்றே தெரியவில்லை, பக்க பலமாக இருந்த உப தலைவனை வேறு காணவில்லை. உப தளபதிகள் வளவனாரின் கட்டளைக்குக் கீழ்படிய மறுக்கிறார்கள். எஞ்சியிருக்கும் புகாரைக் கைப்பற்ற இருங்கோவேள் முழு மூச்சில் இறங்கிவிட்டான். இளவலுக்குத் தகுந்த வயது அடைந்ததும் அவரைச் சோழ அரியணையில் நிச்சயம் அமர்த்துவேன் என மரணப் படுக்கையில் இருந்த இளஞ்சேட்சென்னிக்கு நான் கொடுத்த வாக்கினை என்னால் காப்பாற்ற இயலுமா?” எனக் கலங்கியபடியே இரும்பிடர்த்தலையர் நின்றார்.

**அடிக்குறிப்பு**

1. கலாபதி – மரக்கலத் தலைவனுக்குக் கலாபதி எனப் பெயர்.

# 41. மன ்னரின் மகிழ்ச்சி

தன்னை எதிர்த்த இளவல் மற்றும் உப தலைவன் இருவரும் மாளிகையில் எரிந்து அழிந்துபோனார்கள் என்ற நினைப்பில் இருங்கோவேள் உறைந்தை அரண்மனைக்கு வருகை புரிந்திருந்த புலவர்கள், பாணர்கள், கூத்தர்கள் முதலியவர்களைக் கவுரவப்படுத்தி வேண்டிய பரிசுகளை வழங்கி அனுப்பி வைத்தார். சூரிய குளத்தில் தோன்றி சோழ அரசை உருவாக்கிய சுராதிராசனின் வழி வந்த குலக் கொடியை வேரோடு அறுத்து ஒழித்துவிட்ட நினைப்பின் மகிழ்ச்சியில் இருந்த இருங்கோவேள் அடுத்தக் கட்ட நடவடிக்கைகளை மிகவும் விரைவாகவும், அதே சமயம் மிகுந்த எச்சரிக்கையாகவும் முன்னெடுக்க முனைந்தார்.

அடுத்தக்கட்டமாக புகாரைக் கைப்பற்றுவது எப்படி எனப் பல விதங்களில் சிந்தித்த இருங்கோவேள், ‘உறைந்தையில் சோழ சிம்மாசனத்தைக் கைப்பற்றிய உடனே புகார் மீது போர் தொடுத்தால் தேவையின்றி மக்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். சென்னியின் மகனும் இறந்துவிட்டதால் இனி தானாகவே புகார் தம் கைகளுக்கு வந்துவிடும். ஆகப் போர் அவசியமில்லை என்பதால் வைதீகர் பாகவதர் கூறிய ராஜ தந்திர முறையே சரியானது’ எனத் தீர்மானித்துக்கொண்டு தலைமை ஒற்றனை அழைத்து வரச் சொல்லி கட்டளை பிறப்பித்தார். அவரது கட்டளையைப் பெற்றுக்கொண்ட வீரர்கள் அவசர அவசரமாக வேந்தனைத் தேடிச் சென்றார்கள்.

பரபரப்புடன் இருங்கோவேள் சிந்தித்தபடியே நடந்துகொண்டிருந்த போது அங்கு வந்த வேந்தன், “அரசே!” எனப் பணிந்து தனது வருகையைத் தெரிவுபடுத்திக்கொண்டான்.

வேந்தனைப் பார்த்தவுடனே மன்னர் சற்றுச் சோர்வுடன், "வா வேந்தா! உனக்காகத் தான் காத்திருந்தேன்!" எனக் கூறி அவனது முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்.

மன்னரின் முகத்தைக் கவனித்த வேந்தன், அவரது கவலையைக் கண்டு, "அரசே! நமது எதிரிகள் அனைவரையும் தான் வீழ்த்தி விட்டோமே! இனி என்ன கவலை?" என வினவினான்.

"இது கவலை இல்லை வேந்தா! முன் எச்சரிக்கை உணர்வு!"

வேந்தன் ஏதும் பேசாமல் அமைதியுடன் அவரது முகத்தையே பார்த்துக்கொண்டு பணிவுடன் நின்றான்.

"வேந்தா!"

"கூறுங்கள் அரசே!"

"சில நாட்களாகச் சேந்தனைக் காண இயலவில்லையே! அவன் இல்லாததால் சிறு சிறு முக்கியப் பணிகளுக்குக் கூட உன்னை அழைக்க வேண்டி இருக்கிறது. அவன் எங்கே?"

"அவனை நான் கடைசியாகச் சென்னியின் மகனைச் சிறைவைத்த மாளிகைக்குத் தான் அனுப்பி வைத்தேன். அதன் பிறகு அவனைக் காணவே இயலவில்லை. எங்குச் சென்றிருக்கிறான் என்ற தகவலும் கிடைக்கவில்லை அரசே!"

"அவன் எங்குச் சென்றிருந்தாலும் விரைந்து வந்து என்னைச் சந்திக்கச் சொல் வேந்தா!"

வேந்தன் சற்றுத் தயக்கத்துடன், "நிச்சயம் அரசே!" என்றான்.

"வேந்தா! தயங்குகிறாயே? காரணம் என்ன?"

"அரசே! மாளிகை எரிந்த போது இளவரசனைக் காக்க செங்குவீரன் உள்ளே நுழைந்த வேளையில் நமது வீரர்களும் அவனைத் துரத்திக்கொண்டு உள்ளே சென்றார்கள் அல்லவா?"

"ஆம்!"

“உள்ளே சென்ற நமது வீரர்களுள் சேந்தனும் ஒருவனாக இருப்பானோ என எண்ணி அச்சப்படுகிறேன் அரசே!”

மன்னர் கவலையுடன், “வேந்தா! நீ கூறுவது...?” என வினவினார்.

“ஆம் அரசே! என்னால் அப்படித்தான் ஊகிக்க இயலுகிறது. நம் வீரர்கள் மாளிகைக்குத் தீ வைத்த போது சேந்தனும் அங்குதான் இருந்திருக்கிறான். ஆனால் அதன் பிறகு அவனைப் பற்றிய தகவல்களே கிடைக்கவில்லை!” என வருத்தத்துடன் கூறினான் வேந்தன்.

சேந்தன் செங்குவீரனின் தலைமை ஒற்றன் செங்கோடனால் கொல்லப்பட்டு விட்டதை அறிந்திராத உறைந்தை மன்னர், “அவன் இறந்திருப்பான் என எண்ணாதே வேந்தா. நிச்சயம் திரும்பி வருவான். அவன் நமக்காக, நமது மலை நாட்டின் மேன்மைக்காகக் கடுமையாக உழைத்துள்ளான்! அவனுக்கு நான் நிறையச் செய்யவேண்டி உள்ளது. அவனைத் தேடச் சொல்லி நமது வீரர்களுக்குக் கட்டளையிடு!” எனப் பெரும் நம்பிக்கையுடன் தெரிவித்தார் மன்னர்.

தனது ஆருயிர் நண்பன் சேந்தன் மீது மன்னர் வைத்திருக்கும் அன்பையும், நம்பிக்கையையும் கண்ட வேந்தன் மகிழ்ந்து, “அப்படியே ஆகட்டும் அரசே!” எனத் தெரிவித்தான்.

“வேந்தா, உறைந்தையில் நம் வீரர்கள் சிலர் கொல்லப்பட்டதாக அறிந்தேன். உண்மையா?” எனக் கோபத்துடன் வினவினார்.

“ஆம் அரசே! உண்மைதான்.”

“நம் வீரர்களை எதிர்க்கத் துணிந்த அவர்கள் யார் வேந்தா? அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் தானே?”

“மன்னிக்கவும் அரசே! அவர்கள் தப்பித்துவிட்டார்கள். அவர்களை விரட்டிச் சென்ற நம் வீரர்களையும், மரக்கல கலாபதியையும் அழைத்து விசாரித்துவிட்டேன். அங்கு நடந்தது என்ன என்று உறுதியாக அவர்களுக்கும் தெரியவில்லை. பொன்னி நதிக் கரையோரம் எழுந்த மரண ஓலங்களைக் கேட்டு ஓடிச் சென்று பார்த்தபோது நம் வீரர்கள் வாள் மற்றும் வேல்களால் தாக்கப்பட்டு இறந்து கிடந்ததையும் பிறகு பொன்னி நதியில் தோணியில் இரு

பெண்கள் தப்பிச் சென்றதாகவும் செய்தி கிடைத்தது'' என வேந்தன் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த மன்னர், ''இரு பெண்களா நம் வீரர்களைக் கொன்றுள்ளனர்?'' என ஆச்சர்யத்துடன் வினவினார்.

தயக்கத்துடனே வேந்தன், ''ஆமாம்!'' என்றான்.

''அங்கு எத்தனை பேர் இறந்து கிடந்தார்கள்?''

''ஐந்து பேர் அரசே!''

''ஐந்து வீரர்களை இரு பெண்கள் கொன்றுள்ளார்கள்! சொல்வதற்கே வெட்கமாக இல்லை!''

அவமானத்துடன் வேந்தன் என்ன கூறுவதென்று தெரியாமலே திகைத்து நின்றான்.

''அப்பெண்கள் எங்கே சென்றார்கள்? அவர்களை ஏன் இன்னும் கைதுசெய்யவில்லை?''

''அரசே, பொன்னி நதியின் கடும் புனல் பிரவாகம் அவர்களைக் காப்பாற்றி விட்டது! புனலின் கடும் சீற்றத்தில் மரக்கலத்தில் பயணித்து அவர்களைப் பிடிக்க இயலவில்லை எனக் கலாபதி தெரிவித்தான் அரசே!''

அவன் கூறியதைக் கேட்ட மன்னர் கடும் ஆத்திரத்துடன், ''பட்டினக் காவல் தலைவன் எங்கே? அவனை உடனே இங்கு அழைத்து வாருங்கள்!'' எனக் கட்டளையிட்டார்.

மன்னரின் அழைப்பைக் கேட்டு ஓடி வந்த பட்டினக் காவல் தலைவனைக் கண்ட இருங்கோ வேள் கடும் கோபத்துடன், ''அரண்மனைக்குள் வந்து நம் வீரர்களைக் கொன்று என்னையும் மிரட்டிவிட்டு ஒருவன் தப்பித்துள்ளான். அவன் எப்படி உள்ளே வந்தான்! எப்படி வெளியே சென்றான்! என இன்னும் கண்டறிந்தபாடில்லை. நேற்று பட்டினத்தில் இரு பெண்கள் நம் வீரர்கள் ஐவரைக் கொன்றுவிட்டுத் தப்பியுள்ளார்கள்! இதுவரை நீ அதைப்பற்றி என்னிடம் தகவல் கூட தெரிவிக்கவில்லை. இதற்கு என்ன காரணத்தை நீ தெரிவிக்கப் போகிறாய்?''

“அரசே! நடந்த பிழைக்கு நானே பொறுப்பேற்றுக் கொள்கிறேன். அரண்மனைக்குள் செங்குவீரன் எப்படி நுழைந்தான் என இன்னமும் நம் வீரர்கள் ஆராய்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள்! பட்டினத்தில் என்ன நடந்தது என எங்களால் ஊகிக்கவே இயலவில்லை. அப்பெண்கள் எதற்கு நம் வீரர்களைக் கொல்லவேண்டும்? பகல் பொழுதில் நம் வீரர்களுக்கு அங்கு என்ன வேலை? எனப் பல கோணங்களில் விசாரித்துக் கொண்டிருக்கிறோம். இனி இதுபோன்ற தவறுகள் நேரா வண்ணம் பார்த்துக்கொள்கிறேன். இனியொருமுறை இந்தத் தவறு நடக்காது. பொறுத்தருளுங்கள்!” என வேண்டி நின்றான்.

“தப்பித்த அந்த இரு பெண்களாவது யார் என்று விசாரித்தீர்களா?”

“அரசே அவர்களுள் ஒருத்தி நாங்கூரைச் சேர்ந்தவள். அவளது தகப்பன் சென்னியின் படையில் பணிபுரிந்திருக்கிறான். மற்றொருத்தி புகாரைச் சேர்ந்தவள். அவள் முன்னாள் சேனாதிபதியின் மகள் என்றும் சிலர் தெரிவித்தார்கள். அது நம்பும்படி இல்லை.”

“சேனாதிபதி மகளா? எந்தச் சேனாதிபதி எனக் கேட்டறிந்தாயா?” எனப் பெரும் எதிர்பார்ப்புடன் தனது முரட்டு மீசையைத் தடவியபடியே வினவினார் மன்னர்.

“அச்சேனாதிபதி பெருமறவர் மகேந்திர வளவனார் தான்!” என அவன் கூறியதைக் கேட்ட மன்னர், “வளவனார் மகளா?” எனத் தனக்குத்தானே கூறி ஆச்சர்யப்பட்டவர், “அடே முட்டாள்களா! யாருடைய ஆதரவு நமக்குக் கிடைத்தால் அனைத்து சச்சரவுகளும் தீர்ந்துவிடும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறேனோ, அவரது மகளிடமே சச்சரவிட்டு வந்துள்ளீர்களே!” எனக் கோபம் கொண்டு ஐந்து காவல் வீரர்களைக் கொன்று கடும் புனல் பிரவாகத்தில் தப்பிய வானவல்லியை நினைத்து, “தன் மகனுடன் சிங்காசனத்தில் இளவரசியாக வீற்றிருக்க வேண்டிய அனைத்து தகுதிகளும் பெற்றவள் இவள்தான்” என வியந்து பெருமையும் பட்டுக்கொண்டார்.

மன்னர் சிந்தித்துக் கொண்டிருந்த போதே வேந்தன், “அரசே! புகாருக்குத் தாங்கள் இந்திரத் திருவிழாவைக் காண வருகை புரிவதாக

ஒருவனிடம் செய்தி அனுப்பினீர்களே? அவன் என்ன ஆனான்?" என வினவினான்.

"அவனுக்கு ஏதும் நேரவில்லை வேந்தா! அவன் நேற்றே திரும்பி வந்துவிட்டான்."

"உயிரோடா?"

"ஆம் வேந்தா! உயிரோடுதான். இதில் உனக்கு என்ன ஆச்சர்யம்?"

"ஆச்சர்யம் இல்லை அரசே! சிறிது அதிர்ச்சி. பொதுவாகப் புகாருக்குச் செல்லும் நம் வீரர்களை அந்தச் செங்குவீரன் உயிரோடு அனுப்புவதில்லையே. இவன் உயிரோடு வந்திருப்பது எனக்குப் பெருத்த ஆச்சர்யத்தை அளிக்கிறது. அவர்கள் என்ன பதில் கூறினார்கள்?"

"செங்குவீரன் உயிரோடு இருந்தால் தானே அவன் நமது தூதுவர்களைக் கொல்வதற்கு? அவன் தான் மடிந்துவிட்டானே! நாம் எதிர்பார்த்தது தான் நடக்கிறது வேந்தா! நம் செய்திக்கு அவர்கள் எந்த மறுப்பையும் வழங்கவில்லை."

"அரசே எனக்கு இதில் சற்றுத் தயக்கம் ஏற்படுகிறது!"

"தயக்கமா?"

"ஆம் அரசே!"

"ஏன்?

"தாங்கள் புகாரில் இருக்கும் போது அவர்கள் இரகசிய திட்டம் தீட்டலாம் என அஞ்சுகிறேன். தாங்கள் புதிதாகப் பயன்படுத்தும் அந்தத் தூதுவன் மீதும் எனக்குச் சற்றுத் சந்தேகமாக இருக்கிறது! ஒருவேளை அவன் எதிரிகளின் கைப்பாவையாக இருப்பானோ என்று! எதற்கும் எச்சரிக்கையாக இருங்கள்!" என எச்சரித்தான் வேந்தன்.

"வேந்தா, காளன் உயிரோடு திரும்பியிருப்பதால் தானே நீ அவன் மீது ஐயம் கொள்கிறாய்?"

"ஆம் அரசே!"

“அவனை நான் அனுப்பியதற்குச் சில காரணங்கள் உள்ளன. முதற்காரணம் இரும்பிடர்த்தலையனின் தம்பி அவன். தமையன் மீது வெறுப்பு கொண்டவன். அவனை நமது காரியங்களுக்குப் பயன்படுத்தினால் அவனை இரும்பிடர்த்தலையன் மற்றவர்களைப் போலக் கொல்லத் தயங்குவான். இரண்டாவது அவன் பெரும் வீரன். திறமைசாலி! மேலும் புகாருக்கும், இரும்பிடர்த்தலையனுக்கும் பெரும் அரணாக இருந்த உப தலைவன் இறந்துவிட்டான். சென்னியின் மகனைப் பற்றிய எந்தவொரு விவரமும் அவர்களுக்குத் தெரியாததால் அனைவரும் குழம்பிப் போயிருப்பார்கள். ஆதலால் தான் காளனை எந்தத் தொந்தரவும் செய்யாமல் உயிரோடு விட்டுவிட்டார்கள். இல்லையேல் மற்றவர்களைப் போன்று அவனையும் தீர்த்துக்கட்டியிருப்பார்கள்! உனக்கு அவன் மீது ஐயம் இருந்தால் இரகசியமாக அவனைக் கண்காணிக்க ஏற்பாடு செய். இப்போது நமக்குத் திறமையான தூதுவன் அவன்தான்! இயன்ற வரை அவனைப் பயன்படுத்திக் கொள்வோம்!” எனக் கூற வேந்தன் அமைதியானான்.

“வேந்தா! முக்கியக் காரணமாகத்தான் நான் உன்னை அழைத்திருக்கிறேன்!”

“கட்டளையிடுங்கள் வேந்தே!”

“இந்திரத் திருவிழாவைப் பயன்படுத்திப் புகாரை முற்றுகையிட்டு கைப்பற்றப் போகிறோம். இயன்றவரை நம்பிக்கையான, திறமை வாய்ந்த வீரர்களைத் தேர்ந்தெடுத்து திருவிழாவைக் காணப்போகும் பொது மக்களைப் போன்று அனுப்பி வை. வைதீகர் அங்கு நமக்காக ஆயுதங்களைச் சேகரித்து வைத்துள்ளார். திருவிழாவின் போது நமது வீரர்களைக் கடை விரிக்கச் செய்து தேவைப்படும் போது ஆயுதங்களைப் பரிமாற்றம் செய்ய வேண்டும். புகாரைக் கைப்பற்ற அனைத்து நடவடிக்கைகளையும் இன்றே துரிதமாகத் தொடங்கு!” எனக் கட்டளையிட அவரது கட்டளையை ஏற்ற வேந்தன், “அப்படியே ஆகட்டும் அரசே!” எனக் கூறிவிட்டு அங்கிருந்து சென்றான்.

இருங்கோவேளின் முதன்மை அமைச்சர் அன்று காலையில் தான் அனைத்து வேளிர்களையும் சந்தித்துப் பேசிவிட்டு உறைந்தைக்கு வந்திருந்தார். ‘அவர் ஓய்வெடுத்துவிட்டுத் தன்னைச் சந்திக்க வருவதற்குள்

நாமே அவரது மாளிகைக்குச் சென்று அடுத்துச் செய்ய வேண்டிய சில முக்கியக் காரியங்கள் பற்றி அவசரமாக விவாதித்துவிட வேண்டும்' என எண்ணிய இருகோவேள் முதன்மை அமைச்சரின் மாளிகைக்குப் புறப்பட்டார்.

ஆனால், எதிர்பார்ப்பிற்கு மாறாக முதன்மை அமைச்சரே மன்னரை நோக்கி வந்துகொண்டிருக்க இருவரும் வழியிலேயே சந்தித்துக் கொண்டார்கள். ஒருவரை ஒருவர் பணிந்து வணங்கிக்கொண்ட பிறகு இருவரும் தங்களின் உரையாடலைத் தொடங்கினார்கள்.

அவசரப்பட்ட மன்னர், "அந்தணரே! சென்ற காரியம் முழு வெற்றி தானே!" என முதன்மை அமைச்சரிடம் வினவினார்.

"ஆமாம் இருங்கோ! சென்ற காரியம் முழு வெற்றி. ஏற்கெனவே இரு பெருநில மன்னர்களான சேரர் மற்றும் பாண்டியர்களின் ஆதரவு நமக்கிருக்க இப்போது வேளிர்களின் ஆதரவும் கிடைத்துவிட்டது. தென்னகத்தில் நம்மை எதிர்க்க இனி இரும்பிடர்த்தலையனைத் தவிர யாருமே கிடையாது" என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார் முதன்மை அமைச்சர்.

"இனி இரும்பிடர்த்தலையன் மற்றும் சென்னியின் மகனான வளவனைப் பற்றிய கவலையை விடுங்கள்!"

"இரும்பிடர்த்தலையனை எளிதாக நினைத்துவிடக் கூடாது இருங்கோ. அந்தப் புலவனால் என்ன செய்துவிட இயலும் என ஒருகாலத்திலும் எண்ணிவிடாதே! வாள் கொண்டு சாதிக்க இயலாததைக் கூடச் சிறு எழுத்தாணி முனையால் சாதித்துவிட இயலும்."

"சென்னியின் மகனும் உயிரோடு இல்லை. அவனை ஆதரித்த பெரும் வீரனான புகாரின் உப தலைவன் செங்குவீரனும் உயிரோடு இல்லை. அப்படியிருக்க அந்தப் பிடர்த்தலையனால் இனி நம்மை என்ன செய்துவிட இயலும்!"

"இளவல் உயிரோடு இல்லையா?" எனப் பெரும் அதிர்ச்சியுடன் வினவினார் முதன்மை அமைச்சர்.

"ஆம் அந்தணரே! சென்னி தன் மனைவியுடன் வசிக்க எழுப்பிய வசந்த மாளிகையிலேயே அவனை எரித்துச் சாம்பலாக்கி விட்டோம்.

அவனைக் காக்கச் சென்ற உப தலைவனும் திரும்பவில்லை'' எனப் பெரும் உற்சாகத்துடன் கூறினார் மன்னர்.

ஆனால் அவர் கூறியதைக் கேட்டு எந்தவித மகிழ்ச்சியையும் வெளிக்காட்டாத முதன்மை அமைச்சர், ''இருங்கோ! என்னால் இதனை எளிதில் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. மரக்கலத் தீயிலிருந்து தப்பிக் குணக் கடலை நீந்தி தப்பித்தவன் உப தலைவன். அவனும் மாளிகைத் தீயில் வெந்திருப்பான் எனக் கூறுவது அசட்டுத்தனமாக உள்ளது இருங்கோ! என்ன நடந்தது விவரமாகக் கூறு!'' எனக் கட்டளையிட்டார் முதன்மை அமைச்சர்.

நடந்த அனைத்து விவரங்களையும் கேட்டு அறிந்த முதன்மை அமைச்சர், ''நடந்த நிகழ்வுகளை எனது விசுவாசி ஒருவன் நேரில் பார்த்ததாகக் கூறுகிறீர்களே? அவன் யார்? அவனை என் முன்னே அழைத்து வாருங்கள்!'' எனத் தெரிவித்தார்.

இருங்கோ வேளும், ''விரைவில் அவனை உங்களைச் சந்திக்கச் சொல்கிறேன் அந்தணரே! குடந்தையில் நடந்த நிகழ்வுகளைப் பற்றி விவரமாகக் கூறுங்கள்! வேளிர்கள் அனைவரும் என்ன தெரிவித்தார்கள்? நமக்கு எப்படிப் பணிந்தார்கள்?'' என பெரும் ஆர்வத்துடன் வினவினார்.

இருங்கோவேள் உறைந்தையைக் கைப்பற்றிச் சோழ மன்னனாக முடிசூட்டிக் கொண்டமையால் நாங்கூர், வல்லம், குடந்தை, பழுவூர், பெருந்துறை, கழுமலம் முதலிய சோழ மண்டலங்களின் அனைத்து மன்னர்களின் ஆதரவையும் பெற முதன்மை அமைச்சர் முயன்று ஓலை அனுப்பி அனைவரையும் குடந்தையில் கூடச் செய்திருந்தார்.

அனைத்து வேளிர்களும் ரகசியமாகக் குடந்தை சென்று கூடிய போது முதன்மை அமைச்சர், ''இளஞ்சேட் சென்னியின் மைந்தன் வளவன் ஆட்சிப் பொறுப்பு வேண்டாம் எனக் கூறி எங்கோ ஒளிந்துகொண்டமையால் வேளிர் குளத்தில் தோன்றிய மலை நாட்டு மன்னர் இருங்கோ உறைந்தை அரியாசனத்தைக் கைப்பற்றிச் சோழ மன்னராக முடிசூட்டிக் கொண்டார். பாண்டியன் தென்னவனும், சேரன் பெருஞ்சேரலாதனும் இருங்கோவை அங்கீகரித்து விட்டார்கள். உங்களின் ஆதரவையும் இருங்கோ வேள் எதிர்பார்க்கிறார்'' எனக் கூறி அமைதியானார்.

அவர் கூறியதைக் கேட்டவுடன் அங்கிருந்த அனைத்து குறுநில மன்னர்களும் பெரும் அதிர்ச்சியடைந்தார்கள். அங்குப் பெரும் சலசலப்பு ஏற்பட்டது. “சோழ இளவல் உயிரோடு இருக்க இருங்கோ ஆட்சியைக் கைப்பற்றியது தவறு” “காலம் காலமாக நாங்கள் சோழ மன்னருக்கு கட்டுப்பட்டு விசுவாசத்துடன் இருக்கிறோம். இருங்கோவை ஆதரித்து அவர்களுக்கு நாம் எப்படித் துரோகம் இழைப்பது” “சென்னி இறந்த போது நம்மில் சிலரும் அங்குத் தானே இருந்தோம்? இது அவருக்கு நாம் செய்யும் பெரும் துரோகம் அல்லவா?” “இருங்கோவேள் செய்தது சரி! சென்னியின் மகன் வீரனாக இருந்திருந்தால் அவன் ஏன் ஓடி ஒளிய வேண்டும்? நம்மால் செய்ய இயலாததை இருங்கோ வேள் செய்துள்ளார். நாம் அவருக்குப் பக்கபலமாகத் தானே இருக்க வேண்டும்?” “இருங்கோ வேள் நம் குலத்தவன். அவனை நாம் எக்காலத்திலும் கைவிடக்கூடாது!” “சென்னிக்குத் துரோகம் இழைத்துவிட்டு இப்போது ஆட்சியை இருங்கோவேளிடம் தாரை வார்த்துவிட்ட இந்தத் துரோகியை அடித்து விரட்டுங்கள்!” “அந்தணரே, நீங்கள் செய்தது பெரும் பிழை! துரோகம்! அந்தணர் என்ற போர்வையில் இருக்கும் பேராசைக்காரன்” “உடனே இவனது தலையைக் கொய்துவிடுங்கள்!” என ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசினார்கள்.

கூட்டத்தில் ஏற்பட்ட சலசலப்பைக் கண்ட அந்தணர், “வேளிர்களே! நீங்கள் கோபப்படுவதில் எந்த நியாயமும் இல்லை. யார் வலிமையுடையவனாக இருக்கிறார்களோ அவர்களிடம் தான் தலைமைப் பொறுப்பு சேரும்! சோழ வம்சம் தனது வல்லமையை இழந்துவிட்டது. காலம் காலமாக வேளிர்களை அடக்கி ஆளும் சோழர்களை வீழ்த்த இதுதான் சரியான தருணம். இந்த வாய்ப்பைக் கைவிட்டால் இனியொரு வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கப் பெறாது. அதிலும் சென்னியின் மகன் எனக்கு அரச பாரமே வேண்டாம் என அஞ்சி ஓடி ஒளிந்துகொண்டான். அவனைத் தேடிக் கண்டறிந்தா சிம்மாசனத்தில் அமர்த்தச் சொல்கிறீர்கள்? சென்னிக்குப் பிறந்திருப்பது வீரப் புலி எனத்தான் நானும் நினைத்தேன்! ஆனால் அப்புலி கோழையானது! பல் இல்லாதது! அதன் பிறகுதான் அரசன் இல்லாத சோழ நாட்டிற்குக் காவலனாக உயர்ந்த இருங்கோ வேளிற்கு உதவத் துணிந்தேன். ஆசனத்தில் அமர்ந்து யார் செங்கோலைப் பிடித்துக் கட்டளையிடுகிறார்களோ

அவர்களுக்குப் பணிந்து கடமை செய்ய வேண்டியது முதன்மை அமைச்சரான எனது கடமை! அதைத்தான் நான் செய்கிறேன்! நான் செய்தது பிழை என்றால் இங்கேயே எனது தலையைத் துண்டாகக் கொய்துவிடுங்கள்!'' எனப் பெரும் ஆவேசத்துடன் கூற அங்கிருந்த மற்ற வேளிர்கள், குறுநில மன்னர்கள் அனைவரும், ''இல்லை! இல்லை! நீங்கள் செய்தது பிழை இல்லை!'' எனக் கூறி அமைதியானார்கள்.

''காலம் அறிந்து காரியம் செய்வதுதான் வெற்றி பெறுவதுதான் சிறந்த வழி! நீங்களே என்ன செய்ய வேண்டும் என முடிவு செய்துகொள்ளுங்கள்!'' எனக் கூறி அனைவரின் முகத்தையும் நோக்கினார் முதன்மை அமைச்சர்.

அனைவரும் ஒருவருக்கு ஒருவர் விவாதிக்க மீண்டும் அங்குச் சிறு சலசலப்பு தோன்றியது!

தொண்டையைக் கரகரத்த படியே தனது முரட்டுத் தாடியைத் தடவி கொண்டு எழுந்த குடந்தை வேளிர், ''அந்தணரே! இங்கிருக்கும் அனைத்து வேளிர்களையும் விடப் பலம் வாய்ந்தவர் அழுந்தூர் வேள்! மௌரியப் படைகளையே இளஞ்சேட்சென்னியுடன் இணைந்து விரட்டியவர். அவர் இருங்கோவை ஆதரிக்கிறாரா? அவர் ஏன் இக்கூட்டத்திற்கு வருகை தரவில்லை. தாங்கள் அவரை அழைத்தீர்களா?''

''அக்கிழவன் ஒரு நாளும் இருங்கோவை சோழ மன்னனாக ஏற்றுக்கொள்ள மாட்டான். வீரனாக இல்லாவிட்டாலும் தனது மகள் வயிற்றுப் பேரனான வளவனை ஆசனத்தில் அமர்த்துவதிலே தான் அவனுக்கு விருப்பம்! அப்போது தானே அக்கிழவனும், புலவனாக வேடம் தரித்த பேராசைக்காரனான இரும்பிடர்த்தலையனும் இளஞ்சேட்சென்னியின் அவையைப் போன்று தங்களது விருப்படி சோழ தேசத்தை ஆளலாம். ஆனால் வளவனே அவர்களின் தொந்தரவு தாளாமல் ஓடிப் போய் விட்டான்! மலைநாட்டு இருங்கோவிற்கும் அழுந்தூர் வேள் திதியனுக்கும் தீராத பகை இருப்பது நம் அனைவருக்கும் தெரியும்! அக்கிழவனைப் பற்றிய கவலை இனி வேண்டாம்! நீங்கள் அனைவரும் இருங்கோவுடன் இணைந்தால் அவனால் என்ன செய்துவிட இயலும்?'' எனப் பதிலுக்குக் கேட்டார்.

பெரும் ராஜ தந்திரியான முதன்மை அமைச்சர் கூறியதைக் கேட்டதும் அனைத்து வேளிர்களும் அமைதியாகி விவாதிக்கத் தொடங்கினார்கள்! பிறகு, அனைவரும் ஒருவாறு இருங்கோ வேளை சோழ மன்னனாக ஏற்று, உறைந்தைக்கு அடங்கிய குறுநில மன்னர்களாக ஆட்சி செலுத்த சம்மதித்தனர்.

ஆனால் அங்கிருந்த பல வேளிர்கள் கப்பம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என முதன்மை அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்க அதற்கவர், “உங்களது கோரிக்கையை மன்னரிடம் தெரிவிக்கிறேன். இதுபற்றி அவர் நிச்சயம் நல்ல முடிவெடுப்பார் என நம்புவோம்” எனத் தெரிவித்தார்.

இருங்கோவேளிற்கு எதிராக யார் போர் தொடுத்தாலும் அனைவரும் இணைந்து அவருக்கு ஆதரவாகப் போரிடுவது எனவும் சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட அனைத்து நிகழ்வுகளையும் முதன்மை அமைச்சர் மன்னர் இருங்கோ வேளிடம் தெரிவித்தார்.

“அந்தணரே! நடக்கும் நிகழ்வுகள் அனைத்தும் நமக்கு எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் எதிர்பார்த்ததைப் போலவே நடந்துகொண்டிருக்கிறது. இருந்தும் மனதின் ஓரம் ஒரு எச்சரிக்கை உணர்வு தோன்றிக்கொண்டே இருக்கிறது? காரணம் புரியவில்லை” என்றார் மன்னர்.

“அதைப்பற்றிய கவலையை விடு இருங்கோ! அடுத்து நடக்க வேண்டிய காரியங்களைக் கவனிப்போம். வைதீகர் பாகவதர் எங்கே? அவரைச் சந்தித்தீர்களா?” என வினவினார் முதன்மை அமைச்சர்.

புகாரைக் கைப்பற்ற வைதீகர் வகுத்திருக்கும் அனைத்து திட்டங்களையும் விரிவாக எடுத்துரைத்த மன்னர் அவர் புகார் சென்றுள்ளதாகப் பதிலளித்தார்.

அத்திட்டத்தைக் கேட்டவுடன் சிந்தித்த முதன்மை அமைச்சர், “இருங்கோ, எனக்கு இன்னொரு யோசனையும் தோன்றுகிறது! புகாரைக் கைப்பற்றிய பிறகு தங்களது புதல்வனைப் புகாரில் அமர்த்திவிட்டால் என்ன?” என வினவினார்.

அதைக்கேட்டு ஆர்வமடைந்தவர், “இதுவும் நல்ல யோசனைதான் அந்தணரே! புகாரைக் கைப்பற்றியபிறகு பெரும் விழா நடத்தி என் மகனுக்கு யுவராஜன் பட்டம் கட்டி அவன் தான் எனக்குப் பிறகு சோழ தேசத்தை அரசாளப் போகிறவன் என உலகிற்கும் அறிவித்துவிடுவோம்!” என்றார்.

“வேண்டாம் இருங்கோ! அது சரியான முடிவாக இருக்காது என எண்ணுகிறேன்”

“எதைக் குறிப்பிடுகிறீர்கள் அந்தணரே!”

“தங்கள் மகனுக்குப் புகாரில் வைத்து யுவராஜன் பட்டம் சூட்டலாம் எனக் குறிப்பிடுவதைத் தான்!”

“என் மகனுக்கு யுவராஜன் பட்டம் சூட்டுவதனால் என்ன பிரச்சனை ஏற்படும் எனக் கருதுகிறீர்கள்?”

“தங்கள் மகனுக்கு யுவராஜன் பட்டம் சூட்டுவதைப் பற்றி நான் எதுவும் கூறவில்லை இருங்கோ?”

“பிறகு எதைப்பற்றித் தாங்கள் குறிப்பிடுகிறீர்கள்?”

“புகாரில் வைத்து யுவராஜன் பட்டம் சூடலாம் என்றீர்களே, அங்குதான் பிசகு ஏற்படும் எனக் கருதுகிறேன்!”

“வேறு என்ன செய்யலாம்! வழக்கம் போலத் தாங்களே நல்ல முடிவினைக் கூறிவிடுங்கள்?”

யோசித்த முதன்மை அமைச்சர், “உறைந்தையிலே நாம் தங்கள் மகனுக்கு யுவராஜன் பட்டம் கட்டி விடுவோம்! புகாரைக் கைப்பற்றிய பிறகு அங்கு அவனை அமர்த்தி ஆட்சி செலுத்த பணித்து விடுவோம்!”

“இதுவும் நல்ல யோசனைதான்! விரைவில் நாம் அதற்கான பணியைத் தொடங்குவோம்!”

“விரைவிலா?”

“ஆம் அந்தணரே!”

“இன்றே இந்த அரண்மனையிலே அனைவரின் முன்பும் பட்டம் கட்டிவிடுவோம்!”

“அய்யா, இன்றே என் மகனுக்குப் பட்டம் சூட்டினால் மக்கள் என்ன நினைப்பார்கள்? சென்னியின் மகனை எண்ணி கலகம் செய்ய மாட்டார்களா?”

“இருங்கோ! மக்களைப் பற்றிய கவலையை விடு! அவர்கள் கலகம் செய்ய எண்ணுபவர்களாக இருந்திருந்தால் வளவனை விடுத்து நீ சோழ சிம்மாசனத்தில் அமர்ந்த போதே தங்களது எதிர்ப்பைக் காட்டியிருப்பார்கள்! யுவராஜன் பட்டம் சூட்டிய பிறகு அவனது வாயாலேயே மக்களுக்குப் பல வரிச் சலுகைகளை அறிவித்து விடுவோம்! அந்தப் பேச்சில் அவர்கள் யாரும் நம் அரசியலைப் பற்றி எண்ணக்கூட மாட்டார்கள்!”

“நல்ல யோசனை, இப்போதே நான் அதற்குரிய காரியத்தைத் தொடங்குகிறேன்”

“நல்லது! யுவராஜன் பட்டம் சூட்டிய பிறகு சோழ நாடு முழுமைக்கும் தண்டோரா அடித்துச் செய்தியை பரப்பச் சொல்லிவிடு, நாம் வழக்கம் போலப் பயன்படுத்தும் ‘சென்னியின் மகன் வளவன் ஓடிப்போய் விட்டதனால்’ என்ற வார்த்தையையும் பயன்படுத்த மறக்க வேண்டாம். பின் முதல் வேலையாகச் சோழ யுவராஜனை சேர மாமன்னன் பெருஞ்சேரலாதனையும், பாண்டிய மாமன்னன் தென்னவனையும் சந்தித்து ஆசி பெற்று வந்துவிடச் சொல்! அவர்களின் உதவி நமக்கு எப்போதும் தேவை! இயன்ற வரை நமது படைபலத்தைப் பெருக்க வேண்டும். இரும்பிடர்த்தலையனை நாம் எந்தக் காலத்திலும் குறைவாக மதிப்பிட்டுவிடக் கூடாது! யார் எதிர்த்தாலும் நாம் தக்க பதிலடி கொடுக்கத் தயாராகவே இருக்க வேண்டும்!” எனக் கூறிவிட்டு அந்தணரான முதன்மை அமைச்சர் ஓய்வெடுக்க மீண்டும் தனது மாளிகையை நோக்கிப் புறப்பட்டார்.

முதன்மை அமைச்சரின் ஆலோசனையைக் கேட்டபிறகு பெரும் உற்சாகத்துடன் காணப்பட்ட மன்னர் இருங்கோவேள் இத்தனை வருடங்களாக போட்டத் திட்டங்கள், எடுத்துக்கொண்ட முயற்சிகள், இழப்புகள் என அனைத்தையும் சிந்தித்துப் பார்த்தார். தனது மகனுக்கு யுவராஜன் பட்டம் சூட்டி தனக்குப் பிறகு சோழ ஆசனத்தில் அமரப் போகிறவன் என்பதை

உலகறிய அறிவிக்கப் போகும் மகிழ்ச்சியோடு அரண்மனையை நோக்கிப் புறப்பட்டார். யுவராஜன் பட்டம் சூட்டி வளவனாரின் மகளையும் பிறகு சில குறு நில மன்னர்களின் இளவரசிகளையும் மணமுடித்துவிட்டால் அதன்பின் எந்தப் பிரச்சனையும் எழாது என்ற சிந்தனையுடன் நடந்துகொண்டிருந்தார்.

# 42. பி டிவாதம்

சித்திரைத் திங்களில் தொடங்கும் இந்திரத் திருவிழா அரச விழா என்பதால் சோழப் பேரரசின் வணிகத் தலைநகராகிய புகார் பொலிவுறக் காணப்பட்டது. இந்திரத் திருவிழா தொடங்க சில தினங்களே இருப்பதால் புகார் பட்டினமே விழாக்கோலம் பூண்டு ஈழம், யவனரகம், சாவகத் தீவு, பவளத்தீவு, கலிங்கம், பாண்டிய நாடு, சீனம், கடாரம், ஸ்ரீ விஜய தேசம், புட்பகம், மிசிரம், மோகினித் தீவு போன்ற தேசங்களிலிருந்தும் பல மக்கள் திருவிழாவைக் காண குவியத் தொடங்கினார்கள். புகாரில் இருந்த அனைத்து மாளிகைகளும் வண்ணம் பூசப்பட்டு மாவிலைத் தோரணம் கட்டி, பல வண்ண கொடிகளைப் பறக்கவிட்டுக் கொண்டு பட்டினமே விழாவில் அல்லோலகல்லோலப்படத் தொடங்கியது.

உறைந்தைக்கும், புகாருக்கும் இடையில் பெரும் பகை மூண்டுக் கொண்டிருந்ததால் பட்டினக் காவல் வீரர்கள் தங்களுக்குரிய உடையிலும் மாற்றுடையிலும் செங்குவீரனின் கட்டளைப்படி அனைத்து ஏற்பாடுகளையும் செய்து காவல் காத்துக்கொண்டிருந்தனர். பொது மக்களும் நிலைமையைப் புரிந்துகொண்டு வீரர்களுக்கு முழு ஒத்துழைப்பை நல்கினர்.

புகார் நகரத்தின் அரண்மனை, அலுவலர்கள், செல்வந்தர்கள் இவர்களின் பல அடுக்கு மாட மாளிகைகள் அடங்கிய பட்டினப் பாக்கமும் மறவர்கள், சிறு வணிகர்கள், யவனர்கள், கொல்லர்கள் வசிக்கும் மருவூர்ப் பாக்கமும் தோரணைகளால் அலங்கரிக்கப்பட்டுப் பேரழகோடு காணப்பட்டன. நான்கு காத தூரம் பறந்து விரிந்திருந்த இரண்டு பாக்கங்களும் சேர்ந்த புகார் நகரம் திருவிழாவிற்குத் தயாராகிக் கொண்டிருந்தது.

இப்படிப் புகார்ப் பட்டின மக்கள் அல்லாது சைவம் (தமிழர் மதம்), ஆசீவகம், ஆருகதம் (சமணம்), பவுத்தம், வைதீகம் (ஆரியம் அல்லது பிராமணம்) முதலிய சமய மக்களும் இந்திர விழாவிற்காகத் தயாராகியிருந்தனர். இந்தப் பலதரப்பட்ட சமயங்களின் பெரியோர்கள் சமய

வாதம் புரிந்து மற்றவர்களைத் தோற்கடித்து அவர்களைத் தம் மதத்தில் சேர்க்கும் முனைப்பில் காணப்பட்டனர்.

இந்தச் சமய மக்களோடு சிவன், கொற்றவை, திருமால், இந்திரன் முதலான தமிழர்த் தெய்வங்களின் கோயில்களும்; ஆருகத மதத்தின் ஆருகதக் கடவுளின் மடங்களும்; பௌத்தத்தின் ஏழு விகாரங்களை உள்ளடக்கிய இந்திரவிகாரமும்; விஷ்ணு, உருத்திரன், கார்த்திகேயன் முதலிய வைதீக தெய்வங்களின் கோயில்கள் அனைத்தும் அலங்கரிக்கப்பட்டு மந்திரங்கள் ஓதப்பட்டுக்கொண்டிருந்தன. வைதீக தெய்வங்களுக்கு நடத்தும் பிரமாண்ட யாகங்களுக்குப் பலி கொடுக்க ஆயிரக்கணக்கான பசுக்களும், புரவிகளும் கொண்டுவரப்பட்டு மாலையிடப்பட்டுத் தயாராக நின்றன.

வெகு நாட்களுக்குப் பிறகு புகாரில் இணைந்துள்ள தோழிகளான வானவல்லியும், மரகதவல்லியும் மேற்கூறிய விழா ஏற்பாடுகளைக் கண்டும் அந்த மகிழ்ச்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளாமல் கரிகாலனுக்கு என்ன நேர்ந்தது எனத் தெரியாமல் பெரும் வருத்ததுடனே தங்களது தோழியான பத்திரையைக் காண புரவித் தேரில் விரைந்துகொண்டிருந்தார்கள். வைதீக யாகங்களுக்குப் பலி கொடுக்க நின்றுகொண்டிருந்த ஆடு, பசு மற்றும் புரவிகளைக் கண்ட போது இருவருமே அவைகளை எண்ணி பரிதாபப்பட்டார்கள். ‘‘கடவுளைத் திருப்திப்படுத்த இந்த உயிர்களைப் பலியிட்டுதான் ஆக வேண்டுமா?’’ என நினைத்தும் வருந்தினார்கள்.

பெரு வணிகன் வேளாதனின் பல அடுக்கு மாளிகையின் வாசல் வண்ணப் பொடிகளால் கோலமிடப்பட்டு, வாழை, மாவிலைத் தோரணம் மற்றும் பல வண்ணக் கொடிகளால் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாளிகையின் நுழைவாயிலில் வானவல்லியும், மரகதவல்லியும் நுழையும் போதே பார்த்துவிட்ட பத்திரைத் தேவி மகிழ்ச்சியில் ஓடி வந்து தனது இரு தோழிகளையும் அணைத்துக்கொண்டாள். நெடு நாள் கழித்து மூன்று தோழிகளும் இணைந்துள்ளதால் அவரவர் மனதில் இருந்த கவலைகளை மறந்து மகிழ்ச்சியடைந்தனர்.

பத்திரையின் முகமானது காளனைக் கண்ட பிறகு மகிழ்ச்சியும், பொலிவும், அழகும் பெற்றுக் காணப்பட்டது. அவளது முகத்தில்

எப்போதுமிருக்காத மகிழ்ச்சியையும், புன்னகையையும் கவனித்துவிட்ட மரகதவல்லி, “அக்கா! எப்போதுமில்லாத மகிழ்ச்சியில் உங்கள் முகம் காணப்படுகிறதே! காரணம் என்ன அக்கா? கூறினால் நாங்களும் மகிழ்வோமே!” என அவளது கண்களில் தனது பார்வையை நிலைக்கவிட்ட படியே கேட்கலானாள். வெட்கத்தில் கன்னம் சிவந்து கீழே குனிந்தவளைப் பார்த்த வானவல்லி பத்திரையின் எண்ணத்தைப் புரிந்துகொண்டவளாய், “யாரடி உன் மனதைக் கொள்ளை கொண்ட கள்வன்?” என அவளது தாழ்வாயை உயர்த்தியபடியே கேட்கலானாள்.

வானவல்லி பொதுவாகக் கள்வன் எனக் கூறியதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த பத்திரை அன்றே அவரது ஓவியத்தை வரைந்து பார்த்துக்கொண்டிருந்த போதே தன்னைக் கடுமையாக எச்சரித்த வானவல்லி இப்போது அவரைச் சந்தித்ததைப் பற்றித் தெரிவித்தால் நிச்சயம் கோபம் கொள்வாள் என நினைத்தவள், “நீங்கள் நினைப்பதைப் போல ஏதுமில்லை. நீண்ட நாள்களுக்குப் பிறகு நாம் மூவரும் சந்திக்கிறோம். ஆதலால் தான் எனது மகிழ்ச்சி பெருகியுள்ளது” எனத் தெரிவித்தாள். அதை ஏற்க மறுத்த இருவரும் அடுத்தடுத்து பரிகாசச் சொற்களைக் கூறி ஒருவரை ஒருவர் பரிகாசம் செய்துகொண்டு நெடுநேரம் மகிழ்ச்சியில் திளைத்தனர். பிறகு கடைசியாக மூவரும் மலர் பறித்துக்கொண்டு கோயிலுக்குச் சென்று மலர்களைத் தூவி விளக்கேற்றி வழிபட்டுவிட்டுத் திரும்பும் போது அங்கிருந்த சூரிய குண்டலம், சந்திர குண்டலம் என்ற இரு_காமத்து_இணை_ஏரிகளைக் கண்ட பத்திரை, “இந்த இரு ஏரிகளில் மூழ்கி வேண்டிக்கொண்டால் நினைத்தது நடக்கும் என்பார்களே! வா நாமும் மூழ்கி வேண்டிக்கொள்வோம்!” என அழைத்தாள்.

அதைக்கேட்ட மரகதவல்லி, “அக்கா! இதில் மூழ்கி வேண்டிக்கொண்டால் மனதில் நினைத்தது நடக்குமா எனத் தெரியாது. ஆனால் மனதில் நினைத்திருப்பவனை நாம் நிச்சயம் கணவனாக அடைந்துவிடலாம்!” என மீண்டும் பத்திரையைப் பரிகசிக்க அவள் நாணம் கொண்டு தரையை நோக்க அங்கு மீண்டும் ஒரு பெரும் சிரிப்பலை எழுந்தது.

மூன்று பெண்களும் அவரவர் மனதில் இருப்பவர்களை எண்ணிய படியே இரண்டு காமத்து இணை ஏரிகளிலும் மும்மூன்று முறை மூழ்கி எழுந்து வேண்டிக்கொண்டார்கள். பிறகு ஈரத் துணியுடனே பத்திரை அவளது வீட்டிற்குச் செல்ல மற்ற இருவரும் வானவல்லியின் வீட்டை நோக்கி நடக்கலானார்கள்.

பத்திரை பெரும் மகிழ்ச்சியுடனே அவளது வீட்டிற்குள் நுழையும் போது அவளுக்குப் பெரும் அதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது. அங்கு நின்ற வேளாதன் பத்திரையை அழைத்தார். ஈரம் காயாத துணியோடு அவரிடம் சென்ற பத்திரை, ‘‘கூறுங்கள் தந்தையே!’’ எனப் பணிவாக வணங்கினாள்.

அவரது உடலில் உடுத்தியிருந்த சீன தேசத்துப் பட்டுத் துணிகள், அவரது கழுத்து, கை, இடுப்பு என எங்கும் நிறைந்திருந்த பல தேசத்து முத்து மாலைகள், பவள அணிகலன்கள் எனப் படாடோபத்தின் மொத்த உருவமாக நின்ற வேளாதன், ‘‘எங்கே அம்மா, சென்று வருகிறாய்!’’ என வினவினார்.

‘‘இரு காமத்து இணை ஏரிக்குச் சென்று வழிபட்டுவிட்டு வருகிறேன் அப்பா!’’

‘‘யாரை நினைத்து? அந்தக் கள்வனை மணக்க வேண்டும் என்றா?’’

அவர் அப்படிக் கூறியதைக் கேட்ட பத்திரைக்குத் தூக்கிவாரிப் போட்டது. தான் கள்வனிடம் மனதைப் பறிகொடுத்தது தந்தைக்கு எப்படித் தெரியும்? எனக் குழம்பினாள். உடனே நிலைமையைப் புரிந்துகொண்டவள், ‘‘அப்பா! இருகாமத்திணை ஏரிக்குச் சென்று வழிபடுவது புகார் பட்டினப் பெண்களின் வழக்கமான நடைமுறை தானே! நீங்கள் கேட்பது எனக்குப் புரியவில்லை’’ என அவரைத் திருப்திப்படுத்த முயன்றாள்.

‘‘அம்மா பத்திரை! என்னிடம் எதையும் மறைக்க முயலவேண்டாம். உண்மையைக் கூறு!’’

‘‘எதைப்பற்றித் தந்தையே! எனக்கு ஒன்றும் புரியவில்லை’’

‘‘புரியவில்லையா? அல்லது புரியாததைப் போல நடிக்கிறாயா?’’

‘‘அப்பா!’’

“பத்திரை, எனக்கு அனைத்தும் தெரியும்! எதையும் மறைக்க முயலவேண்டாம்.”

பத்திரையின் மனம் பதறியது. ‘தந்தை தனது காதலனான அந்தக் கள்வனைப் பற்றித்தான் கேட்கிறாரா? தனது அந்தரங்கத் தோழிகளுக்குக் கூட நான் கூறாத ரகசியத்தை அப்பா எப்படி அறிந்திருப்பார். அன்று கள்வனுக்குத் தான் மருந்திட்ட ரகசியம் தன்னைத்தவிர யாருமே அறிந்திருக்க மாட்டார்களே! பிறகு எப்படித் தந்தைக்கு...’ எனக் குழம்பியவள் ‘அப்படியானால் அன்று யாரோ தன்னைப் கண்காணித்துக் கொண்டிருப்பதாக உணர்ந்தேனே! அவர்கள் தான் அதனைப் பார்த்துத் தந்தையிடம் தெரிவித்திருப்பார்களா? யாராக இருப்பார்கள்!’ எனக் கவலை கொண்டாள்.

கண நேரம் ஆழ்ந்து சிந்தித்த பத்திரை இனி உண்மையை மறைத்து எதையும் சாதிக்கப்போவதில்லை. உண்மையைக் கூறுவதுதான் சாலச் சிறந்தது என முடிவு செய்து கொண்டவள், “அப்பா! நானே தங்களிடம் இதைப் பற்றிப் பேச வேண்டும் என நினைத்திருந்தேன். ஆமாம் அப்பா! நான் ஒருவரிடம் மனதைப் பறிகொடுத்துவிட்டேன். அவருக்கே தாங்கள் என்னை மணமுடித்துக் கொடுக்க வேண்டும்!” என கூறிக் கொண்டே அவரது காலில் விழுந்து ஆசி வேண்டினாள்.

பத்திரை காலில் விழுந்ததைப் பொருட்படுத்தாத வேளாதன் கோபத்தோடு அங்கிருந்து மாளிகைக்குள் சென்றார். அவர் பின்னாலே “அப்பா! அப்பா!” என ஓடிய பத்திரை அவரை மறித்து, “அப்பா, நான் தங்கள் மகள். எந்தத் தவறையும் ஒரு நாளும் இழைக்க மாட்டேன். நான் தவறிழைத்திருந்தால் பொறுத்தருளுங்கள்!” எனக் கெஞ்சினாள்.

வேளாதன் கோபத்தோடு எதுவும் பேசாமல் நின்றுகொண்டிருந்தார்.

“அப்பா, நான் காதலித்ததைக் குற்றம் என்கிறீர்களா?”

“இல்லை, பத்திரை. ஒரு நாளும் நீ காதலித்ததை நான் குற்றம் கூற மாட்டேன். நீ மனதைப் பறிகொடுத்துள்ளதாய் குறிப்பிடுகிறாயே! அவன் யார்? அவனை எண்ணித்தான் நான் துயர் அடைகின்றேன்.”

இக்கேள்விக்குப் பதில் கூறத் தடுமாறிய பத்திரை, ‘‘அப்பா... அவர்... அவர்...!’’ என தயங்கினாள்.

‘‘நான் கூறுகிறேன் அம்மா. அவன் ஒரு கள்வன். பணத்திற்காக மற்றவர்களைத் துன்புறுத்துபவன். சம்பாபதி வனத்தில் சில தினங்களுக்கு முன் உன்னையே கவரத் துணிந்தவன். அவனிடம் நீ உன் மனதைப் பறிகொடுத்துள்ளதாய் கூறுவது என்னை ஆச்சர்யப்படுத்துகிறது! எந்த நம்பிக்கையில் நீ அவனை நம்புகிறாய்?’’

‘‘அது எனக்குத் தெரியவில்லை அப்பா. ஆனால் அவரை நான் முழுவதும் நம்புகிறேன். அவர் எனக்கு வாக்குக் கொடுத்துள்ளார். எச்சூழ்நிலையிலும் என்னைக் கைவிட மாட்டேன் என்று!’’

‘‘அம்மா, அவன் உன்னை எந்தச் சூழலிலும் கைவிட மாட்டான். ஏனெனில் உன்னிடம் வேண்டிய அளவு செல்வம் உள்ளது. அது உள்ள வரை அவன் உன்னை விட்டு விலகவே மாட்டான். கள்வனுக்குச் செல்வத்தின் மீது தானே ஆசை இருக்கும்!’’

‘‘அப்பா, அவரைப்பற்றித் தவறாகப் பேச வேண்டாம்! இனி அவர் ஒரு நாளும் களவு செய்ய மாட்டார் என நான் நம்புகிறேன்.’’

‘‘அவ்வளவு நம்பிக்கையா உனக்கு!’’

‘‘ஆமாம் அப்பா!’’

‘‘அப்படியெனில் நீயிருக்கும் இந்த நிலையிலேயே அவன் உன்னை ஏற்றுக்கொள்வானா?’’

‘‘நிச்சயமாக அப்பா. அவர் என்னை மட்டும் தான் நேசிக்கிறார். தங்களது செல்வத்தை அல்ல!’’

‘‘நான் வாணிகம் செய்து என் வாழ்நாள் முழுவதும் சேர்த்து வைத்துள்ளதெல்லாம் நீ மகிழ்ச்சியுடன் வாழத்தானே பத்திரை!’’

‘‘எனக்கு உங்களது செல்வம் தேவையில்லை அப்பா!’’

‘‘வேறு என்ன என்னிடமிருந்து எதிர்பார்க்கிறாய்?’’

“தங்கள் ஆசியும், வாழ்த்துகளும் தான் அப்பா!”

“அது இயலாது!”

பத்திரை எதுவும் பேசாமல் அமைதியுடனே கண்ணீர் வடித்துக்கொண்டு நின்றாள். அவளது முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த வேளாதன் கோபத்துடன், “நீ விரும்பினால் அந்தக் கள்வனுடன் இப்போதே உடன்போக்கு மேற்கொண்டுவிடலாம் பத்திரை! அதற்கு நான் ஒரு நாளும் தடையாக இருக்கமாட்டேன். நினைத்த ஆடவனை விரும்பி மணந்து கொள்வது நம் நாட்டுப் பெண்களின் உரிமை! அதை ஆதரிப்பது எனது கடமை! அதில் நான் ஒரு நாளும் தலையிடமாட்டேன்” எனக் கூறியவர் தனது அறைக்குள் சென்று தாழிட்டுக்கொண்டார்.

பஞ்சணையில் படுத்தவருக்கு உறக்கமே வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தார். அவரது மனம் பெரும் கனமாக ஆகியிருந்தது. பத்திரையின் முடிவை அவரால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. ஒரு நாழிகைப் பொழுதிற்குப் பிறகு அறையிலிருந்து வெளியே வந்தார். பத்திரை அதே இடத்திலேயே கண்ணீருடன் நின்றுகொண்டிருந்தாள்.

அவரைப் பார்த்த பத்திரை “தங்கள் ஒப்புதல் இன்றி இதுவரை நான் எந்தவொரு காரியத்தையும் செய்ததில்லை. தங்கள் ஒப்புதலும், ஆசியும் இருந்தால் மட்டும் போதும் அப்பா!” எனப் பிடிவாதத்துடன் தெரிவித்தாள்.

மீண்டும் தனது அறைக்குள் சென்று தாழிட்டுக்கொண்டார். ஒரு முகூர்த்தப் பொழுதிற்குப் பிறகு மீண்டும் வெளியே வந்தார். பத்திரை அதே இடத்தில் அசையாமல் நின்றுகொண்டிருந்தாள்.

அவளருகில் சென்ற வேளாதன், “இரவு உணவு உண்ணவில்லையா பத்திரை!”

“வேண்டாம் அப்பா!”

“எப்போது படுக்கப் போகிறாய்?”

“தெரியாது!”

“தெரியாதா?”

“ஆம்!”

“நீ எதிர்பார்ப்பது ஒரு நாளும் நடக்காது பத்திரை! உனது பிடிவாதத்தைக் கைவிட்டு விடு. உனக்கு வேண்டுமானால் நீ சென்றுவிடலாம்! என் ஒப்புதலுடன் நீ செல்ல வேண்டும் எனக் கனவிலும் எதிர்பார்க்காதே!”

“அப்பா, எனக்குத் தங்களது ஆசியும், வாழ்த்துகளும் நிச்சயம் தேவை. பிறந்தது முதல் தாயின் முகத்தை நான் கண்டதில்லை. எனக்காகவே வாழும் தங்களின் விருப்பம் இல்லாமல் என்னால் எப்படி அப்பா மகிழ்ச்சியாக இருக்க இயலும்! வாழ்த்தி அனுப்புங்கள்!”

அவள் கூறியதைக் கேட்ட வேளாதன், “இப்படியே நீ நிற்க வேண்டியதுதான்!” எனக் கூறி அவரும் உண்ணாமல் தனது அறைக்குள் சென்றுவிட்டார்.

மீண்டும் இரவு ஒருசாமப் பொழுது கடந்த பின்னர்ப் பத்திரை தனது அறைக்குள் சென்று உறங்கியிருப்பாள் என நினைத்த படியே வெளியே வந்த வேளாதன் ஒரு கணம் அதிர்ச்சியடைந்து திகைத்து நின்றுவிட்டார்.

பத்திரை அங்கேயே தந்தையை எதிர்பார்த்து நின்றுகொண்டிருந்தாள். வெகு நேரமாக அப்படியே அசையாமல் நின்றதால் அவளது கால் மற்றும் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. அவளால் நிற்க கூட இயலவில்லை. நிலை தடுமாறிக்கொண்டிருந்தாள்.

அவளைக் கண்ட வேளாதன் எதையும் கூறாமல் வருத்ததுடன் மீண்டும் தனது அறைக்குள் சென்றுவிட்டார். அதைக்கண்ட பத்திரை தனது நிலையை எண்ணித் தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தாள். அவளது முகத்தில் வழிந்த கண்ணீர்த் துளிகள் அவளது உடலைப் பலவீனப் படுத்திக்கொண்டு அதே நேரம் அவளது மனதைத் திடப்படுத்தி எதையும் எதிர்த்து போராடும் படி அவளைத் தயார் செய்தது.

அறைக்குள் சென்ற வேளாதனும் உறங்க இயலாமல் மகளின் முடிவை நினைத்து வருந்தியபடியே நடந்துகொண்டிருந்தார். வேளாதனும் உடன்போக்கு மேற்கொண்டுதான் பத்திரையின் தாயுடன் அவர்தன் வாழ்வைத் தொடங்கினார். பத்திரை பிறந்த உடனே அவள் இறந்துவிட்டாள். அதன் பிறகு

அவர் மீண்டும் மனம் செய்துகொள்ளவே இல்லை. வேளாதன் சேர்த்திருக்கும் செல்வம் அனைத்தும் பத்திரை பிறந்த பிறகு அவர் வாணிபம் செய்து சேர்த்தவை. பத்திரையை வளர்க்க அவர் பாடுபட்ட ஒவ்வொரு நிகழ்வுகளும் அவரது கண்களில் கண்ணீராய் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. இரவில் வெகு நேரம் சிந்தித்தபடியே நடந்தவர் இறுதியில் ஏதொ ஒரு முக்கிய முடிவெடுத்துக்கொண்டு படுக்கையில் படுத்தவர் சோர்வில் உறங்கிப்போனார்.

பொழுது விடிந்ததும் வழக்கம் போல வானவல்லியும், மரகதவல்லியும் பத்திரையின் இல்லத்திற்குச் சென்றனர். இருவரும் மாளிகைக்குள் சென்றதும், அங்குத் தரையில் பத்திரை மயங்கிக் கிடந்தாள். அதைப்பார்த்து பதறி ஓடி வந்து அவளைத் தூக்கி மடியில் போட்டுக்கொண்டாள் வானவல்லி.

சுற்றி நின்ற பத்திரையின் தாதிப் பெண்களை அழைத்த வானவல்லி மயங்கிக்கிடக்கும் பத்திரையைக் கவனிக்காமல் இருந்ததற்கு அவர்களிடம் தனது கோபத்தை வெளிப்படுத்த அவர்கள் இரவு நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் தெரிவித்தனர்.

பத்திரையின் செயல் இரு பெண்களையுமே பெருத்த ஆச்சர்யத்தில் ஆழ்த்தியிருந்தது. “பத்திரைக்கா இவ்வளவு பிடிவாதம்!” என வியந்தனர். பத்திரையின் முகத்தில் தண்ணீரைத் தெளித்து அவளது மயக்கத்தைப் போக்கினர். விழித்த பத்திரையைத் தூக்கி அமரவைத்து தனது மார்பில் சாய்த்துக்கொண்டாள் வானவல்லி.

கண்களை விழித்துப் பார்த்தபோது வேளாதன் அவளுக்கு எதிரில் நின்றுகொண்டிருந்தார். அவரைக் கண்ட பத்திரை தவழ்ந்தபடியே அவரது காலில் விழுந்தாள். அவளைத் தூக்கிய வேளாதன் கண் கலங்கியபடியே, “அம்மா, இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறாயே அவன் மீது உனக்கு அவ்வளவு நம்பிக்கையா?” என ஆச்சர்யத்துடன் வினவினார்.

“ஆமாம் அப்பா! அவர் என்னைக் கைவிட மாட்டேன் என வாக்களித்துள்ளார்!” என்றாள் பொறுமையுடன்.

முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்ட வேளாதன், ''உனது நம்பிக்கையினாலும், பிடிவாதத்தினாலும் நீ என்னை வென்றுவிட்டாய்! உன் காதலனை நீ எந்த அளவிற்கு நம்புகிறாய் எனத் தெரிந்துக்கொள்ளத் தான் நேற்று நான் சம்மதிக்கவில்லை. உனது மகிழ்ச்சியே எனது மகிழ்ச்சியும். உனது விருப்பப்படி நீ அவனையே மணந்து மகிழ்ச்சியாக வாழ்வாயாக. அதற்கு நான் சம்மதிக்கிறேன்! ஆனால் என் விருப்பத்தையும் நீ ஏற்றுக்கொள்ள வேண்டும்!'' எனக் கூறியவர் தனது அறைக்குள் சென்று கதவினைத் தாழிட்டுக்கொண்டார்.

மூன்று பெண்களுக்கும் எதுவுமே புரியவில்லை. ஒரு நாழிகைப் பொழுதிற்குப் பிறகு அவர் வெளியே வந்ததைப் பார்த்த அனைவரும் அதிர்ச்சியில் திகைத்து ஒருவரது முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். பத்திரை மட்டும் அழுதபடி ''ஏனப்பா! இந்தக் கோலம். நான் தவறு இழைத்திருந்தால் என்னைத் தண்டியுங்கள். நான் செய்த குற்றத்திற்குத் தாங்கள் எதற்காகத் தண்டனையை ஏற்றுக்கொண்டுள்ளீர்கள்?'' என அவரது காலில் விழுந்து கதறினாள்.

உள்ளே சென்ற பெருவணிகன் வேளாதன் தனது விலையுயர்ந்த ஆடைகள், அணிகலன்கள் என அனைத்தையும் கழட்டி வைத்துவிட்டு இடையில் ஒரே ஒரு காவித் துகிலை மட்டும் அணிந்துகொண்டு வெளியே வந்திருந்தார். பத்திரைத் தேவி கண்ணீர் வடித்ததைப் பார்த்து, ''பத்திரை எனது முடிவிற்குக் காரணம் நீ இல்லை. என் மனைவியை நான் இழந்த உடனே துறவியாக வேண்டும் எனத் தீர்மானித்தேன். உனது நல் வாழ்வைக் கருத்தில் கொண்டு அந்தத் திட்டத்தைக் கை விட்டேன். உனக்கான வாழ்வை நீயே தேடிக்கொண்ட பிறகு எனது எண்ணத்தை நிறைவேற்றும் காலமும் வந்துவிட்டதாய்க் கருதுகிறேன். அறச் செயல்களுக்குச் செலவிடும் செல்வத்தை ஒருநாளும் நீ தடுத்து விடாதே! மற்றபடி நான் சேர்த்து வைத்திருக்கும் செல்வம் அனைத்தும் உனக்குத்தான். உனது காதலனுக்கு வேண்டிய செல்வத்தை நீயே கொடு! இனி களவு செய்ய வேண்டாம் எனக் கூறு. நான் செல்கிறேன். என்னைத் தடுக்காதே!'' எனக் கூறியபடியே அங்கிருந்துச் செல்லலானார்.

வானவல்லியின் தோளில் சாய்ந்துகொண்டு வேளாதன் செல்வதைப் பார்த்தபடியே பத்திரை தேம்பி தேம்பி அழுதாள். அப்போது அவளால் அழுவதைத் தவிர வேறு எதையும் செய்ய இயலவில்லை.

மாளிகையிலிருந்து புறப்பட்ட பெருவணிகன் வேளாதன் திகம்பர அடிகளார் ஈழவாவிரையரைச் சந்தித்து நடந்த நிகழ்வுகளைக் கூறினார். வேளாதனின் நிலையைக் கண்ட அடிகளாரும் வருந்தவே செய்தார். அறிவுரைக் கூறி வேளாதனின் மனதை மாற்ற இயலாது என்பதை உணர்ந்தவர், ‘‘வஞ்சிமா நகரத்திற்குச் சென்று அங்கிருக்கும் சமணப் பள்ளியில் நீ உனது துறவறத்தைத் தொடங்கு’’ எனக் கூறி வாழ்த்தி அனுப்பி வைத்தார்.

‘‘என் மகளைக் கவனமாகப் பார்த்துக் கொள்’’ எனக் கூறிய வேளாதன் அமராவதி நதிக் கரையில் இருக்கும் சேரர்களின் தலைநகரான வஞ்சிமா நகரத்திற்குக் கிளம்பினார்.

**அடிக்குறிப்பு:**

1.பூம்புகார் நகரின் சுற்றுப் பரப்பு நான்கு காத தூரம் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. சுமார் 30 சதுர மைல் (77.699 கி.மீ$^2$ ) பரப்பு என்று டி.வி.சதாசிவ பண்டாரத்தார் ஆராய்ந்து கூறியுள்ளார்.

2. வரி அணி சுடர் வான் பொய்கை,

இரு காமத்து இணை ஏரி. (பட்டினப்பாலை 38–39)

# 43. பு ரவித்தேரில் யார்?

குமரி முதல் வடவேங்கடம் வரை பரந்துபட்ட தமிழகத்தை குடபுலம், குணபுலம் மற்றும் தென்புலம் எனப் பிரித்து குட புலத்தை சேரரும், குண புலத்தை சோழரும், தென் புலத்தை பாண்டியரும் ஆட்சி செலுத்தினர். குண புலத்தின் தலைநகராக உறைந்தையும், தென் புலத்தின் தலைநகராக கூடல் எனும் மதுரையும், குட புலத்தை ஆட்சி செலுத்திய சேரர்களின் தலைநகரம் ஆன்பொருநை நதியின் கரையில் அமைந்திருந்த கருவூர் எனும் வஞ்சிமா நகரம் . வலிமையான கோட்டைச் சுவரைக் கொண்ட அந்நகரத்தின் வெளிப்புறத்தில் காணப்பட்ட வஞ்சி மரத்தினால் கருவூர் நகரம் வஞ்சி மாநகர் எனப்பட்டது. ஈழவாவிரையர் கூறியதன் படி வஞ்சிமா நகரத்திற்கு வந்த வேளாதன் சமணத் திருப்பள்ளியின் தலைவரது முன்னிலையில் சமணத்தில் சேர்ந்து துறவியாக மாறினார். அவரது தலையில் இருந்த முடிகளை கைகளால் பிடுங்கி லோசம் செய்து கொண்டவர் பிறகு எழுவகை ஒழுக்கங்களையும் கடைபிடிப்பதாக உறுதி செய்து கொண்டு ஆருகதரைச் சரணடைந்தார்.

உடல் முழுக்க சந்தனம், பலவித நறுமணத் தைலங்கள் பூசி, அணிகலன்கள், விலை உயர்ந்த பட்டுகள் என ஆடம்பரத்தின் மொத்த உருவமாகக் காணப்பட்ட பெருவணிகன் வேளாதன் இப்போது அனைத்தையும் துறந்து இடையில் ஒரேயொரு காவித் துகிலை மட்டும் உடுத்திக்கொண்டு எளிமையானவராகத் தனது யாத்திரையைத் தொடங்கினார்.

வஞ்சி மாநகரத்திலிருந்து வெளியே வந்துகொண்டிருந்த போது அவரது காலில் விழுந்து வணங்கினான் வீரன் ஒருவன். அதனை எதிர்பாராத திகம்பர அடிகளார் வேளாதன், “தம்பி! எல்லாம் வல்ல இறைவனான ஆருகதர் பாதங்களைப் பணிந்தாலாவது உனக்கு ஆசி கிடைக்கும். எனது

காலில் விழுகிறாயே? யாரப்பா நீ?'' எனக் கூறியபடியே அவனைத் தூக்கினார். தோற்றத்தில் மட்டுமல்ல உடல் மொழி, பேச்சு, நடை என அனைத்திலும் முழு துறவியாக மாறியிருந்தார் வேளாதன்.

தனது கேள்விக்குப் பதிலளிக்காமல் தலையைக் குனிந்தபடியே வருத்தத்துடன் நின்ற வீரனின் தோற்றத்தைப் பார்த்த அடிகளார் வேளாதன் இவன் நிச்சயம் சோழப் படையின் உயர்ந்த பொறுப்பில் உள்ளவனாகத்தான் இருப்பான் என நினைத்துக் கொண்டவர் இதற்கு முன் இவனை எங்காவது பார்த்திருக்கிறோமா? எனவும் சிந்தித்துப் பார்த்தார். அவனது முகம் சிந்தனைக்கு வராததால் அவனையே குழப்பத்துடன் பார்த்தவர் மீண்டும், ''தம்பி யாரப்பா நீ? உன்னை இதற்கு முன் சந்தித்ததாக எனக்கு நினைவில்லையே!'' என வினவினார்.

அடிகளார் வேளாதன் மற்றத் துறவிகளுடன் கூட்டத்தோடு கூட்டமாக நிற்பதைக் கண்டு தயங்கிய வீரன் அவரை மட்டும் தனியாக அழைத்துச் சென்று, ''அடிகளே! தங்களது இந்த நிலைக்குக் காரணமானவன் நான் தான்!'' எனக் கூறி வருந்தினான்.

''நீ கூறுவது எனக்குப் புரியவில்லையே தம்பி! எனது நிலைக்கு நீ காரணமா?''

''ஆம்!'' மீண்டும் அவரது கண்களைப் பார்த்துக் கூற இயலாமல் வருத்தத்துடனே தரையைப் பார்த்துக் கூறினான் அவ்வீரன்.

அடிகளார் வேளாதனும் அவன் கூறியதைக் கேட்டுத் திகைத்து நிற்க, ''தங்கள் மகள் பத்திரை விரும்புவது என்னைத் தான்! நீங்கள் இல்லற வாழ்வை வெறுத்து துறவறத்தை மேற்கொள்ளக் காரணமான அந்தக் கள்வன் நானே தான்!'' எனக் கலங்கிய கண்களுடன் கூறினான் காளன்.

காளன் கூறியதைக் கேட்டு சிறிதும் அதிர்ச்சியடையாத வேளாதன், ''தம்பி, என் மகள் உன்னை விரும்பினாள் என்பதற்காக நான் துறவறத்தை மேற்கொள்ளவில்லை. எனக்கு அவள் மீது பெரும் நம்பிக்கை இருக்கிறது. அவள் எந்த முடிவெடுத்தாலும் சரியாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கையில் தான் அவளைத் தனித்துவிட்டு நான் துறவறம் மேற்கொண்டேன். நான் பரம

மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் தான் இருக்கிறேன். என் மகள் தான் பாவம்! என்னை எண்ணியே வருந்திக்கொண்டிருப்பாள். என் நினைப்பே வராத அளவிற்கு அவளை மகிழ்ச்சியாகப் பார்த்துக்கொள்!'' என்றார்.

காளன் எதையும் கூற இயலாமல் சக்தியை இழந்து கலங்கிய கண்களுடனே அவரையே பார்த்துக்கொண்டு நின்றான். அப்போது வேளாதன், ''தம்பி, நீ கள்வன் என்றும் மக்களைத் துன்புறுத்தும் காளன் எனவும் அல்லவா நான் கேள்வியுற்றேன். ஆனால் நீ சோழ தேசப் படையின் உப தலைவர்களின் உடையில் அல்லவா காணப்படுகிறாய்?'' என வினவினார்.

''ஆம் அய்யா! நான் சோழர் படையின் உபதலைவன் தான். அரச காரியமாக கருவூர் வரை யுவராஜனுடன் வந்துள்ளேன்!'' எனக் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த வேளாதன் ஆர்வத்துடன், ''தம்பி! யுவராஜர் வளவன் கருவூர் வருகைத் தந்துள்ளாரா? அவருக்கு எப்போது அரசப் பட்டம் சூட்டப்போகிறார்கள்? வளவனை சேரமான் பெருஞ்சேரலாதன் ஆதரித்துவிட்டாரா? வளவனுக்கு எதிராக இருங்கோவேளுடன் தானே அவர் நெருக்கம் கொண்டிருந்தார்? நான் துறவறம் மேற்கொண்ட சில தினங்களில் பல மாற்றங்கள் நிகழ்ந்து விட்டது!'' என்றார் பெரும் மகிழ்ச்சியுடன்.

பதிலுக்கு காளன், ''அடிகளே! நான் யுவராஜன் எனக் கூறியது இளவரசன் வளவனை அல்ல!''

''அப்புறம் யாரை?''

''இருங்கோவேள் மகனை! இருங்கோ வேளின் மகனுக்கு யுவராஜன் பட்டம் சூட்டிவிட்டார்கள். அவர் சேரமான் பெருஞ்சேரலாதனைச் சந்தித்து ஆசிபெற வந்துள்ளார். அவருக்குத் துணையாக நானும் வருகை தந்துள்ளேன்''

காளன் கூறியதைக் கேட்டவுடனே பெரும் சோகமடைந்த அடிகளார், ''தம்பி நீ கூறுவது உண்மை தானா?'' என வினவினார்.

''ஆம். உண்மைதான்!''

''இருங்கோவேளின் மகனுக்கு யுவராஜன் பட்டம் சூட்டிவிட்டால் இனி அடுத்த சோழ மன்னன் அவன் தானே! வளவனின் நிலைமை? சென்னியின்

மகன் இனி ஒரு நாளும் அரியணையேற இயலாதா?'' எனக் கேட்டு வருந்தினார்.

இந்தக் கேள்விக்குப் பதில் கூற இயலாமல் காளன் திகைக்கையில், ''என் மகள் கள்வனைக் காதலிக்கிறாள் எனக் கேட்ட போது எனக்கு எந்த வருத்தமும் எழவில்லை தம்பி. ஆனால் இப்போது வளவனுக்கு எதிரியான இருங்கோவேளின் படைத் தலைவனை மணக்கப் போகிறாள் என்பதை நினைக்கையில் தான் எனது இருதயமே வெடித்துவிடும் போலிருக்கிறது!'' எனக் கூறியபடியே மேற்கொண்டு பேச இயலாமல் நா தழுதழுக்க அங்கிருந்துக் கிளம்பினார்.

அடிகளார் செல்வதைப் பார்த்த காளன், ''அடிகளே! துறவறம் மேற்கொள்ளும் போது வருத்தத்துடன் செல்லுதல் ஆகாது! நான் கூறப் போவதையும் கேட்டுவிட்டுச் செல்லுங்கள்!'' என அவரைத் தடுத்தான்.

அவன் கூறியதைக் கேட்ட வேளாதன், ''தம்பி! நீ கூறப் போவதைக் கேட்க என்னிடம் துணிவும் இல்லை, மனதில் வலிமையும் இல்லை. என் மகளை எல்லாம் வல்ல இறைவன் தான் காத்தருள வேண்டும்!'' என கடவுளை வேண்டினார்.

''அடிகளே, நான் கூறப் போவதைச் சிறிது கேட்டுவிட்டுத் தான் புறப்படுங்களேன்!'' பணிவுடன் கூறினான் காளன்.

''சரி, கூறு தம்பி! ஆருகதக் கடவுளைச் சரணடைந்த பிறகு சுய உணர்ச்சிகளுக்கு இடமளிக்கக் கூடாது! என்ன வேண்டுமானாலும் கூறு, கேட்டுவிட்டுச் செல்கிறேன்!''

''அடிகளே, தாங்கள் நினைப்பதைப் போல நான் கள்வன் அல்ல!''

''நான் கள்வன் அல்ல, படைத் தலைவன் எனக் கூறப்போகிறாயா?''

''ஆம் அய்யா!''

''இருந்துவிட்டுப் போ! துரோகிகளின் படையின் சேனாதிபதியாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போ. அப்புறம்?''

''எனது இயற்பெயர் காளன் அல்ல!''

“காளன் இல்லையா?”

“ஆம். எனது பெயர் இளந்திரையன்!”

“துரோகிக்குப் பெயர் எதுவாக இருந்தால் என்ன தம்பி? காளனாக இருந்தால் என்ன இளந்திரையனாக இருந்தால் என்ன?”

“அடிகளே, நான் இரும்பிடர்த்தலையரின் தம்பி!”

தான் கூறியதைக் கேட்ட அடிகளார் வேளாதன் பெரும் அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைவார் என எதிர்பார்த்த காளன் ஏமாந்து போனான். “தம்பி, உனது தமையன் இரும்பிடர்த்தலையருக்கும், உனது அக்கா மகன் வளவனுக்கும் எப்படி உன்னால் துரோகம் இழைத்து எதிரிகளுடன் கைகோர்க்க முடிந்தது? நான் துறவறம் மேற்கொண்டு விட்டேன் இல்லையென்றால் நீ கூறியதைக் கேட்டு இந்நேரம் எனது கைகளால் உன்னைக் கொன்றிருப்பேன். உன்னைக் காதலித்த எனது மகளை நினைத்தால் தான் எனக்கு கோபமாக இருக்கிறது. கள்வனும் உழைத்தே நேர்மையுடன் வாழ்வான் என எண்ணி மகிழ்ந்தேன். ஆனால், பேராசைக் கொண்டு எதிரிகளுடன் கைகோர்த்த உன்னைக் காதலித்த பாவத்தை அவள் எப்போது எங்கு கழுவப் போகிறாளோ?” எனக் கூறியவர் மேற்கொண்டு எதையும் கூற சக்தியற்றவராய் மீண்டும் அங்கிருந்து விடுவிடுவென நடக்கலானார்.

அடிகளார் கூறியதைக் கேட்டு பெரும் அதிர்ச்சியும், அவமானமும் அடைந்த காளன், “அடிகளே! நில்லுங்கள்!” எனக் கூறியபடியே அவர் முன் ஓடி நின்றான். அடிகளாரைத் தவிரத் தான் கூறுவதைக் கேட்க யாரும் அங்கு இல்லை என்பதை உறுதிசெய்து கொண்ட காளன் இரகசியமாக அவர் காதில் ஏதோ கூற ஆரம்பித்தான். அவன் கூறியதைக் கேட்க கேட்க அடிகளாரின் முகம் மலரத் தொடங்கியது. மலர்ந்த முகத்துடன் அடிகளார், “தம்பி! நீ கூறுவதெல்லாம்?” எனக் கேட்ட போதே இடைமறித்த காளன் “உண்மை தான் அடிகளே! அதில் தங்களுக்கு எந்த சந்தேகமும் வேண்டாம்!” எனப் பதிலளித்தான்.

காளன் கூறியதைக் கேட்டு அதிர்ச்சியிலிருந்தும், திகைப்பிலிருந்தும் மீளாத அடிகளார் வேளாதன் நிற்க, ‘‘அடிகளே! வாழ்வின் அனைத்து சுகபோகங்களையும் துறந்து துறவியாகச் செல்லும் நேரத்தில் தங்களுக்கு எந்த மனக்குறையும் இருக்கக் கூடாது என எண்ணியே யாருக்கும் தெரியக் கூடாத பெரும் இரகசியத்தைத் தங்களுக்குத் தெரிவித்தேன். தப்பித் தவறி அருக தேவனிடம் கூடத் தெரிவித்துவிடாதீர்கள்! இனி தங்களுக்கு தங்கள் மகளைப் பற்றிய கவலை வேண்டாம்! நான் கள்வனாக இருந்த போதே அவள் என்னை விரும்பியவள். ஒரு நாளும் அவள் கண் கலங்கும்படி நான் விட்டுவிட மாட்டேன்! வளவனைப் பற்றிய கவலையையும் விட்டுவிடுங்கள்! இனி தாங்கள் மகிழ்ச்சியுடன் தங்கள் பயணத்தை மேற்கொள்ளலாம்’’ எனக்கூற வேளாதனும் பெரும் மகிழ்ச்சியுடன் தனது மகளைப் பற்றிய கவலையை விடுத்துச் செல்லலானார்.

இருங்கோவேளின் மகனுக்கு யுவராஜன் பட்டம் சூட்டிய பிறகு சில உபதளபதிகளை துணைக்கு அழைத்துக்கொண்டவன் உறையூரிலிருந்து கருவூர் வஞ்சி மாநகரத்திற்கு சேரமான் இருங்கோவேளைச் சந்தித்து வாழ்த்துபெற வந்திருந்தான். யுவராஜன் பெருஞ்சேரலாதனைச் சந்திக்க அரண்மனைக்குள் சென்றுவிட்ட அதே நேரத்தில் காளன் வஞ்சி மாநகரத்தை சுற்றிப்பார்த்துக் கொண்டிருந்தான். அந்த நகரின் பலம் எது? பலவீனம் எது? அந்நகரைக் கைப்பற்ற வேண்டுமெனில் எப்படித் தாக்கினால் வெற்றிபெறலாம் எனப் பார்வையால் ஆராய்ந்துகொண்டே சென்றுகொண்டிருந்த நேரத்தில் தான் சமணப் பள்ளியில் பெருவணிகன் வேளாதனைக் கண்டான்.

காளன் சமணப் பள்ளிக்குச் செல்ல காரணம் இல்லாமல் இல்லை. ஏனெனில் ஒரு நகரின் வலிமை என்னென்ன? பலவீனம் என்னென்ன? ஆபத்து காலங்களில் தப்பிக்கும் சுரங்கப் பாதை எங்கெங்கு இருக்கிறது? என்பதனை அங்கிருக்கும் சமயப் பெரியோர்கள் நிச்சயம் அறிந்திருப்பார்கள். தனக்குத் தெரிந்த திகம்பர அடிகளாரைக் காணத்தான் சமணப் பள்ளிக்குச் சென்றிருந்தான் காளன். அங்குதான் வேளாதனைக் கண்டு அதிர்ச்சியடைந்தவன், அவரைப் பற்றி திகம்பரரிடம் கேட்டுப் புகாரில் நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் அறிந்துகொண்டான். அதன்பிறகே பெருவணிகர்

வேளாதனைச் சந்தித்து அவர் மகிழ்ச்சியாகத் துறவறம் மேற்கொள்ளும்பொருட்டு தான் யாரென்ற உண்மையைக் கூறினான்.

அரண்மனைக்குள் சென்ற யுவராஜன் சேரமான் பெருஞ்சேரலாதனைச் சந்தித்து ஆசி பெற்றுவிட்டுத் தான் வசிக்கும் மாளிகையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது இரு பெண்கள் வேகமாக புரவித் தேரில் செல்வதைப் பார்த்தவன், தனக்குத் துணையாக வந்த வேந்தனிடம், “அவர்கள் யார் வேந்தா? சோழ தேசத்துப் பெண்களைப் போன்று தோன்றுகிறார்களே? அவர்களுக்கு இங்கு கருவூரில் என்ன வேலை?” என வினவினான்.

“இளவரசே! அவர்கள் புகாரைச் சேர்ந்தவர்கள்!”

“புகாரைச் சேர்ந்தவர்களா?”

“ஆம்!”

“பேரழகிகளைப் போன்று தோன்றுகிறார்களே? யார் அவர்கள்?” எனப் பெரும் ஆவலோடு கேட்டான்.

“தங்கள் தந்தை உங்களுக்குப் பெண் பார்த்து வைத்திருக்கிறாரே? அப்பெண்ணை நீங்கள் இதற்கு முன் சந்தித்திருக்கிறீர்களா?”

“யாரைக் கேட்கிறாய் வேந்தா?”

“பெருமறவர் மகேந்திர வளவனாரின் மகளைப் பற்றித்தான் கூறுகிறேன் இளவரசே!”

“யார்? வானவல்லியைப் பற்றித்தான் குறிப்பிடுகிறாயா?”

“ஆமாம்!”

“அவள் அழகைப் பற்றி கேள்விப்பட்டுள்ளேன்! ஆனால், நேரில் பார்த்ததில்லை.”

“இன்று சந்திக்கப் போகிறீர்கள்!”

“இன்றா?”

“ஆமாம்!” சிரித்துக்கொண்டே கூறினான் வேந்தன்.

“வேந்தா, பீடிகைப் போட்டு பேசியது போதும். இன்று நான் வானவல்லியைச் சந்திப்பேனா? எப்படி?” பெரும் ஆர்வத்துடன் கேட்டான்.

“புரவித்தேரில் செல்லும் இரு பெண்கள் யார் என்று கேட்டீர்களே? புரவித் தேரில் சென்றது வானவல்லியும் அவளது தோழியும் தான்!” என வேந்தன் கூற யுவராஜனின் எதிர்பார்ப்பும், ஆவலும் அதிகமானது. உடனே அங்கிருந்த தனது வீரர்களை அழைத்த யுவராஜன், “இதோ சற்று முன் இரு பெண்கள் சென்றார்கள் அல்லவா? அவர்களை யுவராஜன் தங்களை விருந்தினராக அழைத்திருக்கிறார் எனக் கூறி நமது விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் சென்று சிறை வையுங்கள்! சிறை என்றால் கடுங்காவல் அல்ல! வீட்டுச் சிறை! மாளிகையில் அனைத்து வசதிகளையும் செய்து கொடுங்கள்! ஆனால், அவர்கள் என் அனுமதியின்றி அங்கிருந்து வெளியேறக் கூடாது!” எனக் கட்டளையிட்டு தனது இலச்சினைப் பதக்கத்தையும் கொடுத்து அனுப்பினான்.

யுவராஜனின் திடீர் கட்டளையைக் கேட்டுத் திகைத்த வேந்தன், “இளவரசே! நீங்கள் செய்வது பெரும் பிழை. அப்பெண்ணைத்தான் உங்களுக்கு மணமுடிக்க உங்கள் தந்தை திட்டம் வகுத்திருக்கிறார். இந்நேரத்தில் நீங்கள் அப்பெண்ணைச் சிறை வைக்க முயல்வது பெரும் சங்கடத்திற்கு வழிவகுத்துவிடும்!”

“வேந்தா, நீ நாளை நடக்கப் போவதைப் பற்றிப் பேசுகிறாய்! நான் இன்று நடக்க வேண்டியதைப் பற்றிச் சிந்திக்கிறேன். புகார்த் தலைவனாக பொறுப்பேற்கச் சென்றபோது செங்குவீரனால் ஏற்பட்ட அவமானத்தை என்னால் இன்னும் மறக்க இயலவில்லை! செங்குவீரன் காதலிக்கும் பெண் இவள்தானே! இவளைச் சிறைவைக்கப் போகிறேன். முடிந்தால் செங்குவீரன் வந்து மீட்டுவிட்டுப் போகட்டும்!”

“செங்குவீரன் தான் மாளிகையிலே வளவனோடு எரிந்துபோய் விட்டானே! அவனைப் பழிவாங்கும் நேரம் இதுவல்ல இளவரசே!”

வேந்தன் கூறியதைக் கேட்டுச் சிந்தித்த யுவராஜன், “சரி! நான் மணக்கப் போகும் பெண்ணிற்கு இரு நாள் விருந்தளித்து அனுப்புகிறேன்! அதில் பிழை இல்லையே!” எனக் கூறிக்கொண்டு அங்கிருந்துப் புறப்பட்டான்.

புரவித்தேரில் வேகமாகச் சென்றது வானவல்லியும், பத்திரைத் தேவியும் தான். தனது தந்தை துறவறம் மேற்கொண்டதற்கு தான் தான் காரணம் என எண்ணிய பத்திரைத் தேவி உணவுண்ணாமல் வருந்திக்கொண்டிருந்தாள். பத்திரையின் துயரைக் கண்டு வருந்திய வானவல்லி இதற்கு தீர்வு காணவேண்டி அடிகளார் ஈழவாவிரையரின் உதவியை நாடினாள்.

துறவறம் மேற்கொள்ள விரும்பிய வேளாதனைத் தான் வஞ்சிமா நகருக்கு அனுப்பி வைத்ததைக் கூற உடனே பத்திரையை அழைத்துக்கொண்டு வானவல்லி வஞ்சியை நோக்கிப் பயணத்தைத் தொடங்கிவிட்டாள்.

சமணப் பள்ளிகளுக்குள் பெண்கள் நுழைய முழு கட்டுப்பாடு இருந்ததால் வெளியில் நின்றபடியே வேளாதனை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். அவர்களைக் கண்ட சமணப் பள்ளியின் தலைவர் விசாரித்துப் புகாரிலிருந்து வந்த வேளாதன் துறவறத்தை மேற்கொண்டு யாத்திரையைத் தொடங்கிவிட்டதாகக் கூற இருவருக்கும் பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டது. புகாரிலிருந்து வஞ்சி சென்ற இரு வஞ்சிக் கொடிகளும் பெரும் துயரத்திற்கு ஆளாகினர். ஏமாற்றமும், பயண சோர்வும் அவர்களைப் பீடிக்க ஓய்வெடுத்த பிறகே புகாருக்குக் கிளம்ப இயலும் என நினைத்துக்கொண்டிருந்த நேரத்தில் தான் அவர்களைச் சந்தித்த சோழக் காவல் வீரர்கள், “தங்களை அழைத்துச் சென்று மாளிகையில் தங்கவைத்து உபசரிக்கச் சொல்லி யுவராஜன் கட்டளையிட்டுள்ளார்!” எனத் தெரிவித்தனர்.

அவர்கள் கூறியதைக் கேட்டுத் திகைப்படைந்த வானவல்லி, “யுவராஜனா? சேர நாட்டு யுவராஜனுக்கு எங்களை எப்படித் தெரியும்?” என வினவினாள்.

“தங்களை உபசரிக்கச் சொன்னது சேர இளவரசர் அல்ல! சோழ நாட்டு இளவரசர்” எனத் தெரிவித்து இலச்சினைப் பதக்கத்தையும் காட்டினர்.

அவர்கள் காட்டிய இலச்சினையை வாங்கிப் பரிசோதித்த வானவல்லி அது நிச்சயம் சோழ இளவல் கரிகாலனுடையது தான் என எண்ணிப் பெரிதும் மகிழ்ந்து அவர்களுடன் பத்திரைத் தேவியை

அழைத்துக்கொண்டு புறப்பட்டாள். பொன்னி நதியில் குதித்த கரிகாலனுக்கு என்ன நேர்ந்தது என எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த வானவல்லி கரிகாலன் சேரர் தலைநகர் வஞ்சிக்கு வந்து பாதுகாப்பாக இருக்கிறார் எனநினைத்து பெரிதும் நிம்மதியடைந்தாள். இளவலைச் சந்திக்கப் போகும் ஆர்வத்தில் வேளாதனைச் சந்திக்க இயலாததைக் கூட மறந்துபோயிருந்தாள்!

வஞ்சியில் அமைக்கப்பட்டிருந்த சோழர்களின் விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இரு பெண்களுக்கும் பெரும் உபசரிப்பு கிடைத்தது! அங்கு கிடைத்த வரவேற்பையும், உபசரிப்பையும் கண்ட வானவல்லி பெரும் ஆச்சர்யம் அடைந்தாள். சோழ இளவல் கரிகாலனிடத்தில் தனக்கு எவ்வளவு பெரிய மரியாதையா என எண்ணிப் பெருமை கொள்ளவும் செய்தாள். நடக்கும் நிகழ்வுகள் எதுவுமே புரியாத பத்திரைத் தேவி குழம்பி நிற்க அவளிடம் அனைத்தையும் எடுத்துரைத்தாள் வானவல்லி. பிறகு பத்திரையும் மகிழ்ந்தாள். மாளிகைக்குள்ளே அடைபட்டுக் கிடப்பதைப் போல உணர்ந்த இரு பெண்களும் வஞ்சி நகரத்தை சுற்றிப் பார்க்கலாம் என எண்ணி வெளியே புறப்பட்டனர். அவர்களுக்கு வெளியே செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. அப்போதுதான் வானவல்லிக்குச் சந்தேகம் உதித்தது!

அந்த மாளிகைத் தலைவரை அழைத்த வானவல்லி நடந்ததைக் கூறி, “உடனே, நான் இளவரசரை சந்திக்க வேண்டும்!” எனத் தெரிவித்தாள்.

அதற்கு மாளிகைத் தலைவர், “பொழுது சாய்வதற்கு முன்பு யுவராஜரே தங்களை சந்திப்பதாக செய்தி அனுப்பியுள்ளார். அதுவரை பொறுத்திருங்கள் தேவி!” எனப் பணிந்தார்.

அவர் கூறியதைக் கேட்ட வானவல்லி ஏமாற்றத்துடன் திரும்பி இளவலைக் காணப்போகும் ஆர்வத்தில் செல்லலானாள்.

மாளிகையில் சிறை வைக்கப்பட்டிருப்பதை உணர்ந்திராத வானவல்லி குழப்பத்துடன் இருந்தபோது வானவல்லியிடம் ஓடி வந்த பணிப்பெண், “யுவராஜர் தங்களைச் சந்திக்கக் காத்திருக்கிறார்!” எனத் தெரிவித்துவிட்டு மறுமொழியைக் கூட எதிர்பாராமல் திரும்பிச் சென்றாள்.

பணிப்பெண் கூறியதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்த வானவல்லி கரிகாலனைக் காணப் போகும் பேரார்வத்தில் சென்றவளுக்குப் ஏமாற்றமே மிஞ்சியது! கரிகாலனுக்குப் பதில் இருங்கோவேளின் மகன் அங்கு நின்றுகொண்டிருந்தான்.

அவனை முன்பின் சந்தித்திராத வானவல்லி குழம்பி நின்றாள். அவள் செய்வதறியாது குழம்பி நிற்பதைக் கண்ட யுவராஜன், "தேவி! உபசரிப்புகளில் தங்களுக்குத் திருப்திதானே?" என அவளது அழகிய முகத்திலிருந்து பார்வையை விலக்காதவனாய் வினவினான்.

அவனது கேள்விக்குப் பதிலளிக்காத வானவல்லி, "நீ யார்?" என வினவினாள்.

"நான் யாரா? என்னைத் தங்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை தேவி! ஆனால் தங்கள் தந்தை என்னை நன்றாக அறிவார்?"

தன்னை அவன் தேவி என அழைப்பதைக் கேட்டு கடும் சினம் கொண்ட வானவல்லி, "இனியொரு முறை என்னை நீ தேவி என அழைக்காதே! அப்படி அழைத்தால் அதற்கான விளைவை நீ அடைந்தே திருவாய்! எங்களை எதற்கு சிறை வைத்துள்ளாய்? நீ யார் எனக் குறிப்பிடப் போகிறாயா? இல்லையா?" மரியாதையின்றி ஒருமையாகக் கேள்வியெழுப்பினாள்.

வானவல்லி மரியாதையின்றி அழைப்பதைக் கேட்டு கோபம் கொள்ளாமல் சிரித்தபடியே, "தேவி, என்னைப்பற்றி வளவனார் எதுவும் தங்களிடம் தெரிவிக்கவில்லையா?" என்றான்.

"அவர் எதற்கு உன்னைப் பற்றி என்னிடம் கூற வேண்டும்?"

"காரணம் இருக்கிறது!"

"என்ன காரணம்?"

"தங்களை மணக்கப் போகிறவன் நான் தானே!"

அவன் கூறியதைக் கேட்டு எரிச்சல் அடைந்த வானவல்லி உப தலைவன் மீதிருந்த கோபத்தினால் அன்று தந்தை தனது திருமணத்தைப்

பற்றி பேசிய போது தாங்கள் எந்த முடிவெடுத்தாலும் அதற்கு நான் கட்டுப்படுவேன் எனத் தெரிவித்த தனது பதிலை நினைத்து வருந்தினாள். மாற்றான் முன்பு தனது வருத்தத்தை வெளிப்படுத்த விரும்பாத வானவல்லி, “நீ என்னை மணக்கப் போகிறாயா? நினைப்புதான்!” எனக் கூறியபடியே அவனைக் கண்டு ஏளனமாகச் சிரித்தாள்.

வானவல்லியின் ஏளனச் சிரிப்பினால் கோபமடைந்தவன், “பெண்ணே நீ சிரிப்பதற்குக் காரணம் உப தலைவன் செங்குவீரன் தானே! அவன் வந்து உன்னை மீட்டுப் போவான் எனக் கனவிலும் எண்ணாதே! அவன் இறந்து சில தினங்கள் ஆகப்போகிறது. அவனை மறந்துவிடு!” என ஆத்திரத்துடன் கூறினான்.

உப தலைவன் செங்குவீரன் இறந்துவிட்டான் எனக் கேட்டபோது ஒரு கணம் வானவல்லி அதிர்ந்துவிட்டாள். கணப் பொழுதில் சோகம் அவளைச் சூழ்ந்துகொண்டது. உடல் நடுங்கியது. உலகம் சுழல்வதைப் போன்று உணர்ந்தாள். உறைந்தையிலிருந்து புகார் சென்றபிறகு செங்குவீரனைச் சந்திக்கப் பலவாறு முயன்றாள் வானவல்லி. உப தலைவனைச் சந்திக்கவே இயலவில்லை. அவனைப் பற்றிய செய்திகள் அவனது உபதளபதிகளுக்குக் கூடத் தெரிந்திருக்கவில்லை. மரகதவல்லியின் வீட்டிலிருந்து மறைந்தவன் மீண்டும் தென்படவே இல்லை. ஆதலால் உறைந்தையில் ஒருவேளை எதிரிகள் சூழ்ந்து மர்மமாக அவனைக் கொன்றிருப்பார்களோ என எண்ணியவளின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. கன்னத்தில் வழிந்த கண்ணீர்த் துளிகளைத் துடைத்தபடியே வானவல்லி, “என்ன கூறுகிறாய் நீ? அவர் இறந்துவிட்டாரா?” நா தழுதழுத்த படியே வினவினாள்.

“ஆமாம்! அவன் இறந்துவிட்டான்! இறந்தது அவன் மட்டுமல்ல?”

“அப்புறம் யார்?”

“இளஞ்சேட்சென்னியின் மகன் வளவனும் தான்!”

இந்த முறை அவன் கூறியதைக் கேட்டவளுக்கு மூர்ச்சையே வந்துவிடும் போலிருந்தது! பொன்னி நதியில் குதித்த வளவன் எதிரிகளிடம்

சிக்கிவிட்டாரா? என எண்ணியவளின் மனம் சுக்கு நூறாக உடைந்தது.

வானவல்லி அதிர்ச்சியடைந்து நிற்பதைக் கண்டவன், ‘‘இரும்பிடர்த்தலையனின் இரு பெரும் நம்பிக்கைகளான வளவனும், செங்குவீரனும் மாளிகையில் உயிரோடு எரிந்துபோனார்கள்! அவர்கள் யாரும் உனக்கு உதவப்போவதில்லை!’’ என்றபடியே சிரிக்கலானான்.

மூர்ச்சையடையும் நிலையில் நின்றதால் அவன் கூறியதை நன்றாக கேட்காத வானவல்லி, ‘‘என்ன கூறினாய், திரும்பக் கூறு!’’ என்றாள்.

‘‘திரும்பவும் என்ன நூறு முறை கேட்டாலும் சலிக்காமல் கூறுவேன்! எங்கள் எதிரிகள் இருவரையும் மாளிகையிலே உயிரோடு எரித்துவிட்டோம்!’’ என்றான்.

மாளிகையில் எரிந்துபோனார்கள் எனக் கூறியதைக் கேட்டபிறகுதான் சென்ற உயிர் திரும்பி வந்தது வானவல்லிக்கு! வளவனைக் காப்பாற்றிக்கொண்டு செங்குவீரன் மரகதவல்லியின் வீட்டிற்கு வந்ததும், வளவனுக்கு அவள் மருத்துவம் அளித்துக் காப்பாற்றிய நிகழ்வுகளும் மனத்திரையில் தோன்றி அவளுக்குப் பெரும் ஆறுதல் அளித்தது! செங்குவீரனும், வளவனும் நிச்சயம் எங்கோ உயிரோடுதான் இருக்கிறர்கள்! அவர்கள் தப்பியது இந்த மூடனுக்குத் தெரியாது! என நினைத்த வானவல்லி சிறிது உற்சாகம் கொண்டு, ‘‘மூடனே! அவர்கள் இறந்துவிட்டதாக கூறுகிறாயே! நீ யார் என்று இன்னும் கூற வில்லையே?’’ எனப் பெரும் மரியாதையுடன் வினவினாள்.

வானவல்லி மூடன் என அழைத்ததைக் கண்டு கோபம் கொண்டவன், ‘‘மூடனா, மரியாதையாகப் பேசு?’’ என்றான்.

‘‘ஆமாம்! உயிரோடு இருப்பவர்களை இறந்துவிட்டதாகக் கூறுபவனை மூடன் எனக் கூறாமல் வேறு எப்படி அழைப்பதாம்!’’

‘‘என்ன? செங்குவீரனும், வளவனும் உயிரோடு இருக்கிறார்களா?’’ என ஆச்சர்யத்தோடும், திகைப்போடும் வினவினான்!

வாய் தவறி உண்மையைக் கூறிய தனது மடத்தனத்தை எண்ணி வருந்தியவள், இருவரும் உயிரோடு இருப்பது இவர்களுக்குத் தெரிந்தால்

அவர்களுக்குப் பெரும் ஆபத்து நேரும் என்பதை உணர்ந்த வானவல்லி, ‘‘வளவன் மற்றும் செங்குவீரன் இருவரும் ஒருநாளும் மக்கள் மனதிலிருந்து அழியமாட்டார்கள்! மக்கள் மனதில் எப்போதும் உயிருடன் இருப்பார்கள்!’’ எனக்கூறி சமாளிக்க முயன்றாள்.

‘‘ஓ! நீ அதைக் கூறினாயா?’’

‘‘ஆமாம்!’’

இருவருக்குமிடையில் அமைதி நிலவ அவ்விடத்திற்கு பத்திரைத் தேவியும் இளவலைச் சந்திக்கும் ஆர்வத்தில் வந்து சேர்ந்து ஏமாற்றம் அடைந்தவள், ‘‘யார் வானவல்லி இவர்?’’ என வினவினாள்.

பத்திரைத் தேவி கூறியதைக் கேட்டும் ஏதும் பேசாமல் நின்றவனைப் பார்த்த வானவல்லி, ‘‘நீ யாரென்று கேட்கிறாள் அல்லவா? நீயே கூறிவிடு!’’ என்றாள்.

அதைக்கேட்டவன், ‘‘நான் தான் சோழ தேச யுவராஜன்!’’ என்றான்.

யுவராஜன் என்ற சொல் இருவருக்குமே குழப்பத்தை ஏற்படுத்த ‘‘உனக்கு என்ன பைத்தயமா?’’ என வாய்விட்டே கேட்டுவிட்டாள் வானவல்லி.

‘‘வானவல்லி, வார்த்தை நீள்கிறது! எச்சரிக்கை!’’ என மிரட்டினான்.

‘‘ஆமாம்! நீ கூறுவதையும், உனது செயலையும் பார்த்தால் நீ பைத்தியம் எனத் தான் நினைக்கத் தோன்றுகிறது. சாலையில் சென்ற எங்களை வீணாக சிறைப்படுத்தியுள்ளாய். காரணம் கேட்டால் என்னை மணக்கப் போகிறவன் நீ என்கிறாய்! நீ யார் எனக் கேட்டால் சோழ தேச யுவராஜன் என்கிறாய்! இவை அனைத்தையும் எப்படி நினைப்பதாம்? நீ பெரும் புத்திசாலி என்றா?’’

இதைக்கேட்டவனுக்குக் கோபம் தலைக்கேற, ‘‘பெண்ணே! நீ உனது எல்லையை மீறுகிறாய்! நான் சோழ மாமன்னன் இருங்கோவேளின் மகன். யுவராஜனாக முடிசூட்டிக் கொண்டவன். எனது தந்தை உன் தந்தையிடம் கூறியதைப் போல உன்னை மணக்கப் போகிறவனும் நான் தான்! அனைத்தையும் நினைவில் வைத்துப் பேசு. நாளை வருந்திப் பயன் இல்லை.’’

தன்னை சிறைப்படுத்தி வைத்துள்ளவன் செங்குவீரனின் பரம எதிரி எனப் புரிந்துகொண்ட வானவல்லி தான் எப்பேர்பட்ட ஆபத்தில் சிக்கிக் கொண்டுள்ளோம் எனவும் அறிந்துகொண்டாள். இப்போது பதிலுக்குப் பேசுவதில் பயன் இல்லை என அவள் எண்ணினாலும் அவன் மீண்டும் மீண்டும் உன்னை மணக்கப் போகிறவன் நான்தான் எனக் கூறுவதைக் கேட்டுப் பெரும் அருவருப்பும், ஆத்திரமும் கொண்டவள், ‘‘மூடனே இன்னொருமுறை என்னை மணக்கப் போகிறவன் நீ எனக் கனவிலும் கூறாதே! சிறைப்படுத்திவிட்டாய் என்பதற்காக நீ கூறுவதையெல்லாம் என்னால் பொறுத்துக்கொள்ள இயலாது! எங்களை சிறைப்படுத்தியமைக்கான பயனை நீ விரைவில் அடைவாய்! எங்களை விட்டுவிடு. இல்லையேல்....’’ எனக் கூறிய போதே இடைமறித்த யுவராஜன், ‘‘பெண்ணே, இங்கிருந்து செல்லலாம் எனக் கனவிலும் நினைக்காதே! அப்படி சென்றால் எனது பட்டத்தரசியாகத்தான் நீ செல்ல இயலும்!’’ எனக் கூறியவன் மாளிகைக் காவலை அதிகப்படுத்திவிட்டு அங்கிருந்து ஆத்திரத்துடனும், ஏமாற்றத்துடனும் செல்லலானான்.

அவன் கூறியதைக் கேட்ட வானவல்லியும், பத்திரைத் தேவியும் மேற்கொண்டு என்ன செய்வதென்றுத் தெரியாமல் ஒருவரது முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு பரிதாபத்துடன் நின்றுகொண்டிருந்தனர்.

**அடிக்குறிப்பு:**

1. சங்க கால சேரர்களின் தலைநகரான வஞ்சி மாநகரம் என்பது ஆன்பொருநை (அமராவதி) நதியின் கரையில் உள்ள கருவூர் (இப்போது கரூர்) என்றும் பெரியாற்றின் கரையில் இருக்கும் கரூர்ப் பட்டினம் என்றும் இருவேறு கருத்துகள் ஆய்வாளர்களுக்கிடையில் காணப்படுகிறது. நமது கதையில் சேரர்களின் வஞ்சிமா நகர் என்பது மு.இராகவயங்கர் எழுதிய வஞ்சி மாநகர் என்ற நூலில் குரிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று திருச்சிக்கு அருகில் நான்கு காத தொலைவில் அமராவதி நதிக்கரையில் அமைந்திருக்கும் கரூர் பட்டினமே சேரர்களின் வஞ்சிமா நகர் எனக் கொள்வோம்.

பாற்கரபுரம், பாற்கரக்ஷேத்திரம், வஞ்சுலபுரம், கோநகர், கோவூர், ஆனூர் எனக் குறிப்பிடப்படுவதும் இந்த வஞ்சி மாநகர் தான்.

# 44. வே ளக்காரப் படைத்தலைவன்

பொழுது மெல்ல புலர ஆரம்பித்தது! திருமாலின் சுதர்சன சக்கரம் சுழல்வதைப் போன்று உக்கிரமாகக் காணப்பட்ட பரிதி கீழ் வானத்தில் உதிக்க, திட்டு திட்டாய் திரண்டிருந்த மேகக்கூட்டங்கள் அனைத்தும் செக்கச் செவேரென சிவந்து போர்க்களத்தில் படிந்திருக்கும் குருதிக் கறைகளைப் போன்று காணப்பட்டது. வேனிற்கால மாதமானதால் கிழக்கு வானில் உதித்த பரிதி சிறிது நேரத்திற்கெல்லாம் வஞ்சி மாநகரம் மீது அனலைக் கக்க ஆரம்பித்தது. தடாகத்தில் சோகத்துடன் அமர்ந்த படியே இதனைக் கண்ட வானவல்லியின் கண்களும் பரிதியைப் போன்றே சிவந்து கோபக்கனல் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

தடாகத்தில் காணப்பட்ட தாழம்புதர்கள் சில தினங்களுக்கு முன்பு வானில் கருத்த கார்மேகங்களில் தோன்றிய மின்னல் கீற்றினால் பூத்திருந்தது. தடாகக் கரை முழுக்க பூத்திருந்த தாழை மலர்கள் மற்றும் முல்லைப் பூக்களிலிருந்து நறுமணம் ‘கம்’மென்று வெளிப்பட்டாலும் அதில் தனது கவனத்தைச் செலுத்தாத வானவல்லி மீள வழி தெரியாத சிறையில் அகப்பட்டுக் கொண்டோமே என எண்ணி வருந்தி தப்பிக்கும் மார்க்கம் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

காலைப் பொழுதில் வீசிய குளிர்ந்த தென்றலினால் உருவான தடாகத்தின் நீர் அலைகளில் பரிதியின் செங்கதிர்கள் விழுந்து எதிரொலித்துக் கொண்டிருந்ததைக் கண்ட வானவல்லிக்குத் திடீரென வானில் தோன்றும் வானவில்லைப் போன்று காரணமில்லாமல் தோன்றும் ஆசிவகக் கடவுளான மற்கலித் தெய்வத்தின் நினைவு வர சில தினங்களுக்கு முன்பு ஆசிவகப் பெரியவர், “தாயே! இனிவரும் காலம் உனக்கு பெரும் கடின காலம். எச்சரிக்கையா இரு!” என எச்சரித்தாரே, அவர் கூறிய கடின காலம்

இதுதானா? இந்தச் சிறையிலிருந்து நான் எப்படித் தப்பிக்கப் போகிறேன்! நான் வஞ்சியில் சிறைப்பட்டுக் கிடக்கும் செய்தி புகாரில் இருப்பவர்கள் எப்படித் தெரிந்துகொள்வார்கள்? அவர்கள் எப்படி எங்களைச் சிறை மீட்பார்கள் எனச் சிந்தித்தபடியே மாளிகைக்குள் வந்து பத்திரைத் தேவியுடன் அமர்ந்துகொண்டாள். பத்திரைத் தேவிக்கு உள்ளுக்குள் சோகமும், அச்சமும் காணப்பட்டாலும் வானவல்லி தன்னுடன் இருக்கும் வரை தனக்கு எந்த துன்பமும் நேர்ந்துவிடாது எனப் பெரும் தைரியத்தில் சோகமின்றி காணப்பட்டாள். என்ன செய்து இங்கிருந்து தப்பிப்பது என அறையில் சிந்தித்துக்கொண்டிருந்த நேரத்தில் மாளிகைக்குள் யாரோ சிலர் நுழையும் சத்தம் கேட்க பத்திரையை அறையிலேயே விட்டுவிட்டு படிக்கட்டு வழியே கீழே விரைந்தாள் வானவல்லி.

மரப் படிக்கட்டில் இறங்கி வந்தபோதே மாளிகை முகப்பு அறையில் நின்றுகொண்டிருந்த காளன் மற்றும் வில்லவனைக் கண்டுவிட்ட வானவல்லிக்கு பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. அதிலும் காளன் உப தலைவனுக்குரிய சீருடையில் நின்றது அவளது மனதில் பெரும் அதிர்ச்சி அலைகளை உருவாக்கிவிட்டுச் சென்றது! படிக்கட்டில் யாரோ பெண் இறங்கி வரும் சிலம்புச் சத்தத்தைக் கேட்டுத் திரும்பிய இருவரும் வானவல்லியைக் கண்ட நேரத்தில் திகைத்து நின்றனர். இரு தரப்பினருமே ஒருவரை ஒருவர் கண்டு அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றுகொண்டிருந்தனர்.

காளன் மற்றும் வில்லவனைக் கண்ட மறுகணமே வானவல்லிக்கு சம்பாபதி வனத்தில் தன்னைச் சிறை செய்ய முயன்ற கள்வர்கள் இவர்கள் தானே? என்ற சிந்தனை தோன்ற அவளது மனம் சொல்லொனாத் துயரமும், அதிர்ச்சியையும் அடைந்தது! அதிலும் காளன் உப தளபதியாக அங்கு நின்றதைக் கண்ட வானவல்லி, இவர்கள் இருவரும் நிச்சயம் இருங்கோவேளின் கைப்பாவையாகத் தான் இருக்க வேண்டும். சம்பாபதி வனத்தில் திட்டம் போட்டுத் தான் தன்னைக் கவர முயற்சித்திருக்கிறார்கள் என்ற நினைப்பு தோன்ற தான் எப்பேற்பட்ட ஆபத்தில் சிக்கிக் கொண்டோம் என எண்ணியவளுக்கு மூர்ச்சையே வந்துவிடும் போலிருந்தது! பத்திரைத் தேவி பெரும் நம்பிக்கையுடன் விரும்புவது இருங்கோவேளிடம் தஞ்சம் கொண்ட இந்தத் துரோகியையா என நினைத்தவளுக்கு தனது தோழி மீது கடும்

கோபம் வந்துகொண்டிருந்தது! கடும் சிரமப்பட்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட வானவல்லி நிதானத்துடனே நடந்து சென்று இருவரின் முன் நின்றாள்.

யாரோ இரு சோழ நாட்டுப் பெண்களை யுவராஜன் சிறைப்படுத்தியுள்ளான். அதனால் யுவராஜனுக்கும் வேந்தனுக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட வேந்தன் ஆத்திரத்தோடு உறைந்தைக் கிளம்பி சென்றுவிட்டான் எனக் கேள்விப்பட்ட காளனும், வில்லவனும் சிறை வைக்கப்பட்டுள்ளவர்கள் யார் என அறிந்துகொள்ள மாளிகைக்கு வந்திருந்தனர். இருவருமே வானவல்லியை அங்கு எதிர்பார்த்திருக்கவில்லை! அவளைக் கண்ட இருவருமே அதிர்ச்சியில் உறைந்து நின்றார்கள்! அவளைச் சூழ்ந்துகொண்ட ஆபத்தை எண்ணியவர்கள் அக்கணம் என்ன செய்து தப்பச் செய்யலாம் என சிந்தித்தார்கள்!

அமைதியாக நடந்து வந்து நின்ற வானவல்லி காளனிடம், ‘‘சம்பாபதி வனத்தில் முயன்று இயலாததை ஒரு வழியாக கருவூர் வஞ்சி மா நகரில் சாதித்துவிட்டீர்கள்!’’ எனக் காளனின் கண்களில் தனது பார்வையை நிலைநாட்டியபடியே கேட்கலானாள்.

காளன் குழப்பத்துடனே, ‘‘எதைப் பற்றி....’’ எனப் பேசிக்கொண்டிருக்கும் போதே குறுக்கிட்ட வானவல்லி, ‘‘எங்களைக் கவரலாம் என முயன்றீர்களே! அதைத்தான் குறிப்பிடுகிறேன்!’’ என ஆத்திரத்துடன் பதிலளித்தாள்.

‘‘எங்களை என்றால்?’’

‘‘என்னையும், பத்திரையையும் தான் குறிப்பிடுகிறேன்!’’

‘‘பத்திரையும் இங்கு தான் இருக்கிறாளா?’’

‘‘ஏன் இந்தக் கேள்வி? அவளை இங்கு நீ எதிர்பார்க்கவில்லையா? உன் வேடம் இன்றே களையப் போகிறது கள்வனே! கள்வன் வேடத்தில் சுற்றிய இருங்கோ வேளின் ஒற்றன் நீ என்பதை அவளும் அறிந்துகொள்ளட்டும்! உன்னை நம்பி அவளது தந்தையைக் கூட எதிர்த்து

துறவறம் மேற்கொள்ள வைத்து விட்டாள்! அவள் பாவம்! உன்னை நம்பியவள் நிர்கதியற்று நிற்கப்போகிறாள்!''

''சகோதரி, அப்படிக் கூறாதீர்கள்!''

''சகோதரியா?'' வானவல்லியிடமிருந்து சொற்கள் ஏளனமாக வெளிப்பட்டன.

''ஆமாம்!''

''இனியொரு முறை என்னைச் சகோதரி என அழைக்காதே! அந்தத் தகுதி உமக்கு இல்லை!''

வானவல்லி கூறியதைப் பற்றி செவி மடுக்காத காளன் தனது நண்பன் வில்லவனிடம், ''வில்லவா! இப்பெண்ணை பெரும் ஆபத்து சூழ்ந்திருக்கிறது! இவள் இங்கிருந்தால் விரும்பத்தகாத நிகழ்வுகள் அரங்கேறிவிடும்! உடனே வானவல்லியை அழைத்துக்கொண்டு போய் புகாரில் சேர்ப்பித்துவிடு!'' என ஆணையிட்டுக்கொண்டிருக்கும் போதே வானவல்லி, ''நிறுத்துங்கள் உங்கள் நாடகத்தை! கயவர்களின் உதவி எனக்குத் தேவையில்லை!'' என வெகுண்டெழுந்தாள்.

அந்த இக்கட்டான சூழலிலும் குறையாத வானவல்லியின் தைரியத்தைப் பார்த்து இருவருமே வியக்கத்தான் செய்தனர்!

வானவல்லியைப் போன்று தானும் கோபப்பட்டால் எந்தக் காரியத்தையும் சாதிக்க இயலாது என உணர்ந்த காளன் அமைதியாகப் பணிவுடன், ''சகோதரி! நான் கூறுவதைச் சற்று அமைதியாக யோசியுங்கள்! ஆத்திரப்பட வேண்டாம்! ஆத்திரம் அறிவை சிதைக்கும் ஆயுதம். உங்களை அறியாமலே பெரும் ஆபத்தில் நீங்கள் சிக்கிக்கொண்டீர்கள். உங்களை உறைந்தைக்கு அழைத்துச் சென்று யுவராஜனுக்கு மணமுடித்தால் இருங்கோவேளை எதிர்க்கும் தங்கள் தந்தையை சரிபடுத்திவிடலாம், அதே நேரம் செங்குவீரனையும் அடக்கி புகாரையும் கைப்பற்றி விடலாம் என திட்டம் தீட்டுகிறார்கள்! இதற்கு தாங்கள் சம்மதிக்காவிட்டால் உங்களை பலவந்தப்படுத்தவும் அவர்கள் முடிவு செய்துள்ளார்கள்! இது சிந்தித்துச் செயல்பட வேண்டிய தருணம்!'' என்றான்.

இதுவரை யாரிடமும் பணிந்துப் பேசியிராத காளன் வானவல்லியின் முன் பொறுமையாகப் பணிவுடன் பேசிக்கொண்டிருப்பதைக் கண்ட வில்லவன் ஆச்சர்யப்பட்டுப் போனான்! எப்போதையும் போலவே அப்போதும் காளனது செயல் வில்லவனுக்குப் பெரும் விசித்திரமாகத் தோன்றியது!

“வனத்தில் என்னைக் கொலை செய்யச் சொல்லி கட்டளையிட்டவன் தானே நீ! இப்போது மட்டும் கரிசனம் எங்கிருந்து வந்ததாம்!” மீண்டும் ஏளனமாகப் பார்த்தபடியே வினவினாள் வானவல்லி!

“அப்போது தாங்கள் யார் என்று எனக்குத் தெரியாது! ஆதலால் தான் அந்த விரும்பத் தகாத நிகழ்வு நடந்துவிட்டது. அதற்கு எனது மன்னிப்பைக் கோருகிறேன்!”

“இப்போது உனது காதலி பத்திரையின் தோழி என்பதனால் ஏற்பட்ட பரிதாபமா இது!”

“இல்லை!”

“அப்புறம்?”

“எனது நண்பன் திவ்யனின் சகோதரி என்பதனால் ஏற்பட்ட பாசம்!”

திவ்யன் என்றப் பெயரைக் கேட்டதும் வானவல்லி பேசும் சக்தியை இழந்து நிற்பதைக் கண்ட காளன் பெரும் நம்பிக்கை பெற்றவனாய், “ஆமாம் சகோதரி! தங்கள் தமையனும் நானும் நண்பர்கள்!” என்றான்.

அப்போது கோபத்துடன் குறுக்கிட்ட வானவல்லி, “கள்வனே, நிறுத்து உன் பொய் பேச்சை! ஒரு நாளும் என் தமையன் உன்னைப் போன்ற கள்வனுக்கு நண்பனாக இருக்க இயலாது! நீ கூறுவதை நம்புவதற்கு நான் ஒன்றும் பத்திரை இல்லை!” எனச் சீறினாள்.

அவளது கோபத்தைக் கண்டு திகைத்த காளன் வானவல்லி இங்கிருந்து தப்பித்துப் பாதுகாப்பாக புகார் செல்ல வேண்டுமானால் தான் யார் என்ற உண்மையை வானவல்லிக்கு தெரியப்படுத்தியே ஆக வேண்டும் என்ற நெருக்கடியை உணர்ந்தவன் தன் விரலில் அணிந்திருந்த மோதிரம் ஒன்றைக் கழட்டி வானவல்லியிடம் நீட்டினான்.

அதைக்கண்ட வானவல்லி, “என்ன இது?” என வினவினாள்.

“வாங்கிப் பாருங்கள் சகோதரி. உங்களுக்கே புரியும்!”

அந்த மோதிரத்தை வாங்கிப் பார்த்த வானவல்லியின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகுவதைப் பார்த்த வில்லவன் அங்கே என்ன நடக்கிறது என அறிந்துகொள்ள இயலாமல் திகைத்து நின்றான்.

கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் தனது சீலை முந்தானையால் துடைத்த வானவல்லி, “இது என் அண்ணன் திவ்யனுக்கு நானே செய்து அணிவித்த மோதிரம். இது எப்படி உன் கைகளுக்கு வந்தது! அவரைக் கொன்றது நீ தானா? பாவி!” எனக் கதறினாள்.

சோழ தேசத்தின் பெரும் வீரமும், செல்வாக்கும் மிகுந்த உப தலைவன் திவ்யனின் மரணத்திற்கு தன் நண்பன் காளனா காரணம் என நினைத்து கோபப்பட்ட வில்லவன் அப்போது எதைப்பற்றியும் சிந்திக்காமல் தனது வாளை உருவினான்.

வானவல்லி கூறியதைக் கேட்டதும் பெரும் அரசுப்பற்று வாய்ந்த வில்லவன் தனது வாளை உருவியதைப் பார்த்ததும் காளன், “வில்லவா! அவசரப் படாதே!” எனக் கூறியபடியே அவனும் வாளை உருவிக்கொண்டான்.

“நண்பா, அன்றே நான் உன்னிடம் கூறியிருக்கிறேன். நண்பனை விட எனக்கு நாடுதான் முக்கியம் என்று! உப தலைவன் திவ்யனின் மோதிரம் உன் கைகளுக்கு எப்படி வந்தது எனக் கூறு! அவரைக் கொன்றது நீயா?” எனக் கேட்டபடியே காளனை நோக்கித் தனது வாளை ஓங்கி வீசினான்.

“வில்லவா, நான் கூற வந்ததை பொறுமையாகக் கேள்!” என்றபடியே அவனது வாளைத் தடுத்து நிறுத்தினான் காளன்.

“நீ கூறியதை நான் இதுவரை கேட்டதெல்லாம் போதும் நண்பா! அனைத்திற்கும் இன்றோடு முடிவு கட்டுகிறேன்!” எனக் கூறியபடியே வில்லவன் காளனை நோக்கி ஆவேசமாக வாள் வீசினான்!

நண்பர்கள் இருவருக்குள்ளும் துவந்த யுத்தம் தொடங்கியது! அதனைக் கண்ட வானவல்லி விலகி நின்று வேடிக்கைப் பார்க்கத்

தொடங்கினாள். கீழே வாள்கள் ஒன்றோடொன்று உராயும் சத்தத்தைக் கேட்டு கீழே வந்த பத்திரைத் தேவி காளனைக் கண்டு திகைத்து படிக்கட்டிலே நின்றதை யாரும் கவனிக்கவில்லை!

முதலில் காளன் எதிர்தாக்குதல் தொடுக்காமல் வில்லவனின் வாளை மட்டும் தடுத்தபடியே பலவாறு சமாதானம் கூறிப் பார்த்தான். வில்லவன் செவி மடுக்காமல் காளனைக் கொல்வதையே குறியாகக் கொண்டு போரிட ஆவேசமடைந்த காளன் வில்லவனை நோக்கி எதிர்தாக்குதல் தொடுக்க அங்கே யுத்தம் உக்கிரமானது! வில்லவனது வாள் காளனின் உடலில் சில இடங்களில் கீறி குருதியையும் ருசிக்க, இனி பொறுமையாகச் சண்டையிட்டால் அனைத்தும் பாழாகிவிடும் என எண்ணிய காளன் வில்லவனின் வாளை அந்தரத்திலேயே தடுத்து ஓங்கி ஒரு அடி அடித்தான். அவ்வளவுதான், வில்லவனின் வாள் அவனது கையிலிருந்து விடுபட்டு அந்தரத்தில் பறக்க காளன் தனது வாளை வில்லவனின் கழுத்தில் வைத்து, ‘‘வில்லவா, அவசரப் படாதே! கூறவந்ததை முழுவதுமாகக் கேள்!’’ எனக் கட்டளையிட்ட அதே வேளையில் ‘‘அய்யோ! வானவல்லி’’ என ஒரு பெண் அலறும் சத்தம் எழ இருவருமே திடுக்கிட்டனர்.

காளன் தட்டிவிட்ட வாளானது பறந்து வானவல்லியை நோக்கிச் சென்றதைப் பார்த்த பத்திரைதான் பயத்தில் கத்தியிருந்தாள். அலறலைக் கேட்டவுடன், பறந்து சென்ற வாள் வானவல்லியின் உடலைத் தான் தைத்துவிட்டதோ என எண்ணிய காளன் மற்றும் வில்லவன் இருவரும் அக்கணத்தில் வெடவெடத்துப் போனார்கள் ஆனால், வாள் வித்தையில் ஏற்கெனவே நன்கு தேர்ச்சி பெற்றிருந்த வானவல்லி, பறந்து வந்த வாளை லாவகமாகப் பிடித்துவிட்டாள்! அதைக் கண்ட காளன், வில்லவன், பத்திரை என மூவருமே திகைத்து போய் நின்றிருந்தனர்!

வாளைக் கைப்பற்றிய வானவல்லி அங்கு சும்மா நிற்கவில்லை. உடனே காளனை நோக்கி ஓடி வந்து, ‘‘என் தமையனைக் கொன்ற உன்னை நானே கொல்ல வேண்டும்! என்னுடன் சமர் செய்’’ என அறைகூவல் விடுத்த படியே அவனைத் தாக்கினாள்.

அதிவேகமாகப் பறந்து வந்த வாளினை லாவகமாகக் கைப்பற்றியதிலிருந்தே வானவல்லியின் வாள் திறனை அறிந்துகொண்ட காளன் அவளுடன் சமர் செய்தால் விபரீத விளைவுகள் ஏற்படும் என நினைத்து, “சகோதரி, அவசரப் பட வேண்டாம்! நிதானமாக இருங்கள்” எனக் கூறிக்கொண்டிருந்த போதே வானவல்லி அவனைத் தாக்கத் தொடங்கினாள்.

“சகோதரி! நீங்கள் எண்ணுவதைப் போன்று உங்கள் தமையனை நான் கொலை செய்யவில்லை! நான் யாரென்று அறிந்துகொண்ட பிறகு தாங்கள் என்னைக் கொல்வதாக முடிவு செய்தாலும் ஏற்றுக்கொள்கிறேன்! சற்றுப் பொறுங்கள்!” என்றபடியே அவளது வாள் வீச்சை தடுத்துக்கொண்டிருந்தான்.

“நீ யாராக இருந்தாலும் இருந்துவிட்டுப் போ! அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை!” எனக் கூறியவள் கடும் பலத்துடன் அவனைத் தாக்கலானாள்.

வானவல்லியின் வாள் தன்னைத் தாக்காத வண்ணம் விலகிய காளன், “இளவலைக் காக்கும் வேளக்காரப் படையின் தலைவன் நான் தான்! பெயர் இளந்திரையன்!” என சத்தமிட்டுக் கூற ஓங்கிய வாளோடு அதிர்ச்சியில் நின்றுவிட்டாள் வானவல்லி.

“நான் தான் இரும்பிடர்த்தலையரின் தம்பி இளந்திரையன்! இளவரசன் வளவனின் மாமன், அவனது மெய்க் காப்பாளன். சோழப் படையின் தளபதிகளுள் ஒருவனும் உயிரைக் கொடுத்தாலாவது வளவனை மீண்டும் அரியணையில் ஏற்றுவேன் எனச் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்ட வேலைக்காரப் படையின் தலைவனும் நான் தான்!” எனக் கூற வானவல்லி மட்டுமல்ல அங்கிருந்த வில்லவன் மற்றும் பத்திரைத் தேவி உட்பட திகைத்து நின்றார்கள்!

வாளுடனே வானவல்லி நிற்பதைக் கண்ட காளன், “வாளினை கீழே போடுங்கள்!” எனக் கட்டளையிட அவனது மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவளைப் போல வானவல்லி கையிலிருந்த வாள் கீழே விழுந்தது!

அங்கிருந்த மூவருமே அடுத்து காளன் என்ன கூறப்போகிறான் என எதிர்பார்த்தபடியே அவனையே பார்த்துக்கொண்டிருந்தனர். அந்த அறையில் எதுவும் பேசாமல் கம்பீரத்துடன் நான்கு அடிகள் நடந்தவன், “சகோதரி! நான் கூறப்போவது யாரும் அறிந்திராத இரகசியம். என் தமையன் இரும்பிடர்த் தலையர், என் காதலி பத்திரை, ஏன் எனது உயிருக்கு உயிரான நண்பன் வில்லவனுக்குக் கூட நான் இதுவரை தெரிவித்திராதது! இதனை இப்போதே எதற்கு வெளிப்படுத்தினேன் என்றால் உங்கள் உயிர் மிகவும் முக்கியம்! நீங்கள் நிச்சயம் இங்கிருந்து தப்பித்தாகவேண்டும்” என்றவன் அமைதியாகி பிறகு “இளஞ்சேட்சென்னி இறந்த போது வளவன் பிறந்திருக்கவில்லை. என் சகோதரி கர்ப்பமாக இருந்தாள். சென்னி இறக்கும் போது என் தமையன் இரும்பிடர்த்தலையரிடம் வளவனை எப்படியாவது அரியணை ஏற்றி சோழ குளம் என்னோடு இற்றுப் போவதைத் தடுத்துவிட வேண்டும் என சத்தியம் வாங்கிக் கொண்டார்! அப்போது எனக்கு சிறு வயது. நானும் அங்குதான் இருந்தேன்! அரசன் உயிரோடு இருக்கும்போதே துரோகிகளும், எதிரிகளும் மிகுந்திருப்பார்கள்! ஆனால் அரசனும் இறந்துவிட்டான், இளவரசனும் பிறந்திருக்கவில்லை! இளவலுக்கு ஏற்படப்போகும் ஆபத்தை உணர்ந்த நானும் எனது நண்பன் திவ்யனும் சென்னியின் சாம்பல் மீது சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டோம்! உயிரைக் கொடுத்தாலாவது இளவலைக் காத்து அரியணை ஏற்றவேண்டும் என்று! எங்களில் திவ்யன் இறந்துவிட்டான்! அந்தப் பணியை உபதலைவன் விறல்வேல் தொடர்ந்து கொண்டிருக்கிறான்!” எனக் கூற அந்த அறையே நிசப்தமானது.

“உங்கள் தமையனைக் கொன்றவன் யார் எனத் தெரியுமா?” என வானவல்லியை நோக்கிக் கேட்டான் காளன்.

“தெரியாது?”

“புகாரில் வசிக்கும் வைதீகனது மகன்!”

“வைதீகனது மகனா?”

“ஆம்! அவன் எதற்கு என் தமையனைக் கொலை செய்ய வேண்டும்?”

“வளவனுக்குத் துணையாக இருந்தவர்களுள் அவனும் ஒருவன்! அவனைக் கொன்றுவிட்டால் வளவனை எளிதில் வீழ்த்திவிடலாம் அல்லவா?”

அந்தக் கயவன் இன்னும் உயிருடன் தான் இருக்கிறானா?”

“இல்லை! அவன் கொல்லப்பட்டு விட்டான்.”

“கொல்லப்பட்டு விட்டானா?

“ஆம்!”

“யாரால்?”

“அந்தத் துரோகியைக் கொன்றது தாங்கள்தான்!” எனக் கூற அதிர்ச்சியடைந்த வானவல்லி, “நானா?” என வினவினாள்.

“ஆம் சகோதரி! அந்தக் கயவன் அக்னிபுத்திரனைக் கொன்றது தாங்கள் தான்.”

எதையும் புரிந்துகொள்ள இயலாமல் வானவல்லி நிற்பதைப் பார்த்த காளன், “அன்று சம்பாபதி வனத்தில் என்னை நோக்கி குறு வாளை எறிந்த பிறகு மற்ற இரு குறுவாளை பந்தம் வைத்து நின்றவனை நோக்கி எறிந்தீர்கள் அல்லவா? அவன் தான் அக்னி புத்திரன். புகாரைச் சேர்ந்த வைதீகனின் மகன். அவன் தான் பெரும் மரக்கலம் கொண்டு தங்கள் தமையன் பயணித்த மரக்கலத்தோடு மோதி நீரில் மூழ்கச் செய்தான். அவனைத் தாங்களே கொன்று பழி தீர்த்து விட்டீர்கள்!” என்றான்.

காளனாக நின்ற போது எந்தத் தயக்கமும் அச்சமும் கொள்ளாத வானவல்லி அவன் இளந்திரையன் என அறிந்தபிறகு அவன் முன் பேசவே தயங்கினாள். பெரும் மரியாதை தோன்றியிருந்தது. ஏனெனில் வானவல்லி முன்பே வளவனின் மெய்க்காப்பாளன் ஒருவனைப் பற்றி கேள்விப்பட்டிருந்தாள். ஆனால் அவன் இன்னவன் தான் என்று இரும்பிடர்த்தலையர், வளவனார் உட்பட யாருமே அறிந்திருக்கவில்லை! சற்றுத் தயக்கத்துடனே, “அக்னி புத்திரன் தான் என் அண்ணனைக் கொன்றவன் எனத் தாங்கள் அறிந்தும் அவனை எதற்கு உங்களோடு சேர்த்துக்கொண்டீர்கள்?” என வினவினாள்.

“அக்னி புத்திரனை எனது நண்பனாகத் தான் எண்ணியிருந்தேன். அவன் இறந்த பிறகு ஒரு நாள் வைதீகர் பாகவதர் தனிமையில் தனது மகனை எண்ணிப் புலம்பிக் கொண்டிருந்தார்! என் நண்பனைக் கொன்றவன் அக்னிபுத்திரன் என்ற உண்மை அப்போது தான் எனக்குத் தெரிந்தது!”

“எதற்கிந்த கள்வன் வேடம்?”

“மாமன்னர் சென்னி இறந்த பிறகு வளவனுக்கு எதிராகப் பல துரோகிகள் கிளம்பினார்கள். அப்படிக் கிளம்பியவர்களில் பலர் வளவனுக்கு அண்ணன் முறையினர். ஒரு நாள் அரண்மனையிலே அவனைக் கொல்வதற்கு முயற்சி மேற்கொள்ளப் பட்டது! அதன் பிறகுதான் நான் கள்வனாக மாறி பல உண்மைகளை அறிந்துகொண்டேன். அவர்கள் யார் யார் என்று கண்டறிந்து வேரறுக்கவே இந்தக் கள்வன் வேடம்! இந்த உண்மை உன் தமையன் திவ்யனைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது! விறல்வேல் நான் இரும்பிடர்த்தலையரின் தம்பி என்பது உட்பட இன்னும் சில உண்மைகளை அறிந்திருப்பான் என எண்ணுகிறேன்! அன்று டாள்தொபியாஸ் என்னிடம் பேசியதிலிருந்து அதனை ஒருவாறு ஊகித்துக் கொண்டேன்”

“சரி! சம்பாபதி வனத்தில் என்னைக் கொன்று பத்திரையை தூக்குங்கள் எனக் கட்டளையிட்டீர்களே? அது எதற்காக? காளன் உருவில் பலரைக் கொன்றுள்ளீர்கள்? இதற்கெல்லாம் என்ன விளக்கத்தை கூறப்போகிறீர்கள்?” என அடுத்தடுத்து கேள்விகளைப் பொழிந்தாள் வானவல்லி.

“சகோதரி, என்னால் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் சோழ குல துரோகிகள்! பயணி உருவில் சுற்றிய நயவஞ்சகர்கள்! ஒற்றர்கள்! அவர்களைத் தான் தேடித் தேடிக் கண்டறிந்து எனது நண்பன் வில்லவனின் உதவியோடு அவர்களின் உடமைகளைக் கொள்ளையிட்டு கொலை செய்தேன்! சம்பாபதி வனத்தில் உங்களை மறித்தது நான் எதிர்பாராத துன்ப நிகழ்வு! நீங்கள் தான் திவ்யனின் தங்கை என அப்போது எனக்குத் தெரியாது! உங்களைக் கவர நினைத்தது அக்னி புத்திரன் செய்த சூழ்ச்சி! அச்சூழ்ச்சியினாலே அவன் மடிந்து போனான்! உங்களின் வாள் திறமை மற்றும் செங்குவீரனின் வருகையினால் நீங்கள் தப்பித்துவிட்டீர்கள்!”

அவன் கூறியதைக் கேட்க கேட்க வானவல்லிக்கு ஆச்சர்யம் அதிகமாகிக்கொண்டே இருந்தது! உண்மையைப் புரிந்துகொண்டவள் காளனிடம் மன்னிப்பையும் கேட்டுக்கொண்டாள்.

உடனே காளன், “சகோதரி நேரமில்லை! நீங்கள் உடனே கிளம்ப வேண்டும். நீங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு கண நேரப் பொழுதும் உங்களுக்கு பெரும் ஆபத்து! வில்லவனுடன் உடனே கிளம்புங்கள். உங்களுக்கு எந்த வித தீங்கும் நேராமல் அவன் உங்களைப் புகாரில் சேர்ப்பித்து விடுவான். கிளம்புங்கள்!” எனக் கட்டளையிட்டான்.

அவன் கூறுவதைக் கேட்ட வானவல்லி, “அண்ணா, தாங்கள் கூறுவதைப் போன்று என்னால் இங்கிருந்து தப்பிச் செல்ல இயலாது. இருங்கோ வேளின் மகன் என்னை சிறைப்படுத்தியுள்ளது உப தலைவரின் தன்மானத்திற்கும், வீரத்திற்கும் விடப்பட்டுள்ள அறைகூவல்! உப தலைவர் செங்குவீரன் இங்கு வந்து என்னை நிச்சயம் மீட்டுச் செல்வார். அதுவரை நான் காத்திருக்கப் போகிறேன்!” எனக் கூறியதைக் கேட்ட காளனும், வில்லவனும் திகைத்து போனார்கள்.

“செங்குவீரன் பெரும் வீரன் தான்! அவன் வந்து உங்களைக் காக்கும் வரை காலம் நமக்காக காத்திருக்காது! உங்களை சிறைப் படுத்தியமைக்கான பலனை அவன் விரைவில் அடைவான்! வில்லவா, வஞ்சி மாநகரம் எவ்வளவு பாதுகாப்பு நிறைந்தது? கூறுவாயாக!” எனக் கட்டளையிட்டான் காளன்.

“நண்பா, வஞ்சி மாநகரத்திற்குள் வர வேண்டுமென்றால் ஆன்பொருநை நதியில் அமைக்கப்பட்டிருக்கும் மூங்கில் பாலத்தை கடந்து தான் வர இயலும்! நகரைக் கைப்பற்ற யாராவது படை திரட்டிக் கொண்டு பாலத்தைக் கடக்க முயலும் போது தீ வைத்துவிட்டால் மூங்கில் அனைத்தும் தீப்பற்றி பாலத்தைக் கடக்க முயன்ற மொத்த படையும் சின்னாபின்னமாகி விடும்! நகர் முழுவதும் வலிமையான மதிலினால் சூழப்பட்டுள்ளது. மதிலின் மேல் அம்பாரி அமைத்துக்கொண்டு காவல் வீரர்கள் காக்கிறார்கள்! மதிலைச் சூழ்ந்த ஆழமான அகழிகள் முழுவதும் முதலைகள் நிறைந்துள்ளன! அதையும் கடந்து கோட்டைக் கதவை உடைத்து நகருக்குள் புக முயன்றால்

நெருக்கமாக அமைந்திருக்கும் மாளிகை மற்றும் வீடுகளைக் கடந்து உள்ளே நுழையும் படைகளை சேரர்களின் படை வீரர்கள் எதிர்த்து நிற்பார்கள்! வஞ்சிமா நகரில் வைத்து சேரனை முறியடிக்கலாம் என நினைப்பது கனவிலும் இயலாத காரியம்! சேரனை வெல்ல வேண்டுமென்றால் அவனை வஞ்சியை விட்டு வெளியே இழுத்தால் தான் உண்டு! படை திரட்டிக்கொண்டு வரும் அளவிற்கு இப்போது சோழ தேசத்தின் நிலை இல்லை! பெரும் படை இருங்கோவேளிடம் சிக்கிக் கொண்டது. சோழர்க்கு உதவும் வேளிர் மற்றும் குறுநில மன்னர்கள் இப்போது இருங்கோ வேளின் பக்கம்! தங்கள் எண்ணத்தை மாற்றிக்கொண்டு விடுங்கள் வானவல்லி! நாட்டு நிலை சரியில்லை. சூழ்நிலைக்குத் தகுந்தது போன்று நல்ல முடிவை எடுப்பீர்கள் என எண்ணுகிறேன்!'' என்றான் வில்லவன்.

வில்லவன் கூறியதைக் கேட்ட வானவல்லி சிந்தித்து, ''சரி அண்ணா! நீங்கள் கூறுவது தான் சரி. வாருங்கள் நாம் அனைவரும் புறப்படுவோம்! என அழைத்தாள்.

உடனே காளன், ''நான் வரப்போவதில்லை சகோதரி! நீங்கள் வில்லவனுடன் புறப்படுங்கள்!'' என்றான்.

''நாங்கள் தப்பிச் சென்ற பிறகு எதிரிகளிடம் நீங்கள் சிக்கிக்கொண்டால் எங்களைத் தப்புவித்த குற்றத்திற்காக அவர்கள் உங்களைத் தண்டிக்க மாட்டார்கள் என என்ன நிச்சயம்?''

''இல்லை. தண்டிக்க மாட்டார்கள். அதற்கு என்னிடம் ஒரு மாற்றுத் திட்டம் உள்ளது!'' எனக் கூறியவன் தனது மடியில் வைத்திருந்த இருங்கோவேளின் இலச்சினைப் பதக்கத்தை எடுத்து வில்லவனிடம் கொடுத்து, ''வில்லவா! உன்னை யார் தடுத்தாலும் இந்த இலச்சினையைக் காட்டி சோழ மன்னரின் உத்தரவு எனக் கூறு! உன்னை வழியில் யாரும் தடுக்கமாட்டார்கள்! நீ புகார் சென்றபிறகு உறைந்தைக்கு என்னைத் தேடி வரவேண்டாம்! அங்கேயே தங்கிவிடு! சமயம் நேரும் போது நானே உன்னைச் சந்திக்கிறேன்!'' எனக் கட்டளையிட வானவல்லி புறப்படத் தயாரானாள்.

''நான் பத்திரையை அழைத்துக்கொண்டு புறப்படுகிறேன்!'' எனக் கூறியவளை நிறுத்திய காளன், ''சகோதரி, நீங்கள் இனி பத்திரைத் தேவியைப்

பற்றிய கவலையை விடுங்கள்! அவளை நான் பத்திரமாக பார்த்துக்கொள்கிறேன். அவள் என்னுடன் வசிப்பதே நன்று!'' எனக் காளன் கூறியதைப் புரிந்துகொண்ட வானவல்லி வில்லவனுடன் புரவித் தேரிலேறி புகாரை நோக்கிக் கிளம்பினாள்.

ஒருவழியாக வானவல்லியைக் காப்பாற்றி வில்லவனுடன் பாதுகாப்பாக அனுப்பிவைத்துவிட்ட மகிழ்ச்சியில் தனது காதலியைத் தேடி மாடிப் படியை நோக்கிச் சென்றான். அவனது எதிர்பார்ப்பிற்கு மாறாக பத்திரை அங்கு படிக்கட்டில் அமர்ந்து அத்தனை நேரமாக நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் பார்த்துக்கொண்டிருந்தாள். நடந்த களேபரத்தில் பத்திரை அங்கு முன்பே வந்துவிட்டதைக் காளன் கவனிக்கவில்லை. வானவல்லியை நோக்கி வில்லவனது வாள் பறந்து சென்ற போது எழுந்த குரல் பணிப்பெண்ணின் குரல் எனத்தான் நினைத்திருந்தான்.

படிக்கட்டில் அமர்ந்தபடியே தரையைப் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தவளின் முகத்தை உயர்த்திய காளன், ''எப்போது வந்தாய் பத்திரை?'' என வினவினான்.

பத்திரை காளனிடம் பிணக்கு கொண்டவளாய், ''நீங்கள் உங்கள் பூர்வீகக் கதையை கூறத் தொடங்கும் முன்பே வந்துவிட்டேன்'' என்றாள்.

அவளது கோபத்தையும், பிணக்கையும் கண்ட காளன் காரணமறியாமல், ''என் மீது உனக்கு என்ன கோபம்? ஏனிந்த பாராமுகம்!'' எனக்கேட்டவன் அவளருகே அமர்ந்துகொண்டான்.

''பத்திரை, உனது தந்தையையும் சந்தித்து ஆசிபெற்று விட்டேன். இனியும் என்மேல் உனக்கு என்ன கோபம்?'' எனக் கெஞ்சவே செய்தான்.

அவனிடமிருந்து எழுந்து விலகிய பத்திரை காளனிடம், ''தந்தையை எங்கு, எப்போது சந்தித்தீர்? அவரைக் காண வந்துதான் நாங்கள் அபாயத்தில் சிக்கிக் கொண்டோம்!'' என வருத்தத்துடனே தெரிவித்தாள்.

''அதான் நான் வந்துவிட்டேனே! இனி என்ன கவலை உனக்கு!'' எனக் கூறிய படியே அவளது கையைப் பிடித்து அருகில் இழுத்தான்.

அதற்கு உடன்படாத பத்திரை வருத்தத்துடன், ‘‘நீங்கள் யார் என்ற உண்மையை இன்று நாங்கள் சிறைபடாமல் இருந்திருந்தால் கூறியிருக்க மாட்டீர்கள் தானே!’’ என வினவினாள்.

‘‘ஆமாம்! அரசியல் சார்ந்த நிகழ்வல்லவா? எப்படிப் பத்திரை என்னால் கூற இயலும்!’’

அதைக்கேட்ட பத்திரை எதுவும் கூறாமல் மெல்ல விசும்பினாள்.

அவள் கலங்குவதைக் கண்டு பொறுக்க இயலாத காளன் அவளை இழுத்து அணைத்தான். ‘‘உன்னிடம் கூறாமல் மறைத்ததற்கு என்னை மன்னித்துவிடு பத்திரை! நான் என்ன செய்வது! நான் உறுதியெடுத்துக்கொண்ட காரியம் அப்படிப்பட்டது. எடுத்த நிலைப்பாட்டில் நான் வெற்றியடைந்தால் அதில் உனக்கும் தானே பங்குண்டு! அப்புறம் எதற்கடி என் மீது வீண் கோபம்!’’

‘‘வானவல்லியிடம் கூறும்போது நான் கேட்டிராவிட்டால் நீங்கள் என்னிடம் மறுபடியும் உண்மையைக் கூறியிருக்க மாட்டீர்கள் தானே!’’

பத்திரையை எப்படி சமாதானப் படுத்துவதெனத் திண்டாடிய காளன் ‘‘அதை மறந்து விடு பத்திரை! இப்போது இங்கு நாம் இருவர் மட்டுமே இருக்கிறோம். அதனை நினைத்துக்கொள்ளேன்’’ என அவளது காதில் கிசுகிசுத்தவன் அவளைச் சற்று இறுக்கமாக அனைத்து அவளது கழுத்து, கன்னங்களில் விடாமல் முத்தம் பதித்தான்.

‘‘நான் உங்கள் மீது கோபமாக இருக்கிறேன். என்னிடம் மறைத்ததை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை!’’ எனப் பொய் பிணக்குடன் அருகிலிருக்கும் படிக்கட்டில் அமர்ந்து தனது மடியினில் முகத்தை புதைக்குக் கொண்டு மீண்டும் விசும்பத் தொடங்கினாள்.

எப்பேர்ப்பட்ட வீரனாக இருந்தாலும் காதலியின் கோபத்தைப் போக்க அவளது காலைப் பிடித்துத் தானே ஆகவேண்டும்! அதையே தான் காளனும் அப்போது செய்தான். பத்திரை அமர்ந்திருந்த படிக்கட்டிற்குக் கீழே அமர்ந்தவன் அவளது காலைத் தூக்கித் தனது மடியில் போட்டுக்கொண்டு அவளது காலில் வரைந்திருந்த மருதாணி மற்றும் செஞ்சாந்துக் குழம்பின்

ஓவியங்களைக் கண்டு ரசித்தபடியே அவளது வெண்மையான மலரைப் போன்ற மென்மையான பாதம் மற்றும் கெண்டைக் காலை வருடியவன் அவளது காலைச் சற்றுத் தூக்கி முத்தமிடவும் செய்தான். அதனை எதிர்பாராத பத்திரை அந்த வருடல் மற்றும் முத்தத்தினால் உடல் சிலிர்க்க எழுந்து நின்றவள் நாணத்தோடு தலையைக் குனிந்து தரையைப் பார்த்தபடியே நின்றாள்.

மீண்டும் அவள் அருகில் சென்றவன் அவளைப் பின்னால் இருந்து அணைத்துக்கொண்டு அவளது உடலிலிருந்து வெளிப்பட்ட சுகந்தத்தை அனுபவித்தபடியே அவளது காதோரம், “பத்திரை!” என அவள் மட்டும் கேட்கும்படி அழைத்தான்.

அக்குரலில் அவனது ஆசை, ஏக்கம், எதிர்பார்ப்பு என அனைத்தும் வெளிப்படுவதை உணர்ந்த பத்திரை இனியும் தான் ஊடல் கொண்டு அவரை வருத்துவதில் இன்பமில்லை எனப் புரிந்துகொண்டவள், அவனது அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு திரும்பிய பத்திரை காளனின் முகத்தில் முத்தமிட்டபடியே, “அத்தான்! நீங்கள் பெரும் கள்வர்!” என்றாள்.

அதைக்கேட்ட காளன், “நான் கள்வனா?” என்றான்.

“ஆமாம்! நீங்கள் கள்வர்தானே!” எனக் கிளிக் குரலில் கொஞ்சினாள்.

அணைத்திருந்த கையை காளன் எடுத்துவிட்டதை உணர்ந்த பத்திரை எதுவும் புரியாதவளாய் அவனது முகத்தைப் பார்த்தாள். அவனது கண்கள் சிவந்திருந்தது. உதடு துடித்தது! கோபம் முகத்தை விகாரமாக்கியிருந்தது. இன்னதேனப் புரியாமல் பத்திரை திகைத்தபடியே நிற்க காளன், “நானா கள்வன்!” என அந்த அறையே அதிரும்படி சத்தமாகக் கேட்டான்.

தான் செய்த பிழையை உணர்ந்த பத்திரை, “அத்தான் தங்களுடன் ஊடல் கொள்ளவே அப்படி அழைத்தேன். என் மனதையும் ஒருவாறு களவு செய்தவர் தானே நீங்கள்! அதனை எண்ணியே தான் நான் உங்களைக் கள்வர் என உரிமையுடன் அழைத்தேன். மற்றபடி நீங்கள் செய்த களவுத்

தொழிலைச் சுட்டிக்காட்ட அல்ல!'' எனக் கண்கள் கலங்க கெஞ்ச ஆரம்பித்தாள். தன் வாழ்நாளில் பெரும் பிழையை செய்துவிட்டதாக நினைத்த பத்திரை அவனது காலில் விழுந்தும் மன்னிப்பைக் கோரினாள்.

ஆனால், அதனை ஏற்றுக்கொள்ளாத காளன், ''என்னையா கள்வன் என அழைத்தாய். உன்னை இன்று என்ன செய்கிறேன் எனப் பார்! உனது அனுமதி இன்றி உன்னை முழுவதும் இன்று களவாடப் போகிறேன். உன்னால் முடிந்ததை செய்துகொள்'' எனக் கூறியபடியே பத்திரையை தூக்கிய காளன் அவளது அதரங்களில் தன் இதழ் பதித்து அவளது இதழ்களில் முத்தமிட்டபடியே மரப்படிக்கட்டின் வழியே செல்லலானான்.

காளனின் செயலைக் கண்டு கண நேரத்தில் திகைத்துப்போன பத்திரைத் தேவி செய்வதறியாது, ''விடுங்கள்! விடுங்கள்!'' என சத்தம் எழுப்பித் தனது உடலை உதறினாள்.

அவள் ''விடுங்கள்'' ''விடுங்கள்'' என சத்தம் எழுப்பியது அவனுக்கு ''பிடியுங்கள்'' ''பிடியுங்கள்'' எனக் கேட்டிருக்கும் போல! இல்லையேல் அவளை கீழே விட்டிருப்பான். பத்திரை மூச்சுத் திணறும் அளவிற்கு அவளது அதரத்தில் முத்தமிட்ட படியே அறைக்குள் தூக்கிச் சென்றவன் கதவைப் படார் என சாத்தினான்.

அவர்கள் உள்ளே சென்ற சிறிது நேரம் சத்தமின்றி பேரமைதியுடன் காணப்பட்ட அவ்விடம் சிறிது நேரம் கழித்த பிறகு அங்கிருந்து சத்தம் வர ஆரம்பித்தது. மனம் மட்டுமே இணைந்திருந்த அந்தக் காதல் இணைகள் தங்களின் உடல்கள் இணையும் இன்ப வாழ்வைத் தொடங்கிவிட்டதற்கு அத்தாட்சியாய் அவ்வறையிலிருந்து வெளிப்பட்ட அர்த்தம் புரியாத முனகல் சத்தங்கள் அவ்விடத்தை அல்லோலகல்லோலப் படுத்தத் தொடங்கியது!

# 45. டாள்தொபியாசின் உபசரிப்பு

புகாரில் இந்திரத் திருவிழா ஆரம்பித்துவிட்ட நிலையில் உறைந்தையிலிருந்து புகார் செல்லும் ராஜபாட்டை படு அமர்க்களமாகக் காணப்பட்டது. அதிலும், உறைந்தையில் சோழ மாமன்னராக முடிசூடிக்கொண்ட இருங்கோவேள் புகாருக்கு தன் அமைச்சர்கள் மற்றும் தளபதிகள் சூழ சென்றுகொண்டிருந்ததால் பயணத்தில் இடைப்பட்ட கிராமங்கள் மற்றும் பட்டினங்களில் பெரும் வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. புகார் மற்றும் அழுந்தூரைத் தவிர்த்த குறுநில மன்னர்கள் மற்றும் வேளிர்கள் அனைவரும் இருங்கோவேளை ஆதரிக்க முடிவுசெய்துவிட்ட படியால் போட்டிபோட்டுக் கொண்டு இருங்கோ வேளை உபசரித்து வரவேற்கலாயினர்.

அனைத்து கிராமங்களின் வரவேற்பு மற்றும் மரியாதையை ஏற்று வந்தமையால் வெண்ணியில் ஓய்வெடுத்துப் பயணத்தைத் தொடங்கலாம் என முடிவு செய்து கோட்டைக்குச் சென்றார்! ஒரு நாழிகைப் பொழுதிற்குப் பிறகு அவர் சிறிதும் எதிர்பாராதபடி வேந்தனும், வைதீகரும் அங்கு வருகை தந்தனர். வேந்தனை எதிர்பாராத மன்னர், “வேந்தா! யுவராஜனுக்கு பாதுகாப்பாக வஞ்சிமா நகரம் அல்லவா உன்னை அனுப்பியிருந்தேன். நீ மட்டும் வந்திருக்கிறாய்! யுவராஜன் எங்கே?” என வினவினார்.

வேந்தன் பதிலேதும் கூற இயலாமல் நிற்க வைதீகர் குறுக்கிட்டு, “அரசே, நமது திட்டங்கள் அனைத்தையும் பாழாக்க எதிரிகள் யாரும் தேவையில்லை! தங்கள் மகனே போதும்!” எனக் கடும் கோபத்துடன் கூறலானார்.

வைதீகர் கோபம் கொள்வதன் காரணத்தை அறிந்திராத மன்னர், “என்ன நடந்தது பிரம்மாயரே! கோபம் வேண்டாம்!” என்றார்.

“அரசே, யுவராஜன் பட்டம் சூட்டிய தங்கள் மகனை புகார் மன்னனாக முடிசூட்டி வளவனார் மகளை மனம் முடித்து வைத்துவிடுவது தானே நமது திட்டம்?”

“ஆம் பிரம்மாயரே! அதில் என்ன சந்தேகம்!”

“அரசே! இனி அது நடக்காது என எண்ணுகிறேன்” இடை மறித்துத் தெரிவித்தான் வேந்தன்.

“வேந்தா, ஏன் இப்படிக் கூறுகிறாய்? என்ன நடந்தது? விளக்கமாக கூறு!” பதற்றத்துடன் கட்டளையிட்டார் மன்னர்.

“அரசே! கருவூர் வஞ்சி மாநகரம் சென்று சேரமான் பெருஞ்சேரலாதனைச் சந்தித்துவிட்டுத் திரும்புகையில் அங்கு வளவனார் மகள் வானவல்லியைப் பார்த்தோம்!” எனக் கூறிவிட்டு அமைதியாகிவிட்டான் வேந்தன்.

“தயக்கம் வேண்டாம் வேந்தா! தொடர்ந்து கூறு”

“நான் எவ்வளவோ தடுத்து அறிவுரை கூறியும் கேட்காமல் தங்கள் மகன் வளவனார் மகளை மாளிகையில் சிறைவைத்து விட்டார்!”

வேந்தன் கூறியதைக் கேட்டு கடும் ஆத்திரமும், சினமும் கொண்ட மன்னர் ஆசனத்திலிருந்து எழுந்து நின்றவர் வைதீகரைப் பார்த்து, “இவன் கூறுவது.....” “ஆம் அரசே! இவன் கூறுவது முற்றிலும் உண்மை தான். புகாரில் இருந்த எனக்கும் செய்தி வந்தது. ஆதலால் தான் புகாரில் உங்களை வரவேற்க காத்திருந்தவன், உங்களைத் தேடி ஓடி வர நேர்ந்தது. வெண்ணி வந்த பிறகு தான் வேந்தனைச் சந்தித்து முழு நிலவரத்தையும் தெரிந்துகொண்டேன்!” எனப் பதிலளித்தார்.

நினைத்த காரியங்கள் அனைத்தும் கைகூடி வருகையில் தனது மகனின் காரணமறியாத செயலை நினைத்து வருந்திய மன்னர், “வேந்தா, இந்தக் காரியத்தை அவன் ஏன் செய்தான்?” என வினவினார்.

“சில கிழமைக்கு முன் தங்கள் மகன் புகார்க் கோட்டைக்குப் பொறுப்பேற்கச் சென்றபோது செங்குவீரன் அவமதித்து அனுப்பியமைக்கு

அவனது காதலியைப் பழி வாங்குகிறேன் எனக் காரணம் கூறினார்!'' என்றார்.

''இது என்ன முட்டாள் தனம் வேந்தா, செங்குவீரனே நம்மால் கொல்லப்பட்டு விட்டான்! அதன் பிறகு வளவனாரின் மகளை சிறை வைப்பதனால் யுவராஜனுக்கு என்ன மகிழ்ச்சி கிடைத்துவிடப் போகிறது!''

''நான் வினவினேன் அரசே!''

''அதற்கு அவன் என்ன பதிலளித்தான்?''

''நான் மணக்கப் போகும் பெண்ணுக்கு இரு நாள் விருந்தளித்து அனுப்புகிறேன் எனத் தெரிவித்தார்''

அந்தப் பதிலுக்கு மன்னரால் எதையும் கூற இயலாமல் சிந்தித்துக் கொண்டிருந்த நேரத்தில் ''மன்னாதி மன்னர் இருங்கோவேளின் புதல்வர், சோழ தேச யுவராஜன் கோட்டைக்கு வருகை தருகிறார். பராக்... பராக்...'' எனக் கட்டியங்காரனின் உரத்த குரல் எழ மூவருமே வாசலை நோக்கினர். அங்கே கடும் கோபத்துடன் யுவராஜன் வருகை தர அவனுக்குப் பின்னால் காளனும் வந்துகொண்டிருந்தான்.

யுவராஜன் உள்ளே நுழைந்ததும் கடும் கோபத்துடன் ''மூடனே, அனைத்து காரியத்தையும் இப்படிக் கெடுத்துவிட்டாயே? ஏன்?'' எனக் கேட்க இருங்கோ வேள் வாயெடுக்க அதற்குள் முந்திக்கொண்ட யுவராஜன், ''தந்தையே, வைதீகர் இத்தனை நாட்களாக ஒரு ஒற்றனை நம்முடன் இருக்கச் செய்துள்ளார்! அவரது செயல் சரியா என விசாரியுங்கள் தந்தையே!'' என அந்த அரங்கமே அதிரும்படி கத்தினான்.

''நம் கூட்டத்திற்குள் ஒற்றனா? யாரைக் குறிப்பிடுகிறாய் மகனே!'' கடும் கோபத்துடன் வினவினார் மன்னர்.

''வைதீகர் காளனுக்குத் துணையாக இருக்கச் செய்தாரே, அந்த வில்லவனைத் தான் குறிப்பிடுகிறேன்!''

''வில்லவன் ஒற்றனா? என்ன கூறுகிறீர் தம்பி!'' ஏமாற்றத்துடன் வைதீகரிடமிருந்து சொற்கள் வெளிப்பட்டன.

“ஆம் பிரம்மாயரே! தங்களுக்கு என் மீது சந்தேகம் இருந்தால், தங்களது சீடன் காளனிடமே கேட்டு உறுதிப் படுத்திக்கொள்ளுங்கள்!”

வைதீகர் காளனைப் பார்க்க காளன் தலையைத் தொங்க போட்டுக் கொண்டான்.

“என்ன நடந்தது காளா! மறைக்காமல் அனைத்தையும் கூறு!”

முகத்தில் சோகத்தையும், ஏமாற்றத்தையும் வரவழைத்துக் கண்ட காளன், “ஆம் அய்யா! யுவராஜன் கூறுவது அனைத்தும் உண்மையே! இத்தனை நாட்களாக ஒரு ஒற்றனை என்னுடன் இருக்கச் செய்துள்ளீர்கள்.”

“நான் இருக்கச் செய்தேனா?”

“ஆம்! தாங்களே தான்”

“உனது நண்பன் வில்லவன் என்பதனால் தானே, அவனைப் பற்றி நான் அதிகம் கவலை கொள்ள வில்லை!”

“வில்லவன் தங்கள் புதல்வன் அக்னிபுத்திரனுக்கு நெருங்கிய அந்தரங்கத் தோழன் என்பதனால் தான் அவனை இத்தனைக் காலமாக நம்பி எனக்குத் துணையாக வைத்திருந்தேன்! கடைசியில், ஒரு துரோகியை என் தலையில் கட்டி வைத்துவிட்டு எனக்குத் தீராத அவப்பெயரை ஏற்படுத்தி விட்டீர்கள் வைதீகரே! இனி மன்னர் என்னை எப்படி நம்புவார்?”

“பேசியது போதும்! வில்லவன் வைதீகரை மட்டுமல்ல, காளனையும் சேர்த்து ஏமாற்றியுள்ளான். குருவையும் ஏமாற்றியுள்ளான்! நண்பனையும் ஏமாற்றியுள்ளான்! அதைப்பற்றி பிறகு பேசுவோம். எதையும் மறைக்காமல் என்ன நடந்தது என விரிவாகக் கூறு காளா!” கண்டிப்புடன் கட்டளை வெளிவந்தது மன்னரிடமிருந்து.

“தங்கள் கட்டளை அரசே!” எனக் கூறி மேல் மூச்சு மற்றும் கீழ் மூச்சு வாங்கி, “அரசே! தங்களது இலச்சினைப் பதக்கத்தை என்னிடமிருந்து திருடி யுவராஜன் சிறை வைத்திருந்த வளவனார் மகளை மீட்டுப் புகார் அழைத்துச் சென்றுவிட்டான். அவனைத் தடுக்க முயன்ற என்னையும் கொலை

வெறியுடன் தாக்கித் தப்பிவிட்டான்!'' எனக் கூறியவன் தனது உடலில் வில்லவன் ஏற்படுத்திய சில வாள் காயங்களையும் காட்டினான்.

அதைக்கேட்ட வைதீகர் வெளியே நின்ற உப தளபதியை அழைத்து, ''வில்லவன் எங்கிருந்தாலும் அவனை வெட்டிப் போடுங்கள்!'' எனக் கட்டளையிட அதைத் தடுத்த காளன், ''அதற்கு அவசியமில்லை ஐயா!'' என்றான்.

''அவசியமில்லையா!'' எதிரில் நின்ற மூவரிடமிருந்தும் ஒரே நேரத்தில் சொற்கள் வெளிப்பட்டன.

''ஆம்! எனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்த வில்லவன் புவியில் வாழும் தகுதியை இழந்துவிட்டான். அவனைக் கொல்ல நானே ஆணையிட்டு விட்டேன். எனது வீரர்கள் சிலர் அவர்களை விரட்டிச் சென்றுள்ளனர். இந்நேரம் வில்லவன் நிச்சயம் கொல்லப்பட்டிருப்பான்! அவனைப் பற்றிய கவலை நமக்கு வேண்டாம்!''

''கவலையை விடுங்கள்! அவனது துரோகத்தினால் நமக்குச் சில நன்மை விளைந்திருக்கிறது!'' என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார் மன்னர்.

அதைக்கேட்ட மற்ற மூவரும் காரணமறியாது ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''ஆம்! முதலாவது ஒரு துரோகியை முதலிலேயே அடையாளம் கண்டு கொண்டோம்! இரண்டாவது வளவனார் மகளை அவன் அழைத்துச் சென்றதும் ஒரு விதத்தில் நமக்கு நன்மை தான். வளவனார் மகள் மட்டும் வஞ்சியிலேயே இருந்திருந்தால் பெரும் விபரீதங்கள் நேர்ந்திருக்கும். மகேந்திர வளவனாரிடத்தில் இன்னும் சேர மன்னன் பெருஞ்சேரலாதனுக்குப் பெரும் மரியாதையும், மதிப்பும் இருக்கிறது. வளவனாரின் மகள் சிறை வைக்கப்பட்ட செய்தி சேரமானுக்கு எட்டியிருந்தால் இந்நேரம் நமக்கு எதிராகக் கிளம்பியிருப்பார். பெரும் திட்டம் சிதைந்துபோயிருக்கும். அதிலிருந்து வில்லவன் நம்மைக் காப்பாற்றி விட்டான்!'' எனக் கூறிக்கொண்டிருந்த போதே யுவராஜன், ''தந்தையே அவனைப் புகழ்ந்தது போதும்!'' என வெகுண்டெழுந்தான்.

“மூடனே, வாயை மூடிக்கொள். நான் இருக்கும்வரை வாயைத் திறந்துப் பேசாதே! எனக்குப் பிறகு இந்த ராஜ்யத்தை நீ எப்படித்தான் ஆளப் போகிறாயோ?” என வருத்தத்துடன் தெரிவித்தார் மன்னர்.

இருங்கோவேள் “மூடன்!” என அழைத்ததைக் கேட்ட யுவராஜனுக்கு வானவல்லியும் “மூடன்” என அழைத்தது நினைவிற்கு வர அவனது கோபம் தலைக்கேறியது. “தந்தையே இன்னொருமுறை மூடன் என என்னை அழைக்காதீர்கள்! கோபம் எல்லை மீறிவருகிறது!” என்றான்.

“நீ செய்த காரியம் மன்னரை அப்படிக் கூற வைக்கிறது! சாதாரண மக்களைப் போன்றுத் தாங்கள் உணர்ச்சிகளுக்கு இடமளிக்கக் கூடாது! நீங்கள் மூச்சு விடுவதாக இருந்தாலும் சிந்தித்த பிறகே செய்ய வேண்டும். ஏனெனில் உங்களைச் சுற்றி எதிரிகள் கண்களுக்குத் தெரியாத நஞ்சுப் பொடிகளைத் தூவியிருக்கலாம்! அனைத்தையும் சிந்தித்த பிறகே செய்யவேண்டும் என்பதை இனியாவது நினைவில் கொள்ளுங்கள்! புகார் சென்றபிறகு உங்களுக்குப் புகாரின் மன்னராக முடிசூட்டிய பிறகு நாம் வளவனாரைச் சந்தித்து மன்னிப்புக் கேட்டு விடுவோம்!”

“பிரம்மாயரே!”

“கூறுங்கள் அரசே!”

“நாம் புகாரைக் கைப்பற்றப் போகும் திட்டத்தை வில்லவன் அறிந்து நம் எதிரிகளிடம் கூறியிருப்பானோ என்ற அச்சம் தோன்றுகிறது! பல நாள் திட்டம்?”

“அரசே! அதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. வில்லவனுக்கு எந்த இரகசியத் திட்டமும் தெரியாது! அவன் என்னுடன் இருந்தானே தவிர, நான் அவனிடம் எந்த செய்திகளையும் பகிர்ந்துகொள்வதில்லை. அவனைப் பற்றிய கவலை தங்களுக்கு வேண்டாம்! தங்கள் திட்டப்படி அனைத்து செயல்களையும் முன்னெடுங்கள்!” எனத் தெரிவித்தான் காளன்.

அங்கு சிறிது நேரம் நிசப்தம் நிலவியது! பிறகு அனைவரும் புகாரை நோக்கிய பயணத்தைத் தொடங்க, காளனையும் அவர்களுடன் அழைத்தனர். அதற்குக் காளன், “அரசே, முக்கியத் தளபதிகள் அனைவரும் தங்களுடன்

புகாருக்கு வருகைத் தருகின்றனர். உறைந்தைக் கோட்டை பற்றிய முழு தகவல்களும் தெரிந்த ஒருவர் உறைந்தையில் காவலுக்கு இருப்பது மிகவும் அவசியம்! நான் உறைந்தை செல்கிறேன். நீங்கள் வெற்றியுடன் திரும்புங்கள்!" எனக் கூறி அவர்களின் மறுமொழியைக் கூட எதிர்பாராமல் திரும்பிச் சென்றவனின் கண்களில் பலவித ரகசிய திட்டங்கள் வந்து சென்றதை பின்னால் நின்ற அவர்களால் கவனிக்க இயலவில்லை!

யுவராஜன் முன்னால் புரவியில் செல்ல, வைதீகரும், மாமன்னரும் பாதுகாப்பு வீரர்கள் சூழ புரவித் தேரில் பயணத்தைத் தொடங்கினார்கள். "வைதீகரே, புகாரில் நிலைமை எப்படி உள்ளது! நமது திட்டப்படி தானே அனைத்தும் நடக்கிறது?"

"ஆம் அரசே! இதுவரை நமது திட்டத்தில் சிறு பிசகும் ஏற்படவில்லை. புகாரின் அரசியல் நிலைமை நமக்குச் சாதகமாகத் தான் இருக்கிறது. செங்குவீரன் இறந்துவிட்ட செய்தி அவனது உபதளபதிகளுக்குத் தெரியாது! மேலும், உபதளபதிகளுக்குள் பிளவு நேர்ந்துவிட்டதாக ரகசியச் செய்தி கிடைத்துள்ளது. டாள்தொபியாஸ் வளவனாரின் உத்தரவுக்குக் கட்டுப்பட மறுக்கிறான். சிலர் வளவனாருக்குக் கீழ்ப்படிகின்றனர். புகார் வீரர்களுக்கு மேலிடத்திலிருந்து இரு விதமான கட்டளைகள் வந்துகொண்டிருப்பதால் அனைவரும் குழம்பிப் போய் இருக்கிறார்கள்! அதிலும், உங்களைப் புகாருக்குள் அனுமதிக்கக் கூடாதென சில தளபதிகள் பிடிவாதமாகக் கூறுகிறார்களாம். இங்கு கிடைத்த வரவேற்பு உபசாரங்கள் நமக்குப் புகாரில் கிடைக்கும் என எதிர்பார்க்கக் கூடாது!"

"செங்குவீரன் மடிந்துவிட்ட நிலையில் உபதளபதிகளின் பிளவு நமக்கு ஏற்ற சூழல் தான்! உறைந்தையிலிருந்து வேண்டிய படை வீரர்கள் இந்திரத் திருவிழாவைக் காண செல்லும் மக்களைப் போன்று ஏற்கெனவே ஊடுருவிவிட்டனர். தங்கள் மாளிகையில் பதுக்கி வைத்திருக்கும் ஆயுதங்களை அவர்களுக்கு எப்படிப் பகிரப் போகிறீர்கள்? முழு செயல் திட்டத்தையும் விரிவாகக் கூறுங்கள்?"

"புகாரை நாம் கைப்பற்றப் போவது நாளையே கிடையாது அரசே! சில தினங்கள் தாங்கள் புகார் விருந்தினராக அரண்மனையில் தங்கி

செல்வந்தர்கள், வணிகர்கள், அமைச்சர்கள், போர் வீரர்கள், தளபதிகள் முதலானவர்களை சந்திக்க வேண்டும். பிறகு அனைத்து கோயில் மற்றும் கோட்டங்களுக்கும் நிலம் மற்றும் தானம் வழங்கிப் பட்டயம் எழுதிக் கொடுங்கள்! அவர்களின் ஆதரவை முதலில் பெறுவோம். இன்னும் மூன்று தினம் கழித்துப் புகாரில் புரவித் தேர் போட்டி நடக்கும் திடலில் தான் நமது திட்டத்தை அரங்கேற்றப்போகிறோம். புகாரில் நடக்கும் விளையாட்டுகளில் மிகவும் பிரசித்தி பெற்ற போட்டி புரவி ரதப் போட்டி! அங்கு தான் மொத்த மக்கள் கூட்டமும் நிரம்பியிருக்கும். அதில் வெற்றி பெறுபவனுக்குப் பரிசினை வழங்கிவிட்டு, அதே மேடையில் தங்கள் மகனுக்குப் புகார் மன்னராக முடிசூடுவோம்! திடலைச் சூழ்ந்து அமைக்கப்பட்டிருக்கும் பண்டகசாலையில் விற்கப்படும் ஆயுதங்கள் அனைத்தும் நமது உறைந்தை வீரர்களுக்கே அளிக்கப்படும்! கூட்டத்தோடு கூட்டமாக நிற்கும் நமது வீரர்களை அழைத்துக்கொண்டு அரண்மனைக்குள் நுழைந்து நம்மை எதிர்த்த அனைத்து உபதளபதிகளையும் கைது செய்வோம்! புகார் கோட்டையில் தஞ்சம் புகுந்திருக்கும் இரும்பிடர்த்தலையனையும் கொல்வோம்! புகார் விழுந்த பிறகு நமது அடுத்த படையெடுப்பு அழுந்தூரை நோக்கித்தான். அந்தக் கிழவனையும் தீர்த்துக்கட்டி விட்டால் தங்களை எதிர்க்க தமிழகத்தில் ஒருவனுமே கிடையாது! எப்படி அரசே நமது திட்டம்?"

"பிரமாதமான திட்டம் பிரம்மாயரே! செங்குவீரன் உயிரோடு இருந்திருந்தாலும் நமது திட்டத்தை எதிர்த்து அவனால் வெற்றி பெற இயலாது! நினைத்த காரியம் முடியும் வரை இத்திட்டத்தை ரகசியமாக வைத்திருப்போம்!" எனக் கூற வைதீகரும் "ஆமாம்" எனும் தொனியில் தனது முன்புறம் மழித்த மண்டையை ஆட்ட அவரது பின் குடுமி மட்டும் வேகமாக ஆடியது.

ஆனால், அவர் ரகசியம் எனக் கூறியதை அவர்கள் இருவரும் அல்லாத மூன்றாமவனான புரவிச் சாரதியும் கேட்டுக்கொண்டு வந்ததை அவர்கள் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை!

புரவித் தேர் புகாரை நெருங்கிக்கொண்டிருந்தது. இன்னும் ஒரு நாழிகைப் பொழுது பயணித்தால் மன்னர் உறைந்தையை அடைந்துவிடுவார்.

புகாரை நெருங்க நெருங்க மன்னரின் ஆர்வமும், எதிர்பார்ப்பும் அதிகமாகிக்கொண்டே சென்றது. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஏனெனில் உலகப் புகழ் பெற்றிருந்த பட்டினமான புகாரைப் பற்றி அவர் பலவாறு கேள்விப்பட்டிருக்கிறார். பலரும், பலவாறு அதன் செல்வச் செழிப்பைக் குறிப்பிட்டுக் கூறும்போது அவரது ஆசை பலவாறு பெருகும். அப்பேர்ப்பட்ட பட்டினம் இன்னும் சில தினங்களில் தனது காலடியின் கீழ் விழப்போவதை எண்ணியவரின் கண்களில் பிரமிப்பும், மகிழ்ச்சியும் தழும்பியது. புகாருக்குள் நுழையும்போது செங்குவீரனின் உபதளபதிகளின் பாவனை மற்றும் செயல்கள் எப்படிப்பட்டதாக இருக்கும்? இரும்பிடர்த்தலையனின் திட்டம் என்னவாக இருக்கும்? அவனை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்? இரும்பிடர்த்தலையனின் இரு பெரும் நம்பிக்கைகளான வளவன் மற்றும் செங்குவீரன் என இருவரையும் தீர்த்துக்கட்டி விட்டோம். இருப்பினும் பெரும் திறமைசாலிகளான அவனது உப தளபதிகள் மூவரையும் எப்படி அவர்களின் கோட்டையிலேயே எதிர்கொள்வது? உபதளபதிகள் புகாருக்குள் தான் நுழைவதைத் தடுத்தால் அதனை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்? என நினைத்தபடியே சென்றவருக்கு பெரும் ஆச்சர்யம் காத்திருந்தது.

புகாரை நெருங்கியவுடன் சாலைகளின் இருபுறமும் வண்ணக் கொடிகள் கட்டப்பட்டு அமர்க்களமாக வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது! தான் நுழையும் போது நிச்சயம் மதிற்பாலத்தை உயர்த்தி கோட்டைக் கதவுகளை அடைத்துவிடுவார்கள்? என எதிர்பார்த்தே உள்ளே சென்றார். ஆனால், அவரது எதிர்பார்ப்பிற்கு மாறாக சாலையோரம் நின்ற டாள்தொபியாஸ் அவரை வரவேற்றான். அவன் கையை உயர்த்தியதும் மன்னர் அமர்ந்திருந்த புரவித் தேரின் மீது மலர்களைத் தூவினார்கள் பெண்கள். டாள்தொபியாசைக் கண்ட மன்னர் புரவித் தேரிலிருந்து கீழே இறங்கினார். அவரைக் கண்ட டாள்தொபியாஸ் தனது அருகில் நின்ற இரு பெண்களுக்கு கண் காட்ட ஓடி வந்த இருவரும் மன்னருக்கு ஆரத்தி எடுத்து திலகம் சூட்டினார்கள்! உடனே அரண்மனையில் இருக்கும் மாளிகை வரை மன்னர் நடக்க சிவப்புப் பட்டுக் கம்பளம் விரிக்கப்பட்டது. முரசு, பறை முதலியன விண்ணைப் பிளக்கும் அளவிற்கு அடிக்கப்பட்டு இருங்கோவேள் எதிர்பாராத வரவேற்பு அளிக்கப்பட்டது.

வரவேற்பைக்கண்டுத் திக்குமுக்காடிப்போன இருங்கோவேள் அருகில் நின்ற டாள்தொபியாசை அழைத்து, “நீ தான் யவனத் தளபதி டாள்தொபியாசா?” என வினவினார்.

“ஆம் அரசே! மன்னர் என்னைப் பற்றி அறிந்துவைத்துள்ளது எனதுப் பெரும் பாக்கியம்!” என அடக்கத்துடன் பதிலளித்தான்.

“வாருங்கள் அரண்மனைக்குள் செல்வோம்!” என அழைத்தவன் அருகில் நின்ற உப தளபதி திருக்கண்ணனின் காதில் ஏதொ தெரிவித்துவிட்டு வந்தான். அவன் என்ன பேசினான் என அப்போது மன்னருக்குப் புரியவில்லை! பட்டுக் கம்பளத்தில் நடந்தபோது, மலர் தூவிய பெண்களால் அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரங்களைக் கண்டு மகிழ்ச்சியுடன் டாள்தொபியாசிடம் பேசிக்கொண்டே வந்தவர் தான் மட்டும் வருவதைப் போல உணர்ந்துத் திடீரென்றுத் திரும்பிப் பார்த்தார். அவரைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்த அவரது பாதுகாவலர்கள், உப தளபதிகள், அமைச்சர்கள், வைதீகர் என யாரையுமே காணவில்லை. அனைவரும் உப தளபதி பரதவன் குமாரனால் தடுக்கப்பட்டிருந்தனர்!

தான் மட்டும் தனித்துச் சிக்கிக் கொண்டதை உணர்ந்த மன்னர் இருங்கோவேள் ஒருகணம் திகைத்துவிட்டார். அவர் படபடப்பாவதை உணர்ந்த டாள்தொபியாஸ், “அரசே! கவலை வேண்டாம். நான் தான் அவர்களை பின்னாலே தடுக்கச் சொல்லிக் கட்டளையிட்டேன். தாங்கள் புகாரில் இருக்கும் வரை தங்களுக்கு எந்தத் துயரும் நேராது. அதற்கு நான் பொறுப்பு! கவலை வேண்டாம்” என அவரது கண்களில் தனது பார்வையை நிலைக்கவைத்தபடியே கூறினான்.

“அவர்களை ஏன் தடுத்து நிறுத்தியுள்ளாய்?”

“அரசே, உங்களைக் கொன்று அந்தப் பழியை எங்கள் மீது சுமத்த சிலர் உங்கள் படைப்பிரிவிற்குள் ஊடுருவியுள்ளதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது! ஆதலால் தான் உங்களின் மேலான பாதுகாப்பைக் கருதி உப தலைவரின் உத்தரவுப்படி நானே அந்தப் பொறுப்பை ஏற்றுள்ளேன்!” என்றான்.

அவன் கூறியதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த இருங்கோவேள், "என்னைக்கொல்ல என் படையில் ஒற்றர்கள் ஊடுருவியுள்ளார்களா?"

"ஆம் அரசே!"

"இது முட்டாள் தனமாக இல்லை?" ஏளனத்துடன் கேட்டார் மன்னர்.

"அரசே, சில தகவல்களை முட்டாள்தனமாக எடுத்துக்கொண்டால் அதன் விளைவு விபரீதமாக இருக்கும் என்பது உபதலைவரின் கருத்து. ஆதலால் தங்களைக் கொலை செய்ய சிலர் முயலும் முயற்சியை என்னால் முட்டாள் தனமாக எடுத்துக்கொள்ள இயலாது!" எனப் பொறுப்புடன் பொறுமையாகப் பதிலளித்தான் யவனத் தளபதி டாள்தொபியாஸ்.

"என்னைக் கொன்று புகார் உபதளபதிகள் மீது பழி போடுவார்கள் என்றாயே? அவ்வளவு துணிச்சல் எவனுக்கு இருக்கிறது டாள்தொபியாஸ்!"

"ஏன் அரசே! வில்லவன் என்பவன் தங்கள் படையில் தானே இருந்தான். அவன் ஒற்றன் என்பதையே தாங்கள் இப்பொழுது தானே அறிந்திருப்பீர்கள்! அவனைப் போன்று இன்னும் யாரேனும் நம்பிக்கையுடன் ஊடுருவியிருந்தால்...?" எனப் பாதி வாக்கியத்துடன் நிறுத்தினான் டாள்தொபியாஸ்.

அவனது கேள்விக்கு எந்த மறுப்பையும் அளிக்க இயலாமல் மன்னர் திணறினார். அதைக்கண்ட டாள்தொபியாஸ், "ஆதலால் தான் அரசே! உங்களுக்குக் கடும் பாதுகாப்பினை வழங்க உப தலைவரின் நம்பிக்கையான வீரர்களுக்கு ஆணையிட்டுள்ளேன்" என்றான்.

டாள்தொபியாஸ் கூறுவதைக் கேட்ட மன்னர் திருப்தியுடன், "நீ கூறுவதும் ஒரு விதத்தில் சரி தான் டாள்தொபியாஸ்! புகாரில் இப்படிப்பட்ட வரவேற்பு எனக்குக் கிடைக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை. அனைத்தையும் ஏற்பாடு செய்தவன் நீ தானா?"

"நான் இல்லை அரசே! நான் வெறும் கருவிதான்!"

"கருவியா?"

"ஆம்!"

“அப்படியெனில் ஆணையிட்டவன்?” என்றபடியே டாள்தொபியாசின் பதில் என்னவாக இருக்கும் எனப் பெரும் ஆர்வத்தில் அவனையே நோக்கலானார். இரும்பிடர்த்தலையரின் முயற்சி அனைத்தும் தகர்க்கப்பட்டு விட்டதால் அவர் தான் சமாதானம் பெற முயன்றிருப்பார் என்ற எதிர்பார்ப்பில் வினவினார் மன்னர் இருங்கோவேள்.

ஆனால், டாள்தொபியாஸ், “உப தலைவர் தான் அப்பணியை எனக்கு வழங்கியவர் அரசே!” எனச் சிரித்தபடியே பதிலளித்தான்.

உப தலைவன் என்ற சொல்லைக் கேட்டதும் அவரது கழுத்தில் நீண்ட வாளை வைத்து மிரட்டிவிட்டுச் சென்ற விறல்வேலின் நினைவு வர, அவன் தான் மாளிகையிலேயே மடிந்துவிட்டானே! என நம்பிக்கை கொண்டு, “உப தலைவனா? எந்த உபதலைவன்?” என வினவினார்.

“செங்குவீரரைத் தான் அரசே குறிப்பிடுகின்றேன். அவர்தான் உங்களை உபசரித்துப் பாதுகாப்பளிக்க உத்தரவிட்டுள்ளார்!”

செங்குவீரன் உத்தரவிட்டுள்ளான் எனக் கேட்டதும் எங்கே அவன் மடியவில்லையா? எப்படித் தப்பினான்? என்ற குழப்பத்துடன் சற்று நடுங்கவே செய்தார். நடுக்கத்தை மறைத்துக் கொண்டவர், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, “செங்குவீரனா? நானே அவனைப் பார்க்க வேண்டும் என்றிருந்தேன். எங்கே அவன்? எப்போது உனக்குக் கட்டளையிட்டான்?” என அடுத்தடுத்த கேள்விகளைப் பரபரப்புடன் கேட்கலானார்.

செங்குவீரன் என்ற பெயரைக் கேட்டதும் இருங்கோவேள் பதற்றமடைந்து பரபரப்பானதைப் பார்த்த டாள்தொபியாஸ், “சமீப நாட்களாக உப தலைவரைக் காணவில்லை! சில கிழமைகளுக்கு முன் உப தலைவர் எனக்குக் கட்டளையிட்ட பணி இது! நாங்களும் தங்களைப் போலவே அவரைப் பார்ப்பதற்குக் காத்திருக்கிறோம். விரைவில் வந்துவிடுவார் என நம்புவோம்!” எனக் கூறியபடியே அவர் தங்க வேண்டிய மாளிகையை நோக்கி நடத்திச் சென்றான்.

உப தலைவன் அங்கு இல்லை என்ற டாள்தொபியாசின் வாயிலிருந்து வந்த செய்தியைக் கேட்ட பிறகுதான் மன்னரது மனம்

நிம்மதியடைந்தது. இறந்த உபதலைவன் திரும்பி வருவான் எனக் காத்திருப்பதாக இவன் கூறுகிறானே, இவர்கள் உப தலைவன் மீது வைத்திருக்கும் அன்பையும், பற்றையும் எண்ணி வியந்தபடியே அவருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாளிகைக்குள் நுழைந்தார்.

மாளிகைக்குள் நுழைந்ததும் சில யவனப் பெண்கள் வாசலுக்கு வந்து அவரை அழைத்துச் சென்றார்கள். அவருக்கு வேண்டிய அனைத்து வசதிகளும் நிரம்பப்பெற்ற மாளிகை அது. மாளிகையின் பிரமாண்ட அழகினைக் கண்டு மயங்கியபடியே பார்வையைத் திருப்பியவரின் மனதில் திகில் திடீர் எனச் சூழ்ந்துகொண்டது. அவரது மாளிகையைச் சூழ்ந்து யவனக் காவல் வீரர்கள் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தார்கள். ஒவ்வொருவனும் ஒரு மாமிசக் குன்றைப் போன்று ஆஜானுபாகுவான உடல் அமைப்பைக் கொண்டு இடையில் நீண்ட வாளையும், கையில் பெரும் ஈட்டியையும் தாங்கிக்கொண்டு அணிவகுத்து நின்றனர்.

இருங்கோவேளிடம் வந்த டாள்தொபியாஸ், “அரசே, இவர்கள் தான் நீங்கள் புகாரில் இருக்கும் வரை உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப் போகிறார்கள்! இனி, இவர்களைக் கடந்து காற்று உங்களைத் தீண்ட வேண்டுமானும் எனது அனுமதி தேவை! ஓய்வெடுங்கள் அரசே! தாங்கள் யாரையாவது சந்திக்க அல்லது வெளியில் செல்ல வேண்டுமானால் என்னிடம் தகவல் தெரிவிக்கப்பட்டு அந்த இடம் சோதனை செய்யப்பட்ட பிறகு தாங்கள் செல்லலாம்! தங்கள் பாதுகாப்பிற்கு முழு ஒத்துழைப்பை அளிப்பீர்கள் என நம்புகிறேன்!” என்ற படியே அங்கிருந்துக் கிளம்பினான். அதனைக் கண்ட மன்னர், “டாள்தொபியாஸ் என்னுடன் வந்தவர்கள் அனைவரும் எங்கே?” என வினவினார்.

“தங்களைப் போன்றே அனைவரையும் தனித்தனி மாளிகையில் பாதுகாப்பாகத் தங்க வைத்துள்ளேன். அதனைக் காணத்தான் செல்கிறேன்!” எனக் கூறிவிட்டு அவரது மறுமொழியை எதிர்பாராமல் அங்கிருந்துக் கிளம்பினான்.

ஒரு சாமப் பொழுது மன்னர் மாளிகைக்குள் ஓய்வெடுத்தார். பிறகு, புகாரைக் கைப்பற்றத் தீட்டிய திட்டங்கள் அனைத்தும் எந்த நிலையில்

இருக்கிறது எனத் தெரிந்துகொள்ள வைதீகரைக் காண வேண்டும் எனச் செய்தி அனுப்பினார். எந்த பதிலும் இல்லை. சரி நாமே கிளம்பிச் சென்று அவரைச் சந்திக்கலாம் என எண்ணி வைதீகரைத் தேடிப் புறப்பட்டு மாளிகை வாசலைக் கடக்க முயன்றார். அவரைத் தடுத்த யவனக் காவல் வீரர்கள், “அரசே, எங்கள் தளபதியின் கட்டளையில்லாமல் உங்களை வெளியே அனுமதிக்க இயலாது!” எனத் தடுத்தனர்.

ஒரு கணம் தான் தங்கியிருக்கும் மாளிகையைத் திரும்பிப் பார்த்தார். அந்தக் காவல் வீரர்களையும் கவனித்தார். அப்போது அவருக்கு ஒரு சந்தேகம் எழுந்தது, “நான் இங்கு விருந்தினராக இருக்கிறேனா அல்லது மாளிகைக்குள் சிறை வைக்கப்பட்டிருக்கிறேனா என்று?”

# 46. இற ந்தவன் வந்தான்?

செங்குவீரன் இல்லாத புகாரை முழுவதும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்திருந்தான் டாள்தொபியாஸ். இளவல் மற்றும் செங்குவீரனைப் பற்றி பல விதமான வதந்திகள் வந்துகொண்டிருந்தன. இருங்கோவேளின் தரப்பிலிருந்து செங்குவீரனும், இளவலும் மடிந்துவிட்டார்கள் என்ற செய்தியே தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்ததால் செய்வதறியாது திகைத்த டாள்தொபியாஸ், தலைவர் உயிரோடு இருந்திருந்தால் நிச்சயம் இந்நேரம் தனக்கு செய்தி அனுப்பியிருப்பார் என நினைத்து வருந்தினாலும் மனம் தளராமல் வேண்டிய ஏற்பாடுகளை செய்துகொண்டிருந்தான். எதிரிகள் குறிப்பிடுவதைப் போன்று தலைவர் மாளிகைத் தீயில் இறக்கவில்லை என்பதை மட்டும் தீர்க்கமாக அறிந்திருந்த டாள்தொபியாஸ், தலைவர் நிச்சயம் தக்க சமயத்தில் இளவலோடு வருகைத் தருவார் என்றப் பெரும் நம்பிக்கையில் வேண்டிய கட்டளைகளைப் பிறப்பித்துக்கொண்டிருந்தான். செங்குவீரன் கூறியதைப் போன்று இருங்கோவேளை வரவேற்க ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில் தான் வஞ்சி மா நகரில் இருந்து வானவல்லியை வில்லவன் அழைத்துக்கொண்டு வந்திருந்தான். நடந்த நிகழ்வுகளைக் கேட்டுத் தெரிந்துகொண்ட டாள்தொபியாஸ் கடும் கோபத்துடன், “என்ன துணிச்சல் இருந்திருந்தால் இத்தகைய செயலைச் செய்யத் துணிந்திருப்பார்கள்! அவர்களுக்குத் தகுந்த பாடம் புகட்டுகிறேன்!” எனக் கூறியவன் பிறகுதான் உறைந்தையிலிருந்து வந்திருக்கும் ஒவ்வொருவரையும் அன்பாக உபசரித்து வானவல்லியை சிறை வைக்க முயன்றதைப் போன்றே அனைவரையும் தனித்தனி மாளிகையில் சிறை வைத்தான்.

செங்குவீரன் இல்லாத அபாயகரமான சூழலில் இருங்கோவேளுக்கும் புகாரைக் கைப்பற்ற ஊடுருவியிருக்கும் உறைந்தை வீரர்களுக்கும் இடைப்பட்ட தகவல் தொடர்பைத் துண்டித்துவிட்டாலே எதிரிகளை முடக்கிவிடலாம் எனத்

திட்டமிட்டே கடும் பாதுகாப்புடன் மாளிகைக்குள் அடைத்தவன் வெளியிலிருந்து யாரும் அவர்களை தொடர்பு கொள்ளாத வண்ணமும் கவனித்துக்கொண்டான்! மன்னரிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் வெளியில் செல்ல வேண்டும் எனக் கிடைத்த செய்திகள் அனைத்தையும் புறந்தள்ளிவிட்டான். அதே நேரம் மன்னரைக் காண அரண்மனைக்குள் புக முயன்ற வேந்தனின் ஒற்றர்களையும் தயவு கொள்ளாமல் கொன்று குவித்தான்.

'பாதுகாப்பு அளிக்கிறேன்' என்ற பெயரில் இருங்கோவேள், யுவராஜன், வைதீகர் மற்றும் உறைந்தைத் தளபதிகளை சிறைவைத்த மூன்றாம் நாளில் டாள்தொபியாஸ் வானவல்லியை அழைத்துக்கொண்டு யுவராஜனை அடைத்து வைத்திருந்த மாளிகைக்குச் சென்றான்!

மாளிகைக்குள் சென்ற வானவல்லி, "என்ன யுவராஜரே! டாள்தொபியாசின் உபசரிப்பு எப்படி உள்ளது?" என யுவராஜனைப் பார்த்து ஏளனத்துடன் கேட்கலானாள்.

அவளைக் கண்ட யுவராஜன், "பெண்ணே, இவையனைத்தும் உனது ஏற்பாடு தானா?" என அவள் மீது கோபம் கொண்டு வெகுண்டெழுந்தான்.

"மூடனே, என்னையா சிறை வைக்க முயன்றாய்? இன்னொரு முறை என்னிடம் உன் அதிகாரத்தைக் காட்ட முயலாதே! என் மார்க்கத்திலும் குறுக்கிடாதே, பின் விளைவுகள் உன் எதிர்பார்ப்பையும் கடந்து அபாயகரமானதாக இருக்கும்!" என எச்சரிக்கை செய்தவள் டாள்தொபியாசை அழைத்து, "இவனை அடைத்து வைத்திருப்பதால் நமக்கு எந்தப் பயனும் இல்லை. இன்று மாலையில் புகாரில் புரவித் தேர் போட்டி நடைபெறவிருக்கிறது. சோழ சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைப்பது மரபு! காலம் காலமாக புழங்கி வரும் மரபினை இந்தக் கயவர்களைக் கண்டு அச்சப்பட்டுச் சிதைக்க வேண்டாம். இவர்களால் என்ன செய்துவிட இயலும் என்பதையும்தான் பார்த்துவிடுவோமே! அனைவரையும் விடுவித்துவிடு!" எனக் கட்டளையிட "அப்படியே ஆகட்டும்!" எனக் கூறியவன் தனது வீரனை அழைத்து சில ரகசியக் கட்டளைகளைப் பிறப்பித்தான். அதைக்கேட்டவன், மாளிகையில் அடைத்து வைத்திருந்த

அனைவரையும் விடுவித்து இருங்கோவேள் தங்கியிருந்த மாளிகைக்கு அழைத்துச் சென்று விட்டான்.

வெளியில் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ள இயலாமல் தவித்த மன்னர் தனது மகன், வைதீகர் மற்றும் தளபதிகளைச் சந்தித்த பிறகுதான் உற்சாகமடைந்தார். அவர்களிடம் பேசியபிறகு அவர்களும் தன்னைப் போலவே மாளிகையில் சிறை வைக்கப்பட்டதை அறிந்தவர் வேறு நாட்டிலிருந்து அடைக்கலம் புகுந்த யவனனுக்கு எவ்வளவு திமிர் இருக்கும் என நினைத்து வெகுண்டெழுந்தவர், ‘‘டாள்தொபியாசை உடனே இங்கு அழைத்து வாருங்கள்!’’ எனக் கட்டளையிட்டார்.

அவரது கட்டளையைக் கேட்ட யவன வீரர்கள் முன்போன்று அலட்சியம் செய்யாமல் உடனே ஓடிச் சென்று டாள்தொபியாசை அழைத்து வந்தார்கள்.

மன்னரைப் பார்த்த டாள்தொபியாஸ், ‘‘மன்னிக்க வேண்டும் அரசே! இந்திரத் திருவிழா பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்ததால் தங்களைச் சந்திக்க இயலவில்லை! எங்கள் உபசாரத்தில் மன்னருக்குத் திருப்தி தானே!’’ எனச் சிரித்துக்கொண்டு அவரது கண்களைப் பார்த்தபடியே வினவினான்.

‘‘டாள்தொபியாஸ் உனக்கு எவ்வளவு செருக்கு இருந்திருந்தால் எங்கள் அனைவரையும் தனித்தனியே மாளிகையில் சிறை வைத்திருப்பாய்! நான் உன்னைச் சந்திக்க வேண்டும் எனப் பல முறை சொல்லி அனுப்பியும் நீ செவி சாய்க்கவில்லை. உனது வீரர்களும் எனக்குப் பணியவில்லை! உன் மனதில் என்ன நினைத்திருக்கிறாய்?’’ எனக் கடும் கோபத்துடன் வினவினார்.

‘‘அரசே! நீங்கள் அனுப்பிய செய்தி எனது காதுகளுக்கு எட்டியது! வெளியே வந்தால் எங்கே உங்கள் உயிர் பறிக்கப்பட்டு விடுமோ என அஞ்சியே உங்களை மாளிகையை விட்டு வெளியேற அனுமதிக்க வேண்டாம் என நான்தான் எனது வீரர்களுக்குக் கட்டளையிட்டிருந்தேன்!’’

‘‘என்ன உளறுகிறாய் டாள்தொபியாஸ்?’’

‘‘அரசே, நான் கூறுவது உளறல் அல்ல! உங்கள் உயிருக்கு உண்மையிலேயே ஆபத்து உருவாகியிருந்தது. புகாரில் உங்களை வரவேற்ற

போதே தெளிவாகத் தெரிவித்திருந்தேன். நீங்கள் புகாரில் இருக்கும் வரை உங்கள் உயிருக்கு நான் தான் பொறுப்பு என்று! அதன்பொருட்டே சிலக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து மன்னரின் கோபத்திற்கு ஆளாகிவிட்டேன்!'' எனப் பணிவுடன் தெரிவித்தான் டாள்தொபியாஸ்.

''டாள்தொபியாஸ், செய்த குற்றத்திற்குக் காரணத்தைக் கற்பிக்காதே! மன்னருக்கு யாரால் ஆபத்து? உடனே கூறு! அவர்களை நாங்களே வெட்டிக் கொன்றுவிடுகிறோம்!'' என இருங்கோவேளின் தளபதிகளுள் ஒருவன் வெகுண்டெழுந்தான்.

''தளபதியாரே, நானே அவர்களைக் கொன்றுவிட்டேன். அந்தச் சிரமம் தங்களுக்குத் தேவையில்லை!'' எனக் கூறியவன் தன் வீரனிடம், ''பக்கத்து அறையில் கட்டி வைத்திருக்கும் சாக்கு மூட்டையை உடனே இங்குத் தூக்கி வா!'' எனக் கட்டளைட்டான்.

''அரசே! சாக்கு மூட்டை வரட்டும். பிறகு நான் செய்தவை குற்றம் எனத் தாங்கள் எண்ணினால் கழுவிலேறி என்னை நானே மாய்த்துக்கொள்கிறேன்!'' எனக் கூறிவிட்டு அடக்கத்துடன் நின்றான்.

டாள்தொபியாஸ் கூறியதைக் கேட்ட அனைவரும் சாக்கு மூட்டையில் என்ன இருக்கிறது? என்பதை அறியப் பெரும் ஆவல் கொண்டனர். அந்த நேரத்தில் புகார் வீரன் சாக்கு மூட்டையைத் தூக்கி வந்து டாள்தொபியாசின் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றான். அவனைக் கண்ட டாள்தொபியாஸ், ''எனது முகத்தை ஏன் பார்த்துக்கொண்டு நிற்கிறாய் வீரனே? சாக்கினை அவிழ்த்து தலைகீழாகக் கொட்டு!'' எனக் கட்டளையிட்டான்.

புகார் வீரன் சாக்கினை அவிழ்த்து தலைகீழாகக் கொட்ட, சாக்கிலிருந்து குறுவாள்களும், இலச்சினைப் பதக்கங்களும், வாள்களும் மற்ற சிறுசிறு ஆயுதங்களும் ஒன்றோடொன்று மோதி சத்தத்துடன் தரையில் விழுந்தன. அந்த ஆயுதங்களைப் பார்த்தபடியே அனைவரும் நிற்க மன்னர் மட்டும், ''என்ன இது?'' என வினவினார்.

அதற்கு டாள்தொபியாஸ், ''அரசே! உயிரைப் பறிக்கும் ஆயுதங்கள்!'' எனப் பதிலளித்தான்.

“உயிரைப் பறிக்கும் ஆயுதங்கள் இவை என்பது எங்களுக்குத் தெரியாதா? எதற்கு இதனை மூட்டைக் கட்டிக் கொண்டு வந்திருக்கிறாய்? எங்கே கைப்பற்றப்பட்டது?” என அடுத்தடுத்துக் கேள்விக் கணைகளை டாள்தொபியாஸ் மீது எறிந்தார் இருங்கோவேள்.

“இந்த அரண்மனையில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் தான் இவை!”

“இந்த அரண்மனையிலா?”

“ஆம் அரசே!”

“புரியவில்லை டாள்தொபியாஸ்! அரண்மனைக் காவலர்களின் ஆயுதங்களை நீ எதற்குப் பறிமுதல் செய்ய வேண்டும்?”

“அரசே, இவை அரண்மனைக் காவலர்கள் வைத்திருந்த ஆயுதங்கள் அல்ல. நீங்கள் அனைவரும் வசித்த மாளிகையில் உங்களைக் கொல்வதற்காக ஊடுருவ முயன்ற ஒற்றர்களின் ஆயுதங்கள்!”

டாள்தொபியாஸ் கூறியதைக் கேட்டவுடன் அங்கிருந்த அனைவருமே அதிர்ச்சியில் உறைந்தனர். தனக்கு எதிரிகள் என்றால் புகாரில் இருப்பவர்கள் தான்! இவர்களே நமக்குக் காவல் இருக்கும்போது கொல்ல முயன்றவர்கள் யாராக இருப்பார்கள்? என அனைவருமே ஐயம் கொண்டனர். ஆனால் வைதீகர் மட்டும் அப்படியே நிற்காமல் கீழே கிடந்த ஆயுதங்களையும், இலச்சினைப் பதக்கங்களையும் கையில் எடுத்து ஆராய்ந்தவரின் முகத்தில் கவலையின் சாயல் குடிகொண்டன. டாள்தொபியாசின் முகத்தையே பார்த்தார். பிறகு மன்னரிடம் நடந்து சென்றவர், “அரசே! இந்த ஆயுதங்கள் அனைத்தும் நமது வீரர்களுடையது. இந்த இலச்சினைப் பதக்கம் தங்களுடையது. இவனால் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் ஒற்றர்கள் அல்ல. நம்மைக் காண வந்த வீரர்கள்! அரண்மனைக்கு வெளியே இருக்கும் வேந்தனால் நம்மைக் கண்டு கட்டளையைப் பெற அனுப்பட்டவர்கள்! அனைவரையும் கொன்றுவிட்டான்! பாவி” என்றார் வருத்தத்துடன்.

இலச்சினைப் பதக்கங்களை வாங்கிப் பார்த்த மன்னர், “டாள்தொபியாஸ், இவர்களை எங்கே அடைத்து வைத்திருக்கிறாய்?” என வினவினார்.

“அரசே! ஏற்கெனவே புகாரின் சிறைக்கோட்டம் ஒற்றர்களால் நிரம்பி வழிகிறது! மேற்கொண்டு சிறையில் இடமில்லாததால் அனைத்து ஒற்றர்களையும் கொன்று புதைத்துவிட்டேன்! நான் தான் தங்களிடம் முன்பே குறிப்பிட்டேனே?”

அவனது பதிலைக்கேட்டு வெகுண்டெழுந்த மன்னர், “நீ பெரும் குற்றம் புரிந்துவிட்டாய் யவன வீரனே? எவ்வளவு துணிச்சல் இருந்தால் எனது காவல் வீரர்களையே கொன்று என்னிடமே அதற்கு விளக்கம் கூறுவாய்?”

“அரசே, அவர்கள் உமது காவல் வீரர்களா?”

“ஆம்!”

“நான் உங்களைக் கொலை செய்ய வந்த ஒற்றர்கள் என்றல்லவா நினைத்தேன்!”

“இந்த இலச்சினைப் பதக்கத்தை அவர்களிடமிருந்து கைப்பற்றிய பிறகும் அவர்கள் உறைந்தை வீரர்கள் அன்பதை அறிந்துகொள்ளவில்லையா?”

“அரசே, வஞ்சி மாநகரத்திலிருந்து வந்த வைதீகரின் சீடனிடமும் தங்களது இலச்சினைப் பதக்கம் காணப்பட்டது! அதைப்போன்றே இவர்களும் இலச்சினைப் பதக்கத்தை திருடிக்கொண்டு வந்திருக்கமாட்டார்கள் என என்ன நிச்சயம்?”

“டாள்தொபியாஸ்....?”

“அரசே, நான் முன்பே தங்களிடம் தெரிவித்தேன். உங்கள் படையிலே உங்களைக் கொல்ல சிலர் முயற்சிக்கிறார்கள் என்று! அவர்கள் ஏன் இவர்களாக இருக்கக் கூடாது?”

குறுக்கிட்ட வைதீகர், “யவனத் தளபதியாரே, உறைந்தை வீரர்கள் மீது உமக்குச் சந்தேகம் தோன்றியிருந்தால் அவர்களைக் கைது செய்து மன்னரிடத்தில் கேட்டுத் தெளிவு பெற்றிருக்க வேண்டாமா? அவசரப்பட்டா அவர்களைக் கொல்வது? படையின் தளபதி என்றால் பொறுமை வேண்டாமா? இப்படியா அவசரப்படுவது? நீ இழைத்திருக்கும் குற்றம் ராஜதுரோகம்? ராஜ

துரோகத்திற்கு எங்கள் ஊரில் என்ன தண்டனை தெரியுமா? மரண தண்டனை!'' என்றார்.

வைதீகர் கூறிய குற்றச்சாட்டைக் கேட்ட டாள்தொபியாஸ் திகைத்தான். டாள்தொபியாசின் முகத்தில் ஏற்பட்ட திகைப்பைக் கண்ட மன்னர், ''ராஜ துரோகம் இழைத்து மன்னரையே சிறைவைத்த இந்த யவனனைக் கொண்டு போய் சிறையில் அடைத்து மரண தண்டனை விதியுங்கள்'' எனத் தன் வீரர்களுக்குக் கட்டளையிட வாயைத் திறந்தார். அதற்குள் முந்திக்கொண்ட டாள்தொபியாஸ், ''பிரம்மாயரே! நீங்கள் குறிப்பிடுவதைப் போன்று இறந்த ஒற்றர்கள் அனைவரும் உறைந்தை வீரர்கள் எனவும், அவர்களிடம் இருந்த இலச்சினைப் பதக்கத்தை வழங்கியதே நம் மன்னர் தான் என்றால் அவர்கள் ஏன் திருட்டுத்தனமாக மாளிகைக்குள் பிரவேசிக்க முயல வேண்டும்? இலச்சினைப் பதக்கத்தைக் காட்டியிருந்தால் நானே மன்னர் இருந்த அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு வந்திருப்பேனே?'' எனக்கேட்டான்.

டாள்தொபியாசின் சாதுர்யமானப் பேச்சினை அந்நேரத்தில் யாருமே எதிர்பார்க்கவில்லை. மேலும் தொடர்ந்தவன், ''அரசே, மாளிகைக்குள் நுழைய முயன்றவர்களை எமது வீரர்கள் பார்த்துவிட்ட பிறகு அவர்கள் தப்பிக்க முயன்றார்கள். தப்பிக்க முயன்றவர்களைக் கொன்ற பிறகே அவர்களிடமிருந்து இந்த ஆயுதங்களையும், இலச்சினைப் பதக்கத்தையும் கைப்பற்றி எனது வீரர்கள் கொண்டு வந்தார்கள்?'' எனக் கூறி முடித்தான்.

அந்த அரங்கத்தில் பெரும் அமைதி நிலவியது! அடுத்து என்ன பேசுவது எனத் தெரியாமல் டாள்தொபியாசைத் தவிர அனைவரும் ஒருவரது முகத்தை மற்றொருவர் பார்த்துக்கொண்டார்கள். ''அரசே! இன்று மாலை புரவித் தேர் போட்டி தொடங்கவிருக்கிறது! தாங்கள் தான் கொடி அசைத்துத் தொடங்கிவைக்க வேண்டும்! அனைத்து ஏற்பாடுகளும் செய்தாகிவிட்டது. பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆராய்ந்துவிட்டு தாங்கள் வருவதற்குப் புரவித் தேரை அனுப்புகிறேன்! தயாராக இருங்கள்!'' எனக் கட்டளையிடும் தொனியில் கூறிவிட்டு அங்கிருந்துக் கிளம்பினான் யவன வீரன்!

நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் ஆராய்ந்த மன்னர், ‘‘பிரம்மாயரே, எனது இருப்பு புகாரைக் கைப்பற்ற வழிவகுக்கும் எனக் குறிப்பிட்டீர்களே! ஆனால், நான் இங்கு இருப்பது தான் பெரும் பிசகோ என நினைக்க வைக்கிறது! வேந்தனைச் சந்திக்க வேண்டும்! உடனே ஏற்பாடு செய்யுங்கள்!’’ எனக் கூறிவிட்டுத் தனது அறைக்குள் சென்றுவிட்டார்.

புகார் அரண்மனை வந்த பிறகு முதன் முதலாக வெளியே சென்ற வைதீகர் ஒரு நாழிகைப் பொழுதிற்குப் பிறகு வேந்தனைக் கையோடு அழைத்து வந்தார். வேந்தன் அரண்மனைக்குள் வருவதைக் கண்ட டாள்தொபியாஸ் அவனைப் பொருட்படுத்தவில்லை! வேந்தனைக் கண்ட மன்னர் மகிழ்ந்து, ‘‘வேந்தா நமது திட்டப்படி தானே அனைத்தும் நடைபெறுகிறது! ஏதும் இடையூறு ஏற்படவில்லையே!’’ எனச் சந்தேகத்துடன் வினவினார்.

‘‘அரசே! நமது திட்டப்படி தான் அனைத்தும் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. இதுவரை எந்தத் தடங்களும் ஏற்படவில்லை. ஆனால் புகார் வீரர்களின் செயல்பாடுதான் எனக்கு விசித்திரமாக இருக்கிறது. நாம் புகாரைக் கைப்பற்ற முயல்கிறோம் என அறிந்தும் அவர்கள் நம்மைத் தடுக்க முயலவில்லை! அவர்களின் செயல்பாடு தான் எனக்குப் பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது!’’

‘‘அவர்களைப் பற்றிய கவலையை விடு வேந்தா! செங்குவீரன் இறந்துவிட்டான், இளவல் மறைந்துவிட்டான் என்பது அவர்களின் கவலை. உபதளபதிகளுக்குள் பிளவு ஏற்பட்டுவிட்டது. தலைமையிலிருந்து இரண்டு விதமான மாறுபட்ட கட்டளைகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆதலால் தான் புகார் வீரர்கள் எதைப்பற்றியும் கவலையின்றி இருக்கின்றனர். நாம் புகாரைக் கைப்பற்ற முனைந்தால் அவர்களும் நம் பக்கம் சாய்ந்துவிடுவார்கள்!’’

மன்னர் கூறியதைக் கேட்டு மகிழ்ச்சியுடன் நின்றுகொண்டிருந்தவனிடம், ‘‘வேந்தா, இரு நாட்களாக உம்மைத் தொடர்புகொள்ள இயலவில்லை. டாள்தொபியாசின் சூழ்ச்சியில் சிக்கிக்கொண்டோம்! என்னென்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறாய்? விரிவாகக் கூறு!’’ எனக் கட்டளையிட்டார்.

“அரசே! வைதீகர் எனக்களித்த அனைத்து பணிகளையும் சிறப்புடன் நிறைவேற்றிவிட்டேன். திறமை வாய்ந்த, நம்பகமான வீரர்கள் அனைவரும் புரவித் தேர் போட்டி நடைபெறும் கடற்கரையில் கூடியிருக்கிறார்கள்! அங்கேயே வேண்டிய ஆயுதங்கள் அனைத்தையும் கடை விரித்து விற்பதைப் போன்று விநியோகப்படுத்திவிட்டேன். அனைவரும் தங்கள் உத்தரவை எதிர்பார்த்து தயாராக இருக்கிறார்கள்! நீங்கள் கட்டளையிட்ட அடுத்த கணம் புகார் அரண்மனையும், கோட்டையும் நமது கைகளில் விழுந்துவிடும்! புரவித் தேர்ப் போட்டி நடைபெறும் இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மேடையிலேயே தங்கள் மகனுக்கு புகார் மன்னனாக முடிசூட்டிவிடுவோம்! அதற்குரிய ஏற்பாட்டையும் முழு வீச்சில் தொடங்கிவிட்டேன்!”

“நல்லது வேந்தா! சிறப்பான பணி!”

“சரி, நாழியாகிறது! டாள்தொபியாஸ் அனுப்பிய புரவித் தேர் வந்துவிட்டது. வாருங்கள் போட்டியைத் தொடங்கிவைப்போம்! யுவராஜனையும் விரைவில் வந்து சேரச் சொல்லுங்கள்!” எனக் கூறிய வைதீகர் மன்னர் மற்றும் வேந்தனை புரவித் தேர் போட்டி நடக்கும் கடற்கரைக்கு அழைத்துச் செல்லலானார்.

ரதப் போட்டி நடைபெறும் திடல் குணக்கடலில் காவிரியாறு சங்கமிக்கும் இடத்தில் காணப்பட்டது. ஒரு புறம் குணக் கடலின் நீராலும் மறுபுறம் மக்கள் திரளாலும் நிரம்பியிருந்தது திடல். திடலின் ஓரமாகப் பிரம்மாண்டமாக மேடை அமைக்கப்பட்டிருந்தது. அதன் பிரம்மாண்ட தோற்றத்தையும், அலங்காரத்தையும் கண்ட மன்னர் இருங்கோவேள் யுவராஜனுக்குப் புகார் இளவரசனாக முடி சூட்ட ஏற்ற இடம் தான் என நினைத்துக்கொண்டார்.

நிரம்பியிருந்த கூட்டத்தைப் பார்த்து பிரமித்துப் போய் நின்றுகொண்டிருந்த மன்னரிடம் வந்த டாள்தொபியாஸ், “அரசே! மேடைக்குச் சென்று அமருங்கள். உங்களுக்காக இருக்கைத் தயாராக வைக்கப்பட்டிருக்கிறது” எனக் கூற மன்னர் தனது மகன் யுவராஜனையும் வைதீகரையும் அழைத்துக்கொண்டு மேடை ஏறினார்.

மூவரும் மேடையேறிய போது அருகினில் காவல் காக்க அமைக்கப்பட்டிருந்த அம்பாரியிலிருந்து வீரர்கள் மலர் தூவி ராஜ மரியாதை செய்தார்கள். மரியாதையை ஏற்றுக்கொண்ட இருங்கோவேள் கம்பீரத்துடன் தனது ஆசனத்தில் அமர்ந்தார். தனது இடப்புறம் யுவராஜனையும், வலப்புறம் வைதீகரையும் அமரவைத்துக் கொண்டார். உறைந்தையிலிருந்து வந்திருந்த சில மூத்த அமைச்சர்கள் மற்றும் தளபதிகளும் அமர்ந்துகொண்டார்கள். டாள்தொபியாசின் ஏற்பாடுகள் எந்த அளவிற்கு மகிழ்ச்சியை அளித்ததோ அந்த அளவிற்கு பீதியையும் அளிக்கத் தவறவில்லை. எப்போது என்ன நடக்குமோ? என்ற சிறு பரபரப்புடனே மன்னர் காணப்பட்டார். மேடைக்குக் கீழே நின்ற வேந்தன் மற்றும் தளபதிகளைக் கண்ட மன்னர், முக பாவனைகளாலே செயல் திட்டத்தை விசாரித்துக்கொண்டார்.

மேடையைச் சுற்றி பார்வையைச் செலுத்தினார் மன்னர். மேடையானது குணக்கடலை நோக்கி அமைக்கப்பட்டிருந்தது. குணக்கடலில் பாதுகாப்புப் பணியில் நின்றிருந்த பல மரக்கலங்களை அவர் கண்டார். அந்த மரக்கலங்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதையும் கவனிக்கலானார். மேடைக்கு வலப்புறத்தில் பாய்ந்து வரும் காவிரி நதியானது கடலில் கலக்க மற்ற இடங்கள் முழுவதிலும் மக்கள் நிரம்பியிருந்தார்கள். மேடைக்கும் காவிரி நதிக்கும் இடைப்பட்ட இடத்தில் போட்டியில் பங்கேற்றிருக்கும் புரவித் தேர்கள் அனைத்தும் அணிவகுத்து நின்றன. புகார்ப் பட்டினத் தேர்கள் மட்டுமல்லாது யவன தேசத் தேர்களும், சேர மற்றும் பாண்டியத் தேசப் புரவித் தேர்களும் போட்டியில் கலந்துகொண்டு அணிவகுத்து நிற்பதை அவர் கவனிக்கத் தவறவில்லை.

புகார் வீரர்கள் மக்கள் திரளைக் கட்டுப்படுத்திக்கொண்டு நின்றிருந்தார்கள்! மேடைக்குப் பின்புறம் உயர்ந்த கோட்டைச் சுவர் காணப்பட்டது. கோட்டைச் சுவரில் அம்பாரி அமைத்திருந்த வீரர்கள் வில்லினை ஏந்திக்கொண்டு தயாராக நின்றனர். அவர்களுக்கு அருகில் தீச்சட்டி எரிந்துகொண்டு இருந்தது. மக்கள் திரண்டிருந்த திரளிலும் வீரர்கள் கோட்டை மதிலில் நின்றதைப் போலவே அம்பாரி அமைத்துக்கொண்டு காவல் புரிந்தனர். மன்னர் அமர்ந்திருந்த மேடைக்கு முன் நூற்றுக்கணக்கான யவன வீரர்கள் வரிசையாக நின்றனர். எப்படி புகார் கோட்டையில் மன்னரை

மாளிகையில் சிறைவைத்து தனிமைப் படுத்தியிருந்தானோ அப்படியே இங்கும் செய்திருந்தான் டாள்தொபியாஸ். டாள்தொபியாசின் ஏற்பாடுகளைப் புரிந்துகொண்ட மன்னருக்குத் திகில் பிடிக்க ஆரம்பித்தது! சுற்றி நிற்கும் இந்த யவனக் காவல் வீரர்களைக் கடந்து நமது வீரர்களால் முன்னேற இயலுமா? மக்கள் கூட்டம் வேறு கடற்கரையில் நிரம்பி வழிகிறது! எனச் சிந்தித்தபடியே அமர்ந்திருந்தார்.

அந்நேரத்தில், அங்கு வந்த வேந்தன், ‘‘அரசே! நமது வீரர்கள் அனைவரும் தயாராக இருக்கிறார்கள்! மக்கள் கூட்டம் அதிகமாகிவிட்டதால் நமது வீரர்கள் கூட்டத்தோடு கூட்டமாக நின்றால் வெளியே வருவது சிரமம் என்பதால் இந்த மேடைக்கு வலப்புறமாக அனைவரையும் நிற்க வைத்துள்ளேன். இன்னும் சற்று நேரத்தில் புரவித் தேர் போட்டி தொடங்கவிருக்கிறது! கடற்கரையிலே பயணிக்கும் புரவித் தேரானது பட்டினப்பாக்கத்தின் அரண்மனை நுழைவாயில் வரைச் சென்று காவிரிக் கரையோரமாகவே பயணித்து இதே இடத்தை வந்து அடையும்! முதலில் வருபவரைக் கவுரவித்து நீங்கள் பரிசும் பட்டமும் வழங்குவீர்கள்! அதன்பிறகு மரக்கட்டைகளால் அமைக்கப்பட்டிருக்கும் தடுப்பினை உடைத்துக்கொண்டு நமது வீரர்கள் இங்கு காவலுக்கு நிற்கும் சொற்ப வீரர்களையும், புகார் தளபதிகளையும் கைது செய்து விடுவார்கள்! இங்கே தங்கள் மகனுக்கு மன்னனாக முடிசூட்டி நேரே அரண்மனைக்குள் பிரவேசிக்க வேண்டியது தான்! அனைத்து திட்டமும் கச்சிதமாக செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம்! கவலை வேண்டாம்!’’ எனக் கூறிவிட்டு துணியினால் மூடிக் கொண்டுவந்திருந்த பவளம், வைரம் மற்றும் வைடூரியங்கள் பதிக்கப்பட்ட தங்க மணிமகுடத்தையும் மேடையிலே வைத்துவிட்டு அங்கிருந்துச் சென்றுவிட்டான். கீழே நின்ற மக்கள் அனைவரும் வேந்தன் கொண்டு வந்தது பரிசுப் பொருள்தான் என எண்ணி மகிழ்ந்து ஆரவாரம் செய்தார்கள்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த டாள்தொபியாஸ் மற்றும் பரதவன் குமரன் இருவரும் மேடைக்கு வந்து மன்னரிடம் ஒரு வண்ணக் கொடியைக் கொடுத்தார்கள்! அதைப்பெற்ற மன்னர் கொடியை அசைக்க போட்டியில் பங்கு கொண்ட புரவித்தேர்கள் அனைத்தும் இலக்கை நோக்கிப் பாய்ந்தன. புரவித் தேர்கள் செல்வதையே

பார்த்துக்கொண்டிருந்த மன்னர் இவை அனைத்தும் திரும்பி வரும்போது புகாரின் தலையெழுத்து திருத்தி எழுதப்படும் என நினைத்துக் கொண்டார்.

ஒரு நாழிகைப் பொழுதிற்குப் பிறகு புரவித் தேர்கள் சில வெகு தொலைவில் புழுதி பறக்க திரும்பி வந்துகொண்டிருந்ததை மன்னர் கவனித்தார். புரவித் தேர்கள் திரும்பிவிட்டதைக் கவனித்த மன்னர் தன்னுடன் அமர்ந்திருந்த யுவராஜன் மற்றும் வைதீகரிடம் அடுத்து செய்ய வேண்டிய காரியம் பற்றி எதிர்பார்ப்புடன் விவாதிக்கத் தொடங்கினார்.

புரவித் தேர் நெருங்க நெருங்க மன்னரின் எதிர்பார்ப்பும், ஆர்வமும் அதிகமாகி புகார் விழப்போவதை வேடிக்கை பார்க்க ஆசனத்தின் நுனியில் அமர்ந்துகொண்டார். திடீரென மக்கள் ஆரவாரத்தைக் கேட்ட மன்னரது முகம் அருவருப்பை அடைந்தது. முகம் விகாரமானது. கோபம் தலைக்கேறியது. மன்னரது முகம் மட்டுமல்ல அந்த மேடையில் அமர்ந்திருந்த வைதீகர், யுவராஜன், தளபதிகள் மற்றும் அமைச்சர்கள், உறைந்தை வீரர்கள் அனைவரும் குழப்பமடைந்தார்கள். அதற்குக் காரணம் திரும்பி வரும் புரவித் தேரைக் கண்டதும் மக்கள், ‘‘வென்வேல் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி வாழ்க!’’ என ஒட்டுமொத்தமாக ஆரவாரமிட்டது தான்.

மக்களின் ஆரவாரத்தைக் கேட்ட மன்னர் தொலைவில் வந்துகொண்டிருந்த புரவித் தேர்களைக் கவனித்தார். அங்கே தொலைவில் ஒரு புரவித் தேர் பெரும்புழுதிகளுக்கிடையே அதி வேகமாக பாய்ந்து வந்துகொண்டிருந்தது! முன்னாள் வந்த அந்த புரவித் தேரினால் எழுந்த புழுதி மண்டலமானது அந்தப் பகுதியையே மறைத்திருந்தது. தான் காண்பது உண்மையா அல்லது தனது கண்களில் தான் பிழையா என எண்ணிய இருங்கோவேள் கண்களை உள்ளங்கையால் கசக்கிக்கொண்டு உற்றுப் பார்த்தார். புழுதிகளுக்கிடையில் இளஞ்சேட்சென்னியின் புரவித் தேரானது புலிக்கொடி பறக்க கம்பீரமாக பாய்ந்து வந்துகொண்டிருந்தது. பாய்ந்து வந்த இளஞ்சேட்சென்னியின் புரவித் தேரைக் கண்ட இருங்கோவேளின் உடல் அச்சத்தில் நடுங்கத்தொடங்கியது!

‘‘எங்கே பதினெட்டு வருடங்களுக்கு முன்னர் இறந்த இளஞ்சேட் சென்னிதான் உயிரோடு எழுந்து புரவித் தேரை செலுத்துகிறானா? இது எப்படி

சாத்தியம்?” என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டார்.

# 47. வி ழுந்தது புகார்

சோழ மாமன்னர் இளஞ்சேட்சென்னி மௌரியரை செருப்பாழியில் வென்று, கலகம் செய்து வந்த தென் பரதவரைப் போரில் அடக்கிப் பல்வேறு வீரச் செயல்களை செய்திருந்தாலும் உருவப்ப்ஃறேர் இளஞ்சேட்சென்னி என்றே புகழப்படுபவர். அவர் புரவித் தேரை செலுத்தும் அழகானது அவரது வீரச் செயல்களை எல்லாம் கடந்து புகழ் பெற்றிருந்தது. ஆதலால் தான் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னியை புலவர்கள் இளம்பெருஞ்சென்னி எனப் பாராட்டிப் பாடினாலும் அவரைப் ‘பொலந்தேர்மிசை பொலிவு தோன்றி’ என்றே உருவப்ப்ஃறேர் இளஞ்சேட்சென்னியைப் புகழ்கின்றனர். இந்தப் புகழ்ச்சியிலிருந்தே சென்னியின் புரவித் தேரின் தோற்றத்தையும், அவன் புரவி செலுத்தும் அழகையும் ஊகிக்கலாம்.

பொலந்தேர் என்றால் பொன்னால் ஆகிய அழகியத் தேர் என்று பொருள். இளஞ்சேட்சென்னியின் புரவித் தேரானது பொன்னாலும், யானைத் தந்தத்தாலும் செய்யப்பட்டிருக்கும். தேரின் சக்கரத்தின் கால்கள் தந்தத்தால் செய்யப்பட்டுருக்கும். சக்கரத்தின் வட்டை, நடுப்பகுதியில் இருக்கும் அச்சு, குடம் போன்ற அனைத்து பாகங்களும் தங்கத்தால் செய்யப்பட்டு கடையாணிக்கு பதில் ஒரு நீண்ட யானையின் தந்தம் சொருகப்பட்டு ஒளிர்ந்துகொண்டிருக்கும். தேரின் விமானமும் தங்கத்தால் செய்யப்பட்டு அதில் பொதிக்கப்பட்டிருக்கும் வைரம், பவளம், மரகதக் கற்கள், வைடூரியம் போன்றவற்றால் உருவான தோற்றம் பிரம்மிக்க வைக்கும். இறக்குமதி செய்யப்பட்ட நான்கு அரேபிய வெண்குதிரைகளை வரிசையாகத் தங்க இழைக் கயிற்றால் கட்டிப் புரவித் தேரானது பிரம்மாண்ட அழகுடன் பவனி வரும். ஆகாயத்தையே குடையாகக் கொண்டு புலிக்கொடி பறக்க பாய்ந்து வரும் இளஞ்சேட்சென்னியின் தேரைக் கண்டவர்கள் வானில் ரதத்தில் பரிதி வலம் வருவதாக இதிகாசங்களில் குறிப்பிடுவார்களே! அந்தப் பரிதியின் ரதமானது இளஞ்சேட்சென்னியின் புரவித் தேரைப் போன்றுதான் இருக்குமோ?

என எண்ண வைக்கும்படி பிரமாண்டங்களின் ஒட்டு மொத்த உருவமாய் காட்சியளிக்கும் இளஞ்சேட்சென்னியின் தேர்.

ஆதலினால் தான் சென்னி புரவித் தேர் செலுத்தும் அழகைக் காண ஒவ்வொரு வருடமும் புகாரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுவார்கள்! பதினெட்டு வருடங்கள் கழித்து எதிர்பாராத நேரத்தில் இளஞ்சேட்சென்னியின் அழகிய பொலந்தேர் புழுதி படர வந்துகொண்டிருந்ததைக் கண்ட மக்கள் கூட்டத்தினர் அனைவரும் தங்களை மறந்து இருங்கோவேள் மேடையில் இருப்பதையும் பொருட்படுத்தாமல், "உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி வாழ்க!" "பொலந்தேர்மிசை இளஞ்சேட்சென்னி வாழ்க!" "செருப்பாழி எறிந்த இளம்பெருஞ்சென்னி வாழ்க!" "வெற்றிவேல் சென்னி வாழ்க!" எனப் பலவாறு ஆரவாரமிட்டனர்.

மக்களின் வாழ்த்து முழக்கங்கள் போதாதென்று வானத்து மங்கையும் சிறு மேகக்கூட்டங்களை உச்சி வானில் திரளச் செய்து தூறல்களை விழச்செய்து வாழ்த்தத்தான் செய்தாள். மேற்கு வானில் நிலைகொண்டிருந்த பரிதியை உச்சி வானில் திரண்டிருந்த மேகக்கூட்டங்களால் மறைக்க இயலவில்லை. மாலை நேரத்துக் கதிரவனின் செங்கதிர்கள் தூறல்களில் விழுந்து எதிரொளித்ததால் மேகமானது பொன் துகள்களைத் தான் சென்னியின் புரவித் தேரின் மீது விழச் செய்கிறதோ என எண்ணி மக்கள் மகிழ்ச்சியில் ஆரவாரமிட்டார்கள். புரவித் தேரையும் வானிலிருந்து விழும் பொன் துகள்களைக் கண்ட பிறகு மக்களின் ஆராவாரக் கூச்சல் கணத்திற்கு கணம் அதிகமாகியது.

வேகமாக வரும் புரவித் தேரினால் எழுப்பப்பட்ட புழுதியானது அந்த மண்டலத்தையே மறைத்திருந்தது. புரவித் தேரினால் கிளம்பிய புழுதிதான் வானத்தில் மேகமாகத் திரண்டு மழையைப் பொழியச் செய்கிறதோ? என எண்ணுமளவிற்கு புரவி அதிவேகமாக வந்துகொண்டிருந்தது.

விழா மேடையை நோக்கி வந்துகொண்டிருந்த இளஞ்சேட்சென்னியின் புரவித் தேரை பதற்றத்துடனே பார்த்துக்கொண்டிருந்தார் இருங்கோவேள். புரவித் தேர் நெருங்க நெருங்க அதன் பிரமாண்ட தோற்றமும் அழகும் கண்களுக்குத் தெரிய ஆரம்பித்தது! அதிவேகமாக வரும் புரவித்

தேரில் யார் அமர்ந்திருக்கிறார்கள்? என உற்றுப் பார்த்தவரின் கண்கள் ஆச்சர்யத்தில் அகல விரிந்தது. ‘‘புரவித் தேரில் அமர்ந்திருப்பது இளஞ்சேட்சென்னி அல்லவா? இறந்தவனால் எப்படி உயிரோடு மீண்டு வர இயலும்? அதுவும் வயதாகி இறந்தவன் இப்போது இளமையுடன் அல்லவா உயிரோடு வந்திருக்கிறான்! இது எப்படி சாத்தியம்!’’ என அதிர்ச்சியுடனே வாய்விட்டுத் தனக்குத்தானே கேட்கலானார்.

அவரது கேள்வியைக் கேட்ட யுவராஜனும், வைதீகரும் என்ன பேசுவதென்று தெரியாமல் திக்பிரமை பிடித்தது போலவே புரவித் தேரையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்! அந்த நேரத்தில் மூவரின் திக்பிரமையும் களையுமளவிற்கு மக்கள் கூட்டத்திலிருந்து, ‘‘இயல்தேர் வளவன் வாழ்க! ‘‘திருமாவளவன் வாழ்க!’’ ‘‘செருப்பாழி வென்ற சென்னியின் புதல்வன் வாழ்க! ‘‘வெற்றிவேல் உருவப்பஃறேர் இளையோன் வாழ்க!’’ என வாழ்த்து முழக்கங்கள் எழுந்தன. இருங்கோவேள் புரவித் தேரை உற்றுப் பார்த்தார். செங்குவீரன் கம்பீரத்துடன் அமர்ந்து புரவித் தேரை செலுத்த பின்னால் திருமாவளவன் ஆத்திமாலை சூடி வைரம், பவளம், முத்து பதிக்கப்பட்ட தங்க இழையாலான உடை,, மரகதக் குண்டலம், நெற்றித் திலகம் மற்றும் போர் வாள் சூடி இளவரசனாகப் பவனி வந்துகொண்டிருந்தான். கோட்டைச் சுவர்களில் அம்பாரி அமைத்து நின்றிருந்த வீரர்கள் மலர் மாரி தூவ, கார் மேகம் பொன்மாரி தூவ, மக்களின் ஆரவார முழக்கச் சத்தங்களுக்கு மத்தியில் புரவித் தேரானது மேடையை நோக்கி வந்துகொண்டிருந்தது.

உப தலைவன் விறல்வேலையும், இளவரசன் வளவனையும் கண்ட இருங்கோவேளின் முகம் ஏமாற்றத்தில் கடுகடுக்க ஆரம்பித்தது! வைதீகர் மற்றும் யுவராஜனையே திரும்பத் திரும்ப புரியாமல் பார்த்தார். சென்னியின் வசந்த மாளிகையில் இறந்து போன செங்குவீரனும், வளவனும் எப்படி உயிர்பெற்று வருகிறார்கள்? கடவுளே, நான் காண்பது கனவா? அல்லது நனவா? இது எப்படி சாத்தியம்? நான் தான் ஏமாற்றப்பட்டேனா? எனப் பலவாறு எண்ணியவரின் முகமானது கோபத்தில் சிவந்து விகாரமாகியது!

புழுதி கிளப்ப வேகமாக வந்த புரவித்தேரானது மேடைக்கு முன்பு நிற்க செங்குவீரன் முதலில் புரவித் தேரிலிருந்து குதித்து தடுப்பினை நீக்க

கரிகாலனும் கீழே குதித்தார். அக்காட்சியைக் கண்ட மக்கள் கூட்டத்தினர் காண்பது கனவா? அல்லது நனவா? எனக் குழம்பியபடியே மீண்டும், ‘‘வளவன் வாழ்க!’’ ‘‘இயல்தேர் வளவன் வாழ்க!’’ ‘‘பொலந்தேர்மிசை வளவன் வாழ்க!’’ ‘‘வெற்றிவேல் வளவன் வாழ்க!’’ ‘‘வீரவேல் வளவன் வாழ்க!’’ எனப் பலவாறு ஒவ்வொருவரும் ஆரவாரமிட்டுத் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டனர்.

மக்கள் ஆரவாரத்தைக் கேட்ட இருங்கோவேள் திக்பிரமைப் பிடித்தவரைப் போல அசைவற்று நிற்க இருங்கோவேளின் தளபதிகள், வீரர்கள் சூழ்ந்த மேடைக்கு இளவலை அழைத்துச் சென்றான் விறல்வேல். ஒரே மேடையில் இருங்கோவேள், வைதீகர், யுவராஜன், செங்குவீரன், வளவன் நிற்க மக்கள் கூட்டமே அசைவற்று அக்கண நேரத்தில் செய்வதறியாது திகைத்து நின்றது. காண இயலாத அக்காட்சியைக் கண்ட குணக் கடலும் கூட அலைகளின்றி அமைதியாகவே காட்சியளித்தது!

எவ்வளவு துணிச்சலும், துணிவும் இருந்தால் வளவனைத் தன் முன்னே அழைத்து வந்திருப்பான் செங்குவீரன் என கடும் கோபம் கொண்ட மன்னர் இருங்கோவேள், ‘‘செங்குவீரா! பெரும் பிழையைச் செய்துவிட்டாய்! நீங்கள் இருவரும் இறந்துவிட்டதாய் அல்லவா நினைத்துக்கொண்டிருந்தேன்! வளவனை உயிரோடு அழைத்து வந்து அவனது இறப்பிற்கு நீயே காரணமாகப் போகிறாய்’’ என எகத்தாளத்துடன் சிரித்தவர் செங்குவீரனின் அருகில் வந்து அவனது கண்களைப் பார்த்தபடியே, ‘‘நீ முயன்றுகொண்டிருக்கும் காரியம் ஒரு நாளும் நிறைவேறாது வீரனே! முடிசூட்டிக்கொள்ளப் போகிறவன் எனது புதல்வன்! நீ கைப்பற்றி வைத்திருக்கும் புகாரை மட்டுமல்ல நீ மணக்கத் துடிக்கும் வளவனார் மகளையும் மணந்து ஆளப் போகிறவனும் என் புதல்வனே! இருவரும் சாகப்போகிறீர்கள்!’’ எனச் சத்தமிட்டு ஆக்ரோஷத்துடன் கூறலானார்!

இருங்கோவேள் கூறியதைக் கேட்டு விறல்வேலின் கோபம் தலைக்கேறி, கண்கள் சிவக்க ஆரம்பித்ததைக் கண்டவர் குரலை உயர்த்தி, ‘‘வேந்தா! இன்னும் ஏன் தாமதிக்கிறாய்! நமது திட்டங்கள் அரங்கேறட்டும்!’’ எனக் கட்டளையிட்டார்.

மன்னர் இருங்கோவேளின் கட்டளையைக் கேட்ட வேந்தனும் தனது வீரர்களுக்கு, “வீரர்களே, தாக்குங்கள்!” எனக் கட்டளையிட மேடையின் வலப்புறமாக ஒன்று சேர்ந்து திரண்டிருந்த வீரர்கள் அனைவரும் பெரும் ஆரவாரத்துடன் தத்தம் ஆயுதங்களை உயர்த்தியபடியே மரத்தினால் செய்யப்படத் தடைகளை உடைத்துக்கொண்டு முன்னேறினர். கூட்டத்தில் ஒரு பகுதியினர் இருங்கோவேளின் வீரர்கள் என்பதைக் கண்ட மக்கள் கூட்டத்தினர் அச்சத்தில் ஒருவரையொருவர் முண்டியடித்துக்கொண்டு ஓட எத்தனித்தார்கள்!

ஏற்கெனவே தனது ஒற்றர்கள் மூலம் இருங்கோவேளின் நடவடிக்கைகளைக் கண்காணித்த டாள்தொபியாஸ் தயாராக வைத்திருந்த மாற்றுத்திட்டத்தை செயல்படுத்தினான்! அவனது கட்டளைக்கேற்ப கோட்டை மதிலில் நின்றிருந்த வீரர்கள் அனைவரும் தடுப்புகளை உடைத்துக்கொண்டு முன்னேறிய உறைந்தை வீரர்களின் முன் நெருப்பு அம்புகளைத் தூவினார்கள்! ஏற்கெனவே அங்கு எரி எண்ணெய் மற்றும் கற்பூரத்தை புதைத்து வைத்திருந்ததால் அவை தீப்பற்றி வேகமாக முன்னேறிய வீரர்களைத் தடுத்துவிட்டது! மக்கள் கூட்டத்தோடு கூட்டமாக நின்ற செங்குவீரனின் வீரர்கள் அனைவரும் சரமாரியாக தாக்க பல்லாயிரக்கணக்கான உறைந்தை வீரர்கள் அனைவரும் சிதறத் தொடங்கினார்கள்.

உறைந்தை வீரர்களின் முன்னும் வலப்புறமும் புகார் வீரர்களின் எரியம்புகள் தாக்குவதால் குணக்கடல் மற்றும் காவிரியாற்றில் குதித்துத்தான் தப்ப இயலும் என்பதை உணர்ந்தவர்கள் பின் வாங்கி ஆயுதங்களைப் போட்டுவிட்டு புறமுதுகிடத் தொடங்கினார்கள்! குணக் கடலிலும், காவிரி ஆற்றிலும் மரக்கலங்களில் நின்ற வீரர்களும் ஒரே நேரத்தில் தாக்க உறைந்தை வீரர்கள் நடுவில் அகப்பட்டுக்கொண்டார்கள்! நாலாபுறமும் புகார் வீரர்கள் உறைந்தை வீரர்களைச் சூழ்ந்துகொண்டு தாக்க ஆயுதங்களைப் போட்ட பல்லாயிரக்கணக்கானவர்களும் சரணடைந்தார்கள்!

உறைந்தை வீரர்களை நோக்கி புகார் வீரர்கள் அம்பினை எய்யத் தொடங்கியதுமே நூற்றுக்கணக்கான யவன வீரர்களும் வரிசையாக நின்று கேடையத்தால் தடுப்பு அமைத்துக்கொண்டு பெரும் கவசமாக மேடைக்கு

முன் நின்று சூழ்ந்துகொண்டார்கள்! அவர்களைத் தாக்கி ஊடுருவி எவாராலும் மேடைக்கு வர இயலாது என்பதையும் இருங்கோவேள் ஊகித்துக்கொண்டார்!

பல வருடங்களாக சிறுக சிறுக செயல்படுத்திய திட்டங்கள் அனைத்தையும் கண நேரப் பொழுதில் முறியடித்து தன்னைத் தோல்வி அடையச் செய்துவிட்ட செங்குவீரனைக் கண்ட இருங்கோவேள் கடும் கோபத்தோடும், விரக்தியோடும் நின்றுகொண்டிருந்தார்!

இருங்கோவேளிடம் கோபமாக வந்த விறல்வேல், ‘‘இருங்கோ, சற்று முன் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன் கூறினாயே, முடிசூடப் போகிறவன் உன் மகன் தான் என்று! அது ஒரு நாளும் நடக்காது! முடி சூடிப் புகாரை ஆளப்போகிறவன் வளவன்!’’ என்றவன் கோபத்தோடு, ‘‘டாள்தொபியாஸ்!’’ என சத்தத்துடன் அழைக்கலானான்.

செங்குவீரன் அழைத்ததைக் கண்டு துணியால் மூடப்பட்ட ஒரு தாம்பூலத்தைக் கையில் எடுத்துக்கொண்டு வேகமாக ஓடி வந்தான் டாள்தொபியாஸ்.

மூடியிருந்த துணியை இழுத்தான் செங்குவீரன்! டாள்தொபியாசின் கையில் இருந்த புலி வடிவம் பொருந்திய வைர மணி மகுடத்தைத் தூக்கி அருகில் நின்ற கரிகாலனின் தலை மீது சூட்டிப் புகாருக்கு மன்னனாக அறிவித்தான்!

செங்குவீரன் தனக்கு முடிசூட்டுவான் எனக் கரிகாலனும் அத்தருணத்தில் எதிர்பார்த்திருக்காததால் அவர் வியப்படைந்தார். அவரது வியப்பு தோன்றி அடங்குவதற்குள் விறல்வேல், ‘‘செருப்பாழி எறிந்த, உருவப்பக்ஃறேர் இளஞ்சேட்சென்னியின் புதல்வன் சோழ மன்னர் கரிகாலன்’’ எனக் கூற சுற்றியிருந்த மக்கள் கூட்டத்தினர் அனைவரும் ‘‘வாழ்க’’ ‘‘வாழ்க’’ என முழக்கமிட்டனர்.

தொடர்ந்து மக்கள் ‘‘சோழ சக்கரவர்த்தி கரிகால் வளவன் வாழ்க!’’ ‘‘சோழ மன்னர் கரிகாற் பெருவளத்தான் வாழ்க!’’ என ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக ஆரவாரமிட்டு தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக்கொண்டார்கள்.

தனது மெல்லிய, நீண்டப் போர்வாளை உருவிய விறல்வேல் ஆரவாரமிட்ட மக்கள் கூட்டத்தை நோக்கி உயர்த்தினான். உயர்த்தப்பட்ட வாளைக் கண்டதும் மக்கள் கூட்டத்தினர் அமைதியானார்கள். கடற்கரை மணலில் பஞ்சு விழுந்தாலும் சத்தம் எழும் அளவிற்கு அந்தத் திரளே அமைதியானது! உருவிய போர் வாளினைத் தனது இடையுறைக்குள் போட்டுக்கொண்ட விறல்வேல் இருங்கோவேள் முன் வந்து நின்று, “இருங்கோ! சோழ சிம்மாசனத்திற்கான யுத்தம் இன்றோடு முடிந்துவிட்டது. ஆனால், நமக்கான யுத்தம் இன்றுதான் தொடங்கவிருக்கிறது! எப்போது வளவனார் மகளை சிறைவித்து என்னைக் கட்டுப்படுத்தலாம் என உனது மகன் எண்ணினானோ, அன்றே அவனது முடிவையும் தேடிக்கொண்டான்! இது எனது தன்மானத்திற்கும், சுய கௌவரத்திற்கும் விடப்பட்ட அறைகூவல் என்றே நான் கருதுகிறேன்! உங்கள் இருவரிடமும் எனது திறமையைக் காட்டி வெற்றிபெற நான் விரும்பவில்லை! அன்று உன்னிடம் கூறியதைப் போன்றே இன்றும் கூறுகிறேன். உறைந்தையில் உன் படையைத் திரட்டு! போர்க்களத்தில் யார் பலசாலி என்பதை நாம் முடிவுசெய்துக் கொள்வோம்! உங்களைப் போரில் தோற்கடித்தே தனக்குரிய உறைந்தை அரச உரிமையைக் கரிகாற் வளவன் மீட்பான்! வானவல்லியை சிறை பிடித்த உனது மகனையும், உன்னையும் அதே போர்க்களத்தில் கொன்று எனது பழியைத் தீர்த்துக்கொள்வேன்! அதுவரை என் காதலியின் அழகிய இளம் தோள்களை நான் தழுவப்போவதில்லை! என் சபதத்தை நான் நிறைவேற்றா விட்டால் மனதில் காதலின்றி செல்வத்திற்காகப் பல ஆடவர்களுடன் கூடும் கணிகையரின் மார்புகளைத் தழுவும் பெரும் சாபம் எனது தோள்களுக்குக் கிடைக்கட்டும்!” எனக் கோபம் பொங்க கண்கள் சிவக்க வெஞ்சினம் உரைத்த போது அங்கு நின்ற இருங்கோவேள் மட்டுமல்ல அந்தக் கூட்டமே அதிர்ச்சியில் நடுங்கிப்போனது!

தனது அரசரையும், யுவராஜனையும் போர்க்களத்தில் கொல்வேன் என வெஞ்சினம் உரைத்த விறல்வேலைக் கண்ட மலை நாட்டு வீரர்கள் இருவர் யாருடைய கட்டளையையும் எதிர்பாராமல் ஆவேசத்துடன் கத்திக்கொண்டே வாளினை உருவிக்கொண்டு விறல்வேலை நோக்கி ஓடி வந்தார்கள்! ஓடி வந்தவர்களைக் கண்டு அவர்களின் வாள்களுக்கு

அகப்படாமல் குனிந்துகொண்ட விறல்வேல் தனது வாளினை உருவி அவர்கள் இருவரையும் நோக்கி விசிறினான்! அவன் வாளினை உருவியதையும் யாரும் பார்க்கவில்லை. மலை நாட்டு வீரர்களை நோக்கி வாளினை ஓங்கியதையும் யாரும் பார்த்திருக்கவில்லை! ஓடி வந்த உறைந்தை வீரர்கள் இருவரும் என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்ள இயலாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்! அவர்கள் இருவரும் விறல்வேலைப் பார்க்க அவனது வாளிலிருந்து குருதி சொட்டிக்கொண்டிருந்தது. மீண்டும் மலைநாட்டு வீரர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பரிதாபத்துடன் பார்த்துக்கொண்டார்கள். அடுத்த கணம் அவர்களின் தலை உடலிலிருந்து தனியாகக் கீழே விழ அவர்கள் இருவரின் உடலும் மேடையில் சரிந்தன!

தனது கோபமும் ஆவேசமும் அடங்காத செங்குவீரன், ‘‘டாள்தொபியாஸ்!’’ என மீண்டும் அழைக்கலானான்.

அதைக்கேட்ட டாள்தொபியாஸ் அருகில் ஓடிவர, ‘‘டாள்தொபியாஸ் இவர்களை நான் போர்க்களத்தில் சந்திக்க விரும்புகிறேன்! இந்தக் கயவர்களைப் புகார் நகர எல்லை வரை எந்தத் தீங்கும் ஏற்படா வண்ணம் பாதுகாப்பாக நமது வீரர்களை விட்டுவரச் சொல்! இனியொரு முறை புகாரில் இவர்களை நான் சந்திக்கக் கூடாது!’’ எனக் கட்டளையிட்டவன் கோபத்தில் மூச்சு வாங்கிக்கொண்டு அருகில் நின்ற வைதீகரைப் பார்த்தவன், ‘‘இந்த மலை நாட்டுக் கயவர்களுக்கு துர்போதனை புகட்டும் இந்த வைதீகனை இனியொரு முறைப் புகாரில் பார்த்தால் இவனது தலையைக் கொய்துவிடு!’’ எனக் கட்டளையிட்டபடியே வழியில் கிடந்த மலை நாட்டு வீரனின் தலையை உதைத்தபடி அங்கிருந்து சென்றான் விறல்வேல்!

அவன் மேடையை விட்டு இறங்கியதைக் கண்ட புகார் வீரர்களும் மக்கள் கூட்டத்தினரும் ‘‘விறல்வேல் வாழ்க!’’ ‘‘செங்குவீரன் வாழ்க!’’ எனப் பலவாறு வெற்றி முழக்கமிட்டனர்! அவர்களின் வெற்றி முழக்கத்தைக் கண்டுகொள்ளாமல் ஆவேசத்துடன் கூட்டத்தைக் கடந்து சென்றபோது வழக்கமாகப் புரவித் தேர் போட்டியில் வெற்றிபெற்றுத் தனக்கு மாலையிடக் காத்திருக்கும் பல நாட்டுப் பெண்களும் ஓர் இடத்தில் கூடி நிற்பதைக் கண்டான் விறல்வேல். மேடையில் நடந்தக் களேபரத்தைக் கண்ட பெண்கள்

அனைவரும் மலர் மாலையுடன் அச்சத்துடன் நின்றார்கள்! பலநாட்டுப் பெண்களுடன் வானவல்லியும் அங்கு மலர் மாலையோடு நிற்பதைப் போல அவனது கண்களுக்குத் தோன்றியது! அந்நேரம் அவனுக்காகத் தனது உயிரையே தியாகம் செய்த விறலி பூங்கோதையின் பெருந்திணைக் காதல் அவனது நினைவிற்கு வர கலங்கிய கண்களுடன் அங்கிருந்துப் புறப்பட்டான்!

செங்குவீரனின் உத்தரவுப்படி இருங்கோவேள், யுவராஜன், வைதீகர் மற்றும் பல உறைந்தைத் தளபதிகளை பாதுகாப்புடன் அனுப்பி வைத்தான் டாள்தொபியாஸ்! திடலில் சுற்றி வளைத்துக் கைது செய்யப்பட உறைந்தை வீரர்களுள் பெரும்பாலோனோர் கரிகாலனைக் கண்டதும் கண்டதும், “வளவன் வாழ்க!” “மன்னர் வாழ்க!” என முழக்கமிட்டபடியே புகார் படைப் பிரிவுடன் இணைந்துகொண்டார்கள். இதர ஏற்பாடுகளைக் கவனித்துக்கொண்டிருந்த டாள்தொபியாஸ், திருக்கண்ணன், பரதவன் குமரன், செங்கோடன் முதலான உப தளபதிகளை அழைத்த கரிகாலன் அவர்களின் செயல்களைக் கண்டு பாராட்டிப் பரிசளித்து அவர்கள் அனைவருக்கும் படைத் தளபதிகளாகப் பதவி உயர்வையும் வழங்கினார்.

பிறகு டாள்தொபியாசை அழைத்த கரிகாலன் அவனது கையைப் பிடித்து, “யவனத் தளபதியாரே! இந்தத் தழும்பு இன்னும் மறையவில்லையா?” என வினவினார்.

கரிகாலன் வினவியதைக் கண்டு திகைத்த டாள்தொபியாஸ், “அரசே! இங்குத் தழும்பு இருப்பது தங்களுக்கு எப்படித் தெரியும்?” என ஆச்சர்யத்துடன் வினவினான்.

“உங்களை எதிர்த்துச் சண்டையிட்டவன் எனது நண்பன் தான்! உங்களிடமிருந்து வாளைப் பறித்தக் கதையைத் தினமும் என்னிடம் கூறி பெருமையுடன் தம்பட்டமடித்துக் கொள்வான்!”

“ஓ! மாடு மேய்க்கும் இளைஞன் தங்களது நண்பனா?”

“ஆம் தளபதியாரே!”

“அவனை மட்டும் நான் இனியொரு முறை காண நேரிட்டால்...!” என்றபடியே வாக்கியத்தைப் பாதியில் முடித்தான் டாள்தொபியாஸ்.

“படைத் தளபதியாரே! அவன் மீண்டும் உங்களை வம்புக்கு இழுத்தால் என்ன செய்வதாய் உத்தேசம்?”

“அவனது உருவத்தைக் கண்டு அவனைச் சாதாரணமாக நினைத்த எனது கவனமின்மையால் நான் தோற்றுவிட்டேன்! இனியொருமுறை அவனைக் கண்டு நிச்சயம் அவனை நான் வாட்போரில் வீழ்த்துவேன்!”

“அப்படியா! சிறிது நேரம் இங்கேயே காத்திருங்கள்! நான் அவனை அனுப்பி வைக்கிறேன்!” எனக் கூறிவிட்டு அங்கிருந்துத் தனது புரவித் தேரில் கிளம்பிய கரிகாலன் ஒரு நாழிகை நேரம் கழித்து யாராலும் கண்டறிய இயலாதபடி மாறுவேடமிட்டு மாடு மேய்க்கும் இளைஞனைப் போலவே சாட்டையுடன் அந்தக் கூட்டத்திற்குச் சென்றார்.

டாள்தொபியாஸ் கரிகாலனுடன் பேசியதை மற்ற தளபதிகளால் என்னவென்று புரிந்துகொள்ள இயலாமல் கரிகாலன் அங்கிருந்துக் கிளம்பிச் சென்றபிறகு டாள்தொபியாசிடம் வினவினார்கள்! டாள்தொபியாசும் மாடு மேய்த்த சிறுவன் செய்த வம்பினை விரிவாகக் கூறி அவனது திறமையைப் பற்றிப் புகழ்ந்துகொண்டிருந்தான். அந்நேரத்தில் தனக்குப் பின்னால் யாரோ வெகு அருகில் கடந்து செல்வதை உணர்ந்த டாள்தொபியாஸ் திரும்பினான். இரு வருடங்களுக்கு முன் வம்பிழுத்த அதே இளைஞன் சென்றுகொண்டிருந்தான். அவனது தோள்களைப் பற்றிய டாள்தொபியாஸ் அவன் முன் சென்று அவனது முகத்தைப் பார்த்தான்!

டாள்தொபியாசின் கண்கள் ஆச்சர்யத்தில் அகல விரிந்தது! திகைத்தான். திகைப்பிலிருந்து அவன் மீளாதவனாய், “அரசே! மன்...” என ஏதோக் கூற வாயெடுத்தான். அதற்குள் முந்தியவன், “தளபதியாரே! தாங்கள் மீண்டும் என்னுடன் போர் புரிய வேண்டும் என ஆசைப்பட்டீர்கள் அல்லவா? வாளினை உருவுங்கள்!” எனக் கட்டளையிட்டான்.

டாள்தொபியாசிற்கும், மாடு மேய்க்கும் இளைஞனுக்கும் இடையில் துவந்த யுத்தம் கடற்கரையில் தளபதிகளின் முன்னிலையில் தொடங்கியது!

திடீரென யவனத் தளபதிக்கும் சாதாரண இளைஞனுக்கும் இடையில் தொடங்கிவிட்ட வாற்சமரைக் காண மக்கள் கூட்டத்தினர் ஓடி

வந்து அவர்களை சூழத் தொடங்கி ஆரவாரமிடத் தொடங்கினார்கள்!

# 48. கர ிகாலனின் காதலி

பகற்பொழுதில் போரிட்ட வீரர்கள் அனைவரும் பொழுது சாய்ந்ததும் 'தலைவி தமக்காகக் காத்திருப்பாரே! தம்மைப் பிரிந்து வருந்துவாரே!' என எண்ணி விரைவாக வீடு சென்று சேர வேண்டும் எனப் புரவியில் வேகமாகப் பயணிப்பார்கள். காற்றினை எதிர்த்து வேகமாகப் புரவியில் பயணித்ததால் அவர்களின் விழிகள் அந்தி வானம் போன்று சிவந்து காணப்படும். குறித்த நேரத்திற்குள் தலைவர் இன்னும் வரவில்லையே என ஏங்கிக் காத்திருந்த தலைவியர், ''அவருக்காக இங்கு நான் வீட்டு வாசலையே பார்த்துக்கொண்டு காத்திருக்கிறேன். ஆனால், அவர் என்னை மறந்து அங்கு மகிழ்ச்சியாய் இருக்கிறார். இன்று அவருடன் பேசவே கூடாது!'' என எண்ணி ஊடல் கொள்ளத் தயாராக இருப்பார்கள். ஆனால் வீட்டிற்கு வந்த தலைவனைப் பார்த்ததும் தனது ஊடலை மறந்த தலைவி வாசலுக்குச் சென்று வரவேற்று அழைத்து வருவாள்.

வீட்டு விளக்கு ஒளியில் தலைவனின் சிவந்த விழிகளைப் பார்க்கையில் அது தலைவனின் காமக் குறி எனத் தவறாக கருதியள் உடனடியாக அவனுடன் போகம் செய்யப் புன்முறுவல் செய்வாள். தலைவியின் புன்முறுவலைக் கண்ட தலைவனும் தலைவியின் எண்ண ஓட்டத்தைப் புரிந்துகொண்டவனாய் அவளுடன் கூடித் திளைக்க முற்படுவான்! கலவி இன்பத்தில் களித்ததால் மனம் மயங்கிக் காணப்படுவார்கள். அவர்கள் இடையும், இடையில் அணிந்திருந்த ஆடையும் நெகிழ்ந்து போகும். மயங்கிக்கிடக்கும் அவர்கள் விளக்கின் செந்நிற ஒளிக்கும் அவர்கள் அணிந்திருந்த சிவப்பு நிற ஆடைக்கும் வேறுபாடு தெரியாமல் மதி மயங்கி விளக்கு ஒளியை ஆடையென நினைத்து எடுத்து உடுக்க முயல்வார்கள். கையை வைத்துப் பார்த்தபிறகு தான் தெரியும் தான் எடுக்க நினைத்தது உடை அல்ல அது விளக்கு ஒளி என்று! தனது பிழையை எண்ணி

வெட்கமடைந்த தலைவி நாணம் கொண்டு தலைவனின் தோளில் தனது முகத்தைப் புதைத்துக் கொள்வாள். தலைவியின் முகப் புதைப்பைத் தவறாகப் புரிந்து கொண்ட தலைவன் மீண்டும் போகத்தில் திளைக்க ஆயத்தமாவான்! இத்தகு இரவு நேரத்தில் கடற்கரையோரம் இன்பத்தில் திளைத்த பரதவரும், பரத்தையரும் காதல் பாடல்களைப் பாடியவாறே இரவினைக் கழிப்பர். தலைவனும், தலைவியும் இரவில் வெகுநேரம் ஒலித்துக் கொண்டிருக்கும் அத்தகைய காதல் பாடல்களைக் கேட்டவாறே போகத்தில் திளைப்பார்கள்!

காற்றில் தவழ்ந்து வந்த அத்தகு காதல் பாடல்கள் பலரை இன்பத்தில் திளைக்க வைத்தாலும் மரகதவல்லிக்குப் பெரும் மன உளைச்சலையே அளித்தது. காரணம், இந்திரத் திருவிழாவில் நடைபெற்ற புரவித் தேர் ஓட்டத்தைக் கண்டவர்களுள் மரகதவல்லியும் ஒருத்தி. உப தலைவன் செலுத்திய இளஞ்சேட்சென்னியின் புரவித் தேரைக் கண்டு மகிழ்ந்து பெரும் ஆரவாரமிட்டவள், பின்னால் அமர்ந்திருந்த கரிகாற் பெருவளத்தானைக் கண்டதும் அதிர்ச்சியின் உச்சத்திற்கே சென்றிருந்தாள். தன்னுடைய வீட்டில் ஒரு நாள் வசித்துவிட்டுச் சென்ற கரிகாலன்தான் சோழ இளவல் வளவன் எனக் கனவிலும் அவள் எதிர் பார்த்திருக்கவில்லை! புரவித் தேரில் அமர்ந்து வந்த கரிகாலனைப் பார்க்க பார்க்க அவளது மனம் சொல்லொனாத் துயரடைந்து விரக்தியின் உச்சத்திற்கே சென்றுவிட்டாள். கனவிலும் ஆசைப்படத் துணியக்கூடாதவருக்குத் தான் ஆசைப்பட்டு விட்டேனோ? என எண்ணி வருந்தவே செய்தாள். தனது ஆசை எவ்வளவு முட்டாள் தனமானது என எண்ணியவளது கண்கள் கலங்கவே செய்தது. கண்களில் பெருகிய கண்ணீர்த் துளிகளைத் துடைக்கத் துடைக்க வழிந்த கண்ணீரோடு விரக்தியுடன் அமர்ந்திருந்தவளுக்கு ஆசிவகர் அருளிச் சென்ற வாக்கும் மனதில் தோன்றி அவளைத் திகைப்படையச் செய்திருந்தது. ஒரு வேலை ஆசிவகரது வாக்குப்படிதான் நடக்கப்போகிறதா? என்னை மணக்கப் போகிறவன் இமயம் வரை வெற்றிக்கொடி நாட்டுவான் எனக் கூறியது கரிகாலரைத் தானா? அவருக்கு மனைவியாக நானா? இது எப்படி சாத்தியமாகும்! அவரது கடைக்கண் அதிகாரப் பார்வையிலே சேரனும், பாண்டியனும், வேளிரும் தங்கள் புதல்விகளை அவருக்கு மணமுடித்துக் கொடுக்க தயாராக இருப்பார்கள். நாங்கூரில் பயிர்த்தொழில் செய்யும் விவசாயக் குடியில்

பிறந்தவள் நான். அவரோ நாட்டை ஆளும் வீர மன்னர்களின் சோழ குடியில் பிறந்தவர்! என் தந்தை அவரது படைப்பிரிவில் பணியாற்றும் சாதாரணத் தளபதி! என் நிலைக்குத் தான் அவரால் தாழ்மையடைய இயலுமா? அல்லது அவரது நிலைக்குத் தான் என்னால் உயர இயலுமா? இனி என் வாழ்வில் அவரைச் சந்திக்க இயலுமா? ஒரு நாள் அவருக்குப் பணிவிடை செய்யும் பேறு கிடைத்ததே எனது பெரும்பாக்கியம். அவர் என்னை ஞாபகம் வைத்திருந்தாலே அதுவே எனது பூர்வ ஜென்மத்துப் புண்ணியம்! தன் வீட்டிற்கு அடைக்கலம் தேடி வருகை புரிந்த கரிகாலனாகவே அவர் இருந்திருக்கக் கூடாதா? அவரை இனி எப்போது சந்திக்கப் போகிறோம்? எனத் தவித்தபடியே தன் வீட்டில் அமர்ந்திருந்தாள் மரகதவல்லி.

அப்போது திடீரென கதவு தட்டப்படுவதைக் கேட்ட மரகதவல்லி, ‘தந்தையும் இரவுக் காவல் பணிக்காக சென்றுவிட்டாரே! பொழுது சாய்ந்த இந்த முதல் சாம இறுதியில் தன் வீட்டுக் கதவைத் தட்டுவது யாராக இருப்பார்கள்!’’ என எண்ணியபடி கலங்கியிருந்த கண்களைத் துடைத்தபடியே கதவினைத் திறந்தாள்.

வெளியே நின்றவனைப் பார்த்த மரகதவல்லியின் கண்கள் அகல விரிந்தது! பதில் பேச வாய் வராமல் திகைத்து நின்றவளைக் கண்டவன், ‘‘உள்ளே செல்வோமே!’’ எனக் கூறியவாறே மரகதவல்லியின் பதிலைக் கூட எதிர்பாராமல் உள்ளே நுழையலானான்!

தனது அனுமதியைக் கூட எதிர்பாராமல் உள்ளே நுழைந்தவனைத் தடுக்க மனம் வராமல் அப்படியே உறைந்து நின்றுவிட்டாள் மரகதவல்லி. தான் ‘வேண்டாம்’ ‘வேண்டாம்’ எனக் கூறியும் பொன்னி நதியின் புனல் பிரவாகத்தில் குதித்துவிட்டவர், தன் வாழ்வில் இனியொருமுறை சந்திப்போமா என எண்ணியிருந்த கரிகாலன் தன் முன் மாறுவேடத்தில் நிற்பதைக் கண்ட மரகதவல்லி, ‘‘மாமன்னர் கரிகாலரை வணங்குகிறேன்!’’ எனக் கூறியபடியே பணிந்து மரியாதை செலுத்தலானாள்.

மரகதவல்லியின் மரியாதையைக் கண்டுத் திகைத்த கரிகாலர், ‘‘மரகதவல்லி, நான் மன்னராக உன்னைச் சந்திக்க வரவில்லை! அன்று உடல் முழுக்கக் காயங்களுடன் ஆதரவற்ற கரிகாலனாக உன் வீட்டிற்கு

அடைக்கலம் தேடி வந்தேனே! அதே கரிகாலனாகத் தான் இன்றும் உன்னைத் தேடி வந்திருக்கிறேன்!'' எனக் கூறியவர் அவளது கண்களையே பார்த்துக்கொண்டு சிறு புன்னகை முகத்தில் தவழ நிற்கலானார்.

கரிகாலரின் பதிலைக் கேட்டு அதிர்ச்சியடைந்த மரகதவல்லி, ''அரசே! தாங்கள் அப்படியெல்லாம் ஆதரவற்றவர் எனக் கூறுவது ஒரு காலத்திலும் பொருந்தாது! நீங்கள் இப்போது புகார் மன்னர். சோழ இளவலுக்கு ஒரு நாள் பணிவிடை செய்யும் பேறு பெற்றதே நான் செய்த பாக்கியம் எனக் கருதுகிறேன். அதுவே எனக்குப் பரம திருப்தியளிக்கிறது'' என்றவளாய் பணிந்து மரியாதையுடன் பேசியவள் எதையோ நினைத்துக்கொண்டு, ''அரசே! சற்றுப் பொறுங்கள்!'' எனக் கூறியவள் கரிகாலனின் பதிலைக்கூட எதிர்பாராமல் வீட்டின் பின் அறைக்குள் சென்று சுட வைத்து ஆறவைத்திருந்த பசும்பாலில் தேனைக் கலந்து கொண்டுவந்து கரிகாலனிடம் நீட்டினாள்.

அதை வாங்கிய கரிகாலர், ''அரசர் என அழைத்து ஒரு நாளும் நம்மைப் பிரித்துப் பேசாதே!'' எனக் கூறியபடியே பாலைப் பருகலானார்.

கரிகாலரின் பேச்சைக்கேட்ட மரகதவல்லி திகைத்தபடியே, ''அரசே...'' என எதையோ கூற வாயெடுத்தாள். அதற்குள் அவளது பேச்சை இடைமறித்த கரிகாலர், ''மரகதவல்லி இனியொரு முறை என்னை அரசே என அழைக்காதே!'' எனச் சத்தமாகக் கட்டளையிட்டார்.

''அரசரை அரசர் என அழைக்காமல் வேறு எப்படி அழைப்பது?''

''உன் வீட்டில் கரிகாலன் என்றும் வீரரே என்றும் அழைப்பாயே அப்படியே அழை. அதுதான் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது! அரசே எனக் கூறி என்னை உன்னிடமிருந்து விளக்கி வைக்காதே!''

''அரசே! நீங்கள் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது.''

''வேடிக்கையாகவா?''

''ஆம்!''

''என் பேச்சில் என்ன வேடிக்கை இருக்கிறது?''

“புவியாளப் போகும் வேந்தரை என்னால் கரிகாலன் என மரியாதையின்றி ஒருமையில் எப்படி அழைக்க இயலும்?”

“மரகதவல்லி, அன்று உனது கூந்தலைக் கொண்டு எனது காயங்களுக்கு மருந்து பூசினாயே! அன்றே நீ என் மனதிற்குள் நுழைந்துவிட்டாய். அரசனாகிவிட்டால் உன்னை எப்படி மரகதவல்லி மறக்க இயலும்?”

“உப தலைவரின் நண்பர் தாங்கள் என்பதற்காக அந்தப் பணிவிடைகளை செய்தேன்! மற்றபடி தங்கள் மீது எனக்கு எந்தவித தனிப்பட்ட அன்பும் கிடையாது!”

“மரகதவல்லி...!” அதிர்ச்சியுடன் பார்த்தார் கரிகாலர்.

“ஆம் அரசே! புவியாளப் போகும் தாங்கள் என்னை மறக்காமல் நினைவில் வைத்திருந்து என் வீடு தேடி வந்துள்ளதே எனக்குப் பெரும் மகிழ்ச்சியளிக்கிறது! அதுவே எனக்குப் போதும்!”

“மரகதவல்லி, அன்று உறைந்தை வீரனிடம் நீ என்னை உனது கணவன், தலைவன் என்றெல்லாம் கூறவில்லையா?”

“ஆம் தெரிவித்தேன்!”

“உறைந்தை வீரன் என்னிடம் வினவியபோதும் நான் உனது தலைவன் எனத்தானே பதிலளித்தேன்!”

மரகதவல்லியின் மனதில் கரிகாலன் மீது காதல் இருந்தாலும் தன்னை அவர் மணந்துகொள்வது அவருக்கு எந்தவிதத்திலும் நன்மை உண்டாகாது என எண்ணியவள் தனது மனதில் இருக்கும் ஆசைகளை மறைத்து, “அரசே, என் வீட்டிற்கு அடைக்கலம் தேடி வந்த உங்களைக் காக்க நான் கூறிய பொய் அது! அந்த வார்த்தைக்குத் தாங்கள் இவ்வளவு மதிப்பளிப்பீர்கள் என நான் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.”

“ஆனால், நான் உயிருக்குப் பயந்து அப்படிக் கூறவில்லை மரகதவல்லி. உன் மீது கொண்ட அன்பினாலே மனமுவந்து தான் தெரிவித்தேன்! சோழ வம்சக் குருதி ஒரு நாளும் கொடுத்த வாக்கினைத்

தவறியதில்லை! நீதியைக் காக்க தன் மகனையே கொன்ற மனுநீதிச் சோழன், சுகந்தச் சோழனின் வழியில் வந்தவன் நான். கூறிய சொல்லை என்னால் எப்படி மறுக்க இயலும்?''

கரிகாலன் கூறியதைக் கேட்டு மனம் கலங்கிய மரகதவல்லி, ''அரசே! நீங்கள் கண் இசைத்தால் பெண் கொடுக்கப் பாண்டியரும், சேரரும், வேளிரும் போட்டி போட்டுக்கொண்டு முன்வருவர்! அவர்களின் படைபலமும் உங்களுக்குக் கிடைக்கும். அப்படியிருக்க எதற்கும் பயன்படப் போகாத என்னை மணப்பதால் தங்களுக்கு நட்டம் தான் ஏற்படும்?'' எனப் பதிலளித்தாள்.

''மரகதவல்லி, வாழ்க்கைத் துணையை லாபம், நட்டம் பார்த்து தேர்ந்தெடுக்க இயலாது! மனதிற்குப் பிடித்தவளாய் இருக்க வேண்டும். உனக்கும் என் மீது அன்பு இருக்கிறது தானே!''

''உங்கள் மீது அதாவது சோழ இளவல் கரிகாற் வளவன் மீது எனக்கு எந்தவித அன்பும் தோன்றவில்லை! இளவல் வளவனைக் கண்டால் எனக்கு பெரும் மரியாதையும், பணிவுமே தோன்றுகிறது!''

''உன் பேச்சு எனக்குப் புரியவில்லை மரகதவல்லி!''

''உங்களைப் பார்த்தபிறகு எனது சுபாவமும் எனக்குப் பேராச்சிரியத்தையே வழங்குகிறது அரசே. கரிகாலனாக உங்களைக் கண்ட போதே நானும் என் மனதைப் பறிகொடுத்துவிட்டேன்! ஆனால், புரவித் தேரில் உப தலைவர் விறல்வேல் அண்ணாவுடன் எப்போது உங்களை சோழ இளவலாகப் பார்த்தேனோ, அப்போது எனது மனதை மாற்றிக்கொண்டேன்!''

மரகதவல்லியின் அருகில் சென்ற கரிகாலர், ''நாம் வாழ்வில் இணைவதற்கு நான் சோழ இளவல் என்றப் பெரும் தகுதி தானே தடையாக இருக்கிறது! மரகதவல்லி, ஒரு நாளும் அரச கிரீடத்தை சுமக்க வேண்டும் என ஆசைப்பட்டதில்லை. எனது துர்பாக்கியம் எனது தந்தை நான் பிறப்பதற்கு முன்பே காலமாகி என்னைச் சுமக்கவைத்துவிட்டார். உரிமைக்காக போராடவேண்டியது என் தலையெழுத்து. உன் கடைக்கண் பார்வை சம்மதம் மட்டுமே எனக்குத் போதும் மரகதவல்லி! நீ சம்மதம் மட்டும் கூறு. இந்த

அரண்மனை வாழ்வு, சிம்மாசனம் என அனைத்தையும் துறந்து உன்னுடனே வந்துவிடுகிறேன். உன்னிடமிருந்து விலகியிருந்தால் அவற்றால் எனக்கு ஒருநாளும் மகிழ்ச்சி ஏற்படாது! என்ன கூறுகிறாய்?''

கரிகாலர் கூறியதைக் கேட்டு பெரும் திகைப்படைந்த மரகதவல்லி, ''அரசே! ஒரு நாளும் நீங்கள் அப்படி நினைக்கக் கூடாது. உப தலைவர் மற்றும் இன்னும் பல வீரர்கள் அனைவரும் உங்களுக்காகவே போராடுகின்றனர். மாலை உப தலைவர் வெஞ்சினம் உரைத்தபோது தாங்களும் அவரது அருகில் தானே இருந்தீர்கள்? நீங்கள் என்னை மனதில் வைத்து ஆட்சியைத் துறந்தால் அது அவருக்கு செய்யும் துரோகம் அல்லவா? அவரது இத்தனை நாள் போராட்டம் வீனாகாதா?''

''இதற்கு வேறு மார்க்கமே கிடையாதா?''

''இல்லை அரசே! நீங்கள் உயர்ந்த இடத்தில் இருக்கிறீர்கள். நான் தாழ்ந்த இடத்தில் இருக்கிறேன். என் நிலைக்குத் தங்களாலும் வர இயலாது. தங்கள் நிலைக்கு என்னாலும் உயர இயலாது!''

''பிறப்பினைக் கொண்டு உயர்வு தாழ்வு பாராட்டாதே மரகதவல்லி. அது நமது பண்பாட்டிற்கே பெரும் இழுக்கு!''

''அரசே, ஒரே குலம். ஒரே மரபு. ஒருவனுக்கு ஒருத்தி எனக் கூறுவதெல்லாம் எங்களைப் போன்ற குடி மக்களுக்குத் தான்! அரசர்களாகிய உங்களுக்கு அல்ல! நீங்கள் கூறுவது வாதத்திற்கு வேண்டுமானால் பொருந்தலாம்! ஆனால், வாழ்விற்கு பயனளிக்காது!''

''மரகதவல்லி உனது மனக்குழப்பம் எனக்கு இப்போது நன்கு புரிந்துவிட்டது. அதைத் தீர்த்து வைப்பது எனது கடமை. உனக்கு என் மீது அன்பு இருக்கிறது தானே, அதை மட்டும் இப்போது கூறு?''

கரிகாலன் கூறியதனைத்தையும் இவ்வளவு நேரம் கேட்டுக்கொண்டிருந்த மரகதவல்லிக்கு, உள்ளக்கிடங்கில் மறைத்து வைத்திருந்த காதல் கண்ணீராக வெளிப்படத் தொடங்கியது! அதை உணர்ந்த கரிகாலரும் அவளது அருகில் சென்றவர் அவளது கண்ணீரைத் துடைத்தபடியே, ''மரகதவல்லி, நமது திருமணத்தால் சேரர், பாண்டியர் மற்றும்

வேளிர்களின் பகை ஏற்படும் என ஒருநாளும் கவலை கொள்ளாதே! காரணம், அவர்கள் அனைவரும் இப்போது சோழ குலப் பகைவர் தான். நான் விரும்பினாலும் அவர்கள் எனக்குப் பெண் கொடுக்க சம்மதிக்க மாட்டார்கள். அவர்கள் அனைவரும் இருங்கோவேளின் மகனுக்கே பெண் கொடுக்கத் தவமிருக்கிறார்கள். எனது தாய் மாமன்களுள் இரும்பிடர்த்தலையர் துறவியாகி விட்டார். இன்னொருவருக்கு இன்னும் திருமணமே நடைபெறவில்லை! ஆக, அவர்களின் இடையூறும் நமக்கு இல்லை. உனது தயக்கம் அனைத்தும் விலகியதா மரகதவல்லி?'' என்றவாறே மரகதவல்லியின் அருகினில் நெருங்கினார்.

கரிகாலர் கூறியதைக்கேட்ட மரகதவல்லி எந்தவித உற்சாகமும் கொள்ளாமல், ''இது சாத்தியமா?'' என சந்தேகத்துடனே வினவினாள்.

''அனைத்தும் சாத்தியமே மரகதவல்லி! போர் முடிவில் நீ இடையூறு என நினைத்திருக்கும் வேளிர், சேரர் மற்றும் பாண்டியர் அனைவரும் கொல்லப்பட்டிருப்பார்கள்! வஞ்சகத்திற்குத் துணை சென்று இன்னொருவனுக்கு வேண்டிய உரிமையைப் பறிக்க நினைக்கும் பேராசைக்காரர்கள் அனைவருக்கும் மரணத்தையே பரிசாக அளிக்கப் போகிறேன். என் முன் மண்டியிட்டு சோழ சிம்மாசனம் வேண்டும் எனத் தானம் கேட்டிருந்தால் 'எடுத்துக்கொள்ளுங்கள்' என வழங்கியிருப்பேன்! ஆனால், என்னைக் கொன்று எனக்குரிய ஆசனத்தைப் பறிக்க முயல்வது என்னைக் கொன்று எனக்கு உரிமையான என் மனைவியை என்னிடமிருந்து பறிக்க முயல்வதற்கு ஈடானது. நடைபெறவிருக்கும் போர் எனக்கான போர். எனது உரிமையை நிலைநாட்டுவதற்கான போர். அதன் முடிவு இதுவரை நடந்துள்ள போர்கள், இனியும் நடக்கப் போகும் போர்களின் முடிவுகளை விடக் கொடுமையானதாக இருக்கப் போகிறது. இருங்கோவின் மகனால் சிறை வைக்கப்பட்டது உப தலைவர் மணந்துகொள்ளப் போகும் எனது சகோதரி வானவல்லி. அதற்குரிய பலனை வஞ்சி மாநகரம் விரைவில் அனுபவிக்கும். என் சகோதரியை சிறைவைத்து, என் உரிமையைப் பறிக்க முயலும் கூட்டு சதிகாரர்களை ஒட்டு மொத்தமாக அழிக்கப் போகிறேன்'' எனக் கரிகாலர் கோபத்துடன் வெகுண்டெழுந்து ஆவேசத்துடன் கூறுவதைக் கேட்ட மரகதவல்லி அவரை

அமைதிபெறச் செய்து தனக்கு முன் நின்ற கரிகாலரை அணைத்தபடியே ஆறுதல் படுத்தினாள்.

மரகதவல்லியின் அணைப்பில் தனது கோபம், ஆவேசம் என அனைத்தும் காணாமல் போய்விட்டதை உணர்ந்த கரிகாலர் அவளை அணைத்தபடியே அவளது காதில், “போரின் முடிவில் இன்னும் சில நன்மையும் ஏற்படப்போகிறது!” எனக் கிசுகிசுத்தார்.

அணைப்பிலிருந்து விடுபட்ட மரகதவல்லி கரிகாலரின் முகத்தைப் பார்த்து காதல் பார்வையில், “என்ன?” என வினவினாள்.

“போர் முடிவில் வேளிர்கள் அனைவரும் இறந்தபிறகு நமக்கு சாதகமான, எனக்கு உதவியவர்கள் அனைவரையும் ஆட்சியில் அமர்த்தப் போகிறேன்!”

“உதவியவர்களையா?”

“ஆம்! உப தலைவர் விறல்வேல், வளவனார், வேளக்காரப் படைத்தலைவர், இன்னும் பல உப தளபதிகள்....!”

ஆச்சர்யத்தோடு கரிகாலரைப் பார்த்தாள் மரகதவல்லி.

“இதற்கே ஆச்சர்யப்பட்டால் எப்படி? நான் மணந்துகொள்ளப் போவது யாரைத் தெரியுமா?”

“யாரை?”

“நாங்கூர் வேளிர் மகளை!”

இதைக்கேட்ட மரகதவல்லியின் முகம் கண நேரப் பொழுதில் வாடிப்போய் விட்டது! அதைக்கண்ட கரிகாலர் சிரித்தபடியே அவளை நெருங்கினார். கரிகாலரை விலக்கிய மரகதவல்லி, “உங்கள் அரசப் புத்தியை காட்டிவிட்டீர்கள்! அல்லவா?” எனக் கூறியபடியே ஏமாற்றத்தில் விம்மி விம்மி அழத்தொடங்கினாள்.

அவளது அழுகையை ரசித்த கரிகாலர், “நான் மணந்துகொள்ளப் போகிறவள் நாங்கூர் வேளிர் செங்கோடனின் மகளான இந்த மரகதவல்லியைத்

தான். அவளைத் தவிர பட்டத்து ராணியாக என் அருகில் அமர்ந்துகொள்ளும் தகுதி இவ்வுலகில் வேறு யாருக்கு இருக்கிறது?" என வினவினார்.

கரிகாலர் கூறியதைக் கேட்ட மரகதவல்லி எதையும் புரிந்துகொள்ள இயலாமல் திகைத்து நின்றாள். அதைக்கண்ட கரிகாலர், "நீ தானே தெரிவித்தாய், உனது நிலைக்கு என்னால் வர இயலாது என்று. ஆனால் எனது நிலைக்கு உன்னை என்னால் உயர்த்த இயலும் மரகதவல்லி. போர் முடிந்ததும் உனது தந்தைக்கு நாங்கூர் வேளிராக முடிசூட்டி உன்னை நான் மணந்துகொள்ளப் போகிறேன்!" எனத் தெரிவிக்க திடீரென இன்ப அதிர்ச்சிக்கு ஆட்பட்ட மரகதவல்லி திகைப்பில் நா பேச இயலாமல் பேச முயன்று வாயைத் திறந்தாள்.

அவளது வாய் திறக்கப்பட்டு பேசும் வல்லமை இழந்து நிற்பதைக் கண்ட கரிகாலர் இதுதான் தக்க சமயம் என எண்ணினாரோ என்னமோ அவளது அதரத்தில் முத்தமிட்டார். கரிகாலரின் திடீர் முத்தத்தினால் திக்குமுக்காடிப் போனாள் மரகதவல்லி. கரிகாலரின் அன்பையும், காதலையும் புரிந்துகொண்ட மரகதவல்லி அவருக்கு உடன்பட்டு சிறிது சிறிதாகத் தன்னை இழக்கத் தொடங்கினாள்.

அங்கு இருவருக்குள்ளும் தொடங்கிய இன்ப விளையாட்டைக் கண் இமைக்காமல் திருட்டுத் தனமாக பார்த்துக்கொண்டிருந்த நெய் விளக்கினைக் கண்டு பொறாமை பெற்ற தென்றலானது அந்த அறைக்குள் சாளரத்தின் வழியே வேகமாக வீசி விளக்கினை அணைத்துவிட்டு விர்ரென்று அங்கிருந்துச் சென்றது!

# 49. அவ ை◌க் காவலர்கள் இருவர்

புகார் இந்திரத் திருவிழா பெரும் களேபரங்களுடன் முடிந்திருந்தது. உப தலைவன் விறல்வேல் வளவனுக்கு புகார் மன்னனாக அதுவும் இருங்கோவேளின் முன்னிலையில் முடிசூட்டுவான் எனப் புகாரின் ராஜதந்திரிகளான வளவனார், இரும்பிடர்த்தலையர், திகம்பர அடிகளார் ஈழவாவிரையர் என யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை! உப தலைவனது செயல் அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியிருந்தாலும், மகிழவே செய்தனர்! ஆனால், புகாரின் மக்கள் திரள் முன் இருங்கோவேளிடம் வெஞ்சினம் உரைத்து அவனைப் போருக்கு அழைத்ததை வளவனார், இரும்பிடர்த்தலையார் உள்ளிட்ட யாருமே விரும்பவில்லை. அச்செயல் அனைவரையும் கோபத்தில் ஆழ்த்தியிருந்தது! சிலர் அக்கோபத்தை வெளிப்படையாகவே வெளிப்படுத்தச் செய்தனர். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஏனெனில் இருங்கோவேளிற்கு அனைத்து வேளிர்கள், சேரன் மற்றும் பாண்டியனின் முழு ஆதரவு இருந்ததால் அவனது கூட்டுப் படை பலத்துடன் ஒப்பிடுகையில் புகாரின் படை மிகவும் சிறியதாகவே இருந்தது. இச்சூழ்நிலையில் போர் எழுந்தால் புகார் உறைந்தையிடம் வீழ்வது நிச்சயம். ஆதலால் அடுத்து என்ன செய்தால் போரைத் தவிர்க்கலாம் எனப் பலவாறு வளவனார், இரும்பிடர்த்தலையர், திகம்பர அடிகளார் மற்றும் பல புகார் அமைச்சர்கள், உப தளபதிகள் அனைவரும் அவையில் கூடி ஆலோசித்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு யோசனையைத் தெரிவித்துக்கொண்டிருந்தனர்.

அவைக்கு வரவேண்டிய கரிகாலரும், உப தலைவன் விறல்வேலும் இன்னும் வருகை தராமல் இருப்பதால் மேற்கொண்டு எந்த முடிவையும் எடுக்க இயலாமல் தவித்த இரும்பிடர்த்தலையர் டாள்தொபியாசை அழைத்து,

“உடனே, வளவனையும் செங்குவீரனையும் அழைத்து வா!” எனக் கட்டளையிட .டாள்தொபியாஸ் தயங்கியே நின்றான்!

“டாள்தொபியாஸ், உன்னிடம் தான் கூறுகிறேன்! வயது முதிர்ந்த அமைச்சர்கள், அந்தணர்கள் அனைவரும் வளவனுக்காகவும், செங்குவீரனுக்காகவும் காத்திருக்கின்றனர். சான்றோரைக் காக்க வைப்பது ஒரு மன்னனின் தகுந்த செயல் இல்லை, பெரும் தவறு எனத் தெரிவித்து இருவரையும் உடனே அழைத்து வரச் சொன்னேன் எனக் கூறு!”

“அய்யா, நமக்கு முன்னரே அரசரும், தலைவரும் இங்கு வந்துசேர்ந்துவிட்டார்கள். தாங்கள் தான் இருவரையும் கவனிக்கவில்லை.”

“என்னே, உளறுகிறாய் டாள்தொபியாஸ்! நமக்கு முன்னரே அவர்கள் வந்துவிட்டரகளா?”

“ஆம் அய்யா!”

டாள்தொபியாஸ் கூறியதைக் கேட்டவுடன் இரும்பிடர்த்தலையர் மட்டுமல்ல அவையில் இருந்த அனைவருமே அக்கணம் திகைத்து போனார்கள். “இளவலும், உப தலைவரும் இங்கு தான் இருக்கிறார்களா?” என ஒவ்வொருவரும் கூறி ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

அங்கு சுவரோடு சுவராக நின்ற இரு அவைக்காவலர்கள் அருகில் சென்ற டாள்தொபியாஸ், “அரசே! தாங்கள் இருவரும் மாறுவேடமிட்டு நிற்பதை நான் வந்தவுடனே கவனித்துவிட்டேன்! உங்கள் வேடத்தைக் களையும் நேரம் வந்துவிட்டது. வாருங்கள்!” என அழைக்கலானான்.

டாள்தொபியாசின் பார்வையையும், புத்திக் கூர்மையையும் கண்ட செங்குவீரன் அவனது தோள்களைத் தட்டி பாராட்டினான். அவையில் இருந்த சிம்மாசனத்தில் அமர்ந்துகொண்ட கரிகாலர் செங்குவீரனையும் அழைத்து அவையில் அவருக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் அமரவைத்தார்.

அவையில் பெருத்த அமைதி நிலவியது. கரிகாலர் மாறுவேடத்தில் வருகை தந்து அனைவரையும் திகைப்படையச் செய்வார் எனக் கனவிலும் யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. கரிகாலரைக் கண்ட இரும்பிடர்த்தலையர், “வளவா! இது என்ன விளையாட்டு?” என ஆச்சர்யத்துடன் வினவினார்.

“மாமா! புகார் மன்னராக எனக்கு செங்குவீரர் முடிசூட்டியது பற்றியும், புரவித் தேரோட்டத்தில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றியும் அவையோர், அமைச்சர்கள் என்ன எண்ணுகிறார்கள் என அறிந்துகொள்ள வேண்டியது எனது கடமை! ஆதலால் தான் உபதலைவரிடம் யோசனை கேட்டு இக்காரியத்தைச் செய்தேன். யவனத் தளபதி எங்களை அடையாளம் கண்டுவிட்டார். ஆனால் தாங்கள்?” எனக் கூற இரும்பிடர்த்தலையர் தனது கவனமின்மையை உணர்ந்து தலையை கீழே போட்டுக்கொண்டார்.

அங்கிருந்த மூத்த அமைச்சர் ஒருவர், “அரசே, உப தளபதிகள் அனைவருக்கும் அவர்களின் செயல்களைப் பாராட்டி படைத்தளபதிகளாக பதவி உயர்வு வழங்கிவிட்டீர்கள். ஆனால் அனைத்து உப தளபதிகளையும் இயக்கிக்கொண்டிருந்த உப தலைவரை மறந்துவிட்டீர்களே?” என வினவினார்.

“அய்யா! நான் எதனையும் மறக்கவில்லை. அன்று உபதலைவர் ஆத்திரத்துடன் கிளம்பிச் சென்றுவிட்டார். ஆதலால் அவரை சிறப்பிக்க இயலவில்லை. இன்று அதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளேன்!”

செங்குவீரன் உட்பட அனைவரும் கரிகாலர் என்ன செய்யப்போகிறார் எனும் ஆர்வத்தில் அவரையே பார்த்துக்கொண்டிருந்தனர். அவையில் ஓரமாக நின்ற வில்லவனிடம் கண் காட்டினார், அவன் வானவல்லியிடம் தகவல் தெரிவித்தான்.

பட்டுத் துணியினால் மறைக்கப்பட்டிருந்த தாம்பூலப் பாத்திரத்தை கைகளில் ஏந்திக்கொண்டு பணிப் பெண்கள் சூழ நடந்து வந்தாள் வானவல்லி. அங்கு வானவல்லியை யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை! வானவல்லியைக் கண்ட வளவனார் உட்பட அவையில் இருந்தவர்கள் அனைவரும் ஆச்சர்யத்துடனும் அடுத்து என்ன நடக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்புடனும் கரிகாலரையும், வானவல்லியையும் மாறி மாறிப் பார்த்தார்கள்.

தனது சிம்மாசனத்திலிருந்து எழுந்தார் கரிகாலர். ஆசனத்திலிருந்து எழுந்துவிட்ட கரிகாலரைக் கண்டதும் மற்ற தளபதிகள், அமைச்சர்கள் என அனைவரும் மரியாதை செலுத்த எழுந்து நின்றார்கள். அனைவரையும் கைகளாலே அமரச் செய்த கரிகாலர் விறல்வேலை மட்டும் எழச்செய்து வானவல்லியின் கைகளில் தாங்கியிருந்த தாம்பூலப் பாத்திரத்தின் பட்டுத்

திரைச் சீலையை நீக்கினார். தாம்பூலப் பாத்திரத்தில் நீண்ட, பழமையான போர் வாள் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. போர் வாளின் கைப்பிடி தங்கத்தால் புலி உருவில் செய்யப்பட்டு, வாளானது நீண்டு, மெலிந்து காணப்பட்டது! வாளானது கூர்மையாகப் பளபளப்புடன் இருந்ததோடு மட்டுமல்லாமல் அதில் தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தது.

வாளினை எடுத்த கரிகாலர், ‘‘இந்த வாள் சோழப் பரம்பரையின் அரச வாள்! இதுவரை இவ்வாள் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தவரின் இடையுறையை மட்டுமே அலங்கரித்துக் கொண்டிருந்தது. இந்த நடைமுறையை மாற்றப்போகிறேன். கடைசியாக இந்த வாளை எனது தந்தை வைத்திருந்தார். என் தந்தைக்குப் பிறகு இவ்வாளை எனது போர்ப் படைத் தலைவர் விறல்வேலிற்கு இதனை வழங்குகிறேன்!’’ எனக் கூறியபடியே விறல்வேலிடம் நீட்டினார் கரிகாலர்.

தயக்கத்துடனே அவ்வீர வாளை வாங்கிக்கொண்டான் விறல்வேல். அவையிலேயே விறல்வேலைப் படைத் தலைவராக நியமித்தார் கரிகாலர். கிடைத்தற்கரிய வீர வாளையும், கரிகாலரின் முகத்தையும் மாறி மாறி நெகிழ்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருந்தான் விறல்வேல். பிறகு அருகில் நின்ற வானவல்லியின் பக்கம் விறல்வேலின் கண் சென்றுவிட்டதைப் பார்த்த கரிகாலர், ‘‘படைத் தலைவரே, இருங்கோவேளிடம் வெஞ்சினம் உரைப்பதற்கு முன் தாங்கள் சிந்தித்திருக்க வேண்டும். இப்போது பார்த்து என்ன பயன்!’’ என விறல்வேலிடம் கூற அவையில் சிறு சிரிப்பொலி எழுந்தது. பிறகு வானவல்லியிடம், ‘‘சகோதரி, வந்த காரியம் முடிந்துவிட்டது! தாங்கள் விடை பெறலாம்!’’ எனக் கூற ஏமாற்றத்துடனே அங்கிருந்துச் செல்லலானாள்.

உடனே எழுந்த இரும்பிடர்த்தலையர், ‘‘வளவா! அனைத்து முக்கிய பதவிகளுக்கும் தகுந்தவர்களை நியமித்துவிட்டாய். ஆனால் சேனாதிபதி பொறுப்பு மட்டும் மிஞ்சியிருக்கிறதே! வளவனார் அப்பொறுப்பினை மீண்டும் ஏற்க இசைந்துள்ளார். அவரையே சேனாதிபதியாக நியமித்துவிடு! பல போர்களைக் கண்டு பெரும் அனுபவத்தைப் பெற்றிருக்கும் அவரது துணை உனக்குத் தேவை!’’ எனக் கூறலானார்.

‘‘மாமா! படைகளை வழிநடத்தும் சேனாதிபதி பொறுப்பை நான் யாரிடமும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை!’’

‘‘வளவா!’’

‘‘ஆம் மாமா. சேனாதிபதி பொறுப்பை நானே ஏற்றுக் கொள்ளப்போகிறேன்.’’ எனக் கரிகாலர் கூற அவையில் பெரும் அமைதி நிலவியது. கரிகாலரின் முடிவை யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. பெரும் அனுபவம் வாய்ந்த வளவனாரைத்தான் சேனாதிபதியாக நியமிப்பார் என்றே அவையோர் எதிர்பார்த்தார்கள். ஆனால், கரிகாலரின் முடிவு வளவனார், இரும்பிடர்த்தலையர் உட்பட அனைவரையும் ஏமாற்றத்திற்கு உட்படுத்தியது!

‘‘வளவனார் பெரும் அனுபவம் உடையவர். பல போர்க்களங்களைக் கண்டவர். நீயோ இளையவன். படைகளை வழிநடத்திச் செல்லும் திறமையோ, அனுபவமோ உனக்குக் கிடையாது! அப்படியிருக்க...’’ என இரும்பிடர்த்தலையர் பேசிக்கொண்டிருந்த போதே இடைமறித்த கரிகாலர், ‘‘மாமா, சேனாதிபதி பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டால் தான், படைத் தளபதிகள், மற்றும் வீரர்களின் மனமறிந்து படைகளை என்னால் வழிநடத்த இயலும். மௌரியரின் எல்லைவரை விரட்டிச் சென்ற எனது தந்தை வீரர்கள் மற்றும் தளபதிகளின் எண்ண ஓட்டத்தை அறிந்து மௌரிய தேசம் மீது போர் தொடுக்காமல் பெரும் தவறை செய்துவிட்டார். அன்று அவர் போர் தொடுத்திருந்தால் நாவலந்தீவின் வரலாறே மாற்றி எழுதப்பட்டிருக்கும். என் தந்தை செய்த பிழையை நான் செய்ய விரும்பவில்லை. வளவனாரின் ஆலோசனை எனக்கு வேறு வழிகளில் தேவைப்படுகிறது. பெருமறவர் மகேந்திர வளவனாரை முதன்மை அமைச்சராகவும், தனாதிகாரியாகவும் நியமிக்கிறேன்! அப்பொறுப்பில் அவர் இருந்தால் தான் நாட்டின் நிதி நிலைமை, அரசியல் நிலைமை ஆகியவற்றைக் கவனித்து படைகளைப் பெருக்க வழிவகுக்கும். சோழ மக்களுக்கு வளவனார் மீது பெரும் மதிப்பு இருக்கிறது. சேனாதிபதியாக நியமிப்பதை விட முதன்மை அமைச்சர் பொறுப்பு தான் அவரது திறமைக்கு ஏற்ற பதவி எனக் கருதுகிறேன்!’’ எனக் கூற அவை மீண்டும் அமைதியானது.

அவையின் ஓரம் நின்று கொண்டிருந்த வில்லவனை அழைத்த கரிகாலர், “உங்களைப் பற்றி மாமா என்னிடம் கூறினார். உறைந்தை அரண்மனையில் படைத்தலைவருக்கு உதவியுள்ளீர்கள்! உங்கள் நண்பரை எதிர்த்து சண்டையிட்டு வஞ்சி மாநகரில் சிறைபட இருந்த சோழ நாட்டின் மானத்தை மீட்டு வந்திருக்கிறீர்கள்! உங்களது வாள் வீசும் திறமையை நான் கேள்விப்பட்டுள்ளேன்! உங்களை படைத் தலைவர் செங்குவீரருக்கு உபதளபதியாக நியமிக்கிறேன். அதோடு இல்லாமல் புகார் பட்டினத்தின் காவலை இனி நீங்களே கவனித்துக்கொள்ளுங்கள்! கள்வருக்குத் தான் தெரியும் காவலை எப்படி மேம்படுத்துவது என்று!” எனச் சிரித்தபடியே வில்லவனிடம் தெரிவித்தார்.

பிறகு, தனது ஆசனத்தில் அமர்ந்திருந்தபடியே விறல்வேலிடம், “படைத் தலைவரே இனி நடக்க வேண்டிய காரியங்களைப் பற்றி எனது மாமாவிடம் மூத்த அமைச்சர்கள் பலரும் விவாதித்ததை தாங்களும் கேட்டீர்கள்! தங்கள் கருத்து என்ன?” என வினவினார்.

“அரசே! அமைச்சர்கள் பலரும் சேரனிடமும், பாண்டியனிடமும் பேச்சுவார்த்தை நடத்தலாம் எனத் தெரிவித்தனர்! அவர்களிடம் ஒப்பந்தம் போட்டுக்கொண்டால் நமது கௌரவத்தை நாம் இழக்க நேரிடும். அதற்குப் பதில் போர்க்களத்தில் உயிரையே விட்டுவிடலாம். இருங்கோவேள் சேர அரசனிற்குப் பணிந்த மலை நாட்டின் குறுநில மன்னன்தான் என்பதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது. இருங்கோ செய்யும் அனைத்து காரியங்களும் சேரனின் பரிபூரண ஆசியுடனே நடைபெறுகிறது. அப்படியிருக்க நாம் சேரனிடம் பேச்சு வார்த்தை நடத்துவதென்பது நாமே அடிமைப்படுவதைப் போன்றது! நம் முதன்மை அமைச்சர் வளவனார் அவர்களின் கருத்தை இங்கு வெளிப்படுத்த வேண்டுகிறேன்”

ஆசனத்தில் இருந்து எழுந்த வளவனார், “படைத் தலைவர் கூறுவதைப் போன்று சேரனிடம் நாம் உதவி கேட்பதில் பயனில்லை என்றே நானும் உணர்கிறேன். ஆனால் பாண்டியன் தென்னவன் ஒருவேளை நமக்கு உதவி சமரசத்தை உண்டாக்கலாம்! இதில் இரும்பிடர்த்தலையரின்

கருத்தைத் அறிந்துகொள்வது நலம்!'' என முடித்து ஆசனத்தில் மீண்டும் அமர்ந்தார்.

''ஆம்! வளவனார் கூறுவது சரி. பாண்டியன் தென்னவனின் முன்னோன் பாண்டியன் பெருவழுதி எனது நண்பன். ஆதலால் பாண்டியரின் உதவி நமக்குக் கிடைக்க வாய்ப்பிருக்கிறது! செங்குவீரா ஓலையை நான் எழுதிக் கொடுக்கிறேன்! இன்றே நீ பாண்டிய தேசம் நோக்கிப் புறப்படு! உன்னுடன் திருக்கண்ணனையும் அழைத்துச் செல்! புரவித் தேரில் புறப்பட்டு நல்ல செய்தியோடு திரும்புவீர்கள் என நம்புகிறேன்! அடுத்த ஒரு வருடத்திற்காவது போரை நாம் தள்ளிவைக்க வேண்டும் என்பதை மட்டும் நினைவில் கொள்'' எனக் கூற அவை கலைந்தது!

அன்று மாலையே இரும்பிடர்த்தலையரிடம் ஓலையைப் பெற்றுக்கொண்ட செங்குவீரனும், திருக்கண்ணனும் மாறு வேடம் பூண்டு பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையை நோக்கித் தங்களது பயணத்தைத் தொடங்கினார்கள்! புரவித் தேரில் புறப்பட்டவர்கள் நாகைப் பட்டினம், கோடிக்கரை ஆகியவற்றைக் கடந்து மூன்று நாள் பயணத்திற்குப் பிறகு பாண்டிய நாட்டின் எல்லையான பறம்புமலையை அடைந்தார்கள். பறம்புமலை என்பது பாண்டிய நாட்டின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட சிறு நாடு. இதே வேகத்தில் பயணித்தால் இன்னும் இரு தினங்களில் பாண்டியத் தலைநகரான மதுரையை அடைந்துவிடலாம் எனத் திட்டம் வகுத்துக்கொண்டு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர்.

திருக்கண்ணன் மற்றும் புரவிச் சாரதி இருவரும் சத்திரத்தில் தங்கி ஓய்வெடுத்துக்கொண்டிருந்த போது தனியாகக் கிளம்பினான் செங்குவீரன்! பறம்புமலை அடிவாரத்தில் அமைக்கப்பட்டிருந்த சத்திரத்திலிருந்து வடக்கே சென்ற ஒற்றையடிப்பாதை வழியாக ஒரு நாழிகைப் பொழுதிற்கு மேலாக நடந்தவன் மலை அடிவாரத்தில் அமைக்கப்பட்டிருந்த குகை ஒன்றை அடைந்தான். ஆடை அனைத்தையும் துறந்து கௌபீனம் ஒன்றையே ஆடையாகக் கொண்ட திகம்பர சமண முனிவர் ஒருவர் குகையில் சிறு கோரைப்பாயை விரித்து அதன் மேல் அமர்ந்து தவமிருந்துகொண்டிருந்தார். அருகில் உறி கட்டித் தூக்கிய கமண்டலம், மயில் தோகை விசிறி மற்றும்

அருகதேவன் புகழ் பாடும் ஏராளமான ஓலைச்சுவடிகள் அவரைச் சுற்றிக் காணப்பட்டன. குகைக்குள் சென்ற செங்குவீரன் திகம்பர அடிகளிடம் பணிந்து “அருகர் தாள் போற்றி!” எனத் தனது வருகையைத் தெரிவித்துக்கொண்டான்.

சத்தத்தைக்கேட்டு கண் விழித்த திகம்பரர் செங்குவீரனைக் கண்டு மகிழ்ந்தவர், “அருகர் தாள் போற்றி!” எனத் தனது வணக்கத்தையும் தெரிவித்துகொண்டார். பிறகு, “வா தம்பி, நலமா? எனது சீடன் ஈழவாவிரையன் எப்படி இருக்கிறான்? அவனும் சுகம் தானே!” என வினவினார்.

“அவரும் நலம் தான் அடிகளே! பாண்டிய மன்னன் தென்னவனைச் சந்திக்க கூடலுக்குச் செல்கிறேன். அடிகளாரின் கட்டளைப்படி தங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன்!”

“பாண்டிய மன்னன் தென்னவன் கூடலில் இல்லையே தம்பி! அவன் கொற்கைக்கு அல்லவா சென்றுள்ளதாகக் கேள்விப்பட்டேன்.”

“கொற்கைக்கா?”

“ஆம் தம்பி!”

திகம்பரர் கூறியதைக் கேட்டு செங்குவீரன் எதுவும் பேசாமல் அமைதியாக நின்றுகொண்டிருந்தான்.

“தம்பி, தென்னவனை என்ன காரியத்திற்காக சந்திக்கப் போகிறாய்?”

“அடிகளே, இளஞ்சேட்சென்னியின் புதல்வன் வளவனுக்குப் புகார் மன்னனாக முடிசூட்டிவிட்டேன்! உறைந்தையை இருங்கோவேள் கைப்பற்றிக்கொண்டான். இருங்கோவிற்கு சேரன் மற்றும் வேளிர்களின் முழு ஆதரவு இருக்கிறது! பாண்டியன் தென்னவனின் முன்னோன் பெருவழுதி இரும்பிடர்த்தலையரின் நண்பர் என்பதால் பாண்டியனின் உதவி வளவனுக்கு கிடைக்கும் என வளவனார் கருதுகிறார்! ஆதலால் தான் தென்னவனைச் சந்திக்கச் செல்கிறேன்!”

“தம்பி, காலம் கடந்துவிட்டது. காட்சி மாறிவிட்டது. தென்னவனும் இருங்கோவைத் தான் ஆதரிக்கிறான். அவனை நீங்கள் சந்தித்தால் பயன்

இருப்பது ஐயமே!”

“எனக்கும் அப்படித்தான் அய்யா தோன்றுகிறது! ஆனால், சான்றோர்களான இரும்பிடர்த்தலையர் மற்றும் வளவனார் பாண்டியனிடம் நிச்சயம் உதவி கிடைக்கும் எனக் கருதுகிறார்கள். அவர்களின் கட்டாயத்தின்படியே தென்னவனைச் சந்திக்க வந்திருக்கிறேன்.”

“நல்லது தம்பி! உதவி கிடைக்காவிட்டாலும் ஒரு முறை கதவைத் தட்டிப் பார்ப்பதில் எந்தத் தவறும் இல்லை! அருகதேவன் உன்னை ஆசிர்வதிப்பானாக!” எனக் கூறிக் கண்களை மூடியவர் மீண்டும் தியானத்தில் ஆழ்ந்துவிட்டார்.

திகம்பர அடிகளாரின் குகையிலிருந்து ஏமாற்றத்துடன் திரும்பிய செங்குவீரன் நீண்ட நேரம் சத்திரத்தில் உறக்கம் வராமலே கண்களை மூடிக்கொண்டு வரகு வைக்கோல் மெத்தையில் புரண்டு பிரண்டு படுத்து உறங்க முயற்சித்தான். உறக்கம் வந்தபாடில்லை! சரி இரவில் சிறிது தூரம் உலாவிவிட்டு வருவோம் என எண்ணியவன் அறையிலிருந்து வெளியே வந்தான்.

சத்திரத்திற்கு முன் நின்றுகொண்டிருந்த சோழ நாட்டுப் புலிக்கொடியை தாங்கிய புரவித்தேர் ஒன்றைக் கண்டவன், “தனக்குத் தெரியாமல் சோழப் புலிக்கொடி தாங்கிய புரவித்தேரா?” எனத் தனக்குத்தானே கூறிக்கொண்டு அருகிலிருந்த தூணில் மறைந்து கொண்டான்!

புரவித்தேரிலிருந்து வேந்தன் மற்றும் காளன் சூழ இருங்கோவேளின் மகன் யுவராஜன் இறங்கினான். அதைக்கண்டு திகைத்த செங்குவீரன் தான் இருப்பதைக் காட்டிக்கொண்டால் ஆபத்து என அமைதியாகவே இருளில் மறைந்திருந்து அவர்களைக் கவனிக்கலானான். சுற்றியும் பார்த்தான் பாண்டிய நாட்டு வீரர்கள் காவல் பணியில் சுற்றிக்கொண்டு இருந்தார்கள். பறம்புமலை பாண்டியப் பேரரசிற்கு அடங்கிய நாடு! இம்மலைத் தலைவனும் பாண்டியனுக்குக் கட்டுப்பட்டவன். இச்சூழலில் அவர்களிடமிருந்து விலகியிருப்பதே நல்லது என நினைத்தவன் மீண்டும் அறைக்குள் வந்து தாழிட்டுக் கொண்டான்!

பொழுது புலர ஒரு சாமப் பொழுதிற்கு முன்னரே திருக்கண்ணனையும், புரவித் தேர் சாரதியையும் எழுப்பிய செங்குவீரன் அவர்களை அழைத்துக்கொண்டு கிளம்பினான். புரவிச் சாரதியையும், திருக்கண்ணனையும் அமரவைத்துவிட்டு செங்குவீரனே விரைவாகப் புரவியைச் செலுத்தலானான். திடீரென்று உறக்கத்திலிருந்து எழுப்பி புரவியை கூடலுக்குச் செலுத்தாமல் வேறு பாதையில் செலுத்திப் பயணித்துக்கொண்டிருக்கும் செங்குவீரனைக் கவனித்த தேர்ச் சாரதி, “படைத் தலைவரே, வேறு பாதையில் பயணித்துக்கொண்டிருக்கிறோம். இந்த ராஜபாட்டை கூடலுக்குச் செல்வது அல்ல!” என எச்சரிக்கை செய்தான்.

“நாம் கூடலுக்கு இப்போது செல்லவில்லை!”

“கூடலுக்குச் செல்லவில்லையா?”

“ஆம்!”

“பிறகு எங்கே?”

“கொற்கைக்குச் சென்றுகொண்டிருக்கிறோம்!”

“கொற்கைக்கா?” ஒரே நேரத்தில் திருக்கண்ணனிடமும், சாரதியிடமிருந்தும் சொற்கள் ஆச்சயத்துடன் வெளிப்பட்டன.

“பாண்டிய மன்னன் கூடலில் இல்லையாம். கொற்கையில் தங்கியிருக்கிறார்!”

“கொற்கை இங்கிருந்து வெகு தொலைவில் அல்லவா இருக்கிறது! புரவித் தேரில் பயணித்தால் ஒரு கிழமைக்கு மேல் அல்லவா பயணிக்க நேரிடும்! மரக்கலத்தில் பயணிக்கலாமே!” என வினவினார் சாரதி.

“மரங்களும், கற்களும் நிரம்பிய பறம்புமலையில் மரக்கலம் செலுத்துவது இயலாத காரியம் என நான் எண்ணுகிறேன். இங்கு புரவித் தேரில் பயணிப்பதே சாலச் சிறந்தது! தாங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?” எனக் கேட்க அருகில் அமர்ந்திருந்த திருக்கண்ணன் சிரித்துவிட்டான்.

“நீங்கள் இருவரும் உறங்குங்கள்! நானே புரவித் தேரைச் செலுத்துகிறேன். பொழுது புலர்ந்ததும் மாற்றிக்கொள்ளலாம்!” எனக்

கூறியபடியே புரவித் தேரை விரைவாகச் செலுத்தலானான்.

இருங்கோவேளின் உத்தரவின்படி உறைந்தை யுவராஜன் சேரனிடம் வாழ்த்தையும், ஆதரவையும் பெற்றுவிட்டதால் பாண்டியனிடமும் ஆசியைப் பெற கூடலை நோக்கி வந்திருந்தான். பறம்புமலை வந்தபிறகே பாண்டியன் தென்னவன் கொற்கையில் இருக்கும் செய்தி கிடைத்து சத்திரத்தில் தங்கி ஓய்வெடுக்க முடிவு செய்திருந்தார்கள்! யுவராஜனுக்குப் பயணத் துணையாகத்தான் காளனும் வேந்தனும் வருகை தந்திருந்தார்கள்!

மாறுவேடத்தில் இருந்தாலும் எதிரிகள் ஓய்வெடுக்கும் இடத்தில் தங்கியிருந்தால் வந்த காரியம் கெட்டுவிடும் என்பதை உணர்ந்த செங்குவீரன் யுவராஜன் பாண்டியனை சந்திப்பதற்குள் தான் சந்தித்துவிட வேண்டும் என முடிவு செய்துகொண்டு வைகறைப் பொழுதிலேயே பறம்புமலை சத்திரத்திலிருந்து கிளம்பியிருந்தான்.

ஒரு கிழமை மற்றும் மூன்று தினப் பயணத்திற்குப் பிறகு கொற்கையை அடைந்திருந்தான் செங்குவீரன். விரைவாக வந்தும் பயனில்லாமல் போனது செங்குவீரனுக்கு. ஏனெனில் இவனுக்கு முன்னரே உறைந்தை யுவராஜன் கொற்கையை அடைந்து தென்னவனைச் சந்தித்திருந்தான். பயணக் களைப்பு, வீரர்களின் சோதனை இவைகளைக் கடந்து வருவதற்குள் யுவராஜன் கொற்கையை அடைந்திருந்தான்.

மன்னரைச் சந்திக்கவேண்டும் என அரண்மனைக் காவலருக்கு செய்தி அனுப்பிய பிறகு, கொற்கை விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்தபோது செங்குவீரனுக்கு எதிர்பாராத அதிர்ச்சி வந்து சேர்ந்தது. ‘‘பாண்டிய சேனாதிபதி உங்களைக் கையோடு அழைத்துவரச் சொல்லி கட்டளையிட்டிருக்கிறார்!’’ எனத் தெரிவித்தான் வீரன் ஒருவன்!

வீரனின் அழைப்பைக் கேட்டுக் குழம்பிய விறல்வேல், தான் மன்னனைச் சந்திக்க வேண்டும் என்றல்லவா விண்ணப்பித்திருந்தோம்! படையின் சேனாதிபதி தன்னை எதற்காக அழைத்துவரச் சொல்லி கட்டளையிட்டிருக்கிறார்! இதில் சூழ்ச்சி ஏதேனும் இருக்குமோ? எனச் சிந்தித்தவன் தனது வாள் மீதிருக்கும் நம்பிக்கையால் யார் எதிர்த்தாலும் ஒரு

கை பார்த்துவிடலாம் எனக் கருதியபடியே திருக்கண்ணனையும், சாரதியையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

மூவரும் எதிர்பாராத பெரும் அதிர்ச்சி காத்திருந்தது அவர்களுக்கு! மூவரையும் சேனாதிபதியின் அரண்மனை மாளிகைக்கு அழைத்து சென்றான் பாண்டிய நாட்டு வீரன். விறல்வேல் எதிர்பாராதபடி பாண்டிய சேனாதிபதி அதிகனே வாசலுக்கு வந்து மூவரையும் வரவேற்று உபசரித்தார். மூவருக்கும் புத்தாடை வழங்கி, உணவு பரிமாறி சிறப்பித்தார் சேனாதிபதி அதிகன்.

விறல்வேல் உணவருந்தி முடித்து ஓய்வெடுத்துக்கொண்டிருந்த போது அங்கு வந்த சேனாதிபதி அதிகன், “வீரரே, தங்களுக்கு என்னை ஞாபகம் இருக்கிறதா?” என வினவினார்.

“மன்னிக்கவும் அய்யா! தங்களது உபசரிப்பையும், அன்பையும் பெற்ற பிறகு இதற்கு முன் தங்களை எங்காவது சந்தித்திருக்கிறேனா எனப் பலவாறு எண்ணிப்பார்த்துவிட்டேன். நினைவு இல்லை!” என்றான் பணிவுடன்.

“என்னை தான் நினைவில் இல்லை. இந்த வாளாவது தங்கள் நினைவிற்கு வருகிறதா?” எனக் கூறியவாறே இடையில் இருந்த வாளை உருவி விறல்வேலிடம் நீட்டினார்.

அதை வாங்கிப்பார்த்த விறல்வேல் ஞாபகம் இல்லை என்பதற்குப் பதில் ஒரு புன்சிரிப்பை மட்டுமே பதிலாய் உதிர்த்தான்.

“எப்படி வீரரே, உங்களுக்கு நினைவில் நிற்கும். வெற்றி பெற்றவர் எளிதில் மறந்துவிடுவர். ஆனால் தோற்றவர் ஒருநாளும் தோல்வியை மறக்கமாட்டார்கள்!” எனக் கூற விறல்வேல் மட்டுமல்ல அருகில் நின்ற திருக்கண்ணன், தேர் சாரதி கூட அதிர்ச்சியடைந்து விட்டார்கள்.

“அய்யா, தாங்கள் தோற்றீர்களா? எனக்குப் புரியவில்லையே!”

“சோழ மாமன்னர் இளஞ்சேட்சென்னி மற்றும் அவரது சேனாதிபதி வளவனாரின் முயற்சியால் தென்னகம் போர் இன்றி அமைதியாக மாறிவிட்ட காலம். இளஞ்சேட்சென்னி இறந்தும் வளவனாரின் முயற்சியால் பல வருடங்கள் தென்னகத்தில் போர் நிறுத்தப்பட்டிருந்தது. போர் தினவெடுத்த எனது தோள்களைக் கட்டுப்படுத்த ஊர் ஊராகச் சென்று வீரர்களை வம்புக்கு

இழுத்து அவர்களுடன் போர் புரிவேன்! அப்படித்தான் புகாருக்கும் வந்தேன். இந்திரத் திருவிழா முடிந்த அடுத்த நாளில் கடற்கரையில் உன்னுடன் வாற்சமர் புரிந்து தோற்றேன். உனது வாளினால் தூக்கி எறியப்பட்ட வாள் தான் இது வீரனே! உன்னை இங்கு சந்தித்ததில் எனக்குப் பெரும் மகிழ்ச்சி! பெரும் வீரனுக்கு இன்று விருந்தோம்பல் செய்ததை எண்ணி மகிழ்கிறேன் நான்! என்ன காரியத்திற்காக கொற்கை வந்திருக்கிறீர்கள்? எனது உதவி ஏதேனும் தேவையா?''

''ஆம் அய்யா! உங்கள் உதவி எனக்குத் தேவை.''

''தயங்காமல் கேள் வீரனே! சித்தமாக இருக்கிறேன்.''

''அய்யா, பாண்டிய மன்னர் தென்னவனை நான் சந்திக்க வேண்டும். இரும்பிடர்த்தலையரிடமிருந்து அவருக்கு ஓலை கொண்டு வந்திருக்கிறேன்!''

''என்ன காரியம் என நான் அறிந்துகொள்ளலாமா?''

''நிச்சயமாக அய்யா. சென்னியின் மகன் வளவனுக்கு உரிய சோழ ஆசனத்தை இருங்கோவேள் மறைமுகமாகக் கைப்பற்றிக்கொண்ட செய்தி உங்களுக்கும் தெரிந்திருக்கும். சென்னியின் மகன் வளவனுக்குப் புகாரில் முடிசூட்டி விட்டோம். சேரனின் ஆதரவையும், வேளிர்களின் ஆதரவையும் இருங்கோ பெற்றுவிட்டான். வளவனுக்கு உரிமையான ஆசனத்தை மீட்க இரும்பிடர்த்தலையர் பாண்டியரின் உதவியை எதிர்பார்க்கிறார். அவரது கட்டளையை ஏற்றே ஓலையுடன் வந்திருக்கிறேன்!'' எனக் கூறியபடியே இடையில் வைத்திருந்த ஓலையை எடுத்து அவரிடம் நீட்டினான்.

அதை வாங்கிப் படித்த சேனாதிபதி அதிகன் வருத்தத்துடன் தம்பி ஓலையினால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. ஏற்கெனவே இருங்கோவேளின் புதல்வன் மன்னரைச் சந்தித்து ஆதரவைப் பெற்றுவிட்டான்! சென்னியின் மகனை எதிர்க்கப்போவது வேளிர்கள் மற்றும் சேரன் மட்டும் அல்ல பாண்டியனும் தான். இதுவரை சேரர், பாண்டியர், சோழர் என்ற மூவேந்தர் சொற்பதத்தைச் சேரர் மற்றும் பாண்டியர் என மாற்ற நினைக்கிறர்கள். சோழ குல வம்சத்தை சென்னியோடு முடிக்க முடிவுசெய்திருக்கிறார்கள். உறைந்தையிலும், புகாரிலும் விற்கொடியையும்

கயல் கொடியையும் பறக்கவிட முடிவு செய்துள்ளனர். பாண்டிய மன்னரை நீங்கள் சந்திப்பது பயன் அற்றதுதான்! பயணக் களைப்பில் இருப்பீர்கள். மூவரும் என் மாளிகையிலே தங்கி ஓய்வெடுங்கள். நாளை மன்னரை சந்திக்க ஏற்பாடு செய்கிறேன்!'' எனக் கூற மூவரும் கிளம்பினார்கள். சற்றுத் தொலைவில் விறல்வேல் சென்றபிறகு கைதட்டி அழைத்த சேனாதிபதி அதிகன், ''வீரனே மன்னர் மட்டும் சென்னியின் புதல்வனுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துவிட்டால் பல வருடங்களுக்குப் பிறகு தென்னகத்தில் பெரும் போர் மூளப்போகிறது. அப்படிப் போர் மூளும் பட்சத்தில் உன்னை எதிர்க்கப் போவது நானாகத்தான் இருப்பேன்! புகாரில் பெற்ற தோல்விக்கு போர்க்களத்தில் பழி தீர்த்துக்கொள்கிறேன்!'' எனக் கூறிச் சிரித்தபடியே அங்கிருந்துக் கிளம்பினார்.

சேனாதிபதி அதிகன் போர்க்களம் பற்றிக் கூறியது விறல்வேலிற்குப் பெருத்த ஆச்சர்யத்தை வழங்கியிருக்கவில்லை. தனது வாள் மீதும் தளபதிகள் மீதும் பெருத்த நம்பிக்கை கொண்டவன் அவன். ஆதலால் அதிகன் கூறியதை சட்டை செய்யாமல் திருக்கண்ணனையும், தேர் சாரதியையும் அழைத்துக்கொண்டு கொற்கை நகரைச் சுற்றிப்பார்க்கக் கிளம்பினான்.

சாரதி புரவித் தேரைச் செலுத்த விறல்வேலும், திருக்கண்ணனும் தேரில் அமர்ந்திருந்தபடியே கொற்கையை சுற்றிப்பார்த்துக் கொண்டிருந்தனர்.

சோழ படைத்தலைவர் செங்குவீரன் கொற்கை வந்திருக்கிறார் என்ற செய்தி பாண்டிய மன்னருக்குத் தெரியப்படுத்தியபோது வேந்தனும், யுவராஜனும் அறிந்துகொண்டார்கள். கொற்கை வீதியில் நடந்து சென்ற யுவராஜனும், வேந்தனும் புரவித் தேரில் சென்ற செங்குவீரனைக் கவனிக்கவே செய்தார்கள்.

அவர்களைக் கண்ட வேந்தன் யுவராஜனிடம், ''இளவரசே, புரவித் தேரில் செல்பவர்கள் யார் எனக் கவனித்தீர்களா?'' என வினவினான்.

''ஆம் கவனித்தேன் வேந்தா!. ஒருவன் நமது திட்டத்தை தவிடுபொடி ஆக்கியவன். இன்னொருவன் அவனது தளபதி! இருவரும் மீண்டும் புகாருக்கு உயிரோடு செல்லக் கூடாது. கொற்கையிலேயே தீர்த்துக்கட்டிவிட வேண்டும்!''

“நிச்சயமாக இளவரசே! கொற்கையை விட்டு அவர்கள் மீண்டும் புகார் செல்ல மாட்டார்கள். அதற்கு நான் பொறுப்பு! நீரை விட்டு வெளியேறிவிட்ட முதலை தன் பலத்தை இழந்து அகப்பட்டுக்கொள்வதைப்போல செங்குவீரனும் அவனது கோட்டையான புகாரை விட்டு கொற்கை வந்து நம்மிடம் சாகப் போகிறான்!”

“நாளை தான் பாண்டிய மன்னர் இவர்களைச் சந்திக்க இசைவு தெரிவித்துள்ளார். கொற்கையை விட்டுத் திரும்பும்போது வழியிலேயே அவர்களின் உயிரைப் பறிக்க வேண்டிய ஏற்பாடுகளை செய்து விடு வேந்தா!”

“இளவரசே, புரவித் தேரைச் செலுத்தியவனைக் கவனித்தீர்களா?”

“கவனிக்கவில்லையே வேந்தா!”

“செங்குவீரன் அமர்ந்திருந்த புரவித் தேரைச் செலுத்தியவன் யார் தெரியுமா?”

“யார்!”

“சென்னியின் மைந்தன்!”

“வேந்தா....?”

“ஆம் இளவரசே! வளவனே தான்! மாறு வேடத்தில் சென்றுகொண்டிருக்கிறான்!”

“வேந்தா நீ கூறுவது....?”

“இளவரசே, மாளிகையில் எரிந்த அவனது வலது காலின் கருப்பு வடு கூட இன்னும் மாறவில்லை! நான் உற்றுக் கவனித்தேன்!”

“வேந்தா... நமக்குக் கிடைத்திருக்கும் மற்றொரு சந்தர்ப்பம் இது! என்னையும், தந்தையையும் போர்க்களத்தில் கொல்வேன் என்று வெஞ்சினம் உரைத்தவன் தானே அவன்! எங்களைக் கொல்லாமல் அவனது காதலியைத் தீண்டினால் கணிகையரைத் தழுவும் சாபம் கிடைக்கட்டும் எனத்தானே கூறினான். செங்குவீரனைக் கொன்று அவனது உடலைக் கணிகையரைத் தழுவச் செய்வோம்! வேண்டிய ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்!”

“இதோ! இப்போதே.....! எனக் கூறியபடியே பெரும் திட்டங்களுடன் அங்கிருந்து நகர்ந்தான் வேந்தன்.

அடிக்குறிப்பு :

1. கூடல் – மதுரை.

# 50. எச ்சரிக்கை

கொற்கை என்பது சங்க காலப் பாண்டிய நாட்டின் இரண்டாவது தலைநகர். முதன்மைத் தலைநகர் கூடல் எனும் மதுரை மாநகர். அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த பாண்டி நாட்டுத் துறைமுகங்களுள் கொற்கையும் ஒன்று. தாமிரபரணி ஆறு குணக்கடலோடு சங்கமிக்கும் இடத்திற்கு அருகில், குமரிக்கும் பாம்பன் தீவுக்கும் இடைப்பட்ட வளைகுடா பகுதியில் அமைந்திருந்தது. வளைகுடா பகுதியில் அமைந்திருந்ததனால் இத்துறைமுகம் முத்துக்குளிக்கும் இடமாகவும், சங்கு மற்றும் பவளம் எடுக்கும் இடமாகவும் விளங்கியது. 1தண்டனை விதிக்கப்பட்டு வெறுத்தொதுக்கப்பட்ட சிறைக் கைதிகள் அனைவரும் முத்துக்குளிக்கும் பணிக்கு விதிக்கப்பட்டிருந்தனர். கொற்கையில் எடுக்கப்பட்ட முத்துக்கள் உலகப் புகழ் பெற்றவை. இம்முத்துகளைத் தேடி யவனர்களும், மேலை நாட்டு களிங்கர்களும் வந்தனர். The Periplus of the Erithrean Sea எனும் நூலில் யவனர்கள் இதனை 'கோல் கொய்' எனக் கூறுகின்றனர். பாண்டிய நாட்டின் முதன்மைத் தலைநகர் கூடலில் அமர்ந்து அரசர் ஆட்சிபுரிந்தாலும், கொற்கையில் இளவரசர் அமர்ந்து ஆட்சி செலுத்தினர். கடல் கொண்ட கபாடபுரம் இந்தக் கொற்கையாக இருக்கலாம் என்பதும் சில அறிஞர்களின் கருத்து.

கொற்கையில் அமர்ந்து ஆட்சி செலுத்திக்கொண்டிருக்கும் தனது மகனைக் கண்டு சோழ அரசியல் நிலை பற்றி விவாதிப்பதற்காகப் பாண்டியன் தென்னவன் வருகை தந்திருந்தார். இருவருக்குள் கருத்துவேறுபாடு ஏற்பட்டிருந்தது. "சென்னியின் மகனுக்கு உரிய சிம்மாசனத்தை இருங்கோவேள் கைப்பற்றிக்கொண்டது தவறு என்றும், வளவனுக்கு நாம் உதவ வேண்டும்" என்றும் பாண்டிய இளவரசர் கருத்து தெரிவித்தார். ஆனால், அதனை நிராகரித்த பாண்டியர் தென்னவன், "சோழ வம்சத்தை நிர்மூலப்படுத்தக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பம் இது. இந்த அரிய வாய்ப்பை கைநழுவ விட்டுவிடக் கூடாது" எனத் திடமாகக் கூறிவிட்டார்.

தந்தையின் கருத்தில் உடன்பாடு இல்லாத பாண்டிய இளவரசர், ‘‘தங்கள் விருப்பம் அரசே!’’ எனக் கூறி அரண்மனையிலிருந்து சென்றுவிட்டார்.

பயிற்சிப் பாசறையில் தேர்ந்தெடுக்கப்பட வீரர்களின் திறமையையும், அணிவகுப்பையும் பார்வையிட்டுக்கொண்டிருந்த போது அரசரின் வீரன் ஒருவன் வந்து அவரிடம், ‘‘அரசே, உங்களைச் சந்திக்க இரும்பிடர்த்தலையர் அனுப்பிய தூதுவன் வருகை தந்துள்ளான்! அரசவைக்கு அழைத்துச் செல்லவா?’’ என வினவினான்.

‘‘அரசவைக்கு வேண்டாம்! வீரர்கள் பயிற்சி மேற்கொள்ளும் இந்தப் பயிற்சிப் பட்டறைக்கே அழைத்து வா! நமது வீரர்களின் திறமையையும் அவன் அறிந்துவிட்டுப் போகட்டும்’’ எனக் கட்டளையிட்டார்.

ஒரு நாழிகைப் பொழுதிற்குப் பிறகு பாண்டிய வீரன் செங்குவீரன் திருக்கண்ணன் மற்றும் தேர்ச் சாரதி மூவரையும் அழைத்து வந்தான்!

மன்னரிடம் வந்த செங்குவீரன் தனது வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு இரும்பிடர்த்தலையர் கொடுத்தனுப்பிய ஓலையினை எடுத்து நீட்டினான்.

அதனை வாங்கிப் படித்த பாண்டிய மன்னர், ‘‘தூதுவனே, காலம் தாழ்ந்து விட்டது! சென்னியின் மகன் வளவன் சோழ சிம்மாசனத்தை மீட்க உதவிக் கேட்டுள்ளார் இரும்பிடர்த்தலையர். எனது முன்னோன் பெருவழுதிக்கு அனுப்ப வேண்டிய ஓலையை எனக்கு அனுப்பியிருக்கிறார். இவ்வோலையினால் எடுத்த முடிவில் எந்த மாறுபாடும் ஏற்படப்போவதில்லை.’’

செங்குவீரன் எதுவும் பேசாமல் அவர் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்தபடியே பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த வீரர்களைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

‘‘தூதுவனே! சென்னியின் புதல்வனிடம் கூறு. இனி ஒரு நாளும் உறைந்தை சிம்மாசனத்தை அவனால் அடைய இயலாது என்று! இரும்பிடர்த்தலையர் வேண்டுமானால் இருங்கோவேளை முறியடித்துச் சென்னியின் மகனுக்குப் புகாரில் பட்டத்தை சூட்டியிருக்கலாம். ஆனால் விரைவில் புகாரும் விழப்போவது நிச்சயம்! உறைந்தை மாளிகையிலேயே

சென்னியின் மகன் மடிந்திருக்க வேண்டியவன். அவன் வேண்டுமானால் மாளிகையிலிருந்து தப்பியிருக்கலாம். ஆனால் அவன் போர்க்களத்தில் மடிந்து புகார் விழப்போவது மட்டும் உறுதி! சென்னியின் மகன் வளவன் இறந்தபிறகு உறைந்தையில் விற்கொடியும், புகாரில் கயல் கொடியும் ஏற்றப்படும்! புரிகிறதா?''

பாண்டிய மன்னர் தென்னவன் கூறியதைக் கேட்க கேட்க செங்குவீரனின் கோபமும், ஆத்திரமும் தலைக்கேறிக் கொண்டிருந்ததால் அவர் கடைசியில் கேட்ட ''புரிகிறதா?'' என்ற கேள்வி அவனுக்குக் கேட்காததால் அமைதியாகவே நின்றான்.

சிவந்த கண்களுடன் அமைதியாக நின்ற செங்குவீரனைக் கண்ட பாண்டிய மன்னர், ''நான் கூறுவது உனக்குப் புரியவில்லையா? தெளிவாகவே கூறுகிறேன் கேள். சென்னியின் மைந்தன் இறந்த பிறகு இருங்கோவேள் மீண்டும் மலை நாட்டிற்கேச் சென்றுவிடுவான்! சோழர்களின் தலைநகரான உறைந்தைப் பட்டினத்தை சேர நாட்டோடும், செல்வம் செழிக்கும் உலகப் புகழ் பெற்ற பட்டினமான புகார் பாண்டிய நாட்டோடும் சேர்த்துக்கொள்ளப் படும். சோழ நாடு துண்டாக்கப்படுவது மட்டும் உறுதி. விரைவில் சோழ வம்சமே அழிக்கப்பட்டு தமிழகம் பாண்டியர், சேரர் என நாங்கள் இருவரே ஆட்சி செலுத்தப் போகிறோம்!'' எனக் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த படைத் தலைவன் செங்குவீரன், ''அரசே, உங்களிடம் உதவி கேட்டு வந்துள்ளோம் என்பதற்காக உங்கள் விருப்பப்படி எதையும் பேச வேண்டாம்!'' எனக் கூறி அவரது விழிகளில் தனது பார்வையை நிலைக்கவைத்துக்கொண்டு நின்றான்.

மன்னர் ஏதோ பேச வாயெடுக்க அதற்குள் முந்திக்கொண்ட செங்குவீரன், ''அரசே, வீண் கனவில் தாங்கள் புரளவேண்டாம். போரைத் தவிர்த்து வேளிர்களையும், சேரனது உயிரையும் காப்பீர்கள் என எண்ணியே உங்களைத் தேடி வந்தேன் நான்! ஆனால் போரில் ஈடுபட்டுத் தாங்களும் அழியப்போவது நிச்சயம் என்பதை அகங்காரம் பிடித்த பேச்சிலிருந்தே அறிந்துகொண்டேன். கடைசியாகத் தங்களிடம் ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன். வேங்கை தனித்திருந்தாலும் அதன் பலமும், வீரமும் ஒரு

நாளும் குன்றியதில்லை! உங்களது படைகள் அனைத்தும் புலிப் படைக்கு முன் புறமுதுகிடப்போவது மட்டும் உறுதி! உங்கள் கோட்டைகளை அழித்து அதில் பறக்கும் கயல் கொடிகள் இறக்கப்பட்டு சோழரின் புலிக்கொடி விரைவில் ஏற்றப்படும். உங்கள் படைகளைத் தயார் படுத்திக்கொள்ளுங்கள். செருக்களத்தில் சிந்திப்போம்!'' எனக் கூறிவிட்டு பாண்டிய மன்னர் தென்னவனின் பதிலைக்கூட எதிர்பாராமல் அங்கிருந்துக் கோபத்துடன் திரும்பினான்.

செங்குவீரன் கூறியதைக் கேட்டுக் கோபம் அடைந்த மன்னர், ''தூதுவனே, நில்!'' எனக் கட்டளையிட்டார்.

மன்னரின் குரலைக் கேட்ட செங்குவீரன் அப்படியே நின்று மன்னரை நோக்கித் திரும்பினான். ''நீ யார்?'' எனச் செங்குவீரனை நோக்கிக் கேள்வி கேட்டார்.

''இரும்பிடர்த்தலையரும், முதன்மை அமைச்சர் வளவனாரும் அனுப்பியத் தூதுவன் நான்!'' எனப் பதிலளித்தான் செங்குவீரன்.

''நீ தூதுவன் என்பது எனக்கும் தெரியும்! உனது பெயர் என்ன? புகாரில் நீ வகிக்கும் பொறுப்பு என்ன?'' எனத் தனது முரட்டு மீசையைத் தடவியபடியே வினவினார் தென்னவன்.

''எனது பெயர் விறல்வேல். மௌரியரை வென்ற சோழ மாமன்னர் இளஞ்சேட்சென்னியின் மைந்தன் வளவனின் படைத் தலைவன் நான்!'' என முகத்தில் சிறு புன் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு அமைதியாகப் பதிலளித்தான் செங்குவீரன்.

''ஓ! செங்குவீரன் என்பவன் நீ தானா? உனது துடுக்குத்தனம் நிறைந்த திமிர் பிடித்தப் பேச்சினைக் கேட்ட போதே நினைத்தேன். நீ நிச்சயம் வீரனாகத் தான் இருக்கவேண்டும் என்று! தூதுவனைக் கொன்று எங்களது வீரத்தைக் காட்ட நாங்கள் விரும்பவில்லை. நான் தெரிவித்த செய்தியை விரைந்து சென்று இரும்பிடர்த்தலையனிடம் கூறு! அது வரையாவது நீ உயிருடன் இருக்க வேண்டாமா?'' எனச் சிரித்தபடியே ஏளனம் செய்தார் பாண்டிய மன்னர்.

பாண்டிய மன்னர் தென்னவனின் ஏளனப் பேச்சினை வேறு யாராவது கேட்டிருந்தால் கோபப்பட்டு திரும்பி வந்திருப்பர். ஆனால் பாண்டியனுக்குத் தகுந்த பாடத்தைக் கற்பிக்க வேண்டும் என எண்ணிய செங்குவீரன், ‘‘அரசே! இங்கிருக்கும் வீரர்கள் யாருக்காவது என்னிடம் நெருங்கும் துணிச்சல் இருக்கிறதா?’’ எனத் தனது விழிகளைச் சுழற்றிப் பயிற்சிப் பட்டறையை நோக்கியபடியே கேட்டான்.

‘‘வீரனே உனக்கு எவ்வளவு துணிச்சல்?’’ எனக் கேட்டபடியே தனது இடையுறை வாளினை உருவி ஓங்கினார் பாண்டிய மன்னர் தென்னவன்.

ஓங்கிய வாளைக் கண்டு அச்சம் கொள்ளாமல், ‘‘பாண்டிய அரசே, உங்களைப் போர்க்களத்தில் சந்திக்கிறேன். தூதுவனாக வந்திருக்கும் நான் உங்களுடன் எனது திறமையைக் காட்டி உங்களை அவமானப்படுத்த விரும்பவில்லை. நான் விடைபெறலாமா?’’ எனத் தெரிவித்தான் செங்குவீரன்.

‘‘வீரனே, என்னைச் சுற்றி நிற்கும் வீரர்கள் அனைவரும் எனது மெய்க்காவல் வீரர்கள்! என்னை எதிர்த்து நீ வாளினை உருவி அவர்களைக் கடந்து உன்னால் இங்கிருந்துச் சென்றுவிட இயலுமா?’’

படைத்தலைவன் விறல்வேல் பாசறைக்குள் நுழையும் போதே அங்குப் பயிற்சி மற்றும் ஒத்திகை செய்துகொண்டிருந்த வீரர்களின் பலம், பலவீனம், திறமை என அனைத்தையும் கண நேரப் பொழுதில் கணக்கீடு செய்திருந்தான்! ஆதலால், பாண்டிய மன்னரின் கேள்விக்கு, ‘‘அரசே, இங்கிருக்கும் வீரர்களில் எவனேனும் ஒருவனுக்கு எனது தேர் சாரதியை எதிர்க்கும் துணிவு இருக்கிறதா? வாள் சமரிட்டு எனது சாரதியைத் தோற்கடித்தால் அப்போதிலிருந்தே நான் உங்களுக்கு அடிமை! எனது சாரதியிடம் சமரிட உங்கள் வீரர்கள் தயாரா?’’ எனக் கோபத்தோடு வினவினான்.

செங்குவீரன் கூறியதைக் கேட்ட பாண்டிய மன்னர் அருகில் நின்ற புரவிச் சாரதியைக் கவனித்தார். சிரித்துக்கொண்டே, ‘‘வீரனே, உன் புரவி சாரதி என் வீரர்களின் அனுபவத்தில் பாதி வருடத்தைக் கூட கடந்திருக்க மாட்டான்! இவனை நம்பியா நீ சூளுரைக்கிறாய்?’’ என வினவினார்.

“அரசே, புலி இளமையாக இருந்தாலும் அது ஒருநாளும் முதிர்ந்த ஓநாய்களைப் பார்த்து அஞ்சுவதில்லை. என் சாரதி புலிப் படையைச் சேர்ந்தவன்! திறமையிருந்தால் உனது வீரர்களைத் தயாராக இருக்கச் சொல்லுங்கள்!” எனச் செங்குவீரன் கூறுவதைக் கேட்டு சுற்றி நின்ற பாண்டிய வீரர்கள் மூவரையும் சூழ ஆரம்பித்தார்கள்.

சூழ்ந்திருந்த பாண்டிய வீரர்களை விலக்கிய உப தலைவன் திருக்கண்ணன் சற்றுத் தொலைவில் கிடந்த ஒரு நீண்ட போர் வாள் மற்றும் சில வேல்களை எடுத்துக்கொண்டு வந்தவன் சாரதியிடம் போர்வாளை மட்டும் கொடுத்துவிட்டு ‘எதற்கும் இருக்கட்டும்’ என முன் எச்சரிக்கை உணர்வுடன் வேல்களைக் கையில் வைத்துக்கொண்டு நின்றான்.

போர் வாளை வாங்கிய சாரதி தயங்கி நின்றான். அதைக்கண்ட செங்குவீரன், “கரிகாலா! மடிந்தாலும், வெளியேறினாலும் வீரத்துடன் செல்வோம்! தயக்கம் வேண்டாம்!” என்றான்.

கரிகாலன் என்ற சொல்லைக் கேட்டதும் தேர்ச் சாரதிக்கு மட்டும் அல்ல திருக்கண்ணனுக்கும் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. சாரதியின் முகத்தை நன்கு உற்றுப் பார்த்தான். மாறுவேடமிட்ட கரிகாற் திருமாவளவன் தான்! அதுவரை இல்லாத தயக்கம், அச்சம், பரபரப்பு கண நேரத்தில் அவனைக் கவ்விக்கொண்டது! வளவன் தனது பெயரை கரிகாலன் என மாற்றிக்கொண்டாலும் எதிரிகளிடத்தில் அப்பெயர் சென்று சேர்ந்திருக்கவில்லை. ஆதலால் தான் செங்குவீரன் ‘கரிகாலா’ என அழைத்ததைக் கேட்டும் பாண்டிய மன்னர் தென்னவன் கவனத்தில் கொள்ளவில்லை.

போர் வாளைக் கையில் எடுத்தபடியே சமருக்குத் தயாராகச் சென்றார் கரிகாலர். பாண்டிய வீரன் ஒருவன் அவரைத் தாக்க முதலில் வந்தான். கண நேரத்தில் அவனது வாளினைத் தட்டிவிட்டார் கரிகாலர். அடுத்து இன்னொருவன் வந்தான். அவனது வாளும் காற்றில் பறக்கவிடப்பட்டது. வாளினை இழந்தவர்கள் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு வெளியேறலாயினர். கரிகாலரும் எந்தப் பாண்டிய நாட்டு வீரனையும் காயப்படுத்த வேண்டும் என எண்ணிச் சமர் செய்யவில்லை!

பாண்டிய வீரர்கள் ஒவ்வொருவராக முதலில் வந்தவர்கள் பிறகு இருவர் இருவராக வந்து கரிகலாரைத் தாக்கினார்கள். அனைவரையும் திறம்படவே சமாளித்துக்கொண்டிருந்தார். நாழி ஆக ஆக போரின் போக்கும், உக்கிரமும் மாறிக்கொண்டிருந்தது! தொடர் தோல்விகளைச் சந்தித்த பாண்டிய நாட்டு வீரர்கள் ஆவேசத்துடன், கரிகாலரைக் காயம்படுத்த வேண்டும் என்ற நோக்குடனே சண்டையிடத் தொடங்கினர். கரிகாலரின் உடலில் சில இடங்களில் குருதி கசியவும் செய்தது! சண்டையின் போக்கு மாறிக்கொண்டிருந்ததை செங்குவீரனும், திருக்கண்ணனும் கவனத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். திடீரென்று வாளினைப் பறிகொடுத்த பாண்டிய வீரன் ஒருவன் தனது தோல்வியைத் தாங்கிக்கொள்ள இயலாமல் கீழே கிடந்த வேலினை எடுத்து கரிகாலனை நோக்கி எறியக் குறிபார்த்தான். அதைக் கவனித்துவிட்ட திருக்கண்ணன் தனது கையில் இருந்த வேலினை பாண்டிய வீரனை நோக்கி வேகமாக எறிய, வேலானது அவனது மார்பில் பாய்ந்து முதுகு வழியாக வெளிப்பட அவன் மண்ணில் சரிந்தான்.

தனது வீரன் ஒருவன் வேலினால் குத்தப்பட்டு இறந்ததைக் கண்ட பாண்டிய வீரர்கள் அனைவரும் கரிகாலரை நோக்கி ஆவேசத்துடன் ஓடி வந்தார்கள்! அதுவரை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த செங்குவீரனும், திருக்கண்ணனும் இனியும் அப்படியே நின்றால் பெரும் கேடு விளையும் என்பதை உணர்ந்தவர்களாய் தங்களது வாளினை உருவிக்கொண்டு பாண்டிய வீரர்களை எதிர்த்தனர்.

யார் வீரன் எனப் பரிசோதிக்கத் தொடங்கிய வாற்சமர் இப்போது பெரும் கொலைக்களமாக மாறியிருந்தது! கரிகாலர், செங்குவீரன், திருக்கண்ணன் மூவரும் முக்கோண வடிவில் நின்றுகொண்டு தங்கள் முதுகுப்புறம் யாரும் தாக்காத வண்ணம் வியூகம் அமைத்துக்கொண்டு பாண்டிய வீரர்களை எதிர்த்தார்கள். மூவரிடமும் சமரிட வந்த வீரர்கள் அனைவரும் வாட்களால் வெட்டப்பட்டு மடிந்து கீழே விழுந்தனர்! பாண்டிய வீரர்கள் அனைவரையும் வியூகம் அமைத்து எதிர்த்துத் தாக்கி வீழ்த்திக்கொண்டிருக்கும் மூவரின் வீரத்தைக் கண்ட மன்னர் திகைக்கவே செய்தார். பயிற்சிப் பாசறை கொலைக்களமாக காட்சியளித்துக்

கொண்டிருந்தது. பாண்டிய வீரர்களின் அலறல் சத்தம் கொற்கை அரண்மனையையே கதிகலக்கியது!

பாண்டிய வீரர்களின் அலறல் சத்தத்தைக் கேட்டு பதறியடித்துக்கொண்டு வந்த சேனாதிபதி அதிகனும் மூவரது வாள் வீசும் வேகத்தைக் கண்டு மலைக்கவே செய்தார். வருடங்கள் பல கடந்திருந்தாலும் புகார் வீரனின் போர் முறையும், வேகமும் சிறிதும் தொய்வடைந்திருக்கவில்லை. மாறாக அவை பல மடங்கு வளர்ந்திருக்கவே செய்திருக்கிறது என நினைத்து சிறிது நேரம் நின்று மூவரின் வாற்சமரை வேடிக்கை பார்க்கவே செய்தார்! தன்னை மறந்த நிலையில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவர், ''இப்பேர்ப்பட்ட வாற்சமரைக் கண்டு எத்தனை வருடங்களாகிறது! செங்குவீரன் தன்னை மட்டுமல்ல புகார் தளபதிகளையும் தக்க பயிற்சியளித்து பெரும் வீரர்களாக மாற்றிவிட்டான்!'' எனத் தனக்குத்தானே கூறிக்கொண்டார்.

இனியும் தாமதித்து வேடிக்கை பார்த்தால் மீதமிருக்கும் பாண்டிய வீரர்களும் மூவரிடமும் தோற்று மண்ணைக் கவ்வ வேண்டியதுதான் என எண்ணியவர் சமர் களத்திற்குச் சென்று, ''நிறுத்துங்கள்!'' எனக் கோபத்துடன் கட்டளையிட்டார்.

திடீரென்று எழுந்த சேனாதிபதியின் கட்டளையைக் கேட்ட பாண்டிய வீரர்கள் அனைவரும் சண்டையிடுவதை நிறுத்தினர். கடும் கோபத்துடன் அங்கு வந்தவர், ''முட்டாள்களே, நம்மைத் தேடி வந்திருக்கும் தூதுவர்களிடம் இப்படியா நாகரிகம் இன்றி போரிடுவது! சண்டையிடச் சொல்லி கட்டளையிட்ட மூடன் யார்?'' எனக் கத்தினார்.

சேனாதிபதியின் கடும் கோபத்தைக் கண்ட வீரர்கள் நடுநடுங்கி மன்னரின் பக்கம் பார்வையைச் செலுத்தினர். அனைவரது பார்வையும் ஒரு பக்கமாகத் திரும்புவதைக் கண்ட சேனாதிபதி அதிகனும் அவரது பார்வையைத் திருப்பினார். அங்குப் பாண்டிய மன்னர் தென்னவன் நின்றுகொண்டிருந்தார்.

மன்னரிடம் ஓடி வந்த சேனாதிபதி அதிகன், ''அரசே! மன்னிக்கவேண்டும். தாங்கள் இருந்ததைக் கவனிக்கவில்லை. நமது வீரர்கள்

தான் தூதுவர்களிடம் வம்பிழுத்தார்களோ என எண்ணிவிட்டேன்!'' எனப்பணிந்து தனது மன்னிப்பைக் கேட்டுக்கொண்டார்.

மன்னரும், சேனாதிபதியும் மூவரால் கொல்லப்பட்ட பல பாண்டிய வீரர்களின் உடல்களைப் பார்த்தார்கள். மன்னரிடம் வந்த செங்குவீரன், ''அரசே! எப்படி வெளியேற இயலும் எனக் கேட்டீர்களே? இப்படித்தான்! எங்கள் மூவரிடம் அகப்பட்டு இறந்த இவர்களைப் போலவே ஒட்டுமொத்த தென்னகத்தின் படையும் போர்க்களத்தில் மொத்தமாக மடியப்போகிறது!'' என எச்சரிக்கை செய்தவன் சேனாதிபதியிடம், ''அய்யா, நான் புறப்படுகிறேன்! தங்கள் உதவிக்கு நன்றி!'' எனக் கூறியபடியே அவரது பதிலை எதிர்பாராத செங்குவீரன் கரிகாலர் மற்றும் திருக்கண்ணனை அழைத்துக் கொண்டு கொற்கை அரண்மனையிலிருந்து வெளியேறினான்.

மூவருமே ஏதும் பேசாமல் அமைதியுடனே புரவித் தேரை நோக்கி நடந்தார்கள். அப்போது கரிகாலர் தான் முதலில் கேட்டார், ''தலைவரே, மாறுவேடத்தில் இருந்த என்னை நீங்கள் எப்போது அடையாளம் கண்டு கொண்டீர்கள்?'' என்று.

''எனது அரசரை என்னால் அடையாளம் காணாவிட்டால் படைத்தலைவன், ஒற்றர் தலைவன் என்றப் பொறுப்புகள் எனக்கு எதற்கு? தாங்கள் தேர்ச் சாரதியாக வந்து அமர்ந்த போதே அடையாளம் கண்டுகொண்டேன்!''

''பின்னர் ஏன் அதனை என்னிடம் தெரிவிக்கவில்லை?''

''எந்தக் காரியத்திற்காக தாங்கள் மாறுவேடமிட்டு என்னுடன் வருகைத் தருகிறீர்கள் எனத் தெரியாததால் உங்கள் வேடத்தைக் கலைக்க வேண்டாம் என எண்ணினேன்! உப தளபதி திருக்கண்ணனால் உங்களை அடையாளம் கண்டறிய இயலாததால் நீங்கள் தேர்ச் சாரதியாக வருவதே நல்லது எனவும் நினைத்தேன்.''

செங்குவீரனின் பதிலைக் கேட்ட கரிகாலர் சிரிக்கலானார்.

தங்களுடன் வந்திருப்பது கரிகாலர் தான் என்பதை அறிந்துகொண்ட பிறகு திருக்கண்ணன் தேர்ச் சாரதியானான். அரசரையும், படைத்

தலைவனையும் அமரவைத்து திருக்கண்ணன் புரவித் தேரைச் செலுத்தத் தொடங்கினான்.

“திருக்கண்ணா, கொற்கையில் எங்கும் நிறுத்த வேண்டாம்! நாம் கொற்கையை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும்! இங்கிருக்கும் ஒவ்வொரு கணமும் நமக்கு ஆபத்துதான்!” எனக் கூற திருக்கண்ணன் புரவிகளை விரட்ட ஆயத்தமானான்.

அவர்களை நோக்கி தூரத்திலிருந்து எய்யப்பட்ட அம்பு ஒன்று அதிவேகத்தில் வந்து கரிகாலரும், செங்குவீரனும் புரவித் தேரில் அமர்ந்திருக்க இருவரின் தலைகளுக்கும் நடுவில் குத்திட்டு நின்றது. திடீரென்று எய்யப்பட்ட அம்பினைக் கண்ட செங்குவீரன் எச்சரிக்கை செய்யப் புரவிகளை இழுத்து தேரை நிறுத்தினான் திருக்கண்ணன். தேரிலிருந்து கரிகாலருடன் குதித்த செங்குவீரன் தனது குறுவாட்களை உருவிக்கொண்டு சுற்றிலும் அசைவு தெரிகிறதா எனக் கவனிக்க திருக்கண்ணனும் குதித்து செங்குவீரனுடன் கரிகாலருக்குப் பாதுகாப்பாக நின்றுகொண்டான்.

சுற்றிலும் பெரும் மாளிகைகளே இருக்க அவர்களால் யாரையும் காண இயலவில்லை! குத்திட்டு நின்ற அம்பினைக் கண்டான் திருக்கண்ணன். பாய்ந்து வந்த அம்பானது சிறிது விலகியிருந்தாலும் படைத்தலைவர் அல்லது அரசரைக் கொன்றிருக்கும் என்பதை உணர்ந்துகொண்டான். குறி தவறிய அம்பினால் பெரும் இழப்பு தவிர்க்கப்பட்டது கடவுளின் கருணை தான் என எண்ணினான் திருக்கண்ணன்!

செங்குவீரன் சுற்றியிருந்த பகுதிகளைத் தனது விழிகளால் அலச, திருக்கண்ணன் அம்பினைப் பார்வையிடலானான். அம்பின் நுனியில் சிறு பட்டுத் துணி கட்டப்பட்டிருப்பதைக் கண்ட திருக்கண்ணன், “தலைவரே, அம்பினில் பட்டுத் துணி ஒன்று கட்டப்பட்டுள்ளது!” எனக்கூற செங்குவீரன் தேரில் ஏறி அம்பினைக் கவனிக்கலானான்.

தேரில் சொருகியிருந்த அம்பினில் கட்டப்பட்டிருந்த பட்டுத் துணியை அவிழ்த்தான் செங்குவீரன்! அவிழ்க்கும்போதே துணியில் ஏதோ எழுதப்பட்டிருப்பதைக் கவனிக்கவே செய்தான். துணியைப் பிரிக்காமலே அம்பு வந்த திசையைக் கவனித்தான். தூரத்தில் ஒரு மாளிகையின் உப்பரிகைத்

துணி விலகியிருந்தது. அம்பினை எய்தவன் தங்களைக் குறிவைத்து எய்திருந்தால் நிச்சயம் மூவருள் ஒருவரது உயிரை இந்நேரம் இவ்வம்பு குடித்திருக்கும். ஆனால், இத்துணியை அம்பினில் கட்டி தன் திறமையில் பெரும் நம்பிக்கையுடன் இருவரது தலைக்கும் இடையில் எய்திருக்கிறான் என்றால் அவனது திறமையையும், நம்பிக்கையையும் கண்டு திகைக்கவே செய்தான் செங்குவீரன்.

திடீரென்று ஏற்பட்டுவிட்ட பரபரப்புடன் சுருட்டியிருந்த பட்டுத் துணியைப் பிரித்தான்.

'செங்குவீரா... இளவலின் உயிருக்குப் பெரும் ஆபத்து! வழியிலேயே உங்கள் மூவரையும் கொலை செய்ய நமது எதிரிகள் திட்டம் வகுத்திருக்கிறார்கள். எச்சரிக்கை!' என எழுதியிருந்தது. துணியில் எழுதியிருந்த கருஞ்சாந்துக் குழம்பைத் தடவிப் பார்த்தான். அதன் ஈரத்திலிருந்து அத்துணி கண நேரத்திற்கு முன்னர் தான் எழுதப்பட்டு அம்புடன் கட்டப்பட்டு எய்யப்பட்டிருக்கிறது என்பதை உறுதி செய்துகொண்டவன் திரும்ப திரும்ப அதனை வாசித்தான்.

பட்டுத் துணியைப் பார்த்தபிறகு செங்குவீரனின் பாவனைகள் முழுவதும் மாறிவிட்டதைக் கவனித்த திருக்கண்ணன் அப்பட்டுத் துணியை வாங்கிப் படிக்கலானான். படித்தவன், "தலைவரே, அம்பு நம்மைக் கொல்ல எய்யப்பட்டது அல்ல!" என்றான்.

"ஆமாம் திருக்கண்ணா!"

"கொற்கையில் நமக்கு உதவுவதற்கு யார் தலைவரே இருக்கிறார்கள்?"

"பட்டுத்துணியைக் கவனி அதில் பெயர் இருக்கிறது!"

"பெயரா?"

"ஆம்!"

"பட்டுத்துணியில் செய்தி மட்டும் தான் தலைவரே எழுதப்பட்டுள்ளது. எந்தப் பெயரும் குறிப்பிடப்படவில்லையே!"

“துணியின் கீழ் உற்றுப்பார். உனக்கான பதில் கிடைக்கும்!”

பட்டுத் துணியை உற்றுப்பார்த்த திருக்கண்ணன் எதையோ கண்டு கொண்டவனாய், “ஆம் தலைவரே! வேல் வரையப்பட்டு அருகில் புலி உருவமும் வரையப்பட்டிருக்கிறது! புலி வேலினைத் தாக்குவதைப் போலவே கருஞ்சாந்துக் குழம்பினால் வரையப்பட்டிருக்கிறது! புலியின் கண்கள் மட்டும் செஞ்சாந்துக் குழம்பினால் வரையப்பட்டிருக்கிறது!” என்றவாறே வரையப்பட்டிருந்த புலியின் கண்களைத் தொட்டுப்பார்த்து நுகர்ந்து பார்த்த திருக்கண்ணன், “தலைவரே, இல்லை! இல்லை! செஞ்சாந்துக் குழம்பு இல்லை. அது இரு துளிக் குருதி. கருஞ்சாந்துக் குழம்பினால் வரையப்பட்டு கண்கள் மட்டும் குருதியினால் சித்திரம் எழுதியிருக்கிறார்கள்!” என்றவாறே பதற்றத்துடன் கூறலானான்.

“திருக்கண்ணா, வேலினைத் தாக்கும் புலி இல்லை! நன்றாக உற்றுப் பார், புலியைக் காக்கும் வேல் அது!”

உற்றுப்பார்த்த திருக்கண்ணன், “ஆமாம் தலைவரே! ஆமாம்! புலியை... இல்லை இல்லை புலிக்குட்டியைப் பாதுகாக்கும் வேல்! அப்படியானால்.....?

“இது வேளக்காரப் படையின் தலைவர் நமக்கு எழுதியிருக்கிறார்!”

“வேளக்காரப் படைத் தலைவரா?”

“ஆம், திருக்கண்ணா. நமது கடவுளான முருகனை வேளக்காரன் என்றும் அழைப்போம் அல்லவா!”

“ஆமாம்!”

“முருகனின் ஆயுதம் வெற்றி வேல். அதையே தான் வேளக்காரப் படைத் தலைவரும் குறிப்பிட்டு இருக்கிறார்!”

“அருகருகே அமர்ந்திருக்கும் இருவருக்கு இடைப்பட்ட ஒரு பகுதியைக் குறி வைத்து வெகு தொலைவிலிருந்து குறி தவறாமல் எய்திருக்கிறார் என்றால் அவரது நம்பிக்கையையும், திறமையையும் எண்ணிப் பார்த்தால் என்னால் வியக்காமல் இருக்க இயலவில்லை தலைவரே! அவர்

எதற்காக நம்மை நேரில் சந்தித்து எச்சரிக்காமல் அம்பினை எய்து தெரிவிக்கிறார்? வேளக்காரப் படை என்ற ஒன்றையே நான் இதுவரை கேள்விப்பட்டதில்லையே! இதனைத் தாங்கள் நம்புகிறீர்களா?"

"திருக்கண்ணா... வேளக்காரப் படையின் தலைவர்கள் இளவலின் உயிரைக் காப்பதாகவும், அவரை நிச்சயம் உறைந்தை சோழ சிம்மாசனத்தில் அமர்த்துவேன் என்றும் சென்னியின் சாம்பலில் சத்தியப் பிரமாணம் செய்தவர்கள். வேளக்காரப் படைத் தலைவர்கள் இருவர். ஒருவர் எனது நண்பன் திவ்யன், மற்றொருவர் யார் எனத் தெரியவில்லை. நானும் முயன்றுவிட்டேன். இக்கேள்விக்குப் பதில் வளவனார், இரும்பிடர்த்தலையருக்குக் கூடத் தெரியவில்லை. விரைவில் அவர் நம்மை சந்திப்பார் என நம்புகிறேன் திருக்கண்ணா"

செங்குவீரனும், திருக்கண்ணனும் பேசியதை ஆச்சர்யத்துடன் கேட்டுக்கொண்டிருந்த கரிகாலர், "தலைவரே, தாங்கள் கூறுவது மெய் தானே! எனக்குத் தெரியாமல், என்னைக் காக்க வேளக்காரப் படையா?" என வினவினார்.

"ஆம் அரசே! வேளக்காரப் படையின் உறுப்பினர்களே மொத்தம் இருவர் தான்! இருவருமே தலைவர் தான்."

"இருவர் தானா?" கரிகாலர் மற்றும் திருக்கண்ணன் இருவரும் ஒரே நேரத்தில் ஆச்சர்யத்துடன் கேட்டனர்.

"ஆம்! ஒற்றர் தலைவனாக இருந்து என்னால் கண்டறிய இயலாத மிகப் பெரிய ரகசியம் இந்த வேளக்காரப் படையின் மர்மம் தான்! எனது நண்பன் திவ்யன் இல்லாத அந்த மற்றொருவன் யார் என்பது பெரும் மர்மத்திலும் மர்மமாகவே இருக்கிறது!" எனக் கூற அங்குப் பெரும் அமைதி நிலவியது!

திருக்கண்ணா, வேளக்காரப் படைத் தலைவர் விடுத்துள்ள எச்சரிக்கையை என்னால் புறந்தள்ள இயலாது! தரை வழியாக நாம் பயணிக்க வேண்டாம். துறைமுகத்திற்குச் சென்று மரக்கலம் வழியாகப் பயணிப்போம்! பாதுகாப்பானது, அதே நேரம் நாளையே நாம் புகார்

சென்றுவிடலாம்! வைகாசி மாதக் காற்றும் நமக்கு சாதகமாகத்தான் வீசுகிறது!'' எனக் கூறத் திருக்கண்ணன் புரவியை துறைமுகத்தை நோக்கிச் செலுத்தலானான்.

வானவல்லி மற்றும் வில்லவனுக்குத் தெரிந்த காளன் எனும் இளந்திரையன் தான் வேளக்காரப் படையின் தலைவன் என்பது மற்றவர்களுக்குத் தெரியாது! இளந்திரையன் கூறியது பெரும் ரகசியம் என்பதால் வில்லவனும், வானவல்லியும் அவனைப் பற்றி யாரிடமும் எதையும் தெரிவித்திருக்கவில்லை. காளன் வில்லவனிடம் தெரிவித்தபடியே காளனிடம் இலச்சினைப் பதக்கத்தைத் திருடித் தாக்கிவிட்டு வானவல்லியை சிறை மீட்டு வந்தேன் என்றே அனைவரிடமும் தெரிவித்திருந்தான். ஆதலால் டாள்தொபியாஸ் இருங்கோவேளிடம் வில்லவனைப் போன்ற ஒற்றர்கள் தங்கள் படையில் ஊடுருவியிருக்கலாம் என்று கூறியே அவர்களை சிறைப்படுத்தியிருந்தான். கரிகாலரும் வில்லவனுக்கு உபதலைவர் பதவியை வழங்கிய போது நண்பரை எதிர்த்து சண்டையிட்டு வஞ்சி மாநகரில் சிறைபட இருந்த சோழ நாட்டின் மானத்தை மீட்டு வந்திருக்கிறீர்கள் எனக் கூறியதிலிருந்தே வில்லவனும், வானவல்லியும் காளன் பற்றிய ரகசியத்தை யாரிடமும் தெரிவித்திருக்கவில்லை என்பதை அறியலாம்.

கொற்கைத் துறைமுகத்தில் மரக்கலத்தில் ஏறியிருந்தார்கள் மூவரும். மரக்கலமும் புறப்படத்தயாரானது. திடீரென செங்குவீரனுக்கு உறுத்தவே மரக்கலத்தின் மேல் தளத்திற்கு வந்து பார்த்தான். அவன் எதிர்பார்த்ததைப் போன்று மேல்தளத்தில் கற்பூரம் ஏதும் இல்லை. வெற்று இடமாக இருந்த மேல் தளத்தைப் பார்த்த பிறகுதான் அவனது மனதில் நிம்மதியே தோன்றியது. மரக்கலம் துறைமுகத்திலிருந்துப் புறப்பட்டது. குமரிக் கடலிலிருந்து மரக்கலம் புகாரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது! கடற்பரப்பைக் கவனித்தான் செங்குவீரன். கடலில் குற்றவாளிகள் முத்துக் குளித்துக்கொண்டிருந்தார்கள். அருகினில் சங்கரா எனும் நாட்டுக் கப்பலுடன் ஒற்றைப் பாய்மர நாட்டுக் கப்பல்கள் பிணைக்கப்பட்டு கடலில் நிறுத்தப்பட்டிருந்ததைக் கண்டான். அருகினில் யவன மரக்கலங்கள்[2] கானா'விற்குச் செல்ல ஆயத்தமாகிக்கொண்டிருந்தன. இவற்றைப் பார்த்துகொண்டிருந்தவன், சற்றுத் தொலைவில் ஒரு பெரிய மரக்கலம் ஒன்று

இவன் செல்லும் மரக்கலத்தை நோக்கி வேகமாக வருவதைக் கண்டவன் திடீரெனப் பெரும் பரபரப்பானான்!

வேகமாக வந்த மரக்கலத்தைக் கண்டு எச்சரிக்கையானவன் உடனே மரக்கல கலாபதியை அழைத்து ஒரு சிறு படகை மரக்கலத்திலிருந்து கீழிறக்கச் சொல்லிக் கட்டளையிட்டான். திடீரென்று செங்குவீரனின் கட்டளையைக் கேட்ட திருக்கண்ணனும், கரிகாலரும் திகைக்கலானார்கள். கடலில் இறக்கிய படகினில் கரிகாலரையும், திருக்கண்ணனையும் செல்லக் கட்டளையிட்டான். கயிற்றின் வழியே முதலில் கரிகாலர் படகுக்கு இறங்கிச் சென்றார். திருக்கண்ணன் இறங்க கயிற்றைப் பிடித்தான். அவனிடம், "திருக்கண்ணா, இளவலைக் கவனமாகப் பார்த்துக்கொள். அவருக்கு எந்த ஆபத்தும் நேராமல் புகாருக்கு அழைத்துச் சென்று விடு!" எனக்கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த திருக்கண்ணன், "தலைவரே, நீங்கள்?" எனக் கேள்வி எழுப்பினான்.

"நான் உங்களுடன் வரப்போவதில்லை!"

"தலைவரே, நீங்கள் இல்லாமல் நானும் செல்லப்போவதில்லை!"

"திருக்கண்ணா... அதோ தொலைவில் வருகிறதே, அது இந்த மரக்கலத்தோடு மோதப்போகிறது! எனது நண்பன் திவ்யனை குணக்கடலில் அழுத்தியதும் அதே மரக்கலம் தான்! பல வருடத்திற்குப் பிறகு இம்மரக்கலத்தை நான் பார்க்கிறேன். என் நண்பனைக் கொன்றவர்களை நான் கண்டறிய வேண்டும்!"

"தலைவரே, உங்களுக்குத் துணையாக நானும் இருக்கிறேன்! வாழ்வோ சாவோ உங்களுடனே வருகிறேன்!"

"திருக்கண்ணா, நீ கூறுவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால் அது இயலாது. நாம் இறந்தால் இரு கிழமைகளில் மறந்துவிடுவார்கள்! ஆனால் இளவல் இறந்தால் சோழ வம்சமே அழிந்துவிடும்! சோழ நாட்டின் எதிர்காலத்தையே உன்னை நம்பி ஒப்படைக்கிறேன். எனது உப தளபதியின் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. கட்டளையை நிறைவேற்று!"

“உங்களது வாழ்வை மீண்டும் பணயம் வைக்கிறீர்கள். உறைந்தை மாளிகைக்குள் சென்றபோதும் என்னை அழைத்துச் செல்லவில்லை! இப்போதும் தங்களுடன் இருக்கவும் அனுமதிக்க மறுக்கிறீர்கள்!” என வருந்தினான் திருக்கண்ணன்.

“திருக்கண்ணா, அன்று உன்னிடம் கூறியது தான். வாழ்வு என்பது மரணத்தை விட மேன்மையானது என்பதை அரும்பாடு பட்டாவது அறிந்துகொள்ள வேண்டும்! அந்த உயர்ந்த வாழ்வினை அடைய மரணத்தை அடைய நேர்ந்தாலும் கவலை கொள்ளக் கூடாது! இளவலுக்கு முடிசூடி விட்டேன். போர் மூண்டாலும் எனது தளபதிகள் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நிச்சயம் வெற்றி பெறுவீர்கள். என் நண்பனைக் கொன்றவனை நான் நிச்சயம் பழி தீர்த்தே ஆகவேண்டும்! மரக்கலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. விரைந்து செல்!”

“சரி தலைவரே, இனி உங்களுடன் வாதிட்டு என்னால் வெல்ல இயலாது! கிளம்புகிறேன். உங்களை எங்கே நாங்கள் சந்திப்பது!”

“நாளை மாலை வரை பாம்பன் தீவில் காத்திருங்கள்! வரவில்லையேல் புகார் கிளம்பிவிடு!”

“அப்படியே ஆகட்டும்!” என்றவாறே கயிற்றில் இறங்கினான் திருக்கண்ணன்.

“திருக்கண்ணா சற்றுப் பொறு!” என்றவாறே தனது கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலையைக் கழட்டி திருக்கண்ணனிடம் கொடுத்தான்.

“தலைவரே...!”

“நான் திரும்பி வராவிட்டால் இதனைக் காட்டு. புரிய வேண்டியவர்கள் புரிந்துகொள்வார்கள்!”

“தலைவரே...!” எனப் பதறினான் திருக்கண்ணன்.

“விரைந்து செல்! இளவல் பத்திரம்!” எனக் கூறிக்கொண்டிருந்த போதே திருக்கண்ணன் படகுக்குச் சென்று துடுப்பினைத் துழாவினான். படகு மரக்கலத்திலிருந்து விலகி கரையை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது.

திருக்கண்ணனிடம் கரிகாலர், ‘‘தலைவர் வரவில்லையா?’’ எனக் கேள்வி எழுப்பினார்.

திருக்கண்ணன் பதில் கூறாமல் வேகமாக படகினைத் துழாவிக்கொண்டிருந்தான்! திடீரென கொற்கை துறைமுகத்தில் இடி விழுந்ததைப் போன்ற ஒரு பெரும் சத்தம் எழுந்தது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். விறல்வேல் இருந்த மரக்கலம் மீது பெரும் மரக்கலம் மோதியதால் முற்றிலும் நொறுங்கிப்போயிருந்தது. கற்பூரத்தையும் நெருப்பையும் மாறி மாறி தூவ நொறுங்கிய மரக்கலம் குபீரென்றுத் தீப்பற்றி எரியத் தொடங்கியது.

எரியும் மரக்கலத்தைப் பார்த்த கரிகாலர் துடித்து, ‘‘தலைவரைக் காப்பாற்ற வேண்டும்!’’ எனக் கூறியபடியே நீருக்குள் தாவ முயன்றார். கரிகாலரைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்ட திருக்கண்ணன், ‘‘தலைவர் நாளை மாலைக்குள் பாம்பன் தீவுக்கு வந்துவிடுவதாக வாக்களித்துள்ளார்! அவர் இதுவரை வாக்கு தவறியதில்லை! உங்களைக் காப்பதாகவும் வாக்களித்துள்ளேன் நான்!’’ என்றான்.

திருக்கண்ணனின் பிடியிலிருந்து கரிகாலரால் விடுபட இயலவில்லை. படகு அலைகளாலே தள்ளப்பட்டு கரையை அடைந்திருந்தது! கரையில் நின்றபடியே மரக்கலத்தைப் பார்த்தார்கள்! மரக்கலம் முற்றிலும் எரிந்து நீருக்குள் அமிழ்ந்திருந்தது! எரிந்த மரக்கலத்திலிருந்து யாராவது தப்பிக்க முயல்கிறார்களா எனப் பார்த்தபடியே பெரிய மரக்கலம் அங்கேயே சுற்றி சுற்றி வந்தது!

கரையில் கரிகாலரும், திருக்கண்ணனும் செங்குவீரனை எண்ணி வருந்தியபடியே எரிந்த மரக்கலத்தைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்! அவர்களால் வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறு எதையும் செய்ய இயலவில்லை.

வருந்திய கரிகாலர், ‘‘திருக்கண்ணா, படைத் தலைவரும் படகிற்கு வந்துவிடுவார் என்றே நான் கீழே இறங்கியிருந்தேன். அவர் மரக்கலத்திலேயே தங்கிவிடுவார் என நான் எண்ணிப் பார்த்திருக்கவில்லை. என் வாழ்வினில் நான்

செய்த பெரும் பிழை இது!” எனக் கூற அவரது கடை விழியிலிருந்து வெளிப்பட்ட இரு துளிக் கண்ணீர் கடற்கரை மணலில் விழுந்தது.

தலைவர் நிச்சயம் பாம்பன் தீவுக்கு வருவார் எனச் சமாதானம் செய்துகொண்ட இருவரும் புரவித் தேரையும், சாரதி ஒருவனையும் அமர்த்திப் பாம்பன் தீவுக்குக் கிளம்பினார்கள். தேர் சாரதி வேறு யாரும் இல்லை வேளக்காரப் படைத் தலைவனான இளந்திரையன் எனும் காளன் தான். மாறுவேடத்தில் அமர்ந்திருந்தான்!

வேந்தனுக்கு ஏற்கெனவே காளன் மீது சந்தேகம் இருந்ததனால் வளவன் மற்றும் செங்குவீரனைக் கொலை செய்ய முயலும் போது காளன் அருகில் இருப்பதை விரும்பாதவன், “மன்னர் உன்னை உறைந்தைக்கு அழைத்திருக்கிறார். கிளம்பு!” என அனுப்பி வைத்திருந்தான்.

காளனும் கொற்கையிலிருந்து கிளம்புவதைப் போன்று கிளம்பி மாறுவேடத்தில் திரும்பி அவர்களையே கவனித்துக்கொண்டிருந்தான். தரை மார்க்கமாகப் பயணிக்க முடிவு செய்திருந்த செங்குவீரனை அம்பு எய்து எச்சரிக்கையும் செய்திருந்தான்.

வேந்தன் மரக்கலத்தில் ஏறி வளவனையும், செங்குவீரனையும் கொலை செய்ய ஆயத்தமான வேளையில் செங்குவீரனை எச்சரிக்கை செய்யலாம் என எண்ணியபோது செங்குவீரனே வளவனை திருக்கண்ணன் பாதுகாப்பில் படகில் இறக்கிவிட்டதை மற்றொரு படகிலிருந்துக் கவனித்தவன் விரைந்து கரைக்கு வந்து புரவித் தேர் ஒன்றை சம்பாதித்துச் சாரதியாகவும் அமர்ந்திருந்தான்.

பாம்பன் தீவுக்கு எப்படி செல்லலாம் என தவித்துக் கொண்டிருந்த போதுதான் காளன் தான் புகார் செல்வதாகவும், யாரேனும் வருவதாக இருந்தால் நான் அழைத்துச் செல்கிறேன் எனக் கூவினான். அவனிடம் சென்ற திருக்கண்ணன் கையிலிருந்த தங்கக் காசுகளை கூலி கொடுத்துப் பின் அப்புரவித் தேரில் பயணித்தார்கள்.

அன்று மாலை பரிதி மேற்கில் சாய ஒரு நாழிகைப் பொழுதிற்கு முன்னரே புரவித் தேர் பாம்பன் தீவினை அடைந்திருந்தது. இரு நாள்

காத்திருந்துப் பார்த்தார்கள். செங்குவீரன் திரும்பவேயில்லை.

கள்வனான காளனுக்கு ஆபத்தான பாதை எவை என அறிந்திருந்ததால் கவனமுடன் தேரை செலுத்திப் புகாரில் கரிகாலரையும், திருக்கண்ணனையும் சேர்ப்பித்தான்.

கரிகாலரும், திருக்கண்ணனும் புகாருக்கு வந்துவிட்ட செய்தியைக் கேட்ட வானவல்லி விறல்வேலும் வந்திருப்பான் என எண்ணி ஆரத்தியுடன் அரண்மனை வாயிலில் காத்திருந்தாள்.

தாழை மலரால் கூந்தலைப் பின்னித் தன்னை நன்கு அலங்காரம் செய்து அழகு படுத்தியிருந்த வானவல்லியைக் கண்ட கரிகாலர் என்ன சொல்வதென்றுத் தெரியாமல் திகைத்தார்.

இருவருக்கும் ஆரத்தி எடுத்த வானவல்லி பெரும் எதிர்பார்ப்புடன், "படைத் தலைவர் எங்கே? குன்றுத் துறைக்குச் சென்றுள்ளாரா?" என வினவினாள்.

கரிகாலர் பதில் கூற இயலாமல் தலையை தொங்க போட்டுக் கொண்டார். அருகில் நின்ற திருக்கண்ணன், அவனிடமிருந்த முத்துமாலையை எடுத்து வானவல்லியிடம் நீட்டினான்!

முத்து மாலையை வாங்கியவள், "நான் அவருக்கு அணிவித்த முத்து மாலையாயிற்றே! ஒரு நாளும் அவர் இதனைக் கழற்றிப் பார்த்தது இல்லையே! அவர் எங்கே? அவருக்கு என்னாயிற்று?" எனப் பதறியபடியே கேட்கலானாள்.

கலங்கிய கண்களுடன் நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் திருக்கண்ணன் தெரிவிக்க "அத்தான்!" எனக் கதறியபடியே விழுந்த வானவல்லி மூர்ச்சையடைந்தாள்!

**அடிக்குறிப்பு:**

1.

From comari toword the south this region extends to **Colchi,** Where the pearl–fisheries are; (They are

worked by the condemned criminals.); and it belongs to the pandian kingdom. – **The Periplus of the Erithrean Sea - Paragraph: 59.**

2.

கானா– யவன (கிரேக்க) தேசத்திலிருந்து தமிழகம் வரும் மரக்கலங்கள் அனைத்தும் அரேபியத் தீபகற்பத்தில் இருக்கும் கானா'விலிருந்தே புறப்படும். அதே போன்று தமிழகத்திலிருந்து கிளம்பும் மரக்கலங்கள் கானா சென்ற பிறகே செங்கடல் வழியாக கிரேக்கத்திற்குச் செல்லும்.

**Sourse:** This whole voyage as above described, from Cana and Eudaemon Arabia, they used to make in small vessels, sailing close around the shores of the gulf.

**The Periplus of the Erithrean Sea - Paragraph: 57.**

# 51. பி டர்த்தலையரின் திட்டம்

தனது ஒற்றர்கள் மூலம் செங்குவீரன் மட்டும் திரும்பவில்லை, சென்னியின் மகன் வளவன் உயிரோடுதான் இருக்கிறான் என்பதை அறிந்துகொண்டார் உறைந்தை மன்னர் இருங்கோவேள். வளவன் தப்பியிருந்தது அவருக்குப் பெருத்த ஆச்சர்யத்தை அளித்தது! தான் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தையும் பாழாக்கிய செங்குவீரன் மடிந்துவிட்டான். அவனது உடல் கூட கிடைக்காமல் மரக்கலத்தோடு எரிந்து குமரிக் கடலுக்குள் அமிழ்ந்து போனதை எண்ணி அவர் பெரிதும் மகிழ்ந்து ஆரவாரமிட்டார். செங்குவீரன் இல்லாத புகார் இனி அரண் இல்லாத கோட்டையைப் போன்றது. வேண்டிய நேரத்தில் போர் தொடுத்து புகாரைக் கைப்பற்றிக் கொள்ளலாம் என முடிவு செய்து அமைதி காத்தார்!

செங்குவீரன் இல்லாத புகார்ப் பட்டினம் உற்சாகமின்றி சோர்வுடனே காணப்பட்டது. உப தளபதிகள் மற்றும் படை வீரர்கள் அனைவரும் நம்பிக்கையிழந்துக் காணப்பட்டனர். கரிகாலரும், வளவனாரும் இயன்ற அளவு வீரர்களை உற்சாகப்படுத்த முயன்றனர். ஆனால் பலன் இல்லை! மாதங்கள் கடக்கக் கடக்க வீரர்களும் மாண்டவர்கள் மீளப்போவதில்லை என்பதை உணர்ந்து போருக்குத் தயாரானார்கள்!

செங்குவீரன் குமரிக்கடலில் அமிழ்ந்த மூன்று திங்களுக்குப் பிறகு உறைந்தையிலிருக்கும் இருங்கோவேளிடமிருந்து இரும்பிடர்த்தலையருக்கு எதிர்பாராத சமாதான ஒப்பந்தம் ஒன்று வந்தது. அதைக்கேட்ட இரும்பிடர்த்தலையர் திகைத்துவிட்டார். உறைந்தைத் தூதுவன் தன்னிடம் தெரிவித்துவிட்டுச் சென்ற சமாதான ஒப்பந்தத்தையும், நிர்பந்தத்தையும் வளவனாரிடம் விவாதிக்க இரும்பிடர்த்தலையர் அவரது மாளிகைக்குச் சென்றார்.

வளவனாரும் செங்குவீரனை எண்ணி கவலையுடனே அமர்ந்திருந்தார். வளவனாரின் முகத்தில் காணப்பட்ட கவலையைக் கண்ட இரும்பிடர்த்தலையர் வந்த காரியத்தை எப்படிப் பேசத் தொடங்குவது எனத் தெரியாமல் தயக்கத்துடனே அவரிடம் சென்றார்.

இரும்பிடர்த்தலையரைக் கண்ட வளவனார் ஆசனத்திலிருந்து எழுந்து வரவேற்று அமர வைத்தார்.

“வளவனாரே, வீரர்களுக்கு உற்சாகமளிக்க வேண்டிய தாங்களே கவலையில் தவிக்கலாமா? வீரன் என்றால் ஒரு நாள் மரணத்தைத் தழுவித்தானே ஆக வேண்டும்! இது தங்களுக்குத் தெரியாதா என்ன?”

“நடந்ததை மறக்க நானும் முயற்சித்துத் தான் பார்க்கிறேன். ஆனால், இயலவில்லையே! குணக்கடலில் அமிழ்ந்த திவ்யனைப் பற்றி கவலைப்படுவேனா? குமரிக் கடலில் எரிந்து போன விறல்வேலை எண்ணி வருந்துவேனா? இழக்கக் கூடாத இருவரையும் இழந்து கவலையில் வாடும் எனது மகளையும், மனைவியையும் எண்ணி வருந்துவேனா? இச் சூழ்நிலையில் போர் தொடங்கினால் தோல்வி என்பதை அறிந்தும் ஏதும் செய்ய இயலாமல் இருப்பதை எண்ணி வருந்துவதா? சென்னி மரணித்தபோது உங்களுடன் நானும் தானே இருந்தேன். சென்னியின் புதல்வன் வளவனை நிச்சயம் சோழ சிம்மாசனத்தில் அமர்த்துவோம் என்று கொடுத்த வாக்கினை எப்படிப் பிடர்த்தலையரே நிறைவேற்றப் போகிறோம்? அனைத்தையும் நினைத்தால் மனதே வெடித்துவிடும் அளவிற்கு கவலை கொள்கிறது மனம்! இக்குழப்பங்களிலிருந்து விடை தேடும் மார்க்கம் தான் எனக்குப் புலப்படவில்லை!”

“அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைத்துவிட்டது வளவனாரே!”

“தீர்வு கிடைத்துவிட்டதா?”

“ஆம்!”

“என்ன தீர்வு? விரைந்து கூறுங்கள்!”

அதனைக் கூற இயலாமல் தயங்கியபடியே அமர்ந்திருந்தார் இரும்பிடர்த்தலையர்.

“இரும்பிடர்த்தலையாரே, தயக்கம் வேண்டாம்! விரைந்து கூறுங்கள். தீர்வு என்ன?”

“அனைத்திற்கும் தீர்வு......”

“கூறுங்கள்!”

“வானவல்லி தான்!”

“வானவல்லியா?”

“ஆம்!”

“எனக்குப் புரியவில்லையே!”

“இருங்கோவேளிடமிருந்து சமாதானத் தூது வந்திருக்கிறது!”

“சமாதானமா?”

“ஆம்!”

“என்ன சமாதானம்?”

“சோழ தேசத்தை காலம் காலமாக உறைந்தையில் ஒருவரும், புகாரில் ஒருவரும் அமர்ந்து ஆளுவது மரபு தானே! அப்படியே இருங்கோ உறைந்தையிலும், கரிகாலன் புகாரிலும் ஆட்சி செலுத்த இருங்கோவேள் விழைகிறான்.”

“உறைந்தையை விட்டுக்கொடுக்க கரிகாலர் எப்படிச் சம்மதிப்பார்? சோழர்கள் ஒரு நாளும் கோழியூரை யாருக்காகவும் விட்டுக்கொடுக்க மாட்டார்களே!”

“நாம் கரிகாலரை சமாதானம் செய்துவிடுவோம்! சில வருடங்கள் இருங்கோ உறைந்தையிலேயே ஆட்சி செலுத்தட்டும். படை பலத்தைப் பெருக்க நமக்கு கால அவகாசம் தேவை! ஆதலால் அவனுக்கு இப்போது நாம் பணிவதைத் தவிர வேறு வழி இல்லை!”

“நமது ஒரே நோக்கம் போரைத் தவிர்ப்பது மட்டுமே! எப்பாடு பட்டாவது இப்போது போர் மூள்வதைத் தவிர்த்துவிடவேண்டும். காலம் வரும்போது தக்கப் பதிலடியைக் கொடுக்கலாம். புகார் ஆசனத்தை இப்போது கரிகாலருக்குத் தக்க வைப்பதே நமது முதல் வேலை!”

“போர் மூளாமல் இருப்பதும், புகாரை இழக்காமல் இருப்பதும், சோழ தேசத்தின் எதிர்காலமும் இப்போது தங்கள் கையில் தான் இருக்கிறது வளவனாரே!”

“எனது கையிலா! நான் என்ன செய்வேன் இரும்பிடர்த்தலையரே? என்னால் ஆகவேண்டியது என்ன இருக்கிறது?”

“போர் மூளாமல் உறைந்தையும் புகாரும் சமாதானமாக இருக்க வேண்டுமென்றால் இருங்கோவேள் இரு நிர்ப்பந்தங்களை விதித்துள்ளான்!”

“இரண்டு நிர்பபந்தங்களா?”

“ஆம்!”

“என்னென்ன?”

“ஒன்று நீங்கள் மீண்டும் உறைந்தையில் சேனாதிபதி பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமாம்! மற்றொன்று....”

“தயக்கம் வேண்டாம் பிடர்த்தலையரே! விரைந்து கூறுங்கள்.”

“மற்றொன்று உங்கள் மகள் வானவல்லியை இருங்கோவேளின் மகனுக்கு மணமுடித்துக் கொடுக்க வேண்டும் என்கிறான்!”

“இரும்பிடர்த்தலையாரே! என்ன கூறுகிறீர்கள்?”

“ஆம், வளவனாரே! அவனது நிர்பந்தங்களை நாம் கேட்டுத்தான் ஆகவேண்டும்! இப்போதைக்கு அவனுக்கு அடங்கிப்போவதைத் தவிர வேறு வழியில்லை.”

“பிடர்த்தலையாரே, இருங்கோவின் மலை நாட்டுக் கோட்டையை தரைமட்டமாக்கி அவனைக் கைது செய்து சென்னியின் முன் அழைத்துச்

சென்றவன் நான். அப்படியிருக்க என்னால் எப்படி அவனிற்கு கீழே பணியாற்ற இயலும்?''

இரும்பிடர்த்தலையர் எதையும் பேச இயலாமல் அமைதியாகவே அமர்ந்திருந்தார்.

''சரி, நானாவது கரிகாலருக்காக உறைந்தை சேனாதிபதி பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன்! ஆனால் உயிருக்கு உயிரான தனது காதலனை எண்ணிக் கைம்பெண் கோலத்தில் காட்சியளிக்கிறாள் எனது புதல்வி! வஞ்சி மாநகரில் சிறை வைக்க முயன்றவனையே நீ மணந்து கொள் என்று எப்படி என்னால் வானவல்லியிடம் கூற இயலும்?''

வளவனாரின் கேள்விகளுக்குப் பதில் கூற இயலாமல் இரும்பிடர்த்தலையர் திணறினார்.

''இருங்கோ விதித்துள்ள நிர்பந்தமும், சமாதானமும் கரிகாலருக்குத் தெரியுமா?''

''அவனுக்குத் தெரியாது! உங்கள் ஒப்புதலையும், வானவல்லியின் ஒப்புதலையும் பெற்ற பிறகு கரிகாலனைச் சமாதானப்படுத்தி விடலாம் என நான் நம்புகிறேன்!''

''சரி, கரிகாலரை ஒப்புக்கொள்ள வைத்துவிடுவீர்கள்! ஆனால் உப தளபதிகளையும், படை வீரர்களையும் பற்றி நீங்கள் சிந்தித்தீர்களா? செங்குவீரன் கட்டளையிட்டுச் சென்றான் என்ற ஒரே காரணத்திற்காக நம் இருவரையுமே எதிர்த்தவர்கள் அவர்கள்! என்ன செய்யப் போகிறீர்கள் பிடர்த்தலையரே!''

''உப தலைவர்கள் மற்றும் வீரர்களைப் பற்றிய கவலையை விடுங்கள்! செங்குவீரன் உயிரோடு இருந்திருந்தால் இந்தப் பேச்சு வார்த்தையே அவசியமில்லை. அவன் தான் மடிந்துவிட்டானே! தாங்கள் என்ன கூறுகிறீர்கள் வளவனாரே?''

''சோழ வம்சத்தின் மேன்மையே எனது மூச்சு! சோழ வம்சத்திற்காக எனது மகனை இழந்தேன். இப்போது மகளையும் எதிரிக்கு மணமுடித்துக் கொடுத்து நானும் அவனுக்கு சேனாதிபதியாகிவிடுகிறேன்!''

என்றவர் அமைதியாகி நீண்ட பெருமூச்சுக்குப் பிறகு, ''ஆனால் ஒன்று பிடர்த்தலையரே! என்னைப் போல எனது மகளை ஒப்புக்கொள்ள வைத்துவிடலாம் என எண்ணிவிடாதீர்கள்! அவள் உள்ளே தான் இருக்கிறாள். நீங்களே சென்று பேசிக்கொள்ளுங்கள்!'' என்றவாறே அங்கிருந்து எழுந்துக் கிளம்பிச் செல்லலானார்.

வளவனாரிடம் இருங்கோவேளின் முடிவைக் கூறியபோது தயங்காதவர் வானவல்லியிடம் பேச வேண்டியதை எண்ணிய போதே அவரது மனதில் திகிலும், அச்சமும் சூழ்ந்து கொண்டது. செல்லலாமா? அல்லது வேண்டாமா? எனத் தயங்கியவாறே வானவல்லியின் அறையை நோக்கி மெல்ல நகர்ந்தார் இரும்பிடர்த்தலையர்.

வானவல்லியின் அறைக்குள் சென்றார். அங்கு பத்திரைத் தேவி மற்றும் மரகதவல்லி சூழ வானவல்லி சோகமே வடிவாய் அமர்ந்திருந்தாள். ''விறல்வேலை எண்ணி வருந்திக் கொண்டிருப்பவளிடம் எப்படி இன்னொருவனை மணந்து கொள் எனக் கூறுவேன்?'' எனத் தனக்குத் தானே கூறிக்கொண்டவர் மனம் வருந்தித் திரும்பலானார். அறை வரை வருகை தந்த இரும்பிடர்த்தலையர் ஏதும் கூறாமல் திரும்பிச் செல்வதைக் கண்ட மரகதவல்லி, ''அய்யா, நில்லுங்கள்! வந்தவர் ஏன் திரும்பிச் செல்கிறீர்? வாருங்கள்!'' எனக் கூறி அழைத்துவந்தாள்.

இரும்பிடர்த்தலையரைக் கண்ட பத்திரைத் தேவி அறைக்குள் சென்று குளிர்ந்த மோரினைக் கொண்டு வந்து நீட்ட அதனை வாங்கிப் பருகினார். இரும்பிடர்த்தலையரைக் கண்ட வானவல்லி ஏதும் பேச இயலாமல் அமைதியாகவே சோகமே உருவாய் அமர்ந்திருந்தாள். அவளது கண்களிலிருந்து வழிந்த கண்ணீர்த் துளிகள் கூட துடைக்கப்படாமல் காய்ந்து போயிருந்தது!

வானவல்லியின் தோழிகள் இருவரிடமும், ''அம்மா, நான் வானவல்லியிடம் சற்றுத் தனிமையில் பேச வேண்டும். சற்று வெளியே காத்திருக்கிறீர்களா?'' எனக் கூற பத்திரைத் தேவியும், மரகதவல்லியும் வெளியே செல்லலானார்கள்!

“அம்மா, வானவல்லி. நான் கூறுவதைக் கேட்டு என்னை சுய நலம் பிடித்தவன் நெஞ்சில் ஈரமில்....” எனக் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த வானவல்லி, “அய்யா! பீடிகை எதுவும் கொடுக்க வேண்டாம். கூற வந்ததை நேரடியாகவே கூறுங்கள்!” என அழுது அழுது கம்மியிருந்த அவளது குரலால் கூறினாள்.

“அம்மா, சோழ தேசத்தின் எதிர்காலம் இப்பொது உனது கைகளில் தான் இருக்கிறது!”

“எனது கைகளிலா?”

“ஆம் வானவல்லி!”

“ஐயா, நான் ஒரு அபலைப் பெண்! என் தமையனையும், திருமணத்திற்கு முன்னரே என் தலைவனையும் இழந்துவிட்ட பாவி நான்! எனது கைகளிலா சோழ தேசத்தின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது!” எனக் கூறிய வானவல்லியின் பதிலைக் கேட்ட இரும்பிடர்த்தலையர் துயரப்பட்டார்.

“இன்னொரு முறை நீ அபலைப் பெண் எனக் கூறாதே வானவல்லி! உனக்காக ஒரு வசந்த வாழ்வு காத்திருக்கிறது.”

அவர் கூறியதைக் கேட்டு சிரித்த வானவல்லி, “அத்தான் இல்லாத வாழ்வு எனக்கு எப்படி அய்யா வசந்தமாக ஆகும்!”

“இறந்தவன் எப்படி அம்மா, திரும்பி வருவான்? அவனை எண்ணி நீ கவலையில் உய்த்திருப்பது அனைவரையுமே வாட்டுகிறது!”

“யாரை அய்யா குறிப்பிடுகிறீர்கள்?”

“படைத் தலைவன் செங்குவீரனைத் தான் குறிப்பிடுகிறேன்!”

“அத்தான் இறக்கவில்லை!”

“இறக்கவில்லையா?”

“ஆம்! அவர் வருவார்!”

“வானவல்லி என்ன கூறுகிறாய்?”

“ஆம் அய்யா! என் தலைவர் நிச்சயம் வருவார்.”

“எந்த நம்பிக்கையில் இறந்தவன் வருவான் எனக் கூறுகிறாய்?”

“என் காதல் மீது இருக்கும் நம்பிக்கை தான் இரும்பிடர்த்தலையரே!”

“அம்மா, நீ காதல் மயக்கத்தில் உளறுகிறாய். செங்குவீரன் மரக்கலத்தோடு எரிந்ததை கரிகாலர் பார்த்திருக்கிறார்!”

“கரிகாலர் பார்த்தார் என்பதற்காக என் தலைவர் இறந்தவர் ஆகிவிடுவாரா?”

“வானவல்லி...!”

“தலைவர் மரக்கலத்தில் சிக்கிக் குமரிக் கடலில் மூழ்கியிருக்கலாம். அனால் அவர் இன்னும் இறக்கவில்லை! அது மட்டும் எனக்கு நன்கு தெரியும்!”

“உனக்குத் தெரியுமா?”

“ஆம்!”

“எப்படி அம்மா?”

“என் தமையன் குணக் கடலில் பயணிக்குமுன் என் மனம் என்னை எச்சரித்துக் கொண்டே இருந்தது. ஆனால் உப தலைவர் விடயத்தில் அப்படி இல்லை! இன்னும் அவர் எங்கோ உயிருடன் இருக்கிறார் என்றே நான் நம்புகிறேன்!”

“அப்படி அவன் உயிரோடு இருந்திருந்தால் இந்நேரம் திரும்பி வந்திருப்பான்! மூன்று திங்கள் கடந்துவிட்டதே!”

“மூன்று திங்கள் அல்ல! முன்னூறு வருடங்கள் ஆனாலும் அவருக்காக நான் காத்திருப்பேன்.” எனக் கூறி அமைதியானாள்.

வானவல்லியிடம் என்ன கூறுவதெனத் தெரியாமல் இரும்பிடர்த்தலையர் தடுமாறியபடியே அமர்ந்திருந்தார். ‘செங்குவீரன் இறந்துவிட்டான் என்பதைக் கூட இன்னும் நம்ப இயலாமல் அவன் நிச்சயம் திரும்புவான் எனப் பெரும் நம்பிக்கையில் இருக்கும் இவளிடம்

இன்னொருவனை மணந்து கொள் என எப்படி என்னால் கூற இயலும்' என நினைத்த இரும்பிடர்த்தலையர், ''நான் புறப்படுகிறேன் வானவல்லி. கவனமாக இரு!'' எனக் கூறியபடியே கிளம்பினார்.

இரும்பிடர்த்தலையர் செல்வதைப் பார்த்த வானவல்லி, ''அய்யா! வந்த காரியம் பற்றி பேசாமல் அதற்குள் செல்கிறீர்கள். சற்று அமருங்கள்!'' எனக் கூறி அமர வைத்தாள்.

வானவல்லியின் பேச்சினைக் கேட்டுத் திகைத்த இரும்பிடர்த்தலையர், ''உன்னை சந்திக்கத்தான் வந்தேன் வானவல்லி. சந்தித்துவிட்டேன், அதான் கிளம்புகிறேன்!'' என்றார்.

''பிடர்த்தலையாரே, பொய் உரைக்க வேண்டாம்!''

''அம்மா!''

''தாங்கள் என் தந்தையிடம் பேசிக்கொண்டிருந்ததை நானும் கேட்டேன்!''

''கேட்டுவிட்டாயா?''

''ஆம்!''

''எதனை?''

''நீங்கள் பேசிய அனைத்தையும் தான்!''

''சரி வானவல்லி. எப்படிப் பேசலாம் என நினைத்ததை நீயே அறிந்துகொண்டாய். உனது முடிவு என்ன?''

''எனது முடிவா?''

''ஆம்!''

''தாங்கள் அனைத்து முடிவையும் எடுத்துவிட்டுத் தானே வந்தீர்கள்! பிறகு என்னிடம் எதற்கு சம்மதத்தை எதிர்பார்க்கிறீர்?''

இரும்பிடர்த்தலையர் எதையும் பேச இயலாமல் அமைதியாகவே அமர்ந்திருந்தார்.

“பிடர்த்தலையரே, சில கேள்விகள் நான் கேட்க வேண்டும். கேட்கலாமா?”

“கேள் மகளே!”

“தங்கள் விருப்பப்படி நான் இருங்கோவேள் மகனை மணந்து கொள்கிறேன் என வைத்துக்கொள்ளுங்கள். அதன் பிறகு என்ன நடக்கும்!”

வானவல்லியின் மனமாற்றத்தைக் கண்ட இரும்பிடர்த்தலையார் உற்சாகமடைந்தார். பெரும் ஆர்வத்துடன், “நீ உறைந்தையின் இளவரசி ஆகுவாய்!” என்றார்.

“அதன் பிறகு?”

“இருங்கோவேளுக்குப் பிறகு முடி சூடும் யுவராஜனுக்கு நீ பட்டத்தரசியாக அவனருகில் அமர்வாய்!”

“அதன் பிறகு?”

“உனது திருவயிற்றில் உதிக்கும் குழந்தைகள் நாடாள்வார்கள்!”

“அதன் பிறகு?”

இக்கேள்விக்கு இரும்பிடர்த்தலையர் பதில் கூற முடியாமல் திணறினார்.

“அதன் பிறகு என்ன நடக்கும் என நான் கூறுகிறேன் பிடர்த்தலையரே! எனக்குக் குழந்தைகள் பிறக்க ஆகும் இரண்டு வருடத்தில் புகாரில் அமர்ந்திருக்கும் கரிகாலர் தனது படைகளை வலிமையாக்கி உறைந்தை மீது போர் தொடுப்பார்! போரின் இறுதியில் யார் யாரெல்லாம் கரிகாலரை எதிர்த்தார்களோ அவர்களெல்லாம் அழிக்கப்பட்டிருப்பார்கள்! நான் கைம்பெண்ணாக நிற்பேன்!” எனக் கோபத்துடன் கூறிய வானவல்லியின் சொற்களைக் கேட்டுத் திகைத்துப் போனார் இரும்பிடர்த்தலையர்.

உடனே சுதாரித்துக் கொண்டவர், “மகளே நீ நினைப்பதைப் போல எந்த விபரீதமும் நடக்காது! போரில் தோற்றாலும் கரிகாலர் இருங்கோவின் மகனுக்கு மலை நாட்டை வழங்கி ஆட்சி செலுத்தப் பணிப்பார். ஒரு நாளும் உன்னை கைம்பெண்ணாகக் காணும் காலம் நேராது!” என்றார்.

அவர் கூறியதைக் கேட்ட வானவல்லி, “பிடர்த்தலையரே, நீங்கள் யாரை மணந்துகொள்ளச் சொல்கிறீர்கள் தெரியுமா? யாரைக் கொல்லாமல் என் தலைவர் என்னை மணக்க மாட்டேன் என மக்கள் திரள் முன் சூளுரைத்தாரோ அவனையே நான் மணக்க வேண்டும் என்று என்னிடமே அறிவுரை கூறுகிறீர்கள்...” என்றவாறே கோபத்தில் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கினாள். பிறகு “பிடர்த்தலையாரே ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்! என் தலைவரை அணைத்த எனது மார்புகளை இன்னொருவன் அணைக்க நேர்ந்தால் எனது மார்புகளை அறுத்துக்கொண்டு மரணிப்பேனே தவிர, இன்னொரு ஆடவனை நான் மணப்பேன் என்று கனவிலும் எண்ணாதீர்கள்!” எனக் கூற இரும்பிடர்த்தலையரின் கால்கள் அச்சத்தில் சற்று நடுங்கவே செய்தன. மன்னிப்புக் கேட்டுவிடலாம் என எண்ணி வாயைத் திறந்தார். அதற்குள் முந்திக்கொண்ட வானவல்லி, “நீங்கள் இங்கிருந்துப் புறப்படலாம்!” என எழுந்து வாசலை நோக்கி கையைக் காட்ட தனது சுயநலத்தையும், தவறையும் எண்ணியவர் வெட்கி நாணம் கொண்டு தலையைத் தொங்க போட்டபடியே அங்கிருந்து வெளியேறினார்.

இரும்பிடர்த்தலையர் சென்ற பிறகு தனது அறையைத் தாழிட்டுக்கொண்டுத் தேம்பித் தேம்பி அழுதாள் வானவல்லி. அழுதபடியே படுக்கையிலிருந்து எழுந்தவள் ஆடைகளுக்கிடையில் வைத்திருந்த முத்து மாலை மற்றும் ஓலைச் சுவடிகளை எடுத்து திரும்ப திரும்ப புரட்டினாள். அந்த ஓலைச் சுவடிகள் அனைத்தும் விறல்வேல் எழுதிய காதல் பாக்கள்.

விறல்வேல் அணிந்திருந்த முத்து மாலையை எடுத்துக் கன்னத்தில் வழிந்த கண்ணீர்த் துளிகளோடு முகத்தில் அணைத்துக்கொண்டாள். முத்துமாலையைக் கழுத்தில் அணிந்து கொண்டவள், ஓலைச் சுவடிகளுடன் கிடந்த தாழை மடலை எடுத்து வாசித்தாள்.

**விளம்பிடத்தான்**

**எத்தனித்தேன்...**

**புலம்பல்களைச்**

**சித்தரித்தேன்...**

**தாழையிது உன்கை**

**தவழ்கையில்...**

**செழுமையாய் என்நெஞ்சில்**

**ஆணிவேர் விட்டாயடி...!**

தாழை மடலில் எழுதியிருந்த பாடலை வாசிக்க வாசிக்க அவளது கண்களில் இருந்து கண்ணீர் நேரத்திற்கு நேரம் அதிகமாக வழிந்துக்கொண்டிருந்தது.

தாழை மடலை எடுத்து அணைத்தவள், “அத்தான்!” “கருத்தான்!” “இங்கு உங்களை எண்ணியே நான் காத்திருக்கிறேன். எங்கிருக்கிறீர்கள்? உங்களை இனி நான் சந்திப்பேனா?” எனப் புலம்பியபடியே தேம்பித் தேம்பி அழுதாள். அவளது கண்களில் இருந்து வெளிப்பட்ட கண்ணீர்த் துளிகள் முகத்திலிருந்து வழிந்து வானவல்லி மார்பில் அணைத்திருந்த காய்ந்து சருகாகிப் போன தாழை மடலின் மீது துளித் துளியாக விழுந்து நனைத்துக்கொண்டிருந்தது!

**அடிக்குறிப்பு:**

1. உறைந்தைக்கு கோழி அதாவது கோழியூர் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. கொழியூரை ஆண்டவர் கோழியர் எனச் சோழரை சிறப்பித்து அழைக்கும் வழக்கமும் உண்டு.

ஆதாரம்: சங்க காலத் தமிழக வரலாறு – 2. பக்கம்: 57.

**(முதல் பாகம் முற்றும்)**

# ABOUT THE AUTHOR

## சி.வெற்றிவேல்



சி.வெற்றிவேல், அரியலூர் மாவட்டம் சாளையக்குறிச்சி எனும் கிராமத்தைச் சேர்ந்த இளம் இழுத்தாளர். அண்ணா பல்கலையில் B.Tech – Petrochemical Technology பட்டம் பெற்று சில ஆண்டுகள் பொறியியல் வல்லுனராக பணிபுரிந்திருக்கிறார். தற்போது ஆனந்த விகடன் குழுமத்தில் நிருபராகப் பணியாற்றி வருகிறார். வானவல்லி (4 பாகங்கள்), வென்வேல் சென்னி (முத்தொகுதிகள்) ஆகிய புதினங்களை இயற்றியிருக்கிறார். சங்ககாலம், தமிழர் வரலாறு ஆகியவற்றை ஆய்வு செய்தும், வரலாற்று இடங்களுக்கு நேரில் பயணம் செய்தும் ஆராய்ச்சிப் புதினங்களை எழுதுவதில் ஆர்வமுடையவர்.

# BOOKS BY THIS AUTHOR

## வானவல்லி – நான்கு பாகங்கள்

சோழப் பேரரசன் கரிகாற் பெருவளத்தானின் வீர வரலாறு

## வென்வேல் சென்னி – முத்தொகுதி

மோரியப் பேரரசின் தென்னாட்டுப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்திய சோழ இளவரசன் வென்வேல் சென்னி மற்றும் மூவேந்தர்களின் வீர வரலாறு.

## மதுவன மாது

வானவல்லி எனும் நீண்ட பெரும்புதினம் எழுதிய காலத்தில் இளைப்பாறுதலுக்காக எழுதிய குறும்புதினம் தான் இந்த ‘மதுவன மாது'. மதுவன மாதுவை எழுத்தாளரே தன் வாழ்வில் நடக்கும் நிகழ்வைக் கூறுவதைப் போன்று புனைந்திருக்கிறேன்.

# வானவல்லி

சோழப் பேரரசன் கரிகாற் பெருவளத்தானின் வீர வரலாறு

## வானவல்லி – 1

வேளிர்களின் எழுச்சி

## வானவல்லி – 2

எரித்திரியன் கடல்

## வானவல்லி – 3

கரிகாலனின் எழுச்சி

## வானவல்லி – 4

இமயத்தில் புலிக்கொடி